உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பதினோராந் திருமுறையுள்

பட்டினத்துப்பிள்ளையார்

திருவாய்மலர்ந்தருளிய

கோயினான்மணிமாலை

முதலிய மூலமும்,

சென்னை - பச்சையப்பன் கலாசாலைத்

தமிழ்ப்பண்டிதர்

அ. சிங்காரவேலு முதலியாரவர்களால்

இயற்றப்பட்ட

விருத்தியுரையும்.

சரித்திர சங்கிரகத்துடன்,

சிதம்பரம் முனிசிபல் சேர்மன், ஆகிய ஆனரெபில்,

S. Rm. M. இராமசாமி செட்டியார் அவர்கள்

பொருளுதவியால்,

சென்னை, மெய்கண்டசந்தானசபையிலொருவரும்

சைவநூலுரைப் பிரசாரணருமாகிய

ஸ்ரீ-குமாரவேலாயுத முதலியாரவர்களால்

மதராஸ் டைமண்ட் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

சாதாரணஹு கும்பரவி.

Registered] *[Copy-right.*

1911

K. M. SAWMY & CO. MADRAS.

Kalaignana Malikai Series. Book No. 2.

உ

கடவுள் துணை. 32

பட்டினத்துப்பிள்ளையார்

சரித்திர சங்கிரகம்.

பதினோராந்திருமுறையில் ஷை சுவாமிகள் அருளிய

பிரபந்தங்கள்.

தனித்து வழங்கும்

திருப்பாடல்கள்.

அருட்புலம்பல்.

பத்திரகிரியார்

மெய்ஞ்ஞானப் புலம்பல்.

இவற்றின் உரையுடன்

மதராஸ் டைமண்ட் அச்சுக்கூடத்திற
பதிப்பிக்கப்பட்டன.

சாதாரண௵ தனுரவி௴
1911.

All Rights Reserved.

இதன் விலை] [ரூபா 2-8-0



திருவொற்றியூர்.

பட்டினத்துப்பிள்ளையார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கானாடுகாத்தான் நகரத்துச் செட்டியார்,

சிதம்பரம் முனிசிபல் சேர்மன்,

ஹானரேபில்,

S. Rm. M. இராமசாமி செட்டியார் அவர்கள்

செய்ந்நன்றி ஞாபகார்த்தமியற்றிய

வாழ்த்து.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பெண்காட்டி வாமமுடன் பிரசக் கொன்றை
பிறைகாட்டு செஞ்சடிலம் பிறங்கு வன்னிக்
கண்காட்டி நுதலெழிலுங் கனக மேருக்
கவின்காட்டி விற்கரமார் கடவுண் மேய
வெண்காட்டு நகருதித்த பட்டி னத்து
மேதகையோன் விரியுலக மொடுங்கச் சொற்ற
பண்காட்டி பிரபந்த வுரைப்ப திப்புப்
பலவகையா லிடருறவப் பான்மை நோக்கி. (1)

நங்கடவுட் கன்பரென்றுங் கற்றோ ரென்று
நம்மரபி னவரென்று நலம்பா ராட்டி
சங்கரலிங் கப்புனிதன் பீ. ஏ. பட்டந்
தரித்தாங்கி லத்தினுடன் றமிழுந் தேர்ந்தோன்
மங்கலிலா அன்புருவன் ஹிண்டு பேபர்
வரையுதவி யாசிரிய வள்ளல் சூழ்ந்தே
அங்கணன்றன் றளியினுக்குச் சிவகோ சங்க
ளமைதலினு லதுமுற்ற வகத்தே முன்னி. (2)

எல்லையிலாக் களியுடனே யெவர்பாற் செல்வ
லெவரேற்கும் புண்ணியமா மிஃதென் றோர்ந்து
தில்லைநகர்த் தருமகருத் தத்து வஞ்செய்
சீர்த்தியுட னம்பலப்பொன் முகடு வேய்ந்தோன்
இல்லையென தெவர்க்குமன்ன தானஞ் செய்வோ
னிணையின்முனி சிபல்சேர்ம னென்ன நின்றோன்
தொல்லைவரு நல்வினையால் ஹான ரேபில்
துலங்குறுபட் டங்கொண்ட தூய்மை யாளன். (3)

யாவைவள மெனப்படுமெவ் யாவும் பல்க
யாண்டுளயாந் தருந்தமது விழைவைக் கூறக்
காவைநிகர்த் தவர்க்கருள் காளுடு காத்தான்
கவினகரத் தனதனெனும் இராம சாமிக்
கோவையிது செயற்குரிய கோமான் சீமான்
குணவாளன் கருணைவிழி குன்றா னென்னை
நாவையவன் புடையசைப்பச் செவிக்கொண் டானாய்
நற்கரும மெனவிரும்பி நலம்பா ராட்டி. (4)

வாடுபயி ரினுக்கொருகார் மேகம் போலும்
வந்தடைந்தோர்க் குயர்கற்ப தாரு போலும்
வீடுயிர்க்குப் பிழைப்பூட்டு மமிழ்தே போலும்
விழைவுற்றோர்க் கருள்சுரக்குஞ் சுரபி போலும்
நாடுமவர்க் குதவுசிந்தா மணியே போலும்
நல்குரவு தவிர்க்குமிரு நிதிபோ லுந்தன்
னாடுவரு மென்மருகன் குமார வேலா
யுதனுக்கோ ரன்னையன்பி னுயர்ந்தான் போலும். (5)

தந்தையின்போர் வகிதகைமைக் கேற்ப போலுந்
தாகமது தவிர்மந்தா கினியே போலும்
சிந்தையுவந் துரைப்பதிப்பு முற்றும் வண்ணஞ்
சேர்ந்தவனுள் ளங்களிக்க யான்க ளிக்க
வந்துரைத்த சங்கரலிங் கக்கோ மான்றன்
மனங்களிக்க வாசிப்போ ரகங்க ளிக்க
இந்தமகி தலங்களிக்க விறைக ளிக்க
இருநூறு வெள்ளிதந்தான் என்றும் வாழி. (6)

சென்னைக் கிரீஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதரா யிருந்தவரும்,
சிவபராக்கிரமம் சிறப்புப் பெயரகராதி முதலியன வியற்றியவரும்,
சிவமஹாபுராணம் மொழி பெயர்த்தவரும்,
காசிகண்டம் திருவிளையாடற்புராணம் விநாயகபுராணம் இவற்றின்
உரையாசிரியரும், சைவப்பிரசாரணருமாகிய
ஈக்காடு - இரத்தினவேலு முதலியாரவர்கள்
இயற்றியது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கானாடுகாத்தான் நகரத்துச் செட்டியார்,

சிதம்பரம் முனிசிபல் சேர்மன்,

ஹா ன ரே பி ல்,

S. Rm. M. இராமசாமி செட்டியார் அவர்கள்

செய்நன்றி ஞாபகார்த்தமியற்றிய

வா ழ் த் து.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பெண்காட்டு வாமமுடன் பிரசக் கொன்றை
பிறைகாட்டு செஞ்சடிலம் பிறங்கு வன்னிக்
கண்காட்டு நுதலெழிலுங் கனக மேருக்
கவின்காட்டு விற்கரமார் கடவுண் மேய
வெண்காட்டு நகருதித்த பட்டி னத்தார்
மேதகையோன் விரியுலக மொடுங்கச் சொற்ற
பண்காட்டு பிரபந்த வுரைப்ப திப்புப்
பலவகையா விடருறவப் பான்மை நோக்கி. (1)

நங்கடவுட் கன்பரென்றுங் கற்றோ ரென்று
நம்மரபி னவரென்று நலம்பா ராட்டு
சங்கரலிங் கப்புனிதன் பீ. ஏ. பட்டந்
தரித்தாங்கி லத்தினுடன் றமிழுந் தேர்ந்தோன்
மங்கலிலா அன்புருவன் ஹிண்டு பேபர்
வரையுகவி யாசிரிய வள்ளல் சூழ்ந்தே
அங்கணன்றன் றளியினுக்குச் சிவகோ சங்க
ளமைதலினா லதுமுற்ற வகத்தே முன்னி. (2)

எல்லையிலாக் களியுடனே யெவர்பாற் செல்வ
லெவரேற்கும் புண்ணியமா மிஃதென் றோர்ந்து
தில்லைநகர்த் தருமகருத் தத்து வஞ்செய்
சீர்த்தியுட னம்பலப்பொன் மூகடு வேய்ந்தோன்
இல்லையெனா தெவர்க்குமன்ன தானஞ் செய்வோ
னிணையின்முனி சிபல்சேர்ம னென்ன நின்றோன்
தொல்லைவரு நல்வினையால் ஹான ரேபில்
துலங்குறுபட் டங்கொண்ட தூய்மை யாளன். (3)

யாவைவள மெனப்படுமவ் யாவும் பல்க
யாண்டுளயாந் தருந்தமது விழைவைக் கூறக்
காவைநிகர்த் தவர்க்கருள் கானாடு காத்தான்
கவினகரத் தனதனெனும் இராம சாமிக்
கோவையிது செயற்குரிய கோமான் சீமான்
குணவாளன் கருணைவிழி குன்றா னென்னா
நாவையவன் புடையசைப்பச் செவிக்கொண் டானாய்
நற்கரும மெனவிரும்பி நலம்பா ராட்டி. (4)

வாடுபயி ரினுக்கொருகார் மேகம் போலும்
வந்தடைந்தோர்க் குயர்கற்ப தாரு போலும்
வீடுயிர்க்குப் பிழைப்பூட்டு மமிழ்தே போலும்
விழைவுற்றோர்க் கருள்சுரக்குஞ் சுரபி போலும்
நாடுமவர்க் குதவுசிந்தா மணியே போலும்
நல்குரவு தவிர்க்குமிரு நிதிபோ லுந்தன்
னாடுவரு மென்மருகன் குமார வேலா
யுதனுக்கோ ரன்னையன்பி னுயர்ந்தான் போலும். (5)

தந்தையின்பேர் வகிதகைமைக் கேற்ப போலுந்
தாகமது தவிர்மந்தா கினியே போலும்
சிந்தையுவந் துரைப்பதிப்பு முற்றும் வண்ணஞ்
சேர்ந்தவனுள் ளங்களிக்க யான்க ளிக்க
வந்துரைத்த சங்கரலிங் கக்கோ மான்றன்
மனங்களிக்க வாசிப்போ ரகங்க ளிக்க
இந்தமகி தலங்களிக்க விறைக ளிக்க
இருநூறு வெள்ளிதந்தான் என்றும் வாழி. (6)

சென்னைக் கிரிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதரா யிருந்தவரும்,
சிவபராக்கிரமம் சிறப்புப் பெயரகராதி முதலியன வியற்றியவரும்,
சிவமஹாபுராணம் மொழி பெயர்த்தவரும்,
காசிகண்டம் திருவிளையாடற்புராணம் விநாயகபுராணம் இவற்றின்
உரையாசிரியரும், சைவப்பிரசாரணருமாகிய
ஈக்காடு - இரத்தினவேலு முதலியாரவர்கள்
இயற்றியது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முகவுரை.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

அறிஞர்களே!

நித்தியானந்தப் பெருவாழ்வாகிய மோக்ஷானந்தத்தை நம்மனோரெய்திக் கடைத்தேறும் வண்ணம் இத்தண்டமிழ்நாட்டில் திருவவதாரஞ் செய்த ஞானவித்துக்களிலொருவராய், தத்துவராயர் ஒழுவிலொடுக்கநூலுடையார் தாயுமானவர் முதலிய மேதாவிகளால் துதிக்கப்பெற்றவராய், இலக்கணக் கொத்து முதலியநூல்களில் உதாரணமாக எடுத்துக்காட்டப்பெற்ற இலக்கியக் காரராய் உண்மைத்துறவியாய் விளங்கிய திருவெண்காட்டுப் பிள்ளையாராகிய பட்டினத்துப்பிள்ளையார் புராணத்தை உரையெழுதுவித்து முன்னர்ச் சஞ்சிகை ரூபமாக யான் வெளிப்படுத்தியது பலருமறிந்தவிஷயமே.

அதன்பின்னர், ஷை சுவாமிகளாற்றிருவாய்மலர்ந்தருளப் பட்டனவற்றில் சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள், சோமசுந்தரப் பெருமானருளிய திருமுகப்பாசுரத்தை யாதியாகக் கொண்ட பதினோராந்திருமுறையிற் சேர்க்கப்பட்டுள்ள கோயினான்மணிமாலை முதலிய ஐந்துபிரபந்தங்கட்கும், அவராற்றனித்தனி அவ்வவ்வமயங்களிற் பிரசாதித்த தனித்திருப்பாடல்கட்கும், அருட்புலம்பலுக்கும் உரையெழுதுவித்துச் சஞ்சிகைரூபமாக வெளியிடக்கருதியபோது, ஷை பிரபந்தங்கள் உரையிடப்பட்டுள்ளனவெனக் கேள்வியுற்று, அவற்றை வருவித்து நோக்குகையில், திருவேகம்பமுடையார் திருவந்தாதியில் முப்பது திருப்பாடல்கள் உரையியற்றப்படாதிருத்தல் கண்டு அவற்றையும் முற்றச்செய்ய முன்னினவனாகி, சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஆனூர் சிங்காரவேலுமுதலியாரைக் கொண்டு ஷை ஐந்துபிரபந்தங்கட்கும் எடுத்துக்காட்டிய உதாரணங்களோடு பரந்த விரிவுரை யியற்றுவித்து, அவற்றின் பின் வரத்தக்க தனித்திருப்பாடல்கட்குச் சென்னை நகரத்துச் சில செந்தமிழ்வித்துவ சிகாமணிகளால் உரைசெய்வித்துச் சஞ்சிகை ரூபமாக நடத்தி முடித்தனன்.

இவை இன்னணம் முற்றுப் பெறுகையில், மத்தியார்ச்சுனமாகிய திருவிடை மருதூரிற் சிற்சோதியி லேக்கிய மெய்திய பத்திரகிரியாரால் அருளிச்செய்யப்பட்ட மெய்ஞ்ஞானப் புலம்பலும் இதிற் சேர்க்கப்படவேண்டுமென்று, சென்னை நகரவாசிகளாய், என்பால் அன்பு மிக்கவர்களாய், தள்ளப்படாது கொள்ளத்தக்க சொல்லேற்றமுடைய சில நண்பர்கள் விரும்பிய வண்ணம் கருத்துரை யெழுதிச் சேர்த்து, செய்யுள் அட்டவணையையும் உடன் கூட்டி, புத்தகமுகப்பில் பட்டினத்துப்பிள்ளையார் சரித்திரசங்கிரகம் நன்னடையுறவெழுதி யமைத்து ஒருவாறு முடித்தனன்.

முந்தித்தாயுமான சுவாமிகள் திருப்பாடற் றிரட்டினுக்குமெய் கண்ட விருத்தியுரை செய்து தந்த சித்தாந்த சரபம் - அஷ்டாவதானம் - பூவை - கலியாண சுந்தர முதலியாரவர்கள், இந்நூலச்சிட்டு வருகின்ற காலத்து அவ்வவ் வமயங்களின் எனக்கு வேண்டிய பல உதவி செய்தமைக்கு நான் எக்காலத்தும் அவரை மரக்கற் பாலதன்று.

யான் தனிகனல்லனாயினும் முயற்சி திருவினையாக்குமென்ற முதுமொழியை விடாதுப் பற்றிப் பல்லாற்றானும் வருந்தி முடித்தனன். இதன் உரை யெழுதுகைக்கு நான் கொடுத்த ஊதியம் சொல்பமாயினும் அன்போடெழுதிக்கொடுத்த கல்வி வாணர்கட்கு என்வந்தனஞ் செலுத்துகின்றேன். இவ்வுரைப் பதிப்பைமுட்டின்றி முடியுமாறுசெய்த எல்லாம்வல்ல ஸ்ரீநடராஜ பதியின் றிருவருட் பிரசாதத்தை வாழ்த்தித் துதித்து வணங்குகின்றேன்.

☞ திருவெண்காட்டடிகள் பிரபந்த முழுமைக்கும் உரைவிரும்புவோர் இப்பதிப்பினையே வாங்குதல் இன்றியமையாததாம் ஏனெனில் இதின் ஒருபகுதியாகிய திருவேகம்பமுடையார் திருவந்தாதியில் 30 பாடலின் உரை பிறபதிப்புக்களில் காணப்படமாட்டா இதில் மட்டுமே காணப்படும். இவ்விஷயம் கவனிக்கத்தக்கது. சுபம்.

இங்ஙனம்:
சென்னை மெய்கண்ட சந்தானசபையிலொருவரும்
சைவநூலுரைப் பிரசாரணருமாகிய,
☞ **ஸ்ரீ - குமாரவேலாயுத முதலியார்.**

சென்னை,
சாதாரண ௵ தநுர்ரவி.

சாற்றுகவிகள்.

தமிழ்ப்பிரம சூத்திராசிரியராகிய
மறைத்திருவன் - சுவாமி, விருதை - சிவஞான யோகிகள்
இயற்றியது.

அன்புருவ மாகியபட் டினத்தடிகள் வாய்மலர்ந்த வருமெய்ந் நூற்குக்
கன்னலெனச் சிங்கார வேலறிஞன் றந்தவுரை கணித்தார் வத்தால்
இன்பநிலை யடியவர்தம் மேவலெனத் துணிந்துபுரி யியற்கை பூண்ட
சென்னைநகர்க் குமாரவே லாயுதமா லச்சியற்றிச் சிறப்புற் றானே.

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்
பூவை - கலியாணசுந்தர முதலியா ரவர்கள் இயற்றிய,
பன்னிரு சீர்க்கழி நெடில் விருத்தம்.

தவராஜ சிங்கமெனத் தாபதர்க ணனிவியக்குந் தனிமை வாய்ந்த
தக்கதிரு வெண்காடர் பிரபந்த மாட்சியினைத் தகவாச் சூழ்ந்து
நவமாக விருத்தியுரை சித்தாந்த நயமுடனே நலக்கச் சொற்றான்
நண்ணுமிலக் கியவிலக் கணமுற்று மொருங்குணர்ந்த நல்விற் பன்னன்
தவபான விற்களுலு மானூர்சிங் காரவேற் றகுமே தாவி
தனித்தவப் பெருநூலெங் கணும்பரவக் கலைவல்லோர் சந்தோஷிக்கக்
கவலாநெஞ் சுறுமிரா மச்சாமி தவமுளுற்றிக் கனிவி னீன்ற
காதலன்கு மாரவே லாயுதனச் சினிலேற்றிக் களித்திட் டானல்.

சென்னை-வேப்பேரி
எஸ். பி. ஜீ. ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
கா. நமச்சிவாயமுதலியாரவர்கள்
பாடியது.

மைகண்ட னடிக்கமலக் கெழில்வண்டா மெனமருவி மகிழ்ந்து போற்றி
மெய்கண்ட சிவஞானச் செழுந்தேறல் வாய்மடுத்து மேலுந் தேக்கிப்
பொய்கண்ட வெம்மனோர் பவப்பிணியை யிரித்திடுவான் பெரிது நாடிக்
கைகண்ட மருந்தென்னப் பல்லரிய பிரபந்தங் கனிவிற் றந்த

செய்யதவ வெண்காட ரடிபரவி யவரருளுந் திருப்பாடற்கே
செய்யவுரை செய்தனனால் சிங்கார வேலனெனுஞ் செந்நாவல்லோன்
உய்யுவுல கினரதனை யச்சுவா கனமேற்றி யுலவத் தந்தான்
துய்யமனத் தினன்குமர வேலாயுதப் பெயர்கொள் சுகுணன் மாதோ.

திருநெல்வேலி ஜில்லா:
எட்டயபுரம் சமஸ்தான வித்வான்,
திருமயிலை - வி. சுந்தரமுதலியாரவர்கள்
இயற்றியது.

விருத்தம்.

• சங்காழி மருவுகா விரிசங்க மத்துறையாந் தலத்தி லில்லந்
தங்காமற் றுறந்தபர சிவஞானி வெண்காடர் சாற்று நூற்குச்
சிங்கார வேற்புலவ னாற்சறந்த விரிவுரையைச் செவ்வே யாற்றிச்
மங்காமற் பிரசுரித்துக் குமரவே லாயுதமால் வழங்கி னானால்,

சென்னை, ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்,
கோ - வடிவேலுசெட்டியாரவர்கள் இயற்றிய,

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சித்தநிலை திரியாது திகழ்ந்துசிவா நந்தத்தேன் றெவிட்டா துண்டு
முத்திநிலை நின்றருள்பட் டினத்தடிக ளுலகுய்ய மொழிபா டற்குப்
பத்திநிலை யுற்றுப்பன் னூலோதித் திறம்பெற்ற பண்ப னாகி
யொத்துநிலை பெற்றிடுசிங் காரவேற் பண்டிதனே ருரைகண் டானால். (1)

அவ்வுரைகண் டார்கலிசூ ழவனியின்க ணன்பினெறி யமைந்த சைவர்
செவ்விதெனச் சிரந்துளக்கச் சீர்செறுவேளா ளுளர்குளச் செல்வ னான
தெவ்வறுமி ராமசா மிப்பெயரான் றிருக்குமரன் சிவன்பா லன்பான்
குவ்வினிற்பேர் குமரவே லாயுதன்றா னச்சிட்டுக் குலவி னானே. (2

மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவான் வண்ணக்களஞ்சியம்
காஞ்சி - நாகலிங்க முதலியாரவர்க ளியற்றியது.

திருவருட்பெ ருஞ்செல்வ ராகியவெண் காடருட் டெய்வ ஞானத்
தருவெனுநற் பிரபந்தந் தனக்கொருவி ருத்தியுரை தகவாயானூர்
வருமுயர்சிங் காரவே னாவலன்றா னியற்றிட்டான் மகிழ்வா யஃதைத்
தெருள்வளா குமாரவே லாயுதனச் சினிலேற்றித் திகழ்வித் தானால்.

சென்னைக் கிறித்தவ கலாசாலைத் தமிழ்ப்பண்டிதராயிருந்த
வா - மகாதேவ முதலியா ரியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தருத்திகழு மந்நாடுங் கருத்திகழுந் துறவிகளுட் டலைமை சான்ற
கருத்திருகு பட்டினத்துப் பிள்ளையார் பிரபந்தங் காட்டு முண்மை
யருத்தியுடன் சைவருளங் கொளவளித்தான் றிருத்தமுற வழகி தாக
விருத்தியுரை சிங்கார வேலென்னும் வேளாளன் மேதக் கோனே. (1)

மற்றதனை யச்சேற்றி மகிதலத்திற் புகழ்நிறீஇ மாண்புற் றானா
ணற்றமிழி னருமையெலா நன்கறியு மொருவ னும்மை நற்ற வத்தாற்
சொற்றழையு மிராமசா மிக்குரிசின் மகனாகத் துலங்கப் பெற்றோ
னுற்றவிருங் குமரவே லாயுதனென் பான்பூதா ருதித்தோன் மாதோ. (2)

மதராஸ் பியர் ஆபீஸ் டிராபிக் ஓவர்சீயராயிருந்த வித்துவான்

மோசூர் - முனிசாமி முதலியாரவர்கள்

இயற்றிய

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்சான்ற கொன்றையணிச் செஞ்சடைப் பரமனது திருவடிப்பற் றன்றியே
திகழுமிவ் வலகினிறை செல்வங்க ளியாவையுஞ் சிந்தனையி லாதொழிந்த
பார்சான்ற வெண்காடர் பகரருந் தனிகளைப் பண்பினிற் போற்றுநாளிற்
பாங்காகச் செய்தருளும் பிரபந்த மாட்சியினை பன்னரும் விருத்தியுரையில்
ஏர்சான்ற சிங்காரவேற் பெயர்கொளுவல னிருவினை யிரிந்தோடநல்
லின்பமுடன் றந்தன னன்னவ னீடூழி யிந்நிலன்றனில் வாழிநற்
பேர்சான்ற குமரவே லாயுதச் சுகுணனதைப் பேசுபா வலர்மகிழவே
பேணரிய பிரியமுட னச்சுவா கனமேற்றிப் பெட்புற வளித்தானரோ.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து வித்வான் செங்கற்பட்டு

அரங்கசாமி நாயகர் அவர்களியற்றியவை.

புனையரனார் மலரடியென் றறிந்துலக மருளகற்றிப் புனிதமெய்தி
யினையகன்ற விரனீடும் பட்டினத்துப் பெருமானாரிசைத்த வேதத்
தனைகடந்த தமிழ்க்கடலிற் சிங்காரவே லறிஞனறிவா மததாற்
றனையிகந்த வுரையெடுத்துப் புலவர்செவி யூற்றியிசை சூடினனால். (1)

அன்னவன்செ யுரைபலரு மோதுதற்கே யாதரத்தா லச்சியற்றிப்
பன்னருஞ் சீர்திறை கொண்டான் கறைகண்ட னன்பர்வழிபணிந்துநிற்பான்
முன்னமரர் துயர்களைந்த முதல்வனடி மறவாதான் முயற்சிக் குன்றா
னன்னயஞ் சேர்குமாரசாமிப் புலவனவன் பெருமை நவிலப்பாற்றோ. (2)

இந்நூலச்சிட்டார் சிறப்பு.

சென்னைக் கிறிஸ்டியன்காலேஜ் தமிழ்ப்பண்டிதரும்,
உரையாசிரியரும், சைவப்பிரசாரணருமாகிய
ஈக்காடு - இரத்தினவேலுமுதலியாரவர்கள் குமாரர்

ஈக்காடு - சபாபதி முதலியா ரவர்களியற்றிய

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மன்னியநஞ் சிவபெருமானிணைமலர்த்தாள் சிந்தையினின்வைத்துப்போற்றி
வாழ்வனைத்து மயக்கமெனத் தேர்ந்தபட்டி னத்தடிகள் வாய்மலர்ந்த
தன்னிகரில் பாவினுக்கோர் விருத்தியுரை யியற்றவதன் றகைமை நோக்கித்
தரணியுளோ ருளமகிழ்ந்து கண்களிக்க வச்சிட்டுத் தலைமையுற்றான்
பன்னரிய கீர்த்தியெங்க ணும்பரவ வோங்கிலக்கும் பான்மை பெற்ற
பகர்தொண்டை நாட்டகத்து ஸ்ரீபெரும்பூதூ ரதனிற் பண்பாய்வந்த
நன்னயஞ்சே ரெழின்மேழித் துவசனிரா மஸ்வாமி நல்லானீன்ற
நலக்கவந்த குமாரவேலாயுதப்பேர் வகித்தவொரு நலமிக்கோனே.

உ

சிவமயம்

நூலினுட்பிரிவு.

பட்டினத்துப்பிள்ளையார் பாடல்.

பதிகம்	பக்கம்.
பட்டினத்துப்பிள்ளையார். பத்திரகிரியார் சரித்திரச்சருக்கம்.	1
கோயினான்மணிமாலை	1
திருக்கழுமலமும்மணிக்கோவை	136
திருவிடைமருதூர் மும்மணிக்கோவை	2 2
திருவேகம்பமுடையார் திருவந்தாதி	296
திருவொற்றியூர் ஒருபாவொருபஃது	359
முதலாவது கோயிற்றிருவகவல்	385
இரண்டாவது கோயிற்றிருவகவல்	388
மூன்றாவது கோயிற்றிருவகவல்	401
நான்காவது கச்சித்திருவகவல்	405
திருவேகம்பமாலை	1
திருத்தில்லை	41
திருச்செங்காடு	58
திருவொற்றியூர்	59
திருவிடைமருதூர்	60
திருக்கழுக்குன்றம்	62
திருக்காளத்தி	63
கைலாயம்	67
மதுரை	71
பொது	71
தாயாருக்குத்தகனகிரியை செய்கையிற் பாடியது.	106

பதிகம்	பக்கம்.
திருவிடைமருதூர்	110
திருவொற்றியூர்	110
திருவாரூர்	111
கச்சிக்காரோணம்	112
திருக்காளத்தி	113
திருவிருப்பையூர்	113
திருவையாறு	114
குற்றாலம்	114
பொது-வெண்பா.	114
பின்முடுகுவெண்பா.	117
விருத்தம்	
முதல்வன்முறையீடு	124
அருட்புலம்பல்	136
இறந்தகாலத்திரங்கல்	155
நெஞ்சொடு புலம்பல்	158
பூரணமாலை	169
நெஞ்சொடு மகிழ்தல்	185
உடற்கூற்றுவண்ணம்	190
பத்திரகிரியார்மெய்ஞ்ஞானப் புலம்பல்	197

பட்டினத்துப்பிள்ளையார் நூலினுட்பிரிவு முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவெண்காட்டடிகள்

எனவழங்கும்

பட்டினத்துப்பிள்ளையார்

சரித்திரம்.

திவ்விய மங்கள தேஜோமயமாகிய சிவபெருமானே பரம்பொருளென்றுணர்ந்த உண்மை ஞானத்தையுடைய வசிஷ்டர் வேதாரணியர் புலத்தியர் சவுனகர் முதலிய முனிசிரேஷ்டர்கள் முன்னொருகாலத்தில் நைமிசாரண்ணியத்தில் திருவெண்ணீறு சண்ணித்து, திரிபுண்டரமணிந்து அக்கமாலை சூடிச் சிவத்தியானபரராய் வேதாகமங்களாற் பரமபதியைத்துதித்து வாழ்ந்திருந்தனர். அக்காலத்துச் சதுர்வேத ஷடங்க அஷ்டாதச புராணங்களை வியாசமுனிவர்பால் ஐயந்திரிபற வுணர்ந்த புண்ணிய வடிவினரான சூத புராணிகர் ஆங்கெழுந்தருள முனிவர்கள் கண்டு எதிர்கொண்டழைத்து அர்க்கிய பாத்திய ஆசமனாதிகளாலுபசரித்து உன்னதமான ஆசனத்திலிருத்தி, மும்மல மற்ற முனிபுங்கவரே! எமது தவப்பேற்றால் தேவரீர் ஈண்டெழுந்தருளப் பெற்றோம். சிவபிரானே அகில லோகசிருஷ்டியாதி பஞ்ச கிருத்திய காரணபூதரென்றும் அவரது திருவடியே அழிவற்ற நற்கதியை யளிப்பதென்றும் பல புராணங்களைத் தேவரீர் அடியேங்கட்குபதேசித்திருந்தும், அம்மகாதேவனுடைய பக்தர்கள் சரிதங்களைச் சொல்லத்தொடங்கி ஸ்ரீ சுதரிசனருடைய பிரபாவங்களைச் சொல்லிமுடித்த பின்னர், சிவாநுக்கிரக மேலீட்டாற் பரிபக்குவமுற்றிருந்த நிதிக்கோனாகிய குபேரன், தென்றமிழ் நாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தில் அவதரித்துச் சிவபெருமானையே அரும்பெறன் மகவாய்ப்பெற்றுச் சிவஞானியாய்ச் சித்திமுத்தியடைந்ததாகத் திருவாய் மலர்ந்தருளினீர், அவ்வற்புத சரிதையை அடியேங்களுக்கு விளக்கமாகத் திருவருள் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க, சூதமுனிவர் அவர்களுடைய விருப்பத்திற் கியைந்து பின்வருமாறு திருவாய்மலர்ந்தருளத் தொடங்கினர்.

முனிவர்களே! நீவிர் விரும்பிய இச்சரிதம், சாமவேத சம்பந்தமான சாந்தோக்கியாதி உபநிஷதங்களால் புகழ்ந்தோதப் பெற்ற சிவஞானச் செல்வராகிய உபமந்யுமுனிவர் தமது மாணவர் பலருக்குபதேசித்ததாகப் பவிஷ்யோத்தர புராணம் பகர்கின்றது.

ஊழிதோறோங்கும் வெள்ளிமலையாகிய கைலாய மலைச்சாரலில் சுகவனத்தில் உபமந்யுமுனிவர், தம்மைப் பல முனிவர்சூழ வெழுந்தருளி யிருக்கையில், முனிவர்பலரும் உபமந்யு பகவானைப்பணிந்து, ஸ்வாமீ! பக்த பரமேசுவரரென நூல்களாற் புகழ்ந்தோதப்பெற்ற சிவனடியார் பிரபாவங்களை நாங்கள் சிரவணஞ் செய்யும்படி திருவாய் மலர்ந்தருள வேண்டுமெனப் பிரார்த்திக்க, உபமந்யுமுனிவர் திருநந்திதேவர் திருவருள் பெற்ற சநத்குமாரர் வழியில் வழங்கிய ஒரு சிவஞானியார் சரிதம் அதியற்புதமானது. அது சுவேதாரண்ய சரிதம் (திருவெண்காட்டடிகள் சரிதம்) எனவும் பெயர் பெறும். அத்திவ்விய சரிதையைச் சொல்கின்றேன். திரிகரண சுத்தியாகக் கேட்பீர்களாக.

முனிவர்களே! கற்பாந்தத்திலே குபேர பதமுற்றிருந்த வொருவர் சிவபெருமானிடத்தில் அன்புமிகுந்து அவருக்குத் தோழனென்றுஅனைவருங் கூற வாழ்ந்திருக்கையில், ஒருநாள் கைலாயத்திற்குச் சிவதரிசனார்த்தமாகச் சென்றபோது, சிவபெருமான் சகல தேவர்களும் முனிவர்களும் தம்மைப் புடைசூழ்ந்து வரவும், தமது தோழரான குபேரர் தொடர்ந்து வரவும் சிதம்பர மகாக்ஷேத்திரத்திற்கு எழுந்தருளினர். அக்காலத்தில், தோழனார் சிவபெருமானைத் தொழுது இச்சிதம்பர தலத்திற் போலவே பிறதலங்களிலுஞ் சென்று தேவரீர் திருக்கோலங்களைத் தரிசிக்கவேண்டுமென விண்ணப்பிக்க, சிவபெருமான் அவ்வேண்டுகோளுக் கிணங்கி, திருநந்தி தேவர் முதலிய கணங்கள் புடைசூழ எழுந்தருளி, சுவேதாரண்யம் என்னும் திருவெண்காட்டினை யணுகிவாழ்ந்திருந்தனர்.

சிவபெருமானோடு உடன்வருந் தோழனார் தமக்குச் சத்திநிபாதத் துத்தம சன்மார்க்க மடையும் பரிபக்குவகால மணுகினமையின் அச்சுவேதாரண்யத்தை யடுத்த காவிரிப்பூம் பட்டினத்தைப்பார்த்து அவ்விடத்தில்அதிக விருப்புற்றனர். ஒருகாலத்தில், அதிதியானவள் சிவதரிசனார்த்தமாக நாடோறுந் திருச்சாய்க்காட்டுக்கு வருவதுணர்ந்து இந்திரன், தன்தாயின் வருத்த மகல அவ்வாலயத்தைத் தன் நகரத்திற்கு எடுத்துச் சொல்லப்போந்த பொழுது உமாதேவியார் அஞ்சிப்புறம்போந்து கூகூவென்றோசைகாட்ட, சிவபெருமான் இந்திரனைத்தடுத்து அவனுக்கும் அவன் தாயாகிய அதிதிக்கும் அநுக்கிரகித்தனர். அது காரணமாக இந்திரன் மீண்டும் ஆங்கு ஆலயப் பிரதிஷ்டைசெய்ய ஒரு நகரங்கண்டு அந்தணர் முதலிய உயர்ந்த நாற்பெருங் குலத்தினரையும் அமைத்து வைசியர் மரபு ஓங்கச்செய்து திருச்சாய்க் காட்

டில், அமுதவண்ணப் பெருமானுக்கும் கூகூவென்ற காரணம் பற்றிக் கூவென்ற மென்மொழிப் பிராட்டியென்று பெயர் வழங்கும் உமாதேவியாருக்கும் ஆலயஞ்சமைத்து நித்திய நைமித்திகாதிகளை முறைப்படியியற்றி, திருப்பல்லவனீச்சர முதலிய ஆலயங்களின் பிரதிஷ்டைத் திருப்பணிகளையும் செய்வித்தனன். அந்நகரத்தினர் எப்பொருளை விரும்பியேனும் பிற நகரத்திற்குப் புகாராகலின் புகாரெனும் பெயர்கொண்டு அந்நகரம் விளங்கியது. அக்காவிரிப்பூம் பட்டினமே இயற்பகை நாயனார் திருவவதாரஞ்செய்த திவ்வியஸ்தலமாதலின் அங்கே சிலகாலம் வசிக்கவேண்டுமென்னும் விருப்பம் குபேரனார்க் குண்டாயது.

குபேரனார் அவதரித்தது.

குபேரனார் சிவபெருமானைப்பணிந்து, அடியேன் இத்தலத்தில் சில காலம் வாசஞ்செய்ய விரும்பினேன். அவ்வாறே நிகழத்தேவரீர் திருவுள்ளஞ் செய்தருளவேண்டுமென விண்ணப்பிக்க, சிவபிரான் குபேரனாரைநோக்கி, இது கர்மபூமி நீயோ போகபூமியில் வசிப்பவன். இங்கே வசித்தல் உனக்கடாது ஆயினும் நீவிரும்பியபடியால் மாநுடதேகமுற்று ஈண்டு வசிக்கக் கடவை யென்றருளினர். அதுகேட்ட குபேரனார் பிறத்தற்குப்பயந்து, இறைவனே! பெறற்கரிய தேவரீர் திருத்தொண்டினைப் பிரிய நேர்ந்ததாலும் மாநுடவடிவேற்றுச் செல்வச் செருக்கால் மயங்குகையில் தேவரீரே புதல்வனாகத் தோன்றி உண்மை நிலையினை யுணர்த்தியருள வேண்டுமென்று வேண்டவும், எம்பெருமானும் அங்ஙனமேயாகுக வென்றருளிச்செய்து, இறைவியாருடன் ஏனைத்திருத்தலங்களையுங் கண்டு திருக்கயிலாய கிரியடைந்து பண்டுபோ லமர்ந்திருந்தனர்.

பட்டினத்துப்பிள்ளையார் திருவவதாரஞ்செய்தது.

சிவபிரானநுமதிபெற்ற குபேரனார் யாரிடஞ்சென்று பிறப்போமெனும் விசார முற்றிருக்கையில், அந்தக் காவிரிப்பூம் பட்டினத்தில் வைசிய மரபில் அவதரித்துச் சிவபக்தி முதலியவற்றிற்கு நிதியாய் விளங்கிய சிவநேசரென்பார் ஞானகலாம்பை யெனும் பெயர்வாய்ந்து நற்குணம் கற்பு அழகு முதலிய குணச்சிறப்புக்களோடு விளங்கிய மனைவியாருடன் இல்லறநடாத்தி ஒரு பெண் மகவைப்பெற்று வீடுபேற்றுக் குரிய சற்புத்திரனில்லாக் குறையால் மனமாழ்கி, அம்மைந்தனைப் பெறுதற்கேற்ற பலவகைப்பட்ட விரதாதிகளை யநுஷ்டித்துவந்தனர்.

சிவநேசரது நிலையினைக்கண்ட குபேரனார், இவர்க்குப்புதல்வராய்ப் பிறப்பதே நலமெனக்கொண்டு அவர்மனைவியார் ஞானகலாம்பையார் வயிற்றிற் பிரவேசித்ததால் ஞானகலாம்பையார் கருப்பம் வாய்த்தனர். அவர் உறவினர் பலரும் மகிழ்பேருவகை கொண்டிருந்தனர். மாதங்கள் தோறும்

கர்ப்பக்குறிகள் நன்கு விளங்க, பத்து மாதங்கள் பூர்ணமானதும் உத்தம மான சுபதினத்தில் சிறந்த லக்கினத்தில் ஞானகலாம்பையார் புதல்வனைப் பெற்றனர். சிவநேசர் காவிரியில் ஸ்நானஞ்செய்து பிதிரர்கடன் முடித்து இல்லஞ்சேர்ந்து அந்தணராதியோர்க்கு அபரிமிதமான தானமளித்து, சோதிடநூல் வல்லாரையழைத்து ஜாதகர்மமியற்றிப் புத்திரோத்ஸவங் கொண்டாடி, திருவெண்காடரென நாமகரண முதலியன நடாத்தித் தாமும் மனைவியுமாக அம்மைந்தனை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாகப் போற்றிக் காத்துவந்தனர். திருவெண்காடருக்கு வயது ஐந்தாயது.

பட்டினத்துப்பிள்ளையார் கல்விபயின்றது.

இவர் ஐயாட்டைப் பருவத்தினராயிருக்கையில், இவர் தந்தையார் சிவநேசர் சிவபதமடைந்தனர். திருவெண்காடர் பிதாவின் ஈமக்கிரியைகளைக் குறைவின்றி முறைப்படி யியற்றித் தாயாருடைய ஏவல் கடவாதிருந்தனர். ஞானகலாம்பையார் திருவெண்காடர்க்கு வித்தியாப்பியாசஞ் செய்விக்க, இவர் தவக்குறையை நிரப்பத் தோன்றியவராதலின், அவ்விளமையிலேயே ஆசிரியன் முன்னிலையாக நிற்ப எவ்வகை நூல்களையும் எளிதிற்கற்றுத் தேர்ந்து, பண்டைய வுணர்வால் சிவஞானச் செல்வராய், உலகப்பற்றின்றிச் சிவபூஜையில் ஆசக்தியுடையராய், அச்சிவபூஜை ஆசிரியமுகத்தாலடைய வேண்டும் அங்ஙனமில்லையேற் பயனில்லையென்றோர்ந்து, உத்தமாசிரியன் நமக்கு யாண்டுக்கிடைப்பனோ வென்று இராப்பகல் கவலைகொண்டு உடலு ருகிவந்தனர். இவர் நிலைமையைத் தாயார் பார்த்து, அருமைக்குழந்தாய் ! உன்சரீர மிளைப்பானேன். வயிறுவாடுவானேன். உண்ணற்குவருக வென் றழைப்ப, இவர் ஆசிரியனைத் தேடுங்கவலையிலிருப்பவராதலால் உணவில் வெறுப்புற்று, அன்னாய் ! எனக்கு இன்று பசியின்று நாளைப்புசிப்பேன் என்று சமயோசிதமாகக் கூறிப்படுத்துத் துயின்றிருந்தனர்.

பட்டினத்துப்பிள்ளையார் சிவாநுக்கிரகம்பெற்றது.

திருவெண்காட்டடிகள் இங்ஙனமிருக்க, இவரைத் தடுத்தாள்வோமென முன்னரே வரமளித்த முழுமுதற்கடவுளும் தடங்கருணைப் பெருங் கடலுமாகிய சிவபெருமான் இவரது அதிதீவிர பக்குவ நிலையைக் கருதித் திருவருள் பாலிப்பவராய் அவ்விரவில் இவர்கனவில் நரைதிரை மூப்புடைய வேதியராக வெழுந்தருளி, குழந்தாய் வெண்காடா ! உடலிளைத்தனையே என்று தமது கையாற்றடவவும், திருவெண்காடர் துண்ணென விழித்து, கனவு நனவாகக் காந்தத்தைக் கண்ட இரும்புபோலக் குழைந்து திருவடியைப்பற்றிப் பலபல வகையாகப் பன்முறை பணிந்து துதித்து, எம்பெருமானே ! தேவரீர் இங்கு எழுந்தருளயாது தவஞ்செய்தேன்? உம்மைப் பிரிந்து சகியேன். என்னைக் கைவிடாதீரென்று துதித்துப்பாதத்தில் வீழ்ந்து பரிதபிக்க, ஐயர் அன்போடு நோக்கி இன்மொழி கூறிநிற்ப, இன்று நான் தன்னியனாயினேன். அடியேன் செல்வமுழுதுந் தேவரீருடையனவே. அவற்

றை யேற்றருள வேண்டுமெனப் பலவாறு பணிந்து நிற்க, ஐயர், குழந்தாய் ! இந்திராதியிமையோர் பதங்களும் இமைப்பிலழியும் இயற்கையன ஆதலின் இச்செல்வம் எனக்கு யாதுக்குவேண்டும் ? குருலிங்க ஜங்கமங்களுக்கு இகத்தில் செல்வமே கருவியாயிருத்தலின் இவற்றை நீயே வைத்துக்கொண்டு நல்வழியில் உபயோகப்படுத்துக. நீ கருதிய வற்றை யெல்லாம் பெறுவாயென்று அருளிச் செய்தனர்.

முன்னரே சிவார்ச்சனையில் பெருவிருப்புற்றிருந்த திருவெண்காடர் அவர்கூறிய வற்றைக் கேட்டுப்பணிந்து துதித்து அடியேன் எவ்வகையாக எதனைக்கொண்டு எவ்விடத்தில் பூசிப்ப தெனத்திருவாய் மலர்ந்தருள வேண்டுமென விண்ணப்பிக்க, ஐயர்? குழந்தாய் ! நாளையதினம் திருவோண நக்ஷத்திரங்கலந்த சோமவாரப் பிரதோஷமானபடியால் நீசுவேதாரணிய முற்றுப் பெருமானையும் பிராட்டியையும் விதிப்படி திருமஞ்சனமியற்றி, அரனடியவரையுபசரித்து அங்கே காத்திருந்தால், வேதாகமப்பொருள்களை நன்குணர்ந்த அந்தணரொருவர் தோன்றி, நீயர்ச்சனை செய்தற்குரிய சிவலிங்கப்பெருமானை யெழுந்தருளச்செய்து தீக்ஷாவிதிப்படி உனக்குஐந்தெழுத்துண்மையை யருள்செய்து அருச்சிக்கு முறையையும் உணர்த்துவர். நீயதனாற் பரிபாகமுற்று இம்மைக்கும் மறுமைக்கும் மேம்பட்ட பேரின்பமாகிய முக்தியை யெய்தக்கடவாய் என்றாசீர்வதித்து, திருவெண்ணீறணிந்து அஸ்தமஸ்தகசையோகஞ்செய்து அந்தர்த்தானமாக, உடனே கண்விழித்தெழுந்த திருவெண்காடர் கருணாநிதியைக்காணாமல் ஆராமையால் அழுதுதொழுது யான் கண்டது கனவாயிற்றே. உண்மை யென்றெண்ணி உளமகிழ்ந்தேனே. இறைவன் திருவுள்ளம் இவ்வாறாயின் யாதுசெய்வேன்? என்றேக்கமுற்றிருந்தார்.

அன்றிரவில் புதல்வராகிய திருவெண்காடர் உணவு கொள்ளாது உறங்கிவிட்டமையினால், பெருங்கவலையோடு நித்திரையின்றி அருகே சயனித்திருந்த ஞானகலாம்பையார் வெருண்டு விழித்து மைந்தரைநோக்கி அப்பா! என்ன செய்கின்றாய்? என்னசெய்தி? எனவினவ, திருவெண்காடர் தமக்குற்ற கனவைக் குறிப்பாக வுணர்த்த,ஞானகலாம்பையார் மனமகிழ்ச்சி மிகுந்து இவர்நிலைமையையுணர்ந்து திருவெண்காடரைத் தடவியுச்சிமோந்து, மகனே உனக்குச் சிவானுக்கிரகங் கைகூடுங்காலம் குறுகியது. கவலையுறாதே. கனவிற் கடாக்ஷித்த வகையே கடவுள் நடத்திக் கருணைபுரிவர். சிவபூசை செய்வது எளிதல்ல. மிக்க அரிது. வேதாகமங்களே சிவபிரான் மகிமையை யறியாமல் மயங்குமாயின் நீயோ சிறு குழந்தை. என்தழுவியகை சிறிது நழுவின் தனியேயிருப்பதாக அழுகின்றபருவத்தினன். சிவபூசையோ, பக்தி,வைராக்கியம் அறிவு, ஆசார முதலியவற்றில் ஒன்று குறைந்தாலும் முற்றுவதன்று. சிவபூசை செய்வதன்முன் பஞ்சாக்ஷர ஜபத்தாற் சித்தசுத்தி செய்திருக்கவேண்டும். இப்பஞ்சாக்ஷரமே மந்திரங்கட்கெல்லாம் தலைமைவாய்ந்தது. பஞ்சாக்ஷரம் ஜபிக்க முனிவர்களும் நடுங்குவார்கள். நீயோ சிறுகுழந்தை யாது

செய்வாய். திருமஞ்சனம் நிவேதன முதலியன சுத்தமாகத் தேடிப் பெறுவது அருமை. சண்டேசுவரர் முதலிய பெரியோர்களைப்போலத் திருமஞ்சன முதலியவற்றைச் சேகரிப்பது உனதிளமைக்கு அசாத்தியம். ஆதலால் குமாரப்பருவம் வந்தபிறகு சிவபூஜை செய்யத்தொடங்குவது உசிதமென்று ஞானகலாம்பையார் கூறினர்.

தாயார் இவ்வண்ணஞ் சொல்லக்கேட்ட திருவெண்காடர் புன்னகையோடு தாயார்முகத்தை நோக்கி, அன்னாய்? நீ கூறியபடி எல்லாத் தேவரினும் சிவபெருமானே சிறந்தவரென்றும், அவரைப் பூசிப்பதருமையென்றும் வேதாகமங்கள் கூறுவதுண்மையாயினும், பக்திவலையிற் படுபவனும், அடியார்க்கெளியவனுமாமெனப் பெரியோர் சொல்லுவர்.சிவபூசை செய்தற்கு வருணாசிரமநியதி வேண்டுவதில்லை. தேவர் முனிவர்களும் பிராம்ணாதி சதுர்வருணத்தவரும், பிரமசரியாதி நான்காசிரமிகளும் பூசிக்க வில்லையா? தேவர் மனிதரேயன்றி, பசு புலி குரங்கு நரி யானை சிலந்தி பாம்பு முதலியவையும் அர்ச்சித்து அருள் பெற்றதாகக் கேட்டிருக்கிறோம். இவ்வுயிர்களெல்லாம் அன்பினாலேயே பூசிக்கின்றன வல்லவா? சர்வபரிபூரணனாகிய சிவபெருமானுக்கு நம்முடைய சுத்தி யெவ்வளவாகும்? இழிதொழில் புரியும் வேடர் குலத்திலுதித்த கண்ணப்பதேவர் செருப்புக் காலால் நிர்மாலியத்தையகற்றி, வாயிற்கொண்டுபோன எச்சில் நீரால் அபிஷேகித்து, பன்றியிறைச்சியைத் தாம் உருசிபார்த்து உண்பிக்க, அப்பூசைக்கும் மகிழ் மிகுந்து அவ்விறைச்சியை யமுதுசெய்து ஆறு தினங்களில் அவர்க்குமுக்தி கொடுக்கவில்லையோ: சந்நிதியில் எரிந்துக்கொண்டிருந்த தீபத்தில் நெய்யைக்குடிக்கவந்த எலியின்வாலால் திரிதூண்டப்பெற்றுத் தீபம் பிரகாசித்தமைக்கு அச்சங்கரன் மகிழ்ந்து அது மாவலியாகப்பிறந்து திரிலோகங்களையும் அரசு செய்ய வரங்கொடுத்த சரிதையை யறியோமோ? முசுக்கலையாகிய குரங்கு தன் குலவியற்கையால் பக்தி முதலியன ஒரு சிறிதுமின்றி வில்வ தளங்களைப் பறித்தெறிந்து அது சிவலிங்கத்தின்மேல் விழக்களித்த சிவபெருமானால் முசுகுந்த சக்கிரவர்த்தியாகப் பிறந்து முக்தியடைந்ததல்லவா? மார்க்கண்டேயமுனிவர் சிவபூஜாபலத்தால் யமனையும் வென்று சிரஞ்சீவியாய் விளங்கவில்லையா! உத்தானபாதராசன் மகனான துருவன் தன் மாற்றாந் தாய் சிங்காசனமேறற்கவெனக்கூறியவன் சொல்பொறாது வனமடைந்து சிவார்ச்சனை யியற்றி யழியாத உயர்வான (துருவ)பதம்பெற்றது கிழப்பருவமோ? இளம்பருவந்தானே. கிரகபதியெனும் வேதியச் சிறுவன் எழுவயதில் தனக்கு இடியால் அபாயமுண்டாமென்று நாரதமுனிவரா லுணர்ந்து சிவபூசை செய்து சிவாநுக்கிரகத்தால் அக்கினியின் பதவியை யடையவில்லையோ? வியாக்கிரபாதமுனிவர் குமாரரான உபமன்யு பகவான் சிவபெருமானை நோக்கி யமுது திருப்பாற்கடலைப் பெறது சிறு பிராயத்திலே தானே? கர்ப்பத்தி லிருக்கையிலேயே சுகமுனிவர் யோகமார்க்கமாக மானதபூசை செய்தாரல்லவோ? புலோமருடைய குமாரத்தி தாயின் கர்ப்பத்திலிருக்கையிலேயே சிவத்தியானஞ் செய்

துகொண்டிருந்து வெளியே பிரவேசமானபோது பூர்வ ஞானத்துடன் நாபிக்கொடியை யறுக்குமுன்னரே தாயை விளித்து, சிவபூசைக்கு வேண்டிய பத்திர புஷ்பமுதலிய உபகரணங்களைக் கொண்டுவரும்படிகேட்டுவருவித்துப் பூசித்தனனன்றோ? இவர்களைப்போல எண்ணிறந்தோர் தங்கள் இளம் பருவத்திலேயே சிவார்ச்சனை செய்து உயர்பத முற்றிருக்கிறார்களே. ஆதலின் யான் இளைஞனென்று என்னைச் சிவபூசை செய்வதில் தடைபடுத்தத் தொடங்கவேண்டாம். தாய் தந்தைகளே தங்கள் குமாரர்க்கு இதோபதேசஞ் செய்து நன்னெறியில் நடக்கப் பயிற்றவேண்டியவர்களாயிருக்கவும், பிள்ளைகள் நல்வழி நடக்கத் தொடங்குகையில் பெற்றோர் அவர்களைத் தடை செய்வதுமுண்டோ என்று தாயின் மனங் கரையக் கூறிப் பணிந்தனர்.

திருவெண்காடர் சொல்லிய வார்த்தைகளைக் கேட்ட ஞானகலாம்பையார், ஐயனே! உன் கருத்தின்படி சிவபூசை செய்யலாம். அதனை நான் தடுக்கவில்லை. நீ மாத்திரம் சற்குருவைக் கண்டு அவரால் சமயதீக்ஷை முதலியன செய்யப்பெற்ற பின்னர், சிவபூசையும் பஞ்சாக்ஷர ஜபமுஞ் செய்யக்கடவாயெனக்கூற, அவ்விடைபெற்ற திருவெண்காடர் அன்னையார் திருமுகத்தை நோக்கி, தாயே நீ கூறியவை யாவுமுண்மையே, சிவபூசைசெய்யக் காலவரை யறுப்பது உசிதமன்று. ஏனெனில், க்ஷணபங்கமாகிய உடல்அழியுமுன்னமே அறிவு விளங்கிய காலமே அதனைச் செய்தற்குரிய காலமாம். காலத்தை வறிதிற்கழித்தல் விசனிக்கத்தக்கது.

அன்னாய்! முன்னொருகாலத்தில்யமதர்மன்நரகலோகவாசஞ்செய்வோரைப்பார்த்து வருகையில் அவருட் சிற்சிலர் தீவாய் நரகத்திலும், வேறு சிலச்சிலர் ரௌரவம் கும்பிபாகம் கூடசாலம் அசிபத்திரம் ஜந்துஸ்தானம் அழற்பிரபைமுதலிய பல்வகை நரகங்களில் கிடந்து பரிதபிப்பதைப்பார்த்து மனஞ்சகியாமற் பதறி, சித்திரகுப்தனென்னுங் கணிகரை விளித்து, இவர்கள் செய்த தீமையென்ன? இத்துயரை மேற்கொண்டு எவ்வளவு காலமாயின? இன்னும் எவ்வளவுகாலம் இத்துயரமனுபவிக்கவேண்டும்? என வினவ, கணிகர் தமது கணக்கைக்கண்டு: இவர்கள் சிவபூசை முதலிய சற்கருமங்கள் புரியாது சிவநிந்தை முதலிய தீக்கருமங்களைப் புரிந்த பாவிகள். இந் நரகங்கட்குவந்த காலத்தை நாங்களறியோம். இவர்கட்குரிய விமோசனகாலமு மறியோம். இவர்கள் நரகடைந்த காலத்தையும் விமோசனமாகுங் காலத்தையும் தருமதேவதையே யறியத்தகும் எனச் சொல்லக் கேட்ட யமதருமன் மனநடுங்கி, ஐயோ! இப்பாவிகளைக் கண்ட பாவந் தொலையவேண்டுமே யென்று சிவத்தியானஞ் செய்ததாக நூல்களிற் கூறப்பட்டுள்ளதாதலின் சிவபூசை சாமானியமாகக் கிடைப்பதன்றென்று கூறி, அன்னையின் அடிமலர் வணங்கி அவர் விருப்பேற்று அவருடன் திருவெண்காடு சேர்ந்து சிவதரிசனஞ் செய்து உத்தமாசிரியன் ஆங்குவருமெல்லையுங் காத்திருந்தார்.

திருவெண்காடர் அப்படிக்காத்திருக்கையில் அழகிற்சிறந்த ஓரந்தணப் பிரமசாரி சடைமுடிதரித்து திருவெண்ணீறும் உருத்திராக்கமணியு முதலிய சிவசின்னங்கள் விளங்கவணிந்து அங்குள்ளாரைப்பார்த்துத் திருவெண்காடரெங்கேயென வினவிக்கொண்டே ஆலயத்தினுட் பிரவேசிக்க, ஆங்கிருந்த வேதியர் பலருங்கண்டு அதிசயித்து அவரையெதிர்கொண்டு, ஐயரே! தேவரீர் எங்கிருந்து எழுந்தருளினீர் திருவெண்காடரைத் தேட நிமித்தம்யாது? எனக்கேட்ப, வந்த அந்தணர் அந்த வேதியர்களை நோக்கி, நாம் இங்குவந்த காரணமுதலிய வெல்லாம் திருவெண்காடரைச் சந்தித்த மாத்திரமே உங்கட்கு விளங்குமென்றுரைத்துக்கொண்டே, ஆலயத்தினுட் சிவபூஜோபகரணங்களைத் தாயாருடன் சேகரஞ் செய்துகொண்டிருந்த திருவெண்காடரைக் குறிப்பானுணர்ந்து மனமகிழ்ச்சி இன்சொல் அன்பு முதலியவற்றுடன் சமீபித்து, அப்பா திருவெண்காடா! உன்னைப்பார்க்க விரும்பி இங்கே வந்தோம். உன் கருத்தை யாமறிவோம். அது முற்றுப்பெறுங் காலம் சமீபித்ததெனச் சாற்றிச் சமீபத்திலிருந்தனர்.

குருதரிசனம் கிடைத்தது.

திருவெண்காடர் தமக் கெதிரேநின்ற அந்தணரது கருணைரூபமான திருமுகமண்டலத்தைக் கண்டு நமது சொப்பனத்தின்படி நம்மை யடிமை கொள்ள ஈங்கெழுந்தருளிய குருமூர்த்தியோவெனக் கருதி, அன்புமேலீட்டால் அவர் பாதங்களிற்பணிந்து, எம்பெருமானே! அடியேன் தேவரீரைத் தரிசித்து உஜ்ஜீவித்தேன். எனது உடல் பொருள் ஆவி மூன்றையும் தேவரீர் உரிமைகொண்டு என்னைக் கிருதார்த்தனாக்கி யருளவேண்டுமென்று வேண்டினர். அதனைக் கேட்ட குருமூர்த்தியார்திருவெண்காடர் அன்புக்கதிசயித்து அவரை நோக்கி அப்பா திருவெண்காடா! நம்மிருப்பிடம் வியாக்கிரபுரம். இங்கு நேற்றிரவிலே வந்தோம். ஒரு சிவத்துவிஜர் கனவிற்றோன்றி நீ நாளையுதயஞ் சுவேதவனஞ் சென்று அங்குவந்திருக்குந் திருவெண்காடனெனும் ஆறு வயதுள்ள சிறுவனுக்குச் சைவதீக்ஷையியற்றி, பஞ்சாக்ஷரோபதேசஞ் செய்து, அவனால் முன்பிறப்பில் பூசிக்கப்பட்ட ஆன்மார்த்த சிவலிங்கமூர்த்தி யடங்கியதாய் ஒருவராலுந்திறக்கப்படாததாயுள்ள இச்சம்புடத்தை யவனுக்குக் கொடுவென்று இச்சம்புடத்தைக் கொடுத்து, நீ ஒரு மண்டலமளவும் அவனோடிருவென நியமிக்கையில், நீர் யாவர்? எங்குள்ளீர்? என வினவ, எங்குமிருப்போமெனினும் இப்போது திருவிடைமருதூரில் வசிக்கின்றோமென்று அந்தர்த்தானமாயினர். மனுநீதனை கடவுளை உன்னால் தரிசித்தேனென்று பட்டுப் பரிவட்டஞ்சுற்றியிருந்த சம்புடத்தை ஓருயர்ந்த பீடத்தில்வைத்துப் போர்வையை நீக்கினர். அச்சம்புடம் அதிகாந்தியுள்ளது கண்டு யாவருமகிழ்ந்தனர். திருவெண்காடரும் கண்டு மகிழ்ந்து தெண்டனிட்டு நின்றனர்.

சிவதீக்ஷை பெற்றது.

குருமூர்த்தியாக வெழுந்தருளிய அந்தணர் திருவெண்காடரது தீவிர பக்குவநிலையைக்கண்டு அருகிருந்த வேதியர்களுடன் காவிரிக் கரைக்கு அழைத்துப்போய், சைவதீக்ஷா சங்கற்பஞ்சொல்லி ஸ்நானஞ்செய்வித்து, திருவெண்ணீறும் உருத்திராக்ஷவடமும் அணிவித்து அழைத்துச்சென்று சிவசந்நிதியடைந்து பஞ்சாக்ஷரோபதேசஞ்செய்து சம்புடத்தை யெதிரில் வைத்து, அங்கிருந்த அந்தணர்களைநோக்கி ஒவ்வொருவராய்த் திறக்கும்படிகூற, அவர்கள் அப்படிச்செய்ய முயன்றும் ஒருவராலுந் திறக்கமுடியாதாக, இறுதியில் திருவெண்காடரைப்பார்த்து நீ யிதனைத் திறக்கக்கடவாயெனக் கட்டளைதர, இவர் குருமூர்த்திகட்டளையால் சம்புடத்தையணுகிப் பஞ்சாக்ஷர ஜபத்துடன் அதனைப்பரிசித்தமாத்திரமே அது இலேசாகத்திறப்புற்றது. அச்சம்புடத்திற்குள் தெய்வமலர்களால் அர்ச்சிக்கப்பட்டுக் கோடிசூரியோதயம்போல ஒளிவிடுஞ் சிவலிங்க மூர்த்தியும் விநாயக மூர்த்தியும் விளங்கினர். கண்டோர் யாவரும் அம்மூர்த்தங்களையும் திருவெண்காடர் தவப்பெருமையையும் புகழ்ந்தார்கள். அப்பொழுது சற்குருவாக வந்தவர் திருவெண்காடரை நோக்கி, அப்பா! இன்று உத்தமதினமாதலின் உன் ஆன்மார்த்தத்தைப்பூசிக்க, பூசிக்கு முன்னமே இந்த க்ஷேத்திரத்தில் எழுந்தருளிய சிவபிரானையும் உமாபிராட்டியையும் பூசைசெய்விக்கக்கடவாய். அதன்முன்னரே சிவனடியரைப் பூசித்தல் சிறந்ததாமென்று கூறினர்.

சிவபூசை செய்தது.

திருவெண்காடர், ஆசிரியர்கட்டளைப்படி நீராடி நித்தியகருமமுடித்து நியமனத்துடன் சுவேதாரண்யேசுவரருக்கும் பிராட்டியாருக்கும் ருத்ராபிஷேகஞ்செய்வித்து, பட்டாடைகளும் ரத்திநாபரணங்களும் மலர்மாலைகளும் சாத்துவித்து, சித்திரான்னங்கள் பழவகைகள் தாம்பூல முதலியன சமர்ப்பித்து, தூபதீபாதியுபசாரங்கணடத்தி, சிவாக்கினியையும் சிவனடியார்களையும் ஆராதித்து, பின்னர் தமது ஆன்மார்த்த மூர்த்தியைப்பூசித்துப் பணிந்து பலவிதமாகத்துதித்து ஆநந்தக்கூத்தாடி உத்தரபூசைமுடித்து உடையவரையும் விநாயகரையும் சம்புடக்கோயிலில் எழுந்தருளுவித்து, நிவேதனத்தை ஆசிரியருக்குக்கொடுத்து, அவர்கட்டளைபெற்றுச் சிவப்பிரசாதத்தைத்தாமும் தாயாரும் உறவினருடன் உட்கொண்டு பஞ்சாக்ஷர ஜபஞ்செய்துகொண்டிருந்தார். மாலைப்பொழுதாயது.

திருவெண்காடர் கனவுகண்டது.

பின்னர், திருவெண்காடர் தமதாசிரியருக்கும் சிவத்துவிஜருக்கும் தக்ஷிணை கொடுக்கப் பொருள் வேண்டுமென்று தாயாரிடம் விண்ணப்பஞ்

செய்ய, அதற்குத் தாயார், பிள்ளாய்! நமது பொருளெல்லாஞ் செலவாயினமையின் இனிக்கடன் வாங்கவேண்டியதுதான் வழியென; அதனைக்கேட்ட திருவெண்காடர் மனமாழ்கி, ருத்ரபாராயணஞ்செய்த அந்தணருக்கும் நமது தீக்ஷாகுருவுக்கும் எவ்வாற்றால் தக்ஷணை கொடுப்போமென்று சிந்தித்துக் கொண்டு சிவத்தியானபரராய் நிலமிசைப்படுத்துத்துயின்றனர். அவர்தாயாரும் புதல்வனார் கவலையைக்கண்டு தாமுங்கவலையுற்றுப் புதல்வாருகேதுயின்றனர். இன்னும் அங்கிருந்த அந்தணர் முதலாயினார் ஆலயம் மண்டபம் சோலை முதலிய விடங்களில் சயனித்திருந்தனர். அப்பொழுது எல்லாம் வல்ல எம்பெருமான், திருவெண்காடர்க்குள்ள கவலையை யொழிக்கத் திருவுளங்கொண்டு, முன்வந்த ஆதிசைவவேதியர்வடிவுடன் அவர்கனவிற்றோன்றி, அப்பா! பயப்படாதே எல்லையில்லாத பொன்னும் மணியும் ஆபரணங்களும் ஆடைகளும் உன் வீட்டி லிருக்கச் செய்தோம். அவற்றை அடியருக்குக் கொடுத்துப் பயனடைக எனக்கூறி மறைந்தனர். உடனே கண்விழித்ததிருவெண்காடர் நிகழ்ந்த விர்த்தாந்தங்களைத் தாயாருக்குக் கூறிச் சூரியோதயத்தை யெதிர்பார்த்திருந்தார்.

சிவாநுக்கிரகந்தாற் பெருஞ்செல்வம் பெற்றது.

அவ்வாறிருக்கையில், காவிரிப்பூம் பட்டினத்தில் திருவெண்காடர் மனையிலிருந்த காவலாளரிற் சிலர் ஓடிவந்து அம்மையாரைப்பணிந்து, தாயே! தாங்கள் பூட்டிவைத்த மனையில் இன்று நடுராத்திரியில் உண்டாகிய ஒரு பெருஞ்சோதி இதுவரையில் மாறாதிருக்கின்றது. இவ்வதிசயத்தைத் தெரிவித்தோமென்றார்கள். அதைக்கேட்ட அம்மையார் தமது புதல்வர்கண்ட கனவு உண்மையென்றுணர்ந்தெழுந்தார். சூரியோதயமாயிற்று. உடனே காலைக்கடனைமுடித்துக் குமாரரோடு காவிரிப்பூம்பட்டினமுற்றுத் தம் வீடு சேர்ந்து வாயிற் காப்பு நீக்கியுட்புகுந்து, குபேரசெல்வத்தினும் பெருஞ்செல்வம் விளங்கக்கண்டு, இஃது எல்லாம்வல்ல இறைவன்றிருவருளென்று வியப்புற்று, அச்செல்வத்தில் தமக்குவேண்டுமளவு எடுத்து வண்டிகளிலேற்றித் திருவெண்காட்டிற் கனுப்பி, தாமும் புதல்வருமாகத் திருவெண்காடுசார்ந்து, சிவாலயத்தில் ஒரு பாகத்தில் அவற்றை யிறக்கி மைந்தரைப்பார்த்து, அப்பா! இனி யுன் கருத்திற்கிசையக் குருபூசையையும் மகேசுவரபூசையையும் செய்யலாமெனக்கூறினர்.

மகேசுவர பூசை செய்தது.

தாயாருடைய கட்டளைபெற்ற திருவெண்காடர் முறைப்படிஸ்நானஞ் செய்து விபூதி ருத்திராக்ஷமணிந்து சுத்தமான மனத்துடன் ஆசிரியரையும் அந்தணர் முதலிய அடியார்களையும் பூசித்து அவர்கள் மனமகிழ்ச்சியெய்தும்படி வேண்டிய வகையே எல்லாப் பொருள்களையுங்கொடுத்து வணங்கினர்.

அவர்கள் சாதுசங்கவழிபாடுபெருகுகவென ஆசீர்வதித்துச்சென்றார்கள்; அது முதல் திருவெண்காடர் குருலிங்க சங்கமபத்திசெய்து காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்துவந்தனர்.

மணவினை முடித்தது.

திருவெண்காடர் காளைப்பருவமுற்றதுணர்ந்த தாயார் அந்நகரத்தில் உத்தமவேளாண்டகைமையிற்சிறந்த வைசியகுலத்தில் செல்வம் கல்வி அறிவு ஒழுக்கங்களில் மேம்பட்டிருந்த சிதம்பரசெட்டியார் மனைவியாகிய சிவகாமியம்மையார் பெற்ற சிவகலையம்மையெனுங் குமாரியை மணம்பேசிச் சிறப்பாக மணவினைசெய்து முடித்தனர். திருவெண்காடர் தமது மனைவியரான சிவகலையம்மையாருடன் இல்லற நடத்துவாராய் ஐம்பெருவேள்விகளையுங் குறைவற நடத்தி வாழ்ந்துவந்தனர்.

மருதவாணர் சிவசருமருக்கருளியது.

திருவெண்காடருக்கு முப்பத்தைந்து வயதாகியும் மகப்பேறின்றி மனமாழ்கி மருதூர்வாணர் சந்நிதியில் தமது மகவிலாக்குறையை வாய்விட்டு வெளியிட, மருதீசர் இவருக்குத் தாமே புதல்வராயுதிப்போமென்று திருவுளங்கொண்டனர். இவ்வாறிருக்கையில், அவ்விடைமருதில் சிவசருமரெனப் பெயரியவேதியர் தம்மனைவி சுசீலையோடு இல்லறதருமத்தைக் குறைவற நடாத்தித் திரிகாலங்களிலும் சிவபெருமானையும் பிராட்டியையும் விதிப்படியருச்சனை புரிந்து, தம் செல்வத்தையெல்லாம் சிவார்ச்சனையிலும் சிவனடியார் பூசையிலும் செலவுசெய்து வறுமையடைந்து மருதப்பிரானை வருந்தித் துதிக்க, அவர் இவர்கனவிலும் இவர் மனைவியர் கனவிலும் விருத்த வேதியராயெழுந்தருளி! நீங்க ளெமக்குப் பேரன்புடையீர். எமதாலய தீர்த்தத்தின் பூர்வ பாகத்திலுள்ள வில்வமர நிழலில் நாம் குழந்தை வடிவோடிருப்போம். எம்மை நீங்கள் கொண்டுபோய்க் காவிரிப்பூம் பட்டினத்தில் மகவின்றி வருந்தித் தவஞ்செய்யும் திருவெண்காடரிடங் கொடுத்து எம்மளவு எடையுள்ள பொன் பெற்று வறுமைதவிர்த்து வாழக்கடவீரெனத் திருவாய் மலர்ந்தருளினர். சிவசருமர் கேட்டு ஐயோ அரியயனாலுந் தேடற்கரிய நின்னையளித்து நிதிபெறுதலினும் இறத்த லுசிதமன்றோவென, மறையவர் வடிவாய்வந்த மருதவாணர், அப்பா உன்கருத்தையாமுணர்வோம். பண்டொரு காலத்தில் நமது தோழனாகிய குபேரனுக்கு நாமே புதல்வராக உதிப்போமென வாக்களித்தோம். அக்குபேரனே திருவெண்காடன். எமது வரங்கைகூடுங்காலம் கடுகியதாதலின் இவ்வா றுமக்குக் கட்டளையிட்டோம். அவனுக்குக் கருணைசெய்து ஞானங்கைகூட்டி மறைந்துவிடுவோமெனக் கூறி மறைந்தருள, உடனே சிவசருமர் விழித்து ஆனந்தத்துடனெழுந்து சிவத்தியானத்துட னிருக்கையில் அவர் மனைவி சுசீலையும் இக்கனவேகண்டு

அவர் விழித்தலையெதிர்ப்பார்த்திருந்து அவருடன் நிகழ்ந்தவற்றைச்சொல்ல, அவரும் தமது கனவை மனைவிக்குரைத்து இருவரும் அச்சமும் துன்பமுங் கொண்டு ஒன்றுந்தோன்றாதிருந்து பின்னர் நம்மையுடையாரிட்ட கட்டளையைக் கடக்கலாகாதேயென்று கருதி, பெண்ணே! நீ யிங்கிரு யான்சென்று வருவேனென்ன, சுசீலை யான் உம்மைப்பிரிந்து ஒரு விநாடியுமிரேன். என்னையும் கொண்டு செல்கவென, அந்தணர் அதற்கியைந்து அவளையுங் கூட்டிக் கொண்டு சன்னிதியிற் புகுந்து மருதவாணரைத் தேவியாரோடு வணங்கிக் காருண்யாமிர்த தீர்த்தக் கீழ்க்கரையடைய, அவ்விடத்தில் இந்திரனுடைய நந்தவனமும் நாணமெய்த விளங்கும் உத்தியானவனத்தில் இளங்குழந்தையின் சிறுகுரலழுகை செவியிற்கேட்க, விரைவாகக் குரல்கேட்கும்வழியே சென்று அங்கொரு வில்வமர நிழலில் மருதவாணரே பச்சிளங்குழவியா யிருக்கப் பார்த்தனர்.

மருதப்பிரானார் மகவாக வந்தருளியது.

சிவசருமரும் சுசீலையும் அம்மகவைக்கண்டு மனமகிழ்ச்சி மிகுந்து அதிக விரைவுடன் அக்குழந்தையை அன்போடெடுத்து மார்போடணைத்து உச்சிமோந்து கன்னத்தைக்கிள்ளி அரசே ஐயனே ஆனந்தவெள்ளமே அற்புதப் பேறே முக்கட்கரும்பே முழுமுதற்பொருளே அமுதசாகரமே ஆதித்யோதயமே எனப் பலவிதமாகக்கூறி மனைவிகையிலளிப்ப, சுசீலை அன்புமயமாகி அதனைப்பெற்றுக் கண்ணிலொற்றி உச்சிமோந்து முத்தமிட்டு ஆசைமேலீட்டால் கும்ப ஸ்தனங்களில் பாலொழுக ஊட்டுதலும், மகவாயிருந்த மருதப் பிரான் உண்பார்போலபிநயித்தனர். அதுகண்ட சுசீலை அக்குழந்தையினிடம்பேரன்புகொண்டு இதனையொருவர்க்குங் கொடேன். உமக்குப்பொருள் வேண்டுமாயின் வேறுவகையிற் பெறக்கடவீர். யான் வீட்டிற்குக் கொண்டு போவேனென் றெடுத்துச் செல்லுகையில், சிவகடாக்ஷத்தால் வழிதவறித் திருவிடைமருதூரிலிருந்து இருகாத தூரத்திலுள்ள காவிரிப்பூம்பட்டினமடைந்து பசிதாகங்கொண்டு இளைப்புற்று அங்கொரு மனைப்புறத்துச் சோலையில் அக்குழந்தையைக்கிடத்தி அதனைப்பார்த்துக்கொண்டிளைப்பாறியிருந்தனர். சிவசருமரும் அவர்மக்களும் அவ்விடத்திலேயேதங்கிக் களையாற்றிக்கொண்டிருந்தனர்.

மருதவாணர் திருவெண்காடருக்குக் கனவிற் கட்டளையிட்டது.

திருவெண்காடர் மகவின்றி வருந்தியிருப்பினும் சிவபூசையையும் அடியவர் பூசையையும் சிறப்பாக நடத்திவந்தனர். அன்றிரவில் அவர் கனவிலும் அவர் மனைவியர்கனவிலும் மருதப்பிரான் வயோதிகமறையவராகத் தோன்றி, உங்களுக்கு இப்பிறப்பில் கருப்பத்துதித்துதவும் பிள்ளையின்றாதலால்

னும் கருப்பத்துதியாதுதவும் பிள்ளை யொருவனுண்டு. நாளை உங்கள் மனைப் புறத்துச் சோலைக்குப்போனால் அங்கே சிவசருமரெனும் ஆதிசைவ வேதிய ரும் சுசீலையெனும் அவர்மனைவியும், அச்சுசீலையின் கையில் ஒரு பசுங்குழந் தையும் காண்பீர்கள். அவர்களை வருவித்துபசரித்து அக்குழந்தையைப் பெற் றுக்கொண்டு அக்குழந்தையின் எடையுள்ள பொன்னை யவர்கட்குக்கொடுத் தனுப்பி, நாமகரண முதலியவற்றை யுமது குலாசாரப்படி செய்யக்கடவீர் கள். அக்குழந்தையே உங்கட்கு இம்மை மறுமை யின்பங்களையுங் கொடுப் பாரெனக் கூறிச்சென்றனர்.

சிவகலையம்மையார் சுசீலையினிடங் குழந்தையைப் பெற்றது.

இவ்வாறு கண்டு விழித்த இருவரும், ஒருவரோ டொருவர் தமக் குற்ற கனவைக் கூறி மகிழ்ந்தனர். பின்னர், திருவெண்காடர் தமது தாயா ரிடஞ்சென்று கண்ட கனவைச்சொல்ல அவரும் மகிழ்ந்தனர். சூரியோதய மாயிற்று. திருவெண்காடர் காலைக்கடன்கழித்து சிவபூசையையும் அடியவர் பூசையையும் முடித்து மனைவியாருடன் தம்மனைப்புறச் சோலைக்குப்போய் அங்கிருந்த தம்பதிகளையுங் குழந்தையையுங்கண்டு, அத்தம்பதிகளை மருதவா ணரும் மலைமங்கையுமாகக்கருதிப் பணிந்து இன்மொழிகூறி உபசரித்தனர். அப்பொழுது சுசீலையின்கருத்துத் திருவருளால் மாறுதலாகி, சிவகலையம்மை யாரை நோக்கி நீர் நல்லவராகக் காணப்படுகிறீர். எமது கணவர் பொரு ளைசையுட்கொண்டு அழகும் அருளுந்திரண்டாற்போன்ற இக்குழந்தையை யாருக்கோ கொடுத்துவிடப் போகிறார். அதனைத்தடுத்து உமக்குக் கொடுக் கிறேன். இதனை நீர் பத்துமாதஞ்சுமந்துபெற்ற குழந்தைபோலப் பாவித்து நடத்தினால் உமக்கு எல்லாச் சுகிர்தமுமுண்டாகும். நான் விரும்பியபோது வந்துபார்த்து ஆசைதீர்வேன். என் வார்த்தையை மறுக்கவேண்டாமென்று குழந்தையைச் சிவகலையம்மையார் கரத்திற்கொடுத்தனர். சிவகலையார் தாம் கண்டகனவுமெய்யானதுகண்டு மகிழ்ச்சிமிக்கு இருகரங்களுநீட்டிக் குழந்தை யைவாங்கி அன்பின்மிகையால் பெருகிய முலைப்பாலினையூட்ட, குழந்தையாக வந்த மருதப்பிரானும் அன்போடு நுகர்ந்து அழுகை நீங்கினார்போல நடித் தார். சுசீலையாரும் சிவசருமருங்களித்தார்கள். அச்சமயத்தில் திருவெண் காடர் திருவருளை நினைத்து உடல்பூரித்து ஆநந்தங்கொண்டு, ஐயரே! உம்மை நான்கண்டது மருதவாணர் திருவருளேயாம். இது உமது மாளிகையே. எழுந்தருளலாமென்று உபசரித்தார். சிவகலையாரும் சுசீலையாரை நோக்கி அன்னாய்! சிறிதும் அஞ்சவேண்டாம். பட்டளையிட்டபடியே இக்குழந்தை யைக் காப்பேன். சிவாநுக்ரஹத்தால் இக்குழந்தை யென்னுடையதும் இச் செல்வம் உம்முடையதுமாமென்றார். அப்பொழுது சிவசருமர் திருவெண் காடரிவரே யென்று திருவருளால் தெளிந்திருந்தார்.

திருவெண்காடர் புத்திரோத்சவங்கொண்டது.

அச்சமயத்தில், சிவகலையார் தமதுகரத்திலிருந்த குழந்தையைத் திருவெண்காடர் கரத்திலளிக்க, அவர் வாங்கிக்கேசாதிபாதவிறுதியான அவயவங்களின் அழகைக் கண்டு பரிசித்து உச்சிமோந்து முத்தங்கொண்டு மகிழ்ச்சிமிகுந்து மீண்டுங் குழந்தையை மனைவிகையிற்கொடுத்து, சிவசருமரையுஞ் சுசீலையாரையும் அழைத்துப்போய் ஆசனத்திலிருத்திப் பூசைசெய்து, புதல்வரைத் தொட்டிலிட்டுப்பொன்னுபரணங்களிலும் இரத்தினுபரணங்களிலும் அலங்கரித்துக் களித்தனர். இவ்விர்த்தாந்தத்தைக் கேள்வியுற்றுக் காணும்படிவந்த அவர்தம் உறவினர் முதலானுர்க்குப் பொன்மாரிபொழிந்து மனங்களிக்கச்செய்து புத்திரோத்சவங் கொண்டாடினர்.

திருவெண்காடர் சிவசருமருக்கு நிதியளித்தது.

இவ்வாறு நிகழ்கையில், திருவருளால் ஓரசரீரி சிவசருமரே திருவெண்காடரே உங்களுக்கிட்ட கட்டளையை விரைவில் முடிக்கக்கடவீரெனப் பிறர்கேளாத வகையாக உண்டாயிற்று. உடனே திருவெண்காடர் ஒருதுலைவருவித்து அதின் ஒரு தட்டில் தமது அருமைப்புதல்வரை யமர்த்தி மற்றொரு தட்டில் பொன்னையும் இரத்தினங்களையும் பெய்ய, சிவாநுக்ரஹத்தால் பொன்னிடுந் தட்டு மேலெழுந்தே நின்றும் குழந்தை யிருந்த தட்டுத் தாழ்ந்துங்கிடந்தன. இவ்வற்புதங் கண்டார் யாவரும் அதிசயித்தார்கள். சிவசருமர் துலையைச் சூழவந்து கைகூப்பிநேர்நின்று எம்பெருமானே! அடியேன் பொருளாசையால் அடிமைப்பட்டவனல்லன். திருவடித்தொண்டிற்கே யடிமைப்பட்டவனுகத் தேவரீர் இங்ஙனஞ் செய்தல் தகுதியன்று. செல்வக்கடலில் அமிழ்த்தத் திருவுளமோ. அடியேனை உய்விக்கக் கருணையாயின் இத்தட்டு இவ்வளவில் சமநிலையடைகவென்று மந்திராக்ஷதை யிறைத்துப்பணிந்தனர். உடனே தட்டிரண்டும் சமநிலைபெற்றன. திருவெண்காடர் சிவசருமரைப் பணிந்தனர். சிவசருமரே! இத்திருவெண்காடருடைய பொருள் தருமவழியிற்றேடியது. அதனைப் பெறுதற்குரியர் நீரேயென்றிங்ஙனஞ்செய்தோம். அஞ்சற்க இன்னும் பதினுன்குவருடங்கள் நீங்கியபின்னர் நீர் குடும்பத்துடன் எமது பதவி யடைவீர்கள். இந்நிதியுடன் திருவிடைமருதூரை யடைமின் என்று ஓரசரீரியுண்டாகக்கேட்ட யாவரும் ஹரஹரசங்கரவென முழங்கிப் பணிந்தனர். சிவசருமர் இறைவனைத்துதித்து நின்றனர். திருவெண்காடர் துலையினின்று குழந்தையையெடுத்துக் கண்ணெச்சில்கழித்து, மற்றைத் தட்டிலிட்டபொருளையெல்லாம் திருவிடைமருதூரில் சிவசருமர் மனைக்கனுப்பி, அன்றே குமாரர்க்கு மருதவாணரென நாமகரணஞ்செய்து, சிவசருமருக்கும் அவர் மனைவியாருக்கும் விருந்திட்டு மகிழ்வுசெய்தனர். மறுநாள் விடிந்தவுடன் சிவசருமர் தமதிடஞ்செல்லத் திருவெண்காடருக்குக்குறிப்பிட, அவரும் அவ்வேதியரையும் மனைவிமக்களையும் தேரிலேற்றி வழிவிடுத்துத் தம் மாளிகைசேர்ந்தனர்.

சிவசருமர் திருவிடைமருதூருக்குத் திரும்பியது.

தேரேறிச்செல்லுந்தம்பதிகள் குழந்தையின் பிரிவுக்காற்றாது சோர்ந்து தேர்மேற்சாயவும் அவர் மக்கள் அதனைக்கண்டு வருந்தவும் பார்த்த தேர்ப்பாகன் அவர்கட்குச் சைத்யோபசாரஞ்செய்ய, மருதவாணனே யெனக்காண தெளிந்தெழும்ப, இறைவர் அக்குழந்தை வடிவாய் அவர்மக்களோடிருப்பக் கண்டு அப்பா எப்படி வந்தாயென்று தேரைவிரைவாகச் செலுத்துகையில் தேர்வேகத்தால் துயின்று திருவிடைமருதூரில் தம் மாளிகையடைந்து குழந்தையைக்காணுமல் வருந்திநிற்கையில், சிவசருமர், பெண்ணே! நீ இப்பொருளையெல்லாஞ்சற்கருமத்திற் செலவுசெய்துகொண்டிரு நான் குழந்தையைப் பார்த்துவருகிறேன் என, சுசீலையார் நீர் என்னைப் பிரியுமுன் என்னை என்னுயிர் பிரியுமென ஒன்றுந் தோன்றாதிருந்தனர்.

காவிரிப்பூம் பட்டினத்திலிருந்த குழந்தையானது திருவெண்காடரையும் அவர் மனைவியாரையும் களிப்பித்தது. திருவெண்காடர் சிவசருமருக்குக் கொடுத்த திரவியம் மூன்றுதினங்களாக வண்டியில் வந்துகொண்டேயிருந்து மூன்றாந்தினம் முற்றியது. அப்பொருளோடு காவலர் வடிவுகொண்டுவந்த ஒரு கணதிபர் திருவெண்காடர் தந்ததாக ஒரு கவளிகையும் ஓலைச்சுருளுங் கொடுத்துப்போயினர். சிவசருமர் அவ்வோலையைப் பிரித்து வாசித்து அதில் மருதவாணர் சுகம். அவர் பிரிவால் வருந்தாவண்ணம் அக்குழந்தை யுருவப் படமொன் றனுப்பிஞேமென்றிருக்கக் கவளிகையை யவிழ்த்து அதனுள் அங்ஙனமே இருக்கக்கண்டு மனைவியாருக்குங் காட்டி மனமகிழ்ந்தனர். அதுமுதல் சிவசருமர் அப்படத்தை யன்போடுபூசித்து, சிவபூசை பிதிர்பூசை அடியவர் பூசை முதலியவற்றையெல்லாம் சரிவர நடத்தி வாழ்ந்திருந்தனர்.

திருவெண்காடரும் அவர்மனைவியரும் தம் அருமைக்குமாரனை நாளொருமேனியாக வளர்த்தனர். குழந்தை வளர்கையில் தந்தை தாயார்க்கு விந்தையதிகரிக்கச்செய்தது. குழந்தைக்கு உரியவயதில் சந்திமிதித்தல் அன்னப்பிராசனம் சௌளமுதலிய கிரிகைகளை நடத்தினர். விளையாட்டுப்பருவமடைந்து கழற்காய் பம்பரமுதலிய விளையாடல் புரிவதாயது.

மணிக்கிரீவன் சாப விமோசனம்.

மருதவாணர் விளையாட்டுப்பருவத்தில் ஒருநாள் தமது தோழர்களோடு கடற்கரையடைந்து விளையாடுகையில்; அச்சிறுவரோடு மரக்கலமேறி நெடுந்தூரம்போய்த் திரிந்தாடுகையில், ஒரு பெருமீன் இவர்கள் தோணியை விழுங்குவதுபோல் விரைந்துவர, சிறுவர்கள் பயந்து வருந்திக்கூவுகையில், அந்த மீன் தோணிக்கருகேவந்து கூம்பின்மீது நின்ற ஒருவனை விழுங்கியது. அதுகண்டோர் மூர்ச்சித்தார்கள். அவர்களோடிருந்த மருதவாணர் மனமிரங்கி, அவர்கள் அச்சத்தை யகற்றத் தமது பாதத்தை நீட்டி அம்மீனின் தலை

யிலுதைக்க உடனே அம்மீன் உயிர்நீங்க, அதனுடலினின்று ஒருதெய்வபுருஷன்வெளிவந்து விமானமூர்ந்து ஆகாயத்தினின்று மருதவாணரைப்பார்த்து ஐயா! நான் சிந்துமுனிவன் சாபமேற்று மீனாகக்கிடந்த மணிக்கிரீவனெனுங் கந்தர்வன். அவர் கூறியபடி உமது பாதபரிசத்தினால் சாபவிமோசனம் பெற்றேனெனப்புகழ்ந்து தன்வழியேசென்றான். சிறுவர்கள் மயக்கொழிந்து மருதவாணரையும் மாண்டிருக்கும் மச்சத்தையுங் கண்டுமகிழ்ந்து மீனால்விழுங்கப்பட்ட சிறுவனைக்குறித்துக்கூற, மருதவாணர் புன்னகைசெய்து, வருவானென, அச்சிறுவன் விலையேறிய நவமணிகளைவாரிக்கொண்டு அந்த மீனின் வாய்வழியே வந்தான். அவர்கள் அம்மணித்திரளைப்பார்த்துத் தமக்கும் அப்படிக்கிடைக்கும்படி யருள்செய்யவேண்டுமென்றுவேண்ட; மருதவாணர் நீங்களும் ஒவ்வொருவராக அதின் வயிற்றிற் புகுந்து மணித்திரளை வாரிவாருங்களென அவ்வாறே அனைவரும் மணித்திரளைக்கொணர்ந்து தோணியிற் சேமித்து; அவற்றுட் சிறந்த சிலமணிகளை மருதவாணருக்குக் காணிக்கையாக முடிந்துவைத்து, நமது தாய்தந்தையர் நம்மைத்தேடுவார்கள். நெடுநேரமாயிற்றேயென்று தோணியைத்திருப்பிவந்தார்கள்.

இதற்குள் வணிகர்யாவரும் தம்புதல்வர்வாராமையால் வருந்தித்திருவெண்காடர்வீட்டில் விசாரிக்க மருதவாணருமில்லையெனத்தெரிந்து, அவர்களுடன் திருவெண்காடருமாக யாவரும் நகர்முழுதுந்தேடி இறுதியில் கடற்கரையையடைந்து விசாரித்துக்கொண்டிருக்கையில், தோணியும் கரையடைந்தது. சிறுவர் மணித்திரளோடு தத்தம் பிதாவையடைய வீட்டிற்கழைத்துச்சென்றனர். அனைவரும் திருவெண்காடருக்கு இவ்வரலாற்றினைச்சொல்லிக்களித்தார்கள். திருவெண்காடரும் தம்புதல்வர் கொணர்ந்த மணிகளைவாங்கி அந்தணர் முதலினோர்க்குத் தானஞ்செய்து களித்திருந்தனர்.

மருதவாணருக்கு வித்தியாப்பியாசஞ் செய்வித்தது.

மருதவாணருக்கு உரிய காலம் வந்தவுடன், திருவெண்காடர் தகுந்த ஆசிரியனைத்தேடி அவர்பால் பள்ளியிலமைத்துச் சகல கலைகளிலும் வல்லவராக்கினர். அக்காலத்தில் அயலூரிலிருந்து ஒரு வணிகன் ஒரு பெரிய முத்தைக் கொணர்ந்து அங்குள்ள வணிகரிடம் காட்ட, அவர்கள் யாவரும் விலை மதிக்கமாட்டாது திருவெண்காடர்பாற் கொண்டுவர, அதுகண்ட திருவெண்காடர் வியந்து இது பதினாயிரம் பொன் பெறுமென, கேட்ட வணிகரெல்லாரும் தகுமென்றார்கள். அச்சமயம் பள்ளியிலிருந்து வீடடைந்த மருதவாணர் பிதாவுடன் புசிக்க விரும்பி அழைக்க வந்தவர், அங்குக் கூடியிருப்பதையும் முத்தையுங் கண்டு இஃதெங்கே கிடைத்ததென, திருவெண்காடர் நீயுண்ணப்புகுக. இரத்தினத்தைப்பற்றிய விசாரம் உனக்கு வேண்டாமென, மருதவாணர் தந்தையே! எமமாசிரிய ரிரத்தினலக்ஷணம் போதிக்கையில் உணர்த்திய சில தீக்குறிகளை இதிற் கண்டேன். அதனை யுணர்த்துவே

னென, அங்கிருந்த ஒரு வணிகர், இது பிறதேசத்தினர் கொணர்ந்தது என நடந்த விடயத்தைச்சொல்ல, மருதவாணர் என் தந்தையிட்ட மதிப்பைநானே கொடுப்பேன். ஆயினும் இதனைக் காணினும் வறுமை வியாதி முதலிய பீடைகளுண்டாம். இதனுள் நீரிருக்கின்றது. உடைத்துக்காட்டுவேனென்று அதனையுடைக்க, உள்ளேயிருந்த நீர் வெளியாயிற்று. யாவரும் அதிசயித்தார்கள். மருதவாணர் தம்மிடம் அம்முத்தைக்கொடுத்த வணிகனுக்குப்பொருள் சேர்ப்பிக்கக் கருதி, கடாரபுரத்திலிருக்கும் தமது நண்பனான ஞானானந்தனுக்குத் திருமுகங்கொடுத்தனுப்ப, அவனும் அவ்வண்ணமே பொன்கொடுத்தனுப்பினான். இவற்றைக் கேள்வியுற்ற திருவெண்காடர் மருதவாணரிடம் அன்பும் பயமும் அதிகரித்திருந்தார்.

மருதவாணர் வர்த்தகஞ்செய்யக் கப்பலிற் சென்றது.

மருதவாணருக்கு வயது பதினாறாகவே, சிவசருமருக்கும் திருவெண்காடருக்கும் முத்திகொடுக்கத் திருவுளங்கொண்டு, பட்டினத்துப்பிள்ளையாரிடஞ் சேர்ந்து, தந்தையே! நான் தீவாந்தரங்கட்குச்சென்று ரத்தின முதலிய உயர்ந்த பொருள்களில் வர்த்தகஞ் செய்து பெரும்பொருளீட்ட விரும்புகிறேன். குலாசார தருமமாகலின் தடையின்றி விடைதரவேண்டும் என, பட்டினத்துப்பிள்ளையார் மகனைத்தழுவிக்கொண்டு, குழந்தாய்! நமக்கு எல்லையில்லாத செல்வமிருக்க இன்னும் பொருள்தேடவேண்டுமா ? இளமையில் எங்களைவிட்டுப் பிரியாதே என, மருதவாணர் உலகவியற்கைக்கேற்க நடப்பது என் கடனாதலின் விடைதந்தனுப்பவேண்டுமென, திருவெண்காடர் புதல்வர் கருத்துணர்ந்து, இனி நமது தடைக்கடங்காரெனத் தீர்மானித்து, ஆயின் யானும் உன்னுடன்வருவேனென, மருதவாணர் நீரென்னுடன்வரின் என் ஊக்கங் குறைபடும். எமது தாயாரும் உயிர்விடுவர். நீரிங்கேயேயிருமென்றுகூறி விடைகொண்டு அந்நகரினின்று வியாபாரநிமித்தஞ் செல்லும் வணிகரோடு தாமுங் கப்பலேறிச் சென்றனர்.

மருதவாணர் வாணிபஞ்செய்து திரும்பியது.

இவ்வாறு பொருளீட்டச்சென்ற வணிகர் யாவரும் ஒரு தீபாந்தரத்திலிறங்கித் தம் பண்டங்களை மாற்றிக்கொண்டு பலதேசங்கட்குச்செல்ல, மருதவாணர் ஒருவர்மாத்திரம் அவர்களோடு செல்லாது அங்கேயே யிருந்துகொண்டு தம்பண்டங்களைமாற்றிப் பொருள்சேகரித்து, கோயில்,மடம்,மண்டபம், சத்திரம், சாவடி, நந்தவனம், தடாக முதலிய அறத்துறையிற் செலவுசெய்துகொண்டு சிலமாதங் கழித்தனர். பிறதேயஞ்சென்ற வணிகர் பெருஞ்செல்வந்தேடித்திரும்பி மருதவாணரிடம்வந்து நீர் இங்கேயிருந்து யாதுலாபம் பெற்றீரென, மருதவாணர், யான் பொருள் சேகரிக்கவில்லை. என் பண்டங்கட் கீடாக இவ்வூரினர் கொடுத்த எருமுட்டைகளும் அவல்கடலையுமே யுள்ளனவென, அவ்வணிகர் சிரித்து, ஐயோ உம்முடைய பொருளை இப்படி

மாற்றிக்கொண்டுபோனால் உமது தந்தைக்கு யாது சொல்வீர்? என, மருதவாணர் நீங்களென்னிமித்தம் வருந்தவேண்டாமென, வணிகர் சிலநாட்களை அங்கேகழித்து மருதவாணரையும் உடன்கொண்டு தமது காவிரிப்பூம்பட்டினஞ்செல்லக் கப்பலேறிவருகையில், மருதவாணர் மாயையினால் காற்றுமழையை யுண்டுசெய்தமையின் கப்பல் திசைதப்பிப்போயிற்று. உணவுப்பொருள்கண்முற்றும் ஒழியுமளவும் திசைதோற்றாமையின் குளிர்காய விறகுமில்லாமல் மருதவாணர்கொணர்ந்த எரிமுட்டையைக் கேட்க, அவர் நாம் ஊரிற்சென்றவுடன் திரும்பக்கொடுப்பதாகப்பத்திரம் எழுதுவித்துப்பெற்று விரட்டியைத் தந்தார். யாவரும் காவிரிப்பூம்பட்டினஞ் சேர்ந்தவுடன் அவ் வணிகரிலொருவன் திருவெண்காடரிடம் வந்து தம்முடைய புதல்வர் அறிவு மாறியிருக்கிறாரெனச் சொல்லிச்சென்றான். இதுகேட்ட திருவெண்காடர் தம்புதல்வர்வசமிருந்த எரிமுட்டையையும் அவல்கடலையையுங் கண்டு, வணிகன் கூறியது உண்மையாயிருக்கலாமெனத் துணிந்தும், எரிமுட்டையைப் பெட்டியில்வைப்பானேன். விசேஷமிருக்குமென்று கருதி அதிலொன்றைப் பிட்டுப்பார்த்து அதினிடையேமாணிக்கமிருக்க,இன்னும் இப்படியே சோதித்துப் பல வரட்டிகளிலுமிருக்க மகிழ்ச்சிபெற்று, அவல் கடலையைச் சோதித்து முழுதும் பொன்மணல் கலந்திருக்கப் பார்த்ததிசயித்து, இன்னும் அப்பெட்டியில் என்னவிருக்கிறதெனச் சோதிக்கையில், அதில் ஓலைச்சுருள் கிடக்க, அதனைப் பிரித்து அது ஊர் சேர்ந்தவுடன் தாம்பெற்ற எரிமுட்டைகளைக் கொடுப்பதாக வணிகர் எழுதிக்கொடுத்த பத்திரமாயிருக்க அவ்வணிகரை விளித்து, இது நீங்களெழுதிக்கொடுத்த பத்திரந்தானோவெனக் கேட்க, அவர்கள் ஆமெனக்கூறி, நாம்சாதாரண வரட்டியென்றெண்ணினோமே இது. போல மாணிக்கம்பொதிந்த வரட்டி தரச்சொன்னால் யாதுசெய்வோமென வருந்தியிருந்தனர்.

மருதவாணரைக் காணாது திருவெண்காடர் வருந்தியது.

திருவெண்காடர் தம்புதல்வர் கொணர்ந்த மணித்திரளையும் பொற்றிரளையுங் கண்டு மருதவாணரைத் தழுவிக்கொள்ளவேண்டுமென்னும் விருப்புடையவராய் அவரிருக்குமிடத்தோடி அங்கே அவரைக் காணாமல் மயங்கித் திடுக்கிட்டுக் காவலாட்களைக் கேட்க, அவர்கள் நாங்கள் ஜாக்கிரதையாகவே காக்கின்றோம். அவர் இவ்வழியாகப் போகக்காணோமென, திருவெண்காட்டுப் பிள்ளையார் அந்தப்புரத்தினுட்சென்று தம்மனைவி முதலாயினோரைவினவ, அவர்கள் மருதவாணர் இப்பொழுதுதான் புசித்துப் புறஞ்சென்றனர். அவர் எமக்களித்த ஆடையாபரணங்களைப் பாருமெனக்காட்டச் சிறிதுதெளிவடைந்து அவரைப்பார்க்க விரும்பி எங்கெங்கேபோய்ப் பார்த்துங் காணாமல் தம் மாளிகையடைந்து வருந்தியிருந்தனர்.

மருதவாணர் சிவசருமருக்கு முத்தியளித்து மறைந்தது.

இஃதிங்ஙன நிகழ்கையில், மருதவாணர் தம்மைத் திருவிடைமருதூரிற் பூசித்து அன்புகொண்டிருந்த சிவசருமருக்குத் தாம் முன்னருளியபடி

பதினாறு வருடங்கள் கழிந்தமையின் ஒளிப்பிழம்பாகத்தோன்றி, சிவசருமரையும் அவர் குடும்பத்தினரையும் அந்தச்சோதியில் ஐக்கியஞ்செய்துகொண்டு மூல லிங்கமூர்த்தியாகிய மஹாலிங்கத்தினிடத்தில் கலந்து எழுந்தருளியிருந்தனர்.

திருவெண்காட்டடிகள் திருவருள்பெற்றது.

திருவெண்காடர் மருதவாணருடைய பிரிவுக்காற்றாது உணவாதிகளை வெறுத்துக் கவலைகூர்ந்திருக்கையில், அவர் மனைவியார் ஒரு சிறுபெட்டியைக் கொணர்ந்து முன்வைத்து, இது உமது புதல்வர் தேவரீர் வந்தவுடன் கொடுக்கும்படி கொடுத்துச் சென்றாரென்றார். பட்டினத்துப்பிள்ளையார் ஆவலோடு அதனைத்திறந்துபார்க்க, அதனுள் ஒரு காதற்ற ஊசியும் ஓரோலை நறுக்கு மிருக்கக்கண்டு ஆச்சரியங்கொண்டு அந்நறுக்கைப் படிக்க அதில் "காதற்ற ஊசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே" என்றிருக்க, அதனைப் பார்த்தவுடன், முன்னமே மருதவாணர் திருநோக்க முதலியவற்றால் பக்குவமுற்றிருந்தமையின் சிவானந்தக்கடலில் மூழ்கி எப்பொருளிலும் விருப்பற்று, திருவருள் கூட்டுதலின், "பட்டைக்கிழித்து, சூதற்ற கொங்கை" எனும் முதலையுடைய செய்யுள்களைக்கூறி யிருவகைப்பற்றுமற்று, உலகினர் உய்யும்படி மனதை முன்னிலையாக்கி "வாதுற்ற" முதலிய பாடல்களைக்கூறி, தமது தாயாரை நோக்கி, அன்னையே! உமது தவப்பயனெய்தியது. நீர் சிறிதும் அஞ்சவேண்டாம். உம்மைக் கணமும் பிரியாத யான் குருநாதன் கட்டளையில் நிற்பவனெனக்கூற, தாயார் அவர் குறிப்பையுணர்ந்து, ஐயனே! யான் வயோதிக பருவத்தினளாகலின் என் சரமக்கிரியைகளை முடித்தபின் விருப்பின்படி செல்லலாமேயென, பட்டினத்தடிகள் அங்ஙனமே யாகுகவென்று நேரில்நின்ற தமது நண்பரும் தலைமைச் சம்பிரதியுமாகிய சேந்தனாரைப் பார்த்து, இப்பொருள் முற்றையும் பலரையுங் கொள்ளையிடச்செய்யுமெனக் கட்டளைதந்து வெளிப்பட்டனர். அச்சமயம் அவருடன்மே லிருந்த ஆடை கழன்றிருந்ததை யறியாமைகண்ட அவரது மனைவியார் சிவகலையம்மையார் அவரைவணங்கி,எம்மிறைவரே! அடிமைக்குத் தேவரீர் கதியாதலால் யானும் உடன் வருகிறேனெனப் பணிந்துசொல்ல, திருவெண்காட்டடிகள் பெண்ணே! அனைவர்க்குஞ் சிவபெருமானே கதியாவர். யான் சற்குருவின் ஆணைவழி நிற்பவன். நீ யென்னுடன் வரச் சக்தியற்றவள். இங்கேயே சிவநேசமும் அடியவர் நேசமுங்கொண்டிருந்து சிவபெருமான் திருவடிப்பேற்றினை யடைகவெனக் கூறிவிடுத்து, ஆதரவில்லார்போல் அவ்வூர்ப்பொதுமண்டபத்தில்தங்கியிருந்தனர். அவர் சுற்றத்தினர் நண்பர்முதலாயினோர் இச்செய்தியறிந்து அவரைக்கண்டு, நீர் எங்களிலெல்லாம் மேம்பட்டிருந்தும் இப்பரதேசி கோலங்கொள்வதேன்? எமக்கு யார் ஆதரவாவரெனவருந்த, பட்டினத்தடிகள் அவர்களைப் பராமுகமாகநோக்கி "மனையாளும், அத்தமும், எரியெனக்கு, அண்ணல்" "என்பது முதலான நான்கு பாடல்களால் நிலையாமையை யுணர்த்தி, தம்மனதை முன்னிலையாக "மாடுண்டு" என்பது முதலிய ஐந்துபாடல்

இது பெறற்குரியதெனக் கூறி, அவர்களையே முன்னிலையாக்கி "ஊரீர்" என்பது முதலிய இருபாடல்களால் இதோபதேசஞ்செய்து வாய் பேசாது மவுனங்கொண்டனர். அவர்கள் அச்சமும் நாணமுமெய்தி இவர் நிலை உயர் நிலையெனக் கருதிப்போயினர்.

அரசன் சேந்தனாரைச் சிறைசெய்தது.

பட்டினத்தடிகள் துறவுபூண்டதையும், அவர் செல்வ முழுவதையும் ஊரார் கொள்ளைகொள்ள விட்டதையும் அரசன் கேள்வியுற்று, நிதிக்களஞ்சியம் அப்படிக் கொள்ளைபோகாமல் தடை படுத்தி, திருவெண்காடருடைய தமக்கை புதல்வரை வருவித்து அவருக்கு உரிமைதந்து ஆங்கிருத்தி, அவர்கள் குடும்பபோஷணைக்கு வேண்டும் பொருளையளித்து ஏனையவற்றைத் தன் பொக்கிஷத்திற் சேர்ப்பித்து, அவற்றைத் தர்மசாலை முதலியவற்றில் செலவாக உத்தரவுசெய்து, பட்டினத்தடிகளின் தலைமைச் சம்பிரதியான சேந்தனாரது உண்மை நிலைமையுணராது, திருவெண்காடர் செல்வத்திற்கு எல்லையில்லையென்று பலருஞ் சொல்லக் கேட்டிருக்கிறேன். இன்னும் எங்கேனுமிருப்பின் தெரிவிக்கவெனக் கேட்க, சேந்தனார் அரசனே! அவர் செல்வ முழுவதையுங் காட்டிவிட்டேன், வேறறியேனென, அரசன் அவர் சொல்லை நம்பாது தன் பரிசனர்களைப் பார்த்து இவர் இன்னும் வேறு நிதிகாட்டும் வரையில் சிறையில் வையுங்களெனக் கட்டளையிட்டு, இவர் பொருண் முற்றும் திருவெண்காடர் பொருளேயென்று கவர்ந்துகொண்டான். இவற்றைக் கண்ட சேந்தனார் மனைவியார் அரசன் கொடுங்கோலுக்கஞ்சி தமது ஒரே புதல்வனை யுடன்கொண்டு பிறதேசமுற்றுக் கூலிவேலை செய்து காலங்கழித்துவந்தனர்.

அரசன் பட்டினத்தடிகளைக் காண்டல்.

இவை யிவ்வாறிருக்கையில், அவ்வூராளி பட்டினத்துப் பிள்ளையாரை நேரிற்காண விருப்பங்கொண்டு, ஊர்ப்பொது மண்டபத்திற்குப் போய் அங்கே சிவயோகநிஷ்டை கொண்டு வீற்றிருக்கும் திருவெண்காடரைத் தரிசித்து, ஐயா! நீர் இந்தப் பரதேசி வடிவாகி எல்லா இன்பங்களையுந் துறந்ததனால் எய்திய விசேஷமான பிரயோஜனம் யாது? எனக்கேட்க, பட்டினத்துப் பிள்ளையார் அரசனே! நீ நிற்பதும் நாமிருப்பதுமாகிய இந்நிலைமையே நாம் கொண்ட பரதேசிக் கோலத்தின் பயனென, அரசன் அதனைக்கேட்டு மனதில் நாணங்கொண்டு ஒன்றுமுரைத்தறகின்றிப் போயினன்.

திருவெண்காடர் சிவயோகத்திருத்தல்.

அதுமுதல், பட்டினத்துப்பிள்ளையார் பசிவந்த சமயங்களில் ஊரிற் சென்று இருகரங்களை விரித்து ஏற்றுப்புசித்து, தமது முழுநோக்கத்தையும் சிவனடியி லமர்த்திச் சிவயோக நிஷ்டையில் நிலைபெற்றிருந்தனர். ஆனால், பட்டினத்தடிகளது உயர் நிலையையுணராத அவருறவினர் அவர் ஊராரிடத்

தில் கைப்பிச்சை வாங்கிப் புசிப்பது தமது குலத்திற்கு இழிவென்று கருதி அவ்வூரிலுள்ளாரைப் பிச்சை கொடுக்காத வண்ணம் தடுத்தார்கள். அது கண்ட திருவெண்காடர் அவர்களிடத்தில் இரக்கங்கொண்டு அவர்களுக்கு ஞானோதயமாம்படி பசுநிரை மேய்க்கும் ஆய்க்குலச்சிறுரோடு அளவளாவி விளையாடியும் குப்பைகளின்மீது படுத்துறங்கியும், தமது காலிற் பழுதையைத் தொடுத்து அச்சிறுரை ஈர்க்கும்படி செய்தும், கண்டார் பித்தம்பிடித்தவரென்று பழிக்கும்வண்ணம் குடியிருந்த வீட்டிற்குக் கொள்ளி வைப்போம் என ஓயாது சொல்லிக்கொண்டு பல விடங்களில் திரிந்துகொண்டு மிருந்தனர்.

திருவெண்காடர்க்குத் தமக்கையார் நஞ்சூட்டியது.

திருவெண்காடருடைய செயலைப்பார்த்து மனம்பொறுத அவர் தமக்கையார், இவர் இவ்வகையா யிருத்தலினும் இறத்தல் நலமெனக்கருதி நஞ்சூட்டிய ஒட்டப்பமொன்று சமைத்து அதனைப் பிள்ளையார் உண்ணும்படி கொடுப்பித்தார். திருவருளா லதனையுணர்ந்த பிள்ளையார் "தன்வினை தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டைச் சுடும்" என்று தாம் பிட்ட அப்பத்துண்டைத் தமக்கையார் வீட்டிறப்பிற் செருகியதும் அவ்வீட்டுடன் அந்நகரிற் பலவீடுகளுந் தீப்பற்றி ஒருவராலும் தணிக்கமுடியாமலும் பிராணிகளுக்குப் பீடை யில்லாமலும் எரிந்துபோயின. அதுகண்ட பலரும் சுவாமிகளைப் பணிய அத்தீயையகற்றி "விளக்கினை வையமுய்ய" என முதலையுடைய செய்யுள் முதலியவற்றையோதி, ஊரிற் பிச்சையேற்றுண்டு "குடியிருந்த வீட்டிற்குக் கொள்ளி வைக்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு திருவெண்காட்டிற்றங்கி யிருப்பாராயினர்.

திருவெண்காடர் தாயார் தகனகிரியை செய்தல்.

இவரிங்ஙன மிருக்கையில், காவிரிப்பூம் பட்டினத்தில் இவர் தாயார் உடனீங்க, இவருறவினர் அவ்வுடலை வழக்கப்படி மயானத்திற்குக் கொண்டு செல்ல, அதனைத் திருவெண்காட்டிலிருந்துணர்ந்த பட்டினத்தடிகள் பெருமான் கட்டளையால் அன்னைக்குச் சொல்லிய வண்ணம் முடிக்கக் கருதி அங்கிருந்து காவிரிப்பூம்பட்டினமுற்று மயானமடைகையில், உறவினர் இவரைக் கண்டு ஒதுங்க, பிள்ளையார் அருகேபோய் அவர்களடுக்கிய சிதையையகற்றி, வாழைப்பட்டைகளால் சிதையடுக்கி அதின்மேலே தாயின் உடலைக் கிடத்தி, "ஐயிரண்டு, முந்தித்தவம்,வட்டிலிலும், நொந்துசுமந்து, அரிசியோ, அள்ளியிடுவது," என்னும் முதலினையுடைய பாடல்களையோதி, "முன்னையிட்டதீ" என்னும் பாடலால் தீமூட்டி, "வேகுதே தீயதனில்" என்னும் பாடலை அது மூண்டெரிகையிலோதி, சாம்பரான பிறகு "வெந்தாளோ" என்னும் முதலையுடைய பாடலால் துக்கித்து, மறுநாட் புலரியில் "வீற்றிருந்தாள்" என்னும் பாடல்கூறி உறவினரையும் விளித்துச் சஞ்சயனம் செய்வித்து "மென்றுவிழுங்கி" என்னும் பாடல் பாடிக்கொண்டே திருவிடை

மருதூர்சேர்ந்து அங்குள்ள அரனடியர் எதிர்கொள்ள அவருடன் ஆலயமடைந்து சந்நிதியிலிருந்து திருவிடைமருதூர் மும்மணிக்கோவை யோதித்துதித்துப் புறம்போந்து பிச்சையேற்றுண்டு சிலகாலம் கோபுரவாயிலில் சிவயோகத் தமர்ந்திருக்கையில், ஒருநாள் சிவபெருமான் அவர் கனவில் அவ்வூர் மன்னன்போலத் தோன்றிநின்று கைக்கோலினால் பூமியைத்தாக்கி நீயாரென்று வினவலும், இவர் மன்னனே நானென்றது தோல் நரம்பு மாமிசம் எலும்பு உரோமம் மூச்சு மன முதலியவற்றில் யாதோ அறியேனென, பெருமானும் உடனே அந்தர்த்தானமாக, அவ்வாறு வந்தவர் கடவுளென்றுணர்ந்து அன்பும் ஆராமையு மேலிட்டு அழுது தொழுது அவர்நின்ற அடிச்சுவட்டினைக் கண்ணிலும் மார்பிலும் ஒற்றித் துதித்தனர். பின்னொரு தினத்தில் நகர்முழுதுஞ் சுற்றியும் பருக நீர்கிடைக்காமல் மருதப்பிரானைப்பாடி யதனைப் பெற்றனர். ஒருநாள் உடம்பினை வெறுத்துக் கருப்பங்கழனியில் இழுக்கப்பண்ணியலுத்துப் புறந்திண்ணையிற் படுத்துறங்குகையில் மருதவாணர் இவர் கனவிற் றோன்றி, வெண்காடா! நீ நமது க்ஷேத்திரந்தோறுஞ் சென்று துதிசெய்கவெனக் கட்டளையிட்டு மறைய, பட்டினத்தடிகள் பலரும் உய்யுமாறு பல தமிழ்ப் பாக்களை யோதிப் புறப்பட்டு, கும்பகோணம், கீழ்க்கோட்டம், காரோணம், நாகேச்சரம், குரங்காடுதுறை, மாயூரமுதலிய க்ஷேத்திரங்களைப் பணிந்து திருவாரூரை யடைந்து அடியவரெதிர்கொள்ள ஆலயத்தைப் பணிந்து அந்நகரிற் பிச்சையேற்றுண்டு வசிப்பாராயினர்.

திருவெண்காடர் இறந்தவனை யெழுப்பல்.

திருவெண்காடர் திருவாரூரி லிருக்கையில் ஒரு சிறுவன் ஜந்மாந்தர புண்ணியவசத்தால் சிவபக்தி முதிர்ச்சி யுடையனாய், திருவெண்காடர் பாற் பக்தி செலுத்தி உணவாதிகளைக் காலத்திற் கொடுத்துபசரித்து இராப்பகலாகப் பிரியாது தொண்டு செய்து வந்தனன். அவன் ஒரு மகனேயாதலின் அவனது நல்லத்தை தன்மகளை யவனுக்கு மணஞ்செய்வித்துத் தமயன் குடியும் தன் குடியும் விளக்கமுறச் செய்யவிரும்பி அவன் தாய்க்கோத அவள் பிள்ளையின் அநுமதிகேட்ப, அவனிணங்காமையின் அவ்விருமாதரும் பட்டினத்தடிகள்பால் விண்ணப்பஞ் செய்ய, அவர் சிறுவனை நோக்கி, அப்பா! உன்தாய் அத்தையாகிய இருவர்கருத்தையும் நிறைவேற்று. திருவருள் உண்டாகுகையில் யாவுமாகும், என்சொல்லை மறாதேயென, சிறுவன் இணங்கி, சுவாமிகளைப் பணிந்து, சுவாமி! தேவரீரைப் பிரியாது தொண்டு செய்ய விரும்பிய அடியேனுக்கு இவ்வாறு கட்டளையிடச் செய்தது என் ஊழ்வினையேயாயினும் மணக்காலத்தில் தேவரீரெழுந்தருளி யாசீர்வதித்தருளல் வேண்டுமெனக் கேட்க, அடிகளும் அங்ஙனமே யாகுக வென்றருளியனுப்ப, அவன் தாயும் அத்தையும் மகிழ்ச்சியோ டழைத்துச் சென்று மணவினையைப் பிரபலமாக நடப்பித்தனர். அக்காலத்தில் பட்டினத்தடிகள் சென்று அவன்விருப்பின்படி வாழ்த்தி மேல் நிகழுங் காரியத்தைக் கூறவேண்டு மென்னுங் கருத்

துட் கொண்டவராய் "நாப்பிளக்க" என்று முதலையுடைய பாடல்பாடிச் சேனைஷயிட்டுச் சென்றனர்.

அந்த மணமகன் தன்னில்லாளுடன் கூடி வாழ்ந்து வருகையில் ஒரு நாள் தீவினைப்பயனால் அப்பியங்கன ஸ்நானஞ்செய்து அன்றிரவு அவனுக் குற்ற காமமேலீட்டினால் காதலியைக் கலக்க, சந்நிபாதங்கண்டு மரண மடைய, அவனது மனைவி தாய் அத்தை முதலினோர் கூடிக்கொண்டு பேரி றைச்சலிட்டழுதுகொண் டிருக்கையில், சுயேச்சையாய் உலாவிக்கொண் டிருக்கும் பிள்ளையார் தெய்வகதியாய் அவ்வழியே வரவும், சிலர் இச்செய்தி யைத் தெரிவிக்க, சுவாமிகளும் இரக்கமெய்தி அருகே செல்ல, அவன் சுற வினர் அழுகை நீங்கி யிருந்தனர். சுவாமிகள் அவ்விறந்தவனைக் கிருபையாகப் பார்த்து "வடிவந்தானும்" என்னும் பாடலோதி, தம்மையடிமை கொண்ட தலைவர் திருவருளை "மண்ணுமுருகும்" என்னுஞ் செய்யுளாற் கூற, இறந்து பட்டவன் உறங்கியெழுந்தான் போலத் துணுக்குற்றுப் பணிந்து நின்றான். யாவரும் அதிசயித்தார்கள். அச்சிறுவன் நிகழ்ந்த செய்தி சிறிது முணராதவ னாதலின் சுவாமிகள் திருவமுதுகொள்ளப் பொழுதுபட்டதே யென வருந்தி அவருக்குப் பிச்சையுணவைச் சித்தஞ் செய்வதறிந்து சுவாமிகள் திருவுளங் கனிந்தவராய் "எருவாய்க் கிருவிரன்மேல்" என்ற செய்யுளால் அவனுக்கு அருள்புரிந்து வாழ்த்திச் செல்லுகையில், அவ்வூரினர் எங்கள்பால் தொண்டு செய்யப்பெற்று இங்ஙனே யெழுந்தருளியிருக்க வேண்டுமென "வெட்ட வெளி" என்னும் பாடல்பாடி யவர்களை யிருத்தி அங்கிருந்து புறப்பட்டுப் பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு பாண்டிநாடடைந்து மதுராபுரியில் சோமசுந்தரப் பெருமானைப் பணிந்து "விடப்படுமோ" முதலிய சிலபாடல்க ளோதிச் சிலநாளங்கிருந்து அந்நாட்டுத் தலங்களை யெல்லாங்கண்டு மலை நாடு சென்று திருவஞ்சைக்களம் முதலிய தலங்களைப் பாடிப் பின்னர்க் கொங்குநாடு சென்றனர்.

திருவெண்காடர் கொங்குநாட்டிருத்தல்.

பட்டினத்துப் பிள்ளையார் கொங்குநாட்டிலுள்ள பேரையூர் அவிநாசி முதலிய சிவஸ்தலங்களைத் தரிசித்துத் துதித்து, மௌனவிரதங்கொண்டு அங்கே வசித்திருக்கும்போது ஒருநாள் நடுராத்திரியில் பெரும்பசியால் வரு ந்தி, மூர்க்கனாகிய ஒருவனுடைய வீட்டு வாயிலிலே நின்று தமது கையைத் தட்ட, அம்மூர்க்கன் இவரது பிரபாவங்களை யுணராதவனாகலின் கள்ளனெ ன்றுள்ளத்திற் கருதி, கரத்தில் தண்டமொன்று தாங்கிவந்து புடைத்தனன். அதற்கு ஒன்றும் தடைசெய்யாமல் நின்றவிடத்திலேயே நின்று சிவநாமோச் சாரணஞ் செய்துகொண்டிருந்தனர். அச்சமயத்தில் அயல்வீட்டுப் புறந் திண்ணையிற் சயனித்திருந்த வொருவன் ஓடோடிவந்து அம்மூர்க்கனைத் தடு த்து ஸ்வாமிகளை யழைத்துச்சென்று உபசரித்து உணவளித்தனன். அத் தருணத்தில் பட்டினத்துப் பிள்ளையார் திருவருளையெண்ணி "பூணும்பணிக்

கல்ல" என்னுஞ் செய்யுள்கூறி, "இருக்குமிடந்தேடி" என்னுஞ் செய்யுளால் தமது கருத்தை வெளியிட்டு, அவ்விடத்தை விலகித் துளுவநாடுசென்று கோகரணமடைந்து கோகர்ணேசுரரைப் பணிந்து, உஞ்சேனை மாகாளமுற்று மாகாளேசுரரைத் தொழுது அங்கருகுத்த ஒரு சிறுபுறங் காட்டி விருந்த விநாயகாலயத் தணுகிச் சிவஞான நிஷ்டையில் எழுந்தருளியிருந்தனர்.

கழுமர மெரிந்தது.

அக்காலத்தில், அந்நகரை யரசுசெய்த பத்திரகிரிமன்னன் சத்திநிபாதத்துத்தம நிலைவாய்ந்த அதிதீவிரபக்குவ முற்றிருந்ததுபற்றி, சிவபெருமான் அவனைத் தேற்ற அருள்செய்ததனால், அரசன் மாளிகையில் திருடக்கருதிய சில கள்வர் அக்கணபதி கோயிலையடைந்து, திருடப்போமிடத்தில் பெரும்பொருள் கிடைக்கவேண்டுமென்று வணங்கிச் சென்று இராஜக்கிருகத்திற் புகுந்து ஆசையடங்கப் பலவகைத் திரவியங்களையும் திருடிக்கொண்டு போகையில் விநாயகரைப் பணிந்து விலையேறிய ஒரு பதக்கத்தை விநாயருக்குச் சாத்துவதாகக் கருதி, மிக்க இருளாயிருந்தமையின் விநாயகரெனத் தெரியாமல் அருகேயிருந்த பட்டினத்துப் பிள்ளையார் கழுத்தில் வீழ்த்திச் சென்றார்கள்.

அந்தப்புரத்திற் களவுபோனதுபற்றிக் காவலாளரும் பரிவாரங்களும் நகர்முற்றுந் தேடிப்பார்த்துப் புதிதாகத் தோற்றிய அடிச்சுவட்டின் வழி குறுங்காடடைந்து அங்குள்ள விநாயகாலயத்தில் அருணோதய சமயத்தில் சிவஞான நிஷ்டையிலிருந்த ஆரம்பூண்டுள்ள பட்டினத்துப் பிள்ளையாரைப் பார்த்து, கள்வரில் இவருமொருவரென்று கருதிப் பலவிதமாகத் துன்புசெய்தார்கள். அதனால் நிஷ்டை கலைந்தபிள்ளையார் தாம்பூண்ட பதக்கத்தின் வரலாற்றையும் ராஜசேவகர் துன்புசெய்யுங் காரணத்தையுந் தெரியாமல் சிவசிவவென்று சலங்காதிருக்க, அவரிற் சிலர் இவர் பெரியராயிருக்கிறார், கள்வரல்லர், நன்குணராமல் இவரை வருத்துதலடாது, அரசனுக்குணர்த்திக் கட்டளையின்படி செய்வோமென்று அரசன்பாலெய்தி ஆரத்தையுங் காட்டினர். வேறு சிலர் இக் கள்வனைத் தண்டியாதுவிடின் பொக்கிசமுற்றுங் கொள்ளையாய் விடுமெனக் கூற, மன்னன், கழுவேற்றுக வெனக்கட்டளையிட, தண்டலாளர் ஸ்வாமிகளைக் கழுமரத்தருகே அழைத்துப்போக ஸ்வாமிகள் கழுமரத்தைக்கண்டு புன்னகை புரிந்து "என் செயலாவதியா தொன்றுமில்லை இனித்தெய்வமே" என்னுஞ் செய்யுளோத, உடனே கழுமரம் பற்றியெரிந்தது. பரிசனர்கள் இச்செய்தியை யரசனுக்குணர்த்த மன்னன் பிரமித்துப் பாதசாரியாய் ஓடிவந்து, கழுமரம் எரிவதையும் பட்டினத்தடிகள் அருகே நிற்பதையும் பார்த்தவளவில் பிரபஞ்சத்தை மறந்தனன்.

பத்திரகிரியாருக்குத் திருவருள் புரிந்தது.

மெய்ம்மறந்த பத்திரகிரிமன்னர் உணர்வுற்று ஸ்வாமிகளைப் பலவாறு துதித்துப் பணிந்து நன்காராயாது செய்த அபசாரத்தை மன்னிக்கவேண்டு

மெனப் பிரார்த்திக்க, பட்டினத்துப்பிள்ளையார் கிருபாமூர்த்தியாய் மன்னவருக்கு ஞானோதயமாகத் தத்துவநியதிபுரிந்து "நாய்க்கொருசூல்" "மானார் விழி" என்னுஞ் செய்யுள்களையோதித் தம்மைப்பிணித்திருந்த தளைகளைத் தெறித்துவிழச்செய்தனர். பத்திரகிரியார் உடனே தெளிவுற்று உலகவிச்சையை வெறுத்து அரசகோலத்தை விலக்கி, தம்மைப் புடைசூழ்ந்து நின்ற உறவினராதியோரைப் பாராது, பிள்ளையார் பாதங்களில் சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டு, அடிகளே! குற்றவாளியாகிய என்னை உச்சீவிக்குமாறுகருணை செய்யவேண்டுமென வேண்டினர். அதற்குத் திருவெண்காடர் "ஓங்காரமாய்" என்னும் பாடலோதிப்பாவனாதீக்ஷையாற் பத்திரகிரியாருக்குச் சிவயோகாநுபவம் நிலைக்கும்படியருளி, நீ திருவிடைமருதூருக்குப் போகுகவெனக் கட்டளைசெய்து, அவ்விடம் நீங்கி, விந்தகிரி காசி திருக்கேதார முதலிய க்ஷேத்திரங்களைப் பணிந்து, ஸ்ரீபர்ப்பதஞ் சேர்ந்து துதித்து அவ்விடத்திற் சிலகாலமிருந்து, மேற்கடலோரமாய் மீண்டுங் கொங்குநாடடைந்து, பாண்டிநாட்டிற்குப்போய்த் திருக்குற்றாலத்தைக் கண்டு "காலன் வருமுன்னே" முதலிய பாடல்களையோதி, இராமேச்சுரம் திருமறைக்காடு முதலிய சிவஸ்தலங்களைப் பணிந்து மீண்டும் திருவிடைமருதூரை யடைந்து மருதீசப்பெருமானைப் பணிந்து கீழைக்கோபுரவாசலில் தங்கியிருப்பாராயினர்.

குருவின் கட்டளைபெற்ற பத்திரகிரியார் சிவயோகசாதன நீங்காது பிச்சை புக்குண்டு பலதலங்கள் பணிந்துகொண்டு பட்டினத்துப்பிள்ளையார் திருவிடைமருதூரைச் சேர்ந்ததினத்திலேயே தாமும் ஆங்குற்று அடிகளை வணங்கி உத்தரவின்படி மேலைக் கோபுரவாயிலி லிருந்துகொண்டு, தினமும் பிச்சையேற்றுக்கொணர்ந்து குருநிவேதனஞ்செய்துசேஷத்தைதாம்புசித்துச் சிவயோகசாதனையி லிருப்பாராயினர். இப்படி யிருக்கையில், ஒருநாள் சுவாமிகள் பரிகலசேஷத்தைப் பத்திரகிரியார் அமுதுசெய்யப் புகுகையில், ஒரு பெட்டை நாய்க்குட்டி தன்னைப் போஷிப்பாரின்றிப் பசியால் வருந்தி வால் குழைத்து எளியமுகங்காட்டி நிற்க, பத்திரகிரியார் அதனிடத்திரக்கமுற்று அப்பிரசாதத்திற் சிறிது அதற்கிட, அஃதுண்டு பசியாறி அதுமுதற் பத்திரகிரியாரைப் பிரியாது காத்துக்கொண்டிருந்தது. அதனால் இவர் நாடோறும் சேஷப்பிரசாதமிட்டு வந்தார்.

அந்தப் பெட்டைநாய் ஜந்மாந்தரத்தில் அங்கதேசத்திலிருந்த அதிசௌந்தரியவதியாகிய ஒரு வேசை. அவள் பல புருஷர்களையும் வஞ்சித்துத் திரவியஞ் சம்பாதித்துக் கள்ளுண்டு புலாலருந்திப் பலவகைத் தீக் கருமங்களிற் காலங்கழித்து வருகையில், ஒருநாள் நடுப்பகலில், ஞானவானாகிய ஆசிரியன் கட்டளையாற் பிச்சைக்குப் போகும் ஒருமாணாக்கன்கையில், தான் விடர்களோடுண்டுமிகுந்த உச்சிஷ்டத்தை அகங்காரத்தாலிட, அவன் அதைக் குருப் பிரீதிசெய்து தானும் பசியாறிச்சென்றனன். அவ்வேசைவயது முதிர்ந்திறந்து பெட்டைநாயாய்ப்பிறந்தவள் ஆயினும் சிவயோகியின் பசியைத்தணி

வித்த புண்ணியவசத்தால் பத்திரகிரியாரது உச்சிஷ்ட நுகரப்பாத்திரமாய் அவருக்குக் காவற்றொண்டுசெய்து முத்தியெய்த இடமுற்றாள். சிலகாலஞ் சென்றபின், அந்நாய்க்குப் பரிபாகமுண்டானமையின் மருதப்பெருமான் சித்தருபமேற்றுக் கீழைக்கோபுரவாயிலிலுள்ள திருவெண்காடர்பாற் சென்று பசியால்வருந்துகிறேன் பிச்சையிடுவீராவெனக் கேட்க, திருவெண்காடர், ஐயா ! நான் கோவணமே சுமையெனக் கருதி யுள்ளேன், நான்பிச்சையிடுவதெங்ஙனம்? ஒருகுடும்பிமேலைக்கோபுரவாயிலிலிருக்கிறான்.அங்குச்சென்றால் பசிதணிக்க ஏதேனுங் கிடைக்குமென, சித்தர் பத்திரகிரியாரிடஞ் சென்று தாம்பசித்திருப்பதும் கீழைக்கோபுரவாயிலில்தாம் கேட்டதும் அதற்கு அவர் பதில் சொன்னதும் சொல்லி, உம்மிடம் வந்தேன் நீரென்பசியைத்தணிவிக்கவேண்டுமெனக் கூற, பத்திரகிரியார் அச்சொல்லின் குறிப்பை யறிந்து, இரந்துண்ணும் ஓடும் எச்சிற் புசிக்கு நாயுமா வென்னைக் குடும்பியாக்கின வென்று தமது கையிலிருந்த ஓட்டை யெறிய, அது நாயின் பொறியிற்பட, ஓடுமுடைந்து நாயு மிறந்துபோயது. மருதப்பிரானாகிய சித்தரும் புன்னகை காட்டி மறைந்தனர். பத்திரகிரியார் சகச நிஷ்டைகைகூடத் திருப்புலம்பல் முதலியன கூறிச் சிவயோகத்தில் எழுந்தருளியிருந்தார்,

சிவயோகியாலிறந்த அந்தநாய், பண்டையவினைமுற்றும் நீங்கிப் புண்ணியமேலிட்டு, காசிமன்னன் விசுவகுத்தனுக்குத் தவப்புதல்வியா யுதித்து ஞானவல்லி யெனுநாமங்கொண்டு, பூர்வஞானமுற்றுப் பத்திரகிரியார் திருவடியில் அன்புகொண்டு வளர்ந்து மங்கைப்பருவமடைய, அவள் பிதா தகுந்த நாயகனை விசாரித்துக் கிடையாததுபற்றி மனவருத்தத்துடன் புதல்வியை யடைந்து, அருகிருந்த புரோகிதரிடம் தன்மனக்குறையைக்கூறி வருந்த, அப்பெண் பிதாவைப் பணிந்து, நான் யார்க்கும் உரியளல்லேன். தென்னாட்டில் திருவிடைமருதூரில் மேலைத்திருக் கோபுரவாயிலில் எழுந்தருளியிருக்கும் என் குருவிற்கேயுரியேன், நீங்கள் என்கருத்தைத் தடுக்காது என்னை அவருக்கே கொடுத்தால் இருபத்தொரு தலைமுறையினரும் நற்கதியடைவீர்களெனக்கூற, மன்னன் மனநடுங்கி இச்சிறுமிக்கு இவ்வெண்ணம் எவ்வாறுண்டாயிற்று? இவளது குணம்செயல் அழகு முதலியவற்றால் ஓரவதாரமென்றே யாலோசிக்கிறேன். இன்னும் இவ்வார்த்தையின் உண்மையை யறியவேண்டுமென்று சில ஒற்றரை யனுப்பி அவர்களாற் பத்திரகிரியார் நிலையைத் தெரிந்துகொண்டு, தன் மகளைச் சிவிகையிலேற்றிக்கொண்டு பரிசனர்கள் புடைசூழத் திருவிடை மருதூரை யடைந்து மேலைக்கோபுரவாயிற்கருகே மகளைப் பல்லக்கிலிருந்து இறக்கினான்:

பத்திரகிரியார் சிவஞானநிஷ்டையிலிருப்பதுணர்ந்த அரசகுமாரத்தி கைகூப்பிக் காலம் பார்த்துக்கொண் டெதிரேநின்று, நிஷ்டை விலகிப் பார்த்தவுடன், அடிநாய், மீட்டும் திருவடிப்பேற்றுக்கேவந்தது எனப்பணிய, அவர் முற்றுமறிந்து அப்பெண்ணின் கரத்தைப்பற்றிக்கொண்டு கீழ்க்கே

புரவாயலிலிருக்கும் ஞானசாரியர் சந்நிதியடைந்து, எம்பெருமானது எச்சிற்பிரசாதமுண்ட நாய்க்கு இப்பிறவி வரற்பாலதோவென வருந்தி நிற்க, பட்டினத்தடிகள் சிவன்செயலுக்கு யாது செய்வோமென்று திருவருளைநாடி னவுடன், ஆங்கு ஓர் சோதியுண்டாக, பத்திரகிரியார் அப்பெண்ணுடன் அதிற்பிரவேசித்து ஐக்கியமாயினர். சோதிமறைந்துமஹாலிங்கத்திற்சேர்ந்தது. திருவெண்காடர் இவ்வற்புதத்தைக்கண்டு நடுங்கி கண்ணீர்பெருகப் பரவசராகித் தெளிந்து திருவருளை நாடிச் சிவாலயத்தை நோக்கி, எம்பெருமானே! வரகுணபாண்டியர்மனைவியாரை முன்னொருகாலத்தில் திருமேனியில் ஐக்கியஞ்செய்துகொண்ட அருள்வெள்ளமே! இன்று நிகழ்த்திய அற்புதம் அளவிடற்பாலதோ, என்னை வினையுடன் இங்கிருத்திய தெதற்கோவென்று மனங்குழம்புகையில், திருவெண்காடரும் ஒற்றியூருக்கு வருகவென்றோரசரீரியுண்டாக, வெண்காடர் பணிந்து புறப்பட்டுப் பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவெண்காட்டை யடைந்தனர் என்று கூறிவந்த உபமன்யுமுனிவரை முனிவர்கள் பணிந்து, சுவாமி! வரகுண பாண்டியர் மனைவியை மருதப்பெருமான் ஐக்கியஞ்செய்து கொண்ட வரலாற்றினையுங் கேட்க விரும்புகின்றோ மெனப்பணிய, உபமன்னிய முனிவர் உரைப்பாராயினர்.

வரகுண பாண்டியர் வரலாறு.

சிவபக்த சிகாமணிகளே! பல்வளனும் பெருகிய பாண்டிநாட்டில் மதுராபுரியில் முற்காலத்தில் பாண்டிமன்னவர் பரம்பரையி லவதரித்து, சிவநேசமிக்கு விளங்கிய வரகுணதேவர் நீதிவழியே செங்கோல் புரிகையில், ஒருநாள் இரதாரூடராகச் செல்லுகையில் வயோதிக மறையோ னொருவன் தேர்க்காலிற் பட்டிறப்ப, அப்பிரமஹத்தி தம்மைவருத்த, பலவகைப் பரிஹாரஞ்செய்தும் அது நீங்காமையிற் பயந்து தங் குலதெய்வமாகிய சோமசுந்தரப்பெருமான் சந்நிதியடைந்து பிரார்த்திக்க, திருவிடை மருதூரையடைந்தால் பிரமஹத்தி விலகுமென் றுண்டான அசரீரிவாக்கின்படி திருவிடை மருதூரையடைந்து காருண்யாமிர்த தீர்த்தத்தில் மூழ்கி நியதிமுடித்துக் கீழ்க்கோபுரவாயிலாற் புகவும், அப்பிரமஹத்தி சந்நிதிக்குட்புகாமல் புறத்திலேயே நின்றது. தேவர் சிவபிரானைப்பணிந்து புறஞ்செல்லத் திரும்புகையில், அரசனே! கீழைக்கோபுரவாயலில் பிரமசாயை நிற்றலின் மேலைக்கோபுர வாயிலாற் புறஞ்செல்கவென்றசரீரியுண்டான வண்ணமேசென்று தம்மிருக்கையடைந்து மருதப்பிரானைப் பணிந்து பக்தி செய்து வருகையில், அரண்மனையிற் களவுசெய்த கள்ளனொருவனைக் காவலாளர் கட்டிக்கொணர்ந்து தம்முன்னிறுத்த, அவன் உடலில் திருநீறு அணிந்திருத்தலைப் பார்த்து, சிவனடியனென்று கட்டை அவிழ்க்கச்செய்து அவனைப் பணிந்து ஆசையடங்கப் பொருள் கொடுத்தனுப்பினர். வேறோர் நாளிரவில், நகர்ப்புறத்தில் நரிகள் ஊளையிட, அவை சம்புவென்று தியானஞ்செய்ததாக அவைகட்கு ஆடை

யாதி பரிசளித்தனர். பின்னுமோரிரவில், தவளைகளிட்ட இரைச்சலை ஹரவொலியெனக் கேட்டு இரத்தினங்களையும் பொன்னையும் அந்நீரில் இறைப்பித்தனர். சிவாலயத்திற்கு உலரவைத்திருந்த எள்ளைத் திருடியுண்ட ஒரு திருடனைக் காவலாளர் பிடித்து வந்து முன்னிறுத்த, அவனை வினவி, மறுமையில் சிவாலயத்திற்குச் செக்கிழுக்கும் எருதாய்ப் பிறக்கக்கருதி இது செய்தேனென, அங்ஙனமாயின் உன் வாயிலிருத்தலிற் சிறிதுகொடு, யானும் மற்றோரெருதாவேனென்று அவன் வாயெள்ளை யாசித்துண்டு மகிழ்ந்தனர். மருதூரில் உருண்டுகிடந்த வெற்றுத்தலையைக் கண்டு, மருதூர் வருவார் பாததூசைப்படியவன்றோ இங்ஙனங் கிடக்கின்றதென்று, அப்பேறு கருதி அதனைப் பலமுறை இரந்தனர். ஆலயப் பிரதக்ஷிணம் புரிகையில், நாய் மலமிருக்கக் கண்டு இதனைப்புறத் தெறிவார்க்கு என்னரசிற் பாதியளிப்பலென்றுன்னி, மறுமுறை பிரதக்ஷிணம் வருகையில் அஃதங்ஙனமே யிருக்க, இனியெடுப்பார்க்கே யென்னரசு முற்றும் உரித்தென்று சென்று, மூன்றுமுறை பிரதக்ஷிணம் புரிகையில் மீண்டுமிருப்பத் தமது உத்தரியத்தால் அதனையெடுத்துப் புறத்தி லெறிந்தனர். ஒருநாள் நகருலா வருகையில் வேப்பங்கனிகள் உதிர்ந்து தமதன்பால் சிவலிங்கங்கள் போலத்தெரிய, அவற்றிற்கு விதானமமைத்தனர்.

பின்னர், விக்கிரமச்சோழன் மகள் காந்திமதியை மணந்து இரவில் பள்ளியறை சேர்ந்த மனைவியின் அழகைநோக்கி, இப்பெண் மருதப்பிரானுக்கே யுரியளென்று கருதி, மனைவி கையைப் பற்றிக்கொண்டு ஆலயமடைந்து நள்ளிரவாகலின் திருக்கதவடைக்கப்பட் டிருக்க, திருவாயிலினின்று, மருதப்பா வென்றழைத்துத் தட்டினவுடனே, சிவபெருமான் வரகுணபாண்டியா வந்தேன் எனக்கூறிக் கதவைத்திறக்க, உட்புகுந்து, சுவாமி! இப்பெண் தேவரீருக்கே யுரியளென்று கொணர்ந்தேன் என, சிவபெருமான் அதற்கியைந்து அப்பெண்ணைச் சிவலிங்கைக்கியஞ்செய்து கொண்டனர் வரகுணதேவர்களித்து மனையிற் புகுந்தனர். திருக்கோயிலுந் தாழ்பூட்டப்பட்டது. விடிந்தபின்னர், வழக்கப்படி திருக்காப்பு நீக்கி உட்சென்று கோயிற் பரிசனர், சிவலிங்க மூர்த்திக்கு ஒரு புறத்தில் வளையணிந்த பெண் கையொன்று வெளிதோன்றப் பார்த்துப் பயந்து, வரகுண பாண்டியருக்குணர்த்த, அவர் சந்நிதிக்கு ஓடோடிவந்து கண்டு, பரமசிவனே, பாவியாற் பிடிபட்ட கையையெச்சிலெனக் கருதிக் கழித்தீரோவென வருந்த, சிவபெருமான் உன் கருத்தை உலகறிய உணர்த்தியதன்றி வேறல்லவென அசரீரியாகக் கூறினவுடன் அந்தக்கையும் அதனுண் மறைந்தது. தேவர்கள் மலர்மழை சொரிந்தனரென்று கூறி, பின்னர் திருவெண்காடர் சரிதத்தைச் சொல்லலாயினர்.

பட்டினத்துப் பிள்ளையார் திருவெண்காடு சேர்ந்தது.

பட்டினத்தடிகள் திருவெண்காடு சேர்ந்து திருவெல்லையை வணங்கிச் சந்நிதியடைந்து பணிந்து அன்புமேலிட்டு அகங்குழைந்து "பூதமுங்கரணம்"

"யாவரே யிருந்தும்" "உண்டதே" என்னுந் தொடக்கங்களை யுடைய திருவிசைப்பாவாற் றோத்திரித்துச் சந்நிதியினின்று புறம்போந்து அங்கே வசித்திருந்தனர்.

சேந்தனார் வரலாறு.

அங்ஙனமிருக்கையில், அரசனால் முன்னர் சிறையில் வைக்கப்பட்ட சேந்தனாருடைய மனைவியும் மகனும், பிள்ளையார் அங்குற்ற செய்தி யறிந்து அவர்பாலணுகித் திருவடியில் வீழ்ந்துவருந்த, பிள்ளையார் நீங்கள் யார் உங்கள் துயர் யாதென வினவ, அவர்கள் நிகழ்ந்த செய்திகளைச் சொல்லிச் சேந்தனாரைச் சிறைவிடுவிக்க வேண்டுமென வேண்ட, அடிகள் மனம் வருந்தி, சிவசந்நிதி யடைந்து "மத்தளை தயிருண் டானும்" என்னும் முதலையுடைய திருவிசைப்பாவை யோதியவுடனே, சிவபெருமான் மூத்த பிள்ளையாரை நோக்கி, நீ சேந்தன் விலங்கை முரித்துச் சிறை நீக்கிக் கொணர்ந்துவெண்காடன்முன்விடுகென, * பிள்ளையார் அங்ஙனமே செய்யச் சேந்தனார், பிள்ளையாரைப் பணிந்து அடியேன்சிறையை யகற்றியதுபோலவே, பாசச்சிறையையும் அகற்றி அருளவேண்டுமெனப் பணிய, பட்டினத்தடிகள் அவர் பக்குவநிலையை யறிந்து, நீ யினி காட்டு விறகு விற்று அதனால் சிவனடியாரை யூட்டிக் குடும்பத்துடன் தில்லையில் வாழ்கவெனப் பணித்து, சீகாழிநோக்கிச் சென்றனர்.

சேந்தனார் தில்லையடைந்து, ஆசிரியர் கட்டளைப்படி வாழ்கையில், அடைமழை ஏழுநாள்விடாது பொழிகையிற் பசியால்வருந்தி, காட்டிற்சென்று விறகு கொணர்ந்து விற்றுக்கிடைத்த மாவை மனைவிபால் கொடுக்க, மனைவி களியமுது சமைக்க, சேந்தனார் எங்கெங்கு தேடியும் அடியரைக்காணமல், சிவபெருமான் ஒரு முதிய அடியவர் வேடங்கொண்டு மண்டபத்திலிருக்க, அவரை யழைத்துவந்து களியமுது படைக்க, பெருமான் அதனை யமுதுசெய்து எஞ்சியதைமுடிந்துசென்று, அம்பலமடைந்து, தரிசனத்திற்கு வந்தவர்களுக் களித்து அம்மையார்களிக்க அமர்ந்திருந்தனர். சேந்தனார் தமது குடும்பத்துடன் அம்மிகுதியைப் புசித்துத் தங்கினர்.

இஃதிப்படி யிருக்கையில், செல்வச்சோழன் திருவம்பலத்தில் தன்னால் நடத்துவிக்கப்படும் நித்திய பூசைமுடிவில் ஒலிக்கும் மணியோசைகேட்டுப் புசிக்கும் நியதிகொண்டிருந்தவன், ஒருநாள் நள்ளிரவாகியும் மணியொலி கேளாது மனமாழ்கித் தரையிற் கிடந்து துயில்கையில், அம்பலவாணர் சேந்தனாரன்பினை வெளியிட அவன் கனவில் தோன்றி, மன்னவ! வருந்தற்க இன்று நம்சேந்தனாரட்டியகளியமுதைக் களியோடுண்ணச்சென்று, உன்னால்

* இப்பிள்ளையார் இன்றும் விலங்குமுரித்த விநாயகரெனப் பிரசித்தமாக விளங்குகின்றனர்.

நடத்தப்படும் பூசைக்குத்தடைபட்டதெனச் சாற்றி அந்தர்த்தானமாயினர். அரசன் தெற்றெனவிழித்து; அத்தகைய சேந்தனாரைத் தரிசிக்கவிரும்பி, சூரியோதயகாலத்தில் ஆலயமடைந்து, தானும் தில்லைவாழ்ந்தணர்களும் ஆலயமுற்றிலும் களியமுது சிந்திக்கிடக்க, தன் கனவை அவர்கட்குக் கூறவும், யாவரும் அவரைத் தரிசிக்க விரும்பியிருக்கையில், மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் இரதமானது, முன்னாள் பொழிந்த மழையின் சேற்றினால் நடைபெறாது தடைபட, சிவபிரான் பலரும் கேட்கும்படி "சேந்தா! தேர்நடக்கப் பல்லாண்டுபாடுக" என்றசரீரியாகக் கூற, அதுகேட்ட சேந்தனார் திருவருளை வியந்து "மன்னுகதில்லை, எந்தையெந்தாய்" எனுந் திருப்பல்லாண்டு ஓதியக்ஷணமே தேர் திருவீதியைப் பிரதக்ஷிணம் வந்து தன்னிலை சேர்ந்தது.

அவ்வற்புதங்கண்ட அரசனும் தில்லைவாழ்ந்தணரும் சேந்தனாரைப் பணிய, சேந்தனாரும் அவர்களைப் பணிந்து ஆங்கிருந்து திருவிடைக்கழிக்குச் சென்று இளையபிள்ளையாரை "மாலுலாமனந்தம்" எனுந் திருவிசைப்பாவோதித்துதித்து, திரு ஆவடு துறை முதலிய ஸ்தலங்களைப் பணிந்து திருப்பதிகமோதி, சிற்சபேசர் திருவடி நிழலில் வீற்றிருந்தனர்.

சேந்தனாரை இவ்வண்ணம் முத்திநெறி சேர்ப்பித்த திருவெண்காடர் சீகாழியடைந்து தோணியப்பரையும் திருநிலை நாயகியாரையும் வணங்கி "திருவளர்பவளப்பெருமலை" எனும் முதலையுடைய திருக்கழுமல மும்மணிக்கோவை யோதி அங்குச் சிலகாலந்தங்கி, நடராஜப்பெருமானைத் தரிசிக்கக் கருதி "அத்தனை" யெனுஞ் செய்யுள் கூறிப் புறப்பட்டு, கொள்ளிடக்கரையேறி, சிதம்பரத்தை யடைந்து திருவீதியைத் தண்டனிட்டு வணங்கி வலம் வந்து தூலலிங்கமாகிய திருக்கோபுரத்தைப் பணிந்து, திருமாளிகையைப் பிரதக்ஷிணஞ்செய்து கனகசபையைப்பணிந்து ஆனந்தத்திருநடந்தரிசித்துப் பரவசராகி "பூமேலயனறியா" என்னும் முதலையுடைய கோயினான்மணிமாலை யோதி விடைகொண்டு வெளிவந்து, தமக்குற்ற பசியால் "பன்னுகவாடகப் பொற்பாதம்" எனும் பாடல் கூறியவுடனே, சிவகாமியம்மையார் வேதியச் சிறுமியாய், உச்சிகால நிவேதனத்தைக் கொடுத்தருள, உண்டு பசியாறினவுடன் வந்த பார்ப்பனப்பெண்மறைய, வந்தவர் உலகமாதா வென்றறிந்து ஆராமையால், "ஓடுமெடுத்து" எனும் பாடலால் துதித்து, "சோறிடுநாடு" எனுஞ் செய்யுளையோதி, காலங்களில் திருநடன தரிசனஞ்செய்து "நினைமின்மனனே" என்பது முதலியபலதுதிகளோதிச் சிலகாலம் அங்கேயிருந்து திருவொற்றியூரைக்கருதி "பாற்கடல்கடைய" எனும் அடைக்கலத்திருவகவல் கூறி இன்னுஞ் சில தோத்திரங்களியற்றி வழிக்கொண்டு பல க்ஷேத்திரங்களைத் தரிசித்துக் காஞ்சியடைந்து திருவேகம்பமுடையார் திருவந்தாதியோதி, திருவேகம்பமாலை, கச்சித்திருவகவல் முதலிய கூறி, காரோணத்தில்

வீற்றிருக்கையில் பசிதாளாமல் "அத்திமுதல்" எனும் வெண்பாவோத, அம்
மையார் அந்தணமங்கையாய் அமுதளிப்பப் பசியாறி, அங்குள்ள பலதளிக
ளையும் தரிசித்து அங்கிருந்து புறப்பட்டு, திருவாலங்காடு திருப்பாசூர் முத
லிய தலங்களை வணங்கி, திருக்காளத்தியைத் தரிசிக்கச்செல்லுகையில், கண்
ணப்பநாயனார் முதலானார் பெருமையைக்கருதி "வாளான்மக வரிந்தூட்ட"
எனுஞ் செய்யுளோதிக் காளத்திமலையடைந்து பணிந்து அங்குவசிக்கையில்,
கயிலையைத் தரிசிக்க விரும்பி "மந்திக்குருளை" எனுஞ் செய்யுளோதிய
வுடன், காளத்தியாகிய தென்கயிலைப்பிரானே வடகயிலைத் திருக்கோலத்
தைக் காட்டியருளத் தரிசித்துப் பலவாறு துதித்துப் பணிந்து விடைகொ
ண்டு; பிரளய வெள்ளத்தில் அழியாது நின்று பலகை வடிவாகிப் பெருமான்
விளங்கிய தலமும், பலகைநாதர் படம்பக்கநாதர் தியாகராஜப் பெருமான்
முதலிய திருநாமங்களோடு சிவபெருமான் எழுந்தருளி யிருக்குந்தலமும், பிரம
புரி ஆதிபுரி முதலிய அநேக காரணப்பெயர்கள் வாய்ந்ததும், கற்பகவிருக்ஷம்
தவங்கிடந்து மகிழமரமாய் இறைவர்க்குத் திருநீழல் செய்வதும், அகஸ்திய
முனிவர் திருமணக்கோல தரிசனஞ் செய்யப்பெற்றதும், ஞானசம்பந்தப்
பிள்ளையார் முதலிய மூவருந் தேவாரத் திருப்பதிக மோதப்பெற்றதும், சங்
கிலி நாச்சியார் திருப்பள்ளித் தாமத்தொண்டு செய்திருந்ததும், சுந்தரமூர்த்தி
சுவாமிகள் சிவாநுக்கிரகத்தால் சங்கிலி நாச்சியாரைத் திருமணஞ்செய்து
கொண்டு சிலகாலம் வசித்திருந்ததும், ஓமகுண்ட முதலிய பல புண்ணிய
தீர்த்தங்களுடையதும், அளவிட்டுரைக்க ஆதிசேடனாலு முடியாத அரும்பெ
ருஞ் சிறப்பு வாய்ந்ததுமான திருவொற்றியூரைச் சேவிக்கக் கருதிப் புறப்
பட்டனர்.

அப்படி வருந்திருவெண்காடர் "கண்டங்கரியதாம்" எனும்வெண்பா
வோதி யாவுங் குருலிங்க சங்கமங்களாக விளங்கக்கண்டு "வாவியெல்லாந்தீர்
த்தம்" எனும் வெண்பாவாற் றுதித்து, திருவொற்றியூரின் எல்லையில் பிரவே
சித்துத் தம்மை மறந்துண்டான பேரின்பப்பெருக்கால் "ஒடுவிழுந்து" எனு
ம்வெண்பாவோதி "கிடப்படவார்" எனுஞ்செய்யுளாற்றுதித்து, திருவீதி
யை மிதியாது பிரதக்ஷிணஞ்செய்து சன்னிதியடைந்து சேவித்து "இருநில
மடந்தை" எனும் முதலையுடைய திருவொற்றியூர் ஒருபா வொருபஃது பாடித்
துதிசெய்து, திரும்பி "ஐயுந்தொடர்ந்து" எனும் பாடலோதி, முதல்வன்
முறையீடு, அருட்புலம்பல் முதலியன திருவாய்மலர்ந்து, பசுமேய்க்குஞ் சிறு
ரோடு விளையாட்டயர்கையில், ஒருநாள் அவர்களைநோக்கிஉங்களுக்கு விளை
யாட்டுக்காட்டுவேன் பாருங்கள். என்னை யொரு குழியிற் புதைக்கவென,
அவர்கள் அங்ஙனம்புரிய, திருவெண்காடர் வெளிப்போந்து ஒரு மணற்றிட்
டைமேல் நிற்க, சிறுவர் வியந்து, பன்முறை அவ்வாறுசெய்ய, இவரும் வெ
ளிவந்துகொண்டேயிருந்து இறுதியில் ஒருமுறை வெளிவாராது சிவலிங்க
வடிவாக வெளியே விளங்கினர்.

அதுகண்ட சிறுவர்கள் அதிசயித்து அதனை ஊரார்க்குணர்த்த, அவ்வூரினர் பலரும் பார்த்ததிசயித்துப் பணிந்தார்கள். இவர் மனைவியாரான சிவகலையம்மையார் இவர் திருவடித்தியானத்தால் இவர்க்குமுன்னரே சிவகதியெய்தினர். பட்டினத்துப்பிள்ளையாரது உன்னத நிலையைக்கேள்வியுற்ற காவிரிப்பூப்பட்டினத்துள்ள உறவினார்முதலியபலரும் திருவொற்றியூரெய்தித் தரிசித்துப் பலவகைக் தொண்டு புரிந்து திருவருட்பெருஞ் செல்வராயினர். என்று உபமன்யுமுனிவர் பல முனிவர்களுக் குபதேசித்தமுறையே ஸ்ரீபவிஷ்யோத்தரபுராணத்தில் திருவிடைமருதூர் மஹாத்மியத்தில் சொல்லப்பட்டுள்ள பட்டினத்தடிகள் சரித்திரத்தைச் சூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளான சௌநகாதிமகரிஷிகளுக்குச் சொல்லினர்.

இதனைப் பக்திசிரத்தையோடு படிப்போருங் கேட்போரும் இம்மை மறுமைப் பலன்களை யெய்தி அழியாத சிவகதி யெய்துவார்கள்.

திருவெண்காட்டடிகளென வழங்கும்
பட்டினத்துப்பிள்ளையார் சரித்திரம்,
முற்றிற்று.

நேரிசை வெண்பா.

மண்ணாசை பொன்னாசை மாதாசை நீத்தருளை
உண்ணாடி யோற்றி யுயர்பதியில்—பண்ணாது
நாடிலிங்க மாய்ப்பட்டி னத்தடிக ளானதினம்
ஆடியுத்த ராடநா ளாம்.

இச்சரித்திர வசனமும் திருநக்ஷத்திர வெண்பாவும்
சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதரும்
சைவப்பிரசாரணருமாகிய,
ஈக்காடு-இரத்தினவேலுமுதலியாரவர்கள்
எழுதியன.

உ

திருச்சிற்றம்பலம்.

பதினொராந்திருமுறையுள்

பட்டினத்துப்பிள்ளையார்

திருவாய்மலர்ந்தருளிய

முதலாவது

கோயினான்மணிமாலை

மூலமும்

விருத்தியுரையும்.

கோயினான்மணிமாலை யென்பது-நான்குசொல் மூன்றுசந்தியாய் முன்னதாகிய கோயிலென்பது, "வருநத்திரிந்த பின்மாய்வுமென்றதால் நான்கென்னும் வரையறைப் பண்புப்பெயரோடு ஈறுதிரிந்து புணர்ந்து நான்காம் வேற்றுமைத் தொகையாகவும், பின்னதாகிய நான்கென்பது "எண்ணிறை" என்ற சூத்திரத்தால் ஈறுகெட்டு நான்என நின்று, பின்னதாகிய மணியென்பதுடன் பண்புத்தொகை நிலைத்தொடராகப் புணர்ந்தும், மற்றதாகியமணியென்பது, மாலையென்னுஞ் சொல்லுடன் சினைத்தற்கிழமைத்தாகிய ஆறும் வேற்றுமைத்தொகை நிலைத்தொடராகப் புணர்ந்து "எல்லாத்தொகையும்ஒருசொன்னடைய" என்பதால், அரவணிந்த மூர்த்தி, குன்றத்திருந்தான், என்பனபோல ஒருசொன்னீர்மைத்தாய்க் கோயிலுக்குக் கூறிய நான்காகிய மணியினதுமாலையெனப் பொருள்பட்டு, ஆறும் வேற்றுமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயராயிற்று. இத்தொடர்மொழியாகிய கோயினான்மணிமாலை யென்பது உலகத்தவர் பூணும் ஏனைய மணிமாலை, தன்னையணிந்தார்க்கு உடலிலுள்ள குற்றங்களைப்போக்கி அழகுசெய்வதுபோலாது, தன்னையணிந்தார்க்குப் பிறவிப்பெருங்கடலைத்தரும் மாசாகிய மும்மலங்களைப்போக்கி முத்தியங்கரையிற் சேர்க்கும் பேரழகுசெய்தலின் உவமையாகு

பெயராகவும், அதன்செய்யுட்கள் தொக்கநூலுக்குச் சினையாகு பெயராகவும் நின்றது. அன்றிக்கருவியாகுபெயரெனினுமாம். கோயில், என்பது சிதம்பரம், மணியென்னும் வடமொழிக்கு மண்யதேஸ்தூயதமணிः - என்பதால் ஸ்தோத்ரஞ் செய்யப் படுகிறது என்பது பொருள். மாலா எனும் வடமொழி "ஆவிறை யாம்" என்றதால் ஐகாரமாய் மாலையெனநின்றது. இனிக்கோயில் என்பது. பஃறொடைமொழி. இறைவன் எழுந்தருளியிருக்கும் ஏனைய தலங்களெல்லாங் கோயிலாயினும் இதனையே கோயிலென்றது என்னெனின் ? வாக்குமனோதீதராகிய சிவமூர்த்தி, பூரிபூரணராய்ச் சடசித்தெங்கும்நிறைந்துநின்றாரேனும் ஆன்மாக்களா லுணர்ந்து முத்தியடைத லருமையாகுமென்று திருவுளத்தடைத்து நமது புண்ணியத்தால் எண்ணிறந்த திருப்பதிகளில் எழுந்தருளினர். அவற்றுள், அறுபத்தெட்டுச் சிறந்த முத்தித்தலமாகக் கொள்ளப் பட்டன. அவற்றினும் ஆறுசிறந்தன. அவற்றுள் மூன்றுசிறந் தன. அவைதிருஆரூர், திருக்காசி, திருஅம்பலம். இவற்றில்முறை யே பிறந்தோரும் இறந்தோரும் தரிசித்தோரும் முத்திபெறு வர். பின்னும் "கண்ணுதலாடல் வெற்பிற் காரிகை காணுமிந்தப் புண்ணியமன்றெவர்க்கும்பொது" என்பதாலும், உபமன்னியர், வியாக்ரபாதர், பதஞ்சலி சயிமினி முதலியவர் பூசித்ததாலும், இது பிரமத்தானமாகிய இந்தத்தேகத்திற்குப் பிரமபுரமென்ப தொன் றுண்டு அதில் சூக்குமாதி சூக்குமமாய்த் தூலாதிதூலமாய் ஒரு ஆகாயமுண்டுஅதனையே சிவயோகிகள் தியானிப்பர். அதையொப்ப புறத்திலுள்ள பிரமாண்டத்திலும் பஞ்சபூதத்தலங்கள் உண்டு. அவற்றுள் பிரிதிவு காஞ்சி, அப்பு திருவானைக்கா, தேயு, திரு அண்ணாமலை, வாயு, திருக் காளத்தி, ஆகாயம், திருத் தில்லை. இவற்றுள் ஆகாயத்தலம் ஆதலாலும், இது கரணாதீதமாய், ஆன்மாக்களாகிய பசுக்களுக்கு அரிவரிதாய், உண்மையாய், சித் தாய் ஆநந்தமாய், பரிபூரணமா யிருத்தலாலும், இதற்கும் பிரம புரமென்றுபெயர். இதற்கு இப்பெயர்வந்ததற்குக் காரணத்தைப் பின்னுங்கூறுவோம் கமலத்தையொத்த உள்ளக்கமலத்தில் பிரம முறைகின்ற காரணத்தால் புண்டரீகபுரமென்று பெயர். அதை யொப்ப விராட்புருஷனுக்கு இதயமானதாலிதனையும் புண்டரீக புரமெனவும் பிரமபுரம் எனவுங்கூறுவர். பின்னும் மூவகையா ருயிர்களுக்கெல்லாம் அருயிராய் அசண்டமாய்க் குறைவில்லாது

எங்கணும் எஞ்ஞான்றும் நிறைந்து, வேதாகமங்களால் புகழப்பட்ட பகிரண்டத்துள் ஸ்ரீசிவமூர்த்தியை யல்லாது விசேடித்த பொருளொன்றுங் கிடையாது. உலகத்திற்குச் சூரியனையல்லாது விளக்கும்பொருள் வேறு கிடையாது. அதுபோல் சிவசூரியனையன்றிப் பொருள்வேறில்லை. சூரியன் எங்கும் பிரகாசித்தாலும் அதன்பிரகாசத்தை ஆகாயத்திற்காண்பதருமை, அப்பிரகாசம் மரங்களினும் மலைமுதலிய சடத்தில் அதிகமாய் விளங்கும். அம்மரமுதலியவற்றினும் கண்ணாடி முதலியவற்றில் காந்தி அதிகமாயிருக்கும், அதினும் படிகத்தில் அதிகவொளியுண்டு அதினும்சூர்யகாந்தக்கல்லில் ஒளியதிகமுண்டு. அதுபோல் மற்றெல்லாவிடங்களினும் சிதம்பரத்தில் அதிகம் விளங்குதலின் கோயிலெனப்பட்டது. பின்னு மிதனை ஆகாயத்தலமென்றது ஏற்றுக்கெனின் "பிரமம், ககனவுவமையால் சுகனாகாசமென்ப" என்றதாற்காண்க. இதற்குப் புண்டரீகபுரமெனவும் பிரமபுரமெனவும் பெரும்பற்ற புலியூர் எனவும், சிதம்பரம் எனவும் சுஷும்னுத்தலமெனவும், மன்றமெனவும், பொது எனவும், கோயிலெனவும் பதநிலையெனவும், பெயர். புண்டரீகபுரமென்றதற்கும், பிரமபுரமென்றதற்கும், பொதுவென்றதற்கும் முற்கூறினும். புலிக்கான் முனிவராகிய வியாக்ரபாதர் பூசித்துப் பேறடைந்ததால் பெரும்பற்றப் புலியூர் என்றது." பூத ஆகாயம்போற் சடமாகாது அருட் சித்தாய்ப் பொலிதலாலே யோதருடம் பரமானசபாபதியைச் சிதம்பரமென்றுரைத்தது" என்றதால் என்க. "நாடருநடுவினூடி நலங்கிளர் தில்லைநேர்போய்க், கூடுமெங்கதனின் மூலக்குழியுளதற்குத்தென்னர், மாடுறுமறைகள் காணுமன்றுமம்பலமொன்றுண்டங், காடுமென்றுமென்று மென்னையாளுடையவையன்" என்றபடி பூமிக்கு இடைகலைபின்கலையாகிய இரண்டுநாடிகளுக்குநடுவாகியசுஷும்னுநாடிக்கு முடிவிடமாதலால் இப்பெயர் பெற்றது. பொது என்பதற்கும் கூறினும். சங்காரவழக்கறுக்கிற அம்பலமாதலால் மன்றமெனவும், சிறந்தவனுகியஉயர்ந்தோன் இருக்கையாதலால்கோயில் எனவும், "அத்தன்பரதத்துவனித்தனடத்தமரும் பொதுவின்பெயர் மன்றமலம், சத்தும்பரிரண்மயகோச மகந்தனி புண்டரிகங் குகைவண் ககனஞ் சுத்தம்பரமற்புதமெய்ப்பதமச்சுழுநாவழி ஞானசுகோதயநற் சித்தம் பரமுத்திபரப்பிரமம்திகழுஞ்சபை சத்தி சிவாலயமே." எனக்கூறியதுகாண்க. பின்னும், ஓரிடத்தில்

கல்யாணமுண்டானால் எல்லாரிடத்துமுண்டான ஆபரணங்களெல்லாம் அவ்விடத்துக்கூடி,யக்கல்யாணத்தைச் சிறப்பித்தாற்போல இறைவனுடைய ஓர் கலையெங்குமுள்ள கோயில்களில் உலாவி அர்த்தயாமத்திற் பூரணமாயீண்டு ஒன்றுதலா லிப்பெயர்பெற்றது. ஆயினிதற்குத் திருக்கோயிலெனை அடைபுணர்க்காது கோயிலென்றது என்னையெனின்? அடைகொடுப்பிற் பிறகோயில்களுடனிதனை யொப்பித்ததாம்; ஆதலான் இதற்கடை கொடாமையே ஏற்றத்தை விளக்கிநின்றது. "அஃது திருவாயில், திருக்கோயில், திருவலகு, என்றவற்றிற்கு நாயகராகிய நாயனாரைத் திருநாயகர் என்றதுபோல என்க. பின்னுமிதனைத் தகராகாசமென்ப. அதற்குப்புண்டரீகபுரமென்றதே பொருள். இதனைக்கைவல்யோபநிஷத் "ஹ்ருத்புண்டரீகம் விரஜம் விசுத்தம் விசிந்த்யமத்யே விஶதம் விஶோகம் | அசிந்த்யமவ்யக்தம் அநந்தரூபம் சிவம் பிரசாந்தம் அமிர்தம் பிரம்மயோநிம் | ததாதிமத்யாந்தவிஹீநமேகம் விபும் சிதாநந்த ரூபம் அத்புதம் | உமாஸஹாயம் பரமேஸ்வரம் பிரபும் திரிலோசநம் நீலகண்டம் பிரசாந்தம் | த்யாத்வாமுநிர் கச்சதி பூதயோநிம் ஸமஸ்தஸாக்ஷிந்தமஸ: ப்ரஸ்தாத் | என்று பிரதிபாதிக்கிறது." பாளையுடைக்கமுகோங்கிப்பன்மாடநெருங்கியெங்கும், வாளையுடைப்புனல் வந்தெறி வாழ்வயற்றில்லைதன்னு, ளாளவுடைக்கழற் சிற்றம்பலத்தானடல் கண்டால், பீளையுடைக்கண்களாற் பின்னைப் போய்த்தொண்டர் காண்பதென்னே" எனவும் "குனித்தபுருவமும்கொவ்வைச்செவ்வாயிற்குமிழ் சிரிப்பும், பனித்தசடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறு,மினித்தமுடையவெடுத்த பொற்பாதமுங் காணப்பெற்றான், மனித்தபிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே" எனவும் பின்னும் வருவனவற்றாலும் அதன்பெருமைவிளங்கும். மற்றுமிதற்குற்றபுராணங்களில் இதற்குப்பலதிருப்பெயருண்டு அவற்றினை விரிவஞ்சிவிடுத்தனம். இனிநான்மணிமாலையென்பது "மன்னியவெண்பா கலித்துறை, மன்னர்பா முன்னியமுப்பானும் மணிமாலை - மன்விருத்தம், நாட்டியநாற்பது நான்மணிமாலையாம், ஈட்டியவந்தாதியா யெய்ந்து" என்றபடி வெண்பா, கலித்துறை, விருத்தம்,ஆசிரியப்பாமுதலியவை அந்தாதியாக நாற்பதுசெய்யுள்வருமாயின் நான்மணிமாலையாம்.

அவற்றுள் முதலில்வெண்பாவும் இரண்டாவது கலிப்பாவும் மூன்றாவது விருத்தப்பாவும் நான்காவது ஆசிரியப்பாவும்வைத்த முறைப்படி முறையே வெண்மை, பொன்மை, செம்மை பசுமை முதலிய மணிகளாலமைந்த மாலையென்பது பெறப்பட்டது இதனால் சத்துவமுதலிய முக்குணங்களால் மூவராகியும் அவர்க்கு அதீதப்பட்டுநின்ற முதற்கடவுளின் தன்மை குறிப்பிக்கப்பட்டது. மலமல்லதாரணை என்பதால் மாலையென்பதற்குத் தரிக்கப்படுவதென்றும், சோலையைத் தருவதென்றும் பொருள்.

நேரிசைவெண்பா.

க. பூமே லயனறியா மோலிப் புறத்ததே
நாமே புகழ்ந்தளவை நாட்டுவோம்—பாமேவு
மேத்துகந்தான் றில்லை யிடத்துகந்தா னம்பலத்தே
கூத்துகந்தான் கொற்றக் குடை.

(பொருள்.) பாமேவும் - (உண்மைநாயன்மார்களால் விரும்பிப்புகழப்பட்ட)செய்யுட்களிலுள்ள, ஏத்து உகந்தான்-துதியை விரும்பினவனும், தில்லை இடத்து - திருச்சிற்றம்பலமென்னுங்கோயிலை, உகந்தான் - விரும்பினவனும், அம்பலத்தே - (ஞானாகாசமாகிய) மன்றத்தில், கூத்துஉகந்தான் - (ஆனந்த) நடனத்தை விரும்பிநடிப்பவனுமாகிய (நடராஜமூர்த்தியின்) கொற்றக்குடை உயர்ந்ததிருக்குடை, பூமேலயனறியா-தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமனாலும் காணவொண்ணாத, மோலிப்புறத்தது - திருமுடியின் புறத்திலுள்ளது. அளவை நாமேபுகழ்ந்து - நாமே (அக்குடையின்) பெருமை அளவையினை, வெளியிட்டு, நாட்டுவோம் - தாபிப்போம். என்றவாறு.

(விசேடவுரை.) தந்திசைத்தன இசையெச்சம். பூமேலயனறியாமோலி-எனின் எவராலுந்துதிக்க அறியாதுஅபாவமாய் விடுமன்றோ வெனின் அற்றன்று, ஆணவாதிபந்தப்பட்ட ஆன்மாக்களால் அறியப்படாததென்பதுகருத்து. "அடியுமுடியுமிகலிபோற்றி" என்றும். "நகுவாய்மலர்மேலயனு நாகத்தணையானும், புகுவாயறியார் புறநின்றோரார்" என்றும், "முந்தியமுதனடுவிறுதியுமானாய் மூவருமறிகிலர்யாவர் மற்றறிவார்." என்றும், எண்ணில்பல்கோடி திருவுருநாமமேர்கொண்முக்கண்முகமியல்பு,மெண்ணில்பல்கோடியெல்லைக்கப்பாலாய் நின்றைஞ்ஞூற்றந்தணரேத்து,மெண்ணில்பல்கோடிகுணத்தரோர்வீழியிவர் நம்மையாளுடையாரோ." எனவும் கூறிய திருவாக்குகளானறிக. பூ-என்பது தாமரை, அது பூக்களில் சிறந்தமைபற்றி ஏனைப்பூக்களின் விசேடந்தோன்ற கூறிற்றும். என்னை விசேடமெனின்பிரமனும், கலைமகளும், மாமகளுமாகிய மூவர்க்குமிருக்கைநோக்கியேயாம். இச்சொல்மங்கலமுதன்மொழியாய், முதனிலைத்தொழிலாகுபெயராய்ப் பொருளையுணர்த்தி நின்றது. மேல்

என்பதுஏழனுருபு.மௌளி:என்னும்வடமொழிமோலிஎன்றதற்பவமாயிற்று.
புறத்ததுஎன்பதில்சாரியை இடப்பொருளுணர்த்திற்று. நாமேபுகழ்ந்து என்ப
தற்கு நாமாபுகழ்ந்து என எதிர்மறையாப்பொருள் கூறினுமாம். ஏகாரம் முற்
கூறியபொருளெனின்தேற்றமும்,பின்னதாகக்கொள்ளின்எதிர்மறையாகவுங்
கொள்க. நாமேபுகழ்ந்து ட்டுவோமென்றது நுதலிப்புகுதல். அது "செம்
மனக்கிழவோ னன்புதாவென்றுன்சேவடிபார்த்திருந்தலச, வெம்மனக்குடி
கொண்டிருப்பதற்கியானுமொன்றுடையடிமைதான்யாதே"எனவும், சொன்ன
வின்முறை நான்காரண முணராச்சூழல்புக்கொளித்த நீயின்று, கன்னலின்
மனத்தென் கண்வலைப்படுமிக்கருணையிற்பெரிய தொன்றுளதே" எனவும்,
கூறியதிருவாக்குகளாலுணர்க. நாம் என்பது தனித்தன்மைப்பன்மை. அள
வைநாட்டுவோம் எனின் உரையின் வரையும் பொருளினளவும் கடந்ததைக்
கூறின் உலகப்பொருள்களுடன் ஒன்றுமெனின் அது என்மனங்கோயிலாக்
கொண்டு இருக்குநிலைமையினை அடங்காப் புகழ்ச்சியால் சிறிது கூறுகின
றேன் என்றதாம். அளவை என்பது, ஐவகையளவையானாகிய பிரதிஞ்ஞை,
ஏது, திருட்டாந்தம், உபநய, நிகமனத்தால்திடம்பண்ணுகையென்பது
மாம். பா, முதனிலைத்தொழிலாகுபெயர். "பாவிநடத்தலிற்பாவெனப்படுமே"
என்றார் பிறரும். ஏத்து, அவ்வாகுபெயர் பாமேவுமேத்துகந்தான் என்றது,
சிவமூர்த்திக்கு ஏனையதுதிகளினும் அடியவர்பாமாலையில் விருப்பமென்பது
"பொய்ம்மையாளரைப் பாடாதேயெந்தைபுகலூர் பாடுமின்புலவீர்காள்" என
வும், கூடவேடத்தராகிக்குழலிலென், வாடியூனைவருத்தித்திரியிலென்,ஆடல்
வேடத்தனைப் பலர்கூத்தனைப், பாடலாளர்க்கல் லாற்பயனில்லையே"என்னுந்
திருவாக்குகளாலும் "படியிலாநின்பாட்டிலாரூரனவிருப்பன் பரமனென்ப
தடியனேனறிந்தனன்"எனப்,பிறர்கூறியதனானுமறிக. தில்லையிடத்துகந்தான்
என்பதற்குக் கோயிலுக்குக் கூறியதையறிக. அம்பலத்தே கூத்துகந்தான்
என்பதற்கு அடியவர் மனமாகிய ஆகாயத்தை யிடமாகக்கொண்டானெனினு
மாம். 'உள்ளமாயுள்ளத்தே நின்றாய் போற்றியுகப்பார்மனத்தென்று நீங்காய்
போற்றி" என்றதனாற்காண்க. கூத்து, முதனிலைபெற்றதொழிற்பெயர்.இது
பஞ்சகிருத்ய நடனம் "ஆடும்படிகேணல்லம்பலத்தானையனே,நாடுந்திருவடி
யிலே நகரம் - கூடு, மகரமுதரம்வளர்தோள் சிகரம், பகருமுகம்வாமுடியப்
பார்.எனவும் ஓங்காரமேநற்றிருவாசியுற்ற தனினிங்காவெழுத்தே நிறைசுட
ராம் - ஆங்கார, மற்றாரறிவரணியம் பலத்தானாடலிது, பெற்றார் பிறப்பற்,
றார்பின்" எனவும், தோற்றந்துடியதனிற்றோயுந்திதியமைப்பிற், சாற்றியிடும
ங்கியிலே சங்காரம் - ஊற்றமாய். ஊன்றுமலர்ப்பதத்திலுற்றதிரோதமுத்தி
நான்றமலர்ப்பதத்தேநாடு." எனவும், "மோனந்தமாமுனிவர் மும்மலத்தை
மோசித்துத், தானந்தமானிடத்தேதங்கியிடு - மானந்த, மொண்டருந்தி நின்
றாடல்காணுமருண்மூர்த்தியாய்க்,கொண்டதிருவம்பலத்தான் கூத்து" என்னு
மான்றோர் வாக்குகளாலறிக. நிஷ்களனாகிய, இறைவன் ஆன்மாக்களினநு
க்ரகநிமித்தம் சகளவுருக்கொள்ளுமிடத்து என்று மந்யாநிலைமைக்காகிய

அறம் விடையாகவும் குடையாகவுமிருந்து இறைவனைத்தாங்கியுங் கவித்து நீங்காதுநிற்றலின் கொற்றக்குடை என்றார். புறத்ததே என்பதிலுள்ள ஏகாரத்தை வியப்பெனினுமாம். அயனறியா என்பதில் "ஒருமொழியொழிதன்னினங்கொளற்குரித்தே யென்பதால்" மாலுமிந்திரன் முதலிய ஏனைப்பசுக்களுக்கு மறியாதான் என்பது பெறப்பட்டது. அயன் என்பதில் உயர்வுச்சிறப்பும்மை தொக்கது. இது பாடாண்பாட்டில் எத்திசையும் புகழ்பெருக வீற்றிருந்தான் குடைபுகழ்ந்தது. இங்ஙனம் புகழ்தற்கு ஏதுவாயது நிழல் அந்நிழல்மூன்றுலகமும் நிழற்றியதாகக் கூறுதலும்பட்டு அடியவர்களைக்காத்தற்கு அறிகுறியாக நிற்றலின் என்க. இது இருவிகற்பத்தானடைந்த இருகுறணேரிசைவெண்பா அடிதொறுமிரண்டாமெழுத் தொன்றி வரத்தொடுத்தமையால் அடியெதுகைத்தொடை. இது பிரமன் சிவமூர்த்தியின் திருமுடிதேடியறியாது அலமந்த உயர்ந்த சரிதையை யுட்கொண்டிருத்தலின் வீறுகோளணி, இதனை வடநூலார் உதாத்தாலங்காரமென்ப.(௧)

கலித்துறை.

௨. குடைகொண்டிவ் வையமெலாங் குளிர்வித் தெரிபொற் றிகி
ரிப் படைகொண் டிகறெறும் பார்த்திவ ராவதிற்பைம் பொற்
கொன்றைத், தொடைகொண்ட வார்சடை யம்பலத்தான் றொண்
டர்க் கேவல்செய்து, கடைகொண்ட பிச்சைகொண் டுண்டிங்கு
வாழ்தல் களிப்புடைத்தே.

(பொருள்.) குடைகொண்டு-வெண்கொற்றக்குடை நிழலால், இவையம் எல்லாம் - இந்த வுலகங்களையெல்லாம், குளிர்வித்து - குளிர்ச்சியடையச்செய்து, எரி - பிரகாசிக்கும், பொன் - அழகிய, திகிரிப்படைகொண்டு-சக்கிரத்தால், இகல்தெறும் - பகைவரைவருத்துகின்ற பார்த்திவராவதில் - அரசராதலினும், பசுமைபொன்கொன்றை - பசுமையாகிய அழகியகொன்றைமலரின், தொடைகொண்ட. - மாலையையணிந்த, வார்சடை - நீண்டசடைமுடியையுடைய, அம்பலத்தான் - திருச்சிற்றம்பலத்திலெழுந்தருளியிருக்கும் நடராஜமூர்த்தியின், தொண்டர்க்கு - அடியவர்க்கு, ஏவல்செய்து (ஏவிய) தொழில்களைச்செய்து, கடைகொண்ட - (அவரிடத்துண்ணாது) வீடுகளின்கடைவாயில்களிற்சென்று அவர்களிடக்கொண்ட, பிச்சைகொண்டு - பிச்சையாகிய அன்னத்தை, உண்டு - புசித்து, இங்கு - இவ்வுலகத்து, வாழ்தல் - உயிர்வாழ்ந்திருத்தல், களிப்புடைத்து- மகிழ்ச்சியினை விளைப்பதாகும். எ - று.

(வி - ரை.) குடைகொண்டு என்றது, அரசனது ஒழுக்கத்தைக்குடைமேலிட்டுக் கூறியதாம். இது ஓர் உபசாரம். இங்ஙனம் புனைந்துரைத்தற்குக் காரணமாயது நிழலாம் அந்நிழல் உலகுடனிழற்றியதாகக் கூறப்பட்டது குடிகளைப்புறங்காத்தற்காம். வையமெலாம், என்றது ஒருமையிற் பன்மைவந்தவழுவமைதி. முதலிரண்டடிகளிலுள்ள கொண்டென்பதிரண்டும் மூன்றாவத

ன்சொல்லுருபுகள். குளிர்வித்து என்றதால் நிழல்யென்பது வருவிக்கப்பட்டது. எரிபொற்றிகிரிஎன்பதற்குப்பொன்போல்விளங்கும் தீப்பொறியுமிழுந் திகிரிஎனினுமாம். திகிரி,வட்டம்.அது ஆகுபெயராய் வட்டமாகியஆயுதத்தையுணர்த்திநின்றது.இகல். பண்பாகுபெயர். திகிரிப்படை, இருபெயரொட்டுப் பின்மொழியாகுபெயர் படை, (படுத்தல்) கொல்லுதலென்னும் பொருளது. பிரத்விக்குத்தலைவனாதலால் பார்த்திவன்என்றுபெயர். பைம்பொற்கொன்றையென்றதால், பசுமைவாடாமையையும் பொன்மை நிறத்தினையும், செம்மை கருமையாகிய பிறிதினியைபு நீக்கத்தையும் உணர்த்திநின்றது, ;இது திருஅடையாளமாலையாதலால். தெய்வத்தன்மையால் வாடாமை இயற்கையாயிற்று. இறைவனுக்கு நிறம்பொன்மையாக வேதங்கூறுதலின் கொன்றையும் அந்நிறமாகவே கூறப்பட்டது. ஏனைய சிவந்த கறுத்த கொன்றைகள் தாமதகுணத்தவாதலால் தாமதகுணமுள்ள வேறு தேவர்களுக்காம். "வில்வமுடன் கொன்றைமலர் சங்கரர்க்கு நேயம்." "மாதவிகுருந்துவாகைமதயாணிகருங்காக்கொன்றை, சீதளமுருக்குச் செம்பட்டலரியே செம்பரத்தை, கேதகை கருந்துழாய் செநதிலகமும்கேசவற்காம், நாதனுக்காகா விந்த நறுமலரலகைக்காமே." என்பனவற்றாற்காண்க. தொடை, தொடுக்கப்பட்டது எனும்பொருளில் ஐ செயப்படுபொருள் விகுதி. சடை, ஜடாஸங்காதே என்றதாதுவால் ஒன்றுடனொன்றுகூடிக் கொண்டிருப்பதென்பது பொருள். அம்பலத்தான் தொண்டர், சிவனடியவர். அவர்க்கு ஏவல்செய்வது குறிப்பறிந்து வேண்டியவுதவல் "ஈசனெந்தைபிரானடிக்கீர்ந்துணர், வாசநாண்மலரிட்டு வணங்குவோர், மாசிலாச்சிரமத்தின்வருணத்திற், பேசிலாங்கவர் போற்றப் பெரியரே" ஆசறுத்துவிளக்குமருட்சிவ, தேசிகர்ப்பணிவோர் சிவதொண்டரைப், பூசனைக்குரியாரெனப்போற்றுவோர், ஈசனெப்பரென்றேத்துவரெம்மனோர்." "குணமிலாராயினுங் குலீனராயினும், மணமலி கருங்குழன் மகளிராயினும், பணமணியரவணைப் பரமனன்பரே, கணமலியுலகெலாம்பரவுங் காட்சியார்" ஒழுக்கமே புரிந்தோனுதலதனைவிட்டொழிந்தோனுதல், இழுக்குஞ்செய் மூர்க்கனுதல் பண்டிதனுதலெண்ணில், பழிப்பருஞானந் தன்னின் முயல்பவன் பணியத்தக்கான், தொழத்தகு ஞானியென்றுசொல்லவேண்டுவதுமுண்டோ." எனவும் வருவனவற்றாற் காண்க. கடைகொண்ட பிச்சையென்பதற்கு, இழித்துக்கூறத்தக்க பிக்ஷைஎனினுமாம். அது கரவாதுவந்தீயுங்கண்ணன்னார் கண்ணுமிரவாமை கோடியுறும்" ஆவிற்குநீரென் றிரப்பினும் நாவிற், கிரவினிளிவந்ததில்" எனவும், பிறவும் வருவனவற்றாற் காண்க. "நெடிலடிநான்காய் நிகழ்வது கலித்துறை." ஆதலின் இச்செய்யுள் கலித்துறை. இது எரிந்திலங்குஞ்சடைமுடிமுனிவர் புரிந்துகண்டபொருண்மொழிந்தமையால் பொருண்மொழிக்காஞ்சி. இது அரசனுயிருத்தலினும் அடியவர்க்கேவல்செய்தல் களிப்புடைத்தென வேறுபடுத்தலால்வேற்றுமையணியின்பாற்படும்.

(உ)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

௩. களிவந் தமுதூறிக் கன்மனத்தை யெல்லாங்
கசியும்படி செய்து கண்டறிவா ரில்லா
வெளிவந் தடியேன் மனம்புகுந்த தென்றால்
விரிசடையும் வெண்ணீறுஞ் செவ்வான மென்ன
வொளிவந்த பொன்னிறமுந் தொன்னடமுங் காட்டு
முடையா னுயர்தில்லை யம்பல மொன்றல்லா
லெளிவந் தினிப்பிறர்பாற் சென்றவர்க்குப் பொய்கொண்
டிடைமிடைந்த புன்மொழியா லிச்சை யுரையோமே.

(பொ-ள்.) களிவந்த - ஆநந்தமேலிட்ட, அமுது - அமுதமானது, ஊறி - என்மனதில்சுரந்து, என்கல்மனத்தைஎல்லாம் - எனது கல்லை யொத்த மனது முழுதும், கசியும்படிசெய்து - இளகியுருகச்செய்வித்து கண்டறிவார் இல்லா - (அப்பதிப்பொருளின்தன்மை) இத்தன்மையதுஎன்று ஊனக்கண்ணாலும் மனக்கண்ணாலும் கண்டு அறிபவர்களில்லா, வெளி - பரமாகாசமாகிய அப்பெருவெளி, வந்து - (அதுதானே இச்சைகொண்டு) எழுந்தருளி, அடியேன் - தனக்கு அடிமைப்பட்ட என்னுடைய, மனம்புகுந்தது - மனமென்னும் இடத்தைக் கோயிலாகக்கொண்டது, என்றால் - எனின், விரிசடையும் - (திக்குகளெட்டினும்) விரிந்தசடையையும், வெள்நீறும் - (சுத்தசத்துவத்தி னறிகுறியாகிய) வெள்ளிய திருநீற்றினையும், செவ்வானம் என்ன - சிவந்தவானத்தைப்போல, ஒளிவந்த - பிரகாசங்கொண்ட, பொன்நிறமும் - பொன்னிறத்தையும், தொல்நடமும் - தொன்றுதொட்டு (ஆன்மாக்கள்பொருட்டுச்செய்கின்ற) திருநடனத்தையும், காட்டும் - அடியவர்பொருட்டு அநவரதம்) தரிசிப்பிக்கின்ற, உடையான் - எல்லாமுடையசிவமூர்த்தி, (எழுந்தருளியிருக்கும்) உயர் - (எல்லாத்தலங்களினும்) உயர்ந்த, தில்லை அம்பலம் ஒன்றுஅல்லால் - திருத்தில்லையாகிய திருச்சிற்றம்பலம் ஒன்றைஅல்லாமல், இனியாம் - இனியாம் எம்வாணாளளவும், பிறர்பால்சென்று - உலகத்தவரிடஞ் சென்று, எளிவந்து - எளிமைகொண்டு, அவர்க்கு - அவர்மேல், பொய்கொண்டு - பொய்யால், இடைமிடைந்த - நடுவிற்கலந்த, புல்மொழியால் - சிறுசொற்களால், இச்சை உரையோம் - இச்சையான செய்யுள்பாடோம். (எ-று.)

(வி-ரை.) ஆநந்தவுருவமாகிய சிவமூர்த்தியை யுள்ளக்குகையினூன்றி யுற்றுநோக்குவார்க்குப் பரமானந்தம் விளைதலின் களிவந்த என்றார். இதனை "பயிலுநர்க்குக், கண்ணுமாநந்தங் கனிவாயுமாநந்தம், வெண்ணவதனமு மாநந்தந், தண்ணறல்சேர், வேணியுமாநந்தம் வியன்மார்பு மாநந்தம பூணுமாநந்தம் புயங்கரந்தான், நாணுடையும், ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம், ஆனந்தமெவ்வுறுப்புமானந்தம்." எனும் அன்புடைவாசகாலறிக. சிவஞான யோகப்பயிற்சியிற்பல்காலுநதூங்குவோர் சிதாகாசமாகிய பெருவெளியின

ஆநந்தத்தை யனுபவிக்கையில் சுரக்குமமுத தாரையை மாந்தி இன்புறுவராதலின் அமுதூறியென்றார். அன்றிக் களிவந்த அமுதமாகிய சிவமூர்த்தி என்னலுமாம். என்னை அமுதமாமாறெனின் "மையணவுங்கண்டத்தெம் வளர்சடையென்றாரமுதை" எனவும், "அங்ஙனம் வந்தெனையாண்ட வளர்சடையென்றாரமுதை" எனவும், "மடலின் மட்டே மணியே யமுதேயென் மதுவெள்ளமே." எனவும், "அப்பனே யெனக்கமுதனே" எனவும், "பருகாவமிர்தமாம்" எனவும், "ஏதானமிர்தஸ்ய நாமதேயானி" என்னுஞ்சாபாலோபநிஷத்வசநங்களாலுமறிக.

தாமே செய்யாது சிவசத்தி பிரேரேபணையாற் செய்தலின் செய்து என்பதற்குப் பிறவினையாகப் பொருள்கூறப்பட்டது. மனத்தையெல்லாம், ஒருமைபன்மைமயக்கம், புறக்கரணங்களாகிய மெய் வாய் கண் மூக்கு செவியெனப் பெயர்த்த உறுப்புகளின் தொழில்களாய பரிசரசரூபகந்த சத்தங்களாலும் அகக்கரணங்களாகிய மனம் புத்தி சித்தம் அகங்காரங்களாலும் அறியப்படாது உள்ளத்தால் அநுபவிக்கப்படுவதாதலின் கண்டறிவார் இல்லா என்றார். காணுதல் அறிதலாகிய தொழில்களிரண்டும் உடலுக்குள்ள முக்கியத்தொழில்களாதலின் அவை கூறவே "ஒருமொழியொழிதன்னினங் கொளற் குரித்தே" என்பதனால் ஏனையவுங்கொள்ளப்பட்டன. வெளியென்றது, புத்தியாவது அந்தக்கரணத்திலொன்று பெயர் ஜாதி முதலான பேத ஞானம் அந்தக்கரணத்திலுண்டாகும். அந்தக்கரணம் பாசமாதலால் விகற்பமின்றிச் ஸ்வரூபமாத்ரமான சிவஞானத்தை அறியமாட்டாது. ஆதலால் அமனஸ்கராய் வியோம வ்யாபிக்கு அப்பாற்பட்டவராய் நிஷ்களராய் இருக்கும் பரமசிவன் அந்த இடத்தில் வெளியாகக்கூறப்பட்டனர். அதனை "வெளியில் வெளியன்" எனவும் "முப்பாழும் பாழாய் முடிவிலொரு சூனியமாய்" எனவும், "ஆகாசவண்ணனமரர் தலக்கொழுந்து, ஏகாசமாசுணமிட்டங்கிருந் தானாகாசவண்ணமமர்ந்துநின்றப்புற,மாகாசமாயங்கிவண்ணனுமாமே." "புறத்துளாகாசம் புவனமுலகம், அகத்துளாகாசமெம் மாதியறிவு, சிவத்துளாகாசஞ்செழுஞ்சுடர்ச்சோதி, சகத்துளாகாசந் தானஞ்சமாதியே." எனவும் அருளிய திருவாக்குகளாலறிக.

தானே இச்சைகொண்டு என்னைப்பணியாளாக்கியென்னுள்ளத்தை யிடமாக்கிக்கொண்டதென்பார் புகுந்ததென்றார். விரிசடை, வினைத்தொகை, பண்புத்தொகைநிலைத்தொடருமாம். திக்கெட்டுமே இறைவனுக்குச் சடையாகக்கூறுதலின் விரிசடையென்றார். இதனை "கலங்குபுனற்கங்கை யூடாடலாலும், இலங்குமதியியங்கலாலும் - நலங்கொள், பரிசுடையானீண் முடிமேற் பாம்பியங்கலாலும், விரிசடையாங் காணில் விசும்பு." எனும் அம்மை திருவாக்காலறிக.

வெண்ணீறு, பிறிதினியைபு நீக்கிய அடை, செம்மை, பசுமை, பொன்மைமுதலியநீக்கிநின்றது; அவைகூடாவாதலின். அஞ்ஞானத்தையும்

பிறவியையும் நீறுசெய்தலின்நீறுகாரணப்பெயர். செம்மைவானம்,ஈறுகெட்ட பண்படி முன்னின்ற மெய்திரிந்து நின்றது. வானம், என்பதில் அம் சாரியை என்ன, என்பது உவமை இடைச்சொல்.பொன்னிறமென்பதற்கு,உள்ள பிரமாணங்கள் விரிதலின்ஈண்டுவரைந்திலம். மற்றோரிடம் வரைவாம்.உடையான், குறிப்புவினைப்பெயரீண்டு இறைவன் எண்குணங்களிலொன்றாகிய முற்றுமுடைமையை விளக்கிநின்றது. பிறர், இடைச்சொல் லடிப்பெயர் உலகத்துள்ளாரை உணர்த்தியது. பொய்சொண்டிடைமிடைந்த புன்மொழி என்றது "நலமிலாதானை நல்லனேயென்று நரைத்தமாந்தரை யிளையனேயென்றுங்,குலமிலாதானைக் குலவனேயென்றுகூறினுங் கொடுப்பாரிலைபுறமெலாம் வெறிகமழும் பூம்புகலூரைப் பாடுமின்புலவீர்காள்,அலமராதமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே." என்றதாலுணர்க. இது எண்சீர்த்தாய்க்கழிநெடிலடி நான்கால்முடிந்தமையால் எண்சீர்க்கழிநெடிலடிலாசிரியவிருத்தம். "கழிநெடிலடியே கசடறக்கிளப்பின் அறுசீர்முதலாவை யிரண்டேறு, வருவன பிறவும் வகுத்தனர்கொளலே." என்றதுகாண்க. அவர்க்கு என்பதில் நான்கனுருபு இடப்பொருளதாதலின் உருபு மயக்கம். உம்மைகள் எண்ணுப்பொருளன. இதுவாகையுள் பொருளொடுபுகறல். இதுமனிதரைப் பாடுதலையொழித்து இறைவனைப்பாடவேண்டுமென்பதால் ஒழிப்பணி ஆம். (௩)

இணைக்குறளாசிரியப்பா.

௪. உரையின் வரையும் பொருளி னளவு
மிருவகைப் பட்ட வெல்லையுங் கடந்து
தம்மை மறந்து நின்னை நினைப்பவர்
செம்மை மனத்தினுந் தில்லைமன் றினுநட
மாடு மம்பல வாண நீடு
குன்றக் கோமான் றன் றிருப்பா வையை
நீலமேனி மாதிருத் தங்கை யைத்
திருமணம் புணர்ந்த ஞான்று பெருமநின்
றாதவிழ் கொன்றைத் தாரு மேதமில்
வீரவெள் விடைக் கொடியும் போரிற்
றழங்குந் தமருகப் பறையு முழங்கொலித்
தெய்வக் கங்கை யாறும் பொய்தீர்
வரையாக் கவியெனு மாணையு நிரைநிரை
யாயிரம் வகுத்த மாயிரு மருப்பின்
வெண்ணிறச் செங்கண் வேழமும் பண்ணியல்
வைதிகப் புரவியும் வான நாடு
மையறு கனகமேருமால் வரையுந்

செய்வயற் றில்லை யாகிய தொல்பெரும்
பதியுமென்
றொருபதி னாயிரந் திருநெடு நாமமு
மூரிமையிற் பாடித் திருமணப் பந்தரு
ளமரர் முன்புகுந் தருகு சாத்திநின்
றமர்பெய ரெழுதிய வரிநெடும் புத்தகத்
தென்னையு மெழுத வேண்டுவ னின்னரு
ளானை வைப்பிற் காணொணு வணுவும்
வானுற நிமிர்ந்து காட்டுங்
கானில் வானுளம்புங் கருட னாதலினே.

(பொ - ள்.) உரையின் வரையும்-சொல்லினளவும், பொருளினளவும்-பொருளினளவும், (ஆகிய) இருவகைப்பட்ட-இரண்டு விதமாகிய, எல்லையும் கடந்து-அளவைக்கடந்து, தம்மைமறந்து-தங்களைமறந்து பரவசமாகி, நின்னை நினைப்பவர் - உன்னை தியானிப்பவர்களின், செம்மைமனத்தினும்-மாசில்லா மனக்கோயிலினும், தில்லைமன்றினும் - திருச்சிற்றம்பலத்தும், நடம்ஆடும் - திருநடனஞ்செய்தருளும், அம்பலவாண - பொன்னம்பலவனே; பெரும - எம்பெருமானே! நீடு - உயர்ந்த, குன்றக்கோமான்தன் - மலையரையனுடைய, திருப்பாவையை - குமரியாகிய பிராட்டியை, நீலமேனி - நீலநிறங்கொண்ட வுருவினையுடைய, மால் - திருமாலின், தங்கையை - பின்பிறந்தாளை, திருமணம்புணர்ந்தஞான்று - நீ திருமணங்கொண்ட காலத்தில், தாது அவிழ் - மகரந்தம் விரிந்த, நின்கொன்றைத்தாரும் - உனது கொன்றைமலர்மாலையும்; ஏதம்இல் - குற்றமில்லாத, வீரம் - வீரத்தினையுடைய, வெள்விடைக்கொடியும் - வெண்மையாகியஇடபக்கொடியும், போரில் - போரையொப்ப, தழங்கும் - ஒலிக்கின்ற, தமருகப்பறையும் - டமருகமென்னும் பறையும், முழங்கு - சப்திக்கின்ற, ஒலி - ஓசையினையுடைய, தெய்வக்கங்கையாறும் - தெய்வத்தன்மையுடைய கங்காநதியும், பொய்தீர் - பொய் இல்லாத, வரையாக்கலியெனும் - நீக்கக்கூடாத வேதாகமங்களென்னும், ஆணையும் - திரு ஆணையாகிய செங்கோலும், ஆயிரம்-ஆயிரமாக, நிரைநிரை - முறைமுறையே, வகுத்த - வகுக்கப்பட்டிருக்கிற, மாஇருமருப்பின்-பெரிய கொம்புகளையும், செம்கண் - சிவந்தகண்களையும், வெண்நிறவேழமும் - வெண்மையாகிய நிறத்தினையுடைய (ஐராவணம் என்னும்) யானையும், பண் இயல் - பண்ணினிலக்கணத்தையுடைய, வைதிகப் புரவியும் - சதுர்வேதமாகிய குதிரைகளும், வானநாடும் - உயர்நிலையாகிய தேவர் இருக்கையும், மைஅறு - குற்றமற்ற, கனகம் - பொன்னாகிய, மால் - உயர்ந்த, மேருவரையும் - மேருமலையும், செய்வயல் - கழனிகள்சூழ்ந்த, தில்லையாகிய - திருச்சிற்றம்பலமாகிய, தொல்பெரும்பதியும் - பழமையாகிய பெரிய இருக்கையும், என்று - என்று உனது புகழை யெடுத்தேத்தி, (அன்றி) ஒருபதினாயிரம்-

ஒப்பற்ற பதினாயிரமென்னுங் கணக்கினையுடைய, திருநெடு நாமமும்-உனது சிறந்த திருப்பெயர்களையும், உரிமையிற்பாடி - அன்புடன் துதித்து, திருமணப்பந்தருள் - திருக்கல்யாணப்பந்தலில், அமரர் - தேவர்கள், முன்புகுந்து- நான்முன்,நான்முன், என நுழைந்து, அறகு சாத்தி - அறுகமாலை சூட்டி, நின் தமர் பெயர் எழுதிய - உனது சுற்றத்தவராகிய அடியவர்களின் திருப்பெயர் வரைந்த, வரி - எழுத்துக்களையுடை, நெடு புத்தகத்து - பெரிய புத்தகத்தில், என்னையும் எழுதவேண்டுவன் - என் பெயரையும் எழுத வேண்டுகின்றேன், நின் அருள் - உனது சிவசத்தி, ஆணைவைப்பின் - அடியேன்மீது திருஆணை சுமத்தில், காண் ஒணா - கண்ணுக்குப்புலப்படாது சூக்ஷ்மதமமாயிருக்கும், அணுவும்,பரமாணுவும், வான் உற - சுவர்க்கத்தை அளாவ, நிமிர்ந்து காட்டும் - ஓங்கித் தனது தூலதமமாகிய உருவத்தைத்தெரிவிக்கும், கானில் காட்டிலுள்ள, வால் நுளம்பும் - வெண்கொசுகும், கருடன் - கருடனாகும், ஆதலின் - ஆதலால், (என்க). (எ - று.)

(வி - ரை) சுத்தாசுத்த மாயைகளிலிருந்தே அதிசூக்குமை, சூக்குமை பைசந்தி, மத்திமை, வைகரியாகிய வாக்குகள் தோற்றினவாதலாலும் அம்மாயை, இறைவன் சத்தி பலகூறுகளினேகதேசமாதலாலும் அவற்றிற்கதீதப்பட்டவனாதலாலும் உரையின்வரையும் எனவும், அவ்வித சுத்த சுத்தாசுத்த அசுத்தமாயைகளினின்று தோன்றின பொருள்களும் அவ்வகைப்பட்டன ஆதலால் பொருளினளவும் எனவும் கூறினார். சொல்லும் பொருளும் ஒன்றுடன் ஒன்று இயைந்தனவாயினும் அவை நீங்கியும் நீங்காதுமிருத்தலின் இரண்டாகக்கூறினர். பேராநந்தமாகிய கடலில் மூழ்கி யச்சுவாநுபவத்தை யநுபவிக்கையில் உலகமும் உடலும் நித்திரையில் கைக்கொண்ட பொருள் போல் நழுவிநிற்குமாதலில் தம்மை மறந்தென்றார். அம்மனம் நிர்மலமானதாதலின் செம்மைமனம் எனவும், கூறினார்.

குன்றங்களுக்குத்தலைவனாகிய மலையரையன்செய்ததவப்பயனால் இறைவி புதல்வியாகத்திருஅவதாரஞ்செய்ததனால் குன்றக்கோமான்றன் றிருப்பாவையென்றார்.பிரதிமை எனும்வடமொழி பாவையெனச்சிதைந்தது. பொருள் ஒன்றுக்குப்பிரதியாக நிருமிக்கப்பட்டது.கோமான்,என்பதில்மகான் என்பது மானென்று மருவியது தன் என்பது சாரியை. இறைவனுக்குள்ள சக்திகளில் மால் முதற்சத்தியெனவும் பின் பார்வதி பிராட்டியென்றும் புராணங்கள் கூறுதலால் நீலமேனி மால் திருத்தங்கையென்றார். இறைவனது மூலசக்தி விஷ்ணுமூர்த்தி என்றவாறென்னெனின் உலக முதற்சிருட்டியில் அநாதி புருஷனாகிய சிவமூர்த்தி, அவ்யக்தமென்னும் பிரகிருதி சத்தியிடம்,தன் வீரியத்தைப் பதிக்க அது கனகாண்டமாய் அதினின்று சராசரங்களாகிய உலகந் தோன்றின. ஆதலால் கூறியதாமென்க. "மூவாமுகுந்தற்கிளையவளே" என்றார்பிறரும்.

திருப்பாவை', யென்னுமிடத்தும் திருத்தங்கை என்னுமிடத்தும், ''திரு, கண்டாரல் விரும்பப்படும் தன்மைநோக்கம். என்பது அழகு. இஃதென்சொல்லியவாறெனின் யாவனொருவன் யாதொரு பொருளைக்கண்டான் அக்கண்டவற்கு அப்பொருண்மேற் சென்ற விருப்பத்தோடேகூடிய அழகு. அதன்மேலவற்கு விருப்பஞ்சேறல் அதனிற் சிறந்த வுருவும் நலனும், ஒளியும் எவ்வகையானும் பிறிதொன்றற்கில்லாமையால் திருவென்றது அழகிற்கே பெயராயிற்று.''

பெரும ஈறுகெட்டு நின்ற அண்மைவிளி. தாதவிழ் கொன்றைத் தாரும் என்பது முதல் இறைவனது தசாங்கத்தைப் புகழ்ந்தது. தசாங்கமாமாறு ''புல்லுமலையாறுநாடூர்புனைதார்மா, கொல்லுங்களிறுகொடிமுரசம்-வல்லகோல், என்றிவை நஞ்செழுத்தோடே லாவகையுரைப்ப, நின்றதசாங்கமெனநேர்.'' என்றதால் காண்க. கொன்றைத்தார், விடைக்கொடி, தமருகப்பறை, கங்கையாறு, பொய்தீர்வரையாக்கலியெனுமானை, வெண்ணிறச்செங்கண்வேழம், வைதிகப்புரவி, வாநநாடு, மேருமால்வரை, தில்லைப்பதி, பதினாயிரம்நாமம், இவை முறையே தார், கொடி, முரசம், ஆறு, செங்கோல், யானை, குதிரை, நாடு, மலை, பதி, பெயர் முதலியவற்றைக்குறித்து நின்றன. அங்கம் பத்தாக ஒன்று மிகுந்தது திருநெடு நாமத்தைச் சேர்க்கையால் என்க அதனை நீக்கிப் பத்தாகக்கொள்க. இதனைத் திருவாசகம் திருத்தசாங்கத்தாலும், கொற்றவன்குடி யுமாபதிசிவமருளிய நெஞ்சுவிடுதூதானுமறிக.

விடைக்கு வீரமாவது இறைவன் சந்நிதானத்துத் தேவர்முதலியோர்கட்டளையின்றியணுகப்பெறாக்காப்பும், இறைவனைவேண்டிக்கொண்ட பதினாறுபேறுமாம். அவற்றை ''மறைகணிந்தனைசைவநிந்தனைபொறாமனமும், தறுகணைம்புலன்களுக்கேவல்செய்குறாச்சதுரும், பிறவிதீதெனும் பேதையர் தம்மொடு பிணக்கும், உறுதிநல்லறஞ்செய்பவர்தங்களோடுறவும்'' ''யாதுநல்லன்பர்கேட்கினுமுதவுறுமியல்பும், மாதவத்தினோரொறப்பினும்வணங்கிமகிழ்வும், ஓதுநல்லுபதேசமெய்யுறுதியுமன்பர், தீதுசெய்யினுஞ்சிவச்செயலெனக்கொளுந்தெளிவும்'' ''மனமும்வாக்குநின்னன்பர்பாலொருப்படுசெயலும், கனவிலும்முனதன்பருக்கடிமையாங்கருத்தும், நினைவில்வேறொருகடவுளைவழிபடாநிலையும், புனிதநின்புகழ்நாடொறுமுரைத்திடும்பொலிவும்.'' ''தீமையாய்புறச்சமயங்களொழித்திடுந்திறனும், வாய்மையாகவேபிறர்பொருள்விழைவுறாவளனும், ஏமுறும்பரதாரநச்சிடாதநன்னோன்பும், தூய்மைநெஞ்சின் யானெனதெனுஞ்செருக்குறாத்துறவும்.'' என்பனவற்றாலறிக. கொடிவளைவினையுடைதென்னும் பொருளில் இகரம் வினைமுதற்பொருண்மைவிகுதி. போரில் என்பதில் இல் ஒப்புப்பொருளது. டமேதிஸப்தங்கரோதீதிடமருஃ என்றதால் டமசப்தத்தை விளைவிப்பது டமருகம். டமருகப்பறை இருபெயரொட்டுப் பண்புத்தொகை. கங்கைக்குத் தெய்வத்தன்மையாவது, இறைவன் முடியிலிருக்கையும், உமாதேவியின் திருவிரலின் தோற்றத்தாலுமாம். ஆக்ஞையென்பது, ஆணையென மருவிநின்றது. ஆணை யீண்டுத் தசாங்கத்தொன்

றாகிய செங்கோலை யுணர்த்திநின்றது எனினுமாம். செங்கண் சினக்குறிப் புணரநின்றது. வெண்ணிறவேழம், இறைவனது ஐராவணம் என்னும் ஆயிரம் கொம்புகளுள்ள வெள்ளையானை. பண்ணியல் வைதிகப்புரவி என்றது. நான்குவேதங்களையாம். அவற்றைப் புரவியென்றதால் முகமுதலிய வுறுப்புகளுளவோவெனின் அந்த வேதத்திற்குப் பாதம், அஸ்தம், முகம், மூக்கு' நேத்ரம், செவி என்பனவற்றிற்கு முறையே, சந்தசு, கற்பம், வியாகரணம், சிக்ஷை, சோதிடம், நிருத்தியமாகிய ஆறும் அங்கங்களாம். அவற்றுள் சந்தசு, மந்திரசுலோகாதிகளுக்கு அக்ஷரகணிதஞ்செய்யும். கற்பம் - ஆஸ்வலாயன, போதாயன, ஆபஸ்தம்பாதி சூத்திரங்களில் யக்யப்பிரயோகாதிகளைக் கற்பிக்கும். வியாகரணம், வைதிகசாஸ்திரார்த்த சித்தியைச் சமாப்பிக்கும். சிக்ஷை, உதாத்த அநுதாத்த, ஸ்வரித பிரசயமென்னும் சதுர்விதஸ்வரகரண பூர்வகமான பதபாளிக்ரம வேதாத்யயனுகிகளைச்சொல்லும். சோதிஷம், லக்னதிதிவாரநக்ஷத்ர யோககரணாதிகளால், வைதீககர்மங்களுக்குக் காலந் தெளிவிக்கும். நிருத்தி, வைதிகசப்த நிர்வசநத்தை நியமிக்கும்.

மேரு உலகத்திற்கு மத்தியாயும்தேவர்களிருக்கையாயும்பொன்னுடையன் றதுமாதலால்மையறுகனகமால்வரைஎன்றார். கனதீப்யதஇதிகனசம், என்றதால் கனகம்என்பதற்குப் பிரகாசத்தையுடையதென்பது பொருள். வரை. மூங்கிலின்பெயர்தானிருப்பதற்குஇடமாயுள்ளமலைக்குஆதலால்தானியாகுபெயர். செய்வயல், இருபெயரொட்டுப் பண்புத்தொகை. செய்யப்படுவதென்னும் பொருளில் ஐ செயப்படுபொருண் மை விகுதி புணர்ந்து கெட்டது; அன்றி முதனிலைத்தொழிலாகுபெயருமாம். தொல் பெரும்பதியென்றது, அநாதியாகிய சிவமூர்த்தி யெழுந்தருளியிருப்பதும், பதஞ்சலி, விஷ்ணு, வியாக்ரபாதர்களால் பூசிக்கப்பெற்றதும், விராட்புருடனுக்கு இருதயகமலம்போன்றதுமாதலின் என்க. எண்ணிறந்த திருநாமங்களையுடையான் என்பார் ஒருபதினாயிரம் திருநெடுநாமம் என்றார். "இதனை ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமிலார்க்காயிரம் திருநாமம் பாடினும் தெள்ளேணம் கொட்டாமோ" என்ற அருமைத்திருவாக்காலுணர்க. அந்நாமம் ஆன்மாக்களின் பந்தநீங்கி முத்தி காரணமாகக்கொண்டதாம். உடல் புளகிக்க கண்கள் ஆநந்தவெள்ளம் கொள்ளத் தானடிமையென்னும் உரிமைகொண்டு பாட என்பார் உரிமையிற் பாடி என்றார். பந்தர், லகரத்திற்கு ரகரம் போலியாயிற்று. அமரர், மரணமில்லாதார் இவர், விஞ்ஞானகலர் முதலியோரும் மற்றச் சிவகணங்களும் தேவருமாம். இறைவனது திருமணக்கோலப்பொலிவைக் காணவேண்டிய அன்புள்ளாராகிய அமரர், நெருக்கத்தாலும் பூதகணங்களின் பயத்தாலும் அஞ்சி நெருக்கத்தின் இடைவெளியிலுள்ள நுழைவழிபுகுந்து சென்றார் என்பார் புகுந்தவென்றார். தமர், பொருளடியாகப் பிறந்த கிளைப்பெயர். வரி, இது செயப்படுபொருள் விகுதிபுணர்ந்துகெட்ட தொழிலடியாகப் பிறந்த பெயர். அன்றித் தொழிலாகுபெயருமாம். அளவில்லா அடியவரின்திருப்பெயரெழுதியதாதலால் நெடும்புத்தகம் என்றார். உன் கடைக்கண் பார்வையுண்

டாயின் அணுவும் மகத்தாம் எனவும் ஆலமும் அணுவாம் என்பார் அணுவும் வானுற நிமிர்ந்துகாட்டும், வானுளம்பும் கருடனும். என்றார். தசாங்கத்துட னியைந்தன என்னும்மைகள். எனையும் என்பது இறந்தது தழீஇயது. டனீழிவு சிறப்புப்பொருளது. அணுவும், நுளம்பும் என்பன இழிவு சிறப்புப்பொருள. இதுஇடையிற் சிற்சில அடிகள் குன்றாதுவந்தமையின் இணைக்குறளாசிரியப் பா. எரிந்திலங்கு சடைமுடி முனிவர்புரிந்து கண்டபொருண் மொழிந்ததாத லால்பொருண்மொழிக்காஞ்சியாம். நின்தமர்பெயர்எழுதிய வரிநெடும்புத்தகத் தென்னையு மெழுதவேண்டுவன் என வேண்டினமையின் இது வேண்டு கோளணி. (ச)

வெண்பா.

ரு. ஆதரித்த மாலு மறிந்திலனென் றஃதறிந்தே
காதலித்த நாயேற்குங் காட்டுமே—போதகத்தோற்
கம்பலத்தா னீணாக கங்கணத்தான் றென்புலியூ
ரம்பலத்தான் செம்பொ னடி.

(இ - ள்.) போதகத்தோல் - யானைத்தோலினை, கம்பலத்தான் - மேற் போர்வையாகவுடையவனும், நீள்நாக கங்கணத்தான் - நீண்ட அரவுகளைக் கங்கணமாக வுடையவனும், தென்புலியூர் - திருத்தென்புலியூரை, அம்பலத் தான் - திருநடனசபையாகப் பெற்றவனுமாகிய நடராச மூர்த்தியின், செம் பொன் அடி - சிவந்தபொன்னையொத்த திருவடிகள், ஆதரித்த - அவற்றை யடைய விரும்பிய, மாலும் - விஷ்ணுமூர்த்தியும், அறிந்திலன் - தெரிந்து கொண்டானில்லை, என்ற அஃதறிந்தே - என்ற அச்செய்தியறிந்தே, காத லித்த - அவற்றையடைய விரும்பிய, நாயேற்கும் - நாயையொத்தஎனக்கும், காட்டுமே - தரிசனந்தருள்வாரோ. எ - று.

(வி - ரை.) கற்பங்கடோறு தாம்பிறந்து லயிக்கையில் சிவனுக்கிரக நிக்ரகங்கள் பெறவேண்டுமென உலகத்தில் திருவவதரித்தலின் ஆதரித்த மாலும் என்றார். அஃதாமாறு, "மாணுடமடங்கலை வலிதபக்கோறலின்" ஐயிரு பிறப்பினு மரியருச்சித்தலின் எனக் கூறியதனான் அறிக. மால், ஆசை கொண்டான் என்னும்பொருளது. ஆதரித்த இது ஆதரம் என்னும் பெயரிடி யாகப்பிறந்த பெயரெஞ்சுகிளவி. மால் என்னும் குணவாகுபெயர் கொண் டது. அறிதல் மனத்தின் தொழில்தாதலால் அஃதிறத்தல் சால அரிதென் பார் அறிந்திலன் எனவும், அவனறியாச் செய்திபல புராணகாதைகளாலும் வேதாகமங்களாலும் வெளிப்படையென்பார் அஃதறிந்தே எனவும், கூறி னார். இழிபிறப்பாகிய சுநங்களையுவமைகொண்டு கூறிய தென்னையெனின் தோற்றத்தாலிழிவேயாயினும் குணத்தாற் சிறந்ததாதலின் என்க. என்னைசிற ப்பெனின் "யானையனையவர்நண்பொரீஇநாயனை யார்கேண்மைதழீஇக்கொ ளல்வேண்டும்-யானை, அறிந்தறிந்தும்பாகனையே கொல்லுமெறிந்தவேல், மெ ய்யதாவால்குழைக்கும்நாய்." என்றார் பிறரும். "குழித்துமதகரமுரலுந்தா

ரோயைநாயடியேன்." எ-ம், "செய்வதறியாச் சிறுநாயேன்" எனவும், அருளிய திருவாக்குக்களால் நாய் தலைவனிடத்து அவன் வெறுக்கினும் மிக்க அன்புடையதென்பது பெறப்பட்டது. காட்டுமே எ-து, தேவர்களிலுயர்ந்தாளுகிய திருமாலுங் காணப்பெற்றிலா அடிகள் நாயையொத்த என்பொருட்டு எளிவந்தருளுமா ஏன்னுந் துணியாமைப் பொருள்பட நின்றது.

போதகத்தோல் போர்த்தது, கஜாசுரன் என்னும் அசுரன் தேவர் முதலியோரை வருத்த, வருந்திய தேவர் துன்பத்திற்காற்றாது பெருந்தேவரீரிடத்துமுறையிட அவர் வெருவிச் சிவமூர்த்தியிடத்துக் குறைகூறினர். கருணாநிதியாகிய சிவமூர்த்தி, துன்பத்திற்கிரங்கி யசுரனிடஞ் சென்று அவன் தோலையுரித்துப்போர்த்தனர். இதனை "மதித்துவேழமாந்தானவன்வருதலும்வடவை, யுதித்தவன்னியுமச்சுறவெரிவிழித்தொருத்தன், கதித்தகால்கொடுதள்ளவேகயாசுரன்கவிழ்ந்து, பதைத்தவீழ்தலு மிதித்தனன் சிரத்தையோர்பதத்தால்." என்ற மகாஸ்காந்தபுராணத்தாலறிக. கம்பலம் - குளிருள்ளவர்களால் விரும்பப்பட்டது என்பது பொருள். நீள்நாகம் - வினைத்தொகைக்குறிப்பு. நாகம்-என்பதற்குபர்வததிலும், சந்தனமரத்திலும், பிறந்ததும், பாதத்தால்நடவாததும் என்பது பொருள். கங்கணம், க்வண, சப்தே என்ற தாதுவால் ஓசையிடுவது என்பது பொருள். தாருகவனத்தவர் இறைவனைப் பகைத்துச்செய்த யாகத்திற்பிறந்தவைகளைத் தாம் கங்கணமாகக்கொண்டமை புராணங்களாலறிக. (௫)

கலித்துறை.

௬. அடியொன்று பாதல மேழிற்கு மப்புறம் பட்டதிப்பான்,
முடியொன்றிவ் வண்டங்க ளெல்லாங் கடந்தது முற்றும்வெள்
ளைப், பொடியொன்று தோளெட்டுத் திக்கின் புறத்தன பூங்கரும்
பின், செடியொன்று தில்லைச்சிற் றம்பலத் தான்றன் றிருநடமே.

(இ-ள்.) பூ கரும்பின் - அழகியகரும்பினது, செடி ஒன்று - புதல்கள் நெருங்கிய, தில்லைச்சிற்றம்பலத்தான்தன் - தில்லையைத் திருப்பதியாகக் கொண்ட நடராஜமூர்த்தியின், திருநடம் - திருநடனத்தில், அடியொன்று - திருவடி ஒன்றுமே, பாதலம் எழிற்கு - எழுவகையாகிய பாதாளத்திற்கு, அப்புறம்பட்டது - அப்பாலாயிற்று. இப்பால் - இப்பகுதியில், முடிஒன்று - திருமுடி ஒன்றுமே, இ அண்டங்கள் முற்றும் எல்லாம் - இந்தஉலகங்கள் முழுதும் எல்லாம், கடந்தது - அப்புறப்பட்டது, பொடிஒன்று - விபூதிதூளி தம்பெற்ற, தோள்எட்டு - எட்டுத்தோள்களும், திக்கின்புறத்தன - எட்டுத் திக்குகளுக்கப்புறத்தவாயின. எ - று.

(வி-ரை.) அடி - பண்பாகுபெயராய்த் திருவடியையுணர்த்திநின்றது. ஒன்று என்பனவற்றினீற்றில் தேற்றமும் பிரிநிலையுமாகிய ஏகாரங்கள் தொக்கன. ஆதியந்தசூன்யமாய், அமலமாய்ப் பரிசுத்தமாய்ப் பரிபூர்ணமாய்ச்

சூக்ஷ்மமாய் ஏகமாய் நிறைந்துள்ளது சிவம்; ஆதலால் அதற்கு அடியினள வும் முடியினளவுங் காணின் கண்டிதமாய் அளவைப்பட்டு உலகப்பொருள் களிலொன்றாமாதலின், அப்பொருளின் திருவடி பாதலமேழினையுங் கடந்த தென்றார். இதனாலன்றே "அணியனவுஞ் சேயனவு மல்லா அடி," "அகல மளக்கிற்பாரில்லா அடி." "உருவென்றுணரப்படாத அடி." எனவும், "கீத மினியகுயிலே கேட்டியே லெங்கள்பெருமான், பாதமிரண்டும் வினவிற் பாதாளமேழினுக்கப்பாற், சோதிமணிமுடிசொல்லிற்சொல்லிறந்து நின்ற தொன்மை, ஆதிகுணமொன்றுமில்லா அந்தமிலான் வரக்கூவாய்." என வும், "முந்துநடுவுமுடிவுமாகிய மூவரறியாச், சிந்துரச் சேவடியானைச் சேவகனை வரக்கூவாய்." எனவும் கூறியதுணர்க.

பதந்தயஸ்மின்பாபாதிதிபாதாளம்-பாபத்தினால் ஆன்மாக்களடையுமிடம் பாதாளம். இது அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம் என்பன. இவற்றின் தன்மையினைச்சிவதர்மோத்தரம் முதலியசிவா கமங்களினும் புராணங்களினும்காண்க. முடி-முடிக்கப்பட்டதென்னும்பொ ருளில் செயப்படுபொருள் விகுதிபுணர்ந்து கெட்ட தொழிலடியாகப் பிறந்த பெயர். அடிபாதலமேழையுங் கடந்ததென்றதால் கீழுலகமுழுவதும், முடி யொன்று இவ்வண்டமெல்லாம் என்றதால் முடிமேலுள்ள ஏழின்புறத் ததாயிற்றென்பதும் பெறப்பட்டது. அவை பூலோகம், புவர்லோக முதலிய ஏழுவகைய. தோளெட்டுத்திக்கின் புறத்தனவென்பதால் எட் டுத்திருத்தோள்களும் எட்டுத்திக்கினப்புறத்தன வாயின என்பது கொள்ளப் பட்டது. தோள், பால்பகா அஃறிணைப் பெயராதலி னதற்குத் தோள்களெ ன்று பொருள்கூறினும். முடி, தோள், அடி என்றது அடி, முடி, தோள் என்றது, தலைதடுமாற்றந் தந்து புணர்ந்துரைத்தலென்னுந் தந்திர உத்தி. விராட்டுருவமாகிய சிவமூர்த்தி, உலகமேயுருவமாயினனாதலின் அவனது பெயர்ச்சி உலகப்பெயர்ச்சியாம். ஆதலாலன்றே "அடிபேரிற் பாதாளம்பேரு மடிகள், முடிபேரின் மாமுகடுபேரும் - கடக, மறிந்தாடுகைபேரில் வான் றிசைகள்பேரும், அறிந்தாடுமாற்றா தரங்கு." எனவும், "மூவா மதியானை மூவேழுலகங்கள் ஆவானைக்காணுமறிவு." எனவும், "உருவுபலகொண்டுணர் வரிதாய் நிற்கு மொருவன்." எனவும், "தலையவன்பின்னவனாய் தந்தை யிந்தத் தராதலத்து நிலையவை நீக்குதொழில் புரிந்தோன்" எனவும் கூறிய திருவாக்குகளா லறிக. இறைவன் திருநடனஞ்செய்தகாலத்து சடைமுடி தங்கிய தலம் அண்டத்தெல்லையாகவும், புருவஞ் சத்தியலோகத்திற் கப்புற மாகவும், முகம் தவலோகத்துக் கப்புறத்தும், கண்டம் மகாலோகத்திற் கப் பாலும், மார்பு தேவருலகத்திற்கப்புறமும், புயங்கள் திக்குகளெட்டிற்கு மப்பாலும், நாபி பூமியின் புறத்தும், தொடை, முழந்தாள், கணைக்கால், கரடு, புறந்தாள், திருவடிகள், சத்தபாதாளங்களுக்கு அப்புறத்தவாக இரு ந்தன. இவ்வகை திருநடனஞ்செய்து தரிசனந்தருகையில் தேவர் ஞான நோக்கால் தரிசித்தனர். இவ்வித திருநடனங்களில் இறைவன் "ஐங்குலகங்

துயர்தீர நடம்புரியு முயர்தான முரைப்பக்கேண்மோ, பாங்குதருங் கைலா
யஞ் சிவலோகம் பனிவரைநூல் பரவுஞ் சொர்க்கம், தீங்ககல்பத்திரபீடம்
நேபாளங் கங்கைநதி சிறந்தகாசி, கோங்கலருந் தடங்காம ரூபமொடு குரு
வின்றானம்." இவ்விடங்களில் நடம்புரிவன். இவற்றுள் திருச்சிற்றம்பலமாகிய
திருத்தில்லையில் நடனஞ்செய்வதே உத்தமமாம். "ஈங்கிவற்றுட் சிதம்பரத்
துளியற்றுநட முத்தமமா மியற்று மேன்மை, தாங்கியிடு மாநந்தத் தாண்டவ
மா ருயிர்க்கிருளைத் தடுத்தானந்த, மோங்கியிடவளிப்பதுவாமற்றையவுமுயிர்க்
குறுதியுறுதற்காகும், பாங்கியலுநடத்தானம் பகர்ந்தனமாலினிமுனிவபகரக்
கேணி." என்றதாலுத்தமம். மற்றைத் தாண்டவங்கள் ஒவ்வொருகாலத்தில்
அடியவர்பொருட்டும் வணங்கார் பொருட்டுமாம். வணங்கார் பொருட்டுச்
செய்தது சண்டதாண்டவம். அதனைக்காண அஞ்சித் தேவர் முதலியோர்
"மேருமுதற்குலவரைகளனைத்துந்தூளாம் விரவுபிரமாண்டமது வெடித்து
வேறாம், நீருதிரைக்கடலனைத்து மரும்பாழாகும் நிலையுணர்ந்து நடுங்கியுனை
ச் சரணமாகச், சாருமடியேங்கள்துயர் தவிர்த்திசார்ந்தார் தமையளித்தல்
தலைவர்தங்கட்கருளாமன்றே, பேருலகுமடியேழுமழியாவண்ணம் பெயர்த்து
நடமகற்றிடுதல் பெருமையாமால்" என வேண்டி நிறுத்தினதால் அது
பகையைவெல்லும்பொருட்டாம். பின்னும் இந்நடம் "வடிவுவடிவிறு
தியிலாவின்ப வுருவாயுலகவாழ்க்கை யென்றே, நெடியநம துண்மைதனை
நினைந்து நினைந்தனவரதநிறையானந்தப், படிவமணியம்பலத்துட் பரமாநந்தப்
பரவைப்படிந்தமூழ்கி, யடிமுடிவுகாணாத வானந்தத்தாண்டவ நின்றாடாநின்
றோம்." எனவும், "கலங்கினமால்கடல் வீழ்ந்தனகார்வரையாழ்ந்ததுமண், மல
ங்கினநாகமருண்டனபல்கணம்வாநங்கைபோய், இலங்கினமின்னொடு நீண்ட
சடையிமையோர்வியந்தார், அலங்கனன்மாநடமார்க்கினியாடுவதெம்மிறையே"
எனவும், "தாளொன்றாற்பாதாளமூடுருவத்தண்விசும்பிற், றோளொன்றாலண்ட
ங்கடந்துருவித்-தோளொன்றால், திக்கனைத்தும்போக்குந்திறற்காளிகாளத்தி
நக்கனைத்தான்கண்டநடம்." "நடமாடுஞ்சங்கரன்றா ளான்முகனுங்காணான்,
படமாடுபாம்பணையான்காணான்-விடமேவுங், காரேறுகண்டன்கயிலாயன் றன்
னுருவை, யாரேயறிவாரிசைந்து." என்றவற்றாற்காண்க.

ஒன்றுஎன்பதில் உயர்வு சிறப்பும்மையும், எட்டுஎன்பதில் முற்றும்மை
யுந் தொக்கன. (௬)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

௭. நடமாடி யேழுலகு முய்யக் கொண்ட
நாயகரோ நான்மறையோர் தங்க ளோடுந்
திடமாடம திட்டில்லைக் கோயில் கொண்ட
செல்வரே யுமதருமை தேரா விட்டீ
ரிடமாடி யிருந்தவளும் விலக்கா விட்டா
லென்போல்வார்க் குடனிற்க வியல்வ தன்று

தடமாலை முடிசாய்த்துப் பணிந்த வானோர்
தஞ்சுண்டா யங்கருந்தீ நஞ்சுண் டதோ.

(இ - ள்.) நடம் ஆடி - திருநடனஞ்செய்து, ஏழ்உலகும் - ஏழ்உலகங்களையும், உய்யக்கொண்ட - பிழைக்கச்செய்த, நாயகனே - உலகநாதனே, நான்மறையோர்தங்களோடும் - நான்குவேதங்களையுணர்ந்த தில்லைமூவாயிரவருடன், திடம்மாடம் - உறுதியானமாளிகைகளையும், மதிள் - மதிலினையுமுடைய, தில்லை - திருச்சிற்றம்பலத்தை, கோயில்கொண்ட - சிறந்தஇருக்கையாகக்கொண்ட, செல்வனே - பெருஞ்செல்வத்திற்குக் காரணமானவனே, உமது அருமை - உமதுபெருமையினை, தெருவிட்டீர் - அறியாதிருந்தீர் இடம்மாடு இடதுபக்கத்தில், இருந்தவளும் - எழுந்தருளியிருந்த பிராட்டியும், விலக்காவிட்டால் - உமதுதிருநடனத்தைத்தடுக்காளாயின், என்போல்வார்க்கு-என்னையொத்த பசுக்களுக்கும், உடனிற்க - ஆண்டுநிற்பதற்கு, இயல்வது அன்று - முடியாதாகும், தடம்மாலை - பெரியமாலைகளையுடைய, முடிசாய்த்து - தலையைச்சாய்த்து, பணிந்த - வணங்கிய, வானோர் - தேவர்களுக்கு, தஞ்சஉண்டாய் - ஆதாரமாகித் தேவரீர், அங்கு-அத்திருப்பாற்கடலிற்றோன்றிய, அரு-உண்ணற்கருமையாகிய, தீநஞ்சு - நெருப்பை யொத்து (அடைந்ததைக்கெடுக்கின்ற) விஷத்தை, உண்டதோ - அமுதுசெய்தருளினீர். எ - று.

மாடு என்பதில் இகரம் சாரியை.

(வி - ரை.) நடத்தால் ஏழ் உலகுமுய்யக்கொள்ளுதலாவது, சிவமூர்த்தி ஸ்ரீபஞ்சாக்ஷரமே திருமேனியாகக்கொண்டு நடஞ்செய்த எட்டுமிரண்டும் உருவான யகாரமாகிய ஆன்மாவில், நகரம் திருவடியாகவும், மகரம் திருவுந்தியாகவும், சிகரம் திருத்தோளாகவும், வகரம் திருமுகமாகவும், யகரம் திருமுடியாகவும், டமருகம் ஏந்திய திருஅத்தம் சிகரமாகவும், வீசிய திருக்கரம் வகரமாகவும், அமைத்த திருக்கரம் யகரமாகவும், அக்னியை யேந்திய திருக்கரம் நகரமாகவும், முயலகனை ஊன்றிய திருவடி மகரமாகவும், திருவாசி ஓங்காரமாகவும், பிரணவமாகிய அதனை நீங்காத பஞ்சாக்ஷரமே உள்ளொளியாகவும் எழுந்தருளி நடஞ்செய்பவன். இந்நடத்தை ஆன்மாவிற்கண்டு களிப்பவர் இம்மைத்துன்பங்களினின்று நீங்கி முத்தியாகிய பேரின்பத்தை யடைவர். ஆயினிதில் தோற்றலயம் எவ்வாறெனின் "தோற்றந்துடியதனிற் றோயுந் திதியமைப்பிற், சாற்றியிடுமங்கியிலேசங்காரமூற்றமா, யூன்றுமலர்ப்பதத்திலுற்றதிரோதமுத்தி, நான்றமலர்ப்பதத்தேநாடு." இது தோற்றம், "மாயைதனையுதறிவல்வினையைச்சுட்டுமலஞ், சாயவமுக்கிவருடாவெடுத்துநேயத்தா,லாநந்தவாரிதியி லான்மாவைத்தானழுத்தல், சானெந்தையார் பாதந்தான்," இத்திருநடம் ஆன்மாக்களை ரக்ஷிக்கவேண்டுமென்று கருணையால்செய்வதாம். இதினுண்மையை மௌனஞானிகள் பரசிவமூர்த்தியின் திருக்கருணையால் மும்மலங்களை நீங்கி, ஆன்மபோதமுடிந்த இடத்தில் காண்பர். இதுவே பிறப்பையறுக்குமருந்து இப்பெருஞ் செல்வத்தைக் கொண்டார்க்குப் பிறவிவறுமை

நீங்கும். "உரையுணர்வுக் கெட்டாவொருவன் மிருபஞ்சாக், கரத்தான்வரைமக டான்பாதிபரையிடமாய்க், காணும்படியே கருணையுருக் கொண்டாடல், பே னுமவர்க்குண்டோபிறப்பு." என்பனவற்றாற்காண்க.

கொள்ளுதலாவது உள்ளன்பையுடைய விஞ்ஞானகலரிடத்துத்தாமே ஆன்மாவில் பேரானந்தத் திருமேனியைத் தரிசிப்பித்தும்,மற்றதீவிரதரம்,தீவி ரம், மந்தம் மந்ததரமாகிய ஆன்மாக்களிடத்து வேடுவன் மிருகாதிபக்ஷிகளை ப்பிடிக்கவேண்டி அவ்வினத்தைக்கொண்டு பிடித்தல்போல ஆன்மாக்கள்கொ ண்டவுருவத்திற்குத்தக்கவாறு திருமேனிபூண்டு "எவ்வுலகத்து மூர்த்தி யேது கொண்டிவணியங்கும், அவ்வுலகத்துமேனியது கொண்டங்கமருமீ சன், எனவும், "அருபரத்தொருவன் அவனியில்வந்து, குருபரனாகியருளிய பெருமையைச் சிறுமையென்றிகழாதே" எனத்திருவாசகத்திலும், "இறை யருளுருவாய்வந்து கூட்டிடும், எனவும், "உணர்வாய்நின்ற ஞானக்கூத்தன் ஒரு மூர்த்தி கொடுகுறுகி, எனவும். "நன்னெறி விஞ்ஞானகலர்நாடு மலமொன்றினையு மந்நெறியேயுண்ணின்றறுத்தருளிப்.—பின்னன்பு, மேவா விளங்கும் பிரளயாகலருக்குத்தேவாய்மலகன்மந்தீர்த்தருளிப்—பூவலயந்,தன் னின்று நீங்காச்சகலர்க்கவர்போல, முன்னின்று மும்மலந்தீர்த் தாட்கொள் கை—யன்னவனுக்கு, ஆதிகுணம் எனவும், கூறிய திருவாக்குகளால்,மார்ச்சா ல நியாயமாய்த்தாமே எழுந்தருளி அடிமைகொண்டு ரக்ஷிப்பதையாம்.

மறை - அருகரல்லாதார் கேட்கவும் ஓதவும் கூடாதென மறுக்கப்படுவ தென்னும் பொருள்பட்ட தொழிலடியாகப் பிறந்தபெயர். மறையோர் என்ப தில் செய்யுளாதலால் ஆ ஓகாரமாயிற்று. வேதியர்தம்மோடுகோயில்கொண்ட மை தில்லைமூவாயிரவருடன் தாமியைந்து அந்த எண்ணைமுடித்தமை. அதனை, "செம்மைமெய்ப்பெரியோர்போலத் தேடரிதென்றுமைந்தன், மெய்ம்மையி ற்றுயரநோக்கி விமலன்விண்ணவருங்கேட்ப, வெம்மையொப்பவர்கள் யாரும் யாமவர்கொப்போமன்றே, யம்மையப்பனு மாவானுமவர்களி லொருவனெ ன்றான்," என்றகோயிற்புராணவசனத்தாலறிக.

மதிள், மதில், ளரயோரபேதம். செல்வரோ, என்றது எண்குணத்தொன் றாகிய முற்றுமுடைமையாகி ஈசுவரன் என்னுந் திருநாமத்தின்பரியாயம்.அரு மை தேர்தலாவது, தாம், இத்தகையன், இப்படியன், இன்னன் என்று சொ ல்லியுமளந்தும் பிறராலறிதலேயன்றித்தாமுந்தம்தன்மையறியா திருத்தலையா ம், அதனை "என்னையுடையானு மேகமாய்நின்றானும், தன்னையறியாத தன் மையனும்—பொன்னைச், சுருளாகச்செய்தனைய தூச்சடையான்வானோர்க், க ருளாகவைத்தவவன்" எனவும், "அம்பரமாம்புள்ளித்தோலாலமாரமுதம் எம் பெருமானுண்ட சதுரொனக்கறியவியம்பேடி, எம்பெருமானேதுடுத்தங்கேத முதுசெய்திடினுந், தம்பெருமைத்தானறியாத் தன்மையன்காண் சாழலோ," என்ற திருவாக்குகளாற் காண்க.

இடமாடிருந்தவள் எனப்பிராட்டியினிலையை இருப்பவள்என எதிர்காலத்தாற் கூறாது இருந்தவள் எனஇறந்தகாலத்தாற்கூறியதனால், பரமேசுவரருக்கு அக்னிக்குஷ்ணம்போல அவிநாபாவமாக இருக்கிற கிருபாசத்தியானது பஞ்சகிருத்யபேதத்தாலைந்து வகைப்படும் அது பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தியெனப்பெயருறும். அவற்றுள் பராசத்தி, சிவத்தில் ஆயிரத்தொரு கூறாயமரும். ஆதிசத்தி ஆன்மாக்களுக்கு விஷயசுகத்தைப்பொருத்தும். இது பராசத்தியில் ஆயிரத்தொரு கூறாம். இச்சாசத்தி, ஆதிசத்தியில் ஆயிரத்தொருகூறாய்ச்சிருட்டியாதிகளைச்செய்ய இச்சைகொண்டிருப்பது. ஞானசத்தி சர்வான்மாக்களுடைய கன்மங்களையும் அக்கன்மங்களுக்கீடான தநுகரணபுவனபோகங்களையும் உபாதானத்ரயங்களினின்றுமுண்டாக்கும். இது இச்சாசத்தியில் ஆயிரத்தொருகூறாக இருக்கும். கிரியாசத்தி ஞானசத்தியில்ஆயிரத்தொருகூறாய்ச் சிருட்டியாதி கிருத்தியங்களைப்பண்ணும். இந்தச்சிவசத்திகளைந்தும் நிஷ்களம். ஆகையால் விஸ்வத்திற்கு அபின்னநிமித்தோபதானமாகிய தமது சமவாய ஆதிசத்திவாமபாகமும் தாம் தக்ஷணபாகமுமாக இந்திரதனுசுபோலநீலமும்பொன்மையுமாகி ஒருமுதலிலிருவகைநிறம்பெற்று ஞானக்ரியாசமமாய் அகளமாயிருத்தலின்பூதகாலத்தாற்கூறினார். பின்னுமிதனை "வலந்தான்கழலிடம் பாடகம்பாம்புவலமிடமே, கலந்தான்வலநீறிடஞ்சாந்தெரிவலம்பந்திட மென்பலந்தார்வலமிடமாடகம்வேல்வலமாழியிடஞ், சலந்தாழ்சடைவலந்தண்ணங்குழலிடஞ் சங்கரற்கே எனவும், "ஒருபாலுலகளந்தமாலவனாமற்றை,யொருபாலுமையவளாமென்றா—லிருபாலும், நின்னுருவமாகநிறந்தெரியமாட்டோமால், நின்னுருவோமின்னுருவோநேர்ந்து." எ-ம், " கங்கைவலமிடம்பூவலங்குண்டலந் தோடிடப்பாற், றங்குங்கரம்வலம்வெம்மழுவீயிடம்பாந்தள்வலஞ், சங்கமிடம் வலந்தோலிடமாடைவலம்க்கிட, மங்கஞ்சரியம்பலவன் வலங்காணிடமணங்கே." என்பனவற்றாற்காண்க.

தான்விலக்குவதாவது, தான் உலகமாதாவாதலின் அவ்வுலகத்தை யழியாதுகாத்தல். அதனை "முற்ற - எற்றுபுனலிற்கழுவு புவனப்பழங்கலமெடுத்தடுக்கிப்புதுக்கூழின் னமுதமுஞ் சமைத்தன்னை நீபன்முறை யிழைத்திடவழித்தழித்தோர், முற்றவெளியிற்றிரியு மத்தப்பெரும்பித்தன் முன்னின்றுதொந்தமிடவும் முனியாதுவைகலு மெடுத்தடுக்கி" எனப் பிறர் கூறியதனானறிக. என்போல்வார் என்றது அத்தரிசனத்தைக்காணும்படி பூமியிற்பிறக்குந்தவமுடைமை. அது அப்பொருளின் நீக்கமறநின்று உடனிருக்கும் உனக்கேதகுதியன்றிப் பிரகிருதி சம்பந்தப்பட்டு மும்மலத்தாற்றொடர்புண்டுகிடக்கும் எம்போலிகளுக்குக் கூடாதென்பார் இயல்வது அன்றுஎன்றார். தடமாலை-வாடாமாலையாகிய கற்பகப்பூமாலையெனினுமாம். முடிசாய்த்துப்பணிந்த என்றதனால், எட்டுறுப்பும் நிலத்திற்பொருந்த அடியோம் உமது திருவடிசம்பந்திகள், அத்திருவடிபற்றல்லாமல் வேறொன்றையும் ஆதரவாகக்கொள்ளோம் ஏனையதேவர் தாம், இதன்முன்னிற்க ஆற்றார் சற்றுத்தாமதப்படின் இவ்வி

டம் உலகத்தை எரிக்கும். ஆதலால் எம்மை எக்காலத்தும் காத்தல்போல் இப்போதுங் காக்கக்கடனென்று உத்தமத்தில் உத்தமமாகிய சிரத்தை முதலில் வணக்கிப்பின் ஏனையவுறுப்புகளையும் சாய்த்து வணங்கினர் என்க.

நஞ்சு, நஞ்சம் என்பதில் அம் விகுதி தொகுத்தல். அது ஆதரவாகிய இறைவனை யுணர்த்தியது. அங்கு என்பதில் கு - இடப்பொருளுணர்த்தியது. அக்காலத்தெனக்கொள்ளின் காலப்பொருளுமாம். அருமை எத்தேவராலும் மாட்டாமை யுணர்த்திநின்றது. தீமையென்னும் பண்பு ஈறுபோய்த்தீயென நின்றதெனினும், அன்றித்தீத்தல் என்னும்பொருளில் தொழிலடியாகிய முதனிலைத்தனிவினைப் பெயரெனினுமாம். தீயாகிய நஞ்சு, தீக்குநஞ்சு, எனமயங்கிநிற்றலால் பொருண்மயக்கம். இதுஎண்சீர்த்தாய்க்கழிநெடிலடி நான்காய் முடிந்ததால்எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.உலகும்என்பதில் உம்மை முற்றுப்பொருளது நாயகரேசெல்வரேஎன்பனவற்றில் ஏகாரம் பிரிநிலை ஒடும் என்பதினும்மை யெச்சப்பொருளது. தேன் என்பதில் வினையெச்சவிகுதி தொக்குநின்றது. இருந்தவளும் என்பதினும்மை உயர்வுசிறப்பு. என்டோல்வார்க்கு என்பதில் இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. ஏகாரம் அசை. (எ)

நேரிசையாசிரியப்பா.

அ. நஞ்சுமிழ் பகுவாய் வெஞ்சின மாசுணந்
தன்முதன் முருக்க நெனமுதற் சூழ்ந்த
நீர்ச்சிறு பாம்பு தன்வாய்க் கெதிர்வந்த
தேரையை வவ்வி யாங்கி யான்முன்
கருவிடை வந்த வொருநாட் டொடங்கி
மறவா மறலி முறைபிறழ் பேழ்வா
யயிற்றலை யன்ன வெயிற்றிடைக் கிடந்தாங்
கருணனி யின்றி யொருவயி றோம்பற்குப்
பல்லுயிர் செகுத்து வல்லிதி னருந்தி
யயர்த்தன னிருந்தும் போலும் பெயர்த்துநின்
றெண்டோள் வீசிக் கண்டோ ருருகத்
தொல்லெயி லுடுத்த தில்லை மூதூ
ராடு மம்பலக் கூத்தனைப்
பாடுதல் பரவுதல் பணிதலோ விலமே.

(இ - ள்.) நஞ்சுஉமிழ் - விஷத்தைக் கக்குகின்ற, பகுவாய் - பிளந்த வாயினையும், வெம்சினம் - கொடுங்கோபத்தினையுமுடைய, மாசுணம் -பெரும்பாம்பு, தன்முதல்முருக்க - தனக்கு முதலாகிய உயிரைக்கெடுக்க(காலம் பார்த்திருக்க) நெல்முதல்சூழ்ந்த - நெற்பயிரின் வேரில்சுற்றியிருந்த, சிறுநீர்ப்பாம்பு - சிறிய நீர்ப்பாம்பானது, தன்வாய்க்கு எதிர் - தனதுவாய்க்கு எதி

ராக, வந்த - (விதிகூட்ட) வந்த, தேரையை - சிறுதவளையை, வவ்வியாங்கு-கவ்வியதுபோல, யான் - அடியேன், முன் - முதலில், கருஇடை - மாதாக்களின் கருக்குழியினின்றும். வந்த - உலகத்திற்றோன்றிய, ஒருநாள்தொடங்கி - அந்தஆதிநாள்முதலாக, மறவா - குறித்தநாளின் எல்லைமறக்காத, மறலி-யமனுடைய, முறைபிறழ் - (ஒன்றுக்கொன்று ஏற்றக்குறைவால்) முறைமாறியுற்ற,பேழ்வாய் - பிளந்தவாயிலுள்ள, அயில்தலைஅன்ன - வேலின் உச்சியையொத்த, எயிற்றிடை - பற்களில், கிடந்து - அழியாதிருந்து, ஆங்கு - பிறந்த இடத்தில், அருள்நனி இன்றி - (உயிர்களிடத்து) கருணை சிறிதும் இல்லாமல், ஒருவயிறுஓம்பற்கு - எனதுஒருஉடம்பினைக் காத்தற்பொருட்டு, பல் உயிர்செகுத்து - பலஉடல்களைக்கொன்று, வல்லிதின் - இனிப்பால் வன்மையாக, அருந்தி - பலவகையாகஅருந்தி, அயர்த்தனன் இருந்தும் - சோர்ந்திருந்தும், தொல்எயில் - பழமையாகிய மதில்சூழ்ந்த, தில்லைமூதுஊர் - தில்லையாகிய பழையநகரில், நின்று - ஒருதிருப்பதத்தை ஊன்றியும், பெயர்த்து-மற்றொருதிருப்பதத்தைவீசியும், எண்தோள்வீசி - எட்டுத்திருத்தோள்களை வீசியும், கண்டோர்உருக - தரிசித்தோர்கண்ணுமனமும் உருகும்படி, ஆடும் திருநடனஞ்செய்யும், அம்பலகூத்தனை - அம்பலத்தாடியை, பாடுதல்-வாயாரவாழ்த்துந்தொழிலினும், பரவுதல் - கையாரவணங்குந் தொழிலினும், ஒழிலேம் - ஒழிந்தோமில்லை. எ-று போலும்-அசை.

(வி - ரை.) பெரும்பாம்பு தன்னிரைக்கமைந்தசிறுபாம்பை விழுங்கக் காலம்பார்த்திருக்க அச்சிறுபாம்பு தன்னிரைக்கமைந்த சிறுதேரை தன்முன்வர அதனைக்கவ்வியதுபோல எனைக்கொல்லப் பெரியயமன் பலபிறவியின் கண்ணேக்காயிருக்க அடியேன் என் ஒருவயிற்றின்பொருட்டுப்பலவுயிர்களைக்கொன்றருந்தியிருந்தும், தேவரீரைவாழ்த்தலும் பாடுதலும் ஒழிந்தேனில்லை. என்பதுகருத்து.

பாம்பு, தான்பிறரைக் கவ்வுகையில் தனது பற்களாகிய காளி காளாத்ரி,யமன், யமதூதன் என்னும் பற்களின் வழியுள்ள தொளைகளில்நஞ்சை இறக்கிக் கடிவாயில் ஏற்றும் ஆதலால் நஞ்சுமிழ், எனவும், பசியுற்றகாலத்தும், பயந்தகாலத்தும், நோவடைந்தகாலத்தும், பல்லின்விஷ மிகுந்தகாலத்தும், பிறர்மிதித்தகாலத்தும் வாய்திறக்குமாதலால் பகுவாய் - எனவும், வெஞ்சினமாசுணமெனவே எக்காலுங் கோபத்துடனிருக்கும் மூர்க்கனென்னும் பாம்பெனவும், மாசுணம் எனவே,பெரும்பாம்பெனவும் கூறப்பட்டது. தன் என்பது சிறுபாம்பை யுணர்த்திநின்றது. முதல் என்பது பண்பாகு பெயராய் உயிரையுணர்த்திநின்றது. நென்முதல் என்னுமிடத்து ஆகுபெயராய் வேரையுணர்த்தியது. குழ்தல், அதற்கு விளையாட்டாகவும் இயற்கையாகவுமிருத்தலி னிவ்வாறுகூறினார். நீர்ச்சிறுபாம்பெனவே, தான்கடிக்கின் விஷமின்மையும், உருவத்திற் பெருமையின்மையும, தன்வாய்க்கு எதிர்வந்த எனவே, தனக்கு மற்றபிராணிகளைச்சென்று வலிஅடக்கித்தின்னும் வலிமையின்மையும், அப்பிராணிகள்தாமே விதிகூட்டவரிற் கொள்ளுதலும், தேரையெ

னவே மற்றபிராணிகளைப்போல் தீமைசெய்யாமையும் பெறப்பட்டன. இங்ஙனம் மாலையுவமையாகக் கூறவே பெரும்பாம்பு யமனாகவும், சிறுபாம்புஅவ்யமனுக்கடங்கியமகனும், தேனாவெனவே அம்மகனால் கொன்றருந்தப்பட்டவுயிர்களும்உள்ளுறையாககூறப்பட்டன. முன் என்பதுஆகுபெயராய்க்கர்மத்தால்பிறவியில் பிறக்கத்தொடங்கிய காலத்தையுணர்த்திநின்றது.மாதர்களின் கருப்பையென்னாது கருவிடையென்றதால், அனேக சன்மங்களில்ஓரறிவுயிர் முதல்ஆறறிவுயிர்காறும்எனது கர்மவலிக்கொப்பப்“புல்லாகிப்பூடாகிப்புழுவாய்மரமாகிப், பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய், வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச், செல்லாநின்ற வித்தாவரசங்கமத்து ளெல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்.” என்றபடி சனனமெடுத்தமையும், வந்தனவே எனது இச்சையின்றிச் சிவசத்தியின் பிரேரிப்பால் ஊர்த்வலோகங்களிற்சென்று எழுபத்தொரு சதுர்யுகம் சுகங்களை யநுபவித்துத் தீர்ந்தவுடனே யங்குள்ள தேவர்களால் பிடித்துத்தள்ளப்பட்டு நக்ஷத்திரங்களாகித் தலைகீழாய்ப் பூமியில்விழுந்து தந்தையி னுதரத்தில் உணவாதிகளால் சென்று மாதாவின் உதரத்தில் செல்லுதலும் கூறப்பட்டன.

நாள்என்பது அக்காலத்தை யுணர்த்தினமையின்சினையாகுபெயர்.மறலி, தான்உயிர்கள்செய்த கர்மங்களைச்சிறிதும் விடாதுபார்த்து, அவரவர்களின் காலத்திற்கும் கர்மத்திற்கும் ஏற்கஉயிரையும் பாப புண்ணியங்களையும் அநுபவிக்கச்செய்தலின் மறவாமறலி என்றார். அயிற்றலையன்ன எயிறுஎனவே அதனிடம்பட்ட வுயிர்கள் மீண்டும் மீளாமை கூறப்பட்டது. இதனால் நான் பிறக்குந்தோறு பிறக்குந்தோறும்இறப்பென்னும் பயங்கொண்டானாய் வருந்தினேன் என்பது கூறப்பட்டது. இயல்பாக எல்லா உயிர்கண்மேலும் கருணையிருத்தல்வேண்டும், அங்ஙனம் கருணையில்லாதான் நரகம் புகுவன். அதனை “அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை யிருள்சேர்ந்த இன்னாவுலகம்புகல்.” எனவும், “மன்னுயிரோம்பி அருளாள்வார்க்கில் லென்பதன்னுயிரஞ்சும் வினை. எனவும் கூறியதனான் அருணனியின்றி எனக்கூறினார்.

ஒருவயிறுஎனவே, பலவுயிர்களைக்காக்க அருளின்றிச் செய்யினும் அது உண்டார் பலர்மீதும் அக்காரியம்செய்யத் தொடங்கியகாலைத்து ஏவினார் கண்டார்மீதும் அக்கொலைத் தொழிலாதிய சேறலின் அத்துணைக்குற்றமின்று அது தன்னையேயடைதலின் இவ்வாறு கூறினார். “அறவினையாதெனிற்கொல்லாமை கோறல் பிறவினையெல்லாந்தரும்.” பகுத்துண்டுபல்லுயிரா ஓம்புதனூலோர், தொகுத்தவற்றுளெல்லாந்தலை.” எனவும் கூறுதலானும் “கொலைப்பாவம் விளைக்குந்துன்பம் ஏனைப்பாவங்களெல்லாங் கூடியும் விளைக்கமாட்டா.” ஆதலினபல்லுயிர் செகுத்து என்றார். வல்லிதின் அருந்தியெனவே, உண்ணுங்காலத்து உண்பன, தின்பன, நக்குவ, பருகுவவெனப் பலவித உண்டிகளாக மாற்றி யெனக்கொள்க. அயர்த்தனன் எனவே இத்தீ

மைகளென்செய்யுமோ என அஞ்சுதல். போலும், அசை. இறைவனது அசைவே உலகசிருட்டியும், அவனது நிலையே முத்தியுமாதலின் நின்று பெயர்த்து எனக்கூறினார். இறைவன் நடனஞ்செய்கையில் திருக்கரங்களெட்டும் எண்டிக்காகக்கொண்டு திருநடஞ் செய்தலின் எண்டோள் வீசியென்றார். "கண்காள்...எண்டோள்வீசிநின்றாடும் பிரான்றனைக் கண்காள்காண்மின்களோ" என அருளிச்செய்த திருவாக்காற்காண்க. "ஆடினானமலமூர்த்தி யஞ்சலிமுகிழ்த்துச்சென்னி சூடினாரடியில்வீழ்ந்தார் சுருதியாயிரநாவாரப், பாடினார்பரமானந்தப் பரவையிற்படிந்தாரன்பு, நீடினார் நிருத்தானந்தங்காண்பது நியமம்பூண்டார்." எனப்பரமானந்தப் பெருநதியில் கண்டோரை மூழ்கச்செய்தலின் கண்டோருருக என்றார். இங்ஙனம் பல்லுயிர்செகுத்துண்டேனாயினும் அம்பலக்கூத்தனைப்பாடுதல் ஒழியேனாதலின் அக்கூற்றன் அவனதுபெயர் கூறுமென்னிடம் வரான் என்பது கருத்து, என்னையெனின் காலகாலனாதலினானென்க. அன்றிப் பரவுதல் இலம்எனப்பொருள்கொண்டு பணியஇல்லை இனியவன் திருவுளப்படி தீதுவருக நலம்வருக என்னினுமாம். ஆங்கென்னும் இடைச்சொல் உவமைப் பொருள்பட நின்றது. மற்றையாங்கு இடப்பொருளது. இந்நேரிசையாசிரியம் வெஞ்சினயாசுணம், எனவும். ஒருவயிறு பல்லுயிர் எனமுரண்கொண்டு முடிந்தது. இச்செய்யுள் பெரும்பாம்பு சிறுபாம்பினுயிரைக் கெடுக்கக்காலம் பார்க்கச்சிறுபாம்பு தேரையினைப் பற்றுதல் போல் காலன் என்னுயிரைக்கொள்ள காலம்பார்க்க நான்பலவுயிரைக்கொன்று தின்பேனாயினேன். என உவமையும் பொருளும் ஒன்றுக்கொன்று இடைவிடாது பிறிதுபொருள் விளக்கலினிதனைப் பிறிதுமொழிதலணியென்னுமாம். பிறழ், என்னும்முதனிலை எயிற என்னும் பெயர் கொண்டது. இருந்தும் என்பதின் உம்மை இழிவுசிறப்புப்பொருளது. முதுமையெனும் பண்பு, ஆதிநீண்டு மூது எனநின்றது. உருக எனும் வினையெச்சம் ; ஆகும் எனும் பெயரெஞ்சுகிளவிகொண்டது. கூத்துமுதனிலை பெறுத்தொழிற்பெயர். (௮)

வெண்பா.

௯. இலவிதழ்வாய்வீழ்வாரிகழ்வாரவர்தங்
கலவிகடைக்கணித்துங்காணே—னிலகுமொளி
யாடகஞ்சேரம்பலத்தே யாளுடையார்நின்றாடு
நாடகங்கண்டன்பானநான்.

(இ - ள்.) ஒளி-பிரகாசம், இலகும்-விளங்குகின்ற, ஆடகஞ்சேர்-ஆடகம் என்னுஞ்சிறந்தபொன்னினால் செய்யப்பட்ட, அம்பலத்தே-திருவம்பலத்தில் (எழுந்தருளியிருக்கும்) ஆள்உடையார்-என்னை யடிமையாகக்கொண்டநடராஜமூர்த்தி, நின்று-ஆன்மாக்களுக்கு அனுக்கிரகம் செய்தற்பொருட்டு எழுந்தருளி, ஆடும் - திருநடனஞ்செய்தருளுகின்ற, நாடகம் - ஆனந்தத்தாண்டவத்தினை, கண்டு - தரிசித்து, அன்புஆன - பேரன்பின் விளைவைப்பெற்ற, நான் -

அடியேன், இகழ்வார் - (பெரியோர்களால்) நிந்திக்கப்பட்ட காமுகரால், வீழ்வார் - விரும்பப்பட்டவராகிய, இலவு இதழ்வாயவர்தம் - செவ்இலவமலரின இதழையொத்த வாயையுடைய விலைமகளிரது, கலவி-கூட்டத்தை,கடைக்கணித்தும் - கடைக்கண்ணினாலும், காணேன் - நோக்கேன். எ-று,

(வி - ரை.) இவர்கள்,பூர்வசன்மபாவத்தால் பலர்க்கும் ஆசைதரும் பெண்களாகிச் சிறுவர் யுவாக்கள், மூத்தோர் என்றும் பிணிமுதலிய பெற்றோர். அஃதில்லோரென்றும், நினையாது எல்லாரையுமணைந்தும் பொருளுக்கேற்ப இன்பங்கொடுத்து அப்பொருளைத் தாம்பெற்று இன்பத்தைப் புருடனையொப்ப அனுபவித்துப் பலவிதத்தில் வஞ்சித்தும்கபடத்தை மனதில்கொண்டு அதனை யில்லாதாரபோல் நடித்தும், மனதை யொருபுருடனிடம் வைத்து அஃதிலாததுபோல் ஒளித்துப் புதியபுருடனுடன் முயங்கியும், பொருளுள்ள அளவும் அவனுடனிருந்து சுகத்தையுண்டு பொருள் நீங்கியகாலத்துப் பழிமுதலியகூறி வெருட்டியும், உம்மை, இம்மையேயன்றி மறுமையிலும் பிரியோமென்று ஆணைகூறி யன்புவரச்செய்து பொருள்பறித்தும், அழகில் மன்மதனையாக, திருமாலேயாக, கந்தமூர்த்தியேயாக கைப்பொருளிலனேல் அவனை வெறுத்தும், அன்பினால் விரும்பாது பொருள் விரும்பியும், நிற்பார் என்பார் இலவிதழ்வாயவர் என்றார். அவர்களது புணர்ச்சியை விரும்புவோர் கீழ்மக்களில் கடையாளரும், மேலோரால் இகழப்பட்டவருமே ஆதலின் இகழ்வார் எனவும் கூறினார். இவரைக்கூடல் அயலவர், பிணத்தை இருட்டறையில் தழுவுதலையொக்கும் ஆதலின் தீதாமென்க. இதனாலன்றே "பொருட்பெண்டிர்பொய்மைமுயக்கம் இருட்டறையில் ஏதில்பிணந்தழீயற்று. எ-ம். "வரைவிலாமாணிழையார் மென்றோள்புரையிலாப் பூரியர்களாழுமளறு," எனவும்- ' இருமனப்பெண்டிரும் கள்ளுங்கவறுந் திருநீக்கப்பட்டார் தொடர்பு."எனத் தெய்வப்புலவருங் கூறியது. மற்றும் வருவனவற்றாற்காண்க.

இகழ்வரரவர் என்பதில் அவர்என்பதை வாய் என்பதனோடு கூட்டி வாயவர் எனப்பொருள்கொள்க. இலவு, இது செம்மை பொன்மை, வெண்மைநிறம் பெற்றதாயினுமீண்டுச் செவ்விலவை யுணர்த்தியது. இலவு - முதலாகுபெயர். கலவி, தொழிலாகுபெயர். கலத்தலென்பது பொருள். கலவி எனப் பொதுப்படக்கூறிய அதனால் இக்கலவி, விலைமகளிர் கலவியாம். அது, மந்தபுத்தி, சோம்பல, அக்னிமந்தம், வாதம், அரோசகம் முதலிய வுண்டாக்குதலாலும், குலமகளிரது கலவி தாதுவிர்த்தியும், திரிதோஷஹரமும், பாபநாசமும், தேகக்கட்டும், குளிர்ச்சியும், மறுமையில் சுவர்க்கமும் தருதலாலும் கடைக்கணித்துங் காணேனென்றார். மேல் பொதுப்படக்கூறிய அதனால் கலவி நாற்பதும், பெற்றாம். "ஒருமொழியொழிதன்னினங் கொளற்குரித்தேயென்றதனால், ஆலிங்கனம், நகக்குறி, தந்தக்குறி, தாடனம்,சும்பனமுதலிய புறத்தொழிலுங் கொள்ளாமை அறிக. காணேன், என்றதால் செவியாற்கேளேன், தேகத்தாற் பரிசிக்கேனென்ப

றும். இனத்தாற் பெறப்பட்டன. வாயில் வீழ்தலாவது, வண்டு தேனுண்ண மலரிடத்துத் தாமேசெல்லுதல்போல், விடனும் பரத்தையர் வேண்டாதிருக்கத் தானேயுள்ளன உரியன கொடுத்து வலியச்செல்லுதலினிவ்வாறுகூறினர்.

பொன்-ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம், என நால்வகைத்து ஹாட,தீப்தௌஎன்ற விற்பத்தியால் ஆடகம்என்பதற்குபிரகாசிப்பது என்பது பொருள்.சாதரூபம், என்பது மிகவும் பிரசஸ்தமான ரூபமுடையதென்பது பொருள்.மேருவிற்குச்சமீபத்திலுள்ளநதிக்கரையிலுள்ள நாவற்பழரஸத்திலுண்டானதாதலால்சாம்பூநதம் எனப்பட்டது.மாற்றான்உயர்ந்த பசும்பொன்னாதலின்கிளிச்சிறையென்றபெயர்பெற்றது.அவ்வகைமிகவும்விளக்கமுற்ற பொற்சபையை யிடமாகக்கொண்டிருத்தலின்ஆடகஞ்சேர் அம்பலம் என்றார். இவ்வாறு கூறவேசுத்தான்மாக்களின் மலமொழிந்துதுலங்கும்சுத்தவெளியாகிய பரமாகாசத்தை இடமாக்கொள்ளுதல் பெறப்பட்டது. ஆளுடையார் என்றதால் என்னைத்தாமே வலுவில் எழுந்தருளி அடிமையாக்கொண்டவர் எ-ம், உலகத்து,மலமொழிந்த சுத்தரை அடிமையாகக்கொண்டு மற்றோரையும் அடிமைகொள்ள கருணையுருவாக யிருப்பவன் என்பதும் பொருள். இவ்வடிக்கு ஆடகஞ்சேர் அம்பலத்தே இலகுமொளி எனக்கூட்டி, திருவம்பலத்தில் விளங்கும் ஒளியுருவானவன், ஆளுடையார்-என்னை யடிமைகொண்டான். எனக்கூறினுமாம். நட, நிருத்தௌ, என்கிற தாதுவால் ஆன்மாக்களின் சிருட்டியாதி பஞ்சகிர்த்தியத்தின்பொருட்டு நடிப்பவன் என்பது பொருளாம்.

* அன்பு ஆன என்றதால்,காணுந்தோறும் காணுந்தோறும் இன்பம் புதிதாக இருத்தலின்என்க. அதனைவாதவூரடிகளின்மணிவாசகமாகிய திருக்கோவையாரில் "உணாந்தார்க்குணர்வரியோன் தில்லைச்சிற்றம்பலத் தொருத்தன்,குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச் செவ்வாயிக் கொடியிடைதோள், புணர்ந்தாற் புணருந்தொறும் பெரும்போகம் பின்னும் புதிதாய், மணந்தாழ் புரிகுழலா ளல்குல்போல வளர்கின்றதே." எனக்கூறினமையானும் அதற்கு உரையாசிரியர் "புணராத முன்னின்ற வேட்கை புணர்ச்சிகட்குறைபடும் அக்குறைபாட்டை யக்கூட்டத்தின் கட்டம் மாற்பெற்ற குணங்களினுளாகிய அன்பு நிறைக்கும், நிறைக்க எஞ்ஞான்றும் ஒருபெற்றித்தாய் நிற்கும் என்பது." எனக்கூறினமையானும் உணர்க. அம்பலத்திற்கு அத்துணையொளியெவ்வாறு வந்ததெனின்."பொருளது புணர்வே புணர்ப்போன் குறிப்பின் மருளறவரூஉ மரபிற்றென்ப." என்றதனான் உலகத்துப் பொருள்களில் பொன்னின் மிக்கதின்மையானும், ஈறில் ஒளியையுடைய இறைவனைத் தன் இடமாகப்பெற்றதனானும், அவனை யடைந்தபொருள்கள் இறப்ப இழிந்தன ஆயினும் மேருவைச்சார்ந்த காகமும் பொன்னாகும் எனும் வழக்கமொழிபோல் உயர்ந்தோனாகிய இறைவனைச் சார்ந்த பொருளும் விளக்கத்தைப்பெற்றது என்பது பெறப்பட்டது. (கூ)

கலித்துறை.

௧0. நானே பிறந்து பயன்படைத் தேனய னாரணனெங்
கோனே யெனத்தில்லை யம்பலத் தேநின்று கூத்துகந்த
தேனே திருவுள்ள மாகியென் றீமையெல் லாமறுத்துத்
தானே புகுந்தடி யேன்மனத் தேவந்து சந்திக்கவே.

(இ - ள்.) அயன் - பிரமதேவனும், நாரணன் - நாராயணன் ஆகிய விஷ்ணுமூர்த்தியும், எம்கோனேஎன - எமது தலைவனே யென்று துதிக்கும்படி, தில்லை அம்பலத்தே - திருத்தில்லையில் திருச்சிற்றம்பலத்தி னிடமாக, நின்று - எழுந்தருளி, கூத்து உகந்த - (பெருந்தேவர் பொருட்டு) திருநடத்தைவிரும்பிய, தேனே - தேன்போல் இனிப்பனாகிய சிவமூர்த்தி, திரு உள்ளமாகி - திருமனத்தில் என்னை நினைத்து, என்தீமையெல்லாம்அறுத்து - எனது கன்மங்களாகிய தீமைகளை யெல்லாம் நீக்கி, தானே புகுந்து - தீமை நீங்கிய மனக்கோயிலில் தானே எழுந்தருளி, அடியேன் - ஒன்றுக்கும்பற்றாத என்னுடைய, மனத்தே - மனத்தில், வந்து - எழுந்தருளி, சந்திக்க - என் மனதிற் கலந்ததனால், நானே - அடியேனாகியநானே, பிறந்து - மனிதயாக்கைபெற்று, (அதனாலாகிய) பயன் படைத்தேன் - இலாபத்தை யடைந்தேன். (எ - று.)

(வி - ரை.) ஆன்மா, பலசன்மங்களிற் பலவித யாக்கைகளைப் பெற்று அச்சநங்கடோறும் நல்வினையால் உயர்வுபெற்றுப் புண்ணிய தீர்த்தக்கரை சிவாலயமுதலிய தேவாலய மருங்கு அசரங்களாகவும் சரங்களாகவும் எண்பத்து நான்கிலக்கம் யோனிபேதங்களாய்ப், பிறகு மானிடப் பிறப்பினைப்பெற்று உலகவாதனையில் கட்டுண்டு தாய்தந்தைய ரல்லாதாரைத் தாய்தந்தையர் எனவும், ஒப்புக்கு வந்தாரை உற்றாரென்றும், பூர்வகர்ம பலத்தினால் பெண்ணாசைகொண்டு, என்மனைவி என்மக்கள் என்வீடு என்வாயில் என் சார்பு எனத் தனதல்லாத புறப்பற்று அகப்பற்றுகளைத் தன்னுடைமை யென்று இறுமாந்து நல்லோரைவெறுத்து கல்லாரைக்கூடி யிவ்வகைப் பிறந்து மிறந்தும், தேவர்முதலிய உயர் பிறப்படைந்தும் வருகையில் புண்ணியத்தால் இறைவன் ஒருவனுளன் என்று சித்தமுண்டாக அவ்வகையில் பிறப்பறுக்க எண்ணமுண்டாகிச் சிவனடியவர், சிவசின்னங்கள் முதலியவற்றில் நீங்காத அன்புகொண்டு சரியை கிரியை முதலிய செய்ய இச்சைபெற்று ஆலயங்கள் தோறுஞ்சென்று திருஅலகிடுதல், திருவிளக்கிடுதல், மலர்மாலை தொடுத்தல் முதலிய செய்தும், பல தலங்களடைந்து மூர்த்திகளைச் சேவித்தும் பாசத்தையறுக்கும். பின்னும் அதினின்று கிரியை யோகங்களை யடைந்து ஞானம்ம்பெறின் ஆங்குநம்பனருள் சற்றேநகும். ஆதலால் நானே பிறந்து பயன்படைத்தே னென்றார். இதனை "புல்லாயநேகவுருப்போனபினர் நல்லறுகம் புல்லாய்ப் பிறக்கவதுபோம். "பூமரங்களாய்ப் பிறந்து புண்ணியனுக்கான

மையாற் போமரத்தினூர் பிறவிபோல்." புண்ணிய தீர்த்ததுட்புழுவாய்ப் பிறந்தமையால் கண்ணும் புழுப்பிறப்புக் காண்." "புள்ளாயநேகவுருப்போய பினர்ப்புட்பிறவியின்ளு நதிசேரயவிரைந்து." "துட்டமிருகப்பிறவிதுதைந்து நெடுங்காலங்கட்டப்படுமுயிரார் காண்." எல்லாவுருவுமெடுத்தெடுத்து நல்வினையால் நல்லாவுருவாகு நாடு." "ஆனைந்து மைம்முகனுக் கபிடேகபுண்ணியத்தா லானுருவை நீங்குமற." "ஆனுருவநீங்குதலு மளவில்சிவ புண்ணியத்தால் மானிடரா யிங்ஙன்வரும்," "வேதாகமம் வழங்காமேதினியிற் போய்ப் பிறந்திட்டாதாரமின்றியலையும்." "இந்த மானிடப்பிறவி கொண்டறிவை யெய்தா மலந்தரிக்கு மைம்புலன்களால்." "அபுத்திபூருவத்தாலாங்கிருநாலெய்திச் சுபுத்திருமாவி துலங்கும்." தெய்வஞ்சிவமென்னுஞ் சித்தமுண்டாமக்கணமே யய்யுநெறியுண்டாருயிர்க்கு." "தந்தை மார்மேல் வெறுப்புஞ் சங்கரன்மேல் விருப்புஞ்சிந்தையிடைவந்து திகழும்." அத்திகழ்வாலீச னருளுருவுகொண்டருளிமுத்தியடைவிப்பன்முறை."என்பதனுன் அறிக. விதியும் மாலுமாகியவிருவராபுவனத்திற்கு மப்பாற்பட்டதிருக்கைலையின், மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாததாய் எழுந்தருளியிருப்பதாதலின் அயன்மாலறியா என்றார்.

புவனங்கள்பலவற்றிற்கும் உயர்ந்ததென்பதை "புவலோகங்கடந்துபோய்ப்புண்ணியருக்கெண்ணிறந்தபோகமூட்டுஞ்,சுவலோகங்கடந்துபோய் மகாலோகஞ்சனலோகந்துறந்து மேலைத்,தவலோகங் கடந்துபோய்ச் சத்தியலோகங்கடந்து தண்டுழாயோன், அவலோகங் கடந்துலக நாயகமாஞ் சிவலோக நண்ணினுரே." என்பதாற் காண்க. கோன், என்பதில் னகரம் சாரியை. கண்ணினும், செவியினும், உடலினும், நாவினும் இனிக்கும்தேன்போலாதுமனத்தின்கண் இனித்தலின் தேன் என்றார். இதனை "நினைத்தனையுள்ளதோர்பூவிற்றேனுண்ணாதே, நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தோறுமெப்போது, மனைத்தெலும் புண்ணெக வாநந்தத் தேன்சொரியுங்,குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பி." என்ற மணிவாக்காலறிக."உனக்குக் கதிவழங்குமுபதேச நல்காவருள் செயவந்தனன்." என்ற பட்டணத்தடிகள் புராணத்தால் இறைவன் மானிடச்சட்டை சாத்தி சத்திநிபாதம் பெற்ற ஆத்மாக்களிடம் எழுந்தருளி அநுக்ரகித்தல் குறிப்பிக்க திருவுள்ளமாகி யென்றார். ஆணவங் கன்மம் மாயையென்கிற மூன்றின் வலிமையை ஒளிமுன்னிருள்போல் குறையச்செய்து ஒளிவிடு பசும்பொன்போல் ஆன்மாவில் சிவப்பிரகாசம் விளங்கச்செய்தலின் தீமையெல்லா மறுத்தென்றார். தீமை என்றது ஈண்டு ஆணவாதி கர்மங்களையாதலி னாகுபெயர். தீமையெல்லாம், ஒருமை பன்மை மயக்கம். அறுத்தல் சிவபோதப்பயிர் வளராது ஆணவாதிகளாகிய சீவபோதக்களை மூடிநெருக்க அதனைச் சிவசத்தியென்னுங்கரிகைகொண்டுநீக்குதலாம். தன் திருவடிவமே மந்திரவடிவமாதலின் புறத்தி லநுக்ரகித்தல்போலஅகத்திலும் ஆன்மாவில் பஞ்ச கிருத்யஞ்செய்ய மந்திரவடிவமாகப் புகுதலை தானே புகுந்து என்றார். புகுந்தபின் தன்னைவிளங்கச் செய்து தாதான்மிய மாதலை

அடியேன் மனத்தேவந்து சந்திக்கவே, என்றுங் [illegible] நானே என்பதில் ஏகாரந் தேற்றம். தேனே என்பதின் ஏகாரஞ் சிறப்புப்பொருள்து, மற்றைய அசைநிலை-சந்திக்க எனும் வினையெஞ்சு கிளவிபடைத்தேன் எனும் வேறு வினைமுதல கொண்டது. "ஏனையெச்சம் வினைமுதலானுமான் [illegible]யும்வினைநிலையானும் தாமியன் மருங்கினமுடியுமெனப." என்றதனாற் [illegible] பயன், எனவும் பாடம். (௧௦)

கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தம்.

௧௧. சந்துபுனையவெதும்பிமலரணை
தங்கவெருவியிலங்குகலையொடு
சங்குகழலநிறைநந்தவயலவர்
தனுவெசனவியமெலிந்துகிளியொடு
பந்துகழல்கனமறந்துதளிர்புரை
பண்டைநிறமுமிழந்துநிறையொடு
பண்புதவிர்வனங்கனவெனொடு
நண்புபெருகவிளைந்தவினையன
நந்திமுழவுதழங்கமலைபெறு
நங்கைமகிழவணிந்தவரவுக
ணஞ்சுபிழியமுரன்றுமுயலக
னைந்துநரலவலைந்தபகிரதி
யந்திமதியொடணிந்துதிலைநக
ரம்பொனணியுமரங்கினடநவி
லங்கணரசையடைந்துதொழுதிவ
ள[illegible]ன்றுவரையுமே.

(இ - ள்.) நந்திமுழவு - நந்திதேவர்கொட்டு மத்தளம், தழங்க - ஒலிக்கவும், மலைபெறு - மலையரையன்பெற்ற, நங்கை - பிராட்டி, மகிழ - களிப்பினைப்பெறவும், அணிந்த - திருவாபரணமாகக்கொண்ட, அரவுகள் - நாகங்கள், நஞ்சுபிழிய - விஷத்தினைக்கக்கவும், முயலகன் - முயலகனென்னுமரக்கன், முரன்று - ஓசையிட்டு, நைந்து - வாடி, நரல - நசுக்குண்ணவும், அலைந்த - அசைவுபெற்ற, பகிரதி - கங்கையை, அந்தி - அந்திக்கால[illegible]ன்று, மதியோடணிந்து - சந்திரனுடனதரித்து, திலைநகர் - திரு[illegible]நகரில் அம்பொன் - அழகியபொன்னினால், அணியும் - அலங்கரிக்கப்பட்ட, அரங்கில் - திருச்சிற்றம்பலத்தில், நடம் - திருநடனத்தை, நவில் - செய்தருளுகின்ற, அமகண் அரசை - அழகியகருணைக்கண்ணையுடை நடராச மூர்[illegible] எதிர் அடைந்து - எதிரில் சென்று, தொழுது - வணங்கி, அன்று மு[illegible] நாள்தொடங்கி, இன்றுவரையும் - இந்நாள்வரையிலும், இவள் - [illegible]

யாகிய) இவள், சந்துபுனைய - சந்தனம் அணிய, வெதும்பி - வெப்பமடைந்து, மலர் அணை - புஷ்ப சயனத்தில், தங்க-இருக்க, வெருவி - பயந்து, இலங்கு - விளங்குகிற, கலையொடு - வஸ்திரத்துடன, சங்கு - சங்குவளைகள, கழல-நீங்க, நிறைந்த - (இவளது கோலத்தைககாண) நிறைந்த, அயலவர்தம-அயல் மாதருடைய, சொல்நலிய - சொல்துன்பத்தைச்செய்ய, மெலிந்து - வருந்தி, கிளியொடு - கிளியும், பந்து கழல்கள் - பந்தும் அம்மனைகளையும, மறந்து - மறந்துபோய், தளிர்புரை - மாந்தளிரையொத்த, பண்டைநிறமும் - (அவளது) பழையநிறமும், இழந்து - நீங்கி, நிறையொடு - (தனது கலங்காநிலையாகிய) கற்புடன், பண்பு தவிர - அடக்கம் முதலிய குணமும்கெட, அநஙகன் அவனொடு - (உருவிலியாகிய) மன்மதனிடத்தில், நண்புபெருக - ஆசைவளர-, இனையன இவ்வகைய (கலகங்கள்.) விளைந்த - நேர்ந்தன. எ - று.

(வி - ரை.) எதிர், ஏன்பதை அடைந்தனென்பதனுடன்கூட்டிப் பொருள் கொள்க. அரசை, என்பதில் இரண்டனுருபு நான்கனுருபாக மயங்கிநின்றது. இது, நற்றாய், தலைவிக்கு நாயகனைக்கண்ட நாள்முதலுண்டாய வேட்கை, எல்லாவுணர்வினையு நீக்கித் தானேயாய் நாண் வழிக்காசுபோலவும், நீரவழி மிதவைபோலவும் தலைவனிடஞ்சென்று பதிந்து அவளது குணங்களை யுள்ளத்து அனுபவிக்கு மிடத்து மனமிடங்கொளாது வெளிவந்து அடையுஞ்செய்கையினைக் கூறுதல். அவ்வாறாயின் தலைவி இருமுதுகுரவர் ஏவல் வழிநில்லாது தானே யிவ்வகை மயலுற்றாளெனின், தேர்ந்து காணுது உள்ளம் ஓடினவழி யோடுதலான் உள்ளத்தான் வேட்கைப்படாத பொருளில்லை. ஆதலான் இது அறத்தின் வழுவாகாது என்க. இவன் உலகத்திவனின் மிக்கார் ஒப்பாரில்லாத் தலைமக னாதலின் இவனுடன்பொருந்தி னல்லது உடம்பிலணிந்த சந்தனத்திற்கும் [illegible] பெற்ற சட்டகத்திற்கும் பயனில்லையென்னும் உள்ளத்தளாய்க் கலவை யணியக் குளிர்ச்சியடையாது வெதும்பினள். இவ்வாறு கொள்ளாது அஃதணிய வருவாளைக்கோபித்தாள் என்றலு மொன்று.

இலவு, செம்பஞ்சு, வெண்பஞ்சு, மயிற்றூவி, அன்னத்தூவி, முதலிய அணைகள் இவளகொண்ட வெம்மையைத் தணியாவெனத்தாயரிட்டமலர் அணையிற்றங்கின் காமனால் துன்பநேருமென்பார் வெருவி எனவும், இவன் பண்டை நிலைமை நீங்கி அவனது திருவழகினை யெண்ணுந்தோறு மெண்ணுந்தோறும் மனம்வாட அதனுடனியைந்த உடம்பு வாட்டங்கொள்ளுதலி னவ்வுடம்பிற்குப் புறவணிகளாய் உடம்பில் அவன்கண்டு மகிழப்பூண்ட அணியும் கலையும் கழலுதலின் கலையொடு சங்கு கழல எனவும், இவளது பரிதாப நிலைகண்டு அயலவர் வருந்தி இவளுககு அறிவுறுத்துவார்போன்று கூறும் மொழி அன்பு ளானிடத்துவைதத ஆசையால் அரம்போலுதலின் மெலிந்து என்வும், தனக்குப்பொழுதுபோக்காககொண்ட பந்து கழல் கிளி முதலிய, தான்தலைவனிடத்து அன்புகொள்ளாதமுன இனியவாகத் தோன்றினும் அத்தலைவனைக் [illegible] அவனது திருமேனியின் பொலிவை நோக்கிய பின்னர் அவனது திரு [illegible] னும்பொழுது போக்கினும் இவை சிறநதனவாகத் தோனறில

வண்ணம் மொழிதெரியளன வாசிகமே கூறினர். உலகு, நெருநெலிருந்தா னின்றில்லையென்னும் நிலையாமை யுடைத்தாதலின் அவ்வுலகில் உடலுயி ருடனிருக்கவே காலத்திற் நற்கதிபெறவேண்டுமென்பார் இப்போதே என் ருர். நாயகன் என்பது, நாயன் எனமருவிற்று. இதனுல், உடனிலையாமை கொண்டது, அவ்வுடலுள்ளபோதே அதனைப்பெற்றதனுலாய பயனையடைக வென வற்புறுத்தினமை கூறப்பட்டது. "ஓதவனுமமுனாயவன் பல்குண முன்னைவிட்டேன், போதவனபின்னேபொருந்தவன் வாழ்க்கை திருந்தச் சென்று, மாதவமாகிடுமாதவமாவளர் புன்சடையான், யாதவன் சொன்னுனது கொண்டொழியினி யாரணங்கே" என்னும் அருள்வாக்காலறிக. (௧௩)

கலித்துறை.

௧௪. நாமத்தி ஞலென்ற ஞநீதிருந் தேனறை மாமலர்சேர்
தாமத்தி ஞலுன் சரண்பணி யேனசார்வ தென்கொடுநான்
வாமத்தி லேயொரு மானைத் தரித்தொரு மானைவைத்தாய்
சேமத்தி ஞலுன் றிருத்தில்லை சேர்வதோர் செந்நெறியே.

(பொ - ள்.) வாமத்திலே - வாமகரத்திலும், பாகத்திலும், ஒருமானை - ஒருமான்கன்றினை, தரித்து - ஏந்தி, ஒருமானை - ஒருமான்போன்றபிராட் டியை, வைத்தாய் - திருத்தேவியாகப்பெற்றவனே! நாமத்தினுல் - உன்திரு நாமத்தையோதலினுல், என்றன் - என்னுடைய, நா - நாவினை, திருத்தேன்- திருத்திக்கொண்டேனில்லை, நறைமாமலர்சேர் தாமத்தினுல் - தேனிறைந்த பெருமைதங்கிய மலர்மாலைதொடுத்துப் பூசிப்பதனுல், உன்சரண் - தேவரீர் திருவடிகளை, பணியேன் - வணங்கேன், சேமத்தினுல் - அரண்கொண்டு, உன்திருத்தில்லைசேர்வது - தேவரீர் எழுந்தருளியிருக்கும் திருத்தில்லையை யடைவதாகிய, ஓர்செம்நெறி - ஒப்பற்றமோட்சத்திற்கு நிமித்தகாரணமாகிய வழியை, என்கொடு-எந்தஆதரவைப்பற்றி, நான்சார்வது - அடியேன் அடை வது. எ - று.

(வி - ரை.) நாமத்தினுல் என்றதால், சிவமூர்த்தியின் திருவுருவத்தை முந்தரபூர்வமாகத் தெரிவிக்கும் மந்திரம் கூறப்பட்டது. மநநம், திராணம் எனும் இரண்டுபதப்புணர்ச்சி மந்த்ரமெனப்பட்டது. பொருள், தன்னைத் தியானிப்பவனைச் சம்சாரக்கடலினின்று கரையேற்றிக்காப்பது. அம்மந்த்ரம், வாசக, வாச்யபேதத்தால் இருவிதப்படும். அவற்றுள் வாசகம், வாக்கினுருக் கொண்டது. வாச்யம், அதன லக்ஷணத்தைக்கொண்டது. மந்திரமே, நாத ஸ்வரூபம், அந்நாதம்,சிவத்தில்தோன்றும் நாதத்தில் விந்துதோன்றும்,விந்து வில் உயிர்மெய், முதலிய அக்ஷரங்கள் தோன்றும்.

அம்மந்திரங்களைச் சிவமூர்த்தி ஆன்மாக்களின் கன்மாநுகுணமாகப் பல வித பேதத்தால் அருளிச்செய்தனர். அவை, மிருத்யுஞ்சயம், சிந்தாமணி, மாலாமந்த்ரம், பிராசாதம் முதலியவாகப் பலதிறப்படும். அறம், பொருள்,

இன்பம், வீடுமுதலிய போகங்களையும் சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய மென்னும் பதவிகளையும் தரும்.

மந்திரங்கள், சித்தம், சாத்யம், ச்வசித்தம், அரி, என நான்குவகுப்புக் கொண்டிருக்கும். இவற்றை முறையே தனித்தனி மாறப் பதினாறுபகுப்பா கும். அவற்றுள் சித்தம், சாதகனுக்குச் சபத்தால் இஷ்டபலத்தைத் தரும். சாத்யம், ஜபதர்ப்பணங்களால் இஷ்டபலத்தைத் தரும். ச்வசித்தம், பாட மாத்திரத்தால் பலத்தைத் தரும். அரி, பகைவரைக்கெடுக்கும். ஆதலின்இவற் றின்முறையை யாசிரியன் உபதேசிக்க அறிந்து மந்திரமாதாவாகிய பஞ்சா க்ஷரியைச் சபிக்கவேண்டுமென்பார் அவ்வகைக் கூறினர். திருத்துதலாவது, தான் மறந்திருப்பினும் நாத்தானே அவன்திருநாமத்தைக்கூறிக்கொண்டிருக் கப் பழக்கிவைத்தல், அதனை "மற்றுப்பற்றெனக் கின்றிநின் றிருப்பாதமே மனம்பாவித்தேன், பெற்றலும் பிறந்தேனினிப் பிறவாத தன்மைவந்தெய்தி னேன், கற்றவர் தொழுதேத்துஞ் சீர்க்கறையூரிற் பாண்டிக் கொடுமுடி, நற்றவா வுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே." என்னுந் திருப் பாசுரத்தால் அறிக. நாமத்தினல் மந்தரசித்தி கூடாது தியானித்தபொருள் கண்கூடாகாதெனின்,பரிபாகமின்றிச் செய்தல்கூடாதெனச் சரியை யநுஷ் டித்தல்வேண்டும் ஆதலில் முதலில் நாமத்தைக்கூறிப் பின்பு தாமத்தைக் கூறினர். அது தாதமார்க்கமாம். "தாதமார்க்கஞ் சாற்றிற் சங்கரன்றன்கோ யிற்றலமலகிட்டு இலகுதிருமெழுக்குஞ்சாத்திப்,போதுகளுங்கொய்துபூந்தார் மாலைகண்ணி புனிதர்க்குப் பல சமைத்துப் புகழ்ந்துபாடித்,தீதிறிருவிளக்கிட் டுத்திருநந்தவனமுஞ்செய்து திருவேடங்கண்டா லடியேன் செய்வது, யாதுபணியீரென்று பணிந்தவர்தம் பணியுமியற்றுவதிச் சரிதைசெய்வோ ரீசனுலகிருப்பர்." என்றதால் சிவபரஞ்சுடரை ஸ்படிகாதி லிங்கங்களில் ஆவாகித்து மாலைமுதலிய தொடுத்துக் கிரியாவிதிப்படி சாத்திப் பூசிப்பது. நறைமாமலர் சேர்தாமம் என்றதால், மலரெடுக்குமிடத்து வண்டுகள் தேன் தேடிச்சென்று மலர்களினுள்ள மகரந்தங்களை மூக்காலுழுது அதினுள்ள நுண்தேனையுண்ணுமுன்னம் என்பது தெரிவிக்கப்பட்டது. அதனை "சிறை யளிபுகுதாமுன்னஞ் சிறுகாலை யெழுந்திருந்து,பொறைமரம் வழுக்காதேறப் புலிநகம்பெற்றுமந்த, நறைமலர்பழுதுபார்க்கநகந்தொறுங் கண்படைத்துங், குறைவறப் புரிந்தான் பூசைகுயவரிப்பதத்தினனே." என்பதாலறிக. நாமத் தினல், தாமத்தினல் என்பன, நாமத்தை எண்ணித்யானிப்பதாலாகிய காரி யத்திற்கும், தாமத்தைத் தொடுத்துச் செய்யும் கிரியையினலாகிய காரியத் திற்கும் கருவியாய் நின்றன. சரண், பால்பகா அஃறிணைப்பெயராதலின் பன் மையாகப் பொருள்கூறப்பட்டது. சாத்யநேநேதிசரணஃ எனும் விற்பத்தி யால் செல்லுதற்குப்யோகமாகவுள்ளதென்பது பொருள்.

மேற்கூறிய சரியை கிரியைமுதலியவற்றைக்கருவியாகக்கொண்டு அநு ட்டிப்போர் அடையும் பதவியாகலின் அதனை நிரோதகமாய் ஒன்றுக்கும் பற்

ருது அதனை அனுட்டியாதநான் எந்த ஏதுவைக்கொண்டு அடைவேன். நான் அடைதல் கூடாது. என்றபடியாம்.

உனக்கு ஊறுசெய்யவேண்டிபகைவர் அனுப்பியமானினை ஊறுசெய்யாது உருவத்திற்கேற்பக்கருணைசெய்து திரு அத்தத்தில் தரித்தாய் ஆதலாலும், கருணையேயுருக்கொண்ட உமாதேவியாரைஒப்பற்ற வாமபாகத்துக்கொண்டுளாயாகலாலும், அவ்வாறு செய்யாத என்னையும் காப்பாய் என்பது போதர ஒரு மானைத்தரித்து ஒருமானைவைத்தாய் என்றார். வலியடக்கித்திருக்கரத்தில் வைத்தலின் தரித்து எனவும் இறைவி, தவஞ்செய்து வேண்டதாமே யிச்சைகொண்டு அவனுடன்கூடியிருத்தலின் வைத்தாய் எனவும் கூறினர். அவ்விடதுபாகத்தில் மானைத்தாங்கியது இவனேனுக்கினழகிற்கு மானேக்கம் இழிந்தமைதெரிக்கவுமாம். உலகமெல்லாமொடுங்கிய சர்வசங்காரகாலத்து இறைவர் பாகத்துத்தாம் ஒடுங்கித்தனித்திருத்தலின் அது நோக்கி ஒரு மான் என்றார் எனினுமாம்.

திருத்தில்லை என்பது, பரமாகாசமாகிய பேரின்பவீட்டினையாம். செந்நெறிச்செல்வார்அடையும் வீட்டினைச் செந்நெறி யென்பது உபசாரம். "தோற்றக்கேடுகளின்மையின் நிமித்தமாய், நோன்மையாற்றனை யொன்றுங் கலத்தலின்மையாற்றூய்தாய்த், தானெல்லாவற்றையுங்கலந்து நிற்கின்ற முதற்பொருள் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாதல் பற்றி அதற்கிடமாகுமோக்ஷத்தைச் செந்நெறி என்றார். கொடு என்பது, கொண்டு என்பதன்மரூஉ. என்கொடுஎன்பது வினாவினைக்கருதாது கவற்சிகுறித்து நின்றது. இது தமக்கு வேண்டியபொருண்மேல் முயலும் ஒழுக்கமின்மைதோன்றக் கூறினமையின் கையறல்விலக்கென்னும்அணி. (கச)

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கரு. நெறிதரு குழலையறலென்பர்கணிழலெழுமதியநுதலென்பர்க
 ணிலவினும் வெளிதுநகையென்பர்கணிறம்வருகலசமுலையென்ப
ளறிகுவ தரிதி டையென்பர்க ளடியிணை கமல மலரென்பர்க[ர்க
 ளவயவ மினைய மடங்கைய ரழகிய ரமையு மவரென்செய
மறிமழு வுடைய கரனென்கிலர் மறலியை முனியு மரனென்கிலர்
 மதிபொதி சடில தரனென்கிலர் மலைமகண் மருவு புயனென்கிலர்
செறிபொழி னிலவு தில்லையென்கிலர் திருநடநவிலுமிறையென்கிலர்
 சிவகதி யருளு மரசென்கிலர் சிலர்நர குறுவ ரறிவின்றியே.

(பொ-ள்) சிலர்-உலகத்து அறிவில்லாச்சில மானிடர், மடம் மங்கையர்-இளமையாகிய மங்கையரின், அவயவம்-உறுப்புக்களில், நெறிதரு-வகிரினையுடைய,குழலை-கூந்தலை,அறல் என்பர்கள்-கருமணலின் ஒழுக்குஎன்பர்கள்,நுதல்-நெற்றியினை, நிழலெழு-ஒளியுள்ள,மதியம்-பிறைச்சந்திரன், என்பர்கள்-ஒ

ன்றுகூறுவர். நகை - பற்களை, நிலவினும் - சந்திரிகையினும், வெளிது - வெண்ணிறமுள்ளது, என்பர்கள் - என்றுகூறுவர், முலை - முலைகளை, நிறம்வரு - ஒளிவளரும், கலசம்என்பர்கள் - பொற்கலசம் என்று கூறுவர், இஇடை - இந்த இடுப்பு, அறிகுவது - (உண்டோஇல்லையோஎன) அறிதல், அரிது என்பர்கள் - அருமையெனக்கூறுவர், அடி இணை - இரண்டுகால்களை, கமலமலர் என்பர்கள் - தாமரைமலர் என்பார்கள், இனைய - இப்படியமைந்த, அழகியர் - அழகிய மங்கையரின் (உறவு,) என்செய - யாதுபயன் கருதி, அமையும் - அவருடன்கொண்ட தொடர்புசாலும் இனிவேண்டேன், (அவர்) மறி - மானையும், மழு - மழுவினையுமுடைய, கரன்என்கிலர் - திருக்கரங்களையுடையான் என்றுகூறார், மறலியை - யமனை, முனியும் - கோபிக்கின்ற, அரன் என்கிலர் - அரன்எனுந்திருநாமமுடையான் என்று கூறார், மதிபொதி - சந்திரனையணிந்த, சடிலசரன் - சடைமுடிகொண்டான், என்கிலர் - என்னார், மலைமகள் - மலையரையன்குமரியாகியபார்வதிபிராட்டி, மருவு - பொருந்திய, புயன்என்கிலர் - திருப்புயத்தையுடையான் என்னார்கள், செறிபொழில் - நெருங்கிய சோலைகள், நிலவு - தங்கிய, தில்லைஎன்கிலர் - திருத்தில்லை என்னார், சிவகதி - பரகதியாகிய சிவகதியை, அருளும் - அநுக்ரகஞ்செய்யும், அரசு என்கிலர் - தலைவன்என்னார், அறிவு இன்றி - அறிவு இல்லாமல், நரகுஉறுவர் - நரகம் அடைவர், எ - று.

(வி - ரை) கேசாதிபாதாந்தம் உறுப்புகளைத்தனித்தனியுவமைப்படுத்திக்கூறியதனால் காதற்சிறப்பும், பல மாதர்களுக்குற்ற அழகினுஞ்சிறப்புடைமையுங்கூறிற்றும். நெறி, இதனைமுழக்கத்தில் வடுஎன்பர். அன்றிகுழலின்வேறுபாடாகிய ஐம்பால் என்னும் பனிச்சை, குழல், சுருள், கொண்டை, முடி, முதலியவுமாம். பனிச்சைபின்னிவிடுதல், குழல் சுருட்டிமுடித்தல், சுருள் பின்னேசொருகல், கொண்டை பக்கமாகமுடித்தல், முடி உச்சியின் முடித்தலாம். குழல், உட்டுளையுடைய பொருளின்பொது, ஈண்டு பண்பாகுபெயராய்க்கூந்தலைபுணர்த்திநின்றது. அறல், இது நீரின்வெள்ளம் எக்கரும் பள்ளமுமாகஉள்ள இடத்தில் பாய அதனாலுண்டான இடையிடையற்றகருமணலுக்கு ஆகுபெயராயிற்று.

குழலைக்கண்டார், அதினழகினைக்கண்டு நீங்காது நீங்கி நுதலைக்காண அதனைநோக்குந் தோறும் நோக்குந்தோறும், அமுதகிரணத்தால் தேவர்க்கும் ஏனையோர்க்கும் இனிமையைத் தரும் மதிபோல் இன்பத்தைத் தருதல் எண்ணிநிழலெழுமதி என்றார். நிழலெழுதல் ஒளியேயன்றிக் கூந்தலாகிய மேகத்தில் மறைதலொழிந்து வெளிகொண்டு தோன்றிய மதி என்னலுமாம். மதி, மது, இ, எனப்பகுத்து அமுதகிரணமுடையது எனக்கொள்க. மதியம், என்பதில் அம், சாரியை. நிலவு, தான்விளங்கி உலகத்துப் பைங்கூழ் முதலியவற்றைத் தளிர்ப்பித்தல்போல், தன்னிடங்காதல்கொண்டு வாடிய வுள்ளப்பயிரைத் தளிர்க்கச்செய்தலின் அந்நகை நோக்கினார் நிலவினும் வெளிதென்றார். காதலிக்குங் காமுகர்க்கு உள்ளத்தைக்கவர்வது காதலிக்கப்படுவாளிடத்து

முகமும் முலையுமாதலின்,முதற் கண்முகத்தினகத்தழகு கூறிப்பின்முலைநோக்கினர் எம்முள்ளங்கவரவந்த பொற்கலசமோ என்பார் கலசமுலையென்றார். இதனை, நிறம்வருமுலை கலசம் எனக்கூட்டி, மார்பினெழுந்த முலைகள்பொற்கலசமென்னினுமாம். தேகத்திற்கு இடையாக நின்று தாங்குதலின் இடையென்றார். இது மிகு நுண்ணிதாகலின் இன்மையும், தனக்கு மேற்பட்டவுறுப்புகளைத் தாங்கலின் உண்மையும்பற்றி நிற்றலின், அறிகுவதரிது என்றார். அறிகுவது, என்பதில், கு, சாரியை. இவ்விடை என்பதில் வகரம், தொகுக்கும்வழி தொக்குநின்றது.

ஒருகொம்பில் பலமலர் மலர்ந்ததுபோலுள்ளாளைத் தாங்குவதென்னென்று ஆராயப்புகுந்தார் தாள்நோக்கித் தானுள்ளநீரை அலங்கரிப்பதுபோல் என்னுள்ளத்தையும் அலங்கரித்தலின் கமலம் என்றார், கம், ஜலம், அலதி, பூஷயதிதிகமலம், ஜலத்தைப்பூஷிப்பது என்பது பொருள். கமலமலர், இது இருபெயரொட்டு முன்மொழியாகுபெயர். அவ்வாறாகிய குணத்தொகையுமாம். இவரோடாடலும் ஊடலும் உவகையும், வாடலும், கேடும், வருத்தமும் விளைத்தலாலும், சிற்றின்பமாதலாலும், அறம், புகழ்,கேண்மைமுதலியவற்றைக்கெடுத்தலாலும், மறுமைக்கு வித்தாய் நிரயத்துச் சேர்த்தலாலும், இவரோடிருக்கின் இனித்தீமையே நேருமெனத் தெளிந்தா ராதலாலும், அமையும் என்றார். இதனை "சுருள்புரிகூழையர் சூழலிற்பட்டுன் றிறமறந்திங், கிருள்புரியாக்கையிலே கிடந்தெய்த்தனன்." எனவும், "மாழைமைப்பாவியகண்ணியர் வன்மத்திடவுடைந்து, தாழியைப்பாவு தயிர் போற்றளர்ந்தேன்." எனவும் "மின்கணினார்நுடங்கு மிடையார் வெகுளிவலையிலகப்பட்டுப், புன்கணனாய்ப் புரள்வேனை" எனவும், அருளிய மணிவாசகங்களாலறிக.

எல்லாமாயுள்ள உன்னை நோக்க அவ்வின்பம் சிறிதும்பொருளாகா ஆதலின் அவை பொருளல்லவற்றைப்பொருளாகக்கொண்ட மருளர்க்கே யாம்; எம் போலிகளுக்காகா என்பார் என்செய என்றார். சரணடையின் பகைவராயினும் அருள்புரியும் கருணாகரன் என்பார் மறிமழுவுடைய கரன் எனவும், உலகத்துயிர்களைத்தத்தம் காலவெல்லையின் ஊழின்வகை நடத்தும் கூற்றனையும் தம்மடியரை நெருங்கின் தண்டிக்கும் பேராற்றலுடையான் என்பார் மறலியை முனியும் என்றார். சுட்டியுணரப்பட்ட பிரபஞ்சம், அவ்வாறு சுட்டி யுணரப்படாது எவ்வுலகும் ஒன்றாயறிந்து நிற்கும் சங்காரகர்த்தாவினிடம் பரதந்திரமாய் நிற்பதன்றித் தனக்கெனச் சுவதந்திரமுடைத்தன்று ஆதலாலும், எல்லாக் கடவுளரையும் தன்னுள் ஒடுக்கித் தானேதனித்துநிற்றலினானும் அரன் என்றார்.

ஆணவாதி கன்மங்களால் பலபிறவிகளினும் துன்புறுவார்க்கும் சாபத்தாற் கீழ்ப்பட்டு வருந்துவோருக்கும் அரணாயுள்ளான், இவன் முன்னொருகாலத்து மதிக்கு உடல்குறையநேர்ந்த சாபத்தைப்போக்கி யருளினவன், என்ப

வற்றைக் குறிப்பிட மதிபொதிசடிலதரன் என்றார். அடைந்தார் துயர்போக்கி ஆட்கொள்ளும் அருளுருக்கொண்ட வுலகமாதாவுடன் கூடி நம்மையாள்வோன் என்பார் மலைமகள் மருவு புயன் என்றார். மலைமகள், நான்காம் வேற்றுமைத்தொகை. மலை, எல்லாவளங்களும் குறைவின்றி நிறைந்த மலையரயனைத் தெரிவித்துநின்றது. பேரைக்கூறினும் பாவம் விலகுமாதலின் திலையென்கிலர் என்றார். திலை என்பதில் லகரம் தொகுத்தல். மற்றையமுத்திகளிற்செல்லினும் மீண்டும். பிறப்புண்டு, ஈதொன்றுமேபிறவாமையைநீக்கிப் பேரின்பந்தருவது என்பார் சிவகதி என்றார். அவனைத்தியானிப்போர்மனதில் அநவரதத் தாண்டவந் தரிசிப்பித்து முத்திதருவான் என்பார் இறை, அரசு என்றார். இங்ஙனம் கூறியதனானே சகலகண்ணாயிருப்பானை யெண்ணாது வீணே வாணாளைப் பெண்கள் கலவியில் கழித்து நரகக்குழியிலாழ்ந்து போம் உயிர்களையெண்ணி இரங்கிச்சிந்தாமணி யொப்பானாகுஞ் சிவனைத்தொழுக என இரக்கமுற்றுக்கூறியதென்பது விளங்குகின்றது. இது அக்காமச் சிற்றின்பத்தினும் இவனது திருநாமங்களைக் கூறும் பெருமையே சிறந்ததெனக் கூறுதலின் பெருமையணியும், ஒரு சொல்லேபலவிடங்களில் வருதலின் சொற்பின்வருநிலையும் ஆம். (கரு)

நேரிசையாசிரியப்பா.

கசு அறிவி லொழுக்கமும் பிறிதுபடு பொய்யுங்
கடும்பிணித் தொகையு மிடும்பை யீட்டமு
மினையன பலசரக் கேற்றி வினையெனுந்
தொன்மீ காம னுய்ப்ப வந்நிலைக்
கருவெனு நெடுநக ரொருதுறை நீத்தத்துப்
புலனெனுங் கோண்மீ னலமந்து தொடரப்
பிறப்பெனும் பெருங்கட லுறப்புகுந் தலைக்குந்
துயர்த்திரை யுவட்டிற் பெயர்ப்பிட மயர்ந்துக்
குடும்ப மென்னு நெடுங்கல் வீழ்த்து
நிறையெனுங் கூம்பு முரிந்து குறையா
வுணர்வெனு நெடும்பாய் கீறிப் புணரு
மாயப் பெயர்ப்படு காயச் சிறைக்கலங்
கலங்குபு கவிழா முன்ன மலங்கன்
மதியுட னணிந்த பொதியவிழ் சடிலத்துப்
பையர வணிந்த தெய்வ நாயக
தொல்லெயி லுடுத்த தில்லை காவல
வம்பலர் தும்பை யம்பல வாணநின்
னருளெனு நலத் தார் பூட்டித்
திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே.

(பொ - ள்) அறிவுஇல் - முன்வருதலையாராய்ந்து செய்யாத, ஒழுக்கமும் - நடையும், பிறிதுபடு - மனதைவேறுபடுத்துகின்ற, பொய்யும் - பொய்ம்மையும், கடுபிணித்தொகையும் - கொடுமையைச்செய்கின்ற நோயின்கூட்டமும், இடும்பைபாட்டமும் - இவையல்லாத துன்பக்கூட்டங்களும், இனையன - இவ்வகைத்தான, பலசரக்கு - பலவிதப்பட்டசரக்குகளை, ஏற்றி - வர்த்தகத்திற்குரிய பொருளாக ஏற்றிக்கொண்டு, வினையெனும் - தீவினையென்கிற, தொல்மீகாமன் - அடிப்பட்டமாலுமி, அந்நிலை - (அம்மரக்கலத்தை) அதுநிலைத்த அந்நிலையினின்று, கருவெனும் - மாதாவின் கருப்பையென்கிற, நெடுநகர் - பெரியபட்டினத்தின், ஒருதுறை - ஒப்பற்றதுறைமுகத்தைநோக்கி, உய்ப்ப - செலுத்த, நீத்தத்து - வெள்ளத்துச்செல்லத்தொடங்குகையில், புலன்எனும் - பஞ்சேந்திரியங்களென்கிற, கோள்மீன் - வலியுள்ள சுறாமீன்கள், அலமந்து - சுழன்று, தொடர - (அம்மரக்கலத்தைக் காலநோக்கித்தீங்குசெய்ய) பின்பற்ற, பிறப்பெனும் - பிறப்பென்கிற, பெருகடல் - மகாசமுத்திரத்தில், உறப்புகுந்து - மிகுதியாகச்சென்று, அலைக்கும் - வருத்துகின்ற, துயர்திரை - துன்பமாகிய அலைகளின், உவட்டின் - பெருக்கினால், பெயர்ப்பிடம் - நிலைபெயர்கையில், அயர்த்து - நொந்து, குடும்பம்என்னும் - குடும்பம் என்கிற, நெடுகல் - பெரியமலையில், வீழ்த்து - மோதப்பட்டு, நிறைஎனும் - மனஅடக்கமென்னும், கூம்பு - பாய்மரம், முரிந்து - பிளவுபட்டு, குறையா - குறைதலில்லாத, உணர்வுஎனும் - அறிவுஎன்கிற, நெடுபாய் - நீண்டபாயினை, கீறி - கிழித்து, புணரும் - தீமைகள்நெருங்கிய, மாயப்பெயர்படு - மாயம் எனும் பெயரைப்பெற்ற, காயசிறைக்கலம் - உடல் என்கிற காவலாகியமரக்கலம், கலங்குபு - கலங்கி, வீழாமுன்னம் - வீழ்ந்துகெடுதற்குமுன், பொதிஅவிழ் - முருக்கவிழ்ந்த, அலங்கல் - மாலையினை, மதியுடன் - சந்திரனுடன், அணிந்த - சூடிய, சடிலத்து - திருச்சடையின், பைஅரசுஅணிந்த - படத்தையுடைய பாம்பினை அழகுபெற அணிந்த, தெய்வநாயக - தேவர்தேவனே, தொல் - பழமையாகிய, எயில் உடுத்த - மதில்சூழ்ந்த, தில்லை - திருச்சிற்றம்பலத்திற்கு, காவல - தலைவனே, தும்பை - தும்பையானது, வம்பு - காலமல்லாக்காலத்தும், அலர் - மலருகின்ற, அம்பலவாண - திருச்சிற்றம்பலத்தையிடமாகக்கொண்டானே, நின் - தேவரீருடைய, அருள்எனும் - திருஅருள்என்கிற, நலத்தார் - நல்லவடத்தை, பூட்டி - சேர்த்து, திருவடி - திருவடியாகிய நெடுகரை - பெருங்கரையினைச் சேர்த்தும் ஆறு - சேர்த்தும் வழியை, செய் - கருணைபுரிவாயாக. எ - று.

(வி - ரை) அறிவின்மையாவது, தமக்கு அறிவிருந்தும் அதனை நல்வழியில் செலுத்தாமை. அது உலகத்தார் உண்டென்பதில்லையென்பதும், அறிவின்முதுமைபெறாமையும், தம்மிடமுள்ள குற்றத்தைநீக்காமையும், பிறவுமாம். பொய்மையாவது, உள்ளதையின்மையாகக்கூறுதல். பிறரைவஞ்சித்தற்கு வேண்டுமுபாயங்களை எக்காலத்து மாராய்ந்து கொண்டிருந்தலிதனை பிறிதிபடுபொய் என்றார். வாதபித்த சிலேத்மாதிகள் ஒன்றையொன்று நெரு

க்குதலால் ஒன்றினொன்று வேறுபட்டுப்பலபிணிகள்தோன்றிப் பல ரோகங்கள்உண்டாதலால், கடும்பிணித்தொகை என்றார். கர்மவசத்தால் ஆன்மாவினுடலைப்பிணித்தலின் பிணியெனப்பட்டது. கடுமை, அது தொடர்ந்தாரைச் செய்யுந் துன்பத்தைக்குறித்த அடை. இடும்பையீட்டம்,அழுக்காறு,வெகுளி அவா, சூது, காதல், கவறு, கள்ளுணல் முதலியபிற. மரக்கலம்,தான்ஒரு துறை நீங்கிவேறுதுறைக்கு வாணிகத்தின் பொருட்டு நீங்குகையில் ஒரு படித்தல்லாதபல வேறுவகைப்பட்ட பொருள்களைப்பலரிடப்பெற்று நீங்குதலின் பல சரக்கு ஏற்றி என்றார். மீகாமன், பலநாள் மரக்கலஞ்செலுத்தப்பழகியடிப்பட்டுவருதலின் தொன் மீகாமன் என்றார். வினைதான், ஆன்மா சநநமெடுக்கத் தொடங்கிய நாள்முதல் ஆன்மாவைத்தன்வசப்படுத்தி நடத்துதலின் வினையெனுந்தோன்மீகாமன் என்றார்.

பலவகைப்பட்ட பிறவிகளில் தத்துளுப்புப்பட்டு ஆண்டுபெற்ற வுருவங்களுக்கேற்ற நடைமுதலியகொண்டு நடித்துக்கொண்டு இருத்தலின் கருவெனு நெடுநகர் என்றார். நெடுமையீண்டுப் பலநாள் பிறவிநீங்காமையையுணர்த்திநின்றது. நீத்தம்,நீந்தக்கூடிய புனல். தொழிற்பெயர் வலிந்துநின்றது. நீத்தம் என்றார்,அப்புனலிடையே மரக்கலஞ்செல்லுதலின். கோண்மீன், என்பதற்குச் சுறுவெனப் பொருள்கூறிய தென்னெனின், அம்மீன்கடலின்கணுள்ள ஏனையமீன்களையடக்கி அரசாயிருத்தலினென்க. கோள்-வலிமை. மீன், மின்என்பது முதனீண்டு நின்றதொழிற்பெயர். பொருள் மின்னுதலையுடையது. புலன்களைந்தும் மனதை ஒருவழி நிறுத்தாது தாம் எண்ணியவாறு தம்வசப்படுத்தி யீர்த்துச் செல்லுதலின் புலன் எனுங் கோண்மீனென்றார்.

கடலில் தன்கண்ணுக்குக் காணப்படும் பொருள்களைத்தினையும் கவரச்சென்று இரையல்லாமைகண்டு மயங்கிச்செல்லும் மீன்போல் புலன்களும் மனதைப் பொருளல்லாப் பொருள்களிடம் செலுத்தி அது உண்மையல்லாப்பொருளாக மனங்காண அதனுடனீங்குதலின் அலமந்து தொடர என்றார். கடலிடை அலைகள், ஒன்றுதோன்ற ஒன்றடங்கி மற்றதடங்க வேறொன்றுதோன்றுதல்போல் இடைவிடாது ஒருபிறப்புநீங்க வேறுபிறவிகொண்டும் மற்றது நீங்கக் கர்மவசத்தால் வேறொருடல்தாங்கியும் வருதலின் பிறப்பெனும் பெருங்கடல் என்றார். தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும் “பிறவிப் பெருங்கடனீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார். என்றார். இதற்குப் பரிமேலழகியார் “காரணகாரியத்தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின் பெருங்கடலென்றார்.” என்றுகூறியதுகாண்க. கப்பலை மீகாமன் கடலில் தானே செலுத்தல்போல், பிறப்பில் காமனை யெனதிச்சைவழிசெல்லாது கர்மஞ்செலுத்தச் சென்றேனென்பார் உறப்புகுந்து என்றார்.

காற்றினால் அலைகள் பெயருந்தோறும் மரக்கலம் தன்னிலைநின்று பெயர்ந்து மாறிக் கலங்குதல்போல் நாளும் காமவெகுளிமயக்க முதலிய துயர்க

விடைப்பட்டு மயங்கிக் கலங்கினேன் என்பார் துயர்த்திரை.........அயர்த்து என்றார்.

மீகாமன் செலுத்தச்செல்லும் கலம், செல்லுகையில் பெருங்காற்றால் அலைக்கப்பட்டுக் கடலிலுள்ள மலைப்பாறைகளில் மோத அதனால் கலம் சேத முறுதல்போல் குடும்பமென்கிற மலையில் மோதப்பட்டு எனது இயற்கை மறந்தேன் என்பார் நெடுங்கல் வீழ்த்து என்றார். கூம்பு, தான், காற்றின்வே கத்தைத் தன்னிடந்தொடுத்துள்ள பாயின்வழிக்கொண்டு நின்று அக்காற்றின் வழிச்செலுத்தல்போல் நிறையும் தான் கூம்புபோன்று உயிர்க்கு ஊறுசெய் யுந் தீமையாதி குணங்களைப் பகுத்துநின்றறிவித்தலின் நிறை எனுங்கூம்பு என்றார். பாய் எவ்வாறு பரந்து காற்றுமுழுதையும் பெற்றுத் தன்னிடங் கொண்டு மரக்கலத்தைச் செலுத்தத்தக்க கருவியாகவுள்ளதோ அதுபோல் அறிவும்,மனம் புத்தி சித்த மகங்காரமாகிய அந்தக்கரணங்கள் தம்தொழில் களை யிச்சைப்படி செலுத்தாமல் தன்வழிச் செலுத்துவித்தலின் குறையா வு ணர்வு என்றார்.இவ்வாழ்க்கை,தோன்றிவளர்ந்து சுகித்துநெடுநாளிராமல்காற் றின்வழி கலங்கவிழ்தல் போல் நீங்குதல் ஓர்மாயவித்தைபோலும் என்பார்மா யப்பெயர்ப்படுகாயம் என்றார்.இவ்வகைப்பிறவியாகிய கடலில் கலமாகிய உட லநின்று வாழ்தல் உண்மையன்று ஒருநாள் அழிவது திண்ணம் என்பார் கலங் குபுவீழாமுன்னம் என்றார். இவ்வாறு திருவாதவூரடிகளும் பிறவியைக் கட லாகக் கூறினமை "தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத் தடந் திரையாலெற்றுண்டு பற்றொன்றின்றிக், கனியை நேர்துவர் வாயாரென்னுங் காலாற் கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட், டினியென்னேயுய்யுமா றென்றென்றெண்ணி யஞ்செழுத்தின் புணைபிடித்துக்கிடக்கின்றேனை,முனை வனே முதலந்தமில்லா மல்லற் கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்கனேற் கே." என்பதால் அறிக.

அலங்கல் மதி என்பதற்கு, பலசந்திரர்களை மாலையாகக்கொண்ட மதி மாலை எனப்பொருள் கொள்ளினுமாம். என்னை; ஊழிகள்தோறுங் கெடும் மதிகளைத்தான் மாலையாகக்கொண்டு தன்னழியா நிலைகண்டு உலகர் உய்ய நிற்பானாதலினென்க. விருப்பு வெறுப்பில்லான் என்பார் முரண்கொண்ட மதியினையும் பாம்பினையும் பகைமை தீர்த்தாண்டமைதோன்ற மதியுடன் அரவணிந்த என்றார். இறந்துபிறக்குந் தேவர்களுக்கு அவ்வாறு இறவாதான் தலைவனாகவேண்டுதலின் தெய்வநாயகன் என்றார். இதனை "தேவர்கோவறி யாத தேவதேவன்" எனத் திருவாசகத்திலும், "அவன்கண்டாய் வானோர் பிரானாவானென்றும், அவன்கண்டா யம்பவள வண்ண - னவன்கண்டாய், மைத்தமர்ந்த கண்டத்தான் மற்றவன்பா னன்னெஞ்சே, மெய்த்தமர்ந்தன்ப யிரு." எனும், அம்மைதிருவாக்கானும், "காணாதலக்கின்றார் வானோர்கள் காளத்திப், பூணாரமார்வன்றன்பொற்பாத - நாணாதே, கண்டிடுவோன் யானி ருக்கேன் காணீர்கடனஞ்சை, யுண்டிடுவான்றன்னையொருங்கு." என நக் கீரர் அருளினமையானும் அறிக. வம்பு - அகாலம், இதனை வம்புகாய் என

உலகவழக்காற் காண்க. தில்லையின் தெய்வத்தன்மை குறிப்பிக்க வம்பலர் தும்பையென்முர். கார்காலத்தும் பனிக்காலத்தும் மலர்தலும், வேனிற்காலத்து அழிதலுடைமைபோலாது எக்காலத்து மலர்தலின் இவ்வாறுகூறினுர்.

அருள் என்பது சிவசத்தி, அது ஆன்மாக்களை முத்தியிற் சேர்ப்பிக்குங் கருணைகொண்டு அதனைப்பரிபாகப்படுத்தத் திருவருள்செய்யுந்தொழிலால் பெற்ற காரணப்பெயர். பூட்டுதல், காற்றால் கரைகாணுது அலமரும் மரக்கலத்தை துறையிலுள்ளார் காக்கக்கடன்பூண்டு வடமுதலியகொண்டு பூட்டியீர்த்துக் கரைசேர்த்தல்போல் பிறவிக்கடலில் மயங்கு முடலாகிய கலன்கவிழா முன் சிவமாகிய கருணையுருக்கொண்டாள் தனது சத்தியாகிய வடத்தைச்சேர்த்தலாம். பிறவியாகிய கரையிலாக்கடலிடைப்பட்டு அலமருமுயிர், கரைகண்டாலுண்டாம் பேராநந்தம் ஏனைய ஆநந்தங்களினும் மிக்கதாகலின் நெடுங்கரை என்முர். கரைசேர்ந்தார் மரணமென்னும் பயத்தினின்று நீங்குதல்போல் இவ்வடியைச் சேர்ந்தார் பிறவிக்கேதுவாகிய காமவெகுளி மயக்கங்களி னின்று நீங்கி முத்தியங்கரையிற் சேர்தலின் திருவடி நெடுங்கரை என்முர். இதனுல், தீயொழுக்கம், பொய், பிணி, துன்பமுதலிய கொண்டு வினையாற் கருவிடைப் பட்டுத்தோன்றி ஐம்புலன்களால் வருந்திக் குடும்ப பாரங்கொண்டு அறிவு முதலிய இழந்து தேகமழியுமுன் தேவதேவனே உமது திருவருளால் திருவடியாகிய பேராநந்தமருள்செய் என்பது கூறப்பட்டது. ஆறு, என்பது ஆனத்தொக்குநின்றது. இதில் முதலிரண்டடிக்கணுள்ள உம்மைகள் எண்ணுப்பொருளன. இந்நேரிசையாசிரியப்பா விழுமியபொருள் பயப்பத் தம்முள் இயைபுடைய உவமையையும் பொருளையும் வேற்றுமையின்றி யொன்றெனக்கொண்டு முடிந்தமையின் ஒருவகையியைபுருவகவணியின்பாற் படும். வேண்டுகோளணியுமாம். (கசு)

வெண்பா.

கஎ. செய்ய திருமேனிச் சிற்றம் பலவருக்கென்
றையல் வளைகொடுத்தல் சாலுமே—யையன்றேர்
சேயே வருமளவிற் சிந்தாத மாத்திரமே
தாயே நமதுகையிற் சங்கு.

(இ - ள்.) செய்ய - செந்நிறங்கொண்ட, திருமேனி - திருமேனியையுடைய, சிற்றம்பலவருக்கு - திருச்சிற்றம்பலமுடையார்க்கு என்தையல் - என்குமரி, வளைகொடுத்தல்-வளையல்களைநீங்குதல், சாலுமே- நிரம்புமா. (என்றுதாய்வினவ அதற்குத்தோழிவிடையாக) தாயே-தாயாயமைந்தாளே, ஐயன்தேர்-தலைவனதுதேர், சேயேவரும்அளவில் - தூரத்தில் வருகையிலேயே, நமதுகையில்-நமதுகையிலுள்ள, சங்கு-சங்குவளைகள், சிந்தாதது-கழலாதது, அமாத்திரமே - அம்மாவன்மையேயாம். (எனக்கூறினுள்.) எ - று.

(வி - ரை.) சிந்தாதமாத்திரமே - என்பதற்குக் கழன்று சிந்தாதமாத்திரமோ என்றுங்கூறுப. இது தாயும் தோழியுங்கூறிய கூற்று. தாய்வினுவ

அதற்குத்தோழி விடைகூறியதாகக் கூறியதாம். பொருளின்பொருட்டும் வேறுபல்வகையினும் பிரிந்த தலைமகனதுதேர், பதி நோக்கிவரக்கேட்ட தலை வி வளை அணிமுதலிய இழந்தவை தாய் தோழிக்குக்கூறத் தோழி உவகை யுடன்விடைகூறுதலாம். தேர்வரவுகேட்ட துணையானே வளைமுதலிய இழத் தலை திருக்கோவையார் இளையர் எதிர்கோடற்றுறையில், "யாழின்மொழி மங்கைபங்கன் சிற்றம்பலத்தானமைத்த, வூழின்வலியதொன்றென்னை யொ ளிமேகலையுகளும், வீழும்வரிவளை மெல்லியலாவிசெல்லாதமுன்னே, சூழுந் தொகுநிதியோடன்பர்தேர்வந்துதோன்றியதே." என்பதாற்காண்க. இவ்வ கைத்தோழி நற்றாய்க்குக்கூறவே, அந்நாயகனைக்கண்ட சராசரங்களெல்லா முருகியவன்வயப்படுமெனின் நீயும் நானும் உன்குமரியும் உடலுமுள்ளமும் கரைதல் வியப்பன்றென்றவாறும். என்னெனின் ஆண்பால்களுள் இவனோ டொத்தாருமில்லை, மிக்காருமில்லை, குறைபட்டாரல்லது. எக்காலத்தும் எவ்விடத்தும் ஞானத்தானும் குணத்தானும் உருவினானும் திருவினானும் பொருவிலனாகலின் என்க. இறைவனுக்கு நிறம் வெண்மையேயாயினும் அவனது பஞ்சகிருத்தியத்திற்குத் தகத் திருமேனியினிறம் வேறுபடுதலி னவ்வைவகைத் திருமேனியி னீண்டுசெய்ய திருமேனி கூறினான் அது அவளது நோக்கங் கவர்ந்தமை எண்ணிபோலும். செய்யதிருமேனியின்வரப் பினை "நீளாகஞ்செம்மையரன்" எனவும் "செக்கர்போலாகத்தான்செஞ்சடை யும்." எனவும் கூறிய திருவாக்குகளாலறிக. தையல், என்பது அழகு, ஈண்டு பண்பாகுபெயராய் எக்காலும் யாண்டுங் குணத்தானும், உருவானும், திருவி னானும், ஒத்தாரு மிக்காரு மில்லாத் தலைமகளை யுணர்த்திநின்றது. திருமேனி என்னுமிடத்துத் திருகண்ட தலைமகளால் விரும்பப்பட்ட தன்மைநோக்கம்.

இளமைதொட்டு என்சொற்கடவாது நின்று ஈண்டு வேறுபட்டு என் னிற்கடந்து களவொழுக்கம் பூண்டாளென்பது தோன்ற என் னையலென் றார். வளை, ஆகுபெயர். வளை கழிபெருங்காமத்தால் தானேகழலுதலின் வளை கொடுத்தல் என்றார். வேட்கை மிகுதியான் வளை ஆடைஅணிமுதலியசோரு மென்பதை "சோருந் துகிலும் வளை கலை நாணுந்துணிந்துமடல்" என்பதா லறிக. அம்மா என்பதில் மகரம்தொகுத்தல். மாத்திரம் என்பது மாத்திரை யென்னும் வடமொழி வேறுபாடு. சங்கு பொருளாகுபெயராய் அதனாலாகிய வளையைக்குறித்து நின்றது. நவமணி வளையணியாது சங்குவளை யணிந்தது என்னையெனின் சமயதிதுக்கமிதிசங்கஃ எனும் வித்பத்தியால், துக்கத்தைப் போக்குதல் பற்றியென்க. சங்கம், துக்கத்தைப்போக்குவதுஎன்பதுபொருள். தானும் உடன்பட்டுச்செய்வித்த புணர்ச்சியைத் தாய்கோபிப்பாளாகஎண்ணி அவளையும் தன்னுடுபடுத்தி நமதுகையிற் சங்கு என்றாள். இவ்விருவிகற்பத் திருகுறணேரிசை வெண்பா காமச்சுவைபட நின்றமையின் சுவையென்னு மணியின்பாற்படும். (கஎ)

கலித்துறை.

௩௮. சங்கிடத்தானிடத்தான்றனதாகச்சமைந்தொருத்தி
யங்கிடத்தாடில்லையம்பலக்கூத்தற்கவிர்சடைமேற்
கொங்கிடத்தார்மலர்க்கொன்றையென்றாயெங்கைநீயுமொரு
பங்கிடத்தான்வல்லையேலில்லையேயுன்பசப்பொழியே.

(பொ - ள்.) தில்லை அம்பலக்கூத்தற்கு - திருத்தில்லையின் திருச்சிற்றம்பலத்தில் ஆநந்தநிருத்தஞ்செய்தருளும் கூத்தப்பிரானுக்கு, சங்கு இடத்தான் - சங்கமென்னும் பாஞ்சசன்யத்தை யிடதுகரத்தில் தாங்கின திருமால், இடத்தான்ஆக - இடதுபாகத்தில் மூலசத்தியாக அமைந்திருக்க, ஒருத்தி - வேறொருத்தி, அங்கு - அவ்விடத்தில், தனது இடத்தாள் ஆக - இடதுபாகத்திலுள்ளவளாக, சமைந்து - ஏற்பட்டு (இருக்க), எங்கை - என்தங்கையே, அவிர்சடைமேல் - விளங்கும் சடைமீதுள்ள, கொங்கு - மணம், இடு-அமைந்த, அமலர்க்கொன்றைதார் என்றாய்-அந்தக்கொன்றைமலர்மாலையை விரும்பினாய், (அவ்விருவருங்கொண்ட பங்கேயன்றி) நீயும் ஒருபங்கிடவல்லையேல் - நீ ஒருபங்குசெய்துகொள்ள வல்லையாயின் (செய்), இல்லையேல் - இல்லாவிடின், உன்பசப்புஒழி-உன்பசப்பினை நீங்கு. எ - று. தான் - அசை.

(வி - ரை.) இது பரத்தை இறைவனைத்தானும் அணுகவேண்டுமென்று மனங்கொண்டாளாய் நிற்பதறிந்த தலைவியவளைத்தானும் அந்த எண்ணமுற்றவளாதலின் தங்கையெனவிளித்து, மூலசத்தியாகிய திருமாலும், பார்வதிபிராட்டியும் இறைவனது இடப்பாகத்தை நீங்காதிருக்க, நானும் அவனை விரும்பியபங்குள்ளவளாக இருக்க, நீயும் ஒருபங்கிட்டுக்கொள்ளவல்லையேல் செய் அல்லையாயின் அவனுக்குக்கொண்ட பசப்பையொழியென விலக்கினாளென்பது கருத்து. இதனால் ஆன்மா, மனத்தைநோக்கி நிஷ்களனாகிய இறைவன் ஆன்மாக்கள்பொருட்டுச் சகளத் திருமேனிகொண்டு எழுந்தருளி அனுக்கிரகிக்கு முறைமையில் அறியாதிருக்கு மனதை நோக்கி மனமே அவனையணுகப்பெறுவையேல் உனது மலநோய்விண்டு உண்மையாகிய அவனது நிஷ்களத்திருவுருவில் மலர்மணம்போனிற்பாய் என உள்ளுறை அறிவித்ததுமாம்.

காப்புக்கடவுளாகிய மாலை இடதுபுறம் பெற்றானெனவே ஏனைப்பிரமனை வலப்புறம்பெற்றானென்பதும் தான் இடையாய் நாயகனாய் நின்று முத்தொழி வியற்றுவோனென்பதும் பெறப்பட்டது. மாலை இடப்புறமாகப் பெற்றானென்பதை “இடமால்வலந்தானிடப்பாறுழாய் வலப்பாலொண்கொன்றை, வடமாலிடந்துகிரேல்வலமாழியிடம்வலமா, னிடமால்கரிதால்வலஞ்சேதிவனுக்கெழினலஞ்சேர், குடமாலிடம்வலங்கொக்கரையாமெங்கள்கூத்தனுக்கே” என்பதாலறிக. பிராட்டி தவம்புரிந்து இறைவனது வாமபாகத்தையென்றும் பிரியாது வரம்பெற்றதனால் ஒருத்தியங்கிடத்தா ளென்றார்.

இதனை "வலந்தான்கழலிடம்பாடகம்பாம்பு வலமிடமே, கலந்தான் வலநீறி டஞ்சாந்தெரிவலம்பந்திடமென், பலந்தார்வலமிடமாடகம்வேல் வலமாழியிடஞ், சலந்தாழ் சடைவலந்தண்ணங்குழலிடஞ்சங்கரற்கே" எனவும், "கங்கை வலமிடம் பூவலங்குண்டலந்தோடிடப்பாற், றங்குங்கரம் வலம்வெம்மழுவீ யிடம்பாம்பினிவலஞ், சங்கமிடம்வலந்தோலிடமாடைவலமக்கிட, மங்கஞ்சரி யம்பலவாணிவலங் காணிடமணங்கே." எனவும், "அடுத்தசெஞ்சடையொருபுற மொருபுறமளகந்,தொடுத்தகொன்றையோர்புறமொருபுறமலர்த்தொடையல், வடித்தசூலமோர்புறமொருபுறமலர்க்குவளை, திடத்திலார்கழலொரு புறமொ ரு புறஞ்சிலம்பு." எனவும், "பச்சைவன்னமற்றொருபுறமொரு புறம்பவளங், கச்சுலாமுலையொரு புறமொருபுறங்கவின்மா, ரச்சநீக்கியவரதமொன்றபய மொன்றங்கை, யிச்சையாமிவருறுதல்கண்டிறைஞ்சினரிமையோர்." எனவும் வருவனவற்றானறிக. ஒருபாதியில் மாலும் மற்றொருபாதியில் உமையு மெழுந்தருளினமையை "ஒருபாலுலகளந்தமாலவனுமற்றை,யொருபாலுமை யவளாமென்றா—லிருபாலும், நின்னுருவமாக நிறந்தெரிய மாட்டேமால், நின்னுருவோ மின்னுருவோ நேர்ந்து." என்பதாலறிக. அனைத்து மழிந்த சர்வசங்காரகாலத்துச் சிவத்துடன் தாதான்மியமாய்த் தனித்துநிற்றலின் அச் சிவசக்தியை ஒருத்தியென்றாரெனினுமாம். இங்ஙனமாலையும் சத்தியையும் ஒருபுறங்கூறவே அவனது விசித்ர சக்தியை வியந்துகூறியதாம். தோழி அவன் தனித்திருப்போனென்றும், நமதுள்ளக்கருத்தை ஒருவரு மறியா ரென்றுமெண்ணினாய் அவன் திருமால் சத்திமுதலியவருடன்கூடி நிற்றலின் உனது கருத்து முற்றுறாது எண்ணியதொழியென்றதுமாம். அவன் ஆன் மாக்கள்தோறு நடிக்குங் கள்வன் அவனிடத்து நீ மயல்கொண்டு உன்வய மாக்குவான் எண்ணினை அதனையொழியென்பாள் கூத்தன் என்றாள்.

பொன்போல் விளங்குஞ் சடையுடையான் என்பாள் அவிர்சடை யென் றாள். இயற்கையாகத் தெய்வமணமிடுவதென்பாள் கொங்கிடு எனவும், அடிய வர்களால் தொகுத்து அணியப்படாதது என்பான் தார் மலர்க்கொன்றை யெனவும் கூறினாள். ஏனையமலர்மாலை எனது காதனோய்க்கு மருந்தாகா அதுவே வேண்டுமென்பாள் அத்தார்மலர்க்கொன்றையென்றாள். இதனால் திருஅடையாளமாலை குறிப்பிக்கப்பட்டது. என் தங்கை என்பது எங்கையெ ன மருவியது. தோழி, யுடன்பிரியாது தலைவியைக்காப்பவளாதலின் அவ் வொற்றுமைநோக்கி யெங்கையென்றாள்; அன்றித் தோழியை எங்கை எனும் மரபுபற்றியுமாம். அதனை "சிலைமலிவாணுதலெங்கையதாகமெனச் செழும் பூண், மலைமலிமார்பினுதை பத்தந்தான்றலைமன்னர்தில்லை, யுலைமலிவேற் படையூரனிற்கள்வரில்லென்ன வுன்னிக், கலமலிகாரிகைகண் முத்தமாலைக ளூழ்ந்தனவே." எனுந்திருக்கோவையார் கலவியிடத்தூடற்றுறையில் எங்கை யென்றதாலறிக. அவன் அனைத்துயிருமாய் நிற்போன் அவனே யிச்சைகொ ள்ளினன்றி நீயே வசப்படுத்தல் கூடாமையென்பாள், வல்லையேல் என்றாள். ஒருகூறுமாலும்,ஒருகூறு சத்தியும்,ஒருகூறுநானும்,ஒருகூறு நீயுமாகக் கொள்

வோமாயின் அவன் திருவுருநம்பாகமேயாய் அவன் உரு, அருவமாம். அவ்வகையருவமாகவே நீ அவனை அணையவேண்டுமென்னு மெண்ணம் பாழாம். பாழாக அவனையெண்ணிக் காதலால் நீகொண்ட பசப்பு உடனே நீங்குமென்பாள் பசப்பொழியென்றாள். பசப்பு என்பது பிரிவாற்றாமையான் வருவதோர் நிறவேறுபாடு. அது கணவனைக் காணப்பெறுவழி நிகழ்வது. இல்லையேல் எனுமிடத்து ஏல் தானடைந்த முற்றை யெச்சமாக்கவந்த இடைச்சொல். இது சுவையென்னும் அணி, காமச்சுவைபட நின்றது. (கஅ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கக. ஒழிந்ததெங்களுறவென்கொலோவெரியி லொன்னலார்கள் புரமுன்னோர்நாள், விழுந்தெரிந்துதுகளாகவென்றிசெய்த வில்லி தில்லைநகர்போலியார், சுழிந்தவுந்தியி லழுந்திமேகலை தொடக்க நின்றவர்நடக்கநொந், தழிந்தசிந்தையினும் வந்ததாகிலுமொர் சிந்தையாயொழிவதல்லவே.

(இ - ள்) எங்கள்உறவு - எனக்கும் தில்லைநகர்க்க ணுள்ளாருக்கும் இருந்தஉறவு, ஒழிந்தது - நீங்கியது, என்கொல் - இதுஎன்ன (புதுமை), எரியில் - தீயினிடத்து, ஒன்னலார்கள் - பகைவரது, புரம் - திரிபுரங்கள், முன் - பூர்வத்தில், ஓர்நாள் - ஒருகற்பத்தில், எரிந்துவிழுந்து - எரிந்து அழிந்து, துகள்ஆக - புழுதிபட, வெற்றிசெய்த - வெற்றியைக்கொண்ட,வில்லி- வில்லைத்தாங்கிய நடராசமூர்த்தி யெழுந்தருளியிருக்கும், தில்லைநகர்போலியார் - தில்லைநகரத்தையொத்த பெண்களது,சுழிந்த - சுழலைப்பெற்றிருக்கிற, உந்தியில்அழுந்தி - கடிப்பிரதேசத்தில் முழுகி, மேகலைதொடக்க- (அவ்விடமிருந்து நீங்க எண்ணுகையில் அவர் அணிந்துள்ள) மேகலையென்னும் அணி தடைசெய்து தொடர்ப்படுக்க, நின்று - தடையடைந்து நின்று, அவர்நடக்க- அம்மாதர் இடம்விட்டுப்பெயர, (கால்கள் வருந்துமென) நொந்து - மனம் வருந்தி, அழிந்த - தன்னிலைநின்றுமாறியழிந்த, சிந்தை-மனமானது,இனும்- (அவ்விடம்நின்று) இப்போதும், வந்ததாகிலும் - என்பொருட்டு மீண்டதாயினும், ஒருசிந்தையாய் - ஒருவழிப்பட்டமனமாக, அது ஒழிவது அல்ல - அது ஒழியாதாகும். எ - று.

(வி - ரை.) இது, தலைமகன், தலைமகளது உறுப்புக்களையும் அவ்வுறுப்பின் காரியங்களையு மெண்ணியழிந்தமனம் ஆண்டுநின்று மீண்டதாயினும் ஒருமனமாகாதென்று அழுங்கிக் கூறலாம். தன்னைப்போலத் தில்லைநகரையொத்தவரது ஆசைவலைப்பட்டாரும் இவ்வகை வருந்துவரென்னத்தம்போல்வாரைத் தன்னொடுபடுத்தி எங்களுறவென்றார். அவரைச்சேர்ந்தார் பேரானந்தத்தழுந்தி மீளாநிலைகொள்ளுதல் இயற்கையாக, இவ்வாறு அழுங்கல் சாலப்புதுமையென்பார் என்கொல் என்றார். இங்குகொல் என்னும் இடைச்சொல்லை அசையாக்காது வியப்பிடைச்சொல்லாக் கொள்ளினுமாம். என் என்

பது விகுவினைக்குறிப்பு வினைக்குறியாது கவற்சி குறித்தது. எரியில் என்னும் ஏழனுருபை மூன்றுவதன் ஏதுப்பொருளாகக் கொள்ளினுமாம். முன் ஓர்காலத்தில் தம்மை மதியாதிருந்த திரிபுராதிகளை மதித்து வணங்கும் வண்ணம் அவர்கொண்ட செருக்கினை யடக்கி ஒன்றுதாரை ஒன்றுவித்தாருதலின், ஈண்டு நான் தில்லைநகரையொத்தாரது ஆசையென்னுஞ் சுழியிற் பட்டு மீண்டு மேலெழாது நிற்கும் என்மனதை ஒருப்படித்தாக ஒன்றுவிப்பான் எனுங் குறிப்புத்தோன்ற வென்றிசெய்த வில்லியென்றார். ஒன்றுஅலார் என்பது ஒன்னலார் எனமெலிந்து நின்றது. பொருள் மனத்துடன் பொருந்தாதார் அதாவது பகைவர்.

புரம் எனும் பால்பகாவஃறிணைப் பெயரீண்டு முப்புரங்களை யுணர்த்திநின்றது. இறைவன் புராரியாய்த் தகனஞ்செய்தது தாருகாக்ஷன், கமலாக்ஷன், வித்துன்மாலிமுதலிய அசுரர் இருக்கையேயன்றி வேறுபுரங்களையு மவ்வாறு செருக்குற்றகாலத்தில் நீறுசெய்யும் இயல்புளான் என்பார் ஓர்நாள் என்றார். என்னையெனின் இது விண்டுவை அம்பாகவும், வேதங்களைக் குதிரைகளாகவும், பிரமனைச் சாரதியாகவுங் கொண்டுசெய்த வெற்றி, மற்றொன்று வேதங்கள் தேராகவும், உபநிடதம் குதிரைகளாகவும், பிராட்டி சாரதியாகவும், பிரணவம் சவுக்காகவும், காலசக்ரம் வில்லாகவும், மாயை நாணாகவும், பாசுபதம் அத்திரமாகவும் சென்றுபகாக்ஷனை வெற்றிகொண்டது. மற்றொன்று விண்டலம் தேராகவும், வாயு குதிரையாகவும், அக்னி வில்லாகவும், சந்திரன் நாணாகவும், வருணன் அம்பாகவும், குமாரக்கடவுளைச் சாரதியாகவுங்கொண்டு சத்ததந்துவின்புரத்தைவென்றது. நாள் ஆகுபெயராய்க் கற்பத்தை யுணர்த்தியது. விழுந்தெரிந்து என்னுமிடத்து எரிந்து என்பதை முன்கூட்டிப் பொருள்கொள்க எரிந்த பின்னரே விழுதலாதலின். வெற்றி இத்தகைத்தெனச்செய்து காட்டினுறுதலின் வென்றிசெய்த என்றார். வலியன எவற்றினையும் அடக்கியாளும் பேராற்றலுள்ளான் என்பார் ஆற்றல்தோன்ற வில்லி என்றார். குலத்தாலும் ஒழுக்கத்தாலும் அழகாலும் தன்னையொத்தாள் என்பது குறிப்பிக்கச்சுழிந்த வுந்தியென்றார். என்னையெனின் உத்தமசாதிப்பெண்களுக்கு உந்திவலஞ் சுழித்தலின் என்க. அதனை "துய்த்திடுநாபிவலஞ்சுழித்தாழ்ந்தாற்றொலைவிலாத்திருவளம் பெருகும்." எனக்கூறிய பரஞ்சோதியார் வாக்காலுணர்க. நீர்ச்சுழி, இரண்டுவெள்ளங்கள் மாறுபடவுண்டாகும் பெரும்புழைகொண்ட சுழல். அதனிற் பட்ட பொருள்கண் மீண்டும் மேலெழாது அழுந்தும். அவ்வாறு இவ்வுறுப்பாகிய சுழியிற்பட்டு என்மனம் மீளாநிலைபெற்றதென்பார் அழுந்தியென்றார்.

அவ்வகை என்முயற்சியால் மீளினும் ஆண்டு அணிந்துள்ள இடையணியாகியமேகலைத்தொடக்கநின்று தடையுற்றதென்பார் நின்று என்றார். மேகலை, பவளக்கோவையெட்டினாற்செய்த அணி. அது அல்குன்மேலணிவது. இதனை "எண்கோவை மேகலைகாஞ்சி யெழுகோவை, பண்கொள் கலாபம்பதினாறு - கண்கொள், பருமம்பதினெட்டு முப்பத்திரண்டு, விரிசிகையென்றுணரற்

பாற்று.” என்பதனாற்காண்க. இவற்றின் கோவைகள் வடநூலொடு மாறுபடு கின்றன. அவை, காஞ்சி ஒருகோவையும் மேகலை எண்கோவையுமுடையவென் பர். மென்மையும் அழகும் மனக்கவர்ச்சியும் உடையார் என்பார் அவர் என்று பன்மை கூறினார். “அனிச்சமும் அன்னத்தின் தூவியுமாதர் அடிக்கு நெருஞ் சிப்பழம்.” என்பவாகலின், இவ்வகை மெல்லியவடி வலிந்த நிலமிசை வருந் தும்வண்ணம் நடத்தல் பொருதார் நடக்கநொந்து என்றார். நடக்க எனும் எச்சம் நொந்து எனும் வேறுவினைகொண்டது. இவ்வகை அவயவத்துஅழுங் கியவற்றிடை தேனிடை வண்டெனப்பட்டு மீளாநிலையடைந்த தென்பார் அழிந்த சிந்தையென்றார். இனும் என்பது எதிர்காலமுணர்த்துமிடைச்சொல், னகரம் தொக்குநின்றது. வந்தது என்பது இயக்கமில்லதை இயங்குவதுபோ லக்கூறும் வழுவமைதி. அது புலிபார்க்கச்சென்றார் ஆண்டு அதற்கிரையா னாற்போல் மீளாது அங்ஙனமொருகால் மீளின் ஒருவகைப்படா தென்பார் ஒருசிந்தையாயொழிவதல்ல என்றார். அன்றி மீளினும் அவர்வழிபட்டே யொழியுமன்றி வேறாகாதென்னினுமாம். அதாவது ஆன்மாஅவன்வழிப்பட்டு அவனது திரு உறுப்புகளை நோக்குதலாலுண்டாகிய பேரின்பத்தை அனுப விக்கு மிடத்து ஒருகால் பண்டைய பயிற்சி வயத்தான் உலகவாதனைக்கண் மீளினும் அது அம்மீண்ட ஆன்மாவினைப் பந்திக்காது அம்மெய்ப்பொரு ளிடம் மனஞ்செல்லுதலால் என்பது உள்ளுறை. இனும் என்பதினும்மை எதிரது தழீஇயது. ஆகிலும், எனும் இடைச்சொல் நெஞ்சது சிறப்பும் மன த்தது கவற்சியுங் குறித்து நின்றது. அழிந்த சிந்தை என்பது “படுமகன் கிடக்கை காணூஉ” என்பதுபோல் நின்றவழுவமைதி. ஏ, அசை, இதுவுஞ் சுவையெனும் அணி. (௧௯)

நேரிசையாசிரியப்பா.

௨0. அல்லல் வாழ்க்கை வல்லிதிற் செலுத்தற்குக்
கைத்தே ருழந்து கார்வரு மென்று
வித்து விதைத்தும் விண்பார்த் திருந்துங்
கிளையுடன் றவிரப் பொருளுடன் கொண்டு
முளைமுதிர் பருவத்துப் பதியென வழங்கியு
மருளா வைய வரம்பிடை நடந்து
மிருளுறு பௌவத் தெந்திரங் கடாஅய்த்
துன்றுதிரைப் பரப்பிற் குன்றுபார்த் தியங்கியு
மாற்றல் வேந்தற்குச் சோற்றுக்கடன் பூண்டுந்
தாளுழந் தோடியும் வாளுழந் துண்டு
மறியா வொருவனைச் செறிவந்து தெருட்டியுஞ்
சொற்பல புனைந்துங் கற்றன கழறியுங்
குடும்பப் பாச நெடுந்தொடர்ப் பூட்டி

யைவ ரைந்திடத் தீர்ப்ப நொய்திற்
பிறந்தாங் கிறந்து மிறந்தாங்கு பிறந்துங்
கணத்திடைத் தோன்றிக் கணத்திடைக் கரக்குங்
கொப்புட் செய்கை யொப்பின் மின்போ
லுலப்பில் யோனிக் கலக்கத்து மயங்கியு
நெய்யெரி வளர்த்துப் பெய்முகில் பெயறருந்
தெய்வ வேதியர் தில்லை மூதூ
ராடகப் பொதுவி னாடக நவிற்றுங்
கடவுட் கண்ணுத னடமுயன் றெடுத்த
பாதப் போதும் பாய்புலிப் பட்டு
மீதியாத் தசைத்த வெள்ளெயிற் றரவுஞ்
சேயுய ரகலத் தாயிரங் குடுமி
மணிகிடந் திமைக்கு மொருபே ராரமு
மருள்பொதிந் தலர்ந்த திருவாய் மலரு
நெற்றியிற் றிகழ்ந்த வொற்றை நாட்டமுங்
கங்கை வழங்குந் திங்கள் வேணியுங்
கண்ணிடைப் பொறித்து மனத்திடை யழுத்தியாங்
குண்மகிழ்ந் துரைக்க வுறுதவஞ் செய்தன
னான்முகன் பதத்தின் மேனிகழ் பதந்தா
பெறுதற் கரியது முண்டோ
பெறுதற் கரியதோர் பேறுபெற் றேற்கே.

(இ - ள்.) அல்லல் - துன்பத்தைத்தரும், வாழ்க்கை - இல்வாழ்க்கையினை, வல்லிதின் - வலிவாகசெலுத்தற்கு - நடத்திக்கழிப்பதற்கு, கார்வரும் என்று - மழைக்காலம் இனிவரும் என்று, கைத்து - கையிலுள்ளதாகிய, ஏர் உழந்து - ஏரின் முயற்சியாகிய உழுதற்றொழிலைச்செய்து, வித்து விதைத்தும் - விதைகளை விதைத்தும், விண்பார்த்திருந்தும் - வானத்தின் மழையைப்பார்த்திருந்தும், மூளை - நெற்பயிரின் நாற்றுக்கள், முதிர் பருவத்து - முதிர்ந்து நடும்பருவகாலத்தில், மருள் ஆம் - மயக்கத்தைச்செய்கின்ற, வையம் - பூமியினிடம் (செய்யப்பட்ட) வரம்பிடை - கழனியில், நடந்து - சென்று, தவிர் - அறிவுடையவர்களால் கொள்ளப்பெறாத, அப்பொருள் - அந்தப்பொருளை, கொண்டு - கூலியாகக்கொண்டு, கிளையுடன் - நண்பர் முதலிய உறவினருடன், பதியென - நடவுத்தொழிலியற்றுக என, வழங்கியும் - அதிகமாகத்தந்தும், இருள் உறு - இருள் அடைந்த, பவ்வத்து - கடலில், எந்திரம் மரக்கலத்தை, கடாஅய் - செலுத்தி, குன்று பார்த்து - (மீகாமனுக்கு அடையாளமாகவுள்ள) மலையின் இலக்கை நோக்கி, திரைதுன்று - அலைகள்

8

நெருங்கிய, பரப்பில் - துறைமுகத்தில், இயங்கியும்-சென்று வாணிகஞ்செய்
தும், ஆற்றல் - சேனாபலத்தையுடைய, வேந்தற்கு - அரசனுக்கு, சோற்றுக்
கடன் பூண்டும் - கூலிக்காகச்செய்யவேண்டிய கடமைகளைச்செய்தும்,
தாளாழ்ந்து - (மற்றும் வேறுதொழில்களையெண்ணி) முயன்று, ஓடியும் -
(பல இடங்களில்) ஓடித்திரிந்தும், வாள் உழந்து - வாள்தாங்கிப்போர்த்தொ
ழில் செய்து, உண்டும் - சீவித்தும், அறியா ஒருவனை - முன்பு நண்பில்லாத
ஒரு புதியவனை, செறிவந்து - நெருங்கிவந்து, தெருட்டியும் - (தன்னையின்னா
னெனத்தானே சென்று) அறிவுறுத்தியும், சொல் பல புனைந்தும் - பலகவி
மாலைகள் பாடிப்புகழ்ந்தும், கற்றன - (தான் அருமையாகக்) கற்றகவிகளை,
கழறியும் - (அவன் களிப்படையும்படி) பிரசங்கித்தும், குடும்பப்பாசம் -
இல்வாழ்க்கை யென்னும் பாசமாகிய, நெடுந்தொடர் - நீண்ட சங்கிலியை,
பூட்டி - மாட்டி, ஐவர் - பஞ்சேந்திரியங்களாகிய ஐந்துவீரர், ஐந்து இடத்து-
(ஒருவருடன் ஒருவர் ஒற்றுமையுறாத) ஐந்து இடங்களில், ஈர்ப்ப - இழுக்க,
நொய்தில் - (நான் அவர்களுடன் மறுத்து என்னையடக்க வலியிலேனாதலால்)
எளிதில் தானே, பிறந்த ஆங்கு - (எனது பழவினையால்) பிறந்த தேகத்து
டன், இறந்தும் - அவ்வுடலைவிட்டும், இறந்த ஆங்கு - உடல் நீங்கிய காலத்
திற்றானே, பிறந்தும் - மீண்டும் வேறுடல்கொண்டும், கணத்திடை - ஒரு
க்ஷணகாலத்தில், தோன்றி - பிறந்து, கணத்திடை - மறுக்ஷணத்தில், கரக்
கும் - ஒழிந்துபோகின்ற, கொப்புள் - நீர்க்குமிழியையும், ஒப்பில் - வேறொ
ன்றை ஒப்பிடமுடியாத, மின் - மின்னலினையும், போல் - ஒத்த, செய்கை -
தொழில்களையுடைய, உலப்பில் - அளவுபடாத, யோனிக்கலக்கத்து - பிற
வியின் கலக்கத்தில், மயங்கியும் - மயங்கியுழன்றும், நெய் எரிவளர்த்து -
நெய் சொரிந்து காருகபத்யமுதலிய வேள்வித்தீயை வளர்த்து, பெய்முகில்-
மழையைப்பெய்யத்தக்க மேகத்தை, பெயல்தரும் - பெய்யும்படி செய்விக்
கும், தெய்வவேதியர் - தெய்வத்தன்மைதங்கிய மூவாயிரம் வேதியர் எழுந்த
ருளியிருக்கும், தில்லை - திருத்தில்லையாகிய, மூதூர் - பழம்பதியில், ஆட
கப்பொதுவில் - கனகசபையில், நாடகம் - ஆநந்தத்தாண்டவத்தினை, நவிற்
றும் - செய்தருளுகின்ற, கண்ணுதற்கடவுள்-திருநுதற்கண் நேத்திரத்தினை
யுடைய நடராஜமூர்த்தி, நடம் முயன்று - திருநடனஞ்செய்ய திருவுள்ளப்
பாங்காகி, எடுத்த - தூக்கிய, பாதப்போதும் - திருவடித்தாமரையும், பாய்
புலிப்பட்டும் - பாய்கின்ற புலித்தோல் ஆடையும், மீதுயாத்து - மேலே வரி
ந்து, அசைத்த - இறுக்கிக்கட்டிய, வெள் எயிறு - வெண்மையாகிய பற்களை
யுடைய, அரவும் - பாம்பும், சேய் உயர் - செம்மையாக உயர்ந்த, அகலத்து -
விரிவினையுடைய, ஆயிரம் குடுமி - ஆயிரஞ்சிரங்களிலும், மணி கிடந்து -
மாணிக்கங்கள் தங்கி, இமைக்கும் - பிரகாசிக்கின்ற, ஒருபெரு ஆரமும் -
ஒப்பில்லாத பெரிய அரவாபரணமும், அருள்பொதிந்து - கருணை நிறைந்து,
அலர்ந்த - மலர்ந்துள்ள, திருவாய் மலரும் - மலரையொத்ததிருவாயும், நெற்
றியில் - திருநெற்றியில், திகழ்ந்த - விளங்கியுள்ள, ஒற்றை நாட்டமும் - ஒரு
திருநேத்ரமும், கங்கை வழங்கும் - கங்கை உலாவும், திங்கள் - சந்திரனை

யணிந்த, வேணியும் - திருச்சடையும், கண் இடை - கண்ணில், பொறித்து-
பதித்து, மனத்திடை - மனதில், அழுத்தி - அழுந்தவைத்து, ஆங்கு - அவ்வி
டத்திற்றானே, உள் மகிழ்ந்து, மனம் களித்து, உரைக்க - ஜபிக்க, உறுதவம்-
அதிகதவத்தினை, செய்தனன் - அடியேன் செய்துமுடித்துள்ளேன். பெறு
தற்கு அரியது - பந்தமுள்ளோரால் அடைதற்கு அருமையதாகிய, பேறு -
பெரும்பேற்றினை, பெற்ற எற்கு - பெற்ற எனக்கு, நான் முகன்பதத்தின் -
பிரமனடைந்துள்ள சத்தியவுலகத்திற்கு, மேல்நிகழ் - அப்பால் விளங்குகி
ன்ற, பதம் - அந்த உண்மைமுத்தி, பெறுதற்கு - அடைதற்கு, அரியதும்
உண்டோ-அருமையாகவும் உளதாகுமோ, எளிதே. (எ-று.) தான்-அசை.

(வி - ரை.) அடியேன், பலவகைப்பட்டயோனிகளிற் பிறந்து மிறந்
தும் பலமுயற்சிகளைச்செய்தேனாயினும் அவனது திருவுருப்புகளை காயத்
தாலும் மனத்தாலும் வாக்காலும் அனுபவிக்கத் தவஞ்செய்தேனாதலால் பிர
மன் முதலியவர்க்கும் அரிதாகும் அச்சிவபதத்தை யெளிதில் அடைவேன்
என்பது கருத்து. வாழ்க்கை என்பதீண்டு இல்வாழ்க்கை, அஃது அறஞ்
செய்தற்குரிய இருவகைநிலையுள் முதலாயினும், மனையாளுடன் மனமொத்
துச்செய்யின் அறமும், அவ்வாறு செய்யாது இருமனப்பட்டுச்செய்யின்துன்
பமும் விளைத்தலின் அவ்வில்வாழ்க்கை எனவும், சிற்றின்பஞ் சின்னீரதாயினு
மதையடைந்தார் மற்றின்பங்களெல்லாங்கைவிட்டு அவ்வாழ்க்கைத் துணைவி
யின் வயப்பட்டு அவளொழுகு மாறுவொழுகலின் வல்லிதின் எனவும், அவ்
வில்வாழ்க்கை யெனுஞ்சகடம் வாழ்க்கைத்துணைவியும் துணைவனுமாகிய இரு
வரும் மனமொத்து ஈர்ப்பினன்றிச் செவ்வன் செல்லாதாகலின் செலுத்தற்கு
எனவும், கூறினார். கைத்து. கைபகுதி, த்சந்தி, துஒன்றன்படர்க்கை விகுதி.
எல்லாச்செல்வ வருவாய்க்கும் உயிர்களின் சீவனத்திற்கும் உழவுகாரணமாத
லின் அதை மேற்கொண்டாரதனை விடாது உடன்கொண்டிருத்தலின் கைத்
தேருழந்து என்றார். இதனை "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்
லாந் தொழுதுண்டு பின்செல்பவர்" எனவும், உழுதுண்டு வாழ்வதற்கொப்
பில்லை கண்டீர்பழுதுண்டு வேறோர்பணிக்கு" எனவும், கூறியவற்றாற்கா
ண்க. உலகத்துயிர்களுக்கு இன்றியமையா உணவாதிகளுக்கும் மற்றெல்
லாச் செல்வங்களுக்கும் கடவுளர்பூசனை முதலியவற்றிற்கு முதற்காரண
மழையாதலால் கார்வரும் என்றார். இதனை "நீரின்றமையா துலகெனின்யார்
யார்க்கும், வானின்றமையா தொழுக்கெனவும், "தானந்தவமிரண்டுந் தங்கா
வியனுலகம் வானம் வழங்காதெனின், எனவும், சிறப்பொடு பூசனைசெல்
லாதுவானம் வறக்குமேல் வானோர்க்குமீண்டு" எனவும், கூறியவற்றானறிக.
கருமை எனும்பண்பு முதனிலைகார் எனநின்று மேகத்திற்காய் அதுமழை
க்கும் காலத்திற்கு மானமையின் மும்மடி யாகுபெயர்.

இது புருஷன் தான் இல்லறமுடையன் ஆயின் அவன் மடியைக்கொண்
டொழுகா நிலையாகிய தாளாண்மை கூறிற்றும். அவ்வகை யொழுகுமிடத்து

பொருள் தேடுதற்கண்ணதாகிய தாளாண்மை பல அவற்றுள் முதன்மையாய்க்குற்றமிலாததாய்ப்பாபத்திற்கு மூலமாகிய வஞ்சனை சூதுமுதலிய புரியாது பொருள்பெறும் வருவாயாகிய உழுதற்றொழிலை முற்கூறிப்,பின் கொள்வது மிகையுங்கொடுப்பது குறையுமாகாது ஒப்ப நாடிச்செய்வதாகிய உத்தமமாகிய வாணிகத்தினையும், பின் அரசனிடத்தும் ஏனையரிடத்திலும் வேதனத்தின் பொருட்டுச்சேவிக்குமடிமைத்தொழிலும் முறையே கூறினர். அதில் முதற்கண் கூறியது உத்தமமும் இடை நின்றது மத்திமமும் கடைக்கண்ணது அதமமும் ஏனைய அத்மா அதமமுமாகக்கொள்க. கார்காலம் நோக்கித்தெளிவுடன் விதையை விதைத்தலின் விதைத்து எனவும், விதைத்தபின் நீர் நிலையில்லாரும் உள்ளாரும் பசியால் தாய் முகநோக்குங்குழவிபோல் பைங்கூழ் வாடுதலைக்கண்டு வருந்தலின் விண்பார்த்திருந்தும், எனவும், (விண் இடவாகுபெயராய் மழையையுணர்த்தியது.) அங்ஙனம் மழைபெய்தபின், பதஞ்செய்த கழனிகளில் நாற்றுகளைத் தாமுஞ்சுற்றத்தவருமேயன்றிக் கூலிகளுக்கும் பொருள் வழங்கி நடவுசெய்தலின் பதியெனவழங்கியுமென்றார். பதியெனவழங்கியுமென்பதற்குச் சக்ரவர்த்தியைப்போல் ஏற்பார்க்கு வரையாது உதவியும் எனப்பொருள் கூறுதலும் ஒன்றும். வழங்குதல் ஏற்பார் மாட்டு ஒன்று கருதாது ஈதல். முளை, நாற்றிற்கு ஆகுபெயர். பருவம், கணு, அது காலத்தினங்கமாதலால் சினையாகுபெயர். இல்லதை உள்ளதுபோல் மெய்ப்படக்காட்டி இனிமை செய்து அதில் சத்தியபுத்தியுண்டாகப்புருடனதறிவை வேறு செய்தலின் மருளாம் வையமென்றார். ஆகும் எனும் எச்சம் இடைகுறைந்து ஆம் என நின்றது. வரம்பு, ஆகுபெயராய்க் கழனியையுணர்த்திற்று. நடந்தும், என்பதில் உம், சாரியை. ஆழ்ந்த ஆழி தான் ஆழங்கொண்டபோது அதினிறைந்த நீர் இருளடைந்த அப்பிலத்தினிறங்கொண்டு கருமையாக நிற்றலின் இருளுறு பௌவம் என்றார். யந்திரம், என்பது எந்திரம் என முதனீண்டது. கடாஅய் எனும் சொல்லிசை நிறைக்க வந்தவுயிரளபெழுந்த வினையெச்சம், இயங்கியென்னும் செய்தெனெச்சஞ் கொண்டது. துன்றுதிரை வினைத்தொகை நிலைத்தொடர். திரையென்பது ஆகுபெயராய்க் கடலையுணர்த்தியது.

காற்றின் மோதுதலால் பலசிறு அலைகளும் பேரலைகளும் தோன்றி மறைதலால் துன்றுதிரை யென்றார். பரப்பினைக்கொண்ட நிலத்தைப்பரப்பு என்றது ஆகுபெயர். இது பாரெனவும் விகாரமுறும். குன்று சிறுமலை அது ஈண்டு மீகாமனுக்கு மரக்கலஞ்செலுத்தி அதனைத்துறை முகத்தடைவிக்கத் துணையா நிற்றலின் குன்றுபார்த்து என்றார். மரக்கலஞ்செலுத்துவார், அகன்ற நீர்ப்பரப்பில் தாம் செல்லுமிடத்தைச்சேர்வதற்கு, அறிகுறியாக நீர்க்கண்ணும், பார்க்கண்ணும், உயர்ந்த குன்றுகளைக்கண்ணுகைக்கொண்டு துறையடைதல் மரபு பற்றியிவ்வாறு கூறினர். இவ்வாறே பிறரும், “பவக்கடல் கடந்து முத்தியங்கரையிற் படர்பவர்திசைப்பற நோக்கித்தவக்கல நடத்தவுயர்ந்தெழுஞ் சோணசைலனே கைலைநாயகனே” எனக்கூறினதறிக. ஆற்

றல், ஆகுபெயராய் நால்வகைப்படைகளை யுணர்த்தி நின்றது, அவை, ரத கஜ துரக பதாதியென்பனவாம். அன்றி அரசன்; இந்திரன், வாயு, யமன், சூரியன், அக்னி, வருணன், சந்திரன், குபேரன் முதலிய அம்சத்தால் பிறந்திருத்தலினாலும், மற்ற மனிதரினும் விசேஷ ஒளியுள்ளவனுதலாலும், சூரியனைப்போலத்தன்னைக்காண்போர் மனதையும் கண்களையுங் கவர்தலின், ஆற்றல் வேந்தன் என்றூர் எனினுமாம். சோற்றுக்கடன், அரசரும் அவன் வழிப்பட்டாரும் ஏவுவித்த் செய்தலும் ஏவாதனை விலக்குதலுமாம். இது அவன் கொடுத்த கூலிக்கு உழைப்பு; அங்ஙனமுழையாது, வாளாவிருப்பின் தண்டமுறுவனுதலால், அதனைக்கடன் என்றூர். அது தான், இயற்கையாய் பிறவியில் வாராமல் தானே மேற்கொண்டதாதலால், பூண்டு என்றூர். உலகத்துள்ளானொருவன், ¹ஒருவயிற்றெம்பர்குவேண்டிய முயற்சிகளை மடியிலாது பல இடங்களிற்சென்று நாடவேண்டுதலின், தாளுழந்து என்றூர். இவ்வாறன்றிக் கால்கள் வருந்தப்பல விடங்களில் ஓடித்திரிந்தும் எனினுமாம். வாளுழந்துண்டு என்றது, செஞ்சோற்றுக்கடன் பூண்டு அரசனுக்குப்பகைவர் முதலியவர்களால் இடுக்கண் நேர்ந்தகாலத்துப்பகைவரை நிலைகலக்கிப்பரிசுதர, வுண்டு சீவித்தலையாம். செல்வத்தில் ஆவலுள்ளார், அதையெவ்வகையேனும் அடையுமுயற்சியில் உள்ளான் உலோபன் என்னின் "ஆகாதெனினும் அகத்து நெய்யுண்டாயிற் போகாதெறும்பு புறஞ்சுற்றல் போல் கொடாதவரைப்புறஞ்சூழ்ந்து திரிந்து தன்னைத்தெரிவித்து நட்புக்கொள்ளுதலின், அறியாவொருவனைச்செறி வந்து தெருட்டியென்றூர்.

புலவர் பலர், தம்வயிறு ஓம்பல் காரணமாகப் பண்டைய நல்வினை வயத்தால், பொருள் பெற்றுக்கல்வியறிவு சிறிதுமிலாக்கடையனும் பயனிலானுமாகிய ஒருவனிடத்துச்சென்று அவனை வலியனென்றும் நீகல்வியில் பாரதியென்றும் புனைந்துபாடி யதற்கொப்பபயன் சிறிது பெற்றும் பெறுதும் மீளுதலின் சொற்பலபுனைந்து மென்றூர். பெருங்கல்விமானேனும் பாடுதலறியாது அவனிடஞ்சென்று தாமறிதிற் கற்றகவிகளைப் பாடிப்பிரசங்கித்துப்பொருள் பெற்றும் பெறுது மீளுதலின்கற்றனகழறியும் என்றூர். இதனை "திருநாவலூர் நம்பிகள், "நலமிலாதானை நல்லனேயென்று நரைத்தமாந்தரையிளையனேயென்று, குலமிலாதானைக்குலவனேயென்று கூறினுங்கொடுப்பாரிலை, புலமெலாம் வெறிகமழும் பூம்புகலூரைப்பாடு மின்புலவீர்காள் அலமராதமருலகமாள்வதற்கியாதுமையுற வில்லையே" என்று அருளியதிருப்புகலூர்த்திருப்பாசுரங்களாலறிக. மனைவி தாய்தந்தையர் முதலியோரே நமக்குத்துணையென அவரைக்காக்கும் பொருட்டு உலகத்துப்பொருள் செய்தற்கு வேண்டும் முயற்சிகளைச்செய்து, மண் பொன்முதலிய பெருகச்செய்து, மறுமைப்பயன் தராத இல்லறத்தை நடத்திக், கவலை கொண்டு மயங்கி, யெவ்வுயிர்க்கும் உள்ளுயிராய் எல்லாம் வல்ல சிவமூர்த்தியைக்காப்பவனெனவுணராது, சுமைதாங்கிபோல் குடும்பத்தைத்தான் தாங்குவதாக மதித்துக், கலக்கமுற்றுத்தொடர் பட்டுக்கிடத்தலின், குடும்பப்பாச நெடுந்தொடர் என்றூர். குடும்பம் இழிவு

என்பதற்குப் பிரமானம் "திருமந்திரம் "பண்டம் பொய்க்கூரை பழகி விழுதலா, லுண்டவிப்பெண்டிருமக்களும் பின் செலார், கொண்ட விரதமுஞானமுமல்லது, மண்டியவருடன் வழிநடவாதே." என்பதாலும், மகளிரிழிவு, திருமந்திரம் 'இலை நல்லவாயினுமெட்டி பழுத்தாற், குலை நலவாங்கனி கொண்டுணலாகா, மூலை நலங்கொண்டு முறுவல் செய்வார் மேல், விலகுறு நெஞ்சினை வெய்துகொள்ளீரே." கோழையொழுக்கங்குள மூடுபாசியி, லாழநடுவாரளப்புறுவார்களைத், தாழத்துடக்கித்தடுக்ககில்லா விடிற், பூழை நுழைந்தவர் போகின்ற வாறே." எனவும், பொருளிழிவு, திருமந்திரம் "தன்னது சாயை தனக்குதவாதுகண், டென்னது மாடென்றிருப்பார்களேழைக, ளுன்னுயிர் போமுடலொக்கப்பிறந்தது, கண்ணது காணொளிகண்டு கொளீரே". "ஈட்டியதேன் பூமணங்கண்டிரதமுங், கூட்டிக்கொணர்ந்தொரு கொம்பிடைவைத்திடு, மோட்டித்துரந்திட்டது வலியார்கொளக், காட்டிக்கொடுத்தவை கைவிட்டவாறே" என்பவற்றாலும் காண்க.

இக்குடும்பம், அநாதியாய் வீசிதரங்கநியாயமாக ஆன்மாவைத் தொடர்ந்து வருதலின் நெடுந்தொடர் என்றார். பஞ்சேந்திரியங்களின் வழிநின்றியங்குமான்மா, வொன்றறிந்த தொன்றறியாதாகி, ஐந்திடத்தின் வழியாய்நின்றுதன்னையுந் தலைவனையு மறியாது இடர்ப்படுதலின் ஐவரைந்திடத்தீர்ப்பஎன்றார். இதனை "ஒன்றறிந்ததொன்றறியா தாகியுடன்மன்னி யன்றும் புலனுயவ்வைந்தெழுத்தை - யொன்றறித, வுள்ளதேயாயினது நீதனித்தனி கண்டுள்ளலவை யொன்றல்லையோர்." என்பதனாலும், "சிந்தாகுலமனிதர் சீசீசெவிமுதலாமைந்தாலு மீடழிவாலல்லரோ-வைந்திலொரு, வேட்கைய சுணமீபம் விட்டின் மீன்வண்டு, கேட்கைமுதலோரொன்றிற்கேடு." என்பவற்றானுமறிக." ஆன்மா சநநமெடுக்கையில் தான்செய்த புண்ணியபாபத்தின் வழி கருவினுள்சிரவம், பாதம், அவப்பிரசவமாகவும், பத்துமாதங்கள்சென்றுபூபதிதமானபின்னரும், பரிணமித்தும், பாலப்பருவமடைந்தும், தருணனாகியும், நரைத்தும், இறந்துமீண்டு மிருவினைக்கீடாகக்கலை முதலாகிய அசாதாரணமாகிய தத்துவங்கண் முப்பதும், சிருட்டிமுதலாகச் சங்காரமளவும் சுபதுக்கங்களையநுபவித்தற்குச் சிவனது ஆக்ஞாசத்திசெலுத்தப் பூதசாரவுடல்கொண்டு சுவர்க்கபோகங்களைப் புசித்தும், பூதவுடல்கொண்டு நரகசேடங்களைப் புசித்துத், தொலைந்தவாறே புரியஷ்டகதேகியாய்ச் சுக்லசோணிதங்களுடன் கூடிப் பூதபரிணாமமாகிய சரீரத்தைக்கன்மானு குணமாகக்கொள்ளுதலின், "பிறந்தாங்கிறந்து மிறந்தாங்குபிறந்தும் என்றார். இதனைக்"கருவினுள் அழிவதாயுங் கழிந்திடாவழிவதாயும், பரிணமித்தழிவதாயும் பாலனாயழிவதாயுந், தருணனாயழிவதாயுந் தானரைத்தழிவதாயு, முருவமேயழிவே யானாலுள்ள போதே பாருய்ய." என்பதனாலும், "பூதனாசரீரம் போனாற்புரியட்ட ரூபந் தானே, யாதனாசரீரமாகி யின்பதுன்பங்களெல்லா, நாதனாராணையுய்க்க நரகொடு சுவர்க்கந்துய்த்துத், தீதிலாவணுவா யோனிசேர்ந்திடுஞ் சீவனெல்லாம்." என்னும் சிவஞானசித்தியார் திருவிருத்தத் தாலுணர்க. இது பிர

மம்தானே பல்வகைப்பட்ட யோனியிலும் கடாகாயம்போலநின்று அவத்தையுறும் என்பார் தலையிலசநிபாதம்போல இறைவனுக்கு வேறாயான் மாவுண்டெனக்கூறிச் சித்தாந்தஞ் செய்ததாம்.

அறிவிலார் பலரும் பற்றுச்செய்வது, நிலையிலாதனவாகிய உலகவின்பங்களை நிலையுள்ளனவாகக் கருதியதனை யனுபவித்தற்கு ஆதாரமாகிய தேகமாம். அது வினையினளவாகத் தோன்றியுடனே மறைதலின் கணத்திடைத் தோன்றிக் கணத்திடைகரக்கும் என்றார். கணமென்றது, காலநுட்பத்தை. அது மூப்பது கலைகளுள்ளகாலம். க்ஷணமென்னும் வடமொழிகணமெனத் தத்பவமாயிற்று. க்ஷண, ஹிம்ஸாயாம் எனுந்தாதுவால், இம்ஸிப்பது என்பது பொருள். கொப்பூழ் தான் நீரொத்த பொருள்களிடத்தும் நீரினிடத்தும், வாயுவின் செய்கையால் ஓர் உருவமாகக்காணப்பட்டு உடனே மறைந்து தோன்றிய இடமும் காணப்படாததுபோல் அநித்தமாய் அசேதனமாய் உருவாய் உள்ள உடலும், நித்தமாய் சேதனமாய் அருவமாய் உற்றஉயிரும், வினைவயத்தாற்கூடி வினையுலந்தவாறே பண்டைய நட்பையும் பாராது நீங்குதலின் கொப்புட்செய்கை யென்றார். இதனைப் பிறரும் படுமழை மொக்குளிற் பல்காலுந்தோன்றிக் கெடுமிதோர்யாக்கை"எனவும், "நீரிற்குமிழியிளமை" எனவுங் கூறினார். மின்னல்தான், ஞாயிறு திங்கள் முதலிய ஒளிவிடுபொருள்கள் விளங்கும் ஆகாயத்தில் தானும்தோன்றி ஒளிகொண்டு நிலவுதலின்றி, தோன்றியக்கணமே யழிதல்போல், தேகியும் பிறத்தலுமிறத்தலுங் கொண்டதேகத்தைப் பலவகைப்பட்ட இன்பங்களை யநுபவித்தற்குக் கருவியாக எண்ணிக்கெடுதலின், ஒப்பின் மின்போல் என்றார். கொப்புளும், மின்னும், தொழிலுவமம். இவ்வகையே பிறரும் "கருங்கொண்மூவாய் திறந்த மின்னுப்போற் றோன்றி மருங்கறக்கெட்டுவிடும்"என்வுவமைகூறுப." இங்ஙனம் யாக்கை நிலையாமைக்குக் கூறியகாட்டுகள் பலவுளவாகலின் அவற்றையெடுத்து விரித்திலம்.

முட்டையிற்பிறப்பனவாகிய பன்னகம்பறவை கமடம் மச்சம்,முதலியனவும், வியர்வையிற்றோற்று வனவாகிய பதங்காதிகிருமி கீடங்களும், வித்திற்பிறப்பவாய் நீரினும் நிலத்தினுந்தோற்றும் புல்பூண்டுமுதலியனவும், பையிற்றோற்றுவனவாகிய நரர்மிருகமுதலியனவுமாகிய அண்டசம்,சுவேதசம், உற்பீசம், சராயுசமென்னும் எண்பத்துநான்கு நூறாயிரமாகிய வெழுவகையோனியைப்பெற்று,முதலிற்றூபரயோனியிற்றோன்றிக்கழிந்தவாறேஅதனைநீங்கிக், கிருமியோனியின் அருவினைப் புசித்துப்போக்கிப், பின்பறவை யுருப்பெற்று அதனை யொருவி, விலங்கினுருக்கொண்டு கன்மம் புசித்துப், புண்ணியமேலீட்டால் பசுவினுருக்கொண்டு கன்மாதிகளையுண்டு, கழிந்தவாறே பூர்வபுண்ய வசத்தால் மானிடப்பிறப்பில் தோன்றும். இங்ஙனம், பல்வகைப்பிறப்பில் தோன்றுகையில் எத்தனையோ சராசரங்கள் மாதாபிதாக்களாக நின்றனவாதலின் உலப்பில் யோனிக்கலக்கம் என்றார். இதனை, "அண்டசஞ்சுவேதசங்களுற் பீசஞ்சராயுசத்தோ, டெண்டரு நாலெண்பத்து நான்குநூறாயிரத்தா,

யுண்டுபல் யோனியெல்லாமொழித்து மானுடத்துதித்தல், கண்டிடிற்கடலைக் கையா லீர்ந்தினன் காரியங்காண்'' எனவும், ''எத்தனை தாயுந்தந்தையுமுற்றா ரித்தனை யன்றோவிவர்களுமிங்கே'' எனவருவனவற்றாற் காண்க. யான், எனது இச்சைவழியன்றிக்கன்ம வசத்தனாய்த் திரோதானசத்தி எனது ஞானத்தை மறைத்து ஊட்டுவிக்க, இவ்வகைத் திகைத்தேனாதலின் மயங்கியு மென்றார்.

தருசம், பௌர்ணமாசம், ஆக்ராயணம், சாதுர்மாச்யம், பசுவதேஷ்டி, அக்னிஷ்டோமம் முதலிய இஷ்டிகளை நெய்சொரிந்து அக்னி நீங்காதுவளர்த்துத் தேவர்களைக் களிப்பிக்க இந்திரன் மகிழ்ந்து மழைபொழிவிப்பானாதலின் இவ்வேள்வி மழைக்குக் காரணமாயிற்று. இது, இருவகை வேள்வியின் மானிடவேள்வி, அதிதிக்கு அன்னவிடலாலும், தேவவேள்வி, யாகாதிகார்யங்களாலுமாதலின் இவ்வாறு கூறினார். இவ்வேள்வி, மழைக்குக்காரணமென்பதை ''ஆகுதித்தொழிலினறு தொழிலாளரருமறைமனு வெடுத்தோதி, யோகையிற் சொரிநெய் தெறித்தெழும்பிதிர்வு மொலிபடுபுலிங்கமுங் கொண்டு, மேகமாய்ப்பட்ர்ந்த தூமமேயிடித்து மின்னிநீர் பொழிவனபோலும், ஈகைசால்வேள்வி மறுத்துழி மாரியின் மையேயிதற்குறுசான்றால். என்றதிருக்காஞ்சிப் புராணத்தால் அறிக. இதுவைதிகவேள்வி. சைவவேள்வி ஆசாரியர் வழியறிக. எரி எனப்பொதுப்படக் கூறியதனால் காருகபத்யம், ஆகவநீயம், தக்ஷிணாக்னி மூன்றுங்கொள்க. பஞ்சாக்னியில் ஆன்மாவுஞ், சூரியனும் வளர்த்தற்குரிய பொருள்களன்றாமாதலி னவையொழியமூன்றுமே நெய்சொரிந்து அணையாதிருக்க வேட்டலின் நெய் யெரிவளர்த்து என்றார். எரி, ஏதுப்பெயர், தன்னைச்சேர்ந்த பொருள்களைக் கெடுத்துத் தன்னகப்படுத்தலின். பெய்முகில், வினைத்தொகைக் குறிப்பெனினுமாம். இது ஆவர்த்தமென்னும் மேகம். ஏனைசம்வர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம் முதலிய பொழிவனமணி, பொன், பூ, மண், கல் தீ, முதலியவாதலின் அவற்றை யொழித்து ஈண்டு நீர்பொழிவதையே கூறினார். முகில் கடவுளர் ஆணையால் பெய்யாது நிற்பினும் வேள்வியின் வலியால் தாமே பொழியுமென்பார்தரும் என்றார்.

விபூதிருத்ராக்ஷமே பொருளாகவும் சிவனடியவரைச் சிவனாகவும் நினைந்துவழிபட்டு, வேதமோதியாகாதி கிர்த்யங்களைச்செய்து, சிவனையே முதல்வனாகக்கடைப் பிடித்து அன்பு மிக்காராய் இறைவனாணையால் ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகளாலும் புகழும் பெரும்பேறடைந்தமையின் தெய்வவேதியர் என்றார். இது எக்காலத்தும் அழிவின்றி நித்தியமாய் வேண்டுவோர்க்குஇஷ்டசித்திகளை யருளுதலினானும் ''ஒருபிரமபுரந்தன்னினுண்ணிய புண்டரிக வகத்துணர் வுக்கெய்தா, வருளிடமாகிய நுண்பேராகாய முண்டஃதே யறிஞர் தம்மாற்கருத விரும்புதுமதுவா நேடுவதும் புறப்பூதகாணந்தன்னின், மருவியவெல்லையினு மிருந்தெஞ்ஞான்றுங் குறைவின்றிவயங்கா நிற்கும்.'' என்றதால் தில்லைமூதூர் என்றார். கண்ணுதல் என்பதை நுதலில் கண்ணை

யுடையான் எனப்பிரித்துக்கூட்டிப் பொருள்கொள்க. மலத்தால் இறப்புண்டு அழுந்திக்கிடந்தவுயிர்கள் முத்தியடையும்வகைக் கருணைபூண்டு இயற்றுவதாதலின், 'நடமுயன்றெடுத்தபோது' என்றார். பாய்புலி, வினைத்தொகைக்குறிப்பு. சாதி அடையாற்றல் விளக்கிநின்றது. அராஎன்பதுகுறுகி உகரமேற்றது, குற்றுயிரின் பின்னதாகலின். "குறியதன்கீழாக்குறுகலுமதனோடுகரமேற்றலு மியல்புமாந்தூக்கின்" என்பவாகலின். இறைவனுக்கு எண்டிசையு மெண்டோளாதலின் சேயுயரகலமென்றார். இதனை "முற்றுநீறணிந்த தொடியாயிரங்கொண்ட தோளிரண்டாயிர மென்ற" அடிகள் திருவாக்கால் அறிக. "மீதுயாத்தசைத்த வெள்ளெயிற்றரவுகூறி மீண்டும் "ஆயிரங்குடுமிமணி கிடந்திமைக்கு மொருபோரரவம்"என்றது முன்கூறியது புஜங்கத்திராசமும் மற்றது புஜங்கலளிதமும் ஆம். இறைவனது அருஉருவாகிய திருமேனிக ளிரண்டும் அருளாதலின், அருள்பொதிந்தலர்ந்த திருவாய்மலரும் என்றார். இதனை "உருவருள் குணங்களோடு முணர்வருளுருவிற்றோன்றுங் கருமமுமருளரன்றன் கரசரணாதிசாங்கந்-தருமருளுபாங்கமெல்லாந்தானருட் கொன்றின்றி-யருளுருவுயிருக் கென்றேயாக்குவ னமலனன்றே." என்றதனாற்காண்க. அன்றி ஆன்மாக்கள் காரணமாக வேதாகமங்களையருளினு லருளிச்செய்தமையா னங்ஙனங் கூறினாரெனினுமாம்.

• வாய்மை என்பது, ஈறுகெட்டு வாய் எனநின்றது. உலகத்தவர்க்குப் புறவொளி நீங்கியகாலத்து அவ்வொளியினும் பேரொளியாய்ப்புறவிருளை நீக்கி நின்ற பேரொளி கொண்டதாதலின், நெற்றியிற்றிகழ்ந்த வொற்றை நாட்டமென்றார். ஒற்றை என்பதில், ஐகாரம் சாரியை. இறைவி, திருநேத்திரங்களை லீலையாகமறைத்த காலத்துத்திருக்கரங்களிலிருந்து உலகத்தவரைச்செழிப்பிக்க புகுந்ததாதலானும், பகீரதன் தவமுயன்றுவேண்ட அருள்செய்து பூமியில் நிலவியதாதலானும், கங்கை வழங்கும் என்றார். கமல், கவிள, எனுந் தாதுவால் கங்கை என்பதற்கு இறைவன் திருமுடியினின்று உலகத்தவர் பொருட்டுச் சஞ்சரிப்பது என்பது பொருள். வேணதீதிவேணி என்பதால், ஒன்றோடொன்று கூடிக்கொண்டிருப்பதென்பது பொருள் (சடை.) அவன் திருவழகைக்கண்ணாரக்களிகொண்டு நோக்கி அதனைப்பற்றுக்கோடாகக்கொள்ளுதலின் கண்ணிடைப்பொறித்து எனவும், அங்ஙனம் நோக்கியதமையாது தன் பிழைப்புக்குக்காரணமாய் மனமெனுங்குகையிடை அக்கண்ணாற்கண்ட திருக்கோலத்தை யழுந்தப்பெற்றுத்தியானித்தலின் மனத்திடையழுத்தி யென்றார். இதனை "உயிராவணமிருந்துவுற்று நோக்கியுள்ளக்குகையினுருவெழுதி,யுயிராவணமிட்டுன்கைத்தந்தால் உணரப்படுவாரோடொட்டிவாழ்தி ஐராவணமேறாதானேறேறியமரர்நாடாளாதேயாரூராண்ட, ஐராவணமேயென்னம்மானேயுன்னருட்கண்ணானோக்காதாரல்லாதாரே." எனும் திருநாவுக்கரசுகள் திருவாக்காலறிக.

அவன் திருவடியைக்கடைப்பிடித்து அவன் திருக்கோலத்தினழுந்தும் பெரும்பேற்றின் மிக்கதாக வேறு இன்பமின்றாதலாலாண்டுஅனுபவிக்கு

மானந்தம் புறத்தில் தோன்றி அவனது கல்யாண குணங்களை மகிழ்ந்து வருணிக்குமென்பார் உண் மகிழ்ந்துரைக்க என்றார். அங்ஙனமுரைக்கப்பெற்றதும் அனுபவிக்கப்பெற்றதும், அடியேன் பலசன்மங்களில் அடிப்பட்டு அச்சன்மங்கள்தோறுஞ் சிறிது சிறிதாகச்செய்ததவ மீண்டுப்பெருகிப்பலன்றந்ததென்பார் உறுதவஞ்செய்தனன் என்றார். நான்முகன்பதமெனப் பொதுப்படக்கூறியதனுனே முதனின்ற சுவர்க்கபதத்திற்கும் அப்பானின்றவைகுண்டமென்னும் விஷ்ணுபதத்திற்கும் அப்பாற் பட்ட சிவகதியாதலின் மேனிகழ்பதமென்றார். இறைவனது திருக்கோலத்தையிடை விடாது கண்ணுறநோக்கி மனத்திடையழுந்தப்பெறுதலின் என் கரணங்கள் அவன் வசத்தனவாயின ஆதலின் அடியேன் வேதாகமங்களால் கூறப்படும் அம்முத்தியினையடைவேனெனத்துணிந்து உறுதற்கரியதுமுண்டோ என்றார். இது நுதலிப்புகுதல் இதன்மேல் ஆன்மா அடையவேண்டியது வேறின்றாதலாலும், மும்மலத்தழுந்தியிடருறுவாரும் தேவர்களும் அடையா நிலையாதலாலும் பெறுதற்கரிய பேறு எனவுங்கூறினர்.

வெண்பா.

உக. பெற்றோர் பிடிக்கப் பிழைத்துச் செவிலியர்கள்
கற்றோட வோடித் தொழாநிற்கு—மொற்றைக்கைம்
மாமறுகச் சீறியசிற் றம்பலத்தான் மான்றேர்போங்
கோமறுகிற் பேதைக் குழாம்.

(இ - ள்.) ஒற்றைகை - ஒன்றாகியதுதிக்கையினை யுடைய, மா - விலங்காகிய யானையுருக்கொண்ட கஜாசுரன், மறுக - மயங்கிவருந்த, சீறிய-கோபித்த, சிற்றம்பலத்தான் - திருச்சிற்றம்பலத்து ளெழுந்தருளியிருக்கும் நடராஜமூர்த்தியின், மான்தேர் - குதிரைகள் கட்டியதேரானது, போம் - செல்லுகின்ற, கோமறுகிற் - சிறந்ததிருவீதியில், பேதைக்குழாம் - பேதைப்பருவப்பெண்கள், (அவன் அழகினைக்கண்டு தரிசிக்கவேண்டியபேர் அவாவால்) பெற்றோர் - பெற்றோராகியதாயர்கள், பிடிக்க - இளையரென்று வீதியிற் செல்லாது பிடித்துக்கொள்ளவும், பிழைத்து - அவரினின்றுதவறி செவிலியர்கள் - செவிலித்தாயர், சுற்றோட - (அங்ஙனம் பிழைத்துச்சென்ற பேதைக்குழாத்தைப் பிடிக்க) சூழ்ந்து ஓடாநிற்க, ஓடி-கால்விசைத்துச்சென்று, தொழாநிற்கும் - தொழுதுநிற்கும். எ - று.

(வி - ரை.) ஸ்ரீநடராசமூர்த்தியின் திருத்தேர் வீதிவரக்கண்ட பேதைக்குழாம், ஐம்புலனுலும் அவனையனுபவிக்கும் பேராசைமிகுந்து தாயர்தடுக்கவும் நில்லாது திருவீதியிற்சென்று, ஒருபுலனுகர்ந்த வின்பத்தினை யேனைப்புலன்களார அநுபவித்துத் தொழுதனர் என்பது கருத்து. "பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த மக்கட்பேறல்லபிற." எனவும், தம்பொருளென்பதம்மக்களவர் பொருள் தந்தம்வினையான்வரும்." என்பவாகலின், ஈன்றோர்க்குத்தம்மக்களினும் சிறந்தபொருள் வேறின்றாதலால் இப்பெருஞ்செல்

வமடைந்தாரே யிம்மைமறுமைப் பயனையடைந்தார் ஏனைய நிலையிலாத பொருட்செல்வத்தினைப் பெற்றார் அத்துணைச்சிறப்பினர் அல்லர் என்பார் பெற்றோர் என்றார். பெற்றோராகிய தாய்தந்தையரிருவரும் அப்பேதைப் பருவம் நீங்குந்துணையும் புதல்வருக்கு அப்பருவத்தால் நேரும் ஏதம் நீங்கத்தாம் காத்து நிற்பவர். அங்ஙனம் காக்கப்பட்டார்தோள்விழவு தரிசிக்கவிரும்பிச்செல்லுகையில்பேதைமையால் வீதிமருங்கில் தனித்துச்செலின் ஏதுவருமோவென்று அஞ்சிப்பிடித்தார் என்பார் பிடிக்க என்றார். காணவேண்டுமென்னும் பேரவாவால் செல்லுங்குழாத்தினைப்,பெற்றோர்தடுக்கவும் பேதையராதலின் ஒருவாறு அவரை யேமாற்றிச்சென்று காணுதலின் பிழைத்து எனவும், அங்ஙனம் பெற்றோரைப் பிழைத்துச்சென்றாரை மீண்டும் வளர்த்ததாயர் அவரிடை கொண்டகாதலால் ஓடித்தடுக்கமுயலுதலின் செவிலியர்கள் சுற்றோட எனவும், அவ்வாறு தம்மைத்தொடர்ந்து தாங்கொண்டகருத்து முற்றுறுவகைத் தடைசெய்யவாரா நின்றாரென்றுணர்ந்த மாத்திரை கைப் படாவகை யோட்டெடுத்தலின் ஓடி எனவும், இவ்வகைப் பெற்றோராலும் செவிலியராலுந் தடையுற்ற ஊறுகளை நீந்திவந்தபேறு அவனைக்காணும் பேராநந்தமாதலின் அவ்வகையருள் செய்தானைக்கண்டதுணையே களிப்புற்ற தென்பார் தொழாநிற்கும் என்றார். தொழுதது என்றது தொழாநிற்குமென்றார், அவனது திருவுறுப்புக்களைத் தனித்தனிதரிசித்த துணையானே அவ்வுறுப்புக்கள் ஒவ்வொன்றும் அப்பேதையரது கண்கள் அழுந்திப்பெயராது தோள்கண்டார் தோளே கண்டும் தடக்கை கண்டார் அதனையே கண்டும் தாள்கண்டார் தாளே கண்டும் நிற்றலின். பிழைத்து எனும் செய்தெனெச்சம் ஓடியென்னும் அவ்வெச்சங் கொண்டது. தொழா என்பதைச்செய்யா எனும் வாய்பாடாகக் கொள்ளுதலேயன்றித்தொழாநில்பகுதியாகக்கொண்டு ஒருசொல்லென்னினுமாம். கையொன்றுடையனெனும் பிரமன் முதலியோரிடத்துப் பெற்றவரத்தின் பலத்தால் பலகைகளையுடைய தேவாசுரர்களைவென்று பின்னிடையச் செய்தான் என்பார் ஒற்றைக்கைம்மா என்றார். மா, விலங்கின் பொதுவாயினும் கைமிகையாகக் கொண்டதாதலின் யானையை யுணர்த்தியது.

இவ்யானையுருக் கொண்டாரிருவர்; அவருளிவன் கயாசுரன், யானையே யுருவாக்கொண்டவன். மற்றவன், முகமொன்றே யானையுருவமும் மற்றைய வுறுப்புக்கள் மனிதவுருவாகப்பெற்ற கயமுகாசுரன். முன்னவன், பிரமன் முதலியதேவரைவென்ற செருக்கால் முற்றுமுடைய மகாவீரனாகிய எம்மை யாளுடைய அம்மையப்பன்மீதுயுத்தம்புரியவந்து அம்மையாரஞ்சியொதுங்க இறைவனையெடுத்துவிழுங்கினன். எம்மையாளுடையவள்ளல் உமையம்மைக்கு ஓர் திருவிளையாட்டைக் காட்டக்கருதியும் தேவரிடுக்கணீக்கத் திருவுளத்தெண்ணியும், அசுரனது அஞ்ஞான மொதுங்கவும் அவனுதரத்து உக்கிவுருக்கொண்டு கஜாசுரன் உடலைப்பிளந்து வெளிப்போந்து மத்தகத்தின் மீது திருப்பதமூன்றி யுமையம்மைகளிப்புற தரிசனந்தந்தனர். இத்திருக்கோலந் தரிசித்த தேவர்,அத்தோலைத் தங்கள்பொருட்டுப் போத்திக்கொள்ள

வேண்டினமையால் அன்றுமுதல் இறைவனுக்குக் கஜாரிமூர்த்தியென்று ஒரு திருப்பெயருண்டாயிற்று. இச்சரிதம் புராணங்கடோறும் வேறுபட்டிருக்கின்றது. தேவர்களைத் துரத்திச்சென்ற அசுரன், காசியையடைந்து சிவமூர்த்தியை யடைக்கலம் புக்க தேவர்களை வருத்த எண்ணுகையில் சிவமூர்த்தி கோபாவேசராய் அசுரனது சிரத்தை யோர்பதத்தால் மிதித்து அவனது தோலை யுரித்துத் தேவர் வேண்ட உடையாக்கொண்டனர் என்பது மகாஸ்காந்தம். நல்லார்க்குத் தீமைசெய்த பொல்லான் தவத்தானுயர்ந்தோனெனினும் தண்டித்தல் கடன் ஆதலில் சீறிய என்றார். மான், என்பதில் னகரம் சாரியை. அன்றிச் சிற்றம்பலத்தானாகிய மகான் எனக் கொள்ளினுமாம்.

அங்ஙனங்கொள்ளின் மானை மகானென்பதன் மரூஉவாகக்கொள்க. போகும், எனும் எச்சத்தி னுயிர்மெய்கெட்டது. திருக்கைலையினின்று போந்த தில்லை மூவாயிரவர் எழுந்தருளிய திருவீதியாதலின் கோமறுகென்றார், இது இடத்து நிகழ்பொருளிடத்ததாகக் கூறுவதோர் வழக்குப்பற்றி. பேதைமை என்பது ஈறுகெட்டு அக்குணத்தைக்கொண்டார்க்குக்குணவாகுபெயராயிற்று. குழாம், என்பதில் ஆம், சாரியை. (உக)

கலித்துறை.

உஉ. பேதை பெரங்கேயினித் தேறியுய்வாள் பிரமன் றனக்குத்[ன்
தாதைதன் றாதையென் றேத்தும்பிரான் றண்புலி சைப்பிரா
கோதையந் தாமத்தன் கொன்றைகொடா னின்று கொல்ல
யூதையுங் காருந் துளியொடுங் கூடி யுலாவியவே. [வெண்ணி

(இ - ள்.) பிரமன்தனக்கு - பிதாமகனாகிய பிரமதேவனுக்கு, தாதைதன் - பிறப்பிடமான) பிதாஎன்று, ஏத்தும் - துதிக்கின்ற, பிரான்-தலைவன், தண் - குளிர்ந்த, புலிசைப்பிரான் - திருப்புலியூராகிய சிதம்பரத்தை யிடமாகக்கொண்டவன், கோதையந்தாமத்தன் - பலவகைப்பட்ட மலர்மாலைகளைச் சூடியவன், இன்று - இப்போது, கொன்றை - தானணிந்துள்ள கொன்றை மலர்மாலையை (அவள்காதல்நோய் தணியும்வண்ணம் திருவுளங்கொண்டு) கொடான் - கொடுக்கான். (ஆதலான்) ஊதையும்-வாடைக்காற்றும், காரும் - மேகமும், துளியொடுங்கூடி - நீர்த்திவலைகளுடன் கூடி, கொல்லஎண்ணி- காதனோய்க்கொண்ட அவளைக்கொல்வான் கருதி, உலாவிய - (அச்சமின்றி) உலாவின. ஏ -அசை. (எ - று.)

(வி-ரை.) பேதைப்பருவங்கொண்டாளாகிய இவள்திறத்து,ஆக்கலுமளித்தலும்கொண்டதேவர்க்குத்தலைவனாகியநடராஜமூர்த்தி, இவளதுகாதனோய் தணிப்பான் கருணைசெய்யாத காலத்தை யெண்ணி வாடையுங்காரும்கொல்வானுடன்வந்தன என்று நற்றாயிரங்கிக்கூறினாள் என்பது கருத்து. பேதையென்பது, பெண்ணின்பொது. ஈண்டு அப்பருவங்கொண்டாளை யுணர்த்தியதன்று. அது ஐந்துமுதல் ஏழளவுங்கொண்ட பருவம், "பகருங்காலந்தேழ்

பதினொன்றுபன்மூன், றகலாதபத்தொன்பா னேயைந்—திகலாத, முப்பத் தொன்றிரிருபான் பேதைமுதலோர்க்குச் செப்புவராண்டெல்லைத் திறம்." என்பதாற்காண்க. இஃது அறியாமைக்குணமாய் அக்குணங் கொண்டாளை யுணர்த்தினமையி னாகுபெயர். இறைவனது திருமேனியின்கணுள்ள திரு அடையாளமாலைக்கண் வைத்த அவாவால் நாளுக்குநாள் மேனிவாடல் முதலிய துன்படைந்து வருந்தலின் தேறி எனவும், அங்ஙனம் தேறினும் பிழைத்தல் அருமையென்பார் எங்கே யுய்வாள் எனவும்கூறினார்.

இரண்யகருப்பம், பாஞ்சராத்ரம் முதலிய மதத்தவர், ஒருகற்பத்தில் சிவமூர்த்தி பிரமனிடத்தும், ஒரு கற்பத்தில் விஷ்ணுவிடத்தும், இறைவன் பிரமனிடத்தும், பிரமன் விஷ்ணுவிடத்தும் தோன்றியதாகக் கூறுதலின் அக்கூற்றுக்களைத்தம் உண்மைமொழியால் களைவார் பிரமன் தனக்குத் தாதைதன் தாதையென்றார் அதனைப்பின்னர் ஒருசிறிது கூறுவாம். இம்மதத்தவர்கூற்று நமக்குடன்பாடன்று. எற்றெனின் இவர் சிவமூர்த்திக்கும் ருத்ரமூர்த்திக்கும் பேதமறியாது கூறுவர். அது எவ்வாறெனின் ஒருகற்பத்தில் பிரமன் சிருட்டியாதிகளை யியற்ற அறியாது தியங்கி இறைவனை வேண்ட எல்லாம் வல்லவனாகிய இறைவன், காலருத்திரமூர்த்தியை யேவி அவற்கு அத்தொழிலறிவிக்கக் கட்டளையிட்டனர். கட்டளைபெற்ற ருத்ரர் பிரமதேவன் நெற்றியின்கண் நீலலோகிதமூர்த்தியாய்த்தோன்றிச் சிருட்டி யறிவித்தனர். இக்கதையினை யேதுவாக்கொண்ட அவர்கள், அவ்வாறு கூறுவர். அவர் கூற்றுப் பிரமாணமன்றோ எனின் பிரமாணமேயாயினும் துல்யாதுல்ய நியாயத்தால் விரோதிக்கும். எற்றெனின், சில சுருதி, ருத்ரன், பிரமனிடத்தும், விஷ்ணுவிடத்தும் தோன்றியதாகக் கூறுதலின் ஒன்றற்கொன்று மாறுகொளக் கூறலாம். இதனை யெழுதப்புகின் இப்புத்தகம் விரியுமாதலின் சிறிதே நுட்பமாகக் கூறுவேன். சிவஸங்கல்போபநிஷத்து "அண்டம்ஹிரண்யமயம் மத்யே, ஸமுத்ரம் ப்ரதமம்பபூவ | அண்டாத்விஷ்ணு ப்ரம்மஜாதவேதாஶ்ச தன்மேமனঃ ஶிவஸங்கல்பமஸ்து." என்று ஆதியில் பொன் அண்டம் ஒன்று உண்டாயிற்றெனவும், அதில் சிவஸங்கல்பத்தால் விதி விஷ்ணு அக்னி முதலியவர் தோன்றினர் எனவும், இருக்குவேதத்தில் "ஸோமঃபவதேஜநிதா எனத்தொடங்கி ஜநிதாதவிஷ்ணோঃ எனவும் தக்ஷிணாங்கபவோபிர்ம்ம, எனக் கூறிய வாக்யங்களாலும் "பெருமநின்னிடப்புறத்தரிதனைப்பெற்றனை, அருளொடும்வலப்புறத்தென்னையீன்றளித்தனை, உருவமைகுந்தமூஞ்சத்திய வுலகமும், இருவரும்பெற்றுளோமெந்தைநின்னருளினால்." எனவும் கூறிய திருவாக்குகளால் சிவமூர்த்தி விதிவிஷ்ணுவாதிகளுக்கும் ஏனைய தேவர்களுக்கும் பதியென்பது அறியப்படுதலால், பிரமன்றனக்குத் தாதைதன் தாதை என்றார். பிரமன் மால் அக்னி சூர்யன் திங்கள் முதலாயினாரைத் தன்னிடஞ் சிருட்டித்து உலகத்தைப் படைத்தளித்தழித்தலின் தாதையென்றார். தனோதி குலமிதிதாதঃ எனுந் தாதுவால் தன்குலத்தைப் பரவச்செய்பவன் என்பது பொருள். இங்குத் தன்குலமாவார் பிரமன் மால் முதலிய அதிகாரசக்தியறி

ந்த தேவர். பிரமன்றனக்கு என்பதில் சாரியையும் நான்காம்வேற்றுமை யுருபினையும் தாதை யென்பதனுடன் கூட்டிப்பொருள்கொள்ளலுமாம். தனக்கு மேல் நாயகனிலாது எல்லார்க்கும் எல்லாவற்றிற்குந் தான் தலைவனாய் நிற்றலின் பிரான் என்றார்.

மத்யந்தன முனிவர், அரியதவஞ்செய்து பெற்றதிருக்குமாரர் சிவபூசையினிமித்தம் எடுத்தமலர்களில் வண்டு புழுவரிப்புமுதலிய குற்றமிருத்தல் கண்டு வருந்தி இறைவனை வேண்ட சிவமூர்த்தி யவரது அன்பிற்கிரங்கியவர் வினவியவாறு மரம்பனியால் வழுக்காதிருப்பவும்,உயர்வாயினும் ஏறவும் இருக்கத்தக்கபுலிக்காலையும் அம்மலர்களிலுள்ள பழுது கண்டெடுக்க நகந்தொறும் கண்ணும் பிரசாதித்தனர். அன்றுமுதலவர்க்கு வியாக்ரபாதமுனிவர் எனத்திருப்பெயர் உண்டாயிற்று. அவர் தம்பெயர் விளங்கச்சிவலிங்கப்பிரதிட்டைசெய்து பூசித்தமையின் அத்தலத்திற்குப்புலிசையெனப்பெயர் உண்டாயிற்று. புலியூரைப்புலிசையென்றதுமரூஉ. அன்பரிடும் பச்சிலைமலர் முதலியமாலைகளையணிந்தான் அவளணிந்த கொன்றைமலர் மாலையினைத்தந்தருளான் என்பாள் கோதையந்தாமத்தன் சொன்றைகொடான் என்றார். இன்று என்பது அக்காலத்தையுணர்த்தியது. ஊதை ஒன்றே காதலால் வருந்துவோர் தம் உயிரைக்கவருதற்கமையும், துளியோடு கூடியகாரும் கூடி உலாவியபடியால் புண்ணிற்சலாகையிட்டாங்கு வந்தமையால் கொல்ல வெண்ணியென்றாள். காமத்தால் வருந்துவோர்க்கு வாடையும்,காரும் பகையாதலின் ஊதையுங்காரும் என்றாள். இது கார்காலங்கண்டு நற்றாயிரங்கல். கோதையந்தாமத்தன் என்பதற்குப் பிராட்டியை வாமபாகத்திற்கொண்டானெனினுமாம்.

கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தம்.

உ௯. உலவு சலதி வாழ்விட மமரர்தொழ வுணவென
நுகருமொருவ ரூழியி னிறுதி யொருவ ராழிய
புலவு கமழ்க ரோடிகை யுடைய புனிதர் பூசுரர்
புலிசை யலர்செய் போதணி பொழிலி னிழலின் வாழ்வ
கலவ மயில னார்சுருள் கரிய குழலி னார்குயில் [தோர்
கருது மொழியி னார்கடை நெடிய விழியி னாரித
ழிலவி லழகி யாரிடை கொடியின் வடிவி னார்வடி
வெழுது மருமை யாரென திதய முழுது மாள்வரே.

(இ - ள்.) அமரர் - தேவர்கள், தொழ - (அடுங்காலமென விடமெழக் கண்டு) வணங்க, (அது நோக்கி) உலவு - உலாவுகின்ற, சலதி - கடலிடத்து, வாழ் - வாழும், விடம் - அந்த விடத்தை, உணவு என - உணவாக, நுகரும் - அமுதுசெய்யும், ஒருவர் - ஒப்பற்றவர், ஊழியின் - அனைத்துமழிந்த சர்வசங்காரகாலத்தின், இறுதி-முடிவில், ஒருவர்-தனித்து நிற்பவர், ஆழிய-மிகுந்த, புலவு - முடைநாற்றம், கமழ் - வீசுகின்ற, கரோடிகை - தலைமாலையினை,

உடைய - கலனுகப்பூண்ட, புனிதர் - தூய்மையாளர், பூசுரர் - வேதியர்க ளால் துதிக்கப்பட்ட, புலிசை - திருப்புலியூராகிய ஸ்ரீதில்லையின்கண், அலர் செய் - மலர்தலைச்செய்கின்ற, போது - மலர்களால், அணி - அழகு பெற்ற பொழிலின் - சோலையினது, நிழலின் - நிழற்கண், வாழ்வது ஓர் - வாழ்வாரா கிய ஒரு, கலவமயில் அன்னுர் - கலாபத்தையுடைய மயிலின் சாயலையொத் தாரும், சுருள் - சுருண்ட, கரிய - கருமையாகிய, குழலினுர் - கூந்தலையுடை யவர், குயில் - குயில்களும், கருதும் - தமதினமென எண்ணும், மொழியி ஞர் - சொற்களையுடையாரும், நெடிய-பரந்த, கடை - கோடியினையுடைய விழியினுர் - கண்களையுடையவரும், இலவில் - இலவமலரைப்போல், இதழ் இதழ்கள், அழகியார் - அழகினைப்பெற்றவரும், இடை-இடையானது, கொடி யின் - பூங்கொடிபோல, வடிவினுர் - வடிவினையுடையாரும், வடிவு-உருவம், எழுதும் - எழுதுதற்கும், அருமையார் - கூடாததன்மையுடையாரும், (ஆகி யஇவர்) எனது இதயம் முழுதும் - எனது மனதை முற்றும், ஆள்வர் - அடி மைகொண்டு ஆளாநிற்பர். எ - று.

(வி - ரை.) காற்றின் மிகுதியாலும், சலசரங்களினியக்கத்தாலும் நிலை நீர் ஒன்றையொன்றுதாக்க தரங்காதி புற்புதங்கள் தோற்றும் வண்ணம் நீர் களைக்கண்மோதுதலின் உலவுசலதி என்ருர். ஜலதி - ஜலத்தைத்தரித்துள் ளது என்பதுபொருள். தேவர்மந்தரமிட்டுக்கடையாத முன் அதனிடத்தே யுள்ளதும், இயற்கையாக அளவிற்குறையாததும், நாளுக்கு நாள் எல்லாக்கு ணங்களிலும் உயர்வதும், இனியென்றும் அழியா இயற்கையைப்பெற்று நிற் பதுமென்பார் வாழ்விடென்ருர். ஈண்டு இயற்கைப்பொருளதாகிய உம்மை விகாரத்தாற்ருெக்கது. தேஹம்வே வேஷ்டதி விஷம், என்பதால் விஷம் என்பதற்குத் தேகத்தை வியாபித்துக்கொல்வது என்பது பொருள். அமரர் எனப்பொதுப்படக்கூறியதனுன் விண்டு முதல் அடித்தொழில் செய்யுந்தே வரிறுதியாஞரென்பது பெறப்பட்டது. இவர் சாகா நிலையுடைமை அமுத முண்ட பின்னையாயினு மீண்டுக்கூறியது உபசாரம். அங்ஙனமியற் கையானே சாகாநிலையுடையராயினு மிவ்விடத்தின்மு னிற்கலாற்ருது அதனது வலியடக்கும் ஆற்றலுடைமையறிந்த இறைவனைத் தம்மை க்காக்க வேண்டினர் என்பதால் தொழஎன்ருர். தொழஎனும் எச்சம் காரணப்பொருட்டு. உணு, இச்சொல் உணவென உகரச்சாரியையும் பெறும். அவ்விடத்தினை யேனையிடங்களில் வைக்கின் இவ்வாறு மீண்டு இடுக்கண்செய்யக்கூடும் என்று திருவுளத்தெண்ணி, தமதாற்றலறி விப்பான் உடற்கண்புகும் எப்பொருளுந் தங்கா நிலைத்தாகிய கண்டத்திற்கு அழகுசெய்வான் அத்தேவர்வேண்டத் திருக்கண்டத்தடக்கியவ்விடந்தம்மைச் சிறிதுவருத்தாநிலைதெரித்து நின்ருனென்பார் உணுவெனநுகரு மொருவர் என்ருர். சிறுதேவராகிய அக்னி வருணன் வாயு இந்திரன் முதலானுர்க்கும் அவரினும் புண்ணிய மிகுதியால் உயர்ந்த எண்ணிலராகிய விதிவிஷ்ணுக்க ளாதியானுர்க்கும் அணுசதாசிதராதியர்க்கும் அப்பாற்பட்டுத் தனித்து அனைத்

தையும் அழித்த ஊழியின் அனைத்தையும் அனைவரையும் தமது சத்திக்குள் வயப்படுத்தித் தாம் ஒருமுதலாய்க் காலாதீதராய் நிற்றலின் ஊழியினிறுதி யொருவர் என்றார் இதனைவேதசிவாகமங்கள் விரித்துக்கூறும் "நஸந்நஸாசன் சிவயேவகேவலஃ." எனவும், "ஏகோஹிருத்ரோநத்விதியாயதஸ்து" எனவும், 'மேலைவானவரும் மறியாததோர், கோலமேயெனையாட்கொண்ட கூத்தனே ஞாலமேவிசும்பேயிவைவந்துபோங்,காலமேயுனையென்றுகொல்காண்பதே.', எனவும், "தன்மைபிறராலறியாத தலைவாபொல்லாநாயான, புன்மையேனை யாண்டையாபுறமேபோக விடுவாயோ.........தகுவேனே." எனவும் கூறிய திருவாக்குகளானறிக.

ஆழிய என்பதற்கு ஆழியில் தோன்றுஞ் சலசரங்களின் முடையொத்த நாற்றமெனினுமாம். பெருந்தேவர்களது கேடும் தமக்குக்கேடின்மையுந் தெரிவிப்பான் அத்தேவர் முதலியோர் சிரமுதலியவற்றையணிகலனாக்கொ ண்டு நிற்குஞ் சிவமூர்த்தியையடையப்பெற்றமையின் அச்சிரமாலை முதலி யன அழியாது பண்டைய முடை முதலிய நாற்றங்கொண்டே நிலவுதலின் ஆழிய புலவு எனவும், அது ஏனையமாமிசாதிகளைப்போல் தீக்குணமாகிய நாற்றங்கொள்ளாது நறுமணங்கோடலின் கமழ் எனவுங்கூறினார். ருட, பிரதி காதே, எனுந்தாது வால்கரோடிகை என்பதற்குச்சிரவில் அடிக்கப்பட்ட எலும்பென்பதுபொருள். அங்ஙனம் விஷபக்ஷணம், என்புமாலையுடையனே னும் தூய்மையுடையான் என்பார் புனிதர் என்றார். பூமிக்குத்தேவர்போல் தீயரையும் நல்லோரையுந்தமது தவத்தால் செகுத்தும் ஆக்கியும் வருதலின் பூசுரர் என்றார். புலியூர் என்பது புலிசை எனமருவிற்று. இதனை மறைசை கலசை என்பவற்றாலறிக. இதில் சையென்பது, சாரியை என்னினுமாம். பொருளுணர்த்தாது பெயரொடும் வினையொடுஞ்சார்த்திச்சொல்லப்படுவது சாரியையெனக்கூறுபவாதலின் என்க. இதனைத் தொல்காப்பியச்சொல்ல திகாரத்து இடைச்சொல்லியல் "அவை தாம், முன்னும் பின்னுமொழியடு த்து வருதலுந்-தம்மீறுதிரிதலும் பிறிதவணிலையலு-மன்னவையெல்லாமுரிய வென்ப" என்பதாலறிக. அவர் என்னும் முதனிலைத்தனி வினைப்பெயரில் வினைமுதற்பொருளுணர்த்தும் இகரம் தொக்கு நின்றது. காலத்து மலர்தலும் கூம்புதலும் உடைமையின் மலர்க்குப்போது என்றது எதுப்பெயர்; இது போழ்து என்பதன் மரூஉமொழி. அது மலர்க்கானமையின் காலவாகுபெய ராம். இவர் வாழ்வதால் அப்பொழிற்கு அழகுமுதலிய விளைந்தன என்பார் அணிபொழிலின் என்றார். பொழிலினிழலின், என்பதற்கு பொழிலிடத்து இனிய நீழலின்கண் எனப்பொருள் கொள்ளினுமாம். என் மனமுழுதுங் கொள்ளைகொண்டது அப்பொழிலின் கண் எக்காலும் நீங்காததனிடத்து நிலைத்து நிற்பதென்பார் வாழ்வது என்றார். ஏனைய மயில்களிதற்கொவ்வா இது தனித்து உள்ளமுருக்கு உருவமும் குணமுமுடைமையின் என்பார் ஓர் மயிலென்றார். இவரணிந்த பட்டும் பணியும் ஏனையவொளிகளை நீக் கித்தாம் மிக்கவொளிகொண்டு கலாபத்தோடியைந்த மயில் போல் அழகு

செய்தலின் கலவமயிலனார் என்றார். கலாபம் என்பது கலவம் தற்பவமாயிற்று. பொருள்கலையாகிய ஒளியையடைந்திருப்பதென்பது. இவர் சாயலான் மயிலையொத்தாராயினும் மேகத்தின் கருமையைப் பின் போக்கும் குழலைப் பின்னே செருகி முடித்து மனங்கவர்ந்தாரென்பார் சுருள்கரிய குழலினார் என்றார். சுருள் என்பது பெண்கள் முடிக்கும் ஐம்பாலினொன்று. அதில் சுருள்போலழகு செய்தலின் சுருள்குழல், எனவும், கருமை உத்தமலக்ஷணந் தெரிவித்தலின் கரிய எனவும் கூறினார். கருமையுத்தம இலக்கணமென்பதை “கருவியான் வண்டின் கணமெனக்கறுத்துக்கடை குழன்றியன் மணங்கான்று” எனப்பிறர் கூறியதனானறிக. இவள் பேசுகையில் வாக்கின் மென்மையால் குயில்களும் தம்மினமோ வெனமயங்கும் செவ்வியுடைமையின் குயில் கருது மொழியினாள் என்றார். இங்ஙனங்கூறவே, இவள் உத்தம இலக்கணமுடைத்தாய் மெல்லிதாய்ச்சிவந்து கோமளமான நாவினாள்” என்பது பெறப்பட்டது. இக்கடைக்கண் என்மார்பைப்பிளந்துட்சென்று படலாற்றாத்துயரை விளைத்து என் மனத்தைக்கவர்ந்து சென்ற அக்களிப்பால் என் மனஞ்சென்று உலாவுவதுபோல் பரந்து நிற்றல்தோன்ற கடைநெடிய விழியினார் என்றார். “கண் கடைசிவந்து ஆன்பாலெனவெளுத்து” என்றபடி கடைநெடிய என்றதனான் அவ்விலக்கணங்கொண்டாளென்றதுமாம். விழி, முதனிலைத்தொழிலாகு பெயர். இலவு முதலாகுபெயராய் மலரினையுணர்த்தியது. இலவில் என்பது எல்லைப்பொருட் கண்ணதாகிய ஐந்தாம் வேற்றுமை அன்றி ஒப்புப்பொருளெனினுமாம். இயற்கையான், போலியாகப்புலவர் இடைக்குக் கொடியினை உவமை கூறுவார் அதுவும் இவட்குத்தோற்றுப்பின் சென்றதென்பார் அந்நயந்தோன்ற நடுவெனக்கூறாது இடைகொடியின் வடிவினார் என்றார். கொடி வளைதலைப்பெற்றதென்பது பொருள். இவருறுப்பின் அழகு முதலியவற்றையொருவாறுகைவல்ல சிற்பவினைஞன் சித்திரிப்பினும் அவை, யுயிர்கொண்ட இவளது வடிவழகின் விளக்கத்தினை இறையுமொவ்வா வாகலின் வடிவெழுதும் அருமையார் என்றார். இங்ஙனம் அழகுமுதலியகொண்டு எனது ஆண்மை முதலிய குணங்களைக்குன்றச்செய்து தமக்கு அடித்தொழில் புரியச்செய்தாரென்பார் இதயமுழுதுமாள்வர் என்றார். இதயம் இது இருதயமென்னும் வடமொழிச்சிதைவு. இது கமலம் போன்றுதேகத்துறுப்பாகி அந்தக்கரணங்களையரிப்பது. இது தில்லைப்பொழிற்கண் தான் கண்டதலைவியினது உறுப்புக்களில் முதற்கண்டது சாயலாதலின், மயிலெனவையுற்றுக் கலவமயிலனார், எனவும் அங்ஙனங்கண்டான் சற்றணுகிச்சென்று மயிலன்று காணப்பட்டாள் மயிற்சாயலாள் எனவுணர்ந்து அவளது அளகந்தன்னைக்கண்களைக்கவரக்கரிய குழலினார், எனவும், பின்னர் அவர் தம் ஆயவெள்ளத்துடன் மொழிபயிலக்கேட்டுக்குயில் கருதுமொழியினார், எனவும் அங்ஙனஞ்மொழி பயின்றார் தன்னைச்சிறிது கடைக்கண்ணோக்க அந்நோக்க மனதிடையெறி வேலோச்சியாங்கு மனதைக்கவர வருந்திக் கடைநெடியவிழியினார் எனவும் இங்ஙனம் நம்பொருட்டுத்தலைமகனொருவன் வருந்தினானெனத்தமது மகளேஉக்குழூஉவுடன் கூறுவான் கண்டு இதழிலவிலழகியார், எனவும் இவ்வகை.

மொழியும் விழியும், குழலும், இயலுங்கண்டாற்கு இடைதோன்றாது தோன்றக்கண்டு இடைகொடியின் வடிவினார், எனவும் இங்ஙனம் உறுப்புக்களை யொருங்கு நோக்கி வியந்தானிவரது வடிவெழுதிக்காணமுயன்று முடியாமையின் வடிவெழுதும் அருமையார், எனவும் கூறியுறுப்புக்களினலனைப் புனைந்துரைத்ததாமென்க. இது தலைவியின் உறுப்பியங்கக்கண்ட தலைவன் கூற்று. (உரு)

இதனான், ஆன்மா, இறைவனது திருவுறுப்புக்களை புறத்துவழிபட்டாங்குமனத்திடைக் கண்ட ஆனந்த மேலீட்டால் அப்பொருட் கண்ணழுந்தி அது தன்னை விழுங்கிய பேரின்பநிலை கூறப்பட்டது.

இணைக்குறளாசிரியப்பா.

உரு. ஆளெனப்புகுதிநின்வந்தடைந்திலமத்தநின்
றாளிணைவறலையினியற்றி
வழிவழிவந்தமரபினமொழிவது
ணைந்தெழுத்தவையெஞ்சிந்தையிற்கிடத்தி
நனவேபோலநாடொறும்பழகிக்
கனவினுநவிற்றுங்காதலெம்வினைகெடக்
கேட்பதுநின்பெருங்கீர்த்திமீட்பது
நின்னெறியல்லாப்புன்னெறிபடர்ந்த
மதியினெஞ்சத்தை வரைந்துநிதியென
வருத்திசெய்திடுவ துருத்திரசாதனங்
காலையுமாலையுங் கால்பெயர்த்திடுவதுன்
னாலயம்வலம்வரு தற்கேசால்பினிற்
கைகொடுருயிற் றுவதையநின்னது
கோயிற்பல்பணி குறித்தேயோயா
துருகிநின்னினைந் தருவிசோரக்
கண்ணிற்காண்பதெவ் வுலகினுங்காண்பன
வெல்லா
நீயேயாகி நின்றதோர்நிலையே
நாயேன்
றலைகொடுசார்வதுன் சரண்வழியல்லா
லலைகடல்பிறழினு மடாதேயதனாற்
பொய்த்தவவேடர் கைத்தகப்படுத்தற்கு
வஞ்சச்சொல்லின் வார்வலைபோக்கிச்
சமயப்படுகுழிசமைத்தாங்கமைவயின்

மானிடமாக்களை வலியப்புகுத்து
மாறுவிரதத் தகப்படுத்தாழ்த்து
வளைவுணர்வெனக்கு வருமோவுளர்தரு
நுரையுந்திரையு நொப்புறுகொட்பும்
வரையில்சீகர வாரியுங்குரைகடற்
பெருத்துஞ்சிறுத்தும் பிறங்குவதோன்றி
யெண்ணிலவாகி யிருங்கடலடங்குந்
தன்மைபோலச் சராசரமனைத்து
நின்னிடைத்தோன்றி நின்னிடையடங்குநீ
யொன்றினுந்தோன்று யொன்றினுமடங்காய்
வானோர்க்கரியாய் மறைகளுக்கெட்டாய்
நான்மறையாளர் நடுவுட்புக்கடங்கிச்
செம்பொற்றில்லை மூது
ரம்பலத்தாடு மும்பர்நாயகனே.

(இ - ள்.) அத்த - தலைவனே, புதிதின் - புதிதாக, ஆள்என - அடிமையென்று, வந்துஅடைந்திலம் - வந்து அடைந்தோமில்லை, நின்தாளின் - தேவரீருடைய திருவடிசம்பந்தமாகிய, ஏவல் - அடித்தொழிலினை, தலையின் சிரத்தால், இயற்றி - செய்துமுடித்து, வழிவழி - சந்ததி பரம்பரையாக, வந்த - அடிமைசெய்துவந்த, மரபினம் - குலஒழுக்கத்தையுடையோம், மொழிவது - வாயாற் சொல்லப்பட்டது, உன்னைந்தெழுத்து - தேவரீர் திருமேனியே திருவுருவமான திருவைந்தெழுத்தாம், அவை-அத்திருவைந்தெழுத்தினை, எம்சிந்தையில்-எம்மனத்தின்கண், கிடத்தி - இருக்கச்செய்து, நனவேபோல - சாக்கிரநிலையினைப்போல, நாள்தோறும் - காலங்கள்தோறும், பழகி அதினிடைபயின்று, கனவிலும் - கனவின்கண்ணும், நவிற்றும் - சொல்லித்துதிக்கும், காதலேம் - ஆசையினையுடையேம், வினைகெட - மும்மலங்களின்வலிகெட, கேட்பது - கேட்கப்படுவது, நின் - தேவரீருடைய, பெருங்கீர்த்தி - அடங்காப்புகழ், மீட்பது - தடுப்பது, நின்னெறிஅல்லா - (தேவரீர் அருளிச்செய்த வேதசிவாகமங்களின்) ஒழுக்கம் அல்லது, புல்நெறி-(பௌத்த ஆருகதநீசமென்கிற) தீய ஒழுக்கத்தில், படர்ந்த - சென்ற, மதி இல் - (ஆராய்தலாகிய)அறிவுஇல்லாத, நெஞ்சத்தை - மனதினையாகும், நிதிஎன - (சங்கநிதிபதுமநிதிமுதலிய) செல்வங்களைப்போல, வரைந்து - கொள்ளப்பட்டு, அருத்திசெய்திடுவது - விரும்பப்படுவது, உருத்திரசாதனம் - விபூதி ருத்ராக்ஷ முதலிய உருத்திரசாதனங்களாம், காலையும் மாலையும் - காலைப்பொழுதினும் மாலைப்பொழுதினும், கால் பெயர்த்திடுவது-எனது காலினைப் பெயர்த்துப் புடைபெயரச் செய்வது, உன் - தேவரீருடைய, ஆலயம் - திருக்கோயிலை, வலம்வருதற்கே - வலமாக ப்ரதக்ஷணஞ்செய்வதற்கேயாம்

கைகொடு-கையால், சால்பினின் - நற்குணநிறைவுடன், குயிற்றுவது - செய்யுந்தொழில், ஐய - தந்தையாய் உள்ளானே, நின்னது - தேவரிருடைய,கோயில் - திருக்கோயிலின், பல்பணி - பலதிருப்பணிகளே, குறித்து - தேவரீர் திருவுருவத்தினை த்தியானித்து, ஓயாது - இடைவிடாமல், நினைந்து - அதனையெண்ணி, உருகி - மனமுருகி, கண்ணில் - எனதுகண்களில், அருவிசோர- அருவியொழுக, காண்பது - தெரிசித்திருப்பது, எவ்வுலகினும் - எல்லாஉலகத்தினும், காண்பனவெல்லாம் - காணப்படும் பொருள்களெல்லாம், நீயே ஆகி - உமதுவியாபகமே யாகி, நின்றதோர் நிலையே - நிலைத்த நிலைமையாம் நாயேன் - நாயினை யொத்தநான், தலைகொடுசார்வது - தலையால் வணங்குவது, உன்சரண்வழி-தேவரீர்திருவடிநெறி, அல்லால்-அல்லாமல், அலைகடல் பிறழினும்- அலைதலையுடைய கடல்மாறு கொள்ளினும், அடாது -(மற்றொருதேவை வணங்கல்) ஆகாது, அதனால் - ஆகையால், பொய்த்தவவேடர் - பொய்யாகிய தவவொழுக்கம் பூண்டோர், கை - கையினிடத்து, தக - தக்கவிதம், படுத்தற்கு - அகப்படுத்தற்கு, வஞ்சம் - கபடமாகிய, சொல்லின் - நூல்களாலாகும், வார்வலை - பெருவலையினை, போக்கி - வீசி, சமயம் - பலசமயங்களாகிய, படுகுழி - ஆழமாகிய குழியினை, ஆங்கு சமைத்து - அந்த இடத்துஉண்டாக்கி, அமைவயின்-அமைத்த அவ்விடத்து, மானிட மாக்களை - மனிதராகிய மிருகங்களை, வலிய - வலிமையாக, புகுத்தும் - நுழையச்செய்யும், ஆறு - நீங்காத, விரதத்து-தீயவிரதங்களில், அகப்படுத்து-உட்படுத்தி, ஆழ்த்தும் - அழுந்தச்செய்யும், வளை உணர்வு - கொடுமனம், எனக்கு வருமோ - அடியேனுக்கு உண்டாகுமோ. உளர்தரும் - ஒலிக்கின்ற, நுரையும் - நுரையும், திரையும் - அலையும், நொப்புற-தடையுண்டாகும், கொட்பும் - சுழற்சியும், வரைஇல் - அளவுஇல்லாத, சீகரம்-துளியினையுடைய, வாரியும்- ஜலமும், குரைகடல் - ஒலிக்கும்கடலினிடத்து, பெருத்தும் - பெரிதாகவும், சிறுத்தும் - சிறிதாகவும், பிறங்குவ - விளங்குவனவாகி, தோன்றி - மேலெழுந்து, எண்இலஆகி - அளவுஇலாதனஆய், இருகடல் - பெரியகடலினிடை, அடங்கும் தன்மைபோல-அடங்கிப்போகும்தன்மைபோல, சாரசரம் அனைத்தும் - சராசரங்கள்முழுதும், நின் இடைதோன்றி-தேவரீரிடத்துத்தோன்றி, நின்இடை - தேவரீரிடம், அடங்கும் - ஒடுங்கும், நீ - நீயோஎன்னில், ஒன்றினும் - ஒருபொருளினும், தோன்றாய் - தோற்றமடையாய், ஒன்றினும் - ஒருபொருளினும், அடங்காய் - லயமடையமாட்டாய், வானோர்க்கு - தேவர்களுக்கு, அரியாய் - அகப்படாய், மறைகளுக்கு - வேதங்களுக்கு, எட்டாய் - அளவுபடாய், நால் மறையாளர்-நான்குவேதங் களையுணர்ந்த பேரறிவாளர், நடுவுள்புக்கு - மனமாகிய இடத்தில்புகுந்து, அடங்கி - அதினுஞ்சிறிதாகஇருந்து, தில்லை மூதூர் - திருத்தில்லையாகிய பழம்பதியில், செம்பொன் - சிவந்த பொன்மயமாகிய, அம்பலத்து - திருச்சிற்றம்பலத்து, ஆடும்-ஆனந்த நடனஞ் செய்தருளுகின்ற, உம்பர்நாயகனே-தேவர்க்குத்தலைவனே. எ - று.

இறைவனே நான்புதிதாக அடிமைப்பட் டவனல்லவன். பலசநநங்களிலும் தேவரீருடைய திருப்புகழினை யுந்திருவைந் தெழுத்தினையும் வாயாரச்

செபித்து எனையவுறுப்புக்களால் மற்றவுருத்திர சாதனங்களையும் திருப்பணிகளையுமணிந்துஞ் செய்தும் காண்பனவற்றை நீயேயாகக் காண்டலால் பொய்ச்சமயத்தார் கூறும்சமயப் பகட்டில் அகப்பட்டு வருந்தும் விளைவுணர் வெனக்குளதாகுமோ உண்டாகாது. என்பது.

(வி - ரை.) இறைவனைப்பலசநநகங்டோறும் மனத்தானும் வாக்கானும் காயத்தானும் பூசிக்கும்பலனான் சநநங்கடோறுஞ் சிறிது சிறிதாகவல்வினை குறையப்பாவ நீக்கமுண்டாகிச் சிவபுண்யமேலிட்டால் சநநநீங்கிவேறு சநநமெடுப்புழி நற்சார்பாய் இழிகுலத்தில் பிறந்தானேனும் பிறப்பன் ஆதலினான் ஆளெனப்புதிதின் வந்தடைந்திலம் அத்த என்றார். இதனை "புண்ணியமேனோக்குவிக்கும்பாவங் கீணோக்கும் புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தினாலே, நண்ணியஞானத்தினா லிரண்டினையுமறுத்து ஞாலமொடு கீழ்மேலு நண்ணாகி, எண்ணுமிகலோகத்தே முத்திபெறுமிவன்றா னெங்கெழிலென் ஞாயிறெமக்கென்று குறைவின்றிக், கண்ணுதறன்னிறைவதனிற் கலந்து காயங் கழிந்தக்காலெங்கு மாய்க்கருதரன் போனிற்பன்." என்ற திருவிருத்தத்தாலறிக. பஞ்சாக்ஷரங்களே அவன் திருநாமமன்றி வேறு திருநாமமும் திருவுருவமும் இல்லாதவனாதலாலும், ஆன்மாக்கள்தாம் நல்வழி அடையவேண்டி அவர்கள் பொருட்டுப்பல திருநாமங்களையுந்திருவுருவங்களையும் பெற்றவனாதலினாலும் அத்திருநாமங்களுள் பஞ்சரத்னமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரமே ஏற்றமுள்ளதாதலால் மொழிவதைந் தெழுத்தென்றார். இதனை "ஓதவனாமமுனையவன்பல் குணமுன்னை விட்டேன், போதவன்பின்னே பொருந்தவன் வாழ்க்கைத் திருந்தச்சென்று, மாதவமாகிடு மாதவமாவளர் புன்சடையான், யாதவன் சொன்னானது கொண்டொழி யினியாரணங்கே." எனவும், "கூறுமினீசனைச் செய்ம்மின்குற்றேவல் குளிர்மின்கண்க, டேறுமின் சித்தந்தெளிமின் சிவனைச்செறுமின்செற்ற, மாறுமின்வேட்கையறு மினவலமிவை நெறியா, வேறுமின் வானத்திருமின் விருந்தாயிமையவர்க்கே." எனச்சேரமான் பெருமானாயனாரருளிய திருவாக்குகளாலறிக. தாமும் தம்மையொத்தாருமடைந்தபேறு மேற்கூறிய பஞ்சாக்ஷரத்தைக் கடைப்பிடியாகக்கொண்டேயாதலின் அப்பஞ்சாக்ஷரத்தின் பொருளாகிய இறைவனைச் சகளநிட்களத் திருமேனியுடன் மனமாகிய அணையிற்பொருத்திச் சாக்கிரசொப்பனாதிகளில் தியானிப்பது முறைமையென்பார்வாளா இருத்தியென்னாது எஞ்சிந்தையிற்கிடத்தியென்றார். மனத்திற்கும் வாக்கிற்கும் அன்யோந்ய சம்பந்தம் உண்மையானும் மனம் நினைத்ததை வாக்குவசனிக்கு மாதலினானும், அவ்வாறே வாக்கு வசனித்ததை மனமும் கொள்ளுமாதலினான் சாக்ரநிலையில் அவனது ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைவாயாற்கூறப்பழகின், சாக்கிரநிலையின்பழக்கவாதனையே சுவப்பனமாதலால், அது அச்சுவப்பனத்தினும் அவ்வாறுதான் மறந்திருப்பினும் அந்நா, தன் பழக்கமொழியாகிய அத்திருமந்திரத்தினைத் தானேகூறுமென்பார் நனவேபோலக் கனவினுநவிற்றுங்காதலேம் என்றார். இதனை பிள்ளையாரும் "துஞ்சலுந் துஞ்சலிலாதபோழ்தினு, நெஞ்சகநைந்து நினைமினாடொறும் வஞ்

சகழற்றடி வாழ்த்தவந்த கூற்றஞ்சவுதைத்தனவஞ் செழுத்துமே." என்றதிருப்பாசுரத்தாலறிக.

செவியடைந்ததனால் கேட்கப்பட்ட இனிய தீஞ்சொல் அவனது திருப்புகழே யன்றியேனைகருப்புகழ் கருப்புகவழியாதலின் அதனை யொருவுக என்பார் கேட்பது நின்கீர்த்தியென்னாது நின் பெருங்கீர்த்தி யென்றார். இதனை ஆளுடைய வெம்மரசுகள் "செவிகாள் கேண்மின்களோ, சிவ - னெம்மிறை செம்பவள, வெரிபோன் மேனிப்பிரான் றிறமெப்போதுஞ், செவிகாள்கேண் மின்களோ." என்றதனாலும், சேரமான்பெருமானாயனார் "சொல்லாதனகொழுநாவல்ல சோதியுட்சோதிதன்பேர், செல்லாச்செவிமரந் தேறித் தொழாதகை மண்டிணிந்த, கல்லாநினையாமனம் வணங்காததலையும் பொறையா, மல்லாவயவந்தானுமனிதர்க்கசேதனமே." என்றதிருப்பாசுரத்தாலறிக. புறப்பற்றாகிய உலக இன்பத்தின்கண் அலைந்து துயர்படும் மனம் அத்துயர்நீங்கிச் சுகமடையவேண்டின் இறைவன் திருவடியல்லாது ஏனைய பற்றுக்கோடன்றாம் ஆதலான், மற்றவை இம்மைமறுமைக்கண் துன்பமேபயக்கும் ஆதலின் அதனை யொருவிப் பேரின்பக்கடலாட வேண்டின் அப்புறத்தின்கண் பேய்போலலைந் தாசலாடும் மனத்தினைமீட்டுத் தன்னகப்படுத்தி இறைவனது திருவடிக்கண்லயப்படுத்த வேண்டுமென்பார் மீட்பது நின்னெறியல்லாப்புன்னெறி படர்ந்தமதியினெஞ்சத்தை என்றார். இதனை வாதவூரடிகள் "ஓயாதேயுள்குவாருள்ளிருக்கு முள்ளானைச், சேயானைச்சேவகனைத் தென்னன் பெருந்துறையின், மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை நாயானநந்தம்மையாட்கொண்ட நாயகனைத் தாயானதத்துவனைத்தானேயுலகேழு, மாயானையாள்வானைப்பாடுதுங்காணம்மானாய் எனவும், திருநாவுக்கரசுகள் "நெஞ்சே நீ நினையாய், நிமிர் - புன்சடை நின்மலனை, மஞ்சாடும்மலை மங்கை மணாளனை நெஞ்சே நீ நினையாய்." என்றதிருப்பாசுரத்தாலறிக.

ஆதிபகவன் ஞானவடிவழலிற்பூத்து நித்தியமாயருந்தினோர்கட்காரமுதாய்ப்பசுமலத்தை நீக்கச்சிவனடியவர்களாலணியப்பட்டு உடலுக்கு அழகு செய்வான் அணியப்படும் பொன்னணிமுதலிய போலாது ஆன்மாவிற்கும் அழகு செய்தலின் அதனையேயென்மனம் விரும்புமென்பார் அருத்தி செய்திடுவது உருத்திரசாதனமென்றார். இதனை "பேசிற்றாமீசனே யெந்தாய்யெந்தை பெருமானே யென்றென்றே பேசிப்பேசிப் பூசிற்றான் றிருநீறே நிறையப்பூசிப் போற்றி யெம்பெருமானே யென்று பின்றா, நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மையாண்டானேயவாவெள்ளக் கள்வனேனை, மாசற்ற மணிக் குன்றேயெந்தாயந்தோ, வென்னைநீயாட்கொண்டவண்ணந்தானே என்றதிருவாதவூரடிகள் திருப்பாசுரத்தாலும், "காணீர் கதியொன்றுங்கல்லீரெழுத்தஞ்சும் வல்லவண்ணம். பேணீர் திருப்பணி பேசீரவன் புகழாசைப்பட்டுப், பூணீருருத் திரசாதனநீறெங்கும் பூசுகிலீர், வீணீர் எளிதோ மருதப்பிரான் கழல் மேவுதற்கே." என்ற அடிகள்திருவாக்கானறிக. "ஒன்றினைமுடித்தல் தன்னினைமுடித்தலென்றதனான் விபூதி கூறவே அதனின மாய கண்டிகையும்

கூறுதே அமையும். அதனை யணிந்தார் இம்மை மறுமைப்பயன்களையும் தேவர்களாதியர் அடையும் பெரும்பேற்றிலும் சிறந்த முத்தியினையும் பெறுவர். அதனை "சென்மித்தநாண் முதலாய்த்தீ நெறிக்கட் சென்றுசென்று,வன்மித்த நெஞ்சராய்க் கொன்றுண்ட வன்கணரும், நின்மித்தருட்ரு நீண்மணியி லொன்றணிந்தால்,என் மற்றவர் பெறும் பேறெம்மனோர்க் கெய்துவதே" எனவும், "ஆயமாமணியுருத்திர வக்க முற்றணிந்தார், மாயிரும்பு விச்செல்வராய் மன்னரிற் சிறப்பார், ஏயவெள்ளியங்கையிலை வீற்றிருப்பரீதிகழ்ந்தோர், பாயவெண்டிரை நிலத்துழல் பஞ்சபாதகரே." எனவும், கூறியவற்றாலறிக. விபூதி ருத்ராக்கங்களின் மிகுதி யெடுத்துரைப்பின் கிரந்தவித்தாரமாம் ஆதலின் அஞ்சி விடுத்தாம். அதனை சிவதருமோத்தரம், சூதசம்மிதை, உபதேசகாண்டம் முதலிய பெருநூல்களால் அறிக.

உடலெடுத்த ஆன்மா, அச்சனனத்து முத்தியடைய விரும்பின் கைகால் முதலிய தனதுறுப்புகளால் அவனது திருக்கோயிற்றிருப்பணி சிவனடியர் திருப்பணி முதலியசெய்து சிவமூர்த்திக்குத் தன்மீது பெருங்கருணையும் தனக்கு அவனிடத்து நீங்கா அன்பும் பெறவேண்டி இயற்றப்படுவது, சரியை யாதியாகிய பூக்கொய்தல், மலர்மாலைதொடுத்தல், திருமெழுகிடுதல், திருநந்தவனம்வைத்தல், திரு அலகிடுதல், திருவிளக்குத் தூண்டல்வைத்தல் முதலியனவாம்.அவற்றையியற்றின்அங்கங்களாகியகைகால்களும்ஏனையவுறுப்களும் பயனடைந்து உடம்பைப்பெற்ற அங்கியும் பயனடைதலின் "காலையுமாலையுங்கால்பெயர்த்திடுவதுன் கோயில்வலம் வருதற்கே, சால்பினிற்கைகொடுகுயிற்றுவதைய நின்னதுகோயிற் பல்பணிகுறித்தே"என்றார்.இதனைத் திருநாவுக்கரசுகள்,"கால்களாற்பயனென்,கறைக், கண்டனுறைகோயில், கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக்கால்களாற் பயனென்." எனவும், கைகாள்கூப்பித்தொழீர், கடி, மாமலர்தூவிநின்று, பைவாய்பாம்பரையார்த்தபரமனைக், கைகாள் கூப்பித்தொழீர்." எனவும், கூறிய திருவாக்குக்களாலறிக. அடிகள்மேல் இதுகாறுந் திருவாய்மலர்ந்து வந்தது சரியை கிரியைக்குக் காரணமான சற்புத்திரமார்க்கந் தாதமார்க்கமாம். இனி சகமார்க்கமும் சன்மார்க்கமும் கூறுவானெடுத்து ஓயாதுருகி நினைந்து என்றார். இதனால் சரியை கிரியையோக ஞானங்கள் நான்குமிதில் சுருங்ககூறினார். இவ்வாறு கூறவே சகமார்க்கத்தார் முதலியோர் அநுட்டிப்பது இதுவேயென வரையறுத்தாராயினர். இதனை "சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்திரமார்க்கந் தாதமார்க்கமென்று சங்கரனையடையு, நன்மார்க்க நாலிவைதான் ஞானயோக நற்கிரியா சரியையென்று நவிற்றுவதுஞ்செய்வர், சன்மார்க்க முத்திகள் சாலோக்ய சாமீப்பியசாரூப்பிய சாயுச்சியமென்று சதுர்விதமா, முன்மார்க்க ஞானத்தாலெய்து முத்தி முடி வென்பர் மூன்றினுக்கு முத்திபதமென்பர்." என்றதாற்காண்க. உருகி நினைந்து என்றதால்பதுமம்,வீரம்,மயூரம்,குக்கிடம், முதலிய ஆசனங்களிலொன்றிலிருந்து, ஆமை தனது உறுப்புக்களையடக்கல் போல் மனம் புலன்வழி செல்லாதபடி அடக்கி நாசியினிருதொளை வழிசலிக்கும் இரேசக பூரகாதிவாயுக்களைச்சலிக்காது கும்பித்துப், பிராணவாயுவைச்

சுழுமுனையினிறுத்தி தன்னுடற்கண் குதத்திற்கு இரண்டங்குலமேலும் லிங்கத்திற்கிரண்டங்குலங் கீழுமாகவுள்ள மூலாதாரத்தில் முக்கோண வடிவான யந்திரத்து நாலிதழ்க்க மலத்தில் விநாயகர், வைரவர், க்ஷேத்ரபாலகர், சண்டர், முதலிய தேவர்களை யவரவர்களுக்குரிய பீஜாக்ஷரங்குளுடன் தியானித்து, மேல் சுவாதிஷ்டானமாகிய இலிங்கமூலத்தில் அறுகோணத்தில் ஆறிதழ்க்கமலத்தில், பிரதிட்டை, சுத்ததயிரினி, பாவனை,இருடி, பத்மினி, பத்மயோகி,என்ற அறுவரையு மவரவர்களுக்குரிய பீஜாக்ஷரங்களுடன்தியானித்து, மேல்மணி பூரகமாகிய நாபித்தானமடைந்து மூன்று வட்டமாய்ப் பத்திதழ்த்தாமரைக்கண்,தூலாராக்ஷி,நீலாக்ஷி,கைலாசநி,புலங்கனி,உபாகி, உட்நிகை, வாசிநி,நேத்ரகரி,தவநி,நவநி,என்றபதின்மரையும் அவரவர்களுக்குரிய பீஜாக்ஷரங்களுடன்றியானித்து,மேலேறிஅநாகதமாகிய இருதயத்தானஞ்சென்று முக்கோணவடிவாய்ப் பொன்மைகலந்த வெண்ணிறங்கொண்ட துவாதசவிதழ்க்கமலத்தில் கபிநி, பிரதநி, சோஷி, காலோணிநி, வேணி, ஆக்ஷணி, சாமுண்டி, விராடி, துர்கா, செடிகா, ஆரணி, தரணி, எனும் பன்னிருவரையும் அவரவர்க்குரிய பீஜாக்ஷரங்களுடன் தியானித்து, மேல்விசுத்தித்தானமாகிய கண்டத்தையடைந்து அறுகோணவடிவுள்ள யந்திரத்தில் சோடச இதழ்களையுடையச்வேதபத்மதளத்தின் கண்மாண்டி, புடபடி, திரி, ச்ருங்கி, சுவரா, அசனி சிராத்ரி, தர்மாக்ஷணி, சாயா, அற்பாசி, நிகராக்ஷி, துல்லாசநி, யூபா, சாரினி, காலாசி, கமலா, எனும் பதினறுவரைத் தியானித்து, மேல் ஆக்ஞை யெனும் புருவமத்யத்தையடைந்து ஈரிதழ்ச்செந்தாமரைக் கீமலத்தில் சுந்தரி, ஆநந்தியெனும்மதி தேவதைகளை யமைத்துத் தியானித்து,மேற்கூறிய விசுத்தியீறான ஆறாதாரங்களைக்கடந்து இவற்றின்மீது மீதானமாகிய ஆறாதரங்களையுங்கடந்து, காற்றுப்பொருள்களிடத்து வியாபித்திருப்பது போல் தன்னால் தியானிக்கப்படும் பொருளினுடைய பரிபூரணபிரகாசத்திலழுந்தியுருகி ஆநந்தித்தலாம். இவ்வாறு பொருளிடத்து ஆனந்தங்கொண்டார் புறத்தில் அது நீங்கி மனஞ்சலிக்கையினும் முன்பு அதனை யநுபவிக்கும் பழக்கவாதனையால் புறத்திலும் அப்பொருளையே காண்பர். எவ்வாறெனின் சராசராத்மகமாகிய ஆன்மாக்களெல்லாம் சிவனிடத்தொடுங்கிநிற்கு முறைமையினையும், அச்சிவமூர்த்தியும் மாயாதிதனுவான் உயிர்க்குயிராய் நிறைந்துநிற்றலினாலுமென்க. இதனாலன்றேகாண்பனவெல்லாம் நீயேயாகி நின்றதோர்நிலையேயென்றார்.மாயாதிதனுவானிறை வனிறைந்து நிற்பானென்றதென்னையெனின், சிவசாதாக்யமுதலிய நான்குமெவ்வாறு ஒன்றாகக்கன்மசாதாக்யத்தில் வியாபித்து நிற்கும் அதுபோல் என்க. இதனை பிறரும் "கன்மசாதாக்கியத்திற்கலந்துறல் போலநாதி, நின்மலனவனே மாயாதனுவினா நிறைந்து நிற்கு, மன்னியமனாதி தன்னுட்கலாதியுளுயிருள்வைகுஞ், சின்மயன் சிவன் பாலுமுன்னிலைச்சிவன் பார்சிவன்." இவ்வாறு கூறினதறிக. அங்கங்களிற் சிறந்த உத்தமாங்கமாகிய வென் சென்னி தேவரீரது திருப்பாதப்போதல்லாது மற்றெத்தேவரும் என மாட்டாளுகி முத்திதருகிறோமெனக் கூறுகினுமிறைஞ்சாதென்பார் "நாயேன் தலைகொடுசேர்வதுன் சரண் எனவும், அங்ங

னம் பணிகினும் உன்னைப்பணிவார் உன்னோடொப்பர் அச்சிவனடி யவனையும் நானெம்மையிலும் மறந்தே னல்லன் என்பார், வழிஎனவுங்கூறினார். இதனைத்திருநாவுக்கரசர், "தலையே நீவணங்காய், தலை மாலைதலைக்கணிந்து தலையாலே பலிதேருந் தலைவனை, தலையே நீவணங்காய்." என அருளிச்செய்தவாறறிக. இதுகாறும், அடிகள் மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் சிவமூர்த்தியையன்றி வேறுதேவரைத் தொழா வுறுதிநிலையைப் புறத்துறுப்புக்களாய தலைமுதல் பாதாந்தமாககூறினர். இவ்வாறே வாதவூரடிகளும் "சிந்தனைநின்றனக்காக்கி நாயினேன்றன் கண்ணிணை நின்றிருப்பாதப்போதுக்காக்கி, வந்தனையு மம்மலர்க்கே யாக்கிவாக்குன் மணிவார்த்தைக் காக்கியைம் புலன்களார, வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்தவிச்சை மாலமுதப் பெருங்கடலே மலையேயுன்னைத், தந்தனைசெந்தாமரைக் காடனைய மேனித்தனிச்சுடரே யிரண்டுமிலித் தமியனேற்கே."

எ-ம். "உங்கையிற் பிள்ளையுனக் கேயடைக்கல மென்றங்கப் பழஞ்சொற்புதுக்கு மெம்மச்சத்தால், எங்கள்பெருமானுனக் கொன்றுரைப் போங்கேளெங் கொங்கைநின்னன்பரல்லார்தோள்சேரற்க, வெங்கையுனக் கல்லாதெப்பணியுஞ் செய்யற்ககங்குல்பகலெங்கண் மற்றொன்றுங்காணற்க, இங்கிப்பரிசேயெமக்கெங்கோ னல்குதியே லெங்கெழிலென் ஞாயி றெமக்கேலோரெம்பாவாய்."

எ-ம். "பாடவேண்டுநான் போற்றிநின்னையே பாடிநைந்து நைந்துருகி நெக்குநெக், காடவேண்டு நான்போற்றி யம்பலத் தாடுநின்கழற்போது நாயினேன், கூடவேண்டுநான் போற்றியிப்புழுக்கூடு நீக்கெனைப்போற்றி பொய்யெலாம், வீடவேண்டு நான்போற்றி வீடுதந்தருளு போற்றிநின்மெய்யர்மெய்யனே." என்ற திருவாக்குகளாலும், "சிவன்றன் திருவுருவைக் காணாதகண்ணேகுருடாஞ்சீர்சால், சிவன்றன் றிருவுருவை யெண்ணாதசிந்தையே பித்தாமென்றுஞ், சிவன்றன்றிருப்புகழைக் கேளாச்செவியே செவிடாமன்பிற், சிவன்றன்றிருப்புகழை யோதாதவாயே திணிந்தமூங்கை." எ-ம், கண்ணுதலாலயங்காணுங்கண்களேகண்கள் கறைக்கண்டன் கோயில்புகுங்கால்களேகால்கள், பெண்ணொருபாகனைப் பணியுந்தலைகளேதலைகள் பிஞ்ஞகனைப் பூசிக்குங்கைகளேகைகள், பண்ணவன்றன் சீர்பாடுநன்னாவே நன்னாப்பரன் சரிதையேகேட்கப்படுஞ் செவியேசெவிகள், அண்ணல்பொலன் கழனிணைக்குநெஞ்சமேநெஞ்சம் அவனடிக்கீழடிமை புகுமடிமையேயடிமை." எ-ம், கூறினவாறறிக. இறைவனது திருக்கோலத்தின் பொலிவழகினையு மவனது திருக்கல்யாண குணங்களையும் புறத்துமகத்தும் அனுபவித்துஅழுந்திநிற்கும்மிகுதியால் இறைவனையன்றி வேறுவணக்கம் அலைகடல்பிறழினும் அடாதென்றார். இதனை யெம்மையாளுடையரசுகளும் "நாமார்க்குங்குடியல்லோம் நமனையஞ்சோம்நரகத்திலிடர்ப்படோம்நடலையில்லோம், ஏமாப்போம்பிணியறியோம் பணிவோமல்லோமின்பமேயெந்நாளுந்துன்பமில்லை, தாமார்க்குங்குடியல்லாத்தன்மையான சங்கரந்ற

சங்கவெண்குழையோர்காதிற், கோமாற்கேநாமென்று மீளாவாளாய்க்கொய்ம்மலர்ச்சேவடியிணையே குறுகினோமே.'' எ-ம், ''மூவுருவின்முதலுருவா யிருநான்கான மூர்த்தியேயென்று முப்பத்துமூவர், தேவர்களுமிக்கோருஞ் சிறந்துவாழ்த்துஞ் செம்பவளத்திருமேனிச் சிவனேயென்று, நாவுடையார் நமையாளவுடையாரன்றே நாவலந்தீ வகத்தினுக்கு நாதரான, காவலரேயேவிவிடுத்தாரேனும் கடவமலோங் கடுமையொடு களவற்றேமே.'' என்றவாற்றிக. பாழினுடமைபை யோம்பல்காரணமாக அறிவழிசிலர், மழித்தலுநீட்டலுங்கொண்டு யோகரைப்போலும் உண்மையடி யவரைப்போலும் உலகத்தை மயக்கிப்பொருள்பரித்துத் தவத்தையிழந்து பொய்யாகிய வுடலிழந்து நரகத்துழத்தலின் பொய்த்தவர், எ-ம், வேட்டுவன் மிருகாதி புட்களைப்பிடிக்குமிடத்து விலங்குகளின் தோல்களைப்பொத்திக்கொண்டும் அவற்றைப்போல் ஓசையிட்டும் மறைந்துவலைவீசி அம்மிருகாதி புட்களைப்பிடித்தல்போல இப்பொய்த்தவத்தவரும் உலகத்தவரைத் தமது தவவேடத்தால் மயக்கித் தம்வசப்படுத்தலின் வேடர் எ-ம், கூறினர், சைநர்கூறிய பிடகமும், புத்தம் சாங்கியம் பாஞ்சராத்ரம் முதலிய புறச்சமய நூல்களும் அகச்சமயமாகிய யாமளம் வைரம் முதலிய நூல்கள் உண்மையை விபரீதப்படுத்திக் கூறலானும், இதனையோதிய சமயங்களில் புக்குழந்தார் முத்திநெறியைக்கைவிட் டுண்மையிழந்து சநநக்கடலிற்பட்டுவருந்தியிடருற்றலைவராதலானும் வஞ்சச்சொல் என்றூர். இந்நூல்கள வேடனது கண்ணிவிரிந்தாங்குப் பல்வேறு வகைப்படவிரிதலின் வார்வலை என்றூர். வலையென்பது, ஏதுப்பெயர். தன்னகத்துப்பட்டதனை விடாதுவலித்தலின். வல், பகுதி, ஐ, புடைபெயர்தற்கண் வந்தவிகுதியென்க.

இவற்றை முதலாகக்கொண்ட அச்சமயமுதல்வர், அந்நூற்பொருள்களைப் பரவச்செய்வான் பல மாணாக்கர்களைக்கொண்டு எங்கும் போதிக்கும் வகைசெய்தலின், போக்கி என்றூர். பொய்ச்சமயமாகிய புறச்சமயங்களிலும் புறப்புறச்சமயங்களினும்பட்டார் அதினின்றுமீளுதல் வேட்டுவர் மிருகங்களைக் குழிதொட்டு அதில் வீழ்வித்து அதினின்று மீளுதலையொத்தலின் சமயப்படு குழியென்றூர். இச்சமயத்தவரில் சார்வாகா லௌகிகர் மரணமே மோக்ஷமெனவும், ஜைநர் ஆகாசமத்தியத்தில் உத்தரோத்தர கமனமேமோக்ஷமெனவும், பௌத்தர் சுத்தபுத்தி சந்ததியே மோக்ஷமெனவும், கௌளயாமளர் ஆகாசகமனத்தி சித்திப்பிராப்தியே மோக்ஷமெனவும், பாஞ்சராத்ரிகள் வாசுதேவாத்மகமாகிய பிரகிருதியில் ஸ்வரூப ஆனியிலா தடங்கல் முத்தியெனவும், பூர்வமீமாம்சிகள் சுவர்க்காதி லோகப்பிராப்தியே மோக்ஷமெனவும், நியாயவைசேடிகர் துக்க நாசத்தால் பாஷாணம்போலிருப்பதே முத்தியெனவும், சாங்கியர் பிரகிருதி புருஷவிவேகத்தால் அவித்யாநாசமே மோக்ஷமெனவும், பாதஞ்சலர் யோகாப்பியாசத்தால் மனோலயப்பட்டு அஞ்ஞானநாசமே மோக்ஷமெனவும், வேதாந்திகள் விவகாரசம்சார பந்தநீக்கமே மோக்ஷமெனவும் கூறுவர். இதுகாறுங்கூறியது புறப்புறச்சமயங்களின் மோக்ஷநி

லைகளாம். இனி, அகச்சமயத்தில் பாசுபதன் ஞப்திமாத்திரமாய் இருப்பதே மோக்ஷமெனவும், காபாலிகமாவிரதாதிகள் கர்த்ருத்வமான சமசார பாவத்தைவிட்டு ஞப்திமாத்ரமாயிருப்பதே மோக்ஷமெனவும் கூறுவர். இவர்களில் சிலர் நிரீச்சுரவாதிகளும் பேதவாதிகளாயும், மற்றவர் சேசுரவாதிகளாயினும் சித்தாந்தமுத்தியுடன் மாறுகொள்ளுதலின் சித்தாந்த முத்தியொன்றே சிறந்தது; ஏனைய கற்பிதமென்பார் சமயப்படுகுழியென்றமையாது சமைத்தென்றார். பலசமயத்தவர் பொய்யை மெய்ம்மைபோல் காட்டித் தமதுவன்மையால் நன்னிலைக்கணிற்பாரையுமயக்கித் தம்வசமாக்குவான் பொய்ச்சமயநெறிபோதித்து அச்சமயத்தில் அவர்களைப்புகுத்தலின் வலியப்புகுத்தும் என்றார். இதனையன்றே வாதவூரடிகளும், "சமயவாதிகடத்தமதங்களி, லமைவதாக வரற்றிமலைந்தனர், மிண்டியமாயா வாதமென்னுஞ், சண்டமாருதஞ் சுழித்தடித்தார்த், துலோகாயதனெனு மொண்டிறற்பாம்பின், கலாபேதத்த கடுவிடமெய்தி" என்றார்.

பொய்த்தவவேடர் வலை, படுகுழியென்றதற் கேற்பமானிட மாக்களென்றார். என்னை "வானவர் மக்கணரகர் விலங்குபுள், ளாதிசெவியறிவோடைய றிவுயிரே." எ-ம், "வானவர்மனிதர்கீழ் போய்மாழ்கிய நாகரோடு, காலூறுவிலங்குபுள்ளுக்சருது நாலறிவினோடே, யூனமில் செவியுமாங்கே யுறவினையறிவிற்சீவன், மானமர்நோக்கினல்லாய் மனமுமொன்றதிகமாமே.' எ-ம், "ஒன்றறிவதுவே யுற்றறிவதுவே, இரண்டறிவதுவே யதனொடுநாவே, மூன்றறிவதுவே யவற்றொடுமூக்கே, நான்கறிவதுவே யவற்றொடுகண்ணே, ஐந்தறிவதுவே யவற்றொடு செவியே, ஆறறிவதுவே யவற்றொடு மனமெனா, நேரிதினுணர்ந்தோர் நெறிப்படுத்தனரே." எ-ம், 'புல்லுமரனு மோரறிவினவே, பிறவுமுளவே யக்கிளைப்பிறப்பே, நந்துமுரளுமீரறிவென்ப, பிறவுமுளவே யக்கிளைப்பிறப்பே, சிதலுமெறும்பு மூவறிவென்ப, பிறவுமுளவே யக்கிளைப் பிறப்பே, நண்டுந்தும்பியு நான்கறிவினவே பிறவுமுளவே யக்கிளைப்பிறப்பே. மாவும் புள்ளு மையறிவினவே, பிறவுமுளவே யக்கிளைப்பிறப்பே, மக்கடாமே யாறறிவுயிரே - பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே.' எனக்கூறுதலால். அஃகள் விலங்கென்றதென்னையெனின் "விலங்கொடுமக்க ளனைய ரிலங்குநூல், கற்றாரோடேனையவர்." எ-ம், "உளரென்னுமாத்திரை யரல்லாற்பயவாக், களரனையர் கல்லாதவர்." எ-ம், "நுண்மாணுழைபுலமில்லா னெழினல, மண்மாண்புனைபாவையற்று." எ-ம், கல்லாதவரை யஃறிணையுடனொப்பித்து பெருநாவலர் கூறுதலால் கல்வியிலாதாரே யித்தகைய ராயவரினின் மேம்பட்ட கல்விகற்றும் வீடுபயக்கும் மெய்ப்பொருளுணராதார் பயனடையார் எனபார் மானிடமாக்கள் என வுருவகப்படுத்தினர். என்னையெனின் "அலகுசால்கற்றும் அறிவுநூல்கல்லாதுலக நூலோதுவதெல்லாங் கலகல."எ-ம், "எப்பொருளெத்தன்மைத் தாயினுமப்பொருள், மெய்ப்பொருள் காண்பதறிவு," எ-ம், "பிறப்பென்னும் பேதைமைநீங்கச் சிறப்பென்னுஞ், செம்பொருள்காண்பதறிவு.' எ-ம், கூறுப ஆதலானும், தோற்றக்கேடுகளின்மையினித்தமாய், நோன்மை யாற்றன்னை யொன்றுங் கலத்தலின்மையிற்றூய்தாய் தானெல்லாப் பொருளினுங்கலந்து நிற்றலின் வியாபகமாய் நிற்கும்

மெய்ப்பொருளுடன், ஆன்மா, தன்னவிச்சைகெட்டு அதனுடன் ஒற்றுமை யுற்று இடைவிடாது பாவிக்கும் இன்பத்திலு மிக்கதாகிய பேரின்பமின் முத லால் அதனை யனுபவிப்பாரே மக்கள் ஏனையோர் மக்கட்கூட்டத்தவரல்லர் என்பார் அங்ஙனங்கூறினார்.

விரதவாதிகள் உத்தராயண, தக்ஷிணாயன, சாந்திராயண, அமாவாசை, பௌர்ணமி, பிரதோஷம், கிர்த்திகை முதலிய திதி நக்ஷத்ர யோககரண வா ரபக்ஷ மாதங்களில் தாங்கள் எண்ணிய தேவதைகளைக்குறித்து அன்னமில் லாமலும், ஒருபொழுது புசித்தும் பலகாராதிகள் உண்டும், தீர்த்தபானஞ் செய்தும், தேகத்தைவருத்தியும், பின்னும் தங்கள் மதத்திற்சொல்லி யுள்ள விரதங்களேயன்றி மற்ற மதத்தவர்கூறி யுள்ள விரதங்களை அநுட்டித்தும், அநுட்டானபலத்தால் பிராணத்தியாகஞ்செய்தும், தம்முள்ளத் தெண்ணிய உண்பொருள்களில் ஏதேனும்மரணபர்யந்தம் உணவாகக்கொள்ளுகிறதில்லை. யெனவைராக்யஞ்செய்தும், உண்டிசுருக்கியும், கந்தமூலபலாதிகளை யருந்தி யும், சருகாதிகளைத் தின்றும், குகைகளிலும், வநங்களிலும் ஆச்சிரமங்களி லும் தனித்திருந்து தலைகீழாகவும் கால்மேலாகவும், ஒருகாலைத்தூக்கியும், கை மேனோக்கியும் ஊர்த்ததிருஷ்டி யுள்ளவராகவு நின்றும், இருந்தும், கிடந் தும், பஞ்சேந்திரிய நிக்ரகஞ்செய்தும், தேகாபிமானம்விட்டும், தேவதாராத னம் முடிந்தபின்பே ஆகாராதிகள் கொண்டும், அதற்குமுன் தீர்த்தபானமும் செய்யாமலும், பூஜாதிவிரதங்கள் தவறின் பிராணத்தியாகஞ்செய்தும். விர தாதிகளின் வலிமையால் சாபாநுக்ரக சித்தியடைந்து முத்தியடைந்தனர் என்று கூறுதலால், அவ்விரத வாதிகளின் துர்ப்போதனை ஞானத்தின் முன் பலியாதாதலால் ஒருகால் கன்மவசத்தால் அவர்வயப்படுதல் நோக்கி ஆனைவி ரதத்தகப்படுத்தாழ்ந்தும் என்றார். சமயங்கள் பலவாதலால் அவற்றின்பொ ருட்பேதங்களும்பல. அவற்றைப் பொருளெனக்கொண்டார் நிலைத்த பேரின் பத்தை யடையாது மீண்டும் உண்மையாகிய சமயமாகிய சைவசமயத்திற் பிறந்தே உண்மை முத்தியடைதல் வேண்டும். அதனை, "ஓதுசமயங்கள் பொ ருளுணரு நூல்கள் ஒன்றோடொன்றொவ்வாமை யுளபலவு மிவற்றுள், யாது சமயம் பொருணூலியாதிங் கென்னிலிது வாகுமது வல்லவெனும் பிணக்க தின்றி, நீதியினாலிவையெல்லா மோரிடத்தேகாண நின்றதியாதொரு சமயம தசமயம் பொருணூ, லாதலினா லிவையெல்லா மருமறையாகமத்தே, யடங் கியிடு மவையிரண்டு மரனடிக்கீழடங்கும்." எ - ம், சித்தாந்தத்தே "சிவன் றன் றிருக்கடைக்கண் சேர்த்திச் சநநமொன்றிலே சீவன்முத்தராக, வைத் தாண்டு மலங்கழுவிஞானவாரி, மடுத்தானந்தம் பொழிந்துவரும் பிறப்பை யறுத்து, முத்தாந்தபாதமலர்க் கீழ்வைப்பனென்று மொழிந்திடவு முலகமெ லாமூர்க்கராகிப், பித்தாந்தப்பெரும் பிதற்றுப்பிதற்றிப் பாவப் பெருங்குழி யில்வீழ்ந்திடுவரிது வென்னபிராந்தே." என்ற திருவிருத்தத்தாலறிக. என் னதால், பொருளல்ல வற்றைப்பொருளாகக் கொண்டு நரகத்தி லிடர்ப்பட்டு

வருந்தும் தீயவூழ்வருமோ என்றோ எனும் திருவருளின் கட்டளையுணர்ந்து வெருவினவர் அலைகடல் பிறழினும் உன்னையல்லாது வேறு எண்ணேனென் பார் மறைப்பொருளதாகிய ஓகாரம்புணர்த்து வளைவுணர்வருமோ என்றார்.

சராசரமாகிய உயர்திணை அஃறிணை யிரண்டும் இறைவன் காரணமாக உண்டாய் அவனிலயப்படுமென்றது. உபசாரம் என்னெனின்? இருவகைப்பிரபஞ்சமும் மாயையிடத்துதிக்கும், அம்மாயை, சுத்தம், அசுத்தம், சுத்தாசுத்தம்என்று மூவிதம், முற்கூறிய சுத்தமாயை விந்தெனவும்படும். அவ்விந்துவாகிய சுத்தமாயையின் அதோபாகம் அசுத்தமாயை. அவ்வசுத்தமாயையின் மகானுண்டாம். இவ்வாறு, விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர், என்னும் மூவர்க்குந் தனுகரணாதிகளுண்டாம். இந்தச் சுத்தாசுத்தமாயைகளே விந்துமோகினி மகான் எனப்படும். இதில் விந்துவில் வாக்குகள் தோன்றும். மோகினியாகிற அதோமாயையில் வித்யாதத்வங்கள் தோன்றும், மூலப்பிரகிருதியில் முக்குணங்களும் தோன்றும். இனிமாயையொன்றே யமையும் மூன்றுங் கூறியது கற்பனாகௌரவமெனின், கூடாது. என்னெனின், அத்துவாக்களாகிய சுத்தம் அசுத்தம் சுத்தாசுத்தம் இம்மூன்றிற்கும் விந்து மோகினி மகான் மூன்றும் உபாதானமாதலால் என்க. என்னெனின் பருத்தியில், பட்டும், சணலும் உளவாகாவாறுபோல, மாயையில் மிச்ராத்வா வொழிய சுத்த அசுத்த அத்வாக்கள் தோற்றங்கூடாதாம். பிரபுத்தராகிய விஞ்ஞானகலருடைய தனுகரணாதிகளுக்கு அசுத்தமாயை காரணமல்ல. அவர்கள் சுத்ததேகேந்திரியாதிகளை யுடையராயினும் சர்வதாசிவானுக்ரகத்தால் பிரபுத்தரே. அசுத்தமாயை அசுத்த தனுகரணாதிகளை யுண்டாக்குவதாதலால் விஞ்ஞானகலருக்குக் கருமமில்லாமையால் இவர்களின் தனுவாதிகளுக்கு விந்துவே காரணம். இனி சுத்தம், அசுத்தம் எனும் விந்துவினையும் மாயையினையும் ஈஸ்வர சமவாயசத்தியென்போமெனின், மேற்கூறிய சுத்தையாகிய விந்து, சடமாகையால் குலாலனுக்கு மிருத்பிண்டம்போல ஈச்வரனுக்குப் பரிக்ரகசத்தியாமேயன்றிச் சமவாய சத்தியன்று. இந்தவிந்து சுத்த தனுகரணாதிகளுக்கும், மிச்சாத்வாவிற்கும் அசுத்தமாயையும், அசுத்தாத்வாவிற்கு பிரகிருதியும் உபாதானகாரணம் ஆகையால் இவைமூன்றிற்கும் இறைவனிடத்திற் றோற்றங்கூறியது உபசாரமாம். இது, இறைவன் பிரபஞ்சத்திலுள்ள பொருள்கள் மாட்டு நீக்கமற நிறைந்து நிற்குமொற்றுமை நயத்தால்கூறியதாதலின் அடிகள் "சராசரமனைத்து நின்னிடைத்தோன்றி நின்னிடையடங்குமென" சித்தாந்தஞ்செய்தனர். இதனை "விந்துவின்மாயையாகி மாயையினவ்வியத்தம், வந்திடும் விந்துத் தன்பால் வைகரியாதிமாயை, முந்திடுமராகமாதி முக்குணமாதிமூலந், தந்திடுஞ் சிவனவன்றன் சன்னிதிதன்னிலன்றே." எ-ம், "அருவினி லுருவந்தோன்றியங்காங்கிபாவமாகி, உருவினிலுருவமாயே வுதித்திடுமுலகமெல்லாம், பெருகிடுஞ்சுருங்கும்பேதா பேதமோடபேதமாகு, மொருவனேயெல்லாமாகி யல்லனுமுடனுமாவன்." எ-ம் "இலயித்ததன்னின் லயித்ததாமலத்தால் லயித்தவாறு

ஏதாவேண்டும்" என்றது மிகுபற்றியென்க. நுரை அலைகள் ஒன்றோடொன்று மோதுதாலுண்டாம் திவலையின் கூட்டம். இது தோன்றியவுடனே மறையும். திரை அலைகள் இவைசிறிதுபோது நின்றுகரைசாரச்சாரக் கேடுறும். நொப்பு இணைக்கப்படுந்தடை. கொட்பு - நீருந்தி, வரையில் சீகரவாரி, உளவிலாச்சிறுநீர்த் துளிகளும் நீரும், ஈண்டு நுரை. உடனேதோன்றிச் சிறுபொழுதில் மரிக்கும்ஆன்மாக்களுக்குவமை. திரை, அங்ஙனந்தோன்றிச் சிலகாலமிருந்து இறக்கும் ஆன்மாக்களுக்குவமை. நொப்புறுகொட்பு - ஆணவாதி கன்மங்களால் தடுக்கப்பட்டு நற்கதிபெறாத ஆன்மாக்களுக்குவமை. வரையில் சீகரவாரி - எண்பத்துநான்கு இலக்ஷ சீவபேதங்களுக்குவமை, இவை, கடலிடைத்தோன்றியதி லடங்குந்தன்மைபோல் எண்ணிலவாகிய சீவராசிகளும் இறைவனிடந்தோன்றி யவனிட மொடுங்குமெனக்கூறியதாம். இதனை "நின்னியல்பை யாரேயறிவார் நினையுங்கால், மன்னியசீர் காளத்திமன்னவனே - நின்னில், வெளிப்படுவதேயுலகு மீண்டேயொருகால், ஒளிப்பதுவுமாகுமுரை." என்ற நக்கீரதேவர் திருவாக்காலும், "இரந்திரந்துருகவென் மனத்துள்ளேயெழுகின்றசோதியே யிமையோர், சிரந்தனிற்பொலியுங் கமலச் சேவடியாய் திருப்பெருந்துறையுறைசிவனே, நிரந்தவாகாய நீர்நிலந்தீகா லாயவையல்லையாயாங்கே, கரந்ததோருருவே களித்தனனுன்னைக்கண்ணுறக்கண்டு கொண்டின்றே." என்ற மணிவாசகத்தானு மறிக. எல்லாவுலகமும் நின்னிடைத்தோன்றி நின்னிடையழியு மென்றதனன், பிரபஞ்சம் நித்யம் இதற்கொருகர்த்தா வேண்டுவதில்லை என்கிற சார்வாகமதத்தை யடிகள் கண்டித்தார் என்க. தோன்றியழியும் பொருள்களுக்கு அவ்வாறு தோற்றக் கேடுகளில்லான் தலைவனாதல்வேண்டுமாதலால், பிரபஞ்சமுதல்வனாகிய பசுபதியே அவ்வாறு தோற்றக் கேடுகளில்லாதவனாதலாலும் ஏனைதேவர்கள் இவன் சந்நிதி குற்றேவல் செய்து காலாந்தரத்தில் இவனிலயப் படுதலாலும் நீயொன்றினுந் தோன்றாயென்றார். இதனை "பேதமில்லதோர் கற்பளித்த பெருந்துறைப்பெருவெள்ளமே, ஏதமேபலபேசநீயெனை யேதிலார்முன மென்செய்தாய், சாதல்சாதல் பொல்லாமையற்ற தனிச்சரண் சரணாமெனக், காதலாலுனையோதநீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே." என்ற மணிவாசகத்தாலும், "எல்லார்பிறப்பு மிறப்பு மியற்பாவலர்தஞ், சொல்லாலறிந்தோநஞ் சோணேசன், - இல்லிற் பிறந்தகதையுங் கேளேம் பெருமலையில் வாழ்ந்துண், டிறந்தகதையுங் கேட்டிலேம்." என்ற திருவெண்பாவாலு மறிக. அணுவிற்கணுவாயு மகத்திற்கு மகத்தாயும் பொருள்கடோறு நிறைந்து நிற்றலின் ஒன்றினுமடங்காய் என்றார். இதனை "பாதம்புவனி சுடர்நயனம் பவனமுயிர்ப்போங், கோதமுடிக்கை யுயர்வான் முடிவிசும்பேயுடம்பு, வேதமுகந்திசைதோண் மிருபன் மொழிநீதமென்னா, போதமிவற்கோர் மணிநிறந் தோற்பது பூங்கொடியே." எ - ம். "இன்றுநமக்கெளிதே மாலுக்கு நான் முகற்கும், அன்றுமளப்பரியனானானை - யென்றுமோர், மூவாமதியானை மூவேழுலகங்கள், ஆவானைக்காணு மறிவு." எ - ம், கூறியவற்றானறிக. ஆணவாதிமலத்தால் பெத்தராய்ப்புண்ணிய மிகுதியான்

மேலுள்ள ஊர்த்தபுவன வாசிகளுக்கும் அவனைக்காணும் அறிவின்மையால் அரியன் என்பார், வானோர்க்கரியாய் என்றார். இதனை "நினைந் திருந்துவானவர்சணிமலரமற்பாதம், புனைந்து மடிபொருந்தமாட்டா-நினைந்திருந்தும் மின்செய்வான் செஞ்சடையாய் வேதியனே யெனகின்றேற், கென்செய்வான்கொல்லோவினி." எ - ம், "காணுதலறுகின்றார் வானோர்கள் காளத்திப் பூணரமார்வன்றன் பொற்பாத - நாணாதே, கண்டிடுவான் யானிருந்தேன் காணீர்கடனஞ்சை, யுண்டிடுவான் றன்னையொருங்கு." எ - ம், "மேலைவானவரும் மறியாததோர், கோலமேயெனை யாட்கொண்டகூத்தனே, ஞாலமே விசும்பே யிவைவந்துபோங், காலமேயுனையென்று கொல்காண்பதே." எ - ம். "கூறியவாற்றாற்காண்க. சுத்தமாயையாகிய விந்துவிற் றோற்ற முடைத்தாயுள்ள வேதங்கள அவன் தன்மையறியாமல் அவனது திரு இறைமைக்குணங்களை ஸ்ரீருத்ரமாகிய நமகசமகங்களால் துதித்தனவே யன்றி அவனை யறியா ஆதலால் மறைகளுக்கெட்டாய் என்றார். இதனை 'ஆரணநானகிற்கு மப்பாலவனறியத் துணிந்த, நாரணனான்முகனுக்கரியானடு வாய்நிறைந்த, பூரணனெந்தை புகலிப்பிரான் பொழிலத்தனைக்கும், காரண னந்தக்கரணங்கடந்த கருப்பொருளே." எ - ம், "மறைகளு மமரர்கூட்டமு மாட்டாதயன்றிருமாலொடுமயங்கி, முறைமுறைமுறையிட்டோர் வரியாயை மூர்க்கனேனமொழிந்த புன்மொழிக, ளறைகழலான் சீரறிவிலாவெறுமைச் சிறுமையிற்பொறுகரு மம்பலத்து, ணிறைதருகருணை நிலயமேயுன்னைத தொண்டனேனினையுமாநினையே.' எ - ம், "எவருமாமறைகளெவையும் வானவர்களீட்டமுந்தாட்டிருக்கமலத், தவருமாலவனு மறிவரும்பெருமை யடலழலுமிழ்தழற் பிழம்ப, ருவரிமாகடலி னெலிசெய் மாமறுகி லுறுகளிற்றரசினையீட்ட,மிவருமால்வரைசெயிஞ்சிசூழ்தஞ்சை யிராசராசேச்சரத்திவர்க்கே.' என்ற திருப்பாசுரங்களாலறிக. இவனது இருப்புமநிலைமையுங் கரணங்கடந்து சுகாதீதநிலையினை யடைந்த பெரியோர் அறிந்து ஆனந்தமடைதலாலும், இறைவனும் அம்மகான்களை விட்டுநீங்கா திருத்தலாலும் "நான்மறையாளர் நடவுட்புக்கடங்கி' என்றார். இதனை "சுற்றவர்கருதும் நற்றவக்கரும்பே" என அடிகள் அருளினமையாலும். "கற்றவர்விழுங்குங் கற்பகக்கனியைக் கரையிலாக் கருணைமாகடலை, மற்றவரறியா மாணிக்கமலையை மதிபபவா மனமணிவிளக்கைச், செற்றவர்புரங்கள் செற்றவெஞ்சிவனைத், திருவீழிமிழலை வீற்றிருந்த கொற்றவன்றனைக் கண்டுகொண்டுள்ளங் குளிரவென் கண்குளிர்நதனவே" என்ற திருப்பாசுரங்களாலறிக.

வெண்பா

உரு, நாயனைய வென்னைப் பொருட்படுத்தி நன்களித்துத்
தாயனைய னுயருநந் தமபிரான - றாயவிளா
மென்றுழாய் மாலொடயன் றேட வியன்றிலலை
மன்றுளே யாடு மணி.

(இ - ள்.) தூய - பரிசுத்தமாகிய, விரை-மணத்தினையுடைய, மெல்-மிருதுவாகிய, துழாய் - துளவமாலையினை யணிந்த, மாலொடு - திருமாலும், அயன - பிரமதேவனும், தேட - திருவடியினையும் திருமுடியினையுந் தேடிக் காண (அகப்படாது,) வியன்-பெருமைதங்கிய, தில்லைமன்றுள்- திருத்தில்லையின்கணுள்ள பரமாகாயமாகிய சபைக்கண், ஆடும்-திருநடனஞ் செய்தருளுகின்ற, மணி - மாணிக்கத்தையொத்த நடராஜமூர்த்தி, நாய் அனைய - நாயையொத்த, என்னை - அடியேனை, பொருள்படுத்தி - ஒருபொருளாகத் திருவுளத்தமைத்து, நன்கு அமைத்து, அடியேனுக்கு வேண்டியவேட்கைகளைத் திருவருள்செய்து, தாய் அனையனாய் - என்னையளிக்குஞ்செயலில் தாயையொப்ப, அருளும்-திருவருள்சுரக்கும், தம்பிரான் - தலைவன், எ-று.

பிரமன் மால்முதலியோர் தேடிக்காணாது தில்லையில் நடனஞ்செய்யும் நடராசமூர்த்தி, அடியேனை யொருபொருளாகக்கொண்டு தாயை யொப்பவருளுந் தம்பிரானாயினான். என்பதுகருத்து.

வி - ரை. பிராணிகளில்மிக்க இழுக்குள்ளபன்றி, மலத்தைப்புசித்தல்போல் நாயும், மலமுதலியவற்றையும், மாம்சாதிகளையும் பிறரெச்சிலையும் புசித்து உடம்பையோம்பிப் புழுதியி லுறங்குதலினாலும்,வைதிகாதிகாரியங்களிலும், சிவபூசை முதலியவற்றிலும் அதைக் காணினுந்தீண்டினும் குற்றமெனக்கூறுதலானும்,மநுமுதலிய தருமநூல்களில்,அநத்தியயநம்விதித்த அத்யாயங்களில் "நாய்,பசு, தவளை,பூனை, பாம்பு, ஒணன், எலி, இவைகள் ஓதுகிறவனுக்கும் உபாத்தியாயனுக்கும் நடுவிற்செல்லின ஒருநாள் அநத்தியயனம்." கூறப்பட்டிருத்தலாலும், பின்னும் " பிரம்மசாரியாயினும் வானப்பிரத்தனாயினும் ஒருவீட்டிற்குப் பிக்ஷைக்குப்போகையில் அந்தவீட்டில் நாய் உணவுண்ணக்கண்டால் அந்தவீட்டில் தாம் பிக்ஷைபண்ணக்கூடாதென சாத்திரமிருத்தலாலும், நாய் என்றும் அங்ஙனம் தீண்டுதற்கும் அருகமல்லாததெனினும் வளர்த்தவனிடத்து அதி விசுவாசமுடைமைபோல் அடியேனும் தேவரீர் திருவடியல்லாது வேறு நனவேபோலக் கனவிலும் எண்ணேனென்பார் அதனையொப்ப என்னை யெனவுங் கூறினர். இவ்வறே வாதவூரடிகளும் " நாயினேனை நலமலி தில்லையுள்," எ-ம், " ஆயநான் மறையவனு நீயேயாதலறிந்தியானியாவரினுங் கடையனாய, நாயினேனுதலையு நோக்கிகண்டு, நாதனேநானுனைக் கோரன்பனென்பேனாயினேன்...பேசுகேனே." எ-ம், கூறினதறிக. உலகத்துப் பொருள்கள், காட்சிப்பொருள், கருத்துப்பொருள், உருவப்பொருள், அருவப்பொருள், சித்துப்பொருள், சடப்பொருள், இயங்கியற்பொருள், நிலையியற்பொருள் எனப் பலவிதப்படும். அப்பொருள்கள், தேவரீர் சந்நிதானத்து அணுத்துணையுங் கூறப்போதா. அவை, தேவரீர் சந்நிதிமாத்திரத்து முத்தொழிலுற அவற்றைப்பொருட் படுத்தாமல் அடியேனைத் திருமனத் துட்கொண்டாண்டது வியப்பு என்பார் பொருட்படுத்தி எ-ம், அங்ஙனம் பொருட்படுத்திய துணையே அடியேன் பல பிறவியினும் பட்ட துயர்களையெல்லாம்

"வயாவும் வருத்தமுமின்றக் காலுேவும் கவான்மகற் கண்டுதாய் மறந்தாங்கு" போக்கிப் பேரின்ப மடைந்தே னென்பார் நன்களித்து எ-ம்,

ஆன்மாக்களுக்குத் தோற்றமொடுக்கம் மாயை யிற்கலாதி தத்துவங்கள் தோற்றி யொடுங்கிக் கட்டவிடமோகமுற்ற மலம் ஒரு பிரதேசத்தில் நீங்கமறைக்க அதனுன் ஞானக்கிரியைகள் விளங்கமறைய உபசரிக்கப்படும் விகாரமின்றி, ஞானக் கிரியைகளுக்குக் கலையினுல் விளங்குதல் மலத்தினுல் மறைதல் சித்துக்குத்தோற்றக் கேடுகள் சிவனிமித்த மாதலால் இறைவனிடம் ஒடுக்கம் கூறப்படும். இனிச் சடப்பொருள்கட்கு, சிவசங்கற்பத்தால் விகாரமாய்த் தனது காரணரூபத்தில் காரியரூபமறைதல், காரண ரூபமறைய காரியரூபம் விளங்குதல், தோற்றக்கேடுகளாம். ஆயின் ஆணவாதி மும்மலங்களில் கேடுற்றதென்னெனின் ஆன்மாக்களின் அஞ்ஞானத்தை நீக்கு மாயாகாரியங் கெட்டுக் காரணமாயை சங்காரத்தினு மிருக்கும். ஆதலால் சிவனிமித்த காரணனுய் நின்று போகபோக்யங்களாக முன்பழகிய காரியப்பொருள்களை முந்திய சிருட்டியிற்போல முதற்காரணத்தினின்று துணைக்காரணத்தால் தோற்றுவித்தலால் தாயனையன் என்ருர்.

பிரமத்தில், நாராயணப்பிரகிருதியில் பரிணத வேதாந்தி பாஞ்சராத்திரிகள் சித்துக்குத்தோற்ற மொடுக்கம் கூறுதல்போல் சிவனிடத்தில் தோற்றமொடுக்கம் சித்தாந்திகள் கூருர் கூருர். ஈண்டுக்கூறியது உபசாரம். அங்ஙன மலாதிகளால் கட்டுண்டு தன்னையுந் தலைவனையு மறியாமல் பாடாணம்போற்கிடக்கு மான்மாவினிடத்துக் கருணைபூண்ட இறைவன் தானிமித்தகாரணமாய் நின்று தனது சத்தியைப் பிரேரேபித்துத் தழும்பொடி நீக்கினுற்போல் மலத்தைக் கலையால் சிறிது நீக்குதலின் 'அருளுந் தம்பிரான்' என்ருர். கல்துளசி, முட்டுளசி, செந்துளசி, கருந்துளசி, நாய்த்துளசி, நிலத்துளசி முதலிய நீக்குவார் 'தூயவிரை மென்றுழாய்' என்ருர். இதற்குத் தூய்மையாவது ஆயுள்வேத முறைப்படி "ஐயம் வயிறுளைச்சலத்தி சுரந்தாகமும்போம், பையசுரமாந்தம் பறக்குங்காண் - மெய்யாக, வாயினரோசகம்போம் வன்காரஞ் சூடுள்ள, தூய துளசிதனைச்சொல்," என்ப. பின்னும் இது இறைவனுக்குச் சாத்தத்தக்க மலர்களின் "நிருமலற்கு நாரிதன் கொங்கைபோனயத்த லாற்றளபந்தன்னைச், சீரிய முன்னேன்வேண்டான் சிவன்சொலச் செவியிற் கேட்டு." எனவும், உள்ளியதெல்லா மெய்தும் வறுமை நீக்குமொண் டுழாய் மலர்களினு முயர்ச்சிதானே"எனவும், கூறியிருத்தல் பற்றியும், பிரந்தையினுலுண்டான மால்நீங்க இறைவியால் அநுக்கிரகஞ்செய்யப்பெற்ற தூயவிரையினை அவளுயிர் போக்கிய சாம்பரில்விதைக்க, அதிற்ருேன்றிய தாதலாலும் 'தூயவிரைமென் றுழாய்' என்ருர். என்னலுமாம். தூயவிரை மென்றுழாய் என்றதுமூன்றடை முதலையடுத்த மரபுவழுவமைதி. இதனை "அடைசினை முதலெனமுறைமூன்று மயங்காமை, நடைபெற்றியலும் வண்ணச்சினைச்சொல்." எனும்தொல்காப்பியச் சூத்திரத்தின்படிக்கொள்க. இச்சூத்திரத்திற்கு ஆசிரியர்

சேனாவரையர் தமதுரையில் " அடுக்கிய அடையுஞ்சினையும் பொதுமை நீக்கு தற்கன்றி யணிகுறித்து நிற்றலின் செய்யுட்கே யுரித்தென்றபடி" ஈண்டு அடைகள் பிறதுளசி களினின்று நீக்குதலும் அணியுங் குறித்துநின்றன. மாலொடயன் என்பதில் ஒடு எண்ணுப்பொருளது. மால் என்றார், ஆணவாதி மலத்தால் தன்னை மறைத்து இறைவனைத் தலைப்படாது நின்றமைநோக்கி. அஜ ன என்பது தமிழில் அயன்எனத் தத்பவமாயிற்று. இவ்விருவரு மண்புகுந்தும் விண்பறந்தும் காணாது நின்ற புராணகதை எல்லாப்புராணங்களாலும் வெளிப்படையாதலின் அது கூறவேண்டாம். உலகத்துக்குச் சுழுமுனைநாடி சிதம்பர மாதலாலும், இறைவனது ஓர்கலை யெங்கெங்கு முலாவி யர்த்தயாமத்துப் பூரணமா யொன்றுதலாலும் 'வியன்றில்லை மன்று' என்றார். மேற்கூறிய சுழுமுனைத் தலமாகிய அதில், அசபா ஸ்வரமாகிய இரண்டக்கரமாகிய திருவடிகளால் தானுடத் தன்தசையாடும் எனும் முதுமொழிப்படி உலகுக்கு உயிருமாயும் அஷ்டமூர்த்தமாயு நின்று திருநடனஞ்செய்தலின் 'ஆடும்' என்றார். மணி, தன்னுள் அளவில்லாத காந்தியினை யடக்கிக் குற்றமிலாது விளங்கித் தன்னை யணிந்தார்க்குற்ற துன்பங்களைப்போக்கி நன்மை பயத்தல்போல் இறைவனும் உலகங்களையெல்லாம் தம்முள்ளொடுங்கி மாசில்லாத மணியாய் விளங்கலினாலும், அம்மணிகண்டார் கண்கள் ஒன்றையே கவர்தல்போலாது இது கண்களையேயன்றி யேனைய புறத்துறுப்புக்களையும், அகத்துறுப்புக்களாகிய அந்தக்கரணங்களையும் அறிவையுங் கவர்தலினாலும் மணியென்றார் என்க.

கட்டளைக்கலித்துறை.

மணிவாய் முகிழ்ப்பத் திருமுகம் வேர்ப்பவம் மன்றுக்கெல்லா
மணியாயருணட மாடும் பிரானை யடைந்துருகிப்
பணியாய் புலன்வழி போநெஞ்ச மேயினிப் பையப்பையப்
பிணியாய்க் கடைவழி சாதியெல் லோரும் பிணமென்னவே. உ௬.

(இ - ள்.) புலன்வழி - மெய்வாய்கண் மூக்குச்செவியாகிய ஐம்புலன் வழி, போம் - எண்ணத்தைச் செலுத்தும், நெஞ்சமே - மனமே, பையப்பைய - மெல்லமெல்ல, பிணிஆய் - நோய்வளரப்பெற்று, கடைவழி - வாணாளிறுதிக்காலத்து, எல்லோரும் - சுற்றத்தாரும் மற்றோரும், பிணம் என்ன - பிணமென்று தீண்டாதகல, சாதி - சாகிறாய், (ஆதலால் அம்மரணவேதனை வருதற்குமுன்) மணிவாய் - பவளமணி யொத்தவாய், முகிழ்ப்ப - குவித்து அவனது திருப்புகழைப் பாடாநிற்க, திருமுகம் - அழகியமுகமானது, வேர்ப்ப - அவனை நினைந்திருத்தலால் வியர்வுதோன்ற, அ மன்றுக்கெல்லாம் - ஏனைய மன்றுகளுக்கெல்லாம், அணியாய் - அழகு விளைவிப்பானாய், அருள்நடம் - ஆனந்த நடனத்தை, ஆடும்பிரானை - செய்தருளுகின்ற தலைவனிடம், அடைந்து - சென்று, உருகி - மனமுருகி, இனிப்பணியாய் - இனிவணங்குவாயாக. என்றவாறு.

இது - ஐம்புலன்வழி அறிவைச்செலுத்தி அல்லற்படும் நெஞ்சமே! சாங்காலத்தில் சுற்றத்தவரும் மற்றோரும் பிணமென்றிகழ மரணமடையப் போகின்றாயாதலால், அம்மரண நெருங்குமுன் இறைவனை வாயாரப்பாடித் துதித்து வணங்குக என்றதாம்.

(வி - ரை.) அசுத்தராகிய இழிந்தாரைப்பாடி யிழுக்குறாது, இறைவனது திருப்புகழைப்பாடி யின்பமுறுமியல்பிற்றாதலால் அவ்வாயினை 'மணிவாய்' என்றார். அன்றி வாயுடனியைந்த வுறுப்பாகிய இதழைப் பவளத்துடனொப்பித்துக் கூறுதல்மரபுபற்றி யங்ஙனங் கூறினாரெனினுமாம். இது உறுப்புறுப்பியபேதம். முகமாகிய கமலத்திற்குத் தாம் இதழ்போலுதலின் அவ்வொற்றுமைநோக்கி 'முகிழ்ப்ப' என்றார். ஈண்டு முகிழ்த்தல் இறைவன் திருப்புகழைப் பாடமுயலுகையில் மீகீழிதழ்கள் தம்மிற்சேர்ந்து தொழிலுறல். வாய், இறைவனது திருப்புகழாகிய வாய்மையை யெக்காலத்தும் பேசுதல் பற்றி வந்த காரணத்தால் பெற்ற எதுப்பெயர், இது குணவாகுபெயர். இச்சொல்லின் விகுதிகுறைந்து வாயென நின்றதெனக்கொள்க. முகிழ்ப்ப என்பது, முகிழ் எனும் பெயரடியாகப் பிறந்த வினையெச்சம், இதனை வடநூலார் சுப்ததாதுவெனவும் நாமதாதுவெனவுங் கூறுப. சர்வமங்கல குணகணனாய்ச் சம்புவெனு நாமவாச்சியனாதலின் அவனது திருப்புகழை மனதால் நினைந்து வாயாரவாழ்த்தி யநுபவிக்கையில் தோன்றும் புளகம் உடலிடத்து நில்லாது மேலெழ அதின்வழி வியர்த்தலின் திருமுகம் வேர்ப்ப என்றார். ஈண்டுத் திரு என்றது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கமாகிய அழகு. வியர்ப்ப என்றது, வேர்ப்ப எனநின்றது மரூஉமொழி. கறு, அவதாரனே, எனுந்தாதுவால்முகம் என்பதற்குப் பக்ஷய முதலியவற்றைப் பிடிப்பதென்பதுபொருள். சிவமூர்த்தி யடியவர்பொருட்டு எழுந்தருளி நடனதரிசனங் கட்டளையிட்டருளிய தலங்களிலுள்ள இரசிதமன்றம், இரத்தின மன்றம், தாம்பிரமன்றம் முதலியவற்றிற்கு நாயகமாகியது ஆதலால் அ மன்றுக் கெல்லாம் அணியாய் என்றார். அகரச்சுட்டு இம்மன்றின் ஏற்றங்குறித்து நின்றது. மன்றுக்கெல்லாம், ஒருமையிற் பன்மைவந்த வழூவமைதி. அணியென்றார் அழகு செய்தலின். அது, மற்றைப் புறத்துறுப்புக்களை அழகுசெய்யும் மணிகுயிற்றிய பணிபோலாது தன்னைநினைப்பார் மனமாகிய மன்றுக்கு அழகுசெய்தலாலும், அன்றித் தாமிருந்து நடஞ்செய்யும் பெருமையால் அம்மன்றங்களை யழகு செய்தலாலும், கூறியதாமென்க. நடம் கண்டார் கண்ணையு மனத்தையுங்கவருவது ஆயினும், இதுகண்டார் மனத்தையேயன்றி யேனைய அகக்கரணங்களையும் புறக்கரணங்களையும் கவருதலின் 'அருள் நடமாடும்' என்றார்.

முன்னைய சநநங்கடோறும் பட்டதுன்பங்களை யிச்சநநத்துத் தாம்படும் துன்பத்தோடொப்பித்து நோக்கப்பயமுண்டாய் அந்தோ இச்சநநவாழ்வு வேண்டேம் என்று இறைவனை நோக்கிவேண்டிச் சநநத்தைப்போக்குதல் முறைமைபற்றி யடைந்துருகியென்றார். இவ்வாறு திருவாதவூரடிகளும்,

"இரும்புதரு மனத்தேனை யீர்த்தீர்த்தென்னென்புருக்கிக், கரும்புதரு சுவை யெனக்குக் காட்டினையுன் கழலிணைக, ளொருங்குதிரை யுலவுசடை யுடையானே நரிகளெல்லாம், பெருங்குதிரை யாக்கியவா றன்றேயுன் பேரருளே" எனவும், "மருவினிய மலர்ப்பாத மனத்தில்வளர்ந் துள்ளுருக" எ-ம் கூறிய தறிக. பணியாய் என்பதை நெஞ்சத்திற்குப் பயனிலையாக்கொள்க. நெஞ்சம் அருவப்பொருளாயினும் தான் பிராணவாயுவுடனியைந்தகாலத்துச் சலித்து அகத்தியங்கலமையாது மெய்முதலிய புலன்களின் வழிபுகுந்து பொருள்களைக்கண்டு,அவற்றைக் காமுற்று அதிலழுந்தித் துன்புறுதலின் அதனைக்கண்டிரங்கிய அறிவு இரக்கமுற்றுப்புலன்வழிபோம் நெஞ்சமேஎன்றதாம். புலன்கள், நீ யியங்கவாயிலேயன்றி அவைதாம், நீ யியங்காதொழியின் பயனிலாத வாயிலாம் என்பார் புலன்வழியென்றார். நெஞ்சமே, என்பதில் ஏகாரம் இரங்கற்பொருட்டு; அன்றியுனக்கு அறிவொன்று கூறுவன் கேட்பாயாக எனும் ஒழிந்தசொற்கள் எஞ்சிநின்றவெனக்கொண்டு ஒழியிசைப்பொருள் பயக்க நின்றதெனினுமாம். போம்நெஞ்சமேயென்றது, நெஞ்சத்தைநோக்கி அறிவு கூறுதலால் சடப்பொருளாகிய நெஞ்சத்தைச் சித்துப்பொருள் நோக்கிக்கூறுதலால் இது மரபு வழுவமைதியாம். "இது, வாராமரபின் வரக்கூறுதலும், என்னா மரபினவெனக்கூறுதலும், அன்னவையெல்லா மவற்றவற்றியல்பான், இன்னவென்னுங் குறிப்புரையாகும்," என ஆசிரியர் தொல்காப்பியர் கூறியவாறறிக.

போம் என்பதில் இறுதி யுயிர்மெய்கெட்டது. பையப்பைய என்பதினடுக்கு இடைவிடாமைப்பொருட்டு. வியாதிதேகத்துடன் பிறந்தே அத்தேகத்தை மதியைப் பையப்பைய விழுங்குமரவுபோல நாளேறச் சிறிதுசிறிதாகத் தேகத்தைப்பற்றி யுள்ளுருக்கிக் கடைவழிதானே தேகத்தைக் கவர்ந்து நிற்றலின்பிணி என்றார். உடலெடுத்த ஆன்மாவிற்கு அவ்வுடலினின்று ஆன்மா நீங்குதலே இறுதியெனப்படுதலின் கடைவழியென்றார். இது சர்வசங்காரகாலத்து இறைவனிடத்து இலயப்பட்டுநிற்கும் ஆன்மாவை யிங்ஙனங்கூறியது, உபசாரம். அன்றி இடத்தின்தொழிலை யிடத்து நிகழ்பொருள் மேலிட்டுக்கூறியதாக்கொள்க. இந்தவுடல் உற்பவகாலத்துப் பிரசூதவாயு, கருப்பாசயப்பையுறுத்தல், சலம்பூரித்தல்முதலிய ஐம்பெருந்துயர்கண்டு, அவ்வுடல் நீங்குகையில் அவ்வுற்பவக்காலத்திலும் எண்மடங் கதிகதுன்பம். ஆயின் அந்தத் தோற்றலயங்களுக் கிடையிட்டகாலத்தோ வெனின் அக்காலத்தும் நரைதிரை, மூப்புமுதலியவற்றால் துன்பமே சித்தம், அவ்விருத்தப்பருவ நீங்கிய பாலப்பருவத்திலோ வெனின் அதினும் அறிவறியாமையாற் றுன்பம், குமாரப்பருவத்தோவெனின் பசிகாமாதிகளாற்றுன்பம். அப்பாற்றான் இன்பமின்றோவெனின் அப்பாலும் வாதபித்த சிலேத்மாதிகள் எல்லைகடந்து வருதலிற்றுன்பமும் அதை நீக்கிக்கொள்ள மருந்துமுதலிய தேடுதலிற் பெருந்துன்பம், மரணகாலத்திற்றான் இன்பமில்லையோ எனின் அக்காலத்துன்பத்தைக் கடவுளே யறிவர். இதனை "பாணமாகிய பெண்டிருஞ் சுற்றமும் பண்டு தங்

கையிற்றந்த, விரணமானவை கொண்டிடவிவரைவிட் டியம்பிடாதிவனேகு,
மரணவேதனை யாவராலறியலா மயங்கியையம் புலனந்தக், கரணம் யாவையுங்
கலங்கிடவருந்துயர் கடவுளேயறிகிற்பர்.” என்பதாலறிக. மேல் பசிதாகாதி
களும் காமமுதலியவும் பிணியென்னலாமோ வெனின், அவை துன்பமுறுத்து
கையில் பிணிக்கு மருந்துபோல் உணவாதிகளும் மற்றவும் கொள்ளப்படுதலின்
பிணியேயென்பார் ஆய் என்றார். உயிர்தேகத்தி லிவ்விதத்துன்பமடைந்து அவ்
வுடற் சுமையைப் பிராணவாயு தாங்காது கர்மாநுகுணமா யினியநுபவிக்கும்
மேல்வினையையெண்ணி யுடலைவிட்டு ஒன்பதுவாயிலில் ஒருவாயிலால் நீங்கிய
காலத்துஅந்த உயிரிருந்த வுடல் எவராலுந் தீண்டப்படாது இழிந்ததசைப்
பொதியாைபிணமெனப்படுதலில் பிணமென்னவேஎன்றார். சாதியெல்லோரும்
எனவே இறந்தவுடலைக்கொண்டோன் எவ்வகை யுயர்ந்தோனாயினும், சூத்திர
னாயின் அவனுடலை ஊர்க்குத் தென்பக்கத்தானும், வைசியனாயின் மேல்பாலா
லும், க்ஷத்திரியனாயின் வடபாலாலும், வேதியனாயின் கீழ்பாலாலும் வெளிப்
படுத்தி ஊர்ப்புறத்தில் தகனாதிகிரியைகளை நடத்தி யெல்லோரும் ஸ்நாநாதி
கருமம் முடித்துவர வேண்டுதலாலும், இறந்தவனைத்தூக்கிய பந்துக்களுக்கும்,
சிநேகருக்கும், மூன்றுநாள் தீட்டும், பிணந்தூக்கினவன் தீட்டுள்ளோன் அன்
னத்தைப்புசிக்கின் அவனுக்குப் பத்துநாள் தீட்டும், அவனந்நத்தை யுண்ணா
தும், அவன்வீட்டில் வசிக்காமலுமிருக்கிற பிணந்தூக்கினவனுக்கு ஒருநாள்
தீட்டும், இறந்தபிணத்தைப் பின்றொடர்ந்துபோனால் உடுத்த ஆடையுடன்
ஸ்நானஞ்செய்து நெருப்பைத்தொட்டு நெய்யையுண்ணின் தீட்டு நீங்குமென
வும், கூறியிருத்தலாலும், சாதியெல்லோரும் பிணமென்னவே என்றுங் கூறி
னார். இது, மனைவிமக்கள் ஒக்கலைத்துணையென்றும், அவர்களை எய்ப்பினில்
வைப்பென்றும் எண்ணி, இம்மையினும் மறுமையினும் எம்மையினும் பெருந்
துணையாய இறைவனைச் சற்றேனும் எண்ணாமலும், இக்கணத்தில் நின்றவுயிர்
மற்றைக்கணத்தில் நிற்குமோ நிற்காவோவென அநித்திய விவேகத்தை யெ
ண்ணாமலும், நின்று பொருளையும், பெண்ணையும் எண்ணி வாளாள்வீணாள்
போக்கிப் பிராரத்தசஞ்சித ஆகாமியங்களை வளர்த்துக்கொண்ட ஆன்மாவினை
யெண்ணி யிரக்கமுற்றதாம். முகிழ்ப்ப, வேர்ப்ப அடைந்து, உருகி, எனும்
வச்சங்கள் வேறு பல வடுக்கிப் பணியாய் எனும் முன்னிலையேவல் முற்றைக்
கொண்டது. இனி, எதிர்காலத்தைக்குறிக்கும் இடைச்சொல். சாதி, என்ப
தில், சா, பகுதி, த் எழுத்துப்பேறு, இகரம் முன்னிலைப்பொருட்டாகிய விகுதி.
எல்லோரும் என்பதினும்மை முற்றுப்பொருளது. என்ன எனும் சொல்லெச்
சம் சாதயெனும் முற்றைக்கொண்டது. பிராணையென்பது எழாவதனுருபு
மயக்கம்.

ஆசிரியவிருத்தம்.

என்னுமினிமடவரலாய்செய்குவ தினமாய்வண்டுகெண்மலர்கிண்டித்
தென்னாவெனமுரல்பொழில்சூழ்தில்லையு ளரனார்திருமுடியணிதாமங்

தன்னாலல்லதுதீராதென்னிடர் தகையாதுயிர்கருமுகிலேறி
மின்னாநின்றதுதுளிவாடையும்வர வீசாநின்றதுபேசாயே. உள.

(இ - ள்.) மடவரல் - மடப்பத்தின் வரலாற்றினையுடைய தோழீ, கருமுகில் - கருமை நிறங்கொண்ட மேகம், ஏறி - ஆகாயமுகட்டில் பரந்து, மின்னாநின்றது - மின்னுகின்றது, வாடையும் - வடகாற்றும், துளிவர - நீர்த்திவலைதூவும்படி, வீசாநின்றது - வீசுகின்றது, இனமாய - கூட்டமாகிய, வண்டுகள் - ஆணும்பெண்ணுமாகிய தேன்வண்டுகள், மலர்கிண்டி - மலர்களை மூக்கால் கோதித் (தேனையுண்டு,) தென்னனை - அழகுள்ள நடராசமூர்த்தியேயென, முரல் - பாடுகின்ற, பொழில்சூழ் - சோலைசூழ்ந்த, தில்லையுள் - திருத்தில்லைக்கண் எழுந்தருளியிருக்கும், அரனார் - நடராசமூர்த்தியின், திருமுடி - அழகிய முடிக்கண், அணி - சூடப்பெற்றிருக்கும், தாமம் தன்னால் அல்லது - திருமாலையைத்தரின் அல்லாமல், என் இடர் - (இப்போதவன் என்னைப் பிரிந்ததனாலாகிய) துன்பம், தீராது - நீங்காது, உயிர்தகையாது - உயிரும் நீங்காது தடையுறாது, இனி நாம் செய்குவது - இவ்விடர் நீங்க நாம் இனிச் செய்யும் உபாயம், என் - யாது, ஆய் - ஆராய்ந்து, பேசாய் - நீ, கூறு. எ - று.

இது, அறுவகைப்பிரிவில் வேந்தற்குற்றுழிப் பிரிந்த தலைவன்கூறிய காலவரையிறப்பக்கண்ட தலைவி, அவனது வாராமையையெண்ணிப் பிரிவாற்றாது கார்காலநோக்கித் தோழியுடன் கூறித் தலைவனது மாலைவேண்டலாம். இனிப் பிரிவு அறுவகையாவன. "ஓதல்காவல் பகைதணிவினையே, வேந்தற்குற்றுழி பொருட்பிணி பரத்தையென், றாங்கவ்வாறே யவ்வயிற் பிரிவே." என்பவாகலின். இதனுள், ஓதல் பிரிவு வரைந்துகொண்ட பின்னர்த் தலைமகனுக்கு முதற்பிரிவேயாதலாதலால் கல்வியின் மிகுதிகூறி நீங்குதல். காவற்பிரிவாவது - எல்லாவுயிர்களையும் அரசன் பாதுகாக்கவெனும் தருமநூல் விதியால் அக்காவற்குப்பிரிதல். பகைதணிவினைப் பிரிவாவது - தம்மிற் பகைத்த வேந்தரைப் பகையைத்தணித்து இருவரையும் பொருந்தப்பண்ணுதல். வேந்தற்குற்றுழிப் பிரிவென்பது - ஒரு வேந்தனுக்கு மற்றவன் தோற்றுவந்தடைந்தால் அவனுக்குதவப்பிரிதல். பொருள்வயிற் பிரிவென்பது - குரவர்களால் படைக்கப்பட்ட பொருட்கண் இல்லறஞ்செய்யின் அதனான்வரும் பயன் அவர்க்காமத்துணையல்லது நமக்காகாமையால் தமது பொருள்கொண்டு இல்லறஞ் செலுத்தற்குப் பொருள்தேடப் பிரியாநிற்றல். பரத்தையிற் பிரிவென்பது - தலைமகளை வரைந்தெய்திய பின்னர், வைகலும் பாலேநுகர்வானொருவன், இடையே புளிங்காடியுநுகர்ந்து அதனினிமையறிந்தாற்போல, அவனுகர்ச்சியினிமையறிதற்குப் புறப்பெண்டிர் மாட்டுப்பிரியாநிற்றல். அல்லதூஉம், பண்ணும் பாடலும் முதலாயினகாட்டிப் புறப்பெண்டிர் தன்னைக் காதலித்தால் தானெல்லார்க்குந் தலைவனாதலின் அவர்க்கும் இன்பஞ்செய்யப் பிரியாநிற்றல் என்னலுமாம். அன்றித் தலைமகளை யூடலறிவித்தற்குப் பிரிதலென்றுமாம். இவ்வாறொழிந்து தனக்கின்பம்வேண்டிப்பிரிவான் எனின் "கண்டுகேட் டுண்

டியிர்த் துற்றறியு மைம்புலனு - மொண்டொடி கண்ணேயுள.’’ என்பதனால், இவளுக்குத் தலைமகளென்னும் பெயரொடு மாறுபட்டுத் தனது பெருமையொடு மாறுபடாநிற்கும், ஆதலால் அங்ஙனங் கொள்ளலாகாதென்க. ஆயினிப்பிரிவு வேந்தற்குற்றுழிப் பிரிவென வென்சொல்லியவாறெனின்? ‘‘பிரிந்தமைகூறல் பிரிவாற்றாமை, கார்மிசைவைத்தல் காரைநோக்கி, வருந்தியுரைத்தல் மலர்க்குழலரிவை, கூதிர்கண்டுகவறல் குளிர்முன்பனிக்கவ, னொந்துகூற னோக்கிப்பின்பனிக், கிரங்கியுரைத்த விளவேனில்கண்டவ, ளின்னலெய்த விதுவவர்குறித்த, பருவமாமெனவரவுகூறல், பருவமறைத்துரைத்தல் மறுத்துரைத்தலொடு, தேர்வரவுகூறல் வினைமுற்றிநினைதல், நிலைமைநினைந்துரைத்தன் முகிலொடுகூறல், வரவெடுத்துரைத்தல் மறவாமைகூறல், மற்றிவையிரெட்டு முற்றுழிப்பிரிவாம்.’’

என்பவாதலின், அவற்றுளிது, கார்ப்பருவங்கண்டு வருந்தல், அஃதாமாறு இறைவனுக்கு நடராசமூர்த்தி எழுந்தருளியிருக்குந் தில்லைப்பொழிற்கண்சேவலும் பெடையுமாகிய வண்டுகள் ஒன்றையொன்று விட்டு நீங்காமல் மதுவருந்திப், பெடையைச் சிறகாலணைத்துக் களித்துப்பாடும் கார்காலத்து, நான்தனித்து இருத்தல் நோக்கி இக்காருந்துளியும் என்னை வருத்தாநின்றன. ஆதலால் நீ இதனை யென்தலைவனுக்கு அறிவித்து இக்கார்காலத்திற்கு மருந்தாய் அவனணிந்த திருமாலையினைக் கொண்டுவருதியென்று கூறி வேண்டியதாம். யான்படுந்துயர் அவற்கு அறிவியாயேல் என்னுயிர்தரியாது, ஆதலின் நீயென் செய்குவையென்பாள் இனியென்றுமென்றும், நீயும் இவ்வாறு துணைவற்பிரியின் அறிவாய் அங்ஙனமில்லாமையால் எந்நோயறியாது கேளாவிருக்கின்றாயென்பாள் அறியாதவள் எனும் பொருள்பட மடவரல், எ - ம், நான்கூறியதை நன்கு ஆராய்ந்து பார்க்க என்பாள் ஆய், எ-ம், அறிவிலாவண்டுகளும் தம்பெடையை நீங்காத கார்காலத்து அறிவுடையொருவன் என்னை யகன்றான் என்பாள் இனமாயவண்டு, எ - ம், அவ்வண்டுகள் மலர்கிண்டித் தேனருந்தல்போல் என்னிதழூற லருந்தாது பிரிந்தான் என்பாள், மலர்கிண்டி, எ - ம், அவ்வண்டுகள் தேனுண்டு களித்துப் பாடல்போல் என்னிடையின் சொல்லாடாது நீங்கினான் என்பாள் தென்னாவெனமுரல் எ - ம், கூறினாள். தென்னா என்பது ஒலிக்குறிப்பிடைச் சொலெனினுமாம். சர்வ சங்காரகாலத்துப் பிறவிப்பிணிக்கு மருந்தாய்க் குழவியின் நோய்க்குத் தாய்மருந்துண்டாங்கு ஆன்மாக்களின் மலநோயனைத்தையு நீக்கு மிறைவற்கு என்னோயை நீக்குதல் அரிதன்று என்பாள் அந்நயந்தோன்ற அரனார் எ - ம், ஏனைய பொன்னணிமாலைகளும் மருந்து மிந்நோயைத் தணியா என்பாள், திருமுடியணி தாமந்தன்னாலல்லது எ - ம், கூறினாள். இங்ஙனங் கூறித்துன்புறுந்தலைவியினிடர் கண்ட தோழி சாந்த உபசாரங்கள் செய்து தணிவிப்பான் புகுத அதனைநோக்கிய தலைவி நீசெயுமுயற்சி பயனற்றதென்று விலக்குவாள் என்னிடர் தீராதெனவும், இவ்வகைச் சீதளோபசாரஞ் செய்துகொண்டு சற்றுத் தாமதித்து என்னிலை என் தலைவனுக்கறிவியாது நிற்கின்

என்னுயிர் நீங்குதல் உண்மை யென்பாள் தகையாதுயிர், எ - ம், அங்ஙனங் கூறுந் தலைவியைநோக்கி யிது கார்காலமன்று வாளாவருந்தாதொழி வேந்தற் குற்றுழிகருமமுடித்து நந்தலைவர்மீள்வர் எனஅதனைச் செவியுற்ற தலைவியிது வேகார்காலமென்பாள், கருமுகில் எ-ம், அங்ஙனம் கூறினாட்குஅதுமேகமன்று எனமறுப்ப அதுகேட்டு அதனை வற்புறுத்துவாள் எறிமின்னு நின்றது-எ.-ம் இது ஒன்றேயென்னுயிர் கொள்ளவமையு மஃதன்றி மின்னினமையால்" மின்னுக்கெல்லாம் பின்னுக்குமழை" யென்னு முதுமொழிக்கொப்ப வாடைக் காற்றும் வாராநின்றது என்பாள் வாடையுந் துளிவரவீசாநின்றது என்றாள். இத்தனை துன்பங்கொண்ட என்னது நிலையினை நீசற்றுக் கருணைசெய்து எங் தலைவரிடங்கூறுக என்று இரந்து ஏற்பாள் பேசாய் எ - ம், கூறினாள். என்னும் என்பதில் குச்சாரியை கெட்டும், செய்குவதென்பதில் அதுமிக்கும் வந்தது. இனமாய வண்டுகள் என்றமையா லதற்குச் சேவலும் பெடையுமெனப்பொருள் கூறப்பட்டது. அராார், என்பதில் ஆர்உயர்வுபற்றியவிகுதி. அராார் என்பதினீற்றிலுள்ள ஆர் விகுதியைப்பிரித்து, தாமத்தினிலைமொழியாக்கி ஆர் தாமமென நிறுத்தி ஆத்திமலர்மாலையெனப் பொருள்கூறினுமாம். தார்மத்தினிலைமொழியாக்கி ஆர் தார்மமெனநிறுத்தி ஆத்திமலர்மாலையெனப் பொருள் கூறினுமாம். தாமந் தன்னால், என்பதில்' தன் ஆற்றற்பொருண்மைக்கண் வந்தது. "எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே." என்பவாகலின் இடரைத்தருவதை யிடர் என்றது காரணத்தைக் காரியமாகக்கூறு முபசாரவழக்கு. கருமுகில் என்பதில் கருமைபிறிதினியைபு நீக்கியவிசேடம். துளி, முதனிலைத்தொழிலாகுபெயர். வடக்கின்கணிருந்து வருங்காற்றை வாடையென்றது மரூஉ. வாடையும். என்பதின்கணுள்ள உம்மை இறந்தது தழீஇயது. வாஎனும் செயவெனெச்சத்தைத் துளியென்பதனுடனியைத்துத் துளிவர எனப்பொருள்கொள்க, முகிலும், வாடையும், முக்காலத்தும் ஒத்தியல் பொருளேனும் இது நிகழ்வுபற்றிய தாதலால் அங்ஙனங்கூறியதாமெனக. பேசாய் என்பதற்கு நீயெனுந் தோன்றா வெழுவாய் வருவிக்கப்பட்டது. மடவாய் என்பதில் ஆய் வினையெச்சமேயன்றி மடவரல் என்பதனுடனியைந்த எட்டாம்வேற்றுமையின் விகாரமன்று, என்னெனின் லகாவீற்று உயர்திணைப்பெயர் ஆய்என விகாரப்படுமென யாண்டும் இலக்கணமின்மையால் விளிவேற்றுமையெனக் கூறின் குற்றமாம் எனக.

இணைக்குறளாசிரியப்பா.

பேசுவாழி பேசுவாழி
யாசையொடுமயங்கி மாசுறுமனமே
பேசுவாழி பேசுவாழி
கண்டனமறையு முண்டனமலமாம்
பூசினமாசாம் புணர்ந்தனபிரியு
நிறைந்தனகுறையு முயர்ந்தனபணியும்

பிறந்தனவிறக்கும் பெரியனசிறுக்கு
மொன்றொன்றொருவழி நில்லாவன்றியுஞ்
செல்வமொடுபிறந்தோர் தேசொடுதிகழ்ந்தோர்
கல்வியிற்சிறந்தோர் கடுந்திறன்மிகுந்தோர்
கொடையிற்பொலிந்தோர் படையிற்பயின்றோர்
குலத்தினுயர்ந்தோர் நலத்தினின்வந்தோ
ரனையரெங்குலத்தின ரிறந்தோரனையவர்
பேருநின்றில போனுந்தேரி
னீயுமஃதறிதி யன்றேமாயப்
பேய்த்தேர்போன்று நீப்பருமுறக்கத்துக்
கனவேபோன்று நனவுபெயர்பெற்ற
மாயவாழ்க்கையை மதித்துக்காயத்தைக்
கல்லினும்வலிதாக் கருதிப்பொல்லாத்
தன்மையரிழிவு சார்ந்தனைநீயு
நன்மையிற்றிரிந்த புன்மையையாயதலி
னழுக்குடைப்புலன்வழி யிழுக்கத்தினொழுகி
வளைவாய்த்தூண்டிலி னுள்ளிரைவிழுங்கும்
பன்மீன்போலவு
மின்னுறுவிளக்கத்து விட்டில்போலவு
மாசையாம்பரிசத் தியானைபோலவு
மோசையின்விளிந்த புள்ளுப்போலவும்
வீசியமணத்தின் வண்டுபோலவு
முறுவதுணராச் செறுவுழிச்சேர்ந்தனை
நுண்ணூனூற்றுத் தன்னகப்படுக்கு
மறிவில்கிடந்து நுந்துழிப்போல
வாசைச்சங்கிலிப் பாசத்தொடர்ப்பட்
டிடர்கெழுமனத்தினோ டியற்றுவதறியாது
குடர்கெழுசிறையறைக் குறங்குபுகிடத்தி
கறவைநினைந்த கன்றெனவிரங்கி
மறவாமனத்து மாசறுமடியார்க்
கருள்சுரந்தளிக்கு மற்புதக்கூத்தனை
மறையவர்தில்லை மன்றுளாடு
மிறையவனென்கிலை யென்னினைந்தனையே. உ-அ.

(இ - ள்.) ஆசையொடு - ஆசையால், மயங்கி - மயக்கத்தையடைந்து, மாசுஉறு - குற்றமடைந்த, மனமே-நெஞ்சமே, (உனக்குறுதிகூறுவன் கேட்பாயாக) கண்டன - கண்ணாற்காணப்பட்ட வெல்லாப்பொருள்களும், மறையும் - நிலைபெறாதழியும், உண்டன- நீ உட்கொண்ட இன்சுவைப்பொருள்கள் எல்லாம், மலமாம் - மலமாகத்திரியும், பூசின - நீ மணமுள்ளவையென்று பூசிக்கொண்ட கலவையாதி பூச்சுக்கள் முழுதும், மாசாம்-அழுக்காகமாறும், புணர்ந்தன - உன்னுடைமையென வுன்னைச்சேர்ந்த பொருள்கள், பிரியும்- உன்னைவிட்டுநீங்கும், நிறைந்தன - நிறையுள்ளபொருள்கள், குறையும்-குறைவையடையும், உயர்ந்தன-மிகவுயர்ந்பொருள்களும், பணியும்-தாழ்ந்தனவாம், பிறந்தன - தோன்றியபொருள்கள், இறக்கும்-கெடும், பெரியன - தூலப்பொருள்கள், சிறுக்கும் - சூக்ஷமப்பொருள்களாம், ஒன்று - ஓரிடத்திற் பொருந்திய, ஒன்று - ஒருபொருள், ஒருவழி - அந்தஇடத்திற்றானே, நில்லா - நிலைபெறாதுகெடும், அன்றியும் - மேற்கூறியவல்லாமலும், செல்வமொடு பிறந்தோர் - செல்வக்குடியிற்பிறந்தோரும், தேசோடுதிகழ்ந்தோர் - புகழொடு விளங்கினோரும், கல்வியிற்சிறந்தோர் - பலகல்வியாற் சிறப்புற்றோரும், கடுந்திறல் மிகுந்தோர்-மிக்கவலிமையில் மிகுந்தாரும், கொடையிற்பொலிந்தோர்-ஈகையாதிகளால் மிக்கோரும், படையில் - ஆயுதங்கள் முதலியவற்றில், பயின்றோர் - கைவல்லபயிற்சியுடையாரும், குலத்தின் - உயர்குலத் தோற்றத்தால், உயர்ந்தோர் - உயர்வுபெற்றோரும், நலத்தினின் - நற்குணங்களால், வந்தோர் - தோன்றியவர், எக்குலத்தினர் - எம்மனித குலத்தி லுதித்தோர், அனையவர் - அவ்வளவினர், இறந்தோர் - இறந்தோருமாதல், தேறின்-ஆராய்ந்துநோக்குமிடத்து, (அனையர்) பேரும் நின்றில -பெயரும் நிற்கவில்லை, நீயும் அது அறிதி அன்றே-நீயுமந்நிலையாமையைப் பிரத்தியக்ஷமாக அறிவாயல்லவா, மாயப்பேய்த்தேர்போன்றும் - மாயமாகிய கானல்நீரினையொத்தும், நீப்பரும்-நீக்குதற்குக்கூடாத, உறக்கத்து - நித்திரையில், கனவேபோன்றும் - காணுங் கனாநிலையொத்தும், நனவுபொயர்பெற்ற - சாக்கிரமென்னும்பெயரினை யடைந்திருக்கிற, மாயவாழ்க்கையை - மாயமாகிய இல்வாழ்க்கையை, மதித்து - நிலையாகஎண்ணி, காயத்தை - தேகத்தை, கல்லினும் - கல்லைக்காட்டினும், வலிதாக - வலியுள்ளதாக, கருதி - எண்ணி, பொல்லாத்தன்மையர் - பொல்லாத்தீக்குண முடையாரது, இழிவுசார்ந்தே - இழிகுணங்களின் சார்புடையையாய், நீயும் - அறிவிலாநீயும், நன்மையில் - நற்குணங்களினின்று, திரிந்த - மாறுபட்ட, புன்மையை - அற்பகுணமுடையாய், ஆதலின் - ஆதலால், அழுக்குடை - மலம்நிறைந்த, புலன்வழி - பஞ்சேந்திரியங்களுக் காட்பட்டு, இழுக்கத்தின் ஒழுகி - குற்றமுண்டாகநடந்து, வளைவாய் - வளைந்தவாயினையுடைய, தூண்டிலினுள் - தூண்டிற்கணையில்விட்ட, இரை-சிறுஉணவை, விழுங்கும் - உட்கொண்டழியும், பல் மீன்போலவும்-பலவாகிற மீனினைப்போலவும், மின்னு - மின்னுகின்ற, விளக்கத்து - தீபத்திடத்து விழுந்துகெடும், விட்டில்போலவும் ; விட்டிற்பறவையொத்தும், ஆசை ஆம் - ஆசைவளரும்,

பரிசத்து - பரிச வுணர்வினாலழியும், யானைபோலவும் - யானை யினை யொத்தும், ஓசையின் - ஒலிகேட்டலால், விளிந்த - உயிர்நீங்கிய, புள்ளுப்போலவும் - அசுணமாதிய பறவைகள்போலவும், வீசிய - பரிமளிக்கின்ற, மணத்தின் - நாற்றத்தால்மாயும், வண்டுபோலவும் - வண்டுக் கூட்டம்போலவும், உறுவது - உனக்கு இனிவருங்கேட்டினை, உணரா - அறியாமல், செறுவுழி - நரகமாகியகுழியில், சேர்ந்தனை - அடைந்தாய், நுண் நூல் - சிறு நூலினை, நூற்று - வாயினானூற்று, தன் அகப்படுக்கும் - (தன்னிடம்வந்த பூச்சிகளை) யகப்படுத்துக்கொல்லும், அறிவு இல் - அறிவு இல்லாத, கீடத்து - சிலந்தியின், நந்துஉழிபோல - தன்னுஞ் சிறுதொளைபோல, ஆசைச்சங்கிலி - ஆசையாகிய சங்கிலியின், பாசத்தொடர்ப்பட்டு - பாசமாகிய தொடரில் அகப்பட்டு இடர்கெழு - இடர்தங்கிய, மனத்தோடு - மனத்தினுடன், இயற்றுவது அறியாது - செய்வதறியாமல், குடர்கெழு - குடல்கள் பொருந்திய, சிறை அறைக்கு - சிறைச்சாலையாகிய உள்ளிடத்தினை யுடைய பெண்களுக்கு, உறங்குபு கிடத்தி - உறங்கிக் கிடக்கின்றாய், கறவை - கறக்கும்பசுவாகிய தாயினை, நினைந்த - எண்ணியோடும், கன்று என - ஆன் கன்றுபோல, இரங்கி - இரக்கமுற்று, மறவாமனத்து - மறவாத மனத்தினையுடைய, மாசு அறும் - ஆணவாதிகுற்றங்கள் நீங்கிய, அடியார்க்கு - அடியவர்களுக்கு, அருள்சுரந்து - திருவருள்சுரந்து, அளிக்கும - காக்கின்ற, அற்புதக்கூத்தனை - அற்புதத்தாண்டவ மூர்த்தியை, மறையவர் - வேதியர்போற்றும், தில்லைமன்றுள் - தில்லையின்கண்ணுள்ள திருச்சிற்றம்பலத்துள், ஆடும் - திருநடனம் செய்தருளுகின்ற, இறையவன் என்கிலை - தலைவன்என்று கூறுகின்றாயில்லை, என் நினைந்தனை - என்னசெய்யப்போகின்றாய் ஆதலால், பேசு, பேசு, பேசு பேசு - விரைந்து அவனைத்துதிசெய், துதிசெய், துதிசெய், துதிசெய், வாழி, வாழி, வாழி, வாழி - வாழ்வாயாக, வாழ்வாயாக, வாழ்வாயாக, வாழ்வாயாக, எ - று.

வ - று. அவாவே மேலும் மேலும் பலபிறவிகளை யாக்குதற்கு வித்தாதலின் அவ்வாசை மனத்தின் அங்குரிக்குந்தோறும அறிவெனும் அரிவாளாலறுத்துப் போக்கல் நன்றாதலினாலும், அங்ஙனம் ஆசையைச்செய்து களைந்தார்க்கு விஷயப்பற்று நீங்குமாதலினாலும், அதுநீங்க, இறைவன் திருவடியில் ஆசையுண்டாமாதலினானும், அவ்வாசைக்கு அடிமைப்பட்டான் அகிலலோகத்துக் கடிமைப்பட்டவனாதலினாலும், அவ்வாசையினைத்தனக்கு அடிமையாகக் கொண்டவனே யுலகனைத்தையும் அடிமையாகக் கொண்டவனாதலினாலும், அவ்வாசை நீங்குமளவும் அஞ்ஞானமும் பாசமும் நீங்காவாதலாலும், அது நல்லறிவை மறைத்து உலகவாழ்க்கையை மெய்யென மயக்குதலாலும ஆசையொடு மயங்கி மாசுறுமனமே எனக்கூறினர். இதனை "அவாவென்ப வெல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றுந் தவாப்பிறப்பீனும் வித்து." எ - ம், "இச்சையாம் விறகுமாண்டா லெண்ணமாம் வன்னிமாயும்,"எனப் பிறருங் கூறியவாற்றானறிக. தோற்றமுடையன யாவும் நில்லாவாதலாலும், உலகம் பேய்த்

தேர்போலவும், கயிற்றரவு போலவும் பொய்யாமாதலினாலும், தோன்றியழி
தன்மாலைத்தாய்க் கண பங்கமுடைமையானும், புல்லறிவாளர் பலரால்
உலகம் அழியாநிலைத்தெனப்பற்றுச் செய்யப்படினும் அதுபிறவித் துன்பத்தி
ற்கு ஏதுவாக்கி யவரைப் பலபிறவியினும் தீமையுறச்செய்யு மாதலினானும்,
அது உள்ளதன்று என்பார் கண்டனமறையும், என்றார். இதனை "நில்லாத
வற்றை நிலையினவென் றுணரும் புல்லறிவாண்மை கடை" என்ற, தேவர் திரு
வாக்கானும் அறிக. இங்ஙனம் கண்டனவெனப் பன்மையா லடிகள் அருளின
மையான் "ஒன்றினமுடித்த றன்னின முடித்தலென்னு முத்தியினால் தோற்
றப்பட்ட பன்மைமுழுதுங் கொள்க. செல்வ நிலையாமைக்கு, "அற்காவியல்
பிற்றுச் செல்வமது பெற்றா லற்குப்வாங்கேசெயல்." எ - ம், கூத்தாட்ட
வைக்குழாத்தற்றே பெருஞ்செல்வம், போக்குமது விளிந்தற்று." எ-ம், "நின்
றன நின்றன நில்லாவெனவுணர்ந், தொன்றின வொன்றினவல்லே செயிற்செ
ய்க, சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன் வந்தது வந்தது கூற்று."
எ - ம், யாக்கையொடு இளமை நிலையாமைக்கு "காயனீர்க்கு மிழியதி லூறு
மின்பங் கானலிற் புனலிது தனக்கிங், காயவித்து யரமளவிலை யிதைநீ யாய்
வுறுமையி லழிந்தற்றாய், நீயினிக் கவலைநினைவெலா மொழித்து நெஞ்சமே
வந்தெனக்குடன்பட், டாயநற் சொருபர்க்கன்பதே யியைந்தாலரிய தேதார்
நமக்கெதிரே." எ - ம், "நெருநலுள னொருவனின் றில்லையென்னும் பெரு
மையுடைத் திவ்வுலகு" எ - ம், "உறங்குவதுபோலுஞ் சாக்காடுறங்கி விழி
ப்பதுபோலும் பிறப்பு." எ - ம், "படுமழைமொக்குளிற பல்காலுந்தோன்
றிக், கெடுமிதோர் யாக்கையென்றெண்ணித் - தடுமாற்றந், தீர்ப்பேம் யாமெ
ன்றுணருந் திண்ணறிவாளரை, நேர்ப்பார்யார் நீணிலத்தின்மேல்." எ - ம்,
புன்னுனிமேனீர்போனிலையாமை யென்றெண்ணி, யின்னினியே செய்கவற
வினை - யின்னினியே, நின்றானிருந்தான் கிடந்தான்றன் கேளலறச்சென்றா
னெனப்படுதலால்." எ - ம், இளமை நிலையாமைக்கு "மன்னுவிளமைமகி
ழ்ந்தார்" எ - ம், "பனிபடுசோலைப் பயன்மரமெல்லாங் கனியுதிர்ந்து வீழ்ந்
தற்றிளமை" எ - ம், "நீரிற்கு மிழியிளமை" எ - ம், பிறவாற்றானும் பல
ரும் பலபட யாக்கை இளமை செல்வம் நிலையாமை கூறியதறிக. இதனை
விரிவஞ்சி விடுத்தாம்.

உணவாகாரமாக பயனிலா வுடலை யோம்பற்பொருட்டும், உரிசையின்
பொருட்டும், இனிப்பு, கார்ப்பு, துவர்ப்பு, கைப்பு' உவர்ப்பாகிய சராசரப்
பொருள்களைக் காயங்களிட்டு இன்சுவை யுண்டாக்கி அருளிலார் உண்ப. அங்
ஙனம் உண்ட வுணவாதிகள் பைங்கூழ் வளர்தற்பொருட்டு எருவாதிய விட்
டுவளர்க்கும் களமர்போல அவை ஊனையாக்கன் மாத்திரையேயன்றி யவ்வு
ணவாதிகளையுண்ட உடலை நீட்டிக்கச் செய்யாது பயனிலா மலமாக மாறுத
லால் உண்டன மலமாம் எ - ம், அங்ஙனம் உண்ட உணவாதியின் உதிரமாக
மாறியவை யொழிந்த ஒழிபுகள் ஒன்பதுவாயிலில் அதோமுகமான இருவாயி

லின்வழி மலமூர்த்திரங்களாகவும், ஏனைய கண் செவி மூக்கு வாய்முதலி
ய துவாரங்களால் ஏனைய மலங்களாகவும், உரோமத் துவாரங்களின் வழி
நீரினுருக்கொண்ட வியர்வையாகவும் மேலெழுந்து தீநாற்றம் வீசுதலை மறை
த்தல் வேண்டி, மணச்சாந்தாதிய சுகந்தங்களை யுலகர்பூசினும் அவைசேர்ந்த
பொழுதின் சிறிதுமணந்து பின்னர் நிம்மலமாகவே பரிணமித்தலால் பூசின
மாசாம் என்றார். இதனானன்றே வாதவூரடிகள் "புறந்தோல் போர்த்தெங்
கும் புழுவழுக்குமூடி, மலஞ்சோரு மொன்பது வாயிற்குடிலை" யென்றார்.
"ஊறி யுவர்த்தக்க வொன்பதுவாய்ப்புலனுங்-கோதிக்குழம்பலைக்கும் கும்பத
தை"யென்றார்பிறரும். கடந்தபிறவியில் ஒருவன்தான்செய்த புண்ணியபாபங்
களுக்கீடாக இப்பிறவியில் அந்தப் புண்ணியபாபபலனை யனுபவித்தல் திண்
ணம். அவை, "பல்லாவுளுய்த்து விடினுங் குழக்கன்று வல்லதாந்தாய்நாடிக்கோ
டலைத் - தொல்லைப், பழவினையு மன்னதகைத்தே தற்செய்த, கிழவனைநாடிக்
கொளற்கு." என்றவாறாய் எந்நாட்டில் பிரதிவியாதி பஞ்சபூதங்களில்
உயர்திணை அஃறிணையாக வுருக்கொண் டிருப்பினும் அவை செய்யத்தக்க
பேறிழிவின்பமோடு பிணிமூப்புச் சாக்காட்டைத் தந்தேவிடு மாதலாலும்
அவை அந்த இருவினை நீக்கத்தில் மிடுக்குற்றுப் பற்றினும் வருந்தி யழைக்கி
னும் நில்லா வாதலாலும், புணர்ந்தன பிரியும் என்றார். இதுநோக்கியே "வரு
ந்தி யழைத்தாலும் வாராதவாரா எனவும், பொருந்துவனபோமினென்றால்
போகா-எ-ம், "இல்லமிளமையெழில்வனப்பு மீக்கூற்றஞ்-செல்வம் வலியென்
றிவையெல்லாம்-மெல்ல, நிலையாமைகண்டு நெடியார்துறப்பர், தலையாயார் தா
முய்யக்கொண்டு." எனப்பிறரும் இதனது நிலையாமையை வலியுறுத்திக் கூறி
னார். பயனுற்றனவாகிய அறம்பொருள்நிறைந்த நற்குணநற்செய்கையானுயர்ந்த
மெய்யறிவாளரும் தம் தீவினையா லலைக்கப்பட்டுப் பொய்குறளை கடுஞ்சொல்
பயனில் சொல்முதலிய பெற்றுத் தம் நிறைவினின்று நீங்குவ ராதலினானும்,
நீர் நிறைவின் மிக்கசலநிதியாகிய கடலும், நிறைநீர்க் கங்கையாகிய பாகீரதி
யும் முறையே அகத்திய முனிவராலும் சந்நு இருடிகளாலும் உண்ணப்பட்
டுத் தம் நிறைவுகுறைந்தமையாலும் நிறைந்தன குறையும் என்றார். தலையாய
செல்வவாழ்க்கையினையுடையாரு மிடிமை முதலிய துன்பங்களியைந்த கால
த்துத் தமது சிறப்புஞ் செல்வமும் பெருமையுமிழந்து வீட்டிலும் அறக்கூழ்
ச்சாலையினும் அடைந்து இரந்துண்ப ராதலினானும், உலகத்துயர்ந்த மகா
மேருவென்னும் பொன்மலைதன்னின் உயர்ச்சியினும் வேறின்று எனச்செருக்
குக்கொண்ட காலத்துச் சிவமூர்த்தியின் திருவிரலொன்றால் வளைவுண்டும்
அவரது திருக்குமாரரால் பந்தாடி யுண்டும் தன்னுயர்வு தீர்ந்து பணிந்தமை
யால் உயர்ந்தன பணியும் என்றார். தோற்றமுள்ள உயர்திணை யஃறிணைப்
பொருள்களில் ஓரறிவாதியாறறிவுவரையாகிய புல்தாரு கீடம் விலங்குமக்கள்
தேவர் நரகாதியரும் சிறிதேயிருந்து மறைதலின் பிறந்தன இறக்கும் என்
றார். விந்தமலை ஓர்காலத்து உயர்ந்து சூர்யகதியைத் தடுத்துப் பகவானாகிய
அகத்திய முனிவரால் உயர்வு தீர்ந்து தாழ்ந்தமையாலும் பிறவு மவ்வாறான

மையாலும், பெரியன சிறுக்கும் என்றார். ஓரிடத்தில் ஓர்காலத்திற் றோற்
றிய சராசரங்கள் காலவசத்தால் மற்றோர் தேசஞ்சென்றும் அவ்விடத்தி
னின்று வேறுபடுக்கப்பட்டும் அழிதலின் ஒன்றோன் றொருவழி நில்லா என்
றார். இதனை "எழுநிலை மாடங்கால் சாய்ந் துக்குக்கழுதைமேய் பாழாயினு
மாகும்." என்பதாலறிக.

இதுகாறும் அடிகள் தோற்றமுள்ள அசரங்களி னிலையாமை கூறினார்.
இனி, செல்வத்தாற் சிறந்தோர், சூர்ய சந்திரகுலத்திற் பிறந்தாராகிய மனுபூரு
முதலாகிய சக்கிரவர்த்திகள். தேசொடு திகழ்ந்தோர் இராமன், திலீபன், தச
ரதன், முதலியோர், கல்வியிற்சிறந்தோர். நக்கீரர் முதலிய முதற்சங்கம்
இடைச்சங்கம் கடைச்சங்கங்களின் தமிழ்ப்புலமை நடாத்திய புலவர் சிகாமணி
கள். கடுந்திறன் மிகுந்தோர் இராவணன், கும்பகருணன் இரண்யன் பானு
கோபன் தாருகன் வீமன் அருச்சுனன் ஆதிய மகாசூரர்கள். கொடையிற்பொலி
ந்தோர், மகாபலி, திலீபன். கன்னன் முதலியோரும் முதல் வள்ளல்களெழுவ
ரும்; படையிற் பயின்றோர், பரசுராமன், பலராமன், துரோணன், வீஷ்மன்
பானுகோபனே முதலியவர். குலத்தி னுயர்ந்தோர் பிரம்ம க்ஷத்திரிய வை
சியர்களில் கற்புடை யில்லாளிடத்துப் பிறந்தார். நலத்தினின் வந்தோர், ஏனை
ய நற்குண வொழுக்கம் மிக்கார். இத்தகைய வீரமுதலிய குணங்களும் மற்
றனவு மிக்கோரும் யமனைவெல்லாமல் அவற்குமுன் தம் வீரமு மாண்மையுங்
குன்றி யுயிர்நீங்கினர் ஆதலின் அனையவர் பேருமின்றில என்றார். இதனால
ன்றோ நாயனாரும் "நெருநலுள னொருவனின்றில்லையென்னும் பெருமையுடை
டத திவ்வுலகென்றார்." பிறரும் "புன்னுனிமேனீர் போனிலையாமை," எ-ம்,
"படுமழை மொக்குளிற்பல் காலுந்தோன்றிக் கெடுமிதோர் யாக்கை." எ-ம்,
கூறினர். அடிகள்மேல் இருவகைப் பொருள்களி னிலையாமை கூறி யிதுகா
றும் அப்பொருளைப் பெற்றார் பெயரும் யாக்கையும் நிலையாமை கூறினார். மே
ற்கூறியவை நிலையா என்பதை நீ அறிவுடையாய் ஆதலால் நான் கூறியவை
பிரமாணங்களில் பிரத்தியக்ஷப் பிரமாணம் முதலது ஆதலின் அதுகொண்டு
நீயறிவாயாதலின் நீயு மஃதறிதியன்றே யென்றார்.

இப்பிரபஞ்சம், கருவினுள்ளும், கர்ப்பத்தினும், பரிணமித்தும், பாலனா
யும், தருணனாயும் குறித்தகாலம் இதுவென்று நிச்சயிக்கத் தக்கபடி யில்லா
மல் கணம் நிமிஷம், நாள் மாதம் வருஷமுதலிய வெண்ணி லடங்கியு மடங்
காமலு மழித்துப்போம். ஆதலால் இது, உள்ளதுபோலக் காட்டிநெருங்கிய
காலத்து இல்லதாகும் கானநீரினையும், உறக்கத்துக் கனவுகண்டா னொருவறி
யன், பொற்குவையினைக்கண் டெடுத்து அதனால் அனுபவிக்கத்தக்க போக
பாக்யங்களை யநுபவித்துப் பேரானந்த வுததியில் மூழ்கிக் களித்திரு மாந்திரு
க்கையில் அக்கனா நிலைநீங்கிச் சாக்கிர நிலையடைந்த காலத்து தான் முன்
கண்டுகளித்த களிப்புப் பொய்யென வெண்ணித் துன்புறு மாறுபோல இறை
வனது சத்திபதிந்தகாலத்துப்பொய்படும் இப்பிரபஞ்சத்தை மெய்யெனக்கரு

தல் இழிந்தார்தன்மை யென்பார் "பேய்த்தேர்........பொல்லாத்தன்மையர் இழிவுசார்ந்தனை" என்றார். சாக்கிரநிலைக்கண் மனமடைந்த துன்பத்தினைப் போக்குவா னிறைவனால் நியமிக்கப்பட்டது உறக்கமாதலின் அதுகொண்டார் அச்சிரமம் நீங்குமளவு மதிலழுந்தி அது தருமின்பத்தில் மூழ்குவராதலின் நீப்பரு முறக்கம் என்றார். இவ்வாழ்க்கை, காணப்பட்டதுபோல மறைதலின் மாயவாழ்க்கை யென்றார். இதனாலன்றே "இந்திரசாலங் கனவுகானலினீரெ ன வுலகமெமக்குத் தோன்ற" என்றார் தாயுமானார். இங்ஙனம் "பொருளல்ல வற்றைப் பொருளென் றுணர்வார் மருளராதலின் பொல்லாத்தன்மையர் எனவுங் கூறினார். இப்பெற்றி பற்றியன்றே பிறரும்" நீரின்மே லெழுத்தை யதனின் மேலெழுந்த மொக்குளை நிகரில் பேய்த்தேரைக், காரின்மேன் மின்னை யென்னுடம்பென்று கருதினேன் கடைப்பிடிகாணேன், மேருவேவில்லாய்த் திரிபுரமெரித்த விகிர்தனே மேவுவெண்காடா, யாருனே ரொவ்வாவையனே யடியேன் செய்வதென் னருளிச்செய்யாயே." எனக் கூறினார்.

அரியமானிட யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் அதுநீங்கு முன்னரே அவ்யாக்கையாலாய பயன்பெறுப, அங்ஙனம் பெறாதார் தன்மையாகிய அம்முத்தி யின்பத்தை யிழந்தாராதலின் நன்மையிற்றிரிந்த புன்மையையென்றார். மாதாவினுதரத்திற் றோன்றிய நாள்தொட்டுண்ட வுணவாதிகளால்மலமிக்கு ஒன்பதுவாயிலின்வழிநீங்காது தங்குதலின் அழுக்குடைப்புலன் வழியெனவும், அங்ஙனம் ஐவகையிந்திரியங்களுக்கு அடிமைப்பட்டு ஒழுகினோன் தன்னைக்கெடுத்தவனேயன்றி ஆசைக்கடியானா யகிலலோகத்தினுக்கு மாசற்றநல்லடியானாதலின் இழுக்கத்தி னொழுகினென்றார், மீனானது," தூண்டிலினிட மிட்ட வளை முன்னில்கோத்த இறையைத்தன்னைப் பிடிக்கக் கோத்த வஞ்சக இரையென்றெண்ணாமல் அதனிரத்தத்திற் காசைப்பட்டு அதனை விழுங்கி யிறத்தல் போல் உலகர், உலக இன்பத்திற்கு ஆசைப்பட்டு இறத்தலின் பன்மீன்போலவும் என்றார். வளையென்பதை யாகுபெயராக்கி வளைந்த முள்வாய்ந்த தூண்டிலென்று பொருள்கூறினுமாம், விட்டிற்பறவை, உருவத்தினைக்கண்டு ஏதோ, தேசோவுருவமென்று அதற்காசைப்பட்டு அவ்வொளியை நிலையெனக்கருதி அத்தீயினொளியில் விழுந்துமரித்தல்போல் உலகர் கண்ணால் உருவத்தைக் கண்டு மயங்கி மயலுற்று அவ்வின்பத்தினைப் பொய்யெனக் கருதாது மெய்யெனக்கருதி யிறத்தலின் விளக்கத்து விட்டில் போலவும் என்றார். விளக்கம் என்பதில் அம்சாரியை. யானையானது பரிசமாத்திரத்தால் ஆசைப்பட்டு உயிர் இழத்தலின் ஆசையாம் பரிசத்து யானைபோலவும் என்றார். அசுணமெனும் பறவைசத்தமெனும் செவியுணர் ஓசைகேட்டுச் சகியாமல் உயிர் இழத்தலின் ஓசையின் விளிந்த புள்ளுப்போலவும் என்றார். வண்டினங்கள் கந்தமென்னும் மணத்தினை முன்னிட்டுச் சண்பகமுதலியமலர்களை மொய்த்து அதனால் உயிர்நீங்குதலின் வீசியமணத்தின் வண்டுபோலவும் என்றார். இதுகாறும் மீன்முதலிய அசேதனப்பொருகள் தமக்குள்ள மெய் வாய்கண் மூக்கு

ச்செவியென்னும் பஞ்சேந்திரியங்களின் வழித்தம் மனதைவிட்டுச் செட்டமை உவமைமுகத்தாற்கூறிச் சேதனனாகிய நீ அறிவுடன் கூடியிருந்தும் அப்பஞ்சேந்திரிய வழிமயங்கி மாயாதிருக்கவென அறிவுறுத்தியவாறு கூறினார் என்க. இதுபற்றியன்றே பிறரும், "சத்தத்தா லசுணமாயும் பரிசத்தாற் றந்திமாயும், வெற்றிசேரு ருவத்தாலே விட்டிலம் பறவைமாயும், பற்றியா ரிரதத்தாலே பாணிமீனினங் கண்மாயும், மொய்த்தகந்தத்தினாலே மூசுவண்டினங் கண்மாயும்." "ஒதியவசுணமாதி யோனமூன்று வழியாநிற்கும், சாதினாற் றொருக்கான்மூக்காற் கண்ணினாலிந்தச் சாதிமானிடர்க ளெல்லாமஞ்சினாற் சாகாநிற்பர், போதமேலிட்டகாலம் புலன்வழிப் போகாரன்றே." இவ்வாறுகூறினர். இவ்வைம்புலன்களும் ஒருவனுக்கு இன்பமல்லாததை யின்பமென வறிவித்து இனிக்கச்செய்து அதிலாழ்த்தி நரகுறச்செய்வதை யுணராது மயக்குறுதலின் அவ்விதம் மனமே மாசுபடாதை யென்பார் உறுவதுணராச் செறுவழிச் சேர்ந்தனை யென்றார்.

சிலந்தியெனும் அறிவில் கீடம் தன்னிரையைக்கவர்தற்குத் தனக்கு இறைவன் தந்தவன்மையால் நூலான்வலை நூற்று அவ்வலையிடை ஒருகுழியொன்றுண்டாக்கி வழியறியாது வலையிடைப்பட்ட இரையாகிய பூச்சிகளை அதனிடையிலுள்ள குழியிலிழுத்துத் தள்ளி யுண்டு சீவித்தல்போல் அறிவுடைய நீ ஆசையென்னும் வலைவீசி அறிவுடைய வுன்னை இயற்றுவ தின்னதென அறியாவகை மயலேற்றித்தன்னகப்படுத்தி நரகத்திலிட் டுறவைக்கும் அரிவையர்க்கு இரங்கா நின்றாயென்பார் "நுண்ணூல்........உறங்குபுகிடத்தி" என்றார். அதிநுட்பமாய்க் கட்புலன்கவர நிற்றலின் நுண்ணூல் என்றார். வந்துழி ஒருசொல்லின் தன்மைத்து. சங்கிலிதன்னால்வளைக்கப்பட்ட பொருளைப் பிறர்முயன்றுவிடுப்பினல்லது விடாமைபோல் ஆசையும் தன்னால்காதலிக்கப்பட்ட பொருளின்றன்மை யித்தகைநிலைபேறிலா தழியுந்தகைத்தெனப்பிறர் அறிவித்து மீட்பினல்லது மீளாமையின் ஆசைச்சங்கிலி என்றார். பாசம், ஆணவம் கன்மம் மாயை யெனப்பட்டு மூன்று புரிகொண்ட வொருவடமாய் ஆன்மாவிற்குப்பிரதிபந்தம் நிர்ப்பந்த சம்பந்தங்களைச் செய்தலின் பாசத்தொடர்என்றார். மனந்தான் அறிவின்வழி அடங்கிநிலாது காணப்பட்ட பொருள்களிடத்து அப்புலன்வழிசென்று மீளாது அழுந்தி யிடரு றுதலின் இடர்கெடுமனம்என்றார். ஆணைக்கண்டு பெண்ணும், பெண்ணைக்கண்டு ஆணும் காதலிப்பது புறவுடம்பின் தோற்றங்கண்டன்றி வேறின்று. அவ்வாறு காதலித்தல் அறிவுடையார் கடனன்று அவ்வுடம்பினை, யறிவுடையார் "உண்ணீர்களைந்தக்கால் நுங்குசூன்றிட்டன்னகண்," எ-ம், "எல்லாருங் காணப்புறங்காட்டு திரங்துக்கப்பல்" எ - ம், "குடருங்கொழுவுங் குருதியு மென்புந், தொடருநரம்பொடுதோலு,மிடையிடையே,வைத்ததடியும் வழும்புமாம்."எ-ம்,பழித்துக்கூறுதலி னதனைப்பைம் மறியாப்பார்த்து ஒழுகுகவென்பார் குடர்கெழு சிறையறைக்குறங்குபுகிடத்தியென்றார். ஆவின்கன்று தன் தாயிருக்கு மிடமறி

ந்து சென்று இரங்கிக்கரைந்து தாய் முலைப்பாலுண்டு களித்தல்போல் நீயு மிறைவனையெண்ணி மனங்கரைந் துருகின் அவன் பக்தவற்சல னாதலின் கன்றைநினைத்துத் தேடிவரும் பசுவினைப்போல் அவன் தானேவந்து அருள்செய்வன் என்பார் “கறவை நினைந்த......அருள் சுரந்தளிக்கும்” என்றார். எக்காலும் இடைவிடாதுதியானிப்போ ருள்ளத்தினுனைந்த நடனஞ்செய்வோனாதலின் ‘மறவாமனத்து மாசறுமடியார்க் கருள்சுரந்தளிக்கு மற்புதக்கூத்தன்’ என்றார். இதனாலன்றே பிறரும் “ஒருகண மிருப்பன் றெய்வ வுருவினிலீசன்றான்மற், றிருகணஞ் செங்கோலோச்சு மிறையவர் பாலிருப்பன், அருமறையவர்குழாத் துளம்புவீ ழுளவிருப்பன், றுரியயோகி யருளத்திற் றூங்குவனிருந்தெப்போதும்,’ என்றார்.

இதனுள், பேசு, பேசு, பேசு, பேசு, எனும் ஒருசொல் பன்முறைவந்தது வாழ்நாள் உலவாமுன் இறைவனை யெண்ணிநைந்து அவனது திருப்பெயர் கூறியுய்கவெனத் தன்னொத்த பிறப்பினரை யெண்ணி யிரங்கிக்கூறியதாம். வாழி, வாழியென அவ்வாறு கூறியது அங்ஙனம் நீமறவாமனத்துடன் கூறுவையேல் முட்டின்றி வீடுபெற்றுய்வாய் என வாழ்த்தியவாறுமாம். நில்லாது என்பதில் துவ்விகுதிதொக்கு நின்றதெனக்கொள்க. அன்றியடிகள் முதலிற் கண்டன எனப் பன்மையீற்று வினைப்பெயரெனத் தொடங்கினவாறே ஒன்றொன்று என்பதைப் பலவெனப் பொருள்கொண்டு நில்லாவெனப் பன்மை முடிபாக முடித்தானென்னலுமாம். செல்வமொடு எனுமிடத்து ஒரு இசைநிறையென்னினுமாம். அன்றிப்பிறப்பினிடை நீங்காமை யதனொடியைந்த கிளவியென்னினுமாம். மற்றைய வொடுவு மவ்வாறேகொள்க. போலும், அசைநிலை. வலிதா என்னுமிடத்துக்குச்சாரியையும் அகரவிகுதியுந்தொக்குநின்றன. மின்னுறு, என்பதற்குமின்னுபு எனவும் பாடம். சிறையறை பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. கறவை, தொழிலாகுபெயர், இதனால், முதற்கண்தோற்றமுள்ளன கெடுமென, பொருள்முதலிய செல்வநிலையாமையும், அச்செல்வமேயன்றி யதனைப் பெற்றோர்க்குக் குணமாயதேசு, வலி, கல்வி, கொடை, குலம், நலம், முதலியவும், இல்லதையுள்ளது போலக் காட்டி மயக்கும்மாயவாழ்க்கையும், நிலையல்லவெனக்கூறி, யறிவிலாநெஞ்சே யிவற்றை மெய்யெனமதித்து வீணேயிறக்காது நினைத்தார்க்கு வேண்டிய வேண்டியாங்குத்தரும் கற்பகமாகிய அற்புதக்கூத்தனைத் தொழுகவென விரங்கித் தன்னொத்தபிறப்பினர்க்குக் கூறியதாம். இது தலைவரும் பொருளைத் தக்காங்குணர்த்திநிலையாமை நெறிப்பட வுரைத்த முதுமொழிக்காஞ்சியாம்.

வெண்பா.

நினையார் மெலியார் நிறையழியார் வாளாப்
புனைவார்க்குக் கொன்றை பொதுவோ-வனைவிரு
மெச்சியே காண வியன்றில்லை யானருளென்
பிச்சியே நாளைப் பெறும். ௨௯.

(இ - ள்) நினையார் - அவனை மனத்திற்கொள்ளார், மெலியார் - (அவனிடையூற்ற மிகுதியால்) மெலிவினைப்பெறார், நிறை அழியார் - மனநிலைதளரார், வாளா - (இவ்வகை அகத்தும் புறத்தும் நெகிழ்ச்சியிலாமல்) சும்மா, புனைவார்க்கு - அவன் சூடிக்கொண்டிருக்கும் மாலையைச் சூட்டிக்கொள்ள வெண்ணுவாராகிய கன்னியர்க்கு, கொன்றை - கொன்றைமலர்மாலை, பொதுவோ - (பலர்க்கும் உரிமையாகும்) பொதுத்தன்மைத்தோ? (அன்றாம்), அனைவீரும் - அங்ஙனம் அவனது கொன்றை மாலையின்கண் விருப்பமுள்ளாரும் இல்லாருமாகிய நீங்களனைவரும், மெச்சி - (இவளது இடைவிடா அன்பிற்குப்) புகழ்ந்து, காண - காணும்படி, வியன் - பெருமை தங்கிய, தில்லையான் - திருச்சிற்றம்பலவன், அருள் - திருவருள்செய்யும், (அக்கொன்றை மாலையினை), நாளை - நாளைக்கு, என்பிச்சியே - (அவனிடை மயல்கொண்ட) என்பேதைக்குமரியே, பெறும் - அடைவாள். எ-று.

(வி - ரை.) இது, நற்றாய், தன்குமரி அவனை நினைதலும் மெலிதலும், அவன்பொருட்டு நிறையழிதலும் பெறுதலால் அவனிடத்துக் கருணைசெய்து கொன்றையளிக்க அவளுண்மையாகப் பெறுவள் என இவளது பேதைநிலைகாணு மனைவரையு நோக்கிக்கூறியதாம். இங்ஙனங்கூறவே, இறைவனையெண்ணிமனநைந்து உள்ளமுருகப்பரவசப்பட்டு அன்பராயினார்க்கன்றி மற்றவர்க்கு அவனருள்கிடைக்காதென வுள்ளுறை கூறியதாயிற்று. நினைத்தலுஞ் செய்தலோடொக்குமாதலின் அவனைநினைத்தல் அவன்பொருட்டுச்செய்யுஞ் சரியை கிரியைகளை யொத்தலின் நினையார் எனவும், அங்ஙனநினைந்த நினைவின் முதிர்ச்சி அவனிடையூற்ற மிகுதியின் தேகத்தைப் பரவசப்படுத்தி அதைப்பாதுகாக்கு மெண்ணத்தைப் போக்குதலின் அதனாலாய மெலிவை மெலியார், எ-ம், மெலிந்ததைநோக்காத உள்ளன்பால் அபிமான முதலிய கெட்டு பித்தாந் தன்மைகொண்டு அவன் றிருவருள் நோக்கிக் காலம்பார்த்தலின் நிறையழியார் எ-ம், கூறினார். எதிர்மறை முகத்தாற் கூறியதனானே யிங்ஙனம் விதிமுகத்தாற் செய்வோர் சிவப்பேறடைவர். அல்லாதோர் சிவப்பேறடைவர் என்பது கூறினாராயிற்று. நினையார் எனப்பன்மை பற்றிக்கூறியதனான் அன்பர் பலரைநோக்கிய கூற்று. வாளா, என்பது பயனின்மை பொருட்டு. புனைவார் என்பது புனைய விரும்புவார் எனும்பொருட்டு. கொன்றை ஆகுபெயர். ஓகாரம் எதிர்மறைப் பொருள்படநின்றது. அனைவீரும் என்பதினும்மை முற்றுப்பொருளது. அவள்செய்த தவப்பேறு யாம்செய்திலேம் என அவளது தவத்தினைப் புகழ்ந்து தம்முள் ஒருவர்க்கொருவர் உயர்த்திக் கூறுதலின் மெச்சி எ-ம். அவனது திருவருள் அங்ஙனம் நின்றார்க்குப்பயன் தருதல் அளவை மூன்றனுள் பிரத்தியக்ஷமாகக்காணும் காட்சியளவையென்பார் காணவெனவும் கூறினார். நினைவாரும், மெலிவாரும், நிறையழிவாரும் நிறம்பிய பெருமையுடைத் தென்பார் வியன்றில்லை யென்றார். இவள்கொண்ட எண்ணந்தவிரா நிலைமை, யவள் அத்தலைவன் பொருட்டுச் செய்யும் பித்

தாங்தொழிலால் தாய் துணிவுகொண்டு அவளது தூங்கா நிலைக்குங் களித்து என் பிச்சியென்ருள். பிச்சி, தகரத்திற்குச் சகரம்போலியாயிற்று. நாளை, என்பதுஇனிவருங் காலத்தை யுணாத்திய குறிப்புமொழி. பெறும் என்பது செய்யுமென் முற்ருதலால பெண்பாற் கண்வந்தது.

கட்டளைக்கலித்துறை.

பெறுகின்ற வெண்ணிலி தாயரும் பேறுறும் யானுமென்னை
யுறுகின்ற துன்பங்களாயிர கோடியு மோய்வொடுஞ்சென்
றிறுகின்ற நாள்களு மாகிக்கிடந்த விடுக்கணெல்லா
மறுகின் றனதில்லை யாளுடை யான்செம்பொ னம்பலத்தே.

(இ - ள்.) பெறுகின்ற - புத்திரப்பேற்றினையடைகின்ற, எண் இலி - கணக்கில்லாத, தாயரும் - தாய்மார்களும், பேறு - அப்பிறப்பினுல் வரும் சுக துக்கங்களை, உறும் - அடையும், யானும் - அடியேனும், என்னை - அப்படிப்பட்ட வெனனை. உறுகின்ற - வந்தடைகின்ற, துன்பங்கள் ஆயிரகோடியும் - பலதுன்பங்களும், ஓய்வொடுஞ் சென்று - ஓய்வினுற்சென்று, இறுகின்ற - தம் வாணுளின் முடிவையடைகின்ற, நாள்களும் - (இவ்வள வினவெனவிதித்த) ஆயுட்களும், ஆகி - (தம்மைத்தடுப்பார் பிறர் இன்மையால்) வளர்ந்து, கிடந்த - ஆன்மாக்களை யாவரித்திருந்த, இடுக்கண் எல்லாம் - பின்னும் பல்வகைத்தாகிய எல்லாத்துன்பங்களும், தில்லை - திருத்தில்லைக்கண் எழுந்தருளியிருந்து, ஆள் உடையாள் - என்னை யடிமையாகக் கொண்ட நடராச மூர்த்தியின் (திருவருள்நிறைந்த), செம்பொனம்பலத்தே - கனகசபைக்கண், அறுகின்றன - நீங்குகின்றன, (எ - று,)

(வி - ரை.) சநநந்தோறும் யான் செய்த கர்மத்திற் கிடாகப் பலவகைப் பட்ட பிறவிகளைக் கொள்ளுங்கால் அச்சராசரங்களாகிய உயர்திணை யஃறிணைப் பிறவிகளில் தாயராகப்பிறந்தார் எண்ணிலராதலால் 'எண்ணிலிதாயர்' என்ருர். "பேறிழவின்பமோடு பிணிமூப்புச் சாக்காடென்னு, மாறுமுன்க ருவுட்பட்ட தவ்விதி யனுபவத்தா லேறிடுமுன்புசெய்த கன்மமிங்கிதனுக் கேது, தேறுநீயினிச்செய்கன்ம மேலுடற்சேருமன்றே.'' என்பதனுற் காண்க. அவைபிறந்த பிறவிகளினும் புத்திரப் பேறடைதல் புண்ணியத்தாலன்றிக் கூடாமையின், பெறுகின்ற என்ருர். தந்தையைக்கூருது தாயர் என்ருர் முன்னின்ற தெய்வமாய்க் காக்குந் தொழின்மைபூண்டு நிற்றலின். எண்ணிலியென்ருர் அளவின்மை குறித்தல் வேண்டி. பெறுதலை விரும்பியதாயே யன்றி யானும், கருப்பாசயப்பை யுறுத்தலாலும், அதிற்சலம் பூரித்தலாலும், உதராக்னியால் வேதலாலும், பிரசூதவாயு மூரித்துத் தள்ளுதலாலும், யோனித்வாரத்தால் நெருக்குண்ணலாலும். உண்டாகுந் துன்பத்தை யனுபவித்தலால் வருந்துன்பத்தை யனுபவித்தலின் பேறுறும் யானும் என்ருர். இதற்குதாரணம், சிவதர்மோத்தரம் " என்றெண்றெண்ணி யிருக்கு மூயிரிடார்ப்பட்

டழியுமெழில் வரைக்கீழ், ஒன்று மொருவன்றனைப் போலக்கருப்பாசயப் பையுறுத்துதலால், மன்றவுததி மறிந்தாழ்வான் வருத்தமென்ன வருந்தியிடு, நின்ற கருப்பாசய வுதகவெள்ளங்கொள்ள நிறையழிந்தே" எ - ம், அங்கிய தனிற்றங்கி யிடமேயா மயத்தரும் பத்திற், றங்குமொரு வன்றபனம் போற்ற பன மெய்துந்தாயுதரத், தங்கிசுடவே யழலனைய சூசியதனூ லாகத்தைப், பங்கித்திடவே படுமிட ரிலிருநாற் குணிதம்பட்டழுங்கும்," எ - ம், "கருப்பாசயமே கட்டமதாமதனி னதிகங்கடுங்காலு, முரிக்கமிகவுமோக முறமுன்னையுணர்வுமந்நிலையே, மரிக்கவாலைக்கரும் பெனவேயோனி வழியின் வலிதொலைய, நெருக்கப்பட்டு நிலமிசையே தோன்றுமுயி ருனிலையுடனே," எ - ம், கூறியவற்றாலறிக. ஆதியாத்மிகம், ஆதிதெய்விகம், ஆதிபௌதிகத்தா லுண்டான துன்பங்களும், வாத பித்த சிலேத்மாதிகள் ஒன்றோடொன்று முரணுதலால் தோன்றும் நோய்களும், பலவாதலின் துன்பங்க ளாயிரகோடியும், எ - ம், அவை கர்மத்திற்கீடாக என்னை வந்தடைதலின் என்னை யுறுகின்ற துன்பங்கள் என்றார். ஆயிரகோடி யென்பது, பலவென்பதைக் குறிப்பிக்க நின்ற குறிப்புமொழி. ஆதித்தன் சந்நிதானத்தைக் கண்ட இருள்தான் ஒடுங்குமிடந் தெரியாது மறைதல்போல் இறைவன் எழுந்தருளி யிருக்கும் திருத்தலத்தைக் கண்ட துணையானே நோய்கள் ஒடுங்குதலின் ஒய்வொடுஞ் சென்று, எ - ம், இவ்வள வினதெனக் கடவுளால் விதிக்கப்பட்டு இறுதியையடையு மான்மாக்களும் தம் வாணாளிறுதிக்கண் ஒருகால் தரிசிக்கின் ஆயுள் அவ்வரையினைக் கடந்து நீட்டித்து நின்றலின், இறுகின்ற நாள்களும் என்றார். மேற்கூறிய துன்பங்களேயன்றி மற்றும் அபுத்திபூருவத்தால்வருகின்ற துன்பங்களும் அடங்க ஆகிக்கிடந்த இடுக்கண் எல்லாம் என்றார். இவை முறையே வலிய மெலிய கன்மங்க ளாதலின் அம்முறைப்படி மெலியன முன்னும் வலியன இறுதியினும் இடைப்பட்டன இவற்றிடையினும் நீங்குமென்பார் இறந்த காலத்தாற் கூறாது, அறுகின்றன என நிகழ்காலத்தாற் கூறினார். என்னைப் பண்டே சநங்கடோறும் அவன் திருவடிக்கண் சிறிது அன்பு வரச்செய்து இச்சனனத்து முற்றும் ஆட்கொண்டான் என்பார் ஆளுடையான் என்றார். அவன் தில்லையை ஆளும்பதியாகக் கொண்டான் என்னலுமாம். உம்மைகள் எண்ணுப்பொருள. நாள்கள் ஆகுபெயர். இடுக்கண் எல்லாம், ஒருமையிற் பன்மைவந்த வழுவமைதி.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அம்பலவரங்கண டைந்தவர்தமக்கே
யன்புடையரென்னுமிதெனூனையுரித்துக்
கம்பலமுவந்தருளுவீர் மதனன்வேவக்
கண்டருளுவீர் பெரியகாதலறியாதே
வம்பலர் நிறைந்தவசை பேசவொருமாடே
வாடையுயிரீரமணி மானமையுமிழந்தென்

கொம்பலமருந்தகைமை கண்டுதகவின்றிக்
கொன்றை யருளீர்கொடி யீரென்றருளுவீரே. (௫௧)

(இ - ள்.) (தோழியரே) அம்பலவர்-திருவம்பலத்தினைத் தமக்கு இடமாகக் கொண் டெழுந்தருளியவர், அம்கணர் - அழகிய திரிநேத்திரத்தினையுடையார், அடைந்தவர் தமக்கு - தம்மை யபயமென்று சரணாகதி செய்த அடியார்களிடத்து, அன்புடையர்-கருணையுடையார், என்னுமிது - என்கிற இவ்வார்த்தை, என் - என்ன வியப்பு. ஆனையை உரித்து - கஜாசுரன் என்னும் ஆனையையுரித்து, கம்பலம் - அதனது உரியைக் கம்பலமாக, உவந்து அருளுவீர் - களிப்புடன் போர்வையாகக்கொண்டருளுவீர், மதனனவே - மன்மதன்நீறாக, கண்டருளுவீர்-திருநோக்கஞ்செய்தருளுவீர், பெரியகாதல் - என்குமரி உம்பாற்கொண்ட பெருங்காதலை, அறியாதே - திருவுளத்தெண்ணாமல், ஒருமாடு - ஒருபக்கத்தில், வம்பலர் -(அவளின் தன்மையறியாது நின்னிடை யவள்பித்தேறியதுகாரணமாக்கொண்டு வசைபேசும்) அயலவர், நிறைந்து - ஒன்றுகூடி, வசைபேச - பழிச்சொல்கூற, ஒருமாடு - மற்றொருபக்கத்தில், வாடை - வாடைக்காற்று, உயிரீர - உயிரைவருத்த, மணி - அழகிய, மாமையும் - இயற்கையாகிய அழகின்பொலிவையும், இழந்து - போக்கிக்கொண்டு, என்கொம்பு-எனது பூங்கொம்பையொத்தபெண், அலமருந்தகைமைகண்டு - வருந்திமயங்கு மியல்புநோக்கி, தகவு இன்றி-தயைசிறிதுமில்லாமல், கொன்றைஅருளீர் - கொன்றைப்பூமாலையினை யருளிச்செய்யீர், கொடியீர் - கொடுமையுடையீர், என்று அருளுவீர் - என்று அவன்முன் கூறக்கடவீர் எ - று.

(வி - ரை.) இது நற்றாய், இறைவன் ஆன்மாக்கள்பொருட்டாகக் கருணைபூண்டு திருவம்பலத்தின்கண் ஆநந்தநடனஞ் செய்தருளுவோன், கருணாகடாக்ஷமுடையான் தன்னையடைந்தவர்களிடத் தன்புடையான் எனும் தோழியரைநோக்கி, தோழியரேயவனை யவ்வாறுகூறுதல் அடாது அங்ஙனங் கூறுதலொழிந்து யானையையுரித்து அதன்தோலைப் போர்வையாகக்கொண்டான் எனவும், மதனன் நீறும்வகை தீ நோக்கங்கண்டோன் எனவும் என் அயலவர் வசைகூற குமரி தம்மிடைப்பட்டகாதலால் அழகுமுதலிய இழந்து வருந்துதலறிந்தும் தாம் அணிந்த திருவடையாள மாலையாகிய கொன்றைப்பூமாலையினை யருள்செய்யீர் என்று அவன் திருச்சந்நிதிமுன் சென்று வசைகூறுமின் என்று கூறியதாம். பொதுத்தன்மையால் எல்லா ஆன்மாக்களையும் ஆள்வோன் என்பார் அம்பலவர் எ - ம், கண்மூன்றாயினும் ஓர் அழகுசெய்து கருணைபூண்டிருத்தலின் அங்கணர், எ - ம், தன் தன்மையறிந்து தன்னை வழிபட்டார்க்கு மிக்க அன்புடையான் என்பார் அடைந்தவர்தமக்கே யன்புடையர் என்றார். தமக்கே எனும் ஏகாரம் பிரிநிலையும் தேற்றமும் ஆம். அன்புடையார்க்கெளியன் என்பதற்குப் பிரமாணம், இறைவன்வாக்கு "அடியார்க் கெளியன் சிற்றம்பலவன்கொற்றம், குடியார்க்கெழுதியகைச்சீட்டுப் - படி

யின்மிசைப்-பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து, முத்திகொடுக்குமுறை." எனவும், "சென்றிறைஞ்சும் வானோர்தஞ் சிந்தைக்குச்சேயரா, என்றுமடியார்க்குமுன்னிற்பர்—நன்று, கனியவாஞ்சோலைக் கயிலாயமேயா, ரினியவர்பத்தர்க்கிவர்." எ-ம், கூறிய நக்கீரதேவர் திருவாக்கானும் அறிக. முன்னிரண்டடியிற்கூறியவை மூன்றும் அவனது அநுக்கிரகத்தைத் தெரிவித்ததாம் பின்னர்கூறியவை நிக்ரகமாம். நீவிர், அவன் கருணையுடையான் எனக் கூறுமிது புகழ்ச்சியேயன்றி யுண்மையன்று என்பார் இதென் என்றார். இது, எனுஞ்சுட்டு இறைவனது செயற்கையுணர்த்திப் பன்மைப்பட நின்றது. என், எவனென்னும் வினாவினைக்குறிப்பு என்னென நின்றது. இக்குறிப்பு வினை வியப்புப்பொருள்பட நின்றது. ஆனை, யானையென்பதன் மரூஉமொழி. மற்றையார்வெறுக்கும் உடையாகிய யானையினுரியைத் தேவரீர் இனிதாக் கொண்டருளுதலால் வெறுக்கத்தக்க பொருள்களினும் விருப்புடைய வெறுப்பு விருப்புடையன் என்பது போந்தது. இது இறைவனது எண் குணங்களில் முடிவிலாற்றலுடைமை விளக்கி நின்றது. காத்தற்றொழின்மைபூண்டு இறைமைக்குணமுடையரென மற்றவராற்கூறப்படும் விஷ்ணுமூர்த்தியின் குமாரனாகிய மன்மதன் தான் நாராயணபுத்ரன் எனத் தருக்குற்றுப் பிரமனாதியர்வேண்ட இறைவனது யோகநிலையைத் தீர்த்து அம்மையை மருவத்தனது சாயகங்களி லொன்றையேவி அவனது நிவிழியால் வெந்து சாம்பலானமையின் மதனன் வேகக் கண்டருளுவீர் என்றார். மேற்கூறிய நிக்ரகச் செய்கைக ளிரண்டும் காண்பார்க்கு நிக்ரகமெனத் தோற்றினும் கருணாமூர்த்தியாகிய சிவமூர்த்திக்கு அது அநுக்ரகத்தொழிலேயாம் எவ்வாறெனின். சிவமூர்த்தி ஆன்மாக்கள்பொருட்டுச் செய்யும் சிருஷ்டி ஆன்மாக்கள் செய்த கன்மமெல்லாம் புசித்துத் தொலைப்பதற் பொருட்டாம். திதியோவெனிற், அக்கன்மங்களைப் புசிப்பித்தற் பொருட்டாம். சங்காரமோவெனின், தோற்றக் கேடுகளால் சகலாவத்தையி லுண்டாகிய இளைப்புநீங்கத் தத்துவங்களெல்லா மொடுக்கி யான்மாக்களைக் கேவலாவத்தையிற் கிடத்தற் பொருட்டாம். திரோபவமோ வெனின் கன்மசாம்மியத்தின் மலங்களெல்லாவற்றையு நீக்குவ தாகையாற் கன்ம சாம்யமாமளவும் கன்மபலத்திலே வெறுப்புத் திவராமற் புசிப்பித்தற் பொருட்டாம். அநுக்ரகம், ஆன்மாவிற்கு உபாதியாயுள்ள வாணவாதி பாசபந்த நிவர்த்தித்துவராஸ்வ ஸ்வரூபமான சச்சிதானந்தாபி வியக்தியாக்குவது. ஆதலின் அவனது பஞ்சகிர்த்யமும் கருணையே. "அழிப்பிளைப்பாற்ற லாக்க மவ்வவர் கன்மமெல்லாங் கழித்திட நுகரச்செய்கை காப்பது கன்மவொப்பிற், றெழித்திட மலங்களெல்லா மறைப்பருட்செய்திதானும், பழிப்பொழி பந்தம் வீடு பார்த்திடினருளே யெல்லாம்." என்ற திருவிருத்தத்தானுமறிக.

எனைய காதல், இவள்கொண்ட இக்காதலை யொவ்வா; என்னெனின் அவை சிறிது பொழுது நின்று கெடுதல்போல இது கெடுவது நீட்டித்துநிற்

றலின் பெருங்காதல் என்றார். இங்ஙனம் பெருங் காதல்கொண்டு இவளிருக்க இவணிலை யினைச்சற்றுஞ் சிந்திக்காராய் இவள்கொண்ட காதல் வெறுக்கத்தக்கதென நிந்தித்துக் கூறுதலின் வம்பலர் என்றார். அன்றியவர் இவளுடன் சம்பந்தங்கொண்ட தங்கை முதலியோரெனின் இவள் படுந்துயர்க்கு இரங்கி யென்றெடுவருந்துவர். இவர் அத்தகையரல்லர் என்பார் வம்பலரென்றார் எனினுமாம். இவ்வம்பலர் தனித்து இருவர் இவளது குறைகளைப் பேசிக்கொள்ளினமையும் அங்ஙனஞ் செய்யாது பலர்கூடி யிவள்செய லெடுத்துக் கூறித் தம்மில் அவமதிச் சிரிப்புக் கொள்ளுதலின் நிறைந்து, எ - ம், அங்ஙனம் நிறைந்தும் அவள் மாட்டுள்ள குணமெடுத்துக் கூறாது நறுங்கனி நிறைந்த சோலையிடத்துங் கனிவிரும்பாது வேம்பினை விரும்பும் காக்கைபோல் அவளைப்பழித்துப் பேசலின் வசைபேச எனவும் கூறினார். இங்ஙனம் வசைபேசுவார் நிற்க அவள் தன்தலைவனைப்பிரிந்தமை யறிந்து அவளை வருத்துவான் எண்ணிக் குளிர்ந்தநீர்த் துளிகளை யாயுதமாக்கொண்டு அவளுயிரைக் கவர்தல் கருதி வாடைக்காற்று மோதுதலின் வாடையுயிர என்றார். மேற்கூறிய காரணங்களால் அவள் தனது அழகு முதலிய இழந்தாள் என்பாள் மாமையுமென்றாள். இங்ஙனம் வருந்துவாள் வருத்தம் பொறுநிலையினைக் கொண்ட தன்மையள், அவள் படுந்துயரமும் அவளது அருமையும் நானே யறிவேன் மற்றவரறியார் என்பாள் என் கொம்பு என்றாள். காற்றால் மோதப்பட்ட பூங்கொம்பு ஓரிடத்து நிலைபெறாது சுழலுறுதல்போல் இவளும் தலைவனைப் பிரிந்த காதனோய்வருத்த வாட்டமுற்று மனச்சுழற்சி கொண்டாள் என்பாள் அலமருந்தகைமை யென்றாள். நீர், எங்குஞ் சிரமும் கண்ணுங்கரமும் உடையீர் இவள் படுந்துயர் தேவரீர் திருச்சந்நிதிமுன் வெளிப்படை மற்ற தனைக்கண்டுங் காணார்போல் வாளாவிருக்கின்றீர் இது அருளுடையார் கோட்பாடன்று என்பாள் கண்டுதக வின்றி என்றாள். அவள் நும்மாட்டுவிரும்பியது மற்றவர் விரும்பும் உயர்பதமும் செல்வமும் அன்றுகாண் தேவரீர் அணிந்திருக்கும் திருவடையாள மாலையாகிய சரப்பூங்கொன்றையே யென்பாள் கொன்றை யென்றாள். இவ்வாறு வருந்துதலைச் சற்றுஞ் சிந்திக்காநிலைகொண்டீர் அவண் மாட்டுச் சிறிது கருணைசெய்ய வேண்டுகின்றேன் என்பாள் அருளீர் எனவும் இவ்வாறு அவள்பொருட்டு நானும் வருந்த இருவர் வருந்துதலை நோக்காது கேளாவிருக்கின்றீர் வன்னெஞ்சமுடையா ரிற்றலைமையுடையீர் என்பாள் கொடியீர் என்றாள். இங்ஙனங் கொடியீர் என்று அடியேனறியாது கூறினேன் சீறியருளல் தேவர் திருமனக்குறிப்பின் வகை திருவருள் செய்க என இரங்கிக் கூறுவாள் என்றருளுவீரே எனவுங் கூறினாள்.

இச்செய்யுள், இறைவனது குணங்களை யனுபவித்தல் வேண்டி வருந்தும் மனத்தைக்கண்டு இறைவனது திருவருள் பதியாநிலைகண்ட நெஞ்சம் வருந்துதலை யுள்ளுறை யாக்கொண்டு நின்றது. உவந்தருளுவீர், கண்டரு

ளுவீர் என்னுமிடத்து அருள் என்னும் முதனிலை தலைவனது இறைமைக் குணத்தையும் ஏற்பாரது இழிவையும் குறித்து நின்றது. வடகாற்றினை வாடையென்றது மரூஉ. மணிமாமை என்பதற்கு அழகிய மாமை யென்பதேயன்றி, மணிகுயிற்றிய அணிகளும், மாமையுமிழந்து என்னலுமாம். கொம்பு ஆகுபெயர். அருளீர், இச்சொல் விதிவினை மறைவினைக்கும் பொதுவினை. இதனை மறைவினையாகக் கொள்ளுமிடத்து எதிர்மறை யுணர்த்தும் ஆகார விகுதி புணர்ந்து கெட்டதாக்கொள்ப.

இணைக்குறளாசிரியப்பா.

அருளுவாழி யருளுவாழி
புரிசடைக்கடவு ளருளிவாழி
தோன்றுழித்தோன்றி நிலைதவக்கறங்கும்
புற்புதச்செல்வியின் மக்களியாக்கைக்கு
நினைப்பினுங்கடிதே யிளமைநீக்க
மதனினுங்கடிதே மூப்பின்றொடர்ச்சி
யதனினுங்கடிதே கதுமெனமரணம்
வாணாள்பருகி யுடம்பைவறிதாக்கி
நாணாள்பயின்ற நல்காக்கூற்ற
மினையதன்மைத் திதுவேயிதனை
யெனதெனக்கருதி யிதற்கென்றுதொடங்கிச்
செய்தனசிலவே செய்வனசிலவே
செய்யாநிற்பன சிலவேயவற்றிடை
நன்றென்பசிலவே தீதென்பசிலவே
யொன்றினும்படாதன சிலவேயென்றிவை
கணத்திடைநினைந்து களிப்பவுங்கலுழ்பவுங்
கணக்கில்கோடித் தொகுதியவைதா
மொன்றொன்றுணர்வுழி வருமோவனைத்து
மொன்றவுணர்வுழி வருமோவென்றொன்று
தெளிவுழித்தேறல் செல்லேமளிய
மனத்தின்செய்கைமற் றிதுவேநீயே
யரியைசாலவெம் பெருமதெரிவுறி
லுண்டாய்த்தோன்றுவ யாவையுநீயே
கண்டனையவைநினைக் காணுவதுதா
னின்வயின்மறைத்தோ யல்லையுன்னை

மாயாய் மன்னினை நீயேவாழி
மன்னியுஞ்சிறுமையிற் கரந்தோயல்லை
பெருமையிற்பெரியோய் பெயர்த்துநீயே
பெருகியுஞ்சேணிடை நின்றோயல்லை
தேர்வோர்க்குத்தம்பினு மணியைநீயே
நண்ணியுமிடையொன்றின் மறைந்தோயல்லை
யிடையிட்டுநின்னை மறைப்பதுமில்லை
மறைப்பினுமதுவு
நீயேயாகி நின்றதோர்நிலையே
அஃதான்று
நினைப்பருங்காட்சி நின்னிலையிதுவே
நினைப்புறுங்காட்சி யென்னிலையதுவே
யினிநனியிரப்பதொன் றுடையமனமருண்டு
புன்மையினினைத்துப் புலன்வழிபடரினு
நின்வயினினைந்தே மாகுதனின்வயி
னினைக்குமாநினைக்கப் பெறுதலனைத்தொன்று
நீயேயருளல் வேண்டும்வேய்முதிர்
கயிலைபுல்லெனவெறி விசும்புவறிதாக
விம்பருய்ய வம்பலம்பொலியத்
திருவளர்தில்லை மூதூ
ரருநடங்குயிற்று மாதிவானவனே. (கஉ)

(இ-ள்.) வேய்முதிர் - மூங்கில்கள் முதிர்ந்த, கயிலை - திருக்கைலை, புல் என - சிறிது பொலிவுநீங்கவும், எறி - பிரகாசிக்கின்ற, விசும்பு - சிதாகாசம், வறிதாக - சிறிது வறிதாகவும், இம்பர் - இவ்வுலகத்தவர், உய்ய - பிழைக்கவும், அம்பலம் - திருச்சிற்றம்பலம், பொலிய - விளக்கத்தினைப் பெறவும், திருவளர் - சிவானுபூதிச் செல்வம் ஓங்குகின்ற, தில்லைமூதூர் - திருத்தில்லையாகிய பழம்பதிக்கண், அருநடம் - காண்டற்கு அரியதிருநடத்தினை, குயிற்றும் - செய்தருளுகின்ற, ஆதிவானவனே - முதற்கடவுளே! தோன்றுழி - தோன்றுமிடத்தின்கண், தோன்றி - பிறந்து, நிலைதப - நிலைகெட கறங்கும் - சுழற்சியடைகின்ற, புற்புதம் - நீர்க்குமிழியையொத்த, செவ்வியின் - தன்மையினையுடைய, மக்கள்யாக்கைக்கு - மானிடதேகத்திற்கு, இளமைநீக்கம் - இளமைநீங்குதல், நினைப்பினும் - நினைப்பினைக்காட்டினும், கடிது - விரைவுடையது, மூப்பின்தொடர்ச்சி - மூப்புத்தொடர்தல், அதனினும் - அந்நினைப்பின் கடுமையினும், கடிது - விரைவுடையதாம், கதுமென-

சரேலென உண்டாகும், மரணம் - இறப்பு, அதனினும்கடிது - அவ்விரண்டினும் விரைவுடையதாகும், நாள் நாள் - பலநாள், பயின்ற - என்னுடன்பழகியிருந்த, உடம்பை - தேகத்தை, வறிதாக்கி - பயனற்றதாக்கி, வாழ்நாள் - எனது ஆயுளை, பருகி - உண்டு, நல்கா - மீண்டுஉதவாத, கூற்றம் - யமனது செய்கையும், இனையதன்மையது - இவ்வகை விரைவான செயலையுடைத்தேயாகும், இதனை - மேற்கூறிய நிலையாமைகளுக்கிடனான தேகத்தை, இது எனதே - இது எனக்கேயுரியது, எனக்கருதி-என்றுஎண்ணி, இதற்குஎன்று-இவ்வுடலை யோம்பற்பொருட்டாக, தொடங்கி - முயன்று, செய்தனசிலவே-செய்தகாரியங்கள்சிலவாம், செய்வனசில - இனிச்செய்யும் காரியங்கள் சிலவாம், செய்யாநிற்பனசில - செய்யாநிற்பனசிலவாம், அவற்றிடை-அவ்வகை செய்யும் முக்கால முயற்சிக்கண், நன்று என்ப சில - நன்மை தருவன என்றுசொல்லப்படுவன சிலவாம், தீது என்பசில - தீமைதருவன என்று சொல்லப்படுவன சிலவாம், ஒன்றினும் - இந்த நலந்தீது என்னும் இரண்டனுள், ஒன்றினும் - ஒருகுணத்தினும், படாதன - உட்படாதன, சிலவே-சிலவுண்டு, என்றஇவை - மேற்சொல்லப்பட்ட காரியங்கள், கணத்திடை-க்ஷணகாலத்தில், நினைந்து - எண்ணி, களிப்பவும் - களிப்பினைப் பெறுபவையும், கலுழ்பவும் - விசனமடைவனவும், கணக்கில் - அளவிடுதற்கரிய, கோடித்தொகுதி - பலகோடியாகும், அவைதாம் - முன்சொன்ன களிப்பும் கலுழ்ச்சியுமுதலிய, ஒன்று ஒன்று - ஒவ்வொன்றாக, உணர்வுழி - தான் நினைக்குமிடத்து, வருமோ-வந்தியையுமோ, அனைத்தும் ஒன்றா - (அன்றி) அனைத்தும் ஒன்றாக, உணர்வுழி - நினைக்குமிடத்து வருமோ - வந்தியையுமோ, என்று - என்று நினைத்து, ஒன்று - சிறிதும், தெளிவுழி - தெளிந்துநோக்குமிடத்து, தேறல் செல்லேம் - துணிவினைப்பெறேம், இதுவே - இது, அளிய-பேதைமைத்தாகிய, மனத்தின்செய்கை-மனத்தினது செயலாம், நீயே-நீயோ, எம்பெரும - எம்பெருமானே, சால அரியை - மிகுதியும் நினைத்தற் கருமையானவன், தெரிவுறில் - தெரியுமிடத்து, உண்டாய் - உள்ளனவாகி, தோன்றுவயாவையும் - காணப்பட்ட பொருள்கள் முழுதும், கண்டனை நீயே - நீயே சிருட்டித்தாய், அவை-அப்பொருள்கள், நினைக்காணா-உன்னைத்தோற்றுவியா அதுதான் - அத்தோற்றந்தான், நின்வயின் - உன்னிடத்து, மறைத்தோய் அல்லை - மறைத்துக்கொண்டாயல்லை, உன்னை மாயாய் - உன்னையுமறைத்துக்கொள்ளாய், மன்னினை - அழியாது நிலைபேறுடையாய், (ஆதலால்) வாழிநீயே - நீயெந்நாளும் வாழ்வாயாக, மன்னியும் - அவ்வாறு நிலைபெற்றும், சிறுமையில் - அணுப்பொருள்களினின்று, கரந்தோய் அல்லை - ஒளித்தாய் அன்று, பெருமையில் - தூலப்பொருள்களினும், பெரியோய் - பெரியோய் ஆவாய், பெயர்த்தும் நீயே - மீண்டும் நீ, பெருகியும் - உயர்ந்தும் சேணிடை - தூரத்து, நின்றோய் அல்லை - நின்றாயுமல்லை, தேர்வோர்க்கு, நின்திருக்குணத்தினை ஆராய்வார்க்கு, தம்மினும் - ஆராயும் அவரைக்காட்டி

னும். அணியை நீயே - அணிமைக்கணுள்ளாய் நீ, நண்ணியும் - அவ்வாறு அணிமைக்கணின்றும், (காணப்படாமையால்) இடை - (நின்றவுனக்கும் ஆராய்வானுக்கும்) இடையில், ஒன்றின் - ஒருபொருட்கண், மறைந்தோய் அல்லை - மறைந்தாய் ஆகாய், இடையிட்டு - தேவரீர்க்கும் அடியேனுக்கும் இடையாக, நின்னை - உன்னை, மறைப்பதும் இல்லை - மறைக்கத்தக்கபொருளும் இல்லை, மறைப்பினும் - அவ்வாறுமறைப்பினும், அதுவும் - அம்மறைபொருளும், நீயே ஆகி - நீதானே ஆகி, நின்றது ஓர் நிலையே - நின்றதாகிய ஒப்பற்றநிலை அதுவாம், அஃதான்று - அதுவன்றி, இதுவே - இப்பொழுது கூறியஇது, நினைப்பரும் - நினைத்தற்கருமையாகிய, காட்சி - தோற்றமுற்ற, நின்நிலை - உனது நிலைமையாம், அதுவே - முன்சொன்ன அது, நினைப்புறும் - நினைக்கத்தகுந்த, காட்சி - தோற்றமுள்ள, என்நிலை - எனது நிலைமையாம், இனி - (ஒழிந்தவைபோக) இனி, நனி இரப்பது - மிகவு தேவரீரிடம் யாசிப்பது, ஒன்று உடையம் - ஒன்றை மனங்கொண்டுள்ளோம், மனம் - மனது, மருண்டு - மயங்கி, புன்மையில் - தீமையானவழிகளை, நினைத்து - எண்ணி, புலன்வழி - ஐம்புலன்களின் வழிப்பட்டு, படரினும் - சென்று இடர்ப்படினும், நின்வயின் - தேவரீரிடத்து, நினைந்தேம் ஆகுதல் - நினைவினைப்பெற்றேம் ஆதலும், நின்வயின் - தேவரீரிடத்து, நினைக்குமாறு - தியானிக்குமுறைப்படி, நினைக்கப்பெறுதல் - நினைக்கப்பெறுதலாகிய, அனைத்து ஒன்றும் - அவ்வளவினதாகிய ஒன்றினையும், நீ அருளல்வேண்டும் - நீ திருவருள்செய்யல்வேண்டும், புரிசடைக்கடவுள் - புரியினையொத்த சடைமுடிகொண்ட நடராசமூர்த்தியே, அருளு அருளு அருளு - திருஅருள் செய்வாயாக, திருஅருள்செய்வாயாக, திரு அருள்செய்வாயாக, வாழி வாழி வாழி - (பல்லாண்டு) வாழ்வாயாக, வாழ்வாயாக, வாழ்வாயாக. (எ - று.)

(குறிப்புரை) இறைவனே, இளமை, மூப்பு, சாக்காடு முதலிய கொண்ட தேகத்தையெனதெனவெண்ணி இதறகென்று முக்காலத்தும் செய்தன, செய்வன, செய்யாநிற்பனவாகிய பலநன்மைகளையுந் தீமைகளையுஞ்செய்து விருப்புவெறுப்பையடைவதற் கெண்ணில்லை. அவை தனித்தனி வருவனவோ ஒருங்குவந்தியைவனவோ அதனையு மறியோம் இவ்வகைத்து பேதைமைத்தாகிய எமது மனச்செயல், இனி உனதுசெயலோ எனின் கூறுதற்கரிது நீயோ அனைத்து மாக்கினவன் எவையு முனைப்படைத்தில எக்காலத்து முள்ளவன், தூலமானவன், சூக்குமமானவன், தூரமானவன், அறிவார்க்கு அணியன், ஆதலால் தேவ உன்னிடத்து வேணடுவது ஒன்றுண்டு அது எனது அறிவு மருண்டு ஐம்புலன்வழி செல்லினும் உன்னை நினைந்ததாகவும் உன்னை நினைக்கப்பெறுதலாகவுமாகிய ஒன்றும், அதனை யருளக்கடவாய், நீ வாழ்வாயாக, என்பதுகருத்து. வாயுநீருடனியையுங் காலத்துண்டாம் தொழிலால் புற்புதம் தோன்றி யவ்வாயுவி னீக்கத்து அழிவதுபோல ஆன்மா, கர்மவசத்தால் பிறப்பினை யடையுங்காலத்துண்டாய் அக்கர்ம நீக்கத்து நீங்குஞ்செய

ற்படுவதாதலால் புற்புத செவ்வியின் மக்கள் யாக்கையென்றார். மக்கள் யாக்கையெனவே ஒருமொழி யொழிந்தன் னினங்கொளற்குரித்தே யென்பதால் வினைய பெண்பால் அஃறிணைமுதலியவுங்கொள்க. வேகமுடைய பொருள்களில் நினைவினும் கடியது வேறொன்று மின்றாதலால் அதனை யுவமைகூறினர். தேகங்கொண்ட ஆன்மாவிற்கு முன் வருவது இளமையும், அதன்பின்னர் மூப்பும்,பின்மரணமுமாதலால் முறைப்படகூறினார். இதுநோக்கியன்றே “இல்லமிளமை யெழில்வனப்பு மீக்கூற்றஞ், செல்வம் வலியென்றிவையெல்லாம் - மெல்ல, நிலையாமைகண்டு நெடியார் துறப்பர்” என்றார் பிறரும் “சென்றன... வந்தது வந்தது கூற்று.” எ - ம். “நெருநலுள னொருவனின்றில்லையென்னும் பெருமையுடைத்திவ்வுலகு.” என்பவாதலின் கதுமென மரணமென்றார். வாழ்நாள், இத்தொடர்மொழி புணர்ச்சிக்கண் “ஐம்மூன்றதாமுடல் வன்மைபின்வந்திடி லாறுடைந்தா, மெய்ம்மாண்பதாநல்வரின் முன்னழிந்து பின்மிக்கணவ்வாம்” என்பதால் வருமொழி நகரப்புணர்ச்சியில் நிலைமொழி யீற்றுழகரம் கெடநகரம் ணகரமாயிற்று. மருஉ வன்று. பருகி, யென்ப துபலக்ஷணம். உயிர்நீங்கிய உடல் அவ்வுயிர் இருக்கையினும் அவ்வுடலையஃறிணையெனப் படுதலானுமெதனினு மிழிந்ததாதலினானும்,பின் ஒன்றிற்கும் பயனிலாது அழிதலானும் உடம்பை வறிதாக்கியென்றார்.

பயின்ற எனும் பெயரெச்சம் உடம்பெனும் எச்சம்கொண்டது. கூற்றந்தான், இறைவனால் கொடுத்த ஆயுளின் முடிவில் எவ்வகைமுயற்சியினுங் கூடாது உயிரைத் தம்வசப்படுத்தலின், நல்காக்கூற்றம் என்றார். இறைவனது திருவருளின்றிக் கூற்றங்குதித்துய்தல் கூடாமையின் அவ்விறைவனது திருவருளை முன்னிட்டுக் காரியத்தைச்செய்தலின் கூற்றம் என்றார். ஈண்டு தன்மை விரைவின் மேற்று. எனது என்றது ஆறாவதன் ஒற்றுமைப்பொருள் என்னெனின் உயிர் நீங்குந்துணையும் வேறுபடாது நின்று நலந்தீங்குகளையநுபவித்தலின் என்க. இதனைத்தனது என்று எண்ணுதலுந் தீதென்பார்கருதியென்றார். இவ்வுடலையோம்பற்பொருட்டும், அதற்கு முக்காலத்தும் இடையூறு வாராமற்காத்தற் பொருட்டுஞ் செய்யுமுயற்சிகளில் பலநலனும் தீதும் வருதலின், “இதற்கென்று தொடங்கி - கலுழ்பவும்என்றார்.” நன்றென்பசில தீதென்பசில ஒன்றினும்படாதன சிலவென்றதில் ஒன்றினும் படாதனசில என்பது கைந்நொடித்தல், அழுக்குருட்டல், மூச்சுவிடல் முதலியவாம். இதனை ” அவைதாம் - மனமொழி மெய்யறிவாகிய “நான்கன் என்னு மிலணக்கொத்துச் சூத்திரவுரையில் வேறு வினையாவது இருவினையினுட்படாது வருவது எனத்தொடங்கிக்கையைநொடித்தான் முதலியபலவுதாரணங்களைக் காட்டிப் பின் எல்லாவினையு மிருவினையி னடங்குமேயன்றி வேறுவினை கூட்டி மூவினையென்று நூல்வழக்கில்லையே யெனின் பட்டினத்துப்பிள்ளையார் வினைகளை வரம்பு செய்யுமிடத்து “ செய்தன... சிலவே. ” எனமூவினைகொண்டார் என இதனையுதாரணமாகக் காட்டித்தாம் கூறிய வேறுவினை

யைச் சித்தாந்தப்படுத்தினர். ஆதலி னிதனை யொன்றினும் படாதவற்றுள் அடக்குக.

ஆன்மாக்கள், சிலர் கூற்றின்படி யொன்றன்று என்பார், கணக்கில்கோடித்தொகுதி யென்றார். இவை வலியமெலிய கன்மங்களாய் இறைவனாணையால் ஆன்மாக்கள் தாங்குமுயற்சியின் அவன்கட்டளைப்படி வருதலின் தெளிவுழித் தேறல் செல்லேம் என்றார். நீ, யெவ்வகையுனைக் காணமுயலினும் உன்வயப்படுத்தன்னை மறந்தவர்க்கே யன்றியேனை யோர்க்குக் காணப்படாயாதலால் சால அரியையென்றார். ஆன்மாக்கள் மலபெத்தராதலின் அவர்களால் காணப்படாய் நீ முக்தனாதலின் எல்லாம் உன்சன்னதி முன்காணப்படும் என்பார் 'உண்டாய்...காணு' என்றார். நீ யெக்காலத்து எம்மிடத்துக் கருணை கொண்டு அளிக்குந் திருக்குறிப்புடையாய் ஆதலின் நீ பல்லாண்டாக வாழக்கடவை யென்பார் மன்னினை வாழியென்றார். தூலப்பொருள்களி னதூலமாயும் சூக்ஷ்மப்பொருள்களில் அதிசூக்ஷ்மமாயும் நிற்பினும் அடியார் நின்னைக்காணவேண்டின் வெளிப்படுவாய் என்பார் கரந்தோயல்லை யென்றார். நீ காண அரியையாயினும் உன்னைத் தேர்வார்க்கு அதிநெருக்கமுடையாயாய் வேண்டுவதருவை யென்பார் தம்மினுமணியை யென்றார். நீ யெங்கு நீக்கமறநிறைந்தோய் என்பார், "மறைந்தோயல்லை...நிலையே" என்றார். நீ யிவ்வகைப் பெருமை வாய்ந்தாய் ஆதலின் உன் திருச்சந்நிதிமுன் அடியேன் வாய்பொத்தி நிற்குஞ்செயலுளேன் அவா அடங்காது உந்த, கேட்கபுகுவேன் என்பார் நனி இரப்ப தொன்றுடையம் என்றார். அடியேன் சார்போதனாதலால் என்னின் முயற்சியால் மனத்தினை உன் வயப்படுத்த முயலினும் அது சார்ந்த தன்வயப்படினும் ஆண்டும் நீயுளாயாதலின் அந்நினைவு உனைநினைத்ததாகக் கொண்டருளுக என்பார் அனைத்தொன்று நீயே யருளல் வேண்டுமென்றார். விராட்புருடனுக்கு இருதய புண்டரிகமான தாதலானும் எல்லாக்கலைகளும் ஈண்டிருந்து எல்லாவுலகத்தும் ஒடுங்கிமீண்டும் பூரணமாய் ஒன்று மிடமாதலினானும் "கயிலைபுல்லென...அம்பலம்பொலிய" என்றார். எல்லாத் தேவர்க்கு முதலோனாதலின் ஆதிவானவன் என்றார்.

வெண்பா.

வானோர்பணிய மணியாசனத்திருக்கு
மானதசெல்வத் தரசன்றே - மானாகம்
பந்திப்பார்நின்றாடும் பைம்பொன்னி னம்பலத்தே
வந்திப்பார் வேண்டாத வாழ்வு. (கங)

(இ-ள்.) மால்நாகம் - மகாநாகமாகிய ஆதிசேடனை, பந்திப்பார் - அரைக்கு கச்சாக அசைப்பவராகிய நடராசமூர்த்தி, நின்று - நிலைபெற்று, ஆடும் - திருநடஞ்செய்தருளும், பைம்பொன்னின் அம்பலத்தே - பசும்பொன்னின் சோதியுள்ள திருச்சிற்றம்பலத்தை, வந்திப்பார் - வணங்குவோர்,

வேண்டாத - விரும்பாத, வாழ்வு-வாழ்க்கையாவது, வானோர்பணிய-தேவர் வணங்க, மணியாசனத்து - மணிகளழுத்திய சிங்காதனததின்மேல், இருக்கும் - வீற்றிருக்கும், ஆறாத - கெடாத, செல்வத்து - செல்வத்தினைத்தரும், அரசு அன்றே - அரசாக்ஷியல்லவா. எ - று.

(குறிப்புரை) எல்லாநாகங்களுக்கும் உயர்ந்தமைபற்றி மாநாகம் என்றார். இறைவனது அங்கப் பிரத்தியங்க சாங்க உபாங்களுள் சாங்கத் தொன்றாகிய நாகம், ருத்தியாதி சுத்தமாயையின் ச்வரூபமாகையால் அதனைத் தனது சத்தியிடத்தொடுக்குபவனாதலின்மாநாகம் பந்திப்பார்என்றார். சிவனடியவர், சிவசின்னங்களாகிய "தேடியமாடுநீடு செல்வமும் தில்லைமன்றுள் ஆடிய பெருமானன்பர்க் காவனவாகும்" என்ற திருவாக்கின்படி விபூதி ருத்ராக்ஷங்களாகிய சிவசின்னங்களை யன்றி யேனைய "உம்பர்வாழுலகம் வேண்டாருலகர சாக்ஷிவேண்டார் பொன்புனை மகளிர்வேண்டார் புண்ணியபாவம்வேண்டார், இன்பொடுதுன்பம்வேண்டா ரிறப்பொடு பிறப்பும்வேண்டார், ஐம்புலப்பகையைவேண்டா ரறிவினையறிந்தமேலோர்"என்ப. பின்னும் "பெண்ணுடையாபரணம் பெய்தயிலம் தாம்பூலம், உண்ணலனை சந்தனத்தோடோரெட்டும் - விண்ணவர்க்கா, யாகாத நஞ்சுண்ட வண்ணலடியார் தமக்கிங், காகாதுசொன்னேமறி." என்பவாதலின் வந்திப்பார் வேண்டாதவாழ்வு என்றார். ஆயின் இவர் வேண்டும்பொருள் என்னெனின் "தீர்த்தம் பிரசாதம் திருநீறஞ்சக்கரமுஞ், சாற்றுமிறைகட் பிறந்ததாழ்வடமும் - போற்றும், குருலிங்க சங்கமமுங்கொள்ளுங் குறிக ளெட்டாங், கருவகலக் கட்டுரைத்தோங் காண்." என்ப. மேற்கூறிய விபூதி முதலிய செல்வங்களேயன்றி மற்றைய வெவ்வகைச் செல்வங்களும் தீமை தருவனவாதலின் ஆறாத செல்வத்தரசு என்றார். அம்பலத்தே என்பது உருபுமயக்கம்,

கட்டளைக் கலித்துறை.

வாழ்வாகவுந்தங்கள் வைப்பாகவு மறையோர்வணங்க
வாள்வாய்திருத்தில்லை யம்பலத்தாயுன்னை யன்றியொன்றைத்
தாழ்வாரறியார் கடனஞ்சையுண் டிலை யாகிலன்றே
மாள்வார்சிலராயன்றோ தெய்வமாக வணங்குவதே. (ந. ச)

(இ-ள்.) மறையோர்-வேதமுதலிய வுணர்ந்த வுண்மை யறிவுடைய மகான்கள், தங்கள்-தமது, வாழ்வு ஆகவும்-வாழ்முதலாகிய பொருளாகவும், வைப்பாகவும் - (பேரின்பமேமுதலிய பரமசுகங்களையுந் தருதற்குக் காரணமாகிய) தனமாகவும், வணங்க - வணங்கும்படி, ஆள்வாய் - அவர்களை யடிமைகொண்டானே, திருத்தில்லை யம்பலத்தாய் - அழகிய திருச்சிற்றம்பலத்தை யிடமாககொண்டானே, உன்னை அன்றி - தேவரீரிருக்கவிட்டு, ஒன்றை - பதித்துவம் இல்லா வேறொருபொருளை, தாழ்வார் - வணங்குவோர், அன்று - தேவாசுரர் கடல் கடைந்த காலத்து, கடல் - அக்கடலில்பிறந்த, நஞ்சை -

வினைத்திணை, உண்டிலையாகில் - உண்டு காக்காவிடின், அன்றே - அக்கணத் திற்றானே, மாள்வார் - உயிர் நீங்குவோராகிய, சிலரை - சிறுதேவரை, தெய் வமாக - பதித்துவ முற்ற பெருந்தேவனாக, வணங்குவது - வணக்கஞ்செய் தலை, அறியார் - தாங்கள் அறிந்திலர். எ - று.

(கு - ரை) உண்மையறிவுணர்ந்த பெரியராகிய நல்லோர், தாம் தம் வாணாள்வறிதாக்காது மறுமைப்பயன் அடைய முயன்று பெற்ற பெருந்தன மும் வாழ்வும், இறைவனது இணையடி யின்பமல்லாது ஏனைய வின்பம் அத் துணையினிமை தருதலின்மையின் வாழ்வெனவும் வைப்பெனவும் கூறினார் இதனாலன்றே வாதவூரடிகளும் "பெற்றதுகொண்டு பிழையேபெருக்கிச்சுரு க்குமன்பின், வெற்றடியேனை விடுதிகண்டாய் விடிலோகெடுவேன், மற்றடி யேன்றன்னைத் தாங்குநரில்லையென் வாழ்முதலே, யுற்றடியேன் மிகத்தேறி நின்றேனெனக்குள்ளவனே," எ - ம், "வலைத்தலைமானன்னநோக்கியர்நோ க்கின்வலையிற்பட்டு, மிலைத்தலைந்தேனை விடுதிகண்டாய் வெண்மதியினொற் றைக், கலைத்தலையாய்கருணாகரனே கயிலாயமென்னு மலைத்தலைவாமலையாண் மணவாளவென்வாழ்முதலே." எ-ம், "அப்பனேயெனக்கமுதனே யானந்தனே யகநெகவள்ளூறுதே, னொப்பனே யுனக்குரியவன்பரி லுரியனுயுனைப் பருக நின்றதோர், துப்பனே சுடர்முடியனே துணையாளனே தொழும்பாளரெய்ப் பினில், வைப்பனேயெனை வைப்பதோசொலாய் நையவையகத் தெங்கண் மன்னனே.' என்றார். வேதத்தின் மெய்ப்பொருளுணர்ந்து இவனே பரமா கக்கொண்டு தஞ்சென அடைதலின் இவர்களைத் பதியாகிய அத்தலைவனும் அம் மெய்யன்பரிடத்துக் கருணைபூண்டு மார்ச்சால நியாயமாகத் தடுத்தாட் கொள்வனாதலின் ஆள்வாய் என்றார். தனது எழுச்சியால் தேவாசுரர் வெருவ எழுந்த அசேதனமாகிய நஞ்சிற்குக் கலங்கி அடைக்கலம் புக அபயந்தந்து சா காமற்காத்த பெருங்குணமணியை விட்டு அன்றேயிறக்குஞ் சிறுதேவர்க்கு இறைமைகூறுஞ் சாத்திரங்களைப் பட்டாங்கென வெண்ணித்துணிவார் அறி வுடையார் எண்ணின் பாற்பட்டாரல்லர் என்பார் அறியார் என்றார்,

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

வணங்குமிடையீர்வறிது வல்லியிடையாண்மேன்
மாரசரமாரிபொழியப் பெறுமனத்தோ
டுணங்கியிவடானுமெலி யப்பெறுமிடர்க்கே
யூதையெரிதூவியுல வப்பெறுமடுத்தே
பிணங்கியரவோடுசடை யாடநடமாடும்
பித்தரெனவும்மிதய மித்தனையுமோரீ
ரணங்குவெறியாடுமெறி யாடுமெதுவிரு
மையலையுமல்லலையு மல்தறியீரே. (௩௫)

(இ - ள்.) வணங்கும்-துவளுகின்ற, இடையீர் - இடையினைக்கொண்ட பெண்களே; வல்லி - பூங்கொடியினைபொத்த, இடையாள்மேல்-இடையினை யுடைய நமது பெண்ணின்மேல், மாரசரமாரி - மன்மதனது அம்பு மழை, பொழியப்பெறும் - பொழியாநிற்கும், (அதனால்) இவள்தானும் - அந்த நிலை மையை யடைந்த இவளும், மனத்தோடு - (புறக்கரணங்களேயன்றி அந்தக் கரணங்களின் முதன்மையாகிய) மனத்தால், உணங்கி - வருந்தி, மெலியப் பெறும் - துன்புறாநின்றாள், இடர்க்கே - இவ்விருவகை யிடரில், ஊதை - வாடையும், எரிதூவி-நெருப்பையொத்த திவலைகளைத்தூவி, உலவப்பெறும்- (தன்னைத்தடுப்பாரின்மையின்) உலாவாநிற்கும், (இவை) அடுத்து-நெருங்கி, அரவோடு - பாம்பினுடன், சடை - சடையானது, பிணங்கி - மாறுபட்டு, ஆட - ஆடாநிற்க, நடமாடும் - திருநடஞ்செய்தருளுகின்ற, பித்தர்தம் - பித் தரது செய்கையென, உம் இதயம் ஓரீர் - உமது மனதில் ஆராய்ந் தறிந்தி லீர், அணங்கு - தெய்வத்தன்மைதங்கிய வேலனது, வெறியாடும் - வெறி யாடுகின்ற, மையலையும் - மயக்கத்தையும், மறியாடும் - மறியென்கிற ஆட் டினையும், அது ஈரும் - அதனைக் கொல்லுகின்ற, அல்லலையும் அல்லது-துன் பத்தினையும் அல்லாமல், அறியீர் - வேறொன்றையும் மருந்தாக அறியீர்கள், இத்தனையும் வறிது-நீங்கள்செய்யும் இச்செய்கைகள் முழுதும் பயனற்றவாம் (ஆதலால் இதனை விலக்கித் தக்கவாறுசெய்க.) எ-று. நீவிரும் அவளைப்போல் இடையைப்பெற்றவர்களாதலின் அவள் படுந்துயர் அறியுந்தகை யுற்றீர் என் பாள் வணங்கு மிடையீர் என்றாள். இது - தலைவியின்காமத்து யரினிலையுண ராத தோழிகளிற்சிலர் அவளுக்கு ஏதோதுயர்நேர்ந்ததென வருந்தி வேலனை நிமித்தங்கேட்டலும் வெறியறுத்தலுஞ் செய்யத் துணிந்தமைகண்டு அவள் கொண்டது இத்தகைய துயர்என அறிவுறுத்தி வெறி விலக்குகிறா ளாதலின் இது வெறிவிலக்கல் என்னுந் துறை. மிக்க நுண்மையாய வருத்தமும் பொறா தாள் என்பார் வல்லியிடையாள்எனவும்,அங்ஙனம்பொறாதாள்என அறிந்தும் இரக்கமிலாது ஓரம்பாயினும் கூரம்பாகச்செலுத்தும் வன்கணன் என்பான் மாரன் என்றார். ம்ருஞ், ப்ராணத்யாகே, எனுந்தாதுவால் விரகங் கொண் டாரைக் கொல்வோன் எனும் பொருட்டு. அவன் விடுக்கும் அம்பு ஒன்றாயி னும் அது பலவாய் வெவ்வேறுசெயல்செய்தலின் சரமாரியென்றார். வெவ் வேறுசெயலாவன காமத்தால் விசாரப்பட ஊறுசெயல் முதலியன. இவளி டத்துப்பட்ட இச்செயலைத் தோழி யெங்ஙன மறிந்தாளெனின் நாற்றத்தானுந் தோற்றத்தானும் ஒழுக்கத்தானும் உண்டியானும் செய்வினை மறையானுஞ் செலவானும் பயில்வானும் அறிதலின் "மனத்தோடு...இடர்க்கே" என்றாள். நாற்றமாவது - ஓதியு நுதலும் பேதைப்பருவத்துத்தகநாறாது விளங்குதல், தோற்றமாவது - நீண்டும் பிறழ்ந்தும் பிள்ளைப்பருவத்து வெள்ளைநோக்கின்றி யுள்ளொன்று கொள்ளநோக்குங் கண்ணுந் தன்னிலை திரிந்துதுணைத்துமெ ல்கிப் பணைத்துக்காட்டுந் தோளும் முலையுமென்றின்னோரன்ன. ஒழுக்கமா

வது - பண்ணை ஆயத்தோடு முற்றிலான் மணற்கொழித்துச் சோறமைத்தல் முதலியன முனிந்தகுறிப்பினளாய் பெண்டன்மைக்குத்தகவொழுகல். உண்டியாவது-பான்முதலியவற்றின் உவப்பின்றி ஒறுத்தல். செய்வினை மறைத்தலாவது-முன்பு போலாது இக்காலத்து நினைவும் செயலும் தலைவனோடுபட்டவளவேயாகலான் அவைபிறர்க்குப் புலனாகாமை மறைத்தல். செலவாவது - வேண்டியவாறு நடவாது சீர்பெற நடந்து ஓரிடத்துச்சேறல். பயில்வாவது-செவிலி முலையிடத்துத் துயில்வேண்டாது பெயர்த்து வேறோரிடத்துட்பயிறல். நான் பண்டு சோலை யிடை யுலாவு காலையில் எனக்குஇதந்தந்த மருத்து நான் என்னுயகனிடைக் காதல்கொண்டமை யறிந்து தீப்பொறிகளை யிடைவிரவி மன்மதன் கணை வருத்தும் வருத்தத்தோடு கூடி வருத்துகின்றதென்பாள், ஊதை யெரி தூவி யுலவப்பெறுமென்றாள். அரவு தான் ஆடும்நடத்தை யிறைவனுட னிருந்து கற்றதாயினும் அவனது சாங்கமாகிய நானும் அதனை யறிவேனாகலின் நீயென்னினும் கற்றாயல்லை யென்பார் பிணங்கியென்றார். அடியவரிடத்து மயல்கொண்டார்காதல்கொண்ட என்மகளிடத்து அஃதிலர் என்பார் பித்தர் என்றார். இதயம் இருதயமென்பதின் மரூஉ. அணங்கெனக் கூறியது. கட்டுவிச்சி யெனப்பொருள் சொற்றலுமாம்.. கட்டுவிச்சியும், வேலனும் தாம்பார்த்தகட்டினானும் கழங்கினானும் தெய்வத்திற்குச்சிறப்புச்செய்து வெறியிடுதல் செய்யாக்கால் இம்மையல் தீராதென்று கூறி யவை முற்றுவித்தும் தீராமை கண்டவின் அணங்கு... அறியீர்' என்றார்.

நேரிசையாசிரியப்பா.

ஈர வேரித் தார்வழங்கு சடிலத்துக்
குதிகொள் கங்கை மதியின்மீ தசைய
வண்டியங்கு வரைப்பி னெண்டோட் செல்வ
வொருபாற் றோடு மொருபாற் குழையு
மிருபாற் பட்ட மேனி யெந்தை
யொல்லொலிப் பழனத் தில்லைமூ தூ
ராடகப் பொதுவி னாடக நவிற்று
மிமையா நாட்டத் தொருபெருங் கடவுள்
வானவர் வணங்குந் தாதை யானை
மழுமழை பொழியும் புதுமந் தாரத்துத்
தேனியங் கொருசிறைக் கானகத் தியற்றிய
தெய்வ மண்டபத் தைவகை யமளிச
சிங்கஞ் சுமப்ப வேறி மங்கைய
ரிமையா நாட்டத் தமையா நோக்கத்
தம்மார்பு பருகச் செம்மாந் திருக்கு

மானுச் செல்வத்து வாழ்வோ ரின்ப
மதுவே யெய்தினு மெய்தாக கதுமெனத்
தெறுசொ லாள ருறுசினந் திருகி
யெற்றிபு மீர்த்துங் குற்றங் கொளீஇ
யீர்ந்தும் போழ்ந்து மெற்றுபு குடைந்தும்
வார்ந்துங் குறைத்து மதரயர்க் கீந்துஞ்
செக்கூற் பெய்துந் தீநீர் வாக்கியும்
புழுக்குடை யழுவத் தழுக்கியல் சேற்றுட்
பன்னெடுங் கால மழுத்தி யின்னு
றையி றண்டத்து மாறாக் கடுந்துயர்
நிரையஞ் சேரினுஞ் சேர்க வுரையிடை
யேனோ ரென்னையா னாதும் விரும்பி
நல்ல னெனினு மென்க வவரே
யல்ல னெனினு மென்க நில்லாத்
திருவொடு திளைத்துப் பெருவளஞ் சிதையா
தின்பத் தழுந்தினு மழுந்துக வல்லாத்
துன்பந் துதையினுந் துதைக முன்பி
னிளமையொடு பழகிக் கழிமூப் புக்குறுக
வென்று மிருக்கினு மிருக்க வன்றி
யின்றே யிறக்கினு மிறக்க வொன்றினும்
வேண்டலு மிலனே வெறுத்தலு மிலனே
யாண்டகைக் குரிசினின் னடியரொடுங் குழீஇத்
தெய்வக் கூத்துநின் செய்ய பாதமு
மடையவு மணுகவும் பெற்ற
கிடையாச் செல்வங் கிடைத்த லானே. ௩௬.

(இ - ள்.) ஈரம் - குளிர்ச்சிதங்கிய. தார் - மலர் மாலை, வேரி - நறுமணத்தினை, வழங்கு - கொடுக்கின்ற, சடிலத்து - திருமுடியாகிய சடையின்கண், குதிகொள் - துள்ளுகின்ற, சங்கை - கங்கையினை, மதியின்மீது - பிறைச்சந்திரனுக்கு மேலாக, அசைய - முடித்த, எண்டோள்செல்வ - அஷ்டபுஜங்களையுடையானே, ஒருபால் - ஒருபாகத்தில், தோடும் - குண்டலமும், ஒருபால் - மற்றொருபுறத்தில், குழையும் - குழையுமாக, இருபாற்பட்ட - இரண்டுபகுதிப்பட்ட, மேனி - திருமேனிகொண்ட, எந்தை - என்தந்தையானவன், வண்டு - வண்டுகளின், ஒல்ஒலி - மிகுந்தஒசை, இயங்கு - தங்குகிற, வரம்பின் - எல்லையினையுடைய, பழனம் - கழனிகள்சூழ்ந்த, தில்லைமூது

ஊர் - திருத்தில்லையாகிய பழைய திருப்பதியின்கண், ஆடகப்பொதுவில் - கனகசபையின்கண், நாடகம் நவிற்றும் - திருநடஞ்செய்தருளும், இமையா நாட்டத்து - இமையாத திருக்கண்களையுடைய, ஒரு பெருங்கடவுள்-ஒப்பற்ற பெருங்கடவுளானவனே, வானவர் - தேவர்கள், வணங்கும்- (தமது இஷ்ட சித்திகளைப் பெறவேண்டி) வணக்கஞ்செய்கின்ற, தாதையானே - தந்தையானவனே, ஆண்தகைக்குரிசில் - ஆண்தன்மையுடனியைந்த பெருமையிற் சிறந்தோனே, நின் அடியரொடு-தேவரீரது திருவடியவர்களுடன், குழுமி-சேர்ந்து, தெய்வக்கூத்தும் - தெய்வத்தன்மைதங்கிய திருநடனத்தையும், நின்செய்யபாதமும் - தேவரீரது தாமரையிதழை யொப்பச்சிவந்த திருவடிகளையும், அடையவும் - பெறவும், அணைகவும் - (அதனைப்பெற்று அதனாலுண்டாகிய இன்பத்தினை) அநுபவிக்கவும், பெற்ற - (அடியேன்) அடைந்த, கிடையாச்செல்வம்-மற்றவர்க்கரிய பெருஞ்செல்வமாகிய (பேறு), கிடைத்தலான் - அடியேனுக்குக் கிடைத்ததனால், புது மந்தாரத்து - புதிதாகிய மந்தார விருக்ஷத்தினது, பொழியும் - சொரிகின்ற, மதுமழை - தேன்மாரியின் தேன் - தேனானது, இயங்கு - பாய்கின்ற, கானகத்து - காட்டில், அங்கு ஒருசிறை - அங்கு ஒருபகுதிக்கண், இயற்றிய - பண்ணப்பட்ட, தெய்வமண்டபத்து-தெய்வத் தன்மைபெற்ற மண்டபத்தில், ஐவகையமளி - பஞ்ச சயனமாகிய படுக்கையில், சிங்கம் சுமப்ப - சிங்கங்கள்தாங்க, ஏறி - அச்சயனத்தேறியிருந்து, மங்கையர் - அவ்வரம்பை மாதர்களுடைய, இமையா - இமைக்காத, நாட்டத்து - கண்களுக்கு, அமையா - நிரம்பாத, நோக்கத்து - அழகினையுடைய, அம்மார்பு - அழகிய கொங்கைகளின் (நலத்தை), பருக - உண்டு, செம்மாந்து-பெருமிதங்கொண்டு, இருக்கும்-களித்திருக்கின்ற, ஆனாச்செல்வத்து - அழியாத செல்வத்தினைப்பெற்ற, வானோர் - தேவர்களின், இன்பமதுவே - சுவர்க்க இன்பமே, எய்தினும் எய்துக - வரினும் வரக்கடவது, (அன்றி) கதுமென - (முன்னறிதலின்றி) திடீரென்று, தெறுசொலாளர், வெடித்தசெற்கனைக் கூறும்யமபடர், உறுசினம் - மிக்ககோபம், திருகி - மேலெழ, எற்றியும் - எறிந்தும், ஈர்த்தும் - இழுத்தும், குற்றம் கொளீஇ - குற்றஞ்சுமத்தி, ஈர்ந்தும் - அரிவாளாலரிந்தும், போழ்ந்தும் - வாளாற்பிளந்தும், எற்றுபு - வீசி, குடைந்தும் - உடலைத்தொளைத்தும், வார்ந்தும் - ஆயுதங்களால் கீறியும், குறைத்தும் - அங்கங்களை யறுத்தும், மதநாய்க்கு - வெறிகொண்ட நாய்களுக்கு, ஈந்தும் - இரையாகத்தந்தும், செக்கு உரற்பெய்தும் - செக்காகிய உரலினிடமிட்டு நசுக்கியும், தீநீர்வாக்கியும் - கொதிக்கும் நீரை மேலேயூற்றி யழுத்தியும், புழு - புழுக்கள், குடை - குடைந்துசெல்லும், அழுவத்து - நரகபூமியில், அழுக்குஇயல் - பலவாகிய மலங்கள்தங்கிய, சேற்று - சேற்றையொத்த அள்ளலில், பல்நெடுங்காலம் - அநேகநாள், அழுத்தி - அழுந்தச்செய்து, இன்னா - துன்பந்தரும், வரையில் - அளவுபடாத, தண்டத்து - தண்டனைகளையுடைய, மாறா - மாறுதலில்லாத, கடுந்துயர் - மிக்கதுன்பம்நி

றைந்த, நிரயம் - நரகவாதனை, சேரினும் - அடையினும், சேர்க - அடை யக்கடவது, உரை இடை - எனது சொற்களால், ஏனோர் - அயலவர், என்னை - அடியேனை, ஆனாது - தீயனென்று (வெறுக்காமல்) விரும்பி - என்னிடம் அன்புளாராய், நல்லன் என்னினும் - இவன் நற்குண நற்செய்கையுடையான் எனனினும், என்க - சொல்லக்கடவர், அவரே - அந்நல்லனென மதித்த அவ ரே, அல்லன் - இவன் நல்லன் அல்லன், எனினும் - எனக்கூறினும், என்க - என் னக்கடவர், நில்லா - ஓரிடத்திலும் நிலைபெறாத, திருவொடு - செல்வத்துடன், திளைத்து - இன்பந்துய்த்து, பெருவளம் - மிக்கவளப்பங்கள், சிதையாது - கெடாமல், இம்பர்த்து - இம்மைச்சுகங்களில், அழுந்தினும் - மூழ்கினும், அழு ந்துக - மூழ்கக்கடவன், அல்லா - இவையொழிந்த, துன்பம் - துக்கத்தில், துதையினும் - அநுபவிக்கினும், துதைக - பொருந்துவேனாக, மூன்பில் - வ லிமையான், இளமையொடு - இளமைப்பருவத்துடன், பழகி - பயின்று, கழிமூப்பு - மிக்ககிழத்தனம், குறுகாது - நெருங்காமல், என்றும் - எக்காலத் தும், இருக்கினும் - இருந்தாலும், இருக்க - இருப்பேனாக, அன்றி - அஃதன் றி, இன்றே - இப்போதே, இறக்கினும் - இறந்தாலும், இறக்க - இறப்பே னாக, ஒன்றிலும் - ஒருபொருட்கண்ணும், வேண்டலும் இலன் - விருப்பமும் கொண்டேனல்லன், வெறுத்தலும் இலன் - வெறுப்புடையேனல்லன், (எ - று.)

தேவதேவ, தேவரீரது அடியவர்களுடன் கூடித் தெய்வக்கூத்தும் செ ய்ய திருவடியும் தெரிசிக்கப்பெற்ற பெருஞ்செல்வமடியேன் பெற்றதனால், வானவர்வாழ்வு எய்தினும் எய்துக, அன்றி நரகயாதனை வரினும்வருக, உலகர் என்னை நல்லனெனினுமென்க, அன்றித்தீயனெனினுமென்க, நலமெய்தினும் எய்துக, தீதெய்தினும் எய்துக, என்று மிளமையொடு மன்னினு மன்னுக, அன்றி இன்றே யிறக்கினுமிறக்க, ஒன்றனும் விருப்பு வெறுப்பினையடையே ன் என்பது கருத்து.

(கு - ரை:) இறைவன் திருமுடிக்கண் அணிந்த மலர்மாலை யேனைய மாலைகளைப்போல் வாடுதலும் மணமின்மையும் போலாது எக்காலும் மணத் துடனியைதல்பற்றி சுரவேரித்தார் எனவும், மதியைக் கண்டகாலத்துப் பொங்குதலுஞ் சுரத்தலும் கொள்ளலியல்பு பற்றியும் அம்மதி அண்மைக்கணி ருத்தல் பற்றியும் குதிகொள் கங்கை, எ - ம், இறைவனுக்கு எண்டிசைகளும் எண்டோளாதலின் எண்டோட்செல்வ எ - ம், இறைவி, தவமேற்கொள்ள அவள்பொருட்டு நீயென்னின் வேறல்லை யெனத்திருவருள் செய்து தன்னு டனியையப்பெற்றதனால் "ஒருபாற்றோடு......மேனியெந்தை" எ-ம், எல்லா வளங்களுங் குறைவின்றி நிறைந்த தென்பார் பழனத்தில்லைமூதூர் என் றார். எக்காலும் ஆன்மாக்களுக்கருள்செய்யும் இமையாக்கருணைக் கண்கொண் டானென்பார் இமையா, எ - ம், எல்லாத்தேவர்களுக்கு முதல்வன் என்பார் பெருங்கடவுள், எ - ம், கூறினார். மந்தாரம், மந்தம் - சூக்ஷ்மமான, ஆரணி -

முட்களைப்பெற்றதாதலால் மந்தாரம் என்பது காரணப்பெயர். அடளி, ஐவகை ; முன்னொருசெய்யுளில் கூறினும். சுவர்க்கத்து அரம்பையர்களுடன் அனுபவிக்குஞ் செல்வம் புண்ணியத்தேய்வில் கேடுறுமாயினும் அச்செல்வம் அழியாது. அதைத்துய்க்கும் ஆன்மா அந்தாபுவனங்களில் வருதலின்றதனை யாணுச்செல்வம் என்றார். கதுமென என்பதுமுதல், வரையில் தண்டமென்றதுகாறும், அடிகள் பலபட அருளிச்செய்தவை பல்வேறு வகைப்பட்ட நரகவிசேடங்களையாம். வண்டு இயங்கு-சங்குகள் உலாவுகின்ற, வளைப்பின் எல்லையினைக்கொண்ட, குதிகொள்-மோதுகின்ற, கங்கை-கங்கையினை, ஈரம்-குளிர்ந்த, தார்-மாலையானது, வேரி-மணத்தினை, வழங்கு-தருகின்ற, சடிலத்து-சடையிலுள்ள, மதியின்மீது-சந்திரனுக்குமேலாக, அசைய-அசையும்படிகொண்ட, எண்டோட்செல்வ-அஷ்டபுஜங்களையுடையானே, இதனை யிவ்வாறு பொருள் கொள்ளின்பொருள் சிறந்திலது. அசைய என்பதின்கண் சொல்லிசை நிறைக்கவந்த அளபெடைக்குறியாகிய இகரம், எழுதுவோர் பிழையான் கெட்டிருக்கலாம். என்னெனின் அசைய எனும் செயவெனெச்சம் பெயர்கொண்டு முடியாமையாலும், நாம் முன் கூறியபடி அதனை யிருந்தவாறு பொருள் கொள்ளின் தூரான்வயமாதலாலும், ஆண்டு சொல்லிசை நிறைக்கவந்த அளபெடையாகக் கொள்ளின் அசைஇய, எனும் எச்சம் எண்டோட் செல்வனெனும் வினைமுதலை யேற்று நிற்றலானும் அதனை சொல்லிசை யளபெடை யெனக்கூறுதலே சிறைப்புடைத்தாம்.

வெண்பா.

ஆனேறே போந்தா லழிவுண்டே யன்புடைய
நானேதான் வாழ்ந்திடினு நன்றன்றே—வானோங்கு
வாமமாண் பொழிற்றில்லை மன்றைப் பொலிவித்த
கோமானை யித்தெருவே கொண்டு. ருஎ.

(இ-ள்.) ஆன் ஏறே - இடபகூட்டங்களிற் சிறந்த இடபமூர்த்தியே, வான்ஓங்கு - சுவர்க்கத்தை யளாவுகின்ற, வாமம் - அழகுபெற்ற, மாண்பொழில் - அழகிய சோலைசூழ்ந்த, தில்லைமன்றை - திருத்தில்லையின் கண்ணுள்ள திருச்சிற்றம்பலத்தினை, பொலிவித்த - விளக்கத்தினைப் பெறச்செய்த, கோமானை - தலைவனாகிய நடராஜமூர்த்தியை, கொண்டு - உனது முதுகிடமாகப் பெற்று, இத்தெருவே - நானிருக்கு மித்தெருவின் வழியாக, போந்தால் - எழுந்தருளினால், அழிவுண்டே - உனக்குக் கேடுண்டாகுமோ, அன்புடைய - (உன்னிடத்தும் உனக்குத்தலைவனாகிய நடராஜ மூர்த்தியிடத்தும்) அன்புள்ள நானேதான் - நான், வாழ்ந்திடினும் - வாழ்ந்தாலும், நன்றன்றே - நலமல்லவா, எ-று.

இது, இறைவனிடத்துக் காதல்கொண்டு அவனது வரவை யெதிர்நோக்கியிருந்த தலைவி, அவனது விடையை நோக்கி நீயுனக்குத் தலைவனாகிய என்

னுயகனைக் கொண்டு இவ்வீதியாய் என்னிடம் வரின் நலமல்லவா என விடையை நோக்கியிரந்தது.

(கு - ரை.) நீதருமஸ்வரூபியும் எல்லா இடபங்களுக்கும் நாயகத்தன்மை வகித்தாய் என்பாள் ஆன் ஏறு எனவும், அங்ஙனம் தலைமைகொண்டு உன்னடித் தொண்டுசெய்வாரை யாளுதல்போல் என்னிடம்வந்து யான் படுந்துயர் போக்கின் நலம் என்பாள் போந்தால், எ - ம், உன்னடித் தொண்டு செய்வார்போல் நானும் உன்னிடத்தும் உன்னுயகனிடத்தும் அன்புளேன் என்பாள் அன்புடைய நான், எ - ம், அங்ஙனம் என்மனப்போக்கின் வகையை தலைவனைக்கொண்டணையின் வாழ்வேன் அன்றிவாழேனுதலின் அஃதறிந்த நீ அவனைத் தருவாயாயின் உயிர் பெறுவேன் என்பாள் வாழ்ந்திடின், எ - ம், நீ இவ்வகை யுதவிசெய்யின் பரமோபகாரமாம் என்பாள் நன்று அன்றே, எ-ம், கூறினுள். இறைவன் எழுந்தருளி யிருத்தலினுனும் ஏனையமன்றங்களி னுயர்வுபெற்றமையானும் மன்றைப்பொலிவித்த என்றார். எல்லாத்தேவர்க்கு முயர்ந்தோ னுதலின் கோமான் என்றார். ஏனைய வீதிகளின் வழிச்செல்லின் அப்பெண்கள் அவன் மாட்டுள்ள காதலால் அவனைவிடாமல் தம்மிடத்துக்கொண்டு புகுவராதலின் அவற்றை யொழித்து நானிருக்குமீண்டு வருக என்பாள் இத்தெருவே யெனவும் கூறினுள். ஏறே என்னுமிடத்தேகாரம் இரங்கற்பொருட்டு. பின்னைய ஏகாரம்வினு. நானேதான் என்பதில் தான் கட்டுரைச்சுவைபட நின்ற உரையசையிடைச்சொல். உம்மை, சிறப்புப் பொருளது.

கட்டளைக்கலித்துறை.

கொண்டல்வண் ணத்தவ னுன்முக னிந்திரன் கோமகுடத்
தண்டர்மிண் டித்தொழு மம்பலக் கூத்தனுக் கன்புசெய்யா
மிண்டர்மிண் டித்திரி வாரெனக் கென்னினி நானவன்றன்
றொண்டர்தொண் டர்க்குத் தொழும்பாய்த் திரியத் தொடங்கினனே.

(இ - ள்.) கொண்டல் - மேகத்தின், வண்ணத்தவன் - நிறத்தினைப்பெற்றதிருமாலும், நான்முகன் - நான்குமுகங்களையுடைய பிரமனும், இந்திரன் - தேவர்களுக்குத்தலைவனுகிய இந்திரனும், கோமகுடத்து - சிறந்தமுடிகளைத் தரிக்கப்பெற்ற, அண்டர் - தேவர்களும், மிண்டி - நெருங்கி, தொழும் - வணங்கும், அம்பலக்கூத்தனுக்கு - திருவம்பலத்தில் நடனஞ்செய்யும் கூத்தப்பிரானிடத்து, அன்புசெய்யா - ஆசைவைக்காத, மிண்டர் - மதங்கொண்டார், மிண்டித்திரிவார் - மதங்கொண்டலைவார், எனக்கு - (அவருடன் தொடர்பில்லாத) எனக்கு, என் - யாதாம், இனி - இனிமேல், நான் - அடியேன், அவன்தன் - அந்நடராசமூர்த்தியின், தொண்டர் - அடியார்களுடைய, தொண்டர்க்கு - அடியவர்களுக்கு, தொழும்பாய் - அடிமைசெய்வோனுய், திரிய - உலாவித்திரிய, தொடங்கினன் - முயலாநின்றேன். (எ - று.)

(கு - ரை.) மேகநிறங்கொண் டோனாயினும் இறைவனிடத்து மிக்க அன்புள்ளோனாதலின் அவனாலுமறியப்படாதவன் என்பார் குணங்களிற்கடைப்பட்ட தாமதத்தினிறத்தினைத் தெரித்த கொண்டல்வண்ணத்தவன் என்றார். பிரமனுக்கு முகங்கள் நான்குளவாயினும் இறைவனது இறைமைக்குணங்களையறிந்து வழிபட்டேத்து வலிமையுடையன் அன்றென்பார் நான்முகன் என்றார். தேவர்களுக்குத் தலைவனாயினும் அவனும் இவனையேத்தி யன்றித் தான்கொண்ட செல்வம் ஓங்காதென்பார் இந்திரன், எ-ம், இத்தேவர்களையன்றி மற்றத்தேவர்களும் பெற்றசெல்வம் இவனது வழிபாட்டானே பெற்றதென்பார் கோமகுடத்தண்டர், எ-ம், இவர்கள் தொழுமிடத்து இறைவனது தரிசனத்தின்பொருட்டு முந்திக்கொள்ளும்பேராவலுடையராய் நெருங்குதலின் மிண்டித்தொழும் என்றார். இதனாலன்றே "வானநாடருமறியொணாத நீ மறையிலீறுமுன்றொடரொணாத நீ, யேனைநாடருந் தெரியொணாத நீயென்னையின்னிதா யாண்டுகொண்டவா, வூனநாடகமாடுவித்தவா வுருகிநானுனைப்பருகவைத்தவா, ஞானநாடகமாடுவித்தவா நையவையகத்துடையவிச்சையே" என்றார். இந்திரன் என்பதற்கு மிக்கசெல்வமுள்ளான் என்பதுபொருள். இத்தேவர்களில் முதன்மையாகிய விதி விஷ்ணுக்களும், இந்திராதி அஷ்டவசுக்களும், பெற்றசெல்வம் இறைவனைப்பூசித்துப் பெற்றதல்லது வேறன்று ஆதலால் எல்லாச்செல்வங் கொடுத்தற்கும் ஆதிபகவன் சிவமூர்த்தியேயென்பது இச்செய்யுளாற்போந்தது. இதனை "வண்டுளருந் தண்டுழாய் மாயோனிறுமாப்பும், புண்டரிகப்போதுறையும் புத்தேளிறுமாப்பும், அண்டர்தொழவாழு முன்னிறுமாப்புமாலால, முண்டவனைப்பூசித்த பேறென்றறிந்திலையால்" என்ற பரஞ்சோதி திருவாக்காலறிக. பின்னும் "சலதலை சூலங்கடுங்கனல்கண்டைகட்டங்கங்கொடி, சிலையிவையேந்திய வெண்டோட்சிவற்கு மனஞ்சொற்செய்கை, நிலைபிழையாது குற்றேவல்செய்தார் குன்றமேருவென்னு, மலைபிழையாரென்பராலறிந்தோர்களிம்மாநிலத்தே." எ-ம், "மாயனன்மாமணிகண்டன் வளர்சடையாற்கடிமை, யாயினதொண்டர் துறக்கம்பெறுவது சொல்லுடைத்தே, காய்சினவானை வளருங்கனகமலையருகே, போயின காக்கையுமன்றேபடைத்தது பொன்னிறமே." என்ற மதுரவாக்காலறிக. இவனையன்றிவேறுதேவர்களைப்பரமெனக்கொண்டு தொழுவார் வறுமைகொண்டு நரகடைவர். இதற்கு "குன்றெடுத்தான் செவிகண்வாய் சிரங்கணெரிந்தலற, வன்றடர்த்தற்றுசச்செற்றவனற்றவர்க்காரமுதா, மன்றிடைத் தோன்றிய நெல்லிக் கனிநிற்ப மானுடர்ப்போய், ஒன்றெடுத்தோதிப் புகுவர்நாகத்துறுகுழியே." எ-ம், "அருக்கியசீரையராயகலேந்தித் தசையெலும்பி, லொடுக்கியமேனியொடேனிரப்பாரொள்ளிரணியனை, நடுக்கியமா நரசிங்கனைச்சிப்புளதாய்நால, விடுக்கியபாதன் றில்லைத்தொழாவிட்ட வேழையரே." எ-ம், "தன்றாடரித்தாரி யாவர்க்கு மீளாவழிதருவான், குன்றாமகிற்றில்லை மூதூர்க்கொடிமேல் விடையுடையோன், மன்றாடவும்பின்னு மற்றவன்பாதம் வணங்கியங்கே, யொன்று

ரிரண்டில் விழுவரந்தோ சிலவூமர்களே.'' எனக்கூறியவற்ருற்காண்க. இப் பிரசங்கத்தினை விரிவஞ்சி யிம்மட்டில் நிறுத்தினேம்.

இரட்டைக்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தொடரநரைத்தங்க முன்புளவாயின
தொழில்கண்மறுத்தொன்று மொன்றியிடாதொரு
சுளிவுதலைக்கொண்டு புன்புலைவாரிக
டுளையொழுகக்கண்டு சிந்தனையோய்வொடு
நடைகெடமுற்கொண்ட பெண்டிர்பொருவொரு
நடலைநமக்கென்று வந்தனபேசிட
நலியிருமற்சஞ்சி யுண்டிவெருவிழு
நரகவுடற்கன்பு கொண்டலைவேனினி
மிடலொடியப்பண் டிலங்கையர்கோனொரு
விரலினழுக்குண்டு பண்பலபாடிய
விரகுசெவிக்கொண்டு முன்புளதாகிய
வெகுளிதவிர்த்தன்று பொன்றியிடாவகை
திடமருள்வைக்குஞ் செழுஞ்சுடரூறிய
தெளியமுதத்தின் கொழுஞ்சுவைநீடிய
தில்லைநகரிற்செம்பொ னம்பலமேவிய
சிவனைநினைக்குந் தவஞ்சதுராவதே. (௩௬)

(இ - ள்.) பண்டு- பூர்வத்தில், இலங்கையர்கோன்- இலங்கைக்கு அதிபதியாகிய இராவணனது, மிடல் - வலிமை, ஒடிய - கெட, ஒருவிரல் - ஒருவிரலினுல், அழுக்குண்டு - ஊன்றுதலைப்பெற்று, பலபண் - பல இசைகளை, பாடிய - யாழ்கொண்டுபாடிய, விரகு-சளிப்பினை, செவிக்கொண்டு-காதாரக் கேட்டு, முன்பு உளதாகிய - அவன்காரணமாக முன்னைபெற்ற, வெகுளி தவிர்த்து - கோபத்தைநீக்கி, அன்று - அக்காலத்தில், பொன்றி இடாவகை - உயிர்நீங்காவண்ணம், திடம் - உறுதியாகிய, அருள்-கருணையினை, வைக்கும்- செய்கின்ற, செழுஞ்சுடர் - வளமாகியசுடரையொத்தவன், ஊறிய-சுரப்பை க்கொண்ட, தெளி - தெளிந்த, அமுதத்தின் - அமுதத்தினுடைய, கொழுஞ்- வளப்பந்தங்கிய, சுவை - இனிமையுருக்கொண்டவன், நீடிய - உயர்ந்த, தில்லைநகரில் - திருத்தில்லைநகரில், செம்பொன் அம்பலம்மேவிய - திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளிய, சிவனைநினைக்கும்-சிவமூர்த்தியைத்தியானிக்கும், தவம்- தவமானது, சதுராவது - (அடியேற்கு) சதுரப்பாடாதலினுல்; முன்பு - வலிமை, உளவாயின - உள்ளவையான, அங்கம் - தேகம், நரைதொடர-நரைதொடராநிற்க, தொழில்கள் - இந்திரியங்களுக்குரிய செயல்கள், மறுத்து - மறு

க்கப்பட்டு, ஒன்றும் ஒன்றியிடாது - சிறிதும் வொற்றுமையில்லாமல், ஒரு சுளிவு - ஒப்பற்றகோபம், தலைக்கொண்டு - முதன்மையாகநிற்க, புல்-அற்பமாகிய, புலை - முடைநாற்றந்தங்கிய, வாரிகள் - ஜலங்களாகிய, சீ ருகுருதி முதலியன, துளையொழுக - தொளைகள்தோறும் ஒழுகாநிற்க, கண்டு-பார்த்து, சிந்தனையோய்வொடு - ஓய்ந்தமனதுடன், நடைகெட - நடைகெடும்படி, முன்கொண்ட - தலைமையாகக்கொண்ட, பெண்டிர் - மனைவி, பொருத - சகிக்காத, ஒருநடலை - ஒருவஞ்சனையாகியகாரியத்தை, நமக்கென்று - நம்பொருட்டாக, வந்தன - வந்தனவாக்கொண்டு, பேசிட - பேசாநிற்க, நலி - வருத்துகின்ற, இருமற்கு - இருமலுக்கு, அஞ்சி - பயந்து, உண்டிவெரு - உணவைவெறுத்து, விழும் - அழிந்துபோகின்ற, நரக உடற்கு - நரகத்திற்குஇடமானதேகத்திற்கு, அன்புகொண்டு - ஆசைகொண்டு, அலைவு - அலைதல், இனி என்-இனி யெதன்பொருட்டு. (எ-று.)

அடியேன், இராவணன் தனதுவலிமையால்செருக்கடைந்து, இறைவன் எழுந்தருளியிருக்கும் திருக்கைலையினை யெடுக்க முயன்று அவனது திருவிரலால் நசுக்குண்டு சாமகீதம் பாட அருள்செய்த நடராஜமூர்த்தியை நினைக்குந்தவத்திற் சதுரப்பாடுடையேன் ஆதலின் ஒன்றுடன் ஒன்று ஒற்றுமையில்லாத கரணங்களைப்பெற்றுப் பிணிமுதலியவற்றால் நலியும் நரக உடற்கு, ஆசைகொண்டு அலைதல் அடையேன் என்பது கருத்து.

(கு-ரை.) முதற்கண் வலிமையோடுகூடிய செயல்களைச்செய்த அங்கம், இளமைநீங்கிப்பாலப்பருவத்துக் கல்வியாதிகற்றலாலும், தாய்தந்தையருக்குப்பயந்து உடலிளைத்து வருந்தியும், பின்குமாரப்பருவத்து அதுநீங்க வளப்பமுதலிய அடைந்து இளமையைவளமைகொண்ட பெண்கள்மாட்டு நீத்து அழகு முதலியபோக்கி மூப்பையெதிர்கொண்டு நரைதிரை முதலியகொண்டு வருந்தலின் முன்புளவாயின அங்கம் பின்னரைத்து நரை கொண்ட தென்பார் "தொட நரைத்தங்க முன்புளவாயின என்றார்." இவ்வாறு மூப்புக்குறுகி இருகாலேயன்றி ஒருகா லதிகங்கொண்டு கூனிக் குந்தி நடக்குங்கால் புலன்களும் கரணங்களுந் தத்தந் தொழில்களை இளமை பால கௌமாரப் பருவங்களில் செய்தாங்குசெய்யாமல், காதுகேளாமல் கண்பஞ்சடைந்து நாவுரிசை நீங்கியும், மெய் தளர்ந்தும், மூக்கு மணமறியாதும் மறுத்தலின் தொழில் சண்மறுத்து எனவும், அம்மூப்பு மேற்கொண்டு ஆட்சிசெய்கையில், ஒன்றறிந்த தொன்றறியாராய் நலத்தினையுந் தீங்கெனமதித்து அதைச்செய்வார் மாட்டு வெறுத்துச் சினங்கொண்டு வருந்துதலின் ஒரு சுளிவு தலைக்கொண்டு எ-ம் மேற்கூறிய புலன்கள் தொழில்கள் மறுக்கவும் வாளாவிராது உடலின்கணுற்ற உதிரம்மாறுதலால் சிலேத்மம்மேலேறித் தேகத்தையாட்சி செய்ய அது அதோமுகப்படாது ஐம்புலன்களாகிய கண்வழி பீழையாகவும், செவிவழி சிறுமல்மாகவும், மூக்கின் வழி நீராகவும், வாய்வழி கோழையாகவும், பரிணமித்து ஒழுகுதலின், புன்புலை வாரிகள் தொளை யொழுகவும், இவற்றைக்கண்ட மனம் கவற்சிகொண்டு அந்தோ அழகுமுதலிய கொண்ட என்

தேகம் இவ்வகையாயிற்று என அவ்வுறுப்புக்களின் சிதைவுகாணுந்தோறும் மறுக்கங்கொள்ளுதலின் சிந்தனையோய்வொடும் எ-ம், தான் தனக்கு உபசாரம் செய்யக்கொண்ட பெண்டிர் நமது கற்பின் வழிநில்லாமல் வெறுப்புற்று இக்கிழம் எக்கால் நீங்கும் என்று வெறுப்புற்று மனஞ் சலித்து வஞ்சனைபேசலின், முற்கொண்ட பெண்டிர் பொரு வொரு நடலை நமக்கென்று வந்தன பேசிட எ-ம், அவ்விருத்தப்பருவத்துள் உதிரக்கேட்டால்உதிரம்நீராகப் பரிணமித்துச் சிரத்தைத்தாக்க அது கண்டத்தைப்பற்ற கோழைகொண்டு விக்கவிருமல் உண்டாதற்பற்றித்தேகபோஷணை காரணமா வுணவினிடத்துவெறுப்புண்டாய் அதை நீக்க முயலுதலின் நலி யிருமற் கஞ்சியுண்டி வெரு, எ-ம், இவ்வாறு துன்புறுவார், இறைவன் ஒருவனுளன் அவனை வழிபட்டுய்ந்து போகவேண்டுமென்னும் எண்ணமில்லாதபாபிகளாதலின், அவர் நரகமுறுதல் திண்ணமாதலின் அவர் கொண்டவுடலை நரகவுடல் எ-ம், அதனை மருந்து முதலிய கொண்டு மீண்டுந் திடம்பெறச் செய்வான் பொருள் முதலிய செலவிட்டுக்காக்க முயலுதலின் அன்பு கொண்டலைவேன் எனவுங் கூறினார். மனமே, இறைவன்தனக்குக் கேடு நினைப்பாரையும், அவர் நினைவு, அவனைநினைத்ததாகக்கொண்டு அவர் வேண்டுவசெய்யும் கருணை நிலையன். என்னெனின் இறைவன், எழுந்தருளியிருக்கும் திருக்கைலையினைச் செருக்கால் தன்து வலிமைகாட்டத்தூக்கிய இராவணனை அவன்செய்த தீங்கு நினையாமல் அவனிடத்துக் கருணை பூண்டு காத்த கண்ணுதன் மூர்த்தியாதலின், இனி நீயும் மூப்பு முதலிய குறுகாதிருக்கவேண்டி யருச்சிக்கின் "வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்" என்று கூறிய திருவாக்கின்படி அருளுவாருதலின் திடமருள்வைக்குஞ் செழுஞ்சுடர் என்றார். இங்ஙனம், என்மனத்து ஒளிருஞ் செழுஞ்சுடரை, அமுதத்திற் கொழுஞ்சுவையை, அம்பலமேவிய சிவனை நினைக்குந் தவமுடையேனுதலின் மேற் கூறியவாறு விழும் நரகவுடற்கஞ்சி அலைதல் இனியேன்? அடியேன் அலையேன் என்பதாம்.

நேரிசையாசிரியப்பா.

சதுர்முகன் தந்தைக்குக் கதிர்விடு கடவு
ளாழி கொடுத்த பேரருள் போற்றி
முயற்சி யொடுபணிந்த வியக்கர் கோனுக்கு
பாநிதி யிரண்டு மாணுப் பெருவளத்
தளகை யொன்று தளர்வின்றி நிறுவிய
செல்வங் கொடுத்த செல்வம் போற்றி
தா ணிழலடைந்த மாணிக் காக
நாண்முறை பிறழாது கோண்முறை வலித்துப்
புதைத்து வருங்கூற்றைப் படிமிசைத் தெறிக்க
வுதைத் துயிரளித்த வுதவி போற்றி

குலைகுலை குலைந்த நிலையாத் தேவர்
படுபே ரவல மிடையின்றி விலக்கிக்
கடல்விட மருந்தின கருணை போற்றி
தவிராச் சீற்றத் தவுணர் மூவெயி
லொல் லனல்கொளுவி யொருநொடி யொடிபட
வில் லொன்றுவளைத்த வீரம் போற்றி
பூமென் கரும்பொடு பொடிபட நிலத்துக்
காமனைப் பார்த்த கண்ணுதல் போற்றி
தெய்வ யாளிகை முயன்று கிழித்தெனக்
கரியொன் றுரித்த பெருவிரல் போற்றி
பண்டு பெரும்போர் பார்த்தனுக் காகக்
கொண்டு நடந்த கோலம் போற்றி
விரற்பத மொன்றில் வெள்ளிமலை யெடுத்த
வரக்கனை நெரித்த வாண்மை போற்றி
விலங்கல் விண்டு விழுந்தெனை முன்னாட்
சலந்தரற் றடிந்த தண்டம் போற்றி
தாதையை யெறிந்த வேதியச் சிறுவற்குப்
பரிகலங் கொடுத்த திருவுளம் போற்றி
நின்முதல் வழிபடத் தன்மகற் றடிந்த
தொண்டர் மனையி லுண்டல் போற்றி
வெண்ணெ யுண்ண வெண்ணுபு வந்து
நந்தா விளக்கை நூந்துபு பெயர்த்த
தாவுபுல் லெலிக்கு மூவுல காளு
நொய்தினி லளித்த கைவளம் போற்றி
பொங்குளை யழல்வாய்ப் புகைவிழி யொருதனிச்
சிங்கங் கொன்ற சேவகம் போற்றி
வரிமிடற் றெறுழ்வலி மணியுரு பருவா
யுரகம் பூண்ட வொப்பனை போற்றி
கங்கையுங் கடுக்கையுங் கலந்துழி யொருபாற்
றிங்கள் சூடிய செஞ்சடை போற்றி
கடவு ளிருவ ரடியு முடியுங்
காண்டல் வேண்டக் கனற்பிழம் பாகி
நீண்டு நின்ற நீளம் போற்றி
யாலம் பில்குநின் சூலம் போற்றி
கூறுதற் கரியநின் னேறு போற்றி

யேசு வெற்பன் மகிழ மகட்கிடப்
பாகங் கொடுத்த பண்பு போற்றி
தில்லைமா நகர் போற்றி தில்லையுட்
செம்பொ னம்பலம் போற்றி யம்பலத்
தாடுநா டகம் போற்றி யென்றுங்
கென்றும் போற்றினு மெனறனக் கிறைவ
வாற்ற லில்லை யாயினும்
போற்றி போற்றிநின் பொலம்பூ வடிக்கே. (௪௦)

(இ-ள்.) சதுர்முகன் - பிரமனுடைய, தந்தைக்கு - தந்தையாகிய விஷ்ணுமூர்த்திக்கு, கதிர்விடு - பிரகாசந் தங்கிய, கடவுள் - தெய்வத்தன்மைதங்கிய, ஆழிகொடுத்த - சக்கரத்தினையருள்செய்த, பேரருள் - பெரிய கருணையுருவானவனே, போற்றி - போற்றி, முயற்சியோடு-தாளாண்மையுடன், பணிந்த - வழிபட்ட, இயக்கர்கோனுக்கு - இயக்கர் தலைவனாகிய குபேரனுக்கு இரண்டு மாநிதியும் - சங்கநிதி பதுமநிதி யென்னும் பெருநிதிகளிரண்டையும், ஆறு - கெடாத, பெருவளத்து - மிக்கவளத்தினையுடைய, அளகையொன்றையும் - அளகாபுரியென்னும் பட்டணம் ஒன்றையும், தளர்வின்றி - குறைவில்லாமல், நிறுவிய செல்வம் - நிலை பெற்ற செல்வத்தினை, கொடுத்த அருள்செய்த, செல்வம் போற்றி - செல்வமாகியவனே போற்றி, தாள் நிழலடைந்த - திருவடி நிழலையடைந்த, மாணிக்காக - பிரமச்சாரியாகிய மார்க்கண்டருக்காக, நாள்முறை பிறழாது - ஆயுளின் முறை தவறாமல், கோள்முறை - கொள்ளும் முறையை, வலித்து - நிச்சயித்து, பதைத்து-பதபதைத்து, வரும்-உயிர்கொள்ளவருகின்ற, கூற்றை - யமனை, படியிசை - பூமியின்மேல், தெறிக்க - துள்ளிவிழும்படி, உதைத்து - காலாலுதைத்து உயிர் அளித்த - (தேவர்வேண்ட) உயிரைக்கொடுத்த, உதவிபோற்றி - உபகார சொரூபியே போற்றி, குலை குலை குலைந்த - மிக்கநடுக்கத்தினையடைந்த, நிலையா - நிலைபேறில்லாத, தேவர்-தேவர்களுடைய, படு - மிகுந்த, பெரு பெரிய, அவலம் துன்பத்தினை, இடையின்றி - இடையீடில்லாமல், விலக்கி தடுத்து, கடல் விடம் - கடலில் தோற்றிய விடத்தினை, அருந்தின - அமுது செய்த, கருணைபோற்றி - கருணை சொரூபனை போற்றி, தவிரா - நீங்காத, சீற்றத்து - கோபத்தினையுடைய, அவுணர் - அசுரர்களுடைய, மூவெயில் - திரிபுரங்களை, ஒல்லென - விரைவாக, கொளுவி - கொளுத்தி, ஒரு நொடி - ஒருநொடியில், பொடிபட - புழுதியாக, வில்லொன்று - ஒப்பற்ற வில்லினை வளைத்த - வளையும்படி செய்த, வீரம்போற்றி - வீரனே போற்றி, பூ - புட்பபாணத்துடன் கூடிய, மென் கரும்பு - மிருதுவாகிய கரும்புவில்லொடு, நிலத்து - பூமியில், பொடிபட - சாம்பலாயழிய, காமனைப்பார்த்த - மன்மதனை விழித்து எரித்த, கண்ணுதல் போற்றி - நெற்றிக்கண்ணுடையானே போற்றி தெய்வயானை - தெய்வத்தன்மையினையுடைய யானையாளியை, கைமுயன்று-

மிக்கமுயற்சிசெய்து, கிழித்தன்ன-கிழித்தாற்போல, கரியொன்று-கஜாசுரன் என்னும் ஒரு யானையின், உரித்த - தோலினையுரித்த, பெருவிறல் போற்றி-மிக்க வலிவுடையானே போற்றி, பண்டு - பூர்வத்தில், பார்த்தனுக்காக - அர்ச்சுனனுக்காக, பெரும்போர்கொண்டு-பெரும்போரைத் தொடக்காகக்கொண்டு, நடந்த-வேடுருக்கொண்டு நடந்த, கோலம் - அழகையுடையானே, போற்றி - போற்றி, வெற்றிமலையெடுத்த - வெற்றிமலையைத்தூக்கிய, அரக்கனை - அரக்கனாகிய இராவணனை, பதம்-திருவடிக்கண் உள்ள, விரல் ஒன்றில் - ஓர் விரலினால், நெரித்த-நசுக்கிய, ஆண்மைபோற்றி - ஆண்மையுடையானேபோற்றி, விலங்கல்-மலையொன்று, விண்டு விழுந்தன்ன-பிளந்து விழுந்தாற்போல, முன்னாள் - பூர்வத்தில், சலந்தரற்றடிந்த-சலந்தரா சுரனைக்கொன்ற, தண்டம்-தண்டச்செயலையுடையானே, போற்றி - போற்றி, தாதையையெறிந்த-தந்தையின் அடியைவீசியெறிந்த, வேதியச்சிறுவற்கு-பார்ப்பனச்சிறுவனாகிய தண்டியடிகளுக்கு, பரிகலங்கொடுத்த - பரிகலம் அருள் செய்த, திருஉளம்போற்றி-திருஉளப்பாங்குளானே போற்றி, நின்முதல்-முதலாகிய உன்னை, வழிபட - வணங்க, தன்மகன்-தன்மகனாகியசீராளதேவனை, தடிந்த - கொன்றுகறியாக்கிய, தொண்டர் மனையில் - சிறுத்தொண்டர் மனையில், உண்டல்போற்றி-விருந்தின் கோலங்கொண்டானே போற்றி, வெண்ணெயுண்ண-விளக்கிலுள்ள வெண்ணெயை யுண்ணும்படி, எண்ணூபு-எண்ணி, வந்து - விளக்கை நெருங்கி, நந்தாவிளக்கை-கெடாதவிளக்கினை, நுந்துபு - தூண்டி, பெயர்த்த-எரியச்செய்த, தாவு - துற்றுகின்ற, புல்லெலிக்கு - அற்பமாகிய வெலிக்கு, ஆள - அரசாட்சி செய்ய, மூவுலகு - மூன்றுலகத்தினையும், நொய்தினிலளித்த - விரைவாக அருளிச்செய்த, கைவளம் போற்றி - வளந்தங்கிய திருக்கரத்தையுடையானே, போற்றி-போற்றி, உளை-பிடரிமயிரினையுடைய, அழல்பொங்கு-கொதிக்கும் நெருப்பினையொத்த, வாய்-வாயினையும், புகை-புகையும், விழி-கண்களையுமுடைய, தனி-ஒப்பற்ற, ஒரு சிங்கம்-ஒருசிங்கவுருக்கொண்ட நரசிங்கமூர்த்தியினை, கொன்ற-கொலைசெய்த, சேவகம்போற்றி - சேவகத்தையுடையானே போற்றி, வரிமிடறு - வரிகள் தங்கிய கண்டத்தையுடைய, எறுழ்வலி-மிக்கவலியினையுடைய, மணிஉகு - மணிகள்சிந்துகின்ற, பகுவாய் - பிளந்த வாயினையுடைய, உரகம் பூண்ட-சர்ப்பங்களை ஆபரணமாகப்பூண்ட, ஒப்பனை போற்றி - அலங்காரமுள்ளானே போற்றி, கங்கையும் - கங்கையும், கடுக்கையும் - கொன்றைமாலையும், கலந்துழி - கலந்தவிடமாகிய, ஒருபால் - ஒருபக்கத்தில், திங்கள் சூடிய - சந்திரனையணிந்த, செஞ்சடை போற்றி - சிவந்த சடாமகுடத்தை யுடையானே போற்றி, கடவுளிருவர் - இரண்டு கடவுளராகிய பிரம விஷ்ணுக்கள், அடியும் முடியும்-திருவடியினையுந் திருமுடியினையும், காண்டல்வேண்ட - காணவிரும்ப, கனற்பிழம்பாகி - சோதியுருவாகி, நீண்டுநின்ற - ஓங்கிநின்ற, நீளம்போற்றி - நெடியோனேபோற்றி, ஆலம்பில்கு - நஞ்சைக்கக்குகின்ற, நின்சூலம் போற்றி-உன்சூலத்திற்கு நமஸ்காரம், கூறுதற்கரிய - துதித்தற் கருமையாகிய, நின் ஏறுபோற்றி - உனது இடபத்திற்கு நமஸ்காரம், ஏகம்-ஒன்றாகிய, வெற்பன் மலையரையன், மகிழும் - மகிழ்ந்தளித்த, மகட்கு - மகளாகிய பார்வதிபிராட்

டியாருக்கு, இடப்பாகங்கொடுத்த - இடதுபாகத்தை யருள்செய்த, பண்பு போற்றி - பெருங்குணத்தை யுடையானேபோற்றி, தில்லைமா நகர்போற்றி-(நீ எழுந்தருளியிருக்கும்) தில்லையாகிய பெரியநகரத்திற்கு நமஸ்காரம், அத் தில்லையுள் - அத்திருத்தில்லைக் கண்ணுள்ள, செம்பொன் அம்பலம் - அழகிய பொன்னம்பலத்திற்குப், போற்றி-போற்றி, அம்பலத்தாடும்-அம்பலத்தில் நடனஞ்செய்கின்ற, நாடகம்போற்றி-நடனத்திற்கு நமஸ்காரம், என்று - என்று கூறி, ஆங்கு - அந்த விடத்தில், என்றும் போற்றினும்-எக்காலத்தினுந் துதிக்கினும், இறைவ-தலைவனே, என்றனக்கு ஆற்றலில்லையாயினும் - எனக்குவலியின்றாயினும், நின் - தேவரீருடைய, புலன் - அழகிய, பூவடிக்கு - பூவார்கழலுக்கு, போற்றிபோற்றி - போற்றுதல் போற்றுதல் (எ - று.)

(கு-ரை) உலகெலாம்படைக்கும் ஆற்றலுடையா னென்பார் சதுர்முகனெனவும், அப்படைத்தானையாக்கும் பேராற்றலுடையா னென்பார்தந்தை எனவும்,சலந்தரன்றன் உடல்தடிந்த தெய்வத்தன்மையுடைத் தென்பார் கடவுளாழி எனவும், அத்தகையாழியை திருமால் வேண்ட அருளினனென்பார் அருள்போற்றி என்றார். இயக்கர் கோனாகிய குபேரன்வேண்ட சங்கநிதி பதுமநிதி இரண்டும் மிக்க வளங்கொண்ட அளகைநகரமும் ஆனாத செல்வமும் அருளிய பெருந்திருவாளனென்பார்செல்வம்போற்றி எ-ம், தன்னடியடைந் தமார்க்கண்டேயர்பொருட்டுக் கூற்றுதைத்த அருளுடையானென்பார் உதவிபோற்றி எ-ம், நடுங்கிய தேவர் இடுக்கண்டீர்க்க விடமுண்ட அருளுடையானென்பார் கருணைபோற்றி எ-ம்,திரிபுரம் பொடிபடமேருவைவளைத்தவண்மையுடையானென்பார் வீரம்போற்றி எ-ம், செருக்கொண்டு தன்னையேற்ற காமனையெரித்த நெற்றிக்கண்ணனென்பார் கண்ணுதல்போற்றி எ-ம், தேவர்க்கு இடர்விளைத்த கயமுகாசுரனென்னும் யானையையுரித்த மகாவீர சூரனென்பார் பெருவிரல்போற்றி எ-ம், அருச்சுனன்பொருட்டுவேடுருக்கொண்டுபடிமிசைநடந்தபடிவன் என்பார் கோலம்போற்றி எ-ம், வெற்றிமலையெடுக்கமுயன்ற வீரனாகிய இராவணனை விரலொன்றாலழுத்திய வெற்றியுடையானென்பார் ஆண்மைபோற்றி எ-ம், அகங்காரங்கொண்டு திருக் கையிலைநோக்கித் தம்மீது சமர் புரிவான் எழுந்த சலந்தராசுரனைத் தாழ்விரலொன்றால் விளைத்தஆழியால் தண்டித்தோனென்பார் தண்டம்போற்றி எ - ம், தந்தை தாளெறிந்து பிறவித்தாளெறிந்த தண்டிக் கருள்செய்தானென்பார் திருவுளம்போற்றி எ - ம், தம்பொருட்டுத் தந் திருக்குமரரைத் தடிந்த சிறுத்தொண்டர் மனையிலுண்டு அருள்புரிந்தா னென்பார் உண்டல்போற்றி எ-ம், எண்ணாது எண்ணெ யுண்ணவந்த எலியுந்திய விளக்கின் பொருட்டு அருள்புரிந்து மகாபலியாகப் பிறக்க அருள்செய்தா னென்பார் கைவளம் போற்றி எ-ம், இரணியனைக்கொன்ற நரசிங்கத்தைச் செருக்கடக்கிய ஆற்றலுடையானென்பார் சேவகம் போற்றி எ-ம், பகைவிரவிய பாம்பை அணியாக்கொண்டா னென்பார் ஒப்பனைபோற்றி எ-ம்,தன்னையடைந்தகங்கையையும் சந்திரனையும்,முடிக்கு அணியாயணிந்தோ னென்பார் செஞ்சடைபோற்றி எ-ம்,படைக்கும்காக்கும் ஆற்றலுடையார் காணக்காணாத்தாணுருக்கொண்

டோனென்பார்நீளம்போற்றி எ-ம், ஞானேச்சாக்கிரியை ஆகியமூன்றினையும் ஓராயுதமாகக்கொண்டோனென்பார் சூலம்போற்றி எ-ம் கூறினர். எல்லாஞானங்களுக்கும் பிறப்பிடமாகிய இறைவனிடத்திற்பெற்ற ஞானமுடையவனுதலின் கூறுதற்கரிய நின்னேறு எ-ம், அம்மை தவஞ்செய்து இடப்பாகம் வேண்ட அருள்புரிந்தோனென்பார் பண்புபோற்றி எ-ம், இத்தன்மை யுடையானைத்தலைவனுகக்கொண்டது தில்லையென்பார் நகர்போற்றி எ-ம்,அத்தில்லைத்தலைவனைத்தியானித்தார் அடைவது அம்பலமாதலின் அம்பலம் போற்றி எ-ம் அவ்வம்பலங்கடந்தார் நீக்கமறுது அனுபவிக்கும் ஆனந்தம் ஞானநாடகமாதலின் நாடகம் போற்றி எ-ம் கூறினர். தேவர் இருடியர்க்கே தேவரீரைப்போற்றும் வழியிலாதபோது நாயேன் தேவரீரைத்துதிக்கும் வலியிலனென்பார் ஆற்றலில்லை எ-ம், அங்ஙனம் ஆற்றலிலனுயினும் உன்னடியைப் போற்றுதொழியேனென்பார் போற்றி போற்றி நின் பொலன்பூவடிக்கே என்றார்.

இந்நேரிசை யாசிரியப்பா நிக்ரகாநுக்கிரகமாய் இறைவனது கோப்பிரசாதத்தை உணர்த்திநின்றது. அடிகள் இதுகாறும் தமதுவேண்டுகோள் கூறி இறுதிக்கண் இன்னுர்க்கு நிக்ராஹா அநுக்கிரகம் செய்தாயாதலின் அடியேற்கும் அவ்வகை அருளுதியெனவேண்டிக்கொண்டதுமாம். இந்நூல் அந்தாதித்தொடையாய் வெண்பாமுன்னிட்டு ஆசிரியம் இறுதியாக முடிவுபெற்றது.

திருச்சிற்றம்பலம்.

கோயினான்மணிமாலை

முற்றுப்பெற்றது.



கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாவது

திருக்கழுமலமும்மணிக்கோவை

காண்டிகையுரை.

இணைக்குறளாசிரியப்பா.

திருவளர்பவளப் பெருவரைமணந்த
மரகதவல்லி போலொருகூற்றின்
இமயச்செல்வி தரிபாதுவிளங்கப்
பாய்திரைப்பரவை மீமிசை முகிழ்த்த
அலைகதிர்ப்பரிதி யாயிரந்தொகுத்த
வரன்முறைதிரியாது மலர்மிசையிருந்தெனக்
கதிர்விடுநின்முகங் காண்டொறுங்காண்டொறும்
முதிராவிளமுலை முற்றாக்கொழுந்தின்
திருமுகத்தாமரைச் செவ்வியின்மலரநின்
தையல்வாணுதற் றெய்வச்சிறுபிறை
இளநிலாக்காண்டொறு மொளியொடும் புணர்ந்தநின்
செவ்வாய்க்குமுதஞ் செவ்விசெய்யநின்
செங்கைக்கமல மங்கைவனமுலை
அமிர்தகலச மமைவினேந்த
மலைமகடனது நயனக்குவளைநின்
பொலிவினெடுமலர மறையோர்கழுமல
நெறிநின்றுபொலிய நாகர்நாடு
மீமிசைமிதந்து மீமிசையுலகம்
கீழ்முதற்றாழ்ந்து
ஒன்றாவந்த குன்றாவள்ளத்
துலகமூன்றுக்குங் களைகணாகி
முதலில்கால மினிதுவீற்றிருந்துழித்
தாதையொடுவந்த வேதியச்சிறுவன்
தளர்நடைப்பருவத்து வளர்பசிவருத்த
அன்னையோவென் றழைப்பமுன்னின்று

ஞானபோனகத்தரு ளட்டிக்குழைத்த
ஆனாத்திரளை யவன்வயினருள
அந்தணன் முனிந்து தந்தாரியாரென
அவனைக்காட்டுவ னப்பவானார்
தோடுடைய செவியனென்றும்
பீடுடையபெம்மானென்றும்
கையிற் சுட்டிக்காட்ட
ஐயநீவெளிப்பட் டருளினையாங்கே (௧)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருக்கழுமல மும்மணிக்கோவை என்னுந் தொடர், ஐந்துசொல் நான்கு சந்தியாய் முன்னது திருவினையுடைய எனஇரண்டாவதனுருபும் பொருளுமுடன் றொக்கதொகையாய்க் கழுமலமெனுஞ் சொல்லுடனும், கழுமலமென்பது மூன்று எனும் வரையரைப் பண்புப்பெயருடன் நான்காவதன் தொகையாகவும், மற்றதாகிய மூன்று எனுஞ்சொல்லின் முதனிலை மணியுடன் பண்புத்தொகையாகப்புணர்ந்தும், அம்மணியென்பது கோவையுடன் மூன்றாவதன்றொகையாகப்புணர்ந்து திருவினையுடைய கழுமலத்திற்குக்கூறிய மூன்றாகிய மணிகளாகிய கோவை என ஒருசொல்லின்றன்மைத்தாய் நூலை யுணர்த்தி நின்றது. கழுமலத்திற்குத்திருவாவது எல்லாத்திருவிற்கு நிலைக்களமான இறைவனெழுந்தருளியிருத்தலாம். கழுமலமென்பது சீர்காழியின் பன்னிரு திருநாமங்களில் ஒன்று. இதனைக்கழுமலமென என் சொல்லியவாறோ எனின், உரோமசனெனும் வேதியன்பல சிவத்தலங்களையும் தீர்த்தங்களையும் பணிந்தாடிவரவும் பாசவீட்டை யடையானாய்க்கவலையுற்று இத்தலமடைகையில் அவனது பசுபோத நீங்கிச்சிவபோதமானமையின் களித்துப் பிரமதீர்த்தத்துப்படிந்து இறைவனைத்தரிசித்து ஆநந்தமடைந்ததலமாதலின் கழுமலம்எனப்பட்டது. "ஆண்டகவல் முன்முறையே வெண்பாகலித் துறையவந்தாதி, மும்மணிக்கோவைக்கு முதல்." என்பதனால் அகவல், வெண்பா, கலித்துறைகளால் முறையே செய்யுளியற்றப்பட்டு அந்தாதித் தொடையாய் நின்றமையால் மும்மணிக்கோவை யெனப்பட்டது மற்றையிலக்கணங்களைக் கோயினான்மணிமாலைக்குக் கூறியாங்குக்கொள்க. சீர்காழியின் பன்னிரு திருநாமங்களாவன.

"பிரமனூர் வேணுபுரம் புகலிவெங் குருப்பெருநீர்த்தோணி
புரமன்னுபூந்தராய் பொன்னஞ்சிரபுரம் புறவஞ்சண்பை
யரன்மன்னுதண்காழி கொச்சைவய மூள்ளிட்டங் காதியாய
பிரமனூர்பன்னிரண்டாய்நின்ற திருக்கழுமல நாம்பரவுமூரே."

எனும் பிள்ளையார் வாக்கானும் "பிரமபுரம் வேணுபுரம் புகலிபெருவெங்குருநீர்ப், பொருவிறிருத்தோணிபுரம் பூந்தராய்சிரபுரமுன், வருபுறவஞ்சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்பரவு திருக்கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்" எனும் சேக்கிழார் வாக்கானுமறிக.

(இ-ள்.) திருவளர் - அழகுவளர்கின்ற, பவளப்பெருவரை - பவளமாகிய பெரியமலையை, மணந்த - சேர்ந்த, மரகதவல்லிபோல் - பச்சைக்கொடிபோல், ஒரு கூற்றின் - ஒருபாகத்தில், இமயச்செல்வி - பருவத இராஜபுத்திரி, பிரியாது - நீங்காமல், விளங்க - பிரகாசிக்க, பாய்திரை - துள்ளுகின்ற அலைகளையுடைய, பரவைமிசை - கடலினிடத்து, முகிழ்த்த - அரும்பிய, தொகுத்த - கூட்டமான, அலை- அலைக்கும், கதிர் - கிரணங்களையுடைய, பரிதியாயிரம் - அநேக ஆயிரம் சூரியர்கள், வரன்முறை - வரலாற்றுமுறைமையினின்றும், திரியாது - மாறுபடாமல், மலர்மிசை - தாமரைமலரின்மேல், இருந்தென - இருந்தாற்போல, கதிர்விடு - ஒளிசெய்கின்ற, நின்முகம் - தேவரீருடைய திருமுகத்தை, காண்டொறும் காண்டொறும் - பலகால்பார்க்குந்தோறும், முதிரா - முதிர்ச்சியைப்பெறாத, இளமுலை - இளமுலைகளையுடைய முற்று - முதிராத, கொழுந்தின் - கொழுந்தினையொத்த பிராட்டியின், திருமுகத்தாமரை - அழகியமுகமாகிய தாமரை, செவ்வியின் மலர - அழகுடன் விகசிக்க, நின்னையல்-உமது தேவியாரது, வாள்நுதல் தெய்வச்சிறுபிறை, ஒளிபெற்ற நெற்றியாகிய தெய்வத்தன்மைதங்கிய இளஞ்சந்திரனது, இளநிலா - சிறுநிலவினை, காண்டொறும்-காணுந்தோறும், ஒளியொடும்புணர்ந்த - பிரகாசத்துடனியைந்த, நின்செவ்வாய்க்குமுதம் - தேவரீருடைய சிவந்தவாயாகிய குமுதம், செவ்விசெய்ய - அழகுசெய்யாநிற்க, நின் செங்கைக்கமலம்- தேவரீருடைய சிவந்த கையாகியதாமரைகள், மங்கை - பிராட்டியினுடைய, வனமுலை - அழகிய முலையாகிய, அமிர்தகலசம் - அமிர்தகுடத்தை, அமைவின் ஏந்த - பொருந்தும்படி ஏந்தாநிற்க, மலைமகள் தனது - பார்வதியாருடைய, நயனக்குவளை - நேத்திரங்களாகியகுவளைகள், நின்பொலிவினொடு - நின் அழகுடன், மலர - விளங்காநிற்க, மறையோர் - தில்லை மூவாயிரவர்கள் நெருங்கிய, கழுமலம் - சீர்காழியானது, நெறிநின்று - ஒழுக்கத்துடன் நின்று பொலிய - பிரகாசிக்கவும், நாகர்நாடு - பாதாளவுலகம், மீமிசைமிதந்து -மேலே மிதந்து, மீமிசைஉலகம் - தேவர்உலகம், கீழ்முதற்றாழ்ந்து - பாதாள அளவு தாழ்ந்து, ஒன்றாகவந்த-ஒருமித்துவந்த, குன்றாவெள்ளத்து - குறையாதவெள்ளத்தினிடத்து, உலகம்மூன்றுக்கும் - மூவுலகங்களுக்கும், களைகணாகி பற்றுக்கோடாகி, முதலில் காலம் - அநாதியில், இனிது - க்ஷேமமாக, வீற்றிருந்துழி - எழுந்தருளியிருக்கும் அத்திருப்பதியில், தாதையொடு வந்த - தந்தையாருடன் வந்த, வேதியச்சிறுவன் - பார்ப்பனச்சிறுவன், தளர்நடைபருவத்து - தளர்ந்த நடைகற்கும்பருவத்தில், வளர்பசிவருத்த - ஓங்கும்பசியானது வருத்தாநிற்க, ஓ அன்னையென்று - தாயே ஓ என்று, அழைப்ப-அழைக்க, முன்னின்று - எதிரில் தரிசனம் தந்து, ஞானபோனகத்து - ஞானமரு

கிய உணவின்கண், அருள் - தமது காருண்யசத்தியை, அட்டி - பொருத்தி, குழைத்த - சேர்த்த, ஆரத்திரளை - கெடாத அமுதத்திரட்சியை, அவன் வயின் அருள - அப்பிள்ளைக்குக்கொடுக்க, அந்தணன் முனிந்து - சிவபாத இருதயர் என்னும் வேதியர் கோபித்து, தந்தார் யாரென - இவ்வுணவு உனக்குக் கொடுத்தவர் யாரென்று வினவ, அப்பா - அப்பனே, அவனைக்காட்டுவன்-அருளினனைகண் கூடாகக்காட்டுவேன் (என்று) வான்ஆ -ஆகாசவீதியிற்றங்கிய, தோடுஉடைய - குண்டலங்களை அணிந்த, செவியன் என்றும் - திருச்செவிகளையுடையானென்றும், பீடுடைய பெம்மானென்றும் - பெருமையுடைய பெருமானென்றும், கையிற் சுட்டிக்காட்ட - கையினால் குறித்துக்காட்ட, ஐய - ஐயனே, ஆங்கு - அவ்விடத்தில், நீ வெளிப்பட்டு நீ பிரத்தியட்சமாய், அருளினை - கருணைசெய்தாய் (என்றவாறு.):

(ரு-ரை.) எல்லாச்செல்வங்களுக்கும் நிலைக்களமாய் அவற்றை வேண்டுவார் மனப்பெருக்கினளவு வரையாது கொடுக்கும் வள்ளலாதலின் ஈஸ்வரன் எனுந்திருநாமத்திற் கேற்பதிருவளர் எனவும், இறைவனுக்குத்திருமேனி செவ்வண்ணமாகிய பொன்வண்ணமாதலின்பவளப் பெருவரை, எ-ம், இதுபற்றியன்றேயம்மையாரும், "ஆளானேமெல்லகுறிபமுறையிட்டாற், கேளாதொழிவதென்கொலோகோளாமை நீளாகஞ், செம்மையானீத்திருமிடறு மற்றொன்றும், எம்மையாட்கொண்ட இறைக்கு." என்றதும் இவனது திருத்தோளினழகொத்ததோள் வேறின்மையின் பெருவரை எ-ம், அத்தோள்தானே யணையாது தன்னைக்கண்டார் விருப்புறச்செய்தலின் மணந்த எ-ம். இறைவிநிறத்தால் பச்சைக்கொடி யொத்தலின் மரகதவல்லி எ-ம். கூறினார். இதனால் இறைவனை விட்டுத்தாதான்மியமாய் நீங்காது செம்மையும் பசுமையுங்கலந்த இந்திரதனுவையொத்த சிவசத்தி களினிணக்கம்கூறப்பட்டது. இது வண்ணவுவமை என்னையெனின், தன்னைக்கட்புலனானோர்க்குப்பவளத்தின்செம்மையினையும் மரகதத்தின் பசுமையினையுங் கொண்டுவிளங்கி நிற்றலின் என்க. பிரவாளம் என்னும் வடமொழி பவளமென நின்றது, பொருள்கொடியுருவாயிருக்கையில் பிரக்ருஷ்டமாய் சலிப்பது என்பது. வல்லி பற்றுக்கோட்டினைச் சுற்றிக்கொண்டிருப்பதென்பது. தக்ஷனிடத்துத் தாக்ஷாயணியாகப்பிறந்த பிறவி நீங்க இமயத்துச்செல்வத்துடன் தோன்றியவளாதலின் இமயச்செல்வி என்றார். பாய்திரைப்பரவை மீமிசையுதயஞ் செய்த பரிதியாயிரமிருந்ததை யொத்த நின்றிருமுகமென்றார். இதுதொழிலுவமம் பற்றியதொடர். என்னெனின் அடியவர்களின் அஞ்ஞானமென்னுங்கருங்கடலினிடத்து மாயையாகிய இருளைப்போக்கியெழும் ஞானசூரியனெனும் பொருள் கொளக்கிடத்திலினன் என்க. பரிதி, பரிதோத்தாதிதிபரிதி என்பதால்கிரணத்தால் சூழ்ந்திருப்பதென்பது பொருள். எல்லா அண்டங்களையும் பெருதுபெற்ற எமது அம்மையாகிய பிராட்டியார் பஞ்சகிர்த்தியத்தின் பொருட்டு இறைவனைப்பிரியாது இருத்தல் வேண்டுதலினிறைவனைப்பிரியாது அவனது திருமுகச்செவ்வியைப் பன்முறைக்காண்டொறுமெழும் பேரானந்த மேலீட்டைக்காண்டொறும் காண்டொறும் முகத்தாமரைச் செவ்வியின் மலர் என்றார்.

தையல் என்பது அழகு. ஆகு பெயராய்ப்பேரழகுடைய இறைவியையுணர்த்தி நின்றது. தெய்வச்சிறு பிறையென்றதினால் உலகர் பொருட்டுசயமாம் தேய்தலும் வளர்தலுங்கொண்ட பிறைபோலாது எக்காலத்துந் தண்ணிய இளநிலவைக்காலும் நுதலென்பது பெறப்பட்டது. இதனைக்கண்டோரும் இறைவனது செவ்வாய்க்குமுதமலர்ந்து அழகு செய்தலின் செவ்வி செய்ய என்றார். இதுவும் வண்ணவுவமை. இதனுள் முதற்கண் இறைவனைச்சூரியனாகவுவமை கூறி அச்சூரியனைக்கண்ட இறைவியின் முகத்தாமரை மலர எனவும், ஈண்டு இறைவியின் திருநுதலை யிளம்பிறையாகக்கூறி இறைவனது செவ்வாய்க்குமுதம் மலர என்றதினானே இறைவனையும் இறைவியையும் சூர்யசந்திரர்களாகக்கூறி அவரது நிக்ரக அநுக்ரகசக்திகளைக்குறிப்பாகத் தெரிவித்ததாம். பிறை, இது திங்கள்தோறும் பிறத்தலுடையதென்றும் பொருட்டதாகிய தொழிலடியாகப் பிறந்தபெயர், இறைவி இறைவனுக்குச்சுவைப் பொருட்டதாம் அமுதும் இறைவன் அவ்வமுதச் சுவையுமாதலினான் ஈண்டு அமுதமும் அதின் சுவையும் என இறைவியைக் கூறியது இறைவனும் இறைவியும் பொருட்டன்மையால் தாதான்மியமாய் நின்று உலகத்தவர்க்குஅருள் செய்யும்பொருட்டுச்சிவமும் சத்தியுமாகிய சகளவுருக்கொண்டு தமது ஒற்றுமை தெரிவிக்க ஒரு பீடத்திருந்துஇறைவியின்திருமுலையினைத் தொடுதலின் அமிர்த கலசம் அமைவினேந்த என்றார். இதனைத்திருக்கோவையார், இயற்கைப்புணர்ச்சியில் தெய்வப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன் புணர்ச்சியின்பத்தியல்பு கூறுந்துறையாகிய கலவியுரைத்தல் துறையில் "சொற்பாலமுதிவள் யான் சுவையென்னத்துணிந் திங்ஙனே, நற்பாலவினைத் தெய்வந்தந்தின்று நானிவளாம்பகுதிப், பொற்பாரறிவார் புலியூர்ப் புனிதன் பொதியில்வெற்பிற் கற்பாவியவரைவாய்க் கடிதோட்டகளவகத்தே." என்ற செய்யுளுக்கு பேராசிரியர் கூறிய உரையானறிக. இறைவி இறைவனை நோக்காது தன்னிச்சையினிருக்கின் பஞ்சகிர்த்தியமும் நடவாவாதலினான் மலைமகள் தனது நயனக்குவளை நின் பொலிவினொடு மலர என்றார், இதனைச்சிவமெனும் பொருளுமாதி சத்தியொடு சேரினெப்பொருளுநம் வல்லதா, மிவள்பிரிந்திடினியங்குதற்குமரிதரிதெனுமறையிசைக்கு மானவபெரும் புவனமெவ்வகைத் தொழினடத்தி யாவரும்வழுத்துதா ளவனியின் கணொருதவமிலார்பணிபலாவதோ பரவலாவதோ" எனப்பிறர்கூறியதானும் அறிக. பிரணவத்திற்குப் பொருளுணராத பிரமனைச் சிறையிடைப்படுத்த வேதமூர்த்தியாகிய கந்தமூர்த்தியே கவுணியர் குலத்து அத்திருப்பதிக்கண் திரு அவதாரஞ்செய்தலின்மறையோர் கழுமலமென்றார். பிரளயமொன்றில் உலகமாயையிலொடுங்கி மகா வெள்ளங்கொள்ள இறைவன் பிரணவமே தோணியாக்கொண்டு வீற்றிருந்தாராதலின் நாகர் நாடு...இனிது வீற்றிருந்தாரென்றார். தாதையொடுவந்த வேதியச்சிறுவன், சிவபாதஇருதயருடன்போந்த கௌணியர்குலக்கொழுந்தாகிய திருஞானசம்பந்தப்பிள்ளையார். சிறுவன் என்றார், இளமை நீங்காது பேரறிவு கொண்டு விளங்கினமை தோன்ற நடைநிரம்பாப் பருவமென்பார், தளர்நடைப்பருவமென்றார். எல்லாச்சுகங்களையும்போக்கத்தக்கவலியுடைத் தென்பார் வளர்பசிவருத்த எனவும், அதனால் அப்பசியிற் காலமறிந்தமுதளிப்பவர்

தாயராதலின் தந்தையைக் கூறாது அன்றோயோ, எ-ம், அங்ஙனம் பிள்ளைய ழைப்பப்பொருது கன்றை நினைத்த கறவையைப்போல் கோயிலினின்று வெளிப்பட்டாள் என்பார் முன்னின்று எ-ம். பசிதணிப்பதமையாதென திருவருளையுங் கலந்தூட்டினுள் என்பார் ஞானபோனகத்தருளட்டிக் குழைத்த ஆணுத்திரளை யெனவும் கூறினர், இங்ஙனம் இறைவி பிள்ளையாருக்கு ஞானபோனகமருளி ஆகாயத்திடை இறைவரைக்கூடச் சிவபாத இருதயர் தமது அகமருடஸ்நான முடிவில் பிள்ளையாரை நோக்கஅவரது திருவாயினின்று அமுதத்தின் துளிதெறியிருத்தல் நோக்கி உனக்கிதனைத்தந்தார் யார் எனப் பிள்ளையார் என்னை முனிபேல் அவனைக்காட்டுவன் என்பார் அப்பவெனவும் அங்ஙனந்தந்தான் இன்ன அடையாளங்களுடையான் என்பார் தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக், காடுடைய சுடலைப்பொடி பூசியென்னுள்ளங் கவர்கள்வன் ஏடுடைய மலரான் முனைநாள்பணிந் தேத்த வருள்செய்த பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே" எ-ம் கூறினர் மால் பிரமன் முதலியவராலுங் காணொவொண்ணுப்பொருள் இவர்பொருட்டு க்கையாற்காட்டக்கிடைத்ததென்பார் சுட்டிக்காட்ட எ-ம். அங்ஙனம் எளிமையாக வெளிப்பட்ட தேவரீர்ஆவலுற்ற என்பொருட்டருள்புரிய வேண்டுமென்பார் அருளினையெனவும் கூறினர்

வெண்பா.

அருளின் கடலடியே னன்பென்னு மாறு
பொருளின் றிரள்புகலி நாதன் - இருள்புகுதுங்
கண்டத்தானென்பாரைக் காதலித்துக் கைதொழுவார்க்
கண்டத்தார் தாமா ரதற்கு. (உ)

(இ-ள்.) புகலிநாதன் - சீர்காழிக்கண்திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் எமது தலைவன், அருளின்கடல்-கருணைக்கடல் போல்வன், அடியேன் - அவனிடத்து அடிமைப்பட்ட என்னுடைய, அன்பென்னும் - அவாவென்னும், ஆறு - நதியைப்போல்பவன், பொருளின் - எல்லாப்பொருள்களின், திரள் - கூட்டத்தையொத்தவன், இருள்புகுதும் - கருமை பொருந்திய, கண்டத்தான் - திருக்கண்டத்தையுடையான், என்பாரை - என்று துதித்து வணங்குமடியவரை, காதலித்து - விரும்பி, கைதொழுவார்க்கு - கைகுவித்து வணங்குந்தொழிலை மேற்கொண்ட அடியாரடியார்க்கு, அண்டத்து புவியில், ஆர் - எவர், அதற்கு - அவ்வடிமைத்தொழிற்கு மவர்க்கும், ஆர் ஒப்பாவார். எ-று. தாம் அசை (அண்டத்தார் - தேவர்களும், அதற்கு ஆர்- அதற்குச்சிறிதும் ஒப்பாகாரெனப்பொருள் கோடலுமொன்றும்.

(கு-ரை.) எல்லாப்புவனத்தும் உள்ள சராசரங்களாகிய எல்லா ஆன்மாக்களுக்கும் ஏற்றக்குறைவின்றிக் கன்மத்துக்கீடாகத் தனுகரணபுவன போகங்களைக் கொடுத்துப்பின்னின்பத்தைத் தருதலின் அவர்கட்கு வைத்த கருணை காரணமாக அருளின் கடல் என்றார்.

அருளின்கடல்என்னுமிடத்து அருளுக்குக்கடலென்றது அருளாகியகடலெனக்கொள்ளின் சாரியையல்வழிக்கண் வந்ததாகக்கொள்க. கடலென்றார் தாம் எல்லாப் பொருள்களையும் சீவராசிகளையும், தன்னு ளடக்கிக்கொண்டு தட்பமாயிருப்பதுபோல் இறைவனும் உலகமெல்லாவற்றையும் தம்முளடக்கி தாம் எல்லாவுயிர்களுக்கும் கருணைபொழிவதுகருதித் தாம் என்னுட்கலந்து தம்மாட்டெனக்கு அன்பினையாக்கித்தம்மைவணங்கச்செய்துநன்னதியொன்று உலகர்பொருட்டுப் பிரவகித்து அவர்க்கு வேண்டிய பயனைப் பெறச்செய்து கடலையடைவதுபோல், எனக்கு இம்மைக்கண்வேண்டிய பயன்களைப்பயந்து மறுமைப்பயனாகிய தன்னையு மெனக்குத் தந்து அடிமைகொண்டமையின் அடியேனன்பென்னும் ஆறு என்றார். புவியிற் பிறந்தார் இம்மையில் தாம் பெறவேண்டிய எல்லாப்பேறுகட்கும்பொருள் காரணமாதல்போல, இம்மைப்பயன்களை யிழுக்கெனவிகழ்ந்து மறுமைப் பயனை விரும்பினார்க்கு இன்றியமையாவைப்பாய் நிற்கும் பெரும்பொருளாதலின் பொருளன்றிரள் என்றார். இவைமூன்றும் அடிகளிறைவனிடத்துப் பதித்த பேரன்புகரைகடந்தால் இன்னதெனக் கூறலாற்றாது உலகத்துயர்ந்தவாக் கொள்ளக்கிடந்தவற்றைக்கூறினார் என்க. இறைவன் திருநோக்கால் கடற்கண் தோன்றிய விடத்தை நோக்கியமாத்திரத்து தேவரீர் சந்நிதானத்துஏனையதேவரை மருட்டி வலிகெடுத் தோட்டெடுக்கச் செய்ததுபோல் ஈண்டுச் செய்யலாற்றேனெனத்திருவிரற்கண் அடங்கிக்கண்டத்து அழகுசெய்யப்புகுந்தமையின் இருள்புகுதும் என்றார். கண்டம் சப்திக்கிறதென்பது பொருள். சிவனடியார்க்கு அன்பிலாச்சிந்தை யிரும்போடொக்குமாதலால் அன்னோர் நரகபூமி காணியாகக் கொண்டாராதலின்அவரொழியச் சிவனடிக்கு அடிமைபூண்டார்க்குஉலகத்தவரேயன்றிவானத்தவரும் ஒப்பாகார் என்பார் "கண்டத்தான்" அதற்கு என்றார். காதலித்துக் கைத்தொழுவார் என்றதால் காதலித்து என்றதால் மனத்தானினைத்ததை வாக்குவசனிக்கும் அவ்வசனித்த வழிகாயம் செயற்படுமாதலி னீண்டு மனோவாக்குக் காயமாகிய முத்திறத் தாலும் என்பது பெறப்பட்டது. "கலைதலைசூலங் கடுங்கனல் கண்டை கட்டங் கங்கொடி சிலை யிவையேந்திய வெண்டோட் சிவற்கு மனஞ்சொற்செய்கை, நிலைபிழையாது குற்றேவல்செய்தார் குன்றமேருவென்னு மலைபிழையா ரென்பராலறிந்தோர்களிம்மாநிலத்தே" என்ற அருள்வாக்காலறிக.

(கட்டளைக்கலித்துறை,)

ஆரண நான்கிற்கு மப்பாலவ னறி யத்துணிந்த
நாரணனான் முக னுக்கரியானடி வாய்நிறைந்த
பூரணனெந்தை புகலிப்பிரான் பொழிலத்தனைக்குங்
காரணனந்தக் கரணங்கடந்த கருப்பொருளே. (௫)

(இ-ள்.) ஆரணம் - வேதங்கள், நான்கிற்கும் - நான்கினிற்கும், அப்பாலவன் - அப்பாற்பட்டவன், அறியத்துணிந்த - தாம்பரம், தாம்பரம் என்று செருக்குப்பெற்றகாலத்து இடையிற்றோன்றிய தாணுமூர்த்தத்தை அறி

யும்படி துணிவுபெற்ற, நாரணன் நான்முகனுக் கரியான் - விஷ்ணுவிற்கும் பிரமனுக்கும் காணவரிதானவன், நடுவாய் நிறைந்த பூரணன் - எல்லாப்பொருளுக்கும் தடத்தமாய் நிறைந்த பரிபூரணன், எந்தை - என்தந்தையானவன் புகலிப்பிரான் - சீர்காழியெனும் திருப்பதியை யிடமாகக்கொண்டவன், பொழிலத்தனைக்கும் - எல்லாவுலகங்களுக்கும் முத்தொழிற்பட்டு முத்திபடைய, காரணன் - மூலமானவன், அந்தக்காரணம் கடந்த-மனம் புத்தி சித்தம் அகங்காரங்களுக்கு அப்புறப்பட்ட, கருப்பொருள் - முதற்பொருளானவன் ஏ, அசை, எ-று.

இது இறைவன் வேதத்திற்கும், விதி விஷ்ணுக்களுக்கு அரியன் எனவும் உலகத்திற்கு மூலகாரணன் எனவும், கரணாதீதன் எனவும் கூறியதாம்.

(கு-ரை.) ஆரணநான்கிற்கு மப்பாலவன் எனவே, இறைவன் மாயாதீதனாதலினாலும், வேதங்கள் மாயா தோற்றத்தன வாதலினாலும் அவற்றிற்கு அப்பாலவன் என்றதாம். வேதம் எவ்வகைமாயாதோற்றத்ததாம் எனெனின் வாக்குகளாகிய வைகரி மத்திமை பைசந்தி சூக்குமை அதிசூக்குமை ஆகியஐந்தும் முறையே சுத்தமாயாதோற்றத்தினின்று அடிப்படுதலின் அவ்வாக்குக்களை யவ்வாறு கூறியதாம். இதனை "விந்துவின்மாயையாகிமாயையினவவியத்தம், வந்திடும் விந்துவின்பால் வைகரியாதிமாயைமுந்திடுமராகமாதி முக்குணமாதிமூலந் தந்திடுஞ் சிவனவன்றன் சன்னிதிதன்னிலன்றே" என்ற திருவிருத்தத்தாலறிக. ஒருமொழியொழி தன்னினங் கொளற் குரித்தே என்பதனால் ஸ்மிருதிபுராணமுதலியவுங் கொள்க. ஆரணநான்காவன இருக்கு எசுர் சாமம், அதர்வணம் இவை யிறைவனிடத்துத்தோன்றினும் அவன் றன்மை யரியாவென்பதாம். எவ்வாறெனின், உலகம் அவனிடைத்தோன்றினும் அவனையறியாததுபோலவென்க. நான்கிற்கும்என்பதின்கணும்மை எண்ணுப்பொருளுடன் சிறப்புப்பொருளது. விதி விஷ்ணுக்களிருவரும் தமக்கு ஆக்கும் வன்மையும் அளிக்கும் வன்மையும் இறைவனருளால் கைவந்த வலிகொண்டு ஒருவரையொருவர் நீயென்மாட்டுதித்தனை நீ யென்மாட்டுதித்தனையென்று போரிடுகையில் இவ்விருவருக்கிடையில் இறைவன் அழற்றூணாய்த்தோன்ற நம்மிலிதின் முதலுமுடிவுங்கண்டாரே முதல்வரென மண்புகுந்தும்விண் பறந்துமடியுமுடியுங்காணாதலுத்து இறைவனைத்துதிக்க அருள் பெற்றவராதலின் நாரணனான் முகனுக்கரியான் என்றார். அங்ஙனம் இருவராலும்ஏனையதேவர்களாலும் அறியப்படானெனின் அப்பொருள் சூனியமாமேயெனின் அன்று காண் என்பார் நடுவாய் நிறைந்த பூரணன் என்றார். எனதுபிறப்பில் யான்படுந் துன்பங்களை யெல்லாங்கண்டு என் மாட்டுக் கருணைபுரிந்து உலகத்துத் தந்தை மகற்கு ஆற்றுமுதவிபோல் எனக்குத் தன்னிடத்து அன்புவளரச் செய்து தன் திருவடியாகிய பேரின்பத்தைச்சேர்த்தலின் எந்தை என்றார் இது என்தந்தை என்பது எந்தையென மருவி நின்றது. இவ்வாறு வேதனும் வேதமும் நாராயணனும் அறியான் என்பொருட்டுச் சகள நிட்கள திருவுருக்கொண்டு சீர்காழிக்கண் அமர்ந்தான் என்பார் புகலிப்பிரான் என்றார். பொழில் என்பது நிர்பன இடங்குவனவாகிய புவனங்களையாம். இறை

வனை எல்லாப்புவனங்களுக்கும் காரணன் என்றது, தாம் தமது சமவாய சத்தியை க்ஷோபிக்க அச்சத்தி மாயையை க்ஷோபிக்க உலகங்கள் தோன்றிய வாதலால் என்க. அந்தக்கரணம் சடமாதலாலும் மாயா தோற்றத்தனவாதலாலும் இறைவனையறிவதற்குத் தம்செயலற்ற காலத்தன்றி முடியாதாதலால் அந்தக்கரணம் கடந்த என்றார். தாம் தனித்து நின்று கருணையால் அனைத்தையுந் தம்மிடை தோற்றச்செய்தலின் கருப்பொருளே என்றார். இச்செய்யுள் இறைவனது சகள நிட்களத் திருவுருவினைவிதந்து கூறியதாம். இது இறைவனது கல்யாணகுணங்களைப்பலபடப்புனைந்து கூறுதலின் பலபடப்புனைவணி இதனை உல்லேகாலங்காரமென்பர் வடநூலார்.

இணைக்குறளாசிரியப்பா.

கருமுதற் றொடங்கிப் பெருநா ளெல்லாம்
காமம் வெகுளி கழிபெரும் பொய்யெனும்
தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை
அரிதி னிகழ்ந்து போக்கிப் பொருதிறன்
மையிரு ணிறத்து மதமுடை யடுசினத்
தைவகைக் கடாவும் யாப்பவிழ்த் தகற்றி
அன்புகொடு மெழுகி யருள்விளக் கேற்றித்
துன்ப விருளைத் துறந்து முன்புற
மெய்யெனும் விதானம் விரித்து நொய்ய
கீழ்மையிற் றொடர்ந்து கிடந்தவென் சிந்தைப்
பாழறை யுனக்குப் பள்ளியறை யாக்கிச்
சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவி
செந்தைநீ யிருக்க விட்ட னனிந்த
நெடுநில வளாகமு மடுகதிர் வானமும்
அடையப் பரந்த வாதிவெள் ளத்து
நுரையெனச் சிதறி யிருசுடர் மிதப்ப
வரைபறித் தியங்கு மாருதங் கடுப்ப
மாலும் பிரமனு முதலிய வானவர்
கால மிதுவெனக் கலங்கா நின்றுழி
மற்றவ ருய்யப் பற்றிய புணையாய்
மிகநனி மிதந்த புகலி நாயக
அருணனி சுரக்கும் பிரளய விடங்கநின்
செல்வச் சிலம்பு மெல்லன மிழற்ற
அமையாக் காட்சி யிமயக்
கொழுந்தையு முடனே கொண்டிங்
கெழுந்தரு ளத்தகு மெம்பெரு மானே. (௪)

(இ-ள்.) எம்பெருமானே - எனது தலைவனே, கருமுதல் தொடங்கி - நான்கருவிலகப்பட்டுப்பூமியிற்பிறக்கத்தொடங்கிய காலமுதலாக, பெருநாள் எல்லாம் - (கழிந்த) மிக்கநாள்கள் சேர்ந்த காலங்களெல்லாம், காமம் - காமத்தால் விளைந்த தீமையும், வெகுளி - நல்லோரையும் மற்றோரையுங் கோபித்ததனுல் வந்த தீமையும், கழிபெரும் - மிக்க, பொய்என்னும் - பொய் பேசுதலால் விளைந்த தீமையுமாகிய, தூய்மையில் - சுத்தமில்லாத, குப்பை - அழுக்கின் மிகுதிகளாகிய மலங்கள், தொலைவு இன்றி - கெடாமல், கிடந்ததை - இருப்பினிலே கொண்டிருந்ததை, அரிதின் - (நீக்கக்கூடாமையின்) அருமையாக, இகழ்ந்து - அவற்றை வெறுத்து, போக்கி - அவையென்னை விட்டுப் போகச்செய்து, பொருதிறல் - போர்புரியும் வன்மைகொண்ட, மை இருள் - மிக்க கருநிறங்கொண்ட, நிறத்து - நிறத்தினையுடைய, மதம் உடை - மிக்க மதங்கொண்ட, அடு சினத்து - கொல்லத்தகுந்த கோபத்தினையுடைய, ஐவகைக்கடாவும் - ஐவகைப்பட்ட (வேறுபட்ட ஒழுக்கங்கொண்ட) பஞ்சேந்திரியங்களாகிய கடாக்களையும், யாப்பு அவிழ்த்து - அவைகட்டியிருந்தஇடத்தினின்று) கட்டை அவிழ்த்து, அகற்றி - அப்புறப்படுத்தி, அன்புகொடு - அன்பினல், மெழுகி - திருமெழுக்கிட்டு, அருள்விளக்கு - அருளாகிய விளக்கினை, ஏற்றி - ஒளிபெறவேற்றி, துன்பஇருளை - துன்பமாகிய இருட்டினை, துறந்து - ஓட்டி, முன்பு - (இவ்வகைத்துறந்த) அந்த முன்னிடத்தில், உற - பொருந்தும்படி, மெய் எனும் - வாய்மை என்கிற, விதானம் - மேற்கட்டியினை, விரித்து - விளங்கக்கட்டி, நொய்ய - அற்பமாகிய, கீழ்மையில் - தாழ்ந்த குணங்களில் தொடர்ந்து - தொடக்குற்று, கிடந்த - (நல்லோராலிகழக்)கிடந்த, என் - எனது சிந்தைப்பாழறை - சித்தமாகிய பாழாகிய உள்ளிடத்தை, உனக்கு - தேவரீருக்கு, பள்ளியறையாக்கி - திருத்துயில் கொண்டிருக்கு மிடமாகச் செய்து, சிந்தை - சித்தமாகிய, தாமரைச் செழுமலர் - தாமரையாகிய வளமுள்ள மலரின், பூ தவிசு - அழகிய இருக்கையை, எந்தை - என் தந்தையாயினனே, நீ இருக்க - தேவரீர் எழுந்தருளியிருக்க, இட்டனன் - வைத்தனன், இந்த நெடுநில வளாகமும் - இந்தநெடிய நிலமாகிய இடமும், அடுகதிர் - தபிக்கின்ற கிரணத்தினைப்பெற்ற கதிரினையுடைய, வானமும் - வானிடமும், அடைய முழுதும், பரந்த - பரவிய, ஆதிவெள்ளத்து - முதன்மையாகிய ஊழிவெள்ளத்தில், இருசுடர் - சூரியசந்திரர்களாகிய இரண்டு சுடர்களும், நுரை என - நுரையென்று சொல்லும்படி, சிதறி - சிதறுண்டு, மிதப்ப - மிதக்காநிற்க, வரை - பெருமலைகளை, பறித்து - அடியோடுகளைந்து, இயங்கும் - உலாவுகின்ற, மாருதம் - ஊழிக்காற்று, கடுப்ப - வேகத்துடன் வீச, மாலும் - விஷ்ணுமூர்த்தியும் பிரமனும் - பிரமதேவனும், முதலியவானவர் - மற்றதேவர்களும், இது - இவ்வெள்ளங்கொண்டது, காலம் என - ஊழிக்காலம் என (எண்ணி), கலங்காநின்றுழி - செய்வ திதுவென்றுதோன்றுமல்மனக்கலக்கங்கொண்டிருக்கையில், மற்றவர் (அவ்வெள்ளத்தால் வருந்தும்) மாலே பிரமனே மற்றொழிந்த தேவரே முதலியோர், உய்ய - உயிர்கொண்டு பிழைக்க, பற்றிய - ஆதரவாகக் கொண்ட, புணையாய் - தெப்பமாக, மிகநனி - அதிகமாய், மிதந்த - அவ்வெள்ளத்துமி

தந்த, புகலிநாயக - சீர்காழியாகிய திருக்கழுமல வளநகரைக் கோயிலாக்கொண்டானே, அருள் - திருவருளே, நனிசுரக்கும் - மிகுந்த சுரப்பாகக்கொண்ட, பிரளய - பிரளயஸ்வ ரூபியே, விடங்க - பேரழகுள்ளானே, நின் - தேவரீருடைய, செல்வச்சிலம்பு - எல்லாச் செல்வத்திற்குங் காரணமாகிய திருச்சிலம்பு, மெல்லென - இனியசிற்றோசையாக, பிழற்ற - சிலம்பாநிற்க, அமையா -(காணுந்தோறும் பின்னும் காணவேணுமெனும் பேரவா, நிறம்பாதகாட்சி - தோற்றத்தினையுடைய, இமயக்கொழுந்தையும்-பர்வதராஜபுத்திரியாகியபிராட்டியாரையும், உடனேகொண்டு - உன்னுடன்கொண்டு, இங்கு - இந்தவிடங்கொண்டஅடியேனிடத்து, எழுந்தருளாத்தரும்-எழுந்தருளவேண்டும். எ-று

எம்பெருமானே நான் பிறவி கொள்ளத் தொடங்கிய நாள் முதலாக நிறைந்துள்ள காமமுதலிய தீமைகளையும் பஞ்சேந்திரியங்களையு மொழித்துக்கீழ்மையிற்றொடர்ந்த என் மனதை அன்பான்மெழுகி அருள்விளக்கேற்றித் திருத்திவைத்தேன் தேவரீர் பிராட்டியாருடனெழுந்தருளவேண்டுமென்பது கருத்து.

(வி-ரை) அநாதியே யுள்ளநான், மலத்தால் கருவில் பிறக்கத்தொடங்கியநாள்முதல் என்பார், கருமுதல் எனவும், அதுமுதலாகவெனது கருமவசத்தா லெடுத்த பிறவிகளில் ஜநித்த பலபிறவிகளினும் என்பார் பெருநாள் எல்லாம் எ-ம், கழுகாங்கெள. என்பதால், காமம்என்பது மாதரை விரும்பச்செய்தல் எனப்பொருள்படும். எனது மனம் என்வழிநிற்காது அதுசென்றவாறே பின்சென்று பலவிதப்பட்ட காமவலைப்பட்டு மயங்கினேன் என்பார் காமம் எ-ம், அம்மோகவலைக்கண்பட்டுழி அது இடையூறின்றி முடிய இடைவந்த ஊறுகளைப்போக்கக்கொண்டதுகோபம்என்பார்வெகுளி - எ - ம். அக்காமவசத்தனுய்க்கொண்ட மனைவியரிடத்து அவரால் விளைந்த குடும்பபோஷணை நிமித்தம் உலகத்துப் பொருள்தேடப் பலவகைப்பட்ட காரியங்களைப் பொய்படச்செய்தேன் என்பார் பெரும்பொய் எ-ம், இவைபோன்ற பல தீக்குணங்கள் பல என்மனத்தகத்தனவென்பார் தூய்மையில் குப்பை எ-ம் கும்ப என்பது வலிக்கும்வழி வலிந்து நின்று ஐகாரச்சாரியைபெற்றுக் குப்பையென நின்றது. இக்குப்பைநீக்க நீங்காதவையாய் வெட்டத்தளிர்க்கு நச்சுமரம்போ லிருந்த தென்பார் தொலைவின்றி எ-ம், இவற்றை நல்லோர்விரும்பார் என்பார், கிடந்து எ-ம், அடியேன் பலபிறவிகளிற் செய்த தவப்பயனுல் அதனை நீக்கினேன் என்பார் அரிதி னிகழ்ந்து போக்கி எ-ம், யானெனதுசொல்வழிநடப்பபன்முறை உறுதிகூறியுங்கேளாதுஎன்னுடன்போர் செய்வ தென்பார் பொருதிறல், எ-ம், எனது பேரறிவை முழுதுந் தோன்ருது மறைத்ததென்பார் மையிருள், எ-ம், எனது வலியால் முயன்று தடுக்கினும் என்னைத் தன்வசமே வாக்கொள்வதென்பார் மதமுடை, எ-ம், இவை மேற்கொண்ட காலத்துக் கொல்லுஞ் சினத்தினுங் கொடிய என்பார் அடுசினத்து, எ-ம், சடமாய் அறிவின்றித் தத்தம்வழிச்செல்லும்காரானே முதலியவற்றை நல்வழிநடத்த மறுப்பான ஒருவனை யவை, அவன் வழிகேளாது செல்லும் வகை இவ்விந்திரியங்களும் சடமாய் அறிவு தம்முடன் கூடியிருக்

தும் அவ்வறிவின்வழி நடவாது ஒழுகலின் ஐவகைக்கடா எ-ம். இக்கடாக்களையடைத்தவத்தொழுவத்திருந்துஅவற்றையோட்டுவிப்பதுபோல்கருவிடைப்பட்ட நாண்முதல் என்னுடன்கன்மத்துக்கீடாகத்தனுகரணங்களைக் கொண்டு நடக்கும் இந்திரியங்களையும் உனது திருவருள்துணையாக்கொண்டு அகற்றினேன் என்பார் யாப்பவிழ்த்தகற்றி, எ-ம். எங்குமுளனாகிய நினையொருவழிப்படுத்துவதில் முதன்மைகொண்டது அன்பாதலின் அன்புகொடுமெழுகி எ-ம். அங்ஙனமெழுகிய சுத்தபூமியைக்கவிந்த இருளைப்போக்குவது அருட்டீவிகையாதலின் அருள்விளக்கு எ-ம். இவ்வகைத் திருவருளாகிய விளக்கொளி, சென்மாத்திரையே ஆணவமாகிய இருள்தனது சத்திகெட்டடங்குதலின், துன்பவிருளைத்துறந்து எ-ம். நீ வாய்மைநிறைந்த இடத்தேயிருத்தல் சத்தியமாதலில் அவ்விடம் எழுந்தருளுகையில் கவித்துநிழல்செய்யும் வகை விதானஞ்செய்தேனென்பார் முன்புறமெய்யெனும் விதானம் விரித்து எ-ம், பொய், குறளை, வன்சொல், பயனில் சொல்நிறைந்து அவற்றின் வழிச்சென்று கீழ்மைகொண்டது என்பார், கீழ்மையிற்றொடர்ந்து கிடந்த என்சிந்தை எ-ம். இவை முறையே உனது அநுக்ரகசத்தியால் ஒழியின், நின்றது குணஞ் சிறிதுமிலாவெற்றிட மென்பார், பாழறை எ-ம், "ஒருகணமிருப்பன்றெய்வவுருவினிலீசன்றான், மற்றிருகணஞ்செங்கோ லோச்சுமிறையவர்பாலிருப்பன், அருமறையவர்குழாத்துளம்புவீழளவிருப்பன, றுரியயோகிகளுளத்திற்றாங்குவனிருந்தெப்போதும்." என்றபடி அந்த என் வெறு வெளியை யுனக்குத் திருத்துயிலிடமாக விட்டேனென்பார் பள்ளியறையாக்கி எ-ம், நொய்தினும் நொய்யவாய் எனது தீமைமுதலிய வுறுத்தாவண்ணம் செய்யப்பட்டதென்பார் சிந்தைத்தாமரை எ-ம். ஏனையமலர்கள்போல் வாடுதலும் வளமின்மையுமற்றதென்பார்செழுமலர்ப்பூந்தவிசு எ-ம். அது உன்னையன்றி ஏனையதேவர்க்கு இருக்க இடந்தராதென்பார் எந்தை நீயிருக்க எ-ம், அடியேனிடத்து உனதுஆஞ்ஞாசத்தி பதியச்செய்ததென்பார், இட்டனன் எ-ம் கூறினார். நிலத்துக்கண் அடங்கிய எல்லாத்திவுகளையுமடக்கி நெடுநிலவளாகம், எ-ம். ஆகாயத்திலுள்ள சலதரமண்டல முதலிய அனைத்தையுமடக்கி அடுகதிர்வானமும் எ-ம் கூறினார். தன்னையடைந்த சீதத்தினை வறளச்செய்யும் வெப்பமுள்ளதெனினும் இவ்வெள்ளத்தையணுகவும் போகாதென்பார் அடுகதிர் என்றார். ஆதிவெள்ளமென்றார் வெள்ளங்களில் முதன்மைபெற்றதென்பது கருதி.

சூரியன் செந்நிறமுடையனேனும் ஆதிவெள்ளத்து முழுகினதால் வொளிகுறைந்து செம்மைநீங்கி வெண்மைபெற்றதனான் நுரையொடுவமித்தனர். இவ்விருகோட்கள் உலகிற்கு ஒளிதரும்வகை வானவீதிக்க ணியங்குவதாதலின் இவை இயங்குமிடத்துத் தமக்கு இயங்கவிடமின்றி வெள்ளந்தமக்கு மேலிட்டுப்பரவ அவை நுரையோடொப்பமிதந்தனவென்பார் நுரையெனச் சிதறிச் சுடர்மிதப்பஎன்றார். சிதறஎன்றதனால்நொய்மைகூறப்பட்டது: ஊழிக்காலத்தது ஆகலின் பெருவலிகொண்டு அனைத்தையும் அழிக்கும் ஆற்றலுள்ளதென்பார் வரைபறித்தியங்குமாருதங்கடுப்ப எ-ம், திருமால் முதலிய

தேவர்கள் இவ்வெள்ளத்தினை நோக்கி யஞ்சினவர்களாய் இது ஊழிக்காலம் போலும் என்று மனக்கவலைகொண்டு தாமும் தம்மாற்படைத்தளிக்கப்பட்ட உயிர்களுமழிவது கருதி யிரங்கினர் என்பார கலங்காநிற்புழியென்றார். இவர்களிரங்குவதை எங்குமுள்ளகருணைநிலையனாதலின் அவர்களுய்யும் வகைப்பிரணவத்தினைத் தெப்பமாக்கொண்டான் என்பார், மற்றவருய்யப்பற்றிய புணையாய் எ-ம், அங்ஙனம் புணையாய் நிற்பின் அதனைச்செலுத்தி அலைசெறி வெள்ளத்து அலைபவரிடத்துச்சேர்த்தி அவரைக்காக்கும் வகை ஓடமியக்குவானுமாய் நின்றான் என்பார் மிகநனிமிதந்த புகலிநாயக எனவுங்கூறினார். நீ எல்லாவுயிர்களுக்குங் களைகணாய் அவர்களைப் படைத்துக்காத்து அழிப்பவனுன்னையன்றிப்பெருங்கருணை வெள்ளமாவார் பிறரிலர் என்பார் அருணனி சுரக்கும் பிரளய என்றார். எல்லாப்பொருள்களின் எல்லாவழகிற்கும் நீயே மூலகாரணனாதலின் விடங்கஎன்றார். " மறையே நமது பீடிகையா மறையே நமதுபாதுகையா, மறையே நமதுவாகனமாமறையே நமதுநூபுரமாம், மறையே நமது கோவணமாம் மறையே நமது விழியாகும், மறையே நமதுமொழியாகுமறையே நமதுவடிவாகும்." என்றபடி அளவிறந்த பெரும் போகத்தைத் தருதற்கும் காரணமாதல்பற்றி செல்வச்சிலம்பு என்றார், இதன் ஓசையைக் கேட்டார் மனமுருகி அதன் வழிப்பட்டு அத்திருவடிக்கண் லயப்பட்டடங்குதல் திண்ணமாதலின் மெல்லெனமிழற்ற என்றார். இதனானன்றே திருச்சிலம்போசை யொலிவழியேசென்று நிருத்தனைக் கும்பிடென்றுந் திபற, நேர்பட வங்கே நின்றுந்திபற " எனவும் அருளிச்செய்தது. உலகத்தைத்தன் வசப்படுத்தி அவ்வுலகத்தையும் அதற்குத் தந்தையானஇறைவனையும் தன்வயப்பட நிருத்தங்காணும் பேரழகியாதலின் அமையாக்காட்சி யிமயக்கொழுந்து என்றார். அடியேன் தேவரீர் அம்மையுடன் எழுந்தருளியிருக்கவும் திருப்பள்ளி கொள்ளவும் இருந்தகுப்பைகளை நீக்கி ஆசனமும், திருப்பள்ளியுந் திருத்திவைத்தேன்ஈண்டுத் தேவரீர் இனிதிருக்கலாம் என்பார் எழுந்தருளத்தகும் என்றார்.

வெண்பா.

மானுமழுவுந் திருமிடற்றில் வாழு மிரு
டானும் பிறையுமே தாங்கிநிற்கும்—வானவர்க்கு
வெள்ளத்தே தோன்றிக் கழுமலத்தே வீற்றிருந்தென்
னுள்ளத்தே நின்ற வொளி. (ரு)

(இ-ள்) வானவர்க்கு-இவ்வெள்ளத்துத் துன்புறும் எங்களுக்குக் களைகணாவார்யாவரோ எனத் துயருறும்) தேவர்களுக்கு, வெள்ளத்தே - அந்தப் பிரளயத்தில், தோன்றி - தரிசனந்தந்து, கழுமலத்தே - திருக்கழுமலமாகிய சீர்காழியில், வீற்றிருந்து - எழுந்தருளியிருந்து, என்னுள்ளத்தே - எனது சித்தத்திடத்து, நின்ற - நிலைபெற்றிருந்த, ஒளி - (ஞானமேதிருவுருவாகக்

கொண்ட) ஒளியானது, மானும் - ஒரு திருக்கரத்தில் மானினையும், மழுவும்- மற்றொரு திருக்கரத்தில் மழுவினையும், திருமிடற்றில் - அழகிய கண்டத்தின் கண், வாழும் - நிலைபெற்ற, இருள் உம் - இருளாகிய விடக்கறையினையும், பிறையும் - சடையிற் சந்திரனையும், தாங்கிநிற்கும் - தாங்கி நிற்கும் எ-று. தான், அசை.

* தேவர்க்குத் திருக்கழுமலமாகிய நகரத்தில் தரிசனந் தந்து என்மனத்தை யிடங்கொண்ட ஒளிக்குத் திருவடையாளத்தினை வினவுவீராயின் அது இரண்டு கரத்தில் மானினையும் மழுவினையும், திருமிடற்றில் விடக்கறுப்பினையும் சடையில் சந்திரனையுந் தாங்கி நிற்கும் என்பதாம்.

(கு-ரை) கண்டார் நோக்கத்தைக்கவரும் ஆற்றலும் வனப்புமுண்மையின்மானும் எனவும், எனது அஞ்ஞான ஆணவக்காட்டை யழிப்பதென்பார் மழு எனவும், தேவர்களை வருத்தத்தோன்றி இறைவனால் தனது வலியடங்கினும்இறைவனை யடைந்தமையால் மிக்க அழகடைந்துசாகாநிலைமை த்தென்பார் வாழு மிருள், எ-ம் பிறக்குமியல்பினைப் பெற்றதாயினும் இறைவனையடைந்தவன்மையால் அது நீங்கித் தேய்தலும் வளர்தலும், பிறத்தலு மிறத்தலு மொழிந்ததென்பார், பிறை எ-ம், இவை தாம் தாங்கியது, ஆன்மாக்களினலங்காரணமாக என்பார், தாங்கி நிற்கும் எ-ம். தம்மைச்சரணாக வடைந்தார் யாவரேனும் எக்காலத்து நினைக்கினும் அடைக்கலந் தந்தருளுவான் என்பார், வானவர்க்கு வெள்ளத்தே தோன்றி, எ-ம், அவ்வாறு பன்முறையுந் தேவர்பொருட் டருள்செய்தது, எனது ஆணவ இருளைப்போக்க என்னிடத்து ஞானவொளியாய் எழுந்தருளி நின்றது என்பார் உள்ளத்தே நின்றவொளி எ-ம் கூறினார். ஞாயிறு, திங்கள், தீ, ஆகிய ஒளிகளுக்கும் ஒளி கொடுக்கும் பேரொளியாதலின் ஒளி என்றார். ஒளி நிற்கும், என முடிக்க. உம் மைகள் எண்ணுப்பொருள, ஏகாரம் அப்பொருளது. தாங்குதல் அவை அடைக்கலம் புக்ககாலத்து இடுக்கணை நீக்கி நலம்பெறச்செய்தல். தோன்றுதல்-அனைத்தும் அழிந்த சர்வசங்கார காலத்துந் தாம்அழியாதிருத்தல். இதனால் அடிகளது சகளநிட்கள பாவனை குறிப்பிக்கப்பட்டது.

சட்டளைக்கலித்துறை.

ஒளிவந்தவாபொய்மனத்திருணீங்கவென் னுள்ளவெள்ளம்
தெளிவந்தவாவந்துதித்தித்தவாசிந்தியாதவொரு
களிவந்தவாவன்புகைவந்தவாகடைசாரமையத்
தெளிவந்தவாநங்கழுமலவாணர்தம்மின்னருளே. (௬)

(இ-ள்) நம் கழுமலவாணர்-திருக்கழுமலத்தில் எழுந்தருளியிருக்கும்நமது இறைவனது, இன்அருள்-இனியதிருவருள், பொய்மனத்து - பொய்யாய்க்கெடுகின்ற மனத்தின்கணுள்ள, இருள் நீங்க - ஆணவாதியிருணீங்க, ஒளி வந்தவாறு - ஞான சூரியனாக எழுந்தருளிய வகையும், என் உள்ளவெள்

ளம் - எனது மனமாகிய பெருக்கில், தெளிவுவந்தவாறு - தெளிவாக நின்ற வகையும், வந்து - தெளிந்த பொருளாய் நின்று, தித்தித்தவாறு - என்மனத்திடத்துத் தித்தித்தவிதமும், சிந்தியாதது, (மனத்தால் இத்தகைத்தென) நினைக்கப்பெறாததாகிய, ஒரு-ஒப்பற்றதாகிய, களிவந்தவாறு - ஆனந்தமேயானவகையும், அன்பு கைவந்தவாறு - அன்பாகவே பலித்தவகையும், கடைசார் அமயத்து - ஆணவஇறுதியினையடையும் முத்திக்காலத்து, எளிவந்தவாறு எனக்கெளிவந்து திருவருள்செய்யும் விதமும் என்னவியப்பு எ-று.

இதனால் கழுமல முதுபதியின்திரு அருள் எனக்குத்தோன்றிய மாத்திரையில்ஆணவமலச்சத்தி நீங்கி ஞானவொளி தோன்றி அப்பொருள் என்னுள்ளத்துத் தித்தித்து அருள் செய்ததென்று கூறப்பட்டது.

(கு-ரை.) அநாதியே ஆணவகேவலத்திலழுந்தி யிருந்த வென்னைக்கருணைக்கண்ணாற்கடாக்ஷித்து அதனைத்தமது சத்தியால் ரோஷாபிப்பித்துஅகற்ற ஆன்மஞானம் பிரகாசித்தலின் ஒளிவந்தவாறு எனவும், மனம் புத்தி சித்த அகங்காரங்களாகிய அந்தக்கரணங்களுள் ஒன்றும் மாயாஜன்யமாகையால் பொய் மனம் எ-ம், அந்தகாரம் புறத்துப் பொருட்களைத் தோன்றாது மறைப்பது போல் தன்னையும் தலைவனையும்தோன்றாது மறைத்தலின் இருள் எ-ம், உள்ளம், மனத்தில் சாகோபசாகையாய்த் தோன்றி மனோராச்சியம் செய்வதாதலின் அதனை வெள்ளம், எ-ம். அவ்வெள்ளம் ஒருவகையடங்கி அதனிடைத் தெளிவே யுண்மை யுணர்த்தும் ஆறுதலின் தெளிவந்தவா, எ-ம், அதனிடைப்பயிலுந் தோறும் உணரும் இனிமைக்குப்புலன்களானுகரும் இனிமை ஒருவாற்றானும் ஒப்புமைத்தன்றென்பார் வந்து தித்தித்தாவா, எ-ம், உலகப் பொருட்கள் சடத்தன்மையவாயினும் அவற்றால்விளையும் ஆனந்தம்ஐம்புலன்களையும் கவரத்தக்கவை அங்ஙனம் சடப்பொருள்களில் ஒன்றுமமையாது உள்ளமாகிய மனத்தின்கட் களிப்பினை விளைக்கும் பேரானந்த மாதலின்களி வந்தவா, எ-ம், இவ்வகை யென் மாட்டுச் செய்த பேருதவிக்குத் திருவருளின் கருணையே காரணமாதலின் அன்பு கைவந்தவா - எ-ம், எனது, ஆணவ இருணீக்கத்து அடியேன் அடைவது தேவரீரது திருவடியடையுங் காலமாதலின், கடைசார் அமயத்து, எ-ம் அடியேன் தேவரீரது திருக்கருணையால் பேரானந்தத்தினைப் பெற்றேனாதலின் திருவருள் அக்காலத்துத் திருவடியிற் கூட்டுவிக்கு மென்பார் எளிவந்த வா - எ-ம். கூறினர், எளிவந்த என இறந்த காலத்தாற் கூறியது தெளிவு பற்றியென்க. இது காலவழுவமைதி.

இணைக்குறளாசிரியப்பா.

அருள்பழுத்தளிந்த கருணைவான்கனி
ஆராவின்பத் தீராக்காதல்
அடியவர்க்கமிர்த வாரிநெடுநிலை
மாடக்கோபுரத் தாடகக்குடுமி
மழைவயிறுகிழிக்குங் கழுமலவாணநின்

வழுவாக்காட்சி முதிராவிளமுலைப்
பாவையுடனிருந்த பரமயோகி
யாமென்றுணர்த்துவ னெந்தைமேனாள்
அகிலலோகமு மனந்தயோனியும்
நிகிலமுந்தோன்ற நீநினைந்தநாடொடங்கி
எனைப்பலயோனியு நினைப்பரும்பேதத்
தியாரும்யாவையு மெனக்குத்தனித்தனித்
தாயராகியுந் தந்தையராகியும்
வந்திலாதவ ரில்லையானவர்
தந்தையராகியுந் தாயராகியும்
வந்திராதது மில்லைமுந்து
பிறவாநிலனு மில்லையவ்வயின்
இறவாநிலனு மில்லைபிறிதில்
எனைத்தினுயிர்களு மில்லையானவை
தமைத்தினொழிந்தது மில்லையனைத்தே
காலமுஞ்சென்றதியானிதன்மேலினி
இளைக்குமாறிலனேநாயேன்
அந்தரச்சோதிநின் னஞ்செழுத்துநவிலும்
தந்திரம்பயின்றது மிலனேதந்திரம்
பயின்றவர்ப்பயின்றது மிலனேயாயினும்
இயன்றதோர்பொழுதி னிட்டதுமலராச்
சொன்னதுமந்திர மாகவென்னையும்
இடர்ப்பிறப்பிறப்பெனு மிரண்டின்
கடற்படாவகை காத்தனின்கடனே. (எ)

(இ-ள்) அருள் பழுத்து - திருவருள் முதிர்ந்து, அளிந்த - கனிந்த, கருணை - அன்பாகிய, வான்கனி - சிறந்த கனியானவன், ஆரா - புலன்களால் உண்டு உரிசிதேராத, இன்பம் - சுகத்தினையளிக்கும், தீராக்காதல் - ஒழிவில்லாத ஆசைப்பெருக்கானவன், அடியவர்க்கு - தன் மாட்டு அன்புள்ள அடியவர்க்கு, அமிர்தவாரி - அமிர்தமாகிய சாகரத்தின், நெடுமைநிலை - நீடியவைப் பாயுள்ளான், மாடம் - உபரிகைகள் நெருங்கிய, கோபுரம் - கோபுரங்களில், ஆடகம் - பொன்னினாலாகிய, குடுமி - சிகரங்கள், மழை - மேகங்களின், வயிறு - நடுவிடத்தினை, கிழிக்கும் - பிளக்கின்ற, கழுமலவாண - திருக்கழுமலவள நகரினைத்திருக்கோயிலாக் கொண்டெழுந்தருளியிருப்பவனே, நின் - தேவரீருடைய, காட்சி - திருக்குறிப்பினின்று, வழுவா - சிறிதும் தவறுதல் இல்லாத, முதிரா - (உலகமெல்லாமீன்றும்) மூப்பினைப்

பெருத, இளமுலை - இளமுலைகளையுடைய, பாவையுடன் - பார்வதிபிராட்டியாருடன், இருந்த - எழுந்தருளியிருந்த, பரமயோகி - சிறந்தயோகமூர்த்தமானவனே, எந்தை - என்தந்தையானவனே, யான் ஒன்று - அடியேன் என் மனத்துதித்த ஒரு எண்ணத்தினை, உணர்த்துவன் - தெரிவிப்பன், மேல்நாள் - பூர்வத்தில், அகிலலோகமும் - எல்லாவுலகங்களையும், அநந்தயோனியும் - எல்லாச்சீவராசிகளையும், நிகிலமும் - ஒழிந்த அனைத்தையும், தோன்ற - உண்டாம்விதமாக, நீ- தேவரீர், நினைந்தநாள் தொடங்கி - நினைத்த அந்த காலந்தொடக்கமாக, எனைப்பல - பலவகைப்பட்ட, யோனியும் - தாவரஜங்கமங்களும், நினைப்பரும் பேதத்து - நினைத்தற்கரிய பாகுபாட்டினையுடைய, யாரும் - உயர்திணையாகிய மக்கட்டொகுதிக்கண் பட்டயாவரும், யாவையும் - அவ்வாறு அஃறிணைப் பகுதிக்கண்ணதாகிய எல்லாமும், எனக்கு - அடியேனுக்கு, தனி தனி - ஒவ்வொருவராக, தாயாகியும் - தாய்மாராகியும், தந்தையர் ஆகியும் - பிதாக்களாகியும், வந்திலாதவர் - வராதவர்கள், இல்லை - இல்லையாம், யான் - அடியேன், அவர் - அந்த தந்தைதாய் ஆயினார்க்கு, தந்தையர் ஆகியும் - பிதாக்கள் ஆகியும், தாயர் ஆகியும் - தாய்மாராகியும், வந்து இராததும் இல்லை - வராததும் இல்லையாம், முந்து- யான் முன்னெடுத்த பிறவிகளில், பிறவாத - பிறவியெடுக்காத, நிலனும் இல்லை - பூமியும் கிடைக்காது, அவ்வயின்-அவ்விடத்து, இறவா - இறக்காத, நிலனும் இல்லை-பூமியும் கிடைக்காது, பிறிதில்-வேருக, எனைத்தின்ற-என்னைஉணவாகக்கொள்ளாத, உயிர்களும் இல்லை-பிராணிகளுமிலவாம், யான்-நான், அவைதமை-அவ்வுயிர்களை, தின்றொழிந்தது-உட்கொள்ளாது நீங்கியதும் இல்லை-இல்லையாம், அனைத்தே-அவ்வளவினதாக, காலமுஞ் சென்றது ஆயுளுங் கழிந்தது, யான்-இவ்வகையாகியநான்,இதன்மேல்-இவ்விதமாறுதலால், இனி-பின்னும்,இளைக்கும்ஆறு-மனநலியும்வகை இலன்-இலாதவனாகின்றேன் நாயேன்-அடியேன், அந்தரச்சோதி-சிதாகாசத்தையிடமாகக்கொண்ட பரஞ்சோதி, நின்-தேவரீரது திருவுருவத்தைத்தெரிவிக்கும், அஞ்செழுத்து-ஸ்ரீபஞ்சாக்ஷரத்தின் சிறப்பினை, நவிலும் - எடுத்துக்கூறும், தந்திரம்-நூலினை பயின்றதும் பல்காற்கற்றுப் பழகியதும், இலன்-இல்லேன், தந்திரம்-தேவரீரதுசகளநிட்களஸ்வரூபத்தினையும், எனதிலக்கணத்தையும் என்னைப்பற்றி விடாதஆணவாதிக ளிலக்கணத்தினையுங் கூறும் நூலினைப் பயின்றவர்-ஆசாரியரையடுத்துக் கற்றுக் கேட்டோருடன், பயின்றதும்-பழகியதும், இலன்-இல்லேன், ஆயினும்-இவ்வகை இருபயிற்சியுமில்லேனாயினும், இயன்றது-என்னாற்கூடிய, ஓர்பொழுதின் -ஒருகாலத்தில்,இட்டது-நா னருச்சித்தது பச்சிலையாயினும், மலரா-நன்மணமலராகவும்,சொன்னது-உன்னைத்துதித்துக்கூறிய துதிகள், மந்திரம்ஆக - உன்னைத் தரிசித்தற்கு இயன்ற திருமந்திரமாக் கொண்டு, என்னையும்-இழிந்தகுணமுடைய அடியேனையும், இடர்-துன்பத்தைச்செய்கின்ற, பிறப்பு-தோற்றம்,இறப்பு-மரணம், எனும்-என்கின்ற, இரண்டின்-இரண்டினது, கடற்படாவகை-கடலினிடத்து அகப்படாதவிதம், காத்தல்-காப்பாற்றுதல்,நின்கடன்-தேவரீரது கடமையாம்.)எ-று. ஏ அசை.

கு-ரை, ஐம்புலன்களாகிய வேடர். வசப்பட்டு ஆணவாதி மலங்களிலழுந்தித் தன்னையும் தலைவனையுமறியாதுமயங்கிக்கிடக்கும் அடியேனைக் காத்து அடிமை கொள்ளற்பொருட்டுப் பாம்பைக்காட்டிப் பாம்பைப் பிடிப்பதுபோல் என்னைப்போல் வடிவுகொண்டு எழுந்தருளி என்னையுந் தன்னையுங் காட்டி அடிமைகொண்டு திருவடிதந்து ஆண்டமையின் அருள் பழுத்தளிந்த கருணைவான்கனி யென்றார். இதனை “மன்னவன்றன்மகன் வேடரிடத்தே தங்கி வளர்ந்தவனையறியாது மயங்கி நிற்பப், பின்னவனு மென்மகனீ யென்றவரிற் பிரித்துப் பெருமையொடுந்தானாகப் பேணுமாபோல் துன்னியவைம்புலவேடர் சுழலிற்பட்டுத் துணைவனையுமறியாது துயருறுந்தொல்லுயிரை, மன்னுமருட்குருவாகி வந்தவரினீக்கி மலமகற்றித்தானாக்கிமலரடிக்கீழ்வைப்பன்” என்னுந் திருவாக்காலறிக, வாளாகனியென்னாது வான்கனியென்றார், அக்கனிஞானேந்திரியங்களாகிய ஐம்புலன்களினொன்றாகிய வாய்க்கணுள்ளநாவின் ஏகதேசத்தின்றுசிப்பதன்றியேனைப்புலன்களால்மோப்பவும் பரிசிக்கவும் பெறாததுபோல் இக்கனி ஐம்புலன்களேயன்றி உள்ளும் புறமும் ஒக்கருசித்தலின் அவ்வாறு கூறினார். அளியின், உரிசையிலாது பதமழிந்ததாமாதலினவ்வாறுகூறுதலடாதெனின் அது உலகத்துக் கனிகள் போலாது தெய்வத்தன்மைத்தாதலின் அவ்வாறு பதமழிதல் செல்லாது உண்ணுதற்கு மிக்கபதமுற்றதென்க. புலன்களால் நுகரப்படுவன அசத்தாகிச் சடமா.யொழியுமாதலின் இவ்வின்பம் அவ்வாறு வேறுவேறு காலங்களில் வேறுவேறு பொருள்களால் அநுபவிக்கப்படும் அசத்தாகாமல் ஒருங்கே யொருகாலத்து அநுபவிக்கப்படுவதாதலால் ஆராவின்பம் எனவும், அதனைப் புசிக்கையில் தேவரின்பமாயினும் வெறுப்புற்ற காலத்து அமைதிபெறும். இவ்வின்பம் அநுபவிக்குந்தோறும் சால அவாத்தருதலின் தீராக்காதல் எனவுங்கூறினார். இதனை ஆராவின்பத்து ஈராக்காதல் எனப்பிரித்து இன்பத்தினின்றும் நீங்காத காதல் எனினும் ஆம். காதல் என்பது விரும்பிய பொருட்கண், செல்லும் அவா. ஈண்டு அடியவர் என்றது மூவகையான்மாக்களாகிய சகலர் பிரளயாகலர் விஞ்ஞானகலர்களில் சத்திநிபாதமானவர்க்கங்களை யென்க. அவர்கள்விஞ்ஞான கேவலிகள்முதலியவராம். இவ்வான்மாககளுக்கு விஞ்ஞானகலத்துவசித்தி, ஆசாரியனாய்த் தீக்கையிற் கலாதத்துவமளவாகக் கன்மங்களைச் சோதிக்கப்படுகையாலும், மாயையினுடையவும், ஆன்மாவினுடையவும் வியாபாரங்களைப்பிரித்தறிகின்ற ஞானத்தினாலும் சாதாரயோக தியானதியினாலும், மிக்கதபோசித்திகளினாலும் கன்மாநுகுணமாகத் தநுவை யெடுத்துக்கன்மங்கள் புசித்துத் தொலைந்த காலத்திலும், வைராக்யத்தால் சந்யாசாநுட்டானத்தாலும் சகல கன்மங்களு நசிக்க அதற்கதீனமான மாயையின்றி யாணவமலமொன்றுஞ் சேட்டித்து நிற்பதாலென்க. இனிப்பிரளயாகலசித்தி எவ்வாறெனின் ஆசாரியனால் தீக்ஷிதரானசகலர் பிரகிருதியையும் ஆன்மாவையும் உள்ளபடியறிந்த ஞானத்தினாலே யந்தப்பிரகிருதியினின்றும் முத்தனாய்ச் சிருட்டி காலத்திற் பிராக்ருதகேதத்தை யெடாமல் மாயேயமாகிய தனுவைப்பொருந்தி யதிலுண்டான கன்மபலங்களை யந்தந்தப் புவனங்களிற் புசித்துத் திர்கையாற் குணதத்துவத்திற்கு மேலு

ண்டான கன்மமும் ஆணவமும் ஆக இரண்டுடனுங் கூடினவர்களாகையிஞு லுண்டானதென அறிக, சகலத்வசித்தி எக்காரணத்ததெனின், ஆணவங் கன்மம்மாயையென்கிற மூன்று பாசங்களுடன் கூடியாணவத்தாற்றடுக்கப் பட்ட ஞானக்கிரியைகளையுடையனுய் மாயையினுல் மோகித்து நாஞுவிதமா ன கன்மங்களைப்புசித் ததனைப் புசிக்கிறகாலத்தி லாகாமிய மேறியதனிற் சஞ் சிதமாகக்கட்டுப்பட் டதனைப் புசித்துத் தொலைக்கைக் காரணமாகப் புரியட் டகரூபியாய்ப்பிராக்ருதமான வடிவையெடுத் தனுலுண்டான போகங்களைப் புசிடபதனுலுண்டான தெனவறிக. முன்னர் கூறிய விஞ்ஞானகலரும், பக் குவர் அபக்குவர் என விருவகையர். என்னெனின், நெல்முதலியவைபோல அபக்குவம் புசிக்கத்தகாதிருத்தல். சோறுமுதலியன போலப்பக்குவம் புசிப் பாகவிருத்தல். இவைபோல் மலமும்பக்வம அபக்வம்என இருவகைத்தாம்.

இவைகளைப்பெற்ற ஆன்மாக்களும் பக்குவர் அபக்குவர் எனஇதனுல் கூறப்படுவர், இதிற்பக்குவமலராவார், மலபரிபாக மிகுதியால் சிவாநுக்ரகம் பெற்றுச்சாயுச்சியமடைவோர். அபக்குவராவார், மலபரிபாக மாந்தியத்தா லே சிவமூர்த்தி யவர்களுடைய ஞானக்கிரியைகளை விளக்கி யனுக்ரகஞ்செய் யப்பட்டிருக்கையினும் சுத்தாத்வாவிற்கு அதிகாரிகளாகையால் அதிகார மலத்தைப் பெற்றிருப்போர். இது விஞ்ஞானகல பக்குவாபக்வலக்ஷணமாம். பிரளயாகலரும் பக்குவர் அபக்வர் என விருதிறப்படுவர். இவர்களுள் பக்குவ ராவார் மலபரிபாகமிகுதியாலே சிலர்க்குக்கன்மமெல்லாம் பக்குவமாயுற்றள வில்சிவன், தீவிரம் தீவிரதரமென்னுஞ் சத்தியை பதித்து நிரதிகார தீக்கை யாற் றிருக்கண்சாத்தி யவர்கள் பாசச்சேதஞ்செய்துஞானக்கிரியைகளைவிள க்கமுத்தியடைவோர். அபக்குவராவார், கன்மாநுகுணமானபோகத்தைப்புசித் துத் தொலைக்கைப்பொருட்டுப் புரியட்டகத்தைப்புவனசதேகமாகியயோனிக டோறும் பிறந்து ஒன்று திரிந்து மலகன்மங்கள் பரிபாக மானவாறே சிவ மூர்த்திசத்திபதிவித்து அறிவைவிளக்க முத்தியடைந்தவர்கள். இனிச்சகல ரும் அதிபக்குவர், மந்தபக்குவர், அபக்குவர் என மூவகையர், அதில் அதிபக் குவராகிய தேவர் தானவர் முதலாயினுரைச் சிவமூர்த்தி, தீவிரம் முதலிய சதுர்வித சத்திநிபாதத்தால் திவ்யமான திருமேனியையதிட்டித்து அவர்கள் பாசத்தைச்சேதித்து அவர்கள் ஞானக்கிரியைகளை விளக்கித்திரிகாலமுடியும ளவும் சுத்தாத்வாவிற் போகங்களைப் புசிக்கச்செய்து மகாசங்காரத்திலே மோக்ஷத்தையடைவிப்பர். மந்தபக்குவராவர், சிவமூர்த்திமந்தம் மந்ததரமெ ன்னும் சத்தியைப்பதிப்பித்துஆசாரியனை யதிட்டித்து அவர்களுக்குஅநுகுண மான தீக்கையைச்செய்வித்து அவர்கள் எப்பதத்திலிருந்து போகம் புசிக்க விரும்புகின்றனரோ அப்பதத்தில் யோசிக்கப்பெற்றவர். இனி அபக்குவர் மலபரிபாகம் பெருதாராய்த்தாங்கள்செய்தகன்மத்துக்கீடாய்ப்பெற்றசரீரத் தையெடுத்துப் போகங்களைப் புசித்துத் தொலைந்தவாறே மலபரிபாகம் வர ஆசாரியனுல் தீக்கையடைந்து மோக்ஷம் அடையுமவர். இதனை விரிப்பிற் பெருகுமாதலின் விரிந்தநூல்களாகிய பௌட்கரம், மிருகேந்திரமுதலிய வற் றினையாராய்ந்தறிக. தேவரிடத்தூற்ற அமிர்தம் உண்டார்க்கு நரைதிரை

பசி முதலியபோக்கும், இது அங்ஙனமன்றி யெக்காலத்தும் பிறவியெடாப் பேரின்பவாழ்வினை யளிப்பதாதலால் அதனிடை வேறுபட்டதென்பார் அமிர்தவாரி என்றார். அமிர்தம் மரணத்தைப்போக்குவதென்பதுபொருள். இது உபசாரம் என்னின் தேவர்களுக்கு அமிர்தமுண்டும் மரணம் மூப்புமுதலிய வுண்டென ஆகமவளவை யானறிதலின்என்க. என்னெனின், பெருந்திரட்டு "தியவசுரர் பகையுண்டுசெற்றமார்வ மிகவுண்டுநோயுண்டநங்களுருண்டு நோய்கட்கெல்லாந் தாயான, காயமுண்டுகைதொழவேண்டுநருமுண்டு கற்பத்தே" மாயுந்தன் மையுண்டானால் வானோர்க்கென்னை வளனுண்டே ! எ-ம் குருடன் புகராமார்த்தாண்டன் குட்டரோகியாமென்னு, புருடன்றலைநோய் புரந்தரற்குப்புயத்தில் வாதந்தக்கற்குச் சுரநோயுண்டு கயரோகஞ் சோமனுக்கு நீரிழிவு,வருணற் கிவ்வாறமரர்க்கு நோயுண்டுண்டே மருத்துவரும் " என்றவற்றாலறிக.

மலபரிபாகமான ஆன்மாக்களின் மலதோஷத்தினைத்திக்ஷையினால் சோதித்து முத்தியடைவித்தலின் இறைவனை வாரிஎன்றார். வாரிஎன்னும் பதத்திற்கு மேடுபள்ளங்களை மறைப்பதுஎன்பது பொருள் அதுவேகடல், நீர்கொண்டவாரி அலைதல் வற்றல்போல தன்சந்நதி மாத்திரத்தில் மூத்தேவர் முத்தொழில் செய்யாநிற்கத் தாம் வாளாமேவும் பெருந் தகைமையுடையனாதலின் நெடுநிலை யென்றார்.

மாடக்கோபுரத்தாட கக்குடுமி மழைவயிறு கிழிக்கும் என்பது அதிசயோக்தியணி. வாழ்நஎன்பது வாணஎனநின்றது மரூஉவென்ப. அன்றி இருமொழியாக்கொண்டு திரிதல்விகாரமெனினுமாம். வான்கனிமுதல், வாண, இறுதியானவை அண்மைவிளி. இறைவன்திருக்குறிப்பின் வகைநின்று ஆன்மாக்களைமுத்தியடைப்பித்தலாகியகிருத்தியங்களைச்செய்பவள்சத்தியாதலின் நின்வழிவாக்காட்சிஎன்றார். உலகமெல்லாவற்றிலுமுள்ள சராசரங்களுக்குத்தாயாய் அவர்களையளித்து உலகம் மூப்படையினுந்தான் மூப்படையாது கன்னிப்பருவமடைந்திருத்தலின் முதிராவிளமுலையென்றார். இதனைச்சிவஞ் சத்திதன்னை யீன்றுஞ்சத்திதான் சிவத்தை யீன்று, முவந்திருவரும் புணர்ந் திங்குல குயிரெல்லா மீன்றும், பவன் பிரமசாரியாகும் பான்மொழிகன்னியாகுந், தவந்தருஞானத்தோர்க்கித் தன்மைதான் றெரியுமென்றே" எ-ம் " பங்கயற்கணரிய பரம்பரனுருவே தனக்குரிய படிவமாகி, யிங்கயற்கணகனுலகமெண்ணிறந்த சராசரங்களீன்றுந்தாழாக், கொங்கையற் கண்மலர்க்கூந் தற்குமரிபாண்டியன் மகள்போற் கோலங்கொண்ட, வங்கயற்கணம்மையிரு பாதப் போதெப்போது மகத்துள் வைப்பாம்." என்பவற்றாலறிக. பாவை, பிரதிமையென்பதின் மரூஉ. இவளின் மிக்கவனப்புடைப்பொருள் வேறின்மையின் பாவை யென்றார். பாவை யென்பது கைத்தொழில் வல்லகம்மியன் கைம்முயன்று அழகு முதலிய வெய்து அமைக்கப்பட்டதாதலின் இறைவிக்கு ஏகதேசவுவமை. இறைவன் இறைவியுடனிக்கமறநின்றும் தாம் பிரமசாரியும் யோகமுதல்வரும் ஆதலின் பரமயோகி யென்றார். தேவரீர் சந்நிதிக்காண்பெருந் தேவரும் வாய்பொத்திக் கைகட்டிநிற்பர். அடியேன் பிலைகயட

கூறுது ஒரு மொழியே கூறுவன் என்பார் ஒன்று உணர்த்துவன் என்றார்.
இச்சொல் தன்னையுணர்த்தாது பொருண் மேலாதலின் ஆகுபெயர். என்தந்
தையென்பது எந்தையென மருவிநின்றது. பின்கூறப்போம் தந்தை பலரும்
அழிநிலையுடையார் என்றுசி நின்ற நீயேஎன்னை யாதரித்துக் காக்குங் கருணை
பூண்டாயாதலின அவரையொழித்து எந்தையென்றார். சேதனாசேதனத்தை
யடக்கி அகிலலோகம்என்றார். அன்றிப்பதினான்கென்னும் எண்ணினப்பாலுமி
ப்பாலுமாகிய பல்லண்டங்களெனினுமாம். நால்வகையாகிய அண்டசம் உத்
பீஜம்,சுவேதசம்,சராயுஜம் அடங்க அநந்தயோனியென்றார். இதுமுடிந்ததுமு
டித்தல் இவையனைத்தும் என்றுசிநின்றனவுமடங்க நிகிலமும் என்றார். "பூவண்
ணம் பூவின்மணம்போலமெய்ப்போதவின்ப, மாவண்ணமெய்கொண்டவன்
றன்வலியாணைதாங்கி, மூவண்ணறன்சந்நிதிமுத்தொழில்செய்யவாளா, மேவ
ண்ணலன்றான் விளையாட்டின் வினையை வெல்வாம்" என்றபடி மூவரும் சி
ருஷ்டியாதிதொழில்களைச் சந்நிதிமாத்திரையிற் செய்யாநிற்கத் தனக்குச்சிறி
தும்பற்றின்றிச் சுத்தஸ்படிகம்போல் நினைத்தமாத்திரையில் அனைத்தையு மா
க்குதலின் நினைத்த நாட்டொடங்கி யென்றார். நால்வகை யோனியிலும்
வெவ்வேறுருக்கொண்டு பலபேதப்படுதலினாலும், அவற்றில் ஆன்மா, கன்ம
த்துக்கீடாகத்தொடக்குண்டு பிறவித்துன்பமுறுதலின் எனைப்பலயோனியு
ம் நினைப்பரும் பேதத்து என்றார். உயர் திணைக்கண் ஆண் பெண் பலர் எனும்
மூக்கூறு மடங்குதற்கு யாரும் எ-ம். அவ்வாறே அஃறிணைக்கண் ஒன்றும்
பலவுமடங்க யாவையும் எ-ம். கூறினர். ஈண்டுப் பன்மைவிகுதியேற்றபா வி
னைப் பொருட்டன்று. எஞ்சாமைப்பொருட்டு. யாவையும் யாரும் என்பதின்
கண் உம்மைகள் முற்றுப்பொருள. நான் அச்சராசரங்களாகிய பொருள்க
ளிற் தனித்தனிப் பிறந்து கடைப்பட்டேன் என்பார் தனித்தனி தாயாராகி
யுந் தந்தையராகியும் வந்திலாதவர் இல்லை என்றார். அவ்வாறு அச்சராசரங்
களிற் புக்கு அவற்றை முறையே தாய் தந்தையராகப் பெற்று வளர்ந்து நான்
பருவத்தை யடைகையில் என்னைத் தாயாகவுந் தந்தையாகவுங்கொண்டுபிற
பிறப்புழி அவற்றிற்கு நான் தந்தைதாய் ஆனேன் என்பார் யானவர் தந்தை
யாகியும் எ-ம், என் பிறவிசகடக்கால்போல் தோன்றியஅன்றுதொட்டுப்பல்வ
கைப்பிறவியிற் றடுமாறி எல்லாநிலத்தினும் பிறந்தும் அவ்வகை யிறந்தும் வரு
ருதலின் பிறவாநிலனுமில்லை யவ்வயிறிறவாநிலனுமில்லை யென்றார். பிறந்தகா
லத்து என்னின் வலியுடைமையானும் என்னையொத்த பிறவியினவற்றைத்
தின்று ருசிகண்டமையானும் என்னைக் கண்டகாலத்து ஆமிடமெனத் தேறிப்
பசிநோய்போக்கச் சூறைகொள்ளும்விலங்குகளுண்மையின் எனைத்தினுயிர்
களுமில்லை எ-ம். அவ்வாறே யானும் சேதனமென்னுஞ் சேற்றினைப் பெருத
செந்துவாகப்பிறப்புழி எனது பசிநோய் களைவான் என்னிற்கீழ்ப்பட்டு எனை
க்கண்டதுணையானே யஞ்சியடங்கும் பிராணிகளைக்கவர்ந்து அவற்றைப்பசிக்
கு மருந்தாக் கோடலின் யானவைதமைத் தின்றுதொழிந்தது மில்லையென்
றார். கொலைப்பாவம் விளைக்குந் துன்பம் எனைப்பாவங்களெல்லாங் கூடியும்
விளைவிக்கமாட்டா கொல்லாமைதானே பிற அறங்களெள்ளாவற்றின் பய
ன்களைத்தருமெனவும், எல்லா அறங்களினும், ஏற்றமுடைத்தாகவுங்கூறப்ப

டுதலின். அடிகள் வாணாளிறைவனடி ஞானமின்றி வீணாளாயொழிந்தவென விரங்கி அனைத்தேகாலமுஞ் சென்றதென்றார். இயன்ற தோர்பொழுதினிட் டராதுமலராச்சொன்னதுமந்திரமாகக்கொண்டுகொப்பாய்என்னுந்தெளிவுடைமையின் யானிதன்மேல் இனைக்கு மாறிலேனே என்றார். நீ சோதிக்குட் சோதியாகிய பரஞ்சோதியாயினும் உன்னை மந்திரத்தால் வசப்படுத்தல் ஆகுமென்பார் நின்னஞ்செழுத்தென்றார். சிவாகமங்க ளிருபத்தெட்டினையும்மற்றய வேதங்களையுமடக்கி அஞ்செழுத்து நவிலுந்தந்திரம் என்றார். அடியேன் அவ் வேதசிவாகமங்களைக் கற்கவலியிலேனாயினும் அதனையோதி யுணர்ந்து அத்தக ஒழுகும் ஒழுக்கமுடையாரைப் பின்பற்றி யொழுகினேனல்லன் என்பார். தந்திரம் பயின்றவர்ப்பயின்றதுமிலேனே என்றார். சிவபூசையைக் கடைபிடித்து அதனால் முத்தியடையு முறைமைகொண்ட முத்தராவார் சிவாகமத்திற் கூறியமுறைப்படி தக்க காலங்களிற் சிவபூசைசெய்வார் அங்ஙனம் யான் செய்யேனாயினும் அடியேன் பலபொழுதுகொண்ட ஓர் நாளின் பாகத்தை யுனக்காக்கியதை, யேற்க என்பார்; இயன்றதோர் பொழுதின் என்றார். இதற்கு "தேச மிடங் காலந் திக் காசனங்களின்றிச் செய்வதொன்றுபோற் செய்யாச்செயலதனைச் செய்தாங், கூசல்படு மனமின்றி யுலாவனிற்றலுறக்கமுணர்வுண்டி பட்டினியிருத்தல்,கிடத்தல்,மாசதனிற்றூய்மையினில் வறுமைவாழ்வில் வருத்தத்தில் திருத்தத்தின்மைதுனத்திற் சினத்தி, லாசையினில் வெறுப்பிலினவயல்லாது மெல்லாமடைந்தாலு ஞானிகடா மரனடியை யகலார். என்றதாற்காண்க. புறம்பேயு மரன் கழல்கள் பூசிக்கவேண்டின் பூமரத்தின் கீழ் விழுந்தபோதுகளுங்கொண்டுசிறந்தாங்குச் சீர்ச்சிவனை ஞானத்தாலங்குச்சிந்திக்கும்படியிங்குச் சிந்தித்துப்போற்றி, என்றபடி பூமரத்தின்கீழ் உதிர்ந்தசருகு இலைமுதலிய எதுகொள்ளினும் ஏற்க வென்பார் இட்டது மலரா எ-ம், இதனாலன்றே பச்சிலை பழம் போதேனும் பரித்திட்டுப் பத்திசெய்வார்க், கெச்சமிலிருமைப் பேறும் கொடுத் தருளிறைவ போற்றி, என்று பிறருங் கூறினர். உன்திருநாமம் அனைத்தும் உன்னைத்துதித்தனவேயாம் ஆதலின் யானவைபயின்றுளேன் ஆதலின் உன்னைக்குறித்துக் கூறியகாலத்து அவையுனைக்குறிக்கும் மந்திரமாக எண்ணுகவென்பார்சொன்னதுமந்திரமாக எ-ம் பிறவி, துன்பந்தருவதாதலால் இடர்பிறப்பு எ-ம். அதுகாரண காரியத்தொடர்ச்சியாய் நிற்றலின்கடல்எனவுங். கூறினார்,

வெண்பா.

கடலான காமத்தே காமுழ்வர் துன்பம்
அடலா முபாய மறியார்-உடலாம்
முழுமலத்தை யோர்கிலார் முக்கட் பெருமான்
கழுமலத்தைக் கைதொழா தார். (அ)

(இ-ள்) முக்கண்-திரிநேத்திரங்களையுடைய, பெருமான்-பெருமையிற்சிறந்த சிவமூர்த்தியெழுந்தருளியிருக்கும், கழுமலத்தை-திருக்கழுமல வளநகரினை, கைதொழாதார்-கைகொண்டு வணங்கா அறிவிலிகள், கடலானகாமத்தே-(காமந்தலைப்பட்டார்) ஆழுங்கடலானகாமத்தில், கால்தாழ்வர்-அழுந்துவார், துன்பம்-பிறவித்துன்பம், அடல் ஆம்-நீறாகும், உபாயம்அறியார்-தந்திரத்தையுணரார், உடல் ஆம்-தேகமாகிய, முழுமலத்தை-நிறைந்த மலபாண்டத்தை (யழிவுடைத்தென்று) ஓர்கிலார் - ஆராய்ந்தறியார். எ-று.

சிவமூர்த்தியை வணங்காதார், தாங்கொண்ட முழுமலவுடம்பை யறியாதவராகிக் காமக்கடலிலழுந்துவர். என்பது கருத்து.

(கு-ரை) அச்சம்பெரிதும் இன்பஞ்சிறிதுமாயினுங் காமங்கதுவப்பட்டார்,கும்பிக்குள் கூர்த்த வினையுடைத்தென்றறியாது வரைவின் மகளிரோடும் பிறன்வரைநின்றாரோடும் இழிகுலமகளிரோடும் வரையறையின்றிக்கூடி அறம்புகழ்கேண்மை பெருமைமுதலிய இழந்து அதி லழுந்துதலின் கடலானகாமம் எனவும், அன்றி "உலகமெல்லாம் பொது நீக்கி யொருகோலோச் சிப்புரந்திடினும் இலகுமவலி நவமணி பூணிமைக்கும் பொற்றூ சணிந்திடினும் அலகிலாதபெருஞ்செல்வமளகேசன் போற்றுய்த்தாலும்,கலகவிழியார் முயக்கற்றார் காலானடக்குங்கழிபிணமே" எனவும், "கன்னலன்றி வேம்பு நுகர்காமத்துரோகிகள் போற, பின்னையொருதெய்வத்தைப் பேசோமே, யென்நாளுஞ் சாற்றுவதுங் காமகலைசாதிப்பதுங் கரணம்,போற்றுவதுங்காமனடிப்போது" எனுங்காமநூலார் மதம்படக்கடலானகாமம் என்றார். எனினும் ஆம். அதிலழுந்தினார் சேற்றிலாழுங் காரான்போல் எழுந்து அறநெறி புகுதாராதலின் கால் தாழ்வர் எ-ம். மற்றையதீமைகள் செய்யுந் துன்பத்தினும்மிக்கதென்பார் காமத்தே எனப்பிரிநிலையேகாரமிட்டுப் பிரித்தார். இதனைக் கொண்டார் விளிந்தாரின்வேளில்லர்மன்ற, தெளிந்தாரிற் தீமை புரிந்தொழுகுவார் என்றவாறாய்த் தம்மையுந் தலைவனையுமறந்து பிராரத்தத்தை யொழிக்கும் வகையில்முயலாது தாம்மேற்கொண்ட இணைவிழைச்சினையே இன்பமெனக்கொண்டுவாணாளிழத்தலின் துன்பம் அடலாம் உபாயமறியார் என்றார். உபாயமாவது, நல்லோரையும்சிவனடியவர்களையு மடுத்து அவர்களுக்கு ஏவல் செய்து உபசரித்து அவரருள்பெற்றுத்தன்னையுந் தலைவனையு மறியப்புகுதல். இவ்வகைப் பெறுதற்கரிய பிறவியினைப்பெற்றும் இறைவனது கல்யாணகுணங்களிலழுந்தி யப்பேரின்பந்துய்க்க முயலாது சின்னீரதாகிய சிற்றின்பம்விழைந்து காலனுக் கிடங்கொடுத்துக் கணத்தில்மாய்வர் எனத்தம்மினங்கண்டு வருந்துவார் அறியார் என்றார். குடருங்கொழுவுங் குருதியு மென்புந்,தொடரு நரம்பொடு தோலுமிடையிடையே வைத்ததடியும் வழும்பும் முதலிய மல மூத்திராதி கோழை முதலிய நிறைந்தபாண்டத்தைஒருவுருவாகப் பிரமன்கருமத்திற்கீடாய்ப் பூமியிற்பிறப்பிக்கவைத்தான் இதனது நிலைமை நீரிற்குமிழி அதன் மேலெழுத்து எனவெண்ணார் என்பார் முழுமலத்தை யோர்கிலார் என்றார். இவ்வகைத் தேகமே நித்யம் அத்தேகத்தாலார்ச்சித்த பொருள் அழியாத்தன்மைத்து பெண்டு பிள்ளை முதலிய வெல்லாம் கெடாநிலை

மைத்து எனவெண்ணி அவற்றிடஞ்சத்திய புத்திசெய்வோரே, இறைவன் ஒருவன் உளன் அவனைத் தொழுதுய்யவேண்டியே இத்தேகம் அவனால் கருணையாகவெண்ணி அளிக்கப்பட்டது என எண்ணாது வாணாள்வீணாள் போக்கிப்பொருட்களை நல்வழியாகிய சிவாலயத்திருப்பணி முதலியவற்றில் செலவிடாதும் அவன் திருக்கோயில் வலம்வராதும் அவனுக்கென எழுந்தகரங்களால் அவனைப்பணியாதும் ஆணவமிகுதியால் அவனையும் அவ னடியவர்களையு மிகழ்ந்து நரகமடைவார என்பார் கழுமலத்தைக் கைகொழாதார் என்றார். கடல் என்பது கள்தல் எனப்பிரித்துத் தோண்டப்பட்ட தெனப் பொருள் கொள்ப அடல் தொழிலாகு பெயராய்த் தீயுண்டுமிழ்ந்த சாம்பற் காயிற்று, மலம் என்பது (மலதேதரா யதி தேஹமிதிமல:) எனும் விற்பத்தியால் தேகத்தைத்தரிக்கச்செய்வது என்பது பொருள். மலமாவன ரத்தம், சீ, குறும்பி, கொழுப்பு, கோழை, கண்ணீர், கண்பீளை, மலம், மூத்திரம், முதலியன.

கட்டளைக்கலித்துறை.

தொழுவாளிவள்வளை தோற்பாளிவளிடர்க்கேயலர்கொண்
டெழுவாளெழுகின்றதென்செயவோவென்மனத்திருந்துங்
கழுவாமணியைக்கழுமலவாணனைக்கையினிற்கொள்
மழுவாளனைக்கண்டுவந்ததென்றாலொர்வசையில்லையே, (கூ)

(இ-ள்.) இவள் - அவனைக்காணாது கேள்விமாத்திரையில் வருந்து மிவள், தொழுவாள் - (அவனது சீர்கேட்டுத்) தொழுவாள், வளைதோற்பா ளிவள் - இவள் தனது கரத்தில் அணிந்திருந்த வளைகளையிழப்பள், இடர்க்கே - இங்ஙனம் வருந்துந் துயருக்கு ஆற்றாதவளாய், அலர்கொண்டு - புலம்புதலைக் கொண்டு, எழுவாள் - நிலைநின்று நீங்குவாள், எழுகின்றது - இங்ஙனம் இவள் சித்தவேறுபாடு கொண்டெழாநின்றது, என் செயவோ-யாதுசெய்யவோ, (தெரிந்திலேம்) என் மனத்து - எனது மனத்தில், இருந்தும் - நீங்காதிருந்தும், கழுவாமணியை - சுத்தஞ்செய்யாத மாணிக்கத்தை, கழுமலவாணனை திருக்கழுமலத்தைக் கோயிலாக்கொண்டவனை, கையினிற்கொள் - திருக்கரத்தில் கொண்ட, மழுவாளனை - மழுவாயுதத்தையுடையானை, கண்டு - தரிசித்து, வந்தது என்றால் - இவ்வேறுபாடு வந்தது என்றால், ஓர்வசையில்லை - ஒரு பழியும் நேராது. எ-று.

இது தலைவியின் வேறுபாடு கண்டதோழியூரலர் கூறுதற்கஞ்சி இவ்வகை வருந்துவாள் நிலைமை, கழுவாமணியாங் கழுமலவாணன் பொருட்டுக் கொண்டதெனின் பழியின்று எனக்கூறுநிற்றல்.

(கு-ரை.) அவள் கொண்ட மனப்புழுக்கந் தீரக் குளிர்ந்ததனதுபார்வையாற் கருணைசெய்து தனது திருக்கரத்தால் அவள் கரத்தினைப்பற்றித் தேற்

றுன் என்பாள் தொழுவாள் எனவும், அங்ஙன நினைந்தாளிடத்து இரக்கஞ் சிறிது மிலனாய் நின்றதனால் அவள் கவலைகொள்ள அதனால் மனமெலிய அம் மெலிவு காரணமாகத்தேகம்வாட அவ்வாட்டங் காரணமாகக் கரவளை நெகிழ்ந்தது என்பார்வளைதோற்பாள் எ-ம், இவட்கு இத்தலைவனிடத்து மனம் பதியாமுன் வளைக்கிடங்கொடாது நின்றகரம் இப்போது அதுகொள்ள இளைத்ததென்பாள் தோற்பாள் எனக்கூறினான். இவள் என இருமுறை கூறியது அன்பு மிகுதிபற்றியென்க. வளையென்பது ஆகுபெயராய் வளைந்த அவ்வணி குறித்து நின்றது. இவ்வகை யன்புமாசையுமுற்ற என்னிடத்துச்சிறிதுங் கருணைசெய்யான் பொருட்டுப் பலருங்நகைகூறிப் பழிகூறும் வகை அதனை யலர்தூற்றுவான்கொண்டு புறம்போவாள் என்பார் இடர்க்கேயலர் கொண்டெழுவாள். எ-ம். இவ்வாறு பலவிதப்படசெய்கை செய்து புலம்புதல் இன்னகாரணமெனத்தேறேன் வேறேது நினைவோவென்பாள் எழுகின்றதென் செய்வோ என்றாள், இங்ஙனம் தொழுதலும் வளைதோற்றலும், அழுதலும், எழுதலும், பிறர்காரணமாகவன்றிக் கழுமலவாணன் பொருட்டெனின் உலகர் வசை கூறுர். இது அவனிடைப்பதிந்த அன்பு காணமாகக்கொண்டதென விரங்குவர் என்பார் வசையில்லை என்றாள். ஆணவம், கன்மம் மாயை முதலிய மலத்தைக்கொண்ட எனது மனதினையிடமாகக்கொண்டிருந்தும் உயர்ந்த நவமணிகளும் தாழ்ந்த இடங்களாகிய இப்பி, பவளப்பூச்சி, மலைக்குகை, முதலிய இடங்களிற் சனிக்கினும் அவற்றிற்கு அப்பிறப்பிடத்தினுற்ற குற்றம் நேராவகைதான் சிறிதுங் குற்றமிலாத நிர்மலன் என்பார் என் மனத்திருந்துங் கழுவாமணியை என்றார். இவ்வகை அவட்கு நேர்ந்த துன்பங்களை நீக்குதல் அவற்குச்சாலவெளிது என்பாள் கையினிற்கொள் மழுவாளன் எனவுங் கூறினாள். அவனது சகளத்திருவுருவின் அழகினை கண்ணால் நோக்கி மனத்திற் சிக்கெனப்பிடித்து அவனது அனந்த கல்யாண குணங்களை யநுபவித்தலால் வந்தபித்தெனின் வசையின்றென்பாள் கண்டு வந்தது. என்றாள் எனினும் ஆம். இதனைக்கண்டு உவந்த தெனப்பிரித்து கண்டு மனங்களித்ததாலுண்டாய தெனினும் பொருந்தும். என்றாளெனவே இது நான்கூறின் ஏலாது கண்டார் கூறின் நன்றென்றதாம்.

இணைக்குறளாசிரியப்பா.

வசையில்காட்சி யிசைநனிவிளங்க
முன்னணிகழ்ந்த பன்னிருகத்து
வேறுவேறுபெயரி னூறின்றியன்ற
மையறுசிறப்பிற் றெய்வத்தன்மை
புகலிநாயக விகல்விடைப்பாக
அமைநாண்மென்றோ ளுமையாள் கொழுந
குன்றுகுனிவித்து வன்றோளவுணர்
மூவெயிலெரித்த சேவகத்தேவ
இளநிலாமுகிழ்க்கும் வளர்சடைக்கடவுணின்

நெற்றியிற்சிறந்தவொற்றைநாட்டத்துக்
காமனைவிழித்த மாமுதுதலைவ
வானவரறியா வாதியானே
கல்லாவுளத்திற் புல்லறிவுதொடர
மறந்துநோக்கும் வெறுந்தண்ணுட்டத்துக்
காண்டொறுங்காண்டொறு மெல்லாம்யாண்டை
யாயினும்பிறவு மென்னதும்பிறரதும்
ஆவனபலவு மழிவனபலவும்
போவதும்வருவது நிகழ்வதுமாகித்
தெண்ணீர்ஞாலத்துத் திரண்டமணலினும்
எண்ணில்கோடி யெனைப்பலவாகி
இல்லனவுளவா யுள்ளனகாணுப்
பன்னாளிருள்வயிற் பட்டேனன்னதும்
அன்னதாதலி னடுக்குமதென்னெனின்
கட்புலன்தெரியாது கொட்புறுமொருவற்குக்
குழிவழியாகி வழிகுழியாகி
ஒழிவின்றொன்றி னொன்றுதடுமாறி
வந்தாற்போல வந்ததெந்தைநின்
திருவளர்நாட்டங் கருணையிற்பெறலும்
யாவையுமெனக்குப் பொய்யெனத்தோன்றி
மேவருநீயே மெய்யெனத்தோன்றினை
ஓவியப்புலவன் சாயல்பெறவெழுதிய
சிற்பவிகற்ப மெல்லாமொன்றில்
தவிராதுதடவினர் தமக்குச்
சுவராய்த்தோன்றுந் துணிவுபோன்றனவே. (சO)

(இ-ள்) வசையில்-குற்றமற்ற, காட்சி-தோற்றத்தினையுடைய, இசை-புகழானது. நனிவிளங்க-மிகுதியும் விளங்க, முன்னாள்-பூர்வத்தில், நிகழ்ந்த-நடந்த, பன்னீர் உகத்து-பன்னிரண்டு யுகங்களில், வேறுவேறுபெயரின்-வெவ்வேறு திருநாமங்களால், ஊறு இன்று - தடையின்றி, இயன்ற-தோன்றிய மை அறு-குற்றமற்ற, சிறப்பின் -மேன்மையினையுடைய, தெய்வத்தன்மை-தெய்வத்தன்மைகொண்ட, புகலிநாயக-திருப்புகலியை யிடமாகக் கொண்டானே, இகல் பகைவரைவருத்தும், விடைப்பாக-இடபத்தை வாகனமாகவுள்ளவனே. அமை-மூங்கில் வெட்கிப் பின்னிடும், மெல்தோள்-மிருதுவாகிய தோள்களையுடைய, உமையாள் கொழுந-திருநிலைநாயகியாகிய பிராட்டிக்குத்தலைவனே, குன்று-மேருமலையினை, குனிவித்து-வளையச்செய்து, வல்தோள் அவுணர்-வலியதோள்களையுடைய அசுரரிருக்கையாகிய, மூன்று எயில்-திரிபு

ரங்களை, எரித்த-திக்கிரையாக்கிய, சேவகத்தேவ- ஏறுசேவகனுகிய தேவ னே, இளநிலா-இளஞ்சந்திரன், முகிழ்க்கும்-அரும்புகின்ற, வளர்சடைக்கட வுள்-வளர்கின்ற சடையினையுடையகடவுளே, நின்-தேவரீருடைய, நெற்றி யிற்சிறந்த-நெற்றியினிடத்துமிருந்துள்ள, ஒற்றைநாட்டத்து-ஒன்ருகிய திரு நேத்திரத்தால், காமனை-மன்மதனை. விழித்த-விழித்து எரித்த. மாமுதுதலை வ-பெரிய முதன்மைபெற்ற மூத்தோனே, வானவர் அறியா-தேவர்களறியா த, ஆதியானே-முதற்பொருளே, கல்லாவுள்ளத்தின் - அறிவில்லாதவுள்ள த்தில், புல்லறிவுதொடர-அற்பமாகிய அறிவுதொடரப்பட்டு, மறந்துநோக்கு ம்-மறப்படைந்தறியும், வெறுமைதண்நாட்டத்து-பயனற்றகுளிர்ந்த நோக்கத் தால், காண்தொறும்காண்தொறும்-பலகால் காணுந்தோறும், எல்லாம்-உல கப்பொருள்கள் முழுதும், யாண்டை ஆயினும்-(அவ்வகைக்காணப்பட்டவை) எவ்விடத்தவாயினும்,பிறவும்-மற்றவும்,என்னதும்-எனக்குரியதும்,பிறரதும்-பிறருக்குரியதும், ஆவனபலவும்-பலவிருத்தியுடையனவும்,அழிவனபலவும்-பல அழிவுடையனவுமாகி, போவதும்-இறப்பனவும்,வருவதும்-பிறப்பனவும் நிகழ்வதும்-நிகழ்ந்துகொண்டிருப்பனவும், ஆகி-ஆய், தெள்நீர்ஞாலத்து-தெ ளிந்த நீர்சூழ்ந்த பூமியில், திரண்ட - கூட்டங்கொண்ட, மணலினும்-மணலி னைக்காட்டினும், எண் இல்கோடி-அளவு இல்லாத பலகோடி,எனைப்பலவாகி பற்பலவகையாகி, இல்லன உளவாய்-அழிவனதோற்றுவனவாயும், உள்ளன காணு-இருப்பவை அழிவனவாகவும், பல்நாள்-இவ்வகைப்பலகாலம், இருள் வயின்-அஞ்ஞானமாகிய அந்தகாரத்தில், பட்டேன்-அகப்பட்டு மயங்கினேன் அன்னதும்-மேற்கூறியபொருட்களினிலக்கணம், அன்னது-அத்தகைய அழி தன்மாலையதே, ஆதலின்-ஆதலால், அடுக்கும்-அதுஅவ்வகைசெய்தல் பொரு த்தமுடைத்தேயாம், அது என்ன எனின்-அது எக்காரணத்தாற் கூறுகின்ரு ய் எனின், கட்புலன்தெரியாது-கண்ணறிவினுல்விளக்கமுறநோக்காது,கொட் புறும்-மனக்கலக்கத்தை யடையும், ஒருவற்கு-ஒருவனுக்கு, குழிவழியாகி குழியே வழியாகவும், வழிகுழியாகி - வழியேகுழியாகவும், ஒழிவுஇன்று ஒழியாமல்,ஒன்றின் ஒன்று-ஒன்றுக்கொன்று,தடுமாறிவந்தாற்போல-மயங்கி வந்ததையொப்ப,வந்தது-நேர்ந்தது, எந்தை-என்தந்தை யானனே,நின்-தேவ ரீருடைய.திருஅருள்நாட்டம்-திருவருளாகியநோக்கத்தினை,கருணையின்-திரு வருளால், பெறலும்-அடியேன் அடைதலும், யாவையும்-சராசரங்களயாகி உலகமுழுதும், எனக்கு - உன்னருள்விளக்கம்பெற்ற அடியேனுக்கு, பொய் எனத்தோன்றி-பொய்யாகக் காணப்பட்டு, மேவரும் - பொருந்துத லருமை யான, நீயே-ஒருவனுகியநீயே, மெய்யெனத்தோன்றினை - உண்மைப்பொரு ளாகக்காணப்பட்டாய், ஓவியப்புலவன் - சிற்பநூல் வல்லவனுகிய புலவன், சாயல்பெற-அழகுற,ஒன்றில் எழுதிய-ஒருகருவியால் எழுதிய,சிற்பவிகற்பம் எல்லாம்-சிற்பவேறுபாடுகள்முழுதும், தவிராது-சிறிதும்விடாமல், தடவினர் தமக்கு-தடவிய குருடருக்கு, சுவராய்த்தோன்றும் - (அவை) சுவராகவே கா ணப்படும், துணிவு போன்றன-துணிவையொத்தன. எ-று.

சிவமூர்த்தி, நான்எனதுபுல்லறிவால் இப்பிரபஞ்சத்தை முக்காலத்தும் ஆவதாகவும், அழிவதாகவும், இல்லனஉள்ளவாகவும்,உள்ளனஇல்லவாகவும்

கண்டுமயங்கினேன், தேவரீரது கருணைநோக்கம் பட்டமாத்திரையில் உலகம் பொய்யெனவும் நீயொருவனுமே உண்மைப்பொருளெனவும் கண்டு தெளிந்தேன் என்பது கருத்து.

(கு-ரை.) பிரமகற்பமுதலிய கற்பங்கள் முடிந்து ஊழிவெள்ளங்கொள்ளுங்காலத்துங் கெடாமல் அக்கற்பங்கடோறும், ஒவ்வொருதிருநாமங்கொண்ட தலமாதலின் முன்னாணிகழ்ந்தபன்னிருகம், எனவும், அங்ஙனம் வெள்ளங்கொண்டுவேறுபெயர்பெற்றதலத்து அக்காலத்துப்பூசித்தவர்களாலிடப்பட்டதிருநாமமும் அவர்கள்தொட்டுப்பூசித்ததீர்த்தமும் வேறுவேறாதலின் வேறுவேறு பெயரின் எனவுங்கூறினார். சீர்காழிக்குரிய பன்னிரு திருநாமங்களை மும்மணிக்கோவைக்குச்சொன்ன இலக்கணத்துக்கூறினும், மூர்த்திகளின் திருப்பெயர்களும்தீர்த்தங்களின் பெயரும் பெரும்பாலுங் காணப்படவில்லை. ஆயினும்மூர்த்திகள் பன்னிருகத்திற்குப்பன்னிருதிருநாமம் பெற்றவர் இவர்களென்ன விளங்கவில்லை. பிரமலிங்கம் தோணியப்பர் தண்டபாணி முதலியவர்க்கே சிறப்பும் பூசனையுமதிகம். ஏனைய பிரதிட்டைகள் இந்திரன் திக்குப்பாலகர் பார்க்கவன் முதலியவர்களால் செய்யப்பட்டன. அவை அவர்கள் பெயரானே விளங்குவன. அஃதன்றியத் தலத்துப் பல தேவாசுரர்கள் சிவப்பிரதிட்டைசெய்து பூசித்ததாகத் தலபுராணங் கூறுகின்றது. அதனை "இயக்கர்கின்னரர் சித்தவித்யாதரரிமையவருரகேசர், பயக்குமைங்குரோசத்தளவெல்லையும் பலவகையிலிங்கங்கள், நயக்குமாணிறீஇ வழிபட விருத்தலினகரமிங்கிதைமேலோர் மயக்கமிலிலிங் காடவியென்றலான் மண்ணுமவ்வடிவாமால்,, என்பதாலும் அத்தலத்திற்கும் மூர்த்திக்குந்தீர்த்தத்திற்கும் பன்னிருதிருநாமம் உண்டென்பதை "எண்ணிலாத தொல்லிலிங்கமும்பெயருநல்லெழிற்றடங்களும் வாய்ந்து நண்ணியோங்குவ விந்நகரியற்றின் முந்நான், குபுண்ணியமூர்த்தி, தண்ணிலாவியதடங்கண்முந்நான்கபிதான முந்நான்காக, உண்ணிலாவுமாலிவற்றிறும்பூதெலாமுரைசெயக் கரையின்றே". என்றதலவிசேடத்தாற் காண்க. தீர்த்தங்களை யப்பிரதிட்டை செய்வித்தார் பெயரானே அறிக. இவற்றானன்றே பெயரின் ஊறின்றியன்ற என்றதுபோலும், ஒரு கற்பத்திற் சூரபன்மனுக்கஞ்சித்தேவர்கள் அடைக்கலமடையக்கண்டசிவமூர்த்தி குமாரக்கடவுளைவிளித்து அவ்வசுரனைச்சங்கரிக்கக்கட்டளையிட்டனர்' அக்காலத்துத்தேவர்க்குப் புகல் ஆனதலம் ஆதலால் புகலியெனப்பெயர்பெற்றதெனவும், கலியின்கொடுமைக் கஞ்சிய தருமதேவதை நாரதமுனிவர் சொற்படி இத்திருப்பதியையடைந்து சிவமூர்த்தியை யெண்ணித்தவம்புரிந்து தன்மீதெழுந்தருளியிருக்கவும், அழியாநிலையடையவும், பெற்றமையால் புகலி எனத்திருநாமம்வந்தது, அவ்வகைத்தேவர்கள் அடைக்கலமடையக்காத்தருளிய தேவரீர் என்பொருட்டுக் கருணைசெய்துபுகலாவீர் என்பார்மையறு சிறப்பிற்றெய்வத்தன்மைப்புகலிநாயக என்றார். இவளவதரித்த மலைக்கண் உடன்பிறந்தும் அவளது தோளின் அழகுமுதலியவற்றைப் பொழிலாடுமிடத்தும் நீர்விளையாட்டினும் பலமுறைகண்டும் அவளது தோளுக்குத்தோற்றதென்பார், அமைநாணுமென்றோள் உமையாள் கொழுந என்றார். உமையாள் என்னு மொருமொழி

யை இருமொழியாக்கிப் பிராட்டி ஆள்வதற்குக்கொழுகொம்பானவன் எனப் பொருள் கொள்ளினும் ஆம். கொழுநன் என்பதில் கொழு, பற்றுக்கோடு ந் பெயரிடைநிலை, அன்விகுதி யெனக்கொள்க. நீ எல்லாம் வல்லவன் உன் முன்னெதிர்ப்பவர் ஒருவரும் இலர் அங்ஙனமெதிர்த்து நிற்பினும் உனதா ற்றலுக்கு ஒருகணமும் போதார் என்பார்,குன்று குனிவித்து வன்றோளவுண ர்மூவெயிலெரித்த சேவகத்தேவ என்றார்.

வளர்தலும்தேய்தலு மின்மையின் இளநிலாமுகிழ்க்கும், எ-ம், இறைவனுக் குத்திருமேனி அவனிற்றோன்றிய உலகமேயாதலின் அவனது சடிலம் திக் குகள் முழுதும்பரக்கும் விசாலமுடைத்தாகலின் வளர்சடைக்கடவுள் என் றார். இதனாலன்றே "தாழ்சடை எட்டுத்திசையும் வீசி" என அம்மையா ரும் திருவாய்மலர்ந்தது, வளர்சடைவினைத்தொகைக்குறிப்பு. மன்மதனையும் அனலாசுரனையும், வச்சிரகேசியையும், எந்திராசுரனையும் எரித்த மகாவீரமு டைமையின் அவ்வாற்றல்தோன்ற நெற்றியிற் சிறந்த ஒற்றை நாட்டம் என் றார். அனைத்தும் அழிந்தகாலத்தும் நீ அழியாது நிலைபெற்றவன் என்பார் மாமுது தலைவ என்றார். அங்ஙனமாயினும் பசுக்களாகியதேவர்கள்முதலியோ ரால் அறியப்படாய் என்பார் வானவர் அறியா ஆதியானே என்றார், அடி யேன் பன்னூல்களைக் கற்றுத்தெளிந்தும் உன்னை அறியும்அறிவு இல்லாமை யின் கல்லாவுளம் எ-ம். பற்றினதைவிட்டும் விட்டதைப்பற்றியும் தடுமாறிக் கொட்புறு கறங்குபோல்வருதலின் புல்லறிவு எ-ம். அங்ஙனம் அவ்வறிவாற் கடைப்பிடித்து ஒன்றைப்பற்றினும் அவைமுற்கணத்திலிருந்து பிற்கணத்தில் மறத்தலின் மறந்துநோக்கும் வெறுந்தண்ணுட்டம் என்றார். காண்டொறும் காண்டொறும் என்றது பன்மை பற்றிய அடுக்கு "எல்லாம் யாண்டை ஆயி னும் முதல், அடுக்கும், என்பதன்காறும் உலகத்துப் பொருள்களி னிலையின் மை கூறப்பட்டது. இவ்வுலகத்தோற்றக்கேடுகளை யடியேன் கண்கூடாகக் கண்டேன் என்பார். உடம்பட்டு அடுக்கும் என்றார். இங்ஙனம் நிலைபேறி லாவுலகை யசத்தியமெனகேட்டும் கண்டும் நீ அதனிடை சத்திய புத்தி வைத்ததென்னை யென்பார்க்கு விடைபருகவார் போன்று "கட்புலன் என்று தொடங்கி வந்தது" எனமுடித்தனர். இருவர், ஒருவருக்கொரு வர் வினு விடைபடக்கூறிய திவ்வகவற்பாவென்க. நீகருணைக்கருவூல மாத லின் அவ்வேறுபாட்டினைத்தந்தையாயினுன் மகற்குற்றஇடுக்கணைமாற்றுதல் போல் மாற்றவல்லையென்பார் எந்தையென்றார். தேவரீர் கருணையால் என் னைக் காக்கவேண்டு மனக்குறிப்புக் கொண்டவுடன் திருவரு ளென்னிடம் பதிந்ததென்பார், திருவருணுட்டம் கருணையிற்பெறலும் என்றார்.மண்பெண் பொன்முதலிய எல்லாம் இனன்முன் இருளெனவலிகெட்டொழிந்த வென் பார் யாவையும் பொய்யெனத்தோன்றி எ-ம். அங்ஙனம் எல்லாம் பொய்ப டஒழிந்து நின்றவன் நீயே யாதலின் வேதங்கூறியபடிமேவரு நீயே மெய் யெனத்தோன்றினை யென்றார். மேவரும் என்பதற்கு அருள்சுரக்கும் எனப் பொருள் கூறலும் ஒன்று. அன்பேவலையாகக் கட்டியாளும் அடியவர்க்கன்றி மற்றையோர்க் கணுகலாகா அழல்போல் அகன்று நிற்றலின் மேவரும் நீயெ

ன்றூர். நீயே எனும் ஏகாரம் தேற்றமும் பிரிநிலையுமாம். மெய்யென்றது அப்பண்புடைப்பொருளுக்கு ஆகுபெயர். ஒன்றில் என்பதைச் சாயல்பெற என்றதற்குப் பின்னர் கூட்டிப் பொருள்கொள்க. உயிருள்ள சரங்கள் என மயங்கும்படியெழுதப்பயின்று தேர்ந்த கைவல்லவன் என்பார்ஓவியப்புலவன்சாயல்பெறவெழுதிய எனவும், அவன் எழுதிய பல்வகை வுருவங்கள் கண்ணால் வேறு படக்காண்போர்க்கு வெவ்வேறாக மயங்கத்தக்கவை யென்பார் சிற்பவிகற்பம் எனவும் கூறினூர், தவிராது எனவே சிறிதும் விடாது பார்த்தவர்கள் என்பது கூறப்பட்டது, தடவினர் என்றதனால் தடவுந்தொழிலுடையார் அந்தகராதலின் அதற்குக் குருடர் எனப் பொருள் கூறினும். தடவினர் தமக்கு எனவே அங்ஙனஞ் செய்வார் பலர் என்பது போந்தது எனவே சுவரில் எழுதிய சிற்பவிகற்பம்போல வுலகமும் அதை ஒக்கநோக்குங் குருடன்போல் அதனறிவும் கூறப்பட்டது.

வெண்பா.

எனவே யெழுந்திருந்தா ளென் செய்வாளின்னஞ்
சினவேறுகாட்டுதிரேயென்னு-மினவேகப்
பாம்புகலியாநிமிரும் பன்னாச்சடைமுடிநம்
பூம்புகலியானிதழிப் போது. (கக)

(இ-ள்.) இனம் - கூட்டமாகிய, வேகம் - வேகத்தினையும், பல்நா-பலவாகிய நாவினையு முடைய, பாம்பு - அரவங்கள், கலியா-ஒலித்து, நிமிரும்-எழுகின்ற, சடைமுடி-சடைமுடியினைத்தாங்கிய,நம்-நமது,புகலியான்-பூம்புகலியில் எழுந்தருளிய சிவமூர்த்தியின், இதழிப்போது - கொன்றைமலர்மாலை, எனவே - என்று கூறுதலும், எழுந்திருந்தாள் - உயிர்பெற்று எழுந்திருந்தனள் (அவ்வகைக்கூறியபடி காணாமையால்) என்செய்வாள்-என் செய்கிற்பாள், இன்னம்-இவ்வகைத்துன்பம் அடையும் எனதுநிலைநிகண்டும்,சினஏறு-கோபமுள்ள அவனது இடபச்சேவையை, காட்டுதிர் - காட்டுகின்றீர்கள் என்னும் - என்று கூறுவாள் எ-று.

இறைவனது திருஅடையாளமாலையாகிய திருஇதழிமாலைக்கண்மால்கொண்டு மயங்கும் தலைவியின் நிலைகண்ட தோழியர், அவள் தேறும்வகை இதழித்தார் என, வெழுந்து அது காணது வருந்த, விடையின் மேல் வருவானைக்காட்ட நீவிர்நான் விரும்பியதைச்செய்யாமல் விடையைக் காட்டுகின்றீர் என்று வருந்திக்கூறுதலாம்.

(கு-ரை.) சாம் நிலைமைத்தாகிய மக்களுயிர் நீங்காது வருந்துதலைக்கண்டவுலகத்தவர்,அவ்வுயிர் பெண்,பொன், மண் மக்கள்,இவற்றில் ஒன்றில்தொடக்குற்றுத் துன்புறுகின்ற தெனக்கருதி, அவற்றில் அவ்வுயிர்க்குப்பட்டதைக் கூற நீங்குநிலைத்தாகிய அது, தளிர்த்துக்கண்விழித்துநோக்குதல்போல்இறைவனது இதழிமாலைக் கண் அவாக்கொண்டு அயனிடைலயப்பட்டாளுக்குப்

பாங்கரிருந்ததோழியர் அவட்குயிருண்டோவின்றேவெனக்காண்பான்வேண் டி அவள்காதல்கொண்டானது அடையாள மாலையாகிய இதழியென,ஆவெ ன்று உயிர்பெற்றெழுந்தாள்என்பார்எனவே யெழுந்திருந்தாள்என்றார். என வே என்பதுஎன்றுகூறவெனப்பொருள்படுதலால் சொல்லெச்சம். எழுந்திரு ந்தாள்ஒரு சொல்லின் தன்மைத்தெனக்கொள்ளாமல் இருசொல்லெனக்கொ ண்டு எழுந்து இருந்தாள் எனக்கொண்டு உயிர்பெற்று எழுந்து சிறிது இருந் து வினாவி எனப்பொருள் கூறினும் ஒன்றும். பிறர்வயப்பட்ட பொருளைக் கோடல், கொண்டான் இரக்கமுற்றுத்தரின் அல்லது கூடாது ஆதலால் அ து தனது வசத்ததன்று என்பார் கண்டவர் கூற்றுப்போல் என் செய்வாள் என்றார். தனது கூடாநிலைகண்டுந் தேறாராய்த்தாமதத்தொழில் செய்கின் றார் என்பார், இன்னம் எனவும், காமாதி தோஷங்களைக் கண்டகால த்து வெறுக்கும் பெருந் தகைமை யுடையது என்பார் சினவேறு, எ-ம் இவ்வகை பலர்கூடியும் ஒருத்தி படுந்துயரைப்போக்க வல்லீரல்லீர் என் பார் காட்டுதிர் எ-ம்,கூறினாள். காட்டுதிரேற்றீரும் எனவும் பாடங்கூறுவர். நாகம்,காளி, காளாத்திரி, யம, யமதூதன், என்னும் பற்களால் பசியுற்ற கா லத்தும், பயந்த காலத்தும், நொந்த காலத்திலும் கோபத்தால் பற்கண்விட மிகுதலாலும், மிதித்தலாலும், தேவர்,முனிவர், காலன்முதலியவர்கள் ஏவலி னல் பிராணிகளைக்கடிக்கும். அங்ஙனம் கடிக்குமிடத்து அப்பற்களால் விடம் பாயும் வேகம் மூன்றுவகை, அவை வாயுவேகம், வருணவேகம், தேயுவேக மெனப்படும். அவற்றுள் வாயுவேகம், எட்டுவகை, வருணவேகம், பத்து வகை, தேயுவேகம் பத்துவகை, அவற்றுள் வாயுவேகத்திற்கு மாத்ரை ஐம் பது, வருணவேகத்திற்கு மாத்திரை பதினெட்டு, தேயுவேகத்திற்கு மாத்தி ரை தொண்ணூற்றெட்டு, அவற்றுள் வாயுவின் முதல் வேகத்திறகு மூர்ச் சித்து வேர்க்கும், இரண்டிற்கு வெதுப்புண்டாகும், மூன்றிற்குக்கண் செரு கும், நான்கிற்கு வாந்தியுண்டாம், ஐந்திற் கோழை, ஆறிற்கு அறிவழியும் ஏழிற்கு விரைத்திடும் எட்டிற் குயிர்போம், என்க. இரண்டாவதாகிய வரு ணவேகத்திற்கு, ஒன்றிற்கு மயிர்க்குச்செறியும், இரண்டிற்குவாயுலரும் மூன் றிற்கு மதிமயங்கும், நான்கிற்குக் கபமிகும். ஐந்திற்குத்தலைநடுங்கியறிவழியும் ஆறிற்குக் கண்விழித்து முகடு பார்க்கும், ஏழில் உடல் விறைக்கும எட் டினில் அடங்கும் ஒன்பதிற்குச்சுக்லம் வெளியாம், பத்தில்மரணம், என்க தேயுவின் முதல்வேகம் கண்சிவந்து முகங்கருகும், இரண்டில் நீர் தடித் துக் கடுத்திறங்கி முகம் வெளுத்து உடல் முழுதும் ரோமம்புல்போல் குச் செறிய நிற்கும், மூன்றில், வாய்குழறிச் சிந்தைகலங்கியுடல்நொந்து விழும் நான்கில், குடலிரைந்து நாசியினீர்வடிந்து பொலிவழியும். ஐந்தில் விழி உடல் வெடுவெடென நடுங்கிடும், ஆறில் பற்கடித் துடல்விறைக்கும். ஏழில் சொல்கெடும். எட்டிற் சுவாசமெழுந்து கண்கள் மேனோக்கும், ஒன்பதில் உயிர் ஒடுங்கும், பத்தில் உயிர் பரந்திடும் ஆதலின் இனவேகப் பாம்புகலி யா நிமிரும் என்றார். கருடன்கொணர்ந்த அமிர்தஞ்சிந்திய தருப்பையினை நக்கியுருசித்துத் தருப்பையால் வாய் பிளவுண்டமையின் பன்னு என்றார் பன்னுவென்பதனை வேகத்துடன் கூட்டிப் பொருள்கொள்க. இதழி, கொ

ன்றை. அது ஏனையமலர்களிற் சிறந்த மணங்கொண்ட இதழ் பெற்றதனாற் பெற்ற பெயர் என்க. இதழ், இ எனப் பிரிந்து இகரத்தை பொன்றன் படர்க்கை விகுதியாக்குக. போது பொழுதுஎன்பதன்மரூஉமொழி இதுஆகு பெயராய் மலரினை யுணர்த்திற்று.

கட்டளைக்கலித்துறை.

போதும்பெறாவிடிற் பச்சிலையுண்டுபுனலுண்டெங்கு
மேதும்பெறாவிடினெஞ்சுண்டின்றேயிணையாகச்செப்புஞ்
சூதும்பெறுமுலைப்பங்கர்தென்றோணிபுரேசர்வண்டின்
றாதும்பெறாதவடித்தாமரைசென்றுசார்வதற்கே. (கஉ)

(இ-ள்.) செப்பும் - கிண்ணத்தையும், சூதும் - சொக்கட்டான் காயையும், இணையாக - ஒப்பாக, பெறு - அமையப் பெறாத, முலை - ஸ்தனங்களையுடைய பிராட்டியை, பங்கர் - ஒரு பாகமாகக்கொண்டவர், தென்றோணிபுரேசர் - தெற்கின்கணுள்ள திருத்தோணி புரமென்கிற சீர்காழிப் பதியையிடமாகக்கொண்டவரது, வண்டு - வண்டுகள் மொய்க்கின்ற, இன்தாதும் - இனிய மகரந்தங்களையும், பெறாத - பெற்றிராத, அடித்தாமரை - திருவடித்தாமரைகளை, சென்று சார்வதற்கு - போய் அடைவதற்கு, இன்று - இப்போது, போதும்பெறாவிடில் - நல்ல மலர்கள் பெறாவிடில், பசுமை இலைஉண்டு - பச்சிலையேனும் உளது (அப்பச்சிலையும் பெறாவிடில்) எங்கும் - எல்லாவிடங்களிலும், புனலுண்டு - நீர் உளது, ஏதும்பெறாவிடில் - முற்கூறிய மூன்றும் கிடைக்காவிடின், நெஞ்சு உண்டு - மனம் உளது, (அதுகொண்டு அவனை வழிபடுக) எ-று. மனமே அவனைப்பூசிப்பதற்கு எங்கும் மலருண்டு இலையுண்டு நீருண்டு அவற்றால் புறப்பூசை செய்து புண்ணியங்கொள்க அன்றியவை பெறாவிடின் மனத்தாற் முற்கூறிய மூன்றையுங்கொண்டு பூசித்து வழிபடுக என்று அவனையடையும் உபாயங்கூறியதாம்.

(கு-ரை.) கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூக்களில் இன்னமலர் இன்ன காலத்தில் சாத்தினிறைவனுக் காமெனக்கூறியமுறை சாத்தமுடியாவிடின் என்பார், போதும், எனவும் அங்ஙனம் நியமித்தபுட்பங்கள் கிடையாவிடின் நியமமின்றி யெல்லாமலரும் சாத்தலாம் என்ற "கூறும் பூவிங்கிதுவென்று குறிப்பாருளரோ குவலயத்தில் நாறும் பூவுந்தேவருக்கா நாறாப்பூவுந்தேவருக்காந், தேறும் பூவையாகமத்திற் கரைகண்டவரார் சிவன் முடிமேல், ஏறுக பூவாய்வனத்திலுள்ளவெல்லாப்பூவும்பயன்படுமால்." என்றமுதுமொழிப்படி பலமலருஞ் சாத்துக அவையுங் கிடையாவாயின் என்பார் பெறாவிடின் எ-ம் அங்ஙனம் ஆகமத்தில் விதித்தபடிபோதும் பெறாவிடின் வில்வம், துளசி, நொச்சி நறுவிளா, கிளுவைபத்ரம் மாவிலிங்கை அறுகு முதலிய பத்ரங்களும் சாத்தலாம் என்பார் பச்சிலையுண்டு எ-ம் கூறினார். மேற்கூறியவற்றுள் அறுகு ஒழிந்த ஏனையவை பஞ்சவில்வமெனப்படும். அதனை "மெச்சியே யடியவர் வியந்து சாத்திடும், நொச்சியே நறுவிளாநுவன்றகூவிளம் வைச்சிங்

கிளைவையேமாவிலங்கையின் பச்சிலையென்றிவை பஞ்சவில்வமே” என்றதாற் காண்க. அவ்வகை பச்சிலை பழம் போதேனும் கிடையாவிடின் குடங்கையா னீர் கொண்டேனும் பூசிக்கினும் களித்துத்தன்பதம் தருவான் என்பார் புனல் உண்டு அப்புனல் கொண்டு பூசிக்கவியலாதுகாண் என்பையேல் புறப்பூசையொழிந்து அவ்வகையகத்தில் ஆர்வமெனும் பூக்கொண்டு மனக்கோயிற்கண் எழுந்தருளிய மகாதேவனை அன்பெனு நீராலாட்டியபிடேகித்துத் தோத்திரிக்க என்பார் ஏதும் பெறுவிடினெஞ்சுண்டென்றார்.

இணைக்குறளாசிரியப்பா.

சார்ந்தவர்ப்புரக்குமீர்ஞ்சடைப்பெரும
கருணைமுதுவெள்ளம்பெருகுதிருநயந
கைவநெல்லியங்கனியதுபோலச்
சைவசித்தாந்தத்தெய்வவாகமத்தை
வரன்முறைபகர்ந்ததிருமலர்வாய
பவளவரைமீதிற்றவளமின்னென்னச்
செப்பருமார்பணிமுப்புரிநூல
போரிகலாணவக்காரிருளினுக்கும்
பின்றொடர்வல்வினைவன்றொடரினுக்கும்
மாயைமாமாயையாயபேயினுக்கும்
அஞ்சலென்றமைத்தகஞ்சமென்கரதல
வருமறைச்சிரத்தும்பெருமைமெய்யன்பர்
துங்கவிதயத்துந்தங்குபொற்பாத
துன்னியபயோதரமின்னினமிடைதலி
னளப்பரும்பெருமைவளத்தினைவிளைத்தலின்
சந்திரதிலகஞ்சிந்துரமருவலி
னுறுகண்டரவந்துறுமுழையுறுதலின்
சாதமுறைசூழிச்சோதிமீதமர்தலின்
பணையெழுமரவம்பிணையொடுமேவலின்
காமரஞ்செவ்வழிகாமரினெய்தலி
னளகையெதிரென்னுமாசையுற்றுறைதலி
னுடகமருவிநீடறைபெறுதலின்
நாட்டியத்தோகையீட்டமங்கணைதலின்
அகத்தியன்மன்னுமகத்துவஞ்சிவணலின்
மலையாசலமெனநிலைசேர்மாட
மாளிகைசூழ்ந்தசூளிகைப்புரிசை

நேமிமால்வரை யெனப் பூமிமீதிலங்குங்
காழிமாநகரத் தூழிதோ றமர்ந்த
வமையாவன்பி னுமையாள் கொழுந
தெரிபநான் முகன்பணி பெரியநாயகநின்
பொன்மலர்ப்பாதஞ் சென்னிவைத் திறைஞ்சுதும்
மேற்படுமிதயப் பாற்கட னடுவுட்
பரம்பரைதவரூ வரம்பெறு குரவன்
மருளறவிரங்கி யருளிய குறியெனு
நிநைதயில் கனக மந்தரநிறுவி
மாணறிவென்னுந் தூணிடைப் பிணித்த
நேசமென்னும் வாசுகி கொளுவி
மதித்தலென்னு மதித்தலை யுளுற்றிய
பேரா வின்பச் சீரானந்தப்
பெறலரு மமுதந் திறனொடும்பெற்று
ஞானவாய்கொண்டு மோனமா யுண்டு
பிறப்பிறப்பென்னு மறப்பெரும் பயத்தாற்
பன்னாட்பட்ட வின்னாங் ககற்றி
என்னையுந் தன்னையு மறந்திட்
டின்பமேலீ டெய்துதற் பொருட்டே. (கரு)

(இ-ள்.) சார்ந்தவர்-அடைந்தவர்களை, புரக்கும்-காக்கின்ற, ஈரம்-குளிர்ச்சியாகிய கங்கையினையணிந்த, சடை-சடைமுடியையுடைய, பெரும-பெருமானே, கருணை-திரு அருள் என்கின்ற, முதுமைவெள்ளம் - பெருவெள்ளம் பெருகு - சுரக்கின்ற, திருநயன - திருநேத்திரங்களையுடையானே, கைவலம்-கையின்கணுள்ள, நெல்லியங்கனியதுபோல-அழகிய நெல்லிக்கனியதுபோல, சைவசித்தாந்தம் - சைவசித்தாந்தத்தை விளக்கும், தெய்வஆகமத்தை - தெய்வத்தன்மை தங்கிய சிவாகமங்களை, வரன்முறை - பரம்பரையின் வரலாற்றுமுறைப்படி, பகர்ந்த - திருவாய்மலர்ந்தருளிய, திருமலர் வாய - அழகிய தாமரைபோலும் திருவாயையுடையானே, பவளவரைமீதில்-பவளமலையின் மீது, தவளமின்என்ன - வெண்மையாகிய மின்னல்தங்கியதென்னும்படி,செப்பஅரும் - சொல்லுதற் கருமையாகிய, மார்பு - திருமார்பில், அணி - அணியப்பெற்ற, முப்புரிநூல - மூன்றுப்புரிகொண்ட பூணுநூ லணிந்துளானே, பெருமைஇகல் - பெரிதாகிய பகைமைகொண்ட, ஆணவக் கார்இரு ளினுக்கும் - ஆணவமாகிய கரிய இருட்கும், பின்தொடர் - அதனைவிடாது பின்பற்றுகின்ற, வல்வினை - (கன்மம் என்கின்ற) வல்வினையாகிய, வல்தொடரினுக்கும் - வலிய சங்கிலியாகிய விலங்கிற்கும், மாயைமாமாயை - மாயை, மகாமாயை, ஆய - ஆகிய, பேயினுக்கும் - பேய்க்கும், அஞ்சல் -(நீ சிறிதும்)பயப்படாதை

என்று - என்று கூறி, அமைத்த - அபயந்தர அமைத்த, கஞ்சமென்கரதல - மிருதுவாகிய தாமரைபோலும் திருக்கரத்தினை யுடையானே, அருமறைச்சிரத்தும் - அருமையாகிய வேதத்துச்சியினும், பெருமைமெய் அன்பர் - பெருமைதங்கிய உண்மை நாயன்மாரது, துங்கம் - உயர்வுதங்கிய, இதயத்தும் - மனத்திடத்தும், தங்கு நிலைபெற்றிருக்கும், பொன்பாத - அழகிய திருவடியை யுடையானே, (மாடம்) துன்னிய - நெருங்கிய, பயோதரம் - தனங்களையுடைய, மின்இனம் - மின்னலையொத்த இடைகளையுடையபெண்கள்கூட்டம் மிடைதலின் - நெருங்கலாலும். (மலையாசலம்) துன்னிய - நெருங்கிய, பயோதரம் - மேகங்களும், மின்னினம் - மின்னின் கூட்டங்களும், மிடைதலின் - நெருங்குதலாலும், (மாடம்) அளப்பரும் - அளவிட்டுக் கூறல் ஆகாத, பெருமை - பெருமைவாய்ந்த, வளத்தினை - செல்வ வளத்தினை, விளைத்தலின் - தருதலாலும், (மலையாசலம்) அளப்பஅரும் - உயரம் இவ்வளவினதென்று அளத்தற்கரிய, பெருமை - பெருமையினையும், வளம் - பல வளப்பங்களாகிய மணிமுதலியவைகளையும், தினை - தினைப்பயிர்களையும், விளைத்தலின். விளையப்பெற்றிருத்தலாலும், (மாடம்) சந்திரதிலகம் - சந்தனத்தாலாகிய திலகத்தினையும், சிந்துரம் - செஞ்சாந்தினையும், மருவலின் - பெற்றிருத்தலாலும், (மலையாசலம்) சந்திரம் - செருகம் புல்லினையும், திலகம் - திலகமென்னுமரத்தினையும், சிந்துரம் - புளியமரத்தினையும், மருவலின் - பெற்றிருத்தலாலும், (மாடம்) உறுகண்தீர - துன்பம் நீங்கும்படி, வந்து - காற்று, உறு - புகுகின்ற, உழை - இடங்களாகிய (சாளரங்களை) உறுதலின் - பெற்றிருத்தலாலும், (மலையம்) உறு - பெரிய, கண்டீரவம் - சிங்கங்கள், துறு - நெருங்கிய, முழை. குகைகளை, உறுதலின் - பெற்றிருத்தலாலும், (மாடம்) சாதம் - உபரிகைகள், முறைசுழீஇ - முறையாகச் சூழப்பட்டு, சோதிமீது அமர்தலின் - பிரகாசமுள்ளகலசங்களைப் பெற்றிருத்தலாலும், (மலையாசலம்) சாதம் - இளம்புற்களால், முறைசுழீஇ - முறையாகச்சூழப்பெற்று, சோதிமீது அமர்ந்தலின் - சோதிவிருக்ஷங்கள் தங்குதலாலும், (மாடம்) பணையெழும் - பெண்கள்கூட்டத்தா லுண்டாம், அரவம் - ஓசையை, பிணையோடுமேவலின் - இரட்டையாகிய தம்பதிகளைப் பெற்றிருத்தலாலும், (மலையம்) பணை - மூங்கில்களுடன், எழு - உண்டாகின்ற, மரவம் - குங்குமமரங்கள், பிணையொடுமேவலின் - ஒன்றோடொன்று பிணைபட்டிருத்தலாலும், (மாடம்) காமரம் - இசையுடன் கூடிய, செவ்வழி - செவ்வழியெனும் பண், காமரின் - அழகாக, எய்தலின் - பொருந்தி யிருத்தலாலும், (மலையம்) செவ்வழி - செந்நிறத் தேய்வைகளையும், காமரம் - ஆலமரங்களையும், காமரின் - புளிநரளைகளுடன், எய்தலின் - பெற்றிருத்தலாலும், (மாடம்) அளகை எதிர்எனும் - வடக்கின்கணுள்ள அளகைக்கு எதிர் என்றுசொல்லும், ஆசைஉற்று உறைதலின் - திசையைப்பொருந்தி யிருத்தலாலும், (மாடம்) நாடகம்மருவி - பலவிதநாடகங்களைப்பெற்று, நீடுஅறைபெறுதலின் - நீண்ட உள்ளிடங்களைப் பெற்றிருத்தலாலும், (மலையம்) நாடு - ஆராயத்தக்க, அகம் மருவி - (பரந்த) இடங்களைப்பெற்று, நீடு அறை பெறுதலின் - நீண்டகுகைகளைப்பெற்றிருத்தலாலும், (அன்றி) ஆடுஅகம் மருவிநீடு அறைபெறுதலின் எனப்பிரித்து நடனஞ்செய்யு மிடங்களைப்பெற்று நீண்ட

அறைகளைப்பெற்றிருத்தலாலும் எனவும்,(மலையம்) ஆடகம்அருவி, நீடு அறை பெறுதலின்-பொற்குவைகளைக்கொண்ட அருவிகளையும், நீண்டதாரைகளையும் பெற்றிருத்தலாலும், எனவும் பொருள்கொள்க, (மாடம்) நாட்டியத்து-நடனஞ்செய்தலால் உண்டாம், ஓகையீட்டம் - களிப்பின்மிகுதி, அங்கு அணைதலின் - அவ்விடத்துப்பொருந்துதலாலும், (மலையம்),நாட்டியத்தோகையீட்டம் - நடனஞ்செய்கின்ற மயிற்கூட்டங்கள், அங்கு அமர்தலின் - அவ்விடத்துப் பொருந்துதலாலும், (மாடம்) அகத்தியல் - இல்லறவிலக்கணம், மன்னும்-நிலைபெற்ற, மகத்துவம் - புதல்வரைப்பெறுகை, சிவணலின் - பொருந்துதலாலும், (மலையம்) அகத்தியன் - அகத்தியமுனிவன், மன்னும் - பொருந்தியிருக்கும், மகத்துவம் - மேன்மையினை,சிவணலின் - பொருந்துதலாலும் மலையாசலம் என - பொதிகைமலையென்று, நிலைசேர்மாடம் - மேனிலைகளமர்ந்தமாடங்களையுடைய. மாளிகைசூழ்ந்த - மாளிகைகள் நெருங்கிய, சூளிகைப்புரிசை - சிகரங்களைக்கொண்ட மதில்கள், நேமிமால்வரையென - சக்ரவாளகிரியென்று சொல்லும்படி, பூமிமீதுஇலங்கும் - பூமியின்மீது விளங்கும்-காழிமாநகரத்து - சீர்காழிப்பதியில், ஊழிதொறுமமர்ந்த-பல்லூழிகாலம் எழுந்தருளியிருக்கும், அமையா அன்பின் - இவ்வளவைத்தெனக் கூறல் ஆகாத அன்பினையுடைய, உமையாள் கொழுந - பார்வதிபிராட்டியாருக்குத்தலைவனே, தெரிய - நீ தலைவனென்றுணர, நான்முகன்பணி - பிரமன் வணங்கும், பெரியநாயக-பெரியநாயகனென்னுந் திருநாமமுடையானே, மேற்படும் - உயர்வுபெற்ற, இதயப்பாற்கடல் நடுவுள் - இருதயமாகிய பாற்கடலினிடையில், பரம்பரைதவறு - குருபரம்பரையினின்று மாறுதலில்லாத,வரம்பெறு குரவன் - சிரேஷ்டமாகிய ஞானாசாரியன், மறுஅற - எனது அஞ்ஞானமயக்கமொழிய, இரங்கி - அடியேனிடத்து இரக்கமுற்று, அருளிய - உபதேசித்தருளிய, குறிஎனும் - உண்மை யுணர்தற்கு நிலைத்தகுறி என்கிற. நிந்தைஇல் - நிந்தனையொழிந்த, கனகமந்தரம் - பொன்னாகிய மந்தரமலையினை. நிறுவி-நாட்டி, மாண்அறிவுஎன்னும் - மாட்சிமைகொண்ட அறிவுஎன்கின்ற, தூணிடைப்பிணித்த - தூணில்கட்டிய, நேசம் எனும் - அன்பென்கின்ற, வாசுகிகொளுவி - வாசுகிஎனும் பாம்பினைத்தொடுத்து, மதித்தல்என்னும்-ஆராய்தல் என்கிற, மதித்தலையுஞற்றிய-கடைதற்றொழிலைச்செய்த, பேராஇன்பம் - நீங்காத இன்பமென்கிற, சீர் ஆனந்தம் - சிறப்புற்ற ஆனந்தமாகும், பெறல் அரும் - பெறுதற்கருமையாகும், அமுதம் - அமுதத்தினை, திறனொடும்பெற்று - வகையுடன் அடைந்து, ஞானவாய்கொண்டு - ஞானமாகிய வாயால், மோனமாவுண்டு - மௌனமாகவுட்கொண்டு, பிறப்பு இறப்பு என்னும் - தோற்றக்கேடுகள் என்கிற, மறப்பெரும் பயத்தால் - கொடியபெரும்பயத்தினால், பல்நாள் - பலகாலம், பட்ட - அனுபவித்த, இன்னாங்கு - துன்பங்களை, அகற்றி - நீக்கி, என்னையும் தன்னையும் - என்னையும் அவனையும், மறந்திட்டு - மறந்து; இன்பமேலீடு - பேரின்பமாகியமேலிடத்தை, எய்துதற்பொருட்டு - அடையும்வகை, நின்பொன்மலர்ப்பாதம் - நினது அழகிய மலர்போலுந் திருவடிகளை, சென்னிவைத்து - முடியின்மீது வைத்துக்கொண்டு, இறைஞ்சுதும்-வணங்குவோம். எ-று.

(கு-ரை.) தன்னையடைந்தவர் எவராயினும் அபயமெனிற் றுன்பம்நீக்கித் திருவடிதருதல் அவனது இயல்பாதலால், சார்ந்தவர்ப்ட்ரக்கு மீர்ஞ்சடைப் பொருந என்றார். இதனை "யன்பருக்கன்பனே யாவையுமா யல்லையுமாய்" எ-ம், "தீர்ந்தவன்பாயவன்பர்க் கவரினுமன்பபோற்றி, பேர்ந்துமென்பொய்மை யாட்கொண்டருளிடும் பெருமைபோற்றி, வார்ந்தநஞ்சயின்று வானோர்க்கமுதமீ வள்ளல்போற்றி, யார்ந்தநின்பாத நாயேற்கருளிடவேண்டும்போற்றி" எ-ம், வருவனவற்றாலறிக. முன்னொருகாலத்துப் பகீரதன் வேண்ட அவற்கு அருளியகருணாகரன் என்பார், ஈர்ஞ்சடைப்பொருந எ-ம், ஆன்மாக்கள் தன்பொருட்டு கல்லாலெறிதல், வில்லாலெறிதல், பிரம்பாலடித்தல்,காலாலுதைத்தல் முதலிய செயினும் அவற்றை நன்மையெனக் கொண்டாளுங் கருணைக்கடவுள் என்பார். "கருணை முதுவெள்ளம் பெருகுதிருநயன் எ-ம், கைவலம் என்பதில்வலம்எழனுருபு, அணுசதாசிவர் அநந்ததேவ நாயனார் முதலியோருக்கு வேதசிவாகமங்களைக் கருணையுடன் குருசிஷ்ய பரம்பரையாக அருளிச்செய்த மகாதேசிகனாதலின் "கைவலநெல்லியங்கனியதுபோல, சைவசித்தாந்த தெய்வ ஆகமத்தை வரன்முறைபகர்ந்த திருமலர்வாய என்றார். இதனை" ஆரணமாகமங்கள் அருளினா லுருவுகொண்டு காரணனருளானாகிற் கதிப்பவரில்லையாகும், நாரணன் முதலாயுள்ள சுரர் நரர் நாகர்க்கெல்லாஞ், சீரணி குருசந்தானச்செய்தியுஞ் சென்றிடாவே' என்ற திருவிருத்தத்தாற்காண்க. ஏனைய ஆசாரியர்கள்போல் அன்று இவனேயுண்மைப்பொருளை உணர்த்தும் உண்மையாசா ரிவனுணர்த்தினதையொழிய வேறுபொருள்யாண்டும் இல்லைஎன்பார். "கைவலநெல்லியங் கனியென்றார். வரன் முறைபகர்ந்ததாவது, குருபரம்பரையாகக் கூறியது அது சம்ஹிதாக்கிரமம், கௌகக்கிரமம் என இருவிதப்படும் அவற்றுள் சம்ஹிதாக்கிரமமாவது சதாசிவதேவநாயனார் காமிகமுதலிய சிவபேதம் பத்தினையும் முதற்கண் அணுசதாசிவத்திற்கும், பின்பு அநாதிஸ்வயஞானமுதலான வற்றைப்பதினெட்டுருத்ரர்க்கும் அநுக்ரகஞ்செய்தது. கௌகக்கிரமமாவது-சிவன் அஷ்டவித்தியேஸ்வராருக்கு முதலனுக்கிரகஞ்செய்து, பின்புகீழுள்ள உருத்திரர்க்குரைத்தது. இதுவும்சம்பந்தத்தால்அறுவிதப்படும்.அவைபரமசம்பந்தம்,மகாசம்பந்தம்அந்தராயம், திவ்யம், திவ்யாதிவ்யம், அதிவ்யம் எனப்படும். அவற்றுள்சிவமூர்த்திக்கும்,அணுசதாசிவத்திற்கும் உள்ளசம்பந்தம் பரமசம்பந்தமாம். அநந்ததேவருக்கும் சீகண்டருக்கும் உள்ளசம்பந்தம் மகாசம்பந்தமாம். சீகண்டருக்கும், தேவருக்கும் உண்டானசம்பந்தம் அந்தராளமாம். தேவர்க்கும் இருடிகளுக்கும் உண்டான சம்பந்தம் திவ்யமாம். முனிவர்க்கும் மானுஷர்க்கும் உண்டானசம்பந்தம் திவ்யாதிவ்யமாம். குருக்களுக்கும் சீடர்களுக்கும்உள்ள சம்பந்தம் அதிவ்யமாமெனவறிக. பின்னும் சிவமூர்த்தி சிவாகமங்களைக்கூறியமுறையில் சிவபேதம் எனவும், ருத்திரபேதம் எனவும், இருவகைப்படும். அவற்றுள் சிவபேதம் ஸ்ரீ காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், திப்தம், சூக்ஷ்மம், சஹஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம், எனப்படும். ருத்திர பேதம் விஜயம், நிஸ்வாஸம், ஸ்வயம்பூ, ஆக்னேயம், வீரம், ரௌரவம்,மகுடம், விமலம், சந்த்ரஞானம், முகபிம்பம், புரோத்கீதம், லஹிதம், சித்தம்,

சந்தானம், சர்வோத்தமம், பாரமேஸ்வரம், கிரணம், வாதுளம் முதலிய. இவற்றைக்கேட்ட சிவருத்திரர்களான் ஆகமங்களுக்கும் சிவபேத ருத்ரபேத மெனப்பெயர் கூறப்பட்டது. இவற்றைக்கேட்ட சிவர், ப்ரணவர் முதல்சசி ஈருளுர்.மற்றப் பதினெண்ணுகமத்தைக்கேட்டோர் அநாதிருத்ரர்முதல்மஹா காளர் இறுதியானுர். இறைவனது திருமுகமுதலிய அங்கமே யாகமங்களெ னக் கூறப்படுதலால் அதனைத் தெய்வ ஆகமம் எனக்கூறினுர். அங்கமிலான் ஆன்மாக்கள்பொருட்டு அருட்டிருமேனி பூண்டு கேட்குந்தோறும் அமுதஞ் சுரக்கு மினிய சிவாகமத்தை அருள்சுரந்தளித்தமையின் மலர் வாய என்ருர். பிரவாளமென்பது பவளமெனத்திரிந்து நின்றது. வரை கணு அதுமூங்கிலை யுணர்த்தி ஆகுபெயராய் அம்மூங்கில் தானிருக்கும் மலையினை யுணர்த்தின மையால் இருமடியாகுபெயர்.பவளவரைமீதிற்றவளமின் இதுதற்குறிப்பேற் றமென்னும் உத்பிரேக்ஷாலங்காரம்.இறைவனுக்கு எண்டிக்கும்எட்டுத்தோள் களென்ப. அங்ஙனம் கூறினும் அக்கூற்று ஔபசாரிகமேயன்றி உண்மை பல்லாயிரந்தோள் பல்லாயிரமுடிமுதலியவே யென்றுங்கூறப்படுதலால் ஈண் டுச் செப்பருமாரென்ருர். இதனை "அடியாயிரந்தொழி லாயிர மாயிரமாயி ரம்பேர் முடியாயிரங் கண்மூவாயிர முற்றுநீறணிந்த, தொடியாயிரங்கொண் ட தோளிரண்டாயிரமென்றுநெஞ்சே, படியாயிராப்பகற் றென்மருதாளி யைப் பற்றிக்கொண்டே" என்றருளிய அடிகள் திருவாய்மொழியா னறிக. ஐவகைப்பாசபந்தங்களில் முற்பட்டு உயிர்க்களுக்குப் பந்தமாயிருத்தலால் பேரிகலாணவம் எனவும், அஃது, இருள் கண்களிருந்தும் பதார்த்த தரிசன த்தில் கண்களின் வலிகெடுத்தல்போல், ஞானமிருந்தும் அதனைப் பிரகாசிக் கவொட்டாது தடுத்தலின் காரிருள் எ-ம், இப்பெரும்புலியைத் துணைகொ ண்டு செல்லும் வேங்கைக்குருளைபோல் ஆணவத்தைத்துணைகொண்டுகன்மம் பின்செல்லுதலின் பின்தொடர்வல்வினை எ-ம்,அதுஅநாதியேஆன்மாவைச்ச ங்கிலிபோல் தொடர்ந்து நிற்றலின் வன்றொடர்எனவுங்கூறினுர். மாயை மா மாயைஇவையிரண்டும் ஆன்மாவைப்பிடித்துப் பீடிக்க இறைவனருள் விளங் கியதுணையானே கலங்கியோடுதலின் இறைவனது பரிக்ரகசக்தியுள் ஒன்ரும் மாமாயையுமியைத்துப்பேயென்ருர். நீஐவகைப்பேய்களே முதலியவற்றிற்கு அச்சுற்று நாணடைந்தனை இனி அஞ்சல் என்று அபயந்தந்தமையின் அமை த்தகஞ்சமென்கரதலம் என்ருர். அங்கங்களிற் சிறந்தது உத்தமாங்க மாகிய சிரம்போல் வேதத்திற் சிறப்புற்ற இறைவனது திருக்கல்யாண குணங்களைக் கூறிய பாகம் சிரமெனப்படுதலின் அருமறைச்சிரத்தும், எ-ம்- சுத்தராகிய சிவனடியார் இதயம் சுத்தமான நிர்மலதைக்கொண் டிருத்தலின் மெய்ய ன்பர் துங்க இதயத்தும் எனவுங் கூறினுர்.

வெண்பா.

பொருளாசை பெண்ணுசை பூவாசையென்னு
மருளாசை யாமாசை மாற்றித்-தெருண்ஞான
வேந்தராய் வாழலா மெய்யன்பா னன்னெஞ்சே
பூந்தராய் நாதரைநீ போற்று. (கஃ)

(இ-ள்.) நல்நெஞ்சே - நல்லமனமே, பொருள் ஆசை-பொருட்கண்ணுள்ளபேராசை, பெண்ஆசை - பெண்கள் மீது வைத்த பெருங்காதல், பூ ஆசை-மண்ணின்மீது வைத்த ஆவல், என்னும் - என்கிற, மருள்-மயக்கத்தைத் தருகின்ற, ஆசையாம் - ஆசையெனப்படும், மாசை மாற்றி - குற்றங்களை மாறும்படிசெய்து, தெருள் - தெளிவையுண்டாக்கும், ஞான - ஞான பூமிகளேழிற்கும், வேந்தராய் அரசர்களாய், வாழலாம் - வாழ்ந்திருத்தலாகும், மெய் அன்பால் உண்மையாகிய அன்பினால், பூந்தராய்நாதரை - திருப்பூந்தராயில் எழுந்தருளியிருக்கும் சிவமூர்த்தியை, நீபோற்று-நீ துதிப்பாயாக. எ-று.

(கு-ரை.) இது மண் பெண் பொன் என்னும் மீஷணத்திரயம் போக்கிச்சிவமூர்த்திக்கண் அன்பைப்பதிக்கின் ஞானவேந்தராய் வாழலாம் என்றபடி. என்சொல்கடவாது கேட்கவல்ல நீ புறப்பொருட்களிடத்து மனம்போக்காயென்பார் நல்நெஞ்சேயென்றார். உலகத்துஇன்றிமையாப்பொன்மண்பெண் இவைமூன்றில் முதற்கண்ணதாகிய பொருள் இருக்கின் ஏனைய பெண்ணும் மண்ணும் தாமேயியைவ ஆதலால் முதற்கண்பொருளைக் கூறினார். இவற்றின்மீது பற்றுவைத்தார் சிற்றின்பமாகிய சிறுகுழியில் வீழ்ந்து பேரின்பமடையாமையின் இவற்றைமருளாசையென்றுங் கூறினார். பெண்ணாசைநேரேயூற்றஞ்செய்யாவிடினும் ஆக்கஞ்சிதைத்தல் அழிவு தலைத்தருதல் என்னுந் தொழில்களாற் பகையோடொத்தலின் அதனையு மாசென்றார், உறுபசிநீக்கியுற்றாரை யோம்புதலானும் உலகாள்வானிலுந் தலையாய மேம்பாடு தருதலானும் "பலகுடை நீழலுந்தங்குடைக் கீழ்காண்ப, ரலகுடைநீழலவர்' எனத் திருவள்ளுவருங் கூறியிருத்தலாலும் மண்ணாசை யென்றார். இவைகளைப்பற்றுக்கோடெனக்கொண்டான் அவற்றின்கட்சுழிக்கிடைப்பட்ட மரக்கலம்போல் பட்டுஆழ்ந்தி மேலெழாதுஅழிதலின் நல்லார் விரும்பாத அவற்றையும் மாசென்றார். இங்ஙனம்கூறிய மூன்றும். மனத்துக்கண் மாசையுண்டாக்கிப்பிறவி விளைக்க அவற்றை ஞானமென்னும் ஒளியால் போக்கிப் பிரகாசிக்கச்செய்துதெருளடைதலின் மாசைமாற்றியென்றார். மாசு என்பதுபன்மைசுட்டிய ஒரு சொல்லாதலின் அது ஆணவங் கன்மம் மாயை என்னும் மும்மலங்களின் தீமைகளையுணர்த்தி யாகுபெயராய்நின்றது. ஞானம்பிரகாசிக்கத்தொடங்கி முன்னர்ச் சிறிது சிறிதாகப் பெருகிப்பேரின்பமாகிய தெளிவை விளைத்தலின் அதனைத் தெருள் ஞானம் என்றார். ஞானவேந்தர் எனவே அதனையாள்வோர்அரசரென்பதும் அவ்வினைமுதற்குறிப்பினிகழிடம் அறிவென்பதும் பெறப்பட்டது. அங்ஙனமாயின் அவராலாளப்படும் நிலம் யாவை யெனின்? மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம். விசுத்தி, ஆக்ஞை, மீதானம், என்பனவாம். பின்னுமிதனைச்சிலர் "சுபேச்சை, விசாரணை, தனுமானசி, சத்துவாபத்தி, சமுசத்தி, பதார்த்தாபாவனை, துரியம், எனவும் கூறுப இவற்றை முறையே துச்சங்க நிவர்த்திபெற்றுச் சிவஞானத்தைஅவாவுதலும் சாதுசங்கக்கூற்றால் ஞானநூல் பழகுதலும், முற்சங்கவீட்டைகள் விடுதலும் சற்சங்கமனத்தி லுண்மையறி வுறுத்தலும், தத்துவத்தின் மனமுறைத்து மித்தை யெல்லாமறத்தலும், அத்துவிதாநந்தம் உண்டாதற்குக் காரணமாகிய

த்ரிபுடிராஹித்யமும், வஸ்துநிலை யிருந்தபடி யிருந்த மௌனசுபாவமும் பொருளாம் என்ப. பூந்தராய் நாதனைப்போற்று என்றது, முன்னொரு காலத்து இரணியாக்கன் என்பான் தேவரொடுபகைத்து அவர்களுடன் போரிட்டு உலகத்தைச்சுருட்டிக்கொண்டு பாதாளத்துச்சென்றனன், இதனைத்தேவர் திருமாலிடத்துமுறையிட அம்மால் கேழலுருக்கொண்டு அவனையெதிர்த்துப் போரிட்டுக்கொன்று அம்மேதினியைத் தமது கொம்பிற்றாங்கி ஆதிசேஷன் முடிமிசையிருத்திச் செருக்கொள்கையில் தேவர் குமாரக்கடவுளை வேண்டக் குமாரக்கடவுள் இறைவன் கட்டளையால் விண்டுவையடைந்து ஏனக்கொம்பினைமுரித்து அவர்க்கு ஞானம் உபதேசிக்கச் சீர்காழிக்கண் சிவபூசைசெய்து இறைவன் காட்சிதர அடியேன் இரணியாக்கனைக்கொன்றதனாலும் பல்லுயிர்களையும் எனது கொம்பின்மேல் வைத்திருந்ததனாலும் அப்பாவமென்னையடைந்தது ஆதலால் அதுநீங்க அருள்புரிதல் வேண்டுமெனவும், பூந்தார் போன்று அடியேன் செய்த பூசனையைத் தேவரீர் ஏற்றதனால் இன்றுமுதல் வித்தலம் பூந்தராயெனப்பெயர்பெறவும் வேண்டுமெனவும்,வரம்பெற்றதனால்இத்தலத்திற்கு இப்பெயர்வந்தது.இங்ஙனமன்றியும், ஒருகாலத்துச்சங்கநிதி பதுமநிதியென்னும் இரண்டு நிதிக்களும் பூவும், நாறுமாகவிருந்து திருத்தோணிபுரமென்னும் சீர்காழிக்கண் சிவமூர்த்தியைப் பூசிக்க இறைவன் மனமகிழ்ந்து உங்களுக்கு வேண்டுவதென்னெனத் தம்பிரானே அடியோங்களுக்கு எக்காலத்தும் வேண்டினார் வேண்டிய பொருள்களைக் கொடுக்கத்தக்க பெருவரத்தைப் பிரசாதித்தருளல் வேண்டுமென அவ்வாறே தொலையாத வரத்தைக் கொடுத்தருளி மகாசங்காரத்தினும் தமது திருக்கரத்தில் தங்கியிருக்கும் பெரும்பேற்றினையுங் கொடுத்தருளினர், ஆதலால் அன்றுமுதலித்தலம் பூந்தராயெனப் பெயரடைந்த தெனவும் வேறுசில புராணங்கள் கூறுகின்றமையால் என்க.

கட்டளைக் கலித்துறை.

போற்றும் பழமறைவாசிப் புனிதர்புகலி வெற்பன்
ஆற்றுந் தவத்தினைக்கண்டே நகைத்ததணிக் கொண்முல்லை
தூற்றும் புயல்வட காற்றேறு'வடிக்கத் தொடங்குமதிக்
கீற்றிங் கெனதுமனங் குழம்பாகக் கிடைத்ததின்றே. (௧௫)

(இ-ள்.) இன்று - இன்றைக்கு, போற்றும் - துதிக்கின்ற, பழமறை - பழமையாகிய வேதங்கள் என்னும், வாசி-குதிரைகளையுடைய, புனிதர்-பரிசுத்தமாகியசிவமூர்த்தி எழுந்தருளியிருக்கும்,புகலிவெற்பன்-சீர்காழிக்கண்ணுள்ள வெற்பன், குறிஞ்சி நிலத் தலைவன், ஆற்றும்-செய்கின்ற, தவத்தினைக் கண்டே - தவத்தைப்பார்த்து, அணிகொள்முல்லை - அழகைக்கொண்ட முல்லைக் கொடியானது, நகைத்தது-சிரித்தது, புயல்-மேகமானது, தூற்றும்-நீர்த்துனி சிதறநின்றது, வடகாற்று - வாடையானது, அடிக்கத் தொடங்கும் - வீசத் தொடங்குகின்றது, மதிக்கீற்று - சந்திரன், எனதுமனம் - என்னுடைய இருதயம், குழம்பாக - உருகும்படி, இங்கு - இவ்விடத்தில், கிடைத்தது- தோன்றியது.

(கு-ரை.) இறைவனிடத்தில் தோன்றிய வேதங்கள் இறைவனைப்போல் அநாதி என்பார் பழமறை எனவும்,வேதமேஇறைவனுக்குப்பரிஎன்பார்மறைவாசி எ-ம். கூறினார். இதனை "மறையே நமது பீடிகையாம் மறையேநமது பாதுகையாம் மறையேநமதுவாகனமாம் மறையேநமது நூபுரமாம் மறையே நமது கோவணமாம் மறையேநமதுவிழியாகும் மறையேநமது மொழியாகும் மறையேநமது வடிவாகும் என்பதாற்காண்க. அசுத்தாசுத்த மாகிய புவனங்களிலுள்ள ஆன்மாக்களிடத்துக் கலப்புற்றும் தூய்மையுடையன் என்பார் புனிதன் என்றார். புகலி என்பது சீர்காழி. அது சர்வசம்மாரகாலத்து ஆன்மாக்களுக்குப் புகலிடமாய் நின்றதால் புகுந்த பெயர். இது தவத்தின்மேல் பிரிந்த குறிஞ்சி நிலத்தலைவனை விட்டுப்பிரிய மனமில்லாத அந்நிலத்தலைவி அவனது தவம் முற்றுப் பெறாமையை நோக்கிக் கூறிய கூற்றாம். இன்னும் இச்செய்யுள் பிரிவு விலக்குவான் வேண்டி வடகாற்று அடிக்க தொடங்குவது என்றதினால், கார்காலம் வந்தது புயல்தூற்றத் தொடங்கும் கலங்காநின்ற என்னைவிட்டுபிரிதல் கூடாது என மறுத்துக்கூறியதுமாம். தவத்தினை என்றதில் அத்து இன்என்னும், இரண்டும்சாரியை. ஆற்றப்புகும் தவம் என்பார் ஆற்றும் தவம் என்றார். அணிகொள் முல்லை கண்டேநகைத்தது. காணுதலும் நகைத்தலும் "கேட்குநபோலவும், கிளக்குநபோலவும், இயங்குநபோலவும் இயற்றுநபோலவும், அஃறிணைமருங்கினும் அறையப்படுமேஎன்றபடிமரபுவழுவமைதி வருந்துந்தனக்கு உபகரிக்கஎழுந்தது என்பார் அணிகொள் முல்லைஎனவும்,அங்ஙனம் வருந்துவேனைத்தனியேவிட்டுப்போதல்தக்கதன்று என்று பிறர்க்கு அறிவிப்பது போன்றது புயல் என்பார், தூற்றும் புயலெனவும்,அங்ஙனம் கேட்காதானை உலகத்துத் தன்வழிபடாரை உற்றார் உருக்கித் தண்டம் செய்து அத்தொழிலின் மறுப்பதுபோல் இவனைத் தவத்தின்மேல் செல்லாது வடகாற்று தண்டம்செய்து மறுத்ததென்பார் வடகாற்று அடிக்கத்தொடங்குவது எனவும், கீற்றுமதியாயினும் எனது மனதைக்கீறி அதனிடத்து தனது தண்மையினால் பிறந்த வெம்மையைப் பதித்து இறுகிய மனதைக் கரைத்தது என்பார் எனது மனம் குழம்பாகக் கிடைத்தது எனவுங் கூறினார். இன்று என்பதைப்போற்றும் என்பதன் முன்னும்நகைத்தது என்பதை முல்லை என்பதின் பின்னுங் கூட்டுக. மறை - மற்றை மூவர்களால் ஓதாது மறுக்கப்பட்டதென்பது. பொருளதுகண்டே என்பதில் ஏகாரம் தேற்றமும் அசை நிலையுமாம். மதி அமுதகிரணத்தையுடையதென்னும்பொருளது. இதனை மது இ எனப் பிரித்துக்கொள்க. கீற்று என்பது,கீறு என்றும் முதனிலைதிரிந்த தொழிற்பெயர்.

இணைக்குறளாசிரியப்பா.

இன்றென வுளதென வன்றென வாமென
உரைதரு நூலையும் பொருளையுந் தனித்தனி
பல்விதமாகச் சொல்வகைச் சமய
மாகியபயம்பிற் போகுதல் குறித்த
நிலையில் துறைபல நிலையுள துறைசில
பொருந்திடு முலகப் பெருங்கட லிடத்தின்

மயிர்நூல்கிடத்திப் பயில்வுறுதோலெனும்
வன்புறுபலகையி னென்பெனுமாணியி
னரம்பெனப்பெயரிய வுரம்பெறுகயிற்றின்
வெரிநுறுமென்பெனும் பரியகூம்பின்
ஐம்பொறியாகிய மொய்ம்புறுவாய்தலிற்
காயமெனவமைத்த மாயநாவாயில்
இருவினையென்ன வருசரக்கேற்றிக்
காமமுலோபமேமமாமோக
மிதமறுகுரோத மதமாற்சரியமென்
றுரைபெறுபவனர் நிரையுறவிருத்தி
நெடுநீரென்னப் படுநெடுநாணிற்
றங்கியமடியெனு நங்கூரஞ்சேர்த்தி
யற்றமின்மனமெனப் பெற்றபாய்விரித்துத்
தடைபடாவாசைக் கடுவளிதுரப்பத்
தானமாதியான தீவுகளிற்
செல்வுழிச்சென்று புல்வுழிப்புல்லி
யிவ்வாறிபங்கு மவ்வாறதனுண்
முன்பார்கால வன்பார்தாக்கத்
தொக்குறுமரக்கலம் பக்குவிட்டம்ம
வக்கடனீருட் புக்கறிவழியுழி
மறலியென்னுஞ் சுரவுபிடித்தீர்ப்பக்
கடுநரகென்னும் படுகுழியழுந்தி
யுளதுயரினுக்கோ ரளவிலையதனால்
இம்முறையியங்குதல் செம்மையன்றென்று
முற்றுணர்பெரியோ யற்றமில்வலியோ
யோதாதுணர்ந்த நாதாதீத
வருவுருவென்னும் பொருண்முழுதுடையோ
யாவருநின்வய மேவரப்புரிவோய்
கரையறுமின்பப் புரைதவிர்நிமல
சாந்தணிவன முலையேந்திழைபாக
ஞானமாமணநிறை மோனமாமலரே
வித்தகம்பழுத்த முத்திவான்கனியே
பரைமுதலைம்பணை நிரைபெறக்கிளைத்த
திருத்தகுநீழ லருட்பெருந்தருவே
பத்திகொணித்தில மொத்துறநிரைத்த

பசும்பொனிற்செய்த தசும்புபலதொக்க
தோற்றம்போல வீற்றுவீற்றமைந்த
தீங்கனிபணைதொறுந் தூங்குமாதளையும்
வித்துருமத்தினை யொத்தசெந்தளிரு
மொளிர்வயிடூரியக் குளிர்மதுமலரும்
மேவிடுவண்டெனு நீலமாமணியும்
மரகதமென்ன விரவுகாய்த்திரளும்
மறுவின்மாமணியெனு நறியசெங்கனியுங்
கிடைத்தசீர்வணிகரிற் படைத்தமாந்தருவு
மெண்டிசைசூழ்ந்து விண்டொடும்புகலி
மேவியபெரும வாலிநாயகனே
கணபணக்கச்சைப் பணவரவசைத்த
மட்டலர்புழுகணி சட்டைநாயக
னென்னுமீகாமன் மன்னினன்புரப்பநீ
வீற்றினிதிருக்க வேற்றமெய்ப்பிரணவத்
தோணியேபற் றெனத்துணிந்து
காணுறுமறிவொடு கண்டுகொண்டேனே. (௪௮)

(இ - ள்) இன்றெனை - பதிபசுபாசமென ஆன்றோராற் கூறப்பட்டமூன்றும்)' இல்லையெனவும், உளதென்ன - அவையுண்டெனவும், அன்றுஎன - அவைதுணிந்த பொருளன்று எனவும், ஆம்என - அவைதுணி பொருளெனவும், உரைதரு - சொல்லுகின்ற, நூலையும் - சமயநூல்களையும், பொருளையும் - (அவற்றாற்கூறப்படும்) பொருள்களையும், தனித்தனி - வேறுவேறாக, பல்விதமாக - பல்வகையாக, சொல் - கூறுகின்ற, வகை-வேறு வேறுமுடிபுகளைக்கொண்ட, சமயமாகியபயம்பில் - சமயங்களாகிய படுகுழியில், போகுதல் குறித்த - செல்லுதலைக்குறித்த, நிலையில் துறைபல - நிலையில்லாத துறைகள்பல, நிலையுளதுறைசில - நிலையுள்ளதுறைகளோசிலவாக, பொருந்திடும் - அடையப்பெற்ற, உலகப்பெருங்கடலிடத்தின் - உலகமாகிய பெரியகடலின்கண், மயிர்நூல்-மயிராகிய நூலினை, கிடத்தி - அளவாகச்சேர்த்தி, பயில்வுறு-நெருக்கமுள்ள, தோல்எனும் - தோல்என்கிற, வன்புஉறு - வலிமைகொண்ட, பலகையின் - பலகைகளாலும், என்புஎனும் - எலும்பு என்கிற, ஆணியின் - ஆணிகளாலும், நரம்பு எனப்பெரிய - நரம்பென்று சொல்லப்பட்ட உரம்பெறு கயிற்றின் - வலிமைகொண்ட புரிகளாலும், வெரிநுறு - முதுகிடந்தங்கிய, என்புஎனும் - எலும்பென்கிற, பெரியகூம்பின் - பரியபாய்மரத்தாலும், ஐம்பொறியாகிய - பஞ்சேந்திரியங்களாகிய, மொய்ம்புறு - வலிமைகொண்ட, வாய்தலின் - வாயில்களாலும், காயம்என - தேகமென்று, அமைத்த - பிரமனால் சிருட்டிக்கப்பட்ட, மாயநாவாயில் - மாயமாகியகப்பலில், இருவினையென்ன - நல்வினை தீவினையென்று, வந்த - அநாதியாகவருகின்ற,

சரக்குஏற்றி-சரக்குகளையேற்றிக்கொண்டு, காமம்-பெண்ணாசை, உலோபம்-ஈயாமை, ஏமம் - களிப்பினைத்தரும், மாமோகம் - பெரிய மோகம், மிதம் அறு - மிதமில்லாத, குரோதம் - குரோதம், மதம் - மதமும், மாச்சரியம் - மாச்சரியம், என்றுஉரை பெறு - என்று கூறப்பெற்ற, யவனர் - சோனகர், நிரையுற - முறையாக, இருத்தி - அச்சரக்குகளையமைத்து, நெடுநீர்என்னப்படும் - பெரியநீர்மை யென்னப்படுகின்ற, நெடுநாணில் பெரியகயிற்றில், தங்கியமடிஎனும் - பொருந்திய சோம்பலென்கிற, நங்குரம் சேர்த்தி - நங்கூரத்தைக்கட்டி, அற்றம்இல் - அறுதலில்லாத, மனம் எனப்பெற்ற - மனம் எனப்பட்ட, பாய்விரித்து - பாயினை விரித்து, தடைபடா - தடைபடாத, ஆசைக்கடுவளி - ஆசையாகிய கடுங்காற்று, துரப்ப - செலுத்த, தாணம் ஆதியான - சுவர்க்கமே முதலிய, தீவுகளில் - தீவுகளில், செல்வழிச்சென்று - போகத்தக்கவிடங்களில் சென்று, புல்வழிப்புல்லி - போகங்களை யநுபவிக்குமிடத்து அநுபவித்து, இவ்வாறு - இந்தவிதமாக, இயங்கும் - சலிக்கின்ற, அவ்வாறு அதனுள் - அத்தகுதியின்கண், மூன்புஆர் - வலிமைதங்கிய, காலவன்பாா - யமனென்னுந்திடர், தாக்க - மோத, தொக்குஉறு - ஒன்றுடனொன்றுகூடியுள்ள, மரக்கலம் - கப்பல், பக்குவிட்டு - உடைந்து, அக்கடல்நீருள் - அந்தக்கடனீருள், புக்கு - அழுந்தி, அறிவு அழிவுழி - அறிவழியுங்காலத்து, மறலிஎன்னும்-மறலிஎன்றுசொல்லப்படும், சுறவு-சுறுமீன், பிடித்து ஈர்ப்ப-பிடித்து இழுக்க, கருநரகுஎன்னும்-கடியநரகமென்றுகூறப்படும், படுகுழி-ஆழமாகியகுழியில், அழுந்தி-மூழ்கி, உளதுயரினுக்கு - ஆங்குண்டாகும் துன்பங்களுக்கு, ஓர் அளவு - ஓர்அவதி, இலை - இன்று, அதனால் -ஆதலால். இமுறை - இந்தவிதமாக, இயங்குதல் - (உலகவொழுக்கம் மேற்கொண்டு) நடத்தல், செம்மையன்று - சீரமையின்றிறத்ததன்று, என்று - என்று ஆய்ந்து, முற்றும் உணர் - உலகத்துள்ளஎல்லாக் கல்விகளை புமுணர்ந்த, பெரியோய் - உயர்ந்தோனே, அற்றம் இல் - அறுதலில்லாத, வலியோய் - பெருவலிமையுடையானே, ஓதாது-ஓதாமல், உணர்ந்த - எல்லாகலைகளையு மறிந்த, நாதாதீத - நாததத்துவத்திற்கு அப்பாற்பட்டவனே, அருஉருஎன்னும் - அருவம் உருவம் என்னப்படும், பொருள் முழுதும் - எல்லாப் பொருள்களையும், உடையோய் - சர்வ சுவதந்தரமாகப் பெற்றவனே, யாவரும்-சேதனங்களாகிய ஆத்மாக்கள் முழுதும், நின்வயம் - தேவரீரது வசத்தில், மேவர - பொருந்த, புரிவோய் - செய்விப்பவனே, கரைஅறு - அணைகடந்த, இன்பம் - பரமாநந்தத்தில், புரைதவிர் - குற்றமில்லாதுவிளங்கும, நிமல - நிர்மலனே, சாந்துஅணி - கலவைமுதலிய சந்தனங்களையணிந்த, வனம்முலை-அழகிய திருத்தனங்களையும், ஏந்துஇழை - உயர்ந்த திருவாபரணங்களையணிந்த உமாதேவியாரை, பாக - அர்த்தபாகத்துக் கொண்டானே, ஞானம் - சிவஞானமென்கிற, மாமணம் - மிக்கமணம், நிறை - நிறைந்த, மோனமாமலரே - மௌனமென்னும் உயர்ந்தமலரே, வித்தகம் - ஞானம், பழுத்த - முதிர்ச்சியைப்பெற்ற, முத்திவான்கனியே -வீடென்னும் சிறந்தகனியே, புரைமுதல் [illegible] புரைமுதலியசத்திகளை, ஐம்பலை ஐந்துகிளைகளை [illegible]

நிரைபெற - முறையாகப்பெற, இளைத்த - இளைக்கப்பெற்ற, இருந்தவர் கண்டாரால் விரும்பத்தகும், நீழல் - சிவாநந்தநிழலைப்பெற்ற, அருள்மேருந்தருவே-கருணையேதிருவுருக் கொண்டபெரிய விருக்கமே, பத்திகொள் - வரிசையைக்கொண்ட, பசுமை பொனிற்-பசும்பொன்னாகிய இளிச்சிறையினால், செய்த - செய்வித்த, தசும்பு - (பொற்)குடங்கள், பலதொக்க - பலகூடிவிளங்கும், தோற்றம்போல - காட்சிபோல, வீறு வீறு - வெவ்வேறாக, அமைந்த - பொருந்தியிருக்கிற, தீம்கனி - மதுரமாகியகனிகளை, பணைதொறும் - கிளைகள்தோறும், தாங்கும் - தாங்கப்பெற்ற, மாதளையும் - மாதளைவிருக்ஷமும், வித்துருமத்தினை - பவளத்தினை, ஒத்த - ஒத்துவிளங்குகிற, செம்தளிரும் - சிவந்ததளிரும், ஒளிர் - பிரகாசிக்கிற, வயிரீயம் - வயிரீயத்தையொத்த, குளிர் - குளிர்ச்சிகொண்ட, மது - மகரந்தத்தினைப்பெற்ற, மலரும் - புட்பமும், மேல்இடு - மேலாகப்பறந்து செல்லுகின்ற, வண்டு எனும் - நீலவண்டுஎன்கிற, நீலமாமணியும் - நீலரத்தினமும், மரகதம் என்ன - பச்சைரத்தின மென்னும்படி, விரவுகாய்த்திரளும் - ஒன்றோடொன்று விரவியிருக்கின்ற காயின்கூட்டமும், மறுவில் - குற்றமில்லாத, மாமணிஎனும் - உயர்ந்த மாணிக்கமென்னப்படும், நறிய - நன்மணமுள்ள, செம்கனியும் - சிவந்தகனியும், கிடைத்த - எல்லாவளங்களையும்பெற்ற, சீர்வணிகரில் - சிறந்த வொழுக்கம்கொண்ட வணிகரைப்போல, படைத்த - பெற்றிருக்கிற, மாந்தருவும் - மாவிருக்ஷங்களும், எண்திசை - எட்டுத்திசைகளினும், சூழ்ந்து - சுற்றிலும் நெருங்கி, விண்தொடும் - சுவர்கத்தை அளாவுகின்ற, புகலி- திருப்புகலியாகிய சீர்காழிக்கண், மேவிய - எழுந்தருளியிருக்கின்ற, பெரும - பெருமானே, ஆவிநாயகனே - பிராணநாயகனே, கணம்பணம் - கூட்டமாகிய பலபடங்களையுடைய, பணஅரவு - பாம்புகளை, கச்சை - கச்சையாக, அசைத்த - கட்டிய, மட்டுஅலர் - தேன்கொண்ட மலர்களையும், புழுகு - புழுகென்னும், மணத்தினையும், அணி- (அருச்சனை மலராகவும் பூச்சாகவும்)அணியப்பெற்ற, சட்டைநாயகன் என்னும் - சட்டைநாயகனெனத் திருப் பெயர்கொண் டெழுந்தருளியிருக்கும், மீகாமன் - தோணியியக்குவோன், மன்னினன்புரப்ப - நிலைபெற்றுக்காக்க, நீ வீற்றினிதிருக்க - நீபெருமையுடன் எழுந்தருளியிருக்க, ஏற்ற - தகுந்த, மெய்ப்பிரணவம் - உண்மையாகியபிரணவமென்னும், தோணியே -மரக்கலமே, பற்றுஎனத்துணிந்து - ஆதாரமெனத்துணிவடைந்து, காண்உறும் - காணத்தகுந்த, அறிவொடு - பேர் அறிவுடன், கண்டுகொண்டேன் - கண்டுகொண்டேன் எ-று.

அடியேனது, தத்துவப்பொய் கொண்டமைத்தவுடல் பண்டுபலவாகிய, சமயத்துறைகளையுடையவுலகத்துப் போகங்களை நுகர்ந்து காலன்வசப்பட்டு வருந்துந்துக்கத்திற்கு அளவுஇன்று. அதனால், இறைவனே உனதுதிருவருளைபற்றாகக்கொண்டு உன்னையெனது அறிவால் அறிந்துகொண்டேன் என்பது கருத்து.

(கு-ரை) சமயங்கள், ஆன்மாக்களின் கன்மானுகுணமாகப் பரிபாகத்திற்குத்தக்கபடி எவ்வகைருசித்தனவோ அவ்வகை நிலைத்தஅறிவுடையரால்அவ

...றப்பிறரும் அநுட்டித்துத் தாங்கள் அடைந்த பேற்றினையடைவான் வேண்டிச்செய்யப்பட்டன. ஆயினும் அவை இறைவனருணையேயாம். அங்ஙனம் கூறின் இறைவன்மீது பக்ஷபாதம் வராதோ எனின்வராது ஏனெனின்? அவ்வவ்...வத்தின் பேற்றிற்குத்தக்கவாறு நின்று முதிர்வடைந்தார அந்நிலை நின்று மேலேறிமேற்பதமடைவராதலின் அதுகருணையேயன்றிப் பக்ஷபாதமன்றாம். இச்சமயங் கள்பலவென்பதனையும் அவற்றாற்கூறப்படுஞ் சமயங்களும்பலவென்பதை "பேதித்தசமயமோவொன்று சொனபடியொன்று பேசாதுதுறவாகியே" எ - ம்.

"அன்னேயனேயெனுஞ் சிலசமயநின்னையேயையாவையாவென்னவே யலறிடுஞ் சில சமயமல்லாது பேய்போல வலறியே யொன்றுமிலவாய்ப் பின்னேது மறியாமல் ஒன்றைவிட் டொன்றைப் பிதற்றிடுஞ் சில சமயமேற், பேசரிய வொளியென்றும், வெளியென்றும் நாதாதி பிறவுமே நிலயமென்றும், தன்னேரிலாததோ ரணுவென்று மூவிதத்தன்மையாங் காலமென்றுஞ் சாற்றிடுஞ் சில சமய மிவையாகி வேறதாய்ச் சதாஞான வானந்தமா, யென்னே யெனேகருணை விளையாட்டிருந்தவா றெம்மனோ புகல வெளிதோ இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி யெங்கு நிறைகின்ற பொருளே." என்பவற்றானறிக. இன்று எனக்கூறியதனானே எவை எனக்கூற வமைந்த வினாவிற்கு விடையாக அமைந்த அவை பதி, பசு, பாசங்களாம். இன்று என்பது பொருளினது இன்மையைக் கூறுதல். உளதென்பது பொருளினது அமைதி கூறியதாம். அன்று என்பது ஒருபொருளை மறுத்து அதற்கினமானதைத் தெரித்தலாம். சமயத்திலழுந்தி அதன் வயப்பட்டு அந்நூல்களிடத்துப் பழகினர் அதினின்று நீங்காது அதனுடன் மாறுகொண்டு கூறும் பல சமயவாதிகளுடன் மாறு கூறி வெற்றிகொண்டு செருக்குற்று நிற்பராதலின் அதனைச் சமயமாகிய பயம்பு என்றார். பயம் பிறபட்டார் மீண்டு மதினின்று மேறுதல்பற்றி யென்க. பெருங்கடலாதலின் வெள்ளஞ்சென்றவழி அதனிடம் எக்கர் மடுவாகவும் மடு எக்கராகவும் மாறுதல் இயல்பாதலின் அது நோக்கி நிலையில் துறைபல நிலையுள துறைசில என்றார். இதனை யுலகத்தின்மீ தேற்றுகையில் உலகர் கூறுஞ் சமயங்களில் சில சிறிது உண்மை கூறுவனவும்பல அது இன்மை கூறுதலு முண்மைநோக்கி அவ்வாறு கூறினர் என்க. நாவாய் செய்வார் அதனிடத்து நீர் உட்புகாது மறுத்தற்கு மயிர்முதலிய சோத்துப் பொருத்துவாயையடைத்து நூலாற் கட்டுதல் இயல்பாதலின் மயிர் நூல் கிடத்தியென்றார். வெரிநுறு மென்பென்றது முதுகெலும்பாம் அது ஊர்த்துவமாய் மேனோக்கி நிற்றலின் அதனைக் கூம்பாக உவமை கூறினர். மேற்கூறிய கப்பற் குரிய வுறுப்புக்களிற் சிறிதுங் குறையாதுஒத்து இருத்தலின் இதுவும் மரக்கலத்திற் புதியதொன் றென்பார் மாய நாவாயென்றார். வினைப்போகம் நுகருந்தோறும் ஆகாமிய மேறுதலின் இருவினையென்னவரு சரக்கு என்றார். கப்பல் ஒன்றை நடத்தற்குப் பலர் வேண்டுதலின் காமமுதலிய அறுவகைக் குற்றங்களையும் யவனர் என வுருவகப்படுத்தினர். காற்று மோதுந்தோறும் அதனைப் புறத்தில் விடாதுகொ...

ண்டு கப்பலை யோட்டுதல்போல் எண்ணங்கள் பலவற்றினையுங் கொண்டு அதைக்கொண்டானை யியக்கும் வலிபெறுதலின் அதனையற்ற மின்மனம் என்றார். கடுவளி தான் மோதியுதை யலைத்துக் கெடுத்தல்போல் ஆசையுங் கண்டதைத் தனக்கு வேண்டுமெனப் பற்றுச்செய்தலின் தடைபட ஆசைக் கடுவளியென்றார். தானமென்பது இடப்பொதுவாயினும் அது இடங்களிற் சிறந்த மேலுலகத்தை யுணர்த்தி ஆகுபெயராய் நின்றது. தானம் என்பது மேலுலகத்தின் பெயர்களிலொன்று அதனை "உயர்நிலை........பொன்னுலகு தானம்." என்னு நிகண்டாலறிக. கப்பல் முந் நீரிடஞ்சென்று ஆங்குள்ள தீவு முதலியவற்றிலும் கடற்றுறைப் பட்டினங்களிலும் பல சரக்குகளை இறக்கியுங் கொண்டும் வருதல்போல் ஆன்மா ஜனனங்களில் தாமடைந்த இருவினைகளுக்கேற்பச் சுவர்க்கமாதியான புவனங்களிற் புண்ணியம் புசித்தும் நரகமாதியான பூமிகளில் நரகசேடங்களைப் புசித்தும் அவற்றைப் *புசிக்கையில் புதிதாக வினைகொண்டும் வருதலின் தானமா..........செல்வுழிச் சென்று புல்வுழிப்புல்லி என்றார். முன்பார் என்பதற்கு வலிமைதங்கிய எனப் பொருள் கூறுதலன்றி முன்பு ஆர் எனப் பிரித்து அழியாதுள்ளஎனப்பொருள் கூறுதலுமொன்று. ஏனைய சேறுமுதலிய செறிந்த நிலத்திற்றட்டின் ஒருவாறுய்தல் கூடும் அங்ஙனம் உய்தல் கூடாதவன்னிலம் என்பார் வண்பாா என்றார். இவ்வகை காலன் கட்பட்ட ஆன்மா மீண்டும் நீங்கிய தேகத்தை யடையாதென்பது அவ்வடியின் கருத்து. பல கருவிகளால் பலதுணைக் கருவிகளைக் கொண்டு பல்லோரியற்றி முடித்தது என்பார் தொக்குறு மரக்கலம் என்றார். மரக்கலம் கடுவளி துரப்பக்கொண்ட விசையால் செல்லுழி வன்பார்க்கண் மோதலால் அது தனித்தனி முன்னையோர்செய்த வலி கெட்டழிதலின் பக்குவிட்டென்றா.

கடற்குப் புலிபோல் பன்மீன்களுந்தன்னைக் கண்டஞ்சத்தான் ஒன்றுக்கும் அஞ்சாது தனிச்சைகொண்டசலசரங்களைத் தின்னுகையில் அதன்கட்பட்டது மீண்டும்பிழையாவாறுபோல் காலனிடம்பட்டவுயிர் மீளாமையின்மறலியென்னுஞ் சுறவுபிடித்திர்ப்பஎன்றார். இவ்வாறு காலன்வயப்பட்டு மயங்குகையில் எல்லாமுணர்ந்த பெரியோனாதலாலும் நீ கருணையா லுருக்கொண்டுணர்த்தினன்றி யொருவர்தாமே யுணர்தலின்றாதலால் முற்றுணர்பெரியோய் எனவும், கூறினார் இது இறைவனது முற்றுணர்வுடைமையென்னும் சர்வஞ்ஞத்வம் கூறியது. எல்லாவலிமைகொண்ட பொருட்கும் வலிமைகொண்டானாதலின் அற்றமில்வலியோய் என்றார்இது முடிவிலாற்றலுடைமையென்னும் அநந்தசத்தி கூறியதாம். தான் ஆசாரியனாய் நின்று தன்னை விரும்பினார்க்கருள் சுறந்தநுக்ரகித்தலன்றித்தனக்கு ஒருவர்உபதேசிக்க வேண்டுவதின்மையின் ஓதாதுணர்ந்த எனவும்,நாதமுதலியனமாயாதோற்றத்தன வாதலினிறைவன் அவற்றுக்கப்பாலவன் என்பார் நாதாதீத எனவுங் கூறினார். உலகத்துக் காணப்பட்டன அனைத்தும் பொருள்களாயினும் அவையுருவப்பொருள் அருவப்பொருள் எனவு மிருவிதப்படும் அங்ஙனந்தோன்றிய பொருள் முழுதும் நின்வசமேயென்[illegible] உரு...உடையோய், என்றார். எல்லா ஆன்மாக்களும்

வினையொழிவின்கண் தன்னிடம்லயமடையப் பெறுதலின்யாவருந்தன்வய மேவரப் புரிவோய் என்றார். இன்பமேஉருக்கொண்டு குற்றமிலாது விளங்கு வோனாதலின், கரை ... நிமல என்றார்." மங்கலமாகியின்றியமையாது யாவருமகிழ்ந்து மேற்கொளமல்கிப், பொழுதின் முகமலா வுடையது பூவே. "என க்கூறியபடியாகாது அம்மலரின் வேறுபட்டு அழிதலுங்கூம்புதலும் மணங்குறைதலும் மல்லாமல் ஞானமணம் வீசுநன்மலர் என்பார் ஞானமாமணநிறை மோனமாமலரே என்றார். ஞானமுதிர்ச்சியின் முததியடைதலே யன்றியது முதிர்வுபெறுமுன்னம் முத்திகூடாதாதலின், வித்தகம் ... கனியேஎன்றார் பரைமுதலைம்பணையென்றது, பராசத்தி, ஆதிசததி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என்று ஐவகைச்சத்திகளும் இறைவனைப்பிரியாத அருட்சத்தியின் ஆயிரத்தோரு கூற்றில்பிறந்தவையாதலின் பரைமுதலைம்பணை நிரை பெறக்கிளைத்த என்றார். இச்சத்திகள் பரசிவத்தைப்பிரியாத அருட்சத்தியின் பேதமெனவும் இக்கிளைகளாகிய சத்திகளைத்தமது திருமேனியிற் றோற்றுவித்தும் ஆன்மாக்களின்பொருட்டு என்பார திருத்தருகீழலருட் பெந்தருவே என்றார். முத்துக்களைப்பண்ணிப் பதித்தாற்போன்று வெண்ணிற விதைகளையுட்கொண்டு மஞ்சணிறங்கொண்ட பழங்கள் தொங்குதல் பொற்கலசங்களையொத்தலின், பத்திகொள்......பசும்பொனிற் செய்ததசும் புபல தொக்க தோற்றம் என்றார். முன்னை பொன்னும், முத்தும் கூறினா, பின்னர் வித்துருமம் முதலாக, பவளம், வயிடூரியம், நீலம், மரகதம், மாணிக்கம்முதலியவற்றை விற்கும் வணிகரையொப்ப மாவிருக்கம் அந்நிறம்கொண்ட பொருட்களைக் கொண்டமைந்திருத்தலின் கிடைத்த சீர்வணிகரிற்படைத்த மாந்தரு என்றனர். இது தனது குறிப்பைததான்கண்டபொருட்கணேற்றிக் கூறினமையின் தற்குறிப்பேற்றவணி. எண்டிசைசூழ்ந்து என்பதற்கு எட்டுத்திசைக்கண்ணுள்ளாரும் பரவப்பெற்று எனப்பொருள் கூறுதலுமொன்று. வெள்ளங் கொளத்திருத்தோணி கொண்டு மிதந்தகாலத்து உயர்நிலையாகிய புவனங்களை யளாவப்பெற்றமையின் விண்டொடும் புகலியென்றார். என்னுயிர்க்குயிராய் என்னுயிரநல்லருள்பெறக் காரணமாய் நிற்போனாதலின்ஆவிநா[illegible]ன என்றார். கணபணம் என்பதற்குக் கூட்டமாகிய படங்கள் அவை ஆதிசேடன்முதலிய அரவுகளாம் ஏனெனின் ஆயிரமுதலிய வெண்கொண்டபடங்களையுடையன அவையேயாகலின் என்க. பணஅரவுஎன்பதை இருபெயரொட்டாகக்கொள்க. இரணியனைக்கொன்று செருக்கடைந்த நரசிங்கத்தினுரிகொண்டு போர்த்தமைந்தாயினும் அவன்திருமேனியி னீங்காத புழுகுமணமும் மலர்மணமும் நிலைத்த தென்பார் மட்டலர் புழுகணிசட்டைகாயகன்என்றார். பிரணவத்தோணி இருபெயரொட்டுப்பண்புத்தொகைநிலைத்தொடர். காணுறும் அறிவென்றதனூன் அவ்வறிவைப்புறப்பொருட்கண் போக்காது நினைக்காணுமாறு செய்யும்திருப்பணியில் எனதுநல்லறிவுகொடு உழக்கினேன் அது இனிஉனது திருத்தோணியே பற்றுகக்கொள்ளு மன்றி இந்திரன்முதலிய இறைவர்பதங்களையுமதியா தென்பார்காணுறு மறிவெனு[illegible] [illegible] என்றார்.

வெண்பா.

கண்டேன் புகலிக் கருத்தனைத்தன் மெய்ஞ்ஞான
வண்டேனுண் டேமகிழும் வண்டானேன்-பண்டே
யளியனுமானேன் மனமெய் யார்பதம் வேறின்றிக்
குளிர்சிவா னந்த மிலங்கும். (கஎ)

(இ-ள்.) புகலிக்கருத்தனை - திருப்புகலிக்கண் எழுந்தருளியிருக்கும் உலக முதற்காரணனாகிய சிவமூர்த்தியை, கண்டேன் - (கண்ணாரக), கண்டு தரிசித்தேன், தன்-அவனது, மெய்ஞ்ஞானம் - உண்மை ஞானத்தினைத்தரும், வண்மை தேன் - வளம் அமைந்த தேனினை, உண்டு - அருந்தி, மகிழும்-அதனால் களிப்படைந்து (மயங்கியிருக்கும்), வண்டு ஆனேன் - வண்டையொத்தேன், பண்டே - முன்பே, அளியனும் ஆனேன்-அவனிடத்து அன்புள்ளானாயினேன் (ஆதலால்) மனம் மெய் - எனது மனத்தினும், காயத்தினும், மெய்ஆர்பதம், உண்மை நிறைந்த வாக்கினும், வேறு இன்றி - அவனையன்றிப் புறப்பொருள்களின் பற்று இல்லாமல் செய்கின்ற, குளிர் சிவானந்தம் - குளிர்ச்சிபொருந்திய சிவாநந்தம், இலங்கும் - விளங்கா நிற்கும். எ-று.

அவனது திருவருட்சத்தி நிபாதம்பதிந்த துணையானே அவனைக்காணுமறிவுதலைப்பட்டு அவனருளால் அவனைத் தரிசித்தேன் அவ்வளவின் அவனை நீங்க மனமில்லேனாய் மனோவாக்குக் காயங்களால் அவனது குணங்களை யநுபவிக்குந்தோறும் அவற்றின்வழியாக எனதுள்ளங் குளிரத்தக்கச் சிவாநந்தம் விளங்குகின்றது என்பது கருத்து.

(கு - ரை.) கருத்தனை என்பதற்குக் கருத்தாவையென்ப பொருள்கொள்ளுதலு மொன்றும். அக்கருவினைக் கருவென்றும் பின்னர் தன்னை வண்டெனவும் உருவகப்படுத்தலால் கருவென்பதற்குச் சிவமெனும் மலா எனப் பொருள் கொள்ளுதலும் ஆம். அது மெய்ஞ்ஞானவண்டேன் கொண்டதாதலால் அதனை யுலகத்துள்ள மலர்கள்போல் கூறாதுகரு என்றார், நான் அடைந்திருந்த பொய்ஞ்ஞானத்தைக் கண்ட மாத்திரையிற் போக்கினமையின் அதனை மெய்ஞ்ஞான வண்டேன் எனவும், அதனை நான் உட்கொண்ட மாத்திரையின் என்னையறியாப் பெருங்களிப்படைந்தேன் என்பார் மகிழும், எ-ம், அதனையண்ணப் புகுகையில் வேற்றுருக்கொண்டு உணணப்புகின் அத்தேன் நிலத்தினுகுதல் முதலிய குற்றப்பட்டுக்கெடும் அவ்வாறு கெடாது ஒருவழி குழல்போன்ற நாளத்தால் மலரினை வருத்தாது உட்கொள்வது வண்டேயாதலின் அவ்வாறு புலன்வழிகருத்தைச் செலுத்தாது ஒருவழிப்படுத்தியம்மதுவினை யுண்ணப்புகுந்தேன் என்பார வண்டானேன் எனவுங் கூறினார். நான் சநநங்கடோறுஞ் சிறிது சிறிதாகச்செய்துபெற்ற தவத்தானீண்டு மெய்ஞ்ஞானவண்டே னுண்ணப்பெற்ற தன்றியிது இச்சநநமொன்றில் வந்ததன்றென்பார், பண்டே யளியனுமானேன், எ-ம் கூறினா. பண்டு அளியனானதாலும் மெய்ஞ்ஞானவண்டே னுண்டதனாலும் பெற்ற பயன் யாதோவெனில் பொய்யானமண்டேனுண்பார் அதனையுண்டு மயங்கித்தம்மை யறியாது.

திமைசெய்து களித்துப்பின் துன்பமுறுதல் போலாது மனோவாக்குக்காய மாய மூன்றின் கண்ணும் சிவானந்த விலங்கிக்களிக்கும் பேரின்பத்தையடைதலேயாம். மனமெய்யார் பதம் என்பதற்கு, என்மனத்திடத்துச் சத்தியமாகிய அவனது திருவடிகள், வேற்றுமையின்றிச் சிவானந்தவாழ்வைப் பொழியாநிற்கும் எனவும் பொருளுரைத்துக்கொள்க. இது நான் கண்டமாத்திரையில் எனது மனோவாக்குக்காயங்களையுருக்கித் தன்வசப்படுத்தித் தன்னைப் பெறச்செய்தலினிது மெஞ்ஞானிகளுக்கேயுரிய கருத்தாம். இதுகண்ட மட்டில் தன்னைப்பிணித்தலின் மர்க்கட நியாயமாகச் சிவமூர்த்தியை அடிகள் தாம் அடைந்த நிலைமை கூறியதுமாம் - இது சக்ஷுவாதி தீக்ஷாக்ரமத்தில் இதுவும் ஒருவகைதீக்ஷையாம். ஏனைய ஆநந்தங்கள், ஐம்புலன்களின் ஏகதேசத்தினையேகுளிரவிக்கும் இது ஐம்புலன்களை யூடுருவிச்சென்றுமனத்தையும் அந்தக்கரணங்களையும் ஆன்மாவினையுந் தன்னிடத்தடையப் பேரின்பமாகிய குளிர்ச்சியைத்தருதலின் இது அவற்றின் வேறென்பார் குளிர சிவாநந்தம் எனவும் கூறினார்.

கட்டளைக்கலித்துறை.

கும்பிட்ட பத்தர்க் கழியாத வின்பங் கொடுக்குமுத்தர்
வம்பிட்ட கொங்கை யுமைபாகர் சண்பையர் வந்திலரேற் [றல்
கொம்பிட்ட கோழிக் கொடிவேந்தன் கொசசையைக் கொல்வத
அம்பிட்டகட்சிற்றிடைச்சிகமென்னோபயனாகுவதே.

(இ-ள்,) கும்பிட்ட - தம்மைவணங்கிய, பத்தர்க்கு அடியவர்களுக்கு, அழியாத - கெடாத, இன்பம்கொடுக்கும் - பேரின்பத்தைத்தரும், முத்தர் - முத்திநிலத்திற்குத்தலைவர், வம்புஇட்ட - கச்சையணிந்த, கொங்கை-திருத்தனங்களையுடைய, உமைபாகர் - உமைக்குத்தலைவர், சண்பையர் - சண்பையாகியசீகாழிக்கண்ணுள்ளார், வந்திலரேல் - எனது காதலைத்தணிக்க வராவிடின், கொம்பு இட்ட-கொம்பிற்கட்டிய, கோழிக்கொடி-கோழிக்கொடியினையுடைய, வேந்தன் - முருகக்கடவுளது, கொச்சையை - வாகனமாகிய ஆட்டினை, கொல்வதனால் - பலியிடுதலால், அம்பு இட்ட - அம்பினையொத்த, கண்சிறுஇடைச்சிக்கு - கண்ணையும் சிறிய இடையினையுமுடைய இப்பெண்ணுக்கு, பயன் ஆகுவது - பயனைத்தரத்தக்ககாரியம், என் - யாதாம், ஓ- அசை, எ-று.

(வி-ரை.) இது வெறிவிலக்கல் என்னும் துறைப்பாற்படும். என்னெனின்? தலைவனது பிரிவு ஆற்றாத்தலைவியின் துயர் கண்ட நற்றாயர் முதலியோர் இவளுக்கு அணங்கின் குறையாலீது நேர்ந்ததென்று அதற்கமைந்த சாந்திசெய்யும் வகை வேலனைப்பூசித்து வெறியாட்டயரவும் மறியறுக்கவும் தொடங்கிய அவர்களைத்தோழி இது தக்கதன்று அவ்வகை வெறியாடுதலும் மறியறுத்தலும் இவள்கொண்டகாதலை தணியாவெனத்தடுத்தல். இறைவனை யொருகால் மனமொழிமெய்களால் உறுதிபெறக் கும்பிட்டார் உயிர்பதமாகி

ய சுவர்க்காதிபதங்களில், பன்னாள் தங்கிமுத்திபெறுதல் உண்மையாதலின் கும்பிட்ட...முத்தர் என்றார். இதனை "மாயனன்மாமணிகண்டன் வளர்சடையாற்கடிமை, யாயினதொண்டர் துறக்கம் பெறுவது சொல்லுடைத்தே, காய்சினவாளை வளருங்கனகமலையருகே, போயினகாக்கையுமன்றே படைத்தது பொன்னிறமே." என்பதாலும் பிறவற்றாலுமறிக, வம்பிட்ட கொங்கையென்பதற்கு மணப்பூச்சுகளமைந்த கொங்கையெனினுமாம். உமைபாகர் எனவே, அங்ஙனம் அவளைவிட்டுப்பிரியாதுகொண்டோர், தன்பொருட்டு வருந்தும் எனதிரக்கம் சிறுது நோக்காது வருந்தவைத்தல் தக்கதன்று எனக்குறிப்பித்ததுமாம். இங்குப் பொதுப்பட அணங்குபலவற்றினைக்கூறாது கொம்பிட்ட கோழிக்கொடிவேந்தனையே கூறினதால் வேலனுடுதல் பெரும்பான்மையும், ஒழிந்தோராடுதல் சிறுபான்மையுமெனக்குறிப்பித்ததற்காம். இவள் சிற்றிடைச்சியாதலின் அவளகத்து வளர்ந்த கொச்சையாகிய ஆட்டினைப்பலியிடுதல் அத்துணைச்சிறப்பின்று வேறொன்றைப்பலியிடின் நலந்தருமெனக் கூறியதுமாம். இட்ட, என்பதை உவமவுருபாகக்கொள்க, ஆகுவது, என்பதில் கு - சாரியை.

இணைக்குறளாசிரியப்பா.

ஆகுவாகனனைத்தோகைவாகனனை
யுற்றசீர்மகாரெனப்பெற்றசுந்தரனை
ஞானவாரிதியிலானவாரமுதே
கற்றவர்கருதுநற்றவக்கரும்பே
யிருட்குறும்பெறிந்தவருட்கலாமதியே
கதிர்த்தொகைகுன்றாதுதித்தசெங்கதிரே
நிறைந்தவன்பலரினுறைந்தசெந்தேனே
துன்பமொன்றறியாவின்பவாரிதியே
மறைமுடிவிளக்குஞ்சுடர்விடுமணியே
விறலரிபிரமன்பெறலரும்பொருளே
சிற்பநூன்முழுதுமற்பமின்றுணர்ந்த
வோவியரற்புதமேவுகைத்தொழிலர்
சுத்தவெண்படிகப்பித்திகைத்தலத்தி
னவமணிதெளித்துக்குவவினகூர்நுதித்
தூரியங்கொண்டுசீரிதிற்குயிற்று
மிமைப்பிலாநாட்டத்தமைப்பருங்கலாப
நீலமேகாரமுங்கோலமார்குயிலுந்
துப்பமர்வளைவாயொப்பறுபச்சைத்
தகைசிறைக்கிளியும்புகைநிறப்புறவு
மேனிமிர்தூவிப்பானிலவனமு
நன்மதுநிகர்த்தவின்மொழிப்பூவையு

மீனமெனக்கருதிமனமுவந்தணைத்த
வுயிர்நிலைபெற்றமயின்முதற்பறவையுங்
கூறுபடநோக்கினர்வேறுபாடறியா
வளனொடுசெறிந்தவளவிலாமாடத்
துறைதருகற்புநிறைகுலமடவா
ரளிமுரல்குழலுமொளிகிளர்முகமுங்
குலாவியபுருவமுநிலாவிரிகுழையு
நறியமென்சொல்லுஞ்சிறியநுண்ணிடையுந்
தத்துநீருவரிமுத்தமாலிகையும்
பிரளயவெள்ளத்திரளினுமழியாத்
திருநகரிதுவெனக்கருதிவான்முகிலுஞ்
சந்திரவிம்பமுமிந்திரதனுவு
மிலங்குசெங்கதிருந்துலங்குவானமுதும்
வாராமின்னுந்தாராகணமும்
ஒருங்குவந்திருந்தபெருந்திறனேய்ப்பக்
காட்சியிற்பொலிந்தமாட்சிமைசிறந்த
காழிநாயகனேவாழிபூரணனே
பேர்தரும்பொற்கிரிசேர்கருங்கொடியும்
பொன்னிறமாமெனச்சொன்னதொன்மொழியு
மேதமினிறைமதிச்சீதளநிலவா
லாருமெய்யுருப்பந்தீருமென்பது
மொழிதருமிரதகுளிகைதற்சேர்ந்த
காளிமச்சீருணநீளியற்கனக
மாமெனக்கூறுந்தோமறுமொழியுங்
கருடதியானமருடபவந்தோர்
நோக்கினிற்றவிருந்தீக்கடுவென்றலு
மாயிரங்கிரணத்தலர்கதிர்முன்னம்
பாயிருள்கெடுமெனப்பகர்பழமொழியு
மங்கண்மாஞாலத்தெங்கணுமொப்ப
வியலும்பட்டாங்கயலலவென்னல்
சாதமெய்ஞ்ஞானவரதநிற்சேர்ந்த
பேதையேன்பாசத்தீவினையகற்றித்
திருவருட்செல்வம்பெருகுமாறுதவி
யளித்தருள்பேரின்பாகும்
களித்திடுமுத்திக்காழிவான்கனியே

(இ-ள்.) ஆகுவாகனனை-பெருச்சாளியை வாகனமாகக்கொண்ட விநாயகமூர்த்தியையும், தோகைவாகனனை - மயிலைவாகனமாகக்கொண்ட குமாரக்கடவுளையும், உற்ற - நல்லிணக்கந்தங்கிய, சீர்மகார் என - சிறந்த புத்திரராக பெற்ற - அளித்த, சுந்தரனே - அழகப்பிரானே, ஞானவாரிதியில் - சிவஞானமாகிய கடலில், ஆன - தோன்றிய, ஆர்அமுதே - நிறைந்தஅமுதமே, கற்றவர் - வேதசிவாகமங்களின் பொருளுணர்ந்தார், கருதும் - தியானிக்கின்ற, நல்தவக்கரும்பே - நல்லதவத்தின் பயனாகிய கரும்பே, இருள் குறும்பு - இருளாகியகுறும்பரசர்களை, எறிந்த - அறவீசிய, அருட்கலமதியே - கருணை நிறைந்த கலைகளையுடைய மதியாகியவீரனே, கதிர்த்தொகை - கிரணத்தின் தொகுதி, குன்றாது - சிறிதுங்குறையாமல், உதித்த - உதயஞ்செய்த, செங்கதிரே - சிறந்த கிரணங்களையுடைய சூரியனே, நிறைந்த அன்பு அலரின் - நிறைந்த அன்பாகிய மலரின்கண், உறைந்த - இறுகியுள்ள, செந்தேனே - சிவந்த தேனையொப்பானே, துன்பம் ஒன்று - துன்பம் சிறிதும், அறியாத - உணராத, இன்பவாரிதியே - இன்பமாகிய கடலே, மறைமுடிவு - வேதத்தின் முடிவினை, விளக்கும் - சநகர் முதலியோர்க்கு அருளிச்செய்த, சுடர்விடு - பிரகாசந்தங்கிய, மணியே - மாணிக்கம்போல்வானே, விறல் அரி - வெற்றிகொண்ட விஷ்ணுமூர்த்தியும், பிரமன் - பிரமனும், பெறல் அரும் - அடைதற்கருமையான, பொருளே பொருளானவனே, சிற்பநூல்முழுதும் - சிற்பசாத்திரமுழுதும், அற்பமின்று - இகழ்தலிலாது, உணர்ந்த - அறிந்துகொண்ட, ஓவியர் - சிற்பநூல்வல்லோர், அற்புதம் மேவு - அழகுதங்கிய, கைத்தொழிலர் - கைத்தொழில் வல்லோர், சுத்தம் - குற்றமற்ற, வெண்படிகம் - வெண்மையாகிய பளிங்கு கற்களாலாகிய, பித்திகைத்தலத்தின் - சுவரின்கண், நவமணி தெளித்து - நவரத்தினங்களைத்தெளித்து, குவவின - கூடியுள்ள, கூர்நுதி - மிக்ககூர்மையாகிய, தூரியங்கொண்டு - எழுது கோலினைக்கொண்டு, சீரிதின் - சிறந்த இலக்கணத்துடன், குயிற்றும் - செய்யப்பெற்ற, இமைப்பிலா-சிறிதுமிமைக்காத, நாட்டத்து-கண்களையுடைய, அமைப்பரும்-செய்தற்கருமையாகிய, கலாபம் - தோகையினைப்பெற்ற, நீலம் ஏகாரமும் - நீல நிறங்கொண்டமயிலும், கோலம்ஆர்குயிலும் - அழகு தங்கிய குயிலும், துப்பு அமர் - பவளத்தினையொத்த, வளைவாய் - வளைந்தவாயினையுடைய, ஒப்பு அறு - ஒப்புமைஅற்ற, தகை - அழகினைப்பெற்ற, பச்சை சிறை - பசுமையாகிய இறகுகளையுடைய, கிளியும் - கிளிப்பிள்ளையும், புகைநிறம் - புகையினிறங்கொண்ட, புறவும்-புறவும், மேல்நிமிர - மேலேயுயர்ந்த, தூவி - சிறகுகளையுடைய, பால்நிறம் - வெண்மை நிறங்கொண்ட, அனமும் - அன்னப்பறவையும், நல்மது - நல்ல தேனினை, நிகர்த்த - ஒத்த, இன்மொழி - இனிய மொழிகளைப்பயின்ற, பூவையும் - நாகணவாய்ப்புள்ளும், இனம் எனக்கருதி-தம்மினமென்று எண்ணி, மனம் உவந்து - மனக்களிப்புடன், அணைத்த - அணைத்துக்கொண்ட, உயிர்நிலைபெற்ற - உயிரோடுகூடிய, மயில் முதற்பறவையும் - மயில் முதலிய பக்ஷிக்கூட்டங்களும், கூறுபட - வகைபட, நோக்கினர் - பார்த்தோர், வேறுபாடு - (உயிரிலாப்பறவைக்கும் உயிர்ப் பறவைக்குமுள்ள) வேற்றுமையினை, அறியா-அறியப்பெறாத; வளனொடு - வளப்பத்து

டன், செறிந்த - நெருங்கிய, அளவுஇலா - அளத்தற்கருமையாகிய, மாடத்து - மாளிகைக்கண், உறைதரு - வசிக்கும், கற்புநிறை - கற்புநிறைந்த, குலமடவார் - குலமாதர்களுடைய, அளிமுரல் - வண்டுகள் ஒலிக்கின்ற, குழலும் - கூந்தல்களும், ஒளிகிளா - பிரகாசந்தங்கிய, முகமும் - முகங்களும், குலாவிய - வளைந்த, புருவமும - புருவங்களும், நிலாவிரி - கிரணத்துடன் விரிந்த, குழையும் - காதணிகளும், நறிய - நல்ல, மெல்சொல்லும் - மிருதுவாகிய சொற்களும், சிறிய - சிறிதாகிய, நுண்ணிடையும் - நுட்பமாகிய இடைகளும், தத்து - துள்ளுகின்ற, நீர் - ஜலத்தினைக்கொண்ட, உவரி - கடலிற்றோன்றிய, முத்தமாலிகையும - முத்துமாலைகளும், பிரளயவெள்ளத்திரளினும் - பிரளயமாகிய வெள்ளமிகுதி கொண்டுவரினும், அழியா - கெடாத, திருநகர் - அழகுகொண்டநகரம், இது எனக்கருதி - இது என்று எண்ணி— வான்முகிலும் - ஆகாயத்தில் உலாவும் மேகக்கூட்டமும், சந்திர விம்பமும்- சந்திர பிம்பமும், இந்திரதனுவும் - இந்திரவில்லும், இலங்கு-பிரகாசிக்கின்ற, செங்கதிரும்-(செந்நிறங்கொண்ட கிரணங்களையுடைய) சூரியனும், துலங்கு, பிரகாசிக்கின்ற, வான்அமுதும் - சுவர்க்கத்தமர்ந்தஅமிர்தமும், வாராம்மின்னும் - நீண்டமின்னலும், தாராகணமும்-நட்சத்திரகூட்டமும், ஒருங்குவந்திருந்த - எல்லாந்திரண்டுவந்திருந்த, பெருந்திறன் ஏய்ப்ப - பெருமையுள்ள திறனையொப்ப, காட்சியின் - தோற்றததால், பொலிந்த - விளங்கிய, மாட்சிமை சிறந்த - மாட்சிமையிற் சிறப்புற்ற, காழிநாயகனே - திருக்கழுமலமாகிய சீர்காழிக்கு நாயகம்போல்வானே, பூரணனே - எங்கும் நிறைந்துளானே வாழி - நீ (பல்லாண்டு பல்லாண்டாக) வாழக்கடவாய், ஏர்தரும் - அழகுதங்கிய, பொன்கிரிசோ - பொன்மலையாகிய மேருவினையடைந்த, கருங்கொடியும் - கருமையாகிக்காக்கையும், பொன்னிறம் ஆம் - பொன்னினிறத்தினைப்பெறும், எனச்சொன்ன-என்று கூறிய, தொல்மொழியும் - (முதியோர்கூற்றாகிய) பழமொழியும், ஏதம் இல் - குற்றம்இல்லாத, நிறைமதி-பூரணசந்திரனுடைய, சீதளநிலவால் - குளிர்ந்த சந்திரிகையால், ஆறும்-நிறைந்த, மெய் உருப்பம் - தேகத்தின்வெம்மை, தீரும் என்பதுவும் - நீங்கும் என்று கூறுதலும், மொழிதரும் - புகழத்தகுந்த, இரதக்குளிகை - இரசக்குளிகை, தன் சேர்ந்த - தன்னையடைந்த, காளிமம் சேர்உண(செம்பினது) களங்காமாகிய மிகுதியைக்கெடுக்க, நீள்இயல்கனகம் ஆம் - அது உயர்வுபெற்ற பொன்ஆகும், எனகூறும் - என்றுகூறும், தோம் அறு-குற்றம் அற்ற, மொழியும் - சொல்லும், கருடதியானம் - கருடஉபாசனை, மருள்தப -(மறதியாகிய) மயக்கமற, வந்தோர் - கைவரப்பெற்றோருடைய, நோக்கினில்-தன்னைகருடனாகப்பாவித்து அப்பாம் பின்விஷத்தை நோக்கும் நோக்கத்தால். திக்கடு -கொல்லுகின்ற அப்பாம்பின் விஷம், தவிரும் என்றலும் - நீங்கும் எனக்கூறுதலும் ஆயிரம் கிரணத்து - ஆயிரம்கதிர்களையுடைய, அலர்கதிர் முன்னம் - பரந்த சூரியனுக்குமுன்பு, பாய்இருள்-பரவிய இருள், கெடும்என - கெட்டுப்போம் என்று, பகர்பழ மொழியும்-சொல்லுகின்ற பழயவாசகமும, அங்கண் - அழகியஇடம் கன்ற, மாஞாலத்து - பெரியபூமியின்கண், எங்கணும் - எவ்விடத்தும், ஒப்ப - சமமாக, இயலும் - நடக்கின்ற, பட்டாங்கு - உண்மைவாசகம்,

அயல்அல - வேறல்லவாகும், என்னல் - எனக்கூறுதல், சரதம் - உண்மையாகும், மெய்ஞ்ஞான - உண்மைஞானமாகிய சிவஞானத்தினை, வரத - தருபவனே, நின்சேர்ந்த - தேவரீரைஅடைந்த, பேதையேன் - அறிவில்லாத என்னுடைய, பாசத்திவினை - பாசங்களாகியதிவினைகளை, அகற்றி - திருஅருட்பார்வையால் போக்கி, திரு●ருட்செல்வம்-திருவருளாகிய பெருஞ்செல்வம், பெருகும் ஆறு-வளரும்வழியினை, உதவி - அருள்செய்து, அளித்து அருள்-தேவரீரின் திருவடிதந்தருள்வாயாக, பேரின்புஆகும் - பேர் ஆனந்தம் வளரும், களித்திடும்- களிப்பைத்தரும், முத்திக்காழி-மோக்ஷத்தைத் தருகின்ற சீர்காழிக்குளெழுந்தருளியிருக்கும், வான்கனியே - கற்பகக்கனி யாயுள்ளானே. எ - று.

இறைவனே - இரதக்குளிகை தன்னைச்சேர்ந்த செம்பின்களிம்பினைப் போக்கிப் பொன்னாக்குதல் போலவும், சந்திரப்பிரகாசம் தேகஉருப்பத்தை நீக்குதல் போலவும், மேருவினையடைந்த காக்கையும் பொன்னிறமடையுமென்பது போலவும், கருடத்தியானத்தால் பாம்பின்விடமொழிதல் போலவும், சூர்யசந்நிதானத்தின் இருட்படலம் ஒழியுமாறு போலவும், தேவரீரையடைந்த் அடியேனது பாசக்கூட்டத்தினை யொழித்து முத்தியளித்தருள் என்பது கருத்து.

(வி - ரை) அடியேன்படும் வருத்தமறிந்தும் ஆதரிக்காதிருத்தல் புத்திரரிடத்து அன்பிலார்செயும் செய்கைபோலும, எனக்குறிப்பிப்பார் இரண்டு புத்திரரைப்பெற்றுளீரென்னும் ஆகுவாகனனைத் தோகைவாகனனையுற்ற சீர் மகார் எனப்பெற்றவென்கிற தொடரையெடுத்துக்கூறினார். தன்னையொத்தாரையின்மையின் ஆகுவாகனனையென முன்னும், அவனிற்பின்றோன்றுதலின் தோகைவாகனன் என அவற்குப்பின்னும் முறைப்படக்கூறினார். தாம் தியானிக்குந்தோறு உலகப் பொருட்கண் அழகுள்ளனவற்றினைக்கடந்து அப்புறப்பட்டுத்தன்னின் மிக்கதிலாது தனித்தவெழில் கொண்டிருத்தலின் சுந்தரனே எ-ம் தேவர் அமிர்து,நரைதிரைமூப்புமுதலிய போக்கிக்குறித்த இளமையைத்தந்து இன்பநுகரச்செய்தலே யன்றியாண்டும் பாசவீக்கத்தைப் போக்குதல் செய்யாதாதலி னதனையொழித்து, இது, மேற்கூறியனவேயன்றியெக்காலத்து நோய் மூப்புச்சாக்காடு பாசம் அனைத்தையும் போக்கவல்ல மருந்தென்பார் ஞானவாரிதியிலானவராமுதே - எ - ம், இறைவனது சிறப்பின் வீக்கத்தை வேதசிவாகமங்களேயன்றி மக்கள் தேவர்களில், அவற்றையுணர்ந்தோரொழிய ஏனையரால் அவனது சீர் அறியத்தக்க தன்றென்பார் கற்றவர்கருதும் நற்றவக்கரும்பே, எ - ம், வீரனாகிய அரசன், தான் இல்லாதகாலத்துக்,குறும்பரசர் அவனது நாட்டிற் புக்குக்குடிகளை யலைக்க அரசனறிந்து அவரையடக்கத்தொடக்குறுகையி னடங்கி யொடுங்கல் போலஇருளும் சந்திரனிலாதகாலத் துலாவி அவனதோன்றியகாலத்துத் தாளொடுங்குதல் போலவும்,இதுகாறும் யமனையலைத்துத்தம் வசப்படுத்தியிருந்த ஆணவாதி யிருட்குழாம் உனது திருவருளாகிய பூரணசந்திரன் தோன்றியவாறே கேடுற்றமையின்

இருட் குறும்பு.....கலாமதியே, எ-ம், உலகத்துப்புறவிருளைப் போக்குஞ்சூரியன், அந்தந்த வீதிகளிற்புக்குலாவுகையில்கதிர்த்தொகைமிக்குங்குறைந்தும்உலாவுவன், அவ்வாறன்றி நீயெக்காலத்தும் உனது கதிரின் குறையாதஞானசூரியன் என்பார், கதிர்.....,செங்கதிரே, எ-ம், நீ உன்னிடம் உள்ளன்புடையாரிடத்துறைவாயன்றியேனை யரிடத்துறைவாய்ல்லை யென்பார் மலர்மேலேற்றிநிறைந்த...தேனே - எ-ம், ஏனையதேன், மலர்க்கண்வண்டுமுதலியமுகந்துண்ணும் வகைத், திரவப்பொருளின்வகைத்து இது அவ்வகையிலாதுஅவ்வண்டுகளால் கிரகிக்கப்பெறாது என்பார் உறைந்த, எ-ம், உன்னையணுகினார் உன்னைவிட்டு நீங்காத பேராநந்த மடைந்து அதின் மூழ்கி அதினின்றுமீண்டுவரா நிலைபெறக்களித்தலின் அவர்க்கு இவ்வுலகத்துன்பம் சிறிதும்பொருளலவாகவிருத்தலின் துன்பமொன்றறியா...வாரிதி, எ-ம் சநகர்முதலிய மகருஷிகளும், அனந்தர்முதலிய சிவபேதருத்ரபேதத்தவரு வேதசிவாகமங்களின் முடிவு தேறாது அலைந்தகாலத்து அவர்பொருட்டு ஆசிரியவேடம்பூண்டுசின் முத்திரைதாங்கி அவர்க்கு அவ்வேத சிவாகமங்களின் பொருளைவிளக்கின கருணைநிலையன் என்பார், மறை...மணியே, எ-ம். (குற்றமற்றரத்தினமென்பார் சுடர்விடுமணி என்றார்.) அசுரர் ,இராக்கதர், முதலியோரைவென்றும், தேவர் இருடியர், மானுஷர், முதலியோர்க்கு இறைவனது கல்யாண குணங்களைத்தானறிந்தவாறுணர்த்தியும் வரும் பெருமையுடையான்என்பார் விறலரி, எ-ம், தான் வேதத்தினைத் தன்னிடம் பெற்றிருந்தும் தேரை நீர்வாழினும் வழும்பறுக்கவறியாதவாறுபோல அதன் பொருளுணரான்என்பார் பிரமன், எ-ம், இவ்விருவரும் தமது பாசவீக்கம் ஒழியாது உணர்தலாகாமையின், விறல்...பொருளே, எ-ம் கூறினார், பல சிற்பநூற்களனைத்தையுமுணர்ந்தோர் என்பார் சிற்பநூன்முழுதும் எ-ம், அதின் சிலவற்றையொழித்துச்சிலகற்காது ஒருங்குணர்ந்தார் என்பார் அற்பமின்று, எ-ம், இவையறிந்து செய்வோர் என்பார் ஓவியர், எ-ம், நூலுணர்ச்சியே யன்றிசெய் தொழிலிலும் வல்லார் என்பார் கைத்தொழிலர் எனவும் கூறினார்.

மணிமுதலிய ஏதேனுமொன்றன் குணதோஷங்களையறிவோர்அதனையாராயப்புகுமிடத்து குற்றமற்றவெள்ளியதலத்தில் அதனைப்பரப்பியறிவர் ஆதலால் சுத்தவெண்படிகத்தலம், எ-ம்,தேவருலகத்துள்ளசராசரங்கள் எல்லாம்இமைப்பிலா நாட்டத்தன ஆதலால் இத்தலத்துள்ளவையும் அவையென்பார்இமைப்பிலாநாட்டம்,எ-ம், கூறினார்.நீலம் ஏகாரமுதல்.பூவை யென்பதன்காறும் தன்மையணி. இனமெனக் கருதியெனவே அத்தகையுயிருள்ளன அவற்றைக்கண்டு அருகிற் சென்று மயங்கினவென்பது பெறப்பட்டது. இதுமயக்கவணி. கணவனையே தெய்வமெனப்பேணும் கற்புளார் என்பார், கற்புநிறை...மடவார், எ-ம், அன்றலர்ந்தமணநிறைந்த மலர்களைச்சூடினார் என்பார்அளிமுரல் குழலும் என்றதாம். முத்தின்பிறப்புப் பலவிடத்தனவாயினும்அவை கடற்பிறந்த முத்தத்தினை யொவ்வா வென்பார் தத்து நீருவரி முத்தமாலிகை எனவுங் கூறினார். அங்ஙனம் அளிமுரல் குழல் முதலடுக்கிக்கூறி

யதனுனே அவற்றைப்பின்வரும் முகில் முதலிய வற்றோடு இணைத்து உவமைப்படக்கொள்க. எங்ஙனமெனின், வான்முகில், அளிமுரல் குழலையு-சந்திரவிம்பம், ஒளிகிளர்முகத்தையும், இந்திரதனு, குலாவிய புருவத்தினையும், இலங்கு செங்கதிர், நிலாவிரிகுழையையும், துலங்குவானமுது, நறியமென்சொல்லினையும், வார்ஆம்மின், சிறிய நுண்ணிடையையும் தராகணம், முத்தமாலிகையையும் ஒத்தனவெனக்கொள்க. இவையுவமையணி அடிகள் தமக்கு இறைவன் ஆசிரியமூர்த்தமாய் எழுந்தருளி யநுக்ரகித்த பெருங்கருணையை மனத்து நினைக்குந்தோறுங் கொண்ட ஆராமை தம்மிலடங்காது காழி நாயகனே எனக்கு ஏதேனு நேரினும் நோக என்னையொப்பாரி டுக்கணைப் போக்கி யநுக்கிரகிக்கும் தேவரீர்க்கு எவ்வகை யிடுக்கணு நேராதிருக்க என வாழி பூரணனே என்றார். பொற்கிரி தன்னைச்சேர்ந்த பொருள்களைத் தன்னிறமெகொளச்செய்வதுபோலவும், சந்திரிகை மெய்யுருப்பத்தினையகற்றிச் சீதளத்தைத் தருதல் போலவும், இரதக்குளிகை, செம்பின்கணுள்ள களிம்பினைப் போக்கிப் பொன்னுக்குதல் போலவும், கருடத்தியானஞ்செய்வோர் பார்வையால்விட நீங்குதல் போலவும் சூர்யசந்நிதானத்து இருளொழிதல் போலவும், தேவரீரைப் புகலெனவடைந்த அடியேனது அநாதியாகவருகின்றபாசத்தொடர்பினைத்தையுந் "திருநோக்காற் பரிசத்தாற் திகழும் வாக்கால்" என்றபடி ஒருவகைப் போக்கித்திருவருளையருள் செய்வாய் என்பார், ஏர்தரும்பொற்கிரி முதலியவற்றை யெடுத்துக்கூறினா. இது திருட்டாந்தாலங்காரம். கருங்கொடியும் என்பதன்கணுள்ள உம்மை யிழிவு சிறப்புப்பொருளது. அது அடைந்தாரைத்தன் போலாக்கும் இறைவனது சாரூப நிலையுணர்த்தினது. நிறைமதி சீதளநிலவால் உருப்பத்தைப்போக்குதல் இறைவனது சத்திநிபாதம்பதிந்ததுணையானே ஆன்மாவின் பாசவீக்கமொழிதற்கு எடுத்துக்காட்டு. இரதக்குளிகை செம்பைப்பொன்னுக்குதல் இறைவன் குருமூர்த்தமா யெழுந்தருளித்தீக்ஷை முதலியவற்றாற் பாசச்சேதஞ்செய்து ஆன்மாவைத்திருவடிக்கண்கூட்டு முறைக்கு எடுத்துக்காட்டு. கருடத்தியான முணர்ந்தோரைக்கூறியது சக்ஷுதீக்ஷையால் ஆன்மாவின் வினையொழித்தற்கு எடுத்துக்காட்டு. சூரிய சந்நிதானத்து இருளகெடுமென்றது மீன்தானிட்ட முட்டைகளைக்காலம் பெறமனத்து எண்ணிய மாத்திரையில் அவை குஞ்சுகளாய்த் தாயிடம் வருதல்போல் இறைவனிருந்த இடத்திருந்து ஆன்மாவைக்கருணையாலினைத்து அடிமை கொள்ளுதற்கு எடுத்துக்காட்டு எனக்கொள்க. மேற்கூறிய முதுமொழிகள் அடியேன் எனது இச்சையால் கூறியவல்ல ஆன்றோர் அநுபவத்தாற் கூறியவாகுமென்பார் "இயலும் பட்டாங்கயல்ல வென்றல் சரதமென்றார். நீயனைத்தும் உணர்ந்தவன் என்பொருட்டுக்கருணை செய்யவல்லாய் என்பார் மெய்ஞ்ஞானவரத என்றார். எல்லாக்களிப்பிற்கு முயர்ந்ததென்பார் களித்திடுமுததியெனவுங்கூறினார்.

வெண்பா.

காழிக்கு வேந்தர் கருணை லயர்முனநீ
காழிக் குமாரன் கவிகையினை - யாழிக்கட்
கண்டமட்டிற் சூடகமுமா கார்விழியிற் கங்கண்முங்
கொண்டனளென் றன்னமே கூறு.

(இ-ள்.) அன்னமே - அன்னப்பேடே (நீ) காழிக்குவேந்தர் - சீர்காழிக்கு நாயகரும், கருணாலயர் - கருணைக்கு இருப்பிடமான வருமான சிவமூர்த்திக்கு, முனம் - முன்னே (சென்று) காழ - வயிரங்கொண்ட, இக்குமாரன்-வில்லைத்தாங்கிய மன்மதனது, கவிகையினை - குடையாகியசந்திரனை, ஆழிக்கண் - கடலிடத்து, கண்டமட்டில் - உதயமாகக்கண்டமாத்திரையில், சூடகமும் - மணவெம்மையையும், கார்விழியில்-கருமையாகிய கண்களில், கங்கணமும் - நீரின் கூட்டத்தையும், கொண்டனள் என்று - (தலைவி) அடைந்தாள் என்று, கூறு - தலைமகளிடத்துக் கூறுவாயாக எ-று.

இது, தலைவனை நீங்கிய தலைவி, சந்திர உதயங்கண்டு தரிக்கப்பெறாநிலை கண்டதோழி அன்னப்பேடையை நோக்கி யெமது நாயகியின் துயரைக்காழி நாயகர்க்கு அறிவிக்கவென இரந்து கூறுதலால் இது அன்னவிடுதூது. விரகமடைந்தமடவார்க்குக்கங்குற்காலத்துச்சந்திரவுதயந் துயர்க்கேதுவாதல்; "தென்றற்கும் வீணைக்குஞ் சேமணிக்குங்கோகிலத்துக் கன்றிற்கமைக்காழிக்கம்புவிக்கு நின்றரற்று,மன்னைக்குமாரற் கயர்ந்தாளென்றன்னமே,யென்னைக்குமாரற்கியம்பு." என்றதாலறிக. எல்லாவுயிர்களையுந் தம்முயிர்போல் காக்கவல்ல வேந்தனையொருவாறு ஒத்தலால் எனது துயர்கண்டு சகியான்.கருணைசெய்யும் என்பார் காழிக்கு வேந்தர் எனவும், பெருங்கருணையாலய அருளே திருமேனியாக்கொண்டவன் என்பார் கருணாலயர், எ-ம். கூறினார், நீ என் முன்னிலை யொருமையாற் கூறியதனானே இது அடியேன் பட்ட காமம் இதனைப் பலரும், உன்னினத்தவரும் அறியாது செய்க. என்பார் அவ்வாறு கூறினார் உன்னால் பண்டு உருவிழந்தானாயினும் உன்னிடத்துக் காதல் கொண்டாரிடத்து உன்னிடங்கொண்ட வயிரத்தைச் செலுத்தாதிரான் என்பார் காழ் இக்குமாரன் என்றார், பல்லார் மேல் வளைத்து ஏவி வயிரங்கொண்ட வில் என்பார் காழ் இக்கு என்றார். மாரனது கவிகை சந்திரன் என்பதை "ஆலைக்கரும்பு சிலையைங்கணை பூநாண் சுரும்பு, மாலைக்கிளி புரவிமாருதந்தேர் வேலை, கடிமுரசங்கங்குல்களிறு குயில் காளங், கொடி மகரந்திங்கள் குடை" என்னுஞ் செய்யுளாலறிக, ஆழி,ஆழமுடையதென்னும் பொருட்டு, இந்நிலா தனது பிறப்பிடத்தினை யலைத்துக் கெடுக்கும் பொருள்களாகிய நண்டுசிப்பி வேய் முதலியனபோல் தன்பிறப்பிடத்தினையுதயத்தால் மோதி அலரச்செய்வதாயின்,என்னையென்ன செய்யாதுஎன்பார் ஆழிக்கண் கண்டமட்டில் என்றார். புறத்தில் வெண்மையும் அகத்திற் கருமையும போலப்புறத்தில் குளிர்ச்சியும் அகத்தில்வெம்மையுங்கொண்டு என்னைவெதும்பச்செய்தது என்பாள் சூடகமும் என்றாள். இதனை "உருப்பமிகுவன்றழல் சிவப்புற்றுலகர் காணவொளிதரவும், நெருப்பு வெண்மை யென்பது நன்னியாயர் நின்னைக்குறித்தன்றோ, பொருப்புநறுஞ்சந்தனச்சேறு புலர்ந்து யொரியப் பூவணையும் விருப்பமலருங் கொளுந்தவழல் வீசியெழுந்தவெண்டிங்காள." எனும் சந்திரோபாலம்பனத்தாலறிக, கார்விழியிற்கங்கணமென்றதனானே பிரிவின் வருத்தத்தால் நீர் வார்ந்ததென்பது பெறப்பட்டது. கம்கணம் என்பது, நீரின் கூட்டமென்னும் பொருளதாகிய தொடர்மொழி. தூது சொல்லும் பொ

ருட்களில் அன்னமும் ஒருவகைத்தூதியம்புவது என்பதை "இயம்புகின்ற காலத்தெகினமயில் கிள்ளை, பயம்பெறு மேகம் பூவைபாங்கி நயந்தகுயில், பேதை நெஞ்சந்தென்றல் பிரமரமீரைந்துமே, தூதுரைத்து வாங்குந்தொடை." இதனாலறிக.

கட்டளைக்கலித்துறை.

கூறுஞ் செனனக் குடிலெடுநாணுழை கூன்முழுது
மாறும் படிக்கு மருந்துளதோசண்பை வாணர்கொண்ட
நீறுந் திருவெழுத் தோரைந்துங் கண்டியு நித்தநித்தந்
தேறும் பொருளென் றுணராத மாயச் செருக்கினர்க்கே. (உக)

(இ-ள்.) சண்பைவாணர்-சண்பையென்னும் சீர்காழியைத்தமக்கு இருப்பிடமாகக்கொண்ட சிவமூர்த்தி, கொண்ட - தாமணிந்துள்ள, நீறும் - திருநீறும், திருஎழுத்து ஓர் ஐந்தும் - ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தினையும், கண்டியும் - ருத்திராக்ஷமாலிகையினையும், நித்தம் நித்தம் - நாள்தோறும், தேறும் பொருள் என்று - நாம் உறுதியடைதற்கு முதற்காரணப்பொருளென்று, உணராத - அறிந்தணியப்பெறாத, மாயச்செருக்கினர்க்கு - மாயையால் செருக்கடைந்திருக்கும் மானிடர்க்கு, கூறும் - நூல்களால் இகழ்ந்து கூறப்படும், செனனக்குடில் - பிறப்பெனும் குடிசையில், நெடுநாள் பலசன்மங்களில், நுழை- நுழைந்துவரும், கூன்முழுதும் - கூனல் நோய்முழுதும், மாறும்படிக்கு - போய் ஒழியும் வகை, மருந்து உளதோ - மருந்து உளதாகுமோ (ஆகாது) எ-று.

இச்செய்யுள், விபூதி பஞ்சாக்ஷருத்ராக்ஷ தாரணங்களாகிய சாதநங்களல்லாது பலசன்மங்களாகப்பல பிறவிக்கண் வருந்தி வருஞ் சநந நோய் தீர்வதற்கு மருந்து வேறு கிடையாது என்பதைத் தெரிவித்ததாம்.

(கு-ரை) பூமியிற் பிறந்தார் அப்பிறப்பிலொன்றிற்றானே யநுபவிக்க வேண்டியவைகளை யநுபவித்தொழியப் பூதசம்பந்தமான பிறவிபோய்ப்பின் பிறவாவென்னும் நாத்திக ஏகதேசிகளின் மதத்தை மறுப்பார் ஆப்தவாக்யப்பிரமாணமென்னும் வேதசிவாகமங்களிற் கூறப்பட்ட பல பிறவியுண்டெனக் கூறுஞ் சநநக்குடில் என்றார். குடில் என்பது பண்பாகுபெயர். இதில் இல்பகுதிப்பொருள் விகுதி. புல் முதலிய தாவரங்களாகியும் எறும்பு முதலிய சங்கமங்களாகியும் வினைவயத்தால் பல நாள் பிறந்து மானிடப்பிறவிவருதலாதல் பற்றி நெடுநாள் என்றார், இதில் நாள் என்பது பல பிறவி பிறக்கும் பல சன்மங்களைக்குறித்து ஆகு பெயராய் நின்றது. குடில் என்பதீண்டு சின்னாளில் அழிந்துபோம் சிறுமையுணர்த்தி உடம்பிற்குவமைப்பட நின்றது. சிறு குடிலாதலின் அதில் நுழைவார் அதிலுள்ள நுழைவழிகுனிந்து நுழையவேண்டுதலின் அதற்கேற்பநுழை என்றார். அடிப்பட்ட பிறவிகளில் பல்வேறுவகைப்பட்ட சட்டகங்கள் எடுக்குந்தோறும் அதில் நுழைதலின் வளைந்த பெருங்கூன் என்பார் கூன்முழுது மென்றார். ஆயினும் இக்கூன்

ஆன்மாவிற்கநாதியன்று ஆகந்துகமென்பார் மாறும்படிக்கு என்றார். இனி அநாதியெனின் மாறாதாம். ஆகந்துகமேயிறைவனது திருவருளால் மாறுமென்க. வேற்றுமருந்தால் விடாத வெம்பிறவியென்பார் மருந்துளதோ என்றார். இதினிடத்தோகாரம் எதிர்மறைப்பொருட்டு. முழுதும் என்பதனும்மை முற்றுப்பொருளது. மருந்து தேவர் மருந்தோடுவமித்தபோலி. சர்வசங்கார காலத்துத் தம்மிடம் அடையும் ஆன்மாக்களை நீறுபடுத்தி அந்நீற்றினை அவ்வான்மாக்களின் பொருட்டுத்தமது திருமேனிக்கண் அணிவது இறைவனது பெருங்கருணையாதலின் செண்பை வாணர்கொண்ட நீறு என்றார். என்னை தாமணியின் ஆன்மாவிற்குறுதியெனின்? நோய்கொண்டமதலையின்நோய் தணிப்பான் ஆயேமருந்துண்டு குடர்பொறுக்கர்ச்சேயின் நோய் தணித்து அதனைக்களிப்பித்துத் தானுங்களித்தல்போலவென்க. திருவெழுத்தைந்தினைப்பிற்கூறி நீறு முற்படக்கூறிப்பின் கண்டிகைக்கடையில் வைத்ததென்னையெனின் கருணையால்தம்மைவந்தடைந்தார்க்குமுன்விபூதிகொடுத்துமனமயக்கத்தைச்சிறிது விலக்கிப்பின் தம்மையன்றி வேறல்லாத அத்திருமந்திரத்தினையுபதேசித்துத் தம்மைத்தந்து தாழ்வடத்தையுமணிந்து அழகுறநோக்கும் ஆசாரியமூர்த்தியின் முறைமையருளிச் செயததாம். உள்ளத்தில் நினைத்தலால் அஞ்ஞானத்தை நீறுபடச்செய்தலின் நீறென்பது காரணப்பெயர். "பிரம்மா விஷ்ணுஸ் சருத்ஸ்ச திரிபுண்ட ரஸ்யாதிதேவதா." என்றபடி திரிமூர்த்திகளு மதிதேவதைகளாகக் கொண்டிருத்தலின் அதனை முற்படக்கூறினதாகக்கொள்க. இதன் விரிவினை விரிந்த நூல்களினும் வல்லார் வாயானுங் கேட்டுணர்க. திருவெழுத்தின் ஏற்றம் இறைவனுக்குள்ள ஏற்றத்திற்குறைந்ததன்றாம் என்னெனின் அவனது திருமேனியே அவ்வெழுத்தாத்தோன்றியிருத்தலான் என்க. இனிருத்ராக்ஷம் இறைவனது திருநேத்ரத்திற்றோன்றியெல்லாத் தேவதைகளையும் அதிதேவதைகளாகப்பெற்றிருத்தலினதனைப் பிற்கூறினதாக்கொள்க. திருவெழுத்து எனப்பொதுப்படக் கூறியதனானே இருவகைவடிவினவாய அவ்வெழுத்துக்களில் ஒலிவடிவினையாம் அது ஆகாயத்தை யிடமாக்கொண்டு பிறத்தலின் என்க. திரு என்பது ஸ்ரீ எனும் வடமொழிச்சிதைவு. ஐந்து என்பது தொகைக்குறிப்பு. கண்டிகை எனுஞ் சொல்விகுதி குன்றிக்கண்டி என நின்று ஏனையகழுத்தணிகளைக்குறிக்காது அவ்வணிகளுக்கு நாயகமாய உருத்ராக்ஷ மாலிகையைத் தெரித்து நின்றது. உலகத்துள்ளார் தமக்கு தளர்வுவந்த காலத்து அதனை நீக்கிக்கொள்ள முயன்று தேடும் இம்மைப்பயனாகிய செல்வப்பொருள் போலாது இம்மையேயன்றி மறுமைக்கண்ணும் பயன்றரவல்ல மனத்தானினைந்தடையும் பொருளென்பார் தேறும் பொருள் என்றார். இப்பொருளைத் தேடுதற்கண்ணேகதேசமே முயலாது இடைவிடாது முயல்வார்க்கே அது பயன்றரும் மற்றுமுயன்றுகை வராமுன்னம் விடுவார்க்கு பயன்றராவென்பார் நித்த நித்தமென்றார். இவ்வகை விபூதி திருவெழுத்தைந்து கண்டிகையிருந்தும் மவற்றைத்தேறாது விட்டான் மாணாப்பிறப்படைதல் திண்ணமாதலின் மாயச்செருக்கினர் எனவுங் கூறினார்.

இணைக்குறளாசிரியப்பா.

செருக்குடனிகலித் தருக்கமேதேற்றி
யெம்மனோரி னிறந்துபிறந் துழலு
மம்மரிற்பெரிய வானவர்குழுவை
மெய்ப்பொருளென்று கைப்பொருளுதவியும்
வழுத்தியுநெஞ்சத் தழுத்தியும்வறிதே
புறவார்பசும்புற் கறவாக்கற்பசு
வாயிடைச்செருகித் தூயநீருதவி
யருஞ்சுவைப்பால்கொளப் பெருஞ்சுரைவருடும்
பேதையர்போலவு மோதுநஞ்சமரு
மெட்டியைவிரும்பி மட்டுநீர்த்தேக்கி
யீறுநுழைகல்லா மேனிமிர்வேலி
யுறும்படியமைத்து நறுங்கனிகொள்ளக்
கருதிமுயலுந் திருவிலிபோலவு
மிலகுவாலரிசி யுலைபெயவெண்ணி
வெற்றுமிகுற்றும் பற்றிலர்போலவு
மருநிலமுழுததி னெருமிகப்பெய்து
வித்திட்டாங்கே விளைபயன்கொள்ளச்
சித்தத்துன் னுமத்தர்போலவும்
வாழ்நாளனைத்தும் வீழ்நாளாக்கி
யிம்மையுமறுமையுஞ் செம்மையிற்பொருந்தா
திடருறுமாந்தர் புடவியிற்பலரால்
அன்னவாறெளியனு முன்னிமதிமயங்கா
தெய்ப்பினிலுதவு மெய்ப்பொருளாகி
என்றுமோரியல்பொடு நின்றகாரணநின்
சேவடித்தாமரைப் பூவினைப்புனைந்து
நாத்தழும்பேற வேத்தியுள்ளுருகிப்
பெருகியவன்பென வருநீர்நிறைந்த
விதயவாவிப் பதுமமாமலரின்
றுணையெனப்பொருந்து மணமாநின்னைக்
கண்டிறுமாந்து பண்டைவாதனைதீர்ந்
தறைகடலமுழ்ந்து நிறைகுடமதுபோன்
றசைவற்றிருக்க விசையத்தருதி
நிலைமிகப்பொருந்திப் பலமுறைசாரலா
லுந்தியவன்ன வுருமருவுதலான்

மந்திரத்துறுசுடர்மகத்துயர்தலினா
லிதம்பயிலிசைகொள்பதங்கலந்துறுதலால்
வேதமேயொப்பெனவோதுகோபுரமும்
ஒழுக்குநெறிசிறிதும்வழுக்கிலவதனால்
நாற்பதப்பிரிவினின்மேற்பதமதனாற்
பலகலையொளிர்மதிநிலவியவதனான்
முத்தனாரவியக்கும்பத்திமையதனாற்
சிவாகமமெனவொளிர்தவாமணிமேடையும்
வெள்ளைவாரணமேற்கொள்ளுமாங்கதனாற்
கட்டாமரைபலமட்டார்தலினா
லஞ்சுமந்தாரம்விஞ்சியோங்குதலா
லிந்திரனெனப்பொலியந்திரவாவியும்
மெங்கணுநிறைந்தவெங்குருநாதா
கருவலிதொலைக்கும்பெருமலைமருந்தே
கருணைசூற்கொண்டபெரியவான்முகிலே
சிற்றிடைக்கருங்கட்பொற்றொடிக்கரத்தாள்
ஆகமார்வனமுலையணையும்
போகமாரிதழிப்பூங்கண்ணியனே. (௨௨)

(இ-ள்) செருக்குடன் - மனக்களிப்புடன், இகலி-மாறுகொண்டு, தருக்கமே - வாதம் பேசுதலையே, தேற்றி - தாமும்பிறரும் அறிந்தும்அறிவித்தும், எம் அன்னோரின் - எம்மையொத்த மனிதரைப்போல, இறந்து - உடலைவிட்டு நீங்கி, பிறந்து - மீண்டும் பிறப்பினையடைந்து, உழலும் - உலகத்து உலாவும், மம்மரிற் பெரிய - மயக்கத்தாற் பெரியராய் உள்ள, வானவர்குழுவை - தேவர்கூட்டங்களை, மெய்ப்பொருள் என்று - உண்மையாகிய வுறுதியைத் தரும் பொருளாவார் என்று மதித்து, கைபொருள் உதவியும் - கையில் தாம் அடைந்த பொருள்களை நிவேதித்தும், வழுத்தியும் - அவர்களைத் துதித்தும், நெஞ்சத்து - மனத்தின்கண், அழுத்தியும் - அவர்களைப்பதித்தும், வறிதே - பயனிலாது, புறவு ஆர் - முல்லை நிலத்துத் தங்கிய, பசுமைபுல் - பசும்புல்லை, கறவா - பாலைக்கறவாத, கல்பசுவாயிடை - கற்பசுவின்வாயில், செருகி-நுழைத்து, தூயநீர் - சுத்தஜலத்தை, உதவி - உண்பித்து, அருமைசுவை - பெறுதற்கருமையாகிய சுவையினையுடைய, பால் கொள்ள - பாலினைக்கறந்து கொள்ளும்படி, பெருமை சுரை - பருத்த அப்பசுவின் மடியினை, வருடும் - தடவுகின்ற, பேதையர் போலவும் - அறிவிலிகளைப்போலவும், ஓது - (ஆயுள்வேத நூலார்) கூறும், நஞ்சு அமரும் - விஷம் அமைந்த, எட்டியை விரும்பி - எட்டிமரத்தை விரும்பி, மட்டுநீர்த்தேக்கி - அளவாக நீர்பாய்ச்சி, ஈநுழைகல்லா - ஈயும் நுழைதற்காகாத, மேல் நிமிர் - மேலேவளர்ந்த, வேலி - வேலியினை, உறும்படி அமைத்து - ஒன்றோடொன்று நெருங்கும் விதமாக

அமைத்து, நறுங்கனி - அதனது நல்லபழத்தினை, கொள்ள - அடையும்படி, கருதி - எண்ணி, முயலும் - முயன்று செல்லும், திருஇலிபோலவும் - அறிவெனும் செல்வமிலானைப்போலவும், இலகு - விளங்குகின்ற, வால் அரிசி - வெண்மையான சம்பா அரிசியை, உலைபெய்ய எண்ணி - உலையிலிட நினைத்து, வெறுமை உமி - பயனிலா உமியை, குற்றும் - கைவருந்தகுற்றுகின்ற, பற்று இலர போலவும் - பசையிலாதாரபோலவும், அருமை நிலம் - பயந்தரா நிலத்தை, உழுது - உழுதற்றொழில்செய்து, அதின் - அந்நிலத்தின், எருமிகப்பெய்து - மிக்க எருக்களை இட்டு, வித்து இட்டு - விதைவிதைத்து, ஆங்கு - அவ்விளைவின்கண், விளை-உண்டாகும், பயன்-பேற்றினை, கொள்ள-அடைதற்கு, சித்தத்து - மனதின்கண், உன்னும் - நினைக்கின்ற, மத்தர் போலவும் - பித்தரைப்போலவும், வாழ் நாள் அனைத்தும்-வாழ் நாள்முழுதும், வீழ்நாளாக்கி - பயன்றராதழிந்த நாளாக்கி, இம்மையும் - இப்பிறப்பிலாம் பயனையும், மறுமையும் - மறுபிறப்பிலாம் பயனையும், செம்மையின்-அடையும் சீர்மைப்படி, பொருந்தாது - அடையாமல், இடர் உறும் - துன்பம் அடைகின்ற, மாந்தர் - மானிடர், புடவியில் - பூமியின்கண், பலர் - பல்ர்உளர், அன்ன ஆறு - அவ்விதம், எளியனும்-ஏழைமையுடைய அடியேனும், உன்னி-பல எண்ணங்களைநினைத்து, மதிமயங்காது - மனந்தடுமாறுமல், எய்ப்பினில்-இளைத்தகாலத்தில், உதவும் - உதவிப்பயனைத்தருகின்ற, மெய்பொருள் ஆகி-உண்மைப்பொருளாகி, என்றும் - எக்காலத்தும், ஓர் இயல்பொடு-ஒரு தன்மைப்பட்டு, நின்ற - அழியாதுள்ள, காரண - உலகமுதற்காரணமானனே, நின் - தேவரீருடைய, செம்மை அடி - சிவந்த திருவடியாகிய, தாமரைப்பூவினை - தாமரை மலரினை, புனைந்து முடிக்குச்சிரோபூஷண மாகக்கொண்டு, நா - எனதுநா, தழும்பு ஏற - தழும்படையும் வகை, ஏத்தி - துதித்து, உள் உருகி - மனம் உருகி, பெருகிய - பொங்கிய, அன்பு என வரு - அன்பு என வருகின்ற, அருமைநீர்-சிறந்த நீரானது, நிறைந்துள்ள-நிறைந்த, இதயவாவி-இருதயமென்னும் தடாகத்தின்கண், பதுமமாமலரின் - தாமரை மலரின், குணன் என - குணமென்று, பொருந்தும் - நிலைத்துள்ள, மணமாம் நின்னை-மணமாகிய தேவரீரை, கண்டு - தரிசித்து, இறுமாந்து - செருக்கடைந்து, பண்டை - முன்சென்ற சென்மங்களிற் அடியேன் பெற்றுள்ள, வாதனை - மும்மலவாதனைகள், தீர்ந்து - நீங்கி, அறை - ஒலிக்கின்ற, கடல்- சமுத்திரத்தில், அழுந்தும் - அழுந்தித்தன்னை மறைத்துக்கொள்ளுகின்ற, நிறைகுடம் அது போன்று - நீர் நிறைந்த குடம்போல, அசைவுஅற்று - கரணங்கள் செயலற உன்னைத்தியானித்தலில் சிறிதும் சலனம் இல்லாமல், இருக்க - அத்தியானத்து அடியேன் முழுகியிருக்க, இசைய-என்மனமிசையும்வகை, தருதி-திருவருள்செய்வாயாக, (கோபுரம்) நிலைமிகப்பொருந்தி - பல நிலைகளையடைந்து, பலமுறை - பலமுறைமைப்பாடுகளை, சாரலால் அடைதலினால், உந்திய-முன்னெழுந்த, வன்னவுரு - பலவகைப்பட்ட சிற்பங்களை, மருவுதலான்-சேர்தலினால், மந்திரத்து - கோபுரத்து, உறுசுடர் - பிரகாசந்தங்கிய கலசங்கள், மகத்து உயர்தலினால் - மகநக்ஷத்திரத்தைத்தொட உயர்ந்திருத்தலால், இதம்பயில் - நன்மைநெருங்கிய, இசைகொள்பதம் - புகழ்கொண்ட

தேவருலகத்தைக், கலந்து உறலால் - கலந்திருத்தலால், வேதமே ஒப்பு என - வேதமே சமானமென்று, ஓது கோபுரமும் - சொல்கின்ற கோபுரவாயிலும், (வேதம்) நிலைமிகப்பொருந்தி - விதிவாதமுதலிய பல நிலைகளைப்பொருந்தி, பலமுறை - பல அங்கங்களை, சாரலால் - பொருந்துதலாலும், உந்திய - உயர்ந்த, அன்னஉரு - அன்னத்தின் உருவினை, மருவுதலால் - அடைதலாலும், மந்திரத்து - மந்திரத்தினால், உறு - உண்டாகும், சுடர் - அக்னிகாரியமாகிய மகத்து - வேள்விகளைக்(கூறுதலால்) உயர்தலினால்-உயர்வடைந்திருத்தலால், இதம்பயில் - மங்கலம் நெருங்கிய, இசைகொள் - உதாத்த முதலிய ஸ்வரங்களைக்கொண்ட, பதம்கலந்து உறலால் - பதங்களை விவரப்பெற்றிருத்தலால், வேதமே ஒப்பு என - வேதமே யொப்பென்னும்படி, ஓது கோபுரமும் சொல்கின்ற கோபுரவாயில்களும், (மேடை) ஒழுக்கு நெறி - சிற்பநூல்விதானவொழுக்கத்திற்கு, சிறிதும் - கொஞ்சமும், வழுக்கு இல அதனால் - குற்றமின்றியமைந்திருத்தலாலும், நால்பதப்பிரிவினின் - பதவிந்யாசத்திற் கூறிய நான்காம் பதமாகிய மஹாமேடையினும், மேற்பதமதனால்-உயர்ந்தபதத்தை அடைதலினாலும், பலகலை - பலகிரணங்களுடன், ஒளிர - பிரகாசிக்கின்ற, மதிநிலவிய அதனால் - சந்திரன் பொருந்தியிருத்தலாலும், முத்தரை - மூன்று உலகங்களும், வியக்கும் - கொண்டாடுகின்ற, பத்திமை அதனால் - வரிசைகளினாலும், சிவாகமம் என - சிவாகமமெனக்கூறும்படி, ஒளிர் - விளங்கும், தவாமணிமேடையும் - தவறுதலிலாத அழகியமேடையும், (ஆகமம்) ஒழுக்கு நெறி - ஆசாரங்கூறிய பத்ததியினெறி, வழுக்கு இல அதனால் - (சிறிதும்) தவறுதலிலாது பெற்று இருத்தலாலும், நாலபதப்பிரிவினின் - சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்குபிரிவினும், மேற்பதம் அதனால் - மேலாகிய பதத்தைப்பெற்றிருத்தலாலும், பலகலைஒளிர் - பலசாத்திரங்களிலும் விளங்குகின்ற, மதி - அறிவெனும் பொருள், நிலவிய அதனால் - இதிலொன்றிலேயே நிலைத்திருத்தலால், முத்தரை - மோக்ஷகாமிகளாகிய சீவன் முத்தரை, வியக்கும் - வியந்து பேசுகின்ற, பத்திமை அதனால் - கிரந்தவரிசைகளைப்பெற்றிருத்தலால், சிவாகமம் என - இறைவனது திருமுகத்துத்தோன்றிய இருபானெண் சிவாகமங்களென்று கூறும், தவாமணிமேடையும் - தவறு இல்லாத மணிமேடையினையும், (தடாகம்) வெள்ளைவாரணம் - வெண்மையாகிய அன்னப்புட்களை, மேல்கொள்ளும் அதனால் - நீரின்மேல் கொண்டிருத்தலாலும், கண் தாமரை பல - கண்ணையொத்த தாமரைமலர்கள் பலவற்றிலும், மட்டு ஆர்தலினால் - தேன்தங்கியிருத்தலானும், அம் சுமந்து - அழகைப்பெற்று, ஆரம் - சந்தனவிருக்ஷங்கள், விஞ்சி ஓங்குதலால் - மிகுந்து வளர்தலாலும், இந்திரன் என - தேவேந்திரன் என்று எண்ணும்படி, பொலி - விளங்குகின்ற, யந்திரவாவியும் - யந்திரவாவியாகிய தடாகமும், (இந்திரன்) வெள்ளை வாரணம் - வெண்மையாகி ஐராவதம், மேல்கொள்ளும் அதனால் - மேற்கொண்டிருத்தலால், கண்தாமரைபல - கண்ணாகிய தாமரைகள் பல, மட்டு ஆர்தலினால் - அளவாகப்பொருந்தி யிருத்தலால், ஐஞ்சுமந்தாரம் - மந்தாரம் முதலிய பஞ்சதருக்கள், விஞ்சி ஓங்குதலால் - மிக்குவளர்தலினால், இந்திரன் எனப் பொலியந்திரவாவியும் - இந்திரனென்று கூறப்படும் யந்தி

ரவாவியும், எங்கணும்-பார்க்குமிடங்கள்தோறும், நிறைந்த - நிறைந்திருக்கிற வெங்குருநாதா - சீர்காழியாகிய திருக்கழுமலத்திற்குத் தலைவனே, கருவலி பிறப்பின்வலிமையை, தொலைக்கும் - போக்குகின்ற, பெருமலை-பெரியமலை யினுள்ள, மருந்தே - ஔஷதமே, கருணை - திருஅருளையே, சூல்கொண்ட - கருப்பமாகக்கொண்ட, பெரியவான் - பரந்த ஆகாயவீதியில் உலாவும், முகிலே - மேகமே, சிறு இடை - சிறியஇடையினையும், கருமைகண் - மையுண்ட நேத்திரங்களையுமுடைய, பொன் தொடி - பொன்னாலாகிய கடகத்தினை யணிந்துள்ள, கரத்தாள் - திருக்கரங்களையுடைய உமாதேவியாரது, ஆகம் - மார்பிடத்தெழுந்த, வனம்முலை - அழகிய திருத்தனங்களை, அணையும் - பொருந்தியிருக்கும், போகம் ஆர் - பெரும்போகம் அமைந்த, இதழி - கொன்றையினாலாகிய, பூகண்ணியனே - அழகிய தாமத்தை அணிந்துள்ளானே, (எ-று) ஆங்கு, அசை.

இறைவனே உலகத்துப்பலர் கறவாக்கற்பகனைக் கறக்கஎண்ணுவார் போலவும், எட்டியைப்போலவும், வெற்றுமிகுற்றிக்கைவருந்துவார்போலவும், விளையாநிலத்தை பயிர்செய்ய முயன்றுவருந்துவார் போலவும் மலத்தழுந்தி யெம்மையொப்பார்போன்று உழலும் சில தேவரைக்கடவுளரென்று எண்ணிவாழ்நாள் போக்குவர் அவ்வாறுஅடியேன் வருந்தாவகை தேவரீரது திருவடி பற்றுக்கொண்டு களித்துப்பேரானந்தவாரியி லழுந்தியிருக்குமாறு திருவருள் பாலிப்பாயாக என்பது கருத்து.

(கு-ரை.) எம்மனோரிற் சிலர் கல்விச்செருக்காலும் ஏனையவற்றாலும் ஒருவருடன் ஒருவர் மாறுபட்டகாலத்து ஒருவரையொருவர் வெல்வான் வேண்டிமாறுகொண்டு தருக்கித்தல் இயல்பு ஆதலின் செருக்குடன்...தருக்கமே பேசி" எனவும், மண்ணவரைப்போல் விண்ணவர்க்கும் இறப்பு பிறப்பு நோய் மூப்பு முதலிய வுண்டென்பார் "இறந்து பிறந்து...குழுவை எ-ம் கூறினர். வானவர் குழு என்றார், இது தேவர்வகை (௩௩) ஆதித்தர் (௧௨) அச்சுவினிகள்(௨) உருத்திரா (௧௧) வசுக்கள் (அ) முதலியவரைநோக்கி போலும் இது அநேககேசுரவாதம் கூறி அத்தேவர்களது தெய்வத்தன்மையினை மறுத்து இறைவனது திருவருளைவியந்து கூறியதாம். தேவர்களுக்கும் பகை நட்பு நோய் மூப்புச்சாக்காடு உண்டென்பதை "தியவசுரர் பகை யுண்டு" எனும்பெருந்திரட்டுச் செய்யுளாலறிக - "ஆருயிரினருவினையையறுத்தறத்தை யாக்க வமலவரனருளரிய பாற்கடலினுதித்துப்பாரிடரைப் பற்றியிடும்பூயோதரியேதாயேபற்றுகபுல்லென்று வடமொழிப்பொருளைபகர்க,யாரியத்தைவல்லாராரியம் பகர்ந்து புல்லை யருத்திடுக வருக்கியத்தைத் தெளித்திடுகவலருங் கூரருளாற் குட்டிடுக் கும்பிடுகபாலுங்கொண்டு முறையமலன் முடிக்காட்டுக போங்குற்றம்." பசுவிற்கு மேற்கூறியமுறைமைப்படி புல்லருத்தின் திருக்கயிலை யுலகத்தை யடைவராதலின் அங்ஙனம் செய்யாது கற்பகவாயிடைப் புல்லைச் செருகின் பயினிலாது துன்புறுவரென்பார் "கறவாக் கற்பசு வாயிடைச்செருகி என்றார்."

வாயில் புல்லூதவுதலும் தூயநீரருத்தலும் உபசாரம். பசுநீயதாயினும் அத்தனிடத்தன்புளார் அதனைவருடியிதஞ்செய்துபால் கொள்வராதலின் பெருஞ்சுரை என்றார். இங்ஙனம் உயிர்கொண்ட பசுவிடத்துச்செய்யின் கபிலையுலகடைவர். அங்ஙனமன்றிக் கற்பசுவிடத்து மேற்கூறிய உபசாரங்களைச் செய்வார்பயனடையாதுவருந்துவரென்பார்பேதையர் என்றார். "ஆலவிஷமொக்குமருந்தக்கடிதிரும், ஞாலமதிற்பித்த குணநாசமா, மாலைக்கோ, லட்டியபாகமொழியே, யானவிஷ முஷ்டியெனு, மெட்டிமரவேரிது." இதுவிஷத்தையொத்த நஞ்சமுள்ளதாதலின் நஞ்சமரும் எட்டி என்றார். மிக்க நெருங்கிய வேலி யென்பார் ஈனுழைகல்லா "மேனிமிர் வேலியென்றார்." வேலி முதலிய அமைத்து நன்னீர் பாய்ச்சியும் பயன்பெறார் என்பார் திருவிலி யென்றார் நெல்லைக்குற்றின் வருந்தாது அரிசியைப்பெற்று உலைபெய்துபயனடையலாம் அங்ஙனம் செய்யாது உமிக்குத்தின் கைவருந்திச் சலிப்பரேயன்றிப் பயனடையார் என்பார் பற்றிலர் போலவும் என்றார் நன்னிலமாகிய மருதநிலத்தும் ஏனைய நிலத்தும் வித்திட்டு எருப்பெய்து இளங்களை கட்டுநீர் கால்யாத்தால் நல்விளைவுண்டாமன்றி யொன்றும் பயன்றராத களர்நிலத்து இவ்வகை செய்து பயன்கொள எண்ணுவோர் பித்தராதலின் மத்தர் என்றார். மேற்கூறிய எட்டி, கற்பசு, வெற்றுமி, அருநில முதலிய பயன்றராப் பொருள்களைப்போல முத்தி முதல்வரல்லாதாரை முத்திதருபவராக எண்ணி முயலுதல் பயனின்று என்பார் மேற்கூறியவற்றைப்பல பொருளுவமைப் படக்கூறினார். அங்ஙனமயங்குவோர் பேதையரும், திருவிலிகளும், பற்றிலரும், மத்தருமாதலின் அவ்வாறு நாயேன் அறிவு கலங்காது உனது திருவருள் பற்றுக்கொண்டேனாதலின் உன்திருவடித் தாமரைப்பூவினைப்புனையத் திருவருள்செய்க என்பார். "அன்னவாறு...தருதி என்றார். மலரிடத்துக்குணமாகிய மணம் அதனை விட்டு நீங்காவாறுபோல் தன்னிதயத்தை விட்டுச்சிறிதும் பிரியாத இயல்பினை யென்பார் இதயவாவி...நின்னை என்றார். பலபிறவியினும் ஆர்ச்சித்த கருமம் என்பார் பண்டைவாதனை யென்றார். கடலிடத்து அமிழ்ந்த நிறைகுடம் அதினமூழ்ந்தி அழுந்திய இடமும் தெரியாது மறைதல்போல் சிவானந்த சாகரத்தில் மூழ்கி யதின் வயப்பட்டுச் சிவமாம் தன்மைப்பெருவாழ்வைப்பெறத் திரு அருள்செய்க என்பார. "நிறைகுடம்...இசையத்தருதி என்றார். "சிகரோஸ்தேதமா" என்பதால் சிகரத்தினுடைய உயரத்தின் பிரமாணத்தாலாவது தண்டிகைவரை உயரப்பிரமாணத்தால் ஐந்துபாகமாவது இரண்டுபாகமாவது, ஏழு ஒன்பது பதினொருபாகங்களில் பதின்மூன்று பதினைந்து பாகத்திலாவது அவ்வாறு பதினேழு பாகத்தில் மூன்று நான்கு ஐந்து ஆறு, பாகமாவது, ஏழு, எட்டு பாகத்தையும் உயரத்தின் பகுதி யெனக்கொள்வராதலின்நிலைமிகப்பொருந்தி என்றார். பலவிதமாகிய அஷ்டாஷடவிக்ரகசிறங்களைப் பெற்றிருத்தலின் பலமுறை சாரலால் உந்திய வன்னவுருமருவுதலால் என்றார். மந்திரத்தால் ஓதப்பெற்ற அக்னிகார்யம் செய்ய ஓங்கிய தீ என்பார் மந்திரத்து....உயர்தலினுல் என்றார். வெங்குரு என்பது சீர்காழிக்குரிய பன்னிரு திருநாமங்களிலொன்று. லோகங்களுக்கெல்லாம் தேவகுருவாகிய பிரகஸ்பதி பகவான் என்னையொழிந்து கருத்தா வுண்டோவென்று

செருக்குற்ற காலத்துச் சிவமூர்த்தியிவனது அதிகாரத்தை மாற்றியருள பிரகஸ்பதியும் செருக்கடங்கிச் சீர்காழிக்கண்சென்று இறைவனைப்பணிந்து அடியேன் செய்த அபராதங்களைப் பொறுத்தருள்க என்று வேண்ட இறைவன் நீ மிக்க வேகியாயிருந்தனையென்று கூறி முன்போலவே தேவர்க்குக்குருவாகதன்மை யருளிச் செய்ததால் இத்தலத்திற்கு அப்பெயருண்டாயிற்று. தேகத்தைவிட்டு உயிர்நீங்கத்தக்க காலத்தும் காக்கவல்லனவாகிய சஞ்சீவிகளைபெற்ற ஏனையஉலகத்து மலைகளைப்போலாது கருவாகியபிறவியிற்படும் பெருநோயை நீக்குதலின் பெருமலை மருந்தே என்றார். ஆகாயத்து உலாவும் முகில் உலகத்துயிர்களுக்கு அமிர்தம்போலும்நீரைப்பொழிவான்வேண்டிக்கடலையுண்டுசூல் கொள்ளுதல்போது அதின் வேறுபட்டு தம்மையடைந்த முத்தான்மாக்களைக் கரப்பான் வேண்டிப் பெருங்கருணையுருக்கொண்டு சிதாகாசததில் உலாவும் பெருமுகில் என்பார் பெரியவான் முகில் என்றார். இதழி என்பதில் இகரம் வினைமுதற்பொருளது. கண்ணியனே தருதி என முடித்துக்கொள்க.

வெண்பா.

கண்ணின் றொளிருங் கருமணியி னுள்ளொளிபோ
லுண்ணின் றொளிரு மொளிவிளக்கென் - றெண்ணிப்
புகலிப் பெருமானைப் புண்ணியனைப் போற்றி
லகலுமே பாசவிரு ளன்று. (உ௬)

(இ-ள்.) புகலிப்பெருமானை - திருப்புகலியி லெழுந்தருளியிருக்கும் சிவமூர்த்தியை, புண்ணியனை - புண்ணியஸ்வரூபனை, கண்ணின் றொளிரும் - கண்ணின் கண் நிலைத்துப் பிரகாசிக்கின்ற, கருமணியின் உள் ஒளிபோல் - கருமணியின் கண்ஒளிரும் ஒளிபோல, உள்நின்று-என்னிடத்துளிருந்து, ஒளிரும்-பிரகாசிக்கும், ஒளி விளக்கு என்று - விளங்குகின்றஒளியாகியவிளக்கென்று எண்ணி-ஆலோசித்து, போற்றில்-போற்றினால், பாசஇருள்-பாசமாகிய இருள், அன்றே - அப்போதே, அகலும் - நீங்கும். எ-று.

திருப்புகலியிலெழுந்தருளியிருக்கும் திருக்கழுமல நாதனைப் போற்றில் பாச இருள் அகலும் எ-று.

கண்ணிடத்துள்ள ஒளி புறத்திலுள்ள பொருள்களைக் காட்டி விளக்குதல்போல், மனத்திடத்துள்ள பாசவிருளை நீக்கும் ஒளி யென்பார் ஒளிரும் ஒளிவிளக்கு என்றார். சர்வசம்மாரகாலத்து ஒடுங்கியிருந்த ஆன்மாக்களைக்கருணையால் எழுப்பித் திருவருள் செய்தலின் புண்ணியன் என்றார். எல்லா ஆன்மாக்களும் அடைக்கலம் புகுந்த காலத்துப்புகலாக நின்று காத்தான் என்னைக்காக்காமலிரான் என்பார் புகலிப்பெருமான் என்றார். அகலுமே என்பதின் கணுள்ள ஏகாரத்தை அன்று என்பதனுடன் கூட்டி அன்றே எனக்கொள்க. அன்று என்பது போற்றின அக்கணமே யென்னும் பொருளது. பாசத்தை யிருளென்றார் அது நன்மை தீமைகளைப் புசிக்குமிடத்து அவற்றின் பல

னையறியாதிருக்கும்படி மறைத்தலினுன் என்க. பாசம் எனப்பொதுப்பக்கூறிய அதனுன் மும்மலமும் கொள்க. இருள் என்பதற்கேற்பவிளக்கு என இறைவனைக்கூறினுர் என்க. ஏனை விளக்கு, நெய்திரி இருக்கினும் தூண்டினன்றி ஒளிதரா. இது அவ்வகையன்றி ஒருவர் தூண்டாது தானே தன்னை ஆன்மாக்கள் பொருட்டு விளக்கும் ஒளியென்பார ஒளி விளக்கு என்ருர். ஒளிவிளக்கு என்பதை ஒளியாகிய விளக்கு எனப் பண்புத்தொகையாக்கினுமாம். அது புறத்தில் தோன்ருது உண்ணின்று ஒளிர்வதாதலால் அதனை மனத்தால் எண்ணிவாக்கால் துதித்துக் காயத்தால் வணங்குக என்பார் எண்ணிப் போற்றில் எனமுக்கரணங்களையும் அடக்கிக் கூறினுர். கண்ணின்ருெளிரும் கருமணிதான் புறப்பொருள்களைக்காண்பானுக்குப் புலப்படுத்தித் தான் அவற்குத்தோன்ருதுகண்ணிற்கரந்திருத்தல்போல்,இறைவனும்அவரவர்கள் கன்மானுகுணமாக அவர்களுடனிருந்து அறிவினைவிளக்கித்தான் அவ்வான்மா அறியாது விளங்குவோன் என்பார் உள்நின்றுஎன்ருர். ஒளிவிளக்கு என்பதற்கு எவர்க்குந்தோன்ருது ஒளித்திருக்கும் விளக்கு எனக்கூறினுமாம். மணியினுள் ஒளி, ஒருவராலும் பிரிக்கப்படாவாறுபோல் கண்ணிடத்துமணியும் ஒருவரானும் வேறுபடுத்தலாகாமையின் கண்ணின்று எனக்கூறினுர். கருமணி சிறந்த மணி எனினுமாம்.

கட்டளைக்கலித்துறை.

இருளந்தகன்வரினீரெயிறேபிறையேய்ந்தசெவ்வான்
சுருள்குஞ்சிபாசமெனவந்திவந்ததுதோகைசொற்றேன்
பருகும்புகலிப்பிரானெனும்பானுப்பலகிரணம்
பெருகும்படிவந்துதித்தான்மின்னுவிபெறுகுவளே. (உ௪)

(இ-ள்.) அந்திவந்தது - இந்திக்காலம் வந்தது, (இனி) பிறை - (அக்காலத்துத் தோன்றும்) பிறைச்சந்திரனே, ஈர் எயிறு ஏய்ந்த - கொல்லுகின்ற பற்களை யொத்தன, செம்மைவான் - சிவந்தவானம், சுருள்குஞ்சி என - சுருண்ட தலைமயிராகவும், இருள்பாசம் என - இருளே பாசக்கயிருகவும் கொண்டு, அந்தகன் வரின் - யமன் நமது தலைமகளைக் கொல்வான் வேண்டிவந்தால் (அவள் ஆவிபெருள் அவ்வகை உயிர் நீங்குமுன்) தோகை - மயிலின் இயலமைந்த பார்வதி பிராட்டியாரது, சொல் தேன் - சொற்களாகிய தேனினை, பருகும் - உண்டுகளிக்கும், புகலிப்பிரான் எனும் - திருப்புகலிக்கணெழுந்தருளியிருக்கும் பெரியோனென்கிற, பானு - ஞானசூரியன், பல கிரணம் பெருகும்படி - பலகதிர்கள் தோன்றும் வகை, வந்து உதித்தால் - வந்துஉதயஞ்செய்வானுயின், மின் - மின்போலுமிடையையுடைய நமதுதலைவி, ஆவி பெறுகுவள் - உயிர்பெற்றுவாழ்வள், எ-று.

இது தலைமகள், மாலைக்காலம் எதிர்தல் கண்டுவருந்தும் செயல்கண்ட தோழி, தன்னுடனிருக்கும் ஆயவெள்ளத்தாருடன் புகலிப்பிரானெனும் பானுவரினன்றி யிவ்விருளென்னும் யமனுக்கு நமது தலைவிபிழையாள் என்று கூறியதாம்.

(கு-ரை) ஈர் எயிறு, கொல்லும் வளைந்த பற்கள். இவ்வளைந்த பற்கள் மாம்சபக்ஷணிகளாகிய அரக்கர் முதலியவர்க்கேயன்றிச் சாந்த மூர்த்திகளாகிய தேவர்களுக்கு இன்று; ஆதலால் ஈண்டு யமன் தேவர்கூட்டத்திற் சேர்ந்தோனாயினும் உயிர்களைக் கவரும் செயலுண்மையால் கோரரூபங்கூறப்பட்டது. பிறை, இது மாதந்தோறும் பிறத்தலென்னும் பொருட்கண் தொழிலடியாகப் பிறந்த பெயர். தலையினுறுதி நோக்கியும் தாமதகுணமிகுதிநோக்கியும் சிரத்தின்கண் உரோமம், அரக்கர் முதலியோர்க்குச் சுருளுதலியல் பாதலின் செவ்வான்சுருள் குஞ்சியேய்ந்த என்றார். இது உத்தமலக்ஷணமன்று. பாசம் வீசினாரினீங்கிப் பாய்ந்தபொருளைத் தன்னகப்படுத்தி அவற்றின் வலியடக்கித் தன்னகப்படுத்தல்போல் இருளும் தலைவியின் செயல்கெடுத்து நாயகனிடங்கொண்ட மனத்தைக் கலங்காமல் நிலைபெறுசெய்தலின் இருளைப் பாசம் என்றார். இருளைப்பாசத்துடன் கூட்டுக. மயிலினியல் முதலியவமைந்து இறைவன் மனத்தைத் தம்மிடத்துப் பதிக்கச்செய்தலின் இறைவியைத் தோகை என்றார். "கல்விற் பிறக்குங்கதிர்மணி காதலி சொல்லிற் பிறக்குமுயர்தம்." என்பவாகலின் இறைவியின் திருவாக்குகளைக் கேட்குந்தோறுமிறைவனுக்குக் களிப்பு மிகுதலின், சொற்றேன் பருகும்புகலிப்பிரான் என்றார். மாரனம்புகளைந்தில், ஐந்தாவது கொல்லுமியல்பினது ஆதலின் இவள் கொண்ட காதலன்வரினன்றி யிவளுக்கவ்வுயிர் மீளாதெனுங்கருத்தால் பானுப்லகிரணம் பெருகும்படி வந்துதித்தால் என்றார். இவள் மின்போல் மெல்லியளாதலின் சிறிதும் பொறாள் என்பார் மின் என்றார். வராவிடின் ஆவிநீங்குவதுண்மை வரின் உயிர்நீங்காதென்பாள் ஆவிபெறுகுவள் என்றாள். இது இறைவன், ஆன்மாவருந்துநிலை நோக்கியும் அருள் செயாதிருத்தலைக் கண்டமனம் பரிதபித்தலைக்குறிப்பித்ததாம். பானு சில மாதங்களில் கதிர் குறைதலும் சில மாதங்களில் மிகுதலும் கொள்ளுதலின் பானு பல கிரணம் பெருகும்படி என்றார். இறைவி, மலையரையன் பொற்பாவையாதலின் அந்நிலத்துப் பறவையாகிய தோகையாக உருவகப்படுத்தியதாம்.

இணைக்குறளாசிரியப்பா.

பெறுவதுபெற்றவுறுதியுத்தமர்கட்
காயினுஞ்சிறந்தநேயநெஞ்சினனே
யாகக்கழனியின்யோகத்தபோதன
ரானபேருழவர்மானமோடாக்கிய
முயலகனென்னுமியல்பெருங்கரும்பை
யுதிரமென்னுமுதிர்சாறுருக
நகையெனுமுத்தந்தொகையுறத்தோன்றச்
சுந்தரப்பதமெனு மெந்திரவாலையிட்
டரைத்தகவையிரங்கரைத்தவித்தகனே
குங்குமக்கொங்கையங் கயற்செங்கட்

பெண்ணரசி பிரியாவண்ணமெய்ப்பாக
பாடலம்புன்னையே டவிழிலஞ்சி
வெளியகற்பூரங் களிகொள்கஸ்தூரி
நறுமணமெவையு முறுமுறைபொருந்தி
யுண்ணீரபெற்ற தண்ணீர்ப்பந்தரும்
நெயகமழ்கருணையுங் குப்கமழ்கறியு
மதிதருநிலவெனப் புதிபவெண்டயிரும்
வருக்கையின்கனியுஞ் சருக்கரைக்கட்டியு
முதலுபகரணம் பதனொடுமீஇத்
தளவரும்பென்ன வளமலிபோனக
மாதவரெவர்க்கு மாதுலரெவர்க்கு
நன்னயத்துட னருளன்னசத்திரமும்
பாடகச்சீறடிப் பான்மொழிமடவார்
நாடகத்தொழில்பயி னீடரங்கெவையுங்
கலைபயில்கழகமும் பலர்பயின்மன்றமு
முள்ளனகரவா துவந்தெதிர்ந்தளிக்கும்
வள்ளியோர்வாழு மணிநெடுவீதியும்
பூமகளுறையு ளாமெனவிளங்கும்
பெரும்புகழ்க்காழி விரும்புசங்கரனே
யேந்தெழிற்புவன வேந்தநீயாதலின்
வளமலிநான்முகக் களமருனேவலி
னுரம்பெறுகுலவரைக குறும்பகப்பட்ட
மண்டலமென்னுங் கண்டநீள்வயலுட்
சராசரத்தொகுதி விராயவித்திட்டுப்
பாதவமிருகம பறவைமானிட
ராதிப்பைங்கூ ழமைத்தனாகிற்ப
மாவுறைமருமக் காவலாளர்
வளமையினோம்ப விளைவுமுற்றியபின்
புரிபயன்பெறுவா னரிதரவியற்றி
மெய்வலிக்கூற்றுவக் கைவினைமாக்களிற்
புலாலுடையாக்கைப் பலாலமதகற்றி
யற்றமிலுயிரெனப் பெற்றநெற்றிரளைப்
பூதசாரத்தநுப் பூதமகாதநு
பூதபரிணமம் புகலுறுயாக்கை
மூவகைப்பண்டியின் மேவுரவேற்றிப்

பொன்னிலகிரய மிந்நிலமென்னு
மிடந்தொறுமாங்கவை யடங்கவைத்தவற்று
ளொருசிலவற்றைநின் றிருவடிவீட்டிற்
சேர்த்தனையன்னது கூர்த்துநோக்கி
லரசுகொள்கடமை யாறிலொன்றென்னும்
புரைதீர்முறைமை புதுக்கினைபோலு மதனுன்
மாசுகநீயுறும் வண்மை
பேசுககருணைப் பெரியநாயகனே. (உரு)

(இ-ள்.) பெறுவது - ஆன்மா அடையவேண்டிய வீட்டினை, பெற்ற - அடைந்த, உறுதி உத்தமர்கட்கு - உறுதிப்பொருளை விடாது கொண்டசாம் சித்தர்களுக்கு, ஆயினும் - தாயினன்பைக்காட்டிலும், சிறந்த - சிறப்புள்ள, நேயம்-அன்பினைக்கொண்ட, நெஞ்சினனே - மனமுடையானே, யோகத்த போதனர் ஆன - தவத்தினையே தவமாக்கொண்ட யோகிகளாகிய, பெரு உழுவர் - பெரிய உழுதொழிலைச் செய்யும்களமர், யாகக்கழனியின் - யாகமெனும் கழனியில், மானம் ஓடு - மானத்துடன், ஆக்கிய - வளர்த்த, முயலகன் என்னும் - முயலகனென்கிற, இயல் - கொடுஞ்செயலையுடைய, பெருகரும்பை - பெரிய கரும்பினை, உதிரம் என்னும் -உதிரம் என்கின்ற, முதிர்சாறு - முதிர்ந்த சாறு, ஒழுக - ஒழுகாநிற்க, நகை எனும் - திருநகைஎன்கின்ற, முத்தம் - முத்துக்கள், தொகையுற - கூட்டமாக, தோன்ற-உண்டாக, சுந்தரம் - அழகாகிய, பதம் எனும் - திருவடியென்கின்ற, எந்திரஆலைஇட்டு - யந்திரமென்னும் காணத்திலிட்டு, அரைத்து - நசுக்கி, அகவயிரம் - அவன் மனத்திருந்த நெடுநாட்பகையினை, கரைத்த - தேயும்படிசெய்த, வித்தகனே-ஞானசுவரூபியே, குங்குமக்கொங்கை - குங்குமத்தினையணிந்த தனபாரங்களையும, அம்கயல் - அழகிய கயல்மீன்போலும், செம்மைகண் - சிவந்த நேத்திரங்களையுமுடைய, பெண் அரசி - பெண்கள் நாயகமாகிய உமாதேவியார், பிரியா - நீங்காத, வண்ணம் - அழகினையுடைய, மெய்பாக - திருமேனியின் அத்தபாகத்தையுடையானே, பாடலம் - பாதிரிமலரும், புன்னை - புன்னை மலரும், ஏடு அவிழ் - இதழ் விரிந்த, இலஞ்சி தாமரைமலரும், வெளிய-வெண்மையாகிய, கற்பூரம் - பச்சைக்கற்பூரமும், களிகொள் - குழம்பாகிய, கஸ்தூரி - கஸ்தூரிமுதலிய, நறுமணம் எவையும் - நல்ல வாசனைப் பொருள்கள் அனைத்தையும், உறுமுறைபொருந்தி - முறையாகபெய்யப்பெற்று, உண்நீர் பெற்ற - உண்ணும் நீரை அடைந்த, தண்ணீர்ப்பந்தரும் - குளிர்ந்தநீரையினைப் படைந்தவர்க்கு வார்க்கும் பந்தலிட்ட இடங்களும், நெய் கமழ் - நெய்யின் மணம் வீசுகின்ற, கருணையும - பொரிக்கறியும், குய்கமழ் - நறுமணங் கமழ்கின்ற, கறியும் - கறிவகைகளும், மதிதரு-சந்திரனால் காலப்பட்ட, நிலவு என - சந்திரிகையைப்போல, புதிய - அன்று ஆக்கிய, வெண்மை தயிரும் - வெண்மையாகிய தயிரும், வருக்கையின் கனியும் - பலாப்பழமும், சருக்கரை கட்டியும் - கற்கண்டும், முதல் உபகரணம் - முதலியகருவிகள், பதனொடு

மரீஇ - பதத்துடனியைந்ததாய், தளவு அரும்பு என்ன - முல்லையரும்பெ ன்று செல்லும்படி, வளம்மலி - வளப்பமிகுந்த, போனகம் - அன்னத்தினை, மாதவர் எவர்க்கும் - மிக்க தவத்தினரானவர்க்கும், ஆதுலர் எவர்க்கும்-அதி திகளாக வந்தடைந்தோருக்கும், நல் நயத்துடன் - நல்ல இனிய சொற்களைக் கூறி, அருள் - கொடுக்கின்ற, அன்னசத்திரமும் - உண்டி வழங்கும் அன்ன சத்திரங்களும், பாடகச்சீர் அடி - பாடகமென்னும் காலணியணிந்த சிறந்த கால்களையும், பால்மொழி - பால்போலுஞ்சொற்களையுமுடைய, மடவார்-பெ ண்கள், நாடகத்தொழில்-நடனத்தொழிலை, பயில் - செய்கின்ற, நீடு அரங்கு எவையும் - பெரிய நடன சபைகள் அனைத்தும், கலைபயில் - வேதசாத்திரங் களையப்பியசிக்கின்ற, கழகமும் - வேதாத்தியயனசாலைகளும், பலர்பயில் - பல சாதியர் கல்விகற்கின்ற, மன்றமும் - கல்விச்சாலைகளும், உள்ளன - உள்ள பொருள்களை, கரவாது - ஒளிக்காமல், உவந்து - களிப்புற்று, எதிர்ந்து -வர வினை யெதிர்கொண்டு, அளிக்கும் - கொடுக்கின்ற, வள்ளியோர் - கொடை யாளர், வாழும் - வசிக்கின்ற, மணிநெடுவீதியும் -அழகிய பெரிய வீதிகளும், பூமகள் - இலக்குமிக்கு, உறையுளாம் என - வசிக்கும் இடம் என்று, விளங் கும் - காணப்படும், பெருமைபுகழ் - மிக்க கீர்த்திதங்கிய, காழிவிரும்பு - சீர் காழியை விரும்பி யெழுந்தருளியிருக்கும், சங்கரனே - சுகத்தைத்தரும் சிவ மூர்த்தியே, ஏந்து எழில் - மிக்க அழகினையுடைய, புவன வேந்தன் - உலகங் களுக்கு எல்லாம் நாயகன், நீ ஆதலின் - நீ யாகையால், வளம்மலி-வளப்பம் மிகுந்த, நான்முகக்களமர்-நான்குமுகங்களையுடைய பிரமாக்களாகியஉழவர், உன் ஏவலின் - தேவரீரின் ஏவலால், உளம்பெறு - வலிமைகொண்ட, குல வரை - சிறந்தமலைகளாகிய, குரம்பு - செய்கரைகளுக்கு, அகப்பட்ட - உட் பட்ட, மண்டலம் என்னும் - பூமண்டலமென்கின்ற, கண்டநீள்வயலுள் - பகு தியாகிய நீண்டவயல்களில், சராசரம் - சங்கமஸ்தாவரங்களாகிய, தொ குதி - கூட்டங்கள், விராய - கலந்துள்ள, வித்துஇட்டு - விதைகளை விதைத் து, பாதவம் - விருக்ஷங்கள், மிருகம் - விலங்குகள், பறவை - பக்ஷிகள்,மா னிடர்ஆதி - மனிதரேமுதலிய, பைங்கூழ் - பயிரை, அமைத்தனர்நிற்ப அ மைத்து நிற்க, மாவுறை - இலக்ஷ்மி வசிக்கின்ற, மருமம் - மார்பினையுடைய, காவலாளர் - காவற்காரர்களாகிய விஷ்ணுக்கள், வளமையின்- வளப்பமாக, ஓம்ப - காக்க, விளைவுமுற்றியபின் - விளைவுமுதிர்ந்த பிறகு, புரிபயன் - செய் தொழிலுக்கு ஏற்றபயனை, பெறுவான் - அடையும்வகை, அரிதரவு இயற்றி- அறுப்பறுத்தலைச்செய்வித்து, மெய்வலி - தேகவன்மைகொண்ட, கூற்றுவக் கைவினையாக்களில் - காலர்களாகிய கைத்தொழிலாளர்களால், புலால்உடை- மாம்சத்தையுடைய, யாக்கை - தேகமாகிய, பலாலம் - தழைகளையும் வைக் கோல்களையும், அகற்றி - போக்கி, அற்றம் இல் - நீங்குதலில்லாத, உயிர் எ னப்பெற்ற - உயிர் என்று கூறும், நெல்திரளை - நெற்பொலிகளை, பூதசாரத் தனு - பூதசாரத்தேகம், பூதமகாதனு - மகாபூததேகம், பூதபரிணாமம் - பூத பரிணாமதேகம் என்று, புகல் உறு - என்றுகூறப்படும், யாக்கை - தேகங்க ளாகிய, மூன்றுவகைப்பண்டியின்-மூவிதப்பட்ட பண்டிகளில், மேவரஏற்றி -

பொருந்தும்வகை ஏற்றி, பொன்நிலம் - சுவர்க்கம், நிரயம் - நரகபூமி, இ நிலம் என்னும் - மத்திய வுலகமாகிய இப்பூமியென்கின்ற, இடம்தொறும் - இடங்கள்தோறும், ஆங்குஅவை - அவ்வினைபயன்களாகிய தான்யாதிகளை, அடங்கவைத்து - நிறம்பவைத்து, அவற்றுள் - அத்தான்யாதிகளில், ஒருசிலவற்றை - சிலதான்யங்களை, நின்திருவடி வீட்டில் - தேவரீருடைய திருவடியாகிய துறக்கவீட்டில், சேர்த்தனை - வைப்பித்தாய், அன்னது - அச்செய்லை கூர்ந்து நோக்கின் - நுட்பமாக ஆராய்ந்துநோக்குமிடத்து, அரசுகொள் கடமை - அரசன் தான் வாங்கிக்கொள்ளும் அரசிறையாகியகடமை, ஆறில் ஒன்று என்னும் - ஆறில் ஒருகடமையென்னும், புரைதீர்முறைமை - குற்றநீங்கிய முறைமையினை, புதுக்கினைபோலும் - புதிதாகவேறுசெய்தனைபோலும் அதனால் -ஆகையால், கருணைபெரிநாயகனே- பெரிய கருணையுடையதலைவனே, நீ - தேவரீர், மாசுகம் - மிருந்தசுகத்தை, உறும்வண்மை - பொருந்தும் வளப்பம், பேசுக திருவாய்மலர்ந்தருளுக. (எ - று.)

சங்கர, பிரமவிஷ்ணுக்களாகிய தேவர்கள் உன் ஏவல் வழி, சிருட்டிதிதித்தொழில்களைச் செய்ய,யமன் சங்காரத்தொழிலைச்செய்து ஆன்மாக்களைப் பூதசாரத்தனு, பூதமகாதனு, பூதபரிணாமத்தனு எனும் தேகத்தைக் கூட்டிச் சுவர்க்கமத்திய பாதாளமாகிய மூவகையிடத்திற் செலுத்தா நிற்பர் அவ்வான்மாக்களிற்சிலரைத் தேவரீர் உமதுதிருவடிவீட்டிற் சேர்த்துவீர் இதனால்தேவரீர் அடைந்த பேறு என்? பேசக்கடவீர.

(கு-ரை.) பிள்ளையைக்காப்பதில் தந்தையிலும் தாய் சிறந்தாளாதலின் ஆய் என்றார். அந்த ஆய்பிள்ளையைக்காத்தலினும் விரைந்துமுயலும் பேரன்புடையான் என்பார் ஆயினுஞ் சிறந்த நேயநெஞ்சினன் என்றார். தாருகவனத்து இருடியரின் பத்தினியர் கற்பிற்றம்மின்மிக்காரும் ஒப்பாருமிலர் எனச்செருக்குற்ற காலத்து அவரது செருக்கைப் போக்கியாட்கொள்வான் கருதிய இறைவன் திகம்பரனாய்ப் பிக்ஷாடனத் திருவுருக்கொண்டு சென்று அவரதுகற்புக்கலங்கச்செய்ததைச் செவியுற்ற இருடியர், மானமிக்கு இறைவன்மீது மந்திரவன்மையால்பலவற்றையேவியும் மந்திரரூபியாகியவெம்மிறைவனை யவையூறு செய்யாததைக் கண்ணுற்று இறைவன்மீது முயலகனெனும் அரக்கனை யாகத்திற் சிருட்டித்து ஏவினர், அவனிறைவனிடம் போர்புரிய வந்த மாத்திரையில் அவனது செருக்கடங்க அவனது முதுகில் திருப்பதமூன்றிவரந்தோன் விழிபிதுங்கத் திருநடம்புரிந்து இருடியரது மானமழுங்கச்செய்தமையின் "யாகக்கழனி....வித்தகனே என்றார். தண்ணீர் நிலத்தின் குணமுடையதாதலின் அந்நிலங்களிலுள்ள தீக்குணத்தினைப்போக்க யுண்டார்க்கு நற்குணம் விளைப்பான் வேண்டியும் பாடலம் முதலிய மணமுடைப்பொருள்களைச் சேர்த்தலியல் பாதலால் "பாடலம்...தண்ணீர்ப்பந்தர்" என்றார். கறிகள் பல படவிருப்பினும், உண்பார் நாவிற்கினிமை தருவன கருணைமுதலிய பொரிக்கறியாதலின் அதனைமுற்படக்கூறி ஏனையபிற்படக்கூறினர், இளைத்துவருவார்க்கு முன்னர் உண்ணீருதவியே பின் உணவளித்தல் வழக்குப்பற்றிமுன்னே

தண்ணீர்ப்பந்தர் கூறிப்பின்னர் அன்னசத்திரம் கூறினர். இங்ஙனம் கூறியதனானே உணவி லெக்காலத்தும் குறைவிலாமை கூறியதாயிற்று. மடவார நாடகத்தொழில் பயில் நீடரங்கு கூறியதனானே அந்நாடகம் வாளா நடன மொன்றூலமையாது தன்னுடன் பாவராகத்தைக் கொண்டிருத்தலின் இசையும் நாடகமும் கூறியதாயிற்று. கலைபயில் கழகம் என்றதனான் பலகலைகளிற் பயில் கல்விச்சாலைகளும் வேதாத்தியன பாடசாலைகளும்கூறிய தாயிற்று. இதனான் இயலிசை நாடகம் எனும் மூவகைத்தமிழாலும் வடநூல் பயிற்சியாலும் சிறிதும் குறைவின்றி நிறைந்த நகரமென்பது பெறப்பட்டது. இறைவன் தலைவனாகப் பிரம விஷ்ணுக்கள் முதலியோர் பயிரிட்டுக் காத்தல் தொழிலைச் செய்ய ஆன்மாக்களென்கிற பயிர்களைச்சுவர்க்க மத்யபாதாளமென்கிற மூவகையுலகத்து வைத்து அவர்களில் ஒரு சிலரை தேவரீரது திருவடி நிழலில் சேர்த்தனை யென்பார் ஒரு சிலவற்றை நின்றிருவடி நிழலிற் சேர்த்தனை யென்றார். உயிர் எக்காலத்தும் அழிதற்றன்மையின்மையின் அற்றமில் உயிர் என்றார். அரசன் ஒருவன் தனது குடிகளிடத்து கடமைகொள்ளுமிடத்துக் குடிகளிடம் பெற்ற இறைகளை அவர்களிடம் பெற்றுப் பொக்கிஷத்தில் சேர்த்தலின் அரசு கொள்கடமை யாறிலொன்று...புதுக்கினை யென்றார். போலும் அசை. இவ்வகைக்கொள்ளுமதனான் இறைவனுக்குப் பேறு ஒன்றுமின்று. இறைவன் ஆன்மாக்களிடம் வைத்தகருணையான் ஆன்மாக்களைத்திருவடி வீட்டில் வைத்து முத்தியடைவித்து இன்புறுவனாதலின் கருணைப்பெரிய நாயகனே என்றார்.

வெண்பா.

பெருமானே கூடிப் பிரிந்தாலு மங்கைக்
கொருவா தருள்வர மொன் றுண்டே—திருமால்
விடையாய் புகலி விமலா மவுன
விடையாய் பிறியா விடை. (உசு)

(இ-ள்.) பெருமானே - சிவபெருமானே, திருமால்விடையாய் - திருமாலாகிய விஷ்ணுமூர்த்தியினை இடபமாகக்கொண்டவனே, புகலிவிமலா - திருப்புகலிக்கண் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் பரிசுத்தனே, மௌனவிடையாய் - (சநகர் முதலியோர் உண்மைப்பொருளை யறிய விரும்பிய காலத்து அவர்கள் பொருட்டு ஆசாரிய திருக்கோலம் கொண்டெழுந்தருளி) மௌனமாக விடைபகர்ந்தவனே, கூடி - எமது தலைவியுடன் கூடியிருந்து, பிரிந்தாலும் (பல காரணங்களால்) பிரியும்படிநேரிடினும், மங்கைக்கு - மங்கைப் பருவத்தினையுடையவளை, ஒருவாது - எக்காலத்தும் நீங்காமல், அருள் - திருவருள் செய்கிற, வரம் - வரமானது, ஒன்று உண்டு - ஒன்று உளது, (அது என்னென்று வினவின்) பிறியாவிடை - அவளை யெக்காலத்தும் நீங்காதிருத்தலேயாம். (எ - று.)

இது, தோழி, தலைவன் பலகாரணம் பற்றித்தன்னூர் விட்டு அயலூர்க்குப் போகவும் நேரிடும் அக்காலத்துப்பிரிவு நீட்டிக்கவும் பெறும் அவ்வாறு

நீட்டித்தகாலத்துத் தலைவி யிரங்குவளாதலின் அதனைக்கண்டுஅவள்து ஆயத்தாரு மிரங்குவர். அவள் ஒருத்தியிடம்தோன்றிய பிரிவின் துயர் எம்மனோர் பலரையும் வருத்தும் ஆதலின் அவ்வாறு நீங்குமிடத்தும் தேவரீர் திருவுளத்து அவனிடம் கருணைசிறிது பதிக்கி னீட்டிக்காது மீட்கும் மருந்தாமாதலின் அவ்வாறு திருவுளத்தடைத்து அவளை யெக்காலத்தும் நீங்காத வரத்தைத் தந்தருளுக என்றது போலும் பின்னுமிது அடியேனைத் திருவுளத்தடைத்து திருவடிக்கண் நீங்காத அன்புபெருகத் திருவருள்செய்க என்பதுவுட்கிடை.

(கு - ரை.) நீ உலகத்துயர்ந்த சராசரங்களுக்கும் தேவராதியர்க்கும் பெரியை. இவள் ஒன்று மறியாச்சிறுமி தேவரீரிடம் காதல்கொண்டு பித்துறுகின்றுள் அவள் பொருட்டுக் கருணைசெய்க என்பாள் பெருமானே என்றாள். ஏ, இரக்கப்பொருட்டு. நீ பிரியாய் எனதுஊழ்வசத்தால் ஒருக்கால் பிரிய நேரிடின் என்பார் கூடிப்பிரிந்தாலும், என்றார். மங்கை என்பது, பதின்மூன்று ஆட்டைப் பெண்பருவத்தை. மங்கைக்குஎன்னுமிடத்துநான்கனுருபைஇரண்டன் பொருள் தந்த உருபுமயக்கமாக்குக. பிரிவு அறுவகை யென்னெனின்? பரத்தையிற் பிரிவு,ஓதற் பிரிவு, காவற்பிரிவு,தூதிற்பிரிவு, துணைவயிற்பிரிவு, பொருள்வயிற்பிரிவு என்க. திரிபுராதிகளை யிறைவன் தகித்தகாலத்து இறைவனைத் திருமால் இடபவுருக்கொண்டு தாங்கினமையின் திருமால்விடையாய் என்றார். இதனைக் "கடகரியும் பரிமாவுந் தேருமுகந்தேறாதே, இடபமுகந்தியவாறெனக்கரிய வியம்பேடி, தடமதில்களவை மூன்றுந் தழலெரித்த வந்நாளிலிடபமதாய்த் தாங்கினான் றிருமால்காண் சாழலோ" என்ற திருவாதவூரடிகள் மணிவாசகத்தாலறிக. சநகர் முதலிய முனிவோர் தாம் வேத புராணாதிகளை முற்று முணர்ந்திருந்தும் மனத்தெளிவுபிறக்காது வருந்தியிருக்கையில் இறைவனிவர்களது பரிபாககாலமறிந்து ஆசாரிய திருக்கோலங் கொண்டெழுந்தருளியிருந்து அவாகள் தெளிவுளோராதலின் அவர்களுக்கு தமது நிலைமையைத் திருவாய்மலராது இருந்தபடியிருந்துகாட்டினமையின்மௌன விடையாய் என்றார். பிறியாவிடை யென்பதுமனத்தன்பு நீங்காது நீங்குதல்.

கட்டளைக்கலித்துறை.

விடையப்பொருளென் றுணராதமார்க்கம் விரும்புமழுப்
படையம்புயக்கரத் தெந்தாதைஞான பரமவென்றெண்
சடையம்புனலணி வேணுபுரேசனந் தாண்மலர்தூ
விடையம்பொருளென் றிருநீயென்றுண்மை விளம்பினனே. ()

(இ-ள்.) (நெஞ்சே), நீ-(என்சொல்வழிக்கேட்கும் தன்மையுடைய) நீ, விடையம் - சப்தாதிவிடயங்களை, பொருள் என்று- உறுதிப்பொருளென்று உணராத - எக்காலும் அறியப்பெறாத, மார்க்கம் ஞானமார்க்கமாகிய சைவ சமயத்தை, விரும்பு - (மனத்தால் எண்ணியச்சமயநூலிற்கூறியவகை ஒழுக) ஆசைப்படு, மழுபடை - மழுப்படையினைத்தாங்கிய, அம்புயக்கரத்து - தாம

ரைபோலும் திருக்கரங்களையுடைய, எம்தாதை - எமது தந்தையாகிய சிவ மூர்த்தியினையே, ஞானபரம - ஞானத்தில் மேலோனாக எண்ணப்படுவோன், என்று எண் - என்றுநினை, சடை - திருச்சடையின்கண், அம்புனல் அணி - அழகிய கங்கையினைமுடித்த, வேணுபுரேசன் - சீர்காழிக்கண் எழுந்தருளி யிருக்கும் சிவமூர்த்தியின், அம் தாள் - அழகிய திருவடிக்கண், மலர்தூவிடை யம் - திருமலரெடுத்து அருச்சிக்கும் விடயமே, பொருள் என்று - உறுதிப் பட்ட பொருள் என்று, இரு - எண்ணிச்செய்து இருப்பாயாக, உண்மை - இதுவே நீ நற்பதமடைதற் குபாயமாகிய உண்மைவழியாகும், விளம்பினன்- கூறினேன். எ-று.

மனமே நீசப்தாதி விஷயங்களை யுறுதியென்று அறிந்து அவற்றின்வழி நின்று அலைந்துதடுமாறும் இந்திரியவாதிகளைப்போல் அல்லாமல் அவற்றைப் பொருளென்றுணராத சைவசமயத்தை விரும்பு. அச்சமயநூல்களாற் கூறப் படும் சிவமூர்த்தியையே முத்திதரும் பரமபதியாக எண், அவனை அருச்சிக் கும் விஷயமே பொருள்என்று இருப்பாயாக. இதுவே முத்தியடைதற்கு உபாயமாம் என்பது கருத்து.

(கு-ரை.) உலகத்துப் பலவகைப்பட்ட சமயங்கள் இறைவனால் அவரவ ர்கன் மங்களுக்குத் தக்கவாறு நியமிக்கப்பட்டன. ஆயினும் அவற்றின் உண் மைகளை யறிந்து நியதிகளைந்து உத்தமமாகிய சமயத்தைத் தேர்ந்து அதின் வழி யொழுகுதல் பூர்வபுண்ணியமாதலின் விடயம்...மார்க்கம், என்றார். தந் தையாவான் தன் வழிவராப் பிள்ளைகளைவளாரினாலடித்துறுக்கித் தன் வழிவ ரச்செய்வதுபோல் இறைவனும் ஆன்மாக்களது அநாதிபாசங்களைச் சேதிப் பவன் என்னும் அறிகுறிகொண்ட மழுவாயுதத்தைத் தாங்கினேன் என்பார் மழுப்படையம் புயக்கரத்தெந்தை என்றார். அவனே ஞானத்தாலறியப்படும் பொருளென்றறி என்பார் ஞானபரமவென்றெண் என்றார். சடையம்புன லணி என்பதற்குச் சடையின்கண் கங்கையை அழகுறப்புனைந்த என்னலு மாம். இவ்வாறு முன்னர் வேணுவென்னும் இந்திரனுக்கு அருள்புரிந்தவன் என்பார் வேணுபுரேசன் என்றார். இதன் பெயர்க்காரணம், வேணுவென் னும் பெயருள்ள இந்திரன் ஒருவனுடன் கெசமுகனென்னும் ஒரு அசுரன் யுத்தம் புரிய அவ்வசுரனுக்கு இந்திரன் ஆற்றாது புகலியாகிய சீர்காழிக்கண் வந்து இறைவனையருச்சிக்க இறைவன் அவனுக்குத்தரிசனந்தந்து அபயமளி த்தனர். இந்திரன் தனது குறைகூறியிரப்ப இறை கஜமுகரைக்கூய் அக்கய முகாசுரனை நீ சென்றுகொன்று வருக என அவ்வாறு விடைபெற்றுக்கணே சர்சென்று அவனைக்கொன்று வேணுவெனும் இந்திரனுக்கு அமராவதிபட்ட மளித்துத் திருக்கைலை யெழுந்தருளி வீற்றிருந்தனராதலின் இத்தலம் வே ணுபுரமெனப்பெயர்பெற்றது. மனமே நீ வேற்றுவிடயங்களில் செல்லாது அவன் திருவடிக்கண் மலர் தூவி வழிபடுவையேல் நற்கதிபெறுதல் திண்ணம் என்பார்உண்மை விளம்பினன் என்றார். இது தன்வழிகேளாதுபுறத்தேவிஷ யாதிகளை நோக்கிச்சென்று மீளாது அவற்றிலழுந்தித் தன்னையுந் தலைவனையு மறியாதுமயங்கிக் கிடக்கும் மனத்தினை நோக்கி விவேகம் கூறியதாகக்காள்க

இணைக்குறளாசிரியப்பா.

விளம்புவன்யானொன் றுளம்புகுநெறியா
லெழுத்தினுறழாத வழுத்துபொருளின்றிக்
குறிப்பொடுபடாத வெறித்தபுன்சொலே
யாயினும்பயந்ததஞ் சேயவர்சொலுமொழி
குழலினுமியாழினு மழகிதாமதுபோ
னற்றாயாகியெற் பெற்றாயென்சொற்
றிருச்செவிக்கேறும் பொருத்தமுண்டதனாற்
கேட்டிகேட்டி வாட்டமில்பெரியோய்
மதுமழைபிலிற்றிப் புதுமணம்விரித்துப்
பற்பலவுதவுங் கற்பகத்தருவும்
நந்தாவளனருட் சிந்தாமணியும்
வாமமாமேனியகாமதேனுவும்
அருளியவேவல் வரன்முறைசேட்பக்
கடவுளரணிமணித் தடமருடங்கள்
காற்றுணைவருடப் போற்றினரிறைஞ்சி
முனிவராசி னனிபலமொழியக்
கரம்பயில்க வரியரம்பையரிரட்டக்
கின்னரர்விபஞ்சி நன்னரம்புளரா
விசையமுதிருஞ் செவிமிசைமடுத்தூற்ற
முடங்குளைச்செங்கண் மடங்கலணைநாப்ப
ணமுதூறுமென்சொற் குமுதமென்செவ்வா
யிந்திராணிவந் தருகிருப்பக்
கருமுகிலாயிரந் திருமலர்பூத்தூச்
செங்கதிர்ச்சேகரந் தங்கவீற்றிருந்த
பெருந்திறன்கடுப்ப விருந்துவிண்புரக்கு
மண்ணல்புரந்தரப் பண்ணவனரசும்
பழமறைகனிந்து மழவுபெற்றிருந்த
செந்நாத்தவிசின் முன்னாட்டங்கிப்
பனுவலாட்டியி னிதுவந்திருப்ப
வண்டுபாண்முரன்று கிண்டுபுததைந்து
பொற்றாதுண்ணா முற்றாவின்பப்
பிரசமுற்றிருந்த வரசரோருகத்தன்
நெருக்கியபுவனப்பெருக்கினைத்தனாது
திண்ணியமனத்திடை யெண்ணியாங்கியற்றி

பெம்மார்லெவையு மியன்றனவென்னச்
செம்மாந்திருக்குஞ் சிறிபவாழ்க்கையும்
திதலைபூத்தலர்ந்து மதசளிறிகலி
வருமுலைசுமந்த திருமகள்பச்சைப்
பசுந்துழாயலங்கல சுப்புதேன்றுளித்துக்
கடிகமழ்மார்பிற் குடிபுகுந்திருப்பத்
தண்ணிலவெனவிரி வெண்ணிறப்பாற்கட
லொல்லொலித்தரங்க மெல்லடிவருடக்
காமர்தென்காலெனுஞ் சாமரையசையத்
துத்திநெய்பரந்த பைத்தலையகலி
லணிகிளர்பலகதிர் மணிவிளக்கொளிரச்
சுடிகைவாளரவ நெடியபூவணைமேன்
மறுவிலாநீல வரைகிடந்தென்ன
வறிதுயிலமர்ந்த வச்சுதன்வாழ்க்கையு
மழியாவின்பமென் றெழியாதுரைப்பினுங்
கற்றவர்கருத்தி னுற்றுநோக்குழி
யிந்திரசால முந்துநீள்கனவு
வெண்டேர்போல வுண்டெனத்தோன்றி
யிலவாமாதலி னலமலவாங்கவை
நிலைபேறுடையது நின்னருட்செல்வ
மன்னதேபெறுதற் குன்னினன்றமியேன்
அதனன்
எளிதினினிரங்கி யளிசுரந்தருளுதி
மரகதத்திடையிடை தரளமிட்டிழைத்த
வரமியமதனை விரிகுழைபொதுளி
யரும்பியபுன்னைப் பெரும்பொழிலெனவு
மாடகவலங்க லணிபணிநிறைத்த
சேடுயர்நீனிறச செய்குன்றதனைத்
துணர்த்தபூங்கொன்றை மணத்தகாவெனவு
மொய்க்கும்வண்சிறை யளி மைக்கருநிறங்கள்
பளிங்கரிந்திபற்றிய துளங்கொளிமாடப்
பித்திகைத்தலத்திடைப் பத்திபாய்தலினல்
வந்ததிங்கிரவெனச் சந்ததமடவார்
வார்முலையாடவர் மார்பிடைக்குளிப்பப்
புல்லியதலவிப் புதியதேனுகரு

மல்லலங்காழி வளநகர்வாண
குறிகுணங்கடந்த மறுவின்மாமணியே
யுறைபொருளெங்கணு நிறைபரிபூரண
வந்தமாதிமுந் தையேதவிர்த்த
வனுதிமுத்த வெனுதிநித்த
வருவுருவில்லா வொருபெரும்பொருளே
யளவையினடங்கா தொளிர்சுகநேய
வுருகுமெய்யன்பர் பருகுமாரமுதே
நலங்கனி பெரியநாயகி
கலந்தபேரின்பிற்களித்த பண்ணவனே. (உஅ)

(இ-ள்.) யான் - அடியேன், உளம்புகு நெறியால் - என் மனஞ்சென்ற வழியான், ஒன்று - ஒருவிஷயத்தை, விளம்புவன் - கூறுவேன், (அது என்னெனின்) பயந்த - பெற்ற, தம்சேயவர் - தமது புத்திரர், சொலும் மொழி- பேசுஞ்சொற்கள், எழுத்தின் உறழாது - எழுத்துக்களை சிறிதும் ஒவ்வாது, வழுத்து பொருள் - கொண்டாடத்தகுந்த பொருள், இன்றி - இல்லாமல், குறிப்பொடுபடாது-இன்னகுறிப்பினவென்று அறியவும்படாமல், வெறித்த- பயனில்லாத, புல்சொல்லே ஆயினும் - சிறிதாகிய சொற்களே ஆயினும், குழலினும் - குழலினிசையினும், யாழினும் - வீணையினிசையைக்காட்டினும், அழகிதாம் - அழகினையுடையதாம், அதுபோல் - அச்செய்திபோல, நல்தாய்ஆகி- நல்ல தாயேயாகி, எற்பெற்றாய் - என்னைப் பெற்றாய், என் சொல் - எனது புன்சொற்கள், திருச்செவிக்கு - தேவரீர் சிறந்த திருச்செவிக்கு, ஏறும் - ஏறத்தக்க, பொருத்தம் உண்டு - பொருத்தம் உளது, அதனால் - ஆகையால், வாட்டம் இல் - எக்காலத்தும் வாடுதல் இலாது ஒரு படித்தாக விளங்கும், பெரியோய் - பெரியோனே, கேட்டி கேட்டி - நான்கூறும் சொற்களைக்கேட்ககேட்க, மதுமழை - தேன்மாரியினை, பிலிற்றி - துளித்து, புதுமை மணம் - புதியவாசனையினை, விரித்து - பரப்பி, பல்பல - பலவாகியபொருள்களை, உதவும் - வேண்டியவகைத் தருகின்ற, கற்பகத்தருவும் - கற்பக விருக்ஷமும், நந்தா - குறைதலிலாத, வளன் - வளமுள்ள பொருள்களை, அருள் - விரும்பினோர்க்குதவும், சிந்தாமணியும் - சிந்தாமணியும், வாமம் ஆம் - அழகுவளர்கின்ற, மேனிய - மேனியினையுடைய, காமதேனுவும் - காமதேனு என்னும் பசுவும், அருளிய - கட்டளையிட்ட, ஏவல் - ஏவற்றொழில்களை, வரன் முறை - வரலாற்று முறைமைப்படி, கேட்ப - கேட்டு நிற்க, கடவுளர் - தேவர்கள், போற்றினர் - துதித்து, இறைஞ்சி - வணங்கி, அணி - அணிந்துள்ள, தடமகுடங்கள் - பெரிய கிரீடங்கள், கால்துணை - இரண்டு திருவடிகளை, வருட - தடவவும், முனிவர் - முனிவர்கள், ஆசிபல - வாழ்த்துமொழிகள்பல வற்றை, நனிமொழிய -அதிகமாகக்கூற, அரம்பையர் - தேவமாதர்கள், கரம் பயில் - கையில் பழகிய, கவரி இரட்ட - சாமரைகளை வீசவும், கின்னரர் - கின்னரரெனுந் தேவசாதியர், விபஞ்சி-விபஞ்சியென்னும் வீணையினது, நல்

கரம்பு - அழகிய தந்திகளை, உளரா - தடவி, இசை அமுது - இசையாகிய அமுதத்தினை, இருசெவியின் - பெரிய செவியில், எடுத்து ஊற்ற - எடுத்துப் பொழியவும், முடங்கு - வளைந்த, உளை - பிடரிமயிரினையும், செம்மை கண் - சிவந்த கண்களையுமுடைய, மடங்கல் அணை நாப்பண் - சிங்காசனத்தின் இடையில், அமுது உகு - அமிர்தினை யொக்கச்சிந்துகின்ற, மென்சொல் - மிருதுவாகிய சொற்களையும், குமுதம்என் - குமுதமென்னப்படும், செவ்வாய் - சிவந்தவாயினையுடைய, இந்திராணி - இந்திராணி, வந்து அருகு இருப்ப - வந்து அருகில் இருக்க, கருமைமுகில் - கருமையாகிய மேகம், ஆயிரம் திரு மலர்பூத்து - ஆயிரம் அழகிய தாமரைகளைப் புஷ்பித்து, செங்கதிர் - சிவந்த கிரணங்களையுடைய, சேகரம்-கிரீடம், தங்க - சிரசிலிருக்க, வீற்றிருந்த-பெருமையுடனிருந்த, பெருந்திறன் கடுப்ப - பெருமையாகிய காக்ஷியை யொப்ப, இருந்து-எழுந்தருளியிருந்து, விண்புரக்கும் - சுவர்க்க உலகத்தைக்காக்கின்ற, அண்ணல்-பெருமைதங்கிய, புரந்தரப் பண்ணவன்-தேவேந்திரனது, அரசும்-அரசாட்சியும், பழமை மறை-பழமையாகிய வேதங்கள், கனிந்து-முதிர்ந்து,மழவுபெற்றிருந்த -மிருதுவையடைந்திருந்த,செம்நா-சிவந்த நாவாகிய,தவிசில்-ஆசனத்தில், முன்னாள்-பூர்வத்திலே, தங்கி-இருந்து, பனுவலாட்டி-சரஸ்வதி, உவந்து-களித்து,இனிதிருப்ப-சந்தோஷத்துடனிருக்க, வண்டு-வண்டுகள்,பாண் - இசையினை, முரன்று-பாடி, பொன்தாது-அழகிய மகரந்தக்களை, துதைந்து-நெருங்கி, கிண்டுபு - கிண்டி, பிரசம்-தேனினை, உண்ண-உண்டு, முற்றா-முடிவைப்பெறாத, இன்பம்-சுகத்தினை, உற்றிருந்த - அடைந்திருந்த, வரம்-சிரேட்டமாகிய, சரோருகத்தன் - தாமரையில் எழுந்தருளியிருக்கும் பிரமன் நெருக்கிய - பலவாக நெருங்கியுள்ள, புவனப்பெருக்கினை - அண்டத்தின் மிகுதிகளை, தனது - தன்னுடைய, திண்ணியமனத்திடை-உறுதியாகிய மனத்தில், யெண்ணி யாங்கு-நினைத்ததுபோல, இயற்றி - சிருட்டித்து, எம்மால்-என்னால், எவையுமியன்றன - எல்லா உலகங்களும் சிருட்டிக்கப்பட்டன. என்ன - என்று எண்ணி, செம்மாந்திருக்கும் - பெருமித மடைந்திருக்கும், சிறியவாழ்க்கையும் - அற்பவாழ்வும், திதலை - தேமல், பூத்து-பரந்து, அலர்ந்து - விரிந்துமதம் களிறு - மதங்கொண்டயானையுடன், இகலி - மாறுபட்டு வருமுலை - வளரும் முலைகளை, சுமந்த - தாங்கிக்கொண்டிருக்கிற, திருமகள் - இலக்குமி,பச்சை-பசுமையாகிய, பசுந்துழாய்-வாடாத துளவாகிய, அலங்கல் மாலையில், அசும்பு - சுரக்கின்ற, தேன்துளித்து - தேன் சிதறி, கடிகமழ் - மணம் வீசுகின்ற, மார்பில் - மார்பிடத்தில், குடிபுகுந்திருப்ப - நீங்காது தங்கியிருக்க, தண் நிலவு எனவிரி - குளிர்ந்த சந்திரிகை யெனக்கூறும்படி பரந்துள்ள, வெண்மை நிறம்பால்கடல் - வெண்மையாகிய நிறத்தையுடையதிருப் பாற்கடலின், ஒல் ஒலி - மிக்க ஒலியாகிய, தரங்கம் - அலைகள், மென்மையடி - மிருதுவாகிய பாதத்தை, வருட - தடவவும், காமர் - அழகிய, தென்காலெனும்-தென்றற்காற்று என்கிற, சாமரை அசைய - கவரியானது அசையாநிற்க, துத்திநெய் - படப்பொறியாகிய நெய்யானது, பரந்து - பரவி, பைத்த - பசுமையாகிய, பை அகலில் - படமென்கின்ற அகலில், அணிகிளர் - அழகு விளங்குகின்ற, பல்கதிர் - பலகிரணங்களையுடைய, மணி விளக்கு -

நாகரத்தினமாகிய விளக்கானது, ஒளிர்-பிரகாசிக்கின்ற, அ - அந்த, சுடிகை-சூட்டினையுடைய, வாள் அரவம் - ஒளி பொருந்திய ஆதிசேஷனாகிய, நெடிய பூவணைமேல் - நீண்ட புட்பமாகிய படுக்கையின்மீது, மறுஇலா - குற்றமற்ற, நீலவரை - நீலமலையானது, கிடந்தது என்ன - இருந்ததையொப்ப, அறிதுயிலமர்ந்த - யோகநித்திரையில் தங்கியிருந்த, அச்சுதன் வாழ்க்கையும்-திருமாலின் வாழ்வும், அழியா இன்பம் என்று - கெடாத யின்பமுடையன என்று, ஒழியாது உரைப்பினும் - இடைவிடாமல் கூறிக்கொண்டு வரினும், கற்றவர் - அறிவுடையோர், கருத்தின் - தமதுமனதில், உற்று நோக்குழி - ஊன்றி ஆராயுங்காலத்தில், இந்திரஜாலம் - இந்திரஜாலத்தினையும், மூந்நீள் கனவு - முதன்மையாக நீண்ட கனவுபோலவும், வெண்தேர்போல - பேய்த்தேர்போலவும், உண்டெனத்தோன்றி-உளதாகக்காணப்பட்டு, இலவாம் - இல்லாதனவாகமறையும், ஆதலின் - ஆதலால், ஆங்கு அவை நலம் அல - சொல்லப்பட்ட அவை நன்மையைத்தருவன அல்லவாம், நின் அருள் செல்வம் - உனது திரு அருளாகிய செல்வம் ஒன்றே, நிலைபேறுடையது - அழியாப்பேறு உடையதாகும், தமியேன்-ஆதரவில்லாத அடியேன், அன்னதெபெறுதற்கு - அத்திருவருட்செல்வத்தினையே அடைதற்கு, உன்னினன்-நினைத்தேன், அதனுன் - ஆதலால், எளிதினின்-எளிதாக, இரங்கி-இரங்கப்பட்டு, அளிசுரந்து - கருணைகூர்ந்து, அருளுதி - அருள் செய்வாயாக, மரகதத்து இடை இடை - பச்சை இரத்தினங்களின் நடுக்கள் தோறும், தரளம்இட்டு-முத்துக்களைப்பதித்து, இழைத்த - குயிற்றியுள்ள, அரமியம் அதனை - முற்றத்தினை, விரிகுளழ்பொதுளி - விரிந்ததளிர்கள் நிறைந்து, அரும்பிய-மலார்ந்துள்ள, புன்னைப்பெரும்பொழிலெனவும் - புன்னை விருக்ஷங்களின் பெரியசோலையெனவும், ஆடக அலங்கல்-பொன்னரி மாலைகள், அணி அணி - வரிசை வரிசையாக, நிறைத்த - நிறைத்துள்ள, சேடுயர் - மிக்க உயர்ந்த, நீலநிறச்செய்குன்றதனை - நீலநிறந்தங்கிய செய்யப்பட்ட சிறுகுன்றத்தினை, துணர்த்த-கொத்துகளோடுகூடிய, பூ கொன்றை - பூக்களையுடைய கொன்றைகளின், மணத்த-மணத்தினைப்பெற்ற, கா எனவும் - சோலையெனவும், மொய்க்கும் - நெருங்கியுள்ள, வண்மை-வளப்பந்தங்கிய, சிறை அளி - இரக்கைகளையுடைய வண்டுகளின, மை கருநிறங்கள் - மிக்க கருமையான நிறங்கள், பளிங்கு அரிந்து - பளிங்குகற்களை சீர்மையாக அரிந்து, இயற்றிய - செய்வித்த, ஒளிதுளங்கு - பிரகாசந்தங்கிய, மாடம் பித்திகை தலத்திடை - உபரிகைகளின் சுவாத்தலங்களில், பத்திபாய்தலினல்-வரிசையாகப் பாய்தலினலே, இரவு இங்கு வந்தது என - ஈண்டு இராக்காலம் வந்தது என்று, சந்தம் - இடைவிடாது, மடவார்-அந்நாட்டுப்பெண்கள், வார்முலை - கச்சணிந்ததனங்கள், ஆடவா நாயகரது, மார்பிடை - மார்பில், குளிப்ப - மூழ்கும்படி, புல்லிய-அணைத்த, கலவிப்புதிய தேன-கலவியாகிய புதிதாகியதேனை, நுகரும் - உண்டுகளிக்கும், மல்லல் - வளப்பந்தங்கிய, அம்-அழகிய, காழிவளநகர்வாண- வளப்பமாகிய சீர்காழி நகரத்தில் எழுந்தருளியிருப்பவனே, குறிகுணம் கடந்த-குறிக்கத்தக்க குணங்களுக்கு அப்பாற்பட்ட, மறு இல்-குற்றமில்லாத, மாமணியே-பெரியஞான இரத்தினமே, உறை - பூமியில் வசிக்கின்ற

பொருள்எங்கணும்-சராசரப்பொருள்கள் எவ்விடத்தும், நிறை-நிறைந்துள்ள பரிபூரண - சர்வபரிபூரணனே, அந்தம் ஆதி-முடிவும் முதலும், முந்தையே-அநாதியிலேயே, தவிர்ந்த-நீங்கிய, அனாதிமுத்த-அனாதிமுத்தனே, என் ஆதிநித்த-எனது முதன்மையாகிய நித்தனே, அரு உரு இல்லா-அருவமும் உருவமும் இல்லாத, ஒரு பெருபொருளே-ஒப்பற்ற பெரிய பொருளானனே, அளவையின் அடங்காது-அளவை நூல்களுக்கு அடங்காமல், ஒளிர்-விளங்குகின்ற, சுகநேய-பேரின்பத்தால் அடையப்பெற்றனே, உருகும் மெய்யன்பர் - மனம் உருகுகின்ற உண்மை அடியவர்கள்,பருகும்-உண்டுகளிக்கும், ஆர் அமுதே-நிரம்பிய அமுதை ஒப்பானே, நலங்கனி-எல்லா நன்மைகளும் முதிர்ந்த, பெரிய நாயகி-பெரிய பிராட்டியாகிய பார்வதியார், கலந்த-கூடியுள்ள, பெரு இன்பில்-பேரின்பமாகிய சுகத்தில், களித்த-களித்துள்ள, பண்ணவனே-தேவதேவனாகிய சிவமூர்த்தியே. எ-று.

மனமே நீ என்சொற்படி கடவாது கேட்கவல்லாயாதலின் உனக்குறுதி தரத்தக்க ஒருசெய்தியைக் கூறுவேன் கலங்காது கேட்பாய் என்பார் விளம்புவன்யான் ஒன்று என்றார். இதில் ஒன்று என்பது, எண்ணளவி லடங்காது வேறு பொருளுணர்த்தினமையின் ஆகுபெயர். மதலையர்பேசுங்குதலைச்சொற்கள் பொருளுணர்த்தாது இன்னதுகுறிப்பது என்றுவிளங்கவும் பெறுதிருத்தல்பற்றி எழுத்தின்...பொருளின்றி என்றார். அங்ஙனம் குதலைப்படப் பேசினும் அச்சொற்கள் பயன்தராமையின் வெறித்த புன்சொல் என்றார். ச் சொற்கள்,ஏனையகுழவிகள் மாட்டுக்கேட்டலினும் தம்குழவியர் மாட்டுத்தோன்றிய மிக்க அன்பைத்தருதலின் பயந்த...மொழி என்றார். "குழலினிது யாழினிதென்ப தம்மக்கண், மழலைச்சொற் கேளாதவர்" எனத்திருவள்ளுவதேவருங் கூறியவாறு, அடிகள் "குழலினும்யாழினும் அழகிதாம் என்றார். ஈண்டு அழகிதென்றது கண்ணானோக்கக் கண்டன்று. காதிற்கினிமை மிகுதிபற்றியதாம். நான் கரணங்களின் வயப்பட்டு மயங்கி யுன்னையறியாது ஆணவகேவலியா யுள்ளபொழுது என்னையவ்வாறு வொழுகாவண்ணங் காத்தடிமைகொண்டா யென்பார் "நற்றாயாகியெற் பெற்றாய்" என்றார். இவ்வாறே வாதவூரடிகளும் "நாயிற் கடையாய்க்கிடந்த அடியேற்குத், தாயிற்சிறந்ததயாவான தத்துவனே" எ-ம். "சாயாவன்பினை நாடொறுந் தழைப்பவர், தாயே. யாகி வளர்த்தனைபோற்றி" எ-ம். திருவாய்மலர்ந் தருளினவாறு காண்க. நீதாயும் அடியேன் உன்னருங் குழவியுமாதலின் என்சொல் தேவரீர் திருச்செவிக்கேறும் பொருத்தமுண்டு;அதனால் எனதுவேண்டுகோளைச் சிறிதுதிருச்செவிசாய்த்துக் கேட்டருளுக என்பார் கேட்டி கேட்டி என்றார். யானும் என்னை யொப்பாரும் பல்காற்பிறந்திறந்து வாட்டங்கொண் டிருப்பேம் நீர் அங்ஙனம் தேய்தலும் வளர்தலுமின்றி யொரேநிலைமையையுடையை யென்பார் வாட்டமில் பெரியோய் என்றார். மந்தாரம், பாரிஜாதம், ஸந்தானம், கற்பகவிருக்ஷம், அரிச்சந்தனம், என்பன வேண்டுவோர் வேண்டியவகையீயவல்லன ஆதலால் பற்பலவுதவுங் கற்பகத்தரு என்றார். சிந்தாமணியும், காமதேனுவும் அவ்வாறே தேவர்விரும்பியவாறு தரும் இயல்புள்ளனவாதலின் அவற்றையு முடன்கூறினார். இந்திரன் அரசனாதலின் அவனரசிருக்கைகாண

வருவோர் அவனடிவீழ்ந்து தம்குறை கூறுதல்பற்றி மகுடங்கள் காற்றுணை வருட என்றார். அறவோர் மௌனநிலையுடைய பெரியோராதலின் அவர் செய்யும் வேள்விதவம் முதலியவற்றிற்கு அசுரர் செய்யும் இடுக்கண்முதலிய போக்கிக்காப்போர் தேவராதலின் அத்தகை விண்ணாடு எக்காலும் வளத்துடன் ஓங்கவிரும்புவோர் தவத்தோராதலின் அந்நாட்டினையாளும் இந்திரனையவர் ஆசிபகலல் இயல்பு என்பார் “முனிவராசிநனி...மொழிய என்றார். அரம்பையர் எனப்பொதுப்படக் கூறியதனானே ஏனைய ஊர்வசி, மேனகை, கிருதாசி, திலோத்தமை முதலிய அப்சரசுக்களையுங் கொள்க.” கின்னரர் தேவசாதியின் ஒருவகையர். விபஞ்சியென்பது ஒருவகைப் பண்ணுமாம். இந்திரனுக்கு ஆயிரங்கண்களாதலின் கருமுகில் ஆயிரந்திருமலர் பூத்து என்றார். கருமுகில் எனவே இந்திரன் நீலவுருக்கொண்டான் என்பது பெறப்பட்டது. சரஸ்வதியுடன் கூடிக்களித்து இருந்த விடத்திற்றானே யிருந்து மானதச்சிருட்டியினைச் செய்யும பிரமன என்பார் எண்ணியாங்கியற்றி யென்றார். இங்ஙனம் மானதச்சிருட்டி செய்யும் வாழ்வும் உண்மை முத்தியினை நோக்கச் சிறிதாம் என்பார் சிறியவாழ்க்கை யென்றார். உலகததைக் காக்குந்தொழிலே சிந்தையாக உறங்காதுறங்குதலின் அறிதுயில் எனத்திருமாலின உறக்கத்தைக் கூறினார். மேற்கூறிய இந்திரவாழ்க்கையும், பிரமபதமும், விண்டுபதமும் ஆகிய மூன்றும், பெரும்போகத்துடன் கூடியவையாயினும் நீடித்தன அல்லவென்பார் இந்திரசால முதலியவற்றை யுவமைகூறினார். இந்திரஜாலம் என்பது, ஜாலம் செய்வோன் ஒருவன் தனது மந்திரவன்மையால் அமரர் நாட்டிந்திரனை ஐராவதத்தின் மிசைவரச்செய்து அவ்விந்திரன் அசுரருடன் போரிட அவ்வசுரர்தலை முதலிய வுறுப்புகள் அந்தரத்திருந்து பூமியில்விழுவ போல் காட்டி அதனைவிட்டு வேறுவித்தை தொடங்க அது மறைவது. அது சத்தியமாகிய இந்திரன் வருகையன்றாதலின் அதனை இந்திரஜாலம் என்றார் கனவும் அவ்வாறே காணுமட்டும் உண்மையெனக் களிப்புத்தந்து அக்களிப்பு நீடாவகையுடனே மறைதலின் கனவு.எ-ம். வெள்ளிடையிற் பார்க்குங்கானல் நீர்செய்மைக் கணிருந்துகாண்போர்க்குநீர்போல் காணப்பட்டு அணிமைக்கண் சென்றோர்க்கு அது மறைந்தொழிதலின் வெண்டேர்-எனவும் கூறினார். இவை மூன்றும் இந்திரன் முதலிய மூவர்வாழ்க்கைக்கு உவமை. இவை யெவ்வாறு அழிதன் மாலையனவோ அவ்வாறு அம்மூவர் பதவிகளும் காலம்பட அழிய, உனது திருவருளாகிய செல்வம் ஒன்றேநிலை பேறுடையது என்பார் “இலவாம்...செல்வம்” என்றார். செய்குன்று, மலையினுருவாக விளையாடக் கட்டியமலை. மாகத்திடை என்றவுவமைகளால் காழிநகரின் நந்தாவளன் கூறப்பட்டது. சகள வுருவத்திற்கு மப்பாற்பட்ட தென்பார்குறி எனவும் அங்ஙனம் குறிக்கப்படாதாயினும் குணத்தின் வயப்பட்டது மன்றென்பார் குணம் கடந்ததெனவு கூறினார். சிருட்டியாதி பஞ்சகிருத்தியங்களைச்செய்யினும் மாசிலாதான்என்பார். மறுவில்மாமணி யெனறார். நீகுறிகுணங்கடந்தாயாயினும் எங்கும் நிறைந்துளாய் என்பார் நிறைபரிபூரண என்றார். தோற்றமுமீறும் எக்காலத்துமின்று என்பார்“அந்தமாதி—அநாதிமுத்த என்றார். அவ்வாறு அநாதிமுததனாயினும் எம்மனோர்பொருட்டுக்கருணையால் திருமேனிகொண்டு

அருள்சுரந்தளிக்கவருவாய் என்பார் ஆதிநித்தஎன்றார். நீ இயானபாவனை நிமித்தம் உருவாகக்கணப்பட்டனையாயினும், அவற்றின்வேறாய்; அங்ஙனமன்றி அருவமாகக்காணப்படினும் அவற்றிற்பிரிந்து வேற்றுருவங்கொள்வாய் உன்னுருவத்தினையறிதல்கூடாதென்பார் அருவுரு-பெரும்பொருளே என்றார். காண்டல்முதலிய அளவைகளாலும் அளக்கற்பாலை யல்லையென்பார் அளவை... சுகநேய எனவும், இவ்வாறு அந்தமாதி, உரு அரு, குணம் குறி, அளவைமுதலிய கடந்தோயாயினும் மெய்யன்பருக்கெளியையாய் அவர்மனத்து அமுதம்போல் இனிக்கவல்லையென்பார் "உருகுமெய்யன்பா பருகுமாரமுதே என்றார். பண்ணவனே அருளுதியெனமுடித்துக்கொள்க.

காழிநாயகனே, இந்திரபதமும், பிரமபதமும் விஷ்ணுமூர்த்தியின் பதமாகிய பரமபதமும் ஆகியமூன்றும் இந்திரஜாலம், கனவு, கானல்நீர்போலுள்ளனவாக் காணப்பட்டு அழிவனஆதலின், அவைவேண்டேன்; அடியேன் தேவரீரது திருவருட்செல்வமே வேண்டுவன் அதனையடியேற்குக்கருணைகூர்ந்தருளவாயாக என்பது கருத்து.

வெண்பா.

பணமஞ் சணையிருக்கப் பாவையரைச் சும்மா
புணர்கின்றீ ரென்று புகலப் - புணர்வார்க்
கணைக்காசு தந்தனமென் றார்புகலி யார்மா
வணைக்காசென் றாளதற்கு மான்,

(இ-ள்) பணம் ஐஞ்சு-ஐந்துபணங்கள், அணையிருக்க-அணையில் (செருகிக்கொண்டு) இருக்க, பாவையரை-பிரதிமைபோலும் மடவாரை, சும்மா-காசுதராமல், புணர்கின்றீர்-சேர்ந்து இன்பந்துய்த்து பெற்றும்போகின்றீர், என்று புகல-என்றுநான்கூற, புகலியார்-புகலியில் எழுந்தருளியவர், புணர்வார்க்கு-என்னைச்சேரும் பெண்களுக்கு, அணைக்காசுதந்தனம்-அணைக்காசு கொடுத்தே புணர்ந்தோம், என்றார்-என்று விடைகூறினார், அதற்கு-அங்ஙனம் கூறிய விடைக்கு, மான் - எமதுதலைவி, மா அணைக்காசு என்றாள்-மகா அணைக்காசு கொடுத்தீரென்று பரிகசித்தாள் (எ-று)

இது, நாயகனும் நாயகியும் உரையாடியதைச் சிறைப்புறத்திருந்துகேட்டபாங்கியவள் தனித்துத் தம்முடனிருக்கையில் கூறிநகையாடியதாம்.

(கு-ரை) பணம் ஐஞ்சு அணை, யென்றது இறைவனுக்குச்சிலேடையாகக் கூறுமிடத்து ஐந்து படங்களையுடைய ஆதிசேடனை அரையில் அசைத்தமையை யுணர்த்திநின்றது. பாவை பிரதிமை என்பதன்பொருஉ. இறைவன் சத்தினிபாதமடைந்த ஆத்மாக்களிடத்துத் தாமேயடைந்து அவற்குவேண்டியயுபகரித்தருளும் பெருங்கருணை யுணர்த்துவார் சும்மா புணர்கின்றீர் என்றார். புணர்வார்க்கு அரைக்காசு தந்தனம்: என்றது, புணர்வார்க்கு-புணர்கின்றமாதர்களுடைய, அணைக்கு-இடைக்கு, தந்தனம்-அவர்களுடைய ஸ்தனங்கள், ஆசு என்றார்-குற்றம் விளைப்பனவாம் என்பது சிலேடை. அதற்குமான்-அத

ற்குமான்போல்பவள், மாவனைக்கு ஆசு என்றாள்-பெரிய மேருமலைக்கு குற்றம்விளைத்தாய் என்று கூறினாள்: என்பது சிலேடை. பணம் ஐஞ்சனை எனப் பிரித்து ஐஞ்சனைப்பணம் எனினும் ஆம். அரைச்சுகாசு என்பதற்கு, அரையில் அணியும் மணிவடம் எனினுமாம்.

கட்டளைக்கலித்துறை.

மானைக்கலந்தமணவாளன்காழிவரதன்செங்க
ணானைப்புரந்தவன்பத்தர்க்குமுத்தியளித்தருளும்
ஏனைப்பெரும்பொருள்கல்விமெய்ச்செல்வமிருந்தளிப்பார்
தேனைத்தருஞ்செழுந்தாமரைநாமகள்செந்திருவே, (௩௰)

(இ-ள்) முத்தி-பேரின்பமாகிய மோக்ஷத்தினை, அளித்து அருளும்-கொடுத்தருள்செய்கின்ற. மானைகலந்த - மான்போலுந்திருநோக்கத்தினையுடைய பிராட்டியைவாமபாகத்துப்பெற்ற, மணவாளன் - கல்யாணசுந்தரகோலத்தினையுடையவன், காழிவரதன் - சீர்காழிக்கண் எழுந்தருளி வேண்டியவரத்தினைத்தந்தருளுவோன், செம்கண்ணானை - சிவந்ததாமரைபோலும் கண்களையுடைய திருமாலை, புரந்தவன்-காத்தருள்செய்தவனுடைய, பத்தர்க்கு - அடியவர்களுக்கு, தேனை தரும்-தேனைச்சுரப்பிக்கின்ற, செழுமைதாமரை-வளந்தங்கிய வெண்டாமரையில் இருக்கும், நாமகள் - கலைமகளாகிய சரஸ்வதியும், செம்திரு.—செம்மையாகியதாமரையைத்தவிசாக்கொண்ட இலக்குமியும், ஏனைப்பெரும்பொருள் - அடையவேண்டிய உலகத்திலுள்ள பெரியசெல்வங்களெல்லாவற்றினையும், மெய்-உண்மையாகிய, கல்விச்செல்வம்-கல்விச் செல்வத்தினையும், இருந்து-நிலைத்து, அளிப்பார்-தந்தருளுவர். (எ-று)

இதற்கு இவ்வகையன்றி, பத்தர்க்கு இறைவன் முத்திதந்தருளுவன், கலைமகளும், அலைமகளும், கல்வியும், செல்வமும் அருளுவர் எனப்பொருத்தினுமாம், இறைவனையெண்ணிப்பூசிக்கும் அடியவர் எம்மையினும் கல்வி, பொருள்முதலிய அடைந்து இன்பநுகர்ந்து இறுதிக்கண்முத்திச் செல்வம் பெறுவர் என்பது கருத்து.

(கு-ரை.) இறைவன் இறைவியைக்கூடினன்றியுலகத்து ஆன்மாக்கள் ஒரு போகமுந்நுகரார் ; அவன் இறைவியைக்கூடியிருக்கின் உலகத்து எல்லாப்போகமும் விளையுமாகலின் எல்லா இன்பத்திற்கும் முதல்வராவார் இறைவனும் இறைவியுமேயென்பார் மானைக்கலந்த மணவாளன் என்றார். இவன் கூடினன்றிஎவ்வுயிரும் இயங்காமை இறைவன் யோகிருந்தகாலத்து எவ்வுயிருமியங்காமையாலறிக. ஏனையோர் தம்துசத்திகளை நாவினும் மார்பினுங் கொண்டிருத்தல்போலல்லாது தமது ஒரு பாகத்தில் பெற்றநித்திய கல்யாணன் என்பார் மணவாளன் என்றார். இது ஏனைச்சத்திகளின் வழியொழுகுவார் மற்றவர் என்றும் இவனவ்வாறன்றி தன்வழிசத்தியொழுக இருப்பவன் என்பது பெறப்பட்டது. இதனை "கண்ணுதல் யோகிருப்பக்காமனின்றிடவேட்கைக்கு, விண்ணுறு தேவராதி மெலிந்தமையோராமாறு, ஒண்ணுதி வேண்மகனையேவ வெரிவிழித்திமவான்பெற்ற, பெண்ணினைப்புணர்ந்துயிர்க்

குப் பேரின்பமளித்ததோரார்." என்றதானறிக. சராசரங்களாகியதேவர்,விலங்குபுள்,முதலிய எல்லாமும் தம்மைவணங்க அவர்களுக்கு அருள் சுரந்தளித்தவன் என்பார், காழிவரதன் என்றார்;காழி என்றது காளிஎனும் நாகன் பூசித்துப்பேறடைந்தமையால் பெற்றபெயர்.வரதன் என்றது எல்லாவரத்தையும் தருபவன் என்பதுபொருள்.விஷ்ணுமூர்த்தி, தாம்பலபிறவிகொண்டுஅசுரரை வதைத்தகாலத்து இறைவன் நிக்ரகாநுக்ரகங்கள் செய்து காத்தருளினமை மகாபுராணங்களாலும், மகாஸ்தலங்களாலும் அறிய நிற்றலின் செங்கணானைப் புரந்தவன் என்றார். இறைவனை யாயிரம் பூக்கொண்டு பூசிக்க அதிலொன்று குறையுறவொருதிருநாமத்திற்குமலர்காணப்பெறாதுதனதுகண்கொண்டு அருச்சிக்க இறைவன் களிப்புற்றுச் செங்கண்ணனெனப்பெற்றமையின் செங்கணான் என்றார். இதனைத்திருவீழிமிழலை, செங்கண்மால், எனும் தலப்பெயர்களாலும் தலபுராணங்களாலும் அறிக. தாய்தன் மாட்டு அன்புடைய பிள்ளையை இடைவிடாதுபாதுகாத்து வேண்டிய அளித்துக்காத்தல்போல் இறைவனும் தம்மை யிடைவிடாது மனமெனுங்கோயிலிலடைத்துச் சிந்திக்கும் அடியவர்க்குப்பேரின்பமளிக்கக்காலம்பார்த்திருந்து பரிபாகமுதிர்ச்சியில் தமது திருவடியாகிய முத்தியைத் தந்தருளுதலின் பத்தர்க்குமுத்தியளித்தருளும் என்றார், தேனைத்தருஞ் செழுந்தாமரை எனப்பொதுப்படக்கூறியதனான் நாமகளுக்கு வெண்டாமரையும், திருமகளுக்குச் செந்தாமரையுங்கொள்க. ஏனைப்பெரும்பொருள் என்றதனான் இவை உலகத்திற்குவேண்டிய பொருள்கள் எனவும், மற்றைச்செல்வம் என்றதனான் அது இம்மை மறுமை இரண்டிற்குமுரிய கல்விச் செல்வம் எனவும் கூறப்பட்டது. மற்றையுலகத்தவரிடம் செல்வந்தோன்றின் அவைசகடக்கால்போல எவரிடத்தும் நிலையா ஆகையால் சிவனடியவரிடத்துத்தோன்றுஞ் செல்வம் அங்ஙனமல்லாது உலகத்து அவர் உள்ளளவும் அழியாதிருத்தல் நோக்கி இருந்தளிப்பார் எனக் கூறினார்.

அத்தேவியரிருக்கும் மலர்வாடாமைபற்றித் தேனைத்தருஞ் செழுந்தாமரையென்றார். உலகச்சிருட்டிக்குப் பிரமன்காரணமாதலின அவனதுசத்தியை முன்னும், விண்டு காப்புக்கடவுளாதலின் அவரது சத்தியையவட்குப் பின்னுங் கூறுவார் நாமகள் செந்திருவேயெனவும் கூறினார். நாமகள், நாவிலிருக்கும் மகள் எனவும், நாவினைத்தரும் மகள் எனவும் பொருள்கொள்க.

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டான் திருவடிவாழ்க.

திருக்கழுமல மும்மணிக்கோவை.

முற்றிற்று.

உ

கணபதி துணை,

திருச்சிற்றம்பலம்.

மூன்றாவது

திருவிடைமருதூர்

மும்மணிக்கோவை.

மூலமும் உரையும்.

---o---

இணைக்குறளாசிரியப்பா.

தெய்வத்தாமரைச் செவ்வியின்மலர்ந்து
வாடாப்புதுமலர்த் தோடெனச்சிவந்து
சிலம்புங்கழலு மலம்பப்புனைந்து
கூற்றினாற்றல் மாற்றிப்போற்றாது
வலம்புரிநெடுமா லேனமாய்நிலம்புக்
காற்றலினகழ்ந் தோற்றாதுநிமிர்ந்து
பத்தியடியவர் பச்சிலையிடினு
முத்திகொடுத்து முன்னின்றருளித்
திகழ்ந்துளதொருபாற் றிருவடியகஞ்சேர்ந்து
மறுவில்கற்பகத் துறுதளிர்வாங்கி
நெய்யிற்றோய்த்த செவ்வித்தாகி
நூபுரங்கிடப்பினு நொந்துதேவர்
மடவரன்மகளிர் வணங்குபுவீழ்த்த
சின்னப்பன்மலர் தீண்டிடச்சிவந்து
பஞ்சியுமணிச்சமு மெஞ்சவெஞ்சாத்
திருவொடுபொலியுமொருபாற்றிருவடி
நீலப்புள்ளிவாளுகிர்வேங்கைத்
தோலின்கலிங்கமேல்விரித்தசைத்து
நச்செயிற்றரவக்கச்சையாப்புறுத்துப்
பொலிந்துளதொருபாற்றிருவிடையிலங்கொளி
யரத்தவாடைவிரித்துமீதுறீஇ
யிரங்குமணிமேகலையொருங்குடன்சாத்திய
மருங்கிற்றாகுமொருபாற்றிருவிடை

செங்கணரவும்பைங்கணாமையுங்
கேழற்கோடும்வீழ்திரளக்கு
நுடங்குநூலுமிடங்கொண்டுபுனைந்து
தவளநீறணிந்ததோர்பவளவெற்பென்ன
வொளியிற்றிகழுமொருபாலாகம்
வாரும்வடமுமேர்பெறப்புனைந்து
செஞ்சாந்தணிந்துகுங்குமமெழுதிப்
பொற்றாமரையின்முற்றாமுகிழென
வுலகேழீன்றுநிலையிற்றளரா
முலையுடன்பொலியுமொருபாலாக
மயில்வாயரவம்வயின்வயினணிந்து
மூவிலைவேலும்பூவாய்மழுவுந்
தமருகப்பறையுமினையன தாங்கிச்-
சிறந்துளதொருபாற்றிருக்கரஞ்செறிந்த
சூடகம்விளங்கியவாடகக்கழங்குட
னைம்மென்பந்தும்மென்கிள்ளையுந்
தரித்தேதிகழுமொருபாற்றிருக்கர
மிரவியுமெரியும்விரவியவெம்மையி
னொருபால்விளங்குந்திருநெடுநாட்ட
நவ்விமானின்செவ்வித்தாகிப்
பாலிற்கிடந்தநீலம்போன்று
குண்டுநீர்க்குவளையிற்குளிர்ந்துநிறம்பயின்
றெம்மனோர்க்கடுத்தவெம்மைநோய்க்கிரங்கி
யுலகேழ்புரக்குமொருபானாட்ட
நொச்சிப்பூவும்பச்சைமத்தமுங்
கொன்றைப்போதுமென்றுணர்த்தும்பையுங்
கங்கையாறும்பைங்கட்டலையு
மரவுமதியமும்விரவித்தொடுத்த
சூடாமாலைசூடிப்பீடுகெழு
நெருப்பிற்றிரித்தனையவுருக்கிளர்சடிலமொடு
நான்முகங்கரந்தபானிறவன்னங்
காணாவண்ணங்கருத்தையுங்கடந்து
சேணிகந்துளதே
யொருபாற்றிருமுடிபேணிய
கடவுட்கற்பின்மடவரன்மகளிர்

கற்பகவனத்துப்பொற்பூவாங்கிக்
கைகவைத்துப்புனைந்ததெய்வமாலை
நீலக்குழன்மிசைவளைஇமேனிவந்து
வண்டுந்தேனுங்கிண்டுபுதிளைப்பத்
திருவொடும்பொலியுமொருபாற்றிருமுடி
யினையவண்ணத்துநினைவருங்காட்சி
யிருவயினுருவுமொருவயிற்றாகி
வலப்பானாட்டமிடப்பானோக்க
வாணுதல்பாகநாணுதல்செய்ய
வலப்பாற்றிருக்கரமிடப்பால்வனமுலை
தைவந்துவருடமெய்ம்மயிர்பொடித்தாங்
குலகமேழும்பன்முறையீன்று
மருதிடங்கொண்டவொருதனிக்கடவுணின்
றிருவடிபரவுதும்யாமேநெடுநா
ளிறந்தும்பிறந்துமிளைத்தனமறந்துஞ்
சிறைக்கருப்பாசயஞ்சேரா
மறித்தும்புகாஅவாழ்வுபெறற்பொருட்டே. (1)

இது ஒப்பற்றதாய், பூரணமாய், சின்மயமாய், ஆனந்தமாய், ஜோதிசொரூபமாகவுள்ள சிவமூர்த்தி, புவனத்தார் போற்றியுய்ய பராசத்தியுட னெழுந்தருளி மருதவனத்தி னிடைமேவி யிருந்தமையால் திரு இடைமருதூர்எனத் திருநாமம் பெற்ற திருத்தலமாகிய இதற்குக்கூறிய மும்மணிக்கோவை யாதலின் திருவிடை மருதூர் மும்மணிக்கோவையெனப்பட்டது.

(இ-ள்.) தெய்வத்தாமரை - தெய்வத்தன்மைதங்கிய தாமரைமலரின், செவ்விதின் - அழகுபோல, மலர்ந்து - அலர்தலையடைந்து, வாடா - எக்காலத்தும் வாடுதலில்லாத, புதுமலர் - அன்றலர்ந்தமலரின், தோடு என - இதழ் என, சிவந்து - செம்மைநிறத்தினைப்பெற்று, சிலம்பும் - திருச்சிலம்பினையும், கழலும் - வீரக்கழலையும், அலம்ப - (ஒன்றுடனொன்று தாக்குதலால்) ஓசையுண்டாகும்படி. புனைந்து - அலங்காரம்பெறவணிந்து, கூற்றின் - யமனுடைய ஆற்றல் - (ஆன்மாக்களினுயிர்களைக்கவர்ந்துண்ணும்) வன்மையினை, மாற்றி - ஒழித்து, போற்றாது - வணக்கஞ்செய்யாது, வலம்புரிநெடுமால் - சக்கரத்தினைத்தாங்கிய திருமால், ஏனமாய் - வராகவுருக்கொண்டு, நிலம்புக்கு - பூமிக்குள்புகுந்து, ஆற்றலின் - தனது வன்மையால், அகழ - பூமியைக் கொம்பால்பிளக்க, தோற்றாது - தரிசனந்தராமல், நிமிர்ந்து - ஓங்கி, பத்தி அடியவர் - அன்புடையடியவர்கள், பச்சிலையிடினும் - (மலர்காணாது) பச்சிலையிட்டு அருச்சிக்கினும், முத்திகொடுத்து - வீட்டினை அருளி, முன்னின்று - அவர்களுக்குத் தரிசனந்தந்து, அருளி - அவர்களது இஷ்டகாமியங்களை யருளிச்செய்து, திகழ்

ந்து-விளக்கமுற்று, உனது ஒருபாற்றிருவடி-இருக்கின்றது ஒருபாலுள்ள திருவடி, அகஞ்சேர்ந்து-உள்ளசஞ்சிவந்து, மறு இல்-குற்றமில்லாத, கற்பகத்து உறு தளிர்-கற்பகவிருக்ஷத்துள்ள தளிரினை, வாங்கி-கொண்டு, நெய்யில்-நெய்யின்கண் தோய்த்த-முழுத்தப்பட்ட, செவ்வித்து ஆகி-அழகையுடையதாகி, நூபுரம் கிடப்பினும்-திருச்சிலம்பு தங்கியிருக்கினும், நொந்து-வருந்தி. தேவர்-தேவர்களுடைய, மடவரல் மகளிர்-மடப்பத்தின் வரலாற்றினையுடைய தெய்வமாதர்கள், வணங்குபு-திருவடியை வணங்குகையில். வீழ்த்த-விழும்படி செய்த, சின்னப்பன்மலர்-சின்னப்பூவென்னும் ஒருவகைத்தலையணி, தீண்டிட-படுதலினால், சிவந்து-செந்நிறமடைந்து, பஞ்சியும்-நிறத்தால செம்பஞ்சும், அனிச்சமும்-மிருதுவால் அனிச்சமலரும், எஞ்ச-தன்குணத்திற் பின்னிட, எஞ்சாத்திருவொடும்-குறையாத செல்வத்துடனும், பொலியும்-விளக்கமுற்றுவிளங்கும், ஒருபாற்றிருவடி-ஒருபுறத்துத்திருவடி, நீலப்புள்ளி-நீலநிறப்புள்ளிகளையும், வாள் உகிர்-கூர்மையான நகங்களையுமுடைய, வேங்கைத்தோலின்-புலித்தோலின, கலிங்கம்-ஆடையினை, மேல்-திருமேனியின்மேல், விரித்து அசைத்து-விரித்துக்கட்டி, நஞ்சு எயிறு-விஷந்தங்கிய பற்களையுடைய, அரவக்கச்சை-பாம்பாகிய யிடைக்கட்டினை, யாப்புறுத்து-கட்டி, பொலிந்தனது-விளங்கியுள்ளது, ஒருபால் திருவிடை-ஒருபுறத்துள்ள திரு இடை, இலங்கு ஒளி-வீசுகின்ற ஒளியினையுடைய, அரத்த ஆடை-செம்பட்டாடையினை, விரித்து-விரித்து, மீது உடீஇ-மேலே சாத்தி, இரங்கு-ஒலிக்கின்ற, மணிமேகலை-இரத்தினங்களாகிய மேகலாபரணத்தை, ஒருங்குடன்-முழுதும், சாத்திய-அணிந்துள்ள, மருங்கிற்றாகும்-பக்கத்தையுடையதாகும், ஒருபால் திருவிடை-ஒருபக்கத்துத் திரு இடை, செங்கண் அரவும்-சிவந்த கண்களையுடைய பாம்பும், பைங்கண் ஆமையும்-பசியகண்களையுடைய ஆமையும்-கேழற்கோடும் பன்றியின்கொம்பும், வீழ்-தொங்குகின்ற, திரள் அக்கும்-திரண்ட எலும்புமாலைகளும், நுடங்கு நூலும்-அசைகின்ற பூணூலும், இடனொண்டுபுனைந்து-இடப்பாகமாகக் கொண்டு, அணிந்து: தவளநீறு-வெண்மையாகிய விபூதியினை, அணிந்தது ஓர்-அணிந்ததாகிய ஒரு, பவளவெற்பு என்ன-பவளமலையைப்போல, ஒளியுடன்-பிரகாசத்துடன், திகழும்-விளங்காநிற்கும். ஒருபாலாகம்-ஒருபுறத்துத் திருமேனி, வாரும்-கச்சையையும், வடம்-மணிமாலையையும், ஏர் பெற-அழகுபெற-புனைந்து-தரித்து, செஞ்சாந்து-சிவந்த சந்தனத்தை, அணிந்து-அணியப்பெற்று, பொன்றாமரையின்-அழகியதாமரையின், முற்றா-முதிராத, முகிழென-அரும்பைப்போல, உலகேழ் ஈன்று-ஏழுலகங்களையும்பெற்று; நிலையில்தளரா-நிற்றலில் தளர்ச்சியடையாத, முலையுடன் பொலியும்-முலையுடன் விளங்காநிற்கும், ஒருபாலாகம்-ஒருபுறத்துத் திருமேனி, அயில்வாய்-கூர்மையான பற்களைவாய்ந்த வாயினையுடைய, அரவம்-பாம்பினை, வயின்வயின் அணிந்து-இடங்கள்தோறுமணிந்து, முவிலைவேலும்-மூன்று கவர்வாய்ந்த இலைபோலும் வேலும், பூவாய்-கூர்மைவாய்ந்த, மழுவும்-மழுவாயுதமும், தமருகப் பறையும்-டமருகமென்னும் பறையும், அமர்தரத்தாங்கி-பொருந்தும்படித் தாங்கிக்கொண்டு, சிறந்துளது-சிறப்புவாய்ந்துளது, ஒருபால் திருக்கரம்-

ஒருபுறத்துத்திருக்கரம், செறிந்த - நெருங்கிய, சூடகம்விளங்கிய - கடகம் அணிந்து விளங்கப்பெற்ற, ஆடகக்கழங்குடன் - பொன்னாலாகிய அம்மனையுடன், ஓம் என் பந்தும் - ஓமமென்னும் ஓசையுடன்கூடிய பந்தும், அம்மென்கிள்ளையும் - அழகிய மென்மையையுடைய கிளிப்பிள்ளையும், தரித்து - அணியப்பெற்று, திகழும் - விளங்காநிற்கும், ஒருபால் திருக்கரம் - ஒருபுறத்துள்ள திருக்கரம் ; இரவியும் எரியும் - சூரியனும் அக்னியும், விரவியவெம்மையின் - கலந்துள்ள வெப்பத்தினொடு, ஒருபால் - ஒருபுறத்து, விளங்கும் - விளங்காநிற்கும், திருநெடுநாட்டம் - அழகிய நெடிய நேத்திரங்கள், நவ்வி மானின் - இளமானினது, செவ்விதாகி - அழகையுடையதாகி, பாலிற்கிடந்த - பாலிலேதங்கிய, நீலம்போன்று - நீலரத்தினத்தையொத்து, குண்டுநீர்-ஆழமாகிய நீரிலுள்ள, குவளையின் - நீலோற்பலம்போன்று, குளிர்ந்து-குளிர்ச்சியைப்பெற்று, நிறம்பயின்று - நல்ல நிறத்தினைப்பெற்று, எம்மனோர்க்கு-என்னையொத்தவர்களுக்கு, அடுத்த - உண்டாகிய, மம்மர்க்கு இரங்கி - மும்மல மயக்கத்திற்கு இரக்கமுற்று, உலகேழ்புரக்கும்-ஏழுலகங்களையும் காக்காநிற்கும், ஒருபால் நாட்டம்-ஒருபுறத்துத் திருக்கண், நொச்சிப்பூவும்-நொச்சிமலரும். பச்சைமத்தமும் - பசுமையாகிய உன்மத்தம் மலரும், கொன்றைப்போதும் - கொன்றைமலரும், மென்துணர் - மிருதுவாகிய கொத்துகளையுடைய, தும்பையும் - தும்பைமலரும், கங்கையாறும் - கங்காநதியும், பைங்கண் தலையும் - பசியகண்களையுடைய தலைமாலையும், அரவும் - அரவாபரணமும், மதியமும் - சந்திரனும், விரவித்தொடுத்து - கலப்புறக்கோத்து, சூடாமாலை - அணியப்பெறாத மாலையினை, சூடி - அணிந்து, பீடுகெழு - பெருமைதங்கிய, நெருப்பில் - நெருப்பினால், திரித்தனைய - திரித்ததையொத்த, உருக்கிளர் - வடிவுடன் விளங்கிய, சடிலமொடு - சடையுடன், நால்முகம் - நான்குமுகங்களை, கரந்த - ஒளித்துள்ள, பால் நிற அன்னம் - வெண்மையாகிய நிறங்கொண்ட அன்னப்புள்ளாகிய பிரமன், காணுவண்ணம் - தேடிக்காணுவிதம், கருத்தையுங்கடந்து - மனதையுங்கடந்து, சேண்-ஆகாயத்தை, இகந்து - தாண்டி, உளது - உள்ளது, ஒருபால் திருமுடி - ஒருபுறத்துத் திருமுடி, பேணிய - விரும்பப்பெற்ற, கடவுள் - தெய்வத் தன்மைதங்கிய, கற்பினை - கற்பினையுடைய, மடவரல் மகளிர் - மடப்பத்தை யுடைய பெண்கள், கற்பகவனத்து - கற்பகச்சோலையிலுள்ள, பொன்பூவாங்கி - அழகியபூவைக்கொண்டு, கைவைத்து - முறைமையாகப்பொருத்தி, புனைந்த - அலங்கரித்த, தெய்வமாலை-தெய்வத்தன்மைதங்கிய மலர்மாலையை, நீலக்குழல்மிசை - நீலநிறந்தங்கிய கூந்தலின்மேல், வளைஇ - சுற்றி, மேல்நிவந்து-மேல் ஓங்கி, வண்டும் தேனும் - வண்டுகளும் தேன்வண்டுகளும், கிண்டுபு-கிண்டி, திளைப்ப - நுகர, திருவுடன் - அழகுடன், பொலியும் - விளங்காநிற்கும், ஒருபால் திருமுடி-ஒருபுறத்துத் திருமுடி; இனையவண்ணத்து - இத்தகைய அழகினையுடைய, நினைவு அருங்காட்சி - நினைத்தற்கு அருமையாகிய தோற்றத்தினையுடைய, இருவயினுருவும் இருபுறத்துத் திருவுருக்களும், ஒருவயிற்றாகி-ஒருபுறமாகப்பெற்று, வலப்பால் நாட்டம்-வலதுபக்கத்துத்திருநோக்கம், இடப்பால் நோக்க-இடப்புறத்துப் பார்த்தலினால், வாள் நுதல்பாகம்-ஒளிதங்

கியநெற்றியையுடைய இறைவியின்பாகமானது, நாணுதல்செய்ய-நாணுதலைச்
செய்ய, வலப்பால் திருக்கரம் - வலதுபக்கத்துத் திருச்கரமானது, இடப்பால்
வனமுலை - இடதுபக்கத்துள்ள அழகிய ஸ்தனங்களை, தைவந்து வருட-தடவி
வருடுதலால், மெய்ம்மயிர் பொடித்தாங்கு - தேகத்தில் மயிர்க்குச்செறிந்தா
ற்போல, உலகமேழும் - ஏழுலகங்களையும், பன்முறையீன்று - பலமுறைபெ
ற்று, மருதிடங்கொண்ட-திருவிட மருதைத்திருப்பதியாகக்கொண்ட, ஒருதனி
க்கடவுள் - ஒப்பற்ற தனிமுதல்வனே, யாம் - நாங்கள், நெடுநாள், பலஜன்ம
ங்களில், இறந்தும் பிறந்தும் - மரணமடைந்தும் தோற்றியும், இளைத்தனம்-
இளைத்தோம், மறந்தும் - இனிமறந்தாயினும், சிறை - காவற்கிடங்காகிய, கரு
ப்பாசயம் - கருப்பாசயத்தில், சேரா - சேர்ந்து, மறித்தும் - மீண்டும், புகா-
பூமியில் பிறவாத, வாழ்வுபெறல்பொருட்டு - வாழ்வை அடையும் பொருட்
டாக, நின் - தேவரீருடைய, திருவடி - திருவடிகளை பரவுதும் - வணங்கு
கின்றோம். எ - று.

(கு - ரை.) பிரகிருதி யுலகத்துள்ள தாமரையன்றென்பார் தெய்வத்
தாமரை யென்றார் அது கூம்பலும் வாடலு மின்மைபற்றிபோலும். இறைவ
னது திருவடிக்கணுள்ள திருவிரற்கள் உத்தம விலக்கணங்கொண்டதின்மேற்
பட்டு அடங்காச் சிறப்புற்றதென்பார் வாடாப் புதுமலர்த் தோடெனச் சிவ
ந்து என்றார். சிலம்பொன்றினமையாது சழல் கூறினர் ; தாம் மற்றைத்தே
வர்கட்கு இறைமையாந்தன்மைபற்றியாம் இத்திருவடியொன்றே முத்திதர
வல்லது எனக்குறித்தற்பொருட்டிரண்டுங்கூறினர். இத்திருவடி, முத்திகொ
டுத்தலிலமையாது ஆங்காங்கு நிக்ரகமுஞ்செய்து அவ்வவர்கொண்ட வீறட
க்கி நன்மையுஞ் செய்ததென்பார் கூற்றினுற்றல் மாற்றி...நிமிர்ந்து என்றார்,
எவராயினும் மலநீங்கித் தம்மை நினைப்பினவர்கட்குத் தமதுசாமீப்பியத்தை
த்தர வல்லது என்பார், பத்தியடியவர்... முன்னின் றருளியென்றார். பாற்
கடற் பிறந்த தாதலின் மறுவில் கற்பகமென்றும், ஏனையர்கற்ற உத்தமவில
க்கணங்கொண்ட நூற்கள், இறைவியின் திருவடிக்கண்வைத்த அன்பால் அவ்
வவர்புண்ணியத்தளவுணரப்பெற்றதாயே கதேசமே கூறுவதன்றி யிறைவி
யின் திருவடிக்குச் சிறிதுமவர் கூறுமிலக்கணம் ஒவ்வா இது அவற்றினுமிக்
கதென்பார் அகஞ்சேந்து' என்றார். தான் அழகுபெறுமாறு திருவடிக்கண்
தங்கியதேயன்றி யியற்கை யழகுவாய்ந்த அவ்வடிக்கு அழகு பெறப்புனைந்த
தன் றென்பார் நூபுரங்கிடப்பினும் என்றார். தேவமாதர்கள், தாம் விரும்பிய
பெற்று முற்றி முத்தியடையும் வண்ணம் இறைவியைப் பல்காற் பூசித்து
வணங்குவராதலின் வணங்கு பு என்றார். சின்னப்பூ ஒருவகைத்தலையணி.
இதனை "சின்னப்பூச்செருகு மென்பூச் சேகரப்போது" எனும் பிறர்
கூற்றாலறிக. இவர் வணங்குந்தோறும் திருவடிக்கண் சிரத்திலுள்ள அச்
சின்னப்பூப் படுதலால் திருவடி சேப்புறு மென்பார் சிவந்து என்றார். நிற
த்தாற் செம்பஞ்சும் மென்மையான் அநிச்சப்போதும் உவமையாயின. இறை
வனது திருவடிகூறி யீண்டு இடைகூறினர்; இவையிரண்டும் நிக்ரகத்தானே
யநுக்ரகமுஞ்செய்த வெனக்குறித்தற்கென்க, எவ்வாறெனின் புலிமுகனையும்

தாருகவநத்தவர் ஏவிய அரவுகளையுஞ் செருக்கடக்கி யானைக்கண் போர்வையாகவுங் கச்சாகவும் உடுத்தும் அசைத்தும் அநுக்ரகஞ்செய்த காரணத்தாலென்க. உலகமீன்ற திருவுதரமாதலின் அதனைக்குறிப்பித்தற்கு அரத்தஆடை எனவும், அங்ஙனமீன்ற வுலகங்கள் கணக்கிற் கடங்கா என்பார் பன்மணிக் கோவைகொண்ட இரங்குமணி மேகலை எனவுங் கூறினார். அரவுருக்கொண்ட இராக்கதன் என்பார் செய்கணரவு எ-ம, கச்சபத்தினுருவும் பன்றியுருவுங்கொண்ட விஷ்ணுமூர்த்தி யென்பார் செங்கணரவும் ... கேழற்கோடும் என்றார். இறைவன் சர்வசங்காரத்திறந்த விண்டு முதலியோருடலின் கங்காளமுதலியவற்றை மாலையாகக்கொள்ளுதலின் வீழ்திரளக்கென்றார். இறைவி, யுலமெலாமீன்றும் பெண்மக்கள் தாம் குழவியீன்றகாலத்து முலைமுதலிய அமுதத்தின்பெருக்காலும் குழவியீர்த்தருந்தலாலும்தளர்தல்போல இது தளராதது என்பார் உலகேழீன்றும்... தளரா என்றார். சூடாமாலை, தலைமாலையெனினுமாம். சூடாமாலையாவது மற்றத் தேவர் எவர்களும் விரும்பினும் கிடையாத பலவிண்டுக்கள் பிரமர் ருத்திரர்களின் என்பு மாலையென்க. வலப்பாற் றிருக்கரமிடப் பாற்றிருமுலை தைவந்து வருடுதலாவது, இறைவன் இறைவியைக்கலந்து நிற்பினல்லது உலகஞ்சேட்டியாவென்பது கருதி இஃது, சிவத்தினும் சத்திவேறு எனக்குறிப்பார் மதத்தைமறுத்தற்பொருட்டு, சிவத்திற்சத்திவேறன்று ஒன்றே எனுந்துணிபு அறிவித்தற்கு எழுந்ததென்க. இதனை "சத்திதான் வேறேவென்னில் தானொன்றே" என்பதானும் "சிவன் சத்திதன்னை யீன்றும்" என்பதானும் அறிக. இது இறைவனது பாதாதிகேசாந்தம் அடிகள் மனத்திடத்துப் பாவிக்கும் சகள பாவனையைச் சிந்திக்குந்தோறும் ஆங்குத்தோன்றும் திருஉறுப்பின் உள்ள திருவாபரணங்கள் மனத்தைக்கவர்தலால் உண்டாம் ஆனந்த மேலீட்டால் எடுத்துக்கூறியதாம் இதனை அர்த்தநாரீச்சுரத் திருக்கோலமென்ப.

நேரிசை வெண்பா.

பொருளுங் குலனும் புகழுந் திறனு
மருளுமறிவு மனைத்து-மொருவர்
கருதாவென் பார்க்குங் கறைமிடற்றாய் தொல்லை
மருதாவென்பார்க்கு வரும். (உ)

(இ-ள்.) ஒருவர்கருதா - ஒருவரும் அணிய எண்ணாத, என்பு ஆர்க்கும்-எலும்புமாலையை அணியும், கறை மிடற்றாய் - கண்டத்தின்கண் விஷக் கறையையுடையானே, பொருளும் உலகத்திற்சிறந்தபொருள்களும், குலனும்-உயர்குலமும், புகழும் - கீர்த்தியும், திறனும் - தேகவன்மையும், அருளும் - உயிர்களிடத்தன்பும், அறிவும் - நல்லறிவும், அனைத்தும் - ஆகிய இவைமுழுதும், தொல்லை-பழைமையாகிய, மருதா - திருவிடைமருதூரென்னும் திருப்பதியை இடமாகக்கொண்டானே, என்பார்க்கு-என்று துதிப்பார்க்கு, வரும்-வேண்டாமலே வந்துசேரும், எ - று.

(கு - ரை.) உலகத்துப் பல்லாராலும் மதிக்கப்படுவோன் தான் அவர் மதிக்க படுவதற்குக்காரணமாகிய பொருளைப் பெற்றிலானாயின் அவரான் நன்கு மதிக்கப்படானாதலினானும், "வடுவிலாவையத்து மன்னியமூன்றனுள் நடுவணதெய்த விருதலையுமெய்தும்" எனப்பிறரும், அறம் பொருளின்பம் எனும்புருடார்த்தங்கள் நான்கனும் பின்னதையும் மனமும் செல்லாநிலைமைத்தாகிய வீட்டினை யொழித்து நுகரப்படுவனவாகிய ஏனைய மூன்றனுள் நடுவணதாகிய பொருள்பெற்றிலனாயின் செம்மையுறுவனைக்கருதிப் பொருளைமுன்னும், நல்லொழுக்கம், ஆசாரம், அறிவு, முதலியன நற்குலத்தில் உதித்தானுக்கே பெரும்பாலும் உண்டாதல்பற்றிக் குலனை அதற்குப்பின்னும், இவ்வகைப்பொருளைப்பெற்று உயர்குலத்தில் பிறந்தோன் "நீரிற் குமிழ்போன்ற உடம்பாலடையவேண்டிய பயன் புகழாதலின் புகழை யதற்குப்பின்னும், இம் மூன்றையும் பெற்றோன் தேகத்தானும் மனத்தானும் உண்டாய முயற்சித் திறனும் மனத்திறனு பெறானாயின் பயனின்றாதல் பற்றித்திறனை யதற்குப் பின்னரும், இந்நான்கையுமடைந்தோன் உலகத்து உயிர்கள் மாட்டு அருளிலனாயின் தம்மாட்டு மருளிலாது கெடுவனாதலின் அருளை அதன் பின்னும், இவை முழுதுமடைந்தோன் தன்னையுந் தலைவனையு மறிந்து, அருளடைந்து முத்தியுறுவதற்கு நல்லறிவு காரணமாதலின் அறிவை யிறுதிக் கண்ணுங் கூறினார். அனைத்தும் என்பதனகண் உம்மை முற்றும்மை. ஒருவர்கருதாவென்பு என்பது ஒருவர் என்பது, பதத்தால் யுயர்ந்த தேவர்களை. கருதாவென்பு என்பது தரிக்க வெண்ணாத வுயர்ந்த தேவரது தலைமாலையும் என்பு மாலையுமாம். கறைமிடற்றாயென்பது இறைவன் உயிர்களிடத்து அன்புடைமை தெரிவித்தற்குக் கூறினார். மேற்கூறிய செல்வங்கள் முழுதும் சிவார்ச்சனை செய்வார்க்குத் தாமேவந்தெய்தும் என்பது இச்செய்யுளின் கருத்து.

கட்டளைக்கலித்துறை.

வருந்தே னிறந்தும் பிறந்து மயக்கும் புலன் வழிபோய்ப்
பொருந்தே னரகிற் புகுகின்றி லேன்புகழ் மாமருதிற்
பெருந்தேன் முகந்துகொண் டுண்டு பிறிதொன்றி லாசையின்றி
யிருந்தே னினிச்சென் றிரவே னொருவரை யாதொன்றுமே, (௩)

(இ - ள்.) இறந்தும் பிறந்தும் - செத்துந் தோன்றியும், வருந்தேன் - வருத்தமுறேன், மயக்கம் - மனத்தை மயக்குகின்ற, புலன்வழிபோய்-ஐம் புலன்கள் வழியே சென்று, பொருந்தேன்-அவற்றி லழுந்தேன், நரகில்-அப் பொருந்துதலாலுண்டாகியபாபத்தினால்நரகத்தின்கண், புகுகின்றிலேன்-போகேன், புகழ்-பல்லோராலும் புகழப்பட்ட, மாமருதில்-புகழ்பெற்ற திருவிடைமருதில் எழுந்தருளியுள்ள, பெருந்தேன் - உயர்வாகிய தேனினை, முகந்து கொண்டு - கையால் மொண்டுகொண்டு, உண்டு - ஐம்புலன்களுந் களிக்க நிறையவாரியுண்டு, பிறிதொன்றில் - (உலகத்துப்பொருள்கள் பலவற்றிலும்) வேறொன்றில், ஆசையின்றி-அவாவில்லாமல், இருந்தேன் - சும்மாவிருந்தேனாகிய நான், இனி - இனிமேல், ஒருவரை-உலகத்துச் செல்வமமைந்தாரிட

த்து, சென்று என்னிச்சையாற்போய், யாதொன்றும் - யாதொருபொருளை யும், இரவேன் - யாசிக்கேன். எ - று.

(கு - ரை.) தேனுண்பாரும் உண்டுகளிக்கும் வண்டும் ஏனையவும் அறிவு அழிந்து மயங்குதலியல்புபோல, அடியேன் பலபிறவிக்கண் செய்த பதி புண்ணியம், சிறிது சிறிதா ஒன்றிச்சேர்ந்து இடைமருதின் எழுந்தருளி யிருக்கும பெருந்தேனையுண்ணக் கொடுத்த தாதலின் இனி, அத்தேனையுண்டநான் என்னை யடித்தொட்டு மயக்கித்தம் வசப்படுத்தீர்த்துச் செல்லும் ஐம்புலன் வழிச்சென்று ஒருபோதும் மயங்கேன் என்பார் வருந்தேன்...போய், என்றார். வருந்தேன்றெளிவுபற்றி இறந்தகாலத்தாற்கூறினார். புலன்சடமாதலின் அவைமயக்குமோவெனின் அற்றன்று மாயைவழிநின்ற கரணங்கள் சேட்டிக்க அவற்றின்வழி யிந்திரியங் களுநிற்றலின் அங்ஙனங் கூறியதா மென்க. இவ்வாறு பெருந்தேனுண்டதால், அஞ்ஞானிகளுண்டு அதனு னடையும்நரகத்தில் எக்காலு மடையேன் என்பார் பொருந்தேன்...புகுகின்றிலேன் என்றார். மலர் முதலியவற்றிலுள்ள தேன் சிறு செயற்கையன்றி யித் தேன்போல் பிறவிப்பிணியை நீக்கவல்லதன்றென்பார் இதனைப் பெருந்தேன் என்றார் இது பெருந் தேனுதலினிதனின் மிக்க உருசியுள்ளது யாண்டும் எக்காலத்தும் கண்டதின்று உண்டதின்று என்பார் பிறிதொன்றில் ஆசை...இருந்தேன் என்றார். ஒருவற்கு இதனின்மிக்கது இருமையினும் இன்றென்பார் சென்றிரவேன்...ஒன்றுமே யென்றார். தேனுண்டான் ஒருபுலனின்பநுகரச் சிற்றின்பமடைந்து இழப்பன் அங்ஙனமன்றி எல்லாப்புலன்கட்கும் பேரின்பமளித்து அதனிடை மறவாதுவைத்தலி னிறைவனைப் பெருந்தேனென்றார்.

நேரிசையாசிரியப்பா.

ஒன்றியொன் றொன்று சென்றுமுகி றடவி
யாடுகொடி நுடங்கும் பீடுகெழு மாளிகை
தெய்வக் கம்மியர் கைம்முயன் றுவகுத்த
வோவ நூற் செம்மைப் பூவியல்வீதி
குயிலென மொழியு மயிலியற் சாயன்
மான்மாற விழிக்கு மாணுர் செல்வத்
திடைமரு திடங்கொண் டிருந்த வெந்தை
சுடர்மழு வலங்கொண் டிருந்த தோன்ற
லாரணந் தொடராப் பூரண புராண
நாரண னறியாக் காரணக் கடவுள்
சோதிச் சுடரொளி யாதித் தனிப்பொரு
ளேக நாயக யோக நாயக
யானொன் றுணர்த்துவ துளதே யான்முன்
னனந்தலை யுலகத் தனந்த யோனியிற்
பிறந்துழிப் பிறவாது கறங்கெனச் சுழன்றுழீஇத்

தோற்றும் பொழுதி னீற்றுத் துன்பத்
தியாயுறு துயரமு மியானுறு துயரமு
மிறக்கு பொழுதி னறப்பெருந் துன்பமு
நீயல தறிகுநர் யாரோ யதனால்
யா னினிப் பிறத்த லாற்றே னஃதான்
றுற்பவந் துடைத்த னிற்பிடித் தல்லது
பிறிதொரு நெறியி னில்லையந் நெறிக்கு
வேண்டலும் வெறுத்தலு மாண்டொன் றிற்படரா
வுள்ளமொன் றுடைமை வேண்டு மஃதன்றி
யைம்புல னேவ லாணைவழி நின்று
தானல தொன்றைத் தானென நினையு
மிதுவென துள்ள மாதலி னிதுகொடு
நின்னை நினைப்ப தெங்ஙன முன்னுங்
கற்புணை யாகக் கடனீர் நீந்தின
ரெற்பிற ருளரோ விறைவ கற்பங்
கடத்தல் யான் பெறவும் வேண்டுங் கடத்தற்கு
நினைத்தல் யான்பெறவும் வேண்டு நினைத்தற்கு
நெஞ்சுநெறி நிற்கவும் வேண்டு நஞ்சுபொதி
யுறையெயிற் றுரகம் பூண்ட
கறைகெழு மிடற்றெங் கண்ணுத லோயே. (௪)

(இ - ள்.) ஆடுகொடி - ஆடுகின்றகொடிகள், ஒன்றிசொடு ஒன்று-ஒன்றுடன்ஒன்று (மாறுகொண்டு) சென்று - ஆகாயவீதியிற்போய், முகில்தடவி மேகங்களுடன் உராய்ந்து, நுடங்கும் - அசைகின்ற, பீடுகெழு - பெருமை தங்கிய, மாளிகை - உப்பரிகைகளும், தெய்வக்கம்மியர் - தெய்வத் தன்மை தங்கிய சிற்பிகள், கைமுயன்று - கையினால் முயற்சிசெய்து, வகுத்த-செய்த, ஓவநூல் - சிற்பநூற்படி (அமைந்த) செம்மை - சீர்பாட்டினையுடைய, பூ இயல் - அழகுதங்கிய, வீதி - தெருக்களையும்; குயிலென-குயில்போல, மொழியும் - பேசுகின்ற, மயில் இயல்-மயில்போலும் இலக்கணம் வாய்ந்த, சாயல்-சாயலையும், மான் - மானனது, மாற - மாறுகொள்ள, விழிக்கும் - நோக்குகின்ற, மாணர் பெண்கள் நெருங்கிய, செல்வத்து - செல்வத் தினையுமுடைய, இடைமருது - திருவிடை மருதூரை, இடங்கொண்டு - திருப்பதி யாகக்கொண்டு, இருந்த-எழுந்தருளியிருந்த, எந்தை - என்தந்தையானனே, சுடர்மழு-ஒளிதங்கிய மழுவாயுதத்தை, வலங்கொண்டிருந்த - வலப்பாகமாகப் பெற்றிருந்த, தோன்றல் - பெருமையிற்சிறந்தோனே, ஆரணந்தொடரா - வேதங்களால் தொடரவொண்ணாத, பூரண - பரிபூரணனே, புராண - பழமையானனே, நாரணனறியா - விஷ்ணுமூர்த்தியால் அறியப்பெறாத, காரணக்கடவுள்.

முதற்காரணமான கடவுளே, சோதிச்சுடரொளி - பிரகாசந்தங்கிய சுடரொளிப்போன்றானே; ஆதித்த னிப்பொருள் - முதன்மையாகிய வொப்பற்றபொருளே, ஏகநாயக - தனக்கு மேல்நாயகமில்லா ஒப்பற்ற நாயகனே, யோகநாயக - யோகத்தால் அறியப்பட்டவனே, யான் ஒன்று உணர்த்துவது உளது - அடியேன் தேவரீர் சந்நிதிக்கண்முறையிட்டு உணர்த்துவதாகிய ஓர் முறைப்பாடு உளது (அஃதென்னெனின்) யான் - நான், முன் - முன்பு, நனந்தலை - பரந்த, உலகத்து-பூமியில், அனந்தயோனியில் - பலவகைப்பிறப்பில், பிறந்துழி - பிறந்தகாலத்தும், பிறவாது - பிறவாமல், கறங்கென - காற்றாடியைப்போல, சுழன்றுழிஇ - அலைந்தகாலத்தும், தோற்றும்பொழுதின் - பிறவியெடுத்தபோது, ஈற்றுத்துன்பத்து - பிறத்தலால் உண்டாய துன்பத்தை, தாய் - தாயானவள், உறு - அடைகின்ற, துயரமும் - துக்கமும், யான்-அவள்வயிற்றி லிருக்குமடியேன், உறுதுயரம் - அடையுந் துக்கமும், இறக்கும்பொழுதின் - பிறவிநீங்கி மரணமடையுங்காலத்து, அறப்பெருந் துன்பமும்-(உண்டாம்) மிக்கத்துன்பத்தினையும், நீயலது - தேவரீரல்லாமல், அறிகுநர்-அறியவல்லவர்கள், யாரே-யாவர், அதனால்-அக்காரணத்தால், யான்-அடியேன், இனி-இனிமேல், பிறத்தலாற்றேன்-பூமியிற்பிறத்தலைச்சகிக்கமாட்டேன் ஆஃதான்று - அஃதன்றி, உற்பவந்துடைத்தல்-பிறப்பினைப்போக்கல், நிற்பிடித்தல்லது - தேவரீரை உறுதியாகப் பற்றியல்லாது, பிறிதொருநெறியின் - வேறொருவழியால், இல்லை - முடியாதாம். அந்நெறிக்கு - உன்னைக் கொள்ளும் அவ்வுபாயத்திற்கு, வேண்டலும் - பொருளிடத்து விருப்பும், வெறுத்தலும்-வெறுப்புறுதலும், ஆண்டு ஒன்றில் - அவ்விடத்து ஒருபொருட்கண், படரா-செல்லாத, உள்ளம் ஒன்று-பற்றற்ற ஓர் உள்ளத்தினை, உடைமைவேண்டும்-பெறுதல்வேண்டும், அஃதன்றி-அஃதல்லாமல், ஐம்புலன் - பஞ்சேந்திரியங்களின், ஏவல் - ஏவுதலினாலாகும், ஆணைவழிநின்று - கட்டளைவழிநின்று தானலது ஒன்றை - தன்னின் வேறாயதொன்றை, தான் என நினையும்-அது தான் என்று நினைக்கின்ற, இது - இத்தன்மை, எனதுள்ளம் - என்னுடைய உள்ளச்செயலாம், ஆதலின் - ஆதலால், இதுகொடு - இம்மனத்தால், நின்னை நினைப்பது - தேவரீரை நினைப்பது, எங்ஙனம் - எவ்வகை, முன்னம்-முன்பு, சற்புணையாக - கல்லைத் தெப்பமாகக்கொண்டு, கடல்நீர் நீந்தினர் - கடல்நீரை நீந்திச்சென்றோர், என்பிறர் - என்னைப்போலும் பிறர், உளரோ - உண்டோ, இறைவ - தலைவனே, கற்பங்கடத்தல் - அனேகம் ஊழிகளாகப் பிறத்தலையான் கடக்குதல், பெறவும் வேண்டும்-யான்பெறல்வேண்டும், கடத்தற்கு அக்கற்பத்தைத்தாண்டுதற்கு, நினைத்தல்-தேவரீரைத்தியானித்தல், யான்பெறவும் - அடியேன் அடையவும், வேண்டும் - வேண்டும், நினைத்தற்கு - அவ்வகைத்தேவரீரைத் தியானித்தற்கு, நெஞ்சு - அடியேன் மனம், நெறி - நன்னெறிக்கண், நிற்கவும்வேண்டும் - (உறைத்து ஒருநெறிக்கண்) நிற்கவும்வேண்டும். நஞ்சுபொதி - விஷம் நிறைந்த, உறையெயிறு - நீண்டபற்களையுடைய, உரகம்-அரவத்தினை, பூண்ட - அணியாகக்கொண்ட, கறைகெழு - விஷக்கறைதங்கிய, மிடறு - கண்டத்தினையுடைய, எம் கண்ணுதலோயே-எமது நெற்றிக்கண்ணையுடைய சிவமூர்த்தியே. எ - று.

(கு - ரை.) கொடிநுடங்கும் மாளிகையென்றதனுன் பெருஞ்செல்வமுடைமையும், ஒவநூற்...வீதி, யென்றதனுன அதின்வதிதல், சூற்றம்பலவும் போக்கெலந்தரும் என்பதும் பெறப்பட்டன. குயிலெனமொழி, மயிலியறசாயன், மாறெனுடுபொருதகண் என்றவதனுன், உத்தமவிலக்கண மமைந்த அரிவையர் சூழ்ந்தநாடு என்பது கூறப்பட்டது. தனக்கெனச் சுவதந்தரமில்லாப் புத்திரன் ஒருவன், தனக்கு வேண்டியவைகளைத் தந்தையின் மாட்டு விரும்பிக்குறையைத்தல் போல் அடிப்பட்ட பிறவிகளில் மொத்துண்ட வருத்தத்தான் தந்தையினுமிக்குத் தனயராகிய ஆன்மாக்களிடத்து அருள் சுரந்தளிக்குமிறைவனை வேண்டித்தம் குறைநயத்தலின் எந்தையென்றூர். தந்தையே யாயினும் தீமை செய்யுந் தனயரையொறுத்து நல்வழிப்படுத்துமவரைப்போல இறைவனும் ஆணவாதிகளிலழுந்திக்கிடக்கும் ஆன்மாக்களைப் பின்னுங்கன்மங்கூட்டியொறுத்து நல்வழிப்படுத்துவான் என்பார் சுடர்மழுவலங்கொண்டிருந்த தோன்றல் என்றூர். எங்குமுற்ற சர்வபரிபூரணனுயினும் மாயாதோற்றத்தனவாகிய வேதத்தாலும் அறியப்படான் என்பார் ஆரணந்தொடராப்பூரண என்றூர். யானென்றுணர்த்துவ துளது என்பதினுல் உளது என்பதற்கு உண்டு எனப்பொருள்கூறுதலேயன்றி அடியேன் கூறுவதுசத்தியம் என்னினுமாம். யோனி யெனப்பொதுப்படக் கூறியதனுனே தாவர சங்கமங்களிரண்டுமாம். ஆன்மா தான் முன்பிருந்ததேகத்தை விட்டுப்போய்க்கன்மத்திற் கீடாகச்சநிக்கு மிடத்துடனே புதிப்பினு முதிக்கும் அன்றிக் கற்போலிருந்து சில நாள்சென்று சரமெடுக்கினு மெடுக்கு மாதலின் அதைநோக்கிப் பிறந்துழி... பிறவாது கறங்கெனச் சுழன்றுழீ இயென்றூர். இதனை "உடல் விடாயோனி பற்றியுதிப்பினுமுதிக்கு மொன்றிற்படர்வுறு துறும்பாவத்தாற் பாடணம் போற்கிடந்து, கடனதாங்காலஞ் சென்றூற் கடுநரகதனில் வீழ்ந்தங், கிடருறுமுருவங்கன்மத் தளவினிலெடுக்குமன்றே" என்றதிருவாக்காலறிக. ஆன்மாக்களிறப்புப் பிறப்புக் களாற்படுந்துயரம் அவ்வநுபவிக்கு மான்மாவும் கடவுளுமேயறிவரன்றி வேற்றூரறியா ராதலின் தோற்றும்...நீயலைதறிகுநர்யாரே என்றூர். இதனை " கருப்பாசய மேகட்ட மதாமதனிலதிகங்கடுகாலும், முருக்கியிடவே மோகமுற முன்னைச்செயலு மங்கிலையே, மரிக்கவாலைக்கரும் பெனவே யோனிவழியின் வலிதொலைய, நெருக்கப்பட்டு நிலமிசையே தோன்று முயிருநிலையுடனே" எ - ம், "பரணமாகிய பெண்டிருஞ் சுற்றமும் பண்டுதெங்கையிற்றந்த, இரணமானவை கொண்டிட விவரைவிட்டியம்படாதிவணேகும், மரணவேதனையாவரா லறியலாமயங்கியைம் புலனந்தக், கரணமியாவையுங் கலங்கிடவருந்துயர் கடவுளே யறிகிற்பான்" என்பனவற்றூலறிக. இவ்வகைத்துன்ப முடையதாதலினிதனை நான் பொறேனென்பார் யானினிப்பிறத்தல் ஆற்றேன் என்றூர். பிறவிநீங்கவேண்டின், தேவரீர் திருவடியைச் சிக்கெனப்பிடித்தலன்றி மற்றூர் வழியின்றென்பார்நிற்பிடித்தல்லதென்றூர். அங்ஙனம் திருவடிபற்றுக் கொள்ளினும் விருப்பு வெறுபபற்றவுள்ள முடையனுய்ப் புறத்திற் செல்லாமனம் வேண்டுமென்பார் உள்ள மொன்றுடைமை வேண்டும் என்றூர். என துள்ளமிந்திரியங்களின் வயப்பட்டு அவற்றின் வழியொழுகிப் பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் பெற்றித்

தாதலினிதனைச்சாதனமாக் கொண்டு உன்னைநினைத்தல் அரிது என்பார் "ஐம்புலன...நின்னை நினைப்ப தெங்ஙனம் என்றார். இது, அடிகள் ஜநநமரண வேதனைகளையும், பஞ்சேந்திரியச் செயல்களையும், மனத்தின் செய்கைகளையுங் கண்டஞ்சிய அடிகள்,இறைவனை என்சஞ்சலமனம் சலனமிலாது நின்று தேவரீர்திருவடியைத் தியானிக்க அருள்புரிக எனவேண்டியதாம். என்று,என் பதில் னகரம் வலிந்து நின்றது.

நேரிசை வெண்பா.

கண்ணென்று நந்தமக்கோர் காப்பென்றுங் கற்றிருக்கு
மெண்ணென்று மூலவெழுத்தென்று—மொண்ணனை
மருதவப் பாவென்றுமுனை வாழ்த்தாரேன் மற்றுங்
கருதவப்பா லுண்டோ கதி. (ரு)

(இ - ள்.) கண் என்றும் - தமக்குக்கண் போல்வான் என்றும், நம்தமக்கு, நமக்கு, ஓர்காப்புஎன்றும் - ஒப்பற்றகாவலாவான் என்றும், கற்று இருக்கும் - நூல்களால் கற்று நிறைந்திருக்கும், எண் என்றும் - அளவைப்பிரமாணமாவான் என்றும், மூலஎழுத்து என்றும் - எழுத்துக்களில் முதன்மையானவனென்றும், மருத அப்பாஎன்றும் - திருவிடைமருதூரி லெழுந்தருளிய அப்பனே என்றும், உனை - தேவரீரை, வாழ்த்தாரேல் - வாழ்த்திப்பயனடையாராயின்,மற்றும் ஒண்ணை - இதைவிட்டு வேறொருபொருளைப்பொருளாக, கருத - நினைக்க, அப்பால் கதிஉண்டோ - அப்பால் நற்கதியுளதாகுமோ (ஆகாது) எ - று.

(கு றை.) உறுப்புகள் பலவற்றினும் சிறந்தது உத்தமாங்கமாகிய சிரம் அதிலும்மிக்கது நோக்கமாதலினானும், அது உள்ளத்துணர்ச்சியைத் தன்வாயிலாகப் புறத்துத் தெரிவிப்பதாதலினானும், இறைவன் தன் மீது கருணை கொண்டு ஆட்கொண்டதைதெரித்தது திருநோக்கேயாதலினானும் கண் எனவும், அங்ஙனம்கருணைக்கண் கொண்ட அருள்வள்ளல் எம்மையினும் அவனிடத்து அனபுளனாய் உணவாதிகளை யருத்திக்காக்குந்தாய் போல் எக்காலத்தும் காத்துநிற்றலின் நந்தமக்கோர் காப்பென்றும், அளவைநூல் கற்றுவல்லராய் அதினால் அளந்து உத்தியால் தெளிந்து பூர்வபக்ஷ சித்தாந்தஞ் செய்து தேறிபபொருளிடத்து உண்டாம் துணிபொருளாதலின் எண்ணென்றும்,எ-ம் எல்லாவெழுத்துகட்கும் முதல் அகரம் அதற்குமுதல் நாதம் அது தோன்றுதற்கு நிலைக்களமானது சிவசத்தி அச்சத்தி சிவத்து லயப்பட்டது ஆதலின் அந்நாதமுதலாவான் சிவமூர்த்தியே யென்பார் மூலஎழுத்தெனவும்கூறினார். ஒன்று எனுஞ்சொல் ஒண்ணெனமருவி யாகுபெயராய் வேற்றுத் தேவரையுணர்த்திநின்றது. கண்ணும் காப்பும் எழுத்தும் இறைவனுடன் ஒப்பிக்கப்படாப் பொருள்களாயினும் அன்பின் மிகுதியால் உலகத்துச் சிறந்த அப்பொருள்களை எடுத்துக் கூறினார். எல்லாப்பொருள்கட்கும் தலைவனாயும் எல்லாப்பொருள்கட்கும் பிறப்பிடமாயும்நிற்றலான் அப்பாஎன்றார்.இவ்வகை அநந்தகல்யாண குணகணனைவிட்டுப் புறத்து வேறொரு தேவை முத்தி விரும்பி நோற்பார் நோன்புவாளா வீணும் என்பார் கருதவப்பா லுண்டோகதி யென்றார்.

கட்டளைக்கலித்துறை.

கதியா வதுபிறி தியாதொன் றுமில்லை களேபரத்தின்
பொதியா வதுசுமந் தால்விழப் போமிது போனபின்னர்
விதியா மெனச்சிலர் நோவதல் லாலிதை வேண்டுநர்யார்
மதியா வதுமரு தன்கழ லேசென்று வாழ்த்துவதே. (௬௮)

(இ - ள்.) கதியாவது - அடையத்தகுந்த பொருளாவது, பிறிதுயாதொன்றும்-(உலகநாதனைய உன்னையன்றி) வேறு ஒன்றும், இல்லை-கிடையாதாம், களேபரத்தின் பொதியாவது - உடலின் சுமையாவது, சுமந்தால் - (இது கொண்ட ஆயுளின் அளவுவரை) சுமந்திருக்கப் பெறின், விழப்போம் - வீழ்ந்து அழியும், இதுபோனபின்னர் - இவ்வுடல் நீங்கியபின், விதியாம் என - விதியாலிவ்வுடல்நீங்கியதுஎன்று, சிலர் - உலகத்தவரிற்சிலர், நோவது அல்லால் - வருந்துதலல்லாமல், இதைவேண்டுநர் - இவ்வுடலை விரும்புவோர், யார் - யாவர், (ஆதலால்) மதியாவது - நல்லறிவாவது, மருதன் - அவ்வுடல் நீங்குமுன் மருதவாணனது, கழல் - திருவடியை, சென்று - அடைந்து, வழ்த்துவது - துதித்தலேயாம் எ - று.

(கு - ரை.) உலகெலாமழிந்த சர்வசங்கார காலத்தும் இறைவனையன்றி வேறு பொருள்நிலைத்திருத்தல் கிடையாதாதலின் கதியாவது...இல்லை எனவும், இறைவனையன்றிவேறு தேவர்பலன்றர வல்லரல்லர் என்பார் பிறிதுயா தொன்றும் என அஃறிணைப்படுத்திக் கூறினர். இஃது ஏனைத்தேவர்களின் மாட்டாமையு மிறைவனது அநந்தசத்தியும் அறிவுறுத்தலாம். எலும்பும் தோலு மிறைச்சிமுதலியதாகுதற்கு எலும்பு முதற்காரணமாதலின் னிது சேர்ந்த சுமை தன்னின்வேறாய்ச் சூக்குமமாய் நோக்குவார்க்குச் சுமையாய்த் தோற்றுதலால் பொதி எ - ம், இப்பொதி, இறைவனிட்ட ஆயுட்பரிமாணம் வரைப் போகங்களையுண்டு அது சழிந்தவாறே நீங்குதலின் விழப்போம், எ - ம், அவ்வாறு உடலைவிட்டுயிர் நீங்கிய பின்னர் உகலத்திருந்தான் கிடந்தானின்றுநின்றன் கேளலறச் சென்றான் என்று வருந்துவோர் சிலரேயன்றி அவ்வுடலை விரும்பிக்கொள்வோர் ஒருவரு மிலராதலால் இதை...யார் - எ-ம், ஆதலால் நன்மையாகிய முத்தியினைவிரும்பும் மோக்ஷகாமியாகியவொருவன் அவனிடைப்புக்குத்தங்குறை கூறியிரந்து துதிக்கின் நல்லறிவுநாளுந் தலைப்பட்டுப் பிறப்பினை வென்று திருவடியடையப் பெறுவனாதலின், மதியாவது.. வாழ்த்துவதே என்றுங் கூறினர்.

இணைக்குறளாசிரியப்பா.

வாழ்ந்தன மென்று தாழ்ந்தவர்க் குதவாது
தன்னுயிர்க் கிரங்கி மன்னுயிர்க்கிரங்கா
துண்டிப் பொருட்டாற் கண்டன வெஃகி
யவியடு நர்க்குச் சுவைபல பகர்ந்தே
யாரா வுண்டி யயின்றன ராகித்

தூராக் குழியைத் தூர்த்துப் பாரா
விழுப்பமுங் குலனு மொழுக்கமுங் கல்வியுந்
தன்னிற் சிறந்த நன்மூ தாளரைக்
கூஉய்முன் னின்றுதன் னேவல் கேட்குஞ்
சிறாஅர்த்தொகுதியு ளுறாஅப் பேசியும்
பொய்யொடு புன்மைதன் புல்லர்க்குப் புகன்று
மெய்யு மானமு மேன்மையு மொரீஇத்
தன்னைத் தேறி முன்னையோர் கொடுத்த
நன்மனைக் கிழத்தி யாகிய வந்நிலைச்
சாவுழிச் சாஅந் தகைய ளாயினு
மேவுழி மேவல் செல்லாது காவலொடு
கொண்டோ ளொருத்தியுண் டிவேட் டிருப்ப
வெள்ளுக் கெண்ணெய் போலத்தள் ளாது
பொருளி னளவைக்குப் போகம்விற் றுண்ணு
மருளின் மடந்தைய ராகந் தோய்ந்து
மாற்றல் செல்லாது வேற்றோர் மனைவயிற்
கற்புடை மடந்தையர் பொற்பு நனி கேட்டுப்
பிழைவழி பாராது நுழைவழி நோக்கியு
நச்சி வந்த நல்கூர் மாந்தர் தம்
விச்சையிற் படைத்த வெவ்வேறு காட்சியி
னகமலர்ந் தீவார் போல முகமலர்ந்
தினிது மொழிந்தாங் குதவுத லின்றி
நாளு நாளு நாள்பல கழித்தவர்
தாளி னாற்றலுந் தவிர்த்துக் கேளிகழ்ந்
திகழும் பரமு மில்லை யென்று
பயமின் றொழுகிப் பட்டிமை பயிற்றி
மின்னி னனையதன் செல்வத்தை விரும்பித்
தன்னையு மொருவ ராக வுன்னு
மேனையோர் வாழ்வும் வாழ்க்கையு நனைமலர்ந்
தியோசனை கமழு முற்பல வாவியிற்
பாசடைப் பரப்பிற் பானிற வன்னம்
பார்ப்புடன் வெருவப் பகுவாய் வாளைகள்
போர்த்தொழில் புரியும் பொருகா விரியு
மருதமுஞ் சூழ்ந்தமருத வாண
சுருதியுந் தொடராச் சுருதி நாயக

பத்தருக் கெய்ப்பினில் வைப்பென வுதவு
முத்தித் தாள மூவா முதல்வ நின்
றிருவடி பிடித்து வெருவரல் விட்டு
மக்களு மனைவியு மொக்கலுந் திருவும்
பொருளென நினையாதுன் னருளினை நினைந்
திந்திரச் செல்வமு மெட்டுச் சித்தியும்
வந்துழி வந்துழி மறுத்தன ரொதுங்கிச்
சின்னச் சீரை துன்னற் கோவண
முறுதற் கொளொடுபெறுவது புனைந்து
சிதவ லோடொன் றுதவுழி யெடுத்தாங்
கிடுவோ ருளரெனி னிலையினின் றயின்று
படுதரைப் பாயலிற் பள்ளிமேவி
யோவாத் தகவெனு மரிவையைத் தழீஇ
மகவெனப் பல்லுயி ரனைத்தையு மொக்கப்
பார்க்குநின்.
செல்வக் கடவுட் டொண்டர் வாழ்வும்
பற்றிப் பார்க்கி னுற்றநா யேற்குக்
குளப்படி நீரு மளப்பருந் தன்மைப்
பிரளயச் சலதியு மிருவகைப் பொருளு
மொப்பினு மொவ்வாத் துப்பிற் றுதவி
னின்சீ ரடியார் தஞ்சீ ரடியார்க்
கடிமை பூண்டு நெடுநாட் பழகி
முடலை யாக்கையொடு புடைபட் டொழுகியவர்
காற்றலை யேவலென் றனைத்தலை யேற்றுக்
கண்டது காணி னல்லதொன்
றுண்டோ மற்றெனக் குள்ளது பிறிதே, (எ)

(இ - ள்.) வாழ்ந்தனம் என்று - நாம் செல்வத்துடன் வாழ்ந்திருக்கின்றோம் என்று எண்ணி, தாழ்ந்தவர்க்கு - தம்மைவணங்கிக்குறை கூறியிரந்தார்க்கு, உதவாது - இயன்றதைத் தந்துதவாது, தன் உயிர்க்கு - தன்னுயிரைப்பாதுகாத்தற் பொருட்டு, இரங்கி-இரக்கமுற்று அன்னபானாதிகளைக்காலந்தவறாதுதவிபுரிந்து, மன் உயிர்க்கு - தனக்கு அன்னியமான வேற்றுயிர்களுக்கு, இரங்காது - அவை பசித்திருக்கக் காணினும இரக்கமுறாது, உண்டிப் பொருட்டால் - உணவாதிகளைச் சேகரித்தற் பொருட்டாக, கண்டன - தன் கண்ணாற்கண்ட பிறர்பொருள்களையும், பிறவுயிர்களையும், வெஃகி - அபகரிக்கவும்சொன்று அருந்தவும் விரும்பி, அவி அடுநர்க்கு - சமைப்போராகிய ஏவலாளர்க்கு, சுவைபலபகர்து - பலவாயவுரிசை தரத்தக்கவுணவுகளைச் சமை

க்கட்டளை யிட்டு, ஆரா உண்டி - தெவிட்டாத உணவாதிகளை, அயின்றனர் ஆகி - உண்டு, ஆரா - எதுஉண்ணினும் நிரம்பாத, குழியை - வயிற்றை, ஆர்த்துப்பாரா - உணவாதிகளால் நிரப்பி நிறையவுண்டோம் எனப்பார்த்து, விழுப்பமும் - சிறப்பும், குலனும்-உயர் பிறப்பும், ஒழுக்கமும் - நல்லொழுக்கமும், கல்வியும் - வித்தையும், தன்னின்-தன்னைக்காட்டினும், சிறந்த - சிறந்துள்ள, நல்மூதாளரை - நல்லறிவுளாரை, கூஉய் - அழைத்து, முன்னின்று - தனக்கு எதிரிலிருந்து, தன்னேவல் - தான் ஏவினதொழிலை, கேட்கும் - கேட்டு அவ்வவை செய்கின்ற, சிறுஅர்த்தொகுதியின் - சிறுவர் கூட்டம்போல, உருஅ - காத்திருக்கச் செய்து, பேசியும் - அவரொடுபேசியும், பொய்யொடு புன்மை - பொய்ச்சொல்லினையும் அற்பமொழிகளையும், தன்புல்லர்க்கு - தன்னுடனிருக்கும் அற்பர்களுக்கு, புகன்றும் - கூறியும், மெய்யும் - சத்தியத்தினையும், மானமும் - மானத்தினையும், மேன்மையும் - சிறப்பினையும், ஒரீஇ - நீங்கி, தன்னைதேறி - தானில்லறம் நடத்துவான் எனத்தேறி, முன்னையோர் மூத்தோர், கொடுத்த - மணஞ்செய்வித்த, நல்மனைக்கிழத்தி - மனைக்குரியாளாகி நல்லமனைவி, ஆகிய அகிலை - (கணவனுக்கு ஏதேனும் துன்பம்) வந்தகாலத்து, சாஅவுழி - உண்டாம் மரணத்தில், சாம்தகையள் ஆயினும் - சாகும் தன்மையுடையாளாயினும், மேவுழி - அவளிடத்துப் புத்ரோற்பத்தியின் பொருட்டுப் புணருங்காலத்து, மேவல் செல்லாது - புணர்ந்திராது, காவலொடு - கற்பாகிய காவலுடன், கொண்டோள் ஒருத்தி - கொண்டவளாகியமனைவி ஒருத்தி, உண்டிவேட்டு - உணவை விரும்பி, இருப்ப - வருந்தியிருக்க, எள்ளுக்கு எண்ணெய் போல - எள்ளுக்குண்டாம் எண்ணெயினளவுபோல, தள்ளாது - (இளையோராயினும் பிணியாளராயினும்) நீக்காது, பொருளின் அளவைக்கு - பொருளினளவிற்குத்தக்கபடி, போகம் விற்று - போகத்தினைப் பிறர் அநுபவிக்க விற்று, உணும் - அதனான் வரும்பொருளைக்கொண்டு சீவிக்கும், அருள்இல் - கருணை சிறிதும் இல்லாத, மடந்தையர் - வேசையரது, ஆகம் தோய்தலும் - உடலைத்தழுவியும், ஆற்றல் செல்லாது - காமத்திற்காற்றாது, வேற்றோர் - அயலவரது, மனைவயின்-வீட்டின் கணுள்ள, கற்புடைமடந்தையர் - கற்புள்ளபெண்களின். பொற்பு நனிகேட்டு - அழகைபிறர்மிகக் கூறக்கேட்டு, பிழைவழிபாராது - (அவளைவிரும்பிச் செல்லின்) பிழைவருதலைச்சிறிதும் ஆராயாது, நுழைவழிநோக்கியும் - பிறர்தன் களவொழுக்கம் அறியாது நுழைந்துபோம் வழியை யாராய்ந்தும், நச்சிவந்த - தன்னைவிரும்பிப்பொருள் பெறவந்த, நல்கூர்மாந்தர்-வறியவர்கள், தம்விச்சையின் - தமது கல்வியறிவினால், படைத்த-அடைந்த, வேறுவேறு-பலவிதப்பட்ட, காட்சியின் - அறிவிற்கு, அகமலர்ந்து - மனம்களித்து, ஈவார்போல - கொடுக்கும் கொடையாளரைப்போல, முகம்மலர்ந்து - முகமலர்ச்சியடைந்து, இனிது மொழிந்து - களிப்புடன் வார்த்தை கூறி, ஆங்கு உதவுதலின்றி-அவ்விடத்து அவர்க்கு ஒன்றும்தராமல், நாளும் நாளும் - நாள்தோறும், நாள்பலகழித்து - நாள்களை வீணாகக்கழித்து, அவர்தாளின் ஆற்றலும்-அவரதுகாலின்வலிமையும் தவிர்த்து - கெடுத்து, கேள் இகழ்ந்து - சுற்றத்தவர் முதலியோரை இகழ்ந்து, இகமும் - இம்மையின் பயனும், பரமும்-மறுமையின் பயனும், இல்லை

என்று - இலவென்று துணிந்து, பயம் இன்று - பயம் இல்லாமல், ஒழுகி-நடந்து, பட்டிமையயிற்றி பொய்பேசப்பழகி, மின்னின் அனைய-மின்னலையொத்த, தன்செல்வத்தை விரும்பி - தன்பொருளையிச்சித்து, தன்னையும் ஒருவராக - தன்னையும் மனிதரினத்தில் ஒருவராக, உன்னும் - நினைக்கின்ற, ஏனையோர் வாழ்வும் - மற்றவரது வாழ்தலும், வாழ்க்கையும் - வாழ்க்கையும், நனைமலர்ந்து - அரும்பவிழ்ந்து, யோசனை கமழும் - ஒருயோசனைமணம் வீசும், உற்பலம் - நீலோற்பலங்கள் நிறைந்த, வாவியில்-தடாகங்களில், பாசு அடை - பசிய இலைகள்நிறைந்த, பரப்பில் - இடத்தில், பால்நிற அன்னம் - வெண்ணிறத்தினையுடைய அன்னப்புட்கள், பார்ப்புடன் - குஞ்சுகளுடன், வெருவ - பயமடைய, பகுவாய் - பிளந்தவாயினையுடைய, வாளைகள் - வாளைமீன்கள், போர்த்தொழில் புரியும்-சண்டை செய்கின்ற, பொருகாவிரியும்-மோதுகின்ற (அலைகளையுடைய) காவிரியாறும், மருசமும் - மருதநிலமும் சூழப்பெற்ற, மருதவாண - மருதூரில் எழுந்தருளியிருப்போனே, சுருதியும்-வேதங்களும், தொடரா - தொடர்ந்தறியாத, சுருதிநாயக - வேதத்தின் தலைவனே, பத்தருக்கு - அடியவர்க்கு, எய்ப்பினில் - இளைத்தகாலத்தில், வைப்பு என - பண்டாரம் எனும்படி, உதவும் - அருள்புரிகின்ற, முத்தித்தாள - மோக்ஷத்தையே திருப்பதமாகவுடையானே, மூவாமுதல்வ - (நரைதிரை மூப்பால்) கெடாத முதல்வனே, நின்திருவடி - தேவரீருடைய திருவடிகளை, பிடித்து - சிக்கெனப்பிடித்து, வெருவரல்விட்டு - பயத்தினைப்போக்கி, மக்களும் - புத்திரர்களையும், மனைவியும் - பெண்டையும், ஒக்கலும் - சுற்றத்தவரையும், திருவும்-செல்வத்தினையும், பொருள் என நினையாது - பொருளாக எண்ணாமல், உன் அருளினை நினைந்து - தேவரீர் திருவருளையெண்ணி, இந்திரச் செல்வமும் - இந்திரபதத்தாலடையுஞ்செல்வமும், எட்டுச்சித்தியும் - அஷ்டமா சித்தியும், வந்துழி வந்துழி - நேர்ந்தகாலத்து, மறுத்தனர் ஒதுங்கி - தடைசெய்துநீங்கி, சின்னச்சீரை - கிழிந்த ஆடையும், துன்னல் கோவணம் - ஒட்டிட்டுத்தைத்தகோவணமும், அறுதல் கீளொடு - அறுதலோடு கூடிய கீளும், பெறுவது - பெறக்கூடியதை, புனைந்து - தரித்து, சிதவல் ஓடு - ஓட்டையாகிய ஓடு, ஒன்று உதவுழி - ஒன்று அகப்பட்டவிடத்து, எடுத்து - அதனை பிக்ஷாபாத்திரமாகக்கொண்டு, ஆங்கு இடுவோர் - பசிவந்தகாலத்து பிக்ஷையிடுவோர், உளர் எனின் - இருப்பாராயின், நிலையில் நின்று- (அதனைக்கொண்டு உட்காராமல்) நின்றுகொண்டே, அயின்று - (பித்தர்போல) உண்டு, படுதனைப்பாயலில் - பள்ளமாகிய தரையாகிய படுக்கையில், பள்ளிமேவி - படுத்து, ஓவா - ஒழியாத, தகவு எனும் - சாந்தம் என்கின்ற, அரிவையை- மனைவியை, தழீஇ - கூடி, மகவு என - புத்திரரென்று, பல் உயிர் அனைத்தையும்-உலகத்துள்ள சராசரங்கள் முழுதினையும், ஒக்கப்பார்க்கும் - சம திருஷ்டியாக நோக்கும், நின் - தேவரீரது, செல்வம் - அருட்செல்வ மிகுந்த, கடவுள் - தெய்வத்தன்மைதங்கிய, தொண்டர் - அடியவரது, வாழ்வும் - வாழ்க்கையும், பற்றிப்பார்க்கின் - (இவ்விருவகை வாழ்க்கைகளை) ஆராய்ந்து நோக்குங்கால், உற்றநாயேற்கு - எல்லாக் குறைகளுமடைந்த நாயையொத்த எனக்கு, குளப்புஅடி நீரும் - குளம்பினடிக்கணுள்ள நீரும், அளப்ப

அரும் - இவ்வளவினதென்று அளத்தற்கரிய, தன்மை - குணத்தினையுடைய, பிரளயசலதியும் - வெள்ளங்கொண்ட கடலும், இருவகைப்பொருளும் - இவ்விருவகைப்பொருள்களும், ஒப்பினும் - நீரான் ஏகதேச மொத்திருக்கினும், ஒவ்வாத்துப்பிற்று - அளவால் ஒவ்வாதவலியுடைத்து, ஆதலின் - ஆதலால், நின் சீர் அடியார்தம் - தேவரீரது சிறப்புற்ற அடியவர்களின், சீர் அடியார்க்கு - சிறப்புற்ற தொண்டர்களுக்கு, அடிமைபூண்டு - அடிமைத்தொழில் செய்ய ஆட்பட்டு, நெடுநாள் - பல்காலம், பழகி - அவர் குணத்துடன் பழகி, முடைலை யாக்கையொடு - புலால் வீசுகின்ற இத்தேகத்தின், புடைப்பட்டொழுகி - இடைப்பட்டு அதின்வழி நடந்து, அவர் கால் தலை ஏவல் - அத்தொண்டர் காலாலிட்டவேவலினை, என் நாய்த்தலையேற்று - நாயையொத்த என்தலைமீது கொண்டு, கண்டது - அதனாலுண்டானதொன்றை, காணின் அல்லது - பயனாகக்காண்பதன்றி, பிறிது ஒன்று - வேறுஒன்று, உள்ளது - உளதாகஎண்ணப்படுவது, எனக்கு உண்டோ - எனக்கு உளதாகுமோ இன்று, எ - று.

இது - சிவனடியார் வாழ்க்கையையும், பெருஞ்செல்வர் வாழ்க்கையையும் ஆராயுங்கால் குளம்படிநீரும், மகாசமுத்திரத்தையும் ஒப்பிடுதலைப்போல்சிவனடியர் பெருமையே சிறத்தலின் அன்னடியாரடியார்க்கு ஏவல்செய்யும் அஃதொன்றே வேண்டுவனன்றி வேறு விரும்பேன் என்பது கருத்து.

(கு - ரை.) செல்வத்தாற் செருக்கு மிக்குத்தன்னை வந்திரக்கும் வறியவர்க்குதவாதிருத்தலின் வாழ்ந்தனம் எனவும், தானினைத்த யாக்கையனாதலின் அவ்யாக்கையைப் பிணிமுதலிய கௌவாது பாதுகாத்தற்பொருட்டுப் பலதிறப்பட்ட வுண்டிகளையும் மருந்து முதலியவற்றையுமுண்டு காத்துக்கொள்ளுதலின் தன்னுயிர்க்கிரங்கி எ - ம், உண்ணத்தகாத புலால் முதலியனவும்என்பார் கண்டன - எ - ம், இன்னபொருள் என்னுவிற் குரிசை தருமாதலினதனையடுக என உணவாதிகளைச் சமைக்கும் மடைப்பள்ளியர்க்குக் கூறியவர் இடத்தாமுண்டு களித்தலின், சுவைபலபகர்ந்து எ - ம், பிறப்புமுதலிறப்புக் காறும் பலவகைப்பட்ட வுணவாதிகளை நிரம்பவுண்டும் தூராதவயிற்றைப்பெற்றிருத்தலின் தூராக்குழி - எ - ம், பணியப்படும் கல்வியின் மிக்கமூத்தோர் புறங்கடைக்கண் காரணவயத்தால் வந்தாராயினும் அவரை யெதிர்கொண்டு பணியாது செல்வச்செருக்கால் வாய்மதங்கொண்டு அவமதிப்பார் என்பார், உறுஆப்பேசியும், எ-ம, செல்வத்தில்வைத்தபேர்அவாவால் அதனைத்தேடுதற் பொருட்டுப் பொய்யினை மெய்போலவும் மெய்யை வெறும் பொய்யெனவுங் கூறித் தம்மாற் சாதிக்கப்பட்ட பொருளைக் கொள்ளுதலின், பொய்யொடு... புகன்று, எ - ம், பொய்யொடு என்னுமிடத்து ஒடு எண்ணுப் பொருளது. புன்மை, ஆகுபெயர், இவ்வகைபொய்முதலிய கூறுதலின் மெய்மானம்முதலிய கெடுதலின், மெய் ஒரீஇ, எ - ம், இவன். "ஏந்தெழின்மிக்கானிளையானிசைவல்லான் வாய்த்ததேகள்'' என்று இவனுக்கு நன்மனைக்கிழத்தியாக ஒரு கன்னிகையைத் தந்தார் எனபார், தன்னை ... கொடுத்த - எ - ம், "அடிசிற்கினியா ளன்புடையாள் படிசொற்றவழுத பாவை யடிவருடிப்பின்றுங்கி முன்னெழும் பேதையென்பார் நன்மனைக்கிழத்தி - எ - ம், கணவற் குயிர்நீக்கு

துன்பமுதலிய நேர்ந்தகாலத்து என்பார் ஆகிய அந்நிலை - எ - ம், அதனைக் கேட்ட துணையானே யுயிர்விடுங் கற்புடையாள் என்பார், சாவுழி...தகையள், எ - ம், கணவன் மூத்தகாலை புனையிழைமடந்தையை நீராடியபின் னீராறுநாளும் பிரியப்பெறுதலினானும், அது கருவுறுங் காலமாதலினானும் அவ்வகைப்பிரியின் தருமநூலிற் கூறியபாவத்தை யடைந்து பிதுர்க்கு நீர்க்கடன் முதலிய செய்யும் சேயை யிழப்பனாதலின், மேவுழி மேவல்செல்லாது, எ - ம், வேசையர், தனக்கிளையான், பிணியன், விருந்தனாயினும் பொருள்தருவானைத்தள்ளாது பொருளினளவைக்குத் தக்கவாறு போகம்விற்று அவரது கைப்பொருள் வறந்தகாலத்து முன்னைத்தாம் கூறைகொண்டுண்ட நன்றியைமறந்து அவனைத்தாமேயன்றித் தம்மேவல்வழி நிற்போனைக் கொண்டு வெருட்டித் தம்வீட்டின் புறத்துச் செலவிடுத்தலின், எள்ளுநக்கு...அருளின்மடநதை, எனவும். அங்ஙனம் வேசையரனையாது வேற்றோருற்குரிய கற்புடைமடந்தையர் காமரைக்கேட்டு அவனையடைய முயன்று அதனான் வரும் அச்சம், கோக்கொலை, கும்பிக்கே கூர்த்தவினை முதலிய நோக்காது வெளிப்படப்புகின் வரும் ஊறுகளுக்கஞ்சிப்புதவுமுதலிய பார்த்திருந்துபிறர்தன்சளவொழுக்கங் காணுவகை நுழைதலின், கற்புடைமடந்தையர்...நுழைவழிநோக்கியும், எ-ம், இச்செல்வனிடஞ் செல்லின் நமக்கு ஏதேனுங்கிடைக்குமெனவெண்ணிவந்து தமதுகுறைகளைக்கூறித் தமக்குத்தெரிந்த கல்விகளின் வீக்கத்தையவர்களொடுத்துரைத்து அவனை யிந்திரனென்றும் இறைவனென்றும் புகழ்ந்து பாட அதனைக்கேட்டவன் களித்தாற்போல முகமலர்ச்சிகாட்டி நாளை நாளையென்று கூறி யவர் தன்பின் திரிந்து தாளோய்ந்து நின்றுபோதலின், நச்சி,...தாளினாற்றலுந்தவிர்ந்து - எ - ம், தன்னினுமிக்கானின்றெனமற்றச் சுற்றத்தவரையிகழ்தலின், கேளிகழ்ந்து - எ - ம், இம்மையில் நாம் செய்வன செய்யின் மறுமையுளதேல் காண்பாமென, வெண்ணியதீமைகளை யஞ்சாதுசெய்தலின் கேளிகழ்ந்து...பயிற்றி, எ - ம், இச்செல்வம் "நீரிற்சுருட்டு நெடுந்திரைபோலழிதன்மாலைத் தெனவும் தான்கொண்ட உடல் படுமழை மொக்குளிற்பல்காலுந்தோன்றிக் கெடுவதெனவும் உணராது பெருமிதங்கொண்டுநடத்தலின் மின்னின்...எனையோர்வாழ்வும் வாழ்க்கையும், எ-ம், மேற்கூறிய செல்வங்களையும் வாழ்வினையும், நிலையற்றனவென்று சிறிதும் மதியாது தேவரீர் திருவடியே பற்றெனமதித்துக்கடைப்பிடிகொண்டு இந்திராதியர்போகங்களைமறுத்து அரையிற் சீலைசுற்றித் தரையிற் படுத்து உயிரனைத்தையும் ஒக்கநோக்குந்தொண்டர் வாழ்வினையும், ஆராய்ந்துநோக்கின் குளப்படி நீரையும் சலதிநீரையும் ஒப்பிடுதலை யொத்தலின் அவைவேண்டேன் என்பார், நின்திருவடி பிடித்து...தப்பிற்று என்றார். ஆதலின் உன்னடியாரடியார்க்குத் தொண்டு பூண்டொழுகு மடிமைத் திறம் அன்றி வேறொன்றைப் பொருளாகக் காணேன் என்பார், நின்சீரடியார்...பிறிதே" எனவுங்கூறினார்.

நேரிசைவெண்பா.

பிறிந்தே னரகம் பிறவாத வண்ண
மறிந்தே னனங்கவே ளம்பிற் - செறிந்த

பொருதவட்ட விற்பிழைத்துப் போந்தேன் புராணன்
மருத வட்டந் தன்னுளே வந்து. (அ)

(இ-ள்.) புராணன் - (புராணங்களாலும் கூறியளவுபடாத) பழையோனது, மருதவட்டம் தன்உள் - திருவிடை மருதூரில், வந்து - அடியேன் பூர்வபுண்ணியத்தால்வந்து, நரகம் பிழைத்தேன் - (நான் பல பிறவிகளினும் செய்த பாபங்களாலுண்டாம்) நரகத்தினின்றும் நீங்கினேன், பிறவாத வண்ணம் - இனிப் பிறவிகளடையாவகையினையும், அறிந்தேன் - தெரிந்து கொண்டேன், அநங்கவேள் - அங்கமிலியாகு மன்மதன், அம்பில்-அம்புகளால், பொருத-போரிட்ட, செறிந்த-கட்டுகள் நெருங்கிய, வட்டம்-விருத்தமாகிய, வில் பிழைத்து - வில்லிற்குத்தப்பி, போந்தேன் - இவ்விடம் வந்தேன். எ - று.

அடியேன் இடைமருதைத் தரிசித்த துணையானே நரகத்தினையும், பிறவி நீக்கத்தினையும், பெண்ணாசையினையும் நீங்கினேன் என்பது கருத்து.

(கு - ரை.) இடைமருதை யெண்ணி யடையினத் துணையானே செய்த பாவங்களனைத்து மொழிவனுதலின் பிழைத்தேனரகம், எனவும், அங்ஙனம்நரக வொழிவைக்கண்டவாறே மேற்பதத்தை யவாவும் புண்ணியமுண்டா மாதலின் பிறவாவண்ண மறிந்தேன், எ - ம், அப்புண்ணியத்தால் வீடடையப் புகின் மாயையா லொருக்கால் தடைப்பட்டே னாயினும் அதனிற் பிழைத்து வரும் சூழ்ச்சியுங்கற்றுளேன் என்பார் அநங்கவேள் ... போந்தேன் - எ - ம், கூறினார். தெளிவுபற்றி யிறந்தகாலத்தாற் கூறினார். புராணன்-எக்காலு பிறப்பிலியாகும் பழையோன். அன்றிப் புராணங்களு மவன்புகழைப் பாடித்துதிக்கவறியாதவன் என்னினுமாம். செறிந்த எனும் பெயரெச்சம் வில் எனும் பெயர்கொண்டது.

கட்டளைக்கலித்துறை.

வந்திக்கண் டாயடி யாரைக்கண் டான்மற வாதுநெஞ்சே
சிந்திக்கண் டாயரன் செம்பொற் கழறிரு மாமருதைச்
சந்திக்கண் டாயில்லை யாயி னமன்றமர் தாங்கொடுபோ
யுந்திக்கண் டாய்நிர யத்துன்னை வீழ்த்தி யுழக்குவரே. (கூ)

(இ - ள்.) நெஞ்சே-மனமே, அடியாரைக்கண்டால் - சிவனடியவர்களைக் கண்ணாற்காணப்பெறின், மறவாது-மறந்துசெலாது, வந்தி-சிவனெனவெண்ணிவணங்குவாய், அரன்-சிவமூர்த்தியின், செம்பொன்கழல் - சிவந்தபொன் போலுந்திருவடியை, சிந்தி - தியானபாவனை செய்வாய், திருமாமருதை- திருவிடைமருதை, சந்தி - சேர்ந்து தரிசனஞ்செய், இல்லை ஆயின் - இவ்வகை மேற் கூறியசெயல்களைச்செய்யா தொழியின், நமன்தமர் - யமதூதர், உனை- உன்னை, உந்தி - தள்ளி, கொடுபோய் - யமபுரங் கொண்டுபோய், நிரயத்து - நரகத்தில், வீழ்த்தி - விழச்செய்து, உழக்குவர் - துன்பப்படுத்துவர். எ - று காண்டாய் நான்கும் முன்னிலை யசைச்சொற்கள், தாம் - அசை. ஞானமுதிர்ச்சிபெற்று அரனைவழிபட் டொழு கவியலா தெனின் சிவனடியவரையவனெ

னத்தேறி மறவாமலும், அஃதுமியலாதென்னின் அவன் திருவடியைமனத்திலாயினும் அதுவுமியலாது காண் எனின் அவனெழுந்தருளியிருக்குந் திருப்பதிக்கண் சென்று வதிந்தாயினும் புண்ணியம் பெறுக இன்றேல்நரகமடைவாய் என்பதுகருத்து.

(கு - ரை.) சிவனடியவரைச்சிவனெனக்கண்டு அவரடித் தொண்டு பூண்டொழுகினோர் இறைவனடியடைதலிற் பிழையாரென்பது நூற்றுணிபாதலின்வந்திக்கண்டாய்... கண்டால்' என்றார். இதனைக் கலைதலைசூலங்கடுங்கனல் கண்டைகட்டங்கங்கொடி, சிலையிவை யேந்தியவெண்டோட் சிவற்குமனஞ்சொற்செய்கை,நிலைபிழையாது குற்றேவல் செய்தார் குன்றமேருவென்னு மலைபிழையாரென்பராலறிந்தோர் களிம்மாநிலத்தே." எனக்கூறிய அருள்வாக்காலறிக, இடைவிடாது இருக்கினு நிற்கினுதுயிலினும் முயக்கிலும் அவனடியே கண்ணாக மனத்தாற்காணின் பிழையாததொன்று மின்றென்பார் "சிந்தி... கழல், எ-ம், இவைசெய்ய இயலாதாயினத்தலமும் அவனையொக்குமாதலினதனிடை வதியினும் அம்முத்தி யடைதலிற் பிழையாய் என்பார், மாமருதை... சந்திக்கண்டாய், எ-ம், இங்ஙனம் அவனையும் அவன் எழுந்தருளியிருக்குந்தலத்தினையும் அவனடியவர்களையும் வணங்கான், யமபடரா லீர்க்கப்படு நிரயக்குழியிடை வீழ்த்தப் பட்டுத்துன்புறுவனிதிலைய மின்றென்பார், நமன்றமர்... உழக்குவர், எ - ம் கூறினர்.

இணைக்குறளாசிரியப்பா.

உழப்பின் வாரா வுறுதிக ளுளவோ
கழப்பின் வாராக் கையறவுளவோ
அதனால்
நெஞ்சப் புனத்து வஞ்சக் கட்டையை
வேரற வகழ்ந்து போக்கித் தூர்வைசெய்
தன்பெனும் பாத்தி கோலி முன்புற
மெய்யெனு மெருவை விரித்தாங் கையமில்
பத்தித் தனிவித் திட்டு நித்தலு
மார்வத் தெண்ணீர் பாய்ச்சிநேர் நின்று
தடுக்குநர்க் கடங்கா திடுக்கண் செய்யும்
பட்டி யஞ்சினுக் கஞ்சியுட்சென்று
சாந்த வேலி கோலி வாய்ந்தபின்
ஞானப் பெருமுளை நந்தாது முளைத்துக்
கருணை யிளந்தளிர் காட்ட வருகாக்
காமக் குரோதக் களையறக் களைந்து
சேமப் படுத்துழிச் செம்மையி னோங்கி
மெய்ம்மயிர் புளக முகிழ்த்திட் டம்மெனக்

கண்ணீ ரரும்பிக் கடிமலர் மலர்ந்து
புண்ணிய
வஞ்செழுத் தருங்காய் தோன்றி நஞ்சுபொதி
காள கண்டமுங் கண்ணொரு மூன்றுந்
தோளிரு நான்குஞ் சுடர்முக மைந்தும்
பவளநிறம் பெற்றுத் தவளநீறு பூசி
யறுசுவை யதனினு மறுசுவை யுடைத்தாய்க்
காணினுங் கேட்பினுங் கருதினுங் களிதருந்
தேனுயர் மருத மாணிக்கத் தீங்கனி
பையப் பையப் பழுத்துக் கைவர
வெம்மனோர்க ளினிதினி தருந்திச்
செம்மாந் திருப்பச் சிலரிதின் வாராது
மனமெனும் புனத்தை வறும் பாழாக்கிக்
காமக்காடுமூடித் தீமைசெய்
ஐம்புலவேட ராறலைத்தொழுக
வின்பப் பேய்த்தே ரெட்டா தோடக்
கல்லாவுணர்வெனும் புல்வா யலமர
விச்சைவித் துதிர்த்துழி யாணவப் பெயரிய
நச்சு மாமர நனிமிக முளைத்துப்
பொய்யென் கவடுகள் போக்கிச் செய்யும்
பாவப் பஃறழை பரப்பிப் பூவெனக்
கொடுமை யரும்பிக் கடுமை மலர்ந்து
துன்பப் பல்காய் தூக்கிப் பின்பு
மரணம் பழுத்து நரகிடை வீழ்ந்து
தமக்கும் பிறர்க்கு முதவா
திமைப்பிற் கழியு மியற்கையோ ருடைத்தே. (௧௦)

(இ - ள்.) உழப்பின் - இருவகைமுயற்சியானும், வாரா - அடையப் பெறாத, உறுதிகள் - அடையப்படும் பேறுகள், உளவோ-உண்டோ, கழப்பின் (அம்முயற்சியின் றிக்காலத்தைப் போக்கிக்) கழப்புதலால், வாரா - நேரிடாத, கையறவு - துன்பங்கள், உளவோ - உண்டோ, அதனால் - ஆதலால், நெஞ்சப்புனத்து - மனமாகிய புனத்தில், வஞ்சக்கட்டையை - (முளைத்த) வஞ்சகமெனும் மரத்தினை, வேர் அற - முதல் அற, அகழ்ந்து - தோண்டி, போக்கி- அப்புறப்படுத்தி, தூர்வைசெய்து - (நல்முளை முளைத்தற்குரிய) பதஞ்செய்து, அன்பு என்பாத்தி - அன்பு என்கின்றபாத்தியை, கோலி - செய்து, முன்புற - முதலில், மெய்எனும் - உண்மை என்கிற, எருவைவிரித்திட்டு- எருப்பெய்து, ஆங்கு - எருப்பெய்த நிலத்தில், ஐயமில் - (பழுதுமுதலிய வற்றால் முளையா

தென்னும்) ஐயமில்லாத, பத்திதனிவித்து - பத்தியாகிய வொப்பற்ற விதையினை, இட்டு - விதைத்து, நித்தலும் - (பாய்ச்சும்) காலந்தவாறாத நாடோறும், ஆர்வம் தெள்நீர்பாய்ச்சி - ஆர்வம் என்கிற தெள்ளியநீரைப் பாய்ச்சி, நேர்நின்று - எதிரில் நின்று, தடுக்கு நர்க்கு - உள்புகுதாவகைத் தடைசெய்வோர்க்கு, அடங்காது - அடங்காமல், இடுக்கண்செய்யும் - துன்பஞ் செய்கின்ற, பட்டியஞ்சினுக்கு - ஐந்து பட்டிமாடுகளுக்கு, அஞ்சி - (அவைதன்னைத் தடுத்தற்குப்) பயந்து, உள்சென்று - அப்புனத்துட்சென்று, சாந்தவேலிகோலி - சாந்தம் எனும் வேலியிட்டு, வாய்ந்தபின் - இவைஅனைத்து முடித்தபிறகு, ஞானப்பெருமுளை - ஞானம்எனும் பெருமுளையானது, நந்தாது - கெடாது, முளைத்து - அங்குரித்து, கருணை இளந்தளிர் காட்ட - அருளென்கிற பசுந்தளிர்களைத்தளிர்த்துக்காட்ட, அருகா - (எடுக்குந்தோறும்) கெடாத, காமக்குரோதகளை - காமம் குரோதம் என்கிறகளைப் பூண்டுகளை, அற-வேர்நீங்கும்படி, களைந்து - பிடுங்கிப்போக்கி, சேமப்படுத்துழி - அவ்வயலினைச் செம்மைப்படுத்துகையில், செம்மையின் ஓங்கி - செம்மையாகவளர்ந்து, மெய்மயிர் - தேகத்திலுள்ள மயிர்க்கால் களாகிய, புளகம் முகிழ்த்திட்டு-புளகமாகிய முகிழ்விட்டு, அம் என - அம்மெனும் ஆனந்த ஓசையுடன், கண்ணீர்அரும்பி - கண்ணீராகிய அரும்பை விட்டு, கடிமலர் மலர்ந்து - மணமுள்ள மலர்பூத்து, புண்ணிய அஞ்சவழுத்து - புண்ணியவுருக்கொண்ட பஞ்சாக்ஷரமாகிய, அருங்காய் - கிடைத்தற் கரியகாய், தோன்றி - உண்டாகி, நஞ்சு பொதி - விஷந்தங்கிய, காளகண்டமும் - நீலகண்டமும், கண்ணொரு மூன்றும் - ஒப்பற்றமூன்றுகண்களும், தோள் இருநான்கும் - எண்டோள்களும், சுடர் முகம்ஐந்தும் - ஒளிர்கின்ற ஐந்து திருமுகங்களும், பவளநிறம் பெற்று - பவளநிறத்தினைப் பெற்று, தவளநீறுபூசி-வெண்மையாகிய விபூதியினைப் பூசி, அறுசுவை அதனினும் - (கைப்பு இனிப்பு துவர்ப்பு, கார்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, எனும்,) அறுவகைச்சுவையினும், உறுசுவை உடைத்தாய் - மிக்க இனிமையினையுடையதாகி, காணினும் - கண்ணுற்காணப்பெறினும், கேட்பினும் - காதினுற் புகழைக் கேட்கப்பெறினும், கருதினும், மனதால் நினைக்கப் பெறினும், களிதரும் - ஆநந்தத்தினைத்தரும், சேண்உயர் - மிக்கஉயர்ந்த, மருதமாணிக்கத் தீங்கனி - மருதமாணிக்க மென்னும் இன்கனி, பையபைய - மெல்ல மெல்ல, பழுத்து - முதிர்ந்து, கைவர - கைக்கண் எளிதாவர, எம்மனோர்கள் - எம்போல்வார்கள், இனிதின் அருந்தி - இன்புறவுண்டு, செம்மாந்து - களித்து, இருப்ப - இருக்க, சிலர் - இதில்வெறுப்புற்ற சிலர், இதின்வாராது - இவ்வுழப்பில் முயலுகை செய்யாது, மனம்எனும் - மனம்என்கிற, புனத்தை - புனத்தினை, வறும்பாழாக்கி-பயனற்றபாழ் நிலமாக்கி, காமக்காடுமூடி - காமமென்னுங்காடுமூடியதால், தீமைசெய்-தீயவற்றைச் செய்கின்ற, ஐம்புலவேடர் - பஞ்சேந்திரியங்களாகிய வேடர்கள், ஆறலைத்து ஒழுக - வழிபறித்திழுக்க, இன்பப்பேய்த்தேர் - சிற்றின்பமாகிய பேய்த்தேர், எட்டாது ஓட - கைக்கு எட்டாது ஓட, கல்லாவுணர்வு எனும் - கற்காதவுணர்வு என்கிற, புல்வாய் அலமர - மான்திரியும்படி, இச்சைவித்து - ஆசையென்கிறவிதை, உதிர்த்தஉழி - உதிர்த்தகாலத்து,

யான் எனப்பெயரிய - நான் என்று பெயர்கூறப்பட்ட, நச்சுமாமரம் - நஞ்சையுடையமாமரமானது, நனிமிக முளைத்து - மிகமுளைத்து, பொய்யென் - பொய்யென்கிற, கவடுகள் - பெருங்கிளைகளை, போக்கி - விட்டு, செய்யும் - செய்யப்பட்டு வருகின்ற, பாவப்பல்தழை - பாவமென்கிற பலதழைகளை, பரப்பி - விரித்து, பூ என - பூஎன்று கூறும்படி., கொடுமை அரும்பி - கொடுமை என்கிற அருபுகளைவிட்டு, கடுமைமலர்ந்து-தீமையே விகஸித்து, துன்பப்பல்காய் - துன்பமென்கிறபலகாய்களை, தூக்கி - ஏந்திக்கொண்டு, பின்பு - அதின்பின்பு, மரணம்பழுத்து - இறப்பெனும் கனிபழுத்து, நரகிடை - நரகில், வீழ்ந்து - விழுந்து, தமக்கும் - தங்களுக்கும், பிறர்க்கும் - மற்றையோர்க்கும், உதவாது - பயன்படாது, இமைப்பில் - இமையளவு காலத்தில், கழியும் - கழிந்துகெடும், இயற்கையோர் - குணம்உடையாரை, உடைத்து - இவ்வுலகம் பெற்றிருக்கின்றது எ - று.

(கு - ரை.) அடிகள், உழப்பின் வாரா உறுதிகள் உளவோ, என்னும் பழமொழிக்கிணங்க நெஞ்சப் புனத்து எனத்தொடங்கிச் செம்மாந்திருப்ப என்பதன்காறும் அதனை விளக்கிக்கூறியும், கழப்பின் வாராக் கையறவுளவோ என்பதற்குச் சிலரிதின் வாராது எனத்தொடங்கி உடைத்தே யென்பதன்காறும் விளக்கியும் கூறினர். இது இம்மைமறுமைக்கு வேண்டியபயன் கூறியதேயன்றிய தனை யிவ்வாறு செய்ய முயலல்வேண்டும் ஒழிதல் வேண்டுமெனச் சிற்றின்ப வொழிவிற்கும் பேரின்ப மெய்தற்கும் உபாயங்கூறியதுமாம். பயிர்செய்யா நிலத்துப் பலவாகிய பூண்டுகளும் விருக்ஷங்களும் முளைத்து நிலத்தின் சாரத்தினையுங் கெடுத்தல்போல் மனமாகிய இடத்துப் பலவகைப்பட்ட எண்ணங்கள் உதிக்கப்பெறுதலின் மனத்தைப் புனமெனவும், வெட்டுந்தோறும் தளிர்க்கு மரத்தை யொத்துத் தோன்றுந்தோறுங் கெடுக்கக் கெடுக்கக்கெடாது அங்குரித்தலின் அதனை வஞ்சக்கட்டை, எ - ம், இதனை முதலறக் கெடுத்தல் நலம் என்பார் வேரற வகழ்ந்து போக்கி - எ - ம். வயலில் பயிர் முதலிய செய்யப்புகின் அவ்வயலிலுள்ள கல்முதலிய, பயிர்க்கிடையூறு செய்வனவற்றைக் களைந்து அப்புனத்தைப் பண்படுத்தவும் வேண்டியதாதலின் தூர்வைசெய்து, எ - ம், அப்பண்படுத்திய நிலத்தில் நீர் பெய்தல், களைகட்டல்முதலிய செய்தல் வேண்டிச் சிறுசெய் செய்தலின் பாத்தி கோலி எனவும் கூறினர். இப்பாத்தி மனப்பாத்தியாதலின் நன்னெறி யடைதல் வேட்டோன் அன்பானே பாத்திகோலல்வேண்டு மென்பார் அன்பென்பாத்தி. எ-ம், அப்பாத்திக்கண் சிவப்பயிர் விளைய உண்மையெனும் எருவிடல்வேண்டுமென்பார் மெய்யெனும் எருவைவிரித்து - எ - ம், நித்தலும் நீர்பாய்ச்சின் பயிர் கெடுமாயினும் இது சிவப்பயிராதலின் மற்றதைப்போல் கெடாதென்பார் நித்தலும், எ - ம், அப்பாத்திக்கண் அன்பெனுநீர் அவ்வித்தினை விளக்கும் உபகாரியாதலின் ஆர்வத்தெண்ணீர் - எ - ம், பஞ்சேந்திரியங்கள், எருதுகள் முரட்டுத்தனங் கொள்ளின் எதிர்நின்று தடுப்போரையு மெதிர்த்துத்தாம் கொண்ட வெண்ணத்தினை முடித்துக் கொள்ளுமியல் பினவாதலின் நேர்நின்று தடுக்குநர்க்கடங் காதிடுக்கண் செய்யும் பட்டியைஞ்சு எ-ம், கூறினர்

அஞ்சுதல் எற்றுக்கெனின்தான் கொண்ட சிவப்பயிரை நன்றாகவிளைத்து அறுக்கமுயல் வோனிவ் வெருதுகளுக்கஞ்சாது செய்யின் பயிரின்விளை வினிடைபுகுந்துழக்கிக் கெடுத்துச் செல்லு மெருதைப் போன்று இந்த்ரியங்களாகிய எருது களிடைப்புக்கு அதனைக்கெடுத்து தன்னை அவற்றின் வழியிர்த்துக் கெடுத்தலின் பட்டியஞ்சினுக்கஞ்சியென்றாரெனினுமாம் அஞ்சு,ஐந்தென பதன்போலி, பட்டியென்பது, மற்றவர் புலத்தைக்கரவாகமேய்ந்து செல்லும் எருது. ஐந்து, இந்திரியங்களையுணர்த்தலில் அளவை யாகுபெயர். எருதுகள் உட்செலாவகை சாந்து பூசிய சுவர்வைப்பார் போல் இத்துட்ட இந்திரியங்கள் புகாவகை சாந்தவேலியிடல் வேண்டும் என்பார் சாந்தவேலி-எ-ம், இவ்வாறு அதனைக்காக்கின் ஞானப்பெருமுளை பழுதின்றி வீறாய்விளையும் என்பார். ஞானப்...முளைத்து, எ-ம், அம்முளை தோன்றியதுணையாமென அதன்தளிர் கருணைவிளைவிக்குமியல் பின தென்பார், கருணையிளந் தளிர்...காட்ட, எ-ம், இவ்வாறு எருப்பெய்து வித்திட்டுக் களைகட்டு நீர்பாய்ச்சிபக்கால்முளைத்தஞானப் பெருமுளையைச் சேமப்பத்தின் அது ஓங்கிப் புளகமாகிய முகிழ்விட்டு, கண்ணீராகிய அரும்பினையரும்பி மலர்ந்து புண்ணியமெனும் காய்விடுமென்பார் சேமப்படுத்துழி...காய்தோன்றி, எ-ம், புண்ணிய அஞ்செழுத்தெனவே இதனைவாசகமாகப் பயில்வோரே யிம்மைக்கண்சகல இன்பங்களையுமனுபவித்து மறுமைக்கண் பிறவாச்சிவப்பேற்றினையடைந்து களித்தலின் புண்ணிய வஞ்செழுத்தென்றார் இதனை விரிவஞ்சிவிடுத்தாம். ஏனைக்காய்கள்வற்றுதல், புழுப்பற்றுதல், அழுகல்முதலிய பெறுதல்போல விஃதுபெறாது உண்டார்க்கு மனமும் கண்ணுமுருகும் வகையினித்தலினிதனை அருங்காய் எ-ம், கூறினார். இவ்வாறு பயிரிடவளர்ந்த பயிர்க்கண் பழுப்பது எம்மரத்தினும் பழுக்காவியப் புதுகனி, ஏனைக்கனியுண்பார் வாயாலுண்டு நாவெனும் உறுப்பினேகதேசமாத்திரையே சிறுசுவைகண்டு இன்புறுதல்போலாது இஃதறுசுவையதனினும் உறுசுவையுடைத்தாய்க் காணினும் சேட்பினும் கருதினும் களிதருவதாதலின், நஞ்சுபொதி...பழுத்து, எ-ம், இதனையுண்டு களிப்பார் மற்றையதேவரின் பத்தினையும் வெறுத்து இதனையே யுண்டு களிப்பாராதலின எம்மனோர்...செம்மாந்திருப்ப, எ-ம், கூறினார். இவ்வொழுக்கத்தினீங்குவோர் நன்மக்களல்லர் என்பார் சிலர் எ-ம், இதின் என்பதிற் சுட்டு, அவ்வொழுக்கங் குறித்து நின்றது. இறைவன் திருவடியை மனத்திருத்தலே அழியா நிலைத்தன்றியேனையது அழிதன்மாலைத் தாதலின் வறும்பாழாக்கி -எ-ம், கற்புக்குரிய தன்மனைவியேயன்றி மற்றோரையுமவாவுதலின் காமக்காடு மூடி -எ-ம், இவ்வகையுள்ள மனத்தை இந்திரியங்கள்தாம் கொண்டவகை வசப்படுத்த அவற்றின் வழி சென்று ஒழுகுதலின் காமக்காடு... ஒழுக, எ-ம், பேய்த்தேர்,காண் பார்க்கு நீர்போல் காணப்பட்டு ஆங்குச்செல்லின் கானலாய்க் கெடுதல்போல் இன்பமும் சுகமெனக்காணப்பட்டுப்பின்னரழிதலின் இன்பத்தினைப்பேய்த்தேர்-எ-ம், கற்றவுணர்வாயின் ஒருவாறுதிரும்பவுங் கூடும் அவ்வாறு மடங்காது இந்திரியங்ளாகிய பட்டிகளுக்குப் பின்செல்லுதலின் கல்லாவுணர்வு எ-ம், இதனிடைத் தோன்றுவனபலவாகிய இச்

சைகளாதலின் இச்சை வித்து - எ - ம், இவ்வித்திடைத் தோன்றுவது அகங்காரமாதலின் யானெனப் பெரிய நச்சுமாமரம், எ-ம், இதற்கு நீர்முதலிய வேண்டாதானே விளையுமென்பார் நனிமிகமுளைத்து, எ - ம், நச்சுமாமரமாதலினிதனிடைபொய், பரவம்,கொடுமை,கடுமை,துன்பம், மரணம்,ஆகிய கவடுகள், தழை, அரும்பு, மலர், காய், கனி, உண்டாயின என்பார், பொய்யென்... பழுத்து, எ - ம், இப்பழத்தையருந்தி னானடையும் பயனாவதென்னென்பார், நரகிடைவீழ்ந்து தமக்கும் பிறர்க்குமுதவாது இமைப்பிற்கழிவது எ - ம், கூறினார்.

நேரிசைவெண்பா.

உடைமணியி னோசைக் கொதுங்கி யரவம்
படமொடுங்கப் பையவே சென்றங் - கிடைமருத
ரையம் புகுவ தணியிழையார் மேலனங்கன்
கையம் புக வேண்டிக் காண். (௧௧)

(இ - ள்.) இடைமருதர் - திருவிடை மருதூரிலெழுந்தருளி யிருக்குஞ்சிவமூர்த்தி, உடைமணியின் - தாம் அரையிலணிந்திருக்கும் சதங்கையின், ஓசைக்கு ஒதுங்கி-ஓசைகேட்டு அதின்லயமடைந்து ஒதுங்கி, அரவம் - நாகம் படம் ஒடுங்க - தனதுபடத்தினை (இறுமாக்கக்கொள்ளாது,) ஒடுங்கும்படி, பையவேசென்று - மெல்லெனப்பலர் வீடுகளிற்சென்று, ஐயம்புகுவது பிக்ஷாடனத்திருக்கோலங் கொண்டு பிக்ஷைகொள்வது, அநங்கன் - அங்கமிலியாகியமன்மதன், அணிஇழையார்மேல் - அழகிய ஆபரணமணிந்த பெண்கள் மீது கை அம்பு - தான்கையினிடங் கொண்டபஞ்ச பாணங்களை, உகவேண்டி - எய்ய வேண்டியேயாம், காண் - இதனையாராய்ந்துபார் - எ - று. காணை அசையாகக் கொள்ளினுமாம்.

(கு - ரை.) இறைவன் பிக்ஷாடனத்திருக்கோலங் கொண்டகாலத்து கலை தலை மாலை முதலிய கரந்தும் அரையிற் மணி வடமுதலிய வணிந்து செல்ல அம்மணியினாதவொலிகேட்டு அரவம் அவ்வொலியின் வயப்பட்டு படமொடுங்கியிருப்பத் தாருகவனத்துச் சென்றாராதலின், உடைமணி... ஒதுங்க, எனவும், அத்தாருகவனத்துச் சென்றகாலத்து வேடத்திற் கிணங்கப்பையச் சென்றாராதலின் பையவே சென்று, எ-ம், இவனெல்லா முடையானாயினும் ஐயம்பெறப்புகுந்தது தம்மைக்காதலித்துவேண்டிய அடியவர் வேண்டியபடி யருள்புரிவான் எண்ணியாதலின் ஐயம்புகுவது, எ-ம், கூறப்பட்டது இங்ஙனம், இவன் பிக்ஷாடன திருக்கோலங்கொண்டெழுந்தருளியது, தம்மினுங் கற்பினுயர்ந்தாரிலர் எனச்செருக்குற்று மதியாதிருந்த அப்பெண்களின் வீறடக்கியாளும் பொருட்டாதலின் இவன் கொண்ட திருக்கோலம், கண்ணுற்ற ஆணும் பெண்ணுருப்பெற்றுத்தழுவவிரும் பும்கோலமென்பது குறிப்பிக்கப்பட்டது. இத்திருக்கோலத்தைக்கண்ட மாத்திரையே மாறன் அப்பெண்கள் மீது தன்னம் புகளையேவி வருத்தித்துன் புறுத்தலின், அணியிழையார் ...காண் எனவும் கூறினார்.

கட்டளைக்கலித்துறை.

காணீர் கதியொன்றுங் கல்லீரெழுத்தஞ்சும் வல்லவண்ணம்
பேணீர் திருப்பணி பேசீரவன்புக ழாசைப்பட்டுப்
பூணீ ருருத்திர சாதனநீறெங்கும் பூசுகிலீர்
வீணீ ரெளிதோ மருதப்பிரான்கழல் மேவுதற்கே. (௧௨)

(இ - ள்.) வீணீர் - வீணாகவாணாளைப் போக்கும்பயனற்றவர்களே, எழுத்து ஐந்தும் - பஞ்சாக்ஷரங்களைந் தினையும், கல்லீர் - செபித்திலீர், வல்லவண்ணம் - வலிமைக்குத்தக்க இயன்ற அளவு, திருப்பணி - அவனது திருப்பணிகளை, பேணீர் - செய்யவிரும்பீர், அவன்புகழ் - அவனது திருப்புகழை, பேசீர் எடுத்துச் சொலீர், ஆசைப்பட்டு - ஆசையடைந்து, உருத்திரசாதனம் - உருத்திரசாதனமாகிய ருத்ராக்ஷத்தினை, பூணீர் - தரிக்கமாட்டீர்கள், நீறு - விபூதியினை, எங்கும் - உடன்முழுதும், பூசுகிலீர் - அணிந்து கொள்ளீர்கள், (இவ்வகையொன்றுஞ் செய்யாதவுமக்கு,) மருதப்பிரான்கழல் - மருதவாணனது திருவடி, மேவுதற்கு - அடைதற்கு, எளிதோ - எளிதாகுமோ (ஆகாது ஆதலால்) கதியொன்றும் - எக்கதியினையும், காணீர் - கண்டடையீர். எ - று.

(கு - ரை.) இறைவனை மனத்தாலெண்ணித் தியானித்தும், அவனது திருமந்திரத்தினைச் செபித்தும், அவன் பொருட்டுத் திருப்பணிகளைச் செய்தும் அவன்புகழ் கூறிய திருவாசகத்தினைப் பாடியும், விபூதி ருத்ராக்ஷமாகிய சிவசின்னங்களை முறையே அணிந்தும் பூண்டும், இருக்கப்பெறின் மருதவாணன் திருவடியடைதல் எளிது அன்றேல் அரிது என எதிர்மறை முகத்தாலுடன்பாடுகூறினார். இதனை "சிந்தனைசெய்ய மனமமைத்தேன் செப்ப நாவமைத்தேன், வந்தனைசெய்யத் தலையமைத்தேன் கைதொழ வமைத்தேன், பந்தனை செய்வதற்கன்பமைத்தேன் மெய்யரும்பவைத்தேன், வெந்தவெண்ணீறணி யீசற் கிவை யரன்விதித்தனவே" எ-ம், "கூறுமின் ஈசனைச் செய்மின் குற்றேவல் குளிர்மின்கண்கள், தேறுமின் சித்தந்தெளிமின் சிவனைச்செறுமின் செற்ற மாறுமின் வேட்கை யறுமினவலமினைவெறியா, வேறுமின்வானத்திருமின் விருந்தா யிமையவர்க்கே, எ - ம், கூறியவாற்றானறிக நற்கதியடைய விரும்பினோன் இறைவனை மனக்கோயிற் கணிருத்தி அவன் திருமேனியாகிய திருமந்திரத்தினைச் செபிக்கின் முத்திபெறுவன் அவ்வகைசெய்யானடையானாதலின் கல்லீரெழுத்தைந்தும் - எ - ம். அவ்வாறு செய்த லியலாதாயின் வன்மைக்குத்தக்கவிதம் அவன் திருப்பணியாகிய திருப்பூக்கொய்தல், திருவலகிடுதல், திருச்சாந்துமெழுகல் முதலிய திருப்பணியேனுஞ்செய்க என்பார் பேணீர் திருப்பணி - எ - ம், அஃது மியலாதெனின் அவன் திருப்புகழ் கூறிய திருவாசகங்களையாயினு மோதுக என்பார் பேசீர் அவன்புகழ், எ-ம், அஃது மியலாதாயின் விபூதி ருத்திராக்ஷமாயினு மணிக என்பார் பூணீர்... பூசுகிலீர் - எ - ம், இவ்வகைச்செய்யாதார் பலபிறவியினும் நற்கதியடையாராதலின் காணீர்கதி யொன்றும் - எனவும் கூறினார்.

இணைக்குறளாசிரியப்பா.

மேவிய புன்மயிர்த் தொகையோ வம்மயிர்
பாவிய தோலின் பரப்போ தோலிடைப்

புகவிட்டுப் பொதிந்த புண்ணோ புலனிடை
யூறு முதிரப் புனலோ கூறுசெய்
திடையிடை நிற்கு மெலும்போ வெலும்பிடை
முடைகெழு மூளை விழுதோவழுவழுத்
துள்ளிடை யொழுகும் வழும்போ மெள்ளநின்
றூறும் புழுவி னொழுங்கோ நீரிடை
வைத்த மலத்தின் குவையோ வைத்துக்
கட்டியநரம்பின் கயிறோ வுடம்பிற்குட்
பிரியாதொழுக்கும் பிணியோ தெரியாது
இன்ன தியானென் றறியே னென்னை
யேதினுந் தேடினன் யாதினுங் காணேன்
முன்னம்
வரைத்தனி வில்லாற் புரத்தையழ லூட்டிக்
கண் படையாகக் காமனை யொருநா
ளுண்பொடி யாக நோக்கியண் டத்து
வீயா வமரர் வீயவந் தெழுந்த
தீவாய் நஞ்சைத் திருவமுதாக்கி
யிருவர் தேடி வெருவர நிமிர்ந்து
பாலனுக் காகக் காலனைக் காய்ந்து
சந்தன சரள சண்பக வகுள
நந்தன வனத்திடை ஞாயிறு வழங்காது
நவமணி முகிழ்த்த புதுவெயி லெறிப்ப
வெண்ணருங் கோடி யிருடிகணங் கட்குப்
புண்ணியம் புரக்கும் பொன்னி சூழ்ந்த
திருவிடை மருத பொருவிடைப் பாக
மங்கை பங்க கங்கைநா யகநின்
றெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலங் கீறித் தூய
ஞான நாட்டம் பெற்றனன் பெற்றபின்
னின்பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலு
மென்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டே
னின்னிலை யனைத்தினுங் கண்டே னென்னை
நின்னைக் காணு மாந்தர்
தன்னையுங் காணத் தன்மை யோரே. (௧௫)

(இ - ள்.) யான் - அடியேன், மேவிய - தேகத்தையடைந்துள்ள, புல் மயிர்த்தொகையோ - அற்பமாகிய மயிர்க்கூட்டமோ, அம்மயிர் - அந்த உரோ

மங்கள், பாவிய - பரந்துள்ள, தோலின்பரப்போ - தோலினது பரப்புத்தானோ, தோலிடை - தோலினிடையில், புகவிட்டு - நுழையவிட்டு, பொதிந்த மூடிய, புண்ணோ - இறைச்சியோ, புண்ணிடை - அவ்விறைச்சிக்கு நடுவில், ஊறும் - சுரக்கின்ற, உதிரப்புனலோ - ரத்தநீரோ, கூறுசெய்து - பலகூறுகளாப் பிரிக்கப்பட்டு, இடை இடைநிற்கும் - இடையிடையே நிற்கும், எலும்போ - எலும்புகள்தானோ, எலும்பிடை - அவ்வெலும்புகளி னிடையில், மூடை-செழு - மூடைநாற்றந்தங்கிய, மூளைவிழுதோ-மூளையின் றிரட்சியோ, வழுவழுத்து - வழுவழுப்புக்கொண்டு, உள்ளிடை-உட்பாகத்தில், ஒழுகும், ஒழுகுகின்ற, வழும்போ - நிணமோ, மெள்ள - மெதுவாக, நின்று - நிலைபெற்று, ஊரும் - நகர்ந்து செல்லும், புழுவின் ஒழுங்கோ - புழுக்களின் வரிசையோ, நீரிடை வைத்த - நீரினிடையாகவைத்த, மலத்தின் குவையோ - மலத்தின்குப்பையோ, வைத்து - இறைச்சி யெலும்பு முதலியவற்றைவைத்து, கட்டிய - கட்டியுள்ள, நரம்பின்கயிறோ - நரம்பினது கயிறோ, உடம்பிற்கு உள் - உடம்பினுள், பிரியாது - நீங்காமல், ஒறுக்கும் - வருத்துகின்ற, பிணியோ - வியாதியோ, இன்னது என்று - இது இப்படித்தென்று, அறியேன் - உணரேன், என்னை தெரியாது - என்னையறிந்துகொள்ளாமல், ஏதினும் தேடினன் - எதிலும் தேடிப்பார்த்தேன், யாதினும் - எதினிடத்தும், காணேன் - கண்டு தேர்ந்திலேன், முன்னம் - பூர்வம் ஒருகற்பத்தில், வரைதனி வில்லால் - ஒப்பற்றமலையாகிய வில்லைக்கொண்டு, புரத்தை அழல் ஊட்டி - திரிபுரங்களை அழலுக்கு உண்பித்து, ஒருநாள் - ஒருகற்பத்தில், கண்படையாக கண்ணே ஆயுதமாக, காமனை - மன்மதனை, நுண்பொடி ஆக - நீறாகும்படி, நோக்கி - தீவிழியால் நோக்கி, அண்டத்து - பிரமாண்டத்தில், வீயா - (அமிர்தமுண்டதால்) சாகாநிலைபெற்ற, அமரர் - தேவர்கள், வீய - இறந்துகெட, வந்து எழுந்த - தோன்றிய, தீவாய் - விஷத்தீவாய்ந்த, நஞ்சை - ஆலாலவிஷத்தை, திருவமுது ஆக்கி - அமுதாக உண்டு, இருவர் - விதி விஷ்ணுக்களாகிய இருபெருந்தேவர்கள், தேடி - அடிமுடிகளைத்தேடி (க்காணாமல்) வெருவர - அவர்கள் உடல்நடுங்கும்படி, நிமிர்ந்து - அவ்விருவர்க்கிடையில் தாணுமூர்த்தமாய் ஓங்கி, பாலனுக்காக - மார்க்கண்ட முனிவர்பொருட்டு, காலனை - கூற்றுவனைக் காய்ந்து - திருவடியால் உதைத்துக் கோபித்து, சந்தனம் - சந்தனவிருக்ஷங்களும், சரளம் - சரள விருக்ஷங்களும், சண்பகம் - சண்பகவிருக்ஷங்களும், வகுளம் - மகிழமரங்களும், (சூழ்ந்த,) நந்தனவனத்திடை - பூங்காவில், ஞாயிறு அழுங்காது - சூரியவொளிசெல்லாது, நவமணி - நவரத்தினங்கள், முகிழ்த்த - அரும்பிய, புதுவெயில் - புதிதாகியவெயில், எறிப்ப - வீச, எண்ணருங்கோடி - எண்ணுதற்கரிய பலகோடி, இருடிகணங்கட்கு - இருடி கூட்டங்களுக்கு, புண்ணியம் புரக்கும் - புண்ணியத்தை யருள்புரிந்து காக்கும், பொன்னிசூழ்ந்த - காவிரியாற் சூழப்பட்ட, திருவிடைமருத - திருவிடைமருதூரைத் திருப்பதியாகக்கொண்டவனே, பொரு - போர்செய்கின்ற, விடைப்பாக - இடபத்தைவாகனமாகக்கொண்டவனே, மங்கைபங்க - இறைவியாகிய பார்வதியை வாமபாகத்துப்பெற்றவனே, கங்கைநாயக - கங்கைக்குத்தலைவனே, நின்தெய்வத்திரு அருள் - தேவரீரது தெய்வத்தன்மைதங்கிய திருக்கருணை, கைவர

து கிடைத்தலின் - எளிதாகக்கிடைத்த காரணத்தால், மாயப்படலம் கீறி - மாயையின் திரளைக்கெடுத்து. தூய - சுத்தமாகிய, ஞான நாட்டம் பெற்றனன் - ஞானநோக்கத்தினை யடியேன் அடைந்தேன், பெற்றபின் - அதனை யடியே னடைந்தபின்னை, நின் தேவரீருடைய, பெருந்தன்மையும் - பெருமையாகிய குணங்களின் விசேடத்தினையும், கண்டேன் - கண்டுதரிசித்தேன் காண்டலும் - அவ்வகைக்கண்டமாத்திரையில், என்னையுங் கண்டேன் - யான் எதுவென வுணராது தேடிய என்னையும் கண்டேன், பிறரையுங்கண்டேன் என்னையொழிந்து உலகத்துள்ள பிறரையுங்கண்டேன். நின் நிலை - தேவரீர் எங்கும் வியாபித்திருக்குந்தன்மை, அனைத்தினுங்கண்டேன், சராசரப் பொருள்கண் முழுதினுங்கண்டேன், என்னை - பசுவாகிய ஆன்மாவினையும், நின்னை - பதியாகிய தேவரீரையும், காணாமாந்தர் - காணாதமனிதர்கள், தன்னையுங்காணா - தன்னிலக்கணத்தையுங்காணாத, தன்மையோர் - தகுதி யுடையோர் ஆவர் - எ - று.

அடியேன் என்னிலக்கணமேதென ஆராயப்புகுந்து ஆராயுமிடத்து என் உடல் முதலிய வுறுப்புக்களுள் ஒன்றினும் காணாது தேவரீரது திருவருளை முன்னிட்டு யான் என்னைக்கண்டேன் தேவரீரையுந் தரிசித்தேன் தேவரீர் வியாபகத்தையும் உலகமெல்லாவற்றையுங் கண்டேன் ஆதலால் தேவரீரைத் தரிசனஞ் செய்யாமாந்தர்தம்மையுங் காணாத் தன்மையராவார். என்பது கருத்து.

(கு - ரை.) புல்மயிர்த் தொகையென்பதில் உரோமத்திற்குப்புன்மையாவது எளிதில் அறுக்கப்படுதல் முதலிய. உதிரப்புனல் தோலிடைக்கண் சிறு நரம்புகளை வழியாகக்கொண்டு தேகத்தி லூறுதலின் ஊறுமுதிரப்புனல் என்றார். தேகத்தின் பாகங்களை இது சிரம் தோள் தாள் என வேறுபடுத்தற்கும் அந்நரம்பு தசை தோல் உதிரம் முதலிய நிற்றற்கும், வீட்டின் கூரை மேய்வார்க்கு அதைத்தாங்கத் தூண் கொடுங்கை விட்டம் வரிச்சல்முதலிய ஆதாரமாகத்தாங்குதல்போல் இது தாங்கிநிற்றலால் கூறுசெய்து இடையிடைநிற்குமெலும்போ என்றார், தேகந் தோன்றிய காலத்துடன் றோன்றி உள்ளிருந்து மறைதலின் பிரியாதொறுக்கும் பிணி என்றார். தன்னால் கவரப்பட்டோனைப் பிணித்தலின் பிணியெனப்பட்டது, தெரியாது, என்பதை என்னையென்பதனுடன்கூட்டுக. எலும்பு தோல் முதலிய உடலின் கருவிகள் பலவும் ஆன்மாவல்ல என்பார் என்னை யேதினுந்தேடினன் யாதினுங்காணேன் என்றார். எத்தேவராலுஞ் செய்ய முயன்றுஞ் செய்யாதகாரியத்தைச்செய்யத் தக்கவ னிவற்கு ஆயுதமென்பது ஒன்று வேண்டியதில்லையென்பார் வளைத்த னிவில்லால் புரத்தை யழலூட்டி ... நோக்கியென்றார். எவ்வகைக் கொல்லத்தக்கநஞ்சும் இவனை யணுகின் அமிர்தமாமேயன்றி யவனை வருத்தாதென்பார் - அண்டத்து ... ஆக்கியென்றார். தம்மைப் பிரமமெனமதித்த மால் பிரமர்க்குமுன் றோன்றாது நின்று பாலகனாகிய மார்க்கண்டனுக்காகக் காலனையுதைத்தாரெனவே அடியார்க்கெளியன் என்பதும், மடியார்க்குச்சேயான் என்பதுங் கூறப்பட்டது. சாளம், என்பது, ஒருமகாவிருக்ஷம், ஸாதி விஸ்தாரம் ராப்நோதிதிஸாளம் எனுந்தாதுவால், விஸ்தாரத்தை யடைகிறது, என்பது

பொருள். உரோமசன், மார்க்கண்டர், காசிபர், பராசரர், விசுவாமித்திரர், கௌதமர், முதலிய இருடியருக்கு அருள் சுரந்தளித்தவர் என்பார், எண்ணருங்கோடி...புண்ணியம் புரக்கும், எ - ம், அடியேனுக்குத் தேவரீர் திருவருள்கிடைத்த மாத்திரையில் மாயைநீங்கி ஞானநாட்டத்தை யடைந்தேன் என்பார், தெய்வத்திருவருள்...பெற்றனன். அவ்வகை ஞான நாட்டத்தால் பதார்த்த திரயத்தின் லக்ஷணங்களை யறிந்தேன் என்பார், நின் பெருந்தன்மை...நின்னிலே யனைத்துங்கண்டேன், என்றார். நின்னருள்பெற்றுத் தேவரீரைக்காணுமாந்தர் தம்மைக்காணுராகி யதனாலுண்டாகிய நலத்தையு மிழந்தவராவர் என்பார், நின்னை...தன்மையோர் என்றார்.

நேரிசைவெண்பா.

ஓராதே யஞ்செழுத்து முன்னாதே பச்சிலையு
நேராதே நீரு நிரப்பாதே - யாராயோ
வெண்ணுவா ருள்ளத் திடைமருதர் பொற்பாத
நண்ணுவா மென்னு மது நாம். (௧௪)

(இ - ள்.) நெஞ்சே - மனமே, ஓராதே - அவனைத்தியானிக்காமலும், ஐந்தெழுத்தும் - திருவக்கரங்களைந்தினையும், உன்னாதே - உன்னிச் செபிக்காமலும், பச்சிலையும் - பச்சிலையாயினும், நேராதே - அவன் திருமுடிக்கணிட்டுப் பூசியாமலும், நீரும் நிரப்பாதே-ஜலத்தால் திருமஞ்சனஞ் செய்துகளிக்காமலும், எண்ணுவார் - இடைவிடாது தியானிப்பவர், உள்ளத்து - மனதின்கண் திருக்கோயில் கொண்டருளும், இடைமருதர் - திருவிடைமருதவாணரது, பொன்பாதம் - அழகியதிருவடிகளை, நாம் - இவ்வகையில் ஒன்றும் இலாநாம், நண்ணுவாம் - அடைவோம், என்னும் அது - என்று எண்ணும் அவ்வெண்ணம், யாராய் ஓ-நம்மையாராக வெண்ணியோ எ - று. அவனைத்தியானிக்காமலும் அவனது திருமேனியே யுருவாகிய திருவைந்தெழுத்துக்களைச் செபிக்காமலும் அவன்திருமுடிக்கு நீர்முதலிய கொண்டு அபிஷேகம் புரியாமலும், பச்சிலைபரித்துத் திருவடிக்கருச் சித்துப்பணியாமலும் அவனைத்தியானபாவனை செய்து வழிபடு மடியவருளத்தே தூங்கும் பொற்பாதத்தினை யடையவெண்ணுகின்ற அவ்வெண்ணம் நம்மையாராக வெண்ணியோ அறியேம் என்பதுகருத்து.

(கு - ரை.) மனத்தாலும் வாக்காலும் அவன்றிருவுருவத்தினை யெண்ணித்தியானிப் பார்க்கு அண்ணிக்கு மமுதாம் என்பார் ஓராதே யென்றும், அஃதியலாது எனின் அவனது மந்திரத்திருமேனியே வுருவாகும் திருவைந்தெழுத்தினையேனுஞ் செபிக்க என்பார். ஐந்தெழுத்து முன்னாதே - எ -ம், அதுவுமிய லாதெனின் நொச்சியாயினுங்கரந்தை யாயினும் பச்சிலையிட்டுப் பரிந்து பணிபல்வேண்டு மென்பார் பச்சிலையுநேராதே யென்றும், அதுவுங்கூடாதெனின் குடங்கையினீ ராயினுமவன் றிருமுடியிலிட்டுப் பரிக என்பார் நீருநிரப்பாதே எ - ம், கூறினார், "ஒருகணமிருப்பன் தெய்வவுருவினிலீசன்றான் மற், றிருகணஞ் செங்கோலோச்சு மிறையவர் பாலிருப்பன், அருமறையவர் குழாத்துளம்பு வீழளவிருப்பன், தூரியயோகியருளத்திற்றூங்குவ

ணிருந்தெப்போதும்." என்றதால், எண்ணுவாருள்ளத்திடை மருதர் என்றார். இவ்வகைச் செய்வார்க்கணியனு மன்றியேனையர்க்குச் சேயனுதலினிவ் வொழுக்கிற் சிறிது மிலாதநாம் அவன் திருவடியடைய வெண்ணுமது நம்மையாராக அகங்கரித் தென்பார், பொற்பதாம்......யாராயோ, என்றார். இச்செய்யுள் எதிர்மறைபா னவனருளடைதற் குபாயங் கூறியதாம்.

கட்டளைக்கலித்துறை.

நாமே யிடையுள்ள வாறறிவாமினி நாங்கள்சொல்ல
லாமே மருதன் மருதவனத்தன்ன மன்னவரைப்
பூமேலணிந்து பிழைக்கச்செய் தாரொரு பொட்டுமிட்டார்
தாமே தளர்பவ ரைப்பார மேற்றுத றக்கதன்றே. (கரு)

(இ - ள்.) இனி - இனிமேல், நாமே - நாம்தாமே, இடையுள்ளஆறு - இடை இருக்கும்விதத்தினை, அறிவாம்-அறிவோம், நாங்கள் சொல்லல் ஆம்-பிறரதனையறியும்படி நாங்கள் சொல்லலுமாம்-மருதன்-மருதவாணனது, மருதவனத்து திருவிடைமரு தூரில், அன்னம் அன்னவரை-அன்னத்தை யொத்தநடைவாய்ந்தவளை, பூமேல் அணிந்து-புட்பத்தினை தலைக்கணிந்து, பிழைக்கச் செய்தார் - அவளைப்பிழைக்கச் செய்தனர், ஒருபொட்டும் இட்டார் - ஒருபொட்டினையும் அவள் நெற்றியிலிட்டனர், தாமே தளர்பவரை - தாங்களே மூலைச்சுமை தாங்கலாற்றாது வருந்துவோரை, பாரம் ஏற்றுதல் - பூச்சூடுதல் பொட்டிடுதல் முதலியவற்றால்) பாரமேற்றிவருந்த வைத்தல், தக்கதன்று - தகுதியுடைய தன்று, எ - று.

(கு - ரை.) இஃது நலம் பாராட்டுதலாம், அஃதாமாறு, இடையுண்டோ இலையோவென்றநெஞ்சிற்கு,பூவணிந்திருத்தலாலும்,பொட்டிட் டிருத்தலாலும் உண்டென்றுணர்ந்த, அவ்வகையணிந்து வருந்தச் செய்தார் இரக்கமிலாரெனவவர்செய்கைகண்டு இரங்கல் இதனை "அகல்கின் றவல்குற்றடமது கொங்கையவையவகீ, புகல்கின்ற தென்னை நெஞ்சுண்டேயிடை யடையார்புரஞ்ச, விகல் குன்ற வில்லிற் செற்றோன் றில்லையீச னெம்மானெதிர்ந்த, பகல்குன்றப்பல்லுகுத் தோன்பழனம் மன்ன பல்வளைக்கே. என்ற அருமைத்திரு வாக்கானறிக. இவ்வாறன்றிக் காதல் சட்டுரைத்தலுமா மெனக் கூறினுமாம், அஃது, அவளில்வாழ்க்கை நலங்கிடக்க, அவன் அவள் மேல்வைத்த காதலான் இவையேயனறிப் பொறைபா மென்று கருதிநுதலின் கண் இன்றியமையாத காப்பாகிய பொட்டையு மணியான், இஃதவன் காதலெனத்தலைமகனது காதன் மிகுதி கூறுநிற்றல். இதற்குச் செய்யுள், பொட்டணியானுதல் போயிறும் பொய் போலிடையெனப்பூ, ணிட்டணியான்ற விசின் மலரன்றி மிதிப்பக் கொடான், மட்டணி வார்குழல் வையான் மலர்வண்டு றுதலஞ்சிக், கட்டணிவார் சடையோன்றில்லை போலிதன் காதலனே என்ற திருவாக்கானு மறிக. இது இடைகாணு வாறிருக்கினும் சிலசாதனங்களைக் கொண்டு அவ் இடையுள்ள விதத்தினை யறியலாம் ஆவ்விடையுண்டெனக் கூறவேண்டாது நாமேயறியலாம் என்பார்நாமேயிடையுள்ள வாறறிவாம் எனவும், அதனையறிந்த பின் இவ்வாறு பாரமேற்றின் அவள்பொருள் அவளிடை மிக்கபாரத்தால்

முன்னரே தளர்ந்திருப்பது அவள் மீது பின்னும் பார மேற்றுதல் அடாது அவ்வாறு பாரமேற்றிய பாங்கியர் சற்று மிரக்க மிலிகள் அவர் செயலைப்பிற ருக்கு அறிய அறிவிப்பா மென்பார் நாங்கள் சொல்லலாமே - எ - ம் அவள் நடை அன்னத்தினும் மெலிது என்பார் அன்னமன்னவர், எ - ம், பூவினை அவர் சூட்டிவிட்டுப்பார மேற்றின் அவர்பிழையார் என்பார் உடன் பாடாக் கிப் பூமேலணிந்து பிழைக்கச் செய்தார் என்றார் இவள் பொறுது இறப்பள் என்றபடியாம் இதனை "அனிச்சப் பூக்கால்களையாள் பெய்தாளு நுசுப்பிற்கு நல்லபடாபறை." என்ற தேவர்திருவாக்கானு மறிக.

நேரிசை யாசிரியப்பா.

அன்றினர் புரங்க ளழலிடை யவியக்
குன்றுவளைத் தெய்த குன்றாக்கொற்றவ
நுண்பொடி யணிந்த வெண்டோட்செல்வ
கயிலைநடந் தனைய வுயர்நிலைநோன்றாட்
பிறைசெறித் தன்ன விருகோட் டொருதிமிற்
பானிறச்செங்கண் மால்விடைப் பாக
சிமயச்செங்கோட் டிமயச்செல்வன்
மணியெனப்பெற்ற வணியிய லன்னம்
வெள்ளைச்சிறுநகைக் கிள்ளைப் பிள்ளை
குயிலெனப் பேசு மயிலிளம் பேடை
கதிரொளி நீலங் கமலத்து மலர்ந்தன
மதரரி நெடுங்கண் மானின் கன்று
வருமுலை தாங்குந் திருமார்பு வல்லி
வையமேழும் பன்முறை யீன்ற
வைய திருவயிற் றம்மை பிராட்டி
மறப்பருஞ் செய்கை யறப்பெருஞ் செல்வி
யெமையா ளுடைய வுமையா ணங்கை
கடவுட் கற்பின் மடவரல் கொழுந
பவளமால்வரைப் பனிக்கைபோந் தனைய
தழைசெவி யெண்டோட் டலைவன் றந்தை
பூவலர் குடுமிச் சேவலம் பதாகை
மலைதுளை படுத்த கொலைகெழு கூர்வே
லமரர்த் தாங்குங் குமரன் றாதை
பொருந்திடங் கொண்ட பொன்னி புரக்கு
மருதிடங்கொண்ட மருத வாண
நின்னது குற்ற முளதோ நின்னினைந்

தெண்ணாருங் கோடி யிடர்ப்பகை களைந்து
கண்ணுறு சீற்றத்துக் காலனை வதையா
விறப்பையும் பிறப்பையு மிகழ்ந்து சிறப்பொடு
தேவ ராவின் கன்றெனத் திரியாப்
பாவிக டமதே பாவம் யாதெனின்
முறியாப் புழுக்கன் முப்பழங் கலந்த
வறுசுவை யடிசி லட்டினி திருப்பப்
புசியா தொருவன் பசியால் வருந்துத
லயினியின் குற்ற மன்று வெயிலின்வைத்
தாற்றிய தெண்ணீர் நாற்றமிட் டிருப்ப
மடாஅ வொருவன் விடாஅவேட்கை
தெண்ணீர்க் குற்ற மன்று கண்ணகன்று
தேன்றுளி சிதறிப் பூந்துணர் துறுமி
வானுகங் கிடந்த சோலை கிடப்ப
வெள்ளிடை வெயிலிற் புள்ளிவெயர்பொடிப்ப
வடிபெயர்த் திடுவா னொருவ
னெடிது வருந்துத லிழற்றீங் கன்றே. (௧௬)

(இ - ள்.) அன்றினர் - திரிபுராதிகளாகிய பகைவரது, புரங்கள் - திரிபுரங்கள், அழல் இடை - நெருப்பினுள், அவிய - வெந்து நீருக, குன்று - மகாமேருமலையை, வளைத்து - வில்லாக வளைத்து, எய்த - பகைவர்மேல் ஏவிய, குன்ரு - பெருமையிற்குறையாத, கொற்றவ - தலைவனே, நுண்பொடி - விபூதியினை, அணிந்த, திருமேனியிற் சண்ணித்த, எண்தோள் செல்வ - எட்டுப்புசங்களையுடைய பெருஞ்செல்வனே, கயிலை - திருக்கைலைகிரி, நடந்தது அனைய - நடந்ததையொத்த, உயர்நிலை - உயர்வாயநிலையினையும், கோன்ருள் - வலிபெற்ற பாதங்களையும், பிறை செறிந்தது அன்ன - பிறையினைச் செருகினது போன்ற, இருகோடு இரண்டுகொம்புகளையும், ஒருதிமில் - ஒருமுசுப்பினையும், பால்நிறம் - பால் போன்றநிறத்தினையும், செம்கண் - சிவந்தகண்களையுமுடைய, மால்விடைபாக - பெருமையுள்ளஇடபாரூடனே, சிமயம் மலையின் உச்சியில். செய்கோடு - நீண்டவிருக்ஷங்கள் நெருங்கிய, இமயச்செல்வன் - மலையரையன், மணிஎனப்பெற்ற - மணியென்று அருமையாகப்பெற்ற, அணி இயல் அன்னம் - அழகுள்ள அன்னப் புள்ளையொத்த நடை வாய்ந்தவளும், வெள்ளை - வெண்மையாகிய, சிறுநகை - சிறுபற்களையுடைய, கிள்ளைப்பிள்ளை - கிளிப்பிள்ளையை யொத்தவளும், குயில் என - குயில்போல, பேசும், இனிதாகப்பேசுகின்ற, மயில் இளம்பேடை - இளமையாகிய பெண்மயிலினை யொத்தவளும், கதிர்ஒளிநீலம் - மிக்கபிரகாசமுள்ள நீலரத்தினம், கமலத்துமலர்ந்தன - தாமரையிடத்து மலர்ந்தது போல, மாதர்அரி - களித்த செவவரிகளையுடைய, மானின் கன்று - மான்கன்று போல் பவளும், வரு அமுதஞ்

சுரக்கின்ற திருத்தனங்களை, தாங்கும் - தாங்கியிருக்கும், திருமார்பு - திருமார்பினையுடைய, வல்லி - பூங்கொடியை யொத்தவளும், வையம் ஏழும் - ஏழு உலகங்களையும், பல்முறை - அநேகமுறை, ஈன்ற - பெற்றருளிய, ஐயதிருவயிறு - அழகிய திருவயிற்றினையுடைய, அம்மைபிராட்டி - உலகமாதாவாகிய பிராட்டியாரும், மறப்பருஞ்செய்கை - மறத்தலரிய கிர்த்தியங்களைச் செய்யும் அறப்பெருஞ் செல்வி - தருமத்தினை வளர்த்த பெருஞ்செல்வத்தினைக் கொண்டாளும், எமை ஆள் உடைய - எங்களையடிமை யாகக்கொண்ட, உமையாள் நங்கை - உமையென்னுந்திரு நாமத்தினையுடைய பெண்கள் நாயகமும், கடவுள் கற்பின் - தெய்வத்தன்மை கொண்ட கற்பினை வாய்ந்தவளுமாகிய, மடவரல் - பிராட்டியாருக்கு, கொழுந - கொழுகொம்பானவனே, பனைக்கை - பனையைப்போலும் கையினைக்கொண்ட, பவளமால் வரை - பெருமைதங்கியபவளமலையானது, போர்த்தது அனைய - வந்தாற்போலும், தழைசெவி - பரந்த திருச்செவிகளையும், எண்தோள் - எட்டுத்திருப்புஜங்களையுமுடைய, தலைவன் தலைவனாகிய விநாயகமூர்த்திக்கு, தந்தை - பிதாவானவன், பூஅலர் - செந்நிற மலர்போலும், குடுமி - கொண்டையினையுடைய, சேவல் அம்பதாகை - அழகிய சேவற்கொடியினையும், மலைதுளைபடுத்த - மலையைத்துளை செய்வித்த, கொலைகெழு - கொலைதங்கிய, கூர்வேல் - கூர்மையாகிய வேலைத்தாங்கிய, அமரர் தாங்கும் - தேவர்களைக்காக்கும், குமரன் தாதை - குமாரக்கடவுளுக்குத் தந்தையானவர், பொரு - மோதுகின்ற, திடம்கொண்ட - வலிமைகொண்ட, பொன்னிபுரக்கும் - காவிரியாற் காக்கப்பட்ட, மருதுஇடம் கொண்ட - திருஇடைமருதையிட மாக்கொண்ட, மருதவாண - மருதவாணனே, நின்னது குற்றம் உளதோ - உன்குற்றம் உளதோ, நின் நினைந்து - தேவரீரைநினைந்து, எண்ண அருங்கோடி - எண்ணுதற் கருமையாகிய பலகோடி, இடர்ப்பகைகளைந்து - இடரைத்தருகின்ற பகைகளை நீக்கி, கண்ணுறு - குறிக்கத்தக்க, சீற்றத்து - கோபத்தினையுடைய, காலனை - யமனை, வதையா - நம்மீதுவராது வதைத்து, இறப்பும் - இறத்தலையும், பிறப்பையும் - பிறத்தலையும், இகழ்ந்து - அவமதித்து சிறப்பொடு - சிறப்புடன், தேவர் ஆவின் கன்று என - காமதேனுவின் கன்றைப்போல, திரியா - உலாவாத, பாவிகள் தமதேபாவம் - பாவிகளுடைய தேபாவமாகும், யாது எனின் - அவ்வகைக் கூறியதென் எனின், முறியா - பிளவுபடாத, புழுக்கல் - அன்னத்துடன், முப்பழம் - வாழை, பலா, மா, என்கிறமூவிதப்பழங்கள், கலந்த - விரவிய, அறுசுவை - அறுவகைச் சுவையோடு கூடிய, அடிசில் - உணவு, அட்டுஇனிது இருப்ப - செம்மையாகச் சமைத்திருக்க, ஒருவன் - அதனையுண்ண வேண்டிய ஒருவன், புசியாது - அவ்வடிசிலையுண்டு பசிபோக்காது, பசியால்வருந்துதல் - பசியுடன் வருந்தியிருத்தல், அயினியின்குற்றம் அன்று - உணவின் குற்றமல்லவாம், வெயிலின்வைத்து - வெயிலிடைவைத்து, ஆற்றிய - குளிரும்படிசெய்த, தெள்நீர் - தெளிந்தநீர், நாற்றம் இட்டு - மணத்திரவியங்களிட்டு, இருப்ப - இருக்க, மடாஅ ஒருவன் - உண்ணாத ஒருவன், விடா அவேட்கை - நீங்காத ஆசை, தெள்நீர்குற்றம் அன்று - தெள்ளிய நீரின்குற்றம் அல்லவாம், கண் அகன்று - இடம்பரந்து, தேன்துளி சிதறி - தேனின்துளிகள் சிந்தி, பூந்துணர்துறுமி - பூங்கொத்துக்கணிறைந்து

சோலைகிடப்ப - நந்தவனமிருக்க, வெள்ளிடை - பரந்தவெளியில், வெயிலில் - வெயிலின்கண், புள்ளிவெயர் பொடிப்ப - புள்ளிகளாக வெயர்வரும்ப, அடி பெயர்த்திடுவான் ஒருவன் - நடந்துசெல்வானாகிய ஒருவன், நெடிதுவருந்துதல் - மிகவருந்துதல், நிழற்றீங்கன்று - நிழலின்தீமையன்றாம். எ - று.

இறைவனே, தேவரீரைநினைந்து பலவாகிய இடர்களைக்களைந்து இறப்புப்பிறப்புகளின் பயத்தைப்போக்கியுஞ் சாதுகிரியாதமக்களது குற்றமேயன்றித் தேவரீரிடத்துச் சிறிதும் தவறில்லையது எங்ஙனமெனின் உண்ணத்தக்க நல்லுணவிருக்க ஒருவனதனைப் புசியாது பசியோடிருத்தல் அவ்வுணவின் குற்றமன்று, நன்மணமமைந்த வுண்ணீரிருக்க நீர்வேட்கை கொண்டானதனையுண்ணாது தாகத்துடனிருத்தல் நீரின் குற்றமன்று, நன்னிழலைத்தரும் மணற்றடமிருக்க அதிற்றங்கி விடாய்தீராது வெயிலில் வருந்துதல் நிழலின் குற்றமன்றாமென்பது கருத்து.

(கு - ரை) அன்றினர் புரங்களெனப் பன்மை பற்றிக் கூறியதனானே இறைவன் பன்முறைபுரங்களையழித்தமை கூறியதாம்: அவை பிரமனும், குமாரக்கடவுளும், பிராட்டியும் சாரதியாகவிருந்து தேர்கடாவிப் புரமெரித்த செய்திகளாம். அவற்றை மாபுராணங்களானறிக. இவ்விரண்டடிகளும் இறைவனது முடிவிலாற்றலுடைமை தெரித்தன. எக்காலத்தும் நாசமிலியாதலால் குன்றாக்கொற்றவ என்றார். நுண்பொடி புழுதி இது. பிருதிவியின் விகாரமாதலினானும், இறைவனது எண்டோளும் எட்டுத்திக்குகளாதலானும் நுண்பொடியெனும் இவ்வடி பிருதிவி முதல் ஆகாயமளவும் அவன்றிருமேனியெனத் தெரிவித்ததாம். விடைதருமசுவரூபமாதலினாலும் தருமத்திற்கு நிறம்வெண்மையாதலானும் அத்தருமம் எக்காலத்தும் அழியாநிலைத்தாதலானும் அதனையிறைவன் வாஹனமாக் கொண்டிருத்தலாலும் அவ்விடையைக் கைலையாகக் கூறினார். சிவனடியர் மாட்டன்புடைமையும் ஏனையவர் மாட்டன்பின்மையும் குறிப்பிக்கப் பானிறச்செங்கண் என்றுகூறினார். திருமாலும் ஒருகற்பத்திலிறைவனை யிடபவுருக்கொண்டு தாங்கினராதலின் மால்விடையென்றாரெனினுமாம். செங்கோடு உர்யந்த சிகரமெனினுமாம். மணிஎன்பது ஈண்டு நீலரத்தினத்தைக் குறித்து நின்றது. என்னெனினிறைவி நீலநிறமுடைமையின் என்க. வெள்ளைச்சிறு நகையென இறைவியின் திருநகை கூறியதனானே அவளெக்காலத்து முயிர்களிடத்து முகமலர்ச்சி கொண்டுகாக்கும் பேரருளுடையளென்பது தெரிவித்தார். கிள்ளைப்பிள்ளை, இறைவியின் பசுநிறத்தினையும், குயில், அவளது இன்சொற்களையும், மயில், அவளது சாயலையும், குறிக்கின்றன. பிள்ளை, இளம்பேடை, மானின்கன்று, என்பன அவள் உலகமெலாமீன்றும் நீங்காத இளமைகொண்டாள் எனக்குறிப்பித்து நின்றன. நீலம் எனவாளாகூறாது கதிர் ஒளியெனக் கூறியதனானே அவளது இரண்டு திருநேத்திரங்களும் சோமசூரியர் என்பது குறித்து நின்றன. மதரரி நெடுங்கண் என்றதனானம்மையெக்காலத்தும் கருணையைத் தனது திருக்கண்ணால் தெரிவித்தலைக் குறித்து நின்றது. இதனை விசாலாக்ஷி காமாக்ஷி, எனும் அவளது

திருநேத்திரப் பெருமை குறிக்க நின்றதிருநாமங்களாலறிக, மானின்கன்றுஎன் பதில் இன்னேச்சாரியையாக்காது மானினது இனியகன்றெனினுமாம். இறை விகருணையே திருவுருக் கொண்டளாதலின் அத்திருமுலை, யச்கருணையைக் குறிப்பிக்கும் அமுதகலசமாதலின் அதுசுரக்கும் முலையை அருமுலையென்றார். இறைவனுன்மாக்களை யிளைப்பாற்றுதற் பொருட்டுச் சங்காரத்தினைச் செய்ய இறைவி மீண்டு அவ்வுயிர்களை யிறைவனுணையால் சிருட்டிசெய்தலின்வையமேழும்......பிராட்டி என்றார். முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்தவளாதலின் மறப்பருஞ் செய்கை யறப்பெருஞ் செல்வி எ - ம், இறைவனெக்காலத்தும் அழியாதவனுதலாலும், மலர்மகளும், கலைமகளும், பொது மகளிராதலினும், கடவுட்கற்பின் மடவரல் கொழுந என்றார். இறைவியாகியவல்லிபடர்தற்குக் கொழுகொம்பு போலுதலினிறைவனைக் கொழுநன் என்றார். தழைசெவியென்றதில் தழைத்தல் பரட்பின் மேற்று. மூத்தபிள்ளையார் இறைவனையன்றிவேறன்மையால் எண்டோட்டலைவன் என்றார் கூர்வேல் கொண்டு தேவர்சிறைமீட்டானுதலின் கூர்வேலமரர்த் தாங்கும் குமரன் என்றார்.

பொருதிடங்கொண்ட என்பதற்குக்கரையைமோதி இடங்கொண்டஎனினுமாம். வாழ்ந என்பது வாண எனமருவிநின்றது. இறைவன் ஒன்றிலும் பற்றற்று இருக்க அவன் சந்நிதான மாத்திரையில் உலகம் காரியப்படுதலின் நின்னதுகுற்றம் உளதோ என்றார். ஆன்மாக்கள், தாம் முன்னைப்பிறவிகளிற்செய்ததன்பங்கள் அனைத்தும் அவனைமனத்திருத்திக்கணப்பொழுது திருவடியைத் தியானிக்கப்பஞ்சிடைப்பட்ட தீப்போலிவன் பலபிறவிகளிற்செய்தபாவமனைத்தும் பறந்துபோமாதலின், நின்னினைந்தெண்ணருங்கோடி யிடர்ப்பகைதொலைந்து என்றார். நமன் உலகத்துள்ளாரின் உயிரைச்கனமவொழிவின் கணிக்குமிடத்துப் பாபான்மாக்களுக்குச்சீற்றத்தோற்றங் காட்டிநிற்றலின் கண்ணுறுசீற்றத்துக்காலன், எனவும், அச்சீற்ற முள்ளயமனும் சிவனடிய வரைக்காணின் தன் சீற்றம் ஒதுங்க அவர்களிடம் வராது நீங்குவனுதலின் காலனைவதையா எ - ம், மீதானமாகியதிருவடி பற்றுசக் கொண்டார்க்கு ஏனைய இன்பங்களும் அவ்வின்பங்களை யனுபவிக்கக்கொண்ட பிறப்பிறப்புக்களுந் தாழ்ந்தவையாய்ப் புலப்படுமாதலின் இறப்பையும் பிறப்பையு மிகழ்ந்து, எ - ம், புண்ணியப்பிறவியாய் வேண்டுவோர் விரும்பியவண்ணம் உபகரிக்கும் தேவர் ஆ, ஆகியகாமதேனு வின்கன்றினைக் காணும் தேவர் முதலியோர் அதனைப்பணிந்து பணிகேட்பாரன்றி யதனை யூறு செய்யாராதலின் அக்கன்றுதனக்கொருபயமின்றித்திரியவல்லும், அவ்வாறு இறைவன் திருவருள் கைவந்தார்காலபயமின்றி யொழுகலாமென்பார் தேவராவின் கன்று எ-ம், இவ்வகைசெய்யாதார் கன்மவசத்தால் புண்ணியந் தேயபாவம் மேலிட்டு நிரயத்தழுந்துவராதலின் பாவிகள் எ-ம், முப்பழம், வருக்கை, வாழை, மா இவை கனிகளில் முந்திய வுரிமையுடையனவாதலின் ஏனையவொழித்து இவற்றைக் கூறினர், முப்பழத்தினையும், அறுசுவைகொண்ட கறி முதலியவற்றையும், அன்னத்தினையும் எனப்பொருள் கொள்ளினுமாம். உண்ணுதற்கினிதாய்ப் பல மணப்பொருள்களிட்டு இருத்தலின் நாற்றமிட்டிருப்ப எனவுங்கூறினர்.

நேரிசைவெண்பா.

அன்றென்று மாமென்று மாறுசம யங்க
ளொன்றொன்றோ டொவ்வா துரைத்தாலு - மென்று
மொருதனையே நோக்குவா ருள்ளத் திருக்கு
மருதனையே நோக்கி வரும். (கஎ)

(இ - ள்.) ஆறுசமயங்கள் - ஆறுவகைச் சமயங்களும், அன்று என்றும் - இதுபொருள் அல்ல என்றும், ஆம் என்றும் - இதுவே பொருள் என்றும், ஒன்றொடு ஒன்று - ஒன்றுடன் ஒன்று, ஒவ்வாது - பொருந்தாமல், உரைத்தாலும் - பொருள் நிச்சயங்கூறினும், என்றும் - எக்காலத்தும், ஒருதனையே - தனித்தோனாகிய தன்னையே, நோக்குவார் - உள்ளக்கண்ணால் நோக்கித்தியானிப்பவரது, உள்ளத்து - மனமாகிய கோயிலின்கண், இருக்கும் - எழுந்தருளியிருக்கும், மருதனையே - மருதவாணனையே, நோக்கிவரும் - நோக்கி முடிவுபெறும் எ - று.

ஆறுவகைச் சமயங்களும் அவற்றின் பொருண்முடிவுகளை யொன்றொடொன்று பொருத்தமில்லாது கூறினும் முடிவில் அவை சிவமூர்த்தியையே யெண்ணி முடிவுபெறும்.

(கு - ரை). ஆறுசமயங்கள் எனப் பொதுப்படக் கூறினாராயினும் அவை அகச்சமயம் புறச்சமயம் என ஒவ்வொன்றும் அறுவகைப்படும். இவற்றுள் அகச்சமயம் ஆறுவன, வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம்; என்பனவாம். புறச்சமயம் ஆறுவன, உலகாயதம், புத்தம், சமணம், மீமாம்சம், பாஞ்சராத்ரம், பாட்டாசாரியம் என்பனவாம். இவற்றுள், வைரவம், அநாதியில் வயிரவன் ஒருவனே எட்டு வயிரவனாய் அவ்வெட்டு பயிரவரும் எட்டுக்களையாய் இந்த வயிரவரே எட்டு ஆஞ்ஞையுமாவர். இவ்வெட்டு ஆஞ்ஞையால் எட்டுப் பைரவர் எட்டுச் சாத்திரமுண்டாக்கினர். இவை போக யோகங்களைக்கூறும். இதில் நால்வரால் சநநமரணப்படுவது பெத்தநிலை, நால்வரால் யோகமாய் மதுவுண்டு பயிரவமந்திரதியானபூசையாலே துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனஞ்செய்து வயிரவனை யடைகிறது மோக்ஷம் என்றறிக.

வாமம், சிற்சத்தி நாமரூபகிரியாரகிதமாய் ஒன்றாயிருப்பது தடத்தலக்ஷணம், இனிப் பஞ்சமகாபாதக முதலியவற்றைத் தேவிச்செயல் என்னாமல் தன்செயல்களாய்க்கொண்டு சுவர்க்க நரகங்களை யநுபவிப்பது பெத்தநிலை. இவையனைத்து மவள்தொழில் என்செயலன்றென வுணர்ந்து சக்கரபூசை செய்வது மோக்ஷமென்றறிக. இச்சமயத்தவர் ஆனந்தமே ஆத்மா என்பர். முத்தியும் அதுவென்ப. காளாமுகம் - சிவன் ஒருவனுளன் ஆன்மாக்களநாதியில் மலத்திரயங்களுடன் கூடியிருப்பர் மும்மலங்களு மநாதியிலுண்டு என்பர். இவர்கள் சடைமுடி முதலான சிவசின்னங்களைத் தரித்துக் கொலையாதி தொழில்களை நீக்கி வினையாலுடலம் விழும்போது சிவத்யானத்தால் முத்திபெறுவர். இவர்கள் ஆன்மா நித்யவியாபக சைதன்யன் என்பவர். மகாவிரதிமதமாவது, பதிப்பொருளாகிய இறைவன் கிரியாசத்தியொழிய

ஞானசத்தியைக்கொண்டு ஆன்மாக்களைப் பெத்தாவத்தைபடச் செய்வன். எனவும், மும்மலங்களாலும் அநாதியில் பந்தப்பட்ட ஆன்மாக்கள் மாயையால் தனுகரண புவனபோகங்களையடைந்து மலபரிபாகமடைந்த மாத்திரையில் தீக்ஷையால் மும்மலங்களுநீங்கிக்கருத்திருத்வ சங்காரத்தைவிட்டுச் சிவனது ஞானசத்தியொன்றைப் பெற்றவராய்ச் சிவபதவியில் ஞானமாத்திரம் பெற்றிருப்பர் என்பது. பாசுபதமாவது - பசுக்கள், கன்மத்தால் தனுகரண புவனபோகங்களுடன்கூடிப் பந்தப்பட்டுச் சநநமரணமடைந்து பரிபாககாலத்தில் ஆணவமொன்று நீங்க ஆசாரியமூர்த்தியாயெழுந்தருளின சிவமூர்த்தியால் மாயாகன்மங்கள் தீக்ஷையில் அத்வாசோதனையில் நீக்கப்பட்டு நித்யவியாபக சைதன்யராய்ப்பாலுடன் பாலும், நீருடனீரும் கூடினதுபோல் கலப்பர் என்பது. சைவம் பலதிறப்படும் அவற்றுள் சுத்தசைவசித்தாந்தமே ஏற்றமுடையது அதனை விரிப்பிற் பெருகுமாதலின தனது சித்தாந்தத்தினை ஸ்ரீ சிவஞானபோத முதலிய சைவநூற்களிற் கண்டுணர்க. மேலகச்சமயங் கூறினும். இனிப் புறச்சமயங்களாறினுலகாயதர் தேகமே யாத்மா வெனவும் அன்றி யிந்திரியமே யாத்மா எனவும் மரணமே மோக்ஷமெனவுங் கூறுவர். புத்தர் - ஆன்மா புத்தியே எனவும் சுகதுக்காதிகளால் மயக்கப்படாமலிருக்கும் சுத்தபுத்தி சந்ததியே மோக்ஷமெனவும் கூறுவர். சமணன் - ஆத்மன், தேகாதிவிலக்ஷணனாய்த்தேகபரிணமிதனாய்ப் பரிணமிதமத்யையில் சங்கோசவிகாச தர்ம்மயுக்தனாயிருபபவன் எனவும் ஆகாசமத்தியத்துள் உத்தரோத்தர கமனமே மோக்ஷம் என்பன். மீமாம்சகர் - ஆன்மா, ஸ்வதப்பிரமாண ஞானஸ்வரூபன் எனவும், சுவர்க்காதிலோக ப்ராப்தியே மோக்ஷம் எனவும் கூறுவர்.

பாஞ்சராத்திரியர் - ஆன்மா, நாடி மத்யகதனாய் அணுப்பிரமாணன் என்றும், வாசுதேவாத்மக பிரகிருதியில் ஸ்வரூப ஆனியில்லாதடங்குதலே முக்தியெனவுங் கூறுவர். பாட்டாசாரியர் - ஆத்மா, ஞானஸ்வரூபன் எனவும், வேதங்கூறிய காமங்களைவிடாது யாக முதலியவற்றைச் செய்து முத்தியடைதல்வீடு என்பர். மேற்கூறிய அகப்புறச்சமயங்களின் பந்தமுத்தி நிலைகள் ஒன்றுடனொன்று வொவ்வாமையின் ஒன்றொடொன்றொவ்வாதுரைத்தாலுமென்றார். புலன்கள் சென்ற வழிசெல்லாது மனதினைத் தம்வயப்படுத்தியிறைவன் திருவடிக்கண் லயப்படுத்தும் மகான்கள் என்பார் என்றும் ஒருதனையே நோக்குவார் எனவும் அவ்வுள்ளத்தை நீங்காது கோயிலாக்கொண்வானு என்பார் இருக்கும் எனவும் கூறினா. இச்சமயங்கள் பலதிறப்படக் கூறினும் நாத்திகங்கூறும் உலகாயதம், சைநம், பௌத்தம் ஆகிய அவைதிகர்களொழிய மற்றை வைதிகசாத்திரிகள் எத்தெய்வங்களைப் பரமெனினும் மரத்தினடியில்விட்ட நீரவலார் இலை காய் பூ கனி முதலியவற்றினையடைதல்போல் இறைவனை நோக்கிச் செய்தவையேயாம் ஆதலின் மருதனையே நோக்கிவரும் என்றார.

கட்டளைக்கலித்துறை.

நோக்கிற் றுக் காம னுடல்பொடியாக நுதிவிரலாற்
றாக்கிற் றரக்கன் றலைகீழ்ப் படத்தன் சுடர்வடிவா
ளோக்கிற் றுத்தக்கன் றலைபுருண் டோடச் சலந்தரனைப்
போக்கிற் றுயிர்பொன்னி சூழ்மருதா னுடைப் புண்ணியமே. (௧௮

(இ - ள்.) பொன்னிசூழ் - காவிரியாற் சூழப்பட்ட, மருதா - திருவிடைமருதூரில், ஆள்உடை - என்னை யடிமையாகக்கொண்ட, புண்ணியம் - புண்ணிய ஸ்வரூபியாகிய சிவம், காமன் உடல் - தன்னை மதியாத மன்மதனுடலை, பொடியாக - புழுதியாகமாறும்படி, நோக்கிற்று - திருநேத்திரத்தால் நோக்கி யநுக்கிரகித்தது, அரக்கன் - இராவணாசுரனது, தலை - பத்துச்சிரங்களும், கீழ்பட - பூமியில் பதியும்படி, தன் நுதிவிரலால் - தனது கூர்மையாகிய விரலினால், தாக்கிற்று - அழுத்தி யநுக்கிரகித்தது, தக்கன்தலை - தன்னைமதியாது வேள்விசெய்த தக்கனது தலை, உருண்டு ஓட - உருண்டு கெட, சுடர்வடிவாள் - பிரகாசந்தங்கிய கூர்மையாகிய வாளினை, ஒக்கிற்று - வீசியநுக்ரகித்தது, சலந்தரனை - சலந்தராசுரனை, உயிர்போக்கிற்று - (தமது திருவிரலாலியற்றிய சக்கரத்தைக்கொண்டு) உயிர்நீங்கி நற்கதியடைய அநுக்ரகித்து எ-று.

இறைவன்; காமன் இராவணன் தக்கன் சலந்தரனாகிய நால்வர் மாட்டும் அவர்கொண்ட செருக்கினைப்போக்கி அநுக்கிரகித்தான் என்பது கருத்து. இவ்வகைகூறியதனானே நிக்ரகத்தால் அநுக்ரகம் கூறியதாம்.

(கு - ரை.) இறைவன் யோகத்திருந்த காலத்து எவ்வுயிரு மின்பமிலாது அசைவற்றிருந்த தேவர் மன்மதனைவேண்டி யிறைவனுக்கு இறைவியிடன் காதலுண்டாக்கும் அம்புகளை யேவக்கட்டளையிட்டபோது மன்மதனஞ்சி மறுக்கத் தேவர் சாபமிடத் தொடங்குகையில் சாபத்திலிறத்தலினு மிறைவனாலிறக்கின் ஒருக்கால் மீட்சியுண்டாமெனவுடன்பட்டு இறைவன்மீது பாணங்களையேவி இறைவனது நெற்றித்தீயா லழிவுற்றனன். பின்னர் ரதி வேண்ட அவன் அவளுக்குமாத்திரம் உருக்கொண்டிருக்கவும் மற்றவர்க்கு உருவிலியாகவும் அநுக்கிரகித்தமையின் நோக்கிற்று...பொடியாக என்றார். இராவணன் தன்தாய் சிவதரிசனத்தின் பொருட்டுத் திருக்கைலையைக்கொணர்தரப்பதத்தின்வலிகொண்டு பெயர்க்கச் சர்வவல்லவனாகியசிவமூர்த்தி இவனது செருக்கையடக்கி யாள்வான் கருதித் தமது திருவிரலொன்றைச் சிறிதழுத்த இராவணனது கரங்களும் புஜமுடிசுங்கத் தலைகீழாய்க்கிடந்து இறைவனை வணங்கி யநுக்ரகம் பெற்றமைதோன்ற நுதி...அரக்கன் தலைகீழ்பட என்றார். பிறர் தன்னுடனிருக்கும் வலியாலும் தான் பிரஜாபதிகளிலொருவன் எனுஞ் செருக்காலும் இறைவனை மதியாமல் யாகஞ்செய்து இறைவனுக்குக்கொடுக்கும் அவிசைத்தராததனால் வீரபத்திரரால் தலையுருளப்பெற்று ஆட்டுத்தலைபெற அநுக்ரகம் பெற்றதனால் சுடர்.. உருண்டோட என்றார். சலந்தராசுரன் என்பவன் தன்வலிமையால் செருக்குற்றுத் திக்குவிஜயஞ்செய்துகொண்டு கைலாயத்தைநோக்கிச் செல்லுகையில் சிவமூர்த்தியோர் விருத்தவேதியரா யெதிர்கொண்டு அசுரனைநோக்கி யெங்குச்செல்கின்றனை யென வினவ நான் சிவமூர்த்திமீது யுத்தத்திற்குச் செல்கின்றேனென ஆயின் நான் பதத்தால் கிழிக்கும் இந்தப் பூமியை யெடுக்க என அவ்வாறே யுடன்பட்டு எடுக்கத்தொடங்கிப் பூமியை யடியுடன் சேர்த்துத் தூக்குகையில் தலையிடை வரும் அதுவே சக்கரமாய்த் தலையை யரிந்தது அதனால் உயிரிழந்தனனாதலின் சலந்தரனை...போக்கிற்றுயிர் என்றார். காமனைக்

கூறியதால் நிஷ்காமன் என்பதும், இராவணனைக் கூறியதனால் மகாவன்மையன் என்பதும், தக்கனைக் கூறியதனால் சுற்றமிலியென்பதும், சலந்தரனை கூறியதனால் அவனின் தாள்வலிமையும் கூறியதாயிற்று.

நேரிசையாசிரியப்பா.

புண்ணிய புராதன புதுப்பூங் கொன்றைக்
கண்ணிவேய்ந்த கைலை நாயக
காளகண்ட கந்தனைப் பயந்த
வாளரி நெடுங்கண் மலையாள் கொழுந
பூத நாத பொருவிடைப் பாக
வேத கீத விண்ணோர் தலைவ
முத்தி நாயக மூவா முதல்வ
பத்தி யாகிப் பணைத்தமெய் யன்பொடு
நொச்சி யாயினுங் காந்தை யாயினும்
பச்சிலை யிட்டுப் பரவுந் தொண்டர்
கருவிடைப் புகாமற் காத்தருள் புரியுந்
திருவிடை மருத திரிபு ராந்தக
மலர்தலை யுலகத்துப் பலபல மாக்கண்
மக்களை மனைவியை யொக்கலை யொரீஇ
மனையும் பிறவுந் துறந்து நினைவருங்
காடு மலையும் புக்குக் கோடையிற்
கைம்மே னிமிர்த்துக் காலொன்று முடக்கி
யைவகை நெருப்பி னழுவத்து நின்று
மாரி நாளினும் வார்பனி நாளினு
நீரிடை மூழ்கி நெடிது கிடந்துஞ்
சடையைப் புனைந்துந் தலையைப் பறித்து
முடையைத் துறந்து முண்ணா துழன்றுங்
காயுங் கிழங்குங் காற்றுதிர் சருகும்
வாயுவு நீரும் வந்தன வருந்தியுங்
களரினுங் கல்லினுங் கண்படை கொண்டுந்
தளர்வுறு மியாக்கையைத் தளர்வித் தாங்கவ
ரம்மை முத்தி யடைவதற் காகத்
தம்மைத் தாமே சாலவு மொறுப்ப
ரிங்கிவை செய்யா தியாங்க ளெல்லாம்
பழுதின் றுயர்ந்த வெழுநிலை மாடத்துஞ்
செந்தா துதிர்ந்த நந்தா வனத்துந்

தென்ற லியங்கு முன்றி லகத்துந்
தண்டாச் சித்திர மண்டப மருங்கிலும்
பூவிரி தரங்க வாவிக் கரையிலு
மயிற்பெடை யாலக் குயிற்றிய குன்றிலும்
வேண்டுழி வேண்டுழி யாண்டாண் டிட்ட
மருப்பினி யன்ற வாளரி சுமந்த
விருப்புறு கட்டின மீமிசைப் படுத்த
வைவகை யமளி யணைமேற் பொங்கத்
தண்மலர் கமழும் வெண்மடி விரித்துப்
பட்டினுட் பெய்த பதநுண் பஞ்சி
னொட்டணை யருகாக் கொட்டைகள் பரப்பிப்
பாயன மீது பரிபுர மிழற்றச்
சாயலன் னத்தின் றளர்நடை பயிற்றிப்
பொற்சே ரணைத்தச் சுற்றிய துகிலெனு
வமமென் குறங்கி னுமமென் கலிங்கங்
கண்ணு மனமுங் கவற்றிப் பண்வர
விரங்குமணி மேகலை யொருங்குடன் கிடந்
வாடா வல்கு லரும்பெற லுசுப்பு
வாட வீங்கிய வனமுலை கதிப்ப
வணியியல் கமுகை யகநகரித் ததுபோன்
மணியிய லாரங் கதிர்விரித் தொளிர்தர
மணிவளை தாங்கு மணிகெழு மென்றோள்
வரித்த சாந்தின் மிசைவிரித் திட்ட
வுத்தரி யப்பட் டொருபா லொளிதர
வள்ளை வாட்டிய வொள்ளிரு காதொடு
பவளத் தருகாத் தாள நிரைத்தாங்கு
கொழுகி நீண்ட குமிழொன் றுபதித்துக்
காலன் வேலுங் காம பாணமு
மால காலமு மனைத்துமிட் டமைத்த
விரண்டு நாட்டமு முரண்டுகடை மிளிர்தர
மதிபெண் டாசறு வதனம் விளங்கப்
புதுவிரை யலங்கல் குழன்மிசைப் பொலியு
மஞ்சொன் மடநதைய ராகந் தோய்ந்துஞ்
சின்னம பரப்பிய பொன்னின் கலத்து
மறுசுவை யடிசில் வறிதிருந் தருந்தா
தாடினர்க் கென்றும பாடினர்க் கென்றும

வாடினர்க் கென்றும் வளையாது கொடுத்தும்
பூசுவன பூசியும் புனைவன புனைந்துந்
தூசி னல்லன தொடையிற் சேர்த்திய
மைந்து புலன்களு மார வார்ந்து
மைந்தரு மொக்கலு மனமகிழ்ந் தோங்கி
யிவ்வகை யிருந்தோ மாயினு மவ்வகை
மந்திர வெழுத் தைந்தும் வாயிடை மறவாது
சிந்தை நின்வழி செலுத்தலி னந்த
முத்தியு மிழந்தில முதல்வவத் திற
நின்னது பெருமை யன்றோ வென்னின்
வல்லா னொருவன் கைம்முயன் றெறியினு
மாட்டா வொருவன் வாளா வெறியினு
நிலத்தின் வழாஅக் கல்லே போ
லலத்தின் வழார்நின் னுமருவின்றோரே. (கசு)

(இ - ள்.) புண்ணிய - புண்ணியஸ்வரூபியாயுள்ளானே, புராதன - முன்னோனே, புது - அலரலர்ந்த, பூ கொன்றை - கொன்றைமலர்களாலாகிய, கண்ணி - மாலையினை, வேய்ந்த - சூடிய, கைலை நாயக - திருக்கைலைக்குத் தலைவனே, காளகண்ட-விஷக்கறை தங்கிய திருக்கண்ட முடையானே-கந்தனை - குமாரக் கடவுளை, பயந்த - பெற்ற, வாள் அரி - ஒளியுள்ள செவ்வரி படர்ந்த, நெடுங்கண - பரந்த திருநேத்திரங்களையுடைய, மலையாள் கொழுந - மலைமகளுக்குக் கொழுநனே, பூதநாத - சர்வபூதங்களுக்குத் தலைவனே, பொருவிடைப்பாக - போர் செய்கின்ற இடபத்தை யூர்ந்தானே, வேதகீத - வேதத்தையே கீதமாக வுடையானே, விண்ணோர் தலைவ - தேவர்களுக்குத் தலைவனே, முத்திநாயக - முத்தி முதல்வனே, மூவா முதல்வ - கெடாத முதற்பொருளே, பத்தியாகி - பத்தியுடன், பணைத்த - கிளைத்த, மெய் அன்பொடு - உண்மையாகிய அன்பினுடன், நொச்சி ஆயினும் - நொச்சியிலையாயினும், கரந்தையாயினும் - கரந்தைப் பத்திரமாயினும், பச்சிலை யிட்டு - பச்சிலையா லருச்சித்து, பரவும் தொண்டர் - வணங்கும் அடியவர்கள், கரு இடை - கருவில், புகாமல் - நுழையாவாறு, காத்து அருள் புரியும் - காத்து அருள் செய்கின்ற, திரு இடைமருத - திருவிடைமருதூரைத் திருப்பதியாகக் கொண்டானே, திரிபுராந்தக - திரிபுராரியே, மலர்தலை உலகத்து - பரந்த இடத்தையுடைய உலகத்தில், பல பல மாக்கள் - பலவகைப்பட்ட மனிதர், மக்களை - பிள்ளைகளையும், மனைவியை - பெண்டையும், ஒக்கலை - சுற்றத்தவரையும், ஒரீஇ - நீங்கி, மனையும் - வீட்டினையும், பிறவும் - மற்றப் பொருள்களையும், துறந்து - நீங்கி, நினைவு அரும்-நினைத்தற் கருமையாகிய, காடு மலையும் புக்கு - காடுகளிலும் மலைகளிலும் சென்று, கோடையில் - கோடைகாலத்து, கைமேனிமிர்த்து - கைகளிரண்டினையும் மேலுயர்த்திக்கொண்டு, கால் ஒன்று - ஒரு காலினை, முடக்கி - முடக்கிக்கொண்டு, ஐவகை நெருப்பின் - பஞ்சாக்னியின், அழுவத்து - நடு இடத்தில், நின்று - நின்று தவஞ்செய்து, மாரி நாளிலும் - மழைக்காலத்தும், வார் பனி நாளி

லும் - மிக்க பனிக்காலத்தும், நீர் இடை மூழ்கி - நீரில் மூழ்கி, நெடிது கிடந்தும் - நெடுநாளிருந்தும், சடையைப் புனைந்தும் - சடையை முடித்தும், தலையைபறித்தும்-தலையிலுள்ள உரோமங்களைப்பறித்தும், உடையைத் துறந்தும் - ஆடையை நீக்கியும், உண்ணாது - பசிக்கு உணவாதிகளை யருந்தாமல், உழன்றும் - திரிந்தும், காயும் - பழுக்காத காய்களையும், கிழங்கும் - கிழங்குகளையும், காற்று உதிர் - காற்றால் உதிர்க்கப்பட்ட, சருகும் - சருகுகளையும், வாயுவும் - காற்றினையும், நீரும் - ஜலத்தினையும், வந்தன - வாய்க்கு அருகடைந்தவைகளையும், அருந்தியும்-உண்டும், களரிலும் - உப்புக் களர் நிலத்திலும், கல்லிலும் - பாறை நிலத்திலும், கண் படை கொண்டும் - உறங்கியும், தளர் வுறும் - தளர்தற் கமைந்த, யாக்கையை - தேகத்தை, தளர்வித்து - தளர்வுறச்செய்து, அவர் - அந்த நல்லோர், அம்மை முத்தியடைவதற்காக - மறுமையில் முத்தியடைதற்காக, தம்மைத் தாமே - தம்மையே, ஆங்கு - அக்காலத்து, சாலவும் ஒறுப்பர் - மிகவும் வருத்திக்கொள்வர், யாங்கள் எல்லாம் - நாங்களனைவரும், ஈங்கு - இவ்வுலகத்து, இவை - இவ்வகைப்பட்ட செயல்களை, செய்யாது - செய்யாமல், பழுது இன்று - சிற்பநூற் குற்றமிலாமல், உயர்ந்த - உயர்ந்துள்ள, எழு நிலை மாடத்தும் - எழு நிலைகளுள்ள உப்பரிகைகளிலும், செம் தாது - அழகிய மகரந்தங்கள், உதிர்ந்த - உதிர்ந்துள்ள, நந்தாவனத்தும்-நந்தவனமாகிய பூங்காவிலும், தென்றல் இயங்கும் - தென்றல் காற்று உலாவும், முன்றிலகத்தும் - முன்னிடங்களிலும், தண்டா - கெடாத, சித்திர மண்டப மருங்கிலும் - சித்திர மண்டபத்தின் பக்கங்களிலும், பூவிரி - தாமரைகள் மலர்ந்த, தரங்கம் - அலைகளையுடைய, வாவிக் கரையிலும் - தடாகத்தின் கரையிலும், மயில் பெடை - மயிலின் பெட்டைகள், ஆல - களிப்புடனகவ, குயிற்றிய - செய்வித்த, குன்றிலும் - செய்குன்றிலும், வேண்டுழி வேண்டுழி - விரும்புகையில் விரும்புகையில், ஆண்டாண்டு - அவ்வவ்விடங்களில், இட்ட - வைத்த, மருப்பின் இயன்ற - தந்தத்தாற் செய்வித்த, வாள் அரி - ஒளியுள்ள சிங்கங்களாற் சுமக்கப்பெற்ற, விருப்புறு - விருப்பம் அமைந்த, கட்டில் மீமிசை - கட்டிலின் மீது, படுத்த - விரித்த, ஐவகை அமளி அணை - ஐந்துவகைப் படுக்கையாலாகிய அணைகள், மேல் பொங்க - மேலெழுந்து விளங்க, தண்மலர் - குளிர்ந்த மலர்கள், கமழும் - பரிமளிக்கும், வெண்மடி விரித்து - வெள்ளையாகிய வஸ்திரத்தை விரித்து, பட்டின் உள் பெய்த - பட்டுறையுள்ளிட்ட, பதம் - ஆய்ந்தெடுத்த, நுண் பஞ்சின் - நுட்பமாகிய பஞ்சியின், நெடு அணை அருகா - நீண்ட அணைக்கு அருகில், கொட்டைகள் பரப்பி - தலையணைகளைப் பரப்பி, பாயல் மீது-படுக்கையில், பரிபுரமிழற்ற - சிலம்பொலிசெய்ய, சாயல் அன்னத்தின்-சாயலையுடைய அன்னப்புள்ளிற்கு, தளர் நடை பயிற்றி-இளகிய நடையைப் பழக்கி, பொன் தோரணத்தை-பொன்னின் தோரணத்தினை, சுற்றியதுகில் என - சுற்றியுள்ள துகிற்சீலை யெனும்படி, அம்மென் குறங்கின் - அழகிய மெல்லிய தொடைகளில், ஓம் என் கலிங்கம் - ஓம் எனும் ஓசையினுடைய பட்டாடை, கண்ணும் மனமும் - கண்ணினையும் மனத்தினையும், கவற்றிப் பண்வர - தன் வசப்படுத்தி யழகுசெய்ய, இரங்கு - ஒலிக்கின்ற, மணிமே

கலை - மணிகளாகிய மேகலாபரணம், ஒருங்கு உடன் கிடந்த - முழுதும் தங்கிய, ஆடு அரவு அல்குல் - ஆடுகின்ற அரவினையொத்த அல்குலும், அரும்பெறல் நுசுப்பு - பெறுதற் கருமையாகிய நுசுப்பும், வாடவீங்கிய - வாடும்படி பருத்த, வனம்முலை - அழகிய முலைகள், கதிப்ப - பூரிக்க, அணி இயல் - யழகு தங்கிய, கமுகை - பாக்குமரத்தினை, அலங்கரித்ததுபோல் - அழகுபெற அலங்கரித்ததுபோல, மணி இயல் ஆரம் - மணிகள் தங்கிய வடங்கள், கதிர்விரித்து ஒளிர்தர - கிரணத்தைச் செய்து பிரகாசிக்க, மணி வளை தாங்கும் - அழகிய சங்கினையொத்த கழுத்தினைத் தாங்குகின்ற, அணி கெழு மெல்தோள் - அழகுள்ள மிருதுவாகிய தோளில், அரித்த சாந்தின் மிசை - அரித்த சந்தனக் குழம்பின் மீது, விரித்து இட்ட - பரவ அலங்கரித்த, உத்தரியப் பட்டு - உத்தரியமாகிய புடவை, ஒரு பால் - ஒருபுறத்து, ஒளிதர - விளங்க, வள்ளை வாட்டிய - வள்ளைத் தண்டை வாடச் செய்த, ஒள் இருகாதொடு - ஒள்ளிய இரண்டுகாதுடன், பவளத்து அருகா - பவளத்துண்டி னருகாக, தரளம் நிரைத்து - முத்துக்களை முறைபட வைத்து, ஆங்கு - வைத்த அவ்விடத்து, ஒழுகி நீண்ட - மேலேறி நீண்டிருக்கின்ற, குமிழ் ஒன்று - குமிழம் பூ ஒன்றினை, பதித்து - பதியவைத்து, காலன் வேலும் - யமனது வேலாயுதமும், காம பாணமும் - காமனது அம்பும், ஆலகாலமும் - ஆலகால விஷமும், அனைத்தும் இட்டு - மற்றெல்லா விஷமுடைப் பொருள்களைக் கூட்டி, அமைத்த - அமைத்துவைத்த, இரண்டு நாட்டமும் - இரண்டு கண்களும், புரண்டு - பிறழ்ந்து, கடை மிளிர்தர - கடையில் ஒளிசெய்ய, மதி என - சந்திரனைப்போல, மாசு அறு - குற்றமற்ற, வதனம் விளங்க - முகம் பிரகாசிக்க, புதுவிரை அலங்கல் - புதிய மணந்தங்கிய மலர்மாலை, குழல்மிசை - கூந்தலில், பொலியும் - விளங்கும், அம் சொல் மடந்தையர் - அழகிய சொற்களையுடைய பெண்களின், ஆகம் தோய்ந்தும் - மார்பைத் தழுவியும், சின்னம் பரப்பிய-சிறு முட்டுகள் பரப்பியுள்ள, பொன்னின் கலத்து - பொன்னாலாகிய பாத்திரத்து, அறுசுவை அடிசில் - அறுவகைச் சுவையுள்ள போனகத்தினை, வறிது இருந்து - வாளாவிருந்து, அருந்தாது - உண்டுபசி போக்காது, ஆடினர்க்கு என்றும் - நடனஞ் செய்தார்க்கு என்றும், பாடினர்க்கு என்றும் - பாடல் பாடினவர்க்கு என்றும், வாடினர்க்கு என்றும் - வாட்டங்கொண்டார்க் கென்றும், வரையாது கொடுத்தும் - கைம்மாறு கருதாது கொடுத்தும், பூசுவன பூசியும் - பூச்சுக் களமைந்த பூச்சுக்களைப் பூசியும், புனைவன புனைந்தும் - அணியத்தக்க அணிகளை யணிந்தும், தூசின் நல்லன - ஆடைகளில் உயர்ந்தனவற்றை, தொடையில் சேர்த்தியும் - அரையிடை உடுத்தும், ஐந்து புலன்களும் - பஞ்சேந்திரியங்களும், ஆர ஆர்ந்து - மனங்களிக்க அநுபவித்து, மைந்தரும் ஒக்கலும் - புத்திரரும் சுற்றத்தவரும், மனமகிழ்ந்து - மனங்களித்து, ஓங்கி - வளர்ந்து, இவ்வகை - இக்களிப்புடன், இருந்தோம் ஆயினும் - இனி திருந்தோமாயினும், அவ்வகை - அக்களிப்புடன், மந்திர எழுத்து ஐந்தும் - (தேவரீரை முன்னிலை யாக்கும்) திருமந்திரமாகிய பஞ்சாக்ஷரங்களைந்தினையும், வாயிடை மறவாது - வாயால் செபித்தலில் மறவாமல், சிந்தை - மனதினை, நின்வழி - தேவரீரிடத்துச்

செலுத்தலின் - செலுத்தி நிற்றலால், முதல்வ - இறைவனே, அந்த முத்தியும் - அநீஷ்காமிகளாகும் பெரியோர் அடையும் வீட்டின் பத்தினையும், இழந்திலம் - இழக்கோம், அத்திறம் - (இழவாது வீட்டையும்) அவ்வலிமை, நின்னது பெருமை அன்றே - தேவரீரது சிறப்பன்றோ, என்னெனின் - அது எவ்வகையெனின், வல்லான் ஒருவன் - வலியமைந்த ஒருவன், கைமுயன்று மிக்க முயற்சியுடன், எறியினும் - ஆகாயத்தில் கல்லைவிட்டெறியினும் மாட்டா ஒருவன் - வலியில்லா மற்றொருவன், வாளா எறியினும் - வலிகொண்டு எறியாமல் சும்மா எறியினும், நிலத்தின்வழா - நிலத்தில் வீழ்தலினின்று தவறாத, கல்லேபோல் - கல்லினைப்போல, நின் நாமம் - தேவரீரது பல்லாயிரந் திருநாமத்தில் ஒரு திருநாமத்தினை, நவின்றோர் - கூறித் துதித்தோர், நலத்தின் வழார் - அம்முத்தியாகிய நலத்தினின்று நீங்கார். எ - று. ஏ - அசை.

இறைவனே, உலகத்து மனிதர், சுற்றத்தவர் செல்வ முதலிய நீத்து காடுமலை முதலிய சென்று கோடையில் பஞ்சாக்னி மத்தியிலும், மழைக் காலத்து நீரிலிருந்தும் தம்மை வருத்தித் தவம்புரிந்து முத்தியடைய நோலா நிற்பர். யாமோ எனின், ஏழுநிலை மாடத்துச் சகல போகங்களையு மநுபவித்துப் பெண்களுடன் சுகித்துளேமாயினும், உனது திருநாமத்தை மனத்திற்கொண்டு வாயாற் ஜெபித்தலினின்று நீங்கோமாதலின் அந்த முத்தியை நாங்களு மிழந்திலேம் என்பது கருத்து.

(கு - ரை) எல்லா ஆன்மாக்களையும் அவர்களுக் குரியமலங்களைப் போக்கித் திருவடியி லடைக்கும் பெரும் புண்ணிய சீலனாதலின் புண்ணிய எனவும், எக்காலத்தும் அழியாதாதலின் புராதன, எ-ம், எல்லா ஆன்மாக்களும் சர்வசங்கார காலத்துப் பூதவுருவுடனிறைவனை யடைந்து அவனேவல் வழி நிற்பராதலின் பூதநாத எ - ம், ஏனைய தேவரிவன் வழிநின்று பணிகேட்போரேயன்றி முத்திதர வல்லாரல்லர் இவனே முத்திமுதல்வன் என்பார் முத்திநாயக, எ-ம். இவனை யோகமுதலியதவத்தாலும், ஏனையகருமங்களாலும் பூசிக்கவேண்டுவதின்று பச்சிலையாகிய நொச்சிகரந்தை முதலிய வற்றிலொன்றாலருச்சிக்கின் மனமகிழ்ந்து முத்திதருவான் என்பார் பச்சிலையிட்டு, எ-ம். பலபலமாக்கள் என்றதற்கேற்ப, காடுமலை முதலியபல செய்கைகள் கூறப்பட்டன. முண்டிதஞ் செய்வோரும் சடைமுடிபுனைவோருமாகிய தாபதவடிவத்தைநோக்கிச் சடையைப்புனைந்தும் தலையைப்பறித்தும், எ-ம். தவத்தில் தம்மையறியாது அவன் திருவடியின்லயப் பட்டிருந்து சிறிது ஒழிவில் பசிவரின் அதைவிலக்க அருகிருந்த ஏதேனுமொன்றை வருந்தலிலாது புசிப்பர் என்பார் வந்தன அருந்தியும், எ-ம். இவ்வகைகாயத்தைக் கற்ப முதலியவுண்டுதிடம் பெறச்செய்யினும் அது சிறிது நாளில் தளர்ந்து கெடுதல் பற்றித்தளர்வுறும் யாக்கை, எ-ம். பலநாள் வருந்தித்தவம் புரிந்து இம்மைக்கண்ணே இறைவன் திருவடியடைவான் வேண்டியிவ்வாறு தம்மைத் தாமேதளர்விப்பார் என்பார் சாலவும்ஒறுப்பர், எ-ம். மேல் உயிரையும் அதனை இடமாக்கொண்ட உடம்பையும் ஒறுத்தல் உயிர்க்கொலை செய்தலோடொக்குமாதலின்யாம் அச்செயல்செய்யோம் என்பார் ஈங்கிவைசெய்யாது, எ-ம்,

கூறினார், சிற்பநூலிற் கூறியவகையியற்றிய மாடம் என்பார் பழுதின்று யர்ந்த, எ-ம். செய்குன்றுதலின் குயிற்றியகுன்று, எ-ம். தந்தத்தால் சிங்கத்தினுருக்கொண்டபிரதிமைகள் சுமக்கச்செய்த கட்டிலாதலின்மருப்பிணி...கட்டில்என்றார். ஐவகையமறியாவன இலவு, செம்பஞ்சு, வெண்பஞ்சு, மயிர், அன்னத்தூவி, இவற்றாற்செய்யப்பட்டன. பொற்றோரணத்தைச் சுற்றியதுகில் நற்சேலையுடுத்த பெண்ணிற்குவமை, குரங்குதொடையேயாயினும் உடுப்பதிடையிலாதலால் உறுப்பிறப்பியொற்றுமையாற் கூறினார். புடைவையின் புதுமைநோக்கி ஒம்மெனகலிங்க மென்றார். பவளம்போலு மிதழுள்ளவாயைப் பவளமென்றார். ஈண்டுதாளமென்றது பற்களை, குமிழென்றது அதையொத்த மூக்கினை. ஆகந்தோய்தல் இடக்கரடக்கல். சின்னம், உண்கலமாகிய சிறுமுட்டிகளையாம். பொன்னின்கலம் என்பதற்குப் பொன்னாலாகிய இனியகலம் என்னினுமாம். அறுசுவையடிசில் என்பதன் கண்மகரத்தைப் பிரியாது மறுசுவை எனக்கொண்டு மறுக்கப்பட்டவைகளாகிய கடின பதார்த்தங்களையருந்தாது வறிதிருந்து எனப்பொருள் கொள்ளினுமாம். இதனை "மறுசிகை நீக்கியுண்டாரும்." என்பதாலறிக. தம்மையுமொக்கலையுந் தம்முடன் படுத்தியிருந்தோமென்றார். தன்னை மனனஞ்செய்வானது மலத்தினைப்போக்கிக் காக்க வல்லதாகிய மந்திரமாதாவாதலின் மந்திர எழுத்தைந்து என்றார். வாயிடை என்றதனுன் ஒரு மொழியொழி தன்னினங்கொளற் குரித்தேயென்றதனுன் மனமுங்கொள்ளப்பட்டது. இவ்வாறு தேவரீரைத் தியானிக்கச்செய்யுஞ்செயலும் தேவரீரது சத்திநிபாதமின்றி முடியாதாதலின் அத்திறநின்னது பெருமையன்றோ என்றார். ஐவகைநெருப்புப்பஞ்சாக்னியவை காருகபத்தியம், ஆகவனீயம், தக்ஷிணாக்னி, சூரியன், ஆத்மா, என்பன.

நேரிசைவெண்பா.

நாமநவிற் றாய்மனனே நாரியர்கடோ டோய்ந்து
காமநவிற்றிக் கழிந் தொழிய - லாமோ
பொருந வனத்தானையுரி போர்த்தருளு மெங்கண்
மருத வனத் தானை வளைந்து. (௨0)

(இ - ள்) மனனே - மனமே, பொருதவனத்து - போர்செய்யும் தாசத்தினைக்கொண்ட, ஆனை - கஜாசுரனுடைய, உரி - தோலினை, போர்த்து - உரித்துப்போர்த்து, அருளும் - தேவர்களுக்கருள்புரியும், எங்கள் மருதவனத்தானை - எங்கள் மருதவனத்து எழுந்தருளிய சிவமூர்த்தியை, வளைந்து - பணிந்து, நாமம் - அவனது திருநாமத்திலொன்றை, நவிற்றாய் - கூறித்துதித்திலை, நாரியர்கள் - பெண்களது, தோள் தோய்ந்து - தோளில் அழுந்தி, காமம் நவிற்றி - காமத்திற்குரிய மதம் பிறக்குஞ்சொற்களைப்பேசி, கழிந்து - ஆயுளைவீணாகப்போக்கி, ஒழியல் - மாண்டுபோகல், ஆமோ - நற்செயல் ஆகுமா, (ஆகாது) என்றபடி, எ-று.

மனமே இறைவனைப்பணிந்து அவன் திருப்பெயரைக்கூறாய் நாரியர்கள் தாள்தோய்ந்து காமத்தினைக்கூறிச் சாதல் தக்கதோ என்பது கருத்து.

(கு - ரை) 'ஓதவனுமமுறையவன் பல்குணமுன்னே விட்டேன், போதவன்பின்னே பொருந்தவன் வாழ்க்கை திருந்தச்சென்று, மாதவமாகிடு மாதவமாவளர் புன்சடையான், யாதவன்சொன்னானது கொண்டொழியினியாரணங்கே.' எ-ம். கூறுமினீசனைச் செய்மின்குற்றேவல் குளிர்மின்கண்கள், தேறுமின்சித்தந் தெளிமின் சிவனைச்செறுமின்செற்றம், ஆறுமின் வேட்கையறுமினவலமிவை நெறியா, யேறுமின்வானத் திருமின்விருந்தாயிமையவர்க்கே.' என்பதனுனிறைவன் திருப்பெயரில் ஒன்றினைக்கூறின் பல்பிறப்பிற்செய்த பாபங்களெல்லாம் பஞ்சுப்பொதிக்கணிட்ட தீப்போல் ஒழிந்து சுத்தனுவனுதலின் நாமநவிற்றாய் என்றார். கண்டாரை விரும்புந்தன்மையுடையமனமாதலின் ஒருத்தியைக்கூறுது நாரியர்கள் என்பன்மைப்பற்றிக் கூறினூர். அந்நாரியர்க்குத் தன்னிடம் அன்புண்டாம் வகைசரசமான சொற்களைக் கூறித்தம்வயப்படுத்தித் தன்காதலைத் தணிக்கும் உள்ளமுடையனுதலின் காமநவிற்றி என்றார். இவ்வாறு சின்னாளாகிய வாழ்நாளில் பல்லார்தோள் தோய்ந்து பாழ்பட்டுக்கருணாநிதியாகிய இறைவனை யெண்ணுது இறுதிக்கண் நிரயத்தழுந்துஞ் செயலைக்கைக்கொண்டு புண்ணியமிழத்தலின் கழிந்தொழியலாமோ என்றார், கசாசுரன் என்பான் யானையுருக்கொண்டு தேவர்களை வருத்தியிறைவனிடத்து எதிர்த்து இறைவனை விழுங்கவர அவனுட்புகுந்து வெளிப்பட்டு அவனது தோலையுரித்துத் தேவர்வேண்ட வுரியாக அணிந்தாணுகலின் பொருதவன...போர்த்தருளும் என்றார். இறைவன் தம்மிடத்துச்செய்த பெருங்கருணையை யெண்ணுந்தோறுமுண்டாம் பேரானந்தத்தின் மிகுதி நோக்கி எங்கண்மருதவனத்தான் என்றார். இறைவன் கசாசுரனதுயிர் போக்கி அவனை நிக்கிரகிக்காது ஆண்டருள் செய்தான் என்பார் அருளும் என்றார். இதனுலிறைவனது நிக்கிரகத்தொழிலும் அநுக்கிரகமே குறித்து நின்றது என்பது குறிப்பிக்கப்பட்டது. இறைவனுக்கு அவனிடத்து அடியவர்செய்யும் சரியை கிரியைகள் மிக்க விருப்பினைச்செய்யும் என்பதை அடியவர்கள் செய்து முத்தியடைந்த சரிதம் கூறும் பெரியபுராணவாயிலானும் கண்ணப்பர்முதலிய அடியவர்கள் அடைந்த நற்பதவியானும் அறிக. ஏனைய யோகமுதலிய வற்றினும் சரியைகிரியைக் கண்மிக்க விருப்புடையன் என்பார் வளர்ந்து என்றார்: இதனுன் நல்லோர் காமத்தை வெறுத்து இறைவன் திருவடிநிழலைவிட்டகலார் என்பது இச்செய்யுளால் கூறப்பட்டது. ஆமோ என்பதின் ஓகாரம் எதிர்மறையோடிரக்கப்பொருள் குறித்து நின்றது. நவிற்றாய் என்பதும் அவ்விரக்கப்பொருளது.

கட்டளைக்கலித்துறை.

வளையார்பசியின் வருந்தார் பிணியின் மதனனம்புக்
கிளையார்தனங்கண் டிரங்கிநில் லாரிப் பிறப்பினில்வந்
தளையார்நரகினுக் கென்கடவார்பொன் னலர்ந்தகொன்றைத்
தளையானிடைமரு தன்னடி யாரடி சார்ந்தவரே. (உக)

(இ - ள்) பொன் அலர்ந்த - பொன்போல்விரிந்த, கொன்றைத்தளையான் - கொன்றை மாலையணிந்தவனும், இடைமருதன் - திருவிடைமருதூரைத்தி

ருப்பதியாகக்கொண்டவனுமாகிய சிவமூர்த்தியின், அடியார் - தொண்டர்களின், அடிசார்ந்தவர் - திருவடிக்கண்பற்றுள்ளதொண்டர், பசியின்வளையார் - பசியால் பிறரிடஞ்சென்று யாசித்து அவர்க்கு வணக்கஞ்செய்யார், பிணியின்வருந்தார் - நோயினால் வருத்தமடையார், மதனன் அம்புக்கு - மன்மதனுடைய பஞ்சபாணங்களுக்கு, இளையார் - இளைத்துவருந்தார், தனங்கண்டு - பிறரது பொருளைக்கண்டு, இரங்கி நில்லார் - தமக்கு அவ்வகைச் செல்வம் இல்லையென்று இரக்கமுற்று நில்லார், பிறப்பினில்வந்து - பிறப்பிடை (இப்பூமியில்) பிறந்து, அளையார் - இம்மைத்துயரில் மூழ்கிவருந்தார், (இவ்வாறு துன்பமுறாத அத்தொண்டர்) நரகினுக்கு - ஏனையோர் அடையும் நரகினுக்கு, என்கடவார் - என்கடமைப்படுவர், எ-று.

சிவனடித்தொண்டர்க் கடிமைபூண்டார், பசியாலும், பிணியாலும், காமத்தாலும், பிறர்பொருள்கண்டு தமக்கஃது வேண்டுமென்னும் விருப்பத்தாலும், பிறவியெடுத்தலாலும், வருந்தார் என்பது கருத்து.

(கு-ரை.) இவ்வாறு அடியவர்க்கடிமை செய்வோரிந்நலமெய்தின்கைமித்திகழியாயத்தாலடியவர்பெறும்பேறு கூறவேண்டாவாயிற்று. இச்செய்யுள் சிவனடியவர் பெருமையும் அவரைப் பூசிப்போர் பெருமையும் கூறியதாம். பிறப்புடையர் கற்றோர் பெருஞ்செல்வர் மற்றுஞ் சிறப்புடையரானாலுஞ்சீசீ— யிறப்பில், கடியார் நறுஞ்சோலைக் காளத்தியாள்வா, ரடியாரைப் பேணாதவர். என்றதால் பெருஞ்செல்வ வாழ்க்கையராயினுஞ் சிவனடியவரைப்பேணார்விரும்பத்தக்காரல்லர். “மானங்குலங்கல்வி வண்மையறிவுடைமை தானந்தவமுயர்ச்சி தாளாண்மை தேனின்கசிவந்த சொல்லியர்மேல்காமுறுதல் பத்தும் பசிவந்திடப்பறந்துபோமாயினும் அப்பசி சிவனடியவரை வருத்தாவகையிறைவனுங் காங்குபகரித்தருளுவனாதலினது நோக்கி வளையார் பசியின் என்றார். இதனை யிறைவன், திருநாவலூராளிக்குச் சூராலக்கோயிலிற பசித்திருக்கையில் வேதியரக்ரகாரத்து ஐயமேற்று அடியவரை யமுதுசெயச் செய்த சரிதையாலறிக. பிறவிப்பிணியைவாட்டுவோற்குத்தேகப்பிணி திருநோக்கமாத்திரையில் நீங்குவதன்றியவ் வடியவர்மாட்டுஅணுகவும் அஞ்சுமாதலினானும், மற்றையர் வலிந்துசெய்விக்கும் நோய்முதலிய அவ்வடியவரையணுகாது ஏவினார்மாட்டே சென்றதைப் புராணவாயிலாகக்கேட்டுளோமாதலின் வருந்தார் பிணியின் என்றார், இவன் காமாரியாதலானும் சிவனடியவர்களுமிவனைமனமெனுங் கோயினிடைவிடாது பெற்றிருத்தலானும் மன்மதன் அவரிடைச்செல்லின் முன்போலமீண்டும் ஒருக்காலுருவிழக்குந்தண்டத்திற்கஞ்சிச்செல்லான் ஆதலின் அவ்வடியவர் காமத்தாலச்சுறுதல் சிறிதுமின்றென்பார் மதனனம் புக்கிளையார் என்றார். ஓட்டையும் பொன்னையும் ஒக்கநோக்கு மறிவாளராதலின் பிறர்வாழ்வைக்கண்டு பொறாமை முதலிய கொள்ளாரதன்கண் அவா இன்மையின் என்பார்தனங் கண்டிரங்கி நில்லார் என்றார். இவ்வாறு பசிபிணிபொருள் விழைவு, காமம் முதலிய நீத்தமையின் பேரின்பமாகிய இறைவன் திருவடிக்கண்மனஞ் செல்லுமாதலின் அவ்வின்பமேலிட்டார் நிரயத்துன்பத்தையடையார் என்பார் பிறப்பினில்வந்தடையார் நரகினுக்கென்கடவார் எனவுங் கூறினார். பசியென்பது மங்கலவழக்கு.

பொன்னலர்ந்த கொன்றைத்தளையான் என இறைவனது திருஅடையாள மாலை கூறினார் ஏனையதேவரினியைபின்மை நோக்கி. நரகினுக்கு என்கடவார் என்பதில் நரகினுக்கு எனும்நான்கனுருபை யிரண்டனுருபாகத்திரித்து நரகினையேன் கடக்கமாட்டார் என்னினுமாம்.

நேரிசை யாசிரியப்பா.

அடிசார்ந் தவர்க்கு முடியா வின்ப
நிறையக் கொடுப்பினுங் குறையாச் செல்வ
மூலமு நடுவு முடிவு மின்றிக்
கால மூன்றுங் கடந்த கடவு
ளுளக்கணுக் கல்லா தூன்கணுக் கொளித்துத்
துளக்கற நிமிர்ந்த சோதி*ச் சுடரொளி
யெறுப்புத் துளையி னிருசெவிக் கெட்டா
துறுப்பினின் றெழுதரு முள்ளத் தோசை
வைத்த நாவின் வழிமறித் தகத்தே
இத்தித் தூறுந் தெய்வத் தேற
றுண்டத் துளையிற் பண்டைவழி யன்றி
யறிவி னூறு நறிய நற்ற
மேனைய தன்மையு மெய்தா தெவற்றையுந்
தானே யாகி நின்ற தற்பரன்
தோற்றுவ தெல்லாந் தன்னிடைத் தோற்றித்
தோற்றம் பிறிதிற் றோற்றாச் சுடர்முளை
விரிசடை மீமிசை வெண்மதி கிடப்பினு
மிருள்விரி கண்டத் தேக நாயக
சுருதியு மிருவருந் தொடர்ந்து நின்றலமா
மருதிடங் கொண்ட மருத மாணிக்க
வுமையாள் கொழுந வொருமூன் றாகிய
விமையா நாட்டத் தென்றனி நாயக
வடியே னுறுகுறை முனியா துகேண்மதி
நின்னடி பணியாக் கன்மனக் கயவரொடு
நெடுநாட் பழகிய கொடுவினை யீர்ப்பக்
கருப்பா சயமெனு மிருட்சிறை யறையிற்
குடரென் சங்கிலி பூண்டு தொடர்ப் பட்டுக்
கூட்டுச் சிறைப் புழுவி னீட்டுமலத் தழுந்தி
யுடனே வருந்தி நெடுநாட் கிடந்து
பல்பிணிப் பெயர்பெற் றல்லற் படுத்துந்
தண்டனுளர் மிண்டி வந் தலைப்ப
வுதரநெருப்பிற் பதை பதை பதைத்தும்
வாதமத் திகையின் மோதமொத் துண்டுங்
கிடத்த னிற்ற னடத்தல் செல்லா
இடங்குறை வாயிலின் முடங்கி யிருந்துழிப்
பாவப் பகுதியி விட்டுக் காவற்

---

* தனிச்சுடர்எனவும்பாடம்,

கொடியோ னரவரை யேவி நெடிய
வாசைத் தளையி லென்னையு முடலையும்
பாசப் படுத்திப் பையென விட்டபின்
யானும் போந்து தீதினுக் குழன்றும
பெரியோர்ப் பிழைத்தும் பிறர்பொருள் வௌவியும
பரியா தொழிந்தும் பல்லுயிர் செகுத்தும்
வேற்றோர் மனைவியர் தோற்றம் புகழ்ந்தும்
பொய்பல கூறியும புல்லினம புல்லியு
மைவருங் கடும்ப வவாவது கூட்டி
யிண்டின தொண்டு மீண்டு வந்துழி
யிட்டுழி யிடாது பட்டுழிப் படாஅ
திக்கா ளிடுக்க ணெய்திப் பன்னாள்
வாடுபு கிடப்பேன் வீடு நெறிகாணே
னின்னை யடைந்த வடியா ரடியார்க்
கென்னையு மடிமை யாகக் கொண்டே
யிட்ட பச்சிலைகொண் டொட்டி யறிவித்
திச்சிறை பிழைப்பித் தினிச்சிறை புகாமற்
காத்தருள் செய்ய வேண்டுந்
தீத்திரண் டன்ன செஞ்சடை யோனே. (உஉ)

(இ - ள்.) அடி - உமது திருவடியினை, சார்ந்தவர்க்கு-அடைந்த பரமானந்தருக்கு, முடியா - ஒழிவு இல்லாத, இன்பம் - பேரின்பதகினை, நிறைய - அவர்கள் அவாக்கெடப் பூரணமாக, கொடுப்பினும் - தரினும், குறையா-குறைவுபடாத, செல்வ - பெருஞ்செல்வமுடையானே, மூலமும் - முதலும், நடுவும் - இடையும், முடிவும் - கடையும், இன்றி - இல்லாமல், காலமூன்றும் இறப்பு நிகழ்வு, எதிர்வு ஆகிய மூன்றுகாலங்களையும், கடந்த-(தம்மை யவை யணுகவும் பெறாது) தாண்டிய, கடவுள் - தேவனானவனே, உளம் கண்ணுக்கு அல்லால் - அறிவானறியும் நோக்கமாகிய ஞானநோக்கிற்கன்றி, ஊன் கண்ணுக்கு - மாமிசபிண்டத்தாம் (உலகப்பொருள்களைக் காணப்பெற்ற) கண்களுக்கு, ஒளித்து - தோன்றுமலபபாற்பட்டு, துளக்கு அற-சலனம் இன்றி, நிமிர்ந்த - ஓங்கியுள்ள, சோதிச்சுடர் ஒளி - பிரகாசந்தங்கிய சுடர்நிறைந்த ஒளியானவன், எறும்புத் தொளையின் - எறும்பினது தொளையைப் போலும், இருசெவிக்கு - இரண்டு செவிகளுக்கும், எட்டாது - அளவுபடாமல், உறப்பினின்று - உறப்புக்களின்பால் படாமல், உள்ளத்து எழுதரும் ஓசை - மனத்திடத்துண்டாம் சத்தச்சுரூபி; வைத்த - பொருள்களின் சுவைதமை யறியும்படி படைக்கப்பட்ட, நாவின்வழி - நாவினது வழியை, மறித்து - (உரிசைதோன்ற ஆங்குருசிக்காது) கெடுத்து, அகத்தே - மனத்தின்கண், தித்தித்து - இனித்து, ஊறும் - சுரக்கின்ற, தெய்வத்தேறல் - தெய்வத்தன்மை

யுள்ள தேன், துண்டத்தொளையின் - மூக்கினது தொளையிடத்துள்ள, பண்
டைவழியன்றி - பழையவழியொழிந்து, அறிவில் நாறும்-அறிவின்கண் மண
ந்துகொண்டிருக்கும், நறியநாற்றம் - நன்மைதங்கிய நல்லமணப்பொருள்,
ஏனையதன்மையும் - மற்ற பிரகிருதி குணங்களும், எய்தாது - தம்மையடை
யாமல், எவற்றையும் - சராசரங்களாகிய வுலகமனைத்தினையும், தானே ஆக்கி-
தானே சிருட்டிசெய்து, நின்ற - (அச்சிருட்டியால் சலிப்பினையடையாது)
நிலைபெற்ற, தற்பர - தற்பரமானவனே, தோற்றுவது எல்லாம் - சிருட்டி
யடையவேண்டிய அனைத்தினையும், தன் இடை - தனனிடத்தில், தோற்றி -
உண்டாகும் வகைசெய்து, பிறிதின் - மற்றப் பொருள்களிடத்து, தோற்றம்-
தமது பிறப்பினை, தோற்று - காட்டப்பெறாத, சுடர்முளை - பிரகாசிக்கின்ற
முளைப்பயிர் போன்றவன், விரிசடைமீமிசை - விரிந்தசடையின்கண், வெண்
மதிகிடப்பினும் - வெண்மையாகிய சந்திரன் தங்கியிருக்கினும், இருள்விரி -
இருள்பரந்த, கண்டத்து - திருக்கண்டத்தினைக்கொண்டுள்ள, ஏகநாயக-தனி
முதல்வனே, சுருதியும் - வேதங்களும், இருவரும் விதிவிஷ்ணுக்களாகிய
இருதேவர்களும், தொடர்ந்து - அடிமுடிகளைக்காணத் தொடாந்து, நின்று -
அவற்றைக்காண வலியற்றுநின்று, அலமர - மனந்தடுமாற, மருது - திருவி
டைமருதூரினை,இடங்கொண்ட-திருக்கோயிலாக்கொண்டெழுந்தருளியிருந்த,
மருத-மருதவாணனே,மாணிக்க-மாணிக்கத்தின் ஒளிபோன்றவனே.உமையா
ள் - (பெரியநாயகியாகிய) உமைக்கு, கொழுந - நாயகனுனே, ஒரு மூன்று
கிய - ஒப்பற்ற மூனறுகிய, இமையா - இமைத்தலில்லாத, நாட்டத்து-கண்
களையுடைய, என்தனி நாயக - எனது ஒப்பற்ற தலைவனே, அடியேன் உறு-
அடியேன் அடைந்துள்ள, குறை - மனக்குறைகளை, முனியாது - (அடியேன்
தேவரீரை யெண்ணாதுசெய்த காரியத்திற்குக்) கோபிக்காமல், கேள் - திருச்
செவிசாற்றியருளல் வேண்டும், (அவையாவையெனின்) நின் அடிபணியா -
(தேவதேவராகிய) உமது திருவடிகளைப் (பிறவிப்பிணிக்கு மருந்தென்று எண்
ணி) வணங்குதல் செய்யாத, கல்மனக்கயவரொடு - கல்லையொத்து வன்மை
நீங்காத மனமுடைய மூடருடன், நெடுநாள் - பல பிறவிகளில், பழகிய-(அவ
ருடன்கூடித் தீமைசெய்யப்) பழகியதாலேறிய, கொடுவினை-தீவினை, ஈர்ப்ப-
(உன் திருவடிக்கண் மனதைப் புகவிடாமல்) தன்வசமிழுத்தலால், கருப்பாச
யம் எனும்-(ஆன்மாக்களின் கருத்தோன்றும்) கருப்பாசயப் பையென்கின்ற,
இருள் சிறை அறையில் - இருள்செறிந்த சிறையாகிய உள்ளிடத்தில், குடர்
என் சங்கிலி - குடல் என்கிற தளையினை, பூண்டு - பூணப்பெற்று, தொடர்ப்ப
ட்டு - தொடரின்கண் அகப்பட்டு, கூட்டுச்சிறைப்புழுவின் - கூட்டினிடத்
துச் சிறையாகவுள்ள புழுப்போல, ஈட்டு மலத்து - அடியேனுலார்ச்சிக்கப்ப
ட்ட மும்மலத்தின் கண்ணுர், அழுந்தி - மூழ்கி, உடனே வருந்தி - அம்மலந்
தொடர்ந்த துணையே வருத்தத்தினை யடைந்து, நெடுநாள் கிடந்து - அம்ம
லம் என்னைவிட்டு நீங்காமையால்) நெடுங்கால மதனிடைக்கிடந்து,பல்பிணி
ப் பெயர்பெற்று - பலவாகிய பிணிகளின் பெயர்களை யடைந்து, அல்லல் படு
த்தும் - துன்பத்தைச் செய்கின்ற, தண்டனாள் - தண்டிப்போராகிய படர்
கள், மிண்டிவந்து - நெருங்கிவந்து, அலைப்ப - வருத்த, உதரநெருப்பில்-வயி

ற்றின்கணுள்ள சடரா அக்னியால், பதைபதை பதைத்தும் - பொறுக்கலாகாத துன்பத்தினை யடைந்தும், வாதம் - தசவாயுக்களும், மத்திகையின்மோதசவுக்கினைப்போல மோதுதலால், மொத்துண்டும் - அடிப்பட்டும், கிடத்தல் நிற்றல் நடத்தல் செல்லாது - படுத்தலும், நிற்றலும், நடத்தலும் முடியாது, இடங்குறை - இடம் இல்லாத மிகச்சிறிய, வாயிலின் - இடத்தின்கண், முடங்கி இருந்துழி - முடங்கிக்கொண்டிருந்த காலத்து, பாவப்பகுதியில் இட்டு - பாவமாகிய பகுதியிலிருத்தி, சாவற் கொடியோர் - விட்டு நீங்காத காவலைக் கொண்ட கொடியவர்களாகிய, ஐவரை - பஞ்சேந்திரியங்களாகிய ஐவரை, ஏவி - என்மீது ஏவுதலைச்செய்து, நெடிய ஆசைதளையில் - மிக்க பேராசையென்கிற விலங்கில், என்னையும் உடலையும் - ஆன்மாவாகிய அடியேனையும் எனது தேகத்தினையும், பாசப்படுத்தி - (கயிறுகொண்டு கட்டினாற்போல) பந்தமாகிய பாசத்தினுக்குள்ளாக்கி, பை என விட்டபின் - மெல்லெனப் பூமியின் சகிக்கவிட்டபிறகு, யானும் போந்து - அடியேனும் பூமியின்கண்வந்து, தீதினுக்கு - பல தீமைகளின்பொருட்டு, உழன்றும் - திரிந்தும், பெரியோர்ப் பிழைத்தும் - பெரியவர்களைப் பிழைகூறியும், பிறர்பொருள் - அயலவர்க்குரிய பொருள்களை, வௌவியும் - திருடியும், பரியாது இருந்தும் - (பிறர்செய்யும் கொலையாதி மகாபாதகங்களுக்கு) பரிதபிக்காதிருந்தும், பல்உயிர் செகுத்தும் - பலவாகிய பிராணிகளை வதைத்து உண்டும், வேற்றோர் - தமக்கு உறவினரல்லாத அயலவரது, மனைவியர் - தேவிமார்களின், தோற்றம் - அழகு முதலியகாட்சிகளை, புகழ்ந்தும் - தன்னையொத்தாரிடம் புகழ்ந்துபேசியும், பொய்பல கூறியும் - பலபொய்மொழிகளைப பேசியும், புல் இனம் - அற்பமாகிய தீயோர்கூட்டத்தினை, புல்லியும் - சேர்ந்தும், ஐவரும் - ஐம்புலன் வழியுண்டாம் ஆசை ஐந்தும், கடுப்ப - விரைந்து தம் தொழிலால் என்னையேவுதலால், அவாவது கூட்டி - ஆசைமிக வளரச்செய்து, ஈண்டினகொண்டு - (யான் பிறந்தநாட்டிலன்றி அயல்நாட்டினுஞ் சென்று) நான் சம்பாதித்த பொருள்களைக்கொண்டு, மீண்டுவந்துழி - திரும்பி என்னூட்டில் வந்தகாலத்து, இட்டுழி இடாது - தம்மையிரந்திரப்பார்க்குக் கொடுக்கவேண்டிய காலத்துக் கொடாமல், பட்டுழிபடாது - (நன்மை) அடையவேண்டிய காலத்து அதனைப்பெறாமல், இந்நாள் - இந்தத்துன்பம் நேருநாள் வரையிலும், இடுக்கண் எய்தி - துன்பம் அடைந்து, பன்னாள் - பலநாள, வாடுபுகிடப்பேன் - வாடிக்கிடப்பேன், வீடுநெறிகாணேன் - வீட்டினை அடையும் வழியைக்காணேன், நின்னை அடைந்த - தேவரீரை அடைந்த, அடியார் அடியார்க்கு - தொண்டர்க்குத் தொண்டர்க்கு, என்னையும் - அடியேனையும், அடிமையாகக்கொண்டு - அடித்தொழில் செய்வோனாக ஏற்றுக்கொண்டு, இட்ட பச்சிலைகொண்டு - அடியேனருச்சித்த பச்சிலையை (நன்மலராக ஏற்றுக்)கொண்டு, ஒட்டி அறிவித்து - என்னைவிட்டு நீங்காது எனக்கு அறிவிக்கவேண்டியவைகளை யறிவித்து, இச்சிறை - (இவ்வுலகில் மாதாவுதரத்துப்படுதலாலுண்டாம்) சிறையினை, பிழைப்பித்து - புகா வகைசெய்து, இனிச்சிறைபுகாமல் - இனிக்கருவாகிய சிறையின்கண் புகாமல், காத்து - காப்பாற்றி, அருள்செய்யவேண்டும் - திருவரு

ள்செய்யவேண்டும், தீதிரண்டன்ன - நெருப்புத்திரண்டதையொத்த, செஞ்சடையோனே - செந்நிறத்தினைக் கொண்டசடைமுடியுடையாய், எ - று.

இறைவனே தேவரீரது தொண்டரடித்தொண்டர்க்கு அடிமைசெய்யாத தீமைமேலிட்டால் பிறவிவலைப்பட்டு அதனிடை வருந்திப் பலதுன்பங்களைச்செய்து வாடிக்கிடப்பேனாதலால் என்னை யுன்னடியாரடியார்க் கடிமையாக்கொண்டு நானிட்ட பச்சிலையை யேற்று இனிப்பிறவியிடைவராவகைக் காத்தல்வேண்டும் என்பது கருத்து.

(கு - ரை.) இறைவன் தமது திருவடி யடைவோர்க்கு இன்பத்தினை முக்காலத்துங்கொடுக்குந்தோறும் அவ்வின்பம் அளவிலாதசாகரம்போல்வளர்ந்து கிடத்தலின் அதனை முடியா இன்பம் என்றார். பின்னும் அநித்தியமாய்த் துக்கமாயுள்ள வெவ்விய பிறப்பினது தாழ்ச்சியினையும், நித்தியமாய் ஆனந்தமாய் உள்ள மேலாகிய வீட்டினது உயர்ச்சியினையும் நோக்கி முடியா இன்பம் என்றார் என்னினும் ஆம். ஆனந்தம் என்னும் ஒருபொருள், அதுதானே வந்து பொருந்தாது அதனை யனுபவிப்பவன் ஆன்மா அதனைக் கொடுப்போனிறைவனாதலின் கொடுப்பினும் என்றார். இறைவனுக்கு, ஏனைய கடவுளர்க்குக்காலவரையறை யுள்ளவாறுபோல அவற்கு இவ்வளவுகாலம் என வில்லாமையின் காலமூன்றுங் கடந்த கடவுள் என்றார். கடவுள்என்றார்; அப்பொருள்நயங் கருதியேபோலும் என்னெனின் கடவுள் எனும் பதத்திற்குக் காலங்களைக் கடந்தான் என்பது பொருளாதலின் என்க. ஏனைய உலகத்துப்பொருள்கள் கண்ணாற்காணவும் மூக்கால் மோக்கவும், செவியாற் கேட்கவும், நாவான் ருசிக்கவும பெறும் அங்ஙனமின்றியதிற் வேறுபட்டு அறிவானோக்கவும், உள்ளத்தாற் கேட்கவும், மனத்தால் ருசிக்கவும், அறிவான் நோக்கவும் பெறுதலின், உளக்கணுக்கு.. ...நாறும் என்றார். தாம உலகத்துப்பொருள்கள் தோற்றுதற்கு நிலைக்களனாய் நின்று தாம் பிறிதில் தோன்றாதிருத்தலின், தோற்றுவது ... ..மூலமென்றார். உண்மை யறிவுடையார்க்கே யன்றி யேனையர்க்குக்காண அரியன்என்பாரகருதியும்......மாணிக்க என்றார் - இறைவனிடத்துள்ள அன்பின் மிகுதிநோக்கிஎன்றனிநாயக என்றா. கேண்மதி என்னுமிடத்து மதியென்பது முன்னிலை யசைமொழி. உனது திருவடி யொழியாப் பேரின்பந்தருவதெனவறிந்தும் அதனைவிட்டு பாழின்பத்திடைவீழ்ந்து நிரயம்புகுவார் கயவராதலின் அவர் தம்மைத்தாமே கெடுக்குந் துரோகிகளு மாவராதலின் அவர் மனம் நன்மனம் அன்றென்பார் கன்மனக்கயவர் என்றார். அக்கயவருடனுன் கூடியிருந்து சன்மங்கடோறும் அவருடன் பழகிய பழக்கவாசனையாலென்பார் நெடுநாட்பழகிய கொடுவினையீர்ப்பஎன்றார். கூட்டுச்சிறைப்புழு, இது தன்னையோர்வகைச்சுரையுருவினதாகிய நாழியுட்படுத்தித்தனக்குத்தீமைநேராது அச்சுரையின்மீது பலவகைச் சிறுகுப்பைகளைத்தாங்கித் திரிவதாதலின் கூட்டுச்சிறைப்புழு என்றார். அடியேனுமவ்வாறு பல சன்மங்களிலார்ச்சித்த கன்மங்களைத் தாங்கித்திரியா நிற்பேன் என்பார், கூட்டுமலத்தழுந்தி என்றார், தண்டலாளர் என்றது யமபடர்களேயன்றி வந்தடையும் பிணிமுதலியவற்றைக் கூறியதுமாம். ஆன்மாதான் சன்மம் எடுக்கையில் கருப்பாசயப்பை

யுறுத்தல், அதில் ஜலம்பூரித்தல், உதராக்னியால் வெம்மையுறுதல், பிரசூதவாயுவான் முரித்துத்தள்ளப்படுதல், யோனித்வாரத்தால் நெருக்குண்ணல் முதலிய துன்பமடைதலின் உதரநெருப்பில்......மொத்துண்டு என்றார். கருப்பையின் சிறுமைநோக்கி யிடங்குறைவாயில் என்றார். பஞ்சேந்திரியங்களைந்தும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வழிச்சென்று ஆன்மாவைத் தம்வயப்படுத்திக் கெடுத்தலின் கொடியோரைவர் என்றார். கருக்குழிக்கண் இருக்குங்காலமிருந்து வெளிப்போதல் ஆன்மாவின் சுய இச்சையின்றி யிறைவனது ஆணைவழி வருவதாதலின் விட்டபின் என்றார். இவ்வகைப் பிறப்பினளவு சுதந்தரமிலியாயிருந்த யான் பூமியிற் பிறந்து எனது நிலையினை மறந்தேன் என்பார் யானும் போந்து என்றார். பல்லுயிர் செகுத்து என்பது முதல் அவாவது கூட்டியும் என்பதன்காறும் மகாபாதகங்களைந்தினைக் கூறியதாம். இவ்வாறு பல சன்மங்களில் ஆர்ச்சித்த கன்மங்களையிறைவன் ஆன்மா பொறுக்காமை நோக்கிச் சிறிது கூறுபடுத்தித்தரச் சநநங்கடோறும் சிறிதுசிறிதாகப் புசித்து வருதலின் இந்நாளிடுக்கணெய்தி...... வாடுபுகிடப்பேன் என்றார், வீட்டையடையும் உபாயத்தினை கூறுவோர் வழிநின்று அதனை யுணர்ந்துய்யேன் என்பார் வீட்டுநெறிகாணேன் என்றார். ஆதலின் உமது திருவடிக்கணன்பு பூண்டார்க் கடியவர்க்குத் தொண்டராக்கி அடிமையாக்கொண்டு இனிப் பிறவிவாராது அருள்செய்க என்பார் அடியார்....வேண்டும் என்றார்.

நேரிசைவெண்பா.

சடைமே லொருத்தி சமைந்திருப்ப மேனிப்
புடைமே லொருத்தி பொலிய - விடையேபோய்
சங்கே கலையே மருதற்குத் தான்கொடுப்ப
தெங்கே யிருக்க வியவள். (௨௩)

(இ - ள்.) சடைமேல் - சடைமுடியில், ஒருத்தி - ஒருபெண், சமைந்து இருப்ப - வளர்ந்துகொண்டிருக்க, மேனிப்புடைமேல் - திருமேனியாகிய இடத்தில், ஒருத்தி - ஒப்பற்றவளாகிய பார்வதவர்த்தனி, பொலிய - விளங்கியிருக்க, இடையேபோய் - இவ்விருவருக்கிடையில் சென்று, சங்கே - சங்காலாகிய வளைகளையும், கலையே - வஸ்திரங்களையும், மருதற்கு - மருதவாணரை மருவ எண்ணி, தான் கொடுப்பது - அவள்கொடுப்பது, இவள் - (இருவரைக்கொண்ட அவனிடத்துக் காதல்கொண்ட, இப்பெண், எங்கேயிருக்க அவன் திருமேனியின்கண் எப்பாகத்திருக்க எண்ணியோ அறியேம் எ-று.

(கு-ரை) இது கழிபெருங்காதல்மிக்க தலைவி, அவனைக்கூடுமெண்ணந்தால் அவனிடங்கொண்ட ஆற்றமனத்தாலுறநோய் வருத்துதலாலும் அன்னத்தின்மேலும் மற்றும் உணவாதிகளிடத்தும் மனஞ்செல்லாமையாலும் உடம்பு வாடியகாரணத்தால் வளைமுதலிய அணிகளும் கலைமுதலியவும் இருத்தற்குரிய நிலைநின்று நீங்க அவற்றை யிழந்து வருந்துவளாதலின் அவணிலைகண்ட தோழிகள் கூறியதாம். பகீரதனபொருட்டு ஏற்ற கங்கையை யிறைவன் உலகரக்ஷணார்த்தம் சடையிடத்தும் புனையானெனின் அதன்பெருக்கால் உலகமழி

யுமாதலின் அதுநோக்கிச் சடைமேலொருத்திச் சமைந்திருக்க என்றார். அன்றியுமிக்கங்கை பருவதராஜனிடம் பிறந்தகாலத்து இறைவனை யடையத தவஞ்செய்தவளுமாவளாதலின் இறைவன்றிருமுடியிலிருக்க இடம்பெற்றனள். இது இறைவன்றானே யுலகமாயினான் என்பதற்கறிகுறியாய்க்கொண்ட பஞ்சபூதங்களில் ஒன்றெனினுமாம். இறைவி இறைவனுக்கு அநந்யசத்தியாயினும் ஒரு காரணத்தாற் பிறந்து தவமுயன்று அவன் திருமேனியின் வாமபாகத்தைத் தனதாகப்பெற்றாளாதலின் மேனிப்புடைமேலொருத்திபொலிய என்றார், இவ்விருவரும் ஒரு கனியையிரண்டு புட்களருந்தா மாறுபோல் இருவருமனுபவித்துக் களித்துவர இவளிருப்பதற்குத் தவஞ்செய்து இடம்பெறல் எங்கேயிருக்க எண்ணி யிவ்வாறு வருந்துகின்றாளென்பார் இடையே போய் என்றார். சங்கே கலையே என்பதன்கணேகாரம் எண்ணுப்பொருட்டு. அவ்விருவரிருக்க இவளிடம் பெறுதல் ஐயப்பாலைத்தென்பார் எங்கேயிருக்க இவள் என்றார், இது இறைவனிடத்து அன்புற்று அவனையடையவேண்டி ஆவலுற்ற ஆன்மநிலை கூறியதாம். இடையேபோய் எனவும் இடை புக்கு எனவும் பாடபேதங்கூறுப. இரண்டிற்கும் பொருள் ஒன்றே,

கட்டளைக்கலித்துறை.

இருக்கு மருதினுக் குள்ளிமையோர்களு நான்மறையு
நெருக்கு நெருக்கத்து நீளகத்துச்சென்று மீளவொட்டாத்
திருக்குமறுத்தைவர் தீமையுந் தீர்த்துச்செவ் வேமனத்தை
யொருக்குமொருக்கத்தி னுள்ளே முளைக்கின்ற வொண்சுடரே. ()

(இ-ள்) இமையோர்களும் - தேவர்களும், நால்மறையும் - நான்கு வேதங்களும், நெருக்கும் (இறைவனைக் காணவேண்டி) நெருக்குகின்ற, நெருக்கத்தும் - நெருங்கியவிடத்தும், நீள் அகத்து - பரந்தஉலக ஆசையின்கண், சென்று - மனத்தைச் செலவிட்டு, மீள ஒட்டா - அதனை யிறைவன்றிருவடிக்கண் கொண்டு கூட்டாத, திருக்கும் அறுத்து - மாறுபாட்டினையும்போக்கி, ஐவர் - பஞ்சேந்திரியக்கள்வராகிய ஐவரது, தீமையும் தீர்த்து - தீமையையும்போக்கி, செவ்வே - (அநிலஞ்சேராவிளக்கதுபோல் இறைவன்றிருவடிக்கண்மனத்தினை) செம்மையாக, ஒருக்கும் - ஒடுங்கச்செய்கின்ற; ஒருக்கத்தின் உள்ளே - ஒடுக்கத்தில், முளைக்கின்ற - முளைத்தெழுகின்ற, ஒண்சுடர் - ஒள்ளியசுடர், மருதினுக்குள் - மருதவனத்து, இருக்கும் - நாம் எளிதின்வணங்கிப் பாசநீக்கமடைய எழுந்தருளியிருக்கும். எ-று,

(கு-ரை) தேவர்களும் நான்குவேதங்களும்பல்கால் ஆராய்ந்து ஓய்ந்த நிலையிலும், மெய்ஞ்ஞானிகளது உள்ளத்துமிருக்கும் ஒளி, நம்பொருட்டுத்திருவிடைமருதூரில முளைத்திருக்கின்றது அதனைத்தரிசித்துப் பாசநீக்கமடைக என்பதுகருத்து. தேவர்களும் நம்மையொத்துப்பொருள்களிடத்து அவாக்கொண்டாரும் பெண்களிடத்துக்காதல் கொண்டாருமாக இருத்தலின் அவ்வகையிருப்பாரொழிய இமைக்காது அவன் திருவடிக்கண் மனதைச்செலுத்தியவனை மனக்குகையில் கொண்டாரையீண்டுக்கூறியதென்பார் அந்நயம்பட இமையோர் என்றார், வேதங்களுநான்குஞ் சுத்தமாயா தோற்றத்தனவாதலின்

அவை இறைவனைக்காணுவாயினும் அவையவனைத்தேடி முடிந்த அந்தத்தில் காணப்படுவோனாதலின் நான்மறையு நெருக்கும் நெருக்கத்து என்றார். மநந் தான்கொண்ட அவாவின்வரையுலகத்து மண் பெண் பொன் என்னும்வற்றி டைப்பதிந்து அவற்றைவிட்டு நீங்காதிருத்தலின் நீளகத்துச்சென்று மீள வொட்டா என்றார். மேற்கூறிய வீஷணுத்திரயத்தில் மனத்தைச் செலுத் தும் திருக்கு ஒழிக என்பார்திருக்கு மறுத்து என்றார், திருக்கைநீங்கினூரா யினும் பஞ்சேந்திரியங்களின் வழிச்சென்று அல்லற்படு தலையுமொழிக என் பார் ஐவர் தீமையுந்தீர்த்து என்றார். அஃறிணையாகிய இந்திரியங்களை உயர் திணையாகக் கூறினார் இழிவு நோக்கி என்க. இது வழுவமைதி. செவ்வே மனத்தையொருக்குதலாவது - பஞ்சேந்திரியங்களின் வழியும், ஈடணாத்திர யத்தின் வழியும் மனத்தைச் செலுத்தாமல் அவன் திருவடிக்கண் மனத்தை யொடுக்குதல். ஆங்கு அவன்றிருவருள் தோன்றுமாதலின் அதனைமுளைக்கின்ற வொண்சுடர் என்றார்.

நேரிசை யாசிரியப்பா.

சுடர்விடு சூலப் படையினை யென்றும்
விடையுகந் தேறிய விமல வென்று
முண்ணு நஞ்ச முண்டனை யென்றுங்
கண்ணுற் காமனைக் காய்ந்தனை யென்றுந்
திரிபுர மெரித்த சேவக வென்றுங்
கரியுரி போர்த்த கடவு ளென்று
முரகம் பூண்ட வுரவோ யென்றுஞ்
சிரகஞ் செந்தழ லேந்தினை யென்றும்
வலந்தரு காலனை வதைத்தனை யென்றுஞ்
சலந்தர னுடலந் தடிந்தனை யென்று
மயன்சிர மொருநா ளரிந்தனை யென்றும்
வியந்தவா ளரக்கனை மிதித்தனை யென்றுந்
தக்கன்வேள்வி தகர்த்தனை யென்று
முக்கிரப் புலியுரி யுடுத்தனை யென்று
மேனமு மன்னமு மெட்டா தலமா
வானங் கீழ்ப்பட வளர்ந்தனை யென்றுஞ்
செழுநீர் ஞாலஞ் செகுத்தாயி ருண்ணு
மழல்விழிக் குறளை யழுக்கினை யென்று
மினையன வினையன வெண்ணில் கோடி
நினைவருங் கீர்த்தி நின்வயிற் புகழ்த
லுளக்குறு சிந்தையேன் சொல்லள வாதலி
னளப்பரும் பெருமைநின் னளவல தாயினு
மொன்றி லேயாப் புன்மொழி கொண்டு

நின்னைநோக்குவ னாதலி னென்னை
யிடுக்கண் களையா வல்லற் படுத்தா
தெழுநிலை மாடத்துச் செழுமுகி லுறங்க
வடித்துத்தட்டி யெழுப்புவ போல
நுண்டுகிற் பதாகை கொண்டுகொண் டுகைப்பத்
துயிலி னீங்கிப் பயிலும் வீதித்
திருமரு தமர்ந்த தெய்வச் செழுஞ்சுட
ரருள்சுரந் தளிக்கு மற்புதக் கூத்த
கல்லா னெறிந்த பொல்லாப் புத்த
னின் னினைந் தெறிந்த வதனா
லன்னவன் றனக்கு மருள்பிழைத் தின்றே. (௨௫)

(இ - ள்.) சுடர்விடு - ஒளிர்கின்ற, சூலப்படையினை - சூலாயுதத்தினை யுடையை, என்றும் - எனக்கூறியும், விடை உகந்து - இடபத்தினைவிரும்பி, ஏறிய - ஆரோகணித்த, விமல என்றும் - நிருமலன் என்றும், உண்ணா - எவராலும் உண்ணப்பெறாத, நஞ்சம் - விஷத்தினை, உண்டனையென்றும் - உண்டாய் என்றும், கண்ணால் - நெற்றி நேத்திரத்தால், காமனை - மன்மதனை காய்ந்தனையென்றும் - கோபித்தாயெனவும், திரிபுரம் எரித்த - முப்புரங்களையும் தீக்கிரையாக்கிட, சேவக என்றும் - வீரமுடையானே எனவும், கரி உரிபோர்த்த - யானையின் தோலினைப் போர்த்துக்கொண்ட, கடவுள் என்றும் - இறைவன் எனவும், உரகம்பூண்ட - சர்பத்தினைப் பணியாப்பூண்ட, உரவோய் என்றும் - பெரியோய் எனவும், சிரகம் - கபாலத்தினையும், செந்தழல் - செந்நிறத்ததழலினையும், ஏந்தினையென்றும் - ஏந்தினாய் எனவும், வலம்தரு - வெற்றிதங்கிய, காலனை-யமனை, வதைத்தனையென்றும் - வதைசெய்தாய் எனவும், சலந்தரன் உடலம் - சலந்தராசுரனது உடலை, தடிந்தனை யென்றும் - அறும்படி செய்தாய் எனவும், அயன்சிரம் - பிரமனது தலையினை ஒரு நாள் - ஒருகற்பத்தில், அரிந்தனை யென்றும - கிள்ளினாய் எனவும், வியந்த - எல்லாராலும் புகழப்பட்ட, வாள்-வாளைத் தாங்கியுள்ள, அரக்கனை-இராவணாசுரனை, மிதித்தனை யென்றும்-காலால் மித்தித்து அமுக்கினாய் எனவும், தக்கன் வேள்வி-தக்ஷப்பிரசாபதியின் யாகத்தினை, தகர்த்தனை யென்றும் - அழித்தாய் எனவும், உக்கிரப்புலியுரி - கோபாவேசமுள்ள புலியினது தோலை, உடுத்தனை என்றும்-உடுத்தாய் எனவும். ஏனமும் அன்னமும்-வராகவுருக்கொண்ட விஷ்ணுமூர்த்தியும், அன்னத்தினுருக்கொண்ட பிரமதேவனும், எட்டாது - அடிமுடிகளைக் காணாமல், அலமர-மனந்தடுமாற, வானம் கீழ்ப்பட - ஆகாயம் கீழ்ப்பட்டுப் போம்படி, வளர்ந்தனை - ஓங்கினாய், என்றும் - எனவும், செழுநீர்ஞாலம் - வளம் உள்ள நீர் சூழ்ந்த பூமியிலுள்ளாரை, செகுத்து - கொன்று, உயிர் உண்ணும் - உயிரினையுண்ட, அழல் விழிக்குறளை - நெருப்பினையொத்த கண்களையுடைய முயலகாசுரனை, அமுக்கினை என்றும் - திருவிரலால் அமுக்கிமுதுகினை யொடித்தாய் எனவும், இனையன இனையன -

இவ்வகைப்பட்ட கிருத்தியங்கள், எண்ணில் கோடி-பலகோடியாம், நினைவு அரும் - எண்ணுதற்கும் அருமையான, சீர்த்தி - புகழ்களை, நின்வயின் - உன்னிடமாக, புகழ்தல் - புகழ்ந்து கூறுதல், துளக்குறு - 'ஒரு இடத்து நிலையேயின்றி, யுலாவிவரும், சிந்தையேன் - மனமுடைய அடியேனது, சொல்லளவு சொல்லினளவாக நிற்கும், ஆதலின் - ஆகலால், அளப்பு அரும் - இவ்வளவினது என்று அளத்தற்கருமையான, பெருமை - சீர்த்தி, நின் அளவு அல்லது - தேவரீர் புகழ்ச்சியினளவேயாம், ஆயினும் - அவ்வகையிருக்கினும், ஒன்றின் ஏயா - ஒன்றுனும் பொருத்தம் இல்லாத, புல்மொழிகொண்டு, அற்பமாகிய சொற்களைக்கொண்டு, நின்னை நோக்குவன் - தேவரீரது திருவருளை யெண்ணியிருக்கின்றேன், ஆதலின் - ஆசையால், என்னை - அடியேனது, இடுக்கண் - பிறவித்துன்பங்களை, களையா - நீக்கி, அல்லல்படுத்தாது - துன்பத்தினைச் செய்யாமல், எழுநிலை - ஏழுநிலைகளைக்கொண்ட, மாடத்து - உப்பரிகையின் மீது செழுமுகில் - நீர்வளமுள்ள மேகம், உறங்க - உறங்கியிருக்க, அடித்துத்தட்டி - அதனை அடித்துத் தட்டி, எழுப்புவபோல - எழுப்புவனபோல, நுண்துகில் பதாகை - நுண்ணிய சீலைகளைக் கொண்டு கட்டிய கொடிச்சீலைகள், கொண்டு கொண்டு - பலமுறைஅடித்துக்கொண்டு, உகைப்ப-செலுத்த, துயிலின் நீங்கி - (அம்மாடத்து தங்குவோர்) நித்திரைவிட்டு எழுந்து, பயிலும் வீதி - உலாவுகின்ற விதிகளைக்கொண்ட, திருமருது-திருவிடைமருதூரின்கண், அமர்ந்த - எழுந்தருளியிருந்த, தெய்வச்செழும் சுடர் - தெய்வமாகிய செழிப்புள்ள சுடரொளியானுனே, அருள்சுரந்து - திருவருள் சுரந்து, அளிக்கும் - கொடுக்கின்ற, அற்புதக்கூத்த-வியக்கத்தக்க திருநடனம் வல்லானே, கல்லால் எறிந்த - கல்லால் வீசியெறிந்த, பொல்லாப்புத்தன் - பொல்லாத புத்தராகிய சாக்கிய நாயனுர்,நின்நினைந்து-தேவரீரை மனத்திடங்கொண்டு, எண்ணி,எறிந்தஅதனுல்-தேவரீர் மீதுகல்லினைவிட்டு எறிந்த அக்காரணத்தால்,அன்னவன்தனக்கும் - அவ்வகைகல்லை விட்டெறிந்த கொடியோனுக்கும், அருள்பிழைத்தது-இன்று தேவரீரது திருவருள் தவறினது இன்று.(ஆதலால் என்பொருட்டுத்திருவருள் செய்வாயாக) எ - று.

(கு - ரை.) இச்சாஞானக்கிரியைகள் மூன்றும் மூவிலைய சூலவடிவாய் நின்ற தென்பதைக்குறித்தற்கு சூலப்படையினை என்றும், சர்வசங்கார காலத்து அனைத்துமழியத் தருமம் ஒன்றே இறைவனைச்சரணடைய அதனை வாகனமாகக் கொண்டேதலின் விடை...விமல எ - ம், தேவர் அஞ்சப்பாற் கடற்பிறந்த நஞ்சத்தை யமுது செய்தமையின் உண்ணு ..முண்டனே எ-ம், இறைவனைமதியாது அவன் மீது ஏவிய அம்பின் வலிகெடவும் காமன் சாம்பராகவும் தீவிழியாலேரக்கினமையின் திரிபுரம்...சேவக - எ - ம், கஜாசுரன் என்பவன் இறைவனை நோக்கி விழுங்கவர அவனுடலுள் புகுந்து அவனுடலைப் பிளந்து வெளிவந்து தோலைப்போர்த்துக் கொண்டமையின் கரி... கடவுள், எ - ம், தாருகவனத்து ருஷிகளேவிய அரவங்களை வெருட்டித் தம்மையபயமென்றடைந்த அரவுகளைப் பணியாக் கொண்டமையின் உரவம்...உரவோய் எ - ம், அத்தாருகவனத்து இருடிகளேவிய அழலைக்கரத்திற் கொண்டமை

யின், சிரகம்... ஏந்தினை - எ - ம், மார்க்கண்டேயர் பொருட்டு யமனையுதைத்தமையின், வலம்...வதைத்தனை - எ-ம், தம்மிடம் யுத்தத்திற்கு வந்தசலந்தராசுரனைவேதியவுருக்கொண்டு காலாற் சக்கிரவடிவமாகக் கோடுகீறி அதனையெடுக்கச் செய்து அவனைத் தொலைத்தமையின், சலந்தரன்... தடிந்தனை - எ - ம், இறைவனைக் கண்டு பிரமனது சிரங்களி லொன்று நகைக்க அதனது செருக்கைப் போக்க எண்ணி அதனது நடுச்சிரத்தினைக் கிள்ளின மையின் அயன்...அரிந்தனை - எ - ம், இராவணன் தன்தாயின் பொருட்டுத்திருக்கைலையைப் பெயர்க்கையில் திருவிரலாலூன்றி அவனது வலியடக்கியருள் சுரந்தமையின் வியந்த... மிதித்தனை - எ - ம், தம்மையெண்ணாது வேள்விசெய்த தக்கனது வேள்வியைத்தகர்த்தமையின் தக்கன்...தகர்த்தனை, எ - ம், வியாக்ராசுர னிறைவனை யெதிர்க்க அவனுயிர் போக்கினமையின் உக்கிர...உடுத்தனை - எ - ம், விதிவிஷ்ணுக்கள் அன்னமும் ஏனமுமாகி அடிமுடிதேடியலமர நீண்டமையின் - ஏனமும்...வளர்ந்தனை - எ - ம், முயலகனென் னும் அசுரன் இறைவனிடம் போர்கருதிவர அவன்முதுகிற மிதித்து நடஞ்செய்தமையின் செழுநீர்...அழுக்கினை - எ - ம, கூறினார். அடியேன் சிறிதே கூறினேன் இவ்வகைநிக்ர காநுக்ரககிருத்தியங்கள் பலவுளவென்பார் எண்ணில்கோடி என்றார். தேவரீரது பெருமையைப்புகழ்தல் என்சொல்லின் வரைத்தேயாம் உன்கீர்த்தி அதின் அடங்காது மிகும் என்பார் சொல்லளவு ... நின்னளவு அலது என்றார். சாக்கியநாயனார் தேவரீரை யகத்தெண்ணியும் புறத்தில் தம் மதத்தவர்க்குச் சார்பாகவும் . எண்ணியெறிந்த கல்லினை மலராகக் கொண்டு அருள் சுரந்தளித்த பெருங்கருணைக்கடலாதலின் அடியேன்பொருட்டுத்திருவருள் செய்தாள்க என்பார், கல்லால்...அருள்பிழைத்தின்றே என்றார் ஒன்றினே யாப்புன் மொழி என்பதற்கு என்றன்வாயிற் புன்மொழிஎனவும் பாடபேதங் கூறுவர்.

நேரிசைவெண்பா.

இன்றிருந்து நாளை யிறக்குந் தொழிலுடைய
புன்றலைய மாக்கள் புகழ்வரோ - வென்றிமழு
வாளுடையான் றெய்வ மருதுடையா னாயேனை
யாளுடையான் செம்பொன் னடி. உசு.

(இ - ள்.) வென்றி - வெற்றிதரத்தக்க, மழுவாள் உடையான்-மழுவாகிய வாளையுடையான், தெய்வமருது உடையான் - தெய்வத்தன்மை தங்கிய திருவிடைமருதூரைத்திருக் கோயிலாக் கொண்டவன், நாயேனை - நாயையொத்த அடியேனை, ஆள்உடையான் - அடிமையாகக் கொண்டவன், செம்பொன் அடி - செந்நிறத்த பொன் போலுந்திருவடிகளை, இன்று இருந்து- இன்றைக்கு இருந்து, நாளை இறக்கும் - நாளையிறந்து கெடும், புன்தலையமாக்கள் - சிற்றறிவுடைய மனிதர்கள், புகழ்வரோ - புகழ்வார்களோ புகழார்- எ - று. அற்பஆயுளுள்ளார். இறைவனிடத்து யன்மை கொண்டிறப்பரேயன்றிப் பூர்ணாயுளுள்ளவர்கள் அவனையிகழார் வணங்கி முத்தியடைவர் என்பது கருத்து.

(கு - ரை.) மானிடப் பிறவியருமையுடைத்தேனும் அது கொண்ட உடல் நீரிற்குமிழி நீரிலெழுத்துப்போல் நெருநலிருந்தானின்றில்லை என்று கூறும்வகைத்தாயழிந்து பாழ்படுதலினாலும், அதனைக்கொண்ட ஆன்மா அநுபவிக்க வேண்டிய பொருள்களிடத்து உள்ள அவாமுற்றுப்பெறாது அழிதலானும் இவ்யாக்கையும் அது கொண்ட அவாக்களும் நிலையா என்பார், இன்றிருந்துநாளையிறக்குந் தொழிலுடைய என்றார். இங்ஙனம் ஒருமொழி யொழிதன்னினங் கொளற்குரித்தேயென்றதால் இளமை, செல்வமும் நில்லாவென்பதும் பெறப்பட்டது. ஆன்மாக்களிறத்தல் பிறத்தல் களையேதாம் கொண்டகர்மந்தேயுந்துணையும் தொழிலாக்கொண்டிருத்தலின் தொழிலுடையவென்றார். இவர்கள்வேண்டிய வேண்டியாங் குதவுங்கற்பகத் தருவிருக்க அதனிடைச் செல்லாது காஞ்சிரங்காயினு மரத்திடைச்சென்று வருந்தும் விழலர்போல் இம்மை மறுமைகளாகிய எம்மையினுந்தாயினு மதிகமாய்க் காத்தளிக்கும் இறைவனைவிட்டு முத்திதரவல்லவரல்லாத ஏனைய தேவர்களிடத்து முத்திவேட்டுவாளா அழிவாரறிவிலர் என்பார் புன்றலைய மாக்கள் என்றார். இவ்வகையார்கள் இறைவனை வணங்காமலும் அவன் புகழ்படியாமலுமிருத்தல் அவரது குற்றமல்லகாண் அவர் கொண்ட கன்மம் அவர்களைப் புண்ணியத்தில் நுழையாவகை செய்கின்றது என்பார் புகழ்வரோ என்றார். இறைவனுக்கு வாளும் ஆயுதமேனும் இறைவனது சகளத்திருமேனியாகிய சோமாஸ்கந்த மூர்த்த முதலியதிருவுருவங்களில் மழுவொன்றேயாயுதமாகக் கூறலின் அதனையிரு பெயரொட்டாகக் கூறினும். இதனால், முத்திவேண்டுவோர் இறைவனைப்பரவுதற்குபாயங் கூறப்பட்டது.

கட்டளைக்கலித்துறை.

அடியாயிரந்தொழி லாயிரமாயிர மாயிரமபேர்
முடியா யிரங்கண் கண்மூவாயிரமுற்று நீறணிந்த
தொடியா யிரங்கொண்ட தோளிரண்டாயிர மென்றுநெஞ்சே
படியாயிராப்பகற் றென்மருதாளியைப் பற்றிக்கொண்டே.

(இ - ள்.) நெஞ்சே - மனமே; அடி ஆயிரம் - திருவடிகள் ஆயிரமாகும், தொழில் ஆயிரம் - அவனது கிருத்தியங்கள் பல ஆயிரம் ஆகும், ஆயிரம் ஆயிரம் பேர் - பல்லாயிரந் திருநாமங்கள் அவனுக்குளவாம், முடி ஆயிரம் - அவன் திருமுடிகள் பல ஆயிரமாகும், கண்கள் மூவாயிரம் - திருநேத்திரங்கள் மூன்று ஆயிரங்களாகும், முற்றும் - முழுதும், நீறு அணிந்த - விபூதியினை அணிந்த, தொடி ஆயிரம்கொண்ட - ஆயிரங் கடகங்களையணிந்த தோளிரண்டாயிரம் - தோள்கள் இரண்டாயிரமாகும், என்று - என்று அவனது புகழினை யெடுத்துக் கூறி, தென்மருதாளியை - தெற்கின்கண்ணுள்ள மருதூரிலெழுந்தருளி யிருப்போனாகிய மருதவனத்துமணியினை, பற்றிக்கொண்டு - உறுதியாக உளத்திடைப்பதித்து, இராப்பகல் - இரவும் பகலும், படியாய் அவன் திருப்புகழை யோதுவாய். எ - று. இறைவன் எங்குளன் அவனைத்தியானிக்குமுறை யெங்ஙனே யென்று கவலையுறுகின்ற மனமே

அவனுக்குத் திருவடிகள் பல, அவன் கொண்ட தொழில்கள் எண்ணிறந்தன, அவன் திருவடிகள் பல்லாயிரம், கண்கள் பலமூவாயிரங்கள் ஆதலால் அவனை யெவ்வுருவத்திலும் யாண்டுந் தியானிப்பாயாக என்பது கருத்து.

(கு - ரை.) ஆன்மாத்தான் நற்கதியடைதற்குப் பற்றுக் கோடாகக் கொண்டது அவன் திருவடியாதலால் முகங் கண் சிர முதலியவற்றைக் கூறாமல் அடி ஆயிரம் எனத் திருவடியைக் கூறினார். அவன் தன்னை யடையும் ஆன்மாக்களை முத்திக்கண் சேர்க்கும் வகைப் பஞ்சகிருத்தியத்தைச் சராசரப் பொருள்களிடத்துச் செய்து வருதலின் தொழிலாயிரம் என்றார். அங்ஙனம் பலவடியும் பல முடியும் பலதொழிலுங் கொண்டான் றிருநாமமென்னை யென்பார்க்கு ஒரு நாமம் ஓருருவ மொன்று மிலார்க்காயிரமாயிரந் திருநாமம் உண்டு காண் என்பார் ஆயிரம் ஆயிரம்பேர் என்றார். அவனுக்கு யாண்டும் திருமுடி என்பார் முடி ஆயிரம் என்றார். அவனுக்குச் சோம சூரியாக்னி மூன்றும் மூன்று கண்களாதலின் அவனது ஆயிரந்திருமுடிக் கேற்பக கண் கண் மூவாயிரம் என்றார். நினைந்து எழுவார் வினை வளநீறாக நீறணியும் இறைவன் நீறுபூத்த நெருப்பை யொத்துத் தனது திருமேனிக்கண் விபூதியினை யணிந்து இருத்தல் நோக்கி முற்றும் நீறணிந்த என்றார். இறைவற்கு இரண்டு பக்கங்களிலும் திருத்தோள்களாலின் சோடியாயிரங் கொண்ட தோளிரண்டாயிரம் என்றார். இதனை "ஆயிரங் கமல ஞாயிறுயிரமுக்கண் முகக்கரசரணத்தோன்பா யிருங்கங்கை பனி நிலாக் கரந்தபடர் சடை மின்னு பொன்முடியோன் வேயிருந்தோளியுமை மணவாளன் விரும்பிய மிழலை சூழ் பொழிலைப், போயிருந்தேயும் போற்றுவார் கழல்கள் போற்றுவார் புரந்தராதிகளே எ - ம். எண்ணில் பல்கோடி சேவடி முடிகளெண்ணில் பல்கோடி திண்டோள்க, ளெண்ணில் பல்கோடி திருவுருநாமமேர்கொள் முக்கண்முகமியல்பு, எண்ணில் பல்கோடி யெல்லைக் கப்பாலாய் நின்றைஞ்ஞூற்றந்தணரேத்து, மெண்ணில் பல்கோடி குணத்தொழில் வீழியிவர் நம்மையாளுடையாரே." எ - ம். வருவன வற்றுற் காண்க. இராப்பகற்றென் மருதாளியை பற்றிக் கொண்டே யென்றமையால் நீ பாவனாதீதனாகிப் பல்லாயிரம் உறுப்புகள் கொண்ட நிட்களவுருவாய்த் தியானித்தல் மாட்டாயா யினவனையோர் திருவுருக்கொண்டானாகப் பாவித்து அல்லும் பகலும் அவனடிக்கண் பக்தி செய்யின் உய்வாய் என்பது பெறப்பட்டது. அவனை மனதிலெண்ணி அவன் திருநாமத்தினை வாயாற் கூறிக் கொண்டிருத்தல் வேண்டுமென்பார் படியாய் என்றார்போலும்.

இணைக்குறளாசிரியப்பா.

கொண்டலி னிருண்ட கண்டத் தெண்டோட்
செவ்வா னுருவிற் பையா வார்த்துச்
சிறுபிறை கிடந்த நெறிசெறு புன்சடை
மூவா முதல்வ முக்கட் செல்வ
தேவ தேவ திருவிடை மருத

மாசறு சிறப்பின் வானவ ராடும்
பூசத்தீர்த்தம் புரக்கும் பொன்னி
யாயிரா வணைத்துறை யாடி மப்ப
கைலாய வாண கௌரி நாயக
நின்னை வணங்கிப் பொன்னடி புகழ்ந்து
பெரும்பதம் பிழையா வரமபல பெற்றோ
ரிமையா நெடுங்க ணுமையா ணங்கையு
மழைக்கட் கடத்துப் புழைக்கைப் பிள்ளையு
மமரர்த் தாங்கும் குமர வேளுஞ்
சுரிசங் கேந்திய திருநெடு மாலும்
வான்முறை படைத்த நான்முகத் தொருவனுந்
தாருகற் செற்ற வீரக்கன்னியும்
நாவின் கிழத்தியும் பூவின் மடந்தையும்
பீடுயர் தோற்றத்துக் கோடி யுருத்திரரு
மாணப் பெருந்திறல் வானோர் தலைவனுஞ்
செயிர்தீர் நாற்கோட் டயிரா வதமும்
வாம்பரி யருக்கர் தாம்பன் னிருவருஞ்
சந்திர னொருவனுஞ் செந்தீக் கடவுளு
நிருதியுஞ் சமனுஞ் சுருதிக ளைன்கும்
வருணனும் வாயுவு மிருநிதிக் கிழவனு
மெட்டு நாகமு மட்ட வசுக்களு
மூன்றுகோடி யான்ற முனிவரும
வசிட்ட னுங் கபிலனு மகத்தியன் றானுந்
தும்புரு நாரத ரென்றிரு திறத்தரும்
வித்தகப் பாடன் முத்திறத் தடியருந்
திருந்திய வன்பிற் பெருந்துறைப் பிள்ளையு
மத்தகு செல்வத் தவமதித் தருளிய
சித்த மார்சிவ வாக்கிய தேவரும
வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்து
மோடும் பன்னரி யூளைகேட் டரனைப்
பாடின வென்று படாம்பல வளித்துத்
துவளைப் புனலிற் றவளைய ரற்ற
வீசன் றன்னை யேத்தின வென்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்

வழிபடு மொருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலு மவனிப் பிறப்புக் கென்ன
விடித்துக் கொண்டவ னெச்சிலை நுகர்ந்து
மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
யும்மைப் போல வெம்மித் தலையுங்
கிடக்கவேண்டுமென் றடுத்தடுத்திரந்துங்
கோயின் முற்றத்து மீமிசைக்கிடப்ப
வாய்த்த தென்று நாய்க்கட்ட மெடுத்துங்
காம்பவிழ்த் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதான மமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய வன்பின் வரகுண தேவரு
மினைய தன்மைய ரெண்ணிறந் தோர்க
ளனைவரு நிற்க யானு மொருவன்
பத்தி யென்பதோர் பாடு மின்றிச்
சுத்த னாயினுந் தோன்றாக் கடையே
னினனை
யிறைஞ்சில னாயினு மேத்தில னாயினும்
வருந்தில னாயினும் வாழ்த்தில னாயினுங்
கருதி யிருப்பன் கண்டாய் பெரும
நின்னல கனைத்து நன்மை தீமை
யானவை நின்செய லாதலி
னூனே யமையு நலமில் வழிக்கே. (உஅ)

(இ - ள்.) கொண்டலின் - மேகத்தை யொத்து, இருண்ட - இருளி னிறங் கொண்ட, கண்டத்து - திருக்கண்டத்தினையுடைய, எண்டோள் - திரு அஷ்ட புஜங்களுடனியைந்த, செவ்வான் உருவில் - செவந்த ஆகாயத்தைப் போலுந்திருவுருவில், பை அரவு - படத்தினைக்கொண்ட பாம்பினை, ஆர்த்து- கட்டி, சிறுபிறை கிடந்த - சிறியபிறைதங்கிய, நெறிதரு புன்சடை - நெறித் தலைக்கொண்ட அழகுதங்கிய சடைமுடியணிந்த, மூவாமுதல்வ - அழியாத முதற்பொருளானவனே, முக்கட்செல்வ - மூன்றுதிருநேத்திரங்களைக் கொண் டபெருஞ் செல்வ வாழ்க்கையனே, தேவதேவ - தேவர்களாயுள்ளார்க்குந் தேவனே, திருவிடைமருத - திருவிடை மருதூரையிடமாகக் கொண்டானே, மாசறு சிறப்பின் - குற்றமற்ற சிறப்பினையுடைய, வானவர்ஆடும் - தேவர்கள்

முழுநூர், பூசத்தீர்த்தம் - பூசத்தீர்த்தத்தினையும், பொன்னிபுரக்கும் - காவிரியாற்காக்கப்படும், ஐராவணத்துறை - ஐராவணத்துறையினையும், ஆடும் - திருமஞ்சன தீர்த்தமாகக் கொண்டாடும், அப்ப - பிதாவாயினானே, கைலாயவாண - திருக்கைலையை வாழுமிடமாகக் கொண்டவனே, கௌரிநாயக - கௌரியெனும் திருப்பெயர்பூண்ட உமைக்குத் தலைவனே, நின்னைவணங்கி - தேவரீரைவணங்கி, பொன் அடிபுகழ்ந்து - உமது திருவடிப் பெருமைகளைப் புகழ்ந்து, பெரும்பதம் பிழையா - பெரியநற்பதவி யினின்று தவறுதலில்லாத, வரம்பல - பலவரங்களை, பெற்றோர் - பெற்றவர்கள், (யாவர் எனின்) இமையா - இமைத்தல் இல்லாத, நெடுங்கண் - விசாலமாகிய கண்களைக்கொண்ட, உமையாள் நங்கையும் - உமையவளாகிய பிராட்டியும், கண் - சிறியகண்களையும், புழைக்கை - துவாரமுள்ளது திக்கையினையும், மழைகடத்து - மழைபோலு மதஜலத்தைக்கொண்ட, பிள்ளையும் - விநாயகக்கடவுளும், அமரர்த்தாங்கும் - (தேவர்களுக்கிடுக்கணேர்ந்தகாலத்து வராமலதனை)தடுத்துத்தாங்கும், குமரவேளும் - குமாரக்கடவுளும், சுரிசங்கு - வலம் புரிவடிவாகச் சுரிந்துள்ள சங்கத்தினை, ஏந்திய - கரத்திற்றாங்கிய, திருநெடுமாலும் - விஷ்ணுமூர்த்தியும், வசன் - ஆகாயமேமுதலிய பூதங்களையும் மற்றவைகளையும், முறைபடைத்த - வரிசையாகச் சிருட்டிசெய்த, நான்முகத்து ஒருவனும் - நான்குமுகங்களைக்கொண்ட ஒப்பற்றவனும், தாருகன் செற்ற - தாருகாசுரனைச் செயித்த, வீரக்கன்னியும் - வீரத்தைக் கொண்ட காளியம்மையும், நாவின்கிழத்தியும் - பிரமனது நாவினையிடமாக் கொண்டு எல்லாக்கலைகளையுந்தரவல்ல சரஸ்வதியும், பூவின்மடந்தையும் - தாமரைமலரினையிடமாகக்கொண்ட இலக்ஷுமிதேவியும், பீடுஉயர் - பெருமையிற் சிறந்த, தோற்றத்து - காட்சியினைக் கொண்ட, கோடிஉருத்திரரும் - உருத்திரகோடியரும், ஆறுப்பெருந்திறல் - கெடாத மிக்கவலிமை கொண்ட, வானோர் தலைவனும் - தேவர்களுக்குத தலைவனாகிய இந்திரனும், செயிர்தீர் - குற்றம் நீங்கிய, நால்கோட்டு - நான்குகொம்புகளைக்கொண்ட, ஐராவதமும் - ஐராவதமென்னும் தெய்வயானையும், வாம் - தாவுகின்ற, பரி - குதிரைகள் பூண்ட (தேர்களையுடைய,) அருக்கர் பன்னிருவரும் - பன்னிரண்டு சூரியர்களும், சந்திரன் ஒருவனும் - ஒருவனாகிய சந்திரனும், செம்தீக்கடவுளும் - செந்நிறத்ததீக்கடவுளாகிய அக்னிதேவனும்; நிருதியும் - நிருதியென்னுந்திக்குப் பாலகனும், சமனும் - யமனும், சுருதிகள் நான்கும் - வேதங்கள் நான்கும், வருணனும் - (நீரின்கடவுளாகிய) வருணனும், வாயுவும் - (காற்றிற்குக்கடவுளாகிய) வாயுதேவனும், இருநிதிக்கிழவனும் - (சங்கநிதிபதும நிதிகளென்னும், பெருநிதிகளுக்குத்தலைவனாகிய)குபேரனும், எட்டுநாகமும் - அஷ்டமாநாகங்களும், அட்டவசுக்களும் - வசுக்கள் எண்மரும், ஆன்ற - கல்வி கேள்விகளால் நிறைந்த, மூன்றுகோடி முனிவரும் - மூன்றுகோடி மகருஷிகளும், வசிட்டனும் - வசிட்ட மகருஷியும், கபிலனும் - கபிலருஷியும், அகத்தியனும் - அகத்தியமகருஷியும், தும்புருநாரதர் - தும்புருருஷியும் நாரத ருஷியும், என்று - என்று கூறப்பட்ட, இருதிறத்தரும் - இருவகைப் பாட்டரும், வித்தகப்பாடல் - வியப்புற்ற தமிழ்ப் பாடல்களைப் பாடிய, முத்திறத்து - சம்பந்தர், அப்பர், சுந்தரர், முதலிய மூவகையடியவர்களும், திருந்திய - திருத்தமாகிய, அன்பின் - அன்பினையுடைய, பெருந்

துறைப் பிள்ளையும் - திருப்பெருந்துறைப் பிள்ளையாகிய மாணிக்க வாசகச் சுவாமிகளும், அசதரு செல்வத்து - அந்த மதிக்கத்தக்க செல்வத்தினை, அவமதித்தருளிய - அவமதித்திருந்த. சித்தம் ஆர் - இறையவன் திருவடிக்கண் மனத்தினை வைத்த, சிவவாக்கிய தேவரும் - சிவவாக்கிய தேவரும், வெள்ளை நீறு - வெண்மையாகிய விபூதியினை, மெய்யில் கண்டு - அவனுடம்பிலிருக்க நோக்கி, கள்ளன் கையில் - திருடனது கையினிடமிருந்த, கட்டு அவிழ்ப்பித்தும் - கட்டாகிய தளையினை அவிழ்க்கக் கட்டளையிட்டும், ஓடும் பல் நரி - ஓடுகின்ற பல்நரிகளின், ஊளை கேட்டு - ஊளையிடு ஒலியினைக் கேட்டு, அரனை பாடின என்று - சிவமூர்த்தியினை பாடின என்று, படாம் பல அளித்தும் - பலபோர்வைகளையவற்றிற்குத் தைத்திட்டும், குவளைப்புனலில் - குவளைக்கண் மலர்ந்துநிற்கும் தடாகங்களில், தவளை அரற்ற - தவளைகள் சத்திக்க, ஈசன் தன்னை - சிவமூர்த்தியை, ஏத்தின என்று - துதித்தன என்று, காசும் பொன்னும் - மணிகளையும் பொற்காசுகளையும், கலந்து தூவியும் - விரவியவற்றிற்குத தூவியும், வழிபடும் ஒருவன் - வழிபாடுசெய்யும் ஒருவன், மஞ்சனத்து - திருமஞ்சனத்தின் பொருட்டு, இயற்றிய - பதனிட்டுக் காயவைத்த, செழுவிதை எள்ளை - செழித்த விதையாகிய எள்ளினை, தின்னக்கண்டு - அவன் தின்னத் தாம் நோக்கி, பிடித்தலும் - அவனைப்பிடித்தலும், அவன் இப்பிறப்புக்கு என்ன - அக்கள்வன் இனிவரும் பிறவியிலும் சிவமூர்த்திக்கு அடிமை செய்யும் பிறவி வேண்டுமென இவ்வாறு செய்தேன் என, இடித்து - அவனுக்குத் தாமும் அவ்வாறு பிறத்தலை விரும்புகிறேன் எனவுறுதி கூறி, எச்சிலை - அவனுண்ட எச்சிலை, கொண்டு - வாங்கி, நுகர்ந்து - உண்டு, மருதவட்டத்து - திருவிடைமருதில், தனிக்கிடந்த - தனித்துக்கிடந்த. ஒரு தலையைக்கண்டு - ஒருதலைக் கூட்டினை நோக்கி, தலை உற வணங்கி - தமது தலை பூமியில் பொருந்த வணங்கி, எம் இத்தலையும் - எமது இந்தத்தலையும், உம்மைப்போல - நீர் இவ்விடைமருதின் வழியில நல்லோர் பத தூளிபட்டுப் புண்ணிய முறுவதுபோல, கிடக்கவேண்டுமென்று - பூமியில கிடக்கவேண்டும் என. அடுத்து அடுத்து - பலமுறை நெருங்கி. இரந்தும் - யாசித்தும், நாய்க்கட்டம் - நாயின் மலமு கோயின் முற்றத்து - திருக்கோயிலின் திருமுற்றவாயிலின், மிசை - மேல், கிடப்ப - இருக்க, வாய்த்தது என்று - நமக்குத திருப்பணியொன்றுகிடைத்ததென்று, எடுத்தும் - அக்கட்டத்தை தாமெடுத்தும், காம்பு அவிழ்த்து - காம்பு அற்று, உதிர்ந்த - கீழ்உதிர்ந்த, கனிஉருகண்டு - கனியின் உருவத்தினை நோக்கி, வேம்புகட்கு எல்லாம் - வேப்பம் விருக்ஷத்திற்கெல்லாம், விதானம் - மேற்கட்டிகளை, அமைத்தும் - அமைக்கும்படி கட்டளைதந்தும், விரும்பின - தாம்விரும்பிய எப்பொருளையும், பரம்பரற்கு - இறைவனுக்கு, கொடுக்கை - கொடுத்தல் (நலம் என்று) புரிகுழல் - புரியாகிய கூந்தலையுடைய, தேவியை - மனைவியை, பரிவுடன் கொடுத்த - விருப்பத்துடன் கொடுத்த, பெரிய அன்பின் - மிக்க அன்பினைக்கொண்ட, வரகுணதேவரும் - வரகுணதேவ ரென்பாரும், இனையதன்மையர் - இவ்வகைத் தன்மையுடையார், எண் இறந்தோர்கள் - அளவு இல்லாதவர், அனைவரும் நிற்க - அனைவோரும் இருக்க, யானும் ஒருவன் - ஒருவனாகிய அடியேனும், பத்தி என்பது ஓர் - உமது திருவடிக்கண்

பக்தியென்கிற ஒரு,பாடும் இன்றி-பெருமையும் இல்லாமல்,சுத்தன் ஆயினும்-(கொலையாதித்தொழில்கள் தவிர்ந்த) சுத்தனாகவேனும்,தோன்ரு-காணப்படாத, கடையேன் ஆன்மாக்களி லிறுதியானவன், (ஆதலால்) நின்னை-தேவரீரை, இறைஞ்சிலன் ஆயினும் - வணங்கேன் ஆயினும், ஏத்திலன் ஆயினும்-துதியேன் ஆயினும், வருந்திலன் ஆயினும்-வருந்தி வணங்கேனாயினும், வாழ்த்திலன் ஆயினும் - வாழ்த்திலேன் ஆயினும், பெரும - பெருமானே, கருதியிருப்பன்-தேவரீரை எக்காலத்தும் மனத்திடை யெண்ணியிருப்பேன, கண்டாய் - அதனை நீயே அறிவாய், நின் உலகு அனைத்தும் - உலகம் எல்லாம் உனதுரிமை, நன்மைதீமை ஆனவை - (அவ்வுலகத்து ஆன்மாக்கள்செய்யும்) நலமும் தீங்குமாவன செயல்கள், நின்செயல் - தேவரீரது கருமங்கள், ஆதலின் - ஆகையால், நலம் இல்வழிக்கு - நலமில்லாத தீயவழிக்கு, நானே அமையும்-நான் ஒருவனே காட்டாகக்கூறல் அமையும், ஆதலால் காத்தருள் செய்க. எ-று.

இறைவனே தேவரீரை வணங்கிப் பெரும்பயன்பெற்ற உமையாள் முதல் வரகுணதேவரிறுதியான பலருமிருக்க நானொருவனும் பத்தியென்பதுசிறிதுமில்லேனாயினும் தேவரீரை மனத்திடை யிடைவிடாது தியானித்திருப்பேன நீ உலகமுதல்வன் எல்லாச்செயலும் உனது ஆகலின் அடியேனைக் காத்தருள்செய்க என்பது கருத்து.

(கு-ரை) இறைவனுக்கு எட்டுத்திக்குகளும் எண்டோள்களாதலின் எண்டோள் எனக்கூறினர், இருண்டகண்டம், செவ்வானஉரு,பையரவுகூறியது மாறுபடுபொருணிலை. அநாதி நித்தியனாதலின் மூவாமுதல்வ என்றார்.

திருவிடைமருதூரில் காவிரிக்குத் தென்சார்பில் நந்திதேவரால் காக்கப்பட்டுக் கல்யாணதீர்த்தமெனப் பெயர்கொண்ட தீர்த்தம் ஒன்றுண்டு. அதில் ஸ்நானஞ்செய்ய நினைத்து எழுவதற்குமுன் பாவமனைத்தும் நீங்கும். அத்தீர்த்தத்தில் நாடோறும் படியினும் விசேடமேயாயினும், ஆதிவாரம் அதிகமாகும், அதினும் ஜன்மநக்ஷத்திரமதிகம், அதினும் அமாவாசையதிகம், அதினும் கிரகணபுண்ணியகாலம் அதிகம் இவை அனைத்திற்கும் தைப்பூசம் அதிகம். 'அப்பூசமதிற் படிந்திடுதல் விசேடமாதலி னத்துறைக்குப் புகலுநாமம் தேசமுழுவதும் பூசத்துறையென்ன" என்பதால் பூசத்துறை என்று பெயருண்டாயிற்று. எல்லா ஆன்மாக்களு மிதின்மூழ்கி முத்தியடைந்ததாலதற்குக் கல்யாண தீர்த்தம் என்றும்பெயர். இதில் கார்க்கோடகன் மூழ்கிப் பரீச்சித்தைக் கடித்த பாபத்தினின்று நீங்கினன். நளன் கலிகொண்டகாலத்துமூழ்கிக் கலி நீங்கினன். பலபத்திரன் சூதபுராணிகனைக் கலப்பையாலெறிந்த பாவத்தை யிதின்மூழ்கிப் போக்கிக்கொண்டான். இவ்வகைப் பலரும் மூழ்கிப் பாவம்நீங்கினர்.

காவிரியின்கணுள்ளகந்த தீர்த்தத்தின் தென்திசையில் உள்ள விக்கினேச தீர்த்தம் ஐராவணதீர்த்தமெனவும்பெறும். இதற்குஅப்பெயரெதினுலெய்தியதெனின் பூமகள் நாவின்செல்விக்கு ஒருபொன்னரிமாலைதர அதனை அவள் துருவாசமுனிவற்குக்கொடுத்தனள். அம்முனிவர் அதனைப்பெற்றுப்பொன்னுலகடைகையில் இந்திரன்பவனிவரக்கண்டு அதனை யவனுக்குத்தர அவ்விந்தி

ரனதனை வாங்கி யானைமீது வைத்தனன். அவ்யானையு மதனை யெடுத்து விலங்கின்றன்மையால் பூமியிற்றேய்த்தது. அதுகண்டமுனிவ ரினங்கொண்டு யானையினைக் காட்டானையாக வெனவும் இந்திரன் செல்வங்கடலிடைப்புகவும் சாபமிட்டனர். இவ்வகைச் சாபமேற்ற இருவருள யானை காட்டிலலையுநாள் ஒருபகல் விக்கினேச தீர்த்தத்தினை யடைந்து அதில் மூழ்கச் சாபநீங்கி முன்னையுணர்வுதோன்றி யிறைவனை வணங்கி யருள்பெற்றுத் தேவருலக மடைந்தது. "வினைவரிய புகழ் விக்கினேசுர தீர்த்தத்துறை முன்னிலவு நாற்கோட், டனைய களிறுபடிந்ததால யிராவணத்துறை யென்றறையு நாமம்." என்றபடி விக்கினேசுர தீர்த்தத்தில் ஐராவத மூழ்கிப் பாவ நீக்க மடைந்தமையா லதற்கு ஐராவணத்துறை யென்று பெயருண்டாயிற்று. நீயும் சத்துவகுணமுடையை உனது தேவியும் அவ்வகையள என்பார் அதனைக் குறிப்பிக்கக் கைலாயவாண எ-ம், கௌரிநாயக எ-ம், கூறினர். நின்னை வணங்கிப் - புகழ்ந்து, என்றதற்கு, நின்னருள் சுரந்து பொன்னடி பணிந்து எனவும்பாட பேதங் கூறுப. எத்தேவர் பதத்தினு முயர்பத மாதலின் இறைவன் பதத்தினைப் பெரும் பதம் என்றார். விசாலாக்ஷி யாதலின் இமையா நெடுங்கண், என இறைவியின திருநயனத்தைக் கூறினார். புழைக்கைப் பிள்ளையாகிய விநாயகருக்கு மழைக்கடங் கூறினார். யானையின் முகமுடைமை கருதியிது உபசாரம். பிள்ளை யென்றார் இறைவற்கு மிக்க அன்புள்ளமை கருதி. தேவர்க்குப் பானுகோபன் முதலியோரால் உற்ற இடுக்கண் களைந்து காத்தமை நோக்கி அமரர்த்தாங்கும் குமரவேளும் என்றார். சுரி சங்கு என்பதில் சுரி, சாதி அடை. ஆகாயம் எல்லாப் பூதங்களுக்குமுதலாய் ஏனைய பூதங்களைத்தாங்கி நிற்றலின் வான்முறை படைத்த - எ-ம், பன்னிரண்டுமதிக்குரிய சூரியர் என்பார் வாய்பரியருக்கர் தாம் பன்னிருவரும். எ-ம் புனலில் எடிடப்பச் சென்றிருத்தல் புத்தனார் தலையிலிடிவிழுதல் முதலிய பல அற்புதங்களைத் திருஞானசம்பந்தரும், கற்றூணிற் கட்டுண்டு கடலில் மிதத்தல், நீற்றறையினின்று நீங்குதல் முதலிய பலஅற்புதங்களைத் திருநாவுக்கரசரும், வெங்கரா வுண்டபிள்ளை யழைத்தல் முதலிய பல அற்புதங்களைத் திருநாவலூராளியும்செய்தமையின் அத்திருப்பதிகங்களின் உயர்வுதோன்றவித் தகப்பாடன் முத்திறத்தடியர் எ-ம், சிவனே வும்மிடத்து அருள் வேண்டும் வேண்டுமென அழுதடியடைந்த பெருந்திருவாளராதலின் திருந்திய அன்பிற் பெருந்துறைப்பிள்ளை யென்றார்.

செல்வத்தினை யவமதித்து இறைவன் திருவடிக்கண் மனத்தினைச் செலுத்தி முத்தியடைந்தமையின் அத்தகு ..சிவவாக்கிய தேவரும் என்றார்' "வெள்ளை நீறு என்பதுமுதல் வரகுண தேவர் என்பதன் காறும் வரகுண தேவர்சரிதமாம். இவ்வரகுணதேவர் திருவாலவாயினை யரசாண்டுவந்த சுந்தரேசபாதசேகரபாண்டியரது தவத்தாற்றோன்றிப்பாண்டிநாட்டை யரசாண்டு வந்தனர். ஓர் நாள் அறநெறிப்படி வேட்டைமீதுசென்று வேட்டையாடுகையில வேட்டத்துனூறத்தால் காலந்தவறச்சூரியன் மேற்றிசையடைந்தனன். பொழுது பட்டமையானரசன் விரைந்து குதிரையைச் செலுத்திவருகையில் வேதியனொருவன் வனத்திலுற்ற வடவிருக்கத்தடியில் துயின்றிருந்ததை

நோக்காது புரவியைச் செலுத்த அவனூரத்தில் புரவி அடிவைத்துச் சென்ற
தால் வேதியனிறந்தனன். பாண்டியனிதனை யுணராது அரண்மனைபுகுந்து
களிப்புற்றனர். உயிர் நீத்த அவ்வேதியனுடலை அந்தணர் அரசற்குக்
காட்ட அரசன் றுணுக்குற்று அந்தோ தெரியாதிழைத்தேனென்றிரங்கி வேதி
யற்கு வேண்டிய கொடுத்து ஈமக்கடன செயவிளான். வேதியனைக்கொன்ற
மையால்அரசனைப்பிரமகத்தியணுகித் தீமைபுரிய அரசனதனை நீக்கும்வகைப்
பல யாகாதிகள் செய்தும் செய்வித்தும் நீங்காமையால் கூடனயகனை யடை
ந்து குறையிரப்ப இறைவன் அரசனே உன மாட்டு விககிரமசோழன்படை
யெடுத்து வருவான், அவனை வென்று நீ பின்றொடர் கையில்நம்மை நாம்
வழிபட்ட திருத்தலமாகிய திருவிடை மருதினை யடைந்துஅவ்விடம்பூசத்
தீர்த்தத்தில் நீராடி நம்மைத் தரிசிப்பாய் அக்காலத் துனைப்பற்றியபிரமகத்தி
நீங்குமென்னும் ஆகாயவாணி கேட்டு மகிழ்ந்திருந்தனன் சில, நாள் சென்ற
பிறகு விக்கிரமசோழன் வஞ்சிபூண்டு படை கொடுவந்து பாண்டியனைப்
போர்க்கழைத்து அவனூற்றறருத்தோற்றுப் புறங்காட்டி யோடுகையில பாண்
டியன் தோற்றவனைப் பினதொடர் தலறமன்றேனும அசரீரியின் வாக்கின்படி
பின்றொடாநது பொன்னி நாடடைந்து திருவிடை மருதுாரை யணுகினன்.
அன்று பூசநாள் ஆகையால் அரசன் சோழனைப் பின்றொடர்தல் விட்டுப்
பூசத்துறையில் மூழ்கிக் கீழைத் திருககோபுரத்தைத் தரிசித்து இறைவனைச்
சேவிக்க உள்ளடைந்தனன். அரசனைப்பற்றிய பிரமகத்தி யரசனுடன் செல்
லுதற்கஞ்சிக் கீழைக்கோபுர வாயிலினின்றது. அரசனும் மாசிற்கழிந்த மணி
யேபோல் பழிதீர்ந்து இறைவன் சன்னதியிலிருக்க இறைவன் பாண்டியனை
நோக்கி அரசனே யுன்னைத் தொடர்ந்த பிரமஹத்தி கீழைக் கோபுரவாயி
லிலிருத்தலால் நீ மேலைக்கோபுர வாயிலால் மதுரையடைக என்று திருவாய்
மலர்ந்தனர். இதனைச் செவியேற்ற அரசன் அவ்வாறு திருக்கோயிலை யரி
தினகன்று பிரிவாற்றாமையால் தன் பெயரால் ஒரு கோபுர மியற்றியவ்விடங்
காலங்கடோறும் கண்ணுதலைத் தரிசித்திருந்தனன. ஒரு நாள் வரகுணதேவர்
அரண்மனையில் கள்வனொருவன் களவு செய்து நீங்கக் காவலளார் கண்டு அவ
னைப் பிடித்துத் தளையிட்டு அரசன்முன் விடுத்தனர். அரசரும் அவன் உடம்
பில்விபூதியணிந்திருத்தலைக்கண்டு இவா ஒரு சிவனடியவர்போலு மிவர் சிவ
னடியவர்பொருட்டுப்பொருள் வேண்டியிவ்வகை புரிந்தனரென்று அவனைப்
பிணித்திருந்த தளையை நீக்கக்கட்டளையிட்டனராதலால் அடிகள் "வெள்ளை
நீறு மெய்யிற் கண்டு கள்ளன் கையிற் கட்டவிழ்ப்பித்தும்." என்றார். மற்றோர்
நாள் அரசர் ரணமனைக்கண் கண்ணுறங்குகையில் நள்ளிரவில் நரிகள ஊளை
யிட அவ்வொலி அரசர் காதில் அரவொலியாகக் கேட்பத் தேவர்அமைச்ச
ரைககூவிச் சிவனடியவர்களின் ஒலிபோல் கின்றவையென்னையென அமைச்
சர் அவை நரிகளின் ஊளையென்ன ஆயின் அவை குளிரால் வருந்திச் சகி
யாது இறைவனைப்பாடுகின்றன போலு மென்று அந்நரிகளை வேடுவரால்
துன்புறுத்தாது பிடித்துவரக் கட்டளையிட்டு அவற்றிற்கு உயர்ந்தபோர்வை
களையளித்துப் போக்கினனராதலால் "ஓடும் பனைரி யூளை கேட்டானைப்
பாடின வென்று படாம் பல அளித்தும்" என்றார். பின்னொருநாள், மழையின்

மிகுதியால் தவளைகள் அரற்ற அவை அரசருக்குச் சிவனடியவர் ஒலிபோல் கேட்க அமைச்சரை யழைத்து அவ்வொலிக்குக் காரணம் வினவினர். அவர்கள் அவை தவளைகளின் ஒலியென்றனர். ஆயின் அவை மழை மிகுதியால் இரைபெறாது இறைவனை நோக்கிக் கூவுகின்றன போலுமென்று எண்ணிப் பொற்காசுகளுடன் பல ஆகாரங்களைக் கலந்து தூவ ஏவினராதலால், அடிகள் "குவளைப்புனலிற்றவளை யரற்ற ஈசன்றன்னையேத்தினவென்று காசும் பொன்னுங் கலந்து தூவியும்" என்றார். வேறொருநாள் சிவனடியவர் ஒருவர் திருமஞ்சனத்தின் பொருட்டுச் சிறந்த எள்ளினை வெயிலில் காயவைத்திருக்க வழிச்செல்வானொருபேதை அவ்வெள்ளில் ஒரு பிடி எடுத்து வாயிலிட்டனன். சிவனடியவர் அவனை விழுங்கவொட்டாது அவ்வகைப்பிடித்து வரகுணதேவர்முன் விட்டனர். தேவர் ஏட இவ்வாறு செய்தனையென வினவக் கள்வன், அரசே இவர் திருமஞ்சனத்தின் பொருட்டு எள்கொடுத்துச் சிவகதியடைய எண்ணி யிவ்வாறு இயற்றினர். அடியேனினிவரும் பிறவியில் அதனை யாட்டும் எருகப் பிறந்து அப் புண்ணியத்தைப்பெறக்கருதி யிவ்வாறு செய்தேனென, அரசரும் இருக்கையினின்று திடுக்கெனக்குதித்து ஆயினவ் வெண்ணெயாடும் செக்கினை யிழுப்பவை யிரண்டெருதுகளன்றோ? அவற்றில் நீவி ரொரு எருதாயினுமொரு எருதாகியப் புண்ணியத்தைப் பெறவெண்ணுகின்றேனென்று அக்கள்வனது வாயிலிருந்த எள்ளிற்பாதி கொண்டுண்டனராதலின் "வழிபடுமொருவன் மஞ்சனத்தியற்றிய செழுவிதையெள்ளைத்தின்னக்கண்டு, பிடித்தலு.....நுகர்ந்தும்" என்றார். தேவர் ஒருநாள் திருவீதிவலம் வருகையில் ஒருதலைக்கூடு வழியிலிருக்கநோக்கி இறந்தும் இத்திருவீதியிலும்மித்தலையிருக்கும் பெரும்புண்ணியத்தைக்கைக்கொண்டீர் உம்மைப்போன்று எனது தலையுமிருக்கவரம் தந்தருளபுரியவேண்டுமென்று பலமுறையதனை யிரந்தமையின். "மருதவட்டத்து ஒரு தனிக்கிடந்த...இரந்தும்" என்றார். மற்றொருநாள் மருதவாணரைத்தரிசிக்க வரகுண தேவர்செல்ல அதற்குமுனனொருநாய், திருக்கோயின் முற்றத்தில் மலவிசர்ச்சனஞ் செய்தகன்றது. இதனைக்கண்டதேவர், மனம்பதைத்து இதனை நான்முதலபிரதக்ஷணம்செய்துவருமுன் யாவரேனும் அகற்றுவரேல் என்னாட்டிற்காற் கூறுதருவேனென்று சங்கற்பித்து, அப்பிரதக்ஷணத்தைமுடித்து, இரண்டாமுறைவலம்வருகையில் நோக்க அதனை யெவரும் எடாமைகண்டு இப்பிரதக்ஷண முடித்துவருமுன் எடுப்பாருக்கு என்னாட்டி லரைகூறுகொடுப்பல் எனச்சங்கற்பித்து, அதனையுமுடித்துவந்து நோக்க எடாமைகண்டு மனம் வருந்தி மூன்றுமுறை வலம் வருவதன்முன னெடுப்பாற்கு முக்காற்கூறு கொடுப்பல் எனச் சங்கற்பித்து அப்பிரதக்ஷணத்தையு முடித்து நோக்குகையில் அக்கட்டம் இருக்கக்கண்டு முழுக்கூறுமெனதேயாக வென்று அந்நாய்க் கட்டத்தினைத் தாமேயகற்றினமையின் "கோயின்முற்றத்து...நாய்க்கட்டமெடுத்தும்" என்றார். வேறொருநாள் வழியில வேம்பின் கனிகளுதிர்ந்திருத்தலை நோக்கியவை சிவலிங்கவுருக்கொண்டிருப்பனவென்று அமைச்சரைநோக்கி அவ்வுருக்கொண்ட கனிகளைத் தரும் வேம்புகட்கு விதானமளிக்கச் செய்தமையின் "காம்பவிழ்த் துதிர்ந்த

கனியுருக்கண்டு...அமைத்தும்' என்றார். மற்றொருகால், வரகுணதேவர்க்குத் தோற்றபின் சென்ற விக்கிரமசோழன் தன் குமரியை வரகுணதேவருக்குக் கொடுத்து நட்புச் செய்துகொள்ள எண்ணி யவ்வாறே யநுமதி பெற்றுப் பாணிக்கிரகணம் செய்துவைத்தனன். வரகுணதேவரும் சோழன் குமரியுடன் பள்ளியறையடைந்து அவளது வடிவழகைக்கண்டு உலகத்துச் சிறந்தபொருள் எமதாண்டவனுக் குரித்தாகையால் நாளிவளை யெமதாண்டவருக் கர்ப்பணஞ்செய்வேனென்று அவள்கரத்தைப் பற்றிக் காவலாளரறியாது புறம்போந்து திருக்கோயிலடைந்து திருக்கதவங்காப்பிட்டிருந்தமையால் மருதப்ப என்றழைக்க, இறைவனும் வரகுணவென்று திருக்காப்பு நீக்கியருளித்தனர். வரகுணதேவர் உள்ளடைந்து தமது தேவியாரை இறைவனிடம் விட்டு இவளையேற்க, வின்றே யுயிர் வாழ்வெனென்ன இறைவனும் ஒருகையொழிந்தவைகளை யுள்ளடக்கினர். அதனைக்கண்டரசனகீங்க, திருக்கதவம் காப்பிடப் பெற்றது. வரகுணதேவரும் அரண்மனையில் காவலாளரறியாது சென்று பள்ளியடைந்தனர். பொழுது புலர்ந்தபின் திருத்துயிலுணர்த்துவோர் சென்று திருக்காப்பு நீக்குகையிலசிவலிங்கத்திருவுருவிலொருபெண்ணின் கரந்தொங்கக்கண்டு அரசனுக்கறிவித்தனர். வரகுணதேவர் மருதவாணர் திருச்சந்நதியடைந்து "அத்திறமனைவனேனுக்கி இஃதெளியேன் செருட்டதென வகறறிவிட்ட கைத்தலங்கொல்" என்று கேட்க, இறைவனுனதனபினையுலகறிந்து வழிபடுவான் வேண்டி யிவ்வாறு செய்தனமென்று அக்காத்தினையும் காயாரோகண மாக்கினராதலின். "விரும்பினகொடுக்கைபரம்பரற்கென்று, புரிகுழற்றேவியைப் பரிவுடன்கொடுத்த பெரியவன்பின்வரகுணதேவரும்" என்றார். இவ்வகைப்பலரில் நாலும்ஒருவன் அவ்வகைச்செய்யேனுயினும் எண்ணியிருப்பேனுதலின் கருதியிருப்பன்கண்டாய் என்றார்.

நேரிசைவெண்பா.

வழிபிழைத்து நாமெல்லாம் வந்தவா செய்து
பழிபிழைத்த பாவங்க ளெல்லாம் - பொழில்சூழ்
மருதிடத்தா னென்றொருகால் வாய்கூப்ப வேண்டா. (௨௯)
கருதிடத்தா நில்லா கரந்து.

(இ - ள்.) நாம் எல்லாம் - உலகவாசிகளாகிய நாம் அனைவரும், வழிபிழைத்து - (இறைவனருளிச்செய்த வேதாகம முறைப்படியொழுகாது) அவ்வழிக்கு மாறாகப்பிழைசெய்து, வந்தஆறுசெய்து - மனங்கொண்ட விதம் எல்லாம் இயற்றி, பிழைத்த - பிழைபாகச்செய்துள்ள, பழிபாவங்கள எல்லாம் - பழியும் பாவங்களும் ஆயதுன்பங்கள் முழுதும, ஒருகால்-ஒருமுறை, மருது இடத்தான் என்று - திருமருதூரினை யிடமாகக்கொண்ட மருதவாணனே என்று, வாய்கூப்ப - வாய்குவித்து அவனதிருநாமத்தினைக்கூற, வேண்டா - வேண்டாவாம், தாம் - அப்பழிபாவங்கள், கருதிட - வாய்கூறாதுமனத்தாலெண்ணிய துணையே, கரந்து - ஒளித்து, நில்லா - நிலையாவாம், எ-று.

இறைவன் கருணாமூர்த்தியாதலின் அவன் திருநாமம் கூறவேண்டுமெனல் வேண்டா. அவனைப் புறக்கரணங்களில் ஒன்றாகிய வாயாற்கூறுதலினும் அந்தக்கரணங்களி லொன்றாகிய மனத்தானினைத்தல் ஏற்றமுடைத்தாதலின் அவ்வகை யொருக்கால் நினையின் பற்பல பிறவிகளிற்செய்த வினையனைத் தும் தீமூன்னர்ப் பஞ்செனப்பட்டவியும் நீ நலமடைவாய் என்பது கருத்து,

(கு-ரை.) இறைவன் திருவாய்மலர்ந்தருளிய விதியறமாதலின் அவ்வகை விதியினைப்பிழைத்தார் இறைவனிடம் மாறுகொண்டாராதலின் அவர் நரகடைவரென்பதிற் சற்று மையமின்று அவர் அந்நரகசேடம் புசித்துமீண்டும்பிறவியடையுங்காலும் பாதகர்களாய்ப்பிறப்பராதலின் அவ்வகையர் இவ்வகைத் தொன்று தொட்டுவரும் அப்பாவத்தொடர்ச்சியு நீங்கும்வகை இறைவன் திருநாமமாகிய திருமந்திரத்தினை யொருக்காலகூற நலம்பெறுவர் என்பார் - வழிபிழைத்து - பாவங்களெல்லாம் என்றார். தன்னையொத்த உலகத்தவரும் அங்ஙனம் வழிபிழைக்கின் அதனால் வருந்துன்பநீங்க ஓர் உபாயமுளது அங்ஙனஞ் செய்கவெனக் காக்கையினுதவியொப்பத்தம்மினத்தவரையும்கூறுவார் நாமெல்லாம் என்றார். நாம் எல்லாம் எனுமிடத்துள்ள எல்லாம் என்பதனை வந்தவா என்பதுடன்கூட்டிவந்தவா எல்லாம் எனப்பொருள்கொண்டு பொய்கூறலாதி மகாபாதகங்களெனப் பொருள்கூறினுமாம். அப்பாவங்கள் இறைவனது பல்லாயிரந் திருநாமங்களில் ஒரு நாமம் நினைக்கினும் கெடுமென்பார் நில்லா என்றார்.

கட்டளைக்கலித்துறை.

கரத்தினின் மாலவன் கண்கொண்டுநின் கழல்போற்றநல்ல
வரத்தினையீயு மருதவப்பாமதி யொன்றுமில்லேன்
சிரத்தினு மாயென்றன் சிந்தையுளாகிவெண் காடனென்னுந்
தரத்தினுமாயது நின்னடியாந் தெய்வத் தாமரையே. (கூ0)

(இ-ள்.) மாலவன் - திருமாலாகிய விஷ்ணுமூர்த்தி, கரத்தினில் - கரத்தால், கண்கொண்டு-கண்ணைப்பேர்த்து, நின்கழல - உனது திருவடியினை, போற்ற - (அருச்சித்து) வணங்க, நல்லவரத்தினை - அவன்விரும்பிய நலலவரத்தினை, ஈயும் - கொடுத்து அநுக்கிரகிக்கும், மருத அப்பா - திருவிடைமருதில் எழுந்தருளியிருக்கும் அப்பனே, நின் அடியாம் - உனது திருவடியாகிய, தெய்வத்தாமரையே - தெய்வத்தன்மையுள்ள தாமரைகள், மதி ஒன்றும் இல்லேன் - அறிவுசிறிதும் இல்லாத என்னுடைய, சிரத்தினும்ஆய் - முடியிடத்தும் போற்றத்தக்கதாகி, என் சிந்தையுள் ஆகி - என்மனததிடததுள்ளதும் ஆகி, வெண்காடன் எனும் - திருவெணகாடன் என்னென்ற, தரததினும் ஆயது - வகையிலும் உதவிபுரிந்தருளியது. எ-று.

(கு-ரை.) திருமால் தமதுகரத்துப்பூக்கொண்டு அருச்சிக்க ஆவற்றிலைன்று காணுது தமது கண்கொண்டு அருச்சித்துச் சக்கரம்பெற்றமையின்-கரத்தினின் - போற்ற என்றார். அவ்வகை அன்பு மருளுமுடைய தேவன்பொரு

ட்டு அனுக்ரகிக்காது அவன் வன்செய்கைக் கிரங்கிய உமது திருவடி எளிய என்னிடமுடியிலும் மனத்தினும் ஆயது யான்செய்புண்ணியமென்பார் மதி... ஆயது, என்றார். ஏனையதாமரைகள் காலைப்போதிலலர்ந்து மாலைப்போதில் குவிதல்போலாது எக்காலத்தும் உள்ளத்தலர்தலின் தெய்வத்தாமரையென்றார். கண்கொண்டு என்பதில் கொண்டு என்பதைக் கருவிப்பொருளதாகிய சொல்லுருபென்னினுமாம். கழல் என்பது அக்கழல்புனைந்ததிருவடிக்கு ஆகுபெயர். காப்புக் கடவுளாதலின் அத்தொழிற்குவேண்டிய சுதரிசனத்தைப்பெறப்பூசித்தமையின் அவனெண்ணியாங்குப்பகைவரைவென்று தேவரைக்காக்க அளித்தமையின் நல்லவரம் என்றார், தன்னினிழிந்தானுசவினைவனிரப்புரைக்குத்தக்கவாறு ஈந்த எனக்கூறினார். அம்மால் தேவரினுயர்ந்தோன் அறிவாலுயர்ந்தோன் யானஃதொன்றுமில்லேன், இழிந்த மானிடன் என்பார் ஒன்றுமில்லேன் என்றார். ஒன்று என்பது அறிவினைக்குறித்து நின்றது. அவ்வகையான எளியேனுக்கு அத்திருவடி யகத்தும் புறத்துமாய் நின்று அருள்புரிந்ததென்பார் சிரத்தினுமாய்ச் சிந்தையுளாகியென்றார். அது எனக்கு வெளிக்கண்பாலனுவுருவமாகியும் மனக்கண் அதனை யிறந்தும் நின்றது என்பார் அவ்வாறுகூறினார். அதுதானே யென்னை வலியப்பணிகொண்டு அருள்செய்து சிந்தையுளளும் சென்னியிலும் பெயராது அருள்புரிந்து நிற்றலின் ஆகியென்றார். இறைவனது திருவருளால் இம்மும்மணிக்கோவை யொருவாறு முடிந்தது.

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டான் திருவடிவாழ்க.

திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

முற்றிற்று.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

நான்காவது

திருவேகம்பமுடையார்

திருவந்தாதி மூலமுமுரையும்.

மெய்த்தொண்டர் செல்லுநெறியறியேன் மிகநற்பணிசெய்
கைத்தொண்டர் தம்மிலுநற்றொண்டு வந்திலனுண்பதற்கே
பொய்த்தொண்டுபேசிப் புறம் புறமேயுன்னைப் போற்றுகின்ற
வித்தொண்டனேன்பணிகொள்ளுதியோகச்சியேகம்பனே. (க)

(இ-ள்.) மெய்த்தொண்டர் - உண்மையாகிய தொண்டர்கள், செல்லும் நெறி - அடையும் வழியினை, அறியேன் - நானறியமாட்டேன். மிகநற்பணிசெய் - அதிகமாக நல்ல திருப்பணிகளைச்செய்கின்ற, கைத்தொண்டர்தம்மிலும் - கையால் திருத்தொண்டு செய்வார் தம்மிலும், நற்றொண்டு - நல்ல திருப்பணியை, உவந்திலன் - விரும்பினேனல்லன், உண்பதற்கே - வயிற்றை நிறப்பும் விதமாக, பொய்த்தொண்டு பேசி - தொண்டுசெய்வதாகப் பொய் பேசி, புறம் புறமே - (அகத்திலன்றது) புறம் புறமாக, உன்னைப் போற்றுகின்ற - அடியேனும் ஒரு தொண்டன் என்று தேவரீரைவணங்குகின்ற, இத்தொண்டனேன் - இந்தத்தொண்டனுடைய, பணி - திருப்பணிகளை, கொள்ளுதியோ - கொள்வாயோ, கச்சியேகம்பனே - திருக்கச்சிக்கண் எழுந்தருளியிருக்கும் ஏகம்பநாதனே. எ-று.

(க-ரை) அடியேன் உண்மையாகவும்மையறிந்து பூசிக்கும் தொண்டரது நெறியையும் அறிந்திலேன். அங்ஙனம் அதனைக்கொள்ளா தொழியினும், சரியைகிரியையைச்செய்துமைக்களிப்பிக்கு அடியரையொத்துநானும் அவ்வாறுசெய்து நன்மையெய்துதற்கும் வன்மையுடையேனல்லன், வயிறு வளர்த்தற்பொருட்டு அடியேனும் ஒருத்தொண்டன் திருத்தொண்டு செய்வோனெனக்கூறி வேசதேசம் உம்மைவணங்கா நிற்பேன் ஆதலின்எனது திருப்பணியை விரும்பாய் என்று அடியேனையும் அடிமைகொள்ளுதியோ அன்றே உன் திருவருள் இருந்தபடி என்பதுகருத்து.

ஏகம்பனேயென்னையாள்பவனேயிமையோர்க்கிரங்கிப்
போகம்பன்னாளுங்கொடுக்கின்றநாயகபொங்குமைவாய்
நாகம்பொன்னாரமெனப்பொலிவுற்றுநன்னீறணியும்
ஆகம்பொன்மாமலையொப்பவனேயென்பனாதரித்தே. (உ)

(இ - ள்.) ஆதரித்து-உன்திருப்பெயரினைக் கூற விரும்பி, ஏகம்பனே-திரு ஏகம்பத்தினைத் திருக்கோயிலாக்கொண்டுள்ளானே, என்னை ஆள்பவனே-அடியேனை யடிமைகொண்டாள்வானே, இமையோர்க்கு இரங்கி - தேவர்கள்பொருட்டு இரக்கமடைந்து, போகம் - (அவர்கள் வேண்டிய) இஷ்டசித்திகளை, பல்நாளும் - பலநாட்களிலும், கொடுக்கின்ற நாயக - தருகின்ற தலைவனே, பொங்கும் - கோபிக்கின்ற, ஐவாய்நாகம்-ஐந்துதலைகளையுடைய நாகத்தினை, பொன் ஆரம் என - பொன்னாரமாக, பொலிவுற்று - அழகாகப் பூண்டுகொண்டு, நல் நீறு அணியும் - நல்ல திருவெண்ணீற்றினை யணியப் பெற்ற, ஆகம் - திருமேனி, பொன்மாமலை - பொன்மலையினை, ஒப்பவனே-ஒத்திருப்பவனே, என்பன் - என்று கூறுநிற்பன். எ - று.

(க-ரை.) அடியேன், தேவரீர் திருப்பெயர்களைக் கூறுவானாதரித்துத் தேவரீர் தேவர்பொருட்டும் மற்றவர்பொருட்டும் உதவிசெய்த உபகாரத்தினை யெண்ணியப்பேருதவியை நினைக்குந்தோறும் அடியேனுக்குண்டாம் மனக்கிளர்ச்சியால் எண்ணிக் கூறுநிற்பேன். எனது உடல்பொருள் ஆவிமுழுதும் தனதெனக்கொண்டு அடிமைகொண்டவனாதலின் என்னை ஆள்பவனே எனவும், தேவர்கள் சாதுக்களாதலால் அவர்கள் பொருட்டிரங்கி அவர்கள் வேண்டிய போகங்களை நீங்காது வேண்டியவாறு கொடுப்பவனாதலின் போகம் பன்னாளுங் கொடுக்கின்ற நாயக என்றார். ஐவாய்நாகம் என்றதனால் ஆதிசேடன்முதலிய நாகங்கள் என்பது கூறப்பட்டது. இறைவனுக்குப் பொன் போலுந் திருமேனியாதலால் ஆகம்பொன் மாமலையொப்பவன் என்றார்.

தரித்தேன் மனத்துன் றிகழ்தரு நாமந் தடம்பொழில்வாய்
வரித்தேன் முரல்கச்சி யேகம்ப னேயென்றன் வல்வினையை
யரித்தே னுனைப்பணி யாதவ ரேழைமை கண்டவரைச்
சிரித்தே னுனக்கடி யாரடி பூணத் தெளிந்தனனே. (ரு)

(இ - ள்.) தடவுபொழில்வாய் - விசாலமாகிய சோலையிடத்து, வரி - கீற்றுக்களையுடைய, தேன் - வண்டுகள், முரல் - சப்திக்கின்ற, கச்சிஏகம்பனே - திருக்கச்சிக்கண் எழுந்தருளியிருக்கும் திரு ஏகம்பனே, மனத்து மனத்திடத்து, உன் திகழ்தருநாமம் - உமது விளக்கங்கொண்ட திருநாமத்தினை, தரித்தேன் - தரிக்கப்பெற்றேன், என்றன்வல்வினையை - எனது வலிய வினையினை, அரித்தேன் - நீக்கினேன், உனை - தேவரீரை, பணியாதவர் - வணங்காதமூடரது, ஏழைமைகண்டு - ஏழைமைநோக்கி, அவரை சிரித்தேன் - அவரைச்சிரித்தொழித்தேன், உனக்கு அடியார் - உமதிடம் அடிமை கொண்டாரது, அடிபூண - திருவடியினையென் தலைக்கு முடியாகப்புனைய, தெளிந்தனன் - தேற்றங்கொண்டேன். எ - று.

(க-ரை.) உலகமேயுருவமான அவன் திருமேனியைக் குறித்து நிற்றலின் திகழ் தருநாமம் என்றார். அது எம்மையினும் நீங்காது நிற்றலின் அதனை வல்வினையென்றார். ஏனையமெல்வினையுமுற்றமையினிதனை வல்வினையென்றார். உமதுதிருவடியையும்திருமந்திரத்தினையும்பற்றுகக்கொண்டு என்னைப் பிடித்

துப்பலஜனனங்களினு மரித்துவரும் வினையினை நீக்கினேன் என்பார் அரித்தேன் என்றார். இவ்வகை தேவரீரைப் பணியாது வினைதமை ஏறவிட்டுச் சநநமரணங்களொழியாது கும்பிக்கே கூர்த்தவினைசெய்து நிற்பார் அறிவிருந்து மிலராதலின் அவரறியாமை ஏழைமையுடைத்தாதலின் சிரித்தேன் என்றார். சிரித்த நான் என்னைக்கண்டு பிறரவ்வகைச் சிரிக்காவாறு இறைவனது அடியாரடி பூணநலமடைவேனாதலின் தெளிந்தனனே என்றார். இது இறைவனடிபெறற்குபாயங்கூறியவாறாம்.

தெளிதரு கின்றது சென்றென் மனநின் றிருவடிவம்
அளிதரு நின்னருட் கைய மினியில்லை யந்திச்செக்கர்
ஒளிதரு மேனியெம் மேகம்ப னேயென் றுகந்தவர்தாள்
தளிதரு தூளியென் றன்றலை மேல்வைத்த தன்மைபெற்றே. (௪)

(இ - ள்.) அந்திச்செக்கர் - அந்திக்காலத்துண்டாம் செவ்வானத்தைப் போல், ஒளிதரு - பிரகாசிக்கின்ற, மேனி - திருமேனியினைப்பெற்ற, எம் ஏகம்பனே - திரு ஏகம்பத்திலெழுந்தருளியிருக்கும் எமது தலைவனே, என்று - என்று தேவரீர் திருநாமத்தினைத் துதித்து, உகந்தவர் - ஆனந்தமடைந்தவரது, தாள் - பாதத்தில், தளிதரு - அடைந்திருக்கும், தூளி - புழுதி, என்தலைமேல் - அடியேனது தலையில், வைத்ததன்மை பெற்று - வைத்ததன்மையினையடைந்து, என்மனம் - அடியேனது மனது, நின்திருவடிவம் சென்று - தேவரீரது திருஉருவத்திற்சென்று, தெளிதருகின்றது - தெளிவினை அடைகின்றது (ஆதலால்) இனி - இனிமேல், அளிதரு - கருணைசெய்கின்ற, நின் அருட்கு - தேவரீர்திருவருள் உண்டாதற்கு, ஐயமில்லை - சந்தேகஞ்சிறிது மில்லை. எ - று.

(க-ரை.) நினது அடியாருடன் நட்புக்கொண்டு அவர் காற்றூளியென் றலைக்கண்கொள்ளும் தன்மையடைந்தேனாதலினின்றிருவருள் இனி யெனக்குண்டாம் என்பது கருத்து.

பெற்றுகந் தேனென்று மர்ச்சனை செய்யப் பெருகிநின்சீர்
கற்றுகந் தேனென் கருத்தினி தாக்கச்சி யேகம்பத்தின்
பற்றுகந் தேறு முகந்தவ னேபடர் நாகக்கச்சின்
சுற்றுகந் தேர்விடை மேல்வரு வாய்நின் றுணையடியே. (௫)

(இ - ள்.) கச்சி ஏகம்பத்தின் - திருக்கச்சி யேகம்பத்தின்கண், பற்று உகந்து - எழுந்தருளியிருக்கும் விருப்பத்தினையடைந்து, ஏறும் உகந்தவனே - இடபத்தினையும் வாகனமாகப் பெற்றவனே, படநாகக்கச்சின் - படங்களையுடைய கச்சாகிய ஆதிசேடனது, சுற்று உகந்த - சுற்றாகிய அணையை விரும்பிய, ஏர்விடைமேல் - அழகுகொண்ட மால்விடைமீது, வருவாய் - எழுந்தருள்வோய், நின்துணையடி - தேவரீரது திருவடியே, என்றும் - எக்காலத்தும், பெருகி அர்ச்சனைசெய்ய - மிகவும் அருச்சனை செய்தற்பொருட்டு, பெற்று உகந்தேன் - பெற்றுக்களித்தேன், என் கருத்து இனிது

ஆக - எனது எண்ணம் நலம் பெற்று நிருமலமடைய, நின்சீர்கற்று உகந்தேன் - உமது சீர்த்திகளாகிய புகழ் அனைத்தும் கற்றுணர்ந்தேன். எ - று.

(க-ரை.) அறவிடை மால்விடைகளை வாகனமாகக்கொண்டு திரு ஏகம்பமமர்ந்தோய்! அடியேனருச்சித்தற்பொருட்டுத் தேவரீரது திருவடிகளைப் பெற்றேன் எனது மனம் நிர்மலமடைய உனது திருப்புகழைத் தோத்திரஞ் செய்யப்பெற்றேன். என்பதாம்.

அடிநின்ற சூழல கோசர மாலுக் கயற்கலரின்
முடிநின்ற சூழ்முடி காண்பரி தாயிற்றுக் கார்முகிலின்
இடிநின்ற சூழ்குர லேறுடை யேகம்ப யாமெங்ஙனே
வடிநின்ற சூலப் படையுடை யானை வணங்குவதே. (௬)

(இ - ள்) மாலுக்கு - திருமாலுக்கு, அடிநின்ற - இறைவனது திருவடி நிலைத்த, சூழல் - இடம், அகோசரம் - அறிவிற்கப்புறத்ததாயிற்று,அயற்கு - பிரமனுக்கு, முடிநின்றஅலரின் - முடியோடு கூடிய மலர்மாலை தங்கிய, சூழ முடி - நெருங்கிய திரு முடியினை, காண்பு அரிது ஆயிற்று - காணுதலருமை ஆயினது, கார்முகிலின் - கார்காலத்து மேகத்தின், இடிநின்ற - இடியை யொத்த, சூழ்குரல்-ஓசைமிக்க ஒலியினைக் கொண்ட, ஏறு உடை ஏகம்ப - இடபத்தினையூர்ந்த ஏகம்பவாணனே, வடிநின்ற - கூர்மைதங்கிய, சூலப்படையுடையானை - சூலாயுதத்தை யேந்தியவும்மை, யாம்-நாங்கள், வணங்குவது - தொழுவது, எங்ஙன் - எவ்வாறு ? எ - று.

(க-ரை.) மால் மண்ணிடந்தும், அயன் விண்பறந்தும் அடியுமுடியும் காணு தலைந்திருக்க, அடியேன் தேவரீரது திருவடியைக் காணவல்லனோ ? என்னால் ஆகாது என்பது கருத்து. இது இறைவனது பரிபூரண நிலைமை கூறி, அவனதுபெருமையும் ஏனைத்தேவரின் மாட்டாமையும் தெரிவித்தவாறு.

வணக்கந் தலைநின் றிருவடிக் கேசெய்யு மையல்கொண்டோ
ரிணக்கன்றி மற்றோ ரிணக்கறி வோமல்லம் வல்லரவின்
குணக்குன்ற வில்லி குளிர்கச்சி யேகம்பம் பாடினல்லாற்
கணக்கன்று மற்றொரு தேவரைப் பாடுங் கவிநலமே. (எ)

(இ - ள்.) நின்திரு அடிக்கே - தேவரீரது திருவடிகளுக்கே, தலைவணக்கம் செய்யும் - தலையால் வணங்குதலைச் செய்கின்ற, மையல் கொண்டோர் - (விடாத) ஆசைபூண்ட மெய்யடியவரின், இணக்கு அன்றி - நட்பு அல்லாது, மற்றோர் இணக்கு - வேறொரு இணக்கத்தை, அறிவோம் அல்லம் - அறியோம், வல் அரவின் - வலிய பாம்பினது, குணம் - நாணினைக் கொண்ட, குன்றவில்லி - மேருவினை வில்லாக்கொண்ட சிவமூர்த்தியின், குளிர்கச்சியேகம்பம்-குளிர்ந்த திருக்கச்சியேகம்பத்தினை, பாடின் அல்லால்- பாக்களால் பாடின் அல்லாமல், மற்றொரு தேவரை - வேறு தேவர்களை, பாடும் - பாடுகின்ற, கவிநலம் - கவியால் உண்டாகும் நலம், கணக்கு அன்று கணக்கின் வகையில் கொள்ளும் பான்மையுடைத்தன்று. எ - று.

(க-ரை.) இறைவனே தேவரீரது திருவடிக்கணீங்காதபத்திமை கொண்டு அத்திருவடிக்கு முடிவணக்கஞ் செய்கின்ற சிவனடியவரை நாம்வணங்குவோமன்றி யேனையோரை வணங்கோம். தேவரீர் எழுந்தருளியிருக்குந் திருவேகம்பம் பாடும்பரிசேயன்றி யேனைய தேவரைப்பாடுதல் கணக்காகக் கொள்ளும் பாலதன்று. இதனால் அவனை வணங்கும் வணக்கமும் அவனைப் பாடும் பாவும் நலம் பெறும் என்பது கூறப்பட்டது.

நலந்தர நானொன்று சொல்லுவன் கேண்மினல் லீர்களன்பு
கலந்தர னூர்கச்சி யேகம்பங் கண்டு கனற்றிகிரி
சலந்தர னாக மொழிக்கவைத் தாய்தக்கன் வேள்வியெல்லா
நிரந்தர மாகச்செய் தாயென்று பூசித்து நின்மின்களே. (அ)

(இ - ள்.) நல்லீர்கள் - பெண்காள், நலம்தர - நன்மையுண்டாக, நான் ஒன்று சொல்லுவன் - நான் ஒன்று கூறுவன், கேண்மின் - கேளுங்கள், அன்பு கலந்து - அன்புடன் கூடி, அரனூர் - சிவமூர்த்தியின், கச்சியேகம்பம் கண்டு - திருக்கச்சியேகம்பத்தினைத் தரிசித்து, கனல்திகிரி - அக்னி போலும் சக்ராயுதத்தால், சலந்தரன் ஆகம்-சலந்தராசுரன் தேகத்தை, ஒழிக்கவைத்தாய் - ஒழிக்கச்செய்தவனே, தக்கன் வேள்வியெல்லாம் - தக்கனது யாக முழுதும், நிரந்தரமாகச் செய்தாய் - இடமிலாது கெடும்படி செய்தாய், என்று பூசித்து - என்று இருவகையாலும் பூசித்து, நின்மின்கள் - நில்லுங்கள். எ - று.

(க-ரை.) பெண்காள் உமக்கு நலமுண்டாக நான் ஒன்று கூறுவன்; அஃதாவது திருக்கச்சியேகம்பத்தினைக்கண்டு தரிசித்துச் சலந்தரனது தேகத்தைச் சக்கரத்தால் ஒழித்தவனே! தக்கன் வேள்விமுதலறக் கெடுத்தவனே! என்று பூசித்து நில்லுங்கள் என்பது கருத்து.

மின்களென் றார்சடை கொண்டலென் றார்கண்ட மேனிவண்ணம்
பொன்களென் றார்வெளிப் பாடுதம் பொன்னடி பூண்டுகொண்ட
வென்களென் றாலும் பிரிந்தறி யார்கச்சி யேகம்பத்தான்
றன்களென் றாருல கெல்லா நிலைபெற்ற தன்மைகளே. (கூ)

(இ - ள்.) தம்பொன் அடி - தமது அழகிய திருவடிகளை, பூண்டு - சிரத்திற் கணியாக்கொண்டு, கொண்ட - மனத்திடை நீங்காது கொண்ட, கச்சியேகம்பத்தான் தன் - திருக்கச்சியையும் ஏகம்பத்தினையும் இடமாகக் கொண்ட சிவமூர்த்தியின், உலகெல்லா நிலைபெற்ற தன்மைகள்-உலக முழுதும் வியாபித்திருக்கும் சர்வ வியாபகத் தன்மைகள், கள் என்றார்-வஞ்சகம் என்றார், (அங்ஙனம் கூறினார்க்கு நான் அவனை எவ்விடத்தும் கண்டமும் சடையும் பொன்மேனியுமாய்த் தரிசித்திருக்க,நீவிர் அவ்வாறு கூறுதலடாதென்ன அவர்கள், வெளிப்பாடும் - அவன் வெளிப்பட்டுத் தரிசனந்தருதலும் இவ்வாறு அஃதாமாறு) சடை - அவனது சடைகள், மின்கள் என்றார் - மின்னற் கொடிகள் என்றார்கள், கண்டம் - திருக்கண்டத்தினை, கொண்டல் என்

னார் - மேகம் எனக் கூறினார்கள், மேனி வண்ணம் - திருமேனியின் வண்ணம், பொன்கள் என்றார் - பொன்னாகும் என்றார். எ-று.

(க - ரை.) இது இறைவனது உருவெளிகண்டு வருந்தும் தலைவிக்குத் தோழியர் அவனது உலகவியாபகம் வஞ்சகம் உனக்குத் தோற்றுதல் அவனது உண்மையுரு அன்றென மறுத்துத் தேற்றியதாம்.

தன்மையிற் குன்றாத் தவத்தோ ரிமையவர் தாம்வணங்கும்
வன்மையிற் குன்றா மதிற்கச்சி யேகம்பர் வண்கயிலைப்
பொன்மயிற் சாயலுஞ் சேயரிக் கண்ணும் புரிகுழலும்
மென்மையிற் சாயு மருங்குலுங் காதல் விளைத்தனவே. (௧0)

(இ - ள்.) தன்மையில் - நல்லகுணத்தினின்றும், குன்றா - குறையாத, தவத்தோர் - தவத்தினரும், இமையவர் - தேவர்களும், வணங்கும் - பணிகின்ற, வன்மையில் - உறுதியினால், குன்றா - குறைவுபடாத, மதில் - திருமதில்களைக்கொண்ட, கச்சியேகம்பர் - திருக்கச்சியேகம்பரது, வண்கயிலை - வளமுள்ள கயிலை வரைப்பின்கணின்ற, பொன்மயில் - பொன்போலும் மயிலின் தன்மைவாய்ந்தவளது, சாயலும் - சாயலும், செம்மை அரி - செவ்வரிபடர்ந்த, கண்ணும் - கண்களும், புரிகுழலும் - வகிராகிய கூந்தலும், மென்மையில் - மிருதுத்தன்மை வாய்ந்து, சாயும் - வளைகின்ற, மருங்குலும் - இடையும், காதல்விளைத்தன - ஆசையைவிளைவித்தன. எ - று.

(க - ரை.) இது, கச்சியேகம்பரது கயிலைப்புனத்துத் தலைவியைத் தனித்துக்கண்ட தலைவன், அவளது நடையுமிடையும் கண்ணும் குழலுங் கண்டு காமுற்றுப் புகழ்ந்தது. இறைவனை யெக்காலு மனத்திடைத் தியானிப்பதில் ஒழிந்தோரல்லாமை நோக்கித் தன்மையிற் குன்றாத் தவத்தோர் என்றார்.

தனமிட்டு மைதழு வத்தழும் புற்றவர் தம்மடியார்
மனம்விட் டகலா மதிற்கச்சி யேகம்பர் வான்கயிலைச்
சினம்விட் டகலாக் களிறு வினவியோர் சேயனையார்
புனம்விட் டகலார் பகலாம் பொழுதுநம் பூங்கொடியே. (௧௧)

(இ - ள்.) உமை - காமாக்ஷி, தனம் இட்டு - தனம் பொருந்தும்படி தழுவ, தழும்பு உற்றவர் - மூலத்தழும் படைந்தவர், தம் அடியார் - தமதடியவர்களது, மனம் - மனக்கோயிலை, விட்டு அகலா - விட்டு நீங்காத, மதில் கச்சி ஏகம்பர் - மதில் சூழ்ந்த திருக்கச்சிக்கணெழுந்தருளி யிருக்கும் திருவேகம்பரது, வான்கயிலை - உயர்ந்த கயிலாயவரைச் சாரலில், ஓர்சேய் அனையார் - குமரவேளையொத்த ஒருவர், சினம்விட்டு அகலா - கோபத்தினின்று நீங்காத, களிறு வினவி - யானை யெய்திற்றோ வெனக் கேட்டு, பகல் ஆம் பொழுதும் - பகலாகிய காலத்தும், நம்புனம் விட்டு அகலார் - நமது புனத்தை விட்டு நீங்கார். பூங்கொடியே - பூங்கொடியையொத்தவளே, இவர் யாவரோ அறியேன். எ - று.

(க-ரை.) இது, தலைமகன் தழை கொண்டு நின்று கரந்த மொழியாற் றன்கருத்தறிவிக்க, மேனியொளியிலனாய் இப்புனத்தினின்றும் போகாது யானையோடு ஏனம் வினவி இவ்வாறு பொய்கூறுநின்ற இவன் யாவனோ எனத்தோழி அவனை யையுற்றுக் கூறு நிற்றல்."

"இது, மதியுடம்படுத்தல். அஃதாமாறு" இரண்டனுள் ஒன்றூற் சென்றெய்திய பின்னர்த் தெருண்டு வரைதலைத் தெருளானாயின் அவள்கண் ணுற்றுக்காட்டப்பட்ட காதற்றோழியை வழிபட்டுச் சென்றெய்துதல் முறை மையென்ப. வழிபடுமாறு, தெற்றெனக்குறை கூறாது இரந்து வைத்துக் கரந்த மொழியாற்றன் கருத்தறிவித்து அவளை யையவுணர்வினளாக்கி அது வழியாக நின்று தன்குறை கூறுதல், வேழம் வினாதல் என்பது-குறை கூறத் துணியா நின்றவன் என் குறையின்னதென்று இவளுக்கு வெளிப்படக் கூறு வேனாயின் இவள் மறுக்கவும் கூடுமென வுட்கொண்டு, என்குறை இன்ன தென்று இவடானே யுணருமளவும் கரந்த மொழியாற் சில சொல்லிப்பின் குறையாறுவதே காரியமென, வேட்டைகருதிச் சென்றானாக அவ்விருவரு ழைச் சென்று நின்று தன் காதல் தோன்ற இவ்விடத்து ஒரு மதயானை வரக்கண்டீரோ என வேழம் வினவாநிற்றல்" இதனைத் திருக்கோவையார் "இருங்களியாயின்றி" என்னுஞ் செய்யுளாலறிக.

கொடியொப்பாளே கச்சியேகம்பரது கைலைப்புனத்துக் குமரக் கட வுளையொத்த வொருவர் வந்து வேழம் வினவிப்பகலாம் பொழுதும் அதனை விட்டு நீங்கார் இவர் யாரோ அறியோமென்பது கருத்து.

பூங்கொத் திருந்தழை யார்பொழிற் கச்சியே கம்பர்பொற்பார்
கோங்கத் திருந்த குடுமிக் கயிலையெம் பொன்னொருத்தி
பாங்கொத் திருந்தனை யாரணங் கேபடர் கல்லருவி
யாங்கத் திருந்திழை யாடிவந் தாற்கண் டடிவருத்தே. (கஉ)

(இ-ள்.) ஆர் அணங்கே - அழகுநிறைந்த திருமகளை யொப்பாளே, பூகொத்து - பூங்கொத்துகளும், இரும்தழை - பெருமையுற்ற பச்சிலைகளும், ஆர் - நிறம்பிய, பொழில்-சோலைசூழ்ந்த, கச்சியேகம்பர் - திருக்கச்சியேகம்ப ரது, பொற்பு ஆர் - அழகு நிறைந்த, கோங்குஇருந்த - கோங்குமலர்களிரு ந்த, குடுமி - சிகரங்களையுடைய, கயிலை-திருக்கயிலைப் புனத்து, எம்பொன்- எமதுபொன்னை யொத்தாளது, பாங்குஒத்து - குணங்களை யொத்து, இருந் தனை - இருந்தாய், அத்திருந்திழை - அத்திருந்திய அணி பூண்டாள், படர்- பரந்த, கல் அருவி - ஒலிக்கின்ற ஆற்றுநீரில், ஆடிவந்தால் - (உனைப்பிரிந்து) அவள் நீராடி வருவளேல், ஆங்கு - வந்த அப்போது, கண்டு-அவளைக்கண்டு குறைகூறாது, அடிவருத்து - நீயு மவளுடன்கூடி அடிவருந்தப் பதிக்கு வரு வாய். எ - று.

(க-ரை.) இது "தலைமகள், தனக்குத் தலைமகனோடுண்டாகிய புணர்ச்சி யொழுக்கத்திற்கு இவள் காவற்றோழியாகையால் இடையூறுமென்னும் உள் ளத்தளாய்நின்று இவ்வொழுக்கத்தைத் தோழியறியின் நன்றென்னும் நினைவு

வராநின்ற நற்றாய்தோழியை நோக்கி யிவள் சுனையாடிவரின் அவளது வேறுபாடுகண்டு நீவருந்தாது அவளை யுடன்கொண்டு பதிக்கு வருதியெனக் கூறியதாம். இது வேறுபடுத்துக்கூறல் எனினுமாம். கோங்கத்து என்பதில் அத்துச்சாரியை.

வருத்தந் தருமெய்யுங் கையிற் றழையும்வன் மாவினவுங்
கருத்தந் தரிக்கு நடக்கவின் றைய கழனினையத்
திருத்தந் தருளுந் திகழ்கச்சி யேகம்பர் சீர்க்கயிலைத்
துருத்தந் திருப்ப தன்றிப் புனங்காக்குந் தொழிலெமக்கே. (கரு)

(இ - ள்.) வருத்தம்தரும்-வருத்தத்தைக்கொடுக்கின்ற, மெய்யும்-தேகமும், கையில் - கரத்தில், தழையும்-தழையும், வல்மாவினவும்-வலியயானைசென்ற வழியை வினவுகின்ற, கருத்து-எண்ணமும், இன்று அந்தரிக்கும் - இப்போது வேறுபடுத்தும், ஐய நடக்க - ஐயனே உமதெண்ணப்படி நடக்கக்கடவீர், கழல் நினைய - திருவடியை நினைக்க, திருதந்தருளும் - செல்வத்தைத் தந்தருளுகின்ற, திகழ்கச்சிஏகம்பர் - விளங்குகின்ற திருக்கச்சியேகம்பரது, சீர்க்கயிலை இப்புனம்-சிறந்த கயிலாயச்சாரலிலுள்ள இப்புனத்தை, காக்கும் தொழில் எமக்கு-காக்குந்தொழிலுளோமாகிய எங்களுக்கு, துருதந்து இருப்பது அன்று - உன் வரவுபோக்குகளை யாராய்தல்தொழிலன்றாம். எ - று.

(க-ரை.) இது எதிர்மொழி கொடுத்தல், அதாவது, களிறுவினவிப் புனத்திடைவந்த தலைமகனைக்கண்ட தோழி உன் வாடியமேனியும், கையிடைத் தழையும் காணின் மனம் வேறு சொல்வேறாகக் காணப்படுகின்றதாதலால் இப்புனம்விட் டகல்கவெனக் கூறியதாம்.

எம்மையு மெம்மைப் பணிகொள்ளுங் கம்ப ரெழிற்கயிலை
யும்மையுமானிடமிப்புனத்தேவிட்டுவந்தமைந்தர்
தம்மையு மானையுஞ் சிந்தையு நோக்கங் கவர்வவென்றோ
வம்மையு மம்மலர்க் கண்ணும் பெரியீ ரருளுமினே. (கச)

(இ - ள்.) எம்மையும் - எப்பிறவியினும், எம்மை - தம்மடிசார்ந்த எங்களை, பணிகொள்ளும்-திருப்பணிசெய்ய அடிமையாகக் கொள்ளும், கம்பர்-திருஏகம்பரது, எழில்கயிலை-அழகியகயிலையையடைந்த, புனத்துஇடத்தே-புனத்தின்கண், மான் விட்டு - மானினைவிட்டு, மைந்தர் வந்தது - வலிமைமிக்கார் மான்வினவி - அது காரணமாகப் பின்வந்தது, தம்மை சிந்தையும் - தமது மனத்தினையும், மானையும் மையையும் - மானையொத்த எமது தலைவியையும் அவள் தீட்டிய கண்ணின்மையையும், கவர்வ என்றோ - கவர்வான் வேண்டியல்லவா, பெரியீர் - இத்தகைவஞ்சகமுடையீராதலினீர் பெரியீர், அம்மையும் - கவர்ந்த அந்தமையினையும், அம்மலர்க்கண்ணும் - அப்பரந்த கண்களையும், அருளுமின் - அளித்துக் கருணை செய்யுங்கள். எ - று.

இது, கலைமான்வினுதலென்னுந்துறை. அஃதாவது, வேழம் வினவியுட்புகுந்த பின்னர், தான் கண்ணுலிடர்ப்பட்ட மைதோன்றநின்று தம்

முடைய கண்கள்போலும் கணைபொருதலாலுண்டாகிய புண்ணுடன் இப் புனத்திடைகண் ஒருகலைமான்வரக் கண்டீரோ வென்று கலைமான் வினவா நிற்றல்'' என்றார். ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர். இதற்குச் செய்யுள் திருக்கோவையார் ''கருங்கண்ணனையறியாமை நின்றோன்'' என்பதாலறிக. இச்செய்யுள், தலைவன் இப்புனத்துமான் எய்திற்றோவென வினவிய காலத்து ஆண்டிருந்த ஆயத்தவர் தலைவனைக்கண்டு தமது மனத்தினையுந் தலைவியின் கண்ணினையும் அவளது மையையும் கவர்வான் வேண்டி வந்ததுபோலுமெனக் கூறியதாம். வந்தது, என்னுமிடத்து து விகுதி விகாரத்தால் தொக்கது.

அருளைத் தருகம் பரம்பொற் கயிலையு ளெம்மையரம்
பிருளைக் கரிமறிக் கும்மிவ ளைய ருறுத்தியெய்ய
வெருளக் கலைகணை தன்னொடும் போயின வில்லிமைக்கு
மருளைத் தருசொல்லி யெங்கோ விலையுண்டிவ் வையகத்தே. (௩௫)

(இ - ள்.) மருளைத்தருசொல்லி - உன்வாய்ச்சொற்கேட்ட அனைவரும் மருளடையத்தக்க சொற்களையுடையாளே, அருளை தருகம்பர் - வேண்டினோர் வேண்டியவகைக் கருணை செய்யும் திரு ஏகம்பர், அம்பொன் கயிலையுள் - அழகிய பொன்னின் சிகரங்கள் வாய்ந்த திருக்கைலையுள், எம்ஐயர் - எழுந்தருளியிருக்கும் எமது தலைவர், இருளை - இருட்டினை, கரி-யானைகள், மறிக்கும் - இவை தம்மோடொத்த யானைகளென வெண்ணிப் போர்க்குத் தடுக்கின்ற, இவரையர் - இந்த மலைநாட்டவர், அம்பு - அம்பினை, உறுத்தி எய்ய - வலி கொண்டு எய்ததனால், வெருள் அக்கலை - பயந்த அக்கலைமான், கணை தன்னொடும் போயின - பட்டகணையுடன் போயினது, இவையகத்து - இப் பூமியில், வில்லிமைக்கு - அவரது வில்லின் வலிமைக்கு, எங்கோவிலை உண்டு - யாண்டு விலை உண்டு? எ - று.

(க-ரை.) போயினவென்னுமிடத்து ஒன்றன்பால் விகுதிதொகுத்தல். இது இறைவனை நகுதல், அதாவது கலையெய்து அதன்பின் வந்த தலைவனது அம்பின் திறத்தைத் தலைவிக்குப் புகழ்ந்து கூறுதலாம். இதனைத் தஞ்சைவாணன் கோவையில் பாங்கிமதியுடன்பாட்டின்கண் கூறிய இறைவனை நகுதற்றுறையாலறிக.

''மைவாளிலங்குகண் மங்கைநல் லாய்தஞ்சை வாணன் வெற்பில்
இவ்வா ளிமொய்ம்ப ரின்றெய்தமெய்ம்மானின மாந்தளிரின், செவ்வாளி
யுங்கொண்டு சேட்சென்ற தாலன்று சீதை கொண்கன், கைவாளியுங்
கொண்டு போன பொய்ம் மானினுங் கள்ளத்ததே'' என்பதாலறிக.

வையார் மழுப்படை யேகம்ப ரீங்கோய் மலைப்புனத்து
ளையார் வருகலையே னங்கரி தொடர்வேட் டையெல்லாம்
பொய்யா னவையர் மனத்தவெம் பூங்கொடி கொங்கைபொற்றுப்
பையா ரரவிடையா யிற்றுவந்து பரிணமித்தே. (௩௬)

(இ - ள்.) வைஆர் - கூர்மைதங்கிய, மழுபடை - மழுவாயுதத்தினை யேந்திய, ஏகம்பர் - திருவேகம்பரது, ஈங்கோய் மலைப்புனத்துள் - திருவீங்கோய் மலைப்புனத்துள், ஐஆர் - அழகுநிறைந்த, வருகலை - திரிகின்ற மானினையும், ஏனம் - பன்றியினையும், கரி - யானையினையும். தொட - தொடர்துசெய்த, வேட்டை எல்லாம்-எல்லாவேட்டைகளும், வந்துபரிணமித்தே-வந்துஇப்போதுவேறுபட்டு, பொய்யான-பொய்யாயினவாய், ஐயர் மனத்த - எமது தலைவரது மனத்தினைவிட்டுநீங்காதிருக்கின்றன, அவைஎம்பூகொடி-எமதுபூங்கொடிபோல்வாளது, கொங்கைபொரூ-தனத்தினைப்பொறுக்காத, பைஆர் - படந்தங்கிய, அரவுஇடைஆயிற்று-பாம்பினையொத்த இடைக்கே வந்துமுடிந்தது. எ - று.

(க - ரை.) இது அறிவுநாடல், அஃதாவது, இவன்யாவனோவென் றையுறுநின்ற தோழிபேராராய்ச்சியளாதலின், அவன் கூறியவழியேநாடாது வந்து தங்களிடைக்கேமுடிதலின், இவ்வையர்வார்த்தை இருந்தவாற்றான் ஆழமுடைத்தென்று அவனினைவறியாநிற்றல். அதற்குச்செய்யுள் "ஆழமன்றோவுடைத்திவ்வையர் வார்த்தையனங்கனைந்து, வீழமுன்னோக்கியவம்பலத்தான் வெற்பினிப்புனத்தே, வேழமுன்னாய்க் கலையாய்ப்பிறவாய்ப்பின்னுமென்றமையாய், மாழைமென்னோக்கியிடையாய்க்கழிந்தது வந்துவந்தே" என்பதாலறிக. திருஈங்கோய்மலை சோணாட்டுக்காவிரியின் வடகரைக்கணுள்ள சிவத்தலங்களுள்ஒன்று. இது தேவர்முதலியவர் இடைவிடாது பூசிக்கக்கண்ட அகத்தியமுனிவர் காலம்பெறாமல் ஈயுருக்கொண்டு பூசித்ததால் இப்பெயர்பெற்றது.

பருமுத் துதிர்த்திடுஞ் சீர்மத்த யானை நுதல்பகுந்திட்
டுருமொத்த திண்குரற் சீயந் திரிநெறி யோங்குவைவாய்ப்
பொருமுத் தலைவேற் படைக்கம்பர் பூங்கயி லைப்புனத்துட்
டருமுத் தனநகைத் தன்னசை யால்வெற்ப சார்வரிதே. (கஎ)

(இ - ள்.) வெற்ப - குறிஞ்சிநிலத்தலைவனே, உருமு ஒத்த - இடியையொத்த, திண்குரல் - வலிந்தகுரலையுடைய, சீயம்-சிங்கம், சீர்-இலக்கணத்தினலமமைந்த, மத்தயானை - மதங்கொண்டயானையின், நுதல்பகுந்திட்டு - மத்தகத்தைப்பிளந்து, பருமுத்து - பருத்தகொம்பின்களுள்ள முத்துகளை உதிர்த்திடும் - உதிரச்செய்யும், திரிநெறி - மாறுபாடானசுரத்தின்வழியாக, ஓங்கு - உயர்ந்த, வைவாய் - கூர்மையுள்ளவாயினையுடைய, பொரு - போர்செய்கின்ற, முத்தலைவேல்படை-மூன்றுகவர்களையுடையசூலத்தினைப்பெற்ற, கம்பர் - ஏகம்பரது, பூகயிலைபுனத்துள் - அழகியதிருக்கயிலாயப்புனத்தகத்தில். தரு - ஒளியைத்தருகின்ற, முத்துஅன்ன - முத்தினையொத்த, நகைதன் - பற்களையுடையதலைவியின், நசையால் - ஆசையினால், சார்வுஅரிது - நீவருதல்அடாது. எ - று.

(க - ரை.) இது, இரவுக்குறி. தலைமகன் இரவுக்குறி வேண்டி நெஞ்சுடைந்து வருந்தாநிற்பக்கண்ட தோழி, இவ ளிறந்துபடவுங் கூடுமென

வுட்கொண்டு,நீயாளிகணிறைந்து நின்று யானைகளைத் தேடும் இவ்வழியின்கண்வந்துமீள்வேன் என்று நின்றாய்,இதற்குத் தீவினையேன் சொல்லுவதென்னோவென்று மறுத்தவாய்பாட்டால் நெறி அருமை கூறி யிரவுவரல் விலக்கல். இதனை "கூளி நிரைக்கநின் றம்பலத்தாடி" என்னுந் திருக்கோவையார் திருப்பாசுரத்தா லறிக. இட்டு' ஆற்ற லுணர்த்தும் விகுதி. நுதல் ஆகுபெயர்.

அரிதன் றிருக்கண் ணிடநிரம் பாயிரம் போதணிய
அரிதன் றிருவடிக் கர்ச்சித்த கண்ணுக் கருளேகம்பர்
அரிதன் றிருக்கங் குலியால ழிந்த கயிலையல்லிங்
கரிதன் றிருப்பதெம் பால்வெற்ப வெம்மையர்க் கஞ்சுதுமே. ( )

(இ - ள்.) அன்று - அக்காலத்து, இருக்கு - வேதங்கள், அண்ணிட - தரிசித்து நெருங்க, அரிது - அரிதானவன், அரி - விஷ்ணுமூர்த்தி, தன் திருவடிக்கு - தனது திருவடிக்கண், நிரம்பு-இதழ்நிறம்பிய, ஆயிரம்போது - ஆயிரம் தாமரைமலர்களை, அணிய - அழகுற அருச்சிக்க, (அருளாமல்) அருச்சித்த - அருச்சனைசெய்த, கண்ணுக்கு - கண்ணின் பொருட்டு, அருளேகம்பர்-கருணைசெய்து அநுக்ரகித்த திருஏகம்பர், அரிதன்-தேவவைரியாகிய இராவணனது, திருக்கு - மாறுபாடு, அங்குலியால் - இறைவன் திருவிரலையூன்றிய யாத்திரத்தானே, அழிந்த-அழிவையடைந்த, கயிலை-திருக்கைலாயவழி, வெற்ப - குறிஞ்சித்தலைவனே, இங்கு எம்பால் - இங்கு எம்மிடத்தில், அல் இருப்பது - இரவு தங்கியிருப்பது, அரிது - கூடாது, (என் எனின்) எம் ஐயர்க்கு - எமது தந்தையர்க்கு, அஞ்சுதும் - நாங்கள் அஞ்சுவோமாதலின். எ - று.

(க - ரை.) இது, இரவுக்குறிவேண்டல்,அஃதாமாறு, பதிநோக்கி வருந்தாநின்ற தலைமகன் இற்றையிரவிற்கு யானுங்கள் சீறூர்க்கு விருந்து என்னையேற்றுக்கொள்வாயாக வென இரவுக் குறிவேண்டா நிற்றல். இதனை. "மருந்துநம் மல்லற் பிறவிப் பிணிக்கு" என்னுந் திருக்கோவையார் திருப்பாசுரத்தாலறிக.

அஞ்சரத் தான்பொடி யாய்விழத் தீவிழித் தன்புசெய்வோர்
நெஞ்சரத் தாழ்வுகந் தோர்கச்சி யேகம்பர் நீள்கயிலைக்
குஞ்சரத் தாழ்வரை வீழநுங் கொம்புய்யக் கும்பமுழ்கும்
வெஞ்சரத் தாரன வோவல்ல வோவிவ் வியன்முரசே. (௧௬)

(இ - ள்.) அம்சரத்தான்-அழகிய பஞ்சபாணங்களையுடைய மன்மதன், பொடியாய்விழ - பொடியாக விழுந்து கெட, தீவிழித்து - நெற்றியின்கணுள்ள அக்னி விழியைத்திறந்து கெடுத்து, அன்பு செய்வோர் - அன்பாகத் தியானிப்பவரது, நெஞ்சர்-மனத்தைக் கோயிலாக் கொண்டவர், அதாழ்வு - அந்த அடியவர் செய்யும் தவறுகளை, உகந்தோர் - களிப்பாகக் கொண்டவர், கச்சி ஏகம்பர் - திருக்கச்சிக்கண் எழுந்தருளிய திருஏகம்பரது, நீள் கயிலை -

நீண்டகயிலைப் புனத்து, நும் கொம்பு - பூங்கொம்பை யொத்த உமது தலைவி, உய்ய - பிழைக்க, குஞ்சரத் தாழ்வரை - மலையை யொத்த யானை, வீழ - வீழ்ந்து போம்படி, கும்பம் மூழ்கும் - மத்தகத்தில் அழுந்தும்வகை யெய்த, வெம் சரத்தரனவோ - வெவ்விய அம்பின் மாலையை யுடையானுக் குரியதோ, அல்லவோ - அஃதன்றி வேற்றோருக் குரியதோ, இவ்வியன் முரசு - இந்தப்பரந்த முரசவொலி கூறுவாயாக. எ - று.

(க - ரை.) இது, ஐயுற்றுக் கலங்கல். இது, வரைபொருட் பிரிந்துவரும் தலைமகனது முரசுமுழங்கா நிற்பக் கேட்டு மகிழ்வுறா நின்ற தலைவி நந்துயர் தீர நமதிடம் புக்கு யானைகடிந்தாரது முரசமோ அன்றி யாவர்பொருட்டு முழங்கும் முரசமோ அறிகின்றிலேன் எனத்தலைமகள் கலக்க முற்றுக் கூறாநிற்றல். இதனை " அடற்களியாவர்க்கு மன்பர்க் களிப்பவன் றன்பவின் பம், படக்களி யாவண் டறைபொழிற் றில்லைப் பரமன் வெற்பிற், கடக்களி யானை கடிந்தவர்க் கோவன்றி நின்றவர்க்கோ, விடக்களி யாநம் விழ நகரா ர்க்கும் வியன் முரசே." என்னுந் திருப்பாசுரத்தா லறிக.

சேய்தந்த கைம்மை யுமைகண வன்றிரு வேகம்பத்தான்
றாய்தந்தை யாயுயிர் காப்போன் கயிலைத் தாங்கிருள்வாய்
வேய்தந்த தோளிநம் மூசலொடும் விரை வேங்கைதன்னைப்
பாய்தந்து பூசலுண் டாங்கொண்ட தோசைப் பகடுவந்தே. (உ0)

(இ - ள்.) உமைகணவன்-பார்வதி பிராட்டிக்கு நாயகன், திருஏகம்பத் தான் - திரு ஏகம்பத்தி லெழுந்தருளி யிருப்போன், தாய்தந்தையாக - தாய் தந்தையரைப்போல, உயிர்காப்போன் - ஆன்மாக்களைக் காப்பவனது, சேய் தந்த - மிகவுயர்ந்த, கயிலை - கயிலாயச்சாரலின், தயங்கு இருள்வாய் - மயங் கு மிருட்கண், வேய்தந்த - மூங்கிலையொத்த, தோளி - தோள்களையுடை யாய், கை, துதிக்கையினையுடைய, பகடு வந்து - ஓர் யானைவந்து, நம் ஊசலொடும் - நாம் விளையாடும் நமது ஊசலுடன், விரை வேங்கை த ன்னை - மணமுள்ள வேங்கைமரத்தினையும், பாய்ந்து - பாய்ந்து, பூசல் கொண்டது-போரிடத்தொடங்கியது, ஓசை உண்டாம் - இதனாலுண்டாகிய ஒலி என்காதிற் படுகின்றது, இது யாதோ அறியேன். எ - று.

(க - ரை.) இது, தாய் துயிலறிதல்-அஃதாவது - " தலைமகன் வரவுண ர்ந்து தலைவியைக் கொண்டு செல்லக் கருதாநின்ற தோழி, யாம் விளையா டாநின்ற பொழிலிடத்து ஓர் யானை நின்று ஊசலைத் தள்ளா நின்றது அதற் கு யாஞ் செய்வதென்னோ வெனத்தாயது துயிலறியா நிற்றல். அதற்குச் செ ய்யுள். " கூடாரரணெறி கூடக் கொடுஞ்சிலை கொண்ட வண்டன், சேடார் மதின் மல்லற் றில்லையன் றாய்சிறு கட்பெருவெண், கோடார் கரிகுரு மாம ணி யூசலைக் கோப்பழித்துத், தோடார் மதுமலர் நாகத்தை நூக்கு நஞ் சூழ் பொழிற்கே " என்பதாலறிக.

வந்து மணம்பெறிற் பொன்னனை யிர்மன்னு மேகம்பர்தம்
முந்து மருவிக் கயிலை மலையுயர் தேனிழிச்சித்

தந்து மலர்கொய்துந் தண்டினை மேயுங் கிளிகடிந்துஞ்
சிந்தும் புகர்மலைக் கச்சுமிச் சாரற் றிரிகுவனே. (உக)

(இ - ள்.) பொன் அனையீர் - இலக்குமி போன்றவர்களே, வந்து மணம்பெறின் - (என்னால் காதலிக்கப்பட்டான்) வந்து மணம்பெறின் - வந்து என்னை மணந்து கொள்வனேல், மன்னும் ஏகம்பர்தம் - நிலைபெற்ற ஏகம்பரது, அருவி முந்தும் - அருவியாறுகள் முந்திச் செல்லும், கயிலைமலை - கயிலாயவரைக்கணுள்ள, உயர்தேன் - உயர்ந்ததேனினை, இழிச்சிதந்தும் - இழிச்சிக் கொடுத்தும், மலர்கொய்து (தந்தும்) பூக்கொய்து தந்தும், சிந்தும் தண்தினை மேயும் - சிந்திய குளிர்ந்த தினைகளைமேய்கின்ற, கிளிகடிந்தும் - கிளிகளைக் கோபித்தும், புகர் மலைக்கு - யானைகளுக்கு, அஞ்சும் - பயப்படுகின்ற, இ சாரல்-இம்மலைச்சாரலில் (நமது அச்சத்தைப் போக்கியும்) திரிகுவன் - திரிந்து நமக்குக் களிப்பினை வருவிப்பன். எ - று.

(க - ரை.) இது, தலைவி மணம் பெறு முன்னம் அவனைக் கூடி யிப்புனத்திருக்கின் இவ்வகைக் களித்திருப்பே மெனத்தமது ஆயவெள்ளத்தை நோக்கிக் கூறினது. அஞ்சும் எனற்பாலது செய்யுளோக்கி யச்சுமென வலிந்து நின்றது. இது தலைவனைப் புகழ்தலுமாம்.

திரியப் புரமெய்த வேகம்ப ஞர்திக ழுங்கயிலைக்
கிரியக் குறவர் பருவத் திடுதர ளம்விளையோம்
விரியச் சுருண்முத லானு மடைந்தோம் விரைவிரைந்து
பிரியக் கதிர்முத்தி னீர்பெற்ற தென்னங்குப் பேசுமினே. (உஉ)

(இ - ள்.) விளையோம் - தொழிலின் முயற்சியையுடைய நாங்கள், திரிய - தீயினால் வேறுபட, புரம் எய்த - திரிபுரங்களை யெய்த, ஏகம்பனார் - திருஏகம்பரது, திகழும் கயிலைக்கிரி - விளங்குகின்ற கயிலாயவரைக்கணுள்ள, குறவர் - குறவர்கள், பருவத்து - காலமறிந்து, இடு-கொடுக்கின்ற, தரளம் - முத்துக்களை, விரி - பரந்த, சுருள் முதலானும் - சுருளுடனே, அடைந்தோம் - பெற்றோம், விரை விரைந்து - அதிவிரைவுடனீவிர் சென்று, பிரியகதிர் முத்தின் - விருப்பத்தக்க கிரணங்களையுடைய அம்முத்தின்கண், அங்கு - அக்குறச் சேரிக்கண் சென்று, பெற்றது என் - அடைந்தது என்ன பேசுமின் - கூறுங்கள். எ - று.

(க-ரை.) இது தலைவி ஆயவெள்ளம் ஒருவழி நீங்கித்தனித்துக் குறச்சேரிக்கண் வந்திருந்த தலைவனுடன் கூடி மணம் பெற்று வந்து தம் தோழிகளை நோக்கி யான் இவ்வகை யடைந்தேன் நீவிர் அடைந்த தென்னை யெனக்கூறியதாம். திரியப்புர மெய்த ஏகம்பர் என்பதில் அத்திரிபுரம் எனக் கூட்டினுமாம்.

பேசுகை யாவரு மைக்கணி யாரென்று பித்தரெங்கும்
பூசுகை யார்திரு நீற்றெழி லேகம்பர் பொற்கயிலைத்

தேசுகை யார்சிலை வெற்பன் பிரியும் பரிசிலரக்
கூசுகை யாதுமில் லாக்குல வேங்கைப் பெயர்நும்மையே. (௨௩)

(இ - ள்.) பித்தர் - அடியவரிடத்து மயல் கொண்டவர், எங்கும் - உடன் முழுதும், பூசுகையார் - பூசுதலமைந்த, திருநீற்று எழில்-திருநீற்றினழகுள்ள, ஏகம்பர் - திருஏகம்பரது, பொன்கயிலை - அழகிய கயிலைப்புனத்தினின்றும், கை - கையில் பெற்ற, தேசுஆர்சிலையன்-ஒளிதங்கிய வில்லையுடைய தலைமகன், பிரியும் - (நீ நீத்ததை நோக்கிப்) பிரிவான், பரிசிலரும் அவனிடத்து நலம்பெற்ற பரிசிலாளரும், குலவேங்கைபெயர் - குலேகளையுடைய வேங்கையென்னும் பெயரையுடைய, அநும்மையே - அந்த வுங்களையே, கூசுகையாதும் இல்லா - சிறிதும் (வாய்) கூசுதலும் இல்லாமல் கணியாரென்று - கணியாரென்னும் பெயர்கொண்டு, பேசுகையாவர்-கூறித்திரிவர். எ - று.

(௪-ரை.) ஐ சாரியை. இல்லாமல் என்பதில் எச்ச விகுதி தொக்க, இல்லா என்பது பேசுகையென்னுந்தொழிற்பெயர்கொண்டது. வேங்கைப்பெயர்நும்மையே யென்பதற்கு வேங்கை யென்னும் பொன்னின் பெயர்கொண்ட வெறுக்கை யென்னும் உங்களையே யெனவும், கணியார் என்பதற்குக் குறிக்கத்தகாத பொருளற்றவர் எனவும் தாக்ஷண்யமிலாதவ ரெனவும் பொருள் கொள்க. இது வேங்கையோடு வெறுத்தல். இந்த வேங்கையரும்பிய ஞான்று தினைப்புலம் கொய்வான்வேண்டி அதற்குரியார் கொய்யத் தலைப்படுவர். அங்ஙனந் தலைப்பட்ட விடத்து இதணில் தினை காவல் நீங்கும் நீங்கவே, களவாய்த் தலைவி மாட்டுவரும் தலைவன் தலைவி தன்னிடத்தினின்று இனி வருவாளல்லள் குரவரவளையிற் செறிப்பரென்னும் எண்ணத்தனாய் உளந்தெருமந்து தம்மூர்புகுவனாதலின் இத்தனைக் கலகத்திற்கும் நீ காரணமாவா யெனவேங்கை யொடு வெறுத்துக் கூறியதாம். பரிசிலர் அரசனுக்குற்றதுணையாய் நிற்கும் உயிர்ப்பாங்கன் பன்மையாற் கூறினு ரெனின் அரசனுக்கு அருந்துணையாவா னிவ்வகைத் தொழிற்குப் பார்ப்பனப் பாங்கனாதலின் பன்மை வாசகத்தார் கூறினரென்க.

பெயரா நலத்தெழி லேகம்ப னார்பிறை தோய்கயிலைப்
பெயரா திருக்கப் பெறுகிளி காள்புன மேபிரிவின்
றுயரால் வருந்தி மனமுமிங் கோடித் தொழுதுசென்ற
தயரா துரையும் வெற்பற்கடி யற்கும் விடைதம்மினே. (௨௪)

(இ - ள்.) பெயரா - நீங்காத, நலத்து - நன்மையினையுடைய, எழில்- அழகுவாய்ந்த, ஏகம்பனார் - திருஏகம்பரது, பிறைதோய் - சந்திரன் தவழ்கின்ற, கயிலை - திருக்கைலைப்புனத்தை, பெயராதிருக்க - நீங்காதிருக்க பெறு - தவத்தினைப்பெற்ற, கிளிகாள் - கிளிகளே, புனமே - தினைப்புலமே பிரிவின்துயரால் - எமது தலைவனை விட்டுப்பிரியும் துக்கத்தால், மனமும் - என்மனமும், வருந்தி - வருத்தத்தையடைந்து, இங்கு ஓடி - இவ்விடத்திருந்து தலைவனிடமோடி, தொழுது சென்றது - அவரைக்காணப் பெருமையால் வணங்கிச் சென்றதை, அயராது - மறந்து போகாமல், வெற்பற்கு

உரையும் - எமது குறிஞ்சித் தலைவரீண்டு எம்பொருட்டு நாடிவரின் கூறுங்கள், அடியற்கும் - அவற்கு அடிமைப்பட்ட எமக்கும், விடைதம்மின் - எம் பதிக்கேக உத்தரந்தாருங்கள். எ - று.

(க - ரை.) இஃது கிளியொடும் புனத்தொடும் பிரிவருமை கூறிவிடை வுகடாதல், அஃதாவது. தினைப்புனம் காத்த தலைவி, அஃது கொய்யப் பெற்றமையின் தலைவன் வறும் புனங்கண்டு வருந்துமெனக்கவன்று தாம் காவலாக விருந்த புனத்தையும் அப்புனத்துப் பயின்றகிளிகளையு நோக்கிக் கிளிகளே நீவிர் உமக்குத் துப்பாகாக்காலத்தும் இத்தினையைவிட்டு நீங்காது நின்றீர். யானீங்கின் எமது காதலர் ஈண்டுவந்தெம்மைத் தேடுவர், அங்ஙனந் தேடினார்க்கு இங்கு நின்றும் நீங்கினவர்தணியாது துணிந்து தொழுது சென்றாரெனவிடை கூறுமின் என்பதாம்.

நம்மைப் பிறவிக் கடல்கடப் பிப்பவர் நாம்வணங்கு
மும்மைத் திருக்கண் முகத்தெழி லேகம்பர் மொய்கயிலை
யம்மைக் கருங்கண்ணி தன்னொடின் பந்தருந் தண்புனமே
யெம்மைக் கவலைசெ யச்சொல்லி யோவல்லி யெய்தியதே. (உரு)

(இ - ள்.) நம்மை - அடியோமை, பிறவிக்கடல்-பிறவியாகிய கடலினின்றும், கடப்பிப்பவர் - தாண்டும்படி செய்பவர், நாம் வணங்கும் - நாம் தொழுகின்ற, மும்மைதிருக்கண் - மூன்று நேத்திரங்களைப் பெற்ற, எழில் முகத்து - அழகிய முகத்தினையுடைய, ஏகம்பர் - திருஏகம்பரது, மொய் கயிலை - நெருங்கிய கயிலையில், அமை கருங்கண்ணி தன்னொடு . அந்தமையுண்ட கருமையாகிய கண்களையுடையாளுடன், இன்பம் தரும் - இன்பத்தைத் தருகின்ற, தண்புனமே - குளிர்ந்த புனமே, எம்மை - எம் போல்வாரையும் என்னையும், கவலைசெயச் சொல்லியோ - துன்பஞ் செயச் சொல்லியோ, வல்லி எய்தியது - தலைவியிப்புனத்தை விட்டு நீங்கினது. எ - று.

(க - ரை.) இது, தலைவன் வறும்புனங்கண்டு வருந்தல். என்பது-தலைமகளும் தோழியும் புனங்காவலேறிப் போகாநிற்ப, தலைமகன் புனத்திடைச் சென்று நின்று இப்புனம் யாமுன்பயின்றதன்றே இஃதிருக்கின்றவாறென்னோவென்று அதன் பொலிவழிவு கூறித் தலைமகளைத்தேடி வருந்தா நிற்றல். இதனை "பொதுவினிற்றீர்த்தென்னை யாண்டோன் புலியூரரன் பொருப்பே" என்னுந்திருக்கோவையார்திருக்காரிகையாலறிக. காரணகாரியத் தொடர்ச்சிப்பட்டு வருவதால் பிறவியைக் கடலென்றார் என்பது பரிமேலழகர் உரை. நாம் அவனை வணங்கப்பெறும்புண்ணியமுடையோமென்பார் நாம் வணங்கும் என்றார்.

இயங்குந் திரிபுர மெய்தவே கம்ப ரெழிற்கயிலைத்
தயங்கு மலர்ப்பொழில் காடைய லாடரு வித்தடங்காண்
முயங்கு மணியறை காண்மொழி யீரொழி யாதுநெஞ்சம்
மயங்கும் பரிசுபொன் னார்சென்ற சூழல் வகுத்தெமக்கே. (உசு)

(இ-ள்.)இயங்கும்-பரந்துசெல்லுகின்ற, திரிபுரம்-முப்புரங்களை,எய்த-தீக்கு இரையாக எய்த, ஏகம்பர்-திருஏகம்பரது, எழில்கயிலை-அழகிய கயிலைச் சாரலில், தயங்கும் - விளங்குகின்ற, மலர்பொழில்கள் - பூஞ்சோலைகளே, தையல் - அழகுள்ளதலைவி, ஆடு - நீர்விளையாடும், அருவிதடங்கள் - அருவித்தடங்களே, முயங்கு - நெருங்கிய, மணிஅறைகள் - இரத்தினமுழஞ்சுகளே, ஒழியாது - ஒழியாமல், நெஞ்சம் மயங்கும்பரிசு - மனம் மயங்கும் விதம், பொன்னூர்சென்ற சூழல்-திருமகளையொத்த தலைமகள்சென்ற இடத்தினை, வகுத்து - வகைப்பட, எமக்கு மொழியீர் - எமக்குக் கூறுமின். எ-று.

(க - ரை.) இதுவும் மேலையதை யொத்தத்துறை, அஃதாவது வறும்புனங்கண்ட தலைமகன் அவணின்ற தடத்தின்கணுள்ள பொழில்களையும், அருவி நீர்த்தடங்களையும், மணிகணிறைந்த மலைமுழைஞ்சுகளையு நோக்கித் தனது மனமயக்கத்தால் நாயகி சென்ற இடத்தைக் கூறுகவெனக் கூறியதாம். திரிபுராதியர் தாம்கொண்ட அரணுடன்சென்று பலரது நாடுஅரண் முதலியவற்றை யழித்தார் எனப் புராணங் கூறுதலின் இயங்குந் திரிபுரம் என்றார்.

வகுப்பா ரிவர்போன் மணமணத்துக்கு நாண்மணந் தன்னொடின்ப
மிகுப்பார் களாருயி ரொன்று மிருவரை விள்ளக்கள்வாய்
நெகுப்பான் மலர்கொண்டு நின்றார் கிடக்க நிலாவுகம்பர்
தொகுப்பான் மணிசிந் தருவிக் கயிலையிச் சூழ்புனத்தே. (௨எ)

(இ - ள்.) தொகுப்பால் - தொகுதியாக, மணிசிந்து - இரத்தினங்களைச் சிந்துகின்ற, அருவி - அருவிபொழியும், கம்பர்நிலாவு - திருஏகம்பரெழுந்தருளியிருக்கும், கயிலை - திருக்கைலையின், இச்சூழ்புனத்தே - இந்தச் சூழ்புனத்தில், மணத்தொடு-மணத்துடன், இன்பம் மிகுப்பார்கள் - இன்பத்தில் நீட்டிப் போர்களாய், ஆர் உயிர் - அரிய உயிர்கள், ஒன்று ஆம் இருவரை - பொருட்டன்மையா லிருவேறுவகைப்பட்டு மனத்தாலொருவகைப்பட்டு நிற்கும் இருவரை, விள்ள - நீங்கும்படி, கள்வாய் நெகுப்பால்-தேன்தங்கிய வாயை நெகிழ்த்தலால், மலர்கொண்டு - விரிந்த மலரையேந்தி, நின்றோர் கிடக்க - நின்றவேங்கையார் மலர்ந்து நிற்பதால், மணத்துக்கு நாள்-இவளை மணஞ்செய்விப்பதற்கு நாள், இவர் - இவளது தந்தையர், வகுப்பார் போலும் - இனிவகுத்துக் கூறுவர்போலும். எ - று.

(க - ரை.) இது தலைவியுவந்து கூறியகூற்று. வேங்கைமலரக்கண்ட தோழி இனிநாயகனை யெண்ணி இற்செறிந்திருத்தலால் பருவரலடைந்திருக்கும் நந்தலைவியின் றுயர்தீரத் தந்தையர்மணத்திற்கு நாள்வகுப்பார்போலுமெனத் தானேயுவந்து நெஞ்சொடு கூறியதாம். போலும் என்னுஞ் செய்யுமென் முற்றுப்போல் என விகுதி தொகுத்தலாய் நின்றது. இவர் என்னுஞ் சுட்டுத் தாய்தந்தையரை யுணர்த்தி நின்றது. நாள் - என்பது நல்ல முகூர்த்தத்தை. மணந்தன்னொடு என்பதில் தன்சாரியை. இவனோடொத்தாருமில்லை மிக்காருமில்லை குறைபட்டாரல்லது, எக்காலத்தும் எவ்

விடத்தும் ஞானத்தானும் குணத்தானும் உருவினானும் திருவினானும் பொரு விலனாதலானும், இவளும் அன்னளாதலானும் ஒருகூட்டி லிருபறவை இருந் தாற்போல் பொருட்டன்மையால் இருவேறாய் மனத்தானொன்றுபட்டு நிற்ற லின் ஆருயிரொன்றாய் என்றார். இங்ஙனம் புனத்திருந்து காந்தருவமணங் கொண்டு இன்ப நுகர்ந்தாரைப்பிரித்த கணியார் பெரியார் என வெறுப்பொடு கூறுவார் கணியார் கிடக்க என்றார்.

புனங்குழை யாதென்று மென்றினை கொய்ததும் போகலுற்ற
கனங்குழை யாடற் பிரிய நமக்குறுங் கையறவால்
மனங்குழை யாவருங் கண்கனி பண்பல பாடுந்தொண்டர்
இனங்குழை யாத்தொழு மேகம்ப ரிக்கயி லாயத்துள்ளே. (௨௭)

(இ - ள்.) கண்கனி - கண்கனியும்படி, பண்பல - பலபண்களை, பாடும் தொண்டர்-பாடுகின்ற அடியவரது, இனம்-கூட்டம், குழையா - மனங்கசி ந்து, தொழும்-தொழுகின்ற, ஏகம்பர்-ஏகம்பரது, இக் கயிலாயத்துள்-இந்தக் கயிலாயச்சாரலின் கண், புனம் - தினைப்புனம், குழையாது என்று - நெருங் கிக்கெடாதென்று, மென்றினை - மெல்லியதினைப்பயிரினை, கொய்ததும் - கொய்து சேர்த்தவுடன், போகல்உற்ற - தம்பதி நோக்கிச் செல்லத்தொடங் கிய, கனம் குழையாள் - கனத்தகாதணியினையுடைய தலைவி, தன்பிரிய - தன்னைநீங்காநிற்க, நமக்கு உறும் கையறவால் - நமக்கு நேர்ந்ததுன்பத்தால், மனம்குழையா வரும் - மனம்குழைந்து வருந்துகின்றது. எ - று.

(க - ரை.) இது தலைவன் தன்குறை கூறல். அஃதாவது, வேங்கைபூப் பக்கண்டார் தினை முதிர்ந்ததென்று தினைகொய்த பின்னர் அத்தினைகாத்த மகளிரையில்லிடைப் புகுத்திச்செறிப்பராதலின் அவ்வாறும் புனங்கண்டான் தலைவியைக் காணாது வருந்தியவதைக் கூறியதாம். புனங்குழைதல், பயிர் முற்றிக் கதிர்வரச்சாய்ந்து ஒன்றுடனொன்றுநெருங்கல்தன்னையவன்வயப்படு த்திப் பிணித்தது முகமாதலின் அம்முகத்திற் கணியாப்பூண்ட குழையினை யொன்று படுத்திக் கனங்குழையாள் என்றார். தன் என்பது தலைவனையாம்

உள்ளம் பெரியரல் லாச்சிறு மானிட ருற்றசெல்வங்
கள்ளம் பெரிய சிறுமனத் தார்க்கன்றிக் கங்கையென்னும்
வெள்ளம் பெரிய சடைத்திரு வேகம்பர் விண்ணரணந்
தள்ளம்பெரிகொண்டமைத்தாரடியவர்சார்வதன்றே. (௨௮)

(இ - ள்.) உள்ளம் பெரியர் அல்லா-மனத்தால் பெருந்தன்மை வாய்க் கப்பெறாத, சிறுமானிடர். சிறு வாழ்க்கையுள்ள அறிவிலார், உற்ற - அடை ந்த, செல்வம் - செல்வத்தாலுறும் வாழ்க்கை, கள்ளம் பெரிய - கபடத்தால் மேலோங்கிய, சிறுமனத்தார்க்கு அன்றி - சிறுகுணமும் சிறுதொழிலும் உள் ளமனத்தவர்க்கு அல்லாமல், கங்கைஎன்னும் - கங்கை என்கின்ற, பெரிய வெள்ளம் - மிகுந்த வெள்ளத்தை, சடை - சடையினில்வைத்த, திருவேகம்

பர்-திருஏகம்பவாணர், விண் - உயர்ந்த, அரணம் - திரிபுரங்களை, தள்ள - கெடுக்கும்வகை, அம்பு - அம்பினை, எரிகொண்டு-நெருப்பால்,அமைத்தார் - வைத்தவர், அடியவர்-அடியராயினர், சார்வது அன்று-அடைவதன்றும். எ-று.

(க - ரை) செல்வம் அடையின் செருக்குமிக்கு உயர்ந்தாரை மதியாது பழிபடுதற்குக் காரணமாயிருத்தலின் இதனை யிறைவனடிநீங்கார்வேண்டார். சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடையரே விரும்புவர் என்பது கருத்து. இதனை "புள்ளிய தோலாடைபுனைந்து அரவப்பூணணிந்த,வெள்ளியசெங்கண்விடை யானடிக்கமல, முள்ளிய மெய்யன்புடைய ருருவருத்துத்,தள்ளிய செல்வத் தருக்கிளுயென் செய்தாய்" என்பதாலறிக. எரி கொண்டு என்பதில் கொண்டு மூன்றுவதன் சொல்லுருபு. இதனால் சிவனடியவர்செல்வமுதலிய இன்பம் வேண்டார் என்பது கூறப்பட்டது.

அன்றும் பகையடர்க் கும்பரி மாவு மதவருவிக்
குன்றும் பதாதியுந் தேருங் குலவிக் குடைநிழற்கீழ்
நின்றும் பொலியினுங் கம்பர்நன் னீறு நுதற்கிலரே
லென்று மரசு முரசும் பொலியா விருநிலத்தே. (௩௦)

(இ - ள்.) அன்றும் - பகைக்கின்ற. பகை - பகைவர்களை, அடர்க்கும் - போரில்வருத்துகின்ற, பரிமாவும் - குதிரைப்படையும், மதம்அருவி-அருவி போல்மதம்பொழிகின்ற, குன்றும் - மலையையொத்தயானைச்சேனையும், பதாதியும் - காலாட்படையும், தேரும் - தேர்ச்சேனையும், குலவி - கூடி, குடைநிழற்கீழ்நின்று - வெண்கொற்றக்குடைக்கீழ்த்தங்கி, பொலியினும்-விளங்கி நிற்கினும், கம்பர் - திருவேகம்பரது, நல்நீறு-நல்லதிருநீற்றினை, நுதற்குஇலரேல் - நெற்றியில் அவனதுதிருநாமம் கூறியிடாராகில், இருநிலத்து - பெரியபூவலயத்தில், என்றும் - எப்பிறவியினும், அரசும் - அரசராகவிருக்கும் பெருவாழ்க்கையும், முரசும் - வெற்றிமுரசும், பொலியா-பொலிந்துநில்லா. எ - று. உம் - சாரியை.

(க - ரை.) நால்வகைச்சேனைப்படையும் பெற்றுச்செல்வத்துடன் வீற்றிருந்தாராயினும் எம்மிறைவனது திருநீற்றினை நெற்றியின்கண் விளங்கத் தரிக்காரேல் அவர்பெற்ற சக்கரச்செல்வம்நிலையா என்பதுகருத்து. இதனைக் "செய்யதிருநீறு தொட்டுத்தரியாதார் பெருஞ்செல்வஞ் சிதையுமன்னர், கொய்யுளைய பரித்திரளுங் கரித்திரளுமறுமன்னர் கொள்வர்வேட்ட, தையலொழிந்தருமகவுதணந்து பெரும்பிணியுடனுய்ச் சரிப்பரன்றி, மெய்யினுறுப்புக்குறைந்து புலையரினுங்கடைப்பிறவி மேவுவாரால்." அரிமுதற்பெருந்தேவர்க்கும் வருணநான்காகி, விரியுமன்பதைப்பகுதிக்கும் வெண்ணிலாச் சடையோற்கும்,உரிய நீற்றணியின்றெனிலவர்களெம்பெருமான், தரிசனத் தவரல்லர் புன்புலையரிற்றீயோர்" "என்பனவற்றாலறிக. இதனால் திருநீறு நெற்றியிலணியார் பெருஞ்செல்வங்கெடுமென்பது கூறப்பட்டது.

நிலத்திமை யோரிற் றலையாய்ப் பிறந்து மறையொடங்கம்
வலத்திமைப் போதும் பிரியா ரெரிவளர்த் தாலும்வெற்பன்

குலத்துமை யோர்பங்கர் கச்சியு ளேகம்பங் கூடித்தொழு
நலத்தமை யாதவர் வேட்டுவர் தம்மி னடுப்படையே. (௩௧)

(இ - ள்.) நிலத்து - பூமியில், இமையோரில் - தேவர்களில், தலையாக - உயர்குலத்தினராக, பிறந்து - பிறப்பினையடைந்து, மறையொடு - நான்கு வேதங்களுடன், அங்கம் - ஆறங்கங்களையும், வலத்து-அத்தியயனஞ்செய்து, இமைப்போதும் - இமையளவும், பிரியார்-நீங்காதவராகி, எரிவளர்த்தாலும்-முத்தீவளர்த்தாலும், வெற்பன்குலத்து - மலையரையன்குலத்துத் திருஅவதரித்த, உமைஓர்பங்கர்-உமாதேவியாரை ஒருபாகத்தில்கொண்ட சிவமூர்த்தி எழுந்தருளியிருக்கும், கச்சியுள் - திருக்கச்சியுள், ஏகம்பம் - திருவேகம்பத்தினை, கூடிதொழும் - கூடிவணங்கும், நலத்து அமையாதவர் - புண்ணியம் பெறாதவர், வேட்டுவர்தம்மின் - வேட்டுவரதுகூட்டத்து, நடுபடையே - நடுவாகக்கொள்ளத்தகுந்த படையையொப்பர். எ - று.

(க - ரை.) வேத வேதாங்கங்கள் ஓதி யக்னிகாரியஞ்செய்யும் உயர்குலத்து வேதியராயினும் சிவதரிசனஞ்செய்யார் தீயஉயிர்க்கொலையாதிகளைச்செய்யும் வேட்டுவரினுமிழிந்தவராவார். என்பது கருத்து, என்னெனின் பரதகண்டத்துள்ள பலதலங்களிலும் காஞ்சி அதிக மேற்றமுள்ளதாதலால் பலசிவத்தலங்களைத் தரிசித்தபேறினும் இது அதிகபலனைத்தருதல் நோக்கியென்ப இதனை "எங்கணுநிறைந்து நிற்குமெம்பிராற்கினியவாய, பங்கமில் வளைப்பு மண்மேற்பலவுளவவற்றுட்காசி, யங்கதிற்காஞ்சிமேலாம் காஞ்சியினதிகமில்லை, செங்கதிர்மதியஞ் செந்தீமண்டலமடியருள்ளம்." என்பதாலறிக. சிவபூசை தரிசனமில்லார்தீயர் என்பதை "வேதியர் மன்னவர் வணிகர் வேளாளர் சங்கரத்தின் மேயோராக, மூதிமையோருரகர் தயித்தியரரக்கர் கந்திருவர் முனிவராகப்பூதிதருமிலிங்க பூசனையில்லார் பூதிசாதனங்கள் பேணர், எதிலராமிழிஞரினுமிழிஞரேயவரொடு பேச்சியம்பிஞேரும்." என்பதாலறிக. இதனுல் சிவதரிசனஞ்செய்யாரிழிவு கூறப்பட்டது.

படையா லுயிர்கொன்று தின்று பசுக்களைப் போலச்செல்லு
நடையா லறிவின்றி நாண்சிறி தின்றி நகுங்குலத்திற்
கடையாப் பிறக்கினுங் கச்சியு ளேகம்பத் தெங்களையா
ளுடையான் கழற்கன்ப ரேலவர் யாவர்க்கு முத்தமரே. (௩௨)

(இ - ள்.) படையால் - ஆயுதத்தால், உயிர்-உயிர்களை, கொன்று-வதைசெய்து, தின்று - அருந்தி, பசுக்களைப்போல - மிருகங்களைப்போல, செல்லும்நடையால் - நடக்கும்ஒழுக்கத்தால், அறிவுசிறிதுஇன்றி - அறிவுசிறிதும் இல்லாமல். நாண்(சிறிது)இன்றி - வெட்கம்சிறிதும்இல்லாமல், நகும்குலத்தில் - பிறர் பரிகசிக்கத்தக்க தாழ்ந்தகுலத்தில், கடையாய் - கடைப்பட்டவர்களாக, பிறக்கினும் - பிறந்தாலும், கச்சியுள் - திருக்கச்சிக்கணுள்ள, ஏகம்பத்து - திருவேகம்பத்து, எங்களை - அடியேங்களை, ஆள்உடையான் - அடிமைகொண்ட விறைவனது, கழற்கு - திருவடிகளுக்கு, அன்பரேல் - அன்ப

ராயின், அவர் - அத்தகையோர், யாவர்க்கும் - அனைவர்க்கும், உத்தமர்-சிறந்தோராவர். எ - று.

(க - ரை.) உயிர்கொன்றருந்தும் மகாபாதகத்தவராயிழிந்த கடைப்பிறப்பிலிறுதியரேயாயினும் சிவனடிக்கு அன்பராயினவர் யாவரினும் உயர்ந்தோர் என்பதுகருத்து. இதனை "சங்கநிதிபதுமநிதியிரண்டுந்தந்து......அங்கமெலாங்குறைந்தழுகு தொழுநோயரா யாவுரித்துத்தின்றுழலும் புலையரேனுங் கங்கைவார் சடைக்கரந்தார்க்கன்பராகிலவர் கண்டீர்யாம் வணங்குங்கடவுளாரே." என்னுந் திருவாக்காலறிக.

உத்துங்க யானை யுரியார் விரலா லரக்கன்சென்னி
பத்துங்கை யான விருபதுஞ் சோர்தர வைத்திலயை
யொத்துங்கை யாலவன் பாடக் கயிலையுள் ளோர்நற்கைவா
ளெத்துங் கையானென் றுகந்தளித் தார்கச்சி யேகம்பரே. (௩௩)

(இ - ள்.) உத்துங்கம் - பெரிதாகிய, யானைஉரியார் - யானைத்தோலையுடுத்தவர், விரலால் - விரலையூன்றுதலால், அரக்கன்சென்னிபத்தும்-இராவணன் சிரங்கள்பத்தும், கைஆனஇருபதும் - இருபதுகைகளும், சோர்தர வைத்து - சோர்ந்தழியும்படியாகவைத்து, அவன் - அவ்விராவணன், லயையொத்தும் - லயையும்ஒத்தும், (பொருந்தும்படி) கையால்பாட - (சோர்ந்த) கைகளைவீணையாக்கிப்பாட, கச்சிஏகம்பர் - திருக்கச்சி ஏகம்பராகிய, கையிலையுள்ளோர் - திருக்கைலையில் எழுந்தருளியுள்ளார், எத்துங்கையான்என்று - துதிக்கும் கையுடையான்என்று, நல்கை - நல்லகையினையும், வாளை - ஓர் வாளினையும், உகந்து - விரும்பி, அளித்தார் - அநுக்ரகித்தவர். எ - று. எத்தும் எனற்பாலது எத்தும் எனக்குறைந்தது செய்யுள்விகாரம் எதுகைநோக்கியாம்.

(க - ரை.) விரலால் அரக்கன்நெரித்தமை "அருந்தவத்தின் பெருவலியாலறிவதன்றியடலரக்கன்றடவரையை யெடுத்தான்றிண்டோண், முரிந்துநெரிந்தழிந்து பாதாளமுற்று முன்கைநரம்பினையெடுத்துக் கீதம்பாட, விருந்தவனையேழுலகு மாக்கினானை யெம்மானைக்கைம்மாவினுரிவைபோர்த்த, திருந்தெறும்பியூர் மலைமேன்மாணிக்கத்தைச் செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனே." என்பதாலறிக. இது இறைவனது முடிவிலாற்றலுடைமையைத்தெரிவித்தது. இதனைவடநூலார் அநந்தசக்தியென்பர்.

அம்பரங் காலன னீர்நிலந் திங்க ளருக்கனணு
வம்பரங் கொள்வதோர் வேழத் துரியவன் றன்னுருவா
மெம்பரன் கச்சியு ளேகம்பத் தானிடை யாதடைவா
னம்பரன் றன்னடி யாரறி வார்க்கு நறுந்துணையே. (௩௪)

(இ - ள்.) அம்பரம் - ஆகாயம், கால் - காற்று, அனல் - தீ, நீர் - ஜலம், நிலம் - பூமி, திங்கள் - சந்திரன், அருக்கன் - சூரியன், அணு - ஆன்மா,

உருவாம் - உருவங்களாகிய, எம்பான் - எமது தலைவன், கச்சியுள் - திருக்கச்சியுள், ஏகம்பத்தான் - திருஏகம்பத்தை யிடமாகக்கொண்டவன், இடையாது - எப்பொருட்கண்ணும் நீக்கமற, அடைவான் - நிறைந்துள்ளவன், நம்பரன் - நமது தலைவன், அறிவார் - தன்னை அறிவாராகிய, அடியார்க்கு - அடியவர்களுக்கு, நறுந்துணை - நல்லதுணையாவான். எ - று.

(க - ரை.) இறைவன் அஷ்டமூர்த்தமாய் உலகத்து நிறைந்து நின்றமையிதனுற்கூறப்பட்டது. இதனை "அலையார் புனலனன் ஞாயிறவனிமதியம் விண்காறலையாவுயிருடம்பாகிய சோதியைத்தொக்குமிலே, தலையாற் சுமந்துந்தடித்தொண்கொடித்தேரரக்கனென்னே, கலையாமெருவிரற்றுங்கவில்லாவிட்டகாரணமே." எ - ம், "அவனேயிருசுடர்தீயாகாயமாவான், அவனே புவிபுனல்காற்றுவானவனே, யியமானனுயட்ட மூர்த்தியுமாய்ஞான, மயனுகின்றனும் வந்து." என்பனவற்றுலறிக.

துணைத்தா மரையடி யும்பவ ளத்திர ணன்குறங்கும்
பணைத்தோ ளகலமுங் கண்டத்து நீலமு மண்டத்துமின்
பணைத்தா லனசடை யுந்திரு முக்கணும் பெண்ணொர்பக்கத்
தணைத்தா ரெழிற்கம்ப ரெங்கள்பி ரானுர்க் கழகியவே. (௫௫)

(இ - ள்.) பெண்ஒர்பக்கத்து - பார்வதிபிராட்டியாரை யொருபாதியில், அணைத்தார் - அணைத்தவராகிய, எழில்கம்பர் - அழகிய திருவேகம்பரென்னும், எங்கள்பிரானுர்க்கு - எங்கள்தலைவர்க்கு, துணைதாமரைஅடியும்-இரண்டாகிய தாமரைபோலும் திருவடிகளும், பவளம்திரள் நல்குறங்கும் - பவளம்போலும்திரண்ட எற்றதாகிய திருத்தொடைகளும், பணைத்தோள் - பருத்த தோள்கள் நெருங்கிய, அகலமும் - திருமார்பும், கண்டத்து - திருக்கண்டத்தில், நீலமும் - நீலக்கறையும், அண்டத்து-வானத்தில், மின் - (உலாவும்) மின்னல், பணைத்தால்அன்ன - கிளைத்ததைஒத்த, சடையும் - திருச்சடையும், திருமுக்கணும் - அழகியதிரிநேத்திரங்களும், அழகிய - அழகைப்பெறுவனவாயின. எ - று.

(க - ரை.) இறைவனையணைந்து அழகுபெறுகின்ற அவனது திருவுறுப்புக்கள், அழகுபெற்ற தன்மையென்னுல்வியந்து கூறத்தக்கதல்ல என்பதாம்' அதாவது,இவள்வடிவுஎழுதலாகாததும்புகழிற்கடங்கியதன்றுமாம். "இதனை.' ஏதொக்குமே தொவ்வாதேதாகுமேதாகா, தேதொக்கு மென்பதனையாரறிவார் - பூதப்பால், வில்வேடனுகி விசையனேடேற்றநாள், வல்வேடனுன வடிவு." என்பதனுனறிக.

அழகழி விற்பெரி தாகிய வேகம்ப ரத்தர்கொற்றம்
பழகறி விற்பெரி யோர்தமைப் பற்றலர் பற்றுமன்பின்
குழகறி வேற்பினு ளொன்றறி யாரறி யாமைதெய்வங்
கிழகெறி யப்பட் டலந்தா ருலகிற் கிடந்தனரே. (௫௬)

(இ - ள்.) அழவுஇல் - அழிவில்லாத, அழகு - மிக்கஅழகில், பெரிதாகிய - மிகவுயர்ந்த, ஏகம்பர் - திருஏகம்பரும், அத்தர் - தலைவரும், கொற்றம் - வெற்றியில், பழகு - பழகிய, அறிவில் பெர்யோர்தமை - அறிவான் உயர்ந்தோராகிய சிவமூர்த்தியினை, பற்றும்அன்பின்-கொள்ளத்தக்க அன்பினால், பற்றலர் - மனத்திடைக்கொள்ளாதவராய், குழகு - இளமையாகிய, அறிவுஏற்பினுள் - அறிவால் ஏற்றுக்கொள்ளத்தக்க பொருள்களுள், தெய்வம் - தெய்வமாகிய சிவபெருமான், ஒன்று - ஒருவனேயென்று, அறியார் - அறியாதவர், அறியாமை - அறியாதிருத்தல், கிழகு - கிழத்தன்மையால், எறியப்பட்டு - தள்ளப்பட்டு, உலகில் - பூமியில், கிடந்தனர் - தங்கி, உலந்தார் - அழிந்தவரேயாவர், எ - று.

(க - ரை.) குழகு, கிழகு, என்பவற்றில், கு, பகுதிப்பொருண்மை விகுதி, சிவமூர்த்தியொருவனே தலைவன் எனமனத்திடைக்கொள்ளார், மூப்பால் எறியப்பட்டு இறப்பர் என்பதுகருத்து. அறிவில் எனவும்பாடபேதங்கூறுப.

கிடக்கு மொருபா லிரைக்கின்ற பாம்பொரு பான்மதியந்
தொடக்குண் டிலங்கு மலங்குந் திரைக்கங்கை சூடுங்கொன்றை
வடக்குண்டு கட்டத் தலைமாலை வாளான் மலைந்தவெம்போர்
கடக்கும் விடைத்திரு வேகம்பர் கற்றைச் சடைமுடியே. (௩௭)

(இ - ள்.) வாளால் - வாளினால், மலைந்து - போரிட்டு, அ-அந்த, வெம்போர் -(இறைவனது திருநாமம் கூறுதாரிடத்து) வெவ்வியபோரினை, கடக்கும் - வெல்லுகின்ற, விடை - இடபத்தினையுடைய, திருஏகம்பர்-திருஏகம்பரது, கற்றைசடைமுடி - கற்றையாகிய சடைமுடிக்கண், ஒருபால் - ஒருபுறத்தில், இரைக்கின்ற - ஓசையிடுகின்ற, பாம்பு - சர்ப்பம், கிடக்கும் - தங்கியிருக்கும், ஒருபால் - ஒருபுறத்தில், மதியம் - சந்திரன், தொடக்குண்டு - மாலைப்பட்டு, இலங்கும் - பிரகாசியாநிற்கும், (ஒருபால்) திரைகங்கை-அலைகளையுடையகங்கை, அலங்கும் - அசையாநிற்கும், கொன்றைவடம் - கொன்றைமாலை, (ஒருபால்) சூடும் - சூடப்பெற்றிருக்கும், (ஒருபால்) குண்டுகட்ட குழிந்தகண்ணையுடைய, தலைமாலை - தலைமாலையானது, கிடக்கும் - இருக்கும். எ - று.

(க - ரை.) இதனால் இறைவனது சடைமுடிக்கண் பாம்பு மதி கொன்றை கங்கை தலைமாலை இவையனைத்தும் தங்கியிருக்கும் என்பது கூறப்பட்டது. கிடக்கும் எனவே, சாத்தன் ஐங்கலப்பாரந்தாங்கினன் என்பதுபோல இறைவனதுஅளவிலாற்றலுடைமை கூறப்பட்டது. இதனை "வடிவேறுதிரிசூலந்தோன்றுந் தோன்றும் வளர்சடைமே லிளமதியந்தோன்றுந் தோன்றுங் கடியேறு கமழ்கொன்றைக்கண்ணி தோன்றுங்காதில் வெண்குழைதோடு கலந்துதோன்று, மிடியேறுகளிற்றுரிவைப்போர்வை தோன்றுமெழிறிகழுந் திருமுடியு மிலங்கித்தோன்றும், பொடியேறு திருமேனிபொலிந்து தோன்றும் பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே" என்னும் திருப்பதிகத்தால் காண்க.

கற்றைப் பவளச் சடைவலம் பூக்கமழ் கொன்றையந்தார்
முற்றுற் றிலாமதி யின்கொழுந் தேகம்பர் மொய்குழலா
மற்றைத் திசையின் மணிப்பொற் கொழுந்தத் தரங்கழுநீர்
தெற்றிப் பொலிகின்ற சூட்டழ காகித் திகழ்தருமே. (௩௮)

(இ - ள்.) ஏகம்பர் - திருவேகம்பரது, வலம் - வலப்பாகத்தில், கற்றை - கூட்டமாகிய, பவளசடை - பவளம்போலும் சடையும், கமழ் - பரிமளிக்கின்ற, பூகொன்றை அம்தார் - அழகிய கொன்றைப்பூமாலையும், முற்றுஉற்று இலா - முதிர்ச்சி அடையாத, மதியின்கொழுந்து - இளஞ்சந்திரனும், மொய் குழலாம் - நெருங்கிய கூந்தலையுடைய பார்வதியார் எழுந்தருளியிருக்கும், மற்றைத்திசையின் - மற்றைஇடதுபக்கத்தில், மணிபொன்கொழுந்தும் - மரகதமணிபோலும் அழகிய மருக்கொழுந்தும்; அ தரம் - அந்த உயர்ந்த, கழுநீர் - செங்கழுநீர்மலரும், தெற்றி - பின்னப்பட்டு, பொலிகின்ற - விளங்குகின்ற, சூட்டு - உச்சியானது, அழகுஆகி - அழகுடன், திகழ்தரும் - விளங்காநிற்கும். எ - று.

(க - ரை.) இறைவனது வலப்பாகத்தில் சடைமுடியும், கொன்றையும் இளஞ்சந்திரனும், இறைவியெழுந்தருளியிருக்கும் இடப்பாகத்தில் அழகிய மரகதம்போலும் கொழுந்தும் கழுநீர்மலரும் விளங்கும் பின்னற்குழலும் விளங்காநிற்கும் என்பதுகருத்து. இது மங்கைபாகனது சிரோலக்ஷணங் கூறியபடியாம்.

தருமருட் டன்மை வலப்பாற் கமலக்க ணெற்றியின்மேற்
றிருமலர்க் கண்பிள வின்றி கழுந்தழல் செல்வக்கம்பர்
கருமலர்க் கண்ணிடப் பாலது நீலங் கனிமதத்து
வருநுதற் பொட்டணங் குக்குயர்ந் தோங்கு மலர்க்குழலே. (௩௯)

(இ - ள்.) மலர்க்குழலே - பூவைமுடித்த கூந்தலையுடையாய், செல்வம் கம்பர் - பெருஞ்செல்வராகிய திருஏகம்பரது, வலப்பால் - வலப்பக்கத்திலுள்ள, கமலம்கண் - தாமரைபோலும் கண்ணனது, அருள் தன்மைதரும் - கருணைபொழியாநிற்கும், நெற்றியின்மேல் - நெற்றியின்மீதிருக்கும், திருமலர்க்கண் - அழகிய மலர்போலும்கண்ணின், பிளவின்-ஒருபாதியில், தழல் திகழும் - அக்கினி விளங்காநிற்கும், பொட்டுஅணங்குக்கு - நெற்றியின்கண் பொட்டினையுடைய இறைவிக்கு, இடைப்பாலது - இடதுபக்கத்திலுள்ள, கருமலர்கண் - கரியமலர்போலும்கண், நீலம் - கருநெய்தலையொத்து, கனி- முதிர்ந்து, மதத்துவரும் - களித்துவரும். எ - று.

(க - ரை.) இது இறைவியின் திருக்கண்ணின் புகழ்ச்சியும் இறைவனது திருக்கண் புகழ்ச்சியும் கூறப்பட்டது. "அம்மைநின் கருணைபொங்கிய லையெறிநயனவேலை, மும்மணிசெழுமுன்றெண்டர் மும்மலங்களையமூழ்கச் செம்மைநன்சோனையாறு தெளிகங்கையமுனைமூனறுந், தம்மயத்தொடும் வந்துற்ற தன்மையீதென்பர் மிக்கோர்" என்பதாம்.

மலர்ந்த படத்துச்சி யைந்தினுஞ் செஞ்சுடர் மாமணிவிட்
டலர்ந்த மணிக்குண்ட லம்வலக் காதினி லாடிவரும்
நலந்திரு நீள்வயி ரம்வெயிற் பாயுந குமணிகள்
கலந்தசெம் பொன்மக ரக்குழை யேகம்பர் காதிடமே. (சo)

(இ - ள்.) ஏகம்பர் - திருஏகம்பரது, வலக்காதினில் - வலக்காதில், மலர்ந்த - பரந்த, படத்துஉச்சி ஐந்தினும் - படத்தினதுசிகரம் ஐந்தினும், மாமணி - பருத்தமணிகள், செம்சுடர்விட்டு - செவ்விய ஒளிவீசி, அலர்ந்த - விரிந்த, மணிக்குண்டலம் - இரத்தினகுண்டலங்கள், ஆடிவரும் - அசைந்து வரும், காதிடமே - இடக்காதினில், நலம்தரு - நல்லிலச்சணம்தங்கிய, நீள் வயிரம் - நீண்டவயிரங்களுடன், நகுமணிகள் - பிரகாசிக்கின்ற நவமணிக ளும், கலந்த - விரவிய, செம்மைபொன் - செந்நிறத்த பொன்னினலாகிய, மகரக்குழை - மகரகுண்டலம்,வெயில்பாயும் - சுடர்விட்டு விளங்கும். எ-று.

(க - ரை.) இறைவனது வலக்காதின் நாககுண்டலமும், இடக்காதினில் நவமணிகள்கலந்த மகரகுண்டலமும் ஒளிவிட்டு விளங்கும் என்பதுகருத்து. உச்சியைந்தினும் என்றதனல் ஐந்தலையநாகம் எனவும் களிப்பால் குதூக லித்தலின் ஆடிவரும் எனவுங் கூறினர்.

காதலைக் கும்வலத் தோள்பவ ளக்குன்ற மங்குயர்ந்து
போதலைக் கும்பனிப் பொன்மலை நீற்றின் பொலியகலந்
தாதலைக் குங்குழல் சேர்பணைத் தோணறுஞ் சாந்தணிந்து
சூதலைக் கும்முலை மார்பிட மேகம்பர் சுந்தரமே. (சக)

(இ - ள்.) ஏகம்பர் - திருஏகம்பரது, காதுஅலைக்கும் - காதுகளால், அலைக்கப்படுகின்ற, வலம்தோள்-வலப்புறத்திலுள்ளதோள், பவளம்குன்றம்- பவளமலையினையொக்கும், நீற்றின் - விபூதியினல், பொலி - விளங்குகின்ற, அகலம் - திருமார்பு, அங்குஉயர்ந்து-ஆங்குஉயர்வையடைந்து, போதுஅலைக் கும் - மலர்மாலைகளால் அலைக்கப்படும், பனிபொன்மலை - குளிர்ந்தமேரு மலையாம், இடமே - இடதுபாகம், தாதுஅலைக்கும் - மகரந்தங்களால் அலைக் கப்படுகின்ற, குழல்சேர் - கூந்தல்தங்கிய, பணைதோள் - மூங்கிலையொத்த, நறுஞ்சாந்து - நல்லகலவைச்சேற்றினை, அணிந்து - அணியப்பெற்று,சூது- சொக்கட்டான்காயினை, அலைக்கும் - வருத்திப்பின்னிடச்செய்கின்ற, முலை மார்பு - முலைகள்தங்கிய மார்பிடமும், சுந்தரம்-அழகைத்தருவனவாம்.

(க - ரை.) இறைவனது வலப்பாகத்துப் பவளமலையையொத்த தோள் களும்,மேருமலையையொத்த மார்பிடமும்உண்டு. இடதுபாகத்தில் மூங்கிலை யொத்ததோளும்,கலவையணிந்து சூதாடுகருவியினைப் பின்னிடச்செய்கின்ற முலைகள்தங்கிய மார்பிடமும் அழகைத்தருவனவாம் என்பதுகருத்து. பிரவா ளம் என்னும் வடமொழிபவளம் எனநின்றது. ஆன்மாக்கள்செய்த பாபத்தை நீறுபடச்செய்தலின் நீறெனப்பட்டது. அகலம் ஆகுபெயராய் மார்பினையு ணர்த்தியது. குழல், சூது, என்பன ஆகுபெயர்கள்.

தரம்பொற் பழியு முலகட்டி யெய்த்துத் தரந்தளரா
வுரம்பொற் புடைய திருவயி றும்வல மும்பர்மும்மைப்
புரம்பொற் பழித்தகம் பர்க்குத் தரத்திடு பூண்முலையு
நிரம்பப் பொறாது தளரிள வஞ்சியு நேருடைத்தே. (௪௨)

(இ - ள்.) உம்பர் - மேலோங்கியுற்ற, மும்மை - மூன்றாகிய, புரம் - திரிபுரங்களின், பொற்பு - அழகினை, அழித்த - அழியும்வகைசெய்த, கம்பர்க்கு - திருஏகம்பருக்கு, வலம் - வலப்பால், தரம் - கூட்டமாகிய, உலகு - உலகங்களை, அட்டி - சிருட்டித்து, அழியும் அவ்வுலகத்தின் மிகுதி அழிகின்றகாலத்து, எய்த்து - அதனைத்தம்மிடம் ஒடுக்கியும், தளரா - தளர்ச்சியடையாத, உரம்பொற்புஉடையதிருவயிறு-மிக்கவலிமைதங்கிய திருவயிறு, ஆம் - உளது, உதரத்து-அந்தவலப்பாலிற்கப்பாலாகிய இடதுபாகம், இடு - தரிக்கப்படும், பூண் - அணிகளையும், முலை - தனபாரத்தினையும், நிரம்பப் பொறாது -தாங்கப்பெறாது, தளர் - தளர்ச்சிஅடைகின்ற, வஞ்சியும்நேர் - வஞ்சியையும்ஒத்த, (இடை) உடைத்தே - உள்ளதாம். எ - று.

(க - ரை.) கம்பர்க்கு உதரத்து என்னுமிடத்தில் ஒருஉகரம் தொகுத்தல். இறைவற்கு வலப்பால் சிருட்டிதிதி சங்காரங்களைச்செய்து தம்மிடம் ஒடுக்கிக்கொள்ளும் திருவயிறு ஒருபால்உளது, மற்ற இடப்பால் அணிகளையும் முலைகளையும் தாங்கப்பெறாத இடையும் உளது என்பதுகருத்து சிருஷ்டியும் சங்காரமும் கூறவே அதனது திதியும் அடங்கப்பெற்றது. இறைவனது திருமேனியில் எல்லாவுலகும் அடங்கியவைமீண்டுஉளதாம்காலத்துத்தோன்றுவவாதலின் அவற்றிற்கு வயிற்றினையிடமாகக்கூறியது உபசாரமாம்.

உடைப்புலி யாடையின் மேலுர கக்கச்சு வீக்கிமுஞ்சி
வடத்தொரு கோவணந் தோன்று மரைவல மற்றையல்குற்
றொடக்குறு காஞ்சித் தொடுத்த வரசிலை தூநுண்டுகில்
அடற்பொலி யேறுடை யேகம்ப மேய வடிகளுக்கே. (௪௫)

(இ - ள்) அடல்பொலி - வலிமை மிகுந்த, ஏறுஉடை - இடபத்தினையுடைய, ஏகம்பம் மேய - திரு ஏகம்பத்தில் எழுந்தருளிய, அடிகளுக்கு - இறைவனுக்கு, புலிஆடைஉடையின்மேல் - புலியாடையாகிய வஸ்திரத்தின் மேல், உரககச்சு - பாம்பின்கச்சினை, வீக்கி - கட்டி, முஞ்சிவடத்து - தருப்பையாலாகிய திருவடத்தில், ஒருகோவணம் - ஒருகோவணத்துடன்கூடிய, அரை - திருஅரை, வலம்தோன்றும் - வலதுபாகத்தில் விளங்கும், மற்றை- (அது ஒழிந்த) இடதுபக்கத்தில், அல்குல் தொடக்குஉறு - அல்குலுடன் தொடர்ச்சியுள்ள, காஞ்சிதொடுத்த - எண்கோவைமணியுடன் கோக்கப்பட்ட, அரசிலை - அரசிலையென்னும்அணியும், தூநுண்துகில் - சுத்தமாகிய நுண்ணியஆடையும்(உண்டு) எ - று.

(க - ரை.) இறைவனுக்கு வலப்பாகத்தில் புலியாடையும் நாகக்கச்சும் தருப்பைவடமும் கோவணமுந்தோன்றும். இடப்பாகத்தில் காஞ்சியும் அத

ஞெடு தொடுத்த அரசிலையும் நுட்பமாகிய மெல்லிய வஸ்திரமும் தோன்றுநிற்கும் காஞ்சி எண்கோவைமணி காஞ்சி மேகலைகலாபம்பருமம்விரிசிகை மாதரிடையணி எனப்படும். அரசிலை என்பது ஓரணி அது அரசிலை யொத்திருப்பதால்,

அடிவலப் பாலது செந்தா மரையொத் ததிர்கழல்சூழ்ந்
திடிகுரற் கூற்றி னெருத்திற வைத்த திளந்தளிரி
னடியிடப் பாலது பஞ்சுற வஞ்சுஞ் சிலம்பணிந்த
வடிவுடைத் தார்கச்சி யேகம்ப மேய வரதருக்கே. (சச)

(இ - ள்.) கச்சி ஏகம்பம்மேய-திருக்கச்சி ஏகம்பத்தினை இடமாகக் கொண்ட, வடிவுடை - அழகினையுடைய, தார் - மாலையையணிந்த, வரதருக்கு - வரத்தைக்கொடுப்பவராகிய சிவபெருமானுக்கு, செந்தாமரையொத்தும்-சிவந்ததாமரையை யொத்ததும், அதிர்கழல் சூழ்ந்து - சப்திக்கின்ற வீரகண்டாமணி சூழப்பெற்று, இடிகுரல்-இடிபோலுங் குரலையுடைய, கூற்றின் - எமனது, எருத்து இற - பிடரி முரியும்படி, வைத்தது-வைத்ததும், வலப்பாலது - வலது பக்கத்திலுள்ள, அடி - திருவடியாம், பஞ்சு உற - பஞ்சினைப் பொருந்த, அஞ்சும் - அஞ்சுகின்ற, சிலம்பணிந்த - சிலம்பினை யணிந்த, இளந்தளிரின் - இளமையாகிய தளிரையொத்த, அடி - திருவடியானது இடப்பாலது - இடதுபாகத்ததாம் எ - று.

(க - ரை.) ஒத்தது, வைத்தது என்பதின் ஈற்றில் உம் விகாரத்தால் தொக்கது. இடிகுரற் கூற்றின் எருத்திறவைத்தது என்பதுயமனை உதைத்ததாம். இது காலகாலனென்னும் இறைவனது திருப்பெயரினை குறிப்பித்தது.

தருக்கவற் றுன்மிக்க முப்புர மெய்தயன் றன்றலையை
நெருக்கவற் றோட மழுவாள் விசைத்தது நெற்களென் றும்
பருக்கவற் றுங்கச்சி யேகம்ப ரத்தர் தம் பாம்புகளின்
றிருக்கயிற் றுலிட் டருளுங் கடகத் திருக்கரமே. (சரு)

(இ - ள்.) நெற்கள் என்றும் - நெற்பயிர்கள் எக்காலத்தும், பருக்கவற்றும் - விருத்தியாக வல்லதாம், கச்சி யேகம்பர் - திருக்கச்சி ஏகம்பத்தில் அமர்ந்தவரும், அத்தர் தம் - தந்தையானவரும் ஆகிய சிவமூர்த்தியினுடைய, பாம்புகளின் திருக்கயிற்றால் - பாம்புகளின் புரியினால், இட்டருளும் - பூணப்பட்ட, கடகத்திருக்கரம் - கடகத்தினை யணிந்த அழகிய திருக்கரமானது, மிக்க-செருக்கால் மிகுந்த, முப்புரம்-திரிபுராதிகளை, எய்து - எய்தழித்து; அயன் தலையை-பிரமனது தலையை, நெருக்க=வருத்தி, அற்று ஓட-பேர்ந்துவிழ, மழுவாள் விசைத்து-மழுவாயுதத்தை விசையுடன் எறிந்து, அது தருக்கவற்று=அது மேம்பாடு கூறவல்லதாகும் எ - று.

(க - ரை.) நான்காவதனடியின் ஈற்றில் "கவற்றால்" என்பதற்கு "கயிற்றால்" என்று பாடபேதமுங் கூறுவர். இஃது இறைவனது திருக்கரப்பெரு

மையினைக் கூறியதாம். அத்திருக்கரம் திரிபுரங்களை யெய்தும், அயன்தலை உருண்டோட மழுவாள் விசைத்தும் தருக்கவல்லதாம் என்பது கருத்து. தருக்கவற்றால் என்பதில் "ஆல்" அசை.

கரத்தத் தமருகத் தோசை கடுத்தண்ட மீபிளப்ப
வரத்தத்த பாத நெரித்திட் டவனி தலநெரியத்
தரத்தத் திசைகளுக் கப்புறம் போர்ப்பச் சடைவிரித்து
வரத்தைத் தருகம்ப ராடுவ ரெல்லியு மாநட்டமே. (சகூ)

(இ - ள்.) வரத்தைத் தருகம்பர் - அடியவர்களுக்கு வரத்தைத் தருகின்ற திருவேகம்பரது, கரத்து = திருக்கரத்தின்கண், அத் தமருகத்து ஓசை = அந்தத் தமருகத்தினது ஓசையானது, கடுத்து = விசைத்து, மீ அண்டம் = மேலுள்ள அண்டச்சுவர்களை, பிளப்ப = பிளக்கவும், அரத்தத்த பாதம் = செம்பரத்தம் பூவையொத்த திருப்பாதத்தினை, நெரித்திட்டு - வளைத்து, அவனிதலம் = பூமிமுழுதும், நெரிய = அழுந்தவும்; சடை = சடைக்கற்றை, தரத்த = உயர்ந்த, அத்திசைகளுக்குஅப்புறம் = அந்த திசைகளுக்குப் புறம்பே, போர்ப்ப - கவியும்படி, விரித்து = விரியும்படி செய்தும், எல்லியும் = அம்மகா சங்கார காலத்தின் இரவில், மாநடம் ஆடுவர் = மகா திருநடத்தைச் செய்வர் எ-று.

(க - ரை.) திருவேகம்பர் திருக்கரத்திலேந்திய தமருகத்து ஓசை அண்டங்களைப் பிளக்கவும், திருப்பாதங்கள் பூமி முழுவதும் நெரியவும், திருச்சடை திசைகள் முழுதும் கவியவும், சர்வசம்மாரகாலத்துப் பேரிருளில் திருநடம் ஆடுவர் என்பது கருத்து. இதனை "கலங்கின மால்கடல் வீழ்ந்தன கார்வரை யாழ்ந்ததுமண், மலங்கின நாக மருண்டனபல்கணம் வானங்கைபோ, யிலங்கின மின்னொடு நீண்ட சடையிமை யோர்வியந்தா, ரலங்கனன் மாநடமார்க்கினியாடுவ தெம்மிறையே." என்பதாலறிக.

நடனம் பிரானுகந் துய்யக்கொண் டானென்று நன்மறையோ
ருடன்வந்து மூவா யிரவ ரிறைஞ்சி நிறைந்தவன்பின்
கடனன்றி மற்றறி யாத்தில்லை யம்பலங் காளத்தியா
மிடமெம் பிரான்கச்சி யேகம்ப மேயாற் கினியனவே. (சஎ)

(இ - ள்.) எம்பிரான் - எம்பிரானாகிய, கச்சி = திருக்கச்சியின்கண் ஏகம்பமேயானுக்கு = திருவேகம்பத்தில் எழுந்தருளியிருக்கும் சிவமூர்த்திக்கு, நடனம் = திருநடனத்தை, பிரான் = தலைவனாகிய இறைவன், உகந்து = விரும்பி, உய்யக்கொண்டானென்று = ஆன்மாக்கள் பிழைக்கும்படி செய்தானென்று, நன்மறையோருடன் = உத்தமமாகிய வேதியருடன், மூவாயிரவர் வந்து = தில்லை மூவாயிரவரும் வந்து, இறைஞ்சி = பணிந்து, நிறைந்த அன்பின் - நிறைந்த அன்பினையுடைய, கடன் அன்றி = கடமையல்லாமல், மற்று அறியா = வேறு ஒன்றினையும் அறியாத, தில்லை யம்பலம் - திருத்தில்லை அம்பலமும், காளத்தி = திருக்காளத்தியுமாகிய, இடம் = இடங்கள், இனியன ஆம் = இனிமையைத் தருவனவாகும். எ - று.

(க - ரை.) காளத்தி யென்னுமிடத்து 'ஆம்' எம்பதனை இனியனவெ ன்பதுடன் இயைக்க. இது இறைவனுக்கு இனிய தலங்கள் பல உளவே னும் அவற்றில் சிறந்தன இவை என்பன கூறப்பட்டது. இறைவன் திருநடங்கொண்டானென்று, தில்லை மூவாயிரவர் பல வேதியருடன் குழுமி யிறைஞ்சி ஆனந்தமே கடமையாகக் கொள்ளும் தில்லையம்பலமும், திருக்கா ளத்தியும் இறைவன் எழுந்தருளியிருக்கும் இடங்களாகும் என்பது கரு த்து.

இனியவ ரின்னா ரவரையொப் பார்பிற ரென்னவொண்ணாத்
தனியவர் தைய லுடனா முருவ ரறம்பணித்த
முனியவ ரென்று முகந்தமுக் கண்ணவர் தண்டியன்புக்
கினியவர் காய்மழு வாட்படை யார்கச்சி யேகம்பரே. (௪அ)

(இ - ள். இனியவர் - தன்னை வணங்குவோர்க்கு இனியவர், இன்னார் - தன்னை வணங்காதார்க்கு இனிமையல்லாதவர், அவரை ஒப்பார் - அவரை யொத்தவர், பிறர் - வேறு பிறர் உளர்,என்ன ஒண்ணா - என்று கூறுதலாகாத தனியவர் - ஒப்பற்றவர், தையலுடன் ஆம் உருவர் - உமாதேவியை யொருபா கமாகக் கொண்ட திருவுருவத்தினையுடையார், அறம் பணித்த - தருமங்க ளைக் கூறிய, முனியவர் - மகருஷியானவர், என்றும் - எக்காலத்தும், உக ந்த - அடியவர்களால் விரும்பப்பட்ட, முக்கண்ணவர் - திரிநேத்திரங்களை யுடையவர், சண்டி அன்புக்கு - சண்டேசுரநாயனார் அன்பினுக்கு,இனியவர்- இனிமையானவர், காய்-பழுக்கக் காய்ச்சிய, வாள் - கூர்மையாகிய,மழுபடை யார் - மழுவாயுதத்தையுடையவர், கச்சி ஏகம்பர்-திருக்கச்சிக்கண் எழுந்தரு ளியிருக்கும் திரு ஏகம்பர் - எ - று.

(க - ரை.) தன்னை வணங்குவார்க்கு இனியவரும், வணங்காதார்க்கு இனிமை தராதவரும், பிறதெய்வங்களோடு ஒப்பிட்டுக் கூறத் தகாதவரும், இறைவியைவாமபாகத்திற் கொண்டவரும், தருமங்களை இருடிகள் பொருட் டருளிச்செய்த பெருமுனிவரும், அன்பரால் விரும்பப்பட்டவரும் சண்டி அன்பிற் குகந்தவருமாயுள்ளார் திருக்கச்சி ஏகம்பமேய இறைவர் என்பது கருத்து.

இருடிகள் அறநூல் வேண்டி இறைவனை யெண்ணித் தவம் புரிய அவர்கள் பொருட்டு இறைவன் ருத்ரமகருஷியாய் அறம்பணித்தாராலித லின் அறம்பணித்த முனியவர் என்றார்; சண்டி, தாம் தீமைசெய்யினும் அது தம் பொருட்டாதல் பற்றி நலமெனக் கொண்டு அவர்க்கு அருள் செய்தமை யின் சண்டியன்பிற் கினியவர் என்றார்.

பரவித் தனைநினை யக்கச்சி யேகம்பர் பண்ணுமையல்
வரவித் தனையுள்ள தெங்கறிந் தேன்முன் னவர்மகனார்
புரவித் தனையடிக் கக்கொடி தாய்விடி யாவிரவி
லரவித் தனையுங் கொண்டார்மட வார்முன்றி லாட்டிடவே (௪௯)

(இ - ள்.) பரவி - வணங்கி, தனைநினைய - தன்னை மனத்தகத்துக்கொள்ள, கச்சி ஏகம்பர் - திருக்கச்சி ஏகம்பர், பண்ணும் - செய்கின்ற, மையல் வரவு - மையலின் வருகை, இத்தனை உள்ளது - இவ்வளவு இருக்கின்றதென்பதனை, முன்னம் - முன்னே, எங்கு அறிந்தேன் - எவ்விதமறிந்தேன், அவர் மகனார் - ஏகம்பர் குமாரரது, புரவி - குதிரையாகியமயில், தனையடிக்க - அதனையடித்தலால், கொடிதாய் - கொடியதாகி, விடியா இரவில் - புலராத இரவில், மடவார் முன்றில் - பெண்களின் முற்றத்தில், ஆட்டிட - ஆட்டும்படி, அரவு இத்தனையும் - இவ்வளவு பாம்புகளையும், கொண்டார் - கொண்டனர். எ-று.

(க - ரை.) இது, ஆயவெள்ளத்தவரில் ஒருத்தி இறைவனது திருக்கோலத்தைக் கண்டு இவ்வகைப் பேரழகுவாய்ந்தானையணையப்பெறேம் என்கின்ற வுள்ளத்தளாய் இவ்விடியா இரவில் அரவ்மாட்ட வந்தவரதுமையற்றன்மையைப் பண்டு நானறிந்திலேன் எனக்கூறியதாம். இறைவன் தமதடியர் தம்மை நினைக்க அவர்க்கு ஆசையூட்டி மலமறப்போனாதலின், பரவித்தனை நினையக் கச்சியேகம்பர் பண்ணுமையல் என்றார். ஆசைக்கு அளவறியாமையின் இத்தனையுள்ளதெங்கறிந்தேன் என்றார். மகனார்புரவி - மயில்.

இடவஞ் சுறுக்கெனப் பாயுமஞ் சென்னி நகுதலைகண்
டிடவஞ் சுவர்மட வாரிரி கின்றன ரேகம்பத்தீர்
படமஞ்சு வாயது நாக மிரைக்கு மதனுக்குமுற்
படவஞ் சுவரெங் ஙனேபலி வந்திடும் பாங்குகளே. (௫0)

(இ - ள்.) ஏகம்பத்தீர் - ஏகம்பத்திலெழுந்தருளியிருக்கும் இறைவரே, இடவம் - நீர் ஏறிச்செல்லும் விடையோ, சுறுக்கெனப்பாயும் - அதிவிரைவாகப் பாயாநிற்கும், மடவார் - (உம்மைக்காணவிரும்பிய) பெண்கள், அம், சென்னி - அழகிய தலையின், நகுதலைகண்டிட - அட்டகாசத்தைக்காண அஞ்சுவர் - பயந்தவர்களாய், இரிகின்றனர் - ஓடுகின்றனர், படம் - படத்தினிடத்து, அஞ்சுவாயது - ஐந்துவாய்களையுடைய, நாகம் - அரவு, இரைக்கும் - இரைந்து ஓசையிடும், அதனுக்கு - அப்பாம்பினுக்கு, முற்பட அஞ்சுவர் - முன்னே நிற்க. அஞ்சாநிற்பர், (இவ்வாறு இருக்க) பலி - பிச்சையினைக்கொண்டு, வந்து - அருகணைந்து, இடும்பாங்குகள் - இடுகின்ற தன்மை எங்ஙன் - எவ்வாறு. (எ-று.)

(க - ரை.) இறைவனே, உம்மைக்காமுற்ற பெண்கள், பலிகொண்டு நெருங்குவோமென எண்ணியணையின், அணைதற்கு முன் இடவம் ஒருநிலை நில்லாது அகன்று விரைந்து செல்லும், அதுவேயுமன்றி எக்காலும்ஒழியாது நகைத்துக்கொண்டிருக்கும் அவ்வெண்டலை காணவு மஞ்சுவர், நீர்பூண்டிருக்கும் ஐந்தலையநாகம் இரைத்திடுதலால் அஞ்சுவர்இவ்வாறிருக்க எவ்வாறு பலிகொண்டிடுவீர்? எனக்கண்டாளொருத்தி கூற்றாகக் கூறியதாம்.

பாங்குடைக் கோட்புலி யின்னதள் கொண்டீர்நும் பாரிடங்க
ளாங்குடை கொள்ளப் பலிகொள்ள வந்தீர் தடங்கமலம்
பூங்குடை கொள்ளப் புனற்கச்சி யேகப்பங் கோயில்கொண்டீ
ரீங்கிடை கொள்ளக் கலைகொள்ள வந்தீ ரிடைக்குமின்றே. (௫௧)

(இ - ள்.) தடம் கமலம் - தடாகத்திலுள்ள கமலங்கள் பூ குடைகொள் - பூக்களைக்குடையாகக் கொள்ளுகின்ற, அ புனல் - அந்த நீர் சூழ்ந்த, கச்சி ஏகம்பம் - திருக்கச்சியேகம்பத்தினை, கோயில் கொண்டீர் - திருக்கோயிலாக்கொண்டெழுந்தருளியிருப்பவரே, இன்று - இன்றைக்கு, இடைக்கும் - இடைக்கும், பாங்கு உடை - அழகுடைய, கோள்புலியின் - வலியுள்ள புலியின், அதள் கொண்டீர் - தோலைக்கொண்டீர், நும்பாரிடங்கள் - உமது பூதப்படைகள், குடைகொள்ள - குடைபிடியாநிற்க, பலிகொள்ள வந்தீர் - பிச்சைகொள்ள வந்தீர், இடைகொள் - இடையிலே கொண்ட, அ கலைகொள்ள - அந்த ஆடையைக் கொள்ளும்படி, ஈங்குவந்தீர் - இவ்விடம் எழுந்தருளினீர் போலும் - (எ-று.)

(க-ரை.) தாம்-அசை. இறைவனைக்கண்டு மயல்கொண்ட தலைவி, காமத்தால் கலையிழந்து நீர் இடையில், புலியினதள்கொண்டீர்நாங்களுடுத்தியிருக்கும் ஆடையோ நீர் உடுக்கும் பான்மையதன்று. அங்ஙனமிருக்க அதனைக்கொள்வது காரணமாகப் பலிகொள்ள எழுந்தருளினீர் என்று இரங்கியதாம். இறைவனைச் சேர்ந்து அழகிலாப் புலியினதளும் அழகு பெற்றமை நோக்கிப் பாங்குடைக் கோட்புலியினதள் எனவும் உம்மைவிட்டு அகலாத ஆன்மாக்களைப் படையாகக் கொண்டீர் என்பார் நும்பாரிடங்கள் எனவும் கூறினார்.

இடைக்குமின் றோற்கு மிணைமுலை யாய்முதி யார்கடஞ்சொற்
கடைக்கணன் றாங்கச்சி யேகம்ப ரையங்கொ ளக்கடவும்
விடைக்குமுன் றோற்றநில் லேநின் றினியிந்த மொய்குழலார்
கிடைக்குமுன் றோற்றநஞ் சங்கிது வோதங் கிறித்துவமே. (௫௨)

(இ - ள்.) இடைக்கு - இடைக்கு, மின் தோற்கும் - மின்னல் பின்னிடையும், இணைமுலையாய் - இரண்டாகிய முலைகளையுடையாய், முதியார்கள் தம் சொல்-பெரியோர்கூறும் சொல்லினும், கடைகண் - அவர்களது கடாக்ஷமாகிய கிருபை,) நன்று ஆம்- நலம் தருவதாகும், (ஆதலால்) அம் கச்சி ஏகம்பர் - அழகிய திருக்கச்சிக்கண் எழுந்தருளியிருக்கும் திரு ஏகம்பர், ஐயம் கொள - பிச்சை ஏற்கும்படி, கடவும்-செலுத்தி வருகின்ற, விடைக்குமுன்- இடபத்திற்குமுன், தோற்ற காணப்படும்படி, நில் - அவர் எதிரில் நிற்பாயாக, அங்கு நின்று - அவ்விடத்தில்நின்று, இந்த மொய் குழலார் - இந்த நெருங்கிய கூந்தலையுடைய பெண்களின், கிடைக்குமுன் - கூட்டத்தின் முன்னர், தோற்றம் - காணப்பட்டு (ப்பிச்சையேற்க வருதல்) கிறித்துவம் - (உண்மையாகப் பிச்சைபெற வந்ததன்று) பொய்த்தன்மையாகும், இனிநஞ்சு - இனி நஞ்சையொத்துக் கொல்லவுங்கூடும், இது ஓது - (என்று) இச்செய்தியைக் கூறுவாயாக. (எ-று.)

(க - ரை.) நஞ்சங்கிதுவோ, என்பதற்கு நெஞ்சங்கிதுவோ எனவும் பாட பேதங்கூறுப. அவ்வகைக்கொள்ளின் இது தேவரீர்க்குத் திருவுளமோ எனப்பொருள் கொள்க.

இறைவன் பரிகொள்ளும்படி யெழுந்தருளும்போது அவன் விடைக்கு முன் காணப்பட நின்று இவ்வகைப் பெண்கள் கூட்டத்துக் காணப்படுதல் தீதாமெனக் கூறுகவென ஆயவெள்ளத்து ஒருத்தி மற்றொருத்தியை நோக்கிக்கூறுதல்,

கிறிபல பேசிச் சதிரா னடந்து விடங்குபடக்
குறிபல பாடிக் குளிர்கச்சி யேகம்ப ரையங்கொள்ள
நெறிபல வார்குழலார்மெலி வுற்றவநெடுந் தெருவிற்
செறிபல வெள்வளை போயின தாயர்க டேடுவரே. (௫௩)

(இ - ள். குளிர் கச்சி ஏகம்பர் - குளிர்ச்சியுள்ள நீர்வளமமைந்த திருக்கச்சிக்கண் எழுந்தருளிய திரு ஏகம்பர், கிறிபல - பல பொய்வார்த்தைகளை, பேசி - கூறிக்கொண்டு, சதிரால் நடந்து - சமர்த்துடன் நடந்து, விடங்குபட - அழகு உண்டாக, குறிபலபாடி - குறிக்கத்தக்க பாக்கள் பலவற்றினைப் பாடிக்கொண்டு, ஐயம்கொள்ள - பிச்சைகொள்ளும்படி, நெறி பல ஆர் - ஐம்பால் முதலிய பகுப்புக்களைக்கொண்ட, குழலார் - கூந்தலையுடைய பெண்கள், மெலிவு உற்ற - காமத்தால் வருந்துகின்ற, நெடுந்தெருவில் - நீண்டதெருவினிடை, செறி - நெருங்கிவந்ததால், பல வெள்வளை - அப்பெண்கள் பூண்ட பல வெள்ளிய கைவளைகள், போயின - கைவிட்டு நீங்கித் தொலைந்தன, தாயர்கள் தேடுவர் - தாய் மார்கள் தேடுவார். எ-று.

(க - ரை.) திரு ஏகம்பர் பல மாயச் சொற்களைக்கூறிக்கொண்டு பலபாடல்களைப்பாடிக் கொண்டும் நெடுந்தெருவில் பெண்கள் காண எழுந்தருளினதால் காதலுற்ற பெண்களின் கைவளைகழன்று நீங்கின. ஆனதால் அவற்றைத் தாயர் தேடுவர் என்பது. இது இறைவனைக் கண்ட பெண்களினிலைமை கூறியதாம். தெருவில் எனும் ஏழாம் வேற்றுமை செறிதல் என்னுந் தொழிற்பெயரின் முதனிலை கொண்டது. கண்டார் விரும்பும் நடைநடையுளானாதலின் சதிரானடந்து எனவும், வேதமோதும் விரிநாவுடையானாதலின் விடங்கு படப்பாடி எனவும் கூறினார். நெறி பலவார் குழலார் என்றதனால் பல பெண்கள் எனவும் அவர்கள் கூந்தல் ஐம்பாலின வென்பதும் பெறப்பட்டது. ஐம்பாலாவன, முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை. இவற்றுள் மயிரை யுச்சியின் முடித்தல் முடி, பக்கத்து முடித்தல் கொண்டை, பின்னே செருகல் சுருள், சுருட்டிமுடித்தல் குழல், பின்னிவிடுதல், பனிச்சை.

தேடுற் றிலகள்ள நோக்கந் தெரிந்தில சொற்கண்முடி
கூடுற்றில குழல் கொங்கை பொடித்தில கூறுமிவண்
மாடுற்றிலமணி யின்மட வல்குலு மற்றிவள்பா
னூடுற் றிலவெழி லேகம்பனார்க் குள்ள நல்கிடத்தே. (௫௪)

(இ - ள்.) கள்ளநோக்கம் - கபடமாகிய கண்கள், தேடுற்றில - தலைவ, னைத்தேடத் தொடங்கவில்லை, சொற்கள - இன்கூறும் சொற்கள், தெரிந்தில் - தெளிவாய்ப் புலப்படவில்லை, குழல் - கூந்தலும், முடிகூடிற்று இல- முடிக்கக் கூடவில்லை, கொங்கை தனங்கள், பொடித்தில - தோன்றவில்லை கூறும் இவள்மாடு - புகழத்தக்க இவளிடத்து மணியினமடம் அல்குலும் - அழகு கொண்ட இளமையாகிய அல்குலும், உற்றில - பருவத்தையடையவில்லை, இவள்பால் - இவளிடத்து, எழில் ஏகம்பனூர்க்கு - அழகு நிறைந்த ஏகம்பனூர்க்கு, நல்கிடற்கு - கருணை செய்தற்கு, உள்ளம்நாடுற்றில - மனம்நாடவில்லை.

(க - ரை.) இவள் நோக்கம் கபடத்தோடு கூடியதன்று இவள் சொற்கள் பேச அறியாள், இவளது குழலும் முடிகூடவில்லை, தனங்கள் எழுந்தில, அல்குலும் பூரிப்படையவில்லை இவ்வாறிருக்கு மிவளிடத்து ஏகம்பருக்கு மனமிரங்கவில்லை. என்பது கருத்து.

இது இளமைகூறி மறுத்தல், அதாவது தழைகொண்டு சென்றுழை ய தலைவனைக்கண்டு குழலும் முலையும் குவியாத குமலைச் செல்விக்கு நீ சொல்லுகின்ற காரியம சிறிதுமியை புடைத்தன்றென அவளது இளமை கூறி மறுத்தல். அதற்குத் திருக்கோவையாரில் "உருகுதலைச் சென்ற வுள்ளத்து மம்பலத்தும் மொளியே, பெருகுதலைச் சென்ற நின்னைப் பெருந்துறைப் பிள்ளை கள்ளார், முருகுதலைச் சென்ற கூழைமுடியா முலை பொடியா, வொருகுதலைச் சின்மழலைக் கென்னோவைய வோதுவதே" என்பதாலும் 'இரண்டொ லொன்றாய்க் கரைந்து கண்படாமல், ...இதழ்குவித்துப் பணி த்தகுதலை தெரியாதுமுருந்துநிரைத்திருந்து பற்றோன்றாது, என்பனவற்றா லறிக.

நல்கும் புகழ்க்கட வூர்நன் மறையவ னுய்யநண்ணிக்
கொல்கின்ற கூற்றைக் குமைத்தவெங் கூற்றங் குளிர்திரைகண்
மல்குந் திருமறைக் காட்டமிர் தென்று மலைமகடான்
புல்கும் பொழிற்கச்சி யேகம்ப மேவிய பொன்மலையே. (௫௫)

(இ - ள்.) என்றும் - எக்காலத்தும், மலைமகள் - மலையரயன் புத்திரி யாகிய பார்வதி பிராட்டியார், புல்கும் - தழுவுகின்ற, பொழில் சோலை சூழ்ந்த, கச்சி ஏகம்பம் - திருக்கச்சி யேகம்பத்தினை, மேவிய - பொருந்தியெ ழுந்தருளியிருக்கும், பொன் மலை - பொன்மலையை யொத்த சிவமூர்த்தி, புகழ்நல்கும் - புகழைத்தருகின்ற, கடவூர் - திருக்கடவூரில் அவதரித்த, நன்ம றையவன் - நல்லவேதியராகியமார்க்கண்ட ருஷி, உய்ய - பிழைக்கும வகை, நண்ணிக் கொல்கின்ற - (ஆன்மாக்களை) அடைந்து கொல்கின்ற, கூற்றைக் குமைத்த - யமனைக்காலாலுதைத்த, வெம் கூற்றம் - கொடியயமனானவன், குளிர் திரைகள் - குளிர்ந்த அலைகள், மல்கும் - நிறைந்த, திருமறைக்காட்டு அமிர்து - திருமறைக்காட்டில் எழுந்தருளிய அமிர்தமானவன் எ-று.

திரு ஏகம்பத்திலெழுந்தருளிய பொன்மலை யொத்தான், காலகாலனாகி ய கருணாநிதி, திருமறைக்காட்டி லெழுந்தருளிய அமிர்த மானவன்: என்ப து கருத்து. தன்னை யடைந்தார்க்குயமனால் வரும் ஊறுசிறிதும் இல்லாது காப்போன் என்பார் வெங்கூற்றம், எ-ம், தான் அழியாநிலையன் என்பார் அமிர்து எனவும் கூறினார். இங்கு கடவூர் என்பது சோணாட்டில் காவிரிக்குத் தென்கரையிலுள்ள கடவூர் வீரட்டானத்தையாம். மற்றொரு திருக்கடவூர் இதற்குக்கிழக்கு அரை கடிகையில் உளது. அதற்குக் கடவூர் மயானமெனப் பெயர். மேலைய கடவூர் வீரட்டம் காரிநாயனாரும், குங்கிலியக் கலய நாயனார் முதலியோர் அவதரித்த திருத்தலமாம்: திருமறைக்காடு இது வேதங்களால் பூசிக்கப்பெற்றதாம்.

மலையத் தகத்திய னர்ச்சிக்க மன்னி வடகயிலை
நிலையத் தமரர்தொழவிருந் தானெடு மேருவென்னுஞ்
சிலையத்தன் பைம்பொன் மதிற்றிரு வேகம்பத் தான்றிகழ்நீ
ரலையத் தடம்பொன்னி சூழ்திரு வையாற் றருமணியே. (௫௬)

(இ - ள்.) பைம்பொன் மதில் - பசுமையாகிய பொன்னாலமைந்த மதில் சூழ்ந்த, திரு ஏகம்பத்தான் - திரு ஏகம்பத்தில் எழுந்தருளியவன், மலையத்து அகத்தியன் - பொதிகை மலைக்கு வந்த அகத்திய முனிவர், அர்ச்சிக்க - அருச்சித்து வணங்க, மன்னி - பொருந்தி, வடகயிலை நிலயத்து - வடகயிலையாகிய இடத்து, அமரர் தொழ - தேவர்கள் வணங்க, இருந்தான் - எழுந்தருளினவன், நெடு மேரு என்னும் - நெடிய மேருமலை யென்கிற, சிலை அத்தன் - வில்லைக்கயிலேந்தியவன், திகழ்-பிரகாசிக்கின்ற நீர் - நீரானது, அலை, அசைகின்ற, அத்தடம் பொன்னிசூழ் - அந்த விசாலமாகிய காவிரி சூழ்ந்த, திருவையாற்று - திருவையாற்றில் (எழுந்தருளியிருக்கும்,) அருமணியே - அருமையாகிய மாணிக்கமேயாவன். (எ-று.)

(க - ரை.) திருவையாறு காவிரியின் வடகரையிலுள்ள தலம், தருமதேவதை யழியாப்பதம் பெறப் பூசித்து நந்திதேவராய்ப் பேறுபெற்றது. சுவாமி செம்பொற் சோதிநாதர், பிராட்டி அறம் வளர்த்த நாயகி, அப்பர்சுவாமிகளுக்கு கைலாய தரிசனங் காட்டி யருளிய தலம். ஐயடிகள் காடவர் கோனாயனாரும் "குந்திநடந்து குனிந்தொருகை கோலூன்றி, நொந்திருமியேங்கிநுரைத்தேறி - வந்துந்தி, யையாறு வாயாறு பாயாமுன்னெஞ்சமே, யையாறு வாயாலழை." என்று திருவெண்பா அருளிய தலம்.

மணியா ரருவித் தடவி மயங்குடக் கொல்லிகல்லின்
றிணியா ரருவியி னார்த்த சிராமலை யையவனங்க
ளணியா ரருவி கவர்கிளி யோப்புமின் சாரல்விந்தம்
பணிவா ரருவினை தீர்க்குமே கம்பர் பருப்பதமே. (௫௭)

(இ - ள்.) மணி ஆர் - இரத்தினங்கள் நிறைந்த, அருவிதடம் - நீரருவித்தடங்களையுடைய, இமயம் - இமயபர்வதமும், குடக்கொல்லி - மேற்குத்திசைக்கணுள்ள கொல்லி மலையும், திணி - மூன்றாகிய, கல்லின் - மலையின்கணுள்ள, ஆரின் - ஆத்திமரத்தின்கண், அருவி - அழகிய புட்கள், ஆர்த்த - தங்கியுள்ள, சிராமலை - திரிகூடாசலமும், ஐவனங்கள் -மலை நெற்களையும், அணி ஆர் - அழகு நிறைந்த, அருவி - திவலைக்கதிர்களையும், கவர் - கவர்ந்து செல்லும், கிளி - கிளிப்பிள்ளைகளை, ஓப்பும் - (காப்போர்) வெருட்டுகின்ற, இன்சாரல்-இனிய மலைப்பக்கத்துடன் கூடிய, விந்தம் - விந்த மலையும், பணிவார் - வணங்குவோருடைய, அருவினை - தீவினைகளை, தீர்க்கும் - நீக்குகின்ற, ஏகம்பர் பருப்பதம் - திருஏகம்பரது திருமலைகளாகும். எ - று.

(க - ரை) இமயமும், கொல்லிமலையும், திரிசிரா மலையும், விந்தமலையும், திரு ஏகம்பர் எழுந்தருளியிருக்குந் திருமலைகளாம் என்பதுகருத்து. இமயம், என்றது இமாசலம். இதிலிறைவன் இறைவியுடன் திருமணங்கொண்டெழுந்தருளி யிருந்ததால் இமயம் என்றார். கொல்லி என்றது மேனாட்டுத் திருப்பதிகளில் ஒன்று. சிராமலை என்பது, திரிசிரன் பூசித்ததாம். விந்தம், விந்திய பர்வதம். திரிணி எனும் மூன்றெனப் பொருள்பட்ட வடமொழி திணியென மருவிநின்றது. இரண்டாமடியில் ஆர்ந்த என்பதில் நகரம் வலிந்து நின்றது.

பருப்பதங் கார்தவழ் மந்தர மிந்திர நீலம்வெள்ளை
மருப்பதங் கார்கருங் குன்றியங் கும்பரங் குன்றம்வில்லார்
நெருப்பதங் காகுதி நாறும யேந்திர மென்றிவற்றி
லிருப்பதங் காவுகந் தான்கச்சி யேகம்பத் தெம்மிறையே. (௫அ)

(இ - ள்.) கச்சி ஏகம்பத்து- திருக்கச்சி ஏகம்பத்தில் எழுந்தருளியிருக்கும், எம்இறை - எமதுதலைவன், அம்கா-அழகிய சோலை சூழ்ந்த, பருப்பதம்-ஸ்ரீ சைலமும், கார்தவழ் - மேகங்கள் தவழ்கின்ற, மந்தரம் - மந்தர மலையும், இந்திரநீலம் - இந்திரநீல பருவதமும், வெள்ளை மருப்பு- வெண்மையாய கொம்புகள் பொருந்திய, கருங்குன்று - கருமையாகிய யானைகள், அங்கு இயங்கும் - அவ்விடத்து உலாவும், பரங்குன்றும்- திருப்பரங்குன்றும், வில்லார் - வில்லையுடைய வேடர், நெருப்பது (மூட்டும்) நெருப்பானது, அங்கு - அவ்விடத்து, ஆகுதி நாறும் - யாகத்தீயைப்போல் பரிமளிக்கின்ற, மயேந்திரம் - மயேந்திரமலை, என்று இவற்றில்-என்று இத்தலங்களில், இருப்பது-ருத்தலாக, உகந்தான் -விரும்பினான் - எ - று.

(க-ரை.) அது,சாரியை. ஸ்ரீசைலம் இதனைத் தமிழில் திருப்பருப்பதம் என்ப. இதனை மல்லிகாருச்சுன பர்வதமென்ப. இது நந்தி தேவரால் பூசிக்கப்பட்ட , தலம். சுவாமிபெயர் பர்வதநாதர் பிராட்டியார் பர்வதநாயகி, பாலாழி தீர்த்தம். மந்தரம் உலகத்தின் மத்தியிலிருப்பது. இது தேவர்கள் பூசிக்குமிடம். இந்திர நீலம் வடநாட்டுத் திருப்பதிகளில் ஒன்றாகிய இந்திர

நீலாசலம். இந்திரன் பூசித்து இஷ்டசித்திபெற்றதலம். பாண்டு புத்திரர்களில் ஒருவராகிய அருச்சுனன் பூசித்துப் பாசுபதம் பெற்றதலம் சுவாமி பெயர், நீலசலநாதர், பிராட்டியார் நீலாம்பிகை, இந்திரதீர்த்தம். பரங்குன்றமென்பது திருப்பரங்குன்று இது பாண்டிநாட்டுத் திருப்பதிகளில் ஒன்று. சிபியின் பொருட்டுச் சிவமூர்த்தி வேதியராய்த் தானமேற்ற தலம். அரிச்சந்திரன் பொய்யா விரதியாயிருக்கப் பூசித்ததலம். இந்திரன் குமாரக் கடவுளுக்குத் தெய்வயானையை மணஞ்செய்வித்த தலம். முருகாவென்னும் திருநாமமொழிக்குத் தன்பெயர் கூறக்கேட்டு, மறந்த மனைவியின் கரத்தைச் சேதித்த் கணவன் அஞ்ச அக்கரம் வளர்ந்த தலம் மகேந்திரம் உத்கல நாட்டிலுள்ள மலை பரசிராமர் பூசித்ததலம். த்ருமணிலங்கைக்குத் தாவியது இம்மலையினின்றாம்.

இறைத்தார் புரமெய்த வில்லிமை நல்லிம வான்மகட்கு
மறைத்தார் கருங்குன்றம் வெண்குன்றஞ் செங்குன்ற மன்னற்குன்ற
நிறைத்தார் நெடுங்குன்ற நீள்கழுக் குன்றமென் றீவினைகள்
குறைத்தார் முதுகுன்ற மேகம்பர் குன்றென்று கூறுமினே. (௫௬)

(இ - ள். இறைத்தார் - புகன்மை கொண்ட கொடிப்படையினையுடைய திரிபுராதிகளின், புரம் - திரிபுரங்களை, எய்த - தீக்கிரையாக்கிய, வில் - வில்லினையொத்த. நல இமை - நல்ல புருவங்களையுடைய, இமவான் மகட்கு - பார்வதிக்கு - புகுதிரிந்த, மறைதார் - மறைவிடங்களை முறையாகக் கொண்ட, கருங்குன்றம் - கருங்குன்றமும், வெண்குன்றம் - வெண்ணெய் மலையும் செங்குன்றம் - சோணசைலமும். மன்னல் குன்றம் - நிலைபெற்ற நீலமலையும், நிறைத்தார் - நிறைந்த மலர்களையுடைய, நெடுங்குன்று - கொடிமுடியும், நீள் கழுக்குன்றம் - நீண்ட கழுகாசலமும், என் தீவினைகள் - எனது தீயவினைகளை, குறைத்தார் - நீக்கின சிவமூர்த்திக்குரிய, முதுகுன்றம் - விருத்தாசலமும், ஏகம்பர் குன்று என்று - திருவேகம்பர் எழுந்தருளியிருக்கும் குன்றுகளாமென்று, கூறுமின் - சொல்லுங்கள் - எ - று.

(கருத்துரை) இது, இவர் நம்மினத்தவரல்லர் என மறுக்கவுங் கூடுமென எண்ணியபாங்கன் தோழியர்க்கு இவர் நம்மினத்தவர் என மலையினிலங் கூறியவாறும் இதனை "மலைமேசையி லிருப்பதற்கோ மலைசிலையா வெடுப்பதற்கோ - மலையரையன் மகிழ்வதற்கோ மலையுருவ மெடுத்தனையே." என்பதாற்காண்க. இறைவன் எழுந்தருளியிருக்கும் திருமலைகளிவை யென்பதை "கந்தமா தனங்கைலை மலைகேதாரங் காளத்தி கழுக்குன்றங் கண்ணாரண்ணா, மந்தமாம் பொழிற்சாரல் வடபர்ப்பத மகேந்திரமாயலைநீலமேமகூடம், விந்தமா மலைவேத சையமிக்க வியன்பொதியின் மலைமேரு வுதயமத்தம், இந்துசேகரனுறையு மலைகள் மற்று மேத்துவோ மிடர்கெட நின்றேத்து வோமே" இதுதிருப்பாசுரத்தா லறிக.

மறைத்தார் கருங்குன்றம் என்றது மறைவிடங்களாகிய அறைகளை முறையாகக்கொண்ட திரு அறையணி நல்லூராகும் - இது நடுநாட்டிலுள்ள

திருமலைகளிலொன்றும். இது நடு நாட்டில் பெண்ணைநதிதீரத்தில் பிரசண்டருஷியால் பூசிக்கப்பட்டது. வெண்குன்றம் என்றது கொங்கு நாட்டின்கணுள்ள வெண்ணெய் மலையாக விருக்கலாம். செங்குன்றம், இதுவும் கொங்குநாட்டின்கணுள்ள திருச்செங்குன்றூர் என்பது. இதில் இறைவி பூசித்து அர்த்தபாகம் பெற்றனள். நீலமலை என்பது தலம் மறைந்திருக்கலாம். நெடுங்குன்றம், இதுவும் கொங்கு நாட்டிலுள்ள தலம். இதனைத் திருப்பாண்டிக்கொடுமுடி என்பர். திருக்கைலாயக் கொடுமுடிகளிலொன்றாகிய தலம். விஷ்ணு, பிரமா, அகஸ்தியருஷி பூசித்ததலம். திருக்கழுக்குன்றம் - இது தொண்டை நாட்டிலுள்ள திருத்தலங்களிலொன்று. அஷ்டவசுக்கள், திருநந்திதேவர், இந்திரன், திருமால்முதலியோரும், மூன்று யுகங்களிலும் கழுகுருக்கொண்டருஷிகளும் பூசித்து இஷ்டசித்தியடைந்தது. இக்கலியுகத்தில் பூடா, விருத்தாவென்னும் இரண்டு முனிவர்களால் பூசிக்கப்பெற்ற தலம். சதுர்வேதங்களும் மலையுருவாகி யிறைவனைத் தாங்கப்பெற்றதலம். முதுகுன்றம் என்றது - பழமலை யென்னும் விருத்தாசலமாம். இதுவும் நடு நாட்டிலுள்ள தலங்களிலொன்று. விஷ்ணு பிரமன், அஷ்டவசுக்கள், பூசித்து சித்திபெற்றதலம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் மணிமுத்தாநதியில் தாம் பெற்ற பொன்னை யிட்டதலம். மதுகைடவரை வெலற்கு எண்ணிய விஷ்ணுமூர்த்திக்குவிருத்தவடிவமாய்த் தரிசனந்தந்து வரமளித்ததலம்.

கூறுமின் றொண்டர்குற் றாலநெய்த் தானந் துருத்தியம்பேர்
தேறுமின் வேள்விக் குடிதிருத் தோணி புரம்பழன
மாறுமின் போற்சடை வைத்தவ னாரூ ரிடைமருதென்
றேறுமி னீரெம்பி ரான்கச்சி யேகம்ப முன்னினைந்தே. (௯௦)

(இ - ள்.) தொண்டர் - திருத்தொண்டர்காள், குற்றாலம்-திருக்குற்றாலமெனவும், நெய்த்தானம் - திருநெய்த்தான மெனவும், துருத்தி - திருத்துருத்தி என்றும், அம்பேர் - அழகிய திருநாமங்களை, கூறுமின் - கூறுங்கள். வேள்விக்குடி - திருவேள்விக்குடி யெனவும், திருத்தோணிபுரம் - திருத்தோணிபுரமாகிய சீர்காழி என்றும், பழனம் - திருப்பழனம் எனவும். தேறுமின் - மனதிடைத் திடம்பெறக்கொள்ளுங்கள், ஆறு - நதியினை, மின்போல் சடை - மின்னலையொத்த சடையினிடம், வைத்தவன் - வைத்தருளாநின்றசிவமூர்த்தியெழுந்தருளியிருக்கும், ஆரூர் - திருவாரூர். இடைமருது - திருவிடைமருதூர், என்றுமுன் நினைந்தே - என்று முன்னே நினைந்து, எம்பிரான் கச்சிஏகம்பம் - எமது தலைவனது திருக்கச்சியேகம்பத்தினை, நீர் - நீங்கள் ஏறுமின்-செல்லுங்கள் எ-று.

(க-ரை.) இது வாக்காலும், காயத்தாலும், மனத்தாலும் அரன் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களை தியானித்துக்கூறுக என்றபடியாம். திருக்குற்றாலம் என்பது பாண்டிநாட்டின்கணுள்ள திருத்தலங்களுளொன்று சுவாமிபெயர்திருக்குற்றாலநாதர் . தேவியார், குழல்வாய்மொழியம்மை.வாசுகி,கவுற்ச

னர், முதலியோர் பூசித்ததலம், வியத்திரி, கண்டகசேதனன், புட்பதந்தன் என்போர் முத்திபெற்றதலம். தக்கன் வேள்வியில் சிவத்துரோகஞ் செய்த தேவர் பாவநீங்கப் பூசித்தலம். இது பூர்வம் விஷ்ணுஸ்தலம் எனவும் இவ்வழியடைந்த சிவ வேடங்கொண்ட அகத்திய முனிவரை வைணவர் அணுகவொட்டா தகற்றியதறிந்த முனிவர், வைணவவேடங்கொண்டு நெடியோனாகிய விஷ்ணுவைக்குறுகச்செய்து சிவலிங்க வுருவாக்கினர் எனவும் புராணம் கூறும். திருநெய்த்தானம், இது சோணாட்டில் காவிரிக்கு வடபாலுள்ளதிருத்தலங்களுள் ஒன்று. இது கலைமகள் பூசித்ததலம். சுவாமிபெயர், நெய்யாடியப்பர். பிராட்டியார் வாலாம்பிகையம்மை. திருத்துருத்தி சோழநாட்டில்காவிரியின் தென்கரைக்கணுள்ள தலங்களுள் ஒன்று. சுவாமி, வேதேச்சுரர், பிராட்டியார் அமிர்தமுகிழாம்பிகை. சுந்தரமூர்த்தி நாயனார் சங்கிலியார் பொருட்டுச் செய்த சத்தியந்தவறியதால் உண்டான தேகப்பிணியைநீக்கி யருளிய தலம். திருவேள்விக்குடி, காவிரியின் வடகரையிலுள்ள திருப்பதிகளிலொன்று. சுவாமி, கல்யாணசுந்தரர், பிராட்டியார், பரிமள சுகந்த நாயகி, ஒரு ராசகுமாரன் பொருட்டு இறைவனே தீவேட்பவராய் அவனுக்கு மணமுடித்தருளிய தலம். திருத்தோணிபுரம், இதுவே சீர்காழி. இது திருஞானசம்பந்த சுவாமிகளின் திருவவதாரத்தலம் இதன் பெருமை வெளிப்படையாதலால் எழுதாது விட்டனம். திருப்பழனம், இது, காவிரியின் வடகரையிலுள்ள தலங்களுள் ஒன்று. சுவாமி ஆபத்சகாயர். பிராட்டியார், பெரியநாயகி திக்குப்பாலகர் பூசித்ததலம். அப்பூதியடிகள் திருவவதரித்ததலம். திருவாரூர், இது முசுகுந்த சக்கிரவர்த்தி, விஷ்ணுவின்மார்பகத்தில் எழுந்தருளியிருந்து அருள்செய்த பெருமானை இந்திரனிடம் பெற்றுப் பிரதிட்டை செய்து பூசித்ததலம். இது சத்தவிடங்கத்தலங்களுள் ஒன்று. இதன் மான்மியம் பலர்க்கும் வெளிப்படை சுவாமிபெயர் வீதிவிடங்கப் பெருமான். பிராட்டி கமலவதியம்மை. திருவிடை மருதூர் இது மத்தியார்ச்சுனம். இது தேவர் பலர் பூசித்துவரம்பெற்றதலம். இறைவன் உருத்திரரைக் கொண்டு உலகசிருட்டி செய்வித்ததலம். வரகுணதேவர் பூசத்துறையில் நீராடித் தம்மைப் பற்றிய பிரமஹத்தியினின்று நீங்கியதலம்.

நினைவார்க் கருளும் பிரான்றிருச் சோற்றுத் துறைநியமம்
புனைவார் சடையோன் புகலூர் புறம்பியம் பூவணநீர்
பனைவார் பொழிற்றிரு வெண்காடு பாச்சி லதிகையென்று
நினைவார்தரு நெஞ்சி னீர்கச்சி யேகம்ப நண்ணுமினே. (௬௧)

(இ - ள்.) நினைவார்க்கு - (விடாது) தியானிப்பவர்க்கு, அருளும் - அநுக்ரகிக்கும், பிரான் - தலைவன் (எழுந்தருளியிருக்கும்) திருச்சோற்றுத்துறை - திருச்சோற்றுத்துறையும், நியமம் - திருநியமமும், புனை - அலங்கரிக்கப்பட்ட, வார்சடையோன் - நீண்டசடை முடியுடையோனது, புகலூர் - திருப்புகலூரும், புறம்பியம் - திருப்புறம்பியமும், பூவணம் - திருப்பூவண

மும், நீர் - ஜலம், பனை - பனைவிருக்ஷத்தில், வார் - ஒழுகுகின்ற, பொழில் - சோலை சூழ்ந்த, திருவெண்காடு - திருவெண்காடும், பாச்சில் - திருப்பாச்சிலாச்சிரமம், அதிகை - திரு அதிகையும், (என்று) நினைவு ஆர்தரும - நினைவில் பொருந்தும், நெஞ்சினீர் - மனமுடையார்களே, கச்சி ஏகம்பம் - திருக்கச்சியேகம்பத்தினை, நண்ணுமின் அடையுங்கோள். எ-று.

(க - ரை.) மேற்கூறிய தலங்களைத் தியானித்துக்கொண்டு திருவேகம்பம் அடைக என்பது கருத்து. திருச்சோற்றுத்துறை என்பது காவிரியின் தென்கரையிலுள்ள திருத்தலங்களுள் ஒன்று. இது சிவனடியராகிய அருளாளர் எனும் மறையவர் பசிநோய்க்கு உலவாவமுதளித்தருளிய தலம் சுவாமி பெயர் தொலையாச் செல்வர், பிராட்டி ஒப்பிலாம்பிகை. நியமம் - என்பது சோணாட்டிலுள்ள திருப்பருத்தி நியமம். இது சூரியன் பூசித்ததலம். சுவாமி பருத்தியப்பர்திருப்புகலூர். இதுசோணாட்டில்காவிரிக்குத் தென்கரையிலுள்ள தலம். அக்னிதேவனாற் பூசிக்கப்பெற்றதலம். எம்மையாளுடையாசுக்ற இத்தலத்தில்எழுந்தருளியிருக்கையிலிறைவன்உலகநலத்தின் பொருட்டுப்பலசோதனைசெய்தருளினர். திருப்புறம்பியம்காவிரியின் வடகரைக்கணுள்ள திருத்தலங்களுள் ஒன்று. சுந்தோபசுந்தர் பூசித்த தலம், சுவாமிபெயர், சாக்ஷிநாதேச்சுரர், பிராட்டி கரும்பன்னசொல்லி. திருப்பூவணம் இது பாண்டி நாட்டிலுள்ள தலங்களுளொன்று. பப்புருமகருஷி பூசித்ததலம். பொன்னனையாள் பொருட்டு இரசவாதஞ் செய்தருளிய தலம். சுவாமி பெயர் பூவணநாதர், அம்மையார் மின்னும்பிகை. திருவெண்காடு, இது சோணாட்டிலுள்ள தலங்களில் ஒன்று. இதற்குச் சுவேதாரண்யம் எனவும் பெயர். தாருகாசுரனோடு யுத்தஞ்செய்து கொம்புகளிழக்கப் பெற்ற வெள்ளையானை பூசித்ததலம். தம்முடனிருந்த பிள்ளையை அறியாது திருக்கோயிலில் விட்டுத் திருக்காப்பிட்டு வந்தஅருச்சகர் மீண்டும் போய்த்திருக்காப்பு நீக்கக் கொன்றை விருக்ஷமாகக் கண்டதலம். சுவாமி பெயர் வெண்காட்டீசர், தேவியார் பிரம்ம வித்தியாநாயகியம்மை. திருப்பாச்சிலாச்சிரமம் சோணாட்டில் காவிரிக்குவடகரையிலுள்ள தலம். சுவாமிபெயர் நீலகண்டர், தேவியார் விசாலாக்ஷியம்மை. கொல்லிமழவன் குமரியின் குமரகண்ட வலிபோக்கியதலம். திரு அதிகை. நடுநாட்டுத் திருத்தலங்களுள் ஒன்று. சுவாமி பெயர், வீரட்டானேச்சுரர் தேவியார் திரிபுரசுந்தரியம்மை. இது இறைவன் திரிபுரதகனஞ் செய்தருளியதலம். திருநாவுக்கரசுகள் உழவாரத்திருப்பணி மேற்கொண்ட திருத்தலம். அட்டவீரட்டத்துள் ஒன்று.

நண்ணிப் பரவுந் திருவா வடுதுறை நல்லநல்லூர்
மண்ணிற் பொலிகடம் பூர்கடம் பந்துறை மன்னுபுன்கூ
ரெண்ணற் கரிய பராய்த்துறை யேர்கொ ளெதிர்கொள்பாடிக்
கண்ணிப் பிறைச்சடை யோன்கச்சி யேகம்பங் காண்மின்சென்றே.

(இ - ள்.) நண்ணி-அடியவர்கள் நினைத்து, பரவும்-வணங்குகின்ற, திருவாவடுதுறை - திருவாவடுதுறையும், நல்லம் - திருநல்லமும், நல்லூர் - தி

நல்லூரும், மண்ணில் - பூமியில், பொலி - விளங்குகின்ற, கடம்பூர் - திருக்கடம்பூரும், கடம்பந்துறை - திருக்கடம்பந்துறையும், மன்னு - நிலைபெற்ற, புன்கூர் - திருப்புன்கூரும், எண்ணற்கு அரிய - நினைத்தற் கருமையாகிய, பராய்த்துறை - திருப்பராய்த்துறையும், ஏர்கொள் - அழகுகொண்ட, எதிர்கொள்பாடி - திருஎதிர்கொள்பாடியும், கண்ணிப்பிறை - சந்திர ஆரத்தை, சடையோன் - சடையில் தரித்த சிவ மூர்த்தியெழுந்தருளியிருக்கும், கச்சி ஏகம்பம் - திருக்கச்சி ஏகம்பத்தினையும், சென்று - போய், காண்மின்-தரிசியுங் கோள் - எ-று.

(க - ரை.) திருவாவடுதுறை - சோணாட்டுத் தலங்களிலொன்று. திருமூலரென்னுஞ் சிவயோகியர் எழுந்தருளியிருந்து திருமந்திரமருளிச் செய்த தலம். தேவேந்திரனும் பல ருஷிகளும் பூசித்தது. நல்லம், சோணாட்டுத்தலங்களில் ஒன்று, உமையம்மையும் தேவர்களும் பூசித்ததலம். நெல்லூர் - சேரநாட்டுத் தென்கரையிலுள்ள தலம். பாண்டவர், கிருஷ்ணன், வசுதேவன் முதலியோர் பூசித்தது. கடம்பூர் என்பது திருக்கடம்பூர், காவிரியின் வடகரையில் சோணாட்டிலுள்ள தலம். தேவேந்திரன் அமுதமுண்டாம்படி பூசித்ததலம். திருக்கடம்பந்துறை - சோணாட்டுத் திருத்தலங்களுள் ஒன்று. சிவமூர்த்தி கண்ணுவமகருஷிக்குக்கடம்ப விருக்ஷத்தில் தரிசனந்தந்ததலம். திருப்புன்கூர், சோணாட்டுத் தலங்களில் ஒன்று. ஏயர்கோன் கலிக்காமநாயனர், திருநாளைப்போவார் முதலியோர் தொழுதுய்ந்ததலம். திருப்பராய்த்துறை - தலவிருக்ஷமாகியபராய்விருக்ஷத்தால் இப்பெயர் பெற்றது. இந்திரனும், சப்த இருடிகளும் பூசித்ததலம். திருஎதிர் கொள்பாடி, சேரநாட்டிலுள்ளது. ஒரு அரசகுமாரன் திருமணஞ்செய்து மீளுகையில் சிவமூர்த்தி மாதுலனா யெதிர்கொண்டதலம்.

சென்றேறி விண்ணுறு மண்ணா மலைதிகழ் வல்லமென்பூ
வின்றேறல் பாய்திரு மாற்பேறு பாசூ ரெழிலழுந்தூர்
வன்றேர வன்றிரு விற்பெரும் பேறு மதிலொற்றியூர்
நின்றேர் தருகச்சி யேகம்ப மேயார் நிலாவியவே. (௬௩)

(இ - ள்) சென்று ஏறி - மேல் ஏறிச்சென்று, விண்ணுறும் - ஆகாயத்தையடையும், அண்ணாமலை - திரு அண்ணாமலை, திகழ்வல்லம் - விளங்குகின்றதிருவல்லமும், மெல் பூவின்தேறல் பாய்-மெல்லிய பூவின் தேன் பாய்கின்ற, திருமாற் பேறு - திருமாற் பேறும், பாசூர் - திருப்பாசூரும், எழில்-அழகுதங்கிய, அழுந்தூர் - திருவழுந்தூர், வன் தேரவன் - வலியதேரையுடைய சிவமூர்த்தி யெழுந்தருளியிருக்கும், திருவின் பெரும்பேறு - திருவினையுடைய பெரும்பேறும், மதில் ஒற்றியூர் - மதில் சூழ்ந்த திருவொற்றியூரும், நின்று - நிலைபெற்று, ஏர்தரு - அழகுதருகின்ற, கச்சியேகம்பம் - திருக்கச்சியேகம்பத்தினை, மேயார் - பொருந்தியவர், நிலாவிய - எழுந்தருளியிருக்குந் தலங்களாம். எ-று.

(க - ரை.) திரு அண்ணாமலை - நடுநாட்டிலுள்ள திருத்தலம். இறைவி திருக்கண் புதைத்தபாவம்நீங்கத் தவஞ்செய்து பாகமடைந்தது. விதி விஷ்ணுக்கள் தேடிக்காணாது நீண்டதலம். வல்லம் - தொண்டை நாட்டிலுள்ள திருத்தலங்களுள் ஒன்று. நவக்ரகங்களும் வல்லாளன் எனும் அரசனும் பூசித்ததலம். திருமாற் பேறு. தொண்டை நாட்டிலுள்ள தலங்களுள் ஒன்று. ததீசிமுனிவரிடம் பொருது சக்ர மிழந்ததிருமால் சக்கரம் பெறும் பொருட்டுப் பூசித்துப் பேறுபெற்றதலம். திருப்பாசூர்-தொண்டைநாட்டிலுள்ள திருத்தலங்களில் ஒன்று. மூங்கிலடியில் முளைத்த சிவமூர்த்தியைத் தரிசித்த சோழன்பொருட்டுப் பாய்பாட்டிச் சித்தராய்ச் சோழன் முன்னெழுந்தருளி அநுக்ரகித்ததலம். திருவழுந்தூர். சோழநாட்டுத் திருத்தலங்களுள் ஒன்று வேதங்கள், அஷ்டதிக்குப் பாலகர், விண்ணவர்கள் பூசித்துச் சித்திபெற்றதலம். பெரும்பேறு இது தொண்டைநாட்டில்தேவாரம் பெற்றதலத்தையடுத்துள்ளது இதற்குத்தேவாரமிருந்ததோ அன்றோ தெரிந்திலம் இங்குஎழுந்தருளியிருப்பவர் அகத்தீசுவரர் என்பர். திருவொற்றியூர் - தொண்டைநாட்டில் ஆகிசேடன்பூசித்ததலம் பட்டிணத்தடிகள் முத்தியடைந்ததலம்.

நிலாவு புகழ்த்திரு வோத்தூர் திருவாமாத் தூர்நிறைநீர்
சுலாவு சடையோன் புலிவலம் வில்வலங் கொச்சை தொண்டர்
குலாவுந் திருப்பனங் காடுநன் மாகறல் கூற்றம்வந்தா
லலாயென் றடியார்க் கருள்புரி யேகம்ப ராலயமே. (௬௪)

(இ - ள்.) புகழ்நிலாவு - புகழ்தங்கிய, திருவோத்தூர் - திருவோத்தூரும், திரு ஆமாத்தூர் - திரு ஆமாத்தூரும், நிறை நீர் - நிறைந்த நீரானது, சுலாவு - சூழ்ந்த. சடையோன் - சடையையுடைய சிவமூர்த்தியெழுந் தருளியிருக்கும், புலிவலம் - திருப்புலிவலமும், வில்வலம் - வில்வலமும், கொச்சை - சீர்காழியும், தொண்டர் - சிவனடியவர்கள், குலாவு - கொண்டாடுகின்ற, திருப்பனங்காடு - திருப்பனங்காடும்; நல் மாகறல் - நல்லதிருமாகறலும், கூற்றம் வந்தால் - யமன் எதிர்ப்படின், அலாய் என்று - அடா என்று (அவனை உரப்பி) அடியார்க்கு - அடியையடைந்த தொண்டர்க்கு; அருள்புரி - கருணைசெய்கின்ற, ஏகம்பர் ஆலயம் - திரு ஏகம்பரது ஆலயங்களாகும்.

(க - ரை.) திருவோத்தூர், தொண்டைநாட்டின்கணுள்ள திருப்பதிகளுளொன்று. இது வேதத்தின் பொருளறியாது மயங்கிய இருடிகளுக்கும் தேவருக்கும் இறைவன் பொருள் விரித்தருளிய தலம். ஆண்பனை பெண்பனையாகிய தலம். திருஆமாத்தூர் நடுநாட்டின்கணுள்ள திருத்தலங்களுள் ஒன்று. காம்தேனுவால் பூசிக்கப்பெற்ற தலம். புலிவலம்,வில்வலம் இன்னநாட்டிலிருக்கிறதெனத் தெரியவில்லை ஆயினும் திருநாவுக்கரசுசுவாமிகள் க்ஷேத்திரத் திருக்கோவைத் திருத்தாண்டகத்தில் "புலிவலம் புத்தூர் புகலூர்" எனத் திருப்பதிகத்தில் திருவாய் மலர்ந்திருப்பதால் அக்காலத்து இருந்த திருப்பதிகள் காடு கொண்டோ கடல் கொண்டோ மறைந்தன

போலும், கொச்சை கொச்சை முனிவர்பூசித்த சீர்காழி. திருப்பனங்காடு இது தொண்டைநாட்டின்கணுள்ள திருத்தலங்களுள் ஒன்று கண்ணுவமகருஷி பூசித்ததலம் இறைவனுக்கு அவ்விடத்தில் நிவேதிக்க வேறொன்றுங் காணாது தமதுகையிற் கிடைத்த பனங்கனி நிவேதிக்கப்பெற்றதலம். திருமாகறல் தொண்டைநாட்டின்கணுள்ள திருத்தலங்களிலொன்று கடகனென்னும் அசுரனது போர்க்காற்றாத இந்திரன பூசிப்ப இறைவன் உடும்பெனின்று அருள் செய்ததலம்.

ஆலையங் கார்கரு காவைகச் சூர்திருக் காரிகரை
வேலையங் கேறு திருவான்மி யூர்திரு வூறன்மிக்க
சோலையங் கார்திருப் போந்தைமுக் கோணந் தொடர்கடுக்கை
மாலையன் வாழ்திரு வாலங்கா டேகம்பம் வாழ்த்துமினே. (௬௫)

(இ - ள்.) (தொண்டர்காள்) ஆலை அங்கு ஆர் - கருப்பாலைகள் பொருந்தியுள்ள, கருகாவை - திருக்கருகாவூரும், கச்சூர் - திருக்கச்சூரும், திருக்காரிகரை - திருக்காரிகரையும், வேலை - கடலினலைகள், அங்கு ஏறு - ஆண்டு கரைக்கண்மோதும், திருவான்மியூர் - திருவான்மியூரும், திருவூறல் - திருவூறலும், மிக்கசோலை - மிகுந்தசோலைகள், ஆர் - பொருந்திய, திருப்போந்தை - திருப்பனையூரும், முக்கோணம் - திருப்பள்ளியின் முக்கூடலும் தொடர் - நெருங்கிய, கடுக்கை மாலையன் - கொன்றைமாலையைத் தரித்த சிவமூர்த்தி வாழ்கின்ற, திருஆலங்காடு - திருஆலங்காடும், ஏகம்பம் - திருஏகம்பமும், வாழ்த்துமின் - வாழ்த்துங்கள். எ - று.

(க - ரை.) கருகாவை யென்பது சோழநாட்டின்கணுள்ள திருக்கருகாவூர் இது சந்திரனும் மற்றைய கிரகங்களும் பூசித்துப் பேறடைந்ததலம். இதற்குத் திருக்களாவூர் எனவுந் திருநாமமுண்டு. திருக்கச்சூர், இது தொண்டைநாட்டின்கணுள்ள திருத்தலங்களிலொன்று. இது வித்யாதரர் முதலியோர் பூசித்ததலம் சநகர்முதலிய நால்வருக்குத் தெளிவருளியதலம் சுந்தரமூர்த்திசுவாமிகளுக்குச் சிவமூர்த்திவிருத்த வேதியராய் ஐயமேற்றளித்த தலம். திருக்காரிகரை இது எந்தநாட்டிலிருக்கின்றதோ தெரியவில்லை. திருவான்மியூர், தொண்டைநாட்டுத் திருப்பதிகளில் ஒன்று. பசு பூசித்தது வன்மீகருஷி பூசித்து நடனதரிசனங் கண்டதலம். திருவூறல் - தொண்டைநாட்டுத் திருப்பதிகளில் ஒன்று உமையம்மை பூசித்ததலம். நந்திவாயினின்றும் சலம் ஊற்றுகின்றமையால் இப்பெயர் பெற்றது. திருப்போந்தை என்பது திருப்பனையூர் இது சோழநாட்டிலுள்ள தலங்களில் ஒன்று தியாகராஜத்தலம் முசுகுந்தச் சக்ரவர்த்தியும் இலக்குமியும் பூசித்தது. முக்கூடல் என்பது சோணாட்டிலுள்ள தலங்களில் ஒன்று இதனைத் திருப்பற்றிவின்முக்கூடல் என்பர். சுவாமிபெயர் முக்கோணேச்சுரர். மார்க்கருஷி பூசித்ததலம். திரு ஆலங்காடு தொண்டை நாட்டுத்தலங்களில் ஒன்று. தேவேந்திரன், ஆதி

சேடன், அநந்தமுனிவர், முதலியோர் பூசித்ததலம் காளியுடனிறைவன் ஊர்த்த நடனஞ்செய்தருளிய தலம். காரைக்காலம்மையார் நடன தரிசன ம்பிரியாது தரிசிக்கப்பெற்ற தலம். வேளாளர் செட்டிப்பழிக்குயிர் கொடுத்த தலம்.

வாழப் பெரிதெமக் கின்னருள் செய்யு மலர்க்கழலோர்
தாழச் சடைத்திரு வேகம்பர் தம்மைத் தொழாதவர்போய்
வாழப் பரற்சுர மாற்று தளிரடி பூங்குழலெம்
ஏழைக் கிடையிறுக் குங்குய பார மியக்குறினே. (௬௬)

(இ - ள்.) வாழ - (அடியேம் பிறவிவலைக்கணின்று பிழைத்து) வாழ, எமக்கு - அடியேமுக்கு, பெரிது - மிகுதியும், இன்னருள் - இனியகருணையை, செய்யும் - செய்கின்ற, மலர்க்கழலோர் - (தாமரையொத்த) திருவடியையுடையவர், தாழ்-சரிந்துற்ற, அ சடை - அந்தச்சடைமுடியினைக்கொண்ட, திருவேகம்பர் தமை - திருவேகம்பரை, தொழாதவர் போய் - தொழாத அசடர் சென்று, வாழ் - வாழ்கின்ற, அ பரல்சுரம் - அந்தப்பரல் நிறைந்த சுரத்தில், பூங்குழல் - பூவை முடித்த குழலையுடைய எமது பாவை (செல்லுதற்கு) தளிர் அடி - தளிரையொத்த கால்கள், ஆற்று - சகியாவாம், இயக்குறின் (ஒருகால்) செல்வளேல், எம் ஏழைக்கு - எமது குமரிக்கு, குயபாரம் - முலைப்பாரத்தால், இடை இறுக்கும் - இடைமுரியும் எ - று.

(க - ரை.) இது அடி நினைந்திரங்கல், என்பது தலைவனுடன் போய தலைவியின் நிலைநினைந்து கவலாநின்ற செவிலி,அனிச்சப்பூமேன்மிதிப்பினும் ஆற்றாது பதைத்துப் பொங்காநின்ற அடிகள், இன்று பரந்து செறிந்தபரலையுடைய சுரத்தின்கண் சென்றவா றென்னோவென அவளடி நினைந்து இரங்காநிற்றல். இதனை "காமே தமக்கொப்பு மற்றில்லவர் தில்லை" என்னும் திருக்கோவையாரால் காண்க. முலைப்பாரத்தா லிடையிறுமென்பதற்கு "பனித்துண்டஞ் சூடும் படர்சடையம்பலவன்னுலகந், தனித்துண்டவன் றொழுந்தாளன் கயிலைப்பயில் சிலம்பா, கனித்தொண்டை வாய்ச்சி கதிர் முலைப் பாரிப்புக் கண்டழிவுற், றினிக்கண்டிலம் பற்றுச் சிற்றிடைக் கென்றஞ்ச மெம்மனையே" என்னுந் திருக்கோவையார் திருக்காரிகையாலறிக. இறைவன் திருமேனியே யருட்சுவரூபமாதலினானும் என்னையுந் தன்னடி பாடவருள்செய்தோனாதலினானும வாழப்பெரிது அருள்செய்தானென்றார்.

உறுகின்ற வெவ்வழ லக்கட மிக்கொடிக் குன்பின்வரப்
பெறுகின்ற வண்மையி னாலையபோரு ளேகம்பனார்
துறுகின்ற மென்மலர்த் தண்பொழிற் கச்சியைச் சூழ்ந்திளையோர்
குறுகின்ற பூங்குவ ளைக்குறுந் தண்பணை யென்றுகொளே. (௬எ)

(இ - ள். ஐய - தலைவனே, வெம் அழல் - வெவ்விய தீயினை, உறுகின்ற - பெற்றிருக்கின்ற, அக்கடம் - அக்காடு, உன்பின் - உன்னைப் பின்பற்றி, வரப்பெறுகின்ற - வரும்படியடைந்த, வண்மையினால் - வளப்பத்தினால்,

இக்கொடிக்கு - கொடியை யொத்தஇவளுக்கு, பேர் அருள் - மிக்க கருணையையுடைய, ஏகம்பனார் - திருவேகம்பரது, மெல்மலர் - மெல்லிய மலர்கள், துறுகின்ற - நெருங்குகின்ற, தண்பொழில் - சோலைசூழ்ந்த, கச்சியைச்சூழ்ந்து - திருக்கச்சியை நெருங்கி. இளையோர் - இளம்பிள்ளைகள், குறுகின்ற - குறுகுகின்ற பூகுவளை - அழகிய குவளைமலர்கள், (செறிந்த குறுந்தண்பணை என்று - சிறிய குளிர்ந்த வயலாயினது என்று, கொள் - ஆராய்ந்து கொள்.

(க - ரை.) இது ஆதரங்கூறல் என்பது, போக்குடம்படுத்தியதோழிக்கு எம்பதி சேய்த்து நீகருதிய தருமைத்தெனப்போக்கருமை கூறி மறுத்ததலைமகனுக்கு நின்னொடு போகப்பெறின் அவளுக்கு வெஞ்சுரமும் தண்சுரமாம். நீஅருமை கூறாது அவளை யுடன்கொண்டு செல்கவெனத் தோழிதலைமகளது ஆதரங்கூறாநிற்றல் இதனை "பிணையுங் கலையும்" எனுந் திருக்கோவையாராலறிக.

கொள்ளுங் கடுங்கதி ரிற்கள்ளித் தீச்சில வேயுலர்ந்து
விள்ளும் வெடிபடும் பாலையென் பாவை விடலைபின்னே
தெள்ளும் புனற்கச்சி யுட்டிரு வேகம்பர் சேவடியை
யுள்ளு மதுமறந் தாரெனப் போவ துரைப்பரிதே. (௬௮)

(இ - ள்.) என்பாவை - பாவையொத்த என்குமரி, கள்ளி - கள்ளிச்செடிகள், கடுங்கதிரில் - கடுமையான சூரியனைப்போல, தீக்கொள்ளும் - நெருப்பையடையவும், சிலவேய் - சிலமூங்கில்கள், உலர்ந்து - நீர்வற்றிப்போய். விள்ளும - பிளக்கவும், வெடிபடும் - வெடிக்கவுநின்ற, பாலை - பாலைநிலத்து, தெள்ளும் புனல் - தெளிந்த நீர் சூழ்ந்த, கச்சியுள் - திருக்கச்சியுள், திருவேகம்பர் - திரு ஏகம்பரது, சேவடியை - சிவந்ததிருவடிகளை, உள்ளுமது - நினைத்தலை, மறந்தார் என - மறந்ததீயரைப்போல, விடலை பின்னே - காளைக்குப் பின்னர், போவது உரைப்பு அரிது - போதலைக் கூறுதலரிதாகும்.

(க - ரை.) இது, நற்றாய் வருந்தல். அஃதாவது, உடன்போனமை கேட்டு உண்மகிழ்வாடு நின்று, ஓரேதிலன் பின்னே தன்றோழியை விட்டு என்னையுமுன்னே துறந்து, சேராதார்முன் ஊர் அலர்தூற்ற அருஞ்சுரம் போயினாள், இனியான் எங்ஙனம் ஆற்றுவன் என நற்றாய் பிரிவாற்றாது வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள் திருக்கோவையார் "யாழியன் மென்மொழிவன் மனப்பேதை யோரேதிலன்பின், றோழியை நீத்தென்னைமுன்னே துறந்து துணைவர் கண்முன்னே, வாழியி மூதூர் மறுகச் சென்றாளன்று மால்வணங்க, வாழி தந்தாணம்பலம டணியாரருஞ்சுரமே." என்பதாலறிக. பாவை என்பதற்குப் பாலன் எனவும் பாடங்கொள்க.

பரிப்பருந் திண்மைப் படையது கானரெனிற் சிறகு
விரிப்பருந் துக்கிரை யாக்கும்வெய் யோனஞ்சல் செஞ்சடைமேற்
றரிப்பருந் திண்கங்கை யார்திரு வேகம்ப மன்னபொன்னே
வரிப்பருந் திண்சிலை யோயுமா ரிபின் மறைகுவனே. (௬௯)

(இ - ள்.) செம்சடைமேல் - செந்நிறங்கொண்ட சடையில், தரிப்பு அரும் - தரித்தற்கு அருமையாகிய, திண்கங்கையார் - வலிய கங்கையினைத் தாங்கின சிவமூர்த்தி (யெழுந்தருளியிருக்கும் திருவேகம்பம் அன்ன - திருவேகம்பத்தினை யொத்த, பொன்னே - திருமகளை யொத்தவளே, அது - கையிற்றாங்கிய அது, பரிப்பு அரும் - பிறரால்தாங்கற்கு அரிய, திண்மைப் படை - வலிமைகொண்ட படையாகும், காணர்எனில் - (நமக்கு எதிரில் காணப்படுவோர்) வேடராயின், சிறகுவிரி - இறக்கைகள் விரிந்த, பருந்துக்கு - பருந்துகளுக்கு, இரைஆக்கும் - (அவர்களை) தீனி ஆகச்செய்யும், வெய்யேன் - கடுமையுடையேன் (ஆதலால்) அஞ்சல் - (அவர் நம்மை ஏது செய்வாரோ வென்னும்) அச்சம் ஒழி, வரி - கோடுகள் தங்கிய, பருமை திண்மை - மிக்கவலிமை கொண்ட, சிலை - வில்லை, ஏய் - பொருந்திய, உமர் ஆயின் - உமது சுற்றத்தவராயின், மறைகுவன் - (அவர் என்னைக்காணுவகை) மறைந்து விடுவேன் (எ - று.)

(க - ரை.) இது, அடலெடுத்துரைத்தல், என்பது, (மல்லக்கொண்டு செல்லா நின்றவன், சேய்த்தாகச் சிலரை வரக்கண்டு தலைமகளஞ்சா நிற்ப, நின்னையன்மாராயின் அஞ்சுவேன் அல்லது நால்வகைத்தானையுந் திரண்டுவரினும் என் கையில் வடித்திலங்கா நின்றவெஃகின் வாய்க்கிரை போதாது இத்னை யிவ்விடத்தே காண்பாயாக வென்று அவளது அச்சந்தீரத்தன்னடல் எடுத்துரையாநிற்றல். இதனை "கொடித்தேர் மறவர்குழாம் வெங்கரி நிறைகூடினென்கை வடித்தேரிலங் கெஃகின்வாய்க் குதவாமஃது மம்பலத்தோ, னடித்தேரலரென்ன வஞ்சுவனின்னைய ரென்னின்மன்னுங் கடித்தேர்குழன் மங்கை கண்டிடிங் விண்டோய் கனவரையே.' எனுந் திருக்கோவையாராலறிக.

வனவரித் திண்புலி யின்னத ளேகம்ப மன்னருளே
யெனவரு பொன்னணங் கென்னணங் கிற்கெ னெழிற்கழங்குந்
தனவரிப் பந்துங் கொடுத்தெனைப் புல்லியு மிற்பிரிந்தே
யினவரிக் கல்லதர் செல்வதெங் கேயொல்கு மேழைநெஞ்சே. (௭௰)

(இ - ள்.) ஒல்கும் - தளர்கின்ற, ஏழைநெஞ்சே - அறியாமை கொண்ட மனமே, வனம் - காட்டில் வசிக்கும், வரி - கோடுகளையுடைய, திண்புலியின் - வலிமைகொண்டபுலியின், அதள் - தோலினையுடுத்த, ஏகம்பம் - திருவேகம்பரது, அருளேஎன - திருவருளென்னும்படி, வரு-வந்த, என் பொன் அணங்கு - எனது திருமகளை யொத்தாள், என் அணங்கிற்கு - நான் துன்புறுதல் வேண்டி, எழில் கழங்கும் - அழகிய அம்மனைக்காய்களையும், தன - அவளது தனத்தினையொத்த, வரிப்பந்தும் கொடுத்து - வரிந்து செய்யப்பட்ட பந்தினையும் என் கையிற் கொடுத்து, எனைப்புல்லியும்-எனைத்தழுவியும், இல்பிரிந்து - தானிருந்த இல்லினைப்பிரிந்து, இனம் - கூட்டமாகிய, அரி - பருக்கைக்கற்களையுடைய, கல்லதர் - மலைகள் செறிந்த வழியில், செல்வது - (என்னைவிட்டு) செல்வது, எங்கே - எவ்விடத்ததாகும், (எ - று.)

(க - ரை.) இது குறிப்புரைத்தல் - அதாவது, வருத்தங்கூறிப் போக்குணர்த்தி அது வழியாக நின்று, என்னைப்புல்லிக்கொண்டு தன்பூவையையும் பந்தையும், பாவையையும் கிளியையும் இன்னென்கைத் தந்தாள் அது நின்னொடுடன் போதலைக் கருதிப் போலும் எனத்தோழி தலைமகனுக்குத் தலைமகளது குறிப்புரையாநிற்றல் இதனை "மாவை வந்தாண்ட மென்னோக்கிதன்பங்கர் வண்டில்லை மல்லற், கோவைவந்தாண்ட செவ்வாய்க் கருங்கண்ணி குறிப்பறியேன், பூவை தந்தாள் பொன்னம் பந்து தந்தாளென்னைப் புல்லிக்கொண்டு, பாவைதந்தாள் பைங்கிளியளித்தாள் தெளிபைந்தொடியே.' என்பதனாற் காண்க.

நெஞ்சார் தரவின்பஞ் செய்கழ லேகம்பர் கச்சியன்னாள்
பஞ்சா ரடிவைத்த பாங்கிவை யாங்கவட் பெற்றெடுத்த
வெஞ்சார் வொழியத்தன் பின்செல முன்செல் வெடுவெடென்ற
வஞ்சா வடுதிறற் காளைதன் போக்கிவை யந்தத்திலே. (எக)

(இ - ள்.) நெஞ்சு - மனம். ஆர்தர தமது கல்யாணகுணங்களைப் பூர அனுபவிக்க, இன்பம்செய் - புறத்தும் அகத்தும்சுகத்தை விளைக்கும், கழல் திருவடிகளையுடைய. ஏகம்பர் - திருவேகம்பர் எழுந்தருளியிருக்கும், கச்சி அன்னாள் - திருக்காஞ்சியை யொத்தநாயகியானவள், பஞ்சுஆர்-செம்பஞ்சூட்டிய, அடி - பாதங்களை, வைத்த - அழுத்திய, பாங்கு இவை - நலம் இவைகளாம், அந்தத்திலே - அவற்றின் முடிவில், அவள்பெற்று - அவளைப்பெற்று - எடுத்த - களிப்புடன் ஏந்தி வளர்த்த, வெம் சார்வு - விருப்பத்தாகடற்ற, ஒழிய - நீங்க, தன்பின்செல - தனக்குப்பின் அவள்வர, ஆங்கு முன்செல் - ஆண்டுமுன்னே செல்கின்ற, வெடுவெடு என்ற - தன்னைக்கண்டார் அச்சுறுகின்ற, அஞ்சா - பயப்படாத, அடுதிறல் - (பகைவரை) வெல்லும் வலிமைகொண்ட, காளைதன் - காளைப்பருவம் கொண்டானது, போக்குஇவை - போக்காகிய சுவடு இவைகளாம். (எ - று.)

(க - ரை.) இது சுவடு கண்டறிதல் - அதாவது, சோதிடம் பெற்றுச் சொல்லாநின்றவள், இம்முரம்பின்கட் கிடந்த இவை தீவினையேனெடுத்து வளர்த்த மாணிழை சீறடி, உவை அக்கள்வனடியாமெனச் சுவடு கண்டறியாநிற்றல். அதற்குச் செய்யுள் "தெளிவரபுனற செஞ்சியோன்." எனுந் திருக்கோவையார் திருப்பாசுரசதாலிக. நெஞ்செனச்சிலேடைப்படக்கூறியதனால் புறத்தில் அவன் திருவடியை யட்டாங்க நமஸ்காரத்தில் வணங்குதலும் அகத்தில் நினைப்பதுமிரண்டுங் கொள்க. வெடுவெடு - அச்சக் குறிப்பு.

இலவவெங் கானுனை யல்லாற் றெழுஞ்சர ணேகம்பனார்
நிலவுஞ் சுடரொளி வெய்யவ னேதண்மலர் மிதித்துச்
செலவும் பருக்கை குளிரத் தளிரடி செல்சுரத்துன்
னுலவுங் கதிர்தணி வித்தருள் செய்யுன் னுறுதுணைக்கே. (எ௨)

(இ - ள்.) ஏகம்பர்-திருஏகம்பரது, இலைவெம்கான் - இலைமரங்கணிறைந்த வெவ்விய கானகத்தில், சுடர் ஒளி நிலவும் - கிரணங்களையுடைய சந்திரனும், அல்லால் - இராக்காலத்தில், சரண்தொழும் - (உனது வெம்மைக்கஞ்சி) பாதத்தை வணங்குகின்ற, வெய்யவனே - சூரியனே, செல்சுரத்து - (என்பேதை யென்னைப் புலம்பவிட்டு செல்கின்ற சுரத்தில், உன் உறுதுணைக்கு - உனக்கு மிக்க துணையாயிருக்கு, உன் உலவும் கதிர் - உனது உலாவுகின்ற கிரணங்கள், தளிர்அடி - அவளது தளிரையொத்த கால்கள், தண்மலர் மிதித்து செலவும் - குளிர்ந்த மலர்களை மிதித்துச் செல்லும்படியாகவும், பருக்கை குளிர - பருக்கைக்கற்கள் குளிர்ச்சியுடனிருக்கவும், தணிவித்து அருள் - தணியும்படிச் செய்து அருள் புரிவாயாக - (எ - று.)

(க - ரை.) இது - சுடரோடிரத்தல் - என்பது, சுவடு கண்டிரங்கிய தாய், பெற்றவென்னோடு சார்பொழிய ஆயவெள்ளம் வருந்தத்துறந்து அறிவு முதிர்ந்து நிலவும் இராக்காலத்து வணங்கத்தக்க அழற்கான் சென்றாள்தளிர்போலும் அடிக்கு வெய்யவனே பருக்கைக் கற்கள் குளிர்ந்திருக்கவும் கானம் மலர்மீது மிதித்துச்செல்வதை யொப்பவும் இருக்க அருள்புரிவாயாக என்பது. இதற்கு "பெற்றேனொடுங்கிள்ளை வாட" என்னுந்திருக்கோவையார் திருவிருத்தத்தாலுணர்க.

துணையொத்த கோவையும் போலெழிற்பேதையுந் தோன்றலுமுன்
னிணையொத்த கொங்கையொடேயொத்த காதலொ டேகினரே
யணையத்த ரேறொத்த காளையைக் கண்டன மற்றவரேற்
பிணையொத்த நோக்குடைப் பெண்ணிவ டன்னொடும் பேசுமினே.

(இ - ள்.) துணைஇரண்டாகிய, கோவை - மணிவடத்தை யொத்த, உம்போல் - உம்மைப்போல, எழில் - அழகினையுடைய, பேதையும் தோன்றலும் - எனது குமரியும் ஒருதலைவனும், முன் - நினைக்கத்தகுந்த, இணை ஒத்த - இரண்டாக ஒத்திருக்கிற, கொங்கையொடே ஒத்த - கொங்கைக்குச்சமானமாகிய, காதலோடு ஏகினரேல் - ஆசையுடன் கூடிச் சென்றனரேல், பேசுமின் - (வருந்தும் எனக்குக்) கூறுங்கள், அவர் - அக்கண்டோர் அணை- உமாதேவியைத்தழுவுகின்ற, அத்தர் - சிவமூர்த்தியின், ஏறு ஒத்த - இடபத்தையொத்த, காளையை - காளைப்பருவமுற்ற, பிணை ஒத்த - மானினையொத்த, நோக்குஉடை - கண்களையுடைய, பெண் இவள் தன்னொடும் - பெண்ணாகிய இவளுடன், கண்டனம் - (நேற்று இவ்வழிக்கண்)கண்டோம்(எ-று.)

(க - ரை.) இதுபுணர்ந்துடன் வருவோரைப் பொருந்தினுதல் - என்பது, சுடரோடிரந்து அது வழியாகச் செல்லா நின்றவள், நும்மைக்கண்டு என்னாற் றேறப்படுகின்றார் மீண்டார்களென்று கருதி மகிழ்ந்தேன், அது கிடக்க, இவ்வாறு நும்மோடொத்த வொழுக்கத்தினராய் முன்னே யிருவரைப் போகக்கண்டீரோ வெனப்புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தினுவல். இதனை "மீண்டார் எனவு வந்தேன்" எனுந் திருக்கோவையார் தி

ருப்பாசுரத்தாலறிக. மற்றவர் என்பதின் கணுள்ள ஏலே, ஏகினர் என்பதனுடனியைத்துப் பொருள் கொள்க.

மின்னலிக் கும்வணக் கத்திடை யாளையு மீளியையு
நென்னலிப் பாக்கைவந் தெய்தினரே லெம்மனையிற்கண்டீர்
பின்னரிப் போக்கருங் குன்று கடந்தவ ரின்றுகம்பர்
மன்னரி தேர்ந்து தொழுங்கச்சி நாட்டிடை வைகுவரே. (எச)

(இ - ள்.) மின் மின்னற்கொடியை, நலிக்கும்-வருந்தச்செய்யும், வணக்கத்து - துவளுந்தன்மையுடைய, இடையாளையும் - இடையினையுடைய உன்பேதையினையும், மீளியையும் - தலைவனையும், நென்னல் - நேற்றையதினம், இப்பாக்கை - இச்சிற்றூரின்கண், வந்து எய்தினிரேல் - வந்து சேர்ந்திருப்பீராயின், எம்மனையில் கண்டீர் - எமது வீட்டகத்துக் கண்டேயிருப்பீர், பின்னர் - பின்பு, அவர் - அவ்விருவரும், இன்று - இன்றைக்கு, இப்போக்கு அரும் - போகுதற்கரிய இவ்வகைப்பட்ட, குன்றுகடந்து - மலையினைக்கடந்து மன் - நிலைபெற்ற, அரி - விஷ்ணுமூர்த்தி, தேர்ந்து - வேதப்பொருளெனவுணர்ந்து, தொழும்-வணங்குகின்ற, கம்பர் - ஏகம்பர் எழுந்தருளியிருக்கும் கச்சி நாட்டிடை - கச்சிநகரின்கண், வைகுவர் - தங்குவர் - (எ - று.)

(க - ரை.) இது-மீளவுரைத்தல். புணர்ந்துடன் வருவோரைப் பொருந்திவினவிய செவிலியைத்தோழி அவ்வெதிர்வோர்,நேற்றைப்பொழுதிச்சிற்றூரின்கணீங்கள் வந்திருப்பீராயின் கண்டிருப்பீரின்று அவ்விருவரும் ஓரிடுக்கணுமின்றிக் கச்சிநாட்டிடை வைகுவர். இனிநீசெல்வதன்று. மீள்வதே காரியம் எனத் தேடிச்செல்லாநின்ற செவிலிக்குக் கூறுநிற்றல். ''மீள்வது செல்வதன்று.'' என்பது திருக்கோவையார்.

உவரச்சொல் வேடுடைக் காடுகந் தாடிய வேகம்பனூர்
அவரக்கன் போனவி மானத்தை யாயிர முண்மைசுற்றுந்
துவரச் சிகரச் சிவாலயஞ் சூலந் துலங்குவிண்மேற்
கவரக் கொடிதிளைக் குங்கச்சி காணினுங் கார்மயிலே. (எரு)

இ - ள்.) இன் கார்மயிலே - இனிய நீலநிறந்தங்கிய மயில்போல் வானே, அச்சுஒல் - அச்சம் பொருந்திய, காடு உகந்து - காட்டினைவிரும்பி, ஆடிய - நடனஞ்செய்தருளிய, ஏகம்பனூர் - திரு ஏகம்பராகிய, உவர் - அவர்(எழுந்தருளியிருக்கும்,) சிகரச்சிவாலயம் கோபுரங்களையுடைய சிவாலயத்தினை சூழ்ந்த) ஆயிரம் உணமை சுற்றும் - ஆயிரம் உண்மையாகிய மதில்களிலும், திளைக்கும் - நெருங்கியுள்ள, சூலந்துலங்கு - சூலம் பிரகாசிக்கின்ற, துவர்அ கொடி - செந்நிறத்த அந்தக்கொடிகள், அவ் அரக்கன் - அந்த இராவணன், போன விமானத்தை - ஆகாயவழியாகச்சென்ற புஷ்பகத்தை, கவர் - செல்லாது நிறுத்திய, கச்சி - திருக்கச்சி நகரத்தினை,காண்-பார்ப்பாயாக. (எ-று.)

(க-ரை.) இதுநகர்காட்டல்-என்பது, நகரணிமை கூறக் கேட்டுஇன்புறக்கொண்டு செல்லாநின்ற தலைமகள் ஆயிரம் திருமதில்களையுடையதாய்

அம்மதில்களின்மீது குலத்தினையுடைய கொடிகள் பெற்றதாய் விளக்கும் கோபுரத்தை யுடைய அந்நகர்காண் நம்முடைய நகரமெனத் தலைமகளுக் குத் தன்னுடைய நகர் காட்டாநிற்றல். அவரக்கன் போன வியானத்தைக் கவர்ந்ததாவது, திருக்கைலைக்கண் இறைவன் எழுந்தருளியிருக்கையில் இராவணன் மதியாது செல்லக்கண்ட நந்திதேவர் அவனது தேர்செல்லாது தம்பிக்கச் செய்ததையாம்: அதனை யீண்டு எடுத்துக் கூறிய தென்னெனின் இறைவன் எழுந்தருளியிருக்கும் தலங்களெல்லாந் திருக்கைலை எனக் குறிப்பித்ததாம். இதனை "பொருதலங்களின்முடியான் போரரக்கர் கோன் புட்பகந்தான் பொருப்பின் மீதோடாதாக, விருநிலங்கணடுக் கெய்தவெடுத்திடுதலு மேந்திழையாடான் வெருவவிறைவனோக்கிக், கரதலங்கள் கதிர்முடியாறஞ்சினோடுகால் விரலா லூன்று கழிப்பாலையார், வருதலங்க மாயக்குரம்பை நீங்க வழி வைத்தார்க்கவ் வழியே போது நாமே." என்பதாலறிக. (எ - று.)

கார்மிக்க கண்டத் தெழிற்றிரு வேகம்பர் கச்சியின்வா
யேர்மிக்க சேற்றெழி னென்னடு வோரொலி பொன்மலைபோற்
போர்மிக்க செந்நெல் குவிப்போ ரொலிகருப் பாலையொலி
நீர்மிக்க மாக்கட லின்னொலி யேயொக்குநேரிழையே. (எசு)

(இ - ள்.) நேர் இழையே - செம்மையான ஆபரணங்களை யணிந்தவளே கார்மிக - கருமை மிகுந்த, கண்டத்து - திருக்கண்டத்தின், எழில் - அழகினைப்பெற்ற, திருஏகம்பர் - திருஏகம்பரது, கச்சியின்வாய் - திருக்கச்சியில் ஏர்மிக்க - அழகு மிகுந்த, எழில்நெல் - அழகிய நென்முடியினை, நடுவோர் - நடுவோரது, ஒலி - ஓசையும், பொன்மலைபோல் - பொன்னின் மலையாகிய மேருவைப்போல், போர்மிக்க - கூட்டத்தில்மிக்க, செம் நெல் - செவ்விய நெல்லை, குவிப்போர் - குவிப்போரது, ஒலி - ஓசையும், கரும்பு ஆலை ஒலி - கருப்பாலைகளின் தொழிலியக்கத்தாலுண்டாம் ஓசையும், (கூடி) நீர்மிக்க - நீர்மிகுந்த, மா - பெரிய, கடலின ஒலியே - கடலினது ஓசையையே, ஒக்கும் - ஒத்திருக்கும்: (எ - று)

(க - ரை) இது நகரணிமை கூறல் - அஃதாமாறு நகரத்துக்கோபுரமும் திருமதிலும் சேணிடைக் காணக்காட்டிய தலைமகன் சற்று அண்மைக்கண் செல்ல நகரத்தொலி கேளா நிற்பக்கேட்டு இனிச்சிறிது நெறியகலநும்பதி சேர்வாய் அப்பதியில் தொழில் செய்வார் ஒலிகடலொலிபோல் கேளா நின்றது எனக்கூறியதாம். இதனை "மின்றங்கிடையொடு" என்பதாலறிக.

நேர்த்தமை யாமை விறற்கொடு வேடர் நெடுஞ்சுரத்தைப்
பார்த்தமை யாலிமை தீந்தகண் பொன்னே பகட்டுரிவை
போர்த்தமை யாலுமை நோக்கருங் கம்பர்கச் சிப்பொழிலுட்
சேர்த்தமை யாலிமைப் போதணி சீதஞ் சிறந்தனவே. (எஎ)

(இ - ள்.) நேர்ந்து - எதிர்த்து, அமையாமை - முடியாதாகிய, விறல் வெற்றியினையுடைய, கொடுவேடர் - கொடியவேடர் வாழ்கின்ற, நெடுசுரத்

தை - நீண்டகாட்டினை, பார்த்தமையால் - பார்த்த காரணத்தால், இமை தீர்ந்த - இமைகள் நீங்கப்பான, கண் - கண்களையுடைய, பொன்னே - இலக்குமிபோன்றவளே, பகடு உரிவை - யானையின் தோலினை, போர்த்தமை, யால் - போர்த்த காரணத்தால், உமைநோக்கு அரு - உமாதேவியார் பார்த்தற்கு அஞ்சத்தகும். கம்பர் - திரு ஏகம்பர், கச்சிப்பொழிலுள் - திருக்காஞ்சிக்கண் உற்ற சோலையின் வாய், சேர்ந்தமையால் - நாமிருவரும் வந்து சேர்ந்தமையினால், இமைப்போது - இமையளவுகாலத்தில், அணிசீதம் - அழகிய குளிர்ச்சி, சிறந்தன - (நாம் அடைந்த வெம்மை நீங்க, மேம்பட்டன.

(க - ரை.) இது, கானங்கடந்து சென்றதலைவன் நாம்வேடர்வாழ்கடிய சுரத்தைக்கடந்தோம் இனிக்கச்சிற்பொழிற்கண் சேர்ந்து நமது கானவிடாய் நீங்கித்தளர்வகன்றோ மெனக்கச்சிப்பொழிலின் மேம்பாடு கூறியதாம். நேர்ந்து என்பதும், சேர்ந்து என்பதும் எதுகை நோக்கி வலிந்து நின்றன. இமைதீர்ந்த என்றமையால் சுரத்தின் வெம்மையின் மிகுதி கூறப்பட்டது. அன்பின் மிகுதிநோக்கியும், எல்லா இன்பங்களையுந் தருமியல்பினள் என்பது எண்ணியும் பொன்னேயென்றார். இறைவன் கஜாசுரன்வந்து தம்மை விழுங்க நின்று அவன்விழுங்கவும் அவனுட லினின்று வெளிப்பட்டு அவன் தோலைப்போர்த்த நிற்க வுமாதேவியார் கண்டு அச்சுற்றனர் ஆதலால், பகட்டுரிவை போர்த்தமையால் உமைநோக்கருங் கமபர் என்றார். திருக்காஞ்சியின் உயர்வும் பொழிலின் குளிர்ச்சியுந் தெரிவிப்பார் இமைப்போதணி சீதஞ் சிறந்தன என்றார். பொழுது, போதெனமருவி நின்றது. உரிவை ஆகுபெயர்.

சிறைவண்டு பாடுங் கமலக் கிடங்கிவை செம்பழுக்காய்
நிறைகொண்ட பாளைக் கமுகின் பொழிலவை தீங்கனியின்
பொறைகொண்ட வாழைப் பொதும்புவை புன்சடை யேகம்பனூர்
நறைகொண்ட பூங்கச்சி நாடெங்கு மிவ்வண்ண நன்னுதலே. (௭௮)

(இ - ள்.) நன்னுதலே - நல்ல நெற்றியினையுடையாளே, சிறைவண்டு - இறகுகளையுடைய வண்டுகள், பாடும் - பண்ணினை யிசைக்கின்ற, கமலக்கிடங்கு - தாமரைகள் தங்கிய மடுக்கள், இவை - இந்நிலைகளாம், செழு பழுக்காய் - வளமுள்ள பழுக்குங்காய்களின், நிறைகொண்ட - பாரத்தினைக்கொண்ட, பாளைக்கமுகின் - பாளையுடனியைந்தகமுகினது, பொழில் அவை - சோலைகளவையாம், தீங்கனியின் - மதுரமுற்ற பழங்களின், பொறைகொண்ட - பாரத்தினைக்கொண்ட, வாழைபொதும்பு - வாழையின்சோலை, உவை - நடுவிலுள்ளனவாம், புல்சடை - அறுகுதங்கிய, ஏகம்பனூர் - திரு ஏகம்பனூர் எழுந்தருளிய, நறைகொண்ட - தேனினைக்கொண்ட, பூகச்சி - பூ மரங்கள் செறிந்த, கச்சிநாடு எங்கும் - திருக்கச்சி நாடு முழுதும், இவ்வண்ணம் - இவ்வழகைப் பெற்று விளங்கும் - எ - று.

(க - ரை.) இது தலைமகளையுடன் கொண்டு செல்லுந்தலைவன் நகர்க்கணிமை சென்றுதன்னாட்டின் வளமிற்றிதென அவளுக்குச் சுட்டிக்காட்டின

மையால் இது நகர்வளங்காட்டலின்பாற்படும். நாம் வழிநடந்த வருத்தந்தீரும்பொருட்டு ஈண்டுள்ள நீர்நிலைக்கணீர் விளையாடி நம திருக்கை செல்வோமென்பார் கமலக்கிடங்கு என்றும், அக்கமலத்தை நீங்காது அதிலுள்ள மதுவினைப் பானஞ்செய்து களிக்கும் வண்டுபோல் உனது முகத்தாமரைக்கணுள்ள இதழருந்தி யின்புறுவேனென்பார் சிறைவண்டு பாடும் எனவும், நம திருவர் வரவை யேற்று நகரம் மங்கலச்சோலை முன்னர்த்தோற்றுவித்ததென்பார் கமுகின்பொழில், வாழைப்பொதும்பு எனவும் கூறினர். (எ-று.)

நன்னுத லார்கருங் கண்ணுஞ்செவ் வாயுமிவ் வாறெனப்போய்
மன்னித ழார்திரு நீலமு மாம்பலும் பூப்பவள்ளை
யென்னவெ லாமொப்புக் காதென்று வீறிடு மேகம்பனார்
பொன்னுத லார்விழி யார்கச்சி நாட்டுளிப் பொய்கையுளே. (௭௯)

(இ - ள்.) பொன் - அழகிய, நுதல் - நெற்றியினிடத்து, ஆர் - தங்கிய, விழியார் - கண்ணினைப்பெற்றவராகிய, ஏகம்பனார் - திருஏகம்பனாரது, கச்சி நாட்டுள் - திருக்கச்சி நாட்டுக்குள், மன் இப்பொய்கையுள் - நிலைபெற்று அவ்விடங்காணப்படும் பொய்கைக்கண், நல்நுதலார் - நல்ல நெற்றியையுடைய பெண்களது, கருகண்ணும் - கருமையாகிய கண்களும், செம்மைவாயும் - செவந்தவாயும், இவ்வாறு என - இவ்வாறு காணப்படுமென்று தெரிவிக்க, இதழ் - இதழ்கள் தங்கிய, திருநீலமும் - அழகிய நீலப்பூவும், ஆம்பலும் - அல்லிமலரும், போய் பூப்ப - சென்று மலராநிற்க, வள்ளை எலாம் - வள்ளைத்தண்டுகள் எல்லாம், காது ஒப்பு என்ன - காதுகளுக்கு உவமையென்று கூறும்படி, என்றும் வீறிடும் - எக்காலத்தும் பெருமைபெற்று விளங்கும். எ - று.

(க - ரை.) தலைமகன் பேதையைக்கண்டவுடன், அவளை வசப்படுத்துகிறது கண்ணும், நகையுமாதலின் கருங்கண்ணும் செவ்வாயுமென்றார். இந்நாட்டின்கணுள்ள பெண்கள் சர்வலக்ஷணமும் குறையாதவர் அவரிலக்கணமிற்றெனத் தலைவிக்குத் தெரித்தல்வேண்டி யோடைமேலேற்றி வீறிடும் என்றார். இறைவனது திருமேனி பொன் வண்ணமெவ்வண்ண மவ்வண்ணத்தது என்பார், பொன்னுதலார் விழியார் என்றார். இதுவும் நகர்வளங்காட்டல் என்னுந் துறையாம். நீலம், ஆம்பல், வெள்ளையென்பன முதலாகு பெயர்.

உள்வார் குளிர நெருங்கிக் கடுங்கிடங் கிட்டநன்னீர்
வள்வா ளைகளொடு செங்கயன் மேய்கின்ற வெங்களையாட்
கொள்வார் பிறவி கொடாதவே கம்பர் குளிர்குவளை
கள்வார் தருகச்சி நாட்டெழி லேரி களப்பரப்பே. (௮௰)

(இ - ள்.) எங்களை ஆட்கொள்வார் - எங்கள் குடிமுழுதும் அடிமைகொண்டவரும், பிறவி கொடாத - பிறவிவருமாறு செய்யாத, ஏகம்பர் - திருவேகம்பர் (எழுந்தருளியிருக்கும்) குளிர்குவளை - குளிர்ந்த குவளை மலர்களி

னது, கள் - தேனானது, வார்தரு - ஒழுகுகின்ற, கச்சிநாட்டு-திருக்கச்சிநாட்டினது, எழில் ஏரி - அழகிய ஏரிவளமுள்ள, களப்பரப்பு - இடப்பரப்பின் வளம், உள்வார் - அந்நாட்டினைத் தியானிப்போரது, (மனம்) குளிர - குளிரும்படி, நெருங்கி - பலவளங்களுஞ் செறிந்து, கடுங்கிடங்கு - நீண்ட கிடங்குகளில், இட்ட - உழவர் பாய்ச்சிய, நல் நீர்-நல்ல நீரின்கண், வள்வாளைகளொடு - வளமுள்ள வாளைமீன்களுடன், செங்கயல்-செந்நிறத்துடனியைந்த கயல் மீன்கள், மேய்கின்ற - மேய்கின்றனவாகும். (எ - று)

(க - ரை.) விடன் தான் காமுற்றவனிதையை யவளைவிட்டுச் சேய்மைக்கணீங்கித் தனித்துள்ளிய காலத்து மனக்கண் களிப்பது போன்று, அன்பர் இறைவன் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் திருப்பதியினையெண்ணுந்தோறும் மனங் குளிர்ச்சியடையப்பெறுதலின் உள்வார்குளிரநெருங்கியென்றார். இறைவன் கருணைமூர்த்தியாதலின் எம்மை வலிந்து அடிமைகொண்டு பிறவி போக்குவான் என்பார் ஆட்கொள்வார்பிறவி கொடாதவர் என்றார். இதுவும் நகர்வளங்காட்டல் இதனால்நகரத்தின்நிலவளங்கூறப்பட்டது.

பரப்பார் விசும்பிற் படிந்த கருமுகி லன்னநன்னீர்
தரப்பா சிகண்மிகு பண்பொடு சேப்படர் தண்பணைவாய்ச்
சுரப்பா ரெருமை மலர்தின்னத் துன்னுக ராவொருத்தல்
பொரப்பார் பொலிநுத லாய்செல்வக் கம்பர்தம் பூங்கச்சியே. (௮௧)

(இ - ள்.) பொலிநுதலாய் - விளங்குகின்ற நெற்றியினை யுடையவளே, செல்வக்கம்பர் தம் - எல்லாச்செல்வத்தினையுந் தருவோராகிய திரு ஏகம்பரது, பூ கச்சி - அழகிய திருக்கச்சியின்கண், பரப்பு ஆர் - விசாலமாகிய, விசும்பில் - ஆகாயத்தில், படிந்த - படிந்துள்ள, கருமுகில் அன்ன - கருமையாகிய மேகத்தை யொத்த, நல்நீர் - நல்லநீர்நிலை, தரப்பாசிகள் - உயர்ந்த பாசிகளும், மிகு பண்பொடு - உயரும் குணத்துடன் கூடிய, சேம்பு - நீர்ச்சேம்புகளும், அடர்-நெருங்கியுள்ள, தண்பணைவாய் - குளிர்ந்த வயற்கண், சுரப்பு ஆர் - பாலை சுரப்பிக்கின்ற, எருமை - எருமைகளானவை, மலர்தின்ன - மலர்களை மேய, துன்னு கரா-வலிமை நெருங்கிய முதலையின், ஒருத்தல் - ஆணானது, பொர - அதனுடன் போர்செய்ய, பார் - காண்பாயாக.

(க - ரை.) ஆழமுற்ற பரந்த நீர்நிலை நிலந்தோன்றாது மிக்க கருமையுடன் காணப்படுதல் நீர்கொண்ட மேகம் பூமியிற் படிந்ததையொத்துக் காணப்படுமாதலால், பரப்பார் ...... நீர், என்றார். மிகு பண்பு, நீர்வளத்தால் உயர்ந்து நிற்றல். நீர்ப்பூண்டுகளை மேயச்செல்லும் எருமைகள், அதன்மேல் தோன்றும்பூக்களைத் தின்ன ஆழத்துச்செல்ல அதனிடந்தின்னும் அவாவால் பற்றிய முதலை யதனையீர்க்க,எருமை முதலையை நிலத்தீர்க்கப் பொருதும் நீர்வளத்தினை நோக்குக என்பார் சுரப்பு ...... பார் என்றார். இதுவும் நகர்வளங்காட்டல். இதனால் நகரத்தி னீர்வளங்காட்டப்பட்டது.

கச்சார் முலைமலை மங்கைகண் ணாரவெண் ணான்கறமும்
வைச்சார் மகிழ்திரு வேகம்பர் தேவி மகிழவிண்ணோர்

விச்சா தரர்தொழு கின்றவி மானமுந் தன்மமரு
வச்சாலை யும்பரப் பாங்கணி மாடங்க ளோங்கினவே. (அ௨)

(இ - ள்.) கச்சு ஆர் - கச்சுத் தங்கிய, முலை - தனங்களையுடைய, மலை மங்கை - மலைமடந்தையாகிய, தேவி - பிராட்டியார், திரு ஏகம்பர் மகிழ - திரு ஏகம்பர் மகிழும் வகை, எண்ணான்கு அறமும் - முப்பத்திரண்டு அறங்களும், வைச்சு - நிலைபெறச் செய்து, மகிழ்ஆர் - களிப்பினையடையும், பரப்பாம் தன்மம் அரு அச்சாலையும்-விசாலமாகிய அறத்தினின்றும் நீங்காத அந்தத் தருமச் சாலையினையும், விண்ணோர் - தேவர்களும், விச்சாதரர் - வித்யாதரர்களும், தொழுகின்ற - வணங்குகின்ற,விமானமும் - விமானத்தினையும், ஓங்கினமாடங்கள் - உயர்ந்த மாளிகைகளையும், கணி - குறித்துக் காண்பாயாக. (எ - று.)

(க - ரை.) மலையரையன் புத்திரியாக விருந்து இறைவனது திருக்கண்களைப் புதைத்த பாவ நீக்கத்தின் பொருட்டுத் திருக்கச்சிக்கண் காமாக்ஷியாய் அறம் வளர்த்தனள் என்பது குறிப்பிக்க மலைமங்கை என்றார். எண்ணான் கறங்களாவன, "ஆதுலர்ச்சாலையையும் அறுசமயத் தோர்க்குண்டி, ஓதுவார்க் குணவினோ டாண்வத் திரமுடனே சேலை, மாது மோகம்"—முதலியவற்றாலறிக. இதுவும் நகர்வளங் காட்டல். இது நகரத்துள்ளமாடமாளிகை கோபுராதிகளின் வனப்பினைத் தலைவிக்கு எடுத்துக்காட்டியதாம்.

ஓங்கின வூரக முள்ளக மும்ப ருருகிடமாம்
பாங்கினி னின்ற தரியுறை பாடகந் தெவ்விரிய
வாங்கின வாட்கண்ணி மற்றவர் மைத்துனி வான்கவிக
டாங்கின நாட்டிருந் தாளது தன்மனே யாயிழையே. (அ௩)

(இ - ள்.) ஆய் இழையே - ஆய்ந்த திருவாபரணங்களையணிந்தவளே, அரிஉறை - விஷ்ணுமூர்த்தி யெழுந்தருளியிருக்கும், உள் அகமாம் - நாட்டின் நடுவணதாகும், ஓங்கின ஊரகம் - உயர்ந்த திருவூரகமும், உம்பர் - தேவர்கள், உருகு இடமாம் - மனமுருகித் துதிக்கு மிடமாகும், பாடகம் - திருப்பாடகம், பாங்கினி னின்றது - அதைச்சார்ந்தயலிலுள்ளதாகிய, தெவ் இரிய - பகைவர் பின்னிடும்படி, வாங்கியவாள் - எடுத்த வாள்போலும்,கண்ணி - கண்ணையுடையவளும், அவர் மைத்துனி - அவரது மைத்துனியும் வான்கவிகள்-சிறந்தவாநர சேனைகளால், தாங்கின - தாக்கப்பட்ட, நாடு-இலங்காபுரிக்கண், இருந்தாளது - சிறையிருந்தவளாகிய மலர்மகளது, மனை - இருக்கைகளாம். எ - று. மற்று, தன், அசைகள்.

(க-ரை.) இதுவும்நகர்வளங்காட்டல். நகரத்தினை தலைமகளுடனணைந்த தலைமகன், ஆங்கண் தோன்றும் விமானத்தினையும் மாளிகைகளையும் கண்டு தலைமகளுக்கு மலர்மகள் நீங்காதுறையும் வளத்தது என்று கூறியதாம். இதில் திருவூரகம் நூற்றெட்டுத் திருப்பதிகளில் ஒன்று. இது சாரஸ்ரீகர விமானத்தையுடையதாம் அமிர்தவல்லி மலர்முகத்தாள் என்னுந் திருநாமங்க

லைப் பெற்ற உலகளந்த பெருமாளால் எழுந்தருளப்பெற்றது. திருப்பாடகம் இது, பத்திர விமானத்தைப் பெற்றதாய் உருக்மணி, சத்யபாமையோடு கூடிய பாண்டவர் தூதப் பெருமாளால் எழுந்தருளப் பெற்றது. வாங்கின என்னும் பெயரெச்சம் வாள் என்னும் பெயர்கொண்டது. வான்கவிகள் தாங்கின நாடு இலங்கா நகரம். இலங்கைக்கண் சிறையிருந்தாளாகிய சீதாபிராட்டியைக் கூறியதனால் அரக்கரிடமிருந்தும், கற்பினிலை தவறாத பெருங்குணத்தின் செல்வி, அவ்வாறு நீயும் வாழ்க எனக் குறிப்பித்ததுமாகும்.

இழையா ரரவணி யேகம்பர் நெற்றி விழியின்வந்த
பிழையா வருண பிராட்டிய தின்ன பிறங்கலுன்னு
நுழையா வருதிரி சூலத்த ணோக்கரும் பொன்கடுக்கைத்
தழையார் பொழிலிது பொன்னே நமக்குத் தளர்வில்லையே. (௮௪)

(இ - ள்.) பொன்னே - திருமகளை யொத்தவளே, ஆர் அரவு - நிறைந்த நாகங்களை, இழை - அணிகளாக, அணி - பூணப்பெற்ற, ஏகம்பர் - திருவேகம்பரது, நெற்றிவிழியின் - நெற்றிவிழியிலிருந்து, வந்த - ஒருகற்பத்துத் தோன்றிய, பிழையா அருள் - கெடாததிருவருளையுடைய, நம்பிராட்டியது - நமது தலைவிக்குரியது, இன்னபிறங்கல் - இந்தமலை, திரிசூலத்தள் - திரிசூலத்தினையுடைய மகா காளி, நுழையாவரும் - புகுந்துவரும், நோக்கு அரும் - காண்டற்கரிய, பொன்கடுக்கை - பொன்போலும் கொன்றையின், தழை ஆர் - தழைகள் நிறைந்த, பொழில்இது - சோலை இதுவாகும், நமக்கு தளர்வு இல்லை - நமக்கு (இனி) தளர்ச்சியின்று, நோக்கு - காண்பாயாக.

(க - ரை.) இது பதிபரிசுரைத்தல் மேலைச்செய்யுளில் மலர்மகள் எழுந்தருளியிருக்கும் நிலை கூறிச் செல்வோன் ஆங்கணிருந் தன்று அப்பாற் சென்று கண்ட பொழிலினிலைமைகளின் சயமகளும் மலைமகளும் எழுந்தருளியிருக்கும் பொழிலிதுவெனத் தலைவிக்குக் கூறியதாம். ஒருகற்பத்து உலகத்தைப் படைக்க வேண்டி இறைவன் இறைவியினைத் தமது ஐந்து திருமுகத்தினும் படைத்தனராதலின் நெற்றிவிழியின் வந்தபிழையாவருணம் பிராட்டியென்றார். திரிசூலத்தாள் மகா காளி. இவர்கள் நமக்கு இடையூறு வராது காப்பர் என்றபடியாம்.

தளரா மிகுவெள்ளங் கண்டுமை யோடித் தமைத்தழுவக்
கிளையார் வளைக்கை வடுப்படு மீங்கோர் கிறிபடுத்தார்
வளமாப் பொழிற்றிரு வேகம்ப மற்றிது வந்திறைஞ்சி
யுளரா வதுபடைத் தோமட வாயிவ் வுலகத்துளே. (௮௫)

(இ - ள்.) மடவாய் - மடப்பத்தினையுடைய பெண்ணே, உமை-பிராட்டியார், தளரா - போக்கு அறாத, மிகுவெள்ளம் கண்டு - மிகுந்த வெள்ளத்தினை நோக்கி, தமை - இறைவராகிய தம்மை, ஓடிதழுவ - ஓடிச்சென்று தழுவும்படி, கிளை ஆர் - ஒன்றுடனொன்று தங்கிய, வளைகை - வளையல் தங்கிய கைகளினால், வடுபடும் - வடுவினையடையும், ஓர்கிறி - ஓர்மாயச் செய்

கையினை, ஈங்குப்படுத்தார் - இவ்விடத்துச் செய்கவராது, வளம் - வளங்கள் தங்கிய, மா பொழில் - பெரிய சோலைகள் சூழ்ந்த, திரு ஏகம்பம் - திருவேகம்பம் இது - இதுவாம், வந்து - இத்தலத்தை அணுகி, இறைஞ்சி - (அவனை) பணிந்து, இ உலகத்துள் - இந்த உலகத்துள், உளர் ஆவது - வாழ்ந்திருக்கும் (வாழ்க்கையினை) படைத்தோம் - நாம் அடைந்தோம். எ - று.

(க - ரை.) இறைவி இறைவனைப் பூசித்தலும், இறைவன் மூலத்தழும் புவளைத்தழும்பும் பெற்றமை கூறியதாம். இறைவியின் மன வன்மைகாண வேண்டிய இறைவன் மிகு வெள்ளத்தைச் செலுத்தினதால் தளரா மிகு வெள்ளம் என்றார். இறைவன் மீது வைத்த காதலால் இறைவற்கு வெள்ளத்தாலிடுக்கண் ணேருமென அஞ்சிச்சென்று ளாதலின் ஓடித் தழுவ என்றார். நாம் உலகத்துப் பிறந்த பேறு அவனைக் கரசரணங்களால் தொழுது பெறும் புண்ணியமாதலின் உளராவது படைத்தோமென்றும் கூறினர்.

உலவிய மின்வடம் வீசி யுருமதிர் வுண்முழங்கி
வலவிய மாமதம் பாய்முகில் யானைகள் வானில்வந்தாற்
சலவிய வார்குழல் பின்னரென் பாரி ரெனநினைந்து
நிலவிய வேகம்பர் கோயிற் கொடியன்ன நீர்மையனே. (அசு)

(இ - ள்) சலவிய வார்குழல் - பின்னிய நீண்ட கூந்தலையுடைய தலைமகள், (தாயை நோக்கி) அன்னம் நீர்மை - அன்னப்புள்ளின் இலக்கணம் வாய்ந்த, அன்னே - தாயே, வலவிய - வன்மையுள்ள, மாமதம் - கறுத்தமதங்கள், பாய் - பாய்கின்ற, முகில் யானைகள் - மேகங்களாகிய யானைகள், உலவிய - சலிக்கின்ற, மின்வடம் - மின்னலாகிய வடத்தினை, வீசி - எறிந்து, உரும் அதிர்வு - இடியின் அதிர்ச்சியினை, உள்முழங்கி - உள்ளே முழக்கி, வானில் வந்தால் - ஆகாயத்தில் வந்தால், பின்னர் என்பாரிர் - நீங்கள் பின்பு என்னைக் காணமாட்டீர்கள், என நினைந்து - என்று எண்ணி (அதற்கு முன்) நிலவிய - விளங்குகின்ற, ஏகம்பர் - திரு ஏகம்பர் எழுந்தருளியிருக்கும், கோயில் - திருச்சந்நிதிக்குமுன்பு, கொள்தி - எடுத்துச்செல்லுக. (என்றாள்.) (எ - று.)

(க - ரை.) இது கார்கண்டு கலங்கும் தலைவி தாயாரை நோக்கிக் கவன்று கூறியதாம். மாமதம் மிக்கமதம் என்னினுமாம். மேகத்தை மன்மதனுக்கு யானையென்பராதலால், மாமதம் என்றார். இம்முகில்கள் மின்னலாகிய வடத்தினை வீசி இடித்து அரசருடன் போர் புரிய வரும் சேனைபோல் என்னுடன் போர்புரிய வருதலின உலவிய......வந்தால் என்றார்.

நீரென்னி லும்மழுங் கண்முகில் காணெஞ்ச மஞ்சலையென்
றூரென்னி லுந்தம ராயுரைப் பாரம ராபதிக்கு
நேரென்னி லுந்தருங் கச்சியு ளேகம்பர் நீண்மதில்வாய்ச்
சேரென்னி லுந்தங்கும் வாட்கண்ணி தானன்பர் தேர்வரவே. (அஎ)

(இ - ள்.) முகில்காள் - மேகங்களே, அழும்கண் - அழுகின்ற கண்களுடனும், நெஞ்சம் - (கவலைகொண்ட) மனத்துடனும் (உள்ளவளை) அஞ்சலை

என்று - அஞ்சவேண்டாம் என்று, உரைப்பார் ஆர் எனினும் - கூறுவோர் யாவரேயாயினும், தமர் - உறவினரெனக் கூறப்படுவர், (ஆதலால்) அமராபதிக்கு - தேவர் வசிக்குஞ் சுவர்க்கத்திற்கு, நேர் எனினும் - ஒத்ததேயென்னினும், தகும் - அமையும், கச்சியுள் - திருக்கச்சியின்கண், ஏகம்பர் - திருவேகம்பர் எழுந்தருளியிருக்கும், நீள் மதில்வாய் - உயர்ந்த திருமதிற்கண், நீர்-நீங்கள், சேர் - சேர்ந்து, அன்பர் - (தனக்கு) அன்பனாகியதலைவனது, தேர்வரவு - தேரினது வரவினை, என்னினும் உண்மை) எனக்கூறினும், வாள் கண்ணி - வாள்போலும் கண்களையுடைய எனது தலைவி, தங்கும்-உயிர் நீங்காது நிற்பள், எ - று.

(க - ரை.) இது வரவெடுத்துரைத்தல். என்பது தலைமகன் முகிலொடு பதிநோக்கி வாராநிற்பக்கண்ட தோழி முகிலைநோக்கி நீவிரேயாயினும் எனக்கு முந்திச் சென்று நிலைபெறாது நாயகனை யெண்ணி யுயிர்நீங்கும் நிலைக்கணிருக்கும் எமது தலைவிக்கு அவனது வருகை யுண்மையெனக் கூறின் உயிர்தரிப்பள் என்று முகிலோடு கூறியதாம்.

வரங்கொண் டிமையோர் நலங்கொள்ளு மேகம்பர் கச்சியன்
னாய், பரங்கொங்கை தூவன்மி னீர்முத்த மன்பர்தந் தேரின்முன்
னே, தரங்கொண்டு பூக்கொண்டு கொன்றைபொன் னாகத்தண் காந்
தள்கொத்தின், கரங்கொண்டு பொற்சுண்ண மேந்தவும் போந்தன
கார்முகிலே.

(இ-ள்.) இமையோர்-தேவர்கள், வரம்கொண்டு-வரத்தினைப்பெற்று, நலம் கொள்ளும்-எல்லா நலங்களையும்அடையும், ஏகம்பர்-திருவேகம்பர் எழுந்தருளியிருக்கும், கச்சி அன்னாய்-திருக்கச்சி நகரத்தை ஒத்தவளே,(நீ) பரம்கொங்கை-பாரமாகியதனங்களில், நீர்முத்தம்-கண்ணீராகிய முத்துக்களை, தூவன்மின் - உதிர்க்காதிருங்கோள், அன்பர்தம் தேரின்முன்னே - தலைவரது தேரின்முன்பாக, கார்முகில் - கருமையாகிய மேகங்கள், தரம்கொண்டு- உயர்வைப்பெற்று, பூகொண்டு - மலர்களையேந்தி, கொன்றை - கொன்றைமலர்களை, பொன்னாக - பொன்மணிகளாக, தண்காந்தள் - குளிர்ந்தகாந்தளாகிய கொத்தின் - கொத்துகளின், கரம்கொண்டு -கரத்திற்கொண்டு, பொற்சுண்ணம் - பொன்போலுஞ் சுண்ணப்பொடி, ஏந்தவும்-ஏந்தாநிற்கவும், போந்தன - வந்தன, (ஆதலால் நீ கலுழ்தலை ஒழி) எ - று.

(க - ரை.) தீமைசெய்யும் தேவாசுரர்களும் தம்மை நினைத்துத் தவஞ்செய்யின் அவர்கள் வேண்டும் பொருளைத்தர வல்லன் என்பார்,வரங்கொண்டு ......கொள்ளும், எனவும், கண்ணினீர் கணவனில்வழி யொழுகியதைத் தணிவு கூறித் தணிப்பாள் பரங்கொங்கை தூவன்மினீர்முத்தம் என்றார்.

கார்முக மாரவண் கைக்கொண்ட கம்பர் கழற்றொழுது
போர்முக மாப்பகை வெல்லச்சென் றார்நினை யார்புணரி
நீர்முக மாக விருண்டு சுரந்தது நேரிழைநா
மார்முக மாக வினைக்கட னீந்துநம் வெய்துயிர்ப்பே. (அக)

(இ - ள்.) நேர் இழை - செவ்விய அணியையணிந்தவளே, கார்முகம் - பினாகம் எனனும் வில்லினை, ஆர - நிரம்ப, வண்கை - வளவிய திருக்கரத்தின்கண், கொண்ட - தாங்கிய, நம்பர் - திரு ஏகம்பரது, கழல் தொழுது - திருவடிகளை வணங்கி, போர்முகமாக - பகைவரது யுத்தகளத்தை முன்னிட்டு, பகைவெல்ல - பகைவரைவெல்லும்படி, சென்றார் - சென்றவராகிய தலைவர், புணரி - கடல், நீர்முகம் ஆக - நீரினைத்தனக்கு முகமாக்கொண்டு, இருண்டு - இருள்நிறங்கொண்டு, சுரந்தது - பெருகிற்று, (ஆதலால்) நாம - நாங்கள், வெய்து உயிர்ப்பு - தலைவர் நீங்கினதாலுண்டான வெய்துயிர்ப்பினை, ஆர்முகம் ஆக - யானை வாயிலாகக்கொண்டு, வினைகடல் - துன்பமாகிய கடலினை, நீந்துதும் - நீந்துவோம். எ - று.

(க - ரை.) பகைகொண்ட அசுராதிகளையும் திரிபுராதிகளையும் வெல்லும் வகைக் கைக்கண் பினாகத்தினை யேந்தினாராதலின் அவனை வணங்கி எம் தலைவற்கு இழுக்கண் வாராதென்பார் கார்முகமார்.........சென்றார், என்றார். இவள் தனித்திருப்புழி கடலொலிகேட்டு நிலைகலங்கிய தலைவி கூற்று எனினும் ஆம். அன்றிவானத்திடை முகில்வரக்கண்ட தலைவி கார் காலம் நெருங்கியது போர்க்குச் சென்ற தலைவர் இன்னும் மீண்டிலர் எனத் தலைவி கார்ப்பருவங்கண்டு கலங்கினளெனினும் ஆம். வேண்டுவோர் வேண்டிய கொடுக்கு வளமுள்ளான் என்பார் அவனது கொடையினைக் கைமேலேற்றி வண்கை என்றார்.

உயிரா யினவன்பர் தேர்வரக் கேட்டுமுன் வாட்டமுற்ற
பயிரார் புயல்பெற்ற தென்னநம் பல்வளை பான்மைகளாந்
தயிரார்பா னெய்யொடு மாடிய வேகம்பர் தம்மருள்போற்
கயிரா வளையழுந் தக்கச் சிறுத்தன கார்மயிலே. (௩௦)

(இ-ள்.) கார்மயிலே - நீலநிறங்கொண்ட மயில்போலுஞ் சாயலையுடையாளே, உயிராயின - உயிரையொத்த, அன்பர் தேர்வரக்கேட்டு - தலைவரது தேரின்வருகையைக் கேட்டு, முன்வாட்டம் உற்றபயிர்-(மழைவருதற்குமுன்) வாட்டத்தினையடைந்த பயிரானது, ஆர்புயல்-மிக்கமழைநீரினை, பெற்றதென்ன - பெற்றதுபோல, நம்பல்வளை - நமதுபலவாகிய வளைகளை யணிந்த நாயகியினது, பான்மைகளாம் - பாலின் தன்மைகளையடைந்த, தயிர் - தயிரினையும், ஆர்பால் - நிறம்பிய பாலினையும், நெய்யொடு - நெய்யினையும், ஆடிய - அபிஷேகிக்கப்பெற்ற, ஏகம்பர் - திரு ஏகம்பரது, அருள்போல் - கருணைபோல, கையிராவளை - (நீங்கியகாலத்து) கையினின்றுகழன்ற வளையல்கள், அழுந்த - (அன்பர் தேர்வரக்கேட்டுப் பூரித்ததனால் அவ்வளைகள்) அழுந்தவும், கச்சு இறுத்தன - கச்சுகளும் இறுக்கப்பெற்றன.(எ - று.)

(க - ரை.) கற்புற்ற நாயகியும் நாயகனும் ஒருவர்க்கொருவர் அன்புடன் மணங்கலந்த காலத்துத் தலைவன் ஓர் உயிரும் தலைவி ஓர்உடலும் ஒத்தலின், உயிரான அன்பர் என்றார். தலைவன் கார்கால நீங்கித் தந்நகர்க்கணித்தாம் ஓசையைத், தேர்வரக்கேட்டு மனமுவந்தாளாதலின் கேட்டு எனவும் கூறினார்.

"ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே"என்பதனால் காணக்கண்ணும் குளிர்ந்தனெனவும் மற்றையுறுப்புகளுங் குளிர்ந்தனவெனக் கொள்க. முன் என்பது மழை பெய்வதற்குமுன் சென்ற காலத்தையுணர்த்தி நின்றது. புயல் என்பது ஈண்டு ஆகுபெயராய் மழையை யுணர்த்தி நின்றது. பல்வளை அன்மொழித்தொகை. பசுவினிடத்து பஞ்சகௌவ்யமும் தோன்று மென்பார் பாலின்தன்மை தோன்ற பான்மைகளாம் என்றார் பஞ்சகௌவ்யமே யன்றிக் கோரோசனையும் கூட்டிக் கௌவ்யம் ஆவென்பர் ஒருசாரார். இறைவனுக்குரிய அபிடேகப் பொருள்கள் பலவற்றுள்ளும் கௌவ்யமே சிறந்தனவென்பதற்கு 'ஆடினாய் நறுநெய்யொடு பாறயிர் அந்தணர் பிரியாத சிற்றம்பலம்'' என்னும் திருவாக்காலறிக. இது தலைவன் தேர்வரக்கேட்ட தலைவிக்கு நிகழ்ந்த மெய்ப்பாட்டினைக்கேட்ட தோழி, தன்னொத்த மற்றவருடன் கூறியதாம்.

கார்விடை வண்ணத்த னன்றேழ் தழுவினு மின்றுதனிப்
போர்விடைப் பெற்றெதிர் மாண்டா ரெனவண்டர் போதவிட்டார்
தார்விடை யேகம்பர் கச்சிப் புறவிடைத் தம்பொனன்பூண்
மார்விடை வைகல் பெறுவார் தழுவ மழவிடையே. (௯௧)

(இ-ள்.) கார்வண்ணத்தன் - மேகவண்ணனாகிய கண்ணன், அன்று ஏழ் விடை - அன்று ஏழு இடபங்களை, தழுவினும் - தழுவப்பெறினும், இன்று அண்டர் - இப்போது ஆயர்கள், தனி - ஒப்பற்ற, விடைப்போர் - இடபத்தின் போரினை, பெற்று - அடையப்பெற்று, மாண்டார் என - பலர் இறந்தாரென்று கூறி, தார்விடை - மாலையினையணிந்த இடபத்தினை வாகனமாக்கொண்ட, ஏகம்பர் திரு ஏகம்பரது, கச்சிப்புறவிடை - திருக்கச்சியின்கணுள்ள முல்லை நிலத்தின்கண், தம்பொன் - தமது இலக்ஷ்மியை யொத்த குமரியின், நன்பூண் - நல்லபணிகளை, மார்வு இடை - தமது மார்வில், வைகல் பெறுவார்-நிலைக்கப்பெறுவார், மழவிடை - இளமையாகிய விடையினை, தழுவ - (வல்லவர்) தழுவும்படி, போதவிட்டார் - வரவிட்டனர். எ - று.

(க - ரை.) கார்விடை என்பதில் விடை யென்பதனை ஏழ் என்பதனுடன் கூட்டுக. ஏழ் என்பது விடைகளையுணர்த்தி ஆகுபெயராய் நின்றது. விடை தழுவினது நப்பின்னைப்பிராட்டியைக் கண்ணன் மணக்குமுன் நிகழ்ந்தது. இன்று இத்துடன் பொரத்தொடங்கினரில் பலர் மாண்டார் அத்தகைய கொடுவிடை யென்பார் போர்......மாண்டார் என்றார். தலைவியின் முயக்கம் வேண்டுவோர் என்பார் தம்பொன்னன் பூண்......பெறுவார், என்றார். இது, ஏறுகோள் கூறி வரைவுகடாதல் துறை. அதாவது - எதிர்கோள்கூறி வரைவுகடாய தோழி, எம்முடை யையன்மார், அவளுடைய முலைப்பெருமையும், இடைச்சிறுமையுங்கண்டு எம்மூர்க்கண் விடையின் மருப்பைத்திருத்தி விட்டார். இனி அடுப்பன அறியேன் என்றதாம். இனி முல்லை நிலத்தவர் மரபாவது, தம் சேரியின்கண் பெண் பிறக்கின் அப்பெண்ணினைப் பெற்றோர் தம் தொழுவத்து அவருடன் பிறந்த சேங்கன்றுகளை யெல்லாம்

தாமே தம்பாலினையுண்டு களித்து வலுத்து நின்றவைகளைத் தழுவினனுக்கு அக்கன்னிகையைக் கொடுப்பதாம். இதனை "படையார் நெடுங்கண்ணி" என்னுந் திருக்கோவையார் செய்யுளாற் காண்க.

விடைபாய் கொடுமையெண் ணாதுமே லாங்கன்னி வேற்கருங்கட்
கடைபாய் மனத்திளங் காளையர் புல்கொலி கம்பர்கச்சி
மடைபாய் வயலிள முல்லையின் மான்கன் றொடான்கன்றினங்
கடைபாய் தொறும்பதி மன்றிற் கடல்போற் கலந்தெழுமே. (௬௨)

(இ - ள்.) விடைபாய் கொடுமை எண்ணாது - இடபம்பாய்ந்து முட்டுகின்ற கொடுமையினை நினையாது, மேலாம் கன்னி - மேன்மையாகிய கன்னியின், வேல் கருங்கண் - வேல்போலும் கருமையாகிய கண்ணினது, கடை - கடைக்கண், பாய் - பாய்கின்ற, மனத்து - மனத்தினையுடைய, இளங்காளையர் - இளமையாகிய காளையர், புல்கு ஒலி - விடைகளைத் தழுவுகின்ற ஓசையைக்கேட்டு, கம்பர் - திரு ஏகம்பரது, முல்லையின் - முல்லை நிலத்தின்கண், மான்கன்றொடு - மான்கன்றுடன், ஆன்கன்று இனம் - பசுவின்கன்றின் கூட்டங்கள், கடைபாய்தொறும் - அந்நிலத்தினிடை பாய்ந்து செல்லுந்தோறும், கச்சிபதிமன்று - திருக்கச்சிப்பதியின் மன்றங்கள் தோறும், (உண்டாம் ஓசை) கடல்போல் - கடலைப்போல, கலந்து எழும் - சேர்ந்து பெருகும் எ - று.

(கு - ரை.) காளையர் தாம் விடையினைத் தழுவுதன்மேன் மனமுள்ளாராதலின் அதனால் வரும் ஏதத்தினைச் சற்றும் கவனியார் என்பதனான் விடை பாய் கொடுமை யெண்ணாது என்றார். கட்கடைபாய் மனத்திளங்காளையர் என்பதனான் மிக்க வனப்புற்றார் என்பது பெறப்பட்டது. இதுவும் பதியின் பரிசுரைத்ததாம்.

எழுமலர்த் தண்பொழி லேகம்பர் கச்சி யிருங்கடல்வாய்க்
கொழுமணப் புன்னைத் துணர்மணற் குன்றிற் பரதர்கொம்பே
செழுமலர்ச் சேலல்ல வாளல்ல வேலல்ல நீலமல்ல
முழுமலர்க் கூரம்பி னோரிரண் டாலு முகத்தெனவே. (௬௩)

(இ - ள்.) எழு - மணம் எழுகின்ற, மலர் - மலர்கள் நெருங்கிய, தண்பொழில் - குளிர்ந்த சோலைசூழ்ந்த, ஏகம்பர் - திருவேகம்பர்எழுந்தருளியிருக்கும், கச்சி - திருக்கச்சி நகரத்தைச்சேர்ந்த, இருகடல்வாய் - பெரிய கடலினிடத்து, கொழு - கொழுவிய, மணம் - வாசனையமைந்த, புன்னைத் துணர் - கொத்துக்களமைந்த புன்னையின்கண், மணற்குன்றில் - மணற்குன்றின் மேலுள்ள, பரதர் கொம்பே - பரதநிலமாக்களின் பூங்கொம்பையொத்தவளே, செழுமலர் - வளம்பெற்ற தாமரையின் மீதுள்ள, சேல் அல்ல - சேல்மீன் அல்ல, வாள் அல்ல - வாள் அல்ல, வேல் அல்ல - வேலாயுதம் அல்ல, நீலம் அல்ல - நீலமலர் அல்ல, முழு - முற்றுதலமைந்த, மலர் - பரந்த, கூர் அம்பின் - கூர்மையாகிய அம்பினையொப்ப, ஓர் இரண்டு - ஓர்இரண்டு

பொருள்கள், முகத்து - உன் முகத்தினிடம், ஆலும் - அசையாநிற்கும், என் - அவையாவை (எ - று.

(க - ரை.) அ, ஒ, அசைகள். இதுமணற்றடத்துத் தனித்து நின்றாளைக் கண்டான் அவளுடன் பேசும் விருப்புள்ளனாய் உன் முகத்தினிடம் கூர்மையுள்ள இரண்டு அம்புகள் உள அவற்றிற்குக் காரணங் கூறுவாயென அணுகிக்கேட்டலால், இது கிளவி வேட்டலாகும். புன்னைத் துணர்மணற்குன்றிற் பரதர் கொம்பேயென்றதால் கற்பகத்தருவையணைந்த காமவல்லியை யொப்பாளே யென்றங்கூறினர். கூரம்பு என்றதால் அவை, வாளையும் வேலையுமொத்து என்னுடம்பைப் பிளக்சாது தேகத்தினுட் சென்று மனத்தையும் வருத்தியவென்று கூறியதாயிற்று. நெய்தனிலத்துக் கருப்பொருளாதலின் புன்னைகூறினர். மலர்க் கூரம்பு என்றதனாற் கணையொத்தவை யென்றலுமாம்.

முகம்பாகம் பண்டமும் பாகமென் றோதிய மூதுரையை
யுகம்பார்த் திரேலென் னமுயரேகம்பர் கச்சிமுன்னி
ரகம்பாக வார்வி னளவில்லை யென்னின் பவளச்செவ்வாய்
நகம்பாற் பொழிற்பெற்ற நாமுற் றவர்கொள்க நன்மயலே. (௩௪)

(இ - ள்.) அளவு உயர் - சிற்பநூற்படி மாளிகை முதலியவற்றா லுயர்ந்த, கச்சி ஏகம்பர் - திருக்கச்சிக்க ணெழுந்தருளியிருக்கும் திரு ஏகம்பர், அகம்பாகம் - இடத்தின்பாகமும், முகம்பாகம் - அருளிற்பாகமும், பண்டமும் பாகம் - செல்வத்திற்பாகமும், என்று ஆர்வின் - (தருவேன்) என்று ஆசையுடன், ஓதிய மூதுரையை - அவள்பொருட்டு அன்று கூறியபழமொழிகளை, இல்லை எனின் - இல்லையென மறந்து கூறுவாராயின், நகம்பால் - மலையடிவாரத்தில், பொழில் பெற்ற - சோலையினிடத்து அவரது நட்பைக்கொண்டு (நம் வரவை நோக்கும்) பவளச்செவ்வாய் முன் நாம் உற்று - பவளம் போலும் சிவந்த இதழ்களையுடைய நமது தலைவியிடம் நாம் சென்று, என் நலம் (நீ அவரது சொல்லை நோக்குதலில்) பயனென், யுகம் பார்த்து இரேல் - பல நாள்கள் எதிர்பார்த்திராதை, நீர் நன்மயல் ஈர் - நீர் அவரிடங்கொண்ட மையல் ஒழிக எனக்கூறி, அவர்கொள்க - அவரது மயலைத்தணித்து பதிக்கழைத்துச் செல்வோமாக. எ-று.

(கு - ரை.) இது தலைவன் கூறிய சொற்றவறுதல் நோக்கிய தலைவி தோழியரையவன்பால் விடுப்ப அவர் மீண்டும் வந்து தலைவனிலைகூறி பதிக்குத்தலைவியைக் கொண்டு சென்றது.

மயக்கத்த நல்லிருட் கொல்லுஞ் சுறவொ டெறிமகர
மியக்கத் திடுசுழி யோதங் கழிகிளர க்கழித்தார்
துயக்கத் தவர்க்கரு ளாக்கம்பர் கச்சிக் கடலை பொன்னூன்
முயக்கத் தகல்வு பொருள்கொண்க நீர்வரு மூர்க்கஞ்சுமே. (௩௫)

(இ - ள்.) துயக்கத்தவர்க்கு - வருத்தமிகுதியுடையார்க்கு, அருளா - கருணை செய்யாத, கம்பர் - திரு ஏகம்பரது, கச்சி - திருக்கச்சி மாநகர்க்கண், மயக்கத்த - (வழியறியாமல்) மயக்கத்தைத்தருகின்ற, நல் இருள் - மிகுந்த இருளில், கடல் - கடற்கணுள்ளனவாகிய, கொல்லும் சுற வொடு - கொல்லுகின்ற சுறா மீன்களுடன், எறிமகரம் - வாலான் மோதுகின்ற முதலைகள், இயக்கத்து இடு - சஞ்சரித்தலால் உண்டாகிய, சுழி - நீர்ச்சுழிகளும், ஓதம் - வெள்ளமும், கழிகின்ற - மிகுதியு மேலெழுகின்ற, தார்-பத்திகொண்ட, அக்கழி - அக்கழிக்கரை வழியில், கொண்க - நாயக, முயக்கத்து - சேர்க்கைக்கண், அகல்வு பொருள் - சிறிதும் நீங்குதலைப்பொருதவளாய,பொன்னூல் - பொன்மாலையணிந்த எமது தலைவி,நீர்வரும்-நீர்வருகின்ற, ஊர்க்கு- இந்த ஊர்க்கு, அஞ்சும் - அச்சப்படுவாள்,ஆதலின் இவ்வழி வரற்க. எ - று.

(கு - ரை.) இது ஏதங்கூறி மறுத்தல், என்பது,தலைமகன் இரவுவரவு கேட்ட தலைமகள், தனக்கு அவன் செய்ததலையளிமுதலிய நினையாநின்ற வுள்ளத்தளாய், சுறவும், மகரமும் சஞ்சரித்தலாலுண்டாகிய சுழிகளும், வெள்ளங்களும் மிகுந்து பிரவகிக்கும் கழிக்கரை வழியாய் வல்லிருட்கண் வள்ளலை வருகவெனக் கூறற்றகுமோ என ஏதங்கூறி மறுத்துரையா நிற்றல் அதற்குச் செய்யுள்''செழுங்கார் முழவதிர் சிற்றம்பலத்துப் பெருந்திருமால், கொழுங்கான் மலரிடக் கூத்தயர்வோன் கழலேத்தலர் போன், முழங்காரரி முரண் வாரணவேட்டை செல் மொய்யிருள்வாய், வழங்காவதரின் வழங்கென்றுமோ வின்றெம் வள்ளலையே,'' என்பதா னறிக.

மேயிரை வைகக் குருகுணா ராமது வுண்டுபுன்னை
மீயிரை வண்டோ தமர்புகடிய விரிகடல்வாய்ப்
பாயிரை நாகங்கொண் டோன்றொழுங்கம் பர்கச்சிப்பவ்வநீர்
தூயிரை கானன்மற் றாரறி வார்நந் துறைவர்பொய்யே. (௬௬)

(இ-ள்.) குருகு-கொக்குகள்,மேய்இரை-மேய்கின்றஇரைகளாகியமீன்கள், வைக - எதிரிலிருக்க, மதுவுண்டு-கள்ளுண்ட மயக்கத்தால், உணரா-அதனையறியாதனவாய், புன்னை மீ-புன்னைமரத்தின்மீது, அமர்பு - முயற்சியின்றி, அமர்ந்திருத்தலை (யுணர்ந்து,) இரைவண்டு - மிகுந்தவண்டுகள் ஓது - சிரிக்கின்ற, விரிகடல் வாய்-பரந்த கடற்கரைக்கண், இரை-சீறுகின்ற,நாகம்-பாம்பினை, பாய்கொண்டோன் - அணையாகக்கொண்ட திருமால், தொழும் - வணங்குகின்ற, கச்சி - திருக்கச்சியின், கானல் - கானற்கண், பவ்வம் - கடலே, நீர்தூய் - (நீயும் என்னை யொப்ப, கண்ணீரைத்தூவி, இரை - இரைந்து அழுகின்றாய், (அவர்சூள் மறந்துவருதலை நீங்கினார்) நம் துறைவர் பொய் - நமது சேர்ப்பரது பொய்யினை, யார் அறிவார் - எவர் அறியவல்லவர், (எ - று.) மற்று- அசை

(கு- ரை.) இது கடலொடு கூறல், ஒருவழித்தணத்தற் காற்றாது வருந்தா நின்ற தலைவி, கடலை நோக்கி, என்னிடம் வருவதாகச் சூளுரைத்து

வராததுபோல உனக்குஞ்சூளுரைத்து வரா தொழிந்தனரோ நீயும் என்னை யொப்பக் கண்ணீரொத்த அலை நீர் தூஉய் அலரையுந் நூற்றுகின்றாய் நமது தலைவரது பொய்யினையா வரறி வாரெனக் கூறியதாம்.

பொய்வரு நெஞ்சினர் வஞ்சனை யாரையும் போகவிடா
மெய்வரும் பேரரு ளேகம்பர் கச்சி விரையினவ்வாய்க்
கைவரும் புள்ளொடு சங்கின மார்ப்பநஞ் சேர்ப்பர்திண்டே
ரவ்வரு தாமங் களினம்வந் தார்ப்பவணைகின்றதே. (கூஎ)

(இ - ள்.) பொய்வரும் - பொய் பேசுகின்ற, நெஞ்சினர் - மனமுடையார்களையும், வஞ்சனையாளரையும் - வஞ்சகமுடையார்களையும், போகவிடா - அணுகவிடாத, மெய்வரும் - உண்மையாக வளருகின்ற, பெரு அருள் - மிகுந்த கருணை புரிகின்ற, ஏகம்பர் கச்சி - திரு ஏகம்பரது கச்சிப்பதிக்கண், நம் சேர்ப்பர் - நமது தலைவரது, அ திண் தேர் - அந்த வலியதேர், புள்ளொடு - ஆண்டெப்படியும் (பூவை முதலிய) பறவைக்கூட்டங்களுடனும், சங்கு இனம் ஆர்ப்ப - சங்குகளின் கூட்டங்கள் ஒலிக்கவும், கைவரும் - ஒழுங்குபட வருகின்ற, அருந்தாமங்கள் - அரிய யானைகள், ஆர்ப்ப - ஒலிக்கவும், அணைகின்றது - வாராநின்றது. (எ - று.)

(கு - ரை.) இது தேர் வரவு கூறல், என்பது - நற்றாய்க்குச் செவிலி யறத்தொடு நில்லாநிற்ப, அந்நிலைமைக்கட் டலைமகனது தேரொலி கேட்ட தோழி யுவகையொடு சென்று தலைமகளுக்கு அதன் வரவெடுத்துரைத்தல்.

"கள்ளினமார்த்துண்ணும் வண்கொன்றையோன்றில்லைக்கார்க்கடல்வாய்"
புள்ளினமார்ப்பப்பொருதிரையார்ப்பப்புலவர்கடம்
வள்ளினமார்ப்பமதுகரமார்ப்பவலம்புரியின்
வெள்ளினமார்ப்பவரும்பெருந்தேரின்றுமெல்லியலே. என்பதாலறிக.

இன்றுசெய் வோமித னிற்றிரு வேகம்பர்க் கெத்தனையு
நன்றுசெய் வோம்பணி நாளையென் றுள்ளிநெஞ் சேயுடலிற்
சென்றுசெ யாரை விடுந்துணை நாளும் விடாதடிமை
நின்றுசெய் வாரவர் தங்களி னீனெறி காட்டுவரே. (கூஅ)

(இ - ள்.) நெஞ்சே - மனமே, திருஏகம்பர்க்கு - திருஏகம்பருக்கு, பணி எத்தனையும் இன்று செய்வோம் - திருப்பணிமுதலிய அனைத்தையும் இன்றே செய்வோம், நாளை - நாளைக்கு, இதனில் நன்று செய்வோம் - இதனைக் காட்டிலும் நலமாகச் செய்வோம், என்று உள்ளி - என்று நினைத்து, உடலில் சென்று - தேகத்தை யெடுத்து, விடாது - இடைவிடாது, நாளும் அடிமை - நாடோறும் அடிமைத்தொழிலை, நின்று செய்வார் அவர் தங்கள் - நிலைத்துச் செய்வாருடைய, துணை - துணையாக நின்று, நீள்நெறி காட்டுவர் - உயர்ந்த நற்பதத்தைக் காட்டாநிற்பர், செய்யாரை - இவ்வகைப்பணி செய்யாரை) விடும் - கைவிடுவோர். (எ - று.)

(கு - ரை.) ஓ - அசை. இறைவற்கு விடாதுபணி செய்வார்க்குப் புண்ணிய மிகுதலும் செய்யார்க்குப் பாவம் மேலெழுதலும் சாத்திர முறையால் கண் கூடாதலின் செய்வார் நற்பதமடைதலும் செய்யார் அடைதலொழிதலும் நோக்கிச் செய்வார் தங்கள் துணை எனவும் செயாரைவிடும் எனவும் கூறினர்.

காட்டிவைத் தார்தம்மை யாங்கடிப் பூப்பெய்யக் காதல்வெள்ள
மீட்டிவைத் தார்தொழு மேகம்ப ரேது மிலாதவெம்மைப்
பூட்டிவைத் தார்தமக் கன்பது பெற்றுப் பதிற்றுப்பத்துப்
பாட்டிவைத் தார்பர வித்தொழு வாமவர் பாதங்களே. (௬௬)

(இ - ள்.) தொழும் - உலகம் வணங்கும், ஏகம்பர்-திருவேகம்பர், ஏதும் இல்லாத - சிறிதும் பயனில்லாத, யாம் - நாம், தம்மை - தமக்கு, கடிபூ - மணமுள்ள மலரை, பெய்ய - பரித்து அருச்சிக்க, காட்டி வைத்தார் - புலப்படுத்தி வைத்தனர், காதல் வெள்ளம் - ஆசை வெள்ளத்தினை, ஈட்டி வைத்தார் - மிகச்செய்தவர், எம்மை - எமக்கு, பூட்டிவைத்தார் - (அன்பு) பூட்டி வைத்தவர், தமக்கு அன்புபெற்று - தம்மிடத்து அன்பினையடைந்து, பதிற்றுப்பத்து - நூறு செய்யுட்களை, பாட்டி வைத்தார் - பாடும்படி வைத்தவர், அவர் பாதங்கள் பரவி - அத்தகையார் திருவடிகளைப் பரவி, தொழுவாம் - வணங்குவாம். எ - று.

(கு - ரை.) என்செயலாவது சிறிதுமின்று அவன் தூண்டுவித்தால் அல்லாது செய்யேன் என்பார். காட்டிவைத்தார் எனப் பிறவினைப்படுத்திக் கூறினர். கடிப்பூ வென்றார் மணமிலா மலரையடியிற் சூடப்பெறாதாதலின் என்க. யானுடம்பெய்தினும் அதிலடைய வேண்டிய பயன் சிறிது மடைந்திலேன் அவ்வுடம்பாலும் அவ்வுடம்பு கொண்ட என்னானும் சிறிதும் பயனின்று என்பார் ஏதுமிலா எம்மை என்றார். இங்ஙனஞ் செய்தாற்கு நான் செய்யுங் கைம்மாறு பிறிதேதுமின்று நான் செய்வது அவன்பொன்னடி வணக்கமே யென்பார் தொழுவாமவர் பாதங்களே என்றார்.

பாதம் பரவியோர் பித்துப் பிதற்றிலும் பல்பணியு
மேதம் புகுதா வகையரு ளேகம்ப ரேத்தெனவே
போதம் பொருளாற் பொலியாத புன்சொற் பனுவல்களும்
வேதம் பொலியும் பொருளா மெனக்கொள்வர் மெய்த்தொண்டரே.

(இ - ள்.) பாதம்பரவி - அவன் திருவடிகளைத் தொழுது, ஓர்பித்து - ஒருபைத்திய வாசகத்தை, பிதற்றினும், பலமுறை கூறினும், பல்பணியும் - அவன்செய் செயலினைத்தையும், ஏதம்புகுதாவகை - குற்றப்படாவகை, ஏத்தெனவே - தம்மைத் துதித்ததாகக் கொண்டு, அருள் - கருணைசெய்கின்ற, ஏகம்பர், திருவேகம்பர், மெய்த்தொண்டர் - அவனது உண்மை யடியவர்கள்

பொருளால் - பொருள் பொலிவால், போதம் பொலியாத - ஞானம் விளங்காத, புல் சொல் - அற்பமாகிய சொற்கள் சேர்ந்த, பனுவல்களும் - நூல்களையும், வேதம் பொலியும் - வேதத்தில் விளங்கும், பொருள் ஆம் - பொருளாகும், எனக்கொள்வர் - என்று ஏற்றுக்கொள்வர். எ - று.

(கு - ரை.) அவனடியவர்கள் அவனடிகளை வணங்கியவனை வாழ்த்தாதுவையினும் அவற்றை யவனை வணங்கிய வணக்கமாகக் கொண்டு அருள்செய்யுங் கருணை நிதியாதலின் பாதம்..... அருள் ஏகம்பர் என்றார். அவனடியர்களோ எனின் அவனை நோக்கிப் பன்முறை கூறியவை பித்தாலாய சொற்கள் எனினும் அவற்றை ஞானத்தாற் பொலிந்த வேதநூலாக்கொண்டுவப்பர் என்பார், போதம் .....மெய்த்தொண்டரே, என்றார். பித்து என்பது ஆகுபெயர். பிதற்றல் பித்த மிகுதியால் நாம் இன்ன கூறுகிறோமென அறியாது, கூறியதனையே பன்முறை கூறுதல். கரத்தாலும் சிரத்தாலும் வாக்காலும் வணங்கலும், வலங்கொளலும், நினைத்தலும் துதித்தலும் என்பார் பல்பணியும் என்றார். அடியார்செய்த பணிகள் ஒன்றுஞ் சிதறுறாவகைக் கொள்பவன் என்பார் ஏதம்புகுதாவகை எனவும், கூறினார் வேதத்திற் கூறப்படும் பொருள் இறைவன் புகழாதலின் அடியவர் ஏத்திய பாமாலைகளும் அன்னதின்பாற்படும் என்பார் வேதம் பொலியும் பொருளாம் எனக்கொள்வர் எனவும், அவ்வகை பரிபாகிகளல்லார்க்கு என்றாற் கூறப்படும் இஃது இனிமைதராதென்பார் மெய்த்தொண்டரே எனவுங் கூறினார்.

திருச்சிற்றம்பலம்.

திருஏகம்பமுடையார் திரு அந்தாதி

முற்றிற்று.

மெய்கண்டான் பொன்னடிவாழ்க.

உ

கணபதிதுணை.

ஐந்தாவது

திருவொற்றியூர் ஒருபாஒருபஃது.

மூலமும் உரையும்.

திருச்சிற்றம்பலம்.

நேரிசை யாசிரியப்பா.

இருநிலமடந்தை யியல்பினி னுடுத்த
பொருகடன்மேகலை முகமெனப் பொலிந்த
வொற்றிமாநக ருடையோயுருவின்
பெற்றியொன்றாப் பெற்றார்யாரே
மின்னியமின்னின் பிறக்கநின் சடையே
மன்னியவண்டநின் சென்னியின்வடிவே
பாவகன்பரிதி பனிமதிதன்னொடு
மூவகைச்சுடருநின் னுதனேர்நாட்டந்
தண்ணொளியாரந் தாரகணமே
விண்ணவர்முதலா வேறாரிடமாக்
கொண்டுறைவிசும்பே கோலநின்னாக
மெண்டிசைதிண்டோ ளிருங்கடலுடையே
யணியுடையல்குலு மவனிமண்டலமே
மணிமுடிப்பாந்தணின் றாளிணைவழக்கே
யொழியாதோடிய மாருதமுயிர்ப்பே
வழுவாவோசை முழுதுநின்வாய்மொழி
வானவர்முதலா மன்னுயிர்பரந்த .
வூனமின்ஞானத் தொகுதிநின்னுணர்வே
நெருங்கியவுலகினி னீர்மையுநிற்றலுஞ்
சுருங்கலும் விரிதலுந் தோற்றநின்றொழிலே

யமைத்தலுமழித்தலு மாங்கதன்முயற்சியு
மிமைத்தலும்விழித்தலு மாகுநின்னியல்பே
யென்றிவைமுதலா வியல்புடைவடிவினே
டொன்றியதுப்புரு விருவகையாகி
முத்திறக்குணத்து நால்வகைப்பிறவி
யத்திறத்தைம்பொறி யறுவகைச்சமயமோ
டேழுலகாகி யெண்வகைமூர்த்தியோ
டூழிதோறூழி யெண்ணிறந்தோங்கி
யெவ்வகையளவினிற் கூடிநின்
றவ்வகைப்பொருளுநீ யாகியவிடத்தே. (௧)

(இ - ள்.) பொருகடல் - மோதுகின்றகடலினை, மேகலை - மேகலாபரணமாக, இயல்பினின் - இலக்கண மமைய, உடுத்த - பூண்ட, இருநிலமடந்தை - பெரிய பூமிதேவிக்கு, முகமென - முகம் என்று கூறும்படி, பொலிந்த - விளங்கின, ஒற்றிமாநகர் - திருவொற்றிமாநகரினை, உடையோய் - திருக்கோயிலாக் கொண்டெழுந்தருளியிருப்போனே, நின்சடை - தேவரீரது சடைமுடி, மின்னிய மின்னின் - மின்னலைச் செய்கின் மின்னலினது, பிறக்கம் - ஒளியாகும், நின் சென்னியின் வடிவு - உனது திருமுடியின் வடிவம், மன்னிய அண்டம் - எல்லா வுயிர்களும் நிலைபெற்ற அண்டங்களாம், பாவகன் - அக்னி, பரிதி - சுடர்க்கடவுள், பனிமதி - குளிர்ந்த சந்திரன், தன்னொடு - இவற்றுடன், மூவகைச்சுடரும் - மூன்று வகைப்பட்ட சுடர்களும், நின்னுதல் நேர் நாட்டம் - தேவரீரின் நெற்றியிற் பொருந்திய திருக்கண்களாம், தாராகணம்-நக்ஷத்ரகூட்டங்கள், தண் ஒளியாரம் - குளிர்ந்த ஒளியினையுடைய பணி மாலையாம், விண்ணவர் முதலானோர் - தேவர் முதலிய மற்றவர்களும், இடமாக கொண்டு - தமக்கு உறைவிடமாகக் கொண்டு, உறை - வசிக்கின்ற, விசும்பு - வானுலகம், கோலம்-அழகுள்ள, நின் ஆகம் - தேவரீரது திருமேனியாம், எண்திசை - எட்டுத்திக்குகளும், திண்தோள் வலியமைந்த தோள்களாம், இருகடல் - பெரியகடல், உடையே - உனது திரு ஆடையாம், அணிஉடை அல்குலும் - அழகு கொண்ட அல்குலும், அவனி மண்டலமே - பூமியாம், மணிமுடிப்பாந்தள் - இரத்தின கிரீடமணிந்த பாதாள உலகம், நின்தாள் இணை-உனது இரண்டு திருவடிகளின், வைக்கே - வழங்குமிடமாம், ஒழியாது - நிலைபெறாது, ஒடிய - ஓடின, மாருதம் - காற்று, உயிர்ப்பு - உனது, உச்வாசநிச்வாசங்களாம், வழுவா ஓசை- (முழுதும் உலகத்து) தவறாது உண்டாம் ஒலி முழுமையும், நின்வாய் மொழி - தேவரீரது திருவாக்காம், பரந்த - அகன்ற, வானவர் முதலா - தேவர் முதலாகிய மன் உயிர் - நிலைபெற்ற ஆன்மாக்களிடத்து, (உதிக்கும்) ஊனம் இல்ஞானத்தொகுதி - குற்றம் இல்லாத அறிவுணர்ச்சியின் கூட்டம், நின்உணர் - உனது பேர் அறிவாம், நெருங்கிய - அடுக்காகச் செறிந்த, உலகினின்-உலகத்தின்,

நீர்மையும் - குணமும், நிற்றலும் - நிலைபேறும், சுருங்கலும் - ஒடுக்கமும், விரிதலும் - பரத்தலும், தோற்றமும் - உண்டாதலும், நின் தொழில் - தேவரீரது தொழில்களாம், அமைத்தலும் - சிருட்டித்தலும், அழித்தலும் - சங்கரித்தலும், அதன் முயற்சியும் - அதனது முயலுமையும், இயல்பு - உனக்கு இயல்பாக உண்டாகின்ற, நின் இமைத்தலும் விழித்தலுமாகும் - உனது திருவிழிகளின் இமைப்பும் விழிப்புமாம், என்று இவை முதல் ஆக - என்றுகூறிய இவற்றினை முதலாகவுடைய, இயல்பு உடைய - இலக்கணத்தினை உடைய, வடிவினோடு - பல வடிவங்களுடன், ஒன்றிய - பொருந்திய, துப்பு உரு - பவளம்போலும் திருவுரு, இருவகை ஆகி - சத்தியுஞ்சிவமும் என்னும் இருவகைப்பட்டு, மூத்திற குணத்து - மூன்றுவகைப் பட்ட சத்வம், ரஜசு தமஸ் என்னும் குணத்தினையுடைய, நால்வகைப்பிறவி - (அண்டசம், உற்பிசம், சுவேதசம், சராயுசம்) என்னும் நான்குவகைப் பிறவியில், அத்திறத்து - அத்தகுதியினையுடைய, ஐம்பொறி - ஐம்புலன்களாய், அறுவகை சமயமோடு - அறுவகைச்சமயங்களுடன், எழு உலகு ஆகி - ஏழுஉலகங்களுமாகி, எண்வகைமூர்த்தியோடு - எட்டுவகை மூர்த்தங்களுடன், ஊழிசோறூழி - பலவூழிக்காலங்கள், எண் இறந்து - அளவுகடந்து, ஓங்கி - உயர்ந்து, எவ்வகை அளவினில் - எவ்வகை (பெரிய சிறிய) அளவுற்றபொருள்களாலும், கூடிநின்று - சேர்ந்து நிலைபெற்று, அவ்வகைப்பொருளும் - (அவ்வகையாகிய எல்லாப்பொருள்களும், நீ ஆகிய இடத்து - நீயாய் விளங்குகின்ற இடத்து, உருவின்பெற்றி - தேவரீரது திருமேனியின் தன்மையை, ஒன்றாய்ப்பெற்றோர் - ஒன்றாகப் பெற்றுத் தியானித்தோர், யாவர் - எவர். எ - று. ஆங்கு, வ, அசைகள்.

(கு - ரை.) ஒற்றிமாநகரைத் திருக்கோயிலாக்கொண்டோனே, தேவரீரது திருமுடி முதலாகத்திருவடியளவும் அண்டமுகமும் பாதலமுமாயிருத்தலின் உம்மை யெவ்வகையறிந்து வுலகத்தவர் பூசிப்பர் என்றபடியாம். இது, இறைவனது விராட்டின் திருவுருக்கூறியதாம். அண்டம், எனப்பொதுபடக்கூறியதால் மேலுள்ள எழுவகை யண்டங்களையுங்கொள்க. இவரவற்குக்கண் மூன்று முச்சுடராதலினீண்டுப் பாவகன் பரிதி பனிமதிமூன்றையுங்கூறினர். தாராகணம் பன்னிறம்படுதலின் அவ்வகை வேறுபட்ட பன்மணிகள் கொண்டிழைத்த மணியாரமென்பார், ஆரம் தாராகணமே என்றார். இறைவன் திகம்பரனாதலின் எண்டோளையும் எட்டுத்திக்காகக்கூறினார் இறைவன் அஷ்டமூர்த்தங்களாகிய நிலம், நீர், நெருப்பு, நிலாப்பகலோன், நீள்விசும்பு பவனனான்மா என்றிவையாயுள்ளான் என்பார் எண்வகை மூர்த்தியென்றார் பாந்தள்என இடத்துறை பொருளையிடமாகத் தானியாகுபெயராற் கூறினார். வழுவாவோசை என்றதனால் அவைவேத வொலியென்றலுமாம். வானவர் மக்கள் நரகர் விலங்குபுள் புன்மரமேயீறாக ஆறறிவுமுதல் ஓரறிவாதியாக அறிவுறுபொருளனைத்தும் தேவரீரது போதம்பதிந்த பொருள்கள் என்பார் நின் உணர்வு என்றார். அவன் இயங்கினனைத்துமியங்கலுமவனியங்காதுறினனைத்தும் வழக்கொழிதலுமுடைமை நோக்கி நெருங்கிய வுலகினீர்மையுமெனத் தொடங்கி, ஆகுநின்னியல்பே என்றார். இதனை, "கண்

ணுதல்யோகிருப்பக்காமனின்றிட வேட்கைக்கு எண்ணியதே வராதிமேலிந் தமையோர் மாறுனெண்ணி வேண்மகனையேவவெரிவிழிதித்திமகான்பெற்ற பெண்ணினைப்புணர்ந் துயிர்க்குப்பேரின்ப மளித்ததோரார்" என்பதனாலும், "போகியாயிருந் துயிர்க்குப்போகத்தைப் புரிதலோரார், வேகியானூற்போற் செய்த வினையினை வீட்டலோரார், யோகியா யோகமுத்தியுத வுதலதனை யோரார், ஊகியா மூடரெல்லா மும்பரில் ஒருவன் என்பர்." என்பதனாலும் அறிக இவ்வகை விராட்டுருவாய் தேவரீர் அடியர்பொருட்டு இச்சையால் சத்திசிவம் என்னும் இருவகையாகச் சகளத்திருமேனியையந் தீரென்பார் துப்புரு இருவகையாகி யென்றார்.

இடத்துறைமாதரோ டிருடம்பென்றும்
நடத்தினைநள்ளிரு ணவிற்றினையென்றும்
புலியதளென்பொடு புனைந்தோயென்றும்
பலிதிரிவாழ்க்கை பயின்றோயென்றும்
திருவமர்மாலொடு திசைமுகனென்றும்
அருவமுமுருவமு மானாயென்றும்
உளனேயென்று மிலனேயென்றும்
தளரானென்றுந் தளர்வோனென்றும்
ஆதியென்று மசோகினனென்றும்
போதியிற்பொலிந்த புராணனென்றும்
இன்னவைமுதலாத் தாமறியளவையின்
மன்னியநூலுடன் பன்மையுண்மயங்கிப்
பிணங்குமாந்தர் பெற்றிமைநோக்கி
அணங்கியவவ்வவர்க்கவ் வகையாகி
யடைபற்றிய பளிங்குபோலும்
ஒற்றிமாநகருடை யோயுருவே. (௨)

(இ - ள்.) ஒற்றிமாநகர் உடையோய்-திருவொற்றிமாநகரினைத்திருக் கோயிலாக்கொண் டெழுந்தருளியிருப்போனே, உரு-தேவரீரது திருவுருக் கள், இடத்துஉறை - வாமபாகத்துறையும். மாதரோடு-பிராட்டியுடன் கூடி, இருஉடம்பு என்றும் - இரண்டு திருமேனி எனவும், நள்ளிருள் - சர்வசங் காரகாலத்துப் பேரூழிநடுயிரவின் கண், நடத்தினை - ஊழி நடனத்தினை, நவிற்றினை யென்றும் - செய்தாயெனவும், புலி அதள்-புலித்தோலினை, என் போடு - எலும்புடன் சேர்த்து, புனைந்தோய் என்றும் - தரித்தனையென வும், பலிதிரி - பிச்சைபூண்டு திரிகின்ற, வாழ்க்கை - வாழ்தலில், பயின் றோய் என்றும் - பழகினவன் எனவும். திரு அமர் - திருமகள் அமர்ந்த, மா லோடு - விஷ்ணுமூர்த்தியுடன், திசைமுகன் என்றும் - திக்குகளை முகமா க்கொண்ட) பிரமன் எனவும், அருவமும் - அருவத்திருமேனியும், உருவ மும் - உருவத்திருமேனியும், ஆனாய் என்றும் - ஆகியிருந்தாய் எனவும்,

உளனே என்றும் - எவ்விடத்தும் உள்ளவன் எனவும், இலனே என்றும் - எங்கணும் இல்லாத சூனியப்பொருள் எனவும், தளரான் என்றும் - தளராதவன் என்றும், தளர்வோன் என்றும் - தளர்வுறுவோன் எனவும்! ஆதி என்றும் - எப்பொருட்கும் இறை எனவும், அசோகினன் என்றும் - அசோகத்தடியிலமர்ந்த சினனென்றும், போதியில் - போதிவிருக்ஷமாகிய அரசடியில், பொலிந்த - விளங்கிய, புராணன் என்றும் - முன்னவனாகிய ஆதிபுத்தன் எனவும், இன்னவைமுதலாக - இவ்வகையாகக் (கூறிய) பன்மைநூலுடன் - பலவகைப்பட்ட மதநூல்களுடன்; தாம் அறி அளவையின் - தாமறிந்த அளவினால், உள்மயங்கி - மனமயங்கி, பிணங்கு மாந்தர் - மாறுகொண்ட (மதத்தைச்சேர்ந்த) மனிதர்களின், பெற்றிமைநோக்கி - தன்மைகண்டு, அணங்கிய - வருந்துகின்ற, அவ் அவர்க்கு - அந்தந்தச் சமயத்தவர்க்கு, அவ்வவையாகி - அவர்கள்கொண்ட திருவுருக்களேயாகி, மன்னிய - பொருந்தியிருக்கின்றனை, (ஆதலால் அத்திருவுருவம்) அடைபற்றிய - இலையினையடைந்த, பளிங்குபோலும் - பளிங்குகல்லையொக்கும். எ - று. ஏ - அசை.

(கு - ரை.) ஒற்றிமா நகருடையோய் உம்மைச்சமயத்தோரிற் சிலர் பலவகைப்படமொழிந்து பலவுருக்கொண்டனை யென்றும் உருவிலியென்றும் கூறினும் கூறுவோர் அவ்வவர்க்கு அந்தந்தத்திருவுருக்களுடன் கூடியனுக்கிரகிக்கின்றாயாதலின் அது, பாசிலையினையடைந்த பளிங்கு அந்நிறங்கொண்டு விளங்கி அது நீங்கின் தனதுண்மை நிறமாகிய வெண்ணிறத்தினை யடைதலை யொக்கும் என்பதாம்; இறைவனும் இறைவியமென்பார் இடத்துறை மாதரோ டொருடம்பெனவும், இது சிவசத்திகளின் இயக்கமே உலகம் என்னும் வாதிகளை நோக்கியும், நடத்தினை நள்ளிருள் நவிற்றினை யென்றதனான் "அனைத்துஞ் சூனியம் சத்தெதிராதலின் இறைவனொருவனே மற்றவரில்லை யென்னும் சைவரைநோக்கியும், புலியதளென்பொடு பொலிந்தோ யென்றதனாற் காளாமுக மூர்த்தியாயும், விஷ்ணுவாகியும், பிரமனாகியும், பலிதிரி வாழ்க்கையினோ யென்றதனாற் காபாலமூர்த்தியாகியும், நிற்பதைக் கூறினார். சகநிஷ்களவுருவமும் அவன் திருமேனியென்பார் அருவமும் உருவமும் ஆனாய் என்றும், அசோகினன் என்றதனான் சினனாகியும், போதியிற் பொலிந்த என்றதனாற்புத்தன் எனவும், கூறினார். இவைமுதலிய சமயத்தவர்க்கு அவ்வத்தேவராய் நின்றருள் செய்வோன் என்பார் அவ்வவர்க்கவ்வகையாகி யெனவுங்கூறினார்.

உருவாமுலகுக் கொருவனாகிய
பெரியோய்வடிவின் பிறிதிங்கின்மையின்
எப்பொருளாயினு மிங்குளதாமெனின்
அப்பொருளுனக்கே யவயவமாதலின்
முன்னியமூவெயின் முழங்கெரியூட்டித்
தொன்னீர்வையகந் துயர்கெடச்சூழ்ந்ததும்
வேள்விமூர்த்திதன் றலையினைவிடுத்ததும்
நீள்விசும்பாளிதன் றோளினை நெரித்ததும்

ஓங்கியமறையோற் கொருமுகமொழித்ததும்
பூங்கணைவேளைப் பொடிபடவிழித்ததும்
திறல்கெடவரக்கனைத் திருவிரலூன்றத்ததும்
குறைபடக்கூற்றினைக் குறிப்பினிலடர்த்ததும்
என்றிவைமுதலாவாள் வினையெல்லாம்
நின்றுழிச்செறிந்தவை நின்செயலாதலின்
உலவாத்தொல்புக ழொற்றியூர
பகர்வோர்நினக்கு வேறின்மைகண்டவர்
நிகழ்ச்சியினிகழி னல்லது
புகழ்ச்சியிற்படுப்பரோ பொருளுணர்ந்தோரே. (௫

(இ-ள்.) உருவாம் - உருவமாகக் காணப்படும், உலகுக்கு - உலகத்திற்கு, ஒருவனாகிய - ஒருவனாய் நிலைபெற்ற, பெரியோய் - பெரியோனே, வடிவின்பிறிது - தேவரீரது திருமேனியொழிந்த வேறுபொருள், இங்கு இவ்வுலகத்தின்கண், இன்மையின் - இல்லாமையான், எப்பொருள் ஆயினும் - எவ்வகைப்பொருளாயினும், இங்கு - இவ்வுலகத்து, உளதாம் எனின் - இருக்கின், அப்பொருள் - அந்தப்பொருள், உனக்கே - தேவரீர்க்கே, அவயவம் - திருவுறுப்பாம், ஆதலின் - ஆகையால், மூன்னிய மூவெயில்-மதிக்கத்தக்க திரிபுரங்களை, முழங்குஎரி ஊட்டி - ஒலிக்கின்றதீக்கிரையாக்கி, தொன்னீர்-மிக்க நீராற்சூழ்ந்த, உலகம் - உலகத்தினை, துயர்கெட - துயரினின்று நீங்க, சூழ்ந்ததும் - ஆராய்ச்சி செய்ததும், வேள்விமூர்த்தி தன் - எஞ்ஞமூர்த்தியினது, தலையினை - தலையை, விடுத்ததும் - நீங்கச்செய்ததும், நீள்விசும்பாளி தன் - பெரிய சுவர்க்கத்தை ஆள்வோனாகிய இந்திரனது, தோளினை - தோள்களை, நெரித்ததும - நெரியச்செய்ததும், ஓங்கிய-உயர்ந்த, மறையோற்கு-பிரமற்கு, ஒருமுகம் - ஒருமுகத்தினை, ஒழித்ததும் - நீக்கியதும், பூகணை-அழகிய புஷ்பபாணத்தைக்கொண்ட, வேளை - மன்மதனை, பொடிபட - சாம்பராகும்படி, விழித்ததும் - விழித்தெரித்ததும், அரக்கனை - இராவணனது திறல்கெட - வலிமைகெடும்படி, திருவிறல் உறுத்ததும்-திருவிரலால் ஊன்றியழியச்செய்ததும், கூற்றினை - யமனை, குறைபட - வலிமைகுன்றும் வகை, குறிப்பினில் - பாதத்தைவீசியக்குறிப்பினால், அடர்த்ததும் - உதைத்துவென்றதும், என்று இவை முதலா - என்று இவை முதலாகிய, ஆள்வினையெல்லாம் - முயற்சிகள் எல்லாம், நின்றுழி-தேவரீர் இருந்தஇடத்திலிருந்தே, செறிந்தவை - உண்டாயினவையாம், நின்செயல் ஆதலின் - தேவரீரது செயல்களாம் ஆதலால், உலவா - கெடாத, தொல்புகழ்- பழையதாகிய புகழினையுடைய, ஒற்றியூர் - திருவொற்றியூரினைத் திருக்கோயிலாக்கொண்டோனே, பகர்வோர் - உன்னைப்புகழ்வோர், நினகு - தேவரீருடைய செறிவுக்கு, வேறின்மை-நீக்கமின்மையை, கண்டவர்-கண்டறிந்தஞானநிலையுடையோர் நிகழ்ச்சியின் - தேவரீரது இயக்கத்தினால், நிகழின் அல்லது - உலகம்புடைபெயர்ந்து இயங்குமன்றி, (வேறுகாரியத்தாலாமென,) புகழ்ச்சியில் - புகழ்த

லில், படுப்பரோ - தம்மை மூழ்குவிப்பரோ, பொருள் உணர்ந்தோரே - பொருளினையறிந்துகொண்டோர், (எ - று.) ஏ - அசை.

(கு - ரை.) இறைவனே உலகத்துப் பொருள்களனைத்தும் தேவரீர்க்கு அவயவமாதலாலும் நீர்செய்த செயலனைத்தும் நீர் நின்றுழிநிகழ்ந்தவை யாதலாலும் உம்மைப்புகழ்ந்து பேசுவோர் உமது வியாபகத்தை யறிந்தவராதலாலும் எல்லாம் உமது செயலென அறிவரே·யன்றித் தாமெனச் செருக்கார் என்ற படியாம்.

பொருளுணர்ந்தோங்கிய பூமகன்முதலா
இருடுணையாக்கையி லியங்குமன்னுயிர்
உருவினுமுணர்வினு முயர்வினும்பணியினும்
திருவினுந்திறலினுஞ் செய்தொழில்வகையினும்
வெவ்வேறாகி வினையொடும்பிரியா
தொவ்வாப்பன்மையுண் மற்றவரொழுக்கம்
மன்னியவேலையுள் வான்றிரைபோல
நின்னிடையெழுந்து நின்னிடையாகியும்
பெருகியுஞ்சுருங்கியும் பெயர்ந்துந்தோன்றியும்
விரவியும்வேறாய் நின்றனைவிளக்கம்
ஓவாத்தொல்புக ழொற்றியூர
மூவாமேனி முதல்வநின்னருள்
பெற்றவரறியி னல்லது
மற்றவரறிவரோ நின்னிடைமயக்கே (௪)

இ - ள்.) பொருள் உணர்ந்து - உண்மைப்பொருள் (இன்னதென்று) அறிந்து, ஓங்கிய - உயர்ந்த, பூமகன் முதலாக - பிரமனே முதலாக, இருள் துணை - இருளினையொத்த, யாக்கையில் - தேகத்தில், இயங்கும் - இயங்காநின்ற, மன்உயிர் - நிலைத்த ஆன்மாக்கள், உருவிலும் - உருவத்தாலும், உணர்வினும் - உணர்வாலும், உயர்விலும் - பெருமையாலும், பணியிலும் - செயலாலும், திருவிலும் - செல்வத்தாலும், திறலினும் - வன்மையாலும், செய்தொழில்வகையிலும் - செய்கின்ற செய்கைவகையாலும், வினையொடும்பிரியாது - தொழிலினின்றும் வேறுபடாது, வெவ்வேறு ஆகி - வேறுவேறாகி, ஒவ்வா - ஒன்றையொன்று ஒவ்வாத, பன்மையுள் - பலபடச்செறிந்தவற்றுள் மற்றவர் ஒழுக்கம் - அவ்வுயிர்களின்ஒழுகுதல், மன்னியவேலையுள் - நிலைத்த கடலுள், வான்திரைபோல - உயர்ந்த அலைபோல, நின் இடையெழுந்து - தேவரீரிடம் தோன்றி, நின்னிடை ஆகியும் - நின்னிடைவளர்ந்தும், பெருகியும் - விரிந்தும், சுருங்கியும் - ஒடுங்கியும், பெயர்ந்தும் - மீண்டும், தோன்றியும் - சிருட்டிப்பட்டும், விரவியும் - நெருங்கிநின்றும், வேறாய்நின்றனை - வேறாகநின்றாய், விளக்கம் ஓவா - விளங்குதல் ஒழியாத, தொல்புகழ் - பெரும்புகழையுடைய, ஒற்றியூர்-திருவொற்றியூரினைத்திருக்கோயிலாக் கொண்

டெழுந்தருளியிருப்போனே, மூவாமேனி - கெடாத திருமேனியையுடைய முதல்வ - தலைவனே, நின்னிடைமயக்கு - உன்னிடந்தோன்றிய உலகமயக்கத்தை, நினதருள்பெற்றவர் - உனது திருவருள் விளக்கம் பெற்றவர், அறியின் அல்லது - அம்மயக்கமிற்றிதென்று) அறிந்தாலறிவரே அல்லது, மற்றவர் - (நின்னருளைப்பெறாத) பிறர், அறிவரோ - தேவரீரது தன்மையையறியவல்லரோ-அறியார் - (எ - று.). ஏ-அசை.

(கு-ரை.) பிரமன் இறைவனது தன்மையினை யறிய பறவையாய் விண் பறந்தறியாதடங்கிப்பின்னர் இறைவன்வெளிப்படக்கண்டு பணிந்தானாதலின் பொருள் உணர்ந்து ஓங்கிய பூமகன் என்றார். உயிர்கள், குணத்தானும் செயலானும்உருவானும் ஒன்றையொன்று ஒவ்வாவென்பார் மற்றுயிர்........வெவ்வேறாகி - எனவும், வேலையுட்டிரை, அதனுளொழுந்து சற்றுநிலைத்து அதனிடையொடுங்குமாப் போல் உலகம்உன்னிற்றோன்றியுன்னின்னிலைத்துன்னிடையொடுங்குமென்பார், மன்னியவேலையுள்........விரவியும் என்றார். அங்ஙனம் உயிர்களைப் பிரியாது அணுகி நின்றும் நீ அவற்றிற்கு வேறாயிருக்கின்றாய் உனது விசித்ர சக்தியறியக்கூடியதன்று என்பார், வேறாய் நின்றனை யெனவும், உனது உண்மையினையுன்னருள் பெற்றாரன்றி மற்றவாரறியார்என்பார் நின்னருள். ... மற்றவர் அறிவரோ, எனவுங் கூறினார்.

இது, இறைவன் - உலகத்து நிறைந்ததன்மையும், அவன் பஞ்சகிர்த்யம் செய்தலும். அதற்கு அன்னியமாயிருத்தலும்; விரவியும் வேறன்மையாயிருத்தலுமாகிய கிருத்ய வேறுபாடுகளை யவனருளால் அவன் செயலறிந்தார் உணர்வதன்றி மற்றோராறியார் என்று கூறியதாம்.

மயக்கமில்சொன்னீ யாயினுமற்றவை
துயக்கநின்றிற மறியாச்சூழலும்
உறைவிடமுள்ள மாயினுமற்றது
கறைபடவாங்கே கரந்தகள்ளமும்
செய்வினையுலகினிற் செய்வோயெனினும்
அவ்வினைப்பயனீ யணுகாவண்மையும்
இனத்திடையின்பம் வேண்டினிற்பணிவோர்
மனத்திடைவாரி யாகியவனப்பும்
அன்பினடைந்தவர்க் கணிமையுமல்லவர்ச்
சேய்மையு நாடொறும்
என்பினையுருக்கு மியற்கையவாதலிற்
கண்டவர்தமக்கே யூனுடல்கழிதல்
உண்டெனவுணர்ந்தன மொற்றியூர
மன்னியபெரும்புகழ் மாதவ
துன்னியசெஞ்சடைத் தூமதியோயே. (௫)

(இ - ள்.) மயக்கம் இல் - மயங்குதலில்லாத, சொல்நீ ஆயினும் - சொல்லாகிய வேதம் - நீயேயாயினும், அவை - அச்சொற்களாகிய வேதம், தயக்க - தளர்ச்சியுறும்வகை, நின்திறம் - உனது வன்மையை. அறியார் சூழலும் - அறியா இடமும், உறைவிடம் - நீயுறையுமிடம், உளம் ஆயினும் - மனமேயெனிலும், அதுகறைபட - அது (காணுது குற்றமுறும்வகை, ஆங்கே - அம்மனத்தில், கரந்த - மறைந்திருக்கும், கள்ளமும் - களவும், செய்வினை-செய்கின்ற செயல்களை, உலகினில் - உலகத்து, செய்வோய் - செய்பவன், எனினும் - என்றாலும், அவ்வினைப்பயன் - அத்தொழில்களின் பயன், நீ அணுகா நீநெருங்காத, அணிமையுங் - நெருக்கமும், இனத்திடை-அடியவரினத்து, இன்பம்வேண்டி - சிவாநந்தப்பெருவாழ்வை விரும்பி, நிற்பணிவோர் - உன்னை வணங்குவோர்களது, மனத்திடை - மனத்தில். வாரியாகிய - ஆனந்தக்கடலாகிய, வனப்பும் - பேரழகும், அன்பினின் - அன்பினால், அடைந்தவர்க்கு-தேவரீரை யடைந்தவர்க்கு, அணிமையும் - நெருங்கியருள்புரிதலும், அல்லவர்ச் சேய்மையும் - அணுகாதவர்க்குத் தூரமாதலும், நாள்தொறும் - எக்காலத்தும், என்பினை உருக்கும் - எண்ணினோர் உடலினையுருக்கும், இயற்கைய - இயற்கையினையுடையன, ஆதலின் - ஆதலால், கண்டவர்க்கே - இப்பேராநந்தத்தை மனத்தாற்கண்டவர்க்கே. ஊன்உடல் - இறைச்சியாலாய உடம்பு, கழிதல் - மாண்டு பிறவாது நீங்குதல், உண்டு - (உண்மையாக) உளது, என உணர்ந்தனம் - என்று அறிந்தோம்; ஒற்றியூர - திருவொற்றியூரினைத் திருக்கோயிலாய்க் கொண்டெழுந்தருளியிருப்போனே. பெரும்புகழ் - மிக்கபுகழ், மன்னிய - நிலைத்துள்ள, மாதவ - பெரிய தவநிலையாளனே, செஞ்சடை - சிவந்தசடைமுடி, துன்னிய - நெருங்கிய, தூமதியோய் - குற்றமற்ற நிலவினைப் புனைந்தோனே - (எ - று.) மற்று இரண்டும், தம்மும் அசைகள்.

(கு - ரை.) வேதம் "ஏகயே வோருத்ரோ" என்று இறைவனையே பரமெனக்கூறுதலால் மயக்கமில் சொல் நீயென்றார். அது நின்னைக்கூறுமாயினும் அவை நின்றிறம் உணரா என்பார் நின்றிற மறியாச் சூழலும், எனவும் இறைவன் ஆன்மாக்களின் உள்ளங்களினும் உறைவோனாயினும் அந்த ஆன்மாக்கள் அறியாவகை கரந்தவன் என்பார் கரந்தகள்ளமும் எ-ம். பஞ்சகிருத்தியங்களையும் ஆன்மாக்கள் பொருட்டுச் செய்வோயாயினும் அவ்வினைப் பயன்கள் உன்னைச் சாராவென்பார் அணுகா அணிமையும எ-ம், கூறினார் இவ்வகை நெருங்காது நெருங்கியுள்ளாயாயினும் யாவன் ஒருவன் உன்றிருவடியாகிய பேரின்பத்தை விரும்பியுன்னைப்பணிவானோ அவனிடைப்பேரின்பவாரியாய் அருள் புரிவையென்பார் மனத்திடைவாரியாகியும் எனவும், தேவரீரை மனத்தாலும் காயத்தாலும் எண்ணியும் பணிந்தும் வணங்கினார்க்கே யணித்தாய் அவர் மனத்திடை நின்று அருள்புரிவையென்பார் என்பினையுருக்குமியற்கைய என்றார். இந்தப் பேராநந்தத்தினைக் கண்டு தரிசித்தாரே பிறவாநெறி பெற்றார் என்பார் ஊனுடல் கழிதலுண்டெனவுணர்ந்தனமொற்றியூர என்றார்.

தூமதிசடைமிசைச் சூடுதறூநெறி
ஆமதியானென வமைத்தவாறே
அறனுருவாகிய வானேறேறுதல்
இறைவன்யானென வியற்றுமாறே
அதுவவளவனென நின்றமையார்க்கும்
பொதுநிலையானென வுணர்த்தியபொருளே
முக்கணனென்பது முத்தீவேள்வியில்
தொக்கதென்னிடை யென்பதோர்சுருக்கே
வேதமான்மறி யேந்துதன்மற்றதன்
நாதனானென நவிற்றுமாறே
மூவிலையொருதாட் சூலமேந்துதன்
மூவரும்யானென மொழிந்தவாறே
எண்வகைமூர்த்தி யென்பதிவ்வுலகினில்
உண்மையானென வுணர்த்தியவாறே
நிலநீர்தீவளி யகல்வானென்றும்
உலவாத்தொல்புக ழுடையோயென்றும்
பொருளுநற்பூதப் படையோயென்றும்
தெருளநின்றுலகினிற் றெருட்டுமாறே
ஈங்கிவைமுதலா வண்ணமும்வடிவும்
ஓங்குநின்பெருமை யுணர்த்தவுமுணராத்
தற்கொலிமாந்தர் தம்மிடைப்பிறந்த
சொற்பொருள்வண்மையிற் சுழலுமாந்தர்க்
காதியாகிய வறுதொழிலாளர்
ஓதலோவா வொற்றியூர
சிறுவர்தஞ்செய்கையிற் படுத்து
முறுவலித்திருத்திநீ முகப்படுமளவே. (௬)

(இ - ள்.) தூமதி - களங்கமற்றமூன்றும் பிறைச்சந்திரனை, சடைமிசை சூடுதல் - சடையின்மீது அணிதல், தூநெறி - குற்றமற்ற உண்மை யொழுக்கத்தாலுணரப்பெற்ற, ஆம்மதி - வளரும் (ஞானத்தாலுணரும் உண்மைப் பொருளாகிய) சைதன்யம், யான் என - யானே யென்று, அமைத்தவாறு - உலகர்க்குத் தெரிவித்த விதமாம், அறன் உருவு ஆகிய - தருமமே வுருவமாகிய, ஆன் ஏறு ஏறுதல் - இடபத்தையூர்ந்து அருள் செயல், இறைவன்யான் என - (அத்தருமச்சொரூபியாகிய) தலைவன், யான் என - நானேயாவன் என்று இயற்றும் ஆறே - அறிவிக்கைசெய்த விதமாம், அது, அவள் அவன் என - ஒன்று, பெண், ஆண் என்று, நின்றமை - உலகத்து உயர்திணை அஃறிணைப்

பொருள்களாகி விரவி நிற்றல், யார்க்கும் - (மக்கள் தேவர் நரகர் விலங்குகள் ஆகிய) எல்லாவுயிர்களுக்கும், பொதுநிலையானென - பொதுவாய் நிலையினின்று அருள்செய்வோன் என்று, உணர்த்திய பொருளே - தெரிவித்த பொருளமைதியாம், முக்கணனென்பது - திரி நேத்திரங்களை யுடையான் என்பது, முத்தீ - (தக்ஷிணாக்கினி முதலிய) மூன்று யாகாக்கினிகளும், வேள்வியில் - யாகத்தின்கண், என் இடை - என்னில், தொக்கது என்பது ஓர் சுருக்கே - அடங்கியது என்பதைத் தெரிவிக்கும் குறிப்பாம், வேதமான் மறி - வேதவுருவாகிய மானாகிய மறியை, ஏந்துதல் - திருக்கரத்து ஏந்துதல் அதன் நாதன் - அந்த வேதநாயகன், நான் என - நானேயாவன் என்று, நவிற்றும் ஆறே - சொல்லியவிதமாம், மூ இலை ஒரு தாள் - ஒரு தாளில் மூன்று இலை கொண்ட, சூலம் ஏந்துதல் - சூலப்படையினை ஏந்துதல், மூவரும்யான் என - (அமைத்தல், காத்தல், அழித்தற்குரிய) முத்தேவருமானவன் யானே யென்று, மொழிந்தவாறு - கூறிய விதமாம், எண்வகை மூர்த்தி என்பது - அஷ்டமூர்த்தமாய் நின்றனை என்பது, இவ்வுலகினில் - இந்தப் (பரந்த) உலகத்திற்கு, உண்மை யான் - உண்மைப்பொருள் யானேயாவன் என்று, உணர்த்தியவாறு - தெரிவித்த விதமாம், நிலம் நீர் தீ வளி அகல் வான் என்றும் - நிலம் நீர் நெருப்பு காற்று பரந்த ஆகாயம் என்றும், உலவா - கெடாத, தொல் புகழ் - தொன்றுதொட்டுப் புகழை, உடையோய் - பெற்றோய், என்றும் - எனவும், பொருளும் - எல்லாப்பொருள்களு மானாயென்றும், நல் பூதப்படையோய் என்றும் - நல்ல பூதகணங்களைப் படைகளாகப் பெற்றோனே எனவும், நின்று - நிலைபெற்று, உலகினில் தெருள - உலகத்தவர் அறிந்துகொள்ள, தெருட்டும் ஆறு - தெரிவித்த விதமாம், ஈங்கு இவை முதலா - இவ்விடத்து இவை முதலான, வண்ணமும் வடிவும் - பலவகை வண்ணங்களும் வடிவங்களும், ஓங்கு நின்பெருமை - வளருகின்ற உனது பெரும் புகழினை, உணர்த்தவும் - (தெரியும்படி) அறிவிக்கவும், உணரா - அறிந்துகொள்ளாத, தற்கொலி மாந்தர் - தம்மைத்தாமே கேடு செய்துகொள்ளும் தற்கொலி மானிடர், தம்மிடைப்பிறந்த - தங்களிடத் துண்டாகிய, சொல் பொருள் வன்மையில் - சொற்களும் பொருள்களுமாகிய வளப்பங்களால், சுழலு மாந்தர்க்கு - வாதமிட்டுத்திரியும் மனிதர்களுக்கு, ஆதியாகிய அறுதொழிலாளர் - முதல்வராகிய வேதியராகியோரால், ஓதல் ஒவா - ஓதியறிய முடியாத, ஒற்றியூர - திருவொற்றி மாநகரத்தினைத் திருக்கோயிலாகக் கொண் டெழுந்தருளி யிருப்போனே, (அவர் செய்கையினை) சிறுவர்தம் (அறிவு முற்றுதலைப்பெறாத) சிறு பிள்ளைகளின், செய்கையில் படுத்து - செயல்களிற் சேர்த்தி, நகைப்படும் அளவு - அவர்கள் உன் திருக்குறிப்பில் படும் அளவும், முறுவலித் திருத்தி - (அவர்கள் செய்கைக்கு) சிறு நகைகொண் டெழுந்தருளி யிருக்கின்றாய். (எ - று.)

(கு - ரை.) உலகத்துப் புறவிருளை நீக்கிக் கண்களுக்கு வொளியைத் தருமதிபோல் அகத்திருள் நீக்கி யறிவோர்க்குத் தலைப்பட்டு ஆநந்த பேரின்ப வீட்டினை யளிப்போன் என்பார், தூ மதி .....மதியான், எ-ம். அனைத்து மழி

ந்த சர்வசங்காரத்தும் அறம் அழியாது இறைவனை விடையுருக் கொண்டு தாங்கத்தாமதனை யூர்ந்து தனித்து நிற்றலின் இறைவன் யான் எ-ம், உலகத்துச் செறிந்த உயர்திணை அஃறிணைப் பொருள்களுக்கு அவரவர்கள் கன்மத்தின்வழி சிறிதும் பிறழாது கருணைசெய்பவன் என்பார், பொதுநிலையான் எ-ம், தக்ஷிணாக்னி ஆகவநீயம், காருகபத்யம் ஆகிய மூன்றக்கினிக்கும் தான் தலைவன் என்பார், முக்கண்ணன்...சுருக்கே என்றார். இதனை "ஒண்சுடரானை யுலப்பிலிதானை, யொண்சுடராகியென் னுள்ளத்திருக்கின்ற, கண்சுடரோனுலகேழுங்கடந்தவத், தண்சுடரோமத் தலைவனுமாமே." என்னுந் திருமந்திரத்தினாலறிக. மூவிலைச்சூல மேந்துதல் அம மூன்று மூர்த்திகளும் அவனேயென்பதற் கறிகுறியா மென்பார், மூவரும்......ஆறே எ-ம், இறைவன் நிலம் நீர் தீ வாயு ஆகாயம் நிலாப்பகலோன் ஆன்மா முதலிய வெண்வகையாய் நிற்றல் மற்றவனே விராட்டுருவன் என்பதைத் தெரித்தற்கு என்பார் எண்வகை...உணர்த்தியவாறே. என்றார் இதனை " அட்டமூர்த்தி யழகனின்னமுதாய வானந்த வெள்ளத்தான், சிட்டன் மெய்ச்சிவலோகநாயகன்றென் பெருந்துறைச்சேவகன், மட்டுவார்குழன் மங்கையாளையோர் பாகம்வைத்த வழகன்றன், வட்டமாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னி மன்னிமலருமே" என்ற மாணிக்க வாசகத்தாலறிக. வேத சிவாகமங்க ளனைத்துங் கூறுதல் சிவன் புகழேயன்றிப் பிறிதில்லை யென்பார் உலவாத் தொல்புகழ் உடையோ யென்றும், கூறினார். இவை யனைத்தும் உமது பெருமைகளை யுணர்த்தவும் அறியாத மந்தமதிகள் பல சமயச் சுழற்சியிற்பட்டு மயங்கி நரகமே யடைதலின் தற்கொலிமாந்தர், எ-ம். கூறினார். இவ்வறிவிலார் செயல்கண்டு சிறுநகைகொண் டிருத்தலின் முறுவலித் திருத்தி என்றும் கூறினார். இது உலகமும், உலக முதல்வனும், தேவர்க்கதிபனும், வேள்வி முதல்வனும் சிவமூர்த்தியென்பதை யறிவுறுத்தியது.

அளவினிலிறந்த பெருமையையாயினும்
எனதுளமகலா வொடுங்கினின்றனையே
மெய்வினையிறந்த மெய்யினையாயினும்
வையகமுழுதுநின் வடிவெனப்படுமே
கைவலத்தினை நீ யெனினுங்காதல்
செய்வோர்வேண்டுஞ் சிறப்பொழியாயே
சொல்லியவகையாற் றுணையிலையாயினும்
கல்லுயிர்க்கூட்ட நாயகனீயே
எங்குமுள்ளோ யெனினும்வஞ்சனை
தங்கியவவரைச் சார்விலைநீயே
அஃதான்று
பிறவாப்பிறவியை பெருகாப்பெருமையை

துறவாத்துறவியை தொடராத்தொடர்ச்சியை
நுகரா நுகர்சசியை நுணுகா நுணுக்கினை
அகலாவகற்சியை யணுகாவணிமையை
செய்யாச்செய்கையை சிறவாச்சிறப்பினை
வெய்யைதணியை விழுமியைநொய்மையை
செய்யைபசியை வெளியைகரியை
ஆக்குதியழித்தி யானபல்பொருள்
நீக்குதிதொகுத்தி நீங்குதியடைதி
எனையவாகிய வெண்ணில்பல்குணம்
நினைதொறுமயக்கு நீர்மையவாதலின்
ஓங்குகடலுடுத்த வொற்றியூர
ஈங்கிதுமொழிவார் தம
சொன்னிலைசுருங்கினல்லது
நின்னிலையறிவோர் யாரிருநிலத்தே. (எ)

(இ - ள்.) அளவினில் - (எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல்) எனும் அளவுகளிலும், இறந்த - கடந்த, பெருமையை - பெருமையினையுடையாய், ஆயினும் - ஆனாலும், எனது உளம் - அடியேனது மனதினை, அகலாது - நீங்காமல், ஒடுங்கி நின்றனை - ஒடுங்கிநிற்கின்றாய், மெய்யினை - பஞ்சபூதங்களாலாகிய பூதவுடம்புகளை, இறந்த - கடந்த, மெய்யினை ஆயினும் - திருமேனியினைப் பெற்றனையாயினும், வையகமுழுதும் - உலக முழுதும்; நின்வடிவு எனப்படும் - தேவரீர் திருவுருவெனப்படும், கைவலத்து - அடியேன் கைக்கண்ணதாக, இலை நீ எனினும் - நீ இல்லையாயினும், காதல் செய்வோர் - (உன்னை மனத்திடை யெண்ணி விரும்புவோர், வேண்டும் சிறப்பு - வேண்டிய சிறப்புகளை யீய, ஒழியாய் - நீங்காய், சொல்லிய வகையால்-மேற்சொல்லிய வகைகளால், துணை அலை ஆயினும் - துணைவனல்லையாயினும், நல் உயிர்க்கு - உன்னிடம் அன்பு பதிந்த ஆன்மாக்களுக்கு, ஊட்ட - (இன்பதுன்ப பலன்களை) நுகர்விக்க, நாயகன் நீயே - தலைவன் நீயேயாவாய், எங்கும் உள்ளோய் - சராசரப்பொருள்கள் அனைத்திலும் நிறைந்துள்ளாய், எனினும் - என்றாலும், வஞ்சனை தங்கிய அவரை - வஞ்சனை பொருந்தியிருக்கிற மனிதர்களை, சார்வு இலை நீயே - நீ சார்வாயல்லை, அஃதான்று - அதுவன்றி பிறவாப் பிறவியை - யோனிகளிற் பிறவாத பிறவியினை யுடையாய், பெருகாப்பெருமையை-பெருகாப்பெருமையினை யுடையாய், துறவாத்துறவியை-துறவாத துறவினையுடையோய், தொடராத் தொடர்ச்சியை - ஒருவராலுந் தொடர்தற்கரிய தொடர்ச்சியினையுடையாய், நுகரா நுகர்ச்சியை-துய்க்கப் பெறாத துப்பறவினை யுடையாய், நுணுகா நுணுக்கினை - நுணுகப் பெறாத நுணுக்கினையுடையாய், அகலா அகற்சியை - அகலப்பெறாத அகற்சியினை

யுடையாய், அணுகா அணிமையை - அணுகப்பெறாத அணிமையினையுடையாய், செய்யாச்செய்கையை-ஒருவரானுஞ் செய்யப்படாத பெருஞ்செய்கையினையுடையாய், சிறவாச் சிறப்பினை - ஒருவரானுஞ் சிறப்பிக்கப்பெறாத சிறப்பினையுடையாய், வெய்யை - நின் அன்பரல்லாரிடம் வெம்மை யுடையாய், தணியை - நின்னடியவரிடத்துத் தட்பத்தினையுடையாய், விழுமியை சிறப்பினையுடையாய், நொய்யை - நொய்ம்மையினை யுடையாய், செய்யை - செந்நிறத்தினை யுடையாய், வெளியை - வெண்ணிறத்தினை யுடையாய், கரியை - கருநிறத்தினை யுடையாய், ஆக்குதி - அனைத்துலகினையும் படைக்கின்றாய், அழித்தி - அவற்றினைச் சங்காரகாலத்து அழிக்கின்றாய், ஆன பல் பொருள் - பலவகைப்பட்ட பொருள்களை, நீக்குதி - விலக்குகின்றாய், தொகுத்தி - அவற்றை மீண்டுஞ் சேர்க்கின்றாய், நீங்குதி - உன்னை யணுகாரை நீங்குகின்றாய்; அடைதி - உன்னை அணுகினோரை அடைகின்றாய், எனையவாகிய - பிறவாகிய, எண்ணில் பல்குணம் - அளவு இல்லாத பலகுணங்கள், நினைதொறும் மயக்கும் நீர்மைய - நினைக்குந்தோறும் மயக்குகின்ற குணத்தையுடையன, ஆதலின் - ஆகையால், ஓங்குகடல் - நீர்மிகுந்த கடலைச் சூழலாக, உடுத்த - உடுக்கப்பெற்ற, ஒற்றியூர - திருவொற்றி மாநகரினைத் திருப்பதியாகக்கொண் டருள்வோனே, இரு நிலத்து - விரிந்த உலகத்தின்கண் இது மொழிவார்தம் தேவரீரது பெருமையினைக் கூறுதினைச்சொல்வாரது, சொல் நிலை - சொல்லும் நிலையும், சுருங்கின் அல்லது - சுருங்கி யொழிந்தாலன்றி, ஈங்கு - இக்காலத்து, நின் இயல் - தேவரீரது இயல்புகளனைத்தினையும், அறிவோர் யார் - அறியவல்லவர் யாவர். எ-று.

(கு - ரை.) தேவரீர் அளவிற்குக் கூறிய அளவுகளினும் பெரியராயினும் என் மனத்து நாடோறும் எழுந்தருளியிருந்து இன்பமளிக்கின்றீர் என்பார் ஒடுங்கி நின்றனை, என்றார். இதனை "அளவறுப்பதற் கரியவ னிமயவர்க் கடியவர்க் கெளியானங், களவறுத்து" எனும் திருவாதவூரடிகள் திருவாக்காலறிக. பிரகிருதி வயப்பட்ட தேகமின்றாயினும் வையகமுழுதும் தேவரீரது உறுப்பாகுமென்பார், மெய்யினை ...வடிவெனப்படுமே என்றார். இதனை "பார்பதமண்டமனைத்துமாய்முளைத்துப் பரந்ததோர்பரவெளிப்பரப்பே, நீருறு தீயே நினைவதேலரிய நின்மலா...சோதீ." என்னுந் திருவாக்காலறிக. தேவரீர் அண்மை யினிலையாயினும் வேண்டுவோர் விரும்புவன செய்தற்குப் பின்னிடாய் என்பார் கைவலத்திலை நீ...சிறப்பொழியாய் எனவும். நீ முன்னிலையாக நின்று ஒன்றையு முபகரியாயாயினும் எல்லா வுயிர்களுக்கும் உபகரிப்பாய் என்பார். சொல்லிய......நாயகனேயென்றார் இதனை "பல்லடியார் பணிகுப் பரிவானைப் பாடியாடும் பத்தர்க்கன்புடையானைச் செல்லடியேநெருக்கித் திறம்பாது சேர்ந்தவர்க்கே சித்திமுத்தி செய்வானை, நல்லடியார்மனத்தெய்ப்பினில் வைப்பை நாளுறு குறையறிந் தருள்புரிவானை, வல்லடியார் மனத்திச்சையுள்ளானை வலிவலந்தனில் வந்துகண்டேனே." என்னும், சுந்

தரமூர்த்திசுவாமிகள் திருவாக்காலறிக. நீ எங்கு முள்ளாயாயினும் உன்னைத்தியானியாதுள்ள புறச்சமயிகளாகிய வஞ்சகரைச் சாராய் என்பார், எங்கு முள்ளோய்...சார்விலை யென்றார். இதனை "பொய்யுடையார்க்கரன்போலகலும் மகன்றாற்புணரின், மெய்யுடையார்க்க வனம்பலம்போல மிகநணுகு, மையுடை வாட்கண் மணியுடைப் பூண்முலை வாணுதல்வான், பையுடைவாளரவத்தல்குல்காக்கும் பைம்பூம்புனமே." என்னுந் திருக்கோவையாரானுமறிக. அதான்று என்பது செய்யுளாதலின், அன்றி யென்னும் குறிப்புவினை யெஞ்சிறுதி விகாரமாகத் திரிந்து நின்றது. இதனைத் தொல்காப்பியம் உயிர்மயங்கியல் "இன்றியென்னும் வினையெஞ்சிறுதி, நின்ற இகர முகர மாத, றொன்றியன்மருங்கிற்செய்யுளு ளுரித்தே" யென்பதனாற் காண்க. இம்முற்றுகரவீற்றுச்சுட்டுப்பெயர்க்கு முன் அன்று வருங்கால் அச்சுட்டு ஆவாகுதல் "அன்றுவருங்காலை யாவாகுதலு, மைவருங்காலைமெய் வரைந்துகெடுதலுஞ், செய்செய்யுண்மருங்கி னுரித்தெனமொழிப." என்பதாற் கொள்க. பிறந்திறக்கும் ஏனையதேவரைப்போலாது எக்காலத்தும் யாண்டும் உயர்திணை அஃறிணைப் பொருள்களாகப்பிறந்து இறவாமையின்பிறவாப்பிறவியை யென்றார். இதனை "எல்லார் பிறப்பு மிறப்பு மியற்பாவலர்தஞ் சொல்லாலறிந்தேம் நம் சோணேச னில்விற்பிறந்த கதையுங்கேளேம்." என்னுமதனாலறிக. பெரியரிற், பெரியராதலின் பெருகாப்பெருமையை என்றார், இதனைக் கோயினான்மணிமாலை "வரையொன்று...பெரியதிற் பெரிமை யென்னுமன்றே." என்பதாற்காண்க. உலகத்துயிர்கள் வழிபடவேண்டித்தாம் இறைவியைவிட்டுத்துறவு பூண்டு குருமூர்த்தமா யிருந்தமையின் துறவாத் துறவியையென்றார். இதனை "போகியாய்...யோகியா யோகமுத்தி யுதவுதலதுவுமோரார்." என்னுந்திருவாக்காலறிக. அரிபிரமனாதியரா லளந்தறியப்படாமையின் தொடாத்தொடர்ச்சியையென்றார். பஞ்சேந்திரியங்களால் தொட்டு அனுபவிக்கப்படாது அறிவாலனுபவிக்கப்படும் பேரின்பக்கடலாதலின் நுகரா நுகர்ச்சியை எ-ம். சிறிய எல்லாப்பொருள்களினும் சிறியனாதலின் நுணுகா நுணுக்கினை எ-ம். தன்னை விரும்பித் தியானிப்பார் மனத்தை அகலாத மாமணியாதலின் அகலா அகற்சியை எ-ம். அகங்காராதி குண ஒழிவில்லார்க்குச் சேய்மைக்கணிற்போனாதலின் அணுகாவணிமையை எ-ம்; தாம்வாளாவிருந்தே முத்தொழிற் செய்வித்தலின் செய்யாச்செய்கையை எ-ம்; இவ்வகை எல்லாம் வல்லவனாயினும் "தம்பெருமை தானறியாத் தன்மையன்காண்" ஆதலின் சிறவாச்சிறப்பினை எ-ம். கூறினார். இறைவன் ஆணவாதிகளால் தம்மை யறியாது வெறுத்த தக்கனாதியர்க்கு வெய்யனாகவும் தம்மை விரும்பிய பலர்க்குத் தண்ணளிசுரத்தலின் தண்மையனாகவும்; விருப்பந்தரும் பொருள்களிற் சிறத்தலின் விழுமியனாகவும்; நண்ணிய பொருள்கள் பலவற்றினு நண்ணிதாக அருள்புரிதலின் நொய்யனாகவும்; அடியார்க்கு விருப்பிய திருவுருக்கொண்டு இந்திரனாகவும்; திருமாலாகவும்; பிரமனாகவும் மற்றைய தேவராதிகளைப்போலவும் அருள்செய்தலின் "வெய்யை...கரியை" எ-ம்; பல்வேறுவகைப்பட்ட அண்டத்துயிர்களைக்காப்பான், செய்யுஞ்செயல்களில்

பல் வேறுவகைத் தொழில் நடாத்துதலின் " ஆக்குதி ... அடைதி " என்றார். இத்தொழில்களாலும் குணத்திலும் நிறைந்த பெருந்தகையனவானை யாரா யப்பழகின் மனந்தானறியு மியல்பைவிட்டு மயங்குதலின் " நினைதொறு... நீர்மைய " என்றார். இன்ன பல்குணமும், செயலு முடைமையால் தேவரீரை யறிதல், சொல்லும் நிலையுங்கடந்த அதீதப்பருவத்தன்றி மற்றைக்காலத்துக் கூடாவென்பார் " சொன்னிலை சுருங்கினல்லது......இருநிலத்தே " என்றார்.

நிலத்திடைப்பொறையா யவாவினினீண்டு
சொலத்தகுபெருமைத் தூராவாக்கை
மெய்வளியையொடு பித்தொன்றாக
ஐவகைநெடுங்காற் றுங்குடனடிப்ப
நரையெனுநுரையே நாடொறும்வெளுப்பத்
திரையுடைத்தோலே செழுந்திரையாகக்
கூடியகுருதி நீரினுணிறைந்து
மூடியவிரும லோசையின்முழங்கிச்
சுடுபசிவெகுளிச் சுறவினமெறியக்
குடரெனு * மாலாக் கூட்டம்வந்தொலிப்ப
ஊன்றடியெலும்பி னூட்டிடலடைந்து
தோன்றியபல்பிணிப் பின்னகஞ்சுழலக்
கால்கையினரம்பே கண்டமாக
மேதகுநிணமே மெய்ச்சாலாக
முழுக்குடைத்துளையே முகங்களாக
வழுக்குடைமூக்கா றேதம்வந்தொலிப்ப
இப்பரிசியற்றிய வுடலிருங்கடலுட்
டுப்புரவென்னுஞ் சுழித்தலைப்பட்டிங்
காவாவென்னுநின் னருளினைப்பெற்றவர்
நாவாயாகிய நாதநின்பாத
முந்தச்சென்று முறைமையின்வணங்கிச்
சிந்தைக்கூம்பினைச் செவ்வியலிருத்தி
உருகியவார்வப் பாய்பூரித்துப்
பெருகியநிறையெனுங் கயிற்றிடைபிணித்துத்
துன்னியசுற்றச் சுடர்க்கயிறறுத்து
மன்னியவொருமைப் பொறியினைமுறுக்கிக்
காமப்பாரெனுங் கடுவெளியற்ற

தூமச்சோதிச் சுடர்க்கூறநிறுத்திச்
சுருங்காவுணர்ச்சித் துடுப்பினைத்துழாவி
நெருங்காவளவி னீள்கழையேற்ற
வாங்கயாத்திரை போக்குதிபோலும்
ஓங்குகட லுடுத்த வொற்றியூரோயே. (௮)

(இ-ள்.) ஓங்குகடல் - பெருகிய கடலினை, உடுத்த - சூழலாகப் பெற்றுள்ள, ஒற்றியூரோய் - திருவொற்றியூரினைத் திருக்கோயிலாகக் கொண்டோனே, நிலத்திடை - பூமியின்கண், பொறையாக - பாரமாக, அவாவின் - (பலவகைப்பட்ட) ஆசையான், நீண்டு - மிகைப்பட்டு, சொலத்தகு - (பலரால் இன்னதெனக்) குறிப்பிடத்தக்க, ஆக்கை - உடம்பே, தூரா - சேருகவும், மெய் - தேகத்தியைந்த, வளி - வாதமும், ஐ - சிலேஷ்மமும், பித்தொடு - பித்தத்துடன், ஒன்றாக - இவைசேர்ந்து) ஒன்று இயைய, ஐவகை - ஐந்துவகையாகிய, நெடுங்காற்று - பெருங்காற்றானது, ஆங்கு - அவ்விடத்தில், உடன் அடிப்ப - கூடி வீசுவதால், நரை எனும் நுரை - நரையெனப்படும் நுரையானது, நாள்தோறும் - தினந்தோறும், வெளுப்ப - வெளுக்காநிற்க, திரையுடைத் தோலே - திரைதலையுடைய தோலானது; செழுந்திரையாக - வளமுற்ற அலைகளாகவும், கூடிய - இயைந்துள்ள, குருதிநீரின் - புண்ணீரினால், உள்நிறைந்து - உள்ளிடம் நிறைவடைந்து, மூடிய - கவிந்துள்ள, இருமல் ஓசையின் - இருமலோசையினால், முழங்கி - முழக்கமடைந்து, சுடுபசி - வெதுப்புகிற பசியும், வெகுளி - கோபமுமாகிய, சுறவு இனம் - சுறாவின் இனங்கள், எறிய - வீசுதலால், குடர் எனும் - குடல் என்கிற, ஆலாக்கூட்டம் - நீர்ப்பறவைகளின் கூட்டம், வந்து ஒலிப்ப - (இரையகப்படுமென வெண்ணிவந்து) ஒலி செய்யாநிற்க, ஊன்தடி - இறைச்சியாலும், எலும்பின் - எலும்பினாலுமாகிய, உள் திடல் - உள்ளிடமாகிய மேட்டினை, அடைந்து - சென்று, தோன்றிய - உண்டாகிய, பல்பிணி - வெவ்வேறாகிய வியாதியென்னும், பின்னகம் - பலவகைப்பட்ட அந்தச் சங்குகளானவை, சுழல - சுழலாநிற்க, கால் கையின் - கையிலும் காலிலுமுள்ள, நரம்பே - நரம்புகளே, கண்டமாக - பூகண்டமாக, மேதகு - சிறந்த, நிணமே - கொழுப்பே, மெய்ச்சால் ஆக - உண்மையாகிய நீர்ச்சாலாகவும், முழக்குடை - ஓசைகளையுடைய, தொளையே - நவத்துவாரங்களே, முகங்களாக - கழிமுகங்களாகவும், வழுக்குடை - வழுக்குதலையுடைய, மூக்கு ஆறு - மூக்காகிய ஆற்றினின்று ஒழுகும், ஓதம்வந்து - வெள்ளம்வந்து, ஒலிப்ப - ஓசைசெய்யவும், இப்பரிசு - இத்தன்மையாக, இயற்றிய - அமைக்கப்பெற்றுள்ள, உடல் - தேகமாகிய, இரும் கடலுள் - பெரிய கடலில், துய்ப்புரவு என்னும் - நுகர்ச்சியென்கிற, சுழித்தலைப்பட்டு - சுழியினிடத் தகப்பட்டு, இங்கு - இவ்வுலகத்தின்கண், ஆஆ என்னும் - ஆவருக என்னும், நின்னருளினைப் பெற்றவர் - நினது திருவருளினை யடைந்தவர்கள், நாத - தலைவனே, நாவாயாகிய - மரக்

கலமாகிய, நின் பாதம் - உன் திருவடிகளை, முந்தி சென்று-முதலாகப்போய், முறைமையின் வணங்கி - முறைமையாகத் தொழுது, சிந்தை கூம்பினை - மனமாகிய பாய்மரத்தினை, செம்மை இயல் - செம்மையாகிய நிலைமையில், இருத்தி - நிலைபெறச்செய்து, உருகிய - கரைந்த, ஆர்வம் - அன்பென்னும், பாய் - பாயினை, பூரித்து - விரித்து, பெருகிய - வளர்ந்துள்ள, நிறையெனும் - திடம் என்கிற, கயிற்றிடை - கயிற்றில், பிணித்து - கட்டி, துன்னிய - நெருங்கியுள்ள, சுற்றச்சுடர்க் கயிறு - சுற்றமாகிய தீக்கயிற்றினை, அறுத்து - அறுத்தெறிந்து, மன்னிய - நிலைத்துள்ள, ஒருமைப்பொறியினை - தனிமையென்கிற யந்திரத்தினை, முறுக்கி - சுழற்றி, காமப்பார் எனும் - காமமாகிய பூமியெனும், கடுவெளி - கொடிய வெளியிடம், அற்ற - அல்லாத, தூமச்சோதிச் சுடர்க்கு - புகையோடுகூடிய பிரகாசமுள்ள சுடரினை நோக்கி, உற நிறுத்தி - செம்மைபெற நிறுத்தி, சுருங்கா - குறைதலில்லாத, உணர்ச்சி - அறிவென்னும், துடுப்பினை - துழாவுகோலினை, துழாவி - துழாவிக்கொண்டு, நெருங்கா அளவில் - நெருங்காநிற்கு மளவின்கண், நீள் கரை ஏற்ற - நீண்ட கரையினை யேற்றுதற்கு, யாத்திரைபோக்குதி போலும் - யாத்திரை செய்விப்பாய்போலும் எ - று,

(கு - ரை.) ஒற்றியூரோய் உடலிருங்கடலுள் துப்புரவென்னுஞ் சுழித்தலைப்பட்டவர் நாவாயாகிய நின் பாதம் முந்திச்சென்று முறைமையின் வணங்கிச் சிந்தைக் கூம்பினைச் செவ்வியலிருத்தித் தூமச்சோதிக்குற நிறுத்தி யுணர்ச்சித்துடுப்பினைத் துழாவி நெருங்காவளவில் நீள்கரை யேற்ற யாத்திரை போக்குதி, என்பது கருத்து.

இரத்தஞ் சீ மேதை முதலிய செறிந்து சேறுபோன்றிருத்தலின் ஆக்கையினைத் தூறெனவும், வாதபித்தசிலேஷ்மாதிகளால் ஒன்றுபடடுப்பிரித்தற்கரிய கொடுவினை யியற்றலின் ஒன்று எனவும். பஞ்சேந்திரியங்களின்வழிப் பொருள்கள் கிரகிக்கப்பட்டு அறிவை மயக்குதலின் ஐவகை நெடுங்காற்றென்றும், ஒருகாலைக்கொருகால் இடைவிடாது தோன்றுதலின் நரையெனும் நுரையென்றும், அலை எழுந்தும் படுத்தும் வீசுமாறுபோலச் சருமமும் எழுந்திரைதலின் திரையுடைத்தோலே செழுந்திரையாக எ-ம், செந்நீர்நரம்பின்வழித் தேகமுற்றும பாய்ந்து நிறைந்திருத்தலின் கூடியகுருதி...நிறைந்து எ-ம், சிலேத்மாதிக்க ரோக முதிர்ச்சியால் இடைவிடாது சத்தித்தலின் மூடிய...முழங்கி, எ-ம், சுறவு கடற்கண் எனையசலசரங்களின் மிக்குவன்மை கொண்டதாய் உலாவுதல்போல் எல்லாத் துன்பத்திலும் மிகைப்பட்டதாய் வருத்தலின் சுடுபசி. எ-ம், வெகுளியும் அவ்வாறு செய்தலின் வெகுளி எ-ம், ஆலா இரையின்பொருட்டுத் தாழ்ந்து இரையிலாக்காலத்ததுபெற மேனோக்கியிருத்தல்போல் இரைகொள்ளாததற்குமுன் இரைபெற மேனோக்கியும், அது பெறுங்கால் தாழ்தலின் ஆலா...ஒலிப்ப எ-ம், சங்குகள் கரைசார்ந்து உலாவுதல்போல் பிணியும் ஊனுந்தடியுமாகிய கருவிகளைச்சார்ந்து வருதலின் தோ

ற்றிய ...சுழல எ-ம், கண்டம் நிலப்பிரிவுகளின் பெரும்பகுதி, அது பல தேசங்கொண்டதுபோல் பல கிளைநரம்புகளைத் தனக்கு ஆதாரமாகப் பெற்று நிற்கும் பெருநரம்பாதலின் கால் கையின்...கண்டமாக எ-ம், நீர்ச்சால் போனவழி நீர்பாயுமாறுபோல நிணச்சேறு பாய்தலின் மேதகு...சாலாக எ-ம், பெருங்கடனீர், மேலெழுந்தவழி அந்நீர் பல கழிமுகங்க ளாமாறுபோல இவ்வுடம்பினின்றும் நவத்துவாரங்கள் தோன்றி யதின்வழி அழுக்குக ளொழுகுதலின் மூழக்குடை......முகங்களாக, எ-ம், வெள்ள நீர்மேற்றோன்றி மிக்கு ஓசைபுரிந்து ஒலிப்பான் போன்று மூக்கிடை நீர் ஒழுகிப்பாய்தலின் வழுக்குடை...ஒலிப்ப, எ-ம், கூறினார். இன்ப நுகர்ச்சியால் மயங்கி நல்லறிவு தலைப்படாது கொட்புறுவேன் என்பார், துப்புரவென்னுஞ் சுழித்தலைப்பட்டு என்றார். இவ்வகைத் துன்பத் துட்பட்டான், நின் திருவடியாகிய புணையினைக் கடைப்பிடித்துச் சிந்தையாகிய கூம்பினைச் செம்மைப்பட விருத்தி ஆர்வப்பாய் விரித்து நிறையெனுங்கயிற்றிடைப் பிணித்துச்சுற்றக்கயிற்றினை யறுத்து ஒருமையெனும் யந்திரத்தை முறுக்கி காமக் கடுவெளி யல்லாத சுத்த வெளியினை நோக்கி அறிவெனுந் துடுப்பினாற் றுழாவிச் செலுத்தின் அவனைப் பிறவிக்கடற் கரை நீத்துப்பேரின்பக்கரைக்கண் சேர்ப்பிக்க யாத்திரை செய்விப்பாய் என்பார், ஆவா...யாத்திரை போக்குதிபோலும்என்றார். " ஆங்கவுரையசையிடைச்சொல். போலும் என்பதும் அவ்வாறு ஒப்புமையுணர்த்தாத உரையசை யிடைச்சொல். இதனை " ஒப்பில் போலியும் அப்பொருட்டாகுமென்பதனானறிக. *அரவக்கூட்டமெனவும் பாடம்.

ஒற்றியூர வுலவாநின்குணம்
பற்றியாரப பரவுதல்பொருட்டா
என்னிடைப்பிறந்த வின்னாப்புன்மொழி
நின்னிடையணுகா நீர்மையவாதலின்
ஆவலித்தழுதலி லகன்றதம்மனைக்
கேவலஞ்செய்மையிற் கேளாளாயினும்
பிறித்தற்கரிய பெற்றியதாகிக்
குறைவிலார்த்துங் குழவியதியல்பினை
யறியாதெண்ணி லூழிப்பிறவியின்
மயங்கிக்கண்ணிலர் கண்பெற்றாங்கே
தாய்தலைப்படநின் றாளிணைவணக்கம்
வாய்தலையறியா மயக்குறும்வினையேன்
மல்கியவின்பத் தோடுடன்கூடிய
வெல்லையிலவாவினி லியற்றியவாகக்
கட்டியநீஇய யவிழ்க்கினல்ல
தெட்டனையாயினும் யானிதற்கறியேன்
றுன்னிடையிருளெனுந் தூற்றிடையொதுங்கி
வெள்ளிடைகாண விருப்புறுவினையேன்
றந்தையுந்தாயுஞ் சாதியுமறிவுந

சிந்தையுந் திருவுஞ் செல்கதித் திறனுந்
துன்பமுந் துறவுந் தூய்மையு மறிவு
மின்பமும் புகழு மிவைபலபிறவுஞ்
சுவையொளியூறோசை நாற்றந்தோற்ற
மென்றிவைமுதலா விளங்குவவெல்லா
மொன்றநின்னடிக்கே யொருங்குடன்வைத்து
நின்றனனன்றமியே னின்னடியல்லது
சார்வுமற்றின்மையிற் றளர்ந்தோர்காட்சிச்
சேர்விடமதனைத் திறப்படநாடி
யெய்துதற்கரியோயானினிச்
செய்வதுமறிவனோதெரியுங்காலே. (௯)

(இ-ள்.) ஒற்றி ஊர - திருவொற்றியூரினைத் திருக்கோயிலாகக் கொண்டருள்வோனே, உலவா - கெடாத, நின்குணம் - உனது கல்யாண குணங்களை, பற்றி - கடைப்பிடித்து, ஆரப்பரவுதல் பொருட்டு ஆக - முழுதும் பரவுதல் பொருட்டாக, என் இடை - என்னிடத்தில், பிறந்த - உண்டாகிய இன்னாப் புன் மொழி - துன்பந்தரும் புல்லிய சொற்கள், நின் இடை - தேவரீர் இடம், அணுகா - நெருங்காத, நீர்மைய - குணமுடையன, ஆதலின் - ஆதலால், ஆவலித்து - ஆசைப்பட்டு, அழுதல் - அழுதலை, இல் - மனையினின்றும், எவனுக்கு - எவல்பொருட்டாக, சேய்மையின் - தூரத்தின்கண், அகன்ற - நீங்கிய, தம் அன்னை - தம் தாய், கேளாள் ஆயினும் - தான் (அவ்வழுகையின் ஒலியினைக்) கேளாள் ஆயினும், பிறித்தற்கரிய பெற்றியதாகி - நீக்குதற்கரிய தன்மைத்தாகி, குறைவினில் - (குழவியின் பசியின்) குறைவினைநோக்கி, ஆர்த்தும் - (அவள்தானே பாலினை உண்பிக்கும், அம் குழவியது - அழகிய குழந்தையினது, இயல்பினை - தன்மையினை, அறியாது - தெரிந்துகொள்ளாது, எண் இல் ஊழி - பல ஊழிகாலங்கள், பிறவியின் மயங்கி - பல பிறவிகளெடுத்து மயங்கி, கண் இலர் - கண்ணில்லாத குருடர்கள், கண் பெற் றாங்கு - கண்ணொளியினைப் பெற்றாற்போல, தாய் தலைப்பட - தாய் வளர்த்தல்போல, நின் தாள் இணை - உமது திருவடி இணையின், வணக்கம் - வணக்கமானது, வாய்தலை - உண்டாதலை, அறியா - தெரிந்துகொள்ளாது, மயக்கு உறும் - (பிறவியினால்) மயக்கத்தையடையும், வினையேன் - தீவினையுள்ள நான், மல்கிய - மிகுந்துள்ள, இன்பத்தோடு - சிற்றின்பத்துடன், உடன் கூடிய எல்லையில் - பிரிவுபடாது ஒன்றாகக் கூடிய அளவில், அவாவினில் - ஆசையென்னுங் கயிற்றினால், கட்டிய ஆக - கட்டப்பட்டதாக, கட்டிய - கட்டப்பட்ட பாசபந்தத்தினை, நீயே அவிழ்க்கின் அல்லது - நீ அவிழ்த்தால் அல்லாமல், என் தனை ஆயினும் - என் அளவேனும், யான் இதற்கு - நான் இதனை யவிழ்த்தற்குச் செய்யும் சூழ்ச்சி, அறியேன் - அறிந்திலேன், துன்இடை - நெருங்கிய இடத்திலுள்ள, இருள் எனும் - அஞ்ஞான இருள் என்கிற, தூறு இடை - புதரின்கண், ஒதுங்கி - ஒதுக்கமாகத் தங்கி

யிருந்து, வெள் இடை - வெறு வெளியை, காண - காணும்படி, விருப்பு உறு - விருப்பத்தை யடைகின்ற, வினையேன் - தீவினையுள்ளவன், தந்தையும் - பிதாவும், தாயும் - மாதாவும், சாதியும் - உயர்ந்த சாதியும், அறிவும் - சேதனப்பொருளும், நம் சிந்தையும் - நமது மனமும், திருவும்-செல்வமும், செல்கதித் திறனும் - அடையவேண்டிய கதியின்வகையும், துன்பமும் - துன்பமும், இன்பமும்-சுகமும், துறவும் - துறவும், தூய்மையும் - சுத்தமும், அறிவும் - மற்றப்புலன்களும், இன்பமும் - சுகமும், புகழும் - கீர்த்தியும், இவைபல பிறவும் - இவைபோன்ற பலவாகிய பிறவும், சுவை - நாவாலறியும் சுவையும், ஒளி - கண்ணாலறியும் சுவையும், ஊறு -பரிசத்தாலறியுஞ் சுவையும், நாற்றம் - மூக்காலறியுஞ் சுவையும், தோற்றம் - மற்றக்காட்சியாலறியுஞ்சுவையும், என்று இவை முதலாக-என்றுகூறியுள்ள இவைமுதலாக, விளங்குவ எல்லாம் - கூறப்படும் அனைத்தையும், நின் அடிக்கு - நின் திருவடிக்கே, ஒன்ற - பொருந்தும்படி, ஒருங்குடன் - முழுதும், வைத்து - அர்ப்பணஞ்செய்து, நின் அடி அல்லது - தேவரீர் திருவடியல்லாது, சார்வு இன்மையின் - வேறு பற்றின்மையான், தமியேன் நின்றனன் - நான் தனித்தவனாய் நின்னை நோக்கி நின்றனன், தளர்ந்தோர் - துன்பத்தால் தளர்ச்சியடைந்தவர்கள், காட்சி - தங்களது அறிவால், சேர் இடமதனை - சேர்ந்திருக்கும் இடத்தினை, திறப்பட நாடி - வகைப்பட ஆராய்ந்து, எய்துதற்கு - அடைதற்கு, அரியோய் - அருமையானவனே, தெரியுங்கால் - ஆராயுமிடத்து, யான் இனி செய்வதும் அறிவனோ - யான் இனிச் செய்வதும் அறிவேனோ. (எ-று.) மற்று அசை.

(கு-ரை). இறைவனே, தேவரீரது அநந்த கல்யாண குணங்களை எண்ணிப்பரவுதற்கு என் புன்மொழி யும்மையணுகா வாதலால் ஏவலின்பொருட்டுப் பிரிந்த தாய்க்குத் தன்குழவி யழுகை கேளாதாயினும் அவளே இரங்கிப்பிள்ளையின் பசி தீர்த்தல்போல் பல பிறவிகளில் மயங்குறும் வினையேன் பாசத்தைக்களைந்து எல்லாமாய்நிற்கும் தேவரீர் உமது திருவடியடைவித்தல் கடன் என்பது கருத்து.

இறைவன், அநந்த கல்யாண குணமுடையான் என்பதை "எண்ணில் பல்கோடி சேவடிமுடிகள்...எண்ணில்பல்கோடி குணத்தரோர்வீழி மிவர்நம்மையாளுடையாரே." எனுந்திருவிசைப்பாவா லறிக. ஆன்மகோடிகளின் வரிசையுள் நான் ஒருபொருளன்று ஆதலால் நான் கூறும் சொற்கள் தேவர் திருச்செவிக்கு ஏறுதென்பார், என்னிடை...நின்னிடையணுகா என்றார். ஏவலின்பொருட்டுச்சேய்மைக்க ணீங்கினவளாதலின் குழவியழுதலைக் கேட்டிலளென்பார். ஆவலித்து...கேளாள். எ-ம். அங்ஙனங் கேளாளாயினும் தானே குழவியின் பசிநோக்கிப் பாலை யுண்பிப்பாளாதலின், பிறித்தற்கரிய... குழவியதியல்பினையறியாது. எ-ம், கூறினார். பல பிறவிகளில் பல நாள் வருந்தாநின்றேன் என்பார். எண்ணி லூழி பிறவியின் மயங்கி என்றார், இதனை "பெறுகின்றவெண்ணிலி தாயரும்பேறூறும் யானுமென்னை, உறு

கின்றதன்பங்க ளாயிரங்கோடியு மோய்வொடுஞ்சென், றிறுகின்றநாள்களு மாகிக்கிடந்த விடைக்கணெல்லாம், அறுகின்றனதில்லை யாளுடையான்செம் பொனம்பலத்தே.” என்னுந் திருப்பாசுரத்தாலறிக. என்னை யிதுகாறும பிறவியிற்படுத்துப் பாசத்திற்குள்ளாக்கிய நீயே யப்பாசத்தைக் கருணையால விழ்க்கினன்றி யென்னுலியலாது என்பார். கட்டிய நீயே...எட்டனையானு மியானிதற்கரியேன், என்றார். இதனை “ அறிவிலாதவெனைப்புகுந் தாண்டு கொண் டறிவதையருளிமே, னெறியெலாம்புல மாக்கியவெந்தையைப் பந் தனையறுப்பானைப், பிறிவிலாதவின் னருள்கள்பெற்றிருந்துமா றுடுதிபின னெஞ்சே, கிறியெலாமிகக் கீழ்ப்படுத்தாய்கெடுத் தாயெனைக்கெடுமாறே.” என்பதாலறிக. தேவரீர திருவடியன்றியில் மற்றொன்றையும் விரும்பேன் என்பார், தந்தையுந்தாயும்...ஒன்றநின்னடிக்கே யொருங்குடன்வைத்து நின் றனன்என்றார். இதனைக்கோயினான்மணிமாலை “ஈரவேரித்தார்வழங்கு...யாண் டகைக்குரிசில்நின்னடியரொடுங்குழீஇத், தெய்வக்கூத்துநின்செய்யபாதமு, மடையவு மனுகவும்பெற்ற கிடையாச்செல்வங் கிடைத்தலானே.” என்ப தாலறிக. துன்னிடை யிருளெனுந் தூற்றிடையொதுங்கி வெள்ளிடைகா ணவிருப்புறு வினையேனாதலின் தந்தையுந்தாயு மற்றெல்லாப்பொருள்களு மாவான் நீயேயாதலின் மற்றவையனைத்துநீ யென் வினைக்கீடாத் தந்தவை யாதலின் அவற்றைத் தந்த தேவரீர்மாட்டு அவைகளை யர்ப்பித்துப் பற்றற் றேனாய்த்தேவரீர் திருவடியொன்றுமேபற்றாக வெய்துதற்கரியநின்னையெயத என்செயலற்று நின்றேன் இனிச்செய்வதறியேன் என்பார். “ எய்துதற்கரி யோ யானினிச் செய்வதுமறிவனோ தெரியுங்காலே ” என்றார். இதனை “ வாழ்த்துவாய் வாழ்த்தாதொழிவாய் மறுசுழியிட், டாழ்த்துவாயஃதறிவாய் நீயன்றே—யாழ்த்தகைய, வண்டார் பொழிற்கயிலை வாழ்கென்றிருப்பதே, கண்டாயடியேன் கடன்.” என்பதானறிக.

காலற்சீறிய கழலோய்போற்றி
மூலத்தொகுதி முதல்வபோற்றி
ஒற்றிமாநக ருடையோய்போற்றி
முற்றுமாகிய முதல்வபோற்றி
யணைதொறுஞ்சிறக்கு மமிர்தேபோற்றி
யிணைபிறிதில்லா வீசபோற்றி
யார்வஞ்செய்பவர்க் கணியோய்போற்றி
தீர்விலின்சுவைத் தேனேபோற்றி
வஞ்சனைமாந்தரை மறந்தோய்போற்றி
நஞ்சினையமிர்தா நயந்தோய்போற்றி
விரிகடல்வையக வித்தேபோற்றி
புரிவுடைவனமாப் புணர்ந்தோய்போற்றி
காணமுன்பொருள் கருத்துறைசெம்மைக்
காணியாகிய வானேபோற்றி

வெம்மைதண்மையென் றிவைகுணமுடைமையிற்
பெண்ணோடாணெனும் பெயரோயபோற்றி
மேவியவவர்தமை வீட்டினிற்படுக்குந்
தீபமாகிய சிவனேபோற்றி
பாலோய்போற்றி மறையோய்போற்றி
மேலோய்போற்றி வேதியபோற்றி
சங்கரபோற்றி தழலோய்பொற்றி
யிந்திரபோற்றி யிறைவபோற்றி
யமராபோற்றி யழகாபோற்றி
குமராபோற்றி கூத்தாபோற்றி
பொருளேபோற்றி போற்றியென்றுனை
நாத்தழும்பிருக்க நவிற்றினல்ல
தேற்றுதற்குரியோ ராரிருநிலத்தே. (௪0)

(இ - ள்). காலற்சீறிய - யமனைக்கோபித்த, கழலோய் - திருவடியுடையானே, போற்றி - நமஸ்காரம், மூலத்தொகுதி - பிரகிருதிக்கு மூலமாகிய சுத்தாசுத்த மாயைகளின் தொகுதிகளுக்கு, முதல்வபோற்றி - முதல்வனே நமஸ்காரம், ஒற்றிமாநகர் உடையோய் - திருவொற்றி மாநகரைத் திருக்கோயிலாக்கொண்டோனே, போற்றி-நமஸ்காரம், முற்றும் ஆகிய-உலகமுழுதும் உருவமாகிய, முதல்வ - தலைவனே, போற்றி - நமஸ்காரம், அணைதொறும் - நெருங்குந்தோறும், சிறக்கும் - இன்பம் வளரும், அமிர்தே - அமிர்தமானவனே, போற்றி - நமஸ்காரம், இணை பிறிது இல்லா - ஒப்பார் வேறு பிறர் இல்லாத, ஈசபோற்றி - தலைவனே போற்றி, ஆர்வம் செய்பவர்க்கு - தேவரீரிடம் அன்புசெய்பவர்களுக்கு, அணியோய் - நெருங்கியுள்ளானே; போற்றி - நமஸ்காரம், தீர்வு இல் - நீங்குதல் இல்லாத, இன்சுவை - இனியசுவையினையுடைய, தேனே - தேனையொப்பானே, போற்றி - நமஸ்காரம், வஞ்சனைமாந்தரை - வஞ்சனையுள்ள மனிதர்களை, மறந்தோய் - திருவுளத்திற் கொள்ளாதவனே, போற்றி - நமஸ்காரம், நஞ்சினை - விஷத்தினை, அமிர்தாக - அமிர்தமாக, நயந்தோய் - விரும்பினவனே, போற்றி - நமஸ்காரம, விரி - பரந்த, கடல் - கடலால் சூழப்பட்டுள்ள, வையகம் - பூமியில் உள்ளார்க்கு, வித்தே - மூலமானவனே, போற்றி - நமஸ்காரம், வனமா - (யானை புலி முதலிய) காட்டு மிருகங்களின், புரிவுடை - புரிவாகிய வுடையினை, புனைந்தோய் - உடுத்தவனே, போற்றி-நமஸ்காரம், முன் - (வேதப்பொருள் அறியா) முன்னைக்காலத்து பொருள் காண - பொருளினை யறியும்வகை, (முனிவர் வேண்ட) கருத்து - அவ்வேதக் கருத்தினைத் தெரிவிக்க, செம்மை - செம்மையுள்ள, உறையாணி ஆகிய - உறையாணி யாகின்ற, அரனே - சிவபெருமானே, போற்றி - நமஸ்காரம், வெம்மை - வெப்பம், தண்மை - தட்பம், என்ற இவை - என்ற இவற்றை, குணம் உடைமையில் - குணமாக் கொண்டருள்தலால், பெண்ணொடு - பெண்ணுருவுடன், ஆண் எனும் -

ஆணுருவென்னும், பெயரோய் - (அம்மையப்பன் எனும்) திருப்பெயர் கொண்டோனே, போற்றி - நமஸ்காரம், மேவிய அவர்தமை - (நின் திருவடி அடைவான்) விரும்பிய அவர்களை, வீட்டினில் - பேரின்பவீட்டின்கண், படுக்கும் - பேரின்ப நித்திரை செய்விக்கும், தீபமாகிய - ஞானச்சுடராகிய, சிவனே - மங்கள குணாகரனே, போற்றி - நமஸ்காரம், மாலோய் போற்றி - (காத்தற் றொழிலினை யதிட்டித்து) திருமாலாய் நின்றவனே நமஸ்காரம், மறையோய் போற்றி - (சிருட்டித்தொழிலினை யதிட்டித்து) பிரமனாய் நின்றவனே நமஸ்காரம், மேலாய் போற்றி - (மேலான பொருள் அனைத்திற்கும்) மேலானவனே நமஸ்காரம், வேதிய போற்றி - தேவர்களில் வேதியனாய் நின்றவனே நமஸ்காரம், சந்திர போற்றி - சந்திரனானவனே நமஸ்காரம், தழலோய் போற்றி - யஞ்ஞரூபமானவனே நமஸ்காரம், இந்திர போற்றி - அமரர் தலைவனே நமஸ்காரம், இறைவ போற்றி - அனைத்திற்கும் தலைவனே நமஸ்காரம், அமரா போற்றி - தேவதேவனே நமஸ்காரம், அழகா போற்றி - அழகனே நமஸ்காரம், குமரா போற்றி - கௌமாரப்பருவமுள்ளானே நமஸ்காரம் கூத்தா போற்றி - ஆனந்தத் தாண்டவஞ்செய்வோனே நமஸ்காரம், பொருளே - எல்லாப்பொருளுமானவனே, போற்றி போற்றி என்று - பலமுறை போற்றி போற்றியென்று, உனை - தேவரீரை, நா தழும்பு இருக்க - நாத்தழும்பு ஏறும்படி, நவிற்றின் அல்லது துதித்தால் அல்லாமல், இரு நிலத்து - பெரிய பூமியின்கண், ஏற்றுதற்கு - உயர்நிலைக்கண் ஏற்றுதற்கு, உரியாயார் - தக்கவர் யாவர்.—(எ - று.) கு - சாரியை.

(கு - ரை). அருளுடையார்க்கு அருளுந்திருவடியாயினும் யமன்மாட்டுத் தம்மன்பரிடத்துச் சாரற்க அனபரல்லாதாரைச் சேறுக என்று அறிவுறுத்துவான் செய்த திருவிளையாட்டாதலின் காலறசீறிய கழாலோய் போற்றியென்றார். இதனை "ஞால மிந்திர னான்முகன் வானவர் நிற்க மற்றெனை நயந்தினி தாண்டாய், காலனாருயிர் கொண்டபூங் கழலாய் கங்கையா யங்கி தங்கிய கையாய்...திருப்பெருந்துறை மேவிய சிவனே." என்பதாலறிக. இத்திருவடி யேனையதேவர் முதலியோர்போல் செத்துப்பிறக்கு மிலக்கணமிலா தென்பார், காலற்சீறிய என்றார் எனினுமாம். இதனை "பேதமில்லதோர்கற்பளித்தபெருந்துறைப்பெருவெள்ளமே. யேதமேபல பேசநீயெனையேதிலார், முனமென்செய்தாய், சாதல்சாதல்பொல்லாமையற்ற தனிச்சரண்சரணாமெனக்காதலாலுனையோதநீவந்து காட்டினாய்கழுக்குன்றிலே." என்னுமமணிவாசகத்தானறிக. அனைத்திற்கு மூலமாகிச் சுத்தாசுத்த மாயைக்கு முதல்வனாதலின் "மூலத்தொகுதி முதல்வ" என்றார். இதனை "தூலமாமுருவினுக்குச் சூக்குமமுதலதற்கு, மூலமானதற்குமூலமோகினி யதன்முதற்றான், மேலதாம விந்துசத்தி சிவமிவை மிசையாமெல்லாஞ், சாலவின்றுகுமான்மாச் சிவத்தினைச்சார்ந்தபோது." என்னுந்திருப்பாடலானறிக.

இறைவன் எங்குமாய் நிறைந்து நிற்றலின் முற்றுமாகிய முதல்வ போற்றியென்றார். இதனை "இன்று நமக்கெளிதே மாலுக்கு நான்முகற்கும்,

அன்று மளப்பரிய ஞானனை—யென்றுமோர், மூவா மதியானை மூவேழுலகங்கள், ஆவானைக்காணு மறிவு." என்னும் அம்மையார் திருவாக்காலறிக. ஆன்மா அவன்வயப்பட்டு அவ்வழித் தோன்றும் இன்பத்தினை நுகருந்தோறும் புதிது புதிதாக இன்பமூறுதலின் அணைதொறுஞ் சிறக்கும் அமிர்தென்றார். இதனை "சந்தித்தகூற்றுக்குக் கூற்றாய்ப் பிணிக்கொருத்தனிமருந்தாம், சிந்திக்கச் சிந்தாமணியாகித் தித்தித்தமுதமுமாம், வந்திக்கில்வந்தென்னை மால் செய்யும் வானோர் வணங்கநின்ற, வந்திக்கண்ணாடியினானடியார்களுக்காவனவே" என்னும்சேரமான் பெருமாணாயனார்திருவாக்காலும், "உணர்ந்தார்க் குணர்வரியான் றில்லைச்சிற்றம்பலத் தொருத்தன், குணந்தான்வெளிப்பட்ட கொவ்வைச்செவ்வா யிக்கொடியிடைதோள், புணர்ந்தாற்புணருந்தொறும்பெரும்போகம் பின்னும் புதிதாய், மணந்தாழ் புரிகுழலாளல்குல்போல வளர்கின்றதே." எனுந்திருக்கோவையாரால் அறிக. இறைவனையொக்குந்தேவர் வேறில்லாமையால் இணைபிறிதில்லா வீசபோற்றி யென்றார். இதனை "தேவர் கோவறியாத தேவதேவன் செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்குமற்றை, மூவர்கோனாய்நின்ற முதல்வன் மூர்த்தி மூதாதை மாதாளும்பாகத்தெந்தை யாவர்கோ னென்னையும்வந் தாண்டுகொண்டான் யாமார்க்குங் குடியல்லோம் யாதுமஞ்சோ, மேவினோ மவனடியா ரடியாரோடு மென்மேலுங் குடைந்தாடியாடுவோமே." என்னும் மணிவாசகத்தானறிக. தன்னை விரும்புவார்க்கருள்செய்பவன் என்பார். "ஆர்வஞ்...போற்றி." என்றார். இதனை "கும்பிட்டபத்தர்க் கழியாத இன்பங் கொடுக்குமுத்தர்." என்னும் திருக்கழுமல மும்மணிக்கோவையானும், "அப்பனே யெனக் கமுதனே யானந்தனே யகநெக வள்ளூறுதே, னொப்பனேயுனக் குரியவன்பரி லுரியனாயுனைப் பருக நின்றதோர், துப்பனேசுடர் முடியனேதுணை யாளனேதொழும் பாளரெய்ப்பினில், வைப்பனேயெனை வைப்பதோசொலாய் நையவையகத் தெங்கண் மன்னனே." என்னும் வாதவூரர் திருவாசகத்தானு மறிக. நினைக்குந்தோறும் பேரின்பமூறி நீங்கா இன்பமளித்தலின் தீர்விலின்சுவைத் தேனேபோற்றி யென்றார். இதனை "தினைத்தனையுள்ளதோர் பூவினிற்றே னுண்ணாதே, நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தோறு மெப்போது, மனைத்தெலும்புண்ணெக வானந்தத்தேன்சொரியுங், குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ." (எ-ம்). "சட்டோநினைக்க மனத்தமுதாஞ் சங்கரனை" என்ற மணிவாசகங்களாலறிக. தன்னை வணங்கார்க் கரியன் என்பார், வஞ்சனைமாந்தரை மறந்தோய் போற்றி என்றார். இதனை "மையமர்கண்டனை வானநாடர் மருந்தினை...பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யை...பொற்சுண்ணமிடித்துநாமே." என்பதனானும், "அடுக்கிய சீரையராயகலேந்தித்தசை யெலும்பி, லொடுக்கியமேனியொ டோணிரப்பாரொள் ளிரணியனை, நடுக்கியமா நரசிங்கனைச் சிம்புளதாய்நரல, விடுக்கிய பாதன்றன் றில்லைதொழாவிட்ட வேழையரோ." என்பதனானும், "தன்றாடரித்தா ரியாவர்க்கு மீளாவழிதருவான், குன்றா மதிற்றில்லை மூதூர்க்கொடிமேல் விடையுடையோன், மன்றாடவும்பின்னு மற்றவன்பாதம் வணங்கியங்கே, யொன்றாரிரண்டில் விழுவாரந்

தோசில வூமர்களே." எனும் கோயிற்றிருப்பண்ணியர் விருத்தத்தாலுமறிக. தேவர் வேண்ட நஞ்சினையுண்டு அவர்களைக்காத்த அருணிதியாதலின் நஞ்சினையமிர்தாய் நயந்தோய் போற்றி என்றார். உலகத்திற்கு மூலகாரணனாதலின் விரிகடல்...போற்றி என்றார். உலகத்தவர்க் கூறுசெய்த கஜாசுரன் வியாக்ரன் முதலியோரைக்கொன்று அவர் சருமங்களை யுடையாகவும் போர்வையாகவுங் கொண்டமையின் புரிவுடை வரைமாப்புணர்ந்தோய்போற்றி என்றார். சநகர் முதலியவரும் மற்ற இருடிகளும் வேண்ட வேதத்திற்குப் பொருள் அருளினமையின் காணமுன்பொருள ...போற்றி என்றார். இதனை "அருந்தவருக காலின்கீ ழறமுதலா நான்கினையு, மிருந்தவருக்கருளுமது வெனக்கறிய வியம்பேடீ, யருந்தவருக் கறமுதனான் கன்றருளிச் செய்திலனேற், றிருந்தவருககுலகியற்கை தெரியாகாண்சாழலோ." என்பதனானறிக. இறைவன இறைவியின் வேறன்மை தெரிவிப்பார் வெம்மை தணமை......பெண்ணுடனாணெனும் பெயரோய் போற்றி என்றார். இதனை "வலந்தான் கழலிடம் பாடகம் பாம்புவலமிடமே, கலந்தான்வல நீறிடஞ்சாந்தெரிவலம் பந்திடமென், பலந்தார்வலமிட மாடகம்வேல் வல மாழியிடஞ், சலந்தாழ் சடைவலந் தண்ணங்குழலிடஞ் சங்கரற்கே." என்பதனானறிக. தன்னை யடைந்தவர்களின் தீவினை யிருணீக்கிப் பேரின்பம் பயக்கும் ஞானவொளியாதலின் மேவிய வவர்தமை .....தீபமாகிய சிவனேபோற்றி என்றார். இதனை "பாசத்தைப்பற்றறுக்கலாகுநெஞ்சே பரஞ்சோதி பண்டரங்கா பாவநாசா, தேசத்தொளிவிளக்கே தேவதேவே திருவாரூர்த் திருமூலத்தானுவென்று, நேசத்தை நீபெருக்கி நேர்நின்றுள்கி நித்தலுஞ்சென்றடிமேல் வீழ்ந்துநின்று, எசற்றுநின்றிமையோ ரேறேயென்று மெமபெருமா னென்றென்றே யேத்தா நில்லே." என்னுந் திருத்தாண்டகத்தானறிக. மற்றைத்தேவர்களும் அஷ்டமூர்த்தமும் ஆவான் என்பார், மாலோய்...பொருளே போற்றியென்றார். உனை யேத்தினன்றி யுயர்நிலை யெற்றுதற்குரியார் வேறிலையென்பார். உனை நாத்தழும்பிருக்க......இருநிலத்தீதே என்றார். இதனை "பாடவேண்டுநான் போற்றிநின்னையே பாடிநைந்துநைந் துருகிநெக்குநெக், காடவேண்டுநான் போற்றியம்பலத் தாடுநின்கழற் போதுநாயினேன், கூடவேண்டுநான் போற்றியிப்புழுக் கூடுநீக்கெனைப் போற்றி பொய்யெலாம், வீடவேண்டுநான் போற்றிவீடுதந்தருளு போற்றிநின் மெய்யர்மெய்யனே." என்னுமருமைத் திருவாக்கானறிக.

திருவொற்றியூர் ஒருபாவொருபஃது.

திருவெண்காடர் பிரபந்தவுரை முற்றிற்று.

நேரிசை வெண்பா.

சங்கொலிக்கும்வெண்காடர்சாற்றுதிருமுறைக்கு
அங்கைநெல்லிபோலுரையேயாக்கினான் - மங்காத
கங்கார்விளைகழனிகங்காகுலனூர்ச்
சிங்காரவேலன்தெரிந்து.

மெய்கண்டான் பொன்னடி வாழ்க.

உ

கணபதிதுணை.

திருப்பாடற்றிரட்டு.

முதலாவது.

கோயிற்றிருவகவல்.

திருச்சிற்றம்பலம்.

நினைமின்மனனே நினைமின்மனனே
சிவபெருமானைச் செம்பொனம்பலவனை
நினைமின்மனனே நினைமின்மனனே
அலகைத்தேரி னலமருகாலின்
உலகப்பொய்வாழ்க்கையை யுடலையோம்பற்க
பிறந்தனவிறக்கு மிறந்தனபிறக்கு
தோன்றினமறையு மறைந்தனதோன்றும்
பெருத்தனசிறுக்கும் சிறுத்தனபெருக்கும்
உணர்ந்தனமறக்கும் மறந்தனவுணரும்
புணர்ந்தனபிரியும் பிரிந்தனபுணரும்
அருந்தினமலமாம் புனைந்தனவழுக்காம்
உவப்பனவெறுப்பாம் வெறுப்பனவுவப்பாம்
என்றிவையனைத்து முணர்ந்தனையன்றியும்
பிறந்தனபிறந்தன பிறவிகடோறும்
கொன்றனையனைத்து மனைத்துநினைக்கொன்றன
தின்றனையனைத்து மனைத்துநினைத்தின்றன
பெற்றனையனைத்து மனைத்துநினைப்பெற்றன
ஓம்பினையனைத்தையு மனைத்துநினையோம்பின
செல்வத்திருந்தனை தரித்திரத்தழுங்கினை
சுவர்க்கத்திற்சேர்ந்தனை நரகிற்கிடந்தனை
இன்பமுந்துன்பமு மிருநிலத்தருந்தினை
ஒன்றொன்றொழியா துற்றனையன்றியும்
புற்புதக்குரம்பை துச்சிலொதுக்கிடம்
என்னநின்றியங்கு மிருவினைக்கூட்டைக்
கல்லினும்வலிதாக் கருதினையிதனுள்

பீளையுநீரும் புறப்படுமொருபொறி
மீளுங்குறும்பி வெளிப்படுமொருபொறி
சளியுநீருந் தவழுமொருபொறி
உமிழ்நீர்கோழை யொழுகுமொருபொறி
வளியுமலமும் வழங்குமொருபொறி
சலமுஞ்சீயுஞ் சரியுமொருவழி
உள்ளுறத்தொடங்கி வெளிப்படநாறுஞ்
சட்டகமுடிவிற் சுட்டெலும்பாகும்
உடலுறுவாழ்க்கையை யுள்ளுறத்தேர்ந்து
கடிமலர்க்கொன்றைச் சடைமுடிக்கடவுளை
ஒழிவருஞ்சிவபெரும் போகவின்பத்தை
நிழலெனக்கடவா நீர்மையொடுபொருந்தி
எனதறநினைவற விருவினைமலமற
வரவொடுசெலவற மருளறவிருளற
இரவொடுபகலற விகபரமறவொரு
முதல்வனைத்தில்லையுண் முளைத்தெழுஞ்சோதியை
அம்பலத்தரசனை யானந்தக்கூத்தனை
நெருப்பினிலரக்கென நெக்குநெக்குருகித்
திருச்சிற்றம்பலத் தொளிருஞ்சிவனை
நினைமின்மனனே நினைமின்மனனே
சிவபெருமானைச் செம்பொனம்பலவனை
நினைமின்மனனே நினைமின்மனனே.

(இ - ள்). நினைமின்மனனே - மனமேநினைவாய், நினைமின்மனமே- மனமேநினைவாய், சிவபெருமானை - சிவபெருமானை, செம்பொன் - செவந்த பொன்னினாலாகிய, அம்பலவனை - அம்பலவாணனை, நினைமின்மனனே - மனமேநினைவாய், நினைமின்மனனே - மனமேநினைவாய், அலகைத்தேரின் - பேய்த்தேர்போலவும், அலமரு - சுழலுகின்ற, காலின் - காற்றையும் (ஒத்த) உலகப்பொய்வாழ்க்கையை -பொய்யாகியவுலகவாழ்க்கையையும், உடலை(அவ்வகை) உடம்பையும், ஓம்பற்க - பாதுகாவாதிருக்க, பிறந்தன - பூமியிற் பிறந்தன அனைத்தும், இறக்கும் - இறந்துபோய்விடும், இறந்தன - கெட்டனவாகிய பொருள்கள் அனைத்தும், பிறக்கும் - மீண்டும்பிறக்கும், தோன்றின - உலகிற்றோன்றியபொருள்முழுதும், மறையும்-மறைந்தொழியும், மறைந்தன மறைந்தபொருள்கள் அனைத்தும், தோன்றும், மீண்டும்உண்டாம், பெருத்தன - பெருத்தபொருள்கள்முழுதும். சிறுக்கும் - சிறுத்தபொருள்களாம், சிறுத்தன -சிறுத்தபொருள்களனைத்தும், பெருக்கும் - பெருத்த பொருள்களாம்,

உணர்ந்தன - அறிந்தவையனைத்தும், மறக்கும் - மறந்துபோம், மறந்தன - மறந்தவை முழுதும், உணரும் - உணர்விற்கொள்ளும், புணர்ந்தன - சேர்ந்தவையெல்லாம், பிரியும் - நீங்காநிற்கும், பிரிந்தன - பிரிந்தபொருள்முழுதும், புணரும் - மீண்டுஞ்சேரும், அருந்தின - உண்ணப்பட்டவையனைத்தும், மலமாம் - மலமாய் நீங்கும, புனைந்தன - அணியப்பட்டவையெல்லாம், அழுக்காம் - அழுக்காகவிலகும், உவப்பன - களிக்கத்தக்கவையனைத்தும், வெறுப்பாம் - வெறுக்கத்தக்கனவாம், வெறுப்பன - வெறுக்கத்தக்கவை யனைத்தும் உவப்பாம் - களிக்கத்தக்கவையாம், - என்று இவைஅனைத்தும் - என்று இவை முழுதும், உணர்ந்தனை - தெரிந்து கொண்டாய், அன்றியும் - இவை யல்லாமலும், பிறந்தன பிறந்தன - பலவாகப் பிறந்த, பிறவிகள் தோறும் - பிறப்புக்களில் எல்லாம், கொன்றனை யனைத்தும் - பல வுயிர்களையுங்கொன்றாய், அனைத்தும் நினைக்கொன்றன - உன்னாற் கொல்லப்பட்ட அவைமுழுதும் உன்னைக்கொன்றன, தின்றனை யனைத்தும் - எல்லாப் பொருள்களையும் உணவாகத்தின்றாய், அனைத்தும் நினைத்தின்றன - அவை யனைத்தும் உன்னையுணவாகக் கொண்டன, பெற்றனையனைத்தும் - எல்லாப் பொருள்களுக்கும் பிறப்பிடமாயினை, அனைத்தும் நினைப்பெற்றன - அப்பெற்ற அனைத்தும் நின்னைப்பெற்ற, ஓம்பினை யனைத்தும் - எல்லாப் பொருள்களையுங் காப்பாற்றினை, அனைத்தும் நினையோம்பின - அவையனைத்து நின்னைக்காத்தன, செல்வத்துக்களித்தனை - செல்வத்தினால்களிப்படைந்திருந்தனை, தரித்திரத்து அழுங்கினை - தரித்திரகாலத்து வருந்தினாய், சுவர்க்கத்து இருந்தனை - (நல்வினையால்) சுவர்க்கத்தின்கண் இன்பந்துய்த்தாய், நரகிற் கிடந்தனை - பாவத்தாற் நரகத்திடர்ப்பட்டாய், இன்பமும் துன்பமும் - இன்பதுன்பங்களாகிய விரண்டினையும், இருநிலத்து - பெரியபூவுலகினகண் அருந்தினை - அநுபவித்தாய், ஒன்றுஒன்று - மேற்கூறிய ஒவ்வொன்றினையும், ஒழியாது - நீங்காமல், உற்றனை - பொருந்தினாய், அன்றியும் - இவையன்றியும, புற்புதக்குரம்பை - நீர்க்கு மிழியொத்த உடம்பு, துச்சில் ஒதுக்கிடம் - துச்சிலென்னும் ஒதுக்கிடத்தை யொத்தது,என்ன - என்றுகூறும்படி, நின்று இயங்கும் - பூமியில் சரிக்கின்ற, இருவினைகூட்டை - இருவினையாகிய பக்ஷிகள்தங்கும் கூட்டினை, கல்லினும் - மலையைக்காட்டினும், வலிதாக - வன்மைகொண்டதாக, கருதினை - எண்ணினாய், இதனுள் இக்கூடாகிய வுடம்பினுள், பீளையும் நீரும் - பீளையும் அதனுடனியைந்த நீரும், புறப்படும ஒருபொறி - ஒருபொறியின் வழியாக வெளிப்படும், மீளும் குறும்பி - வெளிப்படும் குறும்பி, புறப்படும் ஒருபொறி - ஒரு பொறியின்வழி வெளிப்படும், ஒருபொறி - ஒருபொறியின்வழி, உமிழ்நீர் - உமிழ்நீரும், கோழை - சிலேஷ்மமும், ஒழுகும் - வெளிப்பட்டொழுகும், ஒருவழி - ஒருவழியாக, வளியும் - அபானவாயுவும், மலமும் - மலமும், வழங்கும் - வெளிப்படும, ஒருவழி - ஒரு வழியாக, சலமும் சீயும் - நீரும் சீயும், சரியும் - வெளிப்படும், (இத்தலைகத்தாய்) உள்ளூறத்தொடங்கி - உள்ளிடந்தொடக்கமாக, வெளிப்படநாறும் - வெளிப்படாநிற்க நாறுகின்ற, சட்டகம் - உடம்பானது, முடிவில் - உயிர்

நீங்கிய காலத்து, சுட்டு எலும்பாகும் - சுடப்பட்டு எலும்பாந்தன்மைபெற்ற, உடல்உறு - தேகத்துடன் கூடியிருக்கிற, யாழ்க்கையை - வாழ்தலை, உள்ளுறத்தேர்ந்து - முழுதும் ஆராய்ந்து, கடிமலர்க்கொன்றை சடைமுடி - மணந்தங்கிய கொன்றைமலரைச் சடைமுடிக்கண்ணணிந்த, கடவுளை - சிவபெருமானை, ஒழிவரும் - நீங்குதலில்லாத, சிவபெரும்போகம் - சிவமாம்பெருவாழ்வைத் தருகின்ற, இன்பத்தை - இன்பத்தினை, நிழல் என - (பாசவெயிற்பட்டுக் களைப்புறுவோர்க்கு) நிழலெனவெண்ணி, கடவா - அந்நிழலைவிட்டு நீங்காத, நீர்மையொடு பொருந்தி - தன்மையுடன்பொருந்தி, எனது அற - எனதெனும்புறப்பற்று அற, நினைவு அற - நினைவுஒன்றும் நீங்க, இருவினை - நல்வினை தீவினைகளாலாகும், மலம் அற - மலவழுக்கு நீங்க, வரவொடுசெலவு - போக்கு வரவுகள், அற - நீங்க, மருள் அற - மயக்கம் நீங்க, இருள்அற - அஞ்ஞானஇருள் நீங்க, இரவொடு - இரவுடன், பகல் அற - பகலுந்தோன்றாது நீங்க, இகபரம் அற - இகத்திலும் பரத்திலும் உண்டாம் வினைகள் நீங்க, ஒரு முதல்வனை - ஒப்பற்ற முதற்கடவுளை, தில்லையுள் - திருக்கோயிலுள், முளைத்து எழும் - முளைத்தெழுந்த, சோதியை - சோதியுருக்கொண்டானை, அம்பலத்து - திருச்சிற்றம்பலத்தின்கண் எழுந்தருளியிருக்கும், அரசனை - தேவராசனை, ஆனந்தக்கூத்தனை - சிவானந்திகள் மனதில் நடிப்பானை, நெருப்பினில் - நெருப்பினிடத்து, அரக்குஎன - அரக்கைப்போல, நெக்குநெக்கு - மனம் பல்கால் நெகிழ்ச்சியடைந்து, உருகி - உருகுதலையடைந்து, திருச்சிற்றம்பலத்து - திருச்சிற்றம்பலத்து, ஒளிரும் - பிரகாசிக்கின்ற, சிவனை - சிவபெருமானை, நினைமின்மனனே நினைமின்மனனே - மனனே நினைமின்மனனே நினைமின், சிவபெருமானை - சிவபெருமானை, செம்பொன் அம்பலவனை - சிவந்த பொன்னம்பலவனை, நினைமின்மனனே நினைமின்மனனே - மனனே நினைமின் மனனே நினைமின் எ-று.

(கு - ரை.) மனமே, இளமைநிலையாது, யாக்கைநிலையாது, செல்வம் நிலையாது என்பதைச் செம்மையுற ஆய்ந்து இறைவன் திருவடிநிழலைப் பொருந்தி யான் எனது அறநெருப்பினில் அரக்கென நெக்குருகித் திருச்சிற்றம்பலத்து ஒளிரும் ஆனந்தக்கூத்தனை நினைவாயாக நினைவாயாக என்பது.

இரண்டாவது
கோயிற்றிருவகவல்.

காதளவோடிய கலகப்பாதகக்
கண்ணியர் மருங்கிற் புண்ணுட னுடுங்
காதலுங் கருத்துமல் லானின் னிருதாட்
பங்கயஞ்சூடப் பாக்கியஞ்செய்யாச்
சங்கடங்கூர்ந்த தமியேன்பாங்கிருந்
தங்கோடிங்கோ டலமருங்கள்வர்

ஐவர்கலகமிட் டலைக்குங்கானகம்
சலமலபபேழை இருவினைப்பெட்டகம்
வாதபித்தங்கோழை குடிபுகுஞ்சீறூர்
ஊற்றைப்பின்றெ றுதிரக்கட்டளை
நாற்றப்பாண்ட நான்முழத்தொன்பது
பீற்றத்துண்டம் பேய்ச்சுரைத்தோட்டம்
அடலைப்பெரிய சுடலைத்திடருள்
ஆசைக்கயிற்றி லாடும்பம்பரம்
மாயாவிகார மரணப்பஞ்சரம்
சோற்றுத்துருத்தி தூற்றும்பத்தம்
காற்றிற்பறக்குங் கானப்பட்டம்
விதிவழித்தருமன் வெட்டுங்கட்டை
சதுர்முகப்பாணன் றைக்குஞ்சட்டை
ஈமக்கனலி லிடுசிலவிருந்து
காமக்கனலிற் கருகுஞ்சருகு
கிருமிகிண்டுங் கிழங்கஞ்சருமி
பலக்கொழுந்தேறுங் கவைக்கொழுகொம்பு
மணமாய்நடக்கும் வடிவின்முடிவிற்
பிணமாய்க்கிடக்கும் பிண்டம்பிணைமேல்
ஊரிற்கிடக்க வொட்டாவுபாதி
காலெதிர்குவித்த பூளைகாலைக்
கதிரெதிர்பட்ட கடும்பனிக்கூட்டம்
அந்தரத்தியங்கு மிந்திரசாபம்
அதிருமேகத் துருவினருநிழல்
நீரிற்குமிழி நீர்மேலெழுத்து
கண்டுயில்கனவிற் கண்டகாட்சி
அதனினும்பொல்லா மாயக்களங்கம்
அமையுமமையும் பிரானேயமையும்
இமையவல்லி வாழியென்றேத்த
ஆனந்தத் தாண்டவங்காட்டி
ஆண்டுகொண்டருள்கைநின் னருளினுக்கழகே.

(இ - ள்.) காதளவு - காதின் அளவாக, ஓடிய - ஓடியுள்ள, கலகபாதக கண்ணியர் - பாதகத்தை விளைக்கும் கலகக்கண்ணிணையுடைய அரிவையரது, மருங்கிற் - இடைக்கணுள்ள, புண்ணுடன் - புண்ணாகிய யோனிவயப்பட்டு,

ஆடும் - சரிக்கின்ற, காதலும் கருத்தும் அல்லால் - ஆசையும் மனமும் அல்லாது, நின் இருதாள்பங்கயம் - தேவரீரது இணையடியாகிய தாமரைகளை, சூடபாக்கியம்செய்யா-முடிக்கண்ணணியப்பாக்கியம் செய்யாத, சங்கடம்கூர்ந்த - துன்பமிகுந்த, தமியேன் - துணையிலியாகிய அடியேனுடைய, பாங்கு இருந்து - உடனிருந்து, அங்கோடு இங்கோடு - அங்குமிங்கும், அலமரும் - சுழலுகின்ற, கள்வர் ஐவர் - பஞ்சேந்திரியங்களாகிய ஐந்து கள்வர்கள், கலகம் இட்டு - ஒருவரோடொருவர் கலகஞ்செய்து, அலைக்கும் - வருத்துகின்ற, கானகம் - காடு, சலமலபேழை - சலமுதலியமலங்கள் தங்கியபெட்டி, இருவினை - நல்வினைதீவினைகள் நிறைந்த, பெட்டகம் - பேழை, வாத பித்தம் கோழை - வாதபித்த சிலேஷ்மாதிகள், குடிபுகும் - நிலைத்திருக்கின்ற, சீறூர் - சிற்றூர், ஊத்தைபுல்தோல் - அழுக்குடனிறைந்த புல்லிய சருமமும், உதிரம்-செந்நீரும் (நிறைந்த,) கட்டளை - நிறைகருவி, நாற்றப்பாண்டம்-நாற்றமாகியபாண்டம், நான்முழத்து - நான்கு முழமாகிய, ஒன்பதுபீறல் - ஒன்பது கிழிபட்ட, துண்டம் - அறுகை, பேய்சுரைதோட்டம் - பேய்ச்சுரைக் கொடிகள்போன்ற வுள்ளுறுப்புகள்நிறைந்த தோட்டம், அடலைபெரிய - மிக்க சாம்பர்நிறைந்த, சுடலைதிடருள்-சுடலையாகிய மேட்டிள்ளிடம், ஆசைக்கயிற்றில்-ஆசையெனும் கயிற்றினால், ஆடும் - சுழலுகின்ற, பம்பரம் - பம்பரமென்னும் சுழற்கருவி, ஓயா - நீங்காத, நோய்க்கு இடம்-நோய்களுக்கு இருக்கை, ஓடும்-நீர்மேல் ஓடுகின்ற, மரக்கலம் - கப்பல், மாயாவிகாரம் - மாயையாகிய விகாரம், மரணபஞ்சரம் - மரணமடையுங்கூண்டு, சோற்றுத்துருத்தி- சோறுநிறைக்குந்தோற்றுருத்தி, தூற்றும்பத்தம்-காற்றில்தூற்றுங்கருவி, கானப்பட்டம் ஓசையுடன் கூடியகாற்றாடி, விதிவழி-இறைவன்விதிப்படி, தருமன்-யமன், வெட்டும்கட்டை - வெட்டுகின்றகட்டை, சதுர்முகப்பாணன் - பிரமனாகியதுன்னுவோன், தைக்கும் சட்டை - தைக்கின்ற சட்டை, ஈமக்கனலில் - சுடுகாட்டு நெருப்பில், இடு - வைக்கப்பட்ட, சிலவிருந்து - சிறுவிருந்து, காமக்கனலில் - காமமாகிய நெருப்பினால், கருகும் - சாம்பலாகாது கருகிக்கெடும், சருகு - சாரமிலாத்தழை, கிருமிகிண்டும் - புழுக்கள் கிண்டுகின்ற, கிழங்குஞ்சருமி தோலுடனியைந்த கிழங்கு, பவக்கொழுந்து - பிறவியென்னு மிளந்தளிர், ஏறும்-ஏறிப்படருதற்கான, கவைகொழுகொம்பு - சிறு கிளைகள் கிளைத்துள்ள கொழுகொம்பு, மணமாய்நடக்கும் வடிவில் - மணங்கொண்டு நடக்கும் வடிவத்துடன், முடிவில் - ஆயுண்முடிவில், பிணமாய்-பிணமாகி, கிடக்கும் பிண்டம்-(அசைவின்றிக் கிடக்கும் பிண்டம், பிணமேல் - பிணமானபின் எனிலோ, ஊரில்கிடக்க ஒட்டாத - ஊரினிடத்துச்சிறிதுபொழுதுந்தங்கவையாத, உபாதி - துன்பமுடையது, கால்எதிர் - காற்றிற்கெதிராக, குவித்த - குவியலாகச் சேர்த்துவைத்த, பூளை - பூளைப்பூ, காலைக்கதிர் எதிர்ப்பட்ட - காலையிலெழும் சூரியனுக்கெதிர்ப்பட்ட, கடும் பனிகூட்டம் - கடிய பனியின் சும்மை, அந்தரத்து இயங்கும் - ஆகாயத்துச்சரிக்கும், இந்திர சாபம் - இந்திர வில், அதிரும் மேகத்து உருவின் - சப்திக்கின்ற மேகத்தையொத்த வுருவினையுடைய, அருநிழல் - அருகிய நீழல், நீரில்குமிழி - நீரிடத்துத்தோன்றி மறையு

நீர்க்குமிழி, நீர்மேல்எழுத்து - நீர்மேலெழுதிய எழுத்து, கண்துயில்கனவில் - உறங்குகையிலுண்டான கனவினிடம், கண்டகாட்சி - கண்ட கனத்தோற்றம், அதனினும் - அந்நிலையற்ற தோற்றரவினும், பொல்லா - கொடிய, மாய க்களங்கம் - மாயமாகிய குற்றமுள்ள பொருள், (இதனுடன் கூடிவாழும் வாழ்க்கை) அமையும் அமையும் - போதும் போதும், பிரானே அமையும் - எம் தலைவனே போதும், இமயவல்லி - பர்வதராஜ புதரி, வாழிஎன்று எத்த - வாழ்கஎன்று துதிக்க, ஆநந்தத்தாண்டவம் காட்டி - ஆநந்தநடனத்தையடியேன் தரிசிக்குமாறு திருவருள்புரிந்து, ஆண்டுகொண்டருள்கை - அடிமைகொண்டருளுதல், நின் அருளினுக்கு - நின் திருவருளுக்கு, அழகு - அழகைத்தருவதாம். எ-று.

(கு - ரை) இறைவ, மனத்தை வசித்துக் கலகத்தைச்செய்யும் கண்ணையுடைய அரிவையர் மருங்கிலுள்ள புண்ணின்கண் ஆசைவைத்துழலும் அடியேனுடனிருந்து, உழல்விக்கும் பஞ்சேந்திரியக் கள்வர் கலகமிட்டு வருத்தும் கானகத்தையும் நீர்க்குமிழியையும் நீர்மே லெழுத்தையும் ஒத்த இந்நிலையற்ற தேகத்துடன் கூடிப் புசித்த போகம் அமையுமமையும் இனியிமயவல்லி வாழியென்று எத்த ஆநந்தத்தாண்டவம் தரிசிப்பித்து ஆண்டுகொண்டருள்கை நின்னருளினுக்கழகாம். என்பது கருத்து. கள்வர் காட்டிற்செல்வோரை வருத்தல்போல் இந்திரியங்கள் ஒருவழிச் செல்லவொட்டாது ஆன்மாவைத் துன்புறுத்தலின் கள்வர் என்றார். கட்டளை என்பது, நிறைகருவி, இது கல்லறுக்குங் கருவிக்கும் பெயர். பாதமுதல் தலையளவு தேகத்தினளவு நான்கு முழமாதலால் நான்முழமெனவும், ஒன்பது துவாரமுள்ளதாதலால் ஒன்பது பீறல் எனவும் கூறினார். பீறல், கிழிந்ததுணி. உடலுள் குடல் முதலிய உறுப்புகளும் இரைப்பை முதலியவும் சுரையின் கொடிபோன்று பின்னப்பட்டும் சுருண்டு மிருத்தலின் பேய்ச்சுரைத்தோட்டம் என்றார். துருத்தி என்பது கொல்லனுலையூதும் தோற்கருவி. பத்தம் என்பது நார் முதலியவற்றால் கட்டப்பட்டு பதர்நீக்கக் காற்றில் தூற்றும் ஒருவகை தூற்றும் கருவி. கானப்பட்டம் காற்றுத் தன்மீது படுங்காலத்து ஓசையிடுதலினதனை யவ்வாறு கூறப்பட்டது பெருந்தீக்குப் புன்தேகம் எரிக்கும் பொருளன்றாமாதலின் சிலவிருந்து என்றார். மணங்கொள்கையில் மாலையுங் கூறையுந் தரித்தல்போல் பிணமாகுங் கூறும் தரித்தலின் மணமாய்...பிணமாய்க் கிடக்கும் பிண்டம் என்றார். பிணமானபின் ஊரில் தங்கவொட்டாது விரைவில் சுமந்திடை வைக்க மற்றவர் புகுதலின் ஊரிற்கிடக்கவொட்டா வுபாதி என்றார். இவ்வகைபலவகைப்பட்ட துன்பத்துடனியைந்த தேகத்துடனிருத்தல் பொறாதார் அமையு மமையுமென்றார்.

மூன்றாவது
கோயிற்றிருவகவல்.

பாற்கடல்கடையப் படுங்கடுவெண்ணெயைத்
திருமிடற்றடக்கிய சிவனேயடைக்கலம்
அடங்கலுமடக்கிடு மடங்கொலைக்காலனைக்
காலெடுத்தடக்கிய கடவுணின்னடைக்கலம்
உலகடங்கலும்படைத் துடையவன்றலைபறித்
திடக்கையிலடக்கிய விறைவநின்னடைக்கலம்
செய்யபொன்னம்பலச் செல்வநின்னடைக்கலம்
ஐயநின்னடைக்கல மடியநின்னடைக்கலம்
மனைவழியலைந்திடுங் கனவெனும்வாழ்க்கையும்
விழுப்பொருளறியா வழுக்குறுமனனும்
ஆணவமலத்துதித் தலைந்தலைந்திடு
நினைவைப்புழுவென நெளிந்திடுசிந்தையும்
படிறும்பாவமும் பழிப்புறுநினைப்பும்
தவறுமழுக்காறு மிவறுபொச்சாப்பும்
கவடும்பொய்யும் சுவடுபெருஞ்சினம்
இகலுங்கொலையு மிழிப்புறுபுன்மையும்
பகையுமச்சமுந் துணிவும்பனிப்பும்
முக்குணமடமையு மைம்பொறிமயக்கமும்
இடும்பையும்பிணியு மிடுக்கியவாக்கையை
உயிரொனுங்குருகுவிட் டோடுங்குரம்பையை
எலும்பொடுநரம்புகொண் டிடையிற்பிணித்து
கொழுந்தசைமேய்ந்து மொழுக்குவிழுங்குடிலைச்
செழும்பெழுவுதிரச் சிறுபுழுக்குரம்பையை
மலவுடற்குடத்தைப் புலவுடற்புட்டிலைத்
தொலைவிலாச்சோற்றுத் துன்பக்குழியைக்
கொலைபடைக்கலம்பல கிடக்குங்கூட்டைச்
சலிப்புறுவினைப்பல சரக்குக்குப்பையைக்
கோட்சரக்கொழுகும் பீற்றக்கோணியைக்
கோபத்தீமூட்டுங் கொல்லன்றுருத்தியை
ஐம்புலப்பறவை யடையும்பஞ்சரத்தை
புலராக்கவலை விளைமரப்பொதும்பை

ஆசைக்கயிற்றி லாடும்பம்பரத்தைக்
காசிற்பணத்திற் சுழலுங்காற்றாடியை
மக்கள்வினையின் மயங்குந்திகிரியைக்
கடுவெளியுருட்டிய சகடக்காலைப்
பாவச்சரக்கொடு பவக்கடல்புக்குக்
காமக்காற்றெடுத்தலைப்பக்
கெடுவழிக்கரைசேர் கொடுமரக்கலத்தை
இருவினைவிலங்கொடு மியங்குபுற்கலனை
நடுவன்வந்தழைத்திட நடுங்கிடும்யாக்கையைப்
பிணமெனப்படுத்தியான் புறப்படும்பொழுதுநின்
அடிமலர்க்கமலத்துக் கபயநின்னடைக்கலம்
வெளியிடையுருமிடி யிடித்தெனவெறித்தெழுங்
கடுநடைவெள்விடைக் கடவுணின்னடைக்கலம்
இமையாநாட்டத் திறையேயடைக்கலம்
அடியார்க்கெளியா யடைக்கலமடைக்கலம்
மறையவர்தில்லை மன்றுணின்றாடிக்
கருணைமொண்டலையெறி கடலேயடைக்கலம்
தேவருமுனிவருஞ் சென்றுநின்றேத்தப்
பாசிழைக்கொடியொடு பரிந்தருள்புரியும்
எம்பெருமானின் னிணையடிக்கபயம்
அம்பலத்தரசே யடைக்கலமுனக்கே.

இ - ள். பால்கடல் - க்ஷீராப்தியில், கடையப்படும் - (தேவர்களால்) கடைந் தெடுக்கப்பெற்ற, கடுவெண்ணெயை - விடமாகிய வெண்ணெயை திருமிடற்று - ஸ்ரீகண்டத்திலே, அடக்கிய - அடக்கிவைத்த, சிவனே - சிவபெருமானே, அடைக்கலம் - அடியேன் உன் கையடை, அடங்கலும் - எல்லாவற்றையும், அடக்கிடும் - அடக்குகின்ற, கடுகொலைகாலனை - கடுமையான கொலைத்தொழில்புரியும் யமனை, காலெடுத்து - திருவடி தூக்கியுதைத்து, அடக்கிய - அடக்கிவிட்ட, கடவுள் - கடவுளே, நின் அடைக்கலம் - அடியேன் உன் கையடை, உலகு அடங்கலும் படைத்துடையவன் - உலகமுழுதும் சிருஷ்டித்தவனாகிய பிரமாவின், தலையறுத்து - ஒரு தலையைக்கிள்ளி, இடக்கையில் அடக்கிய - இடது கரத்தில் தரித்துக்கொண்ட, இறைவ - தலைவனே, நின் அடைக்கலம்-அடியேன் உன்கையடை, செய்ய - செவ்விய, பொன்னம்பலச் செல்வ - பொன்னம்பலத்தி லெழுந்தருளிய செல்வனே, நின் அடைக்கலம் - அடியேன் உன்கையடை, ஐய - ஐயனே, நின் அடைக்கலம் - உன் கையடை, அடியன் நின் அடைக்கலம் - அடியே னுன்னடை

க்கலம், மனவழி அலைத்திடும் - மனத்தின் வழியே யலைக்கப்படுகின்ற, கனவு என்னும் வாழ்க்கையும் - சொப்பனத்துக்கு ஒப்பாகிய வாழ்வும், விழுப்பொருள் அறியா – மேன்மையாகிய பொருளை யறியாத, அழுக்குஉறு மனனும்-அழுக்கடைந்தமனமும், ஆணவமலத்து உதித்து-ஆணவமலத்தின்கண்பிறந்து, அளைந்து அதில் உளைந்திடும் – கலந்து அதிலேயே உழைத்துக்கொண்டிருக்கும், நிணவைப் புழுவென - நிணத்திலுண்டாம் புழுப்போல, நெளித்திடு சிந்தையும் - நெளியாநின்ற சிந்தனையும், படிறும் - வஞ்சகமும், பாவமும்-பாவமும், பழிப்பு உறுநினைப்பும் - பழித்தற்குரிய நினைப்பும், தவறும் - குற்றமும், அழுக்காறும் - பொறாமையும், இவறுபொச்சாப்பும் - மிகுந்த மறதியும், கவடும் – வஞ்சகமும், பொய்யும் - அசத்தியமும், சுவடும் – (இவற்றின்) தழும்பும், பெருஞ்சின இகலும்–பெருங்கோபத்தின் வல்லமையும், கொலையும்-கொலைத்தொழிலும், இழிப்பு உறு புன்மையும் – இழிவுபடுத்தற் குரிய இழிதொழில்களும், பகையும்-சத்துருத்துவமும், அச்சமும்-பயமும், துணிவும்-துணிதலும், பனிப்பும் - நடுக்கமும், முக்குணமடமையும் - முக்குணவசத்தாலுண்டான அறியாமையும், ஐம்பொறி முயக்கமும் – ஐம்பொறியினிணக்கமும், இடும்பையும் - துன்பமும், பிணியும்-வியாதிகளும் (ஆகிய இவற்றை) இடுக்கிய - கைக்கொண்டிருக்கிற, ஆக்கையை - உடம்பை, உயிர் என்னும் குருகு – உயிர் என்கிற பறவையானது, விட்டு ஓடும் குரம்பையை – விட்டு ஓடாநின்ற கூட்டை, எலும்பொடு நரம்புகொண்டு - எலும்பையும் நரம்பையுங்கொண்டு, இடையில் பிணித்து – இடையிலே கட்டி, கொழுந்தசை மேய்ந்து - கொழுமையாகிய மாமிசத்தினால் மூடப்பட்டு, மொழுக்குவிழும் குடிலை - மெழுகியிருக்குங் குடிசையை, செழும்பு எழு உதிரச் சிறுபுழுக்குரம்பையை - செழுமையுண்டாகிய உதிரமயமான சிறியபுழுக்கள்பொருந்திய கூட்டை, மலவுடல் குடத்தை – மலவுடம்பாகிய குடத்தை, புலவு உடல்புட்டிலை - புலவுடம்புப் புட்டியை, தொலைவு இல்லா – நீக்கமில்லாத, சோற்றுத் துன்பக்குழியை - சோற்றினால் தூர்க்கப்பட்ட துன்பமாகிய பள்ளத்தை, கொலைபடைக்கலம் பலகிடக்கும் கூட்டை - கொலைக்குரிய பல ஆயுதங்கள் தங்கியிருக்கிற கூட்டினை, சலிப்பு உறுவினைப்பல சரக்குக்குப்பையை-சலித்தற்குரிய வினைகளென்கிற பல சரக்குகளின் குவியலை, கோள்சரக்கு ஒழுகும் பீறல் கோணியை- துன்பச்சரக்குகள் சிந்துகின்ற கிழிச்சற்கோணியை,, கோபத்தீமூட்டுங் கொல்லன் துருத்தியை - கோபமாகிய தீயை மூள்விக்கின்ற கொல்லனது துருத்தியை, ஐம்புலப்பறவை அடையும் பஞ்சரத்தை ஐம்புலன்கள் என்கிற பறவைகள் சேர்கின்ற கூட்டை, புலராகவலை விளைமரப்பொதும்பை – அழியாத விசனங்கள் விளைதற்கிடமான மரப்பொந்தை, ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரத்தை - ஆசையாகிய கயிற்றினால் ஆட்டப்படுகிற பம்பரத்தை, காசில் பணத்தில் சுழலுங் காற்றாடியை - காசிலும் பணத்திலும் சுழலாநின்ற காற்றாடியை, மக்கள் வினையின் மயங்கும் திகிரியை-மக்களது செய்வினையால் மயங்குகின்றசக்கரத்தை, கடுவெளி உருட்டிய

சகடக்காலே - கடுவெளியிலுருட்டின வண்டிச்சக்கரத்தை, பாவச்சரக்கொடு-பாவமாகிய சரக்குகளுடன், பவக்கடல் புக்கு - பிறவியாகியகடலிற் புகுந்து, காமக்காற்று எடுத்து அலைப்ப — காமமென்கிற காற்றானது அலைத்தலால், கெடுவழிக்கரைசேர் - கெட்டவழியாகிய கரையினையடைகின்ற, கொடுமரக் கலத்தை - கொடியமரக்கலத்தை, இருவினை விலங்கொடும் - இருவினையாகிய சங்கிலிகளுடன், இயக்குபுற்கலனை - சஞ்சரிக்கிற வுயிரை, நடுவன் வந்து அழைத்திட - யமன் வந்துவிளிக்க, நடுங்கிடும் யாக்கையை - நடுக்கமெய்துகின்றவுடலை, பிணம் எனப்படுத்தி - பிணத்தன்மையாக்கி, யான் புறப்படும் பொழுது - அடியேன் வெளிப்படும்போது, நின் - உனது, அடி - திருவடியென்கிற, மலர்க்கமலத்துக்கு - தாமரைமலருக்கு, அபயம் - அபயம், நின் அடைக்கலம்-உன் கையடை, வெளியிடை - ஆகாயத்திலே, உரும் இடியிடித்தென - இடி இடித்தாற்போல, வெறித்து எழும் - மதித்தெழாநின்ற, கடுநடை - வேகமாகிய நடையினையுடைய, வெள்விடை - வெண்மையாகிய விடபத்தையுடைய, கடவுள் - கடவுளே, நின் அடைக்கலம் - உன்கையடை, இமையாநாட்டத்து-இமையாத கண்ணினையுடைய, இறையே அடைக்கலம்-இறைவனே அடைக்கலம், அடியார்க்கு எளியாய் - அடியவர்க்கெளியவனே, அடைக்கலம் அடைக்கலம் - கையடைகையடை, மறையவர் - அந்தணர்வசிக்கின்ற, தில்லைமன்றுள் - தில்லையம்பலத்தில், நின்றுஆடி - நின்று ஆனந்தக் கூத்தாடி, கருணைமொண்டு-கிருபையை முகந்து, அலையெறி — அலைகளாக வீசுகின்ற, கடலே அடைக்கலம் - இன்பசமுத்திரமே அடைக்கலம், தேவரும் - தேவர்களும், முனிவரும் முனிவர்களும், சென்று நின்றுஏத்த-போய் நின்று துதிசெய்ய, பாசிழைக்கொடியொடு — பசியபொன்னாபரணங்களையணிந்தகொடிபோல்பவளாகிய உமாபிராட்டியோடு, பரிந்து அருள்புரியும்-இரங்கியருள்புரிகின்ற, எம்பெருமான்—எம்பிரானே, நின் இணையடிக்கு அபயம்-உன் திருவடியிணைக்கு அபயம், அம்பலத்து அரசே-பொன்னம்பலத்துக்கு இறைவனே, உனக்கே அடைக்கலம்-உனக்கே அடியேன்கையடை, எ-று.

திருப்பாற்கடலினுதித்த விஷமாகிய வெண்ணெயைத் திருமிடற்றிலடக்குதல், எல்லா வுயிர்களையும் அடக்கும் ஆற்றலுள்ள யமனைத்திருவடியாலுதைத்தடக்குதல் முதலிய அற்புதச்செயல்களைச்செய்த தில்லையம்பலத்தலைவனே கனவினையொத்த இப்பொய்வாழ்வினையும் இப்பொய்யுடம்பினையும் விலகி நான் வெளிப்படும்போது உன் திருவடியிணையே, எனக்குக் கதி என்பது கருத்து.

நான்காவது

கச்சித்திருவகவல்.

திருமால்பயந்த திசைமுகனமைத்து
வருமேம்பிறவியு மானுடத்துதித்து
மலைமகள்கோமான் மலரடியிறைஞ்சிக்
குலவியசிவபதங் குறுகாதவமே
மாதரைமகிழ்ந்து காதல்கொண்டாடும்
மானிடர்க்கெல்லாம் யானெடுத்துரைப்பேன்
விளிவெளிமாக்க டெளிவுறக்கேண்மின்
முள்ளுங்கல்லு முயன்றுநடக்கும்
உள்ளங்காலைப் பஞ்செனவுரைத்தும்
வெள்ளெலும்பாலே பேசியகணைக்காற்
றுள்ளும்வராலெனச் சொல்லித்துதித்தும்
தசையுமெலும்புந் தக்கபுன்குறங்கை
இசையுங்கதலித் தண்டெனவியம்பியும்
நெடுமுடமுங்கி நின்றிடுமிடையைத்
துடிபிடியென்று சொல்லித்துதித்தும்
மலமுஞ்சலமும் வழும்புந்திரையும்
அலையும்வயிற்றை யாலிலையென்றும்
சிலந்திபோலக் கிளைத்துமுன்னெழுந்து
திரண்டுவிம்மிச்சீப்பாய்ந்தேறி
உகிராற்கீற வுலர்ந்துள்ளுருகி
நகுவார்க்கிடமாய் நான்றுவற்றும்
முலையைப்பார்த்து முளரிமொட்டென்றும்
குலையுங்காமக் குருடர்க்குரைப்பேன்
நீட்டவுமுடக்கவு நெடும்பொருள்வாங்கவும்
ஊட்டவும்பிசையவு முதவியிங்கியற்றும்
அங்கையைப்பார்த்துக் காந்தளென்றுரைத்தும்
வேர்வையுமழுக்கு மேவியகழுத்தைப்
பாரினிலினிய கமுகெனப்பகர்ந்தும்
வெப்புமூத்தையு மேவியவாயைத்
துப்புமுருக்கின் றாய்மலரென்றும்

அன்னமுங்கறியு மனைசவிட்டிறக்கும்
முன்னியபல்லை முத்தெனமொழிந்தும்
நீருஞ்சளியு நின்றுநின்றொழுகும்
கூரியமூக்கைக் குமிழெனக்கூறியும்
தண்ணீர்பீளை தவிராதொழுகும்
கண்ணைப்பார்த்துக் கழுநீரென்றும்
உள்ளுங்குறும்பி யொழுகுங்காதை
வள்ளைத்தண்டின் வளமெனவாழ்த்தியும்
மையுமெண்ணெயுங் கலவாதொழியில்
வெய்யவதரும் பேனும்விளையத்
தக்கதலையோட் டின்முளைத்தெழுந்த
சிக்கின்மயிரைத் திரண்முகிலென்றும்
சொற்பலபேசித் துதித்துநீங்கள்
நச்சிச்செல்லு நரகவாயில்
தோலுமிறைச்சியுந் துதைந்துசீப்பாயும்
காமப்பாழி கருவிளைகழனி
தூமைக்கடவழி தொளைபெறுவாயில்
எண்சாணுடம்பு மிழியும்பெருவழி
மண்பாற்காமங் கழிக்குமறைவிடம்
நச்சிக்காமுக நாய்தானென்றும்
இச்சித்திருக்கு மிடைகழிவாயில்
திங்கட்சடையோன் றிருவருளில்லார்
தங்கித்திரியுஞ் சவலைப்பெருவழி
புண்ணிதுவென்று புடவையைமூடி
உண்ணீர்பாயு மோசைச்செழும்புண்
மால்கொண்டறியா மாந்தர்புகும்வழி
நோய்கொண்டொழியா நுண்ணியர்போம்வழி
தருக்கியகாமுகர் சாரும்படுகுழி
செருக்கியகாமுகர் சேருஞ்சிறுகுழி
பெண்ணுமாணும் பிறக்கும்பெருவழி
மலஞ்சொரிந்திழியும் வாயிற்கருகே
சலஞ்சொரிந்திழியுந் தண்ணீர்வாயில்
இத்தைநீங்க ளினிதெனவேண்டா
பச்சிலையிடினும் பத்தர்க்கிரங்கி

மெச்சிச்சிவபத வீடருள்பவனை
முத்திநாதனை மூவாமுதல்வனை
அண்டரண்டமு மனைத்துள புவனமும்
கண்டவண்ணலைக் கச்சியிற்கடவுளை
ஏகநாதனை யிணையடியிறைஞ்சுமின்
போகமாதரைப் போற்றுதலொழிந்தே.

(இ-ள்.) திருமால்பயந்த திசைமுகன்-விஷ்ணுமூர்த்தி பெற்ற சதுமுகப் பிரமதேவன், அமைத்துவரும்-சிருட்டித்துவருகின்ற, எழ்பிறவியும்-எழுவகைப் பிறவிகளினும், மாநுடத்துஉதித்து - மனிதஜனனத்திலுதித்து, மலைமகள்கோமான்-உமாதேவியின் தலைவனாகிய சிவபெருமானது, மலர் அடி இறைஞ்சி - மலர்ப்பாதங்களைப் பணிந்து, குலவிய - விளங்குகின்ற, சிவபதம் குறுகாது - சிவபதவியை யடையாமல், அவமே - வீணாக, மாதரை மகிழ்ந்து- பெண்களை இச்சைகொண்டு, காதல்கொண்டாடும் - ஆசையினைப் பாராட்டாநின்ற, மானிடர்க்கு எல்லாம் - மாந்தர்கள் யாவர்க்கும், யான் எடுத்து உரைப்பேன் - அடியேனெடுத்துச் சொல்லுவேன், விழிவெளிமாக்கள் - புறக்கண்களையுடைய மாந்தர்களே, தெளிவுறக்கேண்மின்-நீங்கள்தெளிவடையக் கேளுங்கள், முள்ளும்கல்லும் - முள்ளின்மீதும் கல்லின்மீதும், முயன்றுநடக்கும் - முயன்றுநடக்கின்ற, உள்ளங்காலை - உள்ளங்கால்களை, பஞ்சுஎனஉரைத்தும் - பஞ்சென்று சொல்லியும், வெள்ளஎலும்பாலே மேவியகணைக்கால் - வெள்ளெலும்பினாலே யாக்கப்பெற்ற கணைக்காலை, துள்ளும் - துள்ளுகின்ற, வரால் எனச்சொல்லி - வரால் மீன்களென்று கூறி, துதித்தும் - புகழ்ச்சி செய்தும், தசையும் எலும்பும் - மாமிசமும் எலும்பும், தக்க - பொருந்திய, புன்குறங்கை - புல்லியதொடையை, இசையும் - பொருந்துகின்ற, கதலித்தண்டுஎன இயம்பியும் - வாழைத்தண்டு எனக்கூறியும், நெடும் உடல்தாங்கி நின்றிடும் இடையை - நெடிய உடம்பைச் சுமந்துநிற்கும் மருங்குலை, துடி பிடி என்றுசொல்லி துதித்தும் - உடுக்கையென்றும் பிடியென்றும் சொல்லிப் புகழ்ந்தும், மலமும் சலமும் - மலமும் நீரும், வழும்பும் திரையும் - நிணமும் திரைச்சலும், அலையும்வயிற்றை - தங்கியசைகின்ற வயிற்றை, ஆல்இலையென்றும் - ஆலிலையெனக் கூறியும், சிலந்திபோல - கொப்புளம்போல, கிளைத்து - இரண்டாகி, முன்எழுந்து - முற்பக்கத்தில் தோன்றி, திரண்டு - திரட்சிபெற்று, விம்மி-பூரித்து, சீப்பாய்ந்து ஏறி - சீப்பெருகியேறி, உகிரால்கீற - நகத்தாற்கிழிக்க, உலர்ந்து - உலர்ந்துபோய், உள் உருகி - மனமுருகி, நகுவார்க்கு இடம்ஆய் - நகைப்பவர்களுக்கு இடந்தருவதாகி, நான்று வற்றும்-தொங்கி வற்றிப்போகிற, முலையைப்பார்த்து - ஸ்தனங்களைக்கண்டு, முளரிமொட்டு என்றும் - தாமரை மொக்கென்றும், குலையும் - குழறுகின்ற, காமக்குருடர்க்கு - காமக்குருடருக்கு, உரைப்பேன் - சொல்லுவேன், நீட்டவும் முடக்கவும் - நீட்டுவதற்கும் முடக்குவதற்கும், நெடும்பொருள் வாங்க

வும் — பெரியபொருள்களை ஏற்றுக்கொள்ளவும், ஊட்டவும் - உண்பிக்கவும், பிசையவும் - பிசையவும், உதவி இங்கு இயற்றும் - இங்கே தொழில்புரிகின்ற, அங்கையைப்பார்த்து - அழகியகைகளைப்பார்த்து, காந்தள்என்று உரைத்தும் - காந்தள்மலர் என்று கூறியும், வேர்வையும் - வெயர்வும், அழுக்கும் - அழுக்கும், மேவிய - பொருந்திய, கழுத்தை - கண்டத்தை, பாரினில் - பூமியில், இனிய கமுகு என பகர்ந்தும் - இனிமையாகிய கமுகென்று கூறியும், வெப்பும் ஊத்தையும் மேவியவாயை - தீநாற்றமும் ஊத்தையுந் தங்கியவாயை, துப்பு - பவளம், தூ - புநிதமாகிய, முருக்கின் மலர்என்றும் - முருக்கமலர் என்று சொல்லியும், அன்னமும் கறியும் - அன்னத்தையும் கறிகளையும், அசைவிட்டு இறக்கும் - மென்று இறக்குகின்ற, முன்னியபல்லை-முற்பட்ட பல்லை, முத்து எனமொழிந்தும் - முத்தென்று கூறியும், நீரும்சளியும் நின்று நின்று ஒழுகும் - சலமும்சளியும் நின்றுநின்றொழுகுகின்ற, கூரியமூக்கை - கூர்மைபொருந்திய நாசியை, குமிழ்எனக் கூறியும் - குமிழம்பூவென்று கூறியும், தண்ணீர்பீளை தவிராது ஒழுகும் - தண்ணீரும் பீளையும் நீங்காமல் சிந்துகின்ற, கண்ணைப்பார்த்து - கண்களைப் பார்த்து, கழுநீர் என்றும் - கழுநீர்மலர்என்று கூறியும், உள்ளும் - உள்ளிடத்துநின்றும், குறும்பி ஒழுகும்காதை - குறும்பி யொழுகுகின்ற காதை, வள்ளைத்தண்டின் வளம் என வாழ்த்தியும் - வள்ளைத்தண்டின் வளமையுள்ளதென்று புகழ்ந்து கூறியும், கையும் எண்ணெயும் கலவாது ஒழியின் - கையும் எண்ணெயும் சேராது நீங்கினால், வெய்யவதரும் - வெப்பமாகிய நோய்களை யுண்டுசெய்யும், பேனும் விளையத்தக்க - (அம்மட்டில் நீங்காது) பேனும் விளைதற்குரிய, தலையோட்டில் முளைத்தெழுந்த - தலையோட்டின்மேல் முளைத்துத் தோன்றிய, சிக்கின் மயிரை - சிக்கோடுகூடிய மயிரை, திரள்முகில் என்றும் - திரண்டமேகமென்று கூறியும், சொற்பலபேசி துதித்து - பலசொற்களாற் புகழ்ந்துசொல்லி, நீங்கள் நச்சிச்செல்லும் - நீங்கள்விரும்பி அடைகின்ற, நரகவாயில் - நரகவாசல், தோலும் இறைச்சியும் துதைந்து - தோலும் சதையும் நெருங்கி, சீபாயும்-சீப்பெருகுகின்ற, காமப்பாழி - காமக்குகை, கருவிளைகழனி — பிறவிப் பயிர்விளைகின்ற வயல், தூமைக்கடவழி - தூமையொழுகாநின்ற பெருவழி, தொளைபெறுவாயில் - தொளைபெற்றவாயில், எண்சாண் உடம்பும் - எண்சாணுடலும், இழியும் - இறங்கிவருதற்குரிய, பெருவழி - பெரியவழி, மண்பால்காமம் - மண்ணுலகத்தாரிடத்துள்ள காமத்தை, கழிக்கும் - கழிக்கின்ற, மறைவிடம் - மறைவானஇடம், காமுகநாய்தான் என்றும் நச்சி - காமுகன் என்கிற நாய் எப்போதும் ஆசைப்பட்டு, இச்சித்திருக்கும் - ஆசித்திருக்கிற, இடைகழிவாயில் - திட்டிவாசல், திங்கள் சடையோன் - சந்திரனை யணிந்த சடையை யுடைய சிவபெருமானது, திருவருள் இல்லார் - திருவருள் சிறிதும் பெற்றிலாதவர்கள், தங்கித்திரியும்-தங்கித்திரிகின்ற, சவலைப்பெருவழி-சவலையாகிய பெரியவழி, புண்இதுஎன்று - இது புண்ணென்றுணர்ந்து, புடவையைமூடி - புடவையால் மூடி, உள்நீர்பாயும் - உள்ளேநீர் பெருகு

கின்ற, ஓகைச்செழும்புண் - ஆடவர்க்கு உவப்பைச் செய்கின்ற செழியபுண், மால்கொண்டு - ஆசையுற்று, அறியாமாந்தர் - அறியாமையுள்ள மானுடர், புகும்வழி - நுழையும்வழி, நோய்கொண்டு - வியாதியுற்று, ஒழியா - நீங்காத, நண்ணியர் - அற்பர், போம்வழி - போகின்றவழி, தருக்கியகாமுகர் - செருக்கடைந்த காமுகர்கள், சாரும்படுகுழி - அடைகின்ற படுபள்ளம், செருக்கிய - செருக்கடைந்த, காமுகர் - காமவான்கள், சேரும்-அடைகின்ற, சிறுகுழி - சிறுபள்ளம், பெண்ணும் ஆணும் - பெண்களும் ஆண்களும், பிறக்கும்- ஜனிக்கின்ற, பெருவழி - பெரியவழி, மலம்சொரிந்து இழியும் வாயிற்கு அருகே - மலத்தைச்சொரிந்து இழிவடைந்திருக்கிற வாசலுக்கருகில், சலம் சொரிந்து இழியும் - நீரைச்சொரிந்திழிந்த, தண்ணீர்வாயில் - தண்ணீர் வாசல், இத்தை—(இவ்வகைய இழிதகைமைகளுக்கிடனாகிய, இதனை, நீங்கள் இனிதுஎனவேண்டா - நீங்கள் இனியதென்று நினைக்கவேண்டா, பச்சிலை இடினும் - பச்சிலையைக்கிள்ளி யருச்சித்தாலும், பத்தர்க்கு இரங்கி - அடியார்களுக்கிரக்கமுற்று, மெச்சி - கொண்டாடி, சிவபதம் - சிவபதமாகிய, வீடு அருள்பவனை - மோக்ஷத்தை யநுக்கிரகிப்பவனை, முத்திநாதனை - முத்திக்குத் தலைவனை, மூவாமுதல்வனை - அழியாமுதல்வனை, அண்டர் அண்டமும் - தேவலோகமும், அனைத்துளபுவனமும் - வேறுயுள்ள எல்லா லோகங்களும் (ஆகிய இவற்றை) கண்ட - படைத்த, அண்ணலை - பெரியோனை, கச்சியில் கடவுளை - திருக்கச்சியில் எழுந்தருளியிருக்கும் கடவுளை, ஏகநாதனை - தனிமையாகிய இறைவனை, போகமாதரை - அநுபவத்துக்குரிய மங்கையர்களை, போற்றுதல் ஒழிந்து - பேணுதலைநீங்கி, இணையடி - உபயதிருவடியை, இறைஞ்சுமின் - பணியுங்கள், எ-று.

எழ்பிறவி - தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. மானிடப்பிறவி பெறுதற்கரிதா யிருப்பவும் அதனைப்பெற்ற மானிடரே, நீங்கள் மாதருடைய அவயவங்களை விரும்பிப் பலவாறு வர்ணித்துரைத்து மீளாத நரகத்துக் காளாகிறீர்களே, இவ்விழி தகைமையை விட்டு முத்தியை யருள்வோனாகிய நித்தியன் திருக்கச்சிச் சிவபெருமான் அவனை வழிபட்டு அவனது திருவடியை வணங்குங்கள் என்று தாமுணர்ந்த நலத்தினை யடியார் பலர்க்கும் உபதேசமுறையாகக் கூறி வற்புறுத்தியது காண்க.

திருச்சிற்றம்பலம்.

Kalignanai Malikai Series, No. 3.

உ

சிவமயம்.

பட்டினத்துப்பிள்ளையார்

திருவாய்மலர்ந்தருளிய

திருப்பாடற்றிரட்டும்,

அருட்புலம்பல்.

சென்னை நகரத்துச்

சில செந்தமிழ் வித்வசிகாமணிகளால்

இயற்றப்பட்ட

விசேஷ உதாரணங்களோடு கூடிய

உரையுடன்,

சிதம்பரம் முனிசிபல் சேர்மன், ஆகிய ஆனரெபில்,

S. Rm. M. இராமசாமி செட்டியார் அவர்கள்

பொருளுதவியால்,

சென்னை மெய்கண்டசந்தான சபையிலொருவரும்

சைவநூலுரைப்பிரசாரணருமாகிய

ஸ்ரீ-குமாரவேலாயுத முதலியாரவர்களால்

சென்னை:

மதராஸ் டைமண்டு அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

சாதாரண௵ கும்பரவி.

1911.

Copy-right] [Registered.

K. M. Sawmy & Co. Madras.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவேகம்பமாலை.

திருக்கச்சியில்

திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும்

ஏகாம்பரரைத்துதித்துக்கூறியபடியால்

இப்பெயர்பெற்றது.

அறந்தானியற்று மவனிலுங்கோடி யதிகமில்லந்
துறந்தானவனிற் சதகோடியுள்ளத் துறவுடையோன்
மறந்தானறக்கற் றறிவோடிருந்திரு வாதனையற்
றிறந்தான்பெருமையை யென்சொல்லுவேன் கச்சியேகம்பனே,

(இ-ள்) அறந்தான் இயற்றும்அவனிலும்-(அகந்தூய்மையாய்) இல்லறத்தில் நடக்கவேண்டியதருமங்களை முறையுறச்செய்து மறுமைக்கண் சுவர்க்காதி பதங்களைப்பெறும் இல்லறத்தானிலும், இல்லம் துறந்தான் - கிரகத்தாச்சிரமத்தைவிட்டு நீங்கியபுறப்பற்று அற்றவன், கோடியதிகம் - ஒரு கோடிபாகம் உயர்ந்தவனாவான், உள்ளத்துறவுடையோன் - அகப்பற் றற்ற சந்நியாசி அவனில் - முன்னர்க்கூறிய இல்லத்துறவியிலும், சதகோடி - நூறுகோடிபங்குஉயர்ந்தவனாகிறான், மறம்தான்அற - தீவினையாகியதுன் பங்கணீங்க, கற்று- அறிவுநூல்களைக்கற்று, அறிவோடிருந்து - நல்லறிவுதலைப்பட்டு, இருவாதனையற்று - புண்யபாபங்களின் செயலற்று, இறந்தான் - உலகவொழுக்கநீங்கித்தவ வொழுக்கங்கைக்கொண்ட மகாதுறவியின், பெருமையை-சிறப்பினை, என்சொல்லுவேன் - என்னவென்றுகூறுவேன், கச்சி ஏகம்பனே - திருக்கச்சிக்கண்திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே. எ - று

(கு - ரை) அறமாவது - மனுமுதலிய நூல்களில்விதித்தனசெய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். அஃது ஒழுக்கம்வழக்குத்தண்டமென மூவகைப்படும். அவற்றுள் ஒழுக்கமாவது - அந்தணர்முதலியவருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியமுதலிய நிலைகளினின்றுஅவ்வவற்றிற்கோதிய அறங்களின் வழுவாதொழுகல். வழக்காவது - ஒருபொருளைத்தனித்தனியே யெனதென தென்றிருப்பார் அது காரணமாகத்தம்முண் மாறுபட்டு அப்பொருண் மேற்செல்வது. அதுகடன் கோடன்முதற்பதினெட்டுப்பதத்ததாம். தண்டமாவது - அவ் வொழுக்கநெறியினும், வழக்குநெறியினும் வழீஇனாரை

அந்நெறி நிறுத்தற்பொருட்டு ஒப்ப நாடி அதற்குத் தகவோறுத்தல். இவற்றுள் வழக்குந் தண்டமும் உலகநெறி நிறுத்தும் அரசன் கொண்டாளுதற் பயத்தவன்றி ஒழுக்கம்போல மக்களுயிர்க்குறுதி பயத்தற் சிறப்பில வாகலானும், அவைதாம், நூலானேயன்றி உணர்வு மிகுதியானும் தேய வியற்கையானும் அறியப்படுதலானும், அவற்றை யொழித்து ஈண்டுத் தெய்வப்புலமைத் திருவள்ளுவராற் சிறப்புடைய ஒழுக்கமே யறமெனக் கொள்ளப்பட்டதென, ஆசிரியர் பரிமேலழகராற் கூறப்பட்டது. ஆதலின் அவ்வொழுக்கமே யீண்டு அடிகளாலும் அறமெனப்பட்டது. அதுதான் நான்குநிலைத்தாய் வருணங்கடோறும் வேறுபாடுடைமையின் சிறுபான்மயவாகிய அச்சிறப் பியல்புகளொழித்து எல்லார்க்கு மொத்தலிற் பெரும்பான்மையாகிய பொதுவியல்புபற்றிஇல்லறந்துறவறமெனஇருவகையாற்கூறப்பட்டது.அவற்றுள் இல்லறமாவது, இல்வாழ்க்கை நிலைக்குச்சொல்லுகின்ற நெறிக்கணின்று அதற்குத் துணையாகிய கற்புடை மனைவியோடுஞ் செய்யப்படுவது. துறவறமாவது - புறமாகிய செல்வத்தின் கண்ணும் அகமாகிய யாக்கையின் கண்ணும் உளதாயபற்றினை, அவற்றது நிலையாமை நோக்கிவிடுதல். இத்துறவை மேற்கொண்டான் துறவி. அத்துறவி, குடீசன், பகூதன், ஹம்ஸன், பரமஹம்ஸன் என நால்வகையர். இதனை விரிக்கிற்பெருகும். இதில் மறந்தீன்றக்கற்றிருவாதனையற்றவன் மஹாஞானி அவனது பெருமை கூறுதலருமையாம். "கன்றுதலின்றி யாறிக்கழிந்த காமத்தனாகி, யொன்றவெவ்வுயிருந் தன்னையொக்கவே யுணருஞானி, சென்றதோர் நெறி பின்செல்வன் சென்னிமேலவன் காற்றாளி, துன்றுமேற் சுத்தனுவேனெனு மிது துணிவிற் கொண்டே." என்பதாலறிக. (க)

கட்டியணைத்திடும் பெண்டிருமக்களுங் காலத்தச்சன்
வெட்டிமுறிக்கு மரம்போற் சரீரத்தை வீழ்த்திவிட்டாற்
கொட்டிமுழக்கி யழுவார் மயானங் குறுகியப்பா
லெட்டியடிவைப்பரோ விறைவாகச்சி யேகம்பனே.

(இ-ள்.) கட்டி அணைத்திடும் - கட்டி யணைத்துக் கொள்ளும், பெண்டிரும் - மனைவியரும், மக்களும் - பிள்ளைகளும், காலத்தச்சன் - யமனாகிய தச்சன், வெட்டிமுறிக்கும் - வெட்டி முறித்துவிடுகின்ற ,மரம்போல்-மரத்தைப்போல், சரீரத்தை - தேகத்தை, வீழ்த்திவிட்டால்-விழும்படி செய்துவிட்டால், கொட்டிமுழக்கி-பலபறைகளையடித்துமுழக்கி,அழுவார் - அழாநிற்பர், மயானம்குறுகி - இடுகாட்டினை நெருங்கி, அப்பால் - அம்மயானத்தைக் கடந்து, எட்டி - தாண்டி, அடி - தமது கால்களை, வைப்பரோ - வைப்பார்களோ, இறைவா - தலைவனே, கச்சி ஏகம்பனே - திருக்கச்சிக்கண் எழுந்தருளியிருக்கும் ஏகம்பனே - எ - று.

(கு-ரை.) கட்டி அணைத்திடும், என்பதனைப் பிரித்துக் கட்டிடும் பெண்டிரும், அணைத்திடும் மக்களும் எனப் பொருள் கொள்ளினுமாம். கட்டி அணைத்திடும் என்பது இருவினை முதலியொருவினை. இம்மைக்கும் மறுமை

க்கும் உறுதி பயப்பக்கொள்ளும் மனைவியரும் மக்களும் என்பார் கட்டியணைத்திடும் பெண்டிரும் மக்களும் என்றார். உறுதி யெவ்வாறு பயத்தல் எனின், அறத்தின் வழி நின்று இல்லறநடத்தின் இகத்தில் எல்லா இன்பங்களையு மனுபவித்து மறுமைக்கண் சுவர்க்காதி போகங்களை யடைதலினானும், மக்கள், இம்மைக்கண் "மக்கண் மெய்தீண்ட லுடற்கின்ப மற்றவர் சொற்கேட்ட லின்பஞ்செவிக்கு" என்றபடி, இன்பந்தந்து மறுமைக்கண் புத்எனும் நரகத்தி னின்று நீக்குதலின் என்க. பெண்டீர் - இதனின் ஈர் என்பது ஒருமையினிற் பன்மைவந்த வழூவமைதி ,இது உயாவுபற்றியது தச்சன் மரங்களைச் செகுத்து வெவ்வேறு உருக்கள்செய்யுமிடத்து வாள் உளிமுதலியகொண்டு அழித்தலின் வெட்டிமுரிக்கும் என்றார். வாழ்நாள் முடிந்த மக்களுயிரை பாசத்தாற்கட்டி யீர்க்குமிடத்து உடல் மரம்போல் வீழ்தலின் காலனுக்குத் தச்சனை யுவமைகூறினா. வீழ்த்தி விட்டால் என்பதில் விடு துணிவுப் பொருட்டு. உயிர் நீங்கா வுடற்கணீக்கமறநின்ற சிவான்மாவிற்குச் செய்யும் உபசாரம்மாக சவவுடற்கு அபிடேகமுதலிய சடங்குகளியற்றிப்பறைமுதலிய முழக்கி யிடுகாட்டிடுதல் வழக்காதலின்கொட்டி முழக்கி என்றார். "சென்றேயெறிப வொருகால் சிறுவூரை, நின்றேயெறிப பறையினை - நன்றேகாண், முக்காலைக்கொட்டினுண் மூடித் தீக்கொண்டெழுப, செத்தாரைச் சாவார்சுமந்து," எனப் பிறரும் இதுபற்றிக் கூறினார் என்க, இவ்வாறு கொட்டுமுழக்குடன் சவத்தை யடக்குதல் சிலர்க்கு இன்றெனின் இது பன்மைபற்றிய வழக்கு. அழுவார் என்றதனான், இறந்தார்க்கு மிக்க உறவினராகிய பெண்டிரு மக்களுமே யென்பது பெறப்பட்டது. மற்றவர்க்கு அவர்க்குற்ற விருப்பு இன்மையின் என்க. அழுவார் என்பதில்வகரம் நிகழ்காலப் பொருட்டு. ஸ்மசானம் என்பது மயானம் என நின்றது. ஸவாநாம் ஸயனம் ஸ்மஸானம், என்பதால் ஸவங்களுக்குச் சயனமான இடம் என்பதுபொருள். குறுகியென்றதால் சிதையின மீதிட்டபின்னர் என்க. அப்பால் என்றது அந்த இடுகாடு கடந்து என்க. அன்றிச் சிதைக்கண் எனினுமாம் எட்டுதல் ஒருகாலினைவைத்தல். அடி என்பது ஆகுபெயர். வைப்பரோ என்பதின் ஓகாரம்எதிர்மறைப்பொருட்டு. மக்கள், நிதயபகுவசனம். கட்டியணைத்திடும் என்பதற்கு, கட்டி, அணைத்து, இடும், எனப்பிரித்து இடும் அன்னபானாதிகளையிடுகின்ற எனனினுமாம். பெண்டிருமக்களும் எனபதின உம்மை எண்ணுப்பொருட்டு. (௨)

கைப்பிடிநாயகன் றூங்கையிலே யவன் கையையெடுத்
தப்புறந்தன்னி லசையாமன் முன்வைத்த பலவளவி
லொப்புடன்சென்று துயினீத்துப் பின்வந் துறங்குவளை
யெப்படிநா னமபுவே னிறைவாகச்சி யேகம்பனே.

(இ - ள்.) கைப்பிடி - (கன்னிகைப்பருவத்தில் உற்றாறிய) பாணிக்கிரகணஞ் செய்துகொண்ட, நாயகன் - கணவன், தூங்கையில் - (தன்னைமறந்து) நித்திரை செய்கையில், அவன்கையை - அந்நாயகன் தன்னையணைத் துற

கும்) கையை, எடுத்து - லகுவாக எடுத்து, அப்புறம் தன்னில் - தன்னையொழிந்த அப்பக்கத்தில், அசையாமல்வைத்து - (அவன் விழிக்காவகை) அசையாமல்வைத்து, அயல்வளவில் - அண்டைவீட்டுச் சோரநாயகனிடத்தில், ஒப்புடன் - மனச்சம்பந்தத்துடன்,முன்சென்று - கடுகிப்போய், துயில் நீத்து - கலவிமுதலிய முடித்து, பின்வந்து - பிறகு (அவனைப்பிரியும் வருத்தத்துடன்) வந்து, உறங்குவளை - (பழமைபோல்) நித்திரைகொள்வாளை, நான் எப்படி நம்புவேன் - அடியேன் எப்படி நம்பி அவளிடம் வாழ்வேன், இறைவா - தலைவனே, கச்சி ஏகம்பனே - கச்சியில் திருக்கோயில்கொண்ட ஏகாம்பரனே - எ - று.

கொண்ட கணவனைவிட்டுச் சோரநாயகனிடத்தில் அன்புமிக்குறங்கிப் பின்வந்துறங்கும் பெண்களை யெப்படி நம்பலாம் என்பதுகருத்து. இது பெண்களிடம் அன்பு செய்யாமையும் அவரது வஞ்சனையையும் குறிப்பித்ததாம்.

(கு - ரை.) ஊருணர நாள்கேட்டுப் பறைகொட்டித் திக்குப்பாலகர், இறைவன், அருந்ததி, சூர்யசந்திரர், மற்றைய கிரகங்கள், கிராமத்தார், புரோகிதர், ஏனையதேவர்களும், மற்ற பந்து மித்திரர்களுமறியப் பாணிக்கிரகணஞ் செய்தவன் என்பார், கைப்பிடி நாயகன் என்றார். தான் இல்லாளிடத்துக் கலவிசெய்த விளையாட்டானும் பிறவாற்றானும் களைகொண்டு தன்னை மறந்து கொள்ளுஞ் சுழித்திக்கண் என்பார் தூங்கையிலே - எ - ம், அச்சுழுத்தியில் கரணங்களோய்ந்து யாது செய்யினும் தெரியாத அந்நிலையில் என்பார் அவன்கையை எ-ம், கையை யெடுக்கையில் பரிசவுணர்ச்சியால் உணரினும் உணரும் அங்ஙனம் உணராவகை மெல்லச் சிறிது சிறிதா வொதுக்கமுறநகர்ந்து தன்னையணைத்தகை நிலத்தி லுறத்தாங்கிப் புறத்தில் வைப்பாள், என்பார் "அப்புறந்தன்னி லசையாமன் முன்வைத்து,, எ - ம், அயல்வளவு என்றதனானே அது இல்வரையிகந்ததும் இல்வரையிகவாததும் என விருவகைத்து. பெரும்பான்மை களவிற் புணர்ச்சிக்குரிய சோரமகளிர், இறக்கணெருங்கிப் பகற்சிபயில நோன்பாற்று விடர்க்கண்ணே நேசங்கொள்ளுதலியல் பாதலின், அது பெரும்பான்மை யில் வரை யிகவாததாம். இகந்ததாயின் கவாடந்திறத்தல், அயலவர் விழித்தல் 'முதலியவற்றால் தான் கொண்டகருத்து முற்றுறாது தடைபடு மாதலினடிக ளீண்டுக்கூறியது இல்வரையிகவாததேயாம்' சிறுபான்மை அயலவர் அறியாராயின், இல்வரை யிகந்ததுமாம் என்க. வளவு என்பது ஆகுபெயர். தன்கணவன் "ஏந்தெழின்மிக் கானிளையா னிசைவல்லான், காந்தையர் கண்கவர் நோக்கத்தான் - வாய்ந்த, நயனுடையின் சொல்லான்கேள் எனினுமாதர்க் கயலார்மே லாகுமனம்." என்றபடி இவற்றான் மிக்கானேனும் தன்னால் காமுறப்பட்டான், இவையிலனாய குரூபியாயினும் அவள் மனமொக்கின் அவனை யிவையுடையனாக வெண்ணிச் செல்வாள் என்பார்,ஒப்புடன்சென்று எ - ம், தனதிச்சைப்படி யவனுடன்கரண லீலைகள்செய்து இன்புற்றுறங்கி யென்பார், துயில்நீத்து என

வுங் கூறினர், துயில், என்பது ஆகுபெயர். அவனைப்பிரியும் வருத்தத்துடன் கணவனிடங்கொண்ட வெறுப்புடன் மீள்வாள் என்பார் பின்வந்து - எ - ம், அங்ஙனம்வந்தால், அவனுடன் முயங்கும் முயக்கமும் அவள் துயில் கொள்கையும் பொருட்பெண்டிர் பொய்மை முயக்கம் போல்வதன்றி, மெய்ம்மையன்றென்பார், உறங்குவளே என்றார். இங்ஙனம் கொண்டானுடனிருந்தும் "அச்சம் பெரிதாலதற் கின்பஞ் சிற்றளவால், நிச்ச நினையுங்கால் கோக் கொலையால், நிச்சலும், கும்பிக்கே கூர்த்தவினை"யென்றுணராது சென்று உறங்குவாள் சோரபுருஷனிடத்துக் கொண்ட காதலால் என்னையுந் தன்னிடத்துக் காதல்கொண்ட மைந்தனையுங் கொலைமுதலிய பிறசெய்தல் கூடும் அவ்வகைச் செயல்கொண்டாரைக் கண்கூடாகக்கண்ட நான் இவர் எமக்குற்றதுணையென நம்பி யவர் வழிசெல்லேன் என்பார் எப்படி நான் நம்புவேன் எனவுங் கூறினர். கைப்பிடி என்பதில் பிடித்தல் இருவர்க்குமுள்ள வினையாதலினிது இருவினை முதலிதொருவினை. (௯)

நன்னாரிற்பூட்டிய சூத்திரப் பாவைநன் னார்தப்பினற்
றன்னாலுமாடிச் சலித்திடுமோவந்தத் தன்மையைப்போ
லுன்னாலியானுந் திரிவதல்லான் மற்றுனைப் பிரிந்தா
லென்னாலிங் காவதுண்டோ விறைவாகச்சி யேகம்பனே.

(இ - ள்,) நல் நாரில் - நல்ல நாரினால், பூட்டிய - கட்டிய, சூத்திரப் பாவை - சூத்திரத்தினைக்கொண்ட பிரதிமை, நல் நார் தப்பினால் - நல்ல அச்சூத்திரம் அற்றுத்தவறின், தன்னாலும் - (அதுச் சூத்திரிகன் வழியன்றி) தனக்குத்தானே, ஆடி - நடித்து, சலித்திடுமோ - ஓய்ந்துபோமா, அந்ததன்மையைப்போல் - அவ்விதம்போல, உன்னால் - சூத்திரிகனாய நீ முன்னின்று ஆட்டுவிக்க, திரிவது அல்லால் - நான் ஓடியுலாவித் திரிவது அல்லாமல், மற்று உனைபிரிந்தால் - அங்ஙனம் ஆட்டுவிக்கும் உன்னை ஒருகணம் பிரிந்து நிற்கின், என்னால் - (பிரிந்துநிற்கும் சூத்திரமொழிந்த பாவையொத்த) என்னால், இங்கு - இவ்வுலகத்தில், ஆவது உண்டோ - ஆகும் செயல் ஒன்று உளதாகுமோ, இறைவா - தலைவனே, கச்சி ஏகம்பனே - திருக்கச்சிக்கண் ணெழுந்தருளியிருக்கும் ஏகம்பனே - எ - று.

இது, இறைவனையன்றி யுயிர்கள்தாமாக இயங்கும் வலியிலவென வுயிர்களின் செயலின்மையும், இறைவனது சர்வ வியாபகமும் கூறியதாம்.

(கு - ரை.) அறுதல், சிக்குறல் முருக்கேறுதல் ஒழிந்து உறுதியுள்ளதென்பார் நல் நார், எ - ம், (நாரில், என்பதில் இல் எனும் ஐந்தனுருபு ஏதுப்பொருளது.) நல் நாரினால் இயக்குதற்குச் சூத்திரிகன் மனக்கோட்பாட்டின்விதம் செய்வித்த பாவையென்பார் நன்னாரிற்பூட்டிய சூத்திரப்பாவையென்றார். அதனை யியக்குவிப்போ னெண்ணப்படி அப்பாவை நடிக்கும் அச்சூத்திரநார் தவறின் செயலற்று இயங்குதலொழிந்து கிடக்கும், அதுபோல், இறைவனே நீர் இயக்க அடியேன் இயங்குதலன்றி யெனக்குச் சிறி

தும் செயலின்று என்பார் நன்ஞர் தப்பிஞற் றன்ஞுமாடிச் சலித்திடுமோ என்ருர். இக்கருத்தானன்றே திருநாவுக்கரசுகளும் "ஆட்டுவித்தாலா ரொருவர் ஆடாதாரே யடக்குவித்தாலா ரொருவரடங்காதாரே, ஓட்டுவித்தாலா ரொருவரோடாதாரே யுருகுவித்தாலா ரொருவ ருருகாதாரே, பாட்டுவித்தாலா ரொருவர் பாடாதாரே பணிவித்தாலா ரொருவர் பணியாதாரே, காட்டுவித்தாலா ரொருவர் காணுதாரே காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே" எனத் திருவாய்மலர்ந்தருளியது. யான்கொண்ட என்புதோல் போர்த்தவுடம்பு, தானே திரியவற்ருேவெனின் அதினெவ்வொன்று மேலுள்ளபொருள்களை நோக்கத்தாழ்வடைந்து பொய்படும். அங்ஙனம் பொய்பட்ட புறக்கரணங்களொழிய அகக்கரணங்களாகிய அந்தக்கரணங்கள் தாம் குணம் பெருவோ வென்னில் அவையும் மனதை நோக்க புத்தியும் புத்தியை நோக்க சித்தமும் சித்தத்தைநோக்க அகங்காரமும் ஒன்றிலொன்றுஎற்றத்தாழ்வுகொண்டனவாய்ச் சேதனப் பொருளுடன் உவமிக்கதக்கவை யன்ருய்க் கெடுமாதலிஞன் அவன் என்னிடத்து நீக்கமற நிற்கினன்றி யென்ஞலாவதொன்றில்லையென்பார் உன்ஞல்யானுந் திரிவதல்லால் என்ருர். இதனை லன்றே "தானுடத் தன் தகையாடும்" எனும் பழமொழியும் ஆளப்பட்டு வருவது; ஈண்டுத் தசையென்பது தனுகரணம பெற்ற ஆன்மவர்க்கங்களையாம். சலித்திடுமோ என்பதில் ஓகாரம் விஞப்பொருட்டு. சலித்தல், தொழிலிற்றலைப்பட்டான் முயற்சியின்றி நிற்றல். ஈண்டுத்தன்மை குணப் பண்பின்மேலதன்று தொழிற் பண்பின்மேலது. எனக்கெனச் சுதந்தரமின்று நீயேயெல்லாம் வல்லவன் என்பார் உன்ஞலியானுந் திரிவது என்ருர். யானும் என்பதின் உம்மை எதிரது மிறந்ததுந் தழுவியதாம். மற்றுப் பிறிதென்னும் பொருளது. அன்றியசை நிலை யென்னினுமாம். இங்கு என்பது இடப்பொருளுணர்த்தி யிவ்வுலகத்தைச்சுட்டி நின்றது. இதில், கு, இடப்பொருளுணர்த்திய விகுதி. ஆவதுண்டோ, என்பதின் ஏகாரம் எதிர்மறைப்பொருட்டு, பாவை, பிரதிமை யென்பதின் மரூஉ. (ச)

நல்லாரிணக்கமு நின்பூசை நேசமு ஞானமுமே
யல்லாதுவேறு நிலையுளதோ வகமும் பொருளு
மில்லாளுஞ் சுற்றமுமைந்தரும் வாழ்வு. மெழி லுடம்பு
மெல்லாம் வெளிமயக்கே யிறைவாகச்சி யேகம்பனே.

(இ - ள்,) நல்லார் இணக்கமும் - நல்லவர்களுடைய நட்பும். நின்பூசை நேசமும் - தேவரீரைப் பூசித்தலும் அதில் அன்பும், ஞானமுமே அல்லாது - சிவஞானமும்அல்லாமல், வேறுநிலை உளதோ - வேறு தரிக்கத்தகும் நிலை உண்டோ (இல்லை) அகமும் - வீடுமனை நில முதலியவும், பொருளும் - தனதான்யாதி ஐஸ்வர்யங்களும், இல்லாளும் - மனைவியும், சுற்றமும் - உறவினர் முதலாயிஞரும், மைந்தரும் - புத்ரவர்க்கங்களும், வாழ்வும் - இறுமாப்புடன்வாழும் செல்வவாழ்க்கையும். எழில் உடம்பும் - அழகுகொண்டதேகமும், எல்லாம் - மற்றெல்லாமும், வெளிமயக்கே-புறமயக்கமே இறைவா-தலை

வனே,கச்சி யேகம்பனே - திருக்கச்சியி லெழுந்தருளியிருக்கும் ஏகாம்ப ரனே -எ - று.

(கு - ரை.) ஈண்டு நல்லார் என்பது, நற்குண நற்செய்கைகொண்ட மாந்தரை யன்று. மனத்தூய்மைகொண்ட மாசற்ற சிவஞானிகளை யென்க. நல்லார் எனப் பன்மையாற் கூறியதனான் அவ்வொழுக்கங்கொண்ட பலரைக் குறிப்பித்ததாம். அவரொடுசேர்ந் தொழுகின் பாலொடு அளாயநீர் பாலாகு மாறுபோலச் சேர்ந்தானது தீமையைக் கெடுத்து நன்மை பெறச்செய்தலின் இணக்கம் என்றார். இவர் இணக்கத்தைப் பொருள்கொடுத்தும் வழிபட்டும் போற்றின் நலமென நாயனாரும் "மருவுக மாசற்றார்கேண்மை யொன்றீத்து, மொருவுகவொப்பிலார்நட்பு."எனத்திருவாய்மலர்ந்தருளினார். பின்னும்,"ஓட வல்லார் தமரோடு நடாவுவன். பாடவல்லா ரொலிபார்மிசை வாழ்குவன், றேடவல்லார்க் கருள்தேவர் பிரானொடுங், கூடவல்லாரடி கூடுவன்யானே." என்ற திருமந்திரத்தானு மறிக, உன்னைப் பூசித்தலொன்றில் அமையாது, அங்ஙனம் பூசிக்கினும் நேசமில்லாது பூசிக்கின் பயனில்லையென்பார் நின்பூசை நேசமும்என்றார். அங்ஙனம் பூசிக்குமிடத்து ஆசை யொன்றேயமையாது சிவ ஞானமும் கலந்து நிற்கின் ஏற்றமென்பார் ஞானமுமே யென்றார். ஞான மெனப் பொதுப்படக் கூறியதனானே அது சிவஞானமென்பது பெறப்பட் டது. அச் சிவஞானம் எல்லாக் கலைஞானங்களினும் ஏற்றமுள்ளதென்பதை " சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம், பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங்கிய ஞானம், உவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ் ஞானம், தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்." என்ற சேக்கி ழார் திருவாக்காலறிக. இச் சிவஞானம் பிரகாசிக்கின் ஏனைய ஞானங்கள் தலை தூக்காவென்பதை "அன்றிய பாசவிருளு மஞ்ஞானமும், சென்றிடு ஞானச் சிவப்பிரகாசத்தா, லொன்று மிருசுடரா மருணோதயந், துன்றிரு ணீங்குதல்போலத் தொலைந்ததே." என்ற திருமூலர் திருமந்திரத்தானறிக. இதனையன்றி யான் மாக்கள் எவ்வகை யோகநிலைகள் அப்பிய சித்து அதில் சித்திமுதலிய அடைந்து நிலைபெற்றிருப்பினும் சிவஞானங்கைவரி னல்லது தரித்தலியலாது என்பார் வேறு நிலையுளதோ என்றார். இல்லும் கிராமாதி, பட்டணங்களும் மாடமாளிகை முதலியவற்றை யடக்கி அகம், எ - ம், பொ ன்மணிமுதலிய லோகத் திரவ்யங்களை யடக்கிப் பொருளும், எ - ம், கற்பு டைப் பெண்டிர், காமக் கிழத்தியர் முதலியவரையடக்கி இல்லாள், எ - ம், உறவினர், நட்பினர், மற்றோர்களையு மடக்கிச் சுற்றமெனவும், கற்புடைமனை யாளிடத்துப் பிறந்தாரையும் மற்றக் காமக்கிழத்தியரிடத்துப் பிறந்தாரையு மடக்கி மைந்தர் எ-ம். இப்பெருஞ்செல்வத்தால் சிறிதுங்குறைவின்றி வாழு ம் பெருவாழ்க்கையினை யடக்கி வாழ்வும், எ - ம், சிறிதும் மனக்கவலை யின்றி பக்ஷணாதிகளால் போஷித்தும் நோய்முதலியவராது அதற்கேற்ற பெற்றிமருந்து முதலியவுண்டு காயகற்பஞ்செய்ய அழகுகொண்ட தேகமென் பார் எழில் உடம்பும் எனவுங் கூறினார். இவை முறையே அடிகள் இச்செய் யுளால் செல்வ நிலையாமையும், யாக்கை நிலையாமையுங் கூறிச் சிவஞான

மொன்றே நிலைத்தது என அதனது ஏற்றங் கூறுவார், அவைடறத்தில் கண்டார்க்கு அழகு முதலியவற்றையும் பெருஞ் செல்வவாழ்க்கையான் எனத் தெரிவிக்குமேயன்றி மனத்தூய்மைசெய்து உண்மையாகிய சிவஞானப்பேற்றினைத்தரா வென்பார் எல்லாம் வெளிமயக்கே எனவுங் கூறினர். நின்பூசை நேசமென இறைவனை முன்னிலை யொருமையாற் சுட்டியவாற்றால், அது அவற்கு அன்பென்பதைத் தெரிவித்ததாம் நல்லார்எனப் பொதுப்படக்கூறினும் அது சிவனடியார்கள்,எ-ம்.பூசைஎனப்பொதுப்படக் கூறியதனானே அது சிவபூசை, எ - ம், நேசமென்றதனாற்சிவநேசம்,எ-ம், பெறப்பட்டன.உம்மைகள் எண்ணுப் பொருள. ஞானமுமே என்பதின் ஏகாரம் தேற்றமும் பிரிநிலையுமாம், நிலை, தரித்துநிற்கு நிலை பேற்றினை யுணர்த்தி ஆகுபெய ராயிற்று. உளதோ என்பதிற் ஓகாரம் எதிர்மறைப்பொருட்டு. (ரு)

பொல்லா தவனெறி நில்லாதவ னைம்புலன்கடமை
வெல்லாதவன் கல்விகல்லாதவன் மெய்யடியவர்பாற்
செல்லாதவ னுண்மை சொல்லாதவனின் றிருவடிக்கன்
பில்லாதவன் மண்ணிலேன் பிறந்தேன்கச்சி யேகம்பனே.

(இ - ள்) பொல்லாதவன் - நற்குணநற்செய்கையில்லாதவன், நெறி நில்லாதவன் - சிவாகமத்திற்கூறியகட்டளைப்படிநில்லாதவன், ஐம்புலன்கள் தமை - பஞ்சேந்திரியங்களாகியபகைமையை, வெல்லாதவன் - வெற்றிகொள்ளாதவன், கல்விகல்லாதவன் - பலநூல்களைக்கற்றுவல்லனாகாதவன், மெய் அடியவர்பால் - உண்மையாகிய சிவனடியவர்களிடத்து, செல்லாதவன் - போகாதவன், உண்மைசொல்லாதவன் - வாய்மையென்னுஞ் சத்தியத்தைப்பேசாதவன், நின்திருவடிக்கு - தேவரீருடைய அழகிய திருப்பதங்களில் அன்பு - (நீங்காத) பேரன்பினை, இல்லாதவன் - அடையாதவன், மண்ணில் - இப்பூமியில், ஏன்பிறந்தேன் - ஏதுக்காகப்பிறந்தேன், இறைவா - தலைவனே, கச்சிஏகம்பனே - திருக்கச்சிக்கண்எழுந்தருளியிருக்கும் திருஏகம்பனே. (எ - று)

(கு - ரை) எடுத்தஜநநங்கடோறும் தாய்மாருதரத்திற்பட்டகொடுமையும், பிறந்து பல்லுயிர்செகுத்தும் பெரியாரைத்துணைகொண்டொழுகாமலுயிரோம்பி வாணாள் வீணாள்கழித்தமையுந்தோன்றப்பொல்லாதவன், எனவும், இருபத்தெட்டுச் சிவாகமங்களில் உத்தமோத்தமமாகிய காமிகாதிஆகமங்களின் வழிநின்றுஒழுகினேனல்லன்என்பார்நெறிநில்லாதவன்-எ-ம்,இவ்வகையுடையனாயினும்தன்னிடத்ததாகியஐம்புலன்கள்தமைப்போக்கேன்என்பார்வெல்லாதவன்எ-ம்கல்வி'' இம்மைபயக்கு மாலீயக்குறைவின்றால், தம்மைவிளக்கு மால்தாமுளராக்கேடின்றால்,எம்மையுலகத்தும் யாங்காணேங் கல்விபோன்மம்மரறுக்குமருந்து, எ-ம், எழுத்தறியத் தீருமிழிதகைமைதீர்ந்தான், மொழித்திறத்தின்முட்டறுப்பானாகு - மொழித்திறத்தின், முட்டறுத்தநல்லோன் முதனூற்பொருளுணர்ந்து, கட்டறுத்து வீடுபெறும்,'' எ - ம், ஒருமைக்கட்டான் கற்றகல்வியொருவற் கெழுமையுமே மாப்புடைத்து, எ - ம், கூறியவாற்

குற் கல்வி இம்மைக்கண் வேண்டிய கொடுத்து மறுமைக்கண் இறைவனது திருவடிக்கண்ணுறும் பேரன்பினைத் தருதலின் கல்வி கல்லாதவன், எ - ம், "கலை தலை சூலங் கடுங்கனல் கண்டை கட்டங்கங்கொடி, சிலையிவையேந்திய வெண்போட் சிவற்குமனஞ் சொற்செய்கை, நிலைபிழையாது குற்றேவல் செய்தார்* குன்ற மேருவென்னு, மலைபிழையாரென்பரா லறிந்தோர்களிம் மாநிலத்தே" எ - ம், "மாயனன் மாமணிகண்டன் வளர்சடையாற் கடிமை, யாயினதொண்டர் துறக்கம்பெறுவது சொல்லுடைத்தே, காய்சினவானை வளருங்கனக மலையருகே, போயினகாக்கையு மன்றேபடைத்தது பொன் வண்ணமே." எ - ம், கூறியவாற்றான் சிவனடியார்க்கன்புசெய்து அவர் திருக்குறிப்பின் வழிநின்று ஒழுகின அவரினையும் பெற்றினை யொழுகி னுனுமடைதல் திண்ணமாதலின் "மெய்யடியவர்பால் செல்லாதவன், எ - ம், உண்மைப்பொருளா யுலப்பில்காலம் நிறபது சிவமாதலின் அது மெய் எனவும் அதனைப் பொருளெனக்கொண்டு புகலானுர் மெய்யடியவர் எனவும் கூறப்பட்டது. பல அறங்களையு மேற்கொண்டொழுகி யவ்வவற்றிற்குக் கூறியபயனை யடைதற்கருமையால சிலதவறிற் குற்றப்படுதலின், அவையெல்லாவற்றின் பயனையுந் தானேதர வல்லதாதலின் அதனைக் கடைப்பிடித்தான் உண்மைப் பொருளாகிய சிவத்தினையுங் கைக்கொண்டு வாழ்வன் என்பார் உண்மைசொல்லாதவன் என்றுர். இக்கருத்தேபற்றி தேவரு "பொய்யாமை பொய்யாமை யாற்றினறம்பிற், செய்யாமை செய்யாமை நன்று." எ - ம், பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை யெல்லாவறமுந்தரும்." எ - ம், கூறியவாற்று னறிக. "சொல்லாதன கொழுநாவல்ல சோதி யுட்சோதிதன்பேர், செல்லாச் செவி மறந்தேறித் தொழாதகை மண்டிணிந்த, கல்லாநினையா மனம்வணங் காத தலையும் பொறையா, மல்லாமவை யவந்தானு மனிதர்க் கசேதனமே." "ஓதவனும முறையவன் பல்குணமுன்னைவிட்டேன், போதவன் பின்னே பொருந்தவன்வாழ்க்கை திருந்தச்சென்று, மாதவமாகிடு மாதவமா வளர் புன்சடையான், யாதவன்சொன்னது கொண்டொழி யினியாரணங்கே" என்று அருளியபடி சிவ மூர்த்தியின் திருவடிக்கண் அன்பிலா மனத்தாலும் மற்றையவுறுப்பாலும் பயனின்மையின் நின்திருவடிக்கு அன்பு இல்லாதவன் எனக்கூறினுர். சிவன்றன் திருவுருவைக் காணுத கணமுதலிய அங்கங்களால் பயனின்மை கூறப்பட்டிருத்தலால் அக்கண்முதலியவற்றைக்கொண்ட தேகமும் பயனின்று என்பார் மண்ணிலேன் பிறந்தேன் என்றுர்.

பிறக்கும்பொழுதுகொடுவந்ததில்லைபிறந்துமண்மே
லிறக்கும்பொழுதுகொடுபோவதில்லையிடைநடுவிற்
குறிக்குமிச்செல்வஞ்சிவன்றந்ததென்றுகொடுக்கறியா
திறக்குங்குலாமருக்கென்சொல்லுவேன்கச்சியேகம்பனே. (எ

(இ - ள்.) பிறக்கும்பொழுது-அடியேன் பூமியில்பிறக்குங்காலத்தும், கொடுவந்தது-கொண்டுவந்ததாகியபொருள், இல்லை-வேறொன்றுங் கிடையாது, மண்மேல்-பூமியில், பிறந்து - தோன்றி, இறக்கும்பொழுது-சாங்காலத்திலும், கொடுபோவது-கொண்டுபோகும்பொருள்-இல்லை - இல்லையாம்,

நடுவில் - இப்பிறப்பிற்கும் இறப்பிற்கும் நடுவணதாகிய வாழ்க்கைக்கண், குறிக்கும் - தோன்றியதாக எண்ணப்படும், இச்செல்வம் - இந்த நிலையிலாச் செல்வம், சிவன் - (எல்லாம் வல்லவனாகிய) சிவமூர்த்தி, தந்ததென்று - (ஆன்மாக்களின் கர்மங்களுக்கீடாக) கொடுக்கப்பட்டதென்று, (எண்ணி) கொடுக்க அறியாது - இரப்பார்க்குக்கொடுக்க அறியாது, இறக்கும் - வீணே உயிரைவிடும், குலாமருக்கு - கீழ்மக்களுக்கு, என் சொல்லுவேன் - நான் ஏதுசொல்லுவேன், கச்சியேகம்பனே - திருக்கச்சியைத் திருக்கோயிலாக்கொண்டெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரனே. (எ - று.)

(கு - ரை.) ஆன்மா, கன்மவயத்தால் ஒருதேகத்தை நீங்கி மற்றொருதேகத்தைச்சேருமிடத்து மண், பொன், பெண், முதலிய சகல பொருள்களையும் விட்டுப் புரியட்டகத்துடனடைகையில் அவை உடன்செல்லாது நிற்றலின் பிறக்கும்பொழுது கொடுவந்தது இல்லை எனவும், அங்ஙனம் பூமியிற்பிறந்து தனதான்யாதிகளை யார்ச்சித்து அனுபவித்து அத்தேகத்தை நீங்குமிடத்தும் அவ்வான்மா தான் தம்முறவினர்க்குந் தனக்கு முறுதியெனக் கொண்ட அப்பொருள்களைக்கொள்ளாது நீங்குதலின் இறக்கும்பொழுது கொடுபோவதில்லை, எ-ம், பிறக்கும்பொழுது எனப் பொதுப்படக்கூறி யதனுனே சநநங்களனைத்தையுங்கொள்க. தோற்றக்கேடுகளின் உடன் கொணரப் பட்டதும் உடன் கொண்டுபோகப்பட்டது மின்மை கூறியதனுனே அச்செல்வம், இடையில் ஆன்மா பூர்வசன்மத்தி லார்ச்சித்த புண்ணியபாவத்தினளவு இடையிற்பட்ட தென்பார் இடைநடுவிற் குறிக்குமிச்செல்வம் என்றார். இச்செல்வம், சடமாதலிற் றாமேகுறித்த இடத்திற்செல்லா. அன்றிக் கர்மஞ் செல்லுமாயின் அவை வாசனுமாத்திரமாய் ஆன்மாவைப் பின்பற்றிச் சிவசத்தியேவலால் புண்ணியபாவங்களை விளைக்குமன்றி அவற்றிற்கு வலியில வென்பார்சிவன் தந்தது என்றார். இறைவன் புண்ணியத்திற் கீடாகத்தந்த தாதலின் அச்செல்வந் தோன்றியபோது "என்னுெமொன்று தங்கையுறப் பெறற்காற்,. பின்னுவதென்று பிடித்திரா - முன்னே. கொடுத்தாருயப்போவர்." எ - ம், "நின்றன நின்றன நில்லாவென வுணர்ந், தொன்றின வொன்றினவல்லே - செயிற்செய்க, சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன், வந்தது வந்தது கூற்று." என்றபடி உடனே சிவனடியார்க்குக் கொடுத்தனலம் என்பார், சிவன் தந்ததென்று கொடுக்கறியாதிறக்கும் எனவும், இங்ஙன மிறைவன்றந்த அறிவு பெற்றிருந்துஞ் செல்வஞ் சேகரிக்க அதைப்பயன்படுத்திச் செல்வம் பெற்றத்தாற் பெறும் பெரும்பயனை யடைய அதனைப்பயன்படுத்தாது அறிவிலராயிறத்தலின் அப்பெற்றிகொண்டாரைக் குலாமர் என்றார். இச்செல்வம் நிலையாமையும், அதைக்கொண்டு அநுபவிக்கும் யாக்கை நிலை யாமையையும் கண்கூடாகக்கண்டும், சுருதி புராணங்களாலும், நல்லோராலும் உணர்ந்தும் அறியாதிருந்த அடியேன்கூறினும் அறியார் என்பார், அங்ஙனம் கொடாது முன்பிறப்பிற்செய்த புண்ணியத்தை யிழந்து இனி மறுமைக்கு மிச்செல்வத்துடனிருக்கப் புண்ணியத்தைப்புரியாது வாளாவிறக்கும் பயனின்மாந்தரைக்கண்டு இரக்கமுற்று அடிகள் என் சொல்லுவேன் எ - ம், கூறினர். இச்செய்யுள்

செல்வம் இடையில் தோன்றியதெனவும், அதுதோன்றியபொழுதே அறஞ் செய்து புண்ணியங்கொண்டு பிழையுங்கள் எனவும் அங்ஙனங் கொடா தொழியின் பயனின்று வாணாள் வீணாளாமெனத் தம்மையொத்த மனித ரைக்கண்டிரங்கிக் கூறியதாமெனக. பொழுது என்பது இறப்பு பிறப்புக்களி ன்காலத்திற்கு ஆகுபெயராய் நின்றது. கொண்டுவந்ததென்பது கொடுவந்தது என நின்றமையால் மரூஉ. கொடுவந்தது, ஒருசொல்லின் றன்மைத்தாய்ப் பொருளை யுணர்த்தி நின்றது. கொடுபோவ தென்பதும் அது. கொடுக்கஅறி யா என்பதில் அகரம் தொகுத்தல்.

அன்னவிசாரமதுவேவிசாரமதுவொழிந்தாற்
சொன்னவிசாரந்தொலையாவிசாரநற்றோகையரைப்
பன்னவிசாரம்பலகால்விசாரமிப்பாவிநெஞ்சுக்
கென்னவிசாரம்வைத்தாயிறைவாகச்சியேகம்பனே. (அ)

(இ - ள்.) அன்னவிசாரமதுவே - (பொய்யாகிய தேகத்தினைப்போஷி த்தற்பொருட்டுத் தேடும்) அன்னத்தின் விசாரம் அதுவே, விசாரம் - என க்குப் பெருவிசாரமாம், அது வொழிந்தால் - அவ்விசாரம் எவ்வகையேனும் நீங்கின், சொன்னவிசாரம் - பொருள்தேடியின்புறச்செய்யும் விசாரம், தொ லையாவிசாரம் - நீங்காதவிசாரமாம், (அதுவொழிந்தால்) நல் - அழகுவாய் ந்த, தோகையரை - மயில்போலுஞ் சாயலை யுடைய பெண்களை, பன் - புகழ் ந்து பேசும், அவிசாரம் - அந்தவிசாரம். பலகால்விசாரம் - பலகாலத்தும் விசாரமாம், இப்பாவி நெஞ்சுக்கு - சித்த சாந்தம் அடையாத இந்தப்பாவி யின் மனதிற்கு, என்னவிசாரம்வைத்தாய் - என்னவிசாரத்தினை வைத்தாய், இறைவாகச்சி யேகம்பனே - இறைவனே திருக்கச்சிநகர்க்கணெழுந்தருளிய ஏகம்பனே. எ - று.

(கு ரை.) "சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க்கடல்கடந்தும் பா வித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்" பிறரிடத்து இச்சகம் முதலியபேசி யும் சம்பாதித்தல் நாழியரிசிகொண்டுவுதரபோஷண நிமித்தமாதலின் அன்ன விசாரம்......விசாரம் என்றார். இங்ஙனம் பல்வகையி னுத்யோகித்து அன்ன விசாரம் ஒழிந்தோன் அதன்மேல் பொருள்தேடுதற்கும் அவ்விட்டிய பொரு ளைக்கள்ளர் முதலியோர் கவராது காத்தற்பொருட்டும் அதனைப் பல்வகையில் விருத்திசெய்து அதி லோபமின்றி லாபம்பெறச்செய்யும் விசாரம் அதினு மிக்கதாதலின் சொன்னவிசாரம்......விசாரம் என்றார். இதனை "இன்னறரும் பொருளை யீட்டுதலுந் துன்பமே, பின்னதனைப் பேணுதலுந் துன்பமேயன்ன தழித்தலுந் துன்பமேயந்தோபிறர்பால், இழத்தலுந் துன்பமேயாம்" என் று பிறர்கூறியதனானறிக. பெண்களிடம் அவர்தமைப் புகழ்ந்து அவர் விருப் புத்தம்மேல் வர இவற்கும் அவளிடத்து மத முண்டாம்" இதனை "காவிற் பிறக்குங் கதிர்மணிகாதலி சொல்லிற் பிறக்கு முயர்மதம் எனறதாலறிக. அங் ஙனமதமுண்டாகவே அவன் பன்னாள் வருந்திச்செய்த தவங்குறையும், அத்த வங்குறைந்த அடைவே அது குறைந்த இடத்து அவம் வந்து தங்கும், அது

வந்த அவ்வெல்லையி லதனை யடுத்தே பாவம் வந்துகூடும். இஃதொன்றோ அப்பெண்களைப் பல்காற்புணர்தலால் அவன் உறுதியாகப் பன்னாள் அநுபவிக்கக்கொண்டிருந்த வுடம்பிலடங்கியிருந்த நோய்கள் மேற்றோன்றி யழிவைத்தரும், ஆகலின் நற்றோகையரைப் பன்...பலகால் விசாரம் என்றார். இதனை “அருட்புப்போன் முலையாரல்லல் வாழ்க்கைமேல், விருப்புச்சேர்நிலை விட்டு நல்லிட்டமாய்த, திருப்புத்தூரனைச் சிந்தைசெயச்செயக், கருப்புச்சாற்றினு மண்ணிக்குங்காண்மினே” என்ற திருவாக்கானறிக. மேற்கூறிய ஈஷணாத்திரயங்கள் மூன்றில் மனத்தையழுத்தினோனை பாவம் மேலிட்டுப் பாழ்ங் கும்பிக்கே யிரையாதல் திண்ணமாதலின் பாவிநெஞ்சென்றார். இவையொழிந்தன் திருவடிமாட்டு அன்பாம் விசாரத்தையாக்கி மற்றதையொழிப்பா யிறைவனே யென்றிரங்குவார் என்னவிசாரம் வைத்தா யிறைவா என்றார்.

கல்லாப்பிழையுங்கருதாப்பிழையுங்கசிந்துருகி
நில்லாப்பிழையுநினையாப்பிழையுநின்னஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையுந்துதியாப்பிழையுந்தொழாப்பிழையு
மெல்லாப்பிழையும்பொறுத்தருள்வாய்கச்சியேகம்பனே. (௯)

(இ - ள்.) கல்லாப்பிழையும் - நீர் அருளிச்செய்த வேதசிவாகமங்களைக் கற்காதபிழையும், கருதாப்பிழையும் - அதன்கணுள்ள அருமைகளை மனக்கண்கொள்ளாப் பிழையும், கசிந்து - மனம் உருகி, நில்லா - உன்திருவடி பற்றாகநிற்காத, பிழையும்-தவறும், நினையாப்பிழையும்-தேவரீர் திருவடியை நினையாத்தவறும், நின் அஞ்சு எழுத்தை-உனது மந்திரத்திருமேனியை யுணர்த்தும் மந்திரமாதாவாகிய ஐந்தெழுத்தினை, சொல்லாப்பிழையும் - வாயாரச்சொல்லிச் செபிக்காதபிழையும், தொழாப்பிழையும் - உன்னை வணங்காத பிழையும், எல்லாப்பிழையும் - இவையொழிந்த மற்றெல்லாப்பிழையும், பொறுத்தருள்வாய் - பொறுத்துக்கொண்டு அருளபுரிவாய், கச்சி யேகம்பனே - திருக்கச்சியில் எழுந்தருளியிருக்கும் ஏகம்பனே. எ - று.

(கு - ரை.) கற்கவேண்டுழிசிவகதை யன்றியு வக்கதை யொன்றையும் அறிவுளார் கல்லாராதலினாலும் ஏனையராமன்கதை நளன்கதை அரிச்சந்திரன் கண்ணன் முதலியோர் கதைகள் இம்மையில் சிற்றின்ப மாத்திரையே யன்றிச் சிவகதைபோல மனமெய் முதலியவற்றை யுருக்கி இம்மை மறுமைப் பயன்களைத் தரா ஆதலினான் இஃதொன்றே நெஞ்சை யுருக்கி மெல்லென ஆணவத்தின் வலியடக்கி யருமை முத்திதர வல்லதாதலின் கல்லாப்பிழையும் எனவும், கற்று வல்லனாய் அக்கல்விச் செருக்கால் தம்மை யொத்தாரிடஞ் சென்று வியாகரணந் தருக்க முதலியவற்றி லவர்களுடன் வாதிட்டு வெற்றி பெறும் நோக்கங்கொண்டு திரிந்து வாணாள் வீணாளே போக்கினேனன்றி நன்னூற்களாகிய வேதசிவாகமங்களைக் கற்று அவற்றினைச் சிந்தித்தல் முதலிய செய்யேன் என்பார் கருதாப்பிழையும், எ - ம், அம்முனைவன்கண்ணே முதனூல் கற்றல் சிந்தித்தல் செய்தான் மனமொழி மெய்முதலிய வுருகித்தன்னையுந்தலைவனையு மறியும் நோக்கங்கொண்டு முதல்வன் றிருவடி பற்றாக்கொண்டு நிற்ப

ருதலின் கசிந்துருகி நில்லாப்பிழையும். எ - ம், அங்ஙனம் பன்னூலாய்க் தோய்ந்து ஆராய்தல் சிந்தித்தல் முதலிய செய்யாறாயினும் அனைக்கணமே னும் திருவடிக் கண்புகூண்டு நினைப்பறாயினும் மேற்கூறிய செயல்களைச்செ ய்து முத்தி புகுவார் புகுமிடம் அவனு மடைவறுதலின் அதுவும் அடியேன் செய்திலன் என்பார் நினையாப் பிழையும், எ - ம், இவையனைத்துங்கூடிலறு யினும் மந்திரமாதாவாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை, உபாம்சு, வாசிகம் மானதம், ஆகிய மூவிதங்களாலாயினும் ஜெபித்திலேன் என்பார் ஐஞ்செழுத்தைச்சொ ல்லாப்பிழையும், எ - ம், ஐந்தெழுத்தால் துதித்திலறாயினும் உன்பல்லாயிர நாமங்களில் ஒன்றையும் கூறியப்பேறு அடைகிலேன் என்பார் துதியாப்பிழை யும், எ - ம், இவையனைத்து மில்லேனாயினும் கைகுவித்தேனும் உன்திருக் கோயிலைத் துதியேன் என்பார் தொழாப்பிழையும், எ - ம், இவ்வாறு பலபி ழைகளும்பெற்றுளே னாயினும் தேவரீர திருச்சந்நிதானத்து நான்செய்த தவ றுகளைப் பொறுத்துக் காத்தருள்செய்க என்பார் எல்லாப்பிழையும் பொறுத் தருள்வாய் என்றார்.

மாயநட்போரையுமாயாமலமெனுமாதரையும்
வீயவிட்டோட்டிவெளியேபுறப்பட்டுமெய்யருளாந்
தாயுடன்சென்றுபின்தாதையைக்கூடிப்பின்றாயைமறந்
தேயுமதேநிட்டையென்றானெழிற்கச்சியேகம்பனே.　(கo)

(இ - ள்.) மாயநட்போரையும்-வஞ்சனைகளைச்செய்துமயக்கும் நட்பின ரையும், மாயா - அழியாத, மலம் எனும் - மலமே வடிவுகொண்ட, மாதரை யும் - பெண்களையும், வீய - அழிவடைய, விட்டு - விடுத்து, ஓட்டி - அவை தன்னிடம் நிலைக்காதுகெடுத்து, வெளியே புறப்பட்டு - (சர்வசங்க பரித்தி யாகஞ்செய்து) துறவியாய் வெளிப்பட்டு, மெய் அருளாம் - உண்மையா கிய சிவசத்தியாகும், தாயுடன்சென்று - தாயைப் பினபற்றி, பின்தாதையை க்கூடி, பிறகுதந்தையாகிய இறைவனையணைந்து, தாயைமறந்து - தான் தந் தையையணைதற்குப் பற்றுக்கோடாகிய தாயைமறந்து, ஏயும் அது ஏ-பொரு ந்தியிருக்கு அத்தன்மையே, நிட்டை என்றான - நிட்டையென றருளிச்செய் தான், எழில் கச்சி ஏகம்பனே - அழகுதங்கிய திருக்கச்சிக்கண் எழுந்தருளிய ஏகம்பன். எ - று.

(கு-ரை) பொய், களவு, கவறுமுதலிய பயின்று அவற்றின் வழிபுக்கு இன்பமடைந்துபொருள்நாடு மனைவிபுத்திரர்முதலியோரை விடுத்தோம்,தனி யேபரதேசிபோல்வசித்துமேமெனும் வஞ்சகர்செய்கையைப் பலராலகேட் கப்படுதலின் அவ்வகை பயில்வோர் பலருடன் நட்புச்செய்தல் தீதென்பார் மாயநட்போரையும் எனவும்,மலமேதன்னை மயககபெண்ணுருக்கொண்டுமுன் வந்து இறைவன் மாட்டுள்ள அன்பினைக் கெடுத்துத் தன்னைத் தன்வசப்படுத் திக்கெடுத்தலின் அதனை மலமாக உருவகப்படுத்தி மாயாமலம் எனுமமாதரை யும் என்றார். இவற்றை முதலறக் கெடுத்தல் வேண்டுமென்பார் வீயவிட்டோ ட்டி யென்றார். கெடுத்ததுணையானே யவைமீண்டும் வந்து தம்மையணையா

வாறு துறவும்கொள்ளல்வேண்டுமென்பார் வெளியேபுறப்பட்டு என்றார். ஆன்மாக்கள்தாம் பூமியிற்பிறக்குந்தோறும் ஜனனவலைப்பட்டு அழுந்தாவாறு (தாய் பிள்ளையின்மாட்டு மிக்ககவலையுடனிருந்து அப்பிள்ளைக்குத்தீமைநேரிடாவாறு காத்தல்போல்)காத்தலின் இறைவியை மெய்யருளாந்தாயுடன்சென்று, எ-ம், இங்ஙனம் சத்திநிபாத மடைந்தான்சிவத்துடன் கூடிப்பேரின்பமாகிய முத்தியினைய நுபவிப்பான் என்பார் தந்தையைக் கூடியென்றார். இங்ஙனமன்றித் தன்னுடன் அநாதியே நெல்லுக்கு உமிதவிடுமுதலியன போல் விட்டு நீங்கா திருக்கு மாயைகன் மங்கலை மாயகட்டேபோர் என்றார் எனினுமாம். அவ்விரண்டையும் நீங்கினவாறே மலத்திலையும் அவ்வகை நீங்கிச் சிவசத்திபதிய இறைவனையணைய வேண்டு முபாயங் கூறினார் என்னலுமாம்.

வரிக்கோலவேல்விழியாரனுராகமயக்கிற்சென்று
சரிக்கோதுவேனெழுத்தஞ்சுஞ்சொலேன்றமியேனுடல
நரிக்கோகழுகுபருந்தினுக்கோவெய்யநாய்தனக்கோ
வெரிக்கோவிரையெதுக்கோவிறைவாகச்சியேகம்பனே. (கக)

(இ-ள்.) வரி - செவ்வரிகளையுடைய, கோலம் - அழகிய, வேல்விழியார் வேலையொத்தகண்களையுடைய பெண்களின், அநுராகமயக்கில்-காமமயக்கத்தில், சென்று-போய், சரிக்கு-அவருடன் நட்புக்கொண்டுலாவுதற்கு, ஓதுவேன் அதற்குவேண்டிய காமநூல்களை யோதுவேன், எழுத்துஐஞ்சும் - பஞ்சாக்ஷரங்களைந்தினையும், சொலேன் - செபியேன், (ஆதலால்) தமியேன் உடலம் - அடியேனது தேகம், நரிக்கோ - நரிகளுக்கோ, கழுகு பருந்தினுக்கோ-கழுகுகள் பருந்துகள் முதலிய வற்றிற்கோ, வெய்ய-கொடிய, நாய்தனக்கோ-நாய்களுக்கோ, எரிக்கோ-நெருப்பினுக்கோ, எதுக்கோ - வேறெதற்கோ, இரை-இரையாவது அறியேன், கச்சிஏகம்பனே-திருக்கச்சிக்கண் எழுந்தருளிய ஏகம்பனே - எ - று.

(கு-ரை.) அனைத்தையுந்துறந்து விட்ட துறவியையும் வேல்போல்தைத்துருவி அவர்களைத் தம் வயப்படுத்த வல்லது கண்ணாகலின் அதனை வரிக்கோல வேல்விழியென்றார். அவர் அநுராகத்தில் மயக்க முற்று அவர்க்கு வேண்டிய நூல்களைக் கற்பதற்குக் காமநூல் பழகிவாளுள் வீணிற் கழிப்பேனாதலின் சரிகோது வேன் - எ - ம், அவ்வாறு சரிக்கும் நான் இவற்றைப்பற்றுக்கொண்ட நாட்கள் வீணாம் எனத்தேறி யெழுத்தைந்தும் ஓதேன் என்பார் எழுத்தைந்துஞ் சொலேன் என்றார். இவ்வகை கரசரணாதிகளும் தலைமுதலிய வுறுப்புக்களும் புறக்கரண அந்தக்கரணங்களும் அவன் திருத்திற்பணி செய்யாது கெடுதலின் அவ்வகையழிந்தவுடல் உயிர் நீங்கிய பின் நாய்நரி முதலியஉண்ணப்பயனுறுமே யன்றிவேறாகாது என்பார் இரையெதுக்கோ என்றார்.

காதென்றுமூக்கென்றுகண்ணென்றுகாட்டியென்கண்ணெதிரே
மாதென்றுசொல்விவருமாயைதன்னைமறவிவிட்ட
தூதென்றெண்ணுமற்சுமென்றுநாடுமித்துறப்புத்தியை
யேதென்றெடுத்துரைப்பேனிறைவாகச்சியேகம்பனே. (கஉ)

(இ - ள்.) காதுஎன்றும் - காதினழகையும், மூக்கு என்றும்-மூக்கினழகினையும், கண் என்றும் - கண்ணின் அழகினையும, காட்டி - எனக்குமுன்னே தெரிவித்து, என்கண் எதிரே - எனதுகண்ணுக்கெதிரில், மாது என்று-பெண்ணெனப்பேர் கொண்டு, சொல்லி-மதமுண்டாம் வார்த்தைகளைக்கூறி, வரும் மாயைதன்னை - வருகின்ற மாயாவுருக்கொண்ட பெண்ணை, மறலி - யமன், விட்ட - என்னுயிரைக்கொலைபுரிய ஏவிய, தூது என்று - தூதாகவந்தவள் என்று, எண்ணாமல் - நினையாமல், சுகம் என்று-இதுவே சுகப்பேறு என்று, நாடும் - ஆராயும், இத்துர்புத்தியை - இத்தீமதிகொண்டானை,ஏதென்று எடுத்து உரைப்பேன் - ஏதென்று எடுத்துச் சொல்வேன், இறைவா - தலைவனே, கச்சி ஏகம்பனே - திருக்கச்சிக்கணெழுந்தருளிய ஏகம்பனே. எ - று.

(கு - ரை.) பெண்ணினைக்கண்ட காலத்து முதற்கண் தோன்றுவது முகமாதலில் அதிற்சிந்த வுறுப்புகளைக்கூறிடுவார் காதுமுதலியவற்றைக்கூறினார். இங்ஙனங் கூறவே காண்பானுக்குக் காது வெள்ளைத்தண்டினையும், மூக்கு எள்ளின்போதினையும், கண் வேலினையும் ஒத்து வருத்தஞ்செய்தலின் காட்டி என்றார். இவைகொண்டாள் பெண்ணாயின் பெண்ணுக்குரிய மடமையாதி குணங்களிருத்தல்வேண்டும் அங்ஙனமிலாது துயரஞ்செய்தலின் யாதென்று சொல்லி எ - ம், இவ்வகை நல்வழி செல்லவொட்டாது, என்னைத் தடுத்துத் தன்வழி யொழுகச்செய்தலினிதை மாயை யென்பார் மாயைதன்னை எ - ம், இவ்வாறு அப்பெண் வழி யொழுகினான், அடையவேண்டிய பேரின்பத்திற் குரிய முயற்சியினைச் செய்யாது இம்மையிற் சுகம் நிலை பேறுடையதாக்கொண்டு அதின்வழி யொழுகி யமன்றூதரால் தண்டிக்கப்பட்டு நிரயத்தில்வீழ்ந்து இறைவன் திருவடிமறய மறத்தலின்மறலி விட்டதூதென்றும், இவ்வகையொழுகும் காலத் துச்சிறிதும் நல்லறிவால் சிந்தித்திலேன் என்பார் எண்ணாமல். எ - ம், சுகமல்லா இதனைச் சுகமாக எண்ணினேன் இது நல்லோரால் மதிக்கத்தக்கதன்று என்பார் துற்புத்தி. எ - ம், இப்புத்தி யுலகப்பொருள்களில் ஒன்றாகக்கொள்ளத் தக்கதன்று என்பார் ஏதென்று எடுத்துரைப்பேன் எனவுங் கூறினார். மாயாவுருக்கொண்ட பெண்ணினை மாயையெனவும், துற்புத்தியையுடையானை துற்புத்தியெனவும் ஆகுபெயராற் கூறினர்.

ஊருஞ்சதமல்லவுற்றார்சதமல்லவுற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்லபெண்டீர்சதமல்லபிள்ளைகளுஞ்
சீருஞ்சதமல்லசெல்வஞ்சதமல்லதேசத்திலே
யாருஞ்சதமல்லநின்றாள்சதங்கச்சியேகம்பனே. (௧௩)

(இ - ள்.) ஊருஞ்சதம்அல்ல - (ஒருவற்குத் தம்முன்னோராலும் தன்னாலும்வந்த கிராமதிகளும் நெடுநாள் அனுபவிக்கப்படும் பொருள்களாகா, உற்றார் - (உடன்பிறந்தார் மனைவிமக்கள் முதலிய) உறவினரும், சதம் அல்ல - நெடுநாளாகச் சூழ்ந்து உறுதி கூறத்தக்கவராகார், உற்று - (புத்திரப்பேறு வேண்டி விரதமுதலிய செய்து) கவலை அடைந்து, பெற்றபேரும் - பெற்ற

ராகிய தாய்தந்தையர்களும், சதம் அல்ல - எக்காலத்துமிருந்து நமக்குறுதியாகார், பெண்டிர் - (பல்லாரறியப் பறையறைந்து நாள்கேட்டுத் தன்தேகரக்ஷணார்த்தம்கொண்ட) மனைவியரும்,சதம் அல்ல - சாங்காலத்து உறுதியைத்தரார், பிள்ளைகளும் - தாம் தவஞ்செய்து பெற்ற புத்திரர்களும்,சதம் அல்ல் அத்தந்தையருக்கு இறுதிக்காலத்துத் துணையாகார்,சீரும் சதம் அல்ல-தனது புகழாகிய சீர்மையும் உறுதியைத்தராது. செல்வம் சதம் அல்ல - தான் உடம்புவருந்தச் சேகரித்த செல்வமும் சதமாகாது, தேசத்திலே - இப்பூமியில், யாரும்சதம் அல்ல - யாவரும் உறுதியாகார், நின்றாள்சதம் - தேவரீர் திருவடிகளே இம்மை மறுமை யிரண்டிற்கு முறுதி தரத்தக்கவையாம், இறைவா - தலைவனே, கச்சி ஏகம்பனே-திருக்கச்சிக்க ணெழுந்தருளிய வேகம்பனே. எ-று.

(கு - ரை.) உலகத்துத்தோன்றிய வொருவன் தன்வாழ்நாட்களில் தன் குடும்பத்துடன் சீவிக்கவேண்டியதற்குத் தேடிக்கொள்வது நாடுமுதலியவையாதலின் முதலில்தேடிக்கொள்ளுமதனை யூரும்,எ-ம். அங்ஙனமன்றி யிடவாகு பெயராய் ஊரில் தனக்கு நட்பாகவுள்ளாரும் எனினுமாம். இங்ஙனம் தனக்கு உதவியாகப்பெற்ற ஊரும் ஊராரும் அநுபவிக்கு மாத்திரையே யன்றித் தன்னைப் பின்பற்றுவனவாகக்கொள்ளப்படுவனவன்று என்பார் சதமல்ல எ - ம், கூறினார். தன்னைப்பற்றித் தனக்கு இடுக்கண் நேர்ந்த ஆங்குச் சென்றுதவும் உண்மைச் சுற்றத்தவரும் இம்மைக்கண் கைப்பொருள் நீங்கிய காலத்து அகல நிற்பர் அவ்வகை யகலாராயினும் உடல் நீங்கும் மரண காலத்து ஒருபோதும் பின்பற்றாராதலின் அவ்வகைச் சுற்றத்தினரும் உறுதியென வேண்டப்படார் என்பார் உற்றார்...அல்ல, எ - ம், பத்துமாதஞ் சுமந்து வருந்தியீன்று பிணிமுதலியவற்றிற்கஞ்சிக் காத்துக் குருவிபரவாமற் சோதாட்டிய தாயும், தனக்குறுதியெனப் பலபண்டங்களை யருத்திக் கல்விமுதலிய பயில்வித்துக்காத்த முதுகுரவர் இருவரும் காலன்வந் துயிர்கொள்ளு மக்காலத்து எனைக்காத்துத் தடுக்கவல்லரல்லராதலின் அவர்களு முறுதியல்லர் என்பார், உற்று...சதமல்ல,எ-ம்,எனக்குறுதியென நான் பல்லணிபூட்டிப்பல்லாரறியப் பறையறைந்து நாள்கேட்டுக்கொண்ட மனைவியும் வெம்புவாள் விழுவாள் மேல்விழுந்தழுவாள் சாகிறேனென்று என்னுடன் கூறியானிறக்குந் தருணத்து என்னுடன்வந்துதவாளாதலின் பெண்டீர் சதமல்ல, எ - ம், என்னாலூட்டப்பட்டு வளர்ந்து கல்விமுதலிய கற்றுவல்லராய் நன்னிலையடைந்த புத்திரரும் யானுண்ணாது தேனீப்போல்வைத்த பொருளைக்கொண்டு இன்பமனுபவிப்பரேயன்றி யான்படுமரணத்துயரைக்கண்டு அதனைவிலக்கார் நானிறந்து செல்லுமிடத்திற்கு மென்னைப் பின்பற்றார் என்பார் பிள்ளைகளுஞ் சதமல்ல, எ - ம். நான் பணனுள்பலர்க்குச் செய்த வுதவியாலும் கொடையாலு மடைந்த கீர்த்திமுதலியவும், வருந்திப்பெற்ற பெருஞ்செல்வமும் என்னுடன் வந்தெனக்குறுதி பயவாஎன்பார், சீருஞ்சதமல்ல செல்வஞ் சதமல்ல எனவும், இவையே யன்றி உயர்திணை யஃறிணை யாகிய உலகத்துப்பொருண் முழுதும் போக்கியப்பொருளேயன்றி யென்னுடன் சென்று எனக்குற்ற மரணத்துயரத்தைப்போக்கிச் செம்மைதரவல்லனவன் றென்பார்உயர்திணையையுமுடன்படுத்தியாருஞ் சதமல்ல என்றார். இவையனைத்தும் தேவரீரது திருவடிகளை

அடைதற்குரிய உபகரணங்க ளாகமாட்டாது நிலையில் பொருள்களாயொழிதலின், அங்ஙனமன்றித் தம்மை யடைந்தோர்க்குப் பெறுதற்கரிய பேறாய் இம்மை மறுமைக்குத் துணையாய், அந்தமிலின்பத் தழிவில்வீட்டினை அளிக்க வல்லதாய் விளங்குவதுமே தேவரீர் திருவடிகளே யென்பார் "நின்றாள் சதங்கச்சியேகம்பனே" என்று கூறினர்.

சீறும்வினையதுபெண்ணுருவாகித்திரண்டுருண்டு
கூறுமுலையுமிறைச்சியுமாகிக்கொடுமையினாற்
பீறுமலமுமுதிரமுஞ்சாயும்பெருங்குழிவிட்
டேறுங்கரைகண்டிலேனிறைவாகச்சியேகம்பனே. (கச)

(இ-ள்.) சீறும்வினையது - (ஆன்மாக்களை) வருத்துகின்றவினையானது, பெண்உருவாகி - பெண்வடிவாகி, திரண்டு உருண்டு - திரண்டுருண்டு, கூறும் (யாவராலும் புகழ்ந்து) சொல்லப்பட்ட, முலையும் - தனங்களும், இறைச்சியும் ஆகி - மாமிசமுமாகி, கொடுமையினால் - கொடுமையால், பீறும் - கிழித்து வெளிப்படுகின்ற, மலமும் - மலமும், உதிரமும் சாயும் - இரத்தமும் ஊற்றெடுக்கின்ற, பெருங்குழிவிட்டு - பெரும்பள்ள மாகிய நிதம்பத்தை யொழித்து, ஏறும் - ஏறுதற்குரிய, கரைகண்டிலேன் - (முத்தியாகிய) கரையைக்கண்டேனில்லை, இறைவா - தலைவனே, கச்சி ஏகம்பனே - திருக்கச்சியின்கண் எழுந்தருளிய ஏகம்பனே. எ-று.

(கு-ரை) இருவினைச்சம்பந்தத்தால் தேகமும், தேக சம்பந்தத்தால் ஊழ்வினையும், ஊழ்வினையால் பல்வகையிடுக்கணும் முறையே தோன்றுமாப் போல், மாதரைக்காண்டல் சிந்தித்தல் அவர் சொற்கேட்டல் முதலியன பல்வகைத்துயரிற்கும் ஆகரமாதலின் "சீறும் வினையது பெண்ணுருவாகி" எனவும், மானுட அவயவமுப்பத்திரண்டனுள் நீண்டும் பரந்தும் தடித்தும் மாமிசம் பெற்றும் திரண்டும் உருண்டும் இருக்கவேண்டிய அவ்வவ்வவயவங்கட்குரிய சாமுத்திரிக விலக்கணப்படி அழகு நிரம்பப்பெற்றவரென்பார் "திரண்டுருண்டு கூறுமுலையும் இறைச்சியுமாகி" எனவும், மானுடதேகத்திலுள்ள நவத்துவாரங்களுள் மலமுறுமாப்போலக் கடிதடம் மலமேயன்றி, உதிரமும் பாயுமியல்பினதாகலின் "பீறுமலமும் உதிரமும் சாயும்" எனவும் மாதர்களே எமசுவரூபமெனவும், அவருடைய விழிகள்பாசமெனவும், அல்குல் நரகமெனவுங் கூறி, ஏனைய நரகங்கள் தம்மிடத்து வீழ்ந்தோரை ஓரோகாலங்களில் வெளிவிட்டு விடுமியல்பினவாதல் போலன்றி, எக்காலத்தும் நீங்காது துன்புறுத்து மியற்கையினதாகலின் "பெருங்குழி விட்டேறுங் கரைகண்டிலேன்" எனவும், கூறினர். இதனை மாதர்யமனுமவர் தம்மை விழியேவன்பாசம் - பீதிதருமல்குல் பெருநரகம்-ஓதிலதில், வீழ்ந்தோர்க்குமேறவிதியில்லை போரூரைத், தாழ்ந்தோர்க்கு மில்லை தவறு" எனவும், "ஓரிரண்டுவாழைக் கிடையிருந்தவாளரவின் வாய்படார்- பீழைக்கிடைவருந்தார்பின்" எனவும் வருந் திருப்போரூர்ச் சந்நிதிமுறை யானுமுணர்க.

சிறும் விளையது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி-திரண்டுரண்டு ஒரு சொன்னீர்மைத்து. பெருங்குழி என்றது நிதம்பத்தை. "பவக்கடல் கடந்து முத்தியங்கரையிற் படர்பவர்" என்று பெரியார்கூறியதனால் 'கரை' என்றதற்கு முத்தியாகிய கரையெனப் பொருள்கூறலாயிற்று.

பொருளுடையோரைச்செயலினும்வீரரைப்போர்க்களத்துந்
தெருளுடையோரைமுகத்தினுந்தேர்ந்துதெளிவதுபோ
லருளுடையோரைத்தவத்திற்குணத்திலருளிலன்பி
லிருளறுசொல்லினுங்காணத்தகுங்கச்சியேகம்பனே. (சரு)

(இ - ள்.) பொருள் உடையோரை - பொருட்செல்வமுடையவரை, செயலினும் - அவரது தொழிலாலும், வீரரை - போர்வீரரை, போர்க்களத்தும்-போர்க்களத்து(அவர் செய்யும் போராலும்) தெருள் உடையோரை கல்வித்தேர்ச்சியுடையவரை, முகத்தினும் - அவரது முகத்தாலும், தேர்ந்து தெளிவதுபோல் - ஆராய்ந்து உணர்வதுபோல, அருளுடையோரை - தேவரீருடைய திருவருளுடையாரை, தவத்தில் - (அவர்செய்யும்) தவத்தாலும், குணத்தில் - அவரது குணத்தாலும், அருளில் - (அவர்க்குப் பிறவுயிர்களிடத்துள்ள) கிருபையினாலும், அன்பில் -(அவர்க்குத்தம் தொடர் புடையாடத்துள்ள) அன்பினாலும், இருள் அறுசொல்லினும் - (கேட்பவருடைய அஞ்ஞான மென்கிற) அந்தகாரம் அறுதற்குக்காரணமாகிய அவரது சொற்களாலும், காணத்தகும் - உணரலாகும், கச்சி ஏகம்பனே - திருக்கச்சியின் கண் எழுந்தருளிய ஏகம்பனே. எ-று.

(கு-ரை.) தமக்குச் செல்வம் உள்ளபொழுது யாசிப்பவர்கட்குக் கொடுத்துவருவராதலால் "பொருளுடையோரைச் செயலினும்" என்றார். இதனை "அற்றாரழிபசி தீர்த்த லஃதொருவன் பெற்றான் பொருள்வைப்புழி" என்பதனாலறிக. போர்செய்துமென்று எண்ணி மறத்தைக் கொண்டிருக்கும் வீரர் தம்மார்பிலே தைத்து நின்ற வேலைப் பறித்து, தம்மோடெதிர்த்த யானையின் மருப்பிடையிட்டு அது விண்ணிடங்கொள்ளவும் அவ்வேலுக்குண்டான வளைவைத் தம்மார்பின் கண்ணுள்ள புண்ணிலேயே நுழைத்து நிமிர்த்துக்கொள்ளவும், போர்க்களத்திற் போரைச்செய்வராதலால் "வீரரைப்போர்க்களத்து" என்றார். இதனை "கைவேல் களிற்றொடு போக்கிவருபவன், மெய்வேல்பறியாநகும்" என்றதனாலறிக கற்றோர் சொற்பொருள்களின் சுவையையனுபவித்தலாலும், புகழ்பொருள் பூசைபெறுதலாலும், அறம் வீடு அடைதலாலும், மிக்காரோடுகூடி அறிந்தனவெல்லாம் அறிந்தமையாலும், யோகநூல் முதலியவற்றைச் சான்றோர்பால் கற்றதனால் வயதும் பலவாக நரையும் திரையும் இல்லாமையாலும், முகமலர்ச்சியோடிருப்பராதலா லதனை யாராய்ந்துணரவேண்டு மென்பார். "தெருளுடையோரை முகத்தினுந் தேர்ந்து தெளிவது' எனவும், தவத்தோர் முன்செய்த தவப்பழக்கத்தால் அறிவும், ஆற்றலும், ஞானயோகங்களின் முதிர்ச்சியும், காம வெகுளி மயக்கமின்மையும், தொடர்புடையார்மாட்டும் பிறர்மாட்டும் விருப்பமுடையாமையும், தமக்கும் பிறர்க்கும் தீமைபயவாத சொற்களைச்சொ

ல்லுதலுமுடையராதலால் அவற்றை அவர் செய்யுந் தொழில் முதலிய வற்றால் காணத்தகும் என்பார். "அருளுடையோரைத் தவத்திற்குணத்திலரு ளிலன்பி,லிருளறு சொல்லினுங் காணத்தகும்" எனவும் கூறினார்.

பருத்திப்பொதியினைப்போலேவயிறுபருக்கத்தங்க
டுருத்திக்கறுசுவைபோடுகின்றார் துறந்தோர் தமக்கு
வருத்தியமுதிடமாட்டாரவரையிம்மாநிலத்தி
லிருத்திக்கொண்டேனிருந்தாயிறைவாகச்சியேகம்பனே. (கசு)

(இ-ள்.) பருத்திப்பொதியினைப்போலே- பருத்திமூட்டையைப்போல, வயிறுபருக்க - வயிறுபருக்கும்படி, தங்கள்துருத்திக்கு - தங்கள் தோற்பை யாகிய வயிற்றினுக்கு, அறுசுவை - அறுசுவையோடுகூடிய உணவுகளை போடுகின்றார் - நிரப்புகின்றார்கள், துறந்தோர்தமக்கு - துறவினர்க்கு, வரு த்தி அமுது இடமாட்டார் - வரவழைத்து உணவளிக்கமாட்டார்கள், அவ ரை - அப்படிப்பட்டவர்களை, இம்மாநிலத்தில் - இப்பெரியபூமியில், இருத் திக்கொண்டு - இருக்கும்படி செய்துகொண்டு, ஏன் இருந்தாய் - யாதுகார ணத்தாலிருந்தனை, இறைவா - தலைவனே, கச்சி ஏகம்பனே - திருக்கச்சி யின்கண் எழுந்தருளிய ஏகம்பனே. எ-று.

(கு - ரை.) யாக்கைக்கு வரைந்தநாள் கழியுங்காலத்து, உரையா வண்ணம் நாவையடக்கி விக்குள் எழ, உயிர் ஒருகணப்பொழுதாயினும் நில்லாது, புள்ளுப் பருவம்வந்துழிக் குடம்பையினின்றும் பறக்குமாப்போல நீங்கி, நேற்றிருந்தானின்றில்லை யென்று உலகஞ்சொல்ல, உறங்குந்தன்மை போலக் கிடக்குஞ் சரீரத்தை நிலையதென்று கருதி, அதற்கு அறுசுவையோ டுகூடிய வுணவையிட்டு,தீயினுக்கு எதிர்த்து நிற்காத பருத்திப் பொதியைப் போலப் பருக்கும்படி வளர்க்கின்றார் என்பார், "பருத்திப் பொதியினைப் போலே வயிறுபருக்கத் தங்கடுருத்திக்கறுசுவை போடுகின்றார்" எனவும்,முன் செய்த நல்வினைப்பயனாற் செல்வம் பெற்றோர் மாதவர்க்கு அமுது செய் வித்துப் பொழுதுபோக்க வேண்டுமாதலான் அங்ஙனஞ்செய்யாது கள்ளுக் குஞ் சூதுக்கும் பொருள்செலவிட்டு வாணாளைக்கழித்து யாதொருபயனை யும் அடையாது இந்நிலவுலகத்திற்குப் பாரமாய் இருத்தலேயன்றி அவர்க ளால் யாதொருபயனு மில்லை என்பார், "துறந்தோர்தமக்கு வருத்தியமு திட மாட்டாரவரை யிம்மாநிலத்தி லிருத்திக்கொண்டேனிருந்தாய்"எனவும் கூறினார்.

பொல்லாவிருளகற்றுங்கதிர்கூகையென்புட்கண்ணினுக்
கல்லாயிருந்திடுமாறொக்குமேயறிவோருளத்தில்
வல்லாரறிவாரறியார்தமக்குமயக்கங்கண்டா
யெல்லாம்விழிமயக்கேயிறைவா கச்சியேகம்பனே. (கஎ)

(இ-ள்.) அறிவு - ஞானத்தால், ஓர் - (விடயஞான ஆராய்ச்சியை) உணர்தற்குரிய, உள்ளத்தில் வல்லார் - மனக்கிளர்ச்சியில் வல்லவர்களாகிய ஞானிகள், அறிவார் - (உண்மைப்பொருளை) உள்ளபடி தமது ஞானக்கண்

ணுல் காண்பார்கள், அறியார்தமக்கு - அப்படிப்பார்த்தற்குரிய ஞானக்கண் இல்லாதவர்க்கு, மயக்கம் - (அவ்வுண்மைப்பொருள் உணர்ச்சி) மயக்கமேயாம், (அது எது போல எனின்) பொல்லா இருள் அகற்றும் கதிர் -கொடிய இருளை யொழிக்கும் சூரியகிரணம், கூகை என் புள் கண்ணினுக்கு - கூகையென்கின்ற பறவையின்கண்ணுக்கு, அல் ஆய் இருந்திடும் ஆறு-இருளாய் இருக்கும் தன்மையை, ஒக்கும் - ஒத்திருக்கும், (ஆதலால்) எல்லாம் விழிமயக்கே-யாவும் கண்ணுலாகிய தவறேயாம், இறைவா-தலைவனே,கச்சி ஏகம்பனே-திருக்கச்சியின்கண் எழுந்தருளிய ஏகம்பனே. எ-று.

(கு - ரை.) நண்பகலில் எவ்வகைப்பட்ட இருளையும் ஒழிக்கும் சூரியகிரணங்களாலேகண்கள் ஒளிமயங்கிக்கிடக்கின்ற கூகையை வலியற்ற காக்கை வெல்லுதலால் அக்கூகையின்கண்ணுக்குச் சூரியகிரணங்கள் இருளாய்த்தோன்றிடும் என்பார், "பொல்லாவிருளகற்றுங் கதிர்கூகையென் புட்கண்ணினுக் கல்லாயிருந்திடும்" எனவும், சராசரமாகிய பொருள்களிலெல்லாம் உலகத்தார் கற்பித்துக்கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக்கழித்து நின்றவுண்மையைக் காண்பது அறிவுடையோருடைய தன்மையாதலால், "அறிவோருளத்தில் வல்லாரறிவர்" எனவும், தொன்று தொட்டுள்ள அவிச்சையென்னும் அஞ்ஞானமும், அவ்வஞ்ஞானம்பற்றி யானென மதிக்கும் அகங்காரமும், அவ்வகங்காரம்பற்றி எனக்கு இது வேண்டுமென்னும் விருப்பும், அவ்விருப்புப்பற்றி அப்பொருளிடத்தே செல்லும் ஆசையும், அவ்வாசைபற்றி அப்பொருளிற்கு எதிராயிருப்பதில் செல்லும் கோபமுமுடையவர்கள் ஊனக்கண்களன்றி ஞானக்கண்களால் மெய்ப்பொருள் காணப்படாமல் மயங்குவராதலால் "அறியார் தமக்கு மயக்கங்கண்டா யெல்லாம் விழிமயக்கே" எனவும் கூறினர். ஞானிகள் மனத்துக்குப் பரம்பொருள் தோன்றும், அஞ்ஞானிகள் மனத்துக்குத்தோன்ருதென்க. அஞ்ஞானிகள் மனத்துக்குத்தோன்ருமைக்குக் காரணம் அவர்கள் மனக்குற்றமென்க.

வாதுக்குச்சண்டைக்குப்போவார் வருவார்வழக்குரைப்பார்
தீதுக்குதவியுஞ்செய்திடுவார்தினந்தேடியொன்று
மாதுக்களித்துமயங்கிடுவார்விதிமாளுமட்டு
மேதுக்கிவர்பிறந்தாரிறைவா கச்சியேகம்பனே. (கஅ)

(இ - ள்.) வாதுக்கு - வீண்வாதத்துக்கும், சண்டைக்கு - வீண்சண்டைக்கும், போவார்-போவார், வருவார் - மீண்டுவருவார், வழக்கு - தமது வழக்கை, உரைப்பார் - மற்றவர்கேட்கச் சொல்வார்கள், தீதுக்கு உதவியும் செய்திடுவார் - தீமைக்குத் துணையும் செய்வார், விதிமாளுமட்டும் - தமது ஆயுளளவும், ஒன்று - ஒப்பற்றதாகிய பொருளை, தினம்தேடி - நாள்தோறும் சம்பாதித்துவைத்து, மாதுக்கு - (தம்மால் விரும்பப்பட்ட) பெண்ணுக்கு, அளித்து - கொடுத்து, மயங்கிடுவார் - மயங்குவார்கள், இவர் - இத்தன்மையான குணங்களையுடைய இவர், ஏதுக்குப்பிறந்தார் - என்னகாரணத்தின் பொருட்டுப் பிறந்தார்களோ, இறைவா - தலைவனே,கச்சி ஏகம்பனே-திருக்கச்சியின்கண் எழுந்தருளிய ஏகம்பனே எ-று,

(கு - ரை.) தீவினையுடையார் இம்மை மறுமை வீடுகட்குரிய புகழ் அற ஞானங்களைத் தேடாது, தம்மைச்செய்தாரை யிருளிற் சேர்க்கும் பழிமுத லியவற்றைத் தேடும்பொருட்டு, "வாதுக்குச்சண்டைக்குப் போவார் வருவார் வழக்குரைப்பார் தீதுக்குதவியுஞ்செய்திடுவார்" எனவும், தாம்தேடிய பொருள்களைப் பிறர்க்கீதலும் துய்த்தலும் செய்யாமல் அப்பொருளை நாள்தோறும் தாம் விரும்பிய மாதர்க்குக்கொடுத்து, அப்பயனை அவர் நுகருந்தோறும் ஆண்பாலர்களாலும் நாணத்தக்கதோர் நாணைப்பெற்று அறிவழிந்து ஆயுள்காறும் மயங்கிடுவர் என்பார், "தினந்தேடியொன்று மாதுக் களித்து மயங்கிடுவார் விதிமாளுமட்டும்" எனவும். தாம் பிறந்தும் இம்மை மறுமைக்குரிய பயனை யடையாமையால் "ஏதுக்கிவர்பிறந்தார்" எனவும் கூறினர்.

ஓயாமற்பொய்சொல்வர்நல்லோரைநிந்திப்பருற்றுப்பெற்ற
தாயாரைவைவர்சதியாயிரஞ்செய்வர்சாத்திரங்க
ளாயார்பிறர்க்குபகாரஞ்செய்யார்தமையண்டினர்க்கொன்
றீயாரிருந்தென்னபோயென்னகாண்கச்சியேகம்பனே. (கசு)

(இ-ள்) ஓயாமல் பொய்சொல்வர் - ஒழியாமல் பொய்பேசுவார்கள், நல்லோரை - நல்லவர்களை, நிந்திப்பர்-பழிப்பார்கள், உற்றுப்பெற்ற - கருப்பநோய் முதலியவற்றை அடைந்து ஈன்ற, தாயாரை - அன்னையை, வைவர் - பழிப்பார்கள், ஆயிரம்சதி - பலவஞ்சனைகளை, செய்வர் - செய்வார்கள், சாத்திரங்கள் - ஞானசாஸ்திரங்களை, ஆயார் - ஆராயார், பிறர்க்கு - அன்னியர்க்கு, உபகாரம் செய்யார் - உதவியும் செய்யார், தம்மை அண்டினர்க்கு ஒன்று ஈயார்-(தம்மைநெருங்கினவர்கட்குஒருபொருளையும்) கொடுக்கமாட்டார், (இத்தன்மையான இவர்) இருந்து என்ன - உலகிலிருந்தால் என்ன பயன், போய் என்ன-இறந்தொழிந்தால் யாது கெடுதி, கச்சி ஏகம்பனே-திருக்கச்சியின்கண் எழுந்தருளிய ஏகம்பனே எ-று.

(கு-ரை.) உயர்ந்தோர் இழிந்தோர் என்று கருதாமல் பொருள்கொடுப்பார் யாவராயினும் அவரைக்கூடி முயங்குதல் பொருட்பெண்டிர்க்கு இயல்பாதலால் அப்பெண்டிரைத் தாமும்கூடி முயங்கவும் அதற்குப் பொருள் தேடவும் வேண்டுதலின், "ஓயாமற்பொய்சொல்வர்" எனவும், நகுடனென்பான் இந்திரப்பதவிபெற்றுச் சிவிகையேறிச் செல்கின்ற காலத்துத்தான் பெற்ற களிப்புமிகுதியால் அகத்தியமுனிவர் வெகுள்வதோர் தவறுசெய்ய, அதனால் அவன்சாபமெய்தி அப்பதத்தை இடையே இழக்கப்பெற்றானென்பதனைத் தாம் கருதாமையால் "நல்லோரை நிந்திப்பர்" எனவும், ஈரைந்து திங்கள் சுமந்து பெற்றதையும், அன்னையும்பிதாவும் முன்னறிதெய்வம் என்பதையும், தாயோடறுசுவைபோம், என்பதையும் உணராமையால் "உற்றுப்பெற்றதாயாரை வைவர்" எனவும், பிறர்க்குரிய பொருளை எண்ணி அதனை வஞ்சித்துக்கொள்ளுவதற்கு, அப்பொருளுடையாரது சோர்வுபார்க்கும் மயக்கமுடையவராதலால் "சதியாயிரஞ்செய்வர்" எனவும், இம்மை மறுமைப்பயனைத்தரும்சிவசரிதங்களையாராயாது இருளிற் சேர்க்கும் காமநூல் முதலியவற்றை யாராய்ந்து தம்வாணாளைக்கழிப்பராதலால், "சாத்

திரங்களாயார்" எனவும், பிறர்க்குதவாதார் ஈட்டியபொருளை தாம் உண்டற் பொருட்டன்றியே பிறர்க்குதவி செய்யாமல் இம்மை மறுமைப்பேற் றை அடையாராதலால், "பிறர்க்குபகாரஞ்செய்யார்" எனவும், தம்மை அடைக்கலம்புகுந்தபுறவினைக்காத்தசிபிச்சக்கிரவர்த்திபோல் தொடர்புடை யாரையும் பிறரையும் ஆதரவுசெய்யாதார் நிலவுலகில் உயிரோடிருந்தா லும் இறந்தாலும் பயனில்லை யாதலின், "தமையண்டினர்க்கொன்றீயாரிருந் தென்னபோயென்னகாண்" எனவும் கூறினர்.

அப்பென்றும்வெண்மையதாயினுமாங்கந்நிலத்தியல்பாய்த்
தப்பின்றியேகுணவேற்றுமைதான்பலசார்தலினாற்
செப்பிலபக்குவம்பக்குவமாயுள்ளசீவரினு
மிப்படியேநிற்பனெந்தைபிரான்கச்சியேகம்பனே. (உ0)

(இ-ள்) அப்பு - நீரானது, என்றும்-எப்பொழுதும், வெண்மையதுஆ யினும் - வெண்ணிறமுடையதானாலும், ஆங்கு - அது மேகத்தினின்றும் வீழ்ந்தகாலத்து, அந்நிலத்து இயல்பு ஆய்-அப்பூமியின்தன்மையையுடைய தாகி, தப்பு இன்றி-குற்றமில்லாமலே, குணவேற்றுமை பலசார்தலினால்- தன்னியற்கைக் குணத்தினின்றும் பலவேறுபட்ட குணங்களையடைதலால், செப்பில் - சொல்லுமிடத்து, அபக்குவம் பக்குவம் ஆய் உள்ள - அபக்குவ மாயும் பக்குவமாயுமிருக்கின்ற, சீவரினும் - சீவர்களிலும், எந்தைபிரான் - எமது தந்தையாகிய சிவபிரான்,இப்படியே- இவ்விதமாகவே, நிற்பன் -(ப க்குவ அபக்குவானுகுணமாக வேறுபாட்டையடைந்து) நிற்பன், கச்சி ஏக ம்பனே-திருக்கச்சியின்கண்ணெழுந்தருளிய ஏகம்பனே எ-று.

(கு-ரை.) மேகத்தின்கண் எஞ்ஞான்றும்வெண்மையதாய்த் தங்கிய நீரு க்கு நிலத்தோடு சேர்ந்தகாலத்தில், நிறம் சுவை முதலியகுணங்கள் வே றுபடுமென்பார் "அப்பென்றும் வெண்மையதாயினு மாங்கந்நிலத்தியல்பா ய்த் தப்பின்றியே குணவேற்றுமைதான் பலசார்தல்" என்றார். இதனை "நில த்தியல்பானீர் திரிந்தற்றாகுமாந்தர்க்-கினத்தியல்பதாகுமறிவு" என்றதனாலு ணர்க. ஐம்புலன்வழியே சென்று அறியும்பகுதியவாயவிஷயங்களை மெ ய்யென்று கருதாமல், அவற்றைப்பொய்யென்றுகளைந்து சிவனே மெய் யென்று கருதும் விஞ்ஞானகலர்க்கு உள்ளந்தோறும் அறிவுக்கறிவாய்த் தங்கி ஒருமலம் அகற்றிச்சிவானந்தத்தேனையூற்றுதலும்; பிரளயாகலர்க்கு மான்மழுசதுர்ப்புச காளகண்டதிரிநேத்திரங்களோடு இடபவாகனனாய்த் தன்னியற்கைவடிவே குருவடிவாகக்காட்டி இருமலம் அகற்றிக் காட்சி தந் தருளுதலும்: அவிச்சை யைத்தராயுள்ள சகலர்க்கு ஸ்ரீபஞ்சாக்கரதடனத்தால் திரிபதார்த்தஞானத்தை விளக்கி மும்மலமுந்தீர்த்துத் திருவடிசூட்டியாளு தலும் இறைவனது முறைமையாதலால்"செப்பிலபக்குவம் பக்குவமாயுள்ள சீவரினு மிப்படியேநிற்பனெந்தைபிரான்" என்றார். இதனை "மன்னெறிவிஞ் ஞானகலர்நாடுமலமொன்றினையு, மந்நிலையே யுண்ணின்றறுத்தருளிப்—பின் னென்பு, மேவாவிளங்கும் பிரளயாகலருக்குத், தேவாய்மலகன்மந் தீர்த்தரு

ளிப்—பூவலயந், தன்னின்றுநீங்காச் சகலர்க்கவர்போல, முன்னின்று மும்மலந்தீர்த்தாட்கொள்கை—யன்னவனுக், காதிகுணம்.'' என்னும் போற்றிப் பஃறொடையானுணர்க.

நாயாய்ப்பிறந்திடினல்வேட்டையாடிநயம்புரியுந்
தாயார்வயிற்றினரராய்ப்பிறந்துபின்சம்பன்னராய்க்
காயாமரமும்வறளாங்குளமுங்கல்லாவுமென்ன
வீயாமனிதரையேன்படைத்தாய்கச்சியேகம்பனே. (உக)

(இ-ள்.) நாய் ஆய்-நாயாகி, பிறந்திடின் - பிறந்தாலும், நல்வேட்டை ஆடி - நல்லவேட்டையாடி, நயம்புரியும்-(தன்னை வளர்ப்பவனுக்கு) பிரயோசனத்தைச் செய்யும், தாயார்வயிற்றில் - தாய்வயிற்றில், நரராய் பிறந்து - மனிதராய்ப் பிறந்து, பின்சம்பன்னராய் - பின்செல்வமுள்ளவர்களாய், காயாமரமும்-காயாதமரத்தையும், வறள் ஆம் குளமும் - நீர்வற்றிப்போனதடாகத்தையும், கல்ஆவும் என்ன - கற்பசுவையும் போல, ஈயாமனிதரை - (ஒருவர்க்கும் ஒன்றனையும்) கொடாதமனிதரை, ஏன்படைத்தாய்-(இப்பூமியில்) யாதுகாரியத்துக்குப்படைத்தனை, கச்சி ஏகம்பனே-திருக்கச்சியின்கண் எழுந்தருளிய ஏகம்பனே. எ-று.

உலகில் நன்றிபுரியாதும், பிறர் தமக்குப் புரிந்தநன்றியைக் கருதாதுமுள்ளார் மக்கட்பிறப்பாய்ப் பிறத்தலினும், நன்றியறியும்பிராணியுள் தலைமையாயுந்தன்னைவளர்ப்பவனுக்குப் பயனைச்செய்வதாயுமுள்ளநாயாய்ப்பிறந்திடின்பயனுண்டென்பார்''நாயாய்ப்பிறந்திடினல்வேட்டையாடிநயம்புரியும்'' என்றும், வீட்டையடைதற்குரிய மானுடப்பிறவியெடுத்தலும், அப்பிறவியெடுத்தகாலத்துப்பொருள் கல்வி ஞானம் கைகூடுதலும், அவை கூடியகாலத்து அவற்றை நீங்காது வாழ்தலும், முன்செய்ததவப்பயனால் நிகழவேண்டுதலான் "தாயார்வயிற்றினராய்ப்பிறந்து பின்சம்பன்னராய்'' என்றும், நடுவூரின்கணிருந்தும், மரமெனப்பெயர் பெற்றும் பறவை முதலியவைகட்குப் பயன்படாமையானும், குளமெனப்பெயர் பெற்றும் நுகரப்படுவதாகிய நீரின்மையானும், ஆவெனப்பெயர் பெற்றும் பால் சுரத்தற்குரிய பண்பின்மையானும், அவற்றால் உலகினருக்கு யாதொரு பயனின்மையால் ஈயாமனிதர்க்கு உவமைகூறுவான் "காயாமரமும்வறளாங்குளமுங்கல்லாவுமென்ன'' என்றும், அநுபவியாதவராகி அதன்மேலும் தகுதியுடையவருக்கு அவர் வேண்டியதொன்றனையுங்கொடுக்குந் தன்மையில்லாதவர் தாம்பெற்ற செல்வத்திற்கு ஓர் நோயாதலால் அவரைப்படைத்ததனால் உலகினுக்கு யாதொரு பயனுமில்லையென்பார், "ஈயாமனிதரையேன்படைத்தாய்''என்றுங் கூறினார்.

காயாதமரமும் நீர்வற்றியகுளமும் கல்லாவும் பிறர்க்குப் பயன்படாதது போல ஈகையில்லாத மனிதரும் பிறர்க்குப்பயன்படார் என்பது கருத்து.

ஆற்றிற்கரைத்தபுளியாக்கிடாமலென்னன்பையெல்லாம்
போற்றித்திருவுளம்பற்றுமையாபுரமூன்றெரித்துக்
கூற்றைப்பணிகொளுந்தாளுடையாய்குன்றவில்லுடையா
யேற்றுக்கொடியுடையாயிறைவாகச்சியேகம்பனே. (உஉ)

(இ-ள்.) ஐயா - ஐயனே, புரம் மூன்றுஎரித்து - திரிபுரங்களைத்தகித்து, கூற்றை-யமனை, பணிகொளும் தாளுடையாய் - அடிமைகொண்டதிருவடியுடையவனே, குன்றவில் உடையாய்-மகாமேருமலையாகிய வில்லுடையவனே, ஏற்றுக்கொடியாய் - இருஷபக்கொடியுடையவனே, என் அன்பை எல்லாம்-என் அன்புமுழுமையும், ஆற்றில் கரைத்த-நதியில் கரைத்துவிட்ட, புளி ஆக்கிடாமல் - புளியாகச்செய்யாமல், போற்றி-(என் அன்புவடிவம் கெடாவண்ணம்) பாதுகாத்து, திருவுளம் பற்றும்-மனம்பற்ற வேண்டும், இறைவா-தலைவனே, கச்சி ஏகம்பனே-திருக்கச்சியின்கண் எழுந்தருளிய ஏகம்பனே, எ-று.

(கு-ரை.) நமது திருவடியிற்செலுத்தும் அன்புமுழுதும் கண்ணப்பர் முதலியோர் செலுத்திய மெய்யன்போடு ஒப்பாகாமையால் நிஷேதப்பொருளென்றுகருதி, கரைத்த சிந்திய அமுது பயன்படாவாறுபோல அவ்வன்புமுழுதும் பயன்படாவண்ணம் செய்யாது பாதுகாக்கத்திருவுளம்வைக்கவேண்டுமென்பார், "ஆற்றிற்கரைத்த புளியாக்கிடாமலென்னன்பையெல்லாம் போற்றித்திருவுளம்பற்றுமையா" என்றும், இரும்பினாலும் வெள்ளியினாலும் பொன்னினாலும் இயன்றமதில்களையுடையராய் மூவுலகினுக்குந்துன்பஞ்செய்தஅசுரர்களுள்தாரகன்கமலாக்கன்வித்துன்மாலிஆகியமூவர்நீங்கலானைய, அசுரர்களையழித்துத்தேவர்முதலியவர்களைக்காத்தருளினமையும்,ஊழ்வினையாற்பதினாறுண்டுபெற்றமிருகண்டு புத்திரராகிய மார்க்கண்டேயரென்பவர், கூற்றுவன்வந்துகாலபாசத்தாற் கட்டியிழுக்குங் காலத்துச்சரணமடைய,அக்கூற்றுவனைக்காலாலுதைத்தழித்து அம்முனிவர்க்கு என்றும் பதினாறுண்டு கொடுத்தருளினமையும், நமது திருவடிச்செயலும் வரதாபயமாகிய திருக்கரங்களின் செயலும் என்பார், "புரமூன்றெரித்துக்கூற்றைப்பணிகொளுந்தாளுடையாய்" என்றும்,திரிபுரதகனஞ்செய்தஞான்று மேருவை வில்லாகவும் திருமாலாகிய ஏற்றைக்கொடியாகவும் கொண்டமையால் "குன்றவில்லுடையாயேற்றுக்கொடியுடையாய்"என்றுங்கூறினார்.

பெண்ணாகிவந்தொருமாயப்பிசாசம்பிடித்திட்டென்னைக்
கண்ணால்வெருட்டிமுலையான்மயக்கிக்கடிதடத்துப்
புண்ணாங்குழியிடைத்தள்ளியென்போதப்பொருள்பறிக்க
வெண்ணாதுனைமறந்தேனிறைவா கச்சியேகம்பனே. (உ௫)

(இ-ள்) பெண்ஆகிவந்த - பெண்வடிவுகொண்டுவந்த, ஒருமாயப்பிசாசம் - ஒரு மாயப்பேயானது என்னைப்பிடித்திட்டு - என்னைத்தொடர்ந்து, கண்ணால் வெருட்டி - கண்களால் வெருட்டி, முலையால் மயக்கி - தனங்களால் என்னறிவு மயங்கச்செய்து, கடிதடத்துப்புண் ஆம் குழியிடை-அல்குலிடத்ததாகிய புண் எனகிற பள்ளத்தில்,தள்ளி - தள்ளி,என்போதப்பொருள் பறிக்க - என் ஞானமாகிய பொருளைக் கைப்பற்றிக்கொள்ளுதலால்,உன்னை எண்ணாது - தேவரீரை நினையாமல், மறந்தேன் - மறந்துவிட்டேன், இறைவா-தலைவனே, கச்சி ஏகம்பனே - திருக்கச்சியின்கண் எழுந்தருளிய ஏகம்பனே, எ-று.

(கு-ரை.) பெண்களிடத்துவைத்த ஆசையாலுண்டான மயக்கமிகுதியி னால் நெஞ்சிலே கண்ணுகிய வேலையேற்றும், அவர்க்குப்பொருள் கொடுத் தற்குக் களவுசெய்து கழுவேறியும், அவரைக்களவு செய்து யானைக்காலில் மிதிக்கப்பட்டும் துன்பக்கடலிலழுந்தினோர் பலராயினரென்பதை யறிந்திருந் தும், அவரையே பெண்ணே, அமுதே எனப்புகழ்மயக்கித் தம்வசப்படும் படி செய்தமையாலே, "பெண்ணாகிவந்தொருமாயப்பிசாசம் பிடித்திட்டு" என்றும், அவரது முகத்திலுள்ளது, கண்ணே, வேலோ,வாளோ, அம்போ, விடமோ, என்று புனைந்துரைத்து இன்புற்று மயங்கிக் கண்வலையிலகப்பட் டேனை வெருட்டுதல் எளிதென்பார், "என்னைக்கண்ணால்வெருட்டி" என் றும,காமவேள் என்னும் பகைஞனுக்குப் புறங்கொடுத்து மின்னார் மூலை யென்னும் வெற்பில் ஓடி யொளித்துக் கொள்ள அவரது மார்பிலுள்ளது மூலையோ,சூதோ, சிமிழோ,வெற்போ என்று புகழ்ந்து மயங்கித்திரிந்தமை யால், "முலையால் மயக்கி"என்றும்,அவர்வசப்பட்டேனைதலின்சற்றுங் கருணை செய்யாது மீளாநரகிற்கேதுவாகிய மலமும் புண்ணும் நிறைந்த அல்கு லாகிய பள்ளத்திற்றள்ளிவருத்தி யென்னறிவு கெடுப்பர் என்பார், "கடிதட த்துப்புண்ணாங்குழியிடைத்தள்ளி யென்போதப் பொருள்பறிக்க" என்றும், அறிவைக்கெடுத்ததினாலே யுள்ளீடற்றத் தேவரீரை நினையாதுமறந்துவிட் டேனென்பார், "எண்ணாதுனை மறந்தேன்" என்றுங்கூறினார்.

நாவாரவேண்டு மிதஞ்சொல்லுவாருனை நான்பிரிந்தாற்
சாவேனென்றேயிருந்தொக்கவுண்பார்கள்கைதான்வறண்டாற்
போய்வாருமென்று நடுத்தலைக்கேகுட்டும்பூவையருக்
கீவார்தலைவிதியோவிறைவாகச்சியேகம்பனே. (உ௪)

(இ-ள்.) நா ஆர - நாநிரம்ப, வேண்டும் இதம் சொல்லுவார் - வேண் டிய பிரியவசனங்களைச் சொல்லுவார்கள், உனை நான் பிரிந்தால் - உன்னை நான் நீங்குவேனாயின், சாவேன் என்றே - இறந்துவிடுவேன் என்றுசொல் லாநின்றே, ஒக்க இருந்து உண்பார்கள் - கூடஇருந்து புசிப்பார்கள், கைவற ண்டால் - கையிற்பொருள் அற்றுப்போனால், போய்வாரும் என்று - போய் வாருமென்று வாயாற்சொல்லி, நடுத்தலைக்கு-நடுத்தலையில், குட்டும் - கையா ல் மோதியனுப்புகின்ற, பூவையருக்கு - வேசையருக்கு, ஈவார் - (தம்பொ ருள் முதலியவற்றை) கொடுப்பார்கள் அறிவீனர்கள், தலைவிதியோ - (இங்ங னம் இவர்கள் செய்தற்குக் காரணம் இவர்களது) தலையில் பிரமன் எழுதிய ஊழின் நியதியோ, இறைவா - தலைவனே, கச்சி ஏகம்பனே - திருக்கச்சியின் கண் எழுந்தருளிய ஏகம்பனே. எ-று.

(கு-ரை.) அன்புகாரணமாக விரும்பாராகிப் பொருள்காரணமாக விரு ம்பி அப்பொருள் கைவருமளவும், அப்பொழுதைக்கு இனிதுபோன்று பின் வறுமைபயக்கு மினிய சொற்களைச் சொல்லுதல் தமக்கியல் பாதலால் "நா வாரவேண்டுமிதஞ் சொல்லுவார்" என்றும், அக்கினிசான்றாக மணந்தமனை

வியர் நாயகனிறந்த காலத்து உடன்கட்டையேறி இறத்தல் போலவும் நாயகன் உண்டபின் மிச்சிலையுண்ணுதல் போலவும், பொருள் நிமித்தமாகத்தாமும் சாவேனென்று கூறுதலும், ஒருங்கேயுண்ணலும் தமக்கியல்பென்பார், "உனைநான் பிரிந்தாற் சாவேனென்றே யிருந்தொக்கவுண்பார்கள்" என்றும், உள்ளபொருளை யளந்தறிந்து அப்பொருள் கிடைக்குமளவும் தமது குணமுடைமையைச் சொல்லும் குணமில்லாதாரது நடக்கையை யாராய்ந்தறிந்து நீங்காதாரைப் பொருளவற்றியகாலத்து நிந்தித்தும் தலையிற்குட்டியும் துரத்தும் பெண்களுக்கே பொருளைத்தேடிக்கொடுக்க முயலுமிவர் இங்ஙனஞ் செய்வது பிரமன் இவர்தலையில் எழுதிய எழுத்தோ என்பார், "கைதான்வறண்டாற்போய் வாருமென்று நடுத்தலைக் கேகுட்டும் பூவையருக்கீவார் தலைவிதியோ" என்றுங் கூறினார்.

கல்லார்சிவகதைநல்லோர்தமக்குக்கனவிலுமெய்
சொல்லார்பசித்தவர்க்கன்னங்கொடார்குருசொன்னபடி
நில்லாரறத்தைநினையார்நின்னாமநினைவிற்சற்று
மில்லாரிருந்தென்னிறந்தென்புகல்கச்சியேகம்பனே. (உரு)

(இ-ள்.) சிவகதை - சிவகதைகளை, கல்லார் - படியார், நல்லோர்தமக்கு - நல்லவர்களுக்கு, கனவிலும் - கனவிலும், மெய்சொல்லார் - உண்மைபேசார்கள், பசித்தவர்க்கு - பசித்துவந்தவர்களுக்கு, அன்னம்கொடார் - சோறுபகிர்ந்துகொடார், குருசொன்னபடி - ஆசாரியன் உபதேசித்தபடி, நில்லார் - நிற்கமாட்டார்கள், அறத்தை - தருமத்தை, நினையார் - (செய்யமனத்திலும்) நினைக்கமாட்டார்கள், நின்னாமம் - தேவரீரது திருநாமம், நினைவில் - நினைப்பில், சற்றும் இல்லார் - சிறிதும் உடையரல்லாதவர்களாகிய இவர்கள், இருந்துஎன் - பூமியில் உயிரோடுகூடி இருந்தால் யாதுபயன், இறந்துஎன் - இறந்தால் யாதுகெடுதி, புகல் - சொல்வாய், கச்சி ஏகம்பனே - திருக்கச்சியின்கண் எழுந்தருளிய ஏகம்பனே. எ-று.

(கு-ரை.) பாற்கடலுட்பிறந்து அதனுள் வாழுமீன்கள் அப்பாலைவிரும்பாது வேறுபலவற்றை விரும்புதல் போலச் சைவசமயத்துட் பிறந்தும் சிவசரிதைகளைக்கற்காது புறச்சமய நூல்களைக் கற்றுப்பொழுது போக்குவர் என்பார், "கல்லார் சிவகதை" எனவும், தம்செல்வக்களிப்பால்அருந்தவரிடத்துப் பொய்கூறல் முதலிய பிழைசெய்வாரானால், அச்செல்வம் அவர் கோபத்தீயால் ஒருகணத்துள்ளே அழிந்துவிடும் என்பதையுணராமையால், "நல்லோர் தமக்குக் கனவிலு மெய்சொல்லார்" எனவும், தேகத்தை வளர்த்தலானும் தேகம் நிலைபெற்றுச்செய்யவேண்டிய அறங்களையெல்லாஞ் செய்வித்தலானும், முனிவர் தேவர் முதலியோர் உண்ணக்கருதலானும்பசித்தவர்க்கு உணவையெவ்வகையானுமளித்திடுதல்மேலாகுமென்பதையுணராமையால், "பசித்தவர்க்கன்னங்கொடார்" எனவும், ஞானோபதேசம் பெற்றவர் ஓர்காலத்துத் தம்மைப் பழைய மலந்தாக்குதலால் உபதேச மொழியைமறந்து தம்மனம்

போனவாறு நிற்பர் என்பார், "குருசொன்னபடி நில்லார்" எனவும், ஞானாசாரியன் உபதேசித்தமொழியை மறந்தோராதலின் தீவினை வயத்தராகிப் பாதைதொழில்களையே மேன்மேலும் செய்ய நினைப்பாராதலால், "அறத்தை நினையார்" எனவும், "இயமன்றூதரு மஞ்சுவ ரின்சொலா, னயம்வந் தோத வல் லார்தமை நண்ணிலுல்" என்பதை யுணராமையால் தேவரீரது திருநாமத்தை நினையாதார் இவ்வுலகில் உயிரோடிருந்தும் யாதொரு பயனடையாமையால் இறந்தவரோடொக்கு மென்பார், "சின்னும நினைவிற்சற்று மில்லார் இருந்தெனவிறந்தென்" எனவும் கூறினர்.

வானமுதத்தின்சுவையறியாதவர் வண்கனியின்
றேனமுதத்தின்சுவையெண்ணல்போலத்தனித்தனியே
தேனமுதத்தின்றெளிவாயஞானஞ்சிறிதுமில்லார்க்
கீனமுதச்சுவைநன்றல்லவோகச்சியேகம்பனே. (உ௬)

(இ - ள்) வான் - தேவலோகத்திலுள்ள, அமுதத்தின - அமிர்தத்தின், சுவை அறியாதவர்-உருசியைத்தெரியாதவர், வண்கனியின் - வளமாகியபழங்களின், அமுதத்தின் சுவை - இரசங்களின் சுவையை, எண்ணல்போல் - நினைத்தல்போல, தனித்தனியே - தனித்தனியாகவே, தேன் அமுதத்தின் தெளிவு ஆய - தேனும் அமுதமாகிய இவற்றின் தெளிவையொத்த, ஞானம் - ஞானத்தை, சிறிதும் இல்லார்க்கு - சற்றுமுடையரல்லாதவர்க்கு, ஈனம் - குற்றமாகிய, அமுதச்சுவை - (விடயமாகிய) அமுதத்தின்சுவையானது நன்று அல்லவோ- நன்மையல்லவோ, கச்சி ஏகம்பனே-திருக்கச்சியின்கண் எழுந்தருளிய ஏகம்பனே. எ-று.

(கு-ரை.) கண்ணுக்கினிமையும் உண்ணுந்தோறும் புதிது புதிதாகவுள்ள சுவையினையுமுடைய அமுதத்தின் சுவையையறியாதவர் மிகமுதிர்ந்து இன்பஞ்செய்யாது அழியுந்தன்மையினையுடைய கனிகளை யெண்ணுதல் அவரது இயற்கையென்பார், "வானமுதத்தின் சுவையறியாதவர்வண் கனியின்றேனமுதத்தின் சுவையெண்ணல்போல்" எனவும், ஞானயோகங்களின் முதிர்ச்சியில்லாதவர்க்கட்கு விஷய ஞானங்களின் சுவையே நன்றென்பார் "தேனமுதத்தின் றெளிவாய ஞானஞ்சிறிதுமில்லார்க் கீனமுதச்சுவைநன்றல்லவோ" எனவும் கூறினர்.

தேவலோகத்திலுள்ள அமிர்தத்தின் சுவையை அறியாதவர் பழங்களின் சுவையை மதித்தல்போல ஞானமாகிய அமிர்தத்தின் சுவை சிறிதும் அறியாதவர் விஷயமாகிய அமிர்தத்தின் சுவையை நன்மையதாகக்கருதுவர் என்பதாம். வானமுதம் - தேவாமிர்தம். வண்கனி யாவன வாழை, பலா, மா என்பன. தெளிவு-வடிதல். அல்லவோ என்பதில் ஓகாரம் எதிர்மறைப்பொருளது.

ஊற்றைச்சரீரத்தையாபாசக்கொட்டிலையூன்பொதிந்த
பீற்றற்றுருத்தியைச்சோறிடுந்தோற்பையைப்பேசரிய

காற்றிற்பொதிந்தநிலையற்றபாண்டத்தைக்காதல்செய்தே
யேற்றுத்திரிந்துவிட்டேனிறைவாகச்சியேகப்பனே. (உஎ)

(இ - ள்.) ஊற்றைச்சரீரத்தை-அழுக்குடம்பை, ஆபாசக்கொட்டிலை - நிந்தனைகளாகிய சரக்குகளைச்சேர்த்து வைத்திருக்கும் ஒதுக்கிடத்தை. ஊன் பொதிந்த - தசைபொருந்திய, பீற்றல் துருத்தியை-பலதுவாரங்களையுடைய துருத்தியை, சோறு இடும் தோல்பையை - அன்னத்தை யிட்டு நிரப்பின தோலாற் செய்யப்பட்டபையை, பேசு அரிய - சொல்லுதற்கு அருமையான, காற்றில் பொதிந்த - காற்றைச்சேர்த்துவைத்த, நிலை அற்ற பாண்டத்தை-நிலையற்றதாகிய மட்பாத்திரத்தை, காதல்செய்து - விருப்பங்கொண்டு, ஏற்றுத்திரிந்துவிட்டேன்-அதைத்தாங்கித் திரிந்துவிட்டேன், இறைவா-தலைவனே, கச்சி ஏகம்பனே-திருக்கச்சியின்கண்எழுந்தருளிய ஏகம்பனே. எ-று,

(கு-ரை.) "ஊற்றைச்சரீரத்தை யாபாசக் கொட்டிலையூன்பொதிந்த. பீற்றற் றுருத்தியை" என்றதை, மூன்றரைக்கோடிநாடியவ்வளவே முற்றிய மயிரெயிறெண்ணான், கான்றசையடியினுகிரிருபது வீரியமாழாக்குடற்பித்த முழக்கு.மான்றுறுமிடற்றுக்கபமுரியுடனுறுழிவண்ணிணத் தொடியைந்நான் கென்றமேதைக்குத் தொடிகளோரைஞ்ஞூறீண்டு மூன்றொடியொருநூறே. எனவும்,"இளகுநெய்த்தோரு மிறுகுநெய்த்தோருமியம்புறிற்றொடியொருமூன்றும், வளமலிமூளை பன்னிருதொடியாமயிர்முதலனைத்தையுந்தொகுத்திட்டளவிடிலாக்கை யாயிரந்தொடியாமருவருப்புறு மியக்கங்கட், களவிலையிந்தப் புலையுடற்பொறையைப் பொருளெனமதிப்பரோ வறிந்தோர்" எனவும். கூறியவாற்றானுணர்க .இவ்வுடல் அன்னமயத்தால்நிற்றலாலே "சோறிடுந் தோற்பை"எனவும், அது பிராணவாயுமுதலிய வாயுக்களாலும், நிலையற்றதாயும் இருத்தலாலே, "காற்றிற்பொதிந்த நிலையற்ற பாண்டத்தை, எனவும், ஒருகணப்பொழுதாயினும் விரும்பத்தகாததைப் பன்னாளும் விரும்பிச்சுமந்துதிரிந்தேனென்பார், "காதல்செய்தே யேற்றுத்திரிந்துவிட்டேன்" எனவும் கூறினார்.

அழுக்குடம்பும், நிந்திக்கத்தக்க ஒதுக்கிடமும், தசையோடுகூடிய பலதுவாரங்களையுடைய துருத்தியும், சோறிடுந் தோற்பையும், காற்றுப் பொருந்திய நிலையற்ற மட்பாத்திரமுமாகிய சரீரத்தை விரும்பி அதைத்தாங்கித் திரிந்துவிட்டேன் என்பதாம்.

சொல்லால்வருங்குற்றஞ்சிந்தனையால்வருந்தோடஞ்செய்த
பொல்லாதிவினைபார்வையிற்பாவங்கள்புண்ணியநூ
லல்லாதகேள்வியைக்கேட்டிடுந்தீங்குகளாயவுமற்
றெல்லாப்பிழையும்பொறுத்தருள்வாய்கச்சியேகம்பனே. ()

(இ - ள்) சொல்லால்வரும்குற்றம் - சொற்களாலுண்டாகும் பிழையும், சிந்தனையால் வரும் தோடம் - நினைப்பினாலுண்டாகும் தோஷமும், செய்த

பொல்லாததீவினை - செய்த கொடிய தீச்செயல்களும், பார்வையின் பாவங்கள் - பார்த்தலினுலுண்டாகும் பாவங்களும், புண்ணியநூல் அல்லாதகேள்வியை- புண்ணிய சாத்திரங்களல்லாதனவாகிய கேள்விகளை (என் செவிகள்) கேட்டிடும்-கேட்கும், தீங்குகள் ஆயவும் - தீமைகளானவையும், மற்ற எல்லாப்பிழையும்-மற்றெல்லாத்தவறுகளையும், பொறுத்து அருள்வாய்-பொறுத்தருளல் வேண்டும், கச்சி ஏகம்பனே - திருக்கச்சியின்கண் எழுந்தருளிய ஏகம்பனே. எ-று.

(கு-ரை) அறத்தினை அறிந்தவரது வாய்ச்சொற்கள் அன்போடு கலந்து வஞ்சனையில்லனவாயிருக்கும், அங்ஙனமன்றி என்வாய்ச்சொற்களால்பெருங் குற்றமுண்டாகு மென்பார், "சொல்லால் வருங்குற்றம்" என்றும், மனத்தின் குற்றமாகிய அழுக்காறுமை, வெஃகாமை முதலியனஉடையரல்லாதஅறிவுடையோரது மனம்போலாது என்மனத்தில்தோஷமேயுண்டாகுமென்பார் "சிந்தனையால்வருந்தோடம்"என்றும், வேறொருகாலத்திலும், வேறோரிடத்திலும் வேறொருடம்பிலும் போய்ச்சுடுதலாகிய கொடியதீவினைக்கு அஞ்சாதுமுன்னேதொடங்கி அதனைச்செய்து பழகிவந்ததென்பார், "செய்தபொல்லாத தீவினை" என்றும், புறப்பகைகளை யடக்குதலேயன்றி யுட்பகையாகிய காமத்தையும் அடக்காது அதனுல்நிகழும் பிறனில் விழைந்துகாண்டல் முதலிய குற்றமுடையோனுதலின், "பார்வையிற் பாவங்கள்"என்றும, புண்ணிய சரிதங்களைக் கேளாத என்செவிகள் தோற்செவி மரச்செவி நரப்புச் செவிகள் போல் யாதொருபயனு மில்லாத வீண்சரிதங்களைக் கேட்கும் என்பார், "புண்ணியநூலல்லாத கேள்வியைக்கேட்டிடும"என்றும்,இத்தீங்குகள் பிராயச்சித்த மில்லாததோர் தீங்காதலின் இவற்றைத்தேவரீரேபொறுத்தருளல் வேண்டுமென்பார் "தீங்குகளாயவுமற்றெல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய்" என்றும் கூறினுர்.

வாய்ச்சொற்களாலுண்டாகும் பிழையும், நினைத்தலா லுண்டாகும் பிழையும், செய்த கொடிய தீச்செயல்களும் பார்த்தலினுலுண்டாகும் பாவங்களும், சிவசரிதங்களல்லாத நூற்கேள்விகளை என்செவிகள் கேட்டலும் அதனுலுண்டாகும் தீமைகளாகிய எல்லாப் பிழைகளையும் பொறுத்தருளல் வேண்டும் என்பதாம்.

முட்டற்றமஞ்சளையெண்ணெயிற்கூட்டிமுகமினுக்கி
மெட்டிட்டுப்பொட்டிட்டுப்பித்தளையோலைவிளக்கியிட்டுப்
பட்டப்பகலில்வெளிமயக்கேசெயும்பாவையர்மே
லிட்டத்தைநீதவிர்ப்பாயிறைவாகச்சியேகம்பனே. (உகூ)

(இ-ள்) முட்டு அற்றமஞ்சளை - பிழையில்லாத மஞ்சளை, எண்ணெயில் கூட்டி-எண்ணெயிற்சேர்த்து, (அரைத்தடவி) முகம்மினுக்கி - முகத்தைமினுக்கி, மெட்டுஇட்டு - காலாழி இட்டு, பொட்டு இட்டு -திலகமிட்டு,பித்தளை ஓலை விளக்கி இட்டு-பித்தளையோலையைத் துலக்கித்தரித்து, பட்டப்பக

லில் - நடுப்பகலில், வெளிமயக்கு செய்யும்-வெளிமயக்கஞ் செய்கின்ற, பாவையர்மேல்- பெண்கள்மேலுள்ள, இட்டத்தை-இஷ்டத்தை, நீதவிர்ப்பாய் -தேவரீர் ஒழித்தருளவேண்டும், இறைவா - தலைவனே, கச்சி ஏகம்பனே- திருக்கச்சியின்கண் எழுந்தருளிய ஏகம்பனே. எ-று.

(கு-ரை) பெண்களானோர் இயற்கையழகோடுசெயற்கையழகுமுண்டாக மஞ்சட்சுண்ணத்தை யெண்ணெயிற்கலந்து முகத்துக்குப் பூசிமினுக்குவது பண்டைக்காலந்தொட்டு வழக்காதலின் "முட்டற்றமஞ்சளை யெண்ணெயிற் கூட்டி முகமினுக்கி" எனவும், விரல்களில் மெட்டும் முகத்திற்றிலகமும் கழுத்திற் காரையென்னும் ஓரணியும் தரித்தல் அவர்க்கியல்பென்பார்,"மெட்டிட்டுப் பொட்டிட்டுப் பித்தளையோலை விளக்கியிட்டு" எனவும், இவையெல்லாம் கானலில் நீர்போலவும் சிப்பியில் வெள்ளிபோலவும் தோன்றியாதொருபயனுமில்லாமல் மயக்குமென்பார் "பட்டப்பகலில் வெளிமயக்கே செய்யும்" எனவும்,தேவரீர் அம்மகளிர்பால் என்மனத்தைச்செலுத்துவிக்காது நும்பால் செலுத்துவிக்கவேண்டு மென்பார், "பாவையர் மேலிட்டத்தை நீதவிர்ப்பாய்" என்றுங் கூறினார். திருக்கச்சியின்கண் எழுந்தருளிய ஏகம்பனே! குற்றமில்லாதமஞ்சளை யெண்ணெயிற்சேர்த்து அதைத்தடவிமுகத்தை மினுக்கிக்காலாழியிட்டுப் பொட்டிட்டுப் பித்தளையோலையைத் துலக்கித்தரித்து நடுப்பகலில் வெளிமயக்கஞ் செய்கின்ற பெண்கள்மீதுள்ள விருப்பத்தைத்தேவரீர் ஒழித்தருளல் வேண்டும் என்பதாம்.

பிறந்துமண்மீதிற்பிணியேகுடிகொண்டுபேரின்பத்தை
மறந்துசிற்றின்பத்தின்மேன்மயலாகிப்புன்மாதருக்குட்
பறந்துழன்றேதடுமாறிப்பொன்றேடியப்பாவையர்க்கீந்
திறந்திடவோபணித்தாயிறைவாகச்சியேகம்பனே. (கூ௰)

(இ-ள்.) மண்மீதில் - இவ்வுலகத்தில், பிறந்து - தோன்றி, பிணியேகுடிகொண்டு - நோய்களே வாழிடமாகத்தங்கப் பெற்று, பேரின்பத்தை மறந்து - பேரின்பத்தைமறந்து, சிற்றின்பத்தின் மேல் மயல் ஆகி - சிற்றின்பத்தின்மீது ஆசைகொண்டு, புல் மாதருக்குள் - புல்லிய ஒழுக்கத்தையுடையபெண்கள் நடுவில், பறந்து உழன்று - (பட்சிபோலப்)பறந்து திரிந்து, தடுமாறி - தடுமாற்றமடைந்து, பொன்தேடி - பொருளைச்சம்பாதித்து, அப்பாவையர்க்கு ஈந்து - அப்பெண்களுக்குக் கொடுத்து, இறந்திடவோ - இறந்து போகவோ, பணித்தாய் - அடியேனை யேற்படுத்தினாய், இறைவா - தலைவனே, கச்சிஏகம்பனே - திருக்கச்சியின்கண்எழுந்தருளிய ஏகம்பனே, எ-று.

(கு-ரை) "நாலிருகண்டத்தோரும்விண்ணுளோரு நரகினருமவ்விடத்தினண்ணிவைகி, மேலையிருவினையாற்றியவற்றிற்கேற்ற வியன்பயன்கடுப்பரெனவிளம்புமாற்றூற், சீலமிகுபாரதமாங்கண்டமொன்றேதீவினை நல்வினையாகுஞ்செயற்கைக்கெல்லா, மூலமொருகுறைபெறினேவந்துதேவர்முனிவர்களுந்தவம் பூசைமுயல்வாரங்கண்" என்றதனால், புண்ணியபாவங்களைப்புரி

தற்கும் அவற்றையனுபவித்தற்கும் அவ்விரண்டையும் நிவாரணித்துக்கொள்வதற்குந்தகுதியுடையது இப்பரதகண்டமொன்றேயாதலால்அதிற்பிறப்பது நல்வினைப்பயனாலாகுமென்பார், "பிறந்துமண்மீதில்" எனவும், "ஈங்குரைத்த விருநான்குகண்டத்துளெல்லோர்க்கு, மோங்கியிடுங்கிருதயுகம்போலொழிந்தயுகமெல்லாம், நீங்கரிய நன்மையினை நிறுத்தியிடு நிறையறிவு, தாங்கிடுவரவருட வினுரமாதிதன்னையுமே" என்றதனால், அவ்வெட்டுக்கண்டங்களிலும் வசிக்குந்தன்மையுடையவர்கள் துயரமும், நோயும், நரையும், திரையும், மூப்பும் அடையமாட்டாதவர்களாக, அங்ஙனமன்றி இப்பரதகண்டத்தில் வசிக்கும் தன்மையுடையவர்களே அத்துயரமுதலியவற்றை யுடைமையால், "பிணியே குடிகொண்டு" எனவும் கூறினார். இதனை "கருவினின்மழவிற்கற்குங் காலையிற்பருவமாயிற், பெருகியமூழ்கிழேயிற் பிரிவினிற் பகையினீட்டும், பொருள்வயின் வேட்டமெய்தாப் புலையின் முதுமைதன்னின், மருவியதிழப்பிற்சாவின்வன்றுயர் மனிதர்க்குண்டே" என்பதனாலுணர்க. என்ஞான்றும் ஒரேதன்மைத்தாகியபேரின்பத்தைமறந்துகணப்பொழுதுதோன்றியழியும் சிற்றின்பத்தைக்காமுற்று வருந்தியீட்டிய பொருண்முழுதும் அம்மாதர்க்குக்கொடுத்து மண்மீது வாளாவிருந்திடுவார் தமக்கும் பிறர்க்கும் யாதொருபயனுமில்லை யென்பார், "பேரின்பத்தைமறந்து சிற்றின்பத்தின் மேன்மயலாகிப் புன்மாதருக்குட் பறந்துழன்றே தடுமாறிப் பொன்றேடியப்பாவையர்க்கீந்திந்திடவோபணித்தா" என்றுங்கூறினார். இதனை இருவகையிக்கங்கழிப்புழி யுண்டாமின்ப மெவ்வளவையத்துணைத்தே, கருவிழிச்செவ்வாய் மகளிரைக்கலந்து கழிப்புறு மின்பமுமதற்கே, யருவருப்பெவரு மெய்துறும் பல்வீக்கடர்ந்தெழும் வன்றிநாய்போலத், தெருள்கிலாரெல்லாமிவர்ந்திருபயனுஞ் சிதைத்தரும்பழிச்சுமைதரிப்பார்" என்பதனாலுணர்க. இவ்வுலகத்திற்றோன்றி நோய்களே வாழிடமாகத் தங்கப்பெற்று, பேரின்பத்தைமறந்து சிற்றின்பத்தின்மீது ஆசைகொண்டு பெண்கள் நடுவிற் பட்சிபோலப் பறந்து திரிந்து தடுமாற்றமடைந்து பொருளைச்சம்பாதித்து அப்பெண்களுக்குக் கொடுத்து இறந்துபோகவோ அடியேனை நியமித்தனை என்பதாம்.

பூதங்களற்றுப்பொறியற்றுச்சாரைம்புலன்களற்றுப்
பேதங்குணமற்றுப்பேராசைதானற்றுப்பின்முனற்றுக்
காதங்கரணங்களுமற்றவானந்தக்காட்சியிலே
யேதங்களைந்திருப்பேனிறைவாகச்சியேகம்பனே. (௩௧)

(இ-ள்.) பூதங்கள் அற்று -(நிலம், நீர், தீ, காற்று, விசும்பு என்று சொல்லப்பட்ட) பூதங்கள் ஒழிந்து, பொறி அற்று-(மெய், வாய், கண், மூக்கு, செவி என்று சொல்லப்பட்ட) பொறிகள் ஒழிந்து, சார்- அவைகளைச்சார்ந்த, ஐம்புலன்கள் அற்று -(சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றமென்று சொல்லப்பட்ட) ஐம்புலன்கள் ஒழிந்து, பேதம் குணம் அற்று - ஒன்றற்கொன்று மாறு

பாடுள்ள குணங்கள் ஒழிந்து, பேராசை அற்று - பெரிய ஆசை ஒழிந்து, பின் முன் அற்று - பின்னும் முன்னும் ஒழிந்து, காது - வருத்துகின்ற, அம்கரணங்களும் அற்ற - அழகிய அந்தக்கரணங்களும் ஒழிந்த, ஆநந்தக்காட்சியில் - இன்பப்பார்வையில், ஏதம் களைந்து இருப்பேன் - குற்றம் ஒழிந்திருப்பேன், இறைவா - தலைவனே, கச்சி ஏகம்பனே - திருக்கச்சியின்கண் எழுந்தருளிய ஏகம்பனே. எ-று.

(கு-ரை) பஞ்சபூதங்கள் முதலியவை யொழிந்து ஈசமென்கின்ற எட்டிதழினையுடைய வைராக்கிய மென்கின்ற பொருட்டினையும் வாமை முதலிய சத்திகளென்கின்ற மகரந்தங்களையு முடைய அநாகத ஈகியதாமரையிலெழுந்தருளிய இறைவனைத் தரிசிக்கவேண்டுமென்பார் "ஆநந்தக் காட்சியில் ஏதம் களைந்திருப்பேன" என்றார் பஞ்சபூதங்களும், பஞ்சேந்திரியங்களும், அவைகளைச்சார்ந்த ஐம்புலன்களும், ஒன்றற்கொன்று மாறுபாடுள்ள குணங்களும், அவாவுமாகிய இவையெல்லாம் ஒழிந்து, வருத்துகின்ற அந்தக்கரணங்களும் ஒழிந்த இன்பநோக்கத்தில் குற்றம ஒழிந்திருப்பேன் என்பதாம்.

நல்லாயெனக்குமனுவொன்றுதந்தருண்ஞானமிலாப்
பொல்லாவெனைக்கொன்றுபோடும்பொழுதியல்பூசைசெபஞ்
சொல்லார்நற்கோயினியமம்பலவகைத்தோத்திரமு
மெல்லாமுடிந்தபின்கொல்லுகண்டாய்கச்சியேகம்பனே. (௬௨)

(இ-ள்) நல்லாய் - நன்மையுடையோய் எனக்கு - அடியேனுக்கு, மனு ஒன்று-விண்ணப்பம் ஒன்றுளது, தந்தருள்- (அதனை) அநுக்கிரகித்தல் வேண்டும், (யாதெனில்) ஞானம் இல்லா-ஞானமில்லாத, பொல்லாஎன்னை-பொல்லாமையாகிய என்னை, கொன்றுபோடும்பொழுது - கொல்லுஞ்சமயத்து, இயல்பூசை - எம்மால் செய்யக்கூடிய பூசையும், செபம் - ஜபமும், சொல் ஆர் - புகழ்நிறைந்த, நல்கோயில் நியமம் - நல்ல சிவாலயதரிசன முதலிய நியமங்களும், பலவகைத்தோத்திரமும் - பலவகையாகிய துதிகளுமாகிய, எல்லாம் - யாவும், முடிந்தபின் - முடிவுபெற்றபின், கொல்லு - கொல்லுவாய், கச்சிஏகம்பனே-திருக்கச்சியின்கண் எழுந்தருளியஏகம்பனே. எ-று.

(கு-ரை.) இம்மானுடப்பிறவியெடுத்து உழன்று திரியுங்கால்சரியை கிரியை யோகஞானங்களைக் குறைவறமுடித்து நுமது திருவடியை யடையஅடியேனுக்குஓர் விண்ணப்பம் செய்தருளல், வேண்டுமென்பார் "நல்லாயெனக்கு மனுவொன்றுதந்தருள்" என்றும், அறிவிலியாகியயான மரணவேதனையுறுங்கால்மெய்யறிவுகலங்கிநும் திருவடியை மறப்பது திண்ணமாதலின் அங்ஙனம்நிகழ்வதற்கு முன்னமே பூசை செபம் கோயில் நியமம் முதலியவற்றை முடித்தபின்னரே அடியேனை ஆட்கொள்ளவேண்டுமெனபார், "ஞானமிலாப் பொல்லா வெனைக்கொன்றுபோடும் பொழுதியல் பூசைசெபஞ் சொல்லார் நற்கோயினியமம் பலவகைத்தோத்திரமுமெல்லா முடிந்தபின் கொல்லு கண்டாய்" என்றுங்கூறினார். நல்லோய்! அடியேனுக்கு விண்ணப்பம் ஒன்று

செய்தருளல்வேண்டும்; யாதெனின் ஞானமில்லாதகொடியேனாகியஎன்னைக் கொல்லுஞ்சமயத்து எம்மாற்செய்யக்கூடிய பூசையும் ஜபமும் சிவாலயதரிசனமுதலிய நியமங்களும் பலவகைத்துதிகளும் யாவும் முடிவுபெற்றபின் கொல்லுவையென்பதாம்,

சடக்கடத்துக்கிரைதேடிப்பலவுயிர்தம்மைக்கொன்று
விடக்கடித்துக்கொண்டிறுமாந்திருந்துமிகமெலிந்து
படக்கடித்தின்றுழல்வார்கடமைக்கரம்பற்றிநம
னிடக்கடிக்கும்பொழுதேதுசெய்வார்கச்சியேகம்பனே (௩௯)

(இ-ள்.) சடக்கடத்துக்கு - சடவடிவாகிய சரீரத்தின் பாதுகாப்பின் பொருட்டு, இரை தேடி - ஆகாரத்தைத்தேடி, பலவுயிர்தம்மைக்கொன்று- பலவுயிர்களைக்கொன்று, விடக்கு அடித்துக்கொண்டு-(அவற்றின்) மாமிசத்தைப் பிடுங்கிக்கொண்டு, இறுமாந்திருந்து - செருக்கடைந்திருந்து, மிக மெலிந்துபட - மிகவும் மெலிவடைந்து வருந்த, கடித்தின்று - கடித்துத்தின்று, உழல்வார்கள் தம்மை - உழல்வோர்களை, நமன் - யமன், கரம்பற்றி- கையினாற்பிடித்துக்கொண்டு, இடக்கடிக்கும் பொழுது - வருத்தப்படுத்தும் பொழுது, ஏது செய்வார் - யாதுசெய்வார்கள், கச்சி ஏகம்பனே - திருக்கச்சியின்கண் எழுந்தருளிய ஏகம்பனே. எ-று.

(கு-ரை.) "கொல்லாமை மேற்கொண் டொழுகுவான்வாழ்நாண்மேற், செல்லாதுயிருண் ணுங்கூற்று" என ஆன்றோர் கூறியதை யுணராது தோன்றியழியும் சரீரத்தைப் பாதுகாத்தற்பொருட்டுப் பலவுயிர்களைக்கொன்று அவற்றின் மாமிசத்தைப் புசித்து இறுமாந்திருப்பார் என்பார் "சடக்கடத்துக்கிரைதேடிப் பலவுயிர்தம்மைக்கொன்று விடக்கடித்துக் கொண்டிறுமாந்திருந்தும்" எனவும், அவ்வுயிர்களைப் பிறர்கொல்லாதுதாமே வருத்திக்கொன்று தின்பாரென்பார், "மிகமெலிந்துபடக்கடித்தின்று" எனவும், அத்தன்மையோரை யமன் காலபாசத்தினாற்கட்டிக்கைப்பற்றியிழுத்துக்கொண்டுபோய்வருத்துகையில் அவர் அவன்கையினின்று முய்யும்வகை இல்லாமையினால் வாளாவிழிப்பார் என்பார், "உழல்வார்கடம்மை. ..ஏதுசெய்வார்"எனவுங்கூறினார்.

இச்செய்யுளால் ஊன் உண்பவர் யமனிடத்து அகப்பட்டு வருந்துவது நிச்சயம் என்பது ஸ்தாபிக்கப்பட்டது. சடரூபமாகிய சரீரத்தின் பாதுகாப்பின்பொருட்டு உணவைத்தேடிப்பலவுயிர்களைக் கொன்று அவற்றின் மாமிசத்தைப் பிடுங்கிக்கொண்டு செருக்கடைந்திருந்து, மிகவுமெலிவடைந்து அவைவருந்தக் கடித்துத்தின்று உழல்வோர்களை யமன்கையினால் பிடித்துக் கொண்டு வருத்தப்படுத்தும்பொழுது அவர்கள் யாதுசெய்வார்கள் என்பதாம்.

நாறுமுடலைநரிப்பொதிசோற்றினைநான்றினமுஞ்
சோறுங்கறியுநிரப்பியபாண்டத்தைத்தோல்கயர்தங்
கூறுமலமுமிரத்தமுஞ்சோருங்குழியில்விழா
தேறும்படியருள்வாயிறைவாகச்சியேகம்பனே. (௪௰)

(இ-ள்.) நாறும் உடலை - நாறுகின்றதேகத்தை, நரிப்பொதிசோற்றினை - நரிகட்குப்பொதிசோறாயிருப்ப தொருபொருளை, நான்-அடியேன், தினமும்-நாள்தோறும், சோறும் கறியும் - சோற்றையும கறியையும், நிரப்பிய - நிறைத்துவைத்த, பாண்டத்தை - மட்பாத்திரத்தை, தோகையர் - பெண்களது, கூறும் - (இழிந்துச்) சொல்லப்படுகின்ற, மலமும் இரத்தமும் சோரும் - மலமும் உதிரமும் ஒழுகாநின்ற, குழியில்விழாது - (அல்குலாகிய) பள்ளத்தில் விழுத்தாமல், ஏறும்படி - முத்தியாகிய கரையேறும்படி, அருள்வாய் - கருணைபுரிவாய், கச்சி ஏகம்பனே - திருக்கச்சியின் கண் எழுந்தருளிய ஏகம்பனே. எ-று.

(கு-ரை.) இச்சரீரம் அருவருக்கும்படியான நீர் ஒழுகுகின்ற பலதுவாரங்களோடு கூடி மேலே ஒருதோல்போர்த்து அதனாலே கண்ணுக்கு இனியதாகத்தோன்றுகின்றதேயன்றி உண்மையாகப் பார்த்தால் மலமூத்திரங்கள் பொதிந்துநாற்றத்தையுடைமையால், "நாறுமுடலை" எனவும், 'நாய்நமதெனநரிநமதென' என்று ஆன்றோர் கூறியதனால் இவ்வுடல் அழிந்த ஞான்று நரிக்குச்கட்டுச் சோறாயிருப்பதால், 'நரிப்பொதிசோற்றினை" எனவும், அடியேன் இவ்வுடல் பருக்க நாடோறும் சோறும கறியுமிட்டு வளர்க்கின்றமையால் "நான்தினமுஞ் சோறுங்கறியு நிரப்பியபாண்டத்தை" எனவும், இங்ஙனமாகிய உடலை முத்தியாகிய தேவரீரது திருவடியிற் சேர்க்காது, பெண்களது மலமூத்திரமொழுகாநின்ற அல்குலாகியபள்ளத்திற்சேர்ப்பது தேவரீரது பெருங்கருணைக்குத் தகுதியன்மையின் அருளல்வேண்டுமென்பார், "தோகையர்தம் கூறு மலமுமிரத்தமுஞ் சோருங்குழியில விழாதேறும்படியருள்வாய்" எனவும் கூறினார். விழாது என்னும் எச்சம் ஈண்டுப்பிறவினைமேற்று. பொதிசோறு - கட்டுச்சோறு. நாறுகின்றதேகமும், நரிகட்குப்பொதி சோறாயிருப்பதொரு பொருளும், அடியேன் நாள்தோறும் சோற்றையும்கறியையும்நிறைத்துவைத்த மட்பாத்திரமுமாகிய சரீரத்தைப் பெண்களுடைய இழித்துச் சொல்லப்படும் மலமுமுதிரமும் ஒழுகாநின்ற அல்குலாகிய பள்ளத்தில் விழுத்தாமல் முத்தியாகிய கரையேறும்படி கிருபைசெய்வாய் என்பதாம.

சொக்கிட்டரண்மனைப்புக்குட்டிருடியதுட்டர்வந்து
திக்குற்றமன்னரைக்கேட்பதுபோற்சிவநிந்தைசெய்து
மிக்குக்குருலிங்கசங்கமநிந்தித்துவீடிச்சிக்கு (௩௫)
மெக்குப்பெருத்தவர்க்கென் சொல்லுவேன்கச்சியேகம்பனே

(இ-ள்.) சொக்கு இட்டு - (பிறரைமயக்குகின்ற) மாயப்பொடி தூவி, அரண்மனை உள் புக்கு-அரண்மனையி னுள்ளேபுகுந்து, திருடிய-களவுசெய்த, துட்டர் - துட்டர்கள், வந்து - (இராஜசேவகர்களால் அரசர்க்கெதிரில்) கொண்டுவரப்பட்டு, திக்கு உற்ற மன்னரை - திக்குகடோறும் புகழ்பொருந்திய அவ்வரசரை, கேட்பதுபோல்-(தம்மைத்தண்டனைசெய்யாதுவிடும்படி) கேட்டுக்கொள்ளுவதுபோல, சிவநிந்தைசெய்து - சிவதூஷணஞ்செய்து, மிக்கு-

மிகுதியாக, குருலிங்க சங்கமம் நிந்தித்து - குருலிங்க சங்கமங்களைத்தூஷணை ஞ்செய்து, வீடு இச்சிக்கும் - முத்தியடைய விரும்புகின்ற, எக்கு பெருத்த வர்க்கு - தீமையில் மேம்பட்டார்க்கு, என்சொல்லுவேன் - யாதுசொல்லு வேன், கச்சி ஏகம்பனே-திருக்கச்சியின்கண் எழுந்தருளிய ஏகம்பனே எ-று.

(கு-ரை.) செருப்பைக்காலிற்கோத்து அரையிற்கச்சைக்கட்டி நூலேணி யைச்சுற்றி உளியையெடுத்துவாளைப்பிடித்துத் திரியுங் கள்வர்பேரணி லங் களைகச்சுதலாலே அவற்றைக்களவாடுதற்குரிய அரண்மனையிற் பதிவிருந்து நா ழிகையை முடிவாகக்கொண்ட கங்குற்போதிற்புகுந்து மாயப்பொடிதூவிகள வாடுத லியல்பென்பார், "சொக்கிட்டரண்மனை புக்குட்டிருடியகள்வர்" என வும், வலிய யானையை யிரையாகப் பார்க்கும் வலிய புலியைப்போல உள வைப்பார்க்கையிலேலே துயில் சொள்ளாதகண்களுர், கல்விற் ... ந்தவர்களாலே புகழப்பட்ட களவிற்றொழிலையாளுந் தன்மையும் ... கா த்தற்றொழிலு முடையவராய ஊர்காப்பாளர் காவலிற் ... ய்சென்று உலாவுகையினாலே அக்கள்வர் அவர்கையில்சிக்குண்டுபுகழ்பெற்ற அரசன்முன் கொணரப்பட்டுத் தம்மைத்தண்டனை செய்யாவண்ணம் அவ்வரசனைக்கேட்ப துஇயல்பாதலின், "வந்துதிக்குற்றமன்னரைக்கேட்பதுபோல்"எனவும், கா மிகமுதலிய நூல்கள் ஏனையதவறுசெய்தவர்க்குப்பிராயச்சித்தங்கூறியுளவே னும் சிவநிந்தை, குருலிங்க சங்கம நிந்தைகள்செய்தோர்க்குப் பிராயச்சித் தங்கூறாமையினால் மோட்சத்தைவிரும்பிய அக்கொடியோர்க்குக் கூறுவது ஒன்றுமில்லை என்பார், "சிவநிந்தைசெய்து மிக்குக்குருலிங்கசங்கமநிந்தித்து வீடிச்சிக்கு மெக்குப்பெருத்தவர்க் கென் சொல்லுவேன்" எனவும் கூறினர். குருலிங்கசங்கமங்களைப் பூசிப்பார் அடையும்பயனை "எங்குமீசனைப் பூசை செய்திகபரமடைவா, ரெங்கு மன்பரைப்பூசைசெய்தெழு பிறப்பறுப்பா,ரெ ங்குமாகமஞ்செவி மடுத்தெதிர் வினைதடுப்பா, ரெங்கு நாயகன்வடிவுணர்ந்தி ருண்மலங்களைவார்" எனும்ஆன்றோர் திருவாக்கானுணர்க.

பிறரை மயக்குகின்ற மாயப்பொடிதூவி அரண் மனையினுள்ளே புகுந்து களவாடிய துட்டர்கள் இராஜசேவகர்களால் கொண்டுவரப்பட்டு திக்குக டோறும் புகழ்பொருந்திய அவ்வரசரைத் தம்மைத் தண்டனை செய்யாது விடும்படி கேட்டுக்கொள்வதுபோலச் சிவநிந்தைசெய்த மிகுதி யாகக் குருலிங்க சங்கமங்களை நிந்தித்தும் முத்தியடைய விரும்பும் தீமையில் மேம்பட்டார்க்கு யாதுசொல்லுவேன் என்பதாம்.

விருந்தாகவந்தவர் தங்களுக்கன்னமிகக்கொடுக்கப்
பொருந்தார்வளம்பெறவாழ்வார்நின்னைத்தைப்போற்றிநித்த
மருந்தாமுலைப்பங்கரென்னுதபாதகரம் புவியி
லிருந்தாவதேதுகண்டாயிறைவா கச்சியேகம்பனே. (௩௬)

(இ - ள்) விருந்தாகவந்தவர் தங்களுக்கு- (பண்டு அறிவுண்மையிற் குறி த்தும் அஃதின்மையிற் குறியாதும்) விருந்தினராய் வந்தவர்களுக்கு அன்ன ம் - உணவை, மிகக்கொடுக்கப் பொருந்தார் - மிகத்தரவாய்க்காதவர், வளம்

பெறவாழ்வார் - செல்வம்பெறவாழ்வராகி, நித்தம் - தினந்தோறும், நின்நாமத்தைப்போற்றி - தேவரீரது திருநாமத்தைத்துதித்து, அருந்தாமுலைப்பங்கர் - உண்ணாமுலையம்மையை ஒருபாகத்திலுடையவரே, என்றுசொல்லாத, பாதகர் - பாவிகள், அம்புவியில் - பூமியில், இருந்து - இருந்ததனால், ஆவது ஏது - இவ்வுலகினுக்கு அவர்களால் நேர்வதாகிய பயன்யாது, கச்சி ஏகம்பனே - திருக்கச்சியின்கண் எழுந்தருளிய ஏகம்பனே. எ - று,

(கு-ரை) தம்மைநோக்கியும்நோக்காதும்வந்தவிருந்தினரைஎஞ்ஞான்றும் உபசரித்துவருவாரது இல்வாழ்க்கையானதுவறுமையால்கெடுதலில்லையாதலுண்மையின் அங்ஙனஞ்செய்யாதாரும் செல்வம் பெற்றிருத்தல் முன்செய்த நல்வினைப்பயனுதலேயன்றி மறுமைக்குத் தங்கட்கு யாதொருபயனுமில்லை என்பார், "விருந்தாகவந்தவர் தங்களுக்கன்னமிக்கொடுக்கப்பொருந்தார் வளம்பெற வாழ்வார்" எனவும், மனத்தை மூடிய ஆணவவிருளை யொழித்தற்குத் தேவரீரது திருநாமங்கள்பலவற்றுள்ளும் உண்ணாமுலைப்பங்கரென்னுந் திருநாமமே சிறப்புடைத்தாதலால் அதனை நாள்தோறும் போற்றித்துதியாதார் இவ்வுலகத்தில் இருந்ததனால் தமக்கும் பிறர்க்கும் யாதொருபயனுமில்லை என்பார், "நின்னாமத்தைப்போற்றி நித்தமருந்தாமுலைப்பங்கரென்னுசபாதகரம்புவியிலிருந்தாவதேதுகண்டாய்" எனவும் கூறினார். இதனை "புரியுநின்னருளாலுயர்ந்தவரனேசர் புரவுபூண்டெட்டுரு வெடுத்தோய், வரிவிழியுமையாண்மணந்தபேரின்ப வடிவமே யிடும்பை நோயறுக்கும்" என்பதனாலுணர்க. அறிமுகத்தால் எண்ணியும் அறிமுக மில்லாமலெண்ணியும் வந்தவிருந்தினர்களுக்கு அன்னம் மிகக்கொடுக்கப் பொருந்ாதவரும் செல்வம்பெறவாழ்வாராகி, நாள் தோறும் தேவரீரது திருநாமத்தைத்துதித்து உண்ணாமுலையம்மையை ஒருபாகத்திலுடையவரே என்று சொல்லாதபாவிகள் பூமியில் இருந்ததனால் இவ்வுலகினுக்கு அவர்களால் உண்டாவதாகிய பயன் யாது என்பதாம்.

எல்லாமறிந்துபடித்தேயிருந்தெமக்குள்ளபடி
வல்லானறிந்துளனென்றுணராதுமதிமயங்கிச்
சொல்லான்மலைந்துறுசூழ்விதியின்படிதுக்கித்துப்பி
னெல்லாஞ்சிவன்செயலேயென்பர்காண்கச்சியேகம்பனே.

(இ-ள்) எல்லாம் அறிந்து - எல்லாச்செயல்களையும் காட்சிப்பிரமாணமாகக்கண்டறிந்தும், படித்தேயிருந்து - ஒலிப்பிரமாணமாக வாசித்திருந்தும், எமக்கு உள்ளபடி - எமக்கு உள்ளதன்மையை, வல்லான் - முத்தொழிலும் வல்லவனாகிய இறைவன், அறிந்துளன் என்று உணராது - தெரிந்திருக்கின்றானென்று தெரியாமல், மதிமயங்கி - அறிவுகலங்கி, சொல்லால் மலைந்து - பிறர்சொல்லும் சொற்களால் மலைவடைந்து, சூழ்வுறு-(தம்மை வந்து) சூழ்ந்துகொண்ட, விதியின்படி - ஊழின்படி, துக்கித்து - வருத்தமடைந்து, பின் - பிறகு, எல்லாம் - யாவும், சிவன் செயலே என்பர் - சிவன்செய

லே என்று கூறி ஒருவாறு மனந்தெளிவார்கள், கச்சி ஏகம்பனே-திருக்கச்சியின்கண் எழுந்தருளிய ஏகம்பனே. எ-று.

(கு-ரை) பலசாஸ்திரங்களைப்படித்தும் சைவாகமத்திற் கூறும் எண்குணங்களையு முடையான் சிவபெருமானே என்று தெரிந்தும் அவரே தமது செயலெல்லாமுணரத்தக்கவரென்றறிந்தும் ஆணவவயத்தராய்ப்பிறர் கூறும் பொய்ம்மொழிகளை மெய்ம்மொழிகளாகக் கருதி மயங்கினர் என்பார், "எல்லாமறிந்து படித்தேயிருந்தெமக்கு........சொல்லான் மலைந்து" எனவும், தாம் இடுக்கணுற்று வருந்துகையில் நல்வினைப்பயனால் அறிவு தோன்றி இவ்விடுக்கண் தம்மைச் சூழ்ந்துகொண்ட ஊழின்படி நிகழ்ந்ததெனவும், சிவன்செயலெனவும் தெளிகின்றமையின், "உறுசூழ்விதியின்படி துக்கித்துப் பினெல்லாஞ் சிவன்செயலே யென்பர்" எனவும் கூறினர். எல்லாநூல்களையும் படித்துணர்ந்தவரும் ஒருதீங்கு மேலிட்டபோது இதுஇறைவன் செயலென்றுணராமல் மதிமயங்கி வருந்திப் பிறகுஇறைவன்செயலே என்று தெளிவது இயற்கையாமென்க.

எல்லாச்செயல்களையும் கண்டறிந்தும் வாசித்திருந்தும் எமக்குஉள்ள தன்மையை முத்தொழிலும் வல்லவனாகிய இறைவன் அறிந்திருக்கின்றானென்று அறியாமல் அறிவுகலங்கி, பிறர்சொல்லும் சொற்களான்மலைவடைந்து தம்மைவந்து சூழ்ந்துகொண்ட ஊழின்படி வருத்தமடைந்து பிறகு யாவும் சிவன்செயலே என்று கூறி ஒருவாறு மனந்தெளிவார்கள் என்பதாம்

பொன்னைநினைந்துவெகுவாகத்தேடுவர்பூவையன்னா
டன்னைநினைந்துவெகுவாயுருகுவர்தாரணியி
லுன்னைநினைந்திங்குனைப்பூசியாதவுலுத்தரெல்லா
மென்னையிருந்துகண்டாயிறைவாகச்சியேகம்பனே. (௩௮)

(இ-ள்.) பொன்னை நினைந்து - பொருளைச்சேகரிக்க எண்ணி, வெகுவாகத்தேடுவர் - மிகுதியாகத்தேடுவார்கள், பூவை அன்னாள் தன்னை - நாகணவாய்ப்புள்போல் வாளாகியமாதை, நினைந்து - தழுவ எண்ணி, வெகுவாய் உருகுவர் - மிகுதியாய் மனம் நைவார்கள், தாரணியில் - பூமியில், உன்னை நினைந்து - தேவரீரை எண்ணி, இங்கு - இப்பொழுது, உன்னைப்பூசியாத - தேவரீரைப்பூசிக்காத, உலுத்தர் எல்லாம் - உலோபிகளெல்லோரும், இருந்து - உயிரோடிருந்து, என்னை - என்னபயன், இறைவா - தலைவனே, கச்சி யேகம்பனே - திருக்கச்சியின்கண் எழுந்தருளிய ஏகம்பனே. எ-று.

(கு-ரை.) மறுமையின்பமடைய முயற்சிசெய்யாது இம்மை யின்பத்தையடையப் பொருளினையேதேட மிகமுயல்வார்என்பார், "பொன்னைநினைந்து வெகுவாகத்தேடுவர்" எனவும், அங்ஙனந்தேடிய பொருளைச் சிவபுண்ணிய முதலியவற்றைச் செய்யாது மாதரைத்தழுவ எண்ணி அவர்களுக்கு அதனைக்கொடுத்து, அப்பொருள் வறண்டவுடன் அம்மாதர் தம்மோடு சேர இணங்காமையால் அவரை நினைந்து உருகுவர் என்பார், "பூவையன்னா டன்னை

நினைந்து வெகுவாயுருகுவர்'' எனவும், இவ்வுலகத்தில்தேவரீரைநினைத்துப்பூசியாத உலுத்தர்கட்கு நரகமே உறைவிடமாதலின் அவர்உயிர்பெற்று ஈண்டு இருத்தலின் தமக்கு யாதொருபயனுமில்லை என்பார், ''தாரணியிலுன்னை நினைந்திங்குனைப் பூசியாத வுலுத்தரெல்லா மென்னையிருந்து'' எனவும்கூறினர். பொருளைத்தேட எண்ணமிகுதியாய்த் தேடுவார்களும், பெண்களைத் தழுவ எண்ணி மிகுதியாய் மனம் நைவார்களுமாகிப் பூமியில் தேவரீரை எண்ணியிப்பொழுது பூசிக்காத உலோபிகளெல்லோரும் உயிரோடிருந்து யாதுபயன் என்பதாம்.

> கடுஞ்சொல்லின்வம்பரையீனரைக்குண்டரைக்காமுகரைக்
> கொடும்பவமேசெயுநிர்மூடர்தமைக் குவலயத்து
> நெடும்பனைபோலவளர்ந்துநல்லோர்தநெறியறியா
> விடும்பரையேன்வகுத்தாயிறைவாகச்சியேகம்பனே. (௩௯)

(இ-ள்.) கடுஞ்சொல்லின்-(பாவம்பயக்கும்)கடுஞ்சொற்களையுடைய, வம்பரை-வீணர்களையும், ஈனரை-இழிந்தார்களையும், குண்டரை-வியபசாரி புத்திரர்களையும், காமுகரை - விடர்களையும், கொடும்பாவமே செய்யும் - கொடிய பாவத்தையே செய்கின்ற, நிர்மூடர்தம்மை - நிர்மூடர்களையும், குவலயத்தில்-பூமியில், நெடும்பனைபோல வளர்ந்தும் - நெடிய பனைமரம்போல வளர்ந்திருந்தும், நல்லோர்தம் நெறி அறியா - ஞானியர்களுடைய மார்க்கத்தையறியாத, இடும்பரை - இக்கொடியோர்களையும்- ஏன்வகுத்தாய்- யாதுகாரணமாகப்படைத்தாய், இறைவா-தலைவனே, கச்சிஏகம்பனே-திருக்கச்சியின்கண் எழுந்தருளிய ஏகம்பனே. எ-று.

(கு-ரை) இனிமையும் மெய்ம்மையுமுதலிய சொற்குணங்கள் பயவாது பாவம் பயக்கும் கடுஞ்சொற்களை யெந்நாளுமுடையார் என்பார், ''கடுஞ்சொல்வம்பரை'' எனவும், புகழ்முதலிய ஒழித்துப் பழிமுதலியசெய்யாநின்றும் யாதுங்கவலையுடையவரல்லராகலின், ''ஈனரை'' எனவும், கொண்டகணவரைப் பிழைத்துப் பெற்றமக்களாதலின், ''குண்டரை''எனவும், பிறர்மனைவியிடத்து நெறிகடந்து செல்வோர்க்குப் பகையும் அச்சமும் குடிப்பழிப்புமுண்டாதற்குக்காரணமாகிய காமங்குடிகொண்டிருத்தலின், ''காமுகரை'' எனவும், பிறரிடத்துச் செய்த தீவினைகள் தம்மிடத்துத் துன்பம்பயத்தலையாராயாது மேன்மேலும் அவற்றையே செய்வராதலின், ''கொடும்பவமே செயுநிர்மூடர்தம்மை'' எனவும், பனைமரம் ஒருவர் நிற்கவும் நிழலாகாதது போல இப்பூமியில் ஞானமார்க்கங்களை யாராய்ந்து ஞானிகளைப் பற்றுக்கோடாகக்கொள்ளாதார்யாதொருபயனுமடையாமையால்,''குவலயத்துநெடும்பனைபோல........யேன்வகுத்தாய்'' எனவும் கூறினர். பாவம் பயக்கும் கடுஞ்சொற்களையுடைய வீணர்களையும், இழிந்தார்களையும், வியபசாரிபுத்திரர்களையும், விடர்களையும், கொடியபாவத்தையே செய்கின்ற நிர்மூடர்களையும் பூமியில் நெடியபனைமரம்போல வளர்ந்திருந்தும் ஞானியர்களுடைய மார்க்கத்தையறியாதகொடியோர்களையும்யாதுகாரணமாகப்படைத்தாய்என்பதாம்.

கொன்றேனனேகமுயிரையெல்லாம்பின்புகொன்றுகொன்று
தின்றேனதன்றியுந்தீங்குசெய்தேனதுதீர்கவென்றே
நின்றேனின்சன்னிதிக்கேயதனாற்குற்றநீபொறுப்பா
யென்றேயுனைநம்பினேனிறைவாகச்சியேகம்பனே. (௪0)

(இ-ள்) அனேகம் உயிரை எல்லாம்-அனேகமான பிராணிகளையெல்லாம், கொன்றேன் - கொலைபுரிந்தேன், பின்பு - பிறகு, கொன்று கொன்று-தின்றேன் - கொலைசெய்து கொலைசெய்து உண்டேன், அது அன்றியும்-அதுவல்லாமலும், தீங்குசெய்தேன் - மற்றும் பலதீமைகள் செய்தேன், அவை தீர்க என்றே-அவைகள் நீங்குகவென்றே, நின்சன்னிதிக்கே நின்றேன் - தேவரீரது சன்னிதியிலே நின்றேன், அதனால் - ஆதலால், குற்றம்- என்குற்றங்களையெல்லாம், நீபொறுப்பாய் என்றே - தேவரீர் பொறுத்தருளுவை என்றே, உன்னை நம்பினேன் - தேவரீரை நம்பியிருக்கின்றேன், இறைவா-தலைவனே, கச்சி ஏகம்பனே - திருக்கச்சியின்கண் எழுந்தருளிய ஏகம்பனே. எ-று.

(கு-ரை.) உயிர்க்குறுதியானவற்றைச் செய்யாது தீத்தொழிலையே செய்தேனென்பார், "கொன்றேனனேக முயிரையெல்லாம்" எனவும், நீரிற்குமிழிபோலழியும் இவ்வுடம்பைப்போற்றுதற்பொருட்டு அவ்வுயிர்களைப்புசித்தேன் என்பார், "பின்பு,கொன்று கொன்று தின்றேன்" எனவும், அதன்மேலும் கழுவாயில்லாப் பலதீங்குகளைச் செய்தனேனாதலின் அவற்றையொழித்துக்கொள்ள தேவரீரதுத் திருவருளைப்பெறவேண்டு மென்பார், "அதுதீர்கவென்றே நின்றேனின் சன்னிதிக்கே," எனவும, விருப்பு வெறுப்புஇல்லாததோர் குணமுடையோராதலின் அடியேனையும் ஆட்கொள்வது உண்மையென்று நம்பியுள்ளேன் என்பார், "அதனாற் குற்றநீ பொறுப்பாயென்றே யுனைநம்பினேன்" எனவும் கூறினார். அனேக உயிர்களையெல்லாம் கொலைபுரிந்தும் பிறகு கொலைசெய்தும்உள்ளேன் கொலைசெய்து உண்டும், அதுவல்லாமலும் மற்றும் பலதீமைகள்செய்து அவைகள் ஒழிகவென்றேதேவரீரது சந்நிதியிலே நின்றேன்; ஆதலால் என்குற்றங்களை யெல்லாம் நீர் பொறுத்தருளுவீரென்றே தேவரீரை நம்பியிருக்கின்றேன் என்பதாம்.

திருவேகம்பவிருத்தம்.

அன்னையெத்தனையெத்தனையன்னையோ
வப்பனெத்தனையெத்தனையப்பனோ
பின்னையெத்தனையெத்தனைபெண்டிரோ
பிள்ளையெத்தனையெத்தனைபிள்ளையோ
முன்னையெத்தனையெத்தனைசன்மமோ
மூடனாயடியேனு மறிந்திலே
னின்னமெத்தனையெத்தனைசன்மமோ
வென்செய்வேன்கச்சியேகம்பநாதனே.

(இ-ள்.) அன்னை - தாயென்றால், எத்தனை எத்தனை அன்னையோ - எத்தனை எத்தனை தாய்மார்களோ, அப்பன் - பிதாவென்றால், எத்தனை எத்தனை அப்பனோ - எத்தனை எத்தனை பிதாக்களோ, பின்னை - பின்பு, எத்தனை எத்தனை பெண்டிரோ - எத்தனை எத்தனை மனைவிகளோ, பிள்ளை - புத்திரரென்றால், எத்தனை எத்தனை பிள்ளையோ - எத்தனை எத்தனை புத்திரர்களோ, முன்னை - பூர்வத்தில், எத்தனை எத்தனை சன்மமோ - எத்தனை எத்தனை பிறப்புக்களோ, மூடனாகிய அடியேனும் - அறிவிலியாகிய அடியேனும், அறிந்திலேன் - உணர்ந்திலேன், இன்னம் - இன்னமும், எத்தனை எத்தனை சன்மமோ - எத்தனை எத்தனை பிறப்புக்களோ; என்செய்வேன் - (இவைகளின் நீக்கத்தின் நிமித்தம் நான்) யாது செய்யக்கடவேன், கச்சி ஏகம்பநாதனே - திருக்கச்சியின் கண் எழுந்தருளிய ஏகம்பநாதனே. எ-று.

"ஊர்வபதினொன்று மோன்பது மானுட, நீர்ப்பறவை நாற்காலோர் பப்பத்தாஞ் - சீரிய, பந்தமாந் தேவர்பதினா லயன்படைத்த, வந்தமில்சீர்த் தாவரநா லைந்து" என்றபடி உயிர்கள் பிறவி யெடுக்குந்தோறும் அப்பிறவிகட்குத்தாயரும் தந்தையரும் பலராதலின், "அன்னையெத்தனை யெத்தனையன்னையோ வப்பனெத்தனை யெத்தனையப்பனோ" எனவும், அவற்றுள் ஒன்பது மானுடம் எனக்கூறினமையால் அம்மானுடதேகமெடுத்துப் பதினாறுட்டைப் பிராயத்தராய காலந்தோறும் மணப்பதும் பலமாதராதலின் "பின்னையெத்தனை யெத்தனைபெண்டிரோ" எனவும், மணாளனும் மணாட்டியுமாய்க் கூடிவாழுங்கால் பெறும்மக்களும் பலராதலின், "பிள்ளையெத்தனை யெத்தனைபிள்ளையோ" எனவும், வினைக்கீடாய்ப் பெறுஞ்சன்மங்களும் பலவாதலின், "முன்னையெத்தனை யெத்தனை சன்மமோ" எனவும், அறிவிலியாகிய யான் அப்பிறவிகளினுண்மையை யறிந்தேனில்லை யென்பார், "மூடனாயடியேனுமறிந்திலேன்" எனவும், இனி எவ்வகைப்பிறவிகளைப்பெற்றுய்வேனோ யான் அறிந்திலன்; அஃதன்றி அவற்றைப் போக்கிக்கொள்வதோருபாயமுந் தேடிக்கொண்டேனில்லை என்பார், "இன்னமெத்தனை யெத்தனைசன்மமோ வென்செய்வேன்" எனவும் கூறினார். முன்னமெத்தனையெத்தனை சன்மம் என்றதை "புல்லாகிப் பூடாய்ப்புழுவாய் மரமாகிப், பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய், வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச், செல்லாஅ நின்றவித்தாவரசங்கமத்து, ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்" என்று திருவாய்மலர்ந்தருளிய மணிவாசகப் பெருமான்" திருவாக்கானுணர்க.

தாயென்றால் எத்தனைஎத்தனை தாய்மார்களோ, பிதாவென்றால் எத்தனை எத்தனை பிதாக்களோ, பின்பு எத்தனை எத்தனை மனைவிகளோ, புத்திரரென்றால் எத்தனை எத்தனை புத்திரர்களோ, பூர்வத்தில் எத்தனை எத்தனை பிறப்புகளோ அறிவிலியாகிய அடியேனும் உணர்ந்திலேன், இன்னமும் எத்தனை எத்தனை பிறப்புகளோ இவைகளை யொழித்துக்கொள்ளும்பொருட்டு நான் யாது செய்யக்கடவேன் என்பதாம். இதுகாறும் யானெடுத்த ஜன்மங்கள் எத்தனையோ இனிமேல் யான் எடுக்கும் ஜன்மங்கள் எத்தனையோ அறியேன் என்க.

உ

திருச்சிற்றம்பலம்

திருத்தில்லை.

காம்பிணங்கும்பணைத்தோளார்க்கும்பொன்னுக்குங்காசினிக்குந்
தாம்பிணங்கும்பலவாசையும்விட்டுத்தனித்துச்செத்துப்
போம்பிணந்தன்னைத்திரளாகக்கூடிப்புரண்டினிமேற்
சாம்பிணங்கத்துதையோவென்செய்வேன்றில்லைச்சங்கரனே. (க)

(இ-ள்) தில்லைச்சங்கரனே-திருத்தில்லையின்கண் எழுந்தருளிய சிவபெருமானே, காம்பு இணங்கும் பணைத்தோளார்க்கும்-மூங்கிலை யொத்தபருமையாகிய தோள்களையுடைய பெண்கள் நிமித்தமாகவும், பொன்னுக்கும் காசினிக்கும் தாம்பிணங்கும் பல ஆசையும் விட்டு - பொருள் நிமித்தமாகவும் பூமியின் நிமித்தமாகவும் தாம் வருத்தமடைதற்குரிய பலவாகிய ஆசையும் ஒழித்து, தனித்துச்செத்துப்போம் பிணம்தன்னை- தனிமையாகிச் செத்துப்போகின்ற பிணங்களினிமித்தம், இனிமேல் சாம்பிணம்திரளாகக் கூடி புரண்டுகத்துது - இனிச்சாகப்போகின்ற பிணங்கள் கூட்டமாகச் சேர்ந்து (பூமியில் வீழ்ந்து) புரண்டுகூச்சலிடாநின்றன, ஐயோ என்செய்வேன் - அந்தோ இவரது அறியாமையை நோக்கி யாதுசெய்கேன், எ-று.

(கு-ரை) மனக்கருத்து விருப்பம், இன்பமுதலியவை ஒருகாலத்திலே ஒத்து அனுபவித்தற்குரிய மகளிரும், அதற்கேற்ற இடமும், காலமும், உபகரணங்களும் பெற்று அனுபவித்தற்குத் துணையாயுள்ளது பொருளாதலால், அப்பொருளையீட்டுதற்கு மிக்கவருத்தமுடைமையாலே அப்பொருள்முதலியவற்றிலுண்டான பல ஆசையை யொழித்து எண்ணியதொன்றையும் உடன்கொண்டு போகாமல் இறக்கின்றார் என்பார் "காம்பிணங்கும் பணைத்தோளார்க்கும் பொன்னுக்குங் காசினிக்குந்தாம் பிணங்கும் பலவாசையும்விட்டுத் தனித்துச்செத்துப்போம் பிணந்தன்னை" எனவும், உலகில் இறந்தாரைத் தம்உறவினர் கூட்டமாகக் கூடிச்சூழ்ந்து தரையில் வீழ்ந்து புரண்டு அழுது கூச்சலிடுதல் இயற்கையாதலால் "திரளாகக்கூடிப்புரண்டினிமேற் சாம்பிணங்கத்துது" எனவும், உலகினர்தாம்இறத்தலைக்கண்கூடாகக்கண்டிருந்தும் அதற்கு வருந்தாது பிறர் இறத்தலை நோக்கிவருந்துகின்றஅறியாமையைச் சுவாமிகள் எண்ணியிரங்கி யவர்களைத்தம்வழித்திருத்தற்கு முடியாமையால், "ஐயோ வென்செய்வேன்" எனவும் கூறினார். இனிமேற் சாம்பிணம் என்றது உயிர்வாழ்ந்திருக்கும் மானுடரை - சங்கரன் என்பதற்குச் சுகத்தைச் செய்பவன் என்பது பொருள். (சம் - சுகம், கரம்- செய்பவன்.)

ஈஷணாத்ரயங்களை விரும்பி முயன்றும் அவை கைகூடாமையால் அவற்றினாசையை யொழித்துச் சாகும் பிணங்களைக்குறித்து இனிச் சாம்பிணங்கள் கத்துகின்றன இவரது அறியாமையைக்குறித்து யாதுசெய்வேன் என்பதாம்.

F

சோறிடுநாடுதுணிதருங்குப்பைதொண்டன்பரைக்கண்
டேறிடுங்கைகளிறங்கிடுந்தீவினையெப்பொழுது
நீறிடுமேனியர்சிற்றம்பலவர்நிருத்தங்கண்டா
லூறிடுங்கண்களுருகிடுநெஞ்சமென்னுள்ளமுமே. (௨)

(இ-ள்.) நாடுசோறு இடும் - தேயமானது உணவைத்தராநிற்கும், குப்பைதுணிதரும் - குப்பைமேடுகள் துணியைக் கொடாநின்றன, தொண்டு அன்பரை கண்டு - சிவத்தொண்டுசெய்கின்ற அடியவரைத் தரிசித்து, கைகள் ஏறிடும் - என்கைகள் சிரமேல் ஏறாநின்றன, தீவினை இறங்கிடும் - (அங்ஙனஞ்செய்தலால் என்னைத் தொடர்ந்த) தீவினைகள் இறங்காநின்றன, எப்பொழுதும் நீறு இடும் மேனியர் - எக்காலத்தும் திருவெண்ணீறு பூசிய திருமேனியையுடையவரும், சிற்றம் பலவர் - திருச்சிற்றம்பலத்தை யுடையவருமாகிய நடேசப்பெருமானது, நிருத்தம் கண்டால் - திருநடனத்தைத் தரிசித்தால், கண்கள் ஊறிடும் - என்கண்கள் ஆனந்தநீரைச் சுரவாநின்றன, என் நெஞ்சம் - என்மார்பும், (என்) உள்ளமும் - என்மனமும், உருகிடும் - உருகாநின்றன. எ-று.

(கு-ரை.) உழ்வருடைமையாலும், மிகவிளைதலாலும் மிக்கபசியடையாத நாட்டைச்சிவனடியார்கள் அடைவார்களாயின் அவர்கட்குவேண்டியவுணவைத்தாங்களிருந்தவிடத்திலேயே அந்நாட்டார் உணவுகொணர்ந்து அளிப்பார் என்பார், "சோறிடு நாடு" எனவும், சிவனடியார்கள் கிடைத்தற்கரிய உயர்ந்தசெம்பட்டாடை முதலியவற்றை விரும்பியுடுக்காமல் குப்பையின்கண்ணுள்ள கந்தை முதலியவற்றையே விரும்பி அணிந்து கொள்வாராதலால் அக்கந்தைமுதலியவற்றைப் பெறுதல் எளிதென்பார், "துணிதருங்குப்பை" எனவும், சிவனடியார்களைக்கண்டு வணங்கக்கருதவேண்டுவதில்லை கண்டமாத்திரத்தில் கைகள்தாமே சிரமேற் கூம்பிநின்றமையால் தமக்குரிய தீவினைகள் தாமேயொழியுமென்பார், "தொண்டன்பரைக் கண்டேறிடுங்கைகளிறங்கிடுந் தீவினை" எனவும், உயிர்கட்கெல்லாம் புண்ணியம்வளர்க்கும் வைதிக நீறு சைவநீறுபோலாது விண்ணவர் உடல்முழுதையும் பொடித்த வெண்ணீற்றையெப்பொழுதும் அணிந்தனர் என்பார், "எப்பொழுது நீறிடுமேனியர்" எனவும், வியாக்கிரபாத முனிவர் முதலியோர் பொருட்டுத் தில்லையின்கண் செய்தருளிய திருநடனத்தைத்தரிசித்தால்கண்கள் ஆனந்தநீர் சொரிந்து, நெஞ்சம் நெகுதலடைந்துமனம் உருகிடும் என்பார், "சிற்றம்பலவர் நிருத்தங்கண்டால் ஊறிடுங்கண்களுருகிடு நெஞ்ச மென்னுள்ளமுமே" எனவும் கூறினார்.

சோற்றினுக்கும் கூறைக்கும் முயலவேண்டுவதில்லை; அன்பரைத்தரிசித்தலும் சிவபெருமானது நிருத்தத்தைக் காண்டலுமே இன்றியமையாதன என்பதாம்.

அழலுக்குள்வெண்ணெயெனவேயுருகிப்பொன்னம்பலத்தார்
நிழலுக்குணின்றுதவமுஞற்றுமனிட்டரேமின்னார்

குழலுக்கிசைந்தவகைமாலைகொண்டுகுற்றேவல்செய்து
விழலுக்குமுத்துலையிட்டிறைத்தேனென்விதிவசமே. (௯)

(இ-ள்.) அழலுக்குள் வெண்ணெய் எனஉருகி - தீயிலிட்டவெண்ணெய் போலமனமுருகி, பொன் அம்பலத்தார் - பொற்சபையையுடையாரது, நிழலுக்குள் நின்று - திருவடிநிழலில் நிற்க, தவம் உணற்றாமல் - தவஞ்செய்யாமல், நிட்டூரம் - கொடுஞ்சொற்களையுடைய, மின்னார் - மின்னலையொத்த பெண்களது, குழலுக்கு இசைந்த - கூந்தலுக்குப்பொருத்தமான, வகை-பலவகைப்பட்ட, மாலைகொண்டு - பூமாலைகளை யேந்திக்கொண்டு, குற்றேவல் செய்து - குற்றேவல்களைச்செய்து, (அதனால்) விழலுக்கு - விழற்புல்லைப்பயிர்செய்தனிமித்தம், முத்துலை இட்டு - மூன்றுதுலைபோட்டு, இறைத்தேன் தண்ணீர் இறைத்தவனானேன், (இது) என்விதிவசமே - என் ஊழ்வசப்பட்டமையே (வேறன்று.) எ-று.

(கு-ரை.) மகளிரிடத்துக்கொண்ட மயக்கத்தால் புழுங்கப்படும் என்மனம் தீயிற்பட்ட வெண்ணெய்போலுருகிப் பொன்னம்பலத்தின்கண் திருநடனஞ்செய்தருளிய நடேசப்பெருமானது திருவடி நிழலில் தங்குந்தவத்தைச் செய்யவில்லை என்பார், "அழலுக்குள் வெண்ணெயெனவே யுருகிப்பொன்னம்பலத்தார் நிழலுக்குணின்று தவமுணற்றாமல்" எனவும், யாவரும் பழிக்கத்தகும் மகளிரது கூந்தலென்னும் காட்டிற்கு. கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்னும் நால்வகைமலர்களால் மாலைகளைக்கட்டியணிந்து அவர்கள் ஏவியகுற்றேவற்றொழில்களைச்செய்து வாணாளை வீணாளாகக்கழித்து, மூளிபுல்லுக்கு நீர்வார்த்து வளர்ப்பதுபோல யாதொரு பயனுமில்லாமலாயினேன் என்பார், "நிட்டூரமின்னார் குழலுக்கிசைந்த வகைமாலைகொண்டு குற்றேவல்செய்து விழலுக்கு முத்துலையிட்டிறைத்தேன்" எனவும்; சிவபெருமானது திருவடித்தொண்டு செய்யும்படியான வழிதேடாது மகளிர்பால்திரிந்தலைந்தது என்தீவினைப்பயன் என்பார், "என்விதிவசமே" எனவுங்கூறினார்.

சிவபெருமானது திருவடிநிழலையடைய முயலாமல் மாதரது குற்றேவலாகிய வெப்பத்தையடைய முயன்றது என்தீவினைப்பயனாகும் என்பதாம்.

ஓடாமற்பாழுக்குழையாமலோரமுரைப்பவர்பாற்
கூடாமனல்லவர்கூட்டம்விடாமல்வெங்கோபநெஞ்சி
னாடாமனன்மைவழுவாமலின்றைக்குநாளைக்கென்று
தேடாமற்செல்வந்தருவாய்சிதம்பரதேசிகனே. (௰)

(இ-ள்.) சிதம்பரதேசிகனே - திருத்தில்லையின்கண் எழுந்தருளிய பரமாசாரியனே, ஓடாமல் - (ஒவ்வொருவிடயமாக) ஓடாதிருக்கவும், பாழுக்கு உழையாமல் - வீணுக்கு உழையாதிருக்கவும், ஓரம் உரைப்பவர்பால் கூடாமல் - (பகை நொதுமல் நண்பென்னும் மூன்று பகுதியினும்) பக்ஷபாதமாய்ப்பேசுவோரிடத்துச் சேராதிருக்கவும், நல்லவர்கூட்டம்விடாமல் - ஞானிகளது இனத்தை நீங்காதிருக்கவும், நெஞ்சில் வெங்கோபம் நாடாமல்-(என்)

மனத்தில் கொடியகோபம் தலையெடாதிருக்கவும், நன்மை வழுவாமல் - நன்மையென்னைவிட்டு நீங்காதிருக்கவும், இன்றைக்கு நாளைக்கு என்று - இன்றைக்குவேண்டும் நாளைக்குவேண்டும் என்று, தேடாமல் - பொருள்முதலியவற்றைத்தேடாதிருக்கவும், செல்வம் - தேவரீரது திருவடியாகிய செல்வத்தை, தருவாய் - அடியேனுக்குக் கொடுத்தருள்வாயாக. எ-று.

(கு-ரை.) மறுபிறப்பும் இருவினைப்பயனும் கடவுளு மில்லையெனவும் மற்றுமித்தன்மையவும் சொல்லும் மயக்கநூல் வழக்குகளை மெய்நூல் வழக்கெனத் துணிந்து அந்நூல்களையாராய்ந்து அச்சமயக்கோட்பாடுகளை யுடையாரிடத்துச் செல்லாதிருக்கவேண்டுமென்பார், "ஓடாமல்" எனவும், காமவெகுளிமயக்கங்களென்னும் முக்குற்றங்களைக்கடிந்து இயமம், நியமம், இருப்பு, உயிர்நிலை, மனவொழுக்கம், தாரணை, தியானம், சமாதியென்று சொல்லப்படும் யோகநெறிகளிலேயே எஞ்ஞான்றும் உழைக்க வேண்டுமேயல்லாமல் பிறவிஷயங்களி லுழைக்கலாகாதென்பார், "பாழுக்குழையாமல்" எனவும், ஓரஞ்சொல்லாதிருத்தலை யொழிந்து சொல்லநினைப்பினும் அந்நினைவு தாய்கெடும் உற்பாதமாதலால் அத்தன்மையோரைச் சேர்ந்தோர்களும் கெடுவராதலால்அவரொடுசேராமலிருக்கவேண்டுமென்பார், "ஓரமுரைப்பவர்பாற்கூடாமல்" எனவும், நீதியும் அறமுமுடைய பண்புடையோரைச்சேர்ந்தோரும் அந்நீதியும் அறமுமடைவர்; அப்பண்பில்லோரை யடைந்தோர் ஓர்சார்புமின்றி மண்ணின்கட்புக்குமாய்வராதலால் நல்லவரினத்தைநீங்கலாகாதென்பார், "நல்லவர்கூட்டம்விடாமல்" எனவும், உலகத்து நெருப்புச்சுடுவது தான்சேர்ந்தவிடத்தையே, சினமென்னும் நெருப்போ தான்சேர்ந்தவிடமேயன்றி முற்றத்துறந்து தலைஞானங்களாற் பெரியராய்க் கேட்டார்க்கு உறுதிமொழிகளை இனியவாகச் சொல்லுவாரையும் சுடுமாதலால் அக்கோபத்தை மனத்தில் கொள்ளலாகாதென்பார், "நெஞ்சில்வெம் கோபம் நாடாமல்" எனவும், இன்பத்தின்காரணமாகச் செய்யும் தீவினைகள் அஃதொழிந்து துன்பமேஇடமாய்ப்பிறிதொருகாலத்தும் பிறிதொருதேயத்தும் பிறிதோருடம்பினும் சென்றுதாக்குதலால் அவற்றைச்செய்யாது, ஒருவருக்குச்செய்த நன்மையையெழுவகைப்பிறப்பினுள்ளும் நினைப்பராதலால் அந்நன்மையினைச்செய்யவேண்டுமென்பார், "நன்மைவழுவாமல்" எனவும், தாமீட்டிய இருவினைக்கீடாக எடுத்த உடலுக்கு முன்னரேயமைந்து கிடக்கும்பொருள்முதலியவற்றையே தேடுகின்றார்; அவற்றைத்தேடவேண்டுவதில்லை யென்பார், "இன்றைக்குநாளைக்கென்று தேடாமல்" எனவும், இருவினைகளால் அடையப்படாத தேவரீரது திருவடிச்செல்வத்தை யடையவேண்டுமென்பார், "செல்வந்தருவாய்" எனவும் கூறினார்.

தோன்றியழியும் பொருள்முதலியவற்றைத்தேடாமல் தேவரீரது திருவடியாகிய செல்வத்தைத் தேடக்கருணைபுரிய வேண்டும் என்பதாம்.

பாராமலேற்பவர்க்கில்லையென்னுமற்பழுதுசொல்லி
வாராமற்பாவங்கள்வந்தணுகாமன்மனமயர்ந்து

பேராமற்சேவைபிரியாமலன்புபெறுதவரைச்
சேராமற்செல்வந்தருவாய்சிதம்பரதேசிகனே. (௫)

(இ-ள்.) சிதம்பரதேசிகனே - திருத்தில்லையின்கண் எழுந்தருளிய பரமாசாரியனே, பாராமல் ஏற்பவர்க்கு - தமது பழைய நிலைமை கருதாது யாசிப்பவர்கட்கு, இல்லை என்னாமல் - யான் இதுபொழுது பொருளுடையனல்லேன் என்று சொல்லாமலிருக்கவும், பழுதுசொல்லி வாராமல் - (இரப்பவர்மீது) குற்றங்களையே எடுத்துக்கூறி வாராமலிருக்கவும், பாவங்கள் வந்து அணுகாமல் - பாவங்கள் வந்து (என்னை) யடையாமலிருக்கவும், மனம் அயர்ந்து பேராமல் - மனஞ்சோர்ந்து (முன்னின்ற நிலைமையினின்றும்) நீங்காமலிருக்கவும், சேவை பிரியாமல் - தேவரீரது தரிசனம் என்னைவிட்டு நீங்காமலிருக்கவும், அன்பு பெறாதவரை சேராமல் - தேவரீரிடத்து ஆசை வையாதவரை அடையாமலிருக்கவும், செல்வம்தருவாய் - தேவரீரது திருவடியாகிய செல்வத்தைக் கொடுத்தருள்வாய். எ-று.

(கு-ரை.) இரப்பவர் சொல்லும் இளிவரவைத்தமக்குச் சொல்லுவதற்கு முன்னே அவர் குறிப்பறிந்து கொடுத்தலும், அவ்விளிவரவைப்பின்னும் மற்றொருவர்பால் அவர் சொல்லாவண்ணம் கொடுத்தலும் யாம் இப்பொழுது பொருளுடையனல்லேம் எனக்கரப்பார் சொல்லும் இளிவரவைச்சொல்லாது கொடுத்தலுமாகிய இவை ஈகையுடையார்க்குரிய குணங்களாதலால் அவற்றைப்பெறவேண்டுமென்பார், "பாராமலேற்பவர்க்கில்லையென்னாமல்" எனவும், பிறர்மேற் குற்றங்களையெடுத்தக்கூறுவார்க்கு யாவரும் பகையாவராதலால் அவற்றைக்கூறாமலிருக்கவேண்டுமென்பார், "பழுதுசொல்லிவாராமல்" எனவும், ஏதிலரைப்புறங் கூறுதவர்க்கு வரும் பிறவிகளினும்பாவங்கள் வந்தணுகாவாதலால் அவ்வணுகாமையைப் பெறவேண்டுமென்பார், "பாவங்கள் வந்தணுகாமல்" எனவும், வீடெய்துவார்க்குச்செவிமுதலாகிய ஐம்பொறிகளுக்குரிய ஓசைமுதலாகிய ஐம்புலன்களையும் கெடுத்தல்வேண்டும்; அங்ஙனஞ்செய்யாத ஐம்புலன்கள் மனத்தைத் துன்பத்தினாலும் பாவத்தினாலும் தேடப்படும்பொருள்களின் மேலல்லாமல் முத்திவழியாகிய யோகஞானங்களிற் செல்லவொட்டாமற் செய்யுமாதலால் அவற்றிற்குச் சலியாமலிருக்கவேண்டுமென்பார், "மனமயர்ந்துபேராமல்" எனவும், சோமநாதர் முதலியோர் தேவரீரைத்தரிசித்து முத்திப்பேற்றையடைந்தமையால், அச்சேவையை யென்கண்களும் என்றும் பிரியாமலிருக்கவேண்டுமென்பார், "சேவைபிரியாமல்" எனவும், தேவரீரது அன்புபெறாதவரைச் சேர்தலால் இருளில் புகுவதேயல்லாமல் ஞானத்தையடைதலில்லாமையால், அவரைச்சேராதிருக்கவேண்டுமென்பார், "அன்புபெறாதவரைச் சேராமல்" எனவும், தேவரீரது திருவடிச்செல்வம் இம்மை மறுமைப்பயனைத்தரும் செல்வம்போலாது நிரதிசயானந்தத்தைத் தருதலால் அதனையே தரவேண்டுமென்பார், "செல்வந்தருவாய்" எனவுங்கூறினார்.

யாசிப்பவர்கட்குப் பொருள்முதலியவற்றைக் கொடுத்துப் புண்ணியத்தைப் பெற்றுத் தேவரீரது திருவடியையடைய அருளல்வேண்டுமென்பதாம்

கொல்லாமற்கொன்றதைத்தின்னுமற்குத்திரங்கோள்களவு
கல்லாமற்கைதவரோடிணங்காமற்கனவினும்பொய்
சொல்லாமற்சொற்களைக்கேளாமற்றோகையர்மாயையிலே
செல்லாமற்செல்வந்தருவாய்சிதம்பரதேசிகனே. (௬)

(இ-ள்.) கொல்லாமல் - (ஒருயிரையும்) கொல்லாமலிருக்கவும், கொன்றதை தின்னுமல் - கொன்றவுயிரைப் புசியாமலிருக்கவும், குத்திரம் கோள் களவு கல்லாமல் - வஞ்சகத்தையும் கோட்சொல்லையும் திருட்டுத்தனத்தையும் கற்காமலிருக்கவும், கைதவரோடு இணங்காமல் - வஞ்சகரோடு சேராமலிருக்கவும், கனவினும் பொய்சொல்லாமல் - சொப்பனத்திலும் பொய்ச்சொற்களைச் சொல்லாமலிருக்கவும், சொற்களைகேளாமல் - துன்பம் விளைக்குஞ் சொற்களைக்கேளாமலிருக்கவும், தோகையர் மாயையில் செல்லாமல்- பெண்கள் மயக்கத்தை யடையாமலிருக்கவும், செல்வம் தருவாய் - தேவரீரது திருவடியாகிய செல்வத்தைக் கொடுத்தருள்வாய். எ-று.

(கு-ரை.) ஒருயிரையும் கொல்லாமையும் கொன்றதைத்தின்னுமையுமாகிய விரண்டறமும் ஒருங்கே யுடையவர்கட்கல்லாமல் ஒன்றே யுடையவர்கட்கு அதனுல் யாதொரு பிரயோசனமுமில்லை யென்பார், "கொல்லாமற்கொன்றதைத் தின்னுமல்" எனவும், துறந்தார்க்குப் புறத்திலே போகாமல்மடங்கி ஓரிடத்தையுற்று உயிரைநோக்கவேண்டியதாகிய அவரது மனம் வஞ்சனையால் அதைவிட்டுப் புறத்திலேபோய்ப் பலவிடத்தையுற்று உடம்பின் பொருட்டுப்பொருளை நோக்குதலே யல்லாமல் அப்பொருளை வஞ்சித்துக்கொள்ளநினைத்தலும் அவருக்குப்பெரியதோர் குற்றமாதலாலும், காணுதவிடத்தே தம்மைக்குறித்து மற்றொருவராலே சொல்லப்பட்ட கோட்சொல்லைக்கேட்டவர், சொன்னவர் மிகவும் வருந்தும்படி அதிகமாகியபழிகளைஆராய்ந்தெதிரேசொல்லுவராதலாலும்;ஒருவர்க்குக் களவு பிறர்பொருளைவஞ்சித்துக்கொள்ளும் ஆசையையுண்டாக்கிப் பாவமும் பழியுமுண்டாக்குதலாலும், அம்மூன்றையும் கல்லாதிருக்கவேண்டுமெனபார், "குத்திரங்கோள் களவு கல்லாமல்" எனவும், ஒருவர்க்கு நல்லினம் அறியாமையையொழித்துத் துணையாய் நிற்கும்; தீயினம் அங்ஙனமாகாது அறிவையொழித்துத் துயரப்படச்செய்யுமாதலால் தீயினஞ் சேராமலிருக்க வேண்டுமென்பார், "கைதவரோடிணங்காமல்" எனவும், பொய்பேசுவாராயின் அதனை அறிந்த தமது மனமானது அப்பாவத்திற்குச் சாக்ஷியாய்நின்று தம்மையழிக்குமாதலின் கனவிலும் பொய்பேசலாகாதென்பார், "கனவினும் பொய்சொல்லாமல்" எனவும், பிறர்க்குத் துன்பஞ்செய்யாத இனியசொற்கள் ஒருவர்க்கு இம்மை மறுமையிலும இன்பம் உண்டாகாநிற்கும்; அங்ஙனமாகாது தமக்கும் பிறர்க்கும் துன்பம் விளைவிக்கும் சொற்களைக் கூறுதலேயன்றிக்

கேட்டலுமாகாதென்பார், "சொற்களைக்கேளாமல்" எனவும், இன்பகாரணமாகப் பெண்களை விரும்பி அவர் வழிநடப்பாராயின் தமக்குத் துணையாகிய அறத்தையடையாராகி யழிவைப் பெறுவராதலின் "தோகையர் மாயையிலே செல்லாமல்" எனவும், மயங்கியவழிப் பேய்த்தேரிற் புனல் போலத்தோன்றி மெய்யுணர்ந்தவழி கயிற்றிலரவுபோலக் கெடுதலாகிய பொருட்செல்வம் போலாது தேவரீரது திருவடிச்செல்வம் இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமில் இன்பத்து அழிவில் வீடும் தருதலால் அதனையே தரல்வேண்டும் என்பார், "செல்வந்தருவாய்" எனவுங்கூறினார்.

கொலை முதலியவற்றைச் செய்யாது தேவரீரது திருவடிச்செல்வத்தை யடையக்கிருபைசெய்யவேண்டும் என்பதாம்.

முடிசார்ந்தமன்னருமற்றுமுள்ளோருமுடிவிலொரு
பிடிசாம்பராய்வெந்துமண்ணாவதுங்கண்டும்பின்னுமிந்தப்
படிசார்ந்தவாழ்வைநினைப்பதல்லாற்பொன்னினம்பலவ
ரடிசார்ந்துநாமுய்யவேண்டுமென்றேயறிவாரில்லையே. (எ)

(இ-ள்) முடிசார்ந்த மன்னரும் மற்றும் உள்ளோரும் - முடிதாங்கிய அரசரும் மற்றுமுள்ளவரும், முடிவில் ஒருபிடி சாம்பர் ஆய்வெந்து - அழிவு காலத்தில் ஒருபிடிசாம்பலாகவெந்து, மண் ஆவது கண்டும் - மண்ணுருவாவதைப்பார்த்தும், பின்னும் - மேலும், இந்தப்படி சார்ந்தவாழ்வை நினைப்பது அல்லால் - இவ்வுலகத்தை யடைந்த நிலையற்றவாழ்க்கையை அடைய எண்ணுவதேயல்லாமல், பொன்னின் அம்பலவர் அடிசார்ந்து - பொன்னம்பலவாணரது திருவடிச்சரணடைந்து, நாம் உய்யவேண்டும் என்று அறிவார் இல்லை - நாம் பிழைக்கவேண்டுமென்று உணர்வோர் இவ்வுலகத்தில் ஒருவருமில்லை. எ-று.

(கு-ரை) பகையரசர்களைவென்று அவர்களதுநாடு முதலியவற்றைக்கவர்ந்து வித்துவான்களையும் பாணர்களையும் வரவழைத்து அவர்கட்குயானை முதலியவற்றைக்கொடுத்துச் சுற்றமொடுவிளங்கி வாழ்ந்த முடிமன்னர் முதலியோர் தம்பிறப்பொழித்துக்கொள்ளமுயலாது பயனின்றிக்கழிந்து முடிவில் சாம்பராய்ப்போதலையறிந்தும் இவ்வுலகவாழ்வினையேநினைக்கின்றாரென்பார், "முடிசார்ந்த மன்னரு மற்றுமுள்ளோரும்,.........படிசார்ந்த வாழ்வைநினைப்பதல்லால்" எனவும், அழியாவின்பத்தைத்தரும் தேவரீரது திருவடிவாழ்வை யடைந்து உய்யவேண்டுமென்பதை நினைந்திலர் என்பார், "பொன்னினம்பலவர்.........அறிவாரில்லை" எனவும் கூறினார்.

உலகில்முடிமன்னர்கள் அழிந்ததையறிந்திருந்தும் நிலையற்ற வாழ்வை நினைந்து பாழ்போகாது தேவரீரது திருவடிகளைச் சரணடைந் துய்யவேண்டும் என்பதாம்.

காலையுபாதிமலஞ்சலமாமன்றிக்கட்டுச்சியிற்
சாலவுபாதிபசிதாகமாகுமுற்சஞ்சிதமா
மாலையுபாதிதுயில்காமமாமிவைமாற்றிவிட்டே
யாலமுகந்தருளம்பலவாவென்னையாண்டருளே. (௮)

(இ-ள்) காலைஉபாதி மலம் சலம் ஆம் - காலையிலுண்டாகும் துன்பம் மலஜலவிஸர்ஜநங்களாகும், அன்றி - அதுவுமல்லாமல், கட்டுச்சியில் சால உபாதி பசிதாகம் ஆகும் - கடும்பகலில் உண்டாகின்ற மிக்கதுன்பம் பசிதாகங்களாகும், முன்சஞ்சிதம் ஆம் - முன்னே சேகரித்ததாகிய, மாலை உபாதி துயில் காமம் ஆம் - மாலைக்காலத்தில் உண்டாகின்ற துன்பம் உறக்கமும் காமமும் ஆகும், இவை மாற்றிவிட்டு - இத்துன்பங்களை யொழித்துவிட்டு ஆலம் உகந்தருள் அம்பலவா என்னை ஆண்டருள் - விஷத்தை யமிர்தமாக ஏற்றருளிய பொன்னம்பலவனே என்னையாட்கொண்டருளவேண்டும். எ-று.

(கு-ரை.) "இருவகையியக்கங்கழிப்புழியுண்டா மின்பம்" என்றபடி அவைகழியாமுன்னர் உண்டாதல் துன்பமே என்பார், "காலையுபாதிமலஞ்சலமாம்" என்றும், "பிணிபலவற்றுண்மேலாம் பிணிபசியதன்பாலாக, பிணிநறுந்தெண்ணீர் வேட்கைபிணியிவை யுயிர்கட்கெல்லாந், தணிமருந்தன்னந்தெண்ணீர் சார்பசியொழிவினுண்டாந், தணியில்பல்வேட்கை நீக்குமவையெலாந் தமக்குப் பின்னும்" என்றபடி அவ்விருவகை யின்பமேயல்லாமல் நண்பகலில் பெருந்துன்பமாக உண்டாவதுபசியும் நீர்வேட்கையுமாதலின், "அன்றிக்கட்டுச்சியில் சாலவுபாதிபசிதாகமாகும்" என்றும், 'வித்தனவாண்டுநூறு மேவரிதாண்டுசில்ல, கதித்திடிளமை தின்னுங்காமநோய் சில்லதின்னும்" என்றபடி தூக்கமும் காமமும் அறுதியாகவுள்ளனவாய் அவைமாலையில் துன்பத்தையே தருதலின், "முற்சஞ்சிதமாம் மாலையுபாதிதுயில்காமமாம்" அவற்றைத்தேவரீர் போக்கி யாட்கொள்ளவேண்டுமென்பார், "இவைமாற்றி......என்னையாண்டருள்" என்றுங் கூறினர்.

சஞ்சிதமுதலிய வினைகளையொத்துத் தில்லையம்பலவாணர் ஆட்கொள்வர் என்பதாம்.

ஆயும்புகழ்த்தில்லையம்பலவாணரருகிற்சென்றாற்
பாயுமிடபங்கடிக்குமரவம்பின்பற்றிச்சென்றாற்
பேயுங்கணமும்பெருந்தலைப்பூதமும்பின்றொடரும்
போயென்செய்வாய்மனமேபிணக்காடவர்போமிடமே. (௯)

(இ-ள்.) ஆயும்புகழ்தில்லை அம்பலவாணர் - அறிஞரால் ஆராயப்படுகின்ற புகழையுடைய தில்லையம்பலவாணருக்கு அருகில் சென்றால் சமீபத்திற் போனால், இடபம்பாயும், அரவம்கடிக்கும் - இருஷபம்பாயும் பாம்புகடிக்கும், பின்பற்றிசென்றால் - பின்தொடர்ந்துபோனால் பேயும் கணமும் பெருந்தலைப் பூதமும் பின்தொடரும் - பேய்களும் பூதகணங்களும் பெருந்தலையையுடைய

பூதங்களும் பின்தொடர்ந்துவரும், மனமே - மனமே, அவர் போம் இடம் - அவர்போகுமிடம், பிணக்காடு - பிணக்காடாம், போய் என்செய்வாய் - (அவ்விடத்தில்) நீபோய் யாதுசெய்வாய். எ-று.

(கு-ரை.) சிவபெருமானுக்குத் தருமதேவதையும் திருமாலும் இடபவாகனமாகவிருத்தலை, "அத்தகுமுடி வொன்றெய்தலுமுலக மழிவு நோக்கியவறக்கடவு, ளித்தகுமுருவிங்கெய்துமே நமக்குமென்றுளம் விரும்பியேற்றுருக்கொண், டுத்தமற்பணியவுரன் முதலருளியூர் தியாக்கினன்விறன்மாலும், வித்தகன் புரங்கொன்ஞான்றருள் பெறுவான் விடையெனத் தாங்கினனறிதி" என்பதனுணர்க. சிவபெருமான் போமிடம்பிணக்காடென்பதை, "கட்டிட்ட தலைகையேந்திக் கனலெரியாடிச்சீறிச், சுட்டிட்டநீறுபூசிச்சுடுபிணக்காடராகி, விட்டிட்ட வேட்கையார்க்கு வேறிருந்தருள்கள்செய்து, பட்டிட்டவுடையராகிப் பருப்பதநோக்கினரே" என்பதனுணர்க.

மனமே தில்லையம்பலவாணரது திருவடியையடைய எவ்வகைப்பட்ட துன்பமடைந்தபோதிலும் அதனைவிடாமற்பற்றவேண்டுமென்பதாம்.

ஓடுமெடுத்ததளாடையுஞ்சுற்றியுலாவிமெள்ள
வீடுகடோறும்பலிவாங்கியேவிதியற்றவர்போ
லாடுமருட்கொண்டிங்கம்பலத்தேநிற்குமாண்டிதன்னைத்
தேடுங்கணக்கென்னகாண்சிவகாமசவுந்தரியே. (௧௦)

(இ-ள்.) ஓடும் எடுத்து அதள் ஆடையும் சுற்றி - பலிபாத்திரத்தையும் ஏந்திக்கொண்டு தோலாடையையும் அரையிற்சுற்றி, மெள்ள உலாவி-மெல்லத்திரிந்து, வீடுகள்தோறும் பலிவாங்கி - வீடுகள்தோறும் பிச்சையேற்று, விதியற்றவர்போல் - குணநீங்கினவர்போல், ஆடும்மருள்கொண்டு - தலைசுற்றியாடுகின்ற மருட்சியைக்கொண்டு, இங்கு அம்பலத்தே நிற்கும் ஆண்டி தன்னை - இந்த அம்பலத்தில் நிற்கும் ஆண்டியை, தேடும்கணக்கு என்னகாண் - தேடுங்காரணம் யாது, சிவகாமசவுந்தரியே - சிவகாமசவுந்தரியம்மையே. எ-று.

(கு-ரை.) பிரமனது அகந்தைகெடநடுத்தலையைக்கிள்ளி அதனைக்கபாலமாகக்கொண்டுதிருமால்முதலியோரிடத்து உதிரப்பலியேற்க எடுத்தமையின் "ஓடுமெடுத்து" எனவும், தாருகவனமுனிவர் சிவபெருமானைக் கொல்லும்பொருட்டு அபிசாரயாகமொன்றுசெய்து அவ்யாகத்திற்றோன்றியபுலியினை அப்பெருமான்மீது செலுத்த, அதனையுணர்ந்து தன்மீதுபாயும் புலியினைத் தான்கொன்று அதன்தோலையாடையாகவுடுத்தமையின், "அதளாடைசுற்றி" எனவும் தாருகமுனிவர் மகளிருடைய இறுமாப்புக்கெடும்படி பிக்ஷாடனகோலங்கொண்டு அம்மகளிர் கற்புக்கெட அகங்கடோறும் பலியேற்றுத்திரிந்தமையின், "உலாவி மெள்ளவீடுகடோறும் பலிவாங்கி" எனவும், பித்தங்கொண்டவர்போல் அம்பலத்து ஆடும் ஆண்டியைச் சிவகாமசவுந்தரியே நீ விரும்புதல் தகாதென்பார். விதியற்றவர்போல்.....................சிவகாமசவுந்தரியே எனவுங் கூறினார். இக்கருத்தினை, "படங்கொளுகஞ்சென்னிசேர்த்திப் பாய்புலித்தோலரையில் வீக்கி, யடங்க லாருமெரியச் சீறியன்று

மூவர்க் கருள் புரிந்தீர், மடங்கலானைச் செற்றுகந்தீர் மனைகடோறுந் தலைகையேந்தி, விடங்காரகித் திரிவதென்னேவேலைசூழ் வெண்காடனீரே" என்பதனானுணர்க. இது தில்லையில், பசிமிகுதியால், "பன்னகவாடகப் பொற்பாதம்" என்று பாடுதலும், உலகமாதாவாகிய சிவகாமியம்மையார் வேதியப் பெண்ணுருவாய் உச்சி நிவேதனப் பிரசாதத்தை வட்டகையினின்றும் கொடுத்தருள, உண்டு பசியாறினவுடன் மறைந்தருளலும் பிராட்டியாரென்றுணர்ந்து ஆராமை மிகுதியால் பாடப்பட்டது. சிவகாம சவுந்தரியே! ஓடெடுத்துத் தோலாடைசுற்றி வீடுதோறும் பிச்சையேற்கும் ஆண்டிதன்னைத் தேடுவது யாது காரணம் என்பதாம். இது நிந்தாஸ்துதி.

ஊட்டுவிப்பானுமுறங்குவிப்பானுமிங்கொன்றொடொன்றை
மூட்டுவிப்பானுமுயங்குவிப்பானுமுயன்றவினை
காட்டுவிப்பானுமிருவினைப்பாசக்கயிற்றின்வழி
யாட்டுவிப்பானுமொருவனுண்டேதில்லையம்பலத்தே. (௧௧)

(இ-ள்) ஊட்டுவிப்பானும் - உண்ணச்செய்பவனும், உறங்குவிப்பானும் - உறங்கச்செய்பவனும், இங்கு ஒன்றொடு ஒன்றை மூட்டுவிப்பானும் - இவ்விடத்தில் ஒருபொருளோ டொருபொருளை மூட்டிவிடுவோனும், முயங்குவிப்பானும் - சேரச்செய்பவனும், இருவினைப்பாசம் கயிற்றின்வழி - நல்வினை தீவினையென்கிற பாசமாகிய கயிற்றின் வழியாய், ஆட்டுவிப்பானும் - அசையச்செய்பவனுமாகிய, ஒருவன் தில்லை அம்பலத்து உண்டு - ஒருவன் தில்லையம்பலத்தின் கண்ணேயுளன். எ-று.

(கு-ரை.) காத்தல் அழித்தல் முதலியன சிவன் செயலே யென்பார் "ஊட்டுவிப்பானு முறங்குவிப்பானும்" எனவும், உயிர்களை யுறவும் பகையும் செய்வித்தற்குமுரியனென்பார், "இங்கொன்றொடொன்றை மூட்டுவிப்பானும்" எனவும், ஆணொடுபெண்ணைச்சேர்ப்பவனும் தானேயென்பார், "முயங்குவிப்பானும்" எனவும், உயிர்கட்கு இருவினைப்பயனை யுண்பிப்பவனுந்தானே யென்பார், "முயன்றவினை காட்டுவிப்பானும்" எனவும், உயிர்களை நல்வினை தீவினை என்கின்றபாசக்கயிற்றினால் ஆட்டுவிப்பவனும் தானேயென்பார், "இருவினைப்பாசக்கயிற்றின்வழி யாட்டுவிப்பானுமொருவனுண்டே" எனவும் கூறினார். இதனை, "வானாகிமண்ணாகிவளியாகிஒளியாகி, யூனாகியுயிராகிஉண்மையுமாயின்மையுமாய்க், கோனாகியானெனதென் றவரவரைக் கூத்தாட்டு, வானாகிநின்றாயையென்சொல்லி வாழ்த்துவனே" என்பதனானுணர்க.

தில்லையம்பலத்தின்கண்ணுள்ள நடேசப்பெருமான் உயிர்களை உண்பித்தல்முதலிய செய்கைகளைச்செய்து இருவினைப்பாசமென்கின்ற கயிற்றினால் ஆட்டுவிப்பார் என்பதாம்.

அடியார்க்கெளியவரம்பலவாணரடிபணிந்தால்
மடியாமற்செல்வவரம்பெறலாம்வையமேழளந்த
நெடியோனும்வேதனுங்காணாதநிமலனருட்
குடிகாணாநாங்களவர்காணுமெங்கள்குலதெய்வமே. (௧௨)

(இ-ள்.) அடியார்க்கு எளியவர் - தன்னடியவர்க்கு எளிமையராயிருப்பவர், அம்பலவாணர் - பொன்னம்பலத்தில் வாழ்பவர், (அவரது) அடிபணிந்தால் - திருவடியைவணங்கினால், மடியாமல் - இறவாமல், செல்வம் வரம் பெறலாம் - முத்திச்செல்வத்தைப் பெறுதற்குரிய வரத்தை அடையலாம். வையம் ஏழ் அளந்த நெடியோனும் - ஏழுலகங்களையும் அளந்த திரிவிக்கிரமனும், வேதனும் - பிரமனும், காணாத நித்த நிமலன் - பார்த்தறியாத சாசுவதனும் நிர்மலனுமாகிய சிவபெருமானுக்கு, நாங்கள் அருட்குடி - நாங்கள் அருட்குடிகளாவோம், அவர் - அக்கடவுள், எங்கள் குலதெய்வம் - எங்கள் குலத்திற்குத் தெய்வமாவர். எ-று.

(கு-ரை.) அடியார்க்கு எளியவர் அம்பலவாணர் என்பதனை, "காரானை யீருரிவைப்போர்வையானைக் காமருபூங் கச்சியேகம்பன்றன்னை, யாரேனுமடியவர்கட் கணியான்றன்னை யமரர்களுக் கறிவரிய வளவிலானைப், பாரோரும் விண்ணோரும் பணியநட்டம் பயில்கின்ற பரஞ்சுடரைப் பரனை யெண்ணில், பேரானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவா நாளே" என்பதனானுணர்க. அம்பலவாணரது திருவடியை வணங்கினால் முத்தியாகிய செல்வத்தைப் பெறலாம் என்பதனை, "பிறவிதனை யறமாற்றிப் பிணிமூப்பென்றிவை யிரண்டு, முறவினொடு மொழியச் சென்றுலகுடைய வொருமுதலைச், செறிபொழில் சூழ்தில்லை நகர்த்திருச் சிற்றம்பலமன்னி, மறையவரும் வானவரும் வணங்கிட நான்கண்டேனே" என்பதனானுணர்க. தாமரையாகிய திருவடியைத் தேடவேண்டுவது அன்னமும் சடையாகியகாட்டைத் தேடவேண்டுவதுபன்றியுமாதலான். அங்ஙனந் தேடப்புகாது, திருமாலும்பிரமனும்பன்றியு மன்னமுமாக வுருக்கொண்டு மாறுபட்டுப் பன்றிதாமரையும் அன்னம் காடுமாகப்பார்த்து தேடுதலால் கண்டிலர் என்பார், "வையமேழளந்தநெடியோனும் வேதனுங் காணாதநித்த நிமலன்" எனக்கூறினார் இதனை, "கோணாகணையானுங் குளிர்தாமரையானுங், காணார் கழலேத்தக்கனலாயோங்கினான், சேணார்வாழ்தில்லைச் சிற்றம்பலமேத்த, மாணாநோயெல்லாம் வாளாமாயுமே" என்பதனானுணர்க.

எம்குலதெய்வமாகிய நடேசப்பெருமானை வணங்கினால் முத்திச்செல்வத்தை யடையலாம் என்பதாம்.

தெய்வச்சிதம்பரதேவாவுன்சித்தந்திரும்பிவிட்டாற்
பொய்வைத்தசொப்பனமாமன்னர்வாழ்வும்புவியுமெங்கே
மெய்வைத்தசெல்வமெங்கேபண்டலீகர்தம்மேடையெங்கே.
கைவைத்தநாடகசாலையெங்கேயிதுகண்மயக்கே. (கரு)

(இ-ள்.) தெய்வச்சிதம்பரதேவா - தெய்விகமான சிதாகாயத்தில் நடிக்கின்றதேவனே, உன் சித்தம் திரும்பிவிட்டால் - தேவரீரது திருவுள்ளம் மீது பதிந்துவிட்டால், மன்னர்வாழ்வும் - அரசரதுவாழ்வும், பொய்வைத்த - பொய்த்தன்மையுள்ள, சொப்பனம் ஆம்-கனவையொக்கும்; புவியும்-பூமியும், எங்கே - எவ்விடத்தது, மெய்வைத்த செல்வம் எங்கே - மெய்த்தன்மை

யமைத்து வைக்கப்பட்ட செல்வம் எவ்விடத்தது, மண்டலீகர்தம் மேடை எங்கே - மண்டலாதிபதிகளுடைய மேடைஎவ்விடத்தது, கைவைத்த நாடக சாலைஎங்கே - அலங்காரஞ்செய்த நாடகசாலை எவ்விடத்தது, இதுகண்மயக்கே - இதுகண்மயக்கமேயாம். எ-று.

(கு-ரை.) சிவபெருமானது திருவருள் அடியவரிடத்துப் பதிந்துவிடின் யாவும் பொய்யெனத்தோன்று மென்பதை, "இந்திரசாலங் கனவுகானலினீ ரெனவுலக மெமக்குத்தோன்றச், சந்ததமுஞ் சிற்பரத்தா லழியாத தற்பரத்தைச்சார்ந்துவாழ்க, புந்திமகிழுற நாளுந்தடையறவானந்தவெள்ளம் பொலிக வென்றே, வந்தருளுங்குருமௌனிமலர்த்தாளையனுதினமும் வழுத்தல் செய்வாம்" என்பதனாலுணர்க. சித்தம் திரும்பிவிடல்-திருவருள்பதிந்து விடல்.

சிதம்பரமே தவனே! தேவரீரது திருவுள்ளம் பதிந்துவிடின் மெய்யாகக் கருதிய அரசச்செல்வம்முதலியன பொய்யாகத்தோன்றும் என்பதாம்.

உடுப்பானும்பாலனமுண்பானுமுய்வித்தொருவர்தம்மைக்
கெடுப்பானுமேதென்று கேள்விசெய்வானுங்கெதியடங்கக்
கொடுப்பானுந்தேகியென்றேற்பானுமேற்கக்கொடாமனின்று
தடுப்பானுநீயல்லையோ தில்லையானந்தத்தாண்டவனே. (கச)

(இ-ள்.) உடுப்பானும் - ஆடைமுதலியவற்றைத்தரிப்பவனும், பால்அன்னம் உண்பானும்- பாற்சோற்றைப்புசிப்பவனும், ஒருவர்தம்மை உய்வித்து-ஒருவரைவாழ்வித்து, கெடுப்பானும்-(ஒருவனைக்) கெடுப்பவனும், ஏது என்று கேள்வி செய்வானும்- யாதென்று கேட்பவனும், கெதிஅடங்கக் கொடுப்பானும்-வறுமையொழியக்கொடுப்பவனும், தேகிஎன்று ஏற்பானும்- கொடு என்று இரப்பவனும், ஏற்க-அங்ஙனமேற்க, கொடாமல்- (கொடுப்பவரைக்) கொடாதவண்ணம், நின்று தடுப்பானும்-உறுதியாய் நின்று தடுப்பவனும், நீஅல்லையோ- தேவரீரன்றோ, தில்லை ஆனந்தத் தாண்டவனே - திருத்தில்லையின்கண் எழுந்தருளி ஆனந்தநிருத்தஞ்செய்பவனே. எ-று.

(கு-ரை.) உயிர்கடோறும் உடனாயும் உயிராயு முள்ளவராதலின் அவ்வுயிர்கள் உடுத்தலும் உணணலும் நம்செயலேயென்பார், "உடுப்பானும் பாலனமுண்டானும்" எனவும், சாபானுக்கிரகஞ் செய்வதும் நம்செயலே யென்பார், "உய்வித்தொருவர் தம்மைக்கெடுப்பானும்" எனவும், உயிர்கள் படுந்துன்பத்தைக்கண்டுயாதென்றுகேட்கச் செய்வதும் நம்செயலே யென்பார், "ஏதென்று கேள்விசெய்வானும்" எனவும், இரப்பவர்கள் மீட்டுமோரிடத்துச்சென்றுஇரக்காது கொடுக்கச்செய்வதும் நம்செயலேயென்பார், "கெதியடங்கக்கொடுப்பானும்" எனவும், தானீட்டியசெல்வங்களையெல்லாம் தீவினையினாலிழந்து ஒருவன் பாற்சென்றுயாசிக்கும் நிலைமையுண்டாக்குவதும்நம்செயலே யென்பார், "தேகியென்றேற்பானும்" எனவும், அங்ஙனம் ஏற்றும் கொடாமற்செய்வதும் நம்செயலேயென்பார், 'ஏற்கக்கொடாமனின்று தடுப்பானுநீயல்லையோ' எனவுங் கூறினார். யாவும் சிவன் செயலென்பதனை,

"சிவன்செயலாலே யாதும் வருமெனத் தேறேனுரு, மவந்தருளினைவையெல்லாமகற்றிலேனுளைசை வெள்ளங், கவர்ந்துகொண்டிழுப்ப வந்தக்கட்டிலேயகப்பட்டையோ, பவந்தனையிட்டியிட்டிப்பதைக்கின்றேன் பாவியேனே" என்பதனுலுணர்க.

தில்லையில் ஆனந்தத்தாண்டவஞ் செய்பவனே! உயிர்கள் செய்யும் தொழில்களெல்லாந் தேவரீரது தொழிலே என்பதாம்.

> வித்தாரம்பேசினுஞ்சோங்கேறினுங்கம்பமீதிருந்து
> தத்தாவென்றோதிப்பவுரிகொண்டாடினுந்தம்முன்றம்பி
> யொத்தாசைபேசினுமாவதுண்டோதில்லையுண்ணிறைந்த
> கத்தாவின்சொற்படியல்லாதுவேறில்லைகன்மங்களே. (கரு)

(இ-ள்.) வித்தாரம் பேசினும் — விஸ்தாரமாகப் பேசினாலும், சோங்கு ஏறினும் - மரக்கலமேறிப்போனாலும், கம்பம் மீதுஇருந்து - கம்பத்தின் மீதேறியிருந்து, தத்தா என்று ஓதி - தத்தாவென்றுசொல்லி, பவுரிகொண்டாடினும் - பவுரிக்கூத்தாடினாலும், தம்முன் - தமையனும், தம்பி - தம்பியும் ஒத்தாசைபேசினும் - உதவியாகப் பேசினாலும், ஆவது உண்டோ - ஆவதொருகாரிய முண்டோ, தில்லையுள்நிறைந்த - தில்லையிலிருந்தாலும் சர்வவியாபகனுய் எவ்விடமும் நிறைந்திருக்கின்ற கத்தாவின் சொற்படி அல்லது-கர்த்தனது சொற்படியேயல்லாமல், கன்மங்கள் வேறுஇல்லை - உலகத்தில் நிகழுந்தொழில்கள் வேறில்லையாம். எ-று.

(கு-ரை.) பிறர்மயங்கும்படி அணிமா முதலிய அட்டமாசித்திகளையுடையேனென்று விரிவாகப் பேசினாலும் யாதொருபயனுமில்லை என்பார் "வித்தாரம் பேசினும்" என்றும், ஆகூழில்லையாயின் மரக்கலமேறிப் பொருள் தேடமுயன்றாலும் சிறிதும் கைகூடாதென்பார், "சோங்கேறினும்" என்றும், மூங்கிலின் மீதிருந்து கழைக்கூத்தாடினும் அடைவதொரு பயனுமில்லை என்பார், "கம்பமீதிருந்து தத்தாவென்றோதிப் பவுரிகொண்டாடினும்" என்றும், தனக்குத் துணையாகத் தமையனும் தம்பியுமாகப் பேசினாலும் யாதொருகாரியமுமாகாதென்பார், "தம்முன்றம்பி யொத்தாசைபேசினு மாவதுண்டோ" என்றும், உலகத்தில் நிகழுந்தொழில்களெல்லாம் சிவபெருமானது சொற்படியன்றி நிகழாதென்பார், "தில்லையுண்ணிறைந்த கத்தாவின் சொற்படியல்லாதுவேறில்லைகன்மங்களே" என்றுங்கூறினர்: வித்தாரம்பேசுதலை, "மட்டறு கடற்புவியனைத்துமொ ரிமைப்பினின் மறைத்துடன் விடுத்திடுவன்மற் றெட்டுவரையக்கடலை முட்டியுளடக் கிடுவன்" என்பதனுலுணர்க.

திருத்தில்லையின்கணுள்ள சிவபெருமானது சொற்படியன்றி ஓர்காரியமும் நடவாதென்பதாம்.

> பிறவாதிருக்கவரம்பெறல்வேண்டும்பிறந்துவிட்டா
> லிறவாதிருக்கமருந்துண்டுகாணிதுவெப்படியோ

றமார்புகழ்த்தில்லையம்பலவாணரடிக்கமல
மறவாதிருமனமேயதுகாணன்மருந்துனக்கே. (கசு)

(இ-ள்.) மனமே - நெஞ்சே, பிறவாதிருக்கவரம்பெறல்வேண்டும்-(இவ்வுலகத்தில்) பிறவாதிருக்கும்படி வரம்பெறுதலே தகுதி, பிறந்துவிட்டால் இறவாதிருக்க மருந்து உண்டு - பிறந்துவிடின் இறவாமலிருக்கும்படி மருந்துளது, இது எப்படியோ - இதுஎப்படி என்றாலோ, அறம் ஆர் புகழ்தில்லையம்பலவாணர் - தருமமார்க்கம் நிறைந்திருக்கின்ற புகழையுடைய தில்லையம்பலவாணரது, அடிக்கமலம் மறவாதுஇரு - திருவடியாகிய தாமரையை மறவாமலிரு, அது உனக்கு நல் மருந்து - (அவ்வாறு) மறவாதிருத்தலே உனக்குச் சாகாமைக்கேதுவாகிய நல்ல மருந்தாகும். எ - று.

(த-ரை.) "இப்பிறவியென்னுமோரிருட்கடலின் மூழ்கிநானென்னுமொருமகரவாய்ப்பட்டிருவினை யெனுந்திரையி னெற்றுண்டுபுற்புதமெனக் கொங்கைவரிசைகாட்டுந்துப்பிதழ் மடந்தையர் மயற்கொண்ட மாருதச் சுழல்வந்துவந்தடிப்பச் சோராதவாசையாங்காறு வானதிரந்த தெனமேலுமார்ப்பக், கைப்பரிசுகாரர்போ லறிவானவங்கமுங்கைவிட்டு மதிமயங்கிக்கள்ள வங்கக்காலர் வருவரென்றஞ்சியே கண்ணருவி காட்டுமெளியேன்" எனவும், "காகமோடுகழுகலகைநாய் நரிகள் சுற்றுசோறிடுதுருத்தியைக் காலிரண்டு நவவாசல் பெற்றுவளர் காமவேணடனசாலையை, மோகவாசை முறியிட்ட பெட்டியையுமல மிகுந்தொழுகு கேணியை மொய்த்து வெங்கிருமிதத்து கும்பியைமுடங்கலார்கிடை சரக்கினை, மாகவிந்திரதனு மின்னை யொத்திலகவேதமோதிய குலாலனார் வனைய வெய்யதடி காரனையமன் வந்தடிக்குமொருமட்கலத், தேகமானபொயை மெய்யெனக்கருதியையவைய மிசைவாடவோ" எனவும், 'ஊன்மிசையுதிரக்குட்டைபையொருப்பொருளிலாதபாய, மான்மறித்தனையகோக்க மடந்தைமார் மதிக்குமிந்த, மானிடப்பிறவிவாழ்வு வாழ்வதோர்வாழ்வுவேண்டேன், ஞானவெள்ளேற்ற வாரூரப்பனேயஞ்சினேனே' எனவும் ஆன்றோர் கூறியபடி பிறவி யெடுக்குந்தோறும் துன்பமும் பலவுளவாதலின் அப்பிறவியெடுக்காமலிருக்கக் கருணைபுரியவேண்டுமென்பார் "பிறவாதிருக்கவரம்பெறல்வேண்டும்" என்றும், "காரணங்களெல்லாங் கடந்துநின்றகறைமிடற்றன், சரணங்களே சென்று சார்தலுமே தானெனக்கு, மரணம் பிறப்பென்றிவை யிரண்டின் மயக்கறுத்த, கருணைக்கடலுக்கே சென்றூதாய்கோத்தும்பி" என்றபடி, பிறவியெடுத்தபின் அப்பிறவியைப்போக்கிக் கொள்வதற்குத், தேவரீரது திருவடிமருந்தன்றி வேறில்லையென்பார் "தில்லையம்பலவாணரடிக்கமலம்மறவாதிரு........நன்மருந்துனக்கே" என்றுங்கூறினார், அம்பலவாணரது திருவடியை நினைப்பவர்கட்குப் பிறப்பொழியும் என்பதை, "முன்னைவினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான் பின்னைப்பிறப்பறுக்கும் பேராளன்—றென்னன, பெருந்துறையின்மேய பெருங்கருணையாளன், வருந்துயரந்தீர்க்கு மருந்து" எனவும் "சுறங்கோலைபோல்வதோர்காயப்

பிறப்போறப்பென்னுமறம்பாவமென்றிரண்டச் சந்தவிர்த்தென்னை யாண்டு கொண்டான்.மறந்தேயுந்தன் கழலென் மறவாவண்ணநல்கிவத், திறம்பாடல் பாடி நாந்தெள்ளேணங்கொட்டாமோ" எனவுங்கூறியவற்றா லுணர்க.

தில்லையம்பலவாணரது திருவடியை நினைத்தல் முத்திக்குக்காரணமாகி யமருந்தாகும் என்பதாம்.

தவியாதிருநெஞ்சமேதில்லைமேவியசங்கரனைப்
புவியார்ந்திருக்கின்றஞானாகரனைப்புராந்தகனை
யவியாவிளக்கைப்பொன்னம்பலத்தாடியையைந்தெழுத்தாற்
செவியாமனீசெவித்தாற்பிறவாமுத்திசித்திக்குமே. (௧௭)

(இ-ள்.) நெஞ்சமே - மனமே!, தவியாது இரு - இளைக்காமலிரு, தில்லைமேவியசங்கரனை - திருத்தில்லையின்கண் எழுந்தருளிய சிவபெருமானை, புவி ஆர்ந்து இருக்கின்ற ஞானாகரனை – உலகமுழுமையும் நிறைந்திருக்கின்ற ஞானத்துக்குப் பிறப்பிடமாயிருப்பவனை, புராந்தகனை - திரிபுராந்தகனை, அவியா விளக்கை - அவியாததீபத்தை, பொன் அம்பலத்து ஆடியை - பொற்சபையில் நடிப்பவனை, ஐந்துஎழுத்தால் - ஸ்ரீபஞ்சாட்சரத்தைக்கொண்டு, செவியாமல் நீசெவித்தால் - நீசெபிக்காமல் செபித்தால் பிறவாமுத்தி சித்திக்கும் - பிறவாமைக்குக் காரணமாகிய முத்தியுண்டாகும். எ-று.

(கு-ரை.) மனம் ஒருவழிநில்லாது பலவழியிற்சென்று இளைக்குமாதலின் அதனைநோக்கி யொருவழிநிற்க வேண்டுமென்பார், "தவியாதிரு நெஞ்சமே" எனவும், ஆன்மாக்களுய்யவும் பஞ்சகிருத்திய நடனஞ்செய்யவும் தில்லையின்கண் எழுந்தருளியிருப்போனாதலின், "தில்லைமேவிய சங்கரனை" எனவும், உலகமெங்கு நிறைந்திருப்போனும் ஞானமேதிருமேனியாக வுடையவனுமாதலின், "புவியார்ந்திருக்கின்ற ஞானாகரனை" எனவும், தேவர்களைக்காக்கும் பொருட்டுத் திரிபுரத்தையெரித்தோனாதலின், "புராந்தகனை" எனவும், அகத்திற்கொளுத்துந் தகளிநெய்திரியோடு கூடிய விளக்குப்போலாது உலகத்கோர் தூண்டாவிளக்காயுள்ளானாதலின், "அவியாவிளக்கை" எனவும், திருநடனஞ்செய்தற்குப் பொன்னம்பலமேயிடமாகக் கொண்டுள்ளானென்பார் "பொன்னம்பலத்தாடியை" எனவும், நியமமுதலியயோகங்களைச்செய்யாது ஸ்ரீபஞ்சாட்சரத்தை யிடைவிடாமற் செபித்தலே முத்தியைத்தரும் என்பார், ஐந்தெழுத்தாற் செவித்தார் பிறவா முத்திசித்திக்குமே" எனவும் கூறினார். மனம் ஒருவழிநில்லாதென்பதனை, "காடுங்கரையு மனக்குரங்கு கால்விட்டோட வதன்பிறகே, யோடுந்தொழிலாற் பயனுளதோ" என்பதனாலுணர்க. சிவபெருமானுலகமெங்குநிறைந்திருத்தலை."வானாதி பூதமாயகிலாண்ட கோடியாய் மலையாகி வளைகடலுமாய், மதியாகிரவியாய் மற்றுளவெலாமாகி" என்பதனாலுணர்க.

பொன்னம்பலத்தில் நடிப்பவராகிய சிவபெருமானை ஸ்ரீ பஞ்சாட்சரத்தால் இடைவிடாமல் செபித்தால் முத்தியடையலாம் என்பதாம்.

நாலின்மறைப்பொருளம்பலவாணரைநம்பியவர்
பாலிலொருதரஞ்சேவிக்கொணுதிருப்பார்க்கருங்கல்

மேலிலெடுத்தவர்கைவிலங்கைத்தைப்பர்மீண்டுமொரு
காலினிறுத்துவர்கிட்டியுந்தாம்வந்துகட்டுவரே. (௧௮)

(இ-ள்.) நாலின்மறைப்பொருள் அம்பலவாணரை நம்பி - நான்குவே தங்களின் பொருளாயுள்ள அம்பலவாணரை யுறுதியாக எண்ணி, அவர் பாவில் - அவர்பக்கத்தில் ஒருதரம் சேவிக்கொணுதிருப்பார் - ஒருதடவைத் தரிசிக்கப்பெறாதவர்களை, (யமபடர்) கருங்கல்மேலில் எடுத்து - கருங்கல்லினை (உடல்)மீதில்எற்றி அவர்கை விலங்கைத்தைப்பர் - அவர்கையில் விலங்கைப் பூட்டுவர், மீண்டும் - மீளவும், ஒருகாலில் நிறுத்துவர் - ஒருகாலாலே நிற்கச் செய்வர், தாம் வந்து கிட்டியும் கட்டுவர் - தாம் நெருங்கியும் வந்துகட்டுவர். எ-று.

(கு-ரை.) "அரியானையந்தணர் தஞ்சிந்தையானையருமறையினகத்தானை" என்றபடி வேதப்பொருளாயிருப்பினும் அடியவர்கள் எளிதிற்றரிசித்து உய்யும்படி அம்பலத்தின்கண் எழுந்தருளியிருக்கின்றார் என்பார், "நாலின்மறைப்பொருளம்பலவாணரை" எனவும், செல்வழியாதொரு துன்பமுமடையாது எளிதிற்சென்று தரிசிக்கும் மன்றினைத் தரிசித்தால்முத்திப்பேற்றினையடையலாமென்பதனைக் கருதாதார்க்கு யமதண்டனையன்றி வேறில்லை யென்பார், "நம்பியவர் பாவிலொருதரஞ் சேவிக்கொணு திருப்பார்க்கருங்கல்மேலெடுத்தவர்...வந்துகட்டுவரே" எனவுங்கூறினார். தம்மைத்தரிசித்ததொண்டர்கட்கு யமதண்டனை நேரிடாதென்பதனை "மடித்தாடு மடிமைக்கணன்றியே மனனே நீவாழுநாளுந், தடித்தாட்டித் தருமனார் தமர் செக்கிலிடும்போது தடுத்தாட்கொள்வான், தடித்தாடுங் கரதலத்திற் றமாகமுமெரியகலுங் கரியபாம்பும், பிடித்தாடிப் புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப் பெற்றாமன்றே" எனவும் "கருமைபார் தருமனார் தமர் நம்மைக் கட்டியகட்டறுப்பிப்பானை" எனவும் பெரியோரும் பணித்தவற்றானுணர்க.

அம்பலவாணரைச் சேவிக்காதிருப்பாரை யமபடர் விலங்குபூட்டுதல் ஒருகாலில் நிறுத்துதல் முதலிய கொடியசெய்கைகளைச்செய்வார் என்பதாம்.

ஆற்றோடுதும்பையணிந்தாடுமம்பலவாணர்தமைப்
போற்றாதவர்க்கடையாளமுண்டேயிந்தப்பூதலத்திற்
சோற்றாசைபற்றுச்சுகமற்றுச்சுற்றத்துணியுமற்றே
யேற்றாலும்பிச்சைகிடையாமலேக்கற்றிருப்பர்களே. (௧௯)

(இ-ள்.) ஆற்றோடுதும்பை அணிந்து - கங்கைநதியோடு தும்பைமலரையுந் தரித்து, ஆடும் அம்பலவாணர் தம்மை - நிருத்தஞ்செய்கின்ற அம்பலவாணரை, போற்றாதவர்க்கு அடையாளம் உண்டு - துதியாதவர்க்கு அடையாளமுளது, (யாதெனில்) இந்தப்பூதலத்தில்-இப்பூமியில், சோறுஆவிஅற்று-சோற்றுவாசனையொழிந்து, சுகம் அற்று - சுகமொழிந்து, சுற்றத்துணியும் அற்று - (அரையில்) உடுக்க ஆடையுமொழிந்து, ஏற்றாலும் பிச்சைக்கிடையாமல் - யாசித்தாலும் பிச்சையகப்படாமல், ஏக்கற்றிருப்பர்கள் - ஏக்க மடைந்திருப்பார்கள். எ-று.

(கு-ரை.) ஒருகாலத்துக்கைலைமலையின்சோலையில் உமாதேவியார்சிவபெருமானது இரண்டுகண்களையும் மூடினமாத்திரத்தில் புவனம்யாவும் இருள்பரந்தது. அதனைக்கண்டு சிவபெருமான்தமது நெற்றிக்கண்ணாலே அவ்விருளை யொழித்துச்சிறந்த பேரொளியையீந்தனர். அவ்வொளியைக்கண்ணுற்றஉமாதேவியாரச்சமெய்தி மூடியகையை விரைவாகவெடுத்தமாத்திரத்தில் அவ்விரல்களினின்றும் பத்துநதிகளாய்த்தோன்றிய வெள்ளம் உலகமழியப் பரவலும், அவ்வெள்ளத்தைக்கண்ணுற்ற திருமால்முதலியோர் சிவபெருமானைச்சரணமடைய, அப்பெருமான் அவர்களைக்காக்கும்பொருட்டு அவ்வெள்ளத்தையும், "செங்களத்து மறங்கருதிப், பைந்தும்பைதலைமலைந்தன்று" என்றபடி, திரிபுரமழிக்கவும், காலனையுதைக்கவும், வில்விசையனோடுபோர் புரியவும் தும்பமாலையினையும் தரித்தமையால், "ஆற்றோடுதும்பையணிந்தாடு மம்பலவாணர்" எனவும், அவரைத்துதியாதார் ஆகூழிருந்தும் உணவொதிகள ற்றிருப்பார்என்பார், "தம்மைப்போற்றாதவர்..............எக்கற்றிரப்பர்களே" எனவும்கூறினார். கங்கையணிந்ததை:—"என்றலுநதிகடோற்றமியம்பியெவ் வுலகுஞ் சூழ்போய், நின்றவந்நீத்தந்தன்னை நினைத்தவணழைத்து நாத, ஞென்றுதன் வேணிமேலோருரோமத்தினும்பருய்ப்ப, மன்றலங்கமலத்தோனுமாலு மிந்திரனுஞ்சொல்வார்." என்பதனாலறிக. போர்க்குரியோர் தும்பை சூடுவதை, "கார்கருதி நின்றதிருங்செளவை வழுப்பணையான், சோர்குருதி சூழநிலநனைப்பப்-போர்கருதித், துப்புடைத்தும்பை மலைந்தான் துகளறுசீர், வெப்புடைத்தானையெம் வேந்து" என்பதனாலறிக. அம்பலவாணரைத்துதியாதார்சோறும் சுகமும் உடுக்கவாடையுமற்று வாழ்வார்என்பதாம்.

> அத்தனைமுப்பத்துமுக்கோடிதேவர்க்கதிபதியை
> நித்தனையம்மைசிவகாமசுந்தரிநேசனையெங்
> கத்தனைப்பொன்னம்பலத்தாடுமையனைக்காணக்கண்க
> ளெத்தனைகோடியுகமோதவஞ்செய்திருக்கின்றவே. (௨௦)

(இ-ள்) அத்தனை- யாவர்க்கும் தந்தையை, முப்பத்துமுக்கோடிதேவர்க்கு அதிபதியை, முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் அதிபதியாயுள்ளவனை, நித்தனை- சாசுவதனை, அம்மைசிவகாமசுந்தரி நேசனை- எமதுதாயாகிய சிவகாமசுந்தரிக்கு நேசனை, எம்கத்தனை- எமதுகர்த்தனை, பொன் அம்பலத்து ஆடும் ஐயனை- பொற்சபையின்கண் திருத்தஞ்செய்கின்றதலைவனை, காண- தரிசிக்கும் பொருட்டு, கண்கள்- விழிகள், எத்தனைகோடியுகமோ-எவ்வளவுகோடியுகங்களோ, தவம்செய்திருக்கின்றன- தவத்தைச்செய்திருக்கின்றன. எ-று.

(கு-ரை) திருமால்முதலியயாவரையும்பெற்றுஅவர்க்குப்பிதாவாயிருத்தலின், "அத்தனை" எனவும், தன்னைமுப்பத்து முக்கோடிதேவர்கள் வழிபட்டு உய்ந்தமையின், "முப்பத்துமுக்கோடிதேவர்க்கதிபதியை" எனவும், சர்வசங்காரகாலத்தில் யாவரும் அழிந்துந்தான்மாத்திரம் அழியாது நிற்றலால், "நித்தனை" எனவும், தன்னைநீங்காதிருந்து சபாசங்களைப்பெற்றுத்தன் நடனத்தை

க்கண்டுகளிப்பவளாதலின், "அம்மைசிவகாம சுந்தரிநேசனை" எனவும், திருமால் முதலியோரை யாட்கொண்டதுபோலத் தன்னையும் ஆட்கொண்டமையின், "எம்கத்தனை" எனவும், வெள்ளியம்பலமுதலிய அம்பலமிருப்பினும் அவற்றைவிரும்பாது இதனையேவிரும்பியாடுகின்றார் என்பார், "பொன்னம்லத்தாடுமையனை" எனவும், கண்கள் அந்நடத்தைக் காணமுன் தவஞ்செய்திருக்கின்றமையின், "காணக்கண்களெத்தனை கோடியுகமோதவஞ்செய்திருக்கின்றவே" எனவுங்கூறினார். பொன்னம்பலத்தில் நிருத்தஞ்செய்யும் நடேசப்பெருமானைத் தரிசிக்கக் கண்கள் எத்தனை கோடியுகமோ தவஞ்செய்திருக்கின்றன என்பதாம்.

திருச்செங்காடு.

நெருப்பானமேனியர்செங்காட்டிலாத்திநிழலருகே
யிருப்பார்திருவுளமெப்படியோவின்னமென்னையன்னைக்
கருப்பாசயக்குழிக்கேதள்ளுமோகண்ணன்காணரிய
திருப்பாதமேதருமோதெரியாதுசிவன்செயலே. (க)

(இ-ள்.) நெருப்பானமேனியர்- தீப்போலுந்திருமேனியுடையவர், செங்காட்டில்ஆத்திநிழலருகேஇருப்பார்-திருச்செங்காட்டில்ஆத்திமரத்தினிழலில் வீற்றிருப்பவர், [அவரது] திருவுளம் எப்படியோ- திருவுளப்பாங்கு எவ்வாறுளதோ, இன்னம் - இன்னமும், என்னை - அடியேனை, அன்னைக்கருப்பாசயக்குழிக்கே தள்ளுமோ- தாயினது கருப்பாசயக்குழியின்கண்ணே கொண்டுபோய் வீழ்த்துமோ, (அல்லது) கண்ணன்காணரிய - திருமால்காணுதற்கரிய திருப்பாதமேதருமோ - தன்திருவடிகளைக் கொடுக்குமோ, சிவன்செயல் தெரியாது - சிவபெருமானதுசெய்கை இன்னதென்றுதெரியாது. எ-று.

(கு-ரை.) சிவபெருமான் பவளம்போலுஞ் செந்நிறம்வாய்ந்த திருமேனியுடையவராதலின், "நெருப்பானமேனியர்" எனவும், அவர்திருச்செங்காட்டில்ஆத்திவிருட்சத்தையேயிடமாகக்கொண்டிருப்போராதலின், "செங்காட்டிலாத்திநிழலருகேயிருப்பார்" எனவும், தம்மிடத்துஅன்புசெய்வாருடையமனத்திற்குத்தக்கபடிதாமும்மனமுடைமையின், "திருவுளமெப்படியோ" எனவும் பல்பிறவி யெடுத்துப் பையுளடைந்துள்ளேனையீட்டுங் கருப்பக்குழியிற்றள்ளுமோ அல்லது திருமால்முதலியோர்காண்டற்கரியதிருவடிதந்து ஆட்கொள்ளுமோ அவற்றுள்சிவன் செயல்யாதென்று தேறுகிலேன் என்பார், "இன்னமென்னையன்னை... தெரியாது சிவன்செயலே" எனவுங்கூறினார்.

தீப்போலுந் திருமேனி யுடையவரும், திருச்செங்காட்டில் ஆத்திமரத்தினிழலில் வீற்றிருப்பவருமாகிய சிவபெருமானது திருவுளப்பாங்கு எவ்வாறுளதோ, இன்னமும் அடியேனைத்தாயினது கருப்பாசயக்குழியின்கண்ணேகொண்டுபோய் வீழ்த்துமோ அல்லது திருமால் காணுதற்கருமையாகிய தன்திருவடிகளைக்கொடுக்குமோ (ஆதலால்) அவரதுசெயல்இன்னதென்றுதெரியாது என்பதாம்.

திருவொற்றியூர்.

ஐயுந்தொடர்ந்துவிழியுஞ்செருகியறிவழிந்து
மெய்யும்பொய்யாகிவிடுகின்றபோதொன்றுவேண்டுவல்யான்
செய்யுந்திருவொற்றியூருடையீர்திருநீறுமிட்டுக்
கையுந்தொழப்பண்ணியைந்தெழுத்தோதவுங்கற்பியுமே. (௧)

(இ-ள்.) ஐயும்தொடர்ந்து - கோழையும் தொடர்ந்து, விழியும்செருகி-கண்களும்பஞ்சடைந்து, அறிவு அழிந்து-உணர்வுகெட்டு, மெய்யும்பொய்யாகிவிடுகின்றபோது - சரீரமும் பொய்யாகிவிடுங்காலத்து, யான்ஒன்றுவேண்டுவல் - அடியேன்ஒன்றைவிரும்புகின்றேன், (யாதெனில்) செய்யும்திருவொற்றியூருடையீர் - (அலங்காரங்கள்) செய்தமைந்த திருவொற்றியூருடையீரே, திருநீறும் இட்டு - விபூதியினையும் தரித்து, கையும்தொழப்பண்ணி - கைகளால் அஞ்சலிசெய்யவும் செய்து, ஐந்துஎழுத்து ஓதவும் கற்பியும் - ஸ்ரீபஞ்சாக்ஷரத்தையுச்சரிக்கவும் கற்பித்தருள்வீராக. எ-று.

(கு-ரை.) மரணகாலத்தில்வாதபித்தசிலேத்துமமென்னுமூன்றுள்ஒன்றினின்றுமொன்று அதிகரித்துமுடிவில்சிலேத்துமசம்பந்தமாகிய கோழையொன்றேபற்றிநிற்குமாதலின், ''ஐயுந்தொடர்ந்து''எனவும்,இறக்குஞ்சமயத்துக்கண்கள் ஒளிமழுங்கிக் கருமணிப்பாவையுடைந்து செருகுமாதலின், ''விழியுஞ்செருகி'' எனவும், அக்காலத்தில் மெய்யுணர்வு அழியுமாதலின், ''அறிவழிந்து'' எனவும்,மெய்யெனப்பெயர்வாய்ந்ததற்கேற்ப நிலைபெற்றிராதுஒருகணப்பொழுதிற் றோன்றியழியுந்தன்மை யுடைமையால், ''மெய்யும்பொய்யாகிவிடுகின்றபோது'' எனவும்,அப்போதுயான்விரும்புவது பலவாதலின் அங்ஙனம்விரும்பாது ஒன்றையே விரும்பவேண்டுமென்பார், ''ஒன்றுவேண்டுவல்யான்'' எனவும், முத்திக்கேதுவாகிய திருநீறுபூசுதல் தேவரீரைப்பணிதல் பஞ்சாக்ஷரத்தை யுச்சரித்தல் முதலியசெயல்களைத் தேவரீர் கற்பித்தருளவேண்டுமென்பார், ''செய்யுந்திருவொற்றியூருடையீர்...... ஐந்தெழுத்தோதவுங்கற்பியுமே'' எனவுங்கூறினர்.

அலங்காரங்கள் செய்தமைந்த திருவொற்றியூருடையீரே! கோழையுந்தொடர்ந்து கண்களும் பஞ்சடைந்து அறிவுகெட்டுத் தேகமும்பொய்யாகிவிடுங்காலத்தில் அடியேன் ஒன்றை விரும்புகின்றேன், யாதெனில்விபூதியினையும்தரித்து, கைகளால் அஞ்சலிசெய்யவும் செய்து ஸ்ரீபஞ்சாக்ஷரத்தையுச்சரிக்கவும் கற்பித்தருள்வீராக என்பதாம்.

சுடப்படுவாரறியார்புரமூன்றையுஞ்சுட்டபிரான்
றிடப்படுமாமதிற்றென்னொற்றியூரன்றெருப்பரப்பி
னடப்பவர்பொற்பதநந்தலைமேற்படநன்குருண்டு
கிடப்பதுகாண்மனமேவிதியேட்டைக்கிழிப்பதுவே. (௨)

(இ-ள்) மனமே - மனதே, புரமூன்றையும் சுட்டபிரான் - முப்புரங்களையும் எரித்தபெருமானும், திடப்படுமாமதில் தென்ஒற்றியூரன் - உறுதிப்பட்ட பெரியமதில்சூழ்ந்த தென்னொற்றியூரின் கண்ணெழுந்தருளினவனுமாகிய சிவபெருமானது, தெருப்பரப்பில் நடப்பவர் - வீதிப்பரப்பில் நடப்பவரது, பொன்பதம் - திருவடிகள், நம்தலைமேல்பட - நமதுதலையின்மீது பொருந்தும்படி, நன்குஉருண்டுகிடப்பது-நன்றாயுருண்டுகிடத்தலே, விதிஎட்டைக்கிழிப்பது - பிரமனதுஎட்டைக்கிழித்தலாகும், (இதனை) சுடப்படுவார் அறியார் - (இறந்து சுற்றத்தாரால்) சுடப்படுவோராகிய அஞ்ஞானிகள் தெரியார்கள். எ-று.

(கு-ரை) இறந்து உறவினராலே தூலதேகத்தைச் சுடப்படுவோராகிய அஞ்ஞானிகளுக்கு உண்மை விளங்காதென்பார், "சுடப்படுவாரறியார்" எனவும், பாதலத்தும் பூதலத்தும் மீதலத்துந் திரியும் இரும்பும் வெள்ளியும் பொன்னுமாகிய சாதிவேறுபாடுடைய புரமூன்றையும் ஒருங்கேயழித்துத் தேவர்களைக் காத்தமையின், "புரமூன்றையுஞ் சுட்டபிரான்" எனவும், பகைவரையழிக்கப் புகுவார் முன்னர் மதிலினைவகுத்து அதன்கணிழிந்தே அப்பகைவரை வெல்லுதலியல்பாதலின், "திடப்படுமாமதிற்றென்னொற்றியூரன்" எனவும், பிறவியை யொழித்துக் கொள்வதோருபாயந்தேடாமலே திருவொற்றியூரின்கண்நடப்பவரது பாதம் நந்தலையிற்படின் எளிதிற் பிறவியை யொழித்துக்கொள்ளலாமென்பார், "தெருப்பரப்பில் நடப்பவர் ......விதியேட்டைக்கிழிப்பதுவே" எனவுங்கூறினார். தென்ஒற்றியூர்- அழகிய ஒற்றியூர், அல்லது தெற்குத்திக்கின் கண்ணுள்ள ஒற்றியூர். விதி-பிரமன். பொற்பாதம்-அழகியபாதம்எனவும், பொன்போலும் அருமையானபாதம்எனவுமாம். காண்-அசை. திருவொற்றியூர்த்தெருவில் நடப்பவரது பொன்னடிகள்நமது, தலைமேற்படின்பிரமனெழுத்தை அழிக்கலாமென்க.

மனமே! முப்புரங்களையும் எரித்தபெருமானும், உறுதிப்பட்டபெரியமதில் சூழ்ந்த அழகிய ஒற்றியூரின் கண்ணெழுந்தருளினவனுமாகியசிவபெருமானது வீதிப்பரப்பில் நடப்பவரது திருவடிகள் நமது தலையின் மீது பொருந்தும்படி நன்றாயுருண்டு கிடத்தலே பிரமனது எட்டைக்கிழித்தலாகும். இதனை இறந்து சுற்றத்தாரால்சுடப்படுவோராகிய அஞ்ஞானிகள்தெரியார்கள் என்பதாம்.

திருவிடைமருதூர்.

காடேதிரிந்தென்னகாற்றேபுசித்தென்னகந்தைசுற்றி
யோடேயெடுத்தென்னவுள்ளன்பிலாதவரோங்குவிண்ணோர்
நாடேயிடைமருதீசர்க்குமெய்யன்பர்நாரியர்பால்
வீடேயிருப்பினுமெய்ஞ்ஞானவீட்டின்பமேவுவரே. (க)

(இ-ள்.) உள் அன்பு இல்லாதவர் - மனத்தின்கண் அன்பில்லாதவர்கள், காடே திரிந்து என்ன - காட்டிலே திரிந்தால் யாதுபயன், காற்றே புசித்து என்ன-வாயு பக்ஷணஞ்செய்தால் யாதுபயன், கந்தைசுற்றி-கந்தைத்துணியை

யரையிற் சுற்றி, ஓடெடுத்தென்ன - ஓட்டையேகையிலேந்தினல்யாதுபயன் ஓங்குவிண்ணோர் நாடு எய் - உயர்ந்ததேவருலகத்தை நிகர்த்த, இடைமருதுஈசர்க்கு - திருவிடைமருதூர்ச் சிவபெருமானுக்கு, மெய் அன்பர் - உண்மையன்பராயினோர், நாரியர்பால் வீட்டேயிருப்பினும் - மாதரிடத்து இல்வாழ்க்கைக்கண்ணே யிருந்தாலும், மெய்ஞ்ஞான வீடு இன்பம் மேவுவர் - மெய்ஞ்ஞானத்தால் அடைதற்குறிய மோக்ஷசுகத்தைப் பொருந்துவார்கள். எ-று.

(கு-ரை) திருவிடை மருதூரின்கண் எழுந்தருளிய சிவபெருமானைக் குறித்து உள்ளன்பில்லாதவர் வனத்திற் சென்று நீரின் மூழ்கினும், பஞ்சாக்கினி மத்தியிற் றவஞ்செய்யினும், வாயுவினையே உணவாகக் கொண்டு புசிக்கினும், மரவுரி முதலியவற்றை நீக்கிக் கந்தைத்துணியை யரையிற்றரிக்கினும், கமண்டலமுதலிய வற்றையொழித்து மட்பாத்திரத்தையேகையிலெடுக்கினும்யாதொருபயனுமில்லையென்பார், "காடே திரிந்தென்ன........ உள்ளன்பிலாதவர்" எனவும், மருதீசரிடத்து உண்மையன்புடையவர்பெண்களோடு கூடிச்சிற்றின்பநுகரினும் மறுமையில் இருளிற் புகாது நிரதிசயானந்தத்தையேயடைவர் என்பார், "இடை மருதீசர்க்கு மெய்யன்பர்........... வீட்டின்பமேவுவரே" எனவும் கூறினார் இதனை "உள்ளேயிருந்துந்தம் முள்ளமறப்பெற்றாரேற், கள்ளவிழ் சோலையாங் காட்டுளார்—காட்டுள்ளும், உள்ளமறப்பெறு கல்லாரே னாட்டுள்ளும், நண்ணி நடுவூருளார்" எனவருஞ் செய்யாளாலுணர்க.

மனத்தின்கண் அன்பில்லாதவர்கள் காட்டிலே திரிந்தால் என்னபிரயோசனம். கந்தைத்துணியை யரையிற் சுற்றி யோட்டையே கையிலேந்தினல் என்னபிரயோஜனம், உயர்ந்த தேவருலகத்தை நிகர்த்த திருவிடைமருதூர்ச்சிவபெருமானுக்கு மெய்யன்பராயினோர் மாதரிடத்து இல்வாழ்க்கைக்கண்ணே யிருந்தாலும் மெய்ஞ்ஞானத்தாலடைதற்குரிய மோக்ஷசுகத்தைப்பொருந்துவார்கள் என்பதாம்.

தாயும்பகைகொண்டபெண்டிர்பெரும்பகைதன்னுடைய
சேயும்பகையுறவோரும்பகையிச்செகமும்பகை
யாயும்பொழுதிலருஞ்செல்வநீங்கிலிங்காதலினற்
றோயுநெஞ்சேமருதீசர்பொற்பாதஞ்சுதந்திரமே. (உ)

(இ-ள்.) தோயும்நெஞ்சே - என்னோடு ஒற்றுமையாகப் பொருந்தியமனமே, இங்கு அரும் செல்வம் நீங்கில் - இவ்வுலகத்தில் அருமையாகிய செல்வம் நீங்கிவிட்டால், தாயும்பகை - பெற்றதாயும்பகையாவள், கொண்டபெண்டிர் பெரும்பகை - கொண்டமனைவியரும் பெரும்பகைவராவர், தன்னுடைய சேயும்பகை - தன்னுடைய பிள்ளையும் பகையாவன், உறவோரும்பகை சுற்றத்தாரும் பகையாவர், இச்செகமும்பகை - இவ்வுலகமும் பகையாகும், ஆதலினல் - ஆகையால், மருதீசர் பொற்பாதம் - மருதீசரது பொன்னடிகளே, சுதந்திரம் - நமக்குச்சுதந்திரப்பொருள் ஆகும். எ-று.

(கு-ரை.) "இல்லாரை யெல்லாரு மெள்ளுவர்செல்வரை, யெல்லாருஞ் செய்வர்சிறப்பு" என்றபடிஎல்லார்க்கும் எஞ்ஞான்றும்இன்றியமையாததாயஅ

ரும்பொருளைப்பெறுதாளைப்பத்துத்திங்கட்சுமந்துபெற்றதாயும்அவனால்தனக்குயாதொரு பயனுமின்மையின் இகழுமாதலின், "தாயும்பகை" எனவும் "தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யுமழை" என்றபடி கற்புடையவளாயினும் நாயகன் செல்வமுடையவனல்லனாயின் நுகரவேண்டுவனவற்றை நுகருதற்கியலாமையாலவனைபால் ஒருகணப்பொழுதாயினும் பகைகொள்ளுமாதலின், "கொண்டபெண்டிரும்பகை" எனவும்' "தந்தைமகற்காற்று நன்றியவையத்து, முந்தியிருப்பச்செயல்" என்றபடி தன்தந்தை தன்னை யின்பத்தையே பயக்கும் கல்வியுடையவனாகச் செய்யினும் அந்நன்றியைக்கருதாது அவன் துன்பம்பயக்கும் பொருளிலனாயின் அவனிடத்துப்பகை கொள்வன் என்பார், "தன்னுடைய சேயும்பகை" எனவும், "இற்பிறந்தார் கண்ணல்லதில்லை யியல்பாகச், செப்பமு நாணுமொருங்கு" என்றபடி எக்காலத்துந் திரிபில்லாத குடியிற்பிறந்தானுக்குத் தாய்மரபும் தந்தைமரபும் யாதொரு பழியிலவாயினும் பொருளிலனேல் அவன் மீது உறவினர் பழியேற்றிப்பகை கொள்வராதலான், "உறவோரும்பகை" எனவும், "பொருளல்லவரைப் பொருளாகச்செய்யும், பொருளல்ல தில்லைபொருள்" என்றபடி அறிவுடையாரும் உயர்குலத்தாரும் பொருளிலராயின் அவரை அறிவிலாதாராயும் இழிகுலத்தாராயும் மதிக்கப்பட்டு அவரிடத்து நட்புக்கொள்ளாது பகைகொள்வராதலின், "இச்செகமும் பகையாயும் பொழுதிலருஞ் செல்வநீங்கிலிங்கு" எனவும், மருதீசரது திருவடியேயன்றி மற்றையொன்றும் சுதந்தரமாகாதென்பார், "ஆதலினால் தோயுநெஞ்சே........சுதந்திரமே" எனவும் கூறினார்.

என்னோடு ஒற்றுமையாகப் பொருந்திய மனமே! இவ்வுலகத்தில் அருமையாகிய செல்வம் நீங்கிவிட்டால் பெற்றதாயும் பகையாவள், கொண்டமனைவியரும் பெரும்பகைவராவர், தன்னுடைய புதல்வனும் பகையாவன், சுற்றத்தாரும் பகையாவர், இவ்வுலகமும் பகையாகும் ஆகையால் மருதீசரது பொன்னடிகளே நமக்குச் சுதந்திரப்பொருள் ஆகும் என்பதாம். வறுமைவந்தகாலத்து, தாய்முதலிய எல்லோரும் பகையாவர் ஆதலின் மருதீசர் பொன்னடியொன்றே நமக்கு அழியாப்பொருளாய்ப்பற்றுதற்குரியது என்க.

திருக்கழுக்குன்றம்.

காடோசெடியோகடற்புறமோகனமேமிகுந்த
நாடோநகரோநகர்நடுவோநலமேமிகுந்த
வீடோபுறந்திண்ணையோதமியேனுடல்வீழுமிட
நீடோய்கழுக்குன்றிலீசாவுயிர்த்துணைநின்பதமே. (௧)

(இ-ள்.) நீள்தோய் கழுக்குன்றில் ஈசா - நீட்சி பொருந்திய திருக்கழுக்குன்றின்கண் எழுந்தருளிய கடவுளே, தமியேன் உடல் வீழும்இடம் - தனியேனுடைய சரீரம்விழுகின்ற இடம், காடோசெடியோ கடற்புறமோ - காட்டிடமோ மரத்தடியோ சமுத்திரக்கரையோ, கனமே மிகுந்த நாடோ - சிறப்புப்பொருந்திய தேசமோ, நகரோ - ஊர்தானோ, நகர்நடுவோ-ஊரினடுவிட

மோ, நலமேமிகுந்தவீடோ-நன்மைமிகுந்தவீடோ புறந்திண்ணையோ-வெளித்திண்ணையோ, (யான் அறியேன் ஆதலால்) நின்பதமே உயிர்த்துணை-தேவரீருடையதிருவடிகளே என் உயிருக்குத் துணையாம். எ-று.

(கு-ரை.) "படுமழைமொக்குளிற்பல்காலுந்தோன்றிக், கெடுமிதோர்யாக்கையென்றெண்ணித்-தடுமாற்றம், தீர்ப்பேம்யாமென்றுணருந்திண்ணறிவாளரை, நேர்ப்பார்யார்நீணிலத்தின்மேல்" எனவும், "புன்னுனிமேனீர்போனிலையாமை யென்றெண்ணி, இன்னினியே செய்க வறவினை-இன்னினியே, நின்றானிருந்தான்கிடந்தான் றன்கேளலறச், சென்றானெனப்படுதலான்," எனவும் கூறியபடியாக்கை நிலையாமை யுண்மையின் அவ்யாக்கையழியுமிடம் இன்னவிடமென்றறுகுத்தறிய முடியாமையால், காடோசெடியோ........தமியேனுடல்வீழுமிடம் எனவும், உடலழியுங்காலத்துத் தேவரீரது திருவடியன்றி வேறொன்றுந்துணையாகாதென்பார், "நீடோய்கழுக்குன்றிலீசா வுயிர்த்துணை நின்பதமே" எனவும் கூறினார். இனிவிளைவதையறியேன் என்பதை "மலங்கினேன் கண்ணினீரைமாற்றிமலங்கெடுத்தபெருந்துறை, விலங்கினேன்வினைகேடனேனினிமேல் விளைவதறிந்திலே, னிலங்குகின்றநின்சேவடிகளிரண்டும் வைப்பிடமின்றியே, கலங்கினேன் கலங்காமலேவந்து காட்டினாய் கழுக்குன்றிலே" எனவரும் மணிவாசகப்பிரான் திருவாக்கானுணர்க.

திருக்கழுக்குன்றத்தில் எழுந்தருளிய ஈசனே தமியேனது சரீரம் விழுமிடம் காடுதானோ செடிதானோ கடற்கரையோ தேசமோ நகரமோ நகரினடுவிடமோ வீடோ வெளித்திண்ணையோ யானறிகிலேன் ஆதலான் தேவரீரது திருவடிகளே என்னுயிர்த்துணையாம் என்பதாம்,

திருக்காளத்தி.

பத்தும்புகுந்துபிறந்துவளர்ந்துபட்டாடைசுற்றி
முத்தும்பவளமும்பூண்டோடியாடிமுடிந்தபின்பு
செத்துக்கிடக்கும்பிணத்தருகேயினிச்சாம்பிணங்கள்
கத்துங்கணக்கென்னகாண்கயிலாபுரிக்காளத்தியே. (க)

(இ-ள்.) கயிலாபுரிகாளத்தி-தென்கயிலாயமென்னுங்காளத்திக்கடவுளே, பத்தும்புகுந்து - தாய்வயிற்றிற் பத்துத்திங்கள்கழிந்து, பிறந்துவளர்ந்து-ஜனித்துவிருத்தியாகி, பட்டாடைசுற்றி-பட்டுவஸ்திரத்தைத்தரித்து, முத்தும்பவளமும்பூண்டு - முத்துமாலைகளையும் பவளமாலைகளையும் அணிந்து, ஓடியாடி - ஓடிவிளையாடி, முடிந்தபின்பு - ஆயுண்முடிவுபெற்ற பிறகு, செத்துக்கிடக்கும் பிணத்தருகே - இறந்துகிடக்கின்ற பிணத்தின்சமீபத்தே, இனிச்சாம்பிணங்கள் - இனியிறக்கும் பிணங்கள், கத்தும் கணக்கென்னகாண் - கூச்சலிடும் நியாயம்யாது. எ-று.

(கு-ரை.) "உயிர்படு கருவோர் கையிற் குன்றியுலுமைந்திற் புற்புதமொக்கும், பயிலிளவூறு மேழிலீரேழிற் பரந்து செம்புனறிரளூறும்வயமுறுபீசமையைந்திற் சிறிது வருஞ் சிரங்களுஞ்சிறுபுறமே, வியன்முதலென் பென்றுரைத்திடு நான்கும் விளங்குறு முப்பதுநாளில், தாளடிநிதம்பத்

டங்கரமருங்கு சார்தருமிருமதிவரையிற், கோளுறுவடிவிற் சந்திகண்மூன்றிற் கொழுவிரனுன்கிலைம்மதியில், வாளுகிர் நாசிமுகங்குய்யங் கன்னம்வாலெயிற்றுறெழுங்காறி, னீளுறு கன்னத்துளை யெழுமதியினிகழ் குறிவிளங்குறத் தோன்றும். திங்களோரெட்டிற் குதமுந்தியேனைச் செறிதருமங்க மாதிகளுந் தங்குறும் பிராணன் முதல்வளியைந் துந்தையு முந்தியினெழியன்னை, நுங் குணவிரதம் வயிற்றுறு மின்பதுன்பமு மனதியானுகரு, மங்கண் முன்னிழ்க ச்சிகன வெனத்தோன்ற வளாவிய மோகம்விட்டகலும், இறப்பொடுபிறப்பிற் பன்முறையிது காறிடருழந்தன மினிப்பிறந்தாங் கறப்பெருங்கடவுள் பூசனைப்பேற்றுலவற்றினை யறுத்து மென்றெண்ணிச் சிறப்புறவிருக்கு, முயிர் கருப்பையுஞ் செறிவழுக்கு தகமுமற்று, முறப்பெரிதழிந்து மோகன்காக் மிளர்ப்பவுணர் விழுந்தரிதின்மண்சாரும்" என்றபடி தாய்வயிற்றிற் பத்துத்திங்களிருந்து பின்பிறப்பது இயல்பென்பார், "பத்தும்புகுந்து பிறந்து" என்றும், பிறந்தபின்னர் முலையூட்டிச் சீராட்டித்தாராட்டி வளர்ப்பதுதிண்ணமாதலின், "வளர்ந்து" என்றும் ஐந்தாட்டையராயகாலத்துப்பட்டாடைமுதலியவற்றைத்தரித்துகலைபயிலப்பள்ளியிற்புகுந்துகலைபயின்றுபதினாறாட்டையராயகாலத்துநன்மணம்புணர்ந்துஇல்வாழ்க்கையைமேற்கொண்டுபுதல்வரைப்பெற்றுமுதுமையடைந்துவாழ்நாளைக்கழிப்பராதலால், "பட்டாடைசுற்றி... ....பிணத்தருகே" என்றும், அங்ஙனம் கிடக்கும் பிணத்தருகு இனிச்சாம்பிணங்கள் கத்துதல் அறியாமையென்பார், "இனிச்சாம்பிணங்கள்கத்துங்கணக்கென்னகாண்" என்றுங்கூறினார்.

தென்கயிலாயமென்னுங் காளத்திக் கடவுளே தாய்வயிற்யிற் பத்துத் திங்கள் கழிந்து பிறந்து விருத்தியாகிப் பட்டு வஸ்திரத்தைக் தரித்து முத்து மாலைகளையும் பவளமாலைகளையும் அணிந்து ஓடிவிளையாடி ஆயுண்முடிவுபெற்ற பிறகு இறந்துகிடக்கும் பிணத்தருகே இனிச்சாம்பிணங்கள் கூச்சலிடும் நியாயம் யாதுஎன்பதாம்.

பொன்னாற்பிரயோசனம் பொன்படைத்தார்க்குண்டு பொன்ப
டைத்தோன், றன்னாற்பிரயோசனம் பொன்னுக்கங்கேதுண்டத்தன்
மையைப்போ, லுன்னாற்பிரயோசனம் வேணதெல்லாமுண்டுனைப்
பணியு, மென்னாற்பிரயோசனமேதுண்டுகாளத்தியீச்சுரனே. (௨)

(இ-ள்.) காளத்தீச்சுரனே - காளத்திக்கடவுளே, பொன்னால்பிரயோசனம் பொன்படைத்தார்க்கு உண்டு - பொன்னாலாவதோர் பயன் பொன்பெற்றவனுக்குண்டு, பொன்படைத்தோன் தன்னால் பொன்னுக்கு பிரயோசனம் அங்கு ஏதுஉண்டு - பொன்பெற்றவனால் அப்பொன்னுக்காவதோர் பயன் அவ்விடத்தே யாதுண்டு, அத்தன்மையைப்போல் - அத்தன்மைபோல, உன்னால் பிரயோசனம் வேணதெல்லாம் உண்டு - உன்னாலாவதாம் பயன் எனக்கு வேண்டியதெல்லாமுண்டு, உனைப்பணியும் என்னால் பிரயோசனம் ஏது உண்டு - உன்னைவணங்குகின்ற என்னாற் பயன் யாது உனக்குண்டு. எ-று.

(கு - ரை.) பொன்னானது தன்னை யடைந்தவனுக்குப் பயன்படுமே யன்றி யவனாலதற்கொரு பயனுமில்லா வாறுபோல திருக்காளத்தி யீசரே தேவரீராலடியேனுக்கெல்லா நற்பயனு முண்டாகின்றனவேயன்றித் தேவரீருக்கடியேனாலொரு பயனுமில்லை யென்றார். மக்கள் விழைந்துகொண்டுள்ளது பொன்னாதலி லதனை நன்கு தெரிந்துகொள்ளக் கருதிப் பொன்னை யுவமை கூறினாரென்க. அடிகள் எல்லாருமெளிதி லுணருமாறு எளிய நடையில் யாப்பமைத்தாப்கு உவமையையும் விளக்கமாக வுரைத்தார்கள்.

வாளால் மகவரிந் தூட்டவல் லேனல்லன் மாதுசொன்ன
சூளா லிளமை துறக்கவல் லேனல்லன் றொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனல்லனானி னிச்சென்
றாளாவ தெப்படி யோதிருக்காளத்தி யப்பனுக்கே. 3

(இ-ள்.) வாளால்-வாட்படையினால், மகவு-இளங்குழந்தையை, அரிந்து, அறுத்து, திருக்காளத்தி யப்பருக்கு - ஸ்ரீகாளத்தீசருக்கு, ஊட்ட-நிவேதனமாக அளிக்க, வல்லேன் அல்லேன்-ஆற்றலுடையவனல்லேன், மாது-மனைவி, சொன்ன-உரைத்த, சூளால்-சபதமொழியால், இளமை-யௌவன சுகத்தை, துறக்க-விட்டுவிடுவதற்கு, வல்லேன் அல்லேன்-சாமர்த்தியமுடையவனல்லேன், தொண்டு - ஊழியங்களை, செய்து - செய்யாநின்று, நாள் ஆறில்-ஆறாவது தினத்தில், கண்-நயனத்தை, இடந்து-தோண்டி, அப்ப-இறைவன் திருகண்ணில் அழுத்த, வல்லேன் அல்லேன்-துணிவுடையனல்லேன், நான்-இத்தகையவடியேன். இனிச்சென்று-இனிப்போய் (காளத்தியப்பருக்கு,) ஆளாவது - அடியவனாகவாவது, எப்படியோ-எவ்வாறோ அறிகின்றேனில்லை,—எ-று.

(கு-ரை.) சீராளதேவரை மையாட்டைச் சிறுவரெனவிளக்க மகவுஎன்றார். திருநீலகண்டமென்னுந் திருமந்திரம் இறையவ னாணையாதலிலதனைச் சூளென்றனர். பன்றிமுதலிய விலங்குகளி னூன்களையும் நிவேதனமாகவும் வாய்நீரைத் திருமஞ்சனமாகவும் தங்குடுமையிற் றரித்த பூவினைச்சாத்தும் பூவாகவும் தம்வாயுணின்று மன்புததும்பிப் போதரும் சொற்களைத் துதியமகவுங்கொண்டு ஐந்திரவு கண்ணுறங்காது நின்றதே இறைவர்க்குக் காவலாகவும் நிலையுறச் செய்தவைகளை விளக்குவான் தொண்டு என்றார்.

இப்பாசுரத்தின் முறையே சிறுத்தொண்ட நாயனார் திருநீலகண்ட நாயனார் கண்ணப்பநாயனார் ஆகிய மூவர்களின் அரியசெயல்களை விளக்கி இருத்தல் காண்க.

முப்போது மன்னம் புசிக்கவுந் தூங்கவு மோகத்தினாற்
செப்போ திளமுலை யாருடன் சேரவுந்சீவன்விடு மப்போது
கண்கலக்கப்பட வுமமைத் தாயையனே
யெப்போது காணவல் லேன்றிருக் காளத்தி யீச்சுரனே. 4

(இ-ள்.) முப்போதும் - (காலை உச்சி இரவு என்னும்) மூன்று காலத்திலும், அன்னம்-சோற்றை, புசிக்கவும்-உண்ணவும், தூங்கவும் - நித்திரை செய்யவும், மோகத்தினல்-காமமயக்கத்தால், செப்பு-செப்பினை, ஒது-இணை கூறுகின்ற, இளமுலையாருடன்-இளமையமைந்த தனங்களையுடைய மாதர்களுடன், சேரவும்-புணரவும், சீவன்-உயிர், விடும்-நீங்குகின்ற, அப்போது; அந்தசமயத்தில், கண்கலக்கப்படவும் - துன்பப்படவும், அனைத்தாய்-வகுத்தனை, ஐயனே-அனைவர்க்குந் தலைவனே, திருக்காளத்தியீச்சுரனே-திருக்காளத்தியீசரே, எப்போது-எந்தகாலத்தில், காணவல்லேன்-தேவரீர் திருவடிகளைத் தெரிசிக்கத்தக்கவனாவேன்.—எ-று.

(கு ரை.) முக்காலத்தினும் உண்ணுதலினும் இராக்காலத்தில் மாதர் போகத்துடன் தூங்குவதனிலும் காலம் வாளாகழிதற்கிரங்கி எப்போது காணவல்லேன்.—என்றனர்

இரைக்கே யிரவும் பகலுந் திரிந்திங் கிளைத்துமின்னா
ரரைக்கே யவலக் குழியரு கேயசும் பார்ந்தொழுகும்
புரைக்கே யுழலுந் தமியேனை யாண்டருள்பொன்முகலிக்
கரைக்கே கல்லால் நிழற்கீழமர்ந்தருள் காளத்தியே. 5

(இ-ள்.) பொன்முகலி - சொன்னமுகியென்னும் பெயரமைந்தயாற்றின், கரைக்கு-கரையில், கல்லால் நிழற்கீழ் - வடவிருட்சத்தின் நிழலில், அமர்ந்தருள்-எருந்தருளியிருக்கின்ற, காளத்தியே - திருக்காளத்திநாதரே, இரைக்கே-உணவிற்கே, இரவும் கலும்-அகோராத்திரம், திரிந்து-சுற்றி, இங்கு இளைத்து - இவ்வுலகின் மெலிந்து, மின்னார் - மாதரின், அரைக்கு - கடிதடப்பிரதேசத்தில், அவலக்குழி - துக்கரூபமான பள்ளமாய், அசும்பு - வழுவழுப்பு, நீர் ஆர்ந்து-நீர்பொருந்தி, ஒழுகும்-கசிகின்ற, புரைக்கே-துவாரத்திற்கே, உழலும் - சுற்றுகின்ற, தமியேனை அடியேனை, ஆண்டருள் ஆட்கொண்டருளவேண்டுகின்றேன்.—எ-று.

(கு-ரை.) இரவும் பகலும் உணவிற்கும் போகத்திற்கும் அலைந்து திரிவேனைத் தேவரீரே தேகபோகமோகங்களை நீக்கி யுண்மைஞானந் தந்தாளவேண்டுமெனவும் தானகப் பந்த நிவர்த்தி யடையவியலாதெனவும் அவனருளாலேயவன்றாள் வணங்கிஎன்னுஞ்சுருதிவசன வுட்கோளுடையாராய்த்தமியேனை-யாண்டருள் என்றும் கல்லாலிழலமர்த்தருள் காளத்தியே எனவும் அருளிச் செய்தனரென்க.

நாறுங் குருதிச் சலநாரை தோற்புரை நாடொறுஞ்சீ
யூறு மலக்குழி காமத்துவார மொளித்திடுமபுண்
டேறுந் தசைப் பிளப் பந்தரங் கத்துள சிற்றின்பம்விட்
டேறும் பதந்தரு வாய்திருக் காளத்தி யீச்சுரனே. 6

(இ-ள்.) காளத்தியீச்சுரனே — திருக்காளத்தி யீசரெனத் திருநாமந் தாங்கி விளங்கும் ஆண்டவரே, நாறும் - தூர்மணம் வீசுகின்ற, குருதி-இரத்தம் வடிகின்ற, சலதாரை-தூம்பு, தோற்புரை - தோற்நுழி, காமர்துவாரம்- இச்சாரந்திரம், ஒளித்திடும் - மறைத்துவைக்கின்ற, புண்-இரணம், தேறும் காமிகளா லிவ்விடமேயெனத் துணியப்படுகிற, தசைப்பிளப்பு - ஊனின் கீறல், அந்தரங்கத்துஉள - வேறுகூறிய இரகசிய விடத்திலுள்ள, சிற்றின் பம் - சிறிய இன்பத்தினை, விட்டு - நீங்கி, ஏறும் - உயர்ந்த, பதம் - திருவடி நிழலாகிய பேரின்பத்தை, தருவாய் - அருளுவீராக, எ-று.

(கு-ரை) மாதராந்தரங்கம் இவ்வளவு இழிவமைந்தனவாயினும் பழக்க வாதனையானது அவ்விடத்திலேயே இழுத்துச்சேறல் உண்மையெனவும் அதனை வெறுக்கப் புரிவது இறைவனாலன்றிப் பிறராலாகாதெனவும் விளக்குதற்கு ஏறும் பதந்தருவாய் என்றனர்.

கைலாயம்.

கான்சாயும் வெள்ளி மலைக்கர சேநின் கழனம்பினேன்
ஊன்சாயுஞ் சென்ம மொழித்திடு வாய்கர வூரனுக்காய்
மான்சாயச் செங்கை மழுவலஞ் சாயவளைந்த கொன்றைத்
தேன் சாய நல்ல திருமேனிசாய்த்த சிவக்கொழுந்தே.

(இ-ள்) கான் - வாசனை, சாயும் - நாற்புறமும் வீசுகின்ற, வெள்ளிமலைக்கு - கைலாயத்திற்கு, அரசே - தலைவரே, ஊன் - இறைச்சி, சாயும் - புண் முதலியவாகிக் கசிந்தொழுகின்ற, சென்மம்-பௌதிகவுடல் தாங்கும்பிறப்பினை, ஒழித்திடுவாய் - நீக்கியருளுவீராக, கரவூரனுக்கு ஆய் - கரவூரரென்பார் நிமித்தம், மான்சாய - திருக்கரத்திலேந்திய மிருகஞ்சாயவும், செங்கைமழு - செவ்விய மற்றொரு திருகரத்துள்ள பரசு என்னும் ஆயுதம் வலம்சாய - வலப்புறத்திற்சாயவும், வளைந்த திருமுடியிலணிந்த, கொன்றை- கொன்றைமலரின், தேன்சாய - மதுஒழுக, நல்லதிருமேனி - அருட்டிருவுருவை, சாய்த்த - வளைத்த, சிவக்கொழுந்தே, சிவக்கொழுந்தென்னுந் திருநாமத்தோடுவிளங்கும் இறையவரே, நின் - தேவரீருடைய, கழல் - ஸ்ரீ பாதங்களையே, நம்பினேன் - உறுதியாக நம்பியுள்ளேன்.—எ - று.

(கு-ரை) கரவூரருக்குத் திருமேனிசாய்த்த தேவரீர் திருவடிகளை நம்பினேன் என்றார். கரனென்னு மிராக்கதனால் பூசிக்கப்பட்டதனால் கரவூரென்றும் விரிஞ்சனால் பூசிக்கப்பெற்றதனால் திருவிரிஞ்சிபுரம் என்று வழங்குகிற அத்தலத்திலொரு பிராமணச்சிறுவன் திருமஞ்சனம் செய்கையில் திருமுடியெட்டாததுபற்றி வருந்தியதைச் சிவபெருமான் திருமுடியை வளைத்தருளினார். இச்சரித்தை திருவிரிஞ்சைத்தல புராணத்தின் பாலனுக்குதிருமுடிவளைத்த சருக்கத்திற்பார்க்கக் காணலாம்.

இல்லந் துறந்து பசிவந்த போதங் கிரந்து தின்று
பல்லுங் கறையற்று வெள்வாயு மாயொன்றிற் பற்றுமின்றிச்
சொல்லும் பொருளு மிழந்துசு கானந்தத் தூக்கத்திலே
யல்லும் பகலு மிருப்பதென் றோகயிலாயத்தனே. 2

(இ - ள்) இல்லந்துறந்து - மனைவிமக்கள் சுற்றம் பொருளென்னும் இவைகளா லுண்டாகும் பந்தத்திற் கிடமான வீட்டைவிட்டு துறவறந் தாங்கி, பசிவந்தபோது - பசிவந்தகாலத்தில், அங்கு - சென்றவிடத்தில், இரந்து - பிச்சைவாங்கி, தின்று - புசித்து, பல்லும் - தந்தங்களும், கறையற்று - தாம்பூல வழுக்கின்றி, வெள்வாயுமாய் - வெள்ளியவாயுமுடையே னாய், ஒன்றில் - முதலிலனுபவித்த விஷயங்களெவற்றினும், பற்றும் இன்றி ஆசையுமில்லாமல், சொல்லும்பொருளும் - சொற்களையும், அவைகளின் பொருள்களையும், இழந்து - பயனில்லாதனவெனத்தள்ளி, சுகானந்தம் - திருவடியின் பமாகிய, தூக்கத்தில் - துரியநிலையில், அல்லும்பகலும் - இரவும்பகலும், இருப்பது என்றோ - இருப்பதுஎக்காலமோ, கைலாயத்தனே - கைலாயபதியே; — எ - று.

(கு — ரை.) துறவறமடைந்து சகலகேவலத்தாக்கற்றுசதானந்த நித்திரை எந்நாட் பெறுவேனென்றார். அதாவது தூங்காமற்தூங்கும் நனவிற்சுழுத்தி யானந்தத்திலிருக்க எக்காலத்தில் வாய்க்குமோ என்பதாம்.

சினந்தனை யற்றுப் பிரியமுந் தானற்றுச் செய்கையற்று
நினைந்தது மற்று நினையா மையுமற்று நிற்சிந்தனாய்த்
தனந்தனி யேயிருந் தானந்த நித்திரை தங்குகின்ற
வனந்தலி லென் றிருப் பேனத்த னேகயிலாயத்தனே. 3

(இ-ள்) அத்தனே — உமாதேவிக்கொரு புறமளித்த இறைவரே, கைலாயத்தனே - கைலாயபதியே, சினந்தனை - கோபத்தை, அற்று - அறவொழித்து, செய்கையற்று - மனமொழிமெய்களின் றொழில்களையு மறவொழித்து, பிரியமுந்தான் அற்று-எவ்விஷயத்துக்காகவும் எவரிடத்தும் விருப்பமில்லாமையும் உடையேனாகி, நினைந்ததுமற்று -யோகபாவனையில் மூர்த்திகளைப்படைத்து நினைந்தவையும் விடுத்து, நினையாமையுமற்று-நினையாதிருக்கின்றோமென்னும் நினைவையும் இல்லாதேனாகி, நிர்ச்சிந்தன் ஆய்-சிந்தையின் றொழிலற்றேனாகி, தனந்தனியே- தத்துவமெலாங்கழன்று யாதொருவனாகி, இருந்து- அருணிலையிலிருந்து, ஆனந்தநித்திரை - சிவானந்தமாகிய தூக்கம், தங்குகின்ற-பொருந்துகின்ற, அனந்தலில் - நித்திரையில், என்று-எக்காலத்தில், இருப்பேன்-அடியேனிரர்நிற்பேன்.— எ - று.

(இ-ள்) இறைவன் அடியார் விரும்பியவைகளை யளிக்குங் கருணையுடையரென்பார். அத்தனே என்றார். நிட்டைகூடவேண்டுவா ரடையவேண்டியவைகளை இதனுள்நன்குவிளக்கி யிருத்தல்காண்க. தேகபாவத்தை நீக்கிசங்கற்பங்களையுமொழித்து ஞானஸ்புரிப்புமற்று சித்தனாகிதனைய்நிலைபெற்று விளங்குகின்ற சகசானந்தத்தில் என்பதாம்,

கையார வேற்று நின்றங்ஙனந் தின்று கரித்துணியைத்
தையாது டுத்துநின் சந்நிதிக் கேவந்து சந்ததமு
மெய்யார நிற்பணிந் துள்ளே யுரோமம்விதிர் விதிர்ப்ப
வையாவென் றோல மிடுவதென் றோகயிலாயத்தனே. 4

(இ-ள்) கையார - கைநிறைய, ஏற்று - பிறரிடும் பிச்சையைவாங்கி, நின்று (இருத்தலின்றி) நின்று, அங்ஙனம் - கிடைத்தவண்ணமே, தின்று - புசித்து, கரித்துணியை - பிறருடுத்து நைந்தபின்னர் குப்பையிலெறியும் அழுக்குக்கந்தையை, தையாதுடுத்து - தைக்காமற் றரித்து, சந்ததமும், அனவரதமும்; நின் - தேவரீருடைய, சன்னிதிக்கேவந்து - சன்னிதியையே யடைந்து, மெய்யார - உண்மையன்புடன், நின் - தேவரீரை, உள் பணிந்து - வணங்குமுறையில் வணங்கி அந்தரங்கத் தியானஞ் செய்து, உரோமம் - உரோமங்கள், விதிர்விதிர்ப்ப - புளகங்கொள்ள, ஐயா - ஐயனே, என்று - என, ஓலம் இடுவது - முறையிடுவது, என்று - எக்காலத்தில், — எ - று.

(கு-ரை.) ஆடையுமுணவு முதலியவெவையும் விரும்பாது நினது திருக்கோயிலையன்றி வேறு இடமில்லாதேனுய்க் கைலாயத்தனே நின்னை பணியும்பேற்றினு முயர்ந்த தொன்றின்மையால் அடியேனதனை எந்நாளடைவேனென்றனர். பகிர்முக நாட்டமின்றி அந்தர்முக நாட்டமென்பார் நிற்பணிந்துள்ளே என்றார்.

நீறார்த்த மேனி யுரோமஞ் சிலிர்த்துள நெக்கு நெக்குச்
சேறாய்க் கசிந்து கசிந்தே யுருகிநின் சீரடிக்கே
மாறாத் தியானமுற் றானந்த மேற்கொண்டு மார்பிற்கண்ணீ
ராறாய்ப் பெருகக் கிடப்பதென் றோகயிலாயத்தனே. 5

(இ-ள்.) கைலாயத்தனே - கைலாயப்பதியே, நீறு ஆர்த்த - விபூதியணிந்த, மேனியுரோமம் - உடலிலுள்ளவுரோமங்கள், சிலிர்த்து - புளகித்து, உளம் - உள்ளம், நெக்கு நெக்கு - கட்டுவிட்டுக் கட்டுவிட்டு, சேறாய் - சேறு ஆகி, கசிந்து, கசியப்பெற்று, உக - நெகிழ, சிந்தை - உள்ளம், உருகி - உருகுதலுற்று, நின் - தேவரீருருடைய, சீர் - எல்லாச்சிறப்புகளுமமைந்த அடிக்கே - திருவடிபெற்றிற்கே, மாறா - நீங்கா, தியானம் உற்று - தியானம் பொருந்தி, ஆனந்தம் - சந்தோஷம்; மேல்கொண்டு - அதிகரித்து, மார்பில் - மார்பினிடத்தில், கண்ணீர் கண்ணீரானது, ஆறாய் - நதியாகிப்பெருக - அதிகரிக்கும் வண்ணம், கிடப்பது சமாதியோகத்திலிருப்பது, என்றோ - எந்நாளோ ? அறிகிலேன்: — எ - று.

(கு-ரை.) சைவத்துறவி வேடமும் வேடத்துடன் றிருவடித்தியானமாறா திருத்தலையுடையேனுமாகி சாத்மீகத்தில் எந்நாளிருப்பேன்: — என்க.

செல்வரைப் பின்சென்று சங்கடம்பேசித் தினந்தினமும்
பல்லினைக் காட்டிப் பரிதவி யாமற் பரானந்தத்தி

னெல்லையிற் புக்கிட வேகாந்த மாயெனக்காமிடத்தே
யல்லலற் றென்றிருப் பேனத்த னேகயிலாயத்தனே. 6

(இ - ள்.) அத்தனே கயிலாயத்தனே - செவ்வொளிவாய்ந்த திருமேனியினையுடைய கைலாயபதியே, செல்வரை - சம்பன்னரின், பின்சென்று பின்றொடர்ந்துபோய், சங்கடம் - குறைகளை, பேசி - உரைத்து, தினந்தினமும் - நாடோறும், பல்லினைக்காட்டி - பல்லையிளித்து, பரிதவியாமல் - வருந்தாமல், பரானந்தத்தின் - சிவானந்தத்தின். எல்லையில் - முடிவில், புக்கிட - பிரவேசிக்க, ஏகாந்தமாய் - தனியாய் எனக்கு - அடியேனுக்கு. ஆம் - ஆகிய, இடத்து - தானத்தில், அல்லல் - துன்பம், அற்று - இல்லாதேனாய், என்று இருப்பேன் - எந்நாளிலிருப்பேன்:—எ - று.

(கு - ரை.) பரானந்தத்தின் எல்லையிற் புகுங்காறும் அல்லலுமவலமும் வறுமையுமாதியனவி-வந்துகொண்டேயிருக்கும் ஆதலினிவைகளை வேண்டாமெனவும் திருவடியின்பமாகிய பரானந்தமொன்றே அடையத்தக்கதெனவும் விளக்கினமைகாண்க. எனக்கு ஆம் இடம் என்றது அருணிலையே.

மந்திக் குருளையொத் தேனில்லை நாயேன் வழக்கறிந்துஞ்
சிந்திக்குஞ் சிந்தையை யானென் செய்வேனெனைத் தீதகற்றிப்
புந்திப் பரிவிற் குருளையையேந்திய பூசையைப்போ
லெந்தைக் குரியவன் காணத்தனேகயி லாயத்தனே.

(இ - ள்.) மந்தி - பெண்குரங்கையும், குருளை - அதன்குட்டியையும் ஒத்தேனில்லை - ஒப்பானேனில்லை, நாயேன் - அடியேனது, வழக்கு - தன்மை, அறிந்தும் - உணர்ந்தும், சிந்திக்கும் - விடயங்களையாராய்ந்தலைகின்ற, சிந்தையை - மனதை, யான் என் செய்வேன் - அடியேனென்ன செய்வேன், எனை - அடியேனை, தீது அகற்றி - குற்றநீக்கி, புந்தி - திருவுளத்தில், பரிவில் - விருப்பத்துடன், குருளையை - குட்டியை, பூசையைப்போல் - பெண்பூனையைப்போல், எந்தைக்கு - அடியேனது தந்தையாகிய தேவரீருக்கு, உரியவன் - உரிமையானவன்,—எ - று.

(கு-ரை.) குரங்குக்குட்டியானது தானே பார்த்திருந்து தாய்க்குரங்கு மரமுதலியவற்றிலேறும்போதும் இறங்கும்போதும் தாயின்வயிற்றினை விரைந்து பற்றிக்கொள்ளும் அவ்வாறு இறைவனை ஆன்மாவலிந்தணை யாதென மார்க்கடநியாயத்தைக் கூறிமறுப்பார் மந்திக்குருளையை யொத்தேனில்லை யென்றார். பெண்பூனையானது தானெங்கே யெங்கே போகுமோ வங்கெல்லாம் தஞ்சிறுகுட்டியைக் கௌவிச்செல்லும் அவ்வாறே இறைவனுண்டாலன்றி யருணிலை வராதென்பார் மார்ச்சாலநியாயத்தை யுடன்பாடாகக் கொண்டும் புந்திப்பரிவாற் குருளையையேந்திய பூசையைப்போல்—என்றார் எண்க.

வருந்தேன் பிறந்து மிறந்து மயக்கும் புலன்வழிபோய்ப்
பொருந்தே னரகிற் புகுகின்றி லேன்புகழ்வாரிடத்தி

விருந்தே னினியவர் கூட்டம்வி டேனியலஞ்செழுத்தா
மருந்தே னருந்துவ னின்னரு ளாற்கயி லாயத்தனே.

(இ - ள்.) கயிலாயத்தனே - கைலாயப்பதியே! நின் அருளால் - தேவரீர் கருணையால், இனி, பிறந்தும் இறந்தும் - சனித்தும் மரித்தும், வருந்தேன் - துன்புறேன், புலன்வழி - சுவையொளியூறோசை நாற்றமென்னும் ஐம்புலன்வழியில் போய் - சென்று, பொருந்தேன் - விஷயவியாபாரங்களில் பொருந்தமாட்டேன், நரகில் இரௌரவமுதலிய நரகங்களிலும் - புகுகின்றிலேன் - பிரவேசிக்கின்றிலேன் புகழ்வார் இடத்தில், உன்னையே சதா துதிப்பவர்களிடத்தில் - இருந்தேன், இருக்கின்றேன் - இனி அவர் கூட்டம்விடேன் - இனியவ்வடியவரின் கூட்டத்தைவிடேன், இயல் அஞ்செழுத்தாம் - தேவரீருருவமாக விளங்குகின்ற ஸ்ரீ பஞ்சாட்சரமாகிய, அருந்தேன் அருந்துவன் - அரியமதுவினையுண்பேன்.—எ - று.

(கு - ரை.) கைலாயபதியே தேவரீர் திருவருளை யுடையேனாயினேனாதலிற் பிறப்பிறப்பு நரக முதலியவற்றை யடையாது அடியவர்கூட்டமடையப்பெற்று ஸ்ரீ பஞ்சாட்சர மென்னும் அருந்தேனை யருந்துவே னென்றனர்.

மதுரை

விடப்படு மோவிப் பிரபஞ்ச வாழ்க்கையை விட்டு மனந்
திடப்படு மோநின் னருளின்றி யேதினை மேயலையக்
கடப்படு மோவற்பர் வாயிலிற் சென்றுகண்ணீர்ததும்பிப்
படப்படு மோசொக்க நாதா சவுந்தரபாண்டியனே 1

(இ – ள்.) இப்பிரபஞ்ச வாழ்க்கையை – இவ்வுலகவாழ்வை, விடப்படுமோ – விட்டுவிடக்கூடுமோ, விட்டு மனந்திடப்படுமோ - அங்ஙனம் உலகவாழ்வை விடுத்து மனந்துணிவுறுமோ – நின் - தேவரீரது, அருள் இன்றி அருள்இல்லாமல் - தினமேயலைய, தினமுமலைதற்கு - கடப்படுமோ, முடியுமோ - அற்பர்வாயிலிற்சென்று, இழிஞரின்வாயிலிலே சென்று - கண்ணீர் ததும்பிப்படப்படுமோ, கண்ணீர்நிரம்பித் துன்புறக்கூடுமோ, சொக்கநாதா சௌந்தரபாண்டியனே, சொக்கலிங்கப்பெருமானே சௌந்தரநாத பாண்டியனே,—எ - று.

பொது

உடைகோ வணமுண் டுறங்கப் புறந்திண்ணையுண்டுணவிங்
கடைகா யிலையுண் டருந்தத்தண் ணீருண் டருந்துணைக்கே
விடையேறு மீசர் திருநாமமுண் டிந்த மேதினியில்
வடகோ டுயர்ந் தென்ன தென்கோடு சாய்ந்தென்ன வான்
[பிறைக்கே. 1

(இ - ள்.) உடை - உடைக்கு, கோவணம்உண்டு - கோவணமுளது உறங்க - உறங்குதற்கு, புறந்திண்ணையுண்டு - புறந்திண்ணையுளது, உணவு - போசனத்துக்கு. இங்கு - இவ்விடத்தில், அடைகாய் இலைஉண்டு - அடையுங்காயுமிலையும் உளது, அருந்த - குடித்தற்கு, தண்ணீருண்டு - குளிர்ந்த நீருளது, அருந்துணைக்கு - அரிய துணைக்கு, விடையேறும் - இடபத்திலேறுகின்ற, ஈசர் - சிவபெருமானுடைய, திருநாமம் உண்டு - திருப்பெயர்கள் உள்ளன, இந்தம்மதினியில் - இந்த உலகத்தில், வான்மதிக்கு - வானிற்றோன்று மதியத்துக்கு, வடகோடு - வடக்குக்கோடு. உயர்ந்து விளங்கினுலென்ன, தென்கோடு - தெற்குக்கோடு சாய்ந்து என்ன, சாய்வுற்று விளங்கினுலென்ன,—எ-று.

(கு - ரை.) இறைவனடி மலர்த்தியான முடையவெனக்கு ஆடையும் படுக்கையும் உணவும்குடிக்க நீருந்துணையும் குறைவறக்கிடந்துள்ளன ஆதலின் இப்பிறையின்கோடு எவ்வாருயினென்னை என்றனர் என்க.

வீடுநமக்குத்திருவாலங்காடு விமலர்தந்த
வோடுநமக்குண்டு வற்றாதபாத்திர மோங்குசெல்வ
நாடுநமக்குண்டு கேட்டதெல்லாந்தர நன்னெஞ்சமே
யீடுநமக்குச் சொல வொருவரு மிங்கிலையே. 2

(இ - ள்.) நல்நெஞ்சமே - நல்ல எனது நெஞ்சகமே, திருவாலங்காடு- திருவாலங்கா டென்னுந்தலம், நமக்குவீடு - நமக்குவீடாகும், விமலர் - சிவபெருமான், தந்த-அளித்த, ஓடுநமக்குண்டு- ஓடுநமக்குளது, வற்றாதபாத்திரம்- அக்ஷயபாத்திரம், ஓங்குசெல்வநாடு - செழித்த செல்வங்களையுடையநாடு, நமக்குண்டு-நமக்குளது, கேட்டதெல்லாம் - நாம் கேட்டனவற்றையெல்லாம்தர அளித்தற்கு ஆதலின் நமக்கு ஈடுசொல - நமக்குச்சமானமாக வுரைத்தற்கு இங்கு, இவ்வுலகத்தில் - ஒருவரும் இல்லை. ஒருவருங்கிடையாது.—எ-று.

(கு - ரை.) நாமித்தகைய துறவறப் பேற்றினை அடைந்து நிற்றலின் நமக்கு நிகரெவருளர் என்றனர், விமலர் - மலரகிதர்.

நாடிக்கொண் டீசரை நாட்டமுற் ருயிலை நாதரடி
தேடிக்கொண்டாடித் தெளிந்தாயிலை செகமாயைவந்து
மூடிக்கொண்டோமென்றுங் காமாயுதங்கண்டுமுனிந்தவென்றும்
பீடிப்பை யோநெஞ்ச மேயுனைப்போலில்லை பித்தர்களே. 3

(இ - ள்.) நெஞ்சமே-உள்ளமே, நாடிக்கொண்டு - குருநாதன் சொன்னபதேச வுளவைநாடிக்கொண்டு- ஈசரை - பரசிவத்தை, நாட்டமுற்ருயிலை தியானஞ்செய்தாயில்லை, நாதரடி - குருநாதரது ஸ்ரீ பாதங்களை, தேடி இருக்குமிடங்களைத் தேடியடைந்து - கொண்டாடி, அக்குருநாதரைத் துதித்து - தெளிந்தாய்இலை, அவரிடம் இறைவனையடையு மார்க்கத்தை யஞ்

ஞான சந்தேக விபரீதங்களை நீங்கித் தெரிந்து கொண்டாயிலை, மாயைவந்து- மாயையானது வந்து, மூடிக்கொண்டோம் என்றும் - மூடிக்கொள்ளப்பெற் றோமென்றும், காமாயுதங்கள் - மன்மதபாணங்கள், முனிந்த என்றும் - சீறி னவென்றும், பீடிப்பையோ - என்னை வருத்துவையோ, உன்னைப்போல் - உன்னைப்போல, பித்தர்கள் இலை - பித்துற்றவர்கள் இலை. எ - று.

(கு - ரை.) ஈசனடி மலர்த்தியானமும் குருமுகமான சாத்திர விசாரணை யும் இல்லையாகில் மாயாமோகனப் பிரபஞ்சலீலைகள் வந்து துறவினைக் கெடுக் குமென விளக்கினமை காண்க. மன்மதபாணங்களாவன சூதவனசசாதீயுத் பல வசோக மென்பன.

கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால்கமழு
மெய்யொன்றுசாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசையெவ் வாறுகொள் வாய்வினை தீர்த்தவனே. 4

(இ - ள்.) வினைதீர்த்தவனே - இருவினைகளை நீக்கிய பெருமானே, யான் - அடியேன், கையொன்று செய்ய - கையொரு செயலைச் செய்ய - விழியொன்றுநாட, கண்ணொருபொருளை நாடாநிற்க, கருத்து-சிந்தை, ஒன்றெ ண்ண-ஒன்றைநினைக்க, பொய் ஒன்று-பொய் பொருந்திய, வஞ்சநாவு - வஞ் சகமே வாடினநாக்கு, ஒன்றுபேச - ஒரு விஷயத்தைப் பேச, புலால் கமழும்- புலால் நாற்றம் வீசுகின்ற, மெய்-பரிசவுணர்ச்சி, ஒன்றுசார-ஒன்றையடைய செவி-காது, ஒன்று-ஒருவிஷயத்தை, கேட்க-கேட்டற்கு, விரும்பும்-விரும்பா நிற்கும், ஆகவே, செய்கின்ற - செய்யப்படுகின்ற பூசையை, எவ்வாறு-எவ் வண்ணம், கொள்வாய்-ஏற்றுக்கொள்ளுவை. எ-று.

(கு - ரை.) பஞ்சேந்திரிய நிக்கிரகமில்லாதேன் செய்யும் பூசையைத்தே வரீர் ஏற்றுக்கொள்ள மாட்டீராதலின் இந்திரியநிக்கிரகமருளி என் பூசையை யங்கீகரிக்க வேண்டுமென்றன ரென்க.

கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கக் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப்பல் பச்சிலையா
லெண்ணுண்டு சாத்த வெதிர்நிற்கவீச னிருக்கையிலே
மண்ணுண்டு போகுதை யோகெடு வீர்ந்த மானுடமே. 5

(இ-ள்.) காணக் கண்ணுண்டு தரிசித்தற்குக் கண்களுள,நோக்கக் கருத் துண்டு - தியானிக்கச் சிந்தையுளது, கசிந்து - மனங்கசிந்து, உருகி உருக்க முற்றுப்பாடுதற்கு, பண்ணுண்டு - இசைகளுள, கேட்க-கேட்டற்கு, செவி யுண்டு-காதுகளுள்ளன, பல்பச்சிலையால் - பலவகைப் பச்சிலைகளை, சாத்த -

அருச்சித்தற்கு, எண்ணுண்டு - அட்டோத்தரமாதிய வெண்ணமைந்த பெயர்களுள்ளன. எதிர்நிற்க - இவ்வாறு பூசிக்கில் எதிரே தோன்றுதற்கு, ஈசன்-சிவபெருமான், இருக்கையில்-இருக்கும்பொழுது, கெடுவீர்-கெடுவோர்களே, இந்தமானிடம் - இம்மனிதப்பிறப்பு, ஐயோவெண்ணுண்டுபோகுது - ஐயோ மண்ணுலுண்ணப்பட்டழிகின்றது. எ-று.

(கு - ரை.) மக்கட்பிறப்பல்லாத விலங்கு பறவையாதிகளுடைய கண்ணுதிய இறைவன்றிருவுருவினைக்கண்டு மகிழுமுரிமையற்றனவும் மக்கட்பிறப்பு இறைவன்றிருவருளைப் பெறுதற்குரிமையுள்ளனவுமாகவும் வாளா பிறந்து மடிகின்றனரே என்று உலகை நோக்கி வருந்தி யுரைத்தனரென்க.

சொல்லினுஞ் சொல்லின் முடிவினும் வேதச் சுருதியினு
மல்லினு மாசற்ற வாகாயந் தன்னினு மாய்ந்து விட்டோ
ரில்லினு மன்ப ரிடத்தினு மீச னிருக்குமிடங்
கல்லினுஞ் செம்பினு மோவிருப் பானெங்கள்கண்ணுதலே. 6

(இ - ள்.) சொல்லினும்-பதத்தினும், சொல்லின் முடிவினும் - பதாந்தமான மந்திரத்தினும், வேதசுருதியினும்-மந்திரமுற்றிலு மாலையாகக் கொண்ட வேதசுருதியென்னுங் கலையினும், அல்லினும்-இரவினும், மாசுஅற்ற-களங்கமில்லாத, ஆகாயந்தன்னினும்-ஆகாயத்திலும். ஆய்ந்து விட்டோர்-எது பொருளென ஆராய்ந்து சீவகோடிகளையும் தத்துவங்களையும் பொருளல்லவென விடுத்த ஞானிகளின், இல்லினும் - இருப்பிடமான அருண்மாளிகையிலும், அன்பர் இடத்திலும் - எவர்கள் அன்பர்களோ அவர்களிடத்திலும், ஈசன்-எல்லாவைசுவரியங்களையுந் தம்மதாகவுடைய சிவனர். இருப்பது அல்லால்-இருப்பதை யன்றி, கல்லினும் செம்பினுமோ - மேற்கூறிய சம்பந்தமில்லாத கற்களிலும் செம்புகளிலுமோ? எங்கள் - எங்களுடைய, கண்ணுதல்-நெற்றிக்கண்ணினையுடைய சுவாமி. இருப்பான்-இருப்பான்? எ - று.

வினைப்போக மேயொரு தேகங்கண் டாய்வினை தானொழிந்தாற்
றினைப்போ தளவுநில் லாதுகண் டாய்சிவன் பாதநினை
நினைப்போரை மேவு நினையாரை நீங்கிந் நெறியினின்று
முனைப்போ லொருவருண் டோமன மேயெனக் குற்றவரே. 7

(இ - ள்.) மனமே - என்னுள்ளமே, வினைப்போகமே - இருவினைகளையு மநுபவித்தற்குற்ற விடமே, ஒருதேகம்-ஒரு சரீரம், வினைதான் ஒழிந்தால் - இருவினையின் போகமான இன்பதுன்பங்கள் ஒழிந்தால் தினைப்போது அளவு நில்லாது - தினையளவு நேரமு நில்லாது, சிவன்பாதம் நினை - அதனால் சிவபெருமானது பாதங்களைத் தியானஞ்செய், நினைப்போரைமேவு, அடியார் கூட்டத்துடன் கலந்திரு. நினையாரை - கடவுளை நினையாதாரை, நீங்கி -

விட்டு விலகி, இந்நெறியில் நின்றால்-இந்தநல்வழியினின்றால், உனைப்போல் - உன்னைப்போல, ஒருவர் உண்டோ - ஒருவருளரோ, எனக்குற்றவர்-எனக்கு வேண்டியவர்கள். எ-று.

(கு-ரை) இருவினை நுகர்ச்சிக்கே தேகம் வந்துள்ள தெனவும், போக நுகர்ந்த பின்னர் தினையினளவு குறுகிய காலங்கூடவத் தேகமிராதெனவும். ஆதலிற் சிவனார் திருவடிகளை யழியாத வீடென வுணர்ந்து தியானிக்க வேண்டுமெனவும் இத்தியானம் முதிர்வுறுவான் அங்ஙனம் இறைவனடி மலரைத் தியானிக்குமடியவர்களுடன் கலந்திருத்தல் வேண்டுமெனவும் போக நுகர்வின் முடிவில் அழியும் தேகத்தையே நம்பிக்கிடக்கிற வறிவிலிகளினுறவைவிடல்வேண்டுமெனவும் இவ்வளவுமுடையராயினும் பிறழ்ந்த நெறியில் நில்லாதிருத்தல் அருமை யாதலின் நெறியினின்றாலெனவும், கூறினரென வறிக. இங்ஙன நிற்றலருமை யாதலின் நின்றால் என்றார்.

பட்டைக் கிழித்துப் பருவூசி தன்னைப் பரிந்தெடுத்து
முட்டச் சுருட்டியென் மொய்குழ லாள் கையின் முன்கொடுத்து
கட்டி யிருந்த கனமாயக் காரிதன் காமமெல்லாம்
விட்டுப் பிரியவென் றேவிங்ங னேசிவன் மீண்டதுவே. 8

(இ-ள்.) பட்டைக்கிழித்து - பட்டாடையைக் கிழித்து, பருவூசிதன்னை - பரியவூசியை, பரிந்து - விரும்பி, எடுத்து - எடுத்து, முட்ட - ஒன்றோடொன்று நெருங்கும் வண்ணம், சுருட்டி - சுற்றி, என் - எனது, மொய்குழலாள்- நெருங்கிய கூந்தலினையுடைய மனைவியின், கையில் - கையினிடத்தில், முன் கொடுத்து-தாம்போதற்கு முன்னே கொடுத்து, இங்ஙனே - இவ்வண்ணம். சிவன்மீண்டது-சிவபெருமான் எழுந்தருளியது,, கட்டியிருந்த-பந்தவுருவமாக வென்னிற் பொருந்திபிருந்த,கனமாயக் காரிதன் - பெருத்த மாயக்காரியின். காமம் எல்லாம்-இச்சையனைத்தும், விட்டுப்பிரியவென்றே - என்னைவிட்டு நீங்கவென்று தானே. எ-று.

(கு-ரை.) பட்டைக்கிழித்துப் பருவூசியைச் சுருட்டி என் மனையாள் கையிற் சிவனாரளித்து மறைய யான தனைப் பிரித்துப் பந்தநீக்கமுந் திருவடி ஞானமுடையேனுயினேனென்றனர். இவ்வரலாற்றை இவர் சரிதத்துக்காண்க.

சூதுற்ற கொங்கையு மானார் கலவியுஞ் சூழ்பொருளும்
போதுற்ற பூசனுக் கென்செய லாஞ்செய்த புண்ணியத்தாற்
நீதற்ற மன்னவன் சிந்தையி னின்று தெளிவதற்கோ
காதற்ற வூசியைத் தந்துவிட்டானென்றன் கைதனிலே. 9

(இ - ள்.) சூது உற்ற-சூதாடுகருவியனைய, கொங்கையும் - தனங்களையுடையவளாகிய மனைவியும், மானார் - காமக்கிழத்தியரின், கலவியும் - புணர்

ச்சியும், சூழ்பொருளும் - சூழ்ந்துள்ள பொன்னிலம்பசு மாளிகை முதலிய பொருள்களும், போதுற்ற - உடலைவிடுத்துச் செல்கின்ற காலத்திலுண்டாகின்ற, பூசலுக்கு - இந்திரியங்களின் சண்டையை விலக்குதற்கு, என்செயலாம். என்னசெய்யக்கூடும். செய்த-முன்னர்ச்செய்த, புண்ணியத்தால்-நிஷ்காம புண்ணியத்தினால், தீதற்ற - கொடுஞ்செயலற்ற, மன்னவன் - எமதிறைவன், சிந்தையினின்று - உள்ளினின்று, தெளிவதற்கோ - தெளியத்தானோ, காதற்றவூசியை - காதில்லாத வூசியை, என்றன் - என்னுடைய, கைதனிலே - கையில், தந்துவிட்டான் - கொடுத்து விட்டனன். எ - று.

வாதுற்ற திண்புய ரண்ணா மலையர் மலர்ப்பதத்தைப்
போதுற்றெப் போதும் புகலுநெஞ் சேயிந்தப் பூதலத்திற்
றீதுற்ற செல்வமென் றேடிப் புதைத்த திரவியமென்
காதற்ற வூசியும் வாராது காணுங் கடைவழிக்கே. 10

(இ - ள்.) வாதுற்ற - வாதிற்பொருந்திய, திண்புயர் - திண்ணியதோளினரான, அண்ணாமலையர்-அண்ணாமலை நாதரது, மலர்ப்பதத்தை-மலரனைய பாதங்களை, போதுற்று - அடைந்து, எப்போதும் - எந்நேரமும், புகலு நெஞ்சே - துதிப்பாயாக மனமே, இந்தப் பூதலத்தில் - இந்தப்பூமியில், தீதுற்ற-துன்பம் பொருந்திய, செல்வம்-செல்வத்தை, என் - எதற்காக, தேடி - சம்பாதித்து, புதைத்து-புதைத்த திரவியமென்-திரவியமெதற்காக, காதற்றவூசியும்-மூளியூசியும், வாராது-வரமாட்டாது, கடைவழிக்கு, மரணத்திற்குப் பின் செல்லும் மார்க்கத்திற்கு. எ - று.

(கு - ரை.) மரணத்துக்குப் பின் செல்வமாதிய துணைவரா அண்ணாமலையார் திருவடிகளே துணையாக வுள்ளன. ஆதலின் நெஞ்சமே அவைகளையே நினைப்பாயாக என்றனர். வாதுற்ற திண்புயரென்றது காளியோடு வாத நடனஞ் செய்தமையின்.

வேதத்தி னுட்பொருண் மண்ணாசை மங்கையை விட்டுவிடப்
போதித்த வன்மொழி கேட்டிலை யோசெய்த புண்ணியத்தா
லாதித்தன் சந்திரன் போலே வெளிச்சம தாம்பொழுது
காதற்ற வூசியும் வாராது காணுங் கடைவழிக்கே. 11

(இ - ள்.) வேதத்தின் - வேதத்தினது, உட்பொருள்-உட்பொருளாய், மண்ணாசை - மண்ணாசையையும், மங்கையை-மாதராசையையும், விட்டுவிட - விட்டு விடுதற்கு, போதித்தவன் - உபதேசித்தவரது மொழி-சொல்லை, கேட்டிலையோ - கேட்டாயில்லையோ, செய்த-நீசெய்துள்ள, புண்ணியத்தால் - நிட்காம புண்ணியத்தால், ஆதித்தன் - சூரியனைப்போலவும், சந்திரன்போலே-சந்திரனைப்போலவும், வெளிச்சமதாம் பொழுது - உடலைவிடுத்து நீ ஒளியுடன்

வெளிப்படுகிற காலத்தில், காதற்றவூசியும் - மூளியூசியும், கடைவழிக்கு - பிந்தியமார்க்கத்துக்கு, வாராது-வராது. எ - று.

(கு-ரை.) நாம் செய்த புண்ணியத்தால், வேதத்தினுட் பொருளான சிவபெருமானே ஆசிரியனுக வெழுந்தருளி மண்ணாசை பெண்ணாசைகளை விட்டு விடுமாறு உபதேசித்ததனைக் கேட்டுள்ளேமாதலின் மரணத்துக்குப் பின் அவை நமக்குத் துணைபுரியா என்றனர் என்க.

மனையாளு மக்களும் வாழ்வுந் தனமுந்தன் வாயின் மட்டே
யினமான சுற்றம யானமட் டேவழிக் கேது துணை
தினையா மளவெள் ளளவா கினுமுன்பு செய்த தவந்
தனையாள வென்றும் பரலோகஞ் சித்திக்குஞ் சத்தியமே. 12

(இ - ள்.) மனையாளும் - பெண்டாட்டியும், மக்களும் - புதல்வர்களும், வாழ்வும் - வாழ்க்கையும், தனமும் - பொன்னும், தன்வாசல்மட்டே - (உடல் விடுத்துச் செல்லுங்கால்) தன்னுடைய வாசலளவே யலங்கரிக்கும், இனமான சுற்றம்-இனமாயுள்ள உறவுகள், மயானமட்டே - சுடுகாட்டளவே சிறப்பைத் தரும், வழிக்குத்துணை ஏது - (இவையெல்லாம் உடலுக்கமைந்தன) உயிர் போம் வழிக்கு சகாயமாக வருவது யாது, தினையாம் அளவு ஆகிலும்-தினையரிசியின் சிறியவளவாகினும், எள்அளவு ஆகிலும்-மேற்சொன்ன தினையினுங் குறுகிய எள்ளின் அளவு ஆகினும், முன்பு - மரணத்துக்கு முன்னர், செய்த தவம் செய்துள்ளதவம் உளதேல் அது, தனையாள-உயிரைக்காக்கவதனுல், பரலோகம் - வீட்டுலகம், சித்திக்கும் - கிடைக்கும், சத்தியம்-உண்மை. எ-று.

(கு - ரை.) பொன் முதலிய எவையும் மரணத்திற்குப் பின்னர் துணையாகாவெனவும் சிறியவளவாகவேனுஞ் செய்த தவமுளதாயினது காத்துப் பரகதி சேர்க்கும் என்றும் இஃதுண்மை யெனவுங் கூறினராதலிற் பொருட் செல்வஞ் சேகரிப்பதினும் தவமாகிய அருட்செல்வஞ் சேகரித்தல் வேண்டு மென்பது கருத்து.

அத்தமும் வாழ்வுமகத்துமட்டே விழியம்பொழுக
மெத்தியமாதரும் வீதிமட்டே விம்மி விம்மியிரு
கைத்தலமேல் வைத்தழுமைந்தருஞ் சுடு காடு மட்டே
பற்றித்தொடருமிரு வினைப்புண்ணிய பாவமுமே. 13

(இ - ள்.) அத்தமும் - செல்வமும், வாழ்வும்-அதனுலுளதான வாழ்வும், அகத்துமட்டே-வீட்டினளவே, மெத்திய-மிகுதியாகச்சூழ்ந்திருந்த, மாதரும்-பெண்களும், விழி - கண்களில், அம்புஒழுக - நீரொழுக, வீதிமட்டே - வீதியளவே, விம்மி விம்மி, பன்முறைதேம்புற்று, இருகை தலைமேல்வைத்து அழும் - இருகரங்களையும் தலைமீதுகுவித்தழுகின்ற, மைந்தரும்-புதல்வரும்

சுடுகாடுமட்டே-சுடுகாட்டளவே. பற்றித்தொடரும்-இறந்துசெல்வானைப் பின்றொடர்ந்து செல்லும், இருவினைப்புண்ணியபாவமும், இவன்செய்த நல்வினை தீவினைகளின்பயனான - புண்ணியபாவமும் - புண்ணியமும்பாவமுமென்பன.

(கு-ரை.) ஒருவன்செய்த புண்ணியபாவங்களையன்றி மற்றெவையும் மரணத்திற்குப் பின்னர் உடன் வராதென்றனர்.

சீயுங்குருதிச் செழுநீர் வழும்புஞ்செறிந்தெழுந்து
பாயும்புடவை யொன்றில்லாத போது பகலிரவா
யீயுமெறும்பும் புகுகின்ற யோனிக்கிரவு பகன்
மாயுமனிதரை மாயாமல் வைக்க மருந்தில்லையே. 14

(இ-ள்.) சீயும்-சீழும், குருதிச்செழுநீர்வழும்பும்-இரத்தமாகியகொழுமையான நீர் சுரக்கின்ற நிணமும், செறிந்து-நெருங்கி மிகுந்து, எழுந்துபாயும்-வெளிப்பட்டொழுகா நிற்கும். புடவைஒன்று-சேலைஒன்று, இல்லாதபோது-கட்டிக்கொள்ளாத காலநேரிடுமானாலப்போது, பகல் இரவு ஆய்-பகற்பொழுதிலும் இராப்பொழுதிலுமாக, ஈயும் எறும்பும் - ஈயும் எறும்பும், புகுகின்ற-நுழைகின்ற-யோனிக்கு, பெண்குறிக்கு, இரவு பகல் - இராப்பகலாக, மாயும் மனிதரை - கெடுகின்றமானுடரை, மாயாமல்வைக்க - கெடாமல்வைத்தற்கு, மருந்து இல்லை-மருந்தொன்று மில்லை. எ-று.

(கு-ரை.) ஆய்ந்து பார்த்தால் ஆபாசமான பகத்துளையின் மனஞ்செலுத்திக்கெடுமக்கள் எந்நாளிற் கெடாதிருப்பர் என்பார். மருந்தில்லையே,என்றார்.

சீதப் பனிக்குண்டு சிக்கெனக் கந்தை தினமிரந்து
நீதுய்க்கச் சோறு மனைதோறு முண்டு நினை வெழுந்தால்
வீதிக்கு ணல்ல விலைமாத ருண்டிந்த மேதினியி
லேதுக்கு நீசலித் தாய்மன மேயென்றும் புண்படவே. 15

(இ-ள்.) சீதப்பனிக்குஉண்டு - குளிரினை மிகுதியுந்தருகின்ற பனிக்காலத்திற்குளது, சிக்கெனக்கந்தை-உறுதியானகந்தைகள், தினம்-நாள்தோறும், இரந்து, பிச்சைவாங்கி, நீதுய்க்க நீ உண்ணுதற்கு, சோறு - அன்னமானது, மனைதோறு முண்டு-வீடுகள்தோறுமுளது, நினைவுஎழுந்தால் - விஷயவிருத்தியுண்டானால், வீதிக்குள்-தெருவீதிக்குள், நல்லவிலைமாதருண்டு-அழகமைந்த பொருட் பெண்டீருளர், இந்த மேதினியில், இந்தவுலகத்தில், மனமே-எனது மனதே, என்றும் புண்பட-என்றுந்துன்புறுமாறு, ஏதுக்கு-எதற்காக-நீசலித்தாய்-நீசலித்தனை. எ-று

(கு-ரை.) எனது மனமே! குளிருக்குப்போர்வைகிடைக்கும், பசிக்குணவு கிடைக்கும், காமவிச்சைக்கு மாதருங்கிடைப்பர் இவைகளையன்றி நீ இல்ல

த்திருந்தனுபவித்தவை யென்னை யெதற்காகவருந்துகின்றனையென வலைமுற்ற சிந்தைக்குச்சாந்தி கூறினர்.

ஆறுண்டு தோப்புண் டணிவீதி யம்பலந் தானுமுண்டு
நீறுண்டு கந்தை நெடுங்கோ வணமுண்டு நித்த நித்த
மாறுண் டுலாவி மயங்குநெஞ் சேமனை தோறுஞ்சென்று
சோறுண்டு தூங்கிப்பின் சும்மா விருக்கச் சுகமுமுண்டே. 16

(இ-ள்.) நித்தம் நித்தம்-நாள்தோறும், மாறுண்டு-மாறுபாடுற்று, உலாவி - விடயபோகங்களில் திரிந்து, மயங்கும்-மயங்குகின்ற, நெஞ்சே-மனமே, ஆறுண்டு-குளித்தற்கு ஆறுளது, தோப்புண்டு. மனோகரமாயுளத்தோப்புளது, அணிவீதி-அழகியவீதிகளில், அம்பலந்தான் உண்டு-கிடந்துறங்கப்பொதுச்சாவடியுளது, நீறுண்டு - அணிவதற்கு விபூதியுளது, கந்தை - கந்தையான, நெடுங்கோவணம்-நீண்டகோவணம், உண்டு உடுத்திக்கொள்ளுதற்கு உளது, மனைதோறுஞ்சென்று-வீடுகள் தோறும் போய்-சோறு உண்டு - சோற்றைப்பிச்சையாகப்பெற்றுண்டு, தூங்கி. நித்திரைசெய்து, பின் - பின்னர், சும்மாஇருக்க, சும்மாஇருக்க. சுகமும்-இன்பமும்-உண்டு-உளது. எ-று.

(கு-ரை.) ஆற்றிற் குளித்துத்தோப்புட்டங்கி ஊரிலுண்டம் பலத்துளுறங்கிப்பின் சும்மா விருக்கச்சுகமுளது என்பதாம்.

உடுக்கக் கவிக்கக் குளிர்காற்று வெய்யி லொடுங்கி வந்தாற்
றடுக்கப் பழைய வொருவேட்டி யுண்டு சகமுழுதும்
படுக்கப் புறந்திண்ணை யெங்கெங்கு முண்டு பசித்துவந்தாற்
கொடுக்கச் சிவனுண்டு நெஞ்சே நமக்குக் குறைவில்லையே. 17

(இ-ள்.) நெஞ்சே-உள்ளமே, உடுக்க-உடுத்தவும், கவிக்க-தலை மீது போட்டுக்கொள்ளவும், குளிர்-குளிரிலும் - காற்று-காற்றிலும், வெய்யில் - வெய்யிலிலும்.ஒடுங்கி-உடலம் ஒடுக்கமுற்று வந்தால், தடுக்க-அவைகளாலுண்டாகுந்தட்பவெப்பங்களைத் தடுத்தற்கு, பழயவொருவேட்டியுண்டு.பழயவொராடையுளது, சகமுழுதும், உலகமுழுமையும், புறந்திண்ணை-வெளித்திண்ணை, எங்கெங்கு முண்டு, எவ்விடத்திலுமுளது, படுக்க-படுத்தற்கு, பசித்துவந்தால்-பசித்தடைந்தால், கொடுக்க-கொடுத்தற்கு, சிவன் உண்டு, சிவபெருமானிருக்கின்றார் ஆதலால், நமக்குக்குறைவில்லை-நமக்குயாதொருகுறைவுமில்லை. எ-று.

(கு-ரை.) நமக்குடுத்தற்கு வேட்டியும் படுக்கவிடமும் பசியாற்றச்சிவனுமிருத்தலிற் குறைவுபாடு யாதொன்று மில்லையென்றனர்.

மாடுண்டு கன்றுண்டு மக்களுண் டென்று மகிழ்வதெல்லாங்
கேடுண்டெ னும்படி கேட்டுவிட் டோமினிக் கேண்மனமே

யோடுண்டு கந்தையுண் டுள்ளே யெழுத்தைந்து மோதவுண்டு
தோடுண்ட கண்டனடியார் நமக்குத் துணையு முண்டே. 18

(இ-ள்.) மாடுஉண்டு-மாடுஉளது, கன்றுண்டு-கன்றுளது, மக்கள் உண்டு, புதல்வர்உளர், என்று, என, மகிழ்வது எல்லாம் - சந்தோடமுறுவதெல்லாம், கேடுஉண்டெனும்படி-கேடுளது என்னும் வண்ணம், கேட்டு - கேள்வியுற்று, விட்டோம்-துறந்தோம், மனமே இனிக்கேள், எனது நெஞ்சமே இனியான் சொல்வதைக்கேட்பாயாக, ஓடுஉண்டு-பிச்சாபாத்திரமுளது, கந்தை, உண்டு-உடுத்தற்குக்கிழிந்தவாடையுளது, உள்ளே ஓத-மானதமாகச்செபிக்க, எழுத்து ஐந்து உண்டு-ஸ்ரீபஞ்சாட்சரமிருக்கின்றது, தோடு உண்ட-தோடு பொருந்திய, கண்டன்-ஸ்ரீகண்டரானசிவபெருமானது, அடியார் - அடியவர்கள், நமக்குத் துணையும் உண்டு. நந்தமக்குத்துணையாகவுமுளர். எ-று.

(கு-ரை.) நாம் மாடுகன்று மக்களாதிகளாற் கேடேயுண்டாகுமென்று கேட்டுத்துறவுற்றோம். துறவுற்றநாம் ஓடுங்கந்தையுமைந்தெழுத்தும், சிவனடியார் துணையுமுடையோம் ஆதலிற்குறைபாடற்றேயிருக்கின்றோ மென்றனர் என்க.

மாத்தா னவத்தையு மாயா புரியின் மயக்கத்தையு
நீத்தார் தமக்கொரு நிட்டையுண் டோநித்த னன்புகொண்டு
வேர்த்தாற் குளித்துப் பசித்தாற் புசித்து விழிதுயின்று
பார்த்தா லுலகத் தவர்போ லிருப்பர் பற் றற்றவரே. 19

(இ-ள்.) மா-சிறந்த, தானவத்தையும்-சுவர்க்காதிலோகங்களிலுள்ளசிந்தாமணி கற்பகம் காமதேனு ரம்பாமுதலிய வஸ்துக்களையும், மாயாபுரியின்-மாயாலோகத்தின் மயக்கத்தையும், மயக்கத்தினையும் நீத்தார் தமக்கு, இறைவனருளால்பயனற்றவையெனவுணர்ந்து விடுத்தவுட்டுறவினர்க்கு, ஒரு நிட்டையுண்டோ-ஒருநிட்டையுளதோ? நித்தனன்புகொண்டு-அழியாதசிவபெருமான் அன்பைப்பொருளாகப்பெற்று, வேர்த்தால்-வெயருற்றால், குளித்து-நீராடி, பசித்தால்-பசியெடுத்தால், புசித்து-போசனஞ்செய்து, விழிதுயின்று-கண்ணுறங்கி-பார்த்தால் - பார்வையிட்டால், உலகத்தவர்போல் - உலகத்தவரையொப்ப, இருப்பர்-இருப்பார்கள், பற்று அற்றவர்-பந்த நிவிர்த்திபெற்றவர்கள். எ-று.

(கு-ரை.) சொர்க்கமுமதன்கணுள்ளபோகதிரவியங்களும் மாயாகாரியமானவுலகமும் துச்சமானபொருளென இறைவனருளாலுணர்ந்து அவைகளை வெறுத்துச் சிவபெருமான்றிருவடி மலர்களில் அன்புடைய ஞானவொருவன் வெயர்த்தாற் குளிப்பன் பசித்தாற் புசிப்பன் நித்திரை வந்தாலுறங்குவனாதலினவனைப் பற்றற்றவனென்றறியப்படா விடினும் அன்னோன் பற்றற்றோனே என்று ஞானசாரங்கைப்பற்றிய மேலோனைப்புகழ்ந்துரைத்தனர்.

ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருவுயர் செல்வமெல்லா
மன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல்லறமு நட்பு
நன்றென் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி
யென்றன் றிருமன மேயுனக் கேயுப தேசமிதே. 20

(இ-ள்.) மனமே - எனது மனதே, உனக்கே - உன்றனுக்கே, இது உப தேசம் - (யான் கூறும் இந்த வாக்கியமான) உபதேசமானது, ஒன்று என்று இரு—ஒப்பற்றதென வுணர்ந்து இருப்பாயாக, (அந்த உபதேசம் ஏதுவென்றால்) தெய்வம் - கடவுள், உண்டு - இருக்கிறார், என்று - என, இரு - துணிந்திருப்பாயாக, உயர் - உயர்ந்த, செல்வம் எல்லாம் - செல்வமனைத்தும், அன்று என்று இரு - நிலையற்றவையெனக் கருதி யிருப்பாயாக, பசித்தோர், உணவின் வேட்கை யுற்றோரது, முகம் - முகத்தை, பார் - பார்ப்பாயாக, நல்லறமும் - பதிபுண்ணியமும், நட்பும்-சீவகாருணியமும்; நன்று என்று இரு—நல்லன என்று இருப்பாயாக, நடுநீங்காமல் - பொது நிலையினின்று மாறாமல், நமக்கு இட்டபடி - நமக்கமைத்த முறைப்படியன்றி, வேறு வருவது என்று என்று - எந்நாளில் என, இரு — இருப்பாயாக.

(கு-ரை.) மனதே யானுனக்குச் செய்யும் உபதேசம் இதுவாகும் ஏதுவென்றால். தெய்வமுண்டென் றிருத்தலும், அதாவது நித்தியமானதெனக் கருதியிருத்தலும், நித்தியமானதுபோற் காணப்படும். செல்வமனைத்தும் அநித்தியமென வறிந்து கோடலும் பசித்தோர்முகம் பார்த்தலும் பதிபுண்ணியமும் உயிர்ப்பகையின்மையும் நல்லவையென இருத்தலும் விருப்பு வெறுப்பின்றிப் பொதுமையாக நாமனுபவிக்கு மூழனைத்தும் நமக்கிறைவன் அமைத்த வண்ணமென்றிருத்தலும் என வறிசவென்பதாம்.

இனி தெய்வமொன்றே யெனவும் அத்தெய்வமே அழியாத பரம்பொருளெனவும் மோக திரவியங்களான செல்வமாதிய வனைத்தும் நிலையில் பொருளெனவும் ஆன்மாக்கள் அறமுங் கருணையும் பொருந்தினரா யிருக்கவேண்டுமென்பதனையும் நமக்கு வருமா கூழ்போகூழாதிய வனைத்தும் நம்மாலியற்றப்பட்ட வினையின்பயனாய் இறைவனா லளிக்கப்படுதலி னவைகளை யெத்தகையோரு மனுபவித்தே தீரவேண்டுமென்பதனையும் மனத்தை முன்னிலையாக வைத்துலகிற் கறிவுறுத்தன ரெனினுமாம் "தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி" என்னுந் தமிழ் மறைப்படி தெய்வமுளதென விரு எனவும் ஒருவனுயுலகேத்த நின்ற நாளென்ற சுருதியை யுட்கொண்டு ஒன்றென்றிரு-எ-ம். பொய்ம்மாயப் பெருங்கடல் என்ற சுருதிப்படி உலகபோகமான செல்வத்தை அன்றென்றிரு-எ-ம். "ஊழிற் பெருவலியாவுள என்பதனைக்கொண்டு நினக்கு வரும் துன்பங்கள் ஊழ்முறையா லுண்டாமவையென் றிரு என்பார். இட்டபடி என்றென்று" எ-ம் கூறினர்.

நாட்டமென் றேயிரு சற்குரு பாதத்தை நம்புபொம்ம
லாட்டமென் றேயிரு பொல்லா வுடலை யடர்ந்தசந்தைக்
கூட்டமென் றேயிரு சுற்றத்தை வாழ்வைக் குடங்கவிழ்நீ
ரோட்டமென் றேயிரு நெஞ்சே யுனக்குப தேசமிதே. 21

(இ-ள்.) நெஞ்சே - எனது மனமே, நம்பு - (நான் கூறுவதை யுனக்கு றுதியானதென) நம்புவாயாக, உனக்கு - உன்றனுக்கு, உபதேசம்இது - இது உபதேசமென்றுருதி, அதாவது, சற்குருபாதத்தை - ஞானசாரியனது திருவடிகளை, நாட்டம் என்றே - நாடும் பொருளான பரப்பொருட் டியானமெனவே, இரு - கருதியிரு, பொல்லா உடலை - அடாதசெயற்குரிய இவ்வுடலத்தை, பொம்மல் ஆட்டம் - தோற்பாவைக்கூத்து, என்றேஇரு — எனவேகருதி இருப்பாயாக, சுற்றத்தை - மக்கள் மனையொக்கல் முதலிய சுற்றங்களை, சந்தைக்கூட்டம் — சந்தையிற்கூடுஞ் சனத்திரள், என்றே — எனவே, இரு - இருப்பாயாக, வாழ்வை - இவ்வுலக வாழ்வினை, குடம் - குடத்தினின்றும், கவிழ் - சாய்த்த, நீர் - வெள்ளத்தின், ஓட்டம்என்றே - ஓட்டமெனவே, இரு-இருப்பாயாக, எ-று.

(கு-ரை.) குருவே சிவமெனக்கூறினனந்தி என்பதனால் சற்குருபாதத்தை நாட்டமென்றே இரு-எ-ம். "வாழ்வாவது மாயம்" என்பதனால், பொம்மல் ஆட்டம் சந்தைக்கூட்டம், குடங்கவிழ்நீர் ஓட்டம் எனமுறையே உடல் சுற்றம் வாழ்வென்பனவற்றை அநித்தியப்பொருளென்றனர்.

என்செய லாவதி யாதொன்று மில்லை யினித்தெய்வமே
யுன்செய லேயென் றுணரப்பெற் றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோவிங்ங னேவந்து மூண்டதுவே. 22

(இ-ள்.) தெய்வமே - கடவுளே, இனி நின்னை என்னிறைவனென்றிருந்தபின்னர் - என்செயல் ஆவது, என்னுடைய செயலாக வுண்டாவது, யாதொன்றும் இல்லை, ஏதுவொன்றும் இன்றாம், உன்செயலே-அனைத்தும் நின்செய்கையேயென, உணரப்பெற்றேன் - அறியப்பெற்றேன், இந்த தேகத்தை நானல்லவென வுணர்ந்து தள்ளிய பின்னர், செய்ததீவினை - செய்யப்பட்ட கொடிய செயலேதொன்றுமின்றாம், பிறப்பதற்கு - இத்தகைய ஞானமுண்டாதற்கு, முன்செய்த-தேகமே யான்மாவென்றிருந்த காலத்துச்செய்த, தீவினையோ - தீச்செயலோ, இங்ஙனே - இவ்வாறு, வந்துமூண்டது - வந்து சேர்ந்தது. எ-று.

(கு-ரை.) ஆண்டானடிமையாக உணர்ச்சிவந்த பின்னர் ஆட்டுவித்தாலாரொருவராடாதாரே என்றபடி அனைத்தும் நின்செயலென வுணர்ந்தேன்

அங்ஙன முணர்ந்தபின்னர் என்செயலொன்று மில்லையாகவும் இங்ஙனே வந்துமூண்டது நின்னருளடைதற்கு முன்செய்த கன்மபலமோ அறிகிலேன்.

இனி இந்த வூனெடுத்தபின்செய்த தீவினையாதொன்றுமில்லை என்பதற்கு இந்த மாங்கிச வுடலமான மனிதசரீரப் பிறப்பை யானடைந்ததற்குப் பின்செய்தபாவமோ யாதொன்றும் இல்லையெனவும் "பிறப்பதற்கு முன் செய்த தீவினையோ" என்பதற்கு இப்பிறப்பிற்கு முந்திய பிறப்புக்களிற் செய்த பாவகன்மமோ எ-ம் கூறலாகும். இக்கருத்தாக சிவன்செயலாலே யாதும் வருமெனத் தேறேனுளும் என்றார் தாயுமானவரும்"

இப்பாசுரம் அடிகள் கழுவினைக்கண்டு கூறியதென்ப

விவரம்.

பத்திரகிரியெனப் பெயருள்ள ஒரு மன்னவனது நகரினருகில் திருவெண்காட்டடிகள் சென்று ஒரு விநாயகராலயத்துள் ஒரு இரவில் நிட்டைகூடியிருந்தனர் அன்றிரவு அரசமாளிகையுட்சென்று திருடவேண்டுமெனும் எண்ணத்துடன் வந்த சில கள்வர்கள் வியாயகப்பெருமானைச் சுட்டிப்பெருமானே இன்றிரவு எங்கள்நினைவு கைகூடிவந்தால் தேவரீரை மறவாது நன்றாய்ப்பூசிப் போமெனக்கூறிச் சென்றனர். சென்றார்க்கு அரசமாளியுள் வேண்டுமளவும் இரத்திநாபரணங்களும் பொற்குவியல்களுங் கிடைத்தன, எவர்கண்ணுக்கும் புலப்படாமல் வெளிவந்த கள்வர்கள் திரும்பிவருங்காலத்து விநாயகராலயத்தில் வந்து அரசனணியும் இரத்தினவடமொன்றையெடுத்து விசிறி விநாயகர் மீதிட்டனர் அவ்வாரம் விநாயகரருகி லிட்டையிலிருந்த அடிகள் கழுத்தில் விழுந்தது அதனையறியாதடிகள் நிரதிசய இன்பநிட்டையிலிருந்தனர். பிற்றைநாட் காலையில் அரசமாளிகையிற் களவுசெய்த கள்வரைப்பிடித்துவரும் வண்ணம் அமைச்சனு லேவப்பெற்று நாற்புறமுஞ்சென்ற காவலருட் சிலர் விநாயகராலயத்துளுற்றுப்பார்த்து அரசனணியும் இரத்தினவட மணிந்திருக்கும் அடிகளைக்கண்டு கள்வர் தலைவனென வுட்கொண்டு பிடித்திழுத்து அரசன்முன்கொண்டு நிறுத்தினர் தனது கண்டசரம் பூண்டிருந்த அடிகளை யாராயாதன்னேன் கழுவிலிட வுத்தரவிட்டனன் அவனுணைப்படி காவலர் கழுக்கோலினருகி லடிகளை யழைத்துவந்தனர் அப்பொழுது நிட்டைதெளிந்து புறநோக்கம் விளங்கிய வடிகள் தம்மைக் கழுவிலிடுவான் கொண்டுவந்திருத்தலையுணர்ந்து புன்னகைகொண்டிச்செய்யுளை அருளிச்செய்தனர். என்பதாகும்.

திருவேட மாகித் தெருவிற் பயின்றெனைத் தேடிவந்து
பரிவாகப் பிச்சை பகருமென் றனைப் பதம் பணிந்தேன்
கருவாகு மேதக் கடற்கரை மேவக் கருதுமென்னை
யுருவாக்கிக் கொள்ளவல் லோவிங்ங னேசிவ னுற்றதுவே. 23

(இ-ள்.) திருவேடம் ஆகி - சிவனடியார் திருவுருவங்கொண்டு, தெருவில் - வீதியில், பயின்று உலாவி, எனை-அடியேனை, தேடிவந்து - விசாரித்தெய்தி, பரிவாக - விருப்பத்துடன், பிச்சை - பிச்சையை, பகரும் என்றனை - பகிர்ந்திடும் என்றருளிச்செய்தவரை, பதம் - திருவடிகளை, பணிந்தேன் - வணங்கினேன், கருவாகும் - பிறப்புண்டாகும், ஏதம் - துன்பமாகிய கடல்கரை-சமுத்திரத்தின் கரையை, மேவ-அடைய, கருதும்-நினைக்கின்ற என்னை - அடியேனை, உருவாக்கிக்கொள்ள அல்லோ – தமது பொருளான அடிமையாகச் செய்துகொள்ளுதற்காகவன்றோ-இங்ஙனே, இவ்வண்ணம் சிவனுற்றது-சிவபெருமானெழுந்தருளியது-எ-று.

(கு-ரை.) பிச்சான்னத்தாற் றேகதாரணைசெய்துகொண்டு சமாதியிலிருக்கும் அடிகள் ஒருதினம் பிச்சைவாங்கி வந்த சமயத்தில் இறைவனுமோரடியவரைப்போல வேடந்தாங்கி இவரிடமடைந்து பிச்சையிடுகவென இவரும் தாமெடுத்துவந்த பிச்சையை யவர்க்களிக்க அவரதனைப்பெற்று மகிழ்ந்து மறைந்தருள இறைவனென் றுணர்ந்து மகிழ்ந்துகூறிய திச்செய்யுளென்ப.

தம்மைச் சனனசாகரத்திருந்தெடுத் தாட்கொள்ளக் கருதியோ சிவனடியார் வேடங்கொண்டு வந்து தம்பாலெய்தி இரந்தனரென அறிஞர் கூறுநிற்பச்சிலர் இச்செய்யுட்கு, திருவேடமென்பது கற்பின்மிகுந்தோமென்று கர்வித்திருந்த தாருகாவன மாதரைக் கற்பழிக்கக்கொண்ட வுருவமெனவும் தெரு அம்முனிவர் வீதியெனவும். உருவாக்கிக்கொள்ளுதல் சாரூப்பியமுத்தியெனவுங் கூறுகின்றனர்.

விட்டே னுலகம் விரும்பே னிருவினை வீணருடன்
கிட்டே னவருரை கேட்டுமிரேன்மெய் கெடாதநிலை
தொட்டேன் சுகதுக்க மற்றுவிட் டேன்றொல்லைநான்மறைக்கு
மெட்டே னெனும்பர மென்னிடத்தே வந்திங்கெய்தியதே. 24

((இ-ள்.) விட்டேன் - விடுத்தேன், உலகம் - உலகத்தை, விரும்பேன் - விரும்பமாட்டேன், இருவினை - நல்வினை தீவினைகளை, வீணருடன் - உபயோகமற்றவர்களுடன், கிட்டேன் - நெருங்கேன், அவர் உரை - அவ்வீணரின்சொற்களை, கேட்டும் இரேன் - கேட்டுக்கொண்டும் இரேன், மெய்கெடாதநிலை - உண்மைப்பொருள் அழியாதநிலையை, தொட்டேன் - கைப்பற்றினேன், தொல்லை - புராதனமான, நான்மறைக்கும் - சதுர்வேதங்களுக்கும், எட்டேன் எனும் - அப்பாற்பட்டு நிற்பேன் என்கின்ற, பரம் - சிவமாகிய, பொருள் - பொருளானது, என்னிடத்தே - என்னிடத்தில், வந்திங்கு - வந்து இவ்விடத்தில், எய்தியது - கிட்டியது. எ-று.

(கு-ரை.) நான்மறைக்கும் எட்டேனெனும் பரம்பொருளென்னிடத்து வந்தெய்தியவதனால் யான் உலகினைவிட்டேன் இருவினைகளை விரும்பேன்

வீணருடன் பழகுதலும் அவர் மொழியைக்கேட்டலும் விடுத்தேன் அழியாத நிலைமையை யடைந்தேன் என்பதாம்.

அட்டாங்க யோகமு மாதார மாறு மவத்தை யைந்தும்
விட்டேறிப் போன வெளிதனி லேவியப் பொன்று கண்டேன்
வட்டாகிச் செம்மதிப் பாலூற லுண்டு மகிழ்ந்திருக்க
வெட்டாத பேரின்ப மென்னை விழுங்கி யிருக்கின்றதே. 25

(இ-ள்.) அட்டாங்கயோகமும் - அட்டாங்கங்களையுடைய யோகத்தினையும், ஆதாரம் ஆறும்-ஷடாதாரங்களையும், அவத்தை ஐந்தும்-பஞ்சாவத்தைகளையும் விட்டு ஏறிப்போன, கண்டு கழித்து - மேலேசென்ற, வெளிதனில்— அருள் வியாபகவெளியில், வியப்பொன்று - ஆச்சரியமொன்று, கண்டேன்— தரிசித்தேன், வட்டுஆகி - இனிமையிற் கருப்பு வட்டுப்போல்வதாயுள்ள செம்மதிப்பால் ஊறல் உண்டு, செவ்விய சந்திரகலாமிருதத்தை யருந்தி, மகிழ்ந்திருக்க - நிரதிசயவின்பானுபவமுற்றிருந்த, எட்டாத பேரின்பம் - கிட்டுதற்கருமையான பேரின்பமானது என்னை விழுங்கிஇருக்கின்றது, என்னைத் தன்னுளாக்கி அழியாது நிற்கின்றது. எ-று.

(கு-ரை.) இயம நியமாதன தாரணைப்பிராணாயாம பிரத்தியாகார தியானசமாதிகளையுடைய யோகவழியில் மூலாதார சுவாதிட்டான மணிபூரகவனுகத விசுத்தி யாக்கினையென்னு மாதாரங்களையும் படைத்தழிக்கும் இயல்பினையும் சாக்கிர சொப்பன சுழுத்தி துரிய துரியாதீதமாகிய பஞ்சாவத்தைகளையும்கடந்து ஞானசாதகமுற்று அருள்மயமான இடத்தையடைந்து கருப்பு வட்டினு மினிக்குஞ் சந்திரகலாமிர்தத்தை யுண்டு இருக்கும் வண்ணம் பிறருக்குக் கிடைக்காத பேரின்ப மெனக்குக்கிடைத்தது என்றனர். வட்டென்பதற்கு வட்டமான என்பாரும். வண்டு என்பாரும் உளர்.

எரியெனக் கென்னும் புழுவோ வெனக்கெனு மிந்தமண்ணுஞ்
சரியெனக் கென்னும் பருந்தோ வெனக்கெனுந் தான்புசிக்க
நரியெனக் கென்னும்புன் னாயெனக் கென்னுமிந் நாறுடலைப்
பிரியமு டன்வளர்த் தேனித னாலென்ன பேறெனக்கே. 26

(இ-ள்.) இந்நாறு உடலை - இந்த நாற்றம்பொருந்திய உடலத்தை, எரி எனக்கு என்னும் - தீயானதெனக்குரிய தென்றுநிற்கும், புழுவோ எனக்கென்னும்-கிருமிகளோ எனக்கெனக்கென்றுநிற்கும், இந்த மண்ணும்-இந்தப் பிருதிவியும், எனக்குச் சரிஎன்னும்-எனக்குச் சரியானதென்னும், பருந்தோ- எனக்கு என்னும் பருந்தோ எனக்குடைய தென்றுநிற்கும், தான்புசிக்க — தானுண்ணுதற்கு, நரியெனக்கு என்னும் - குறுநரியானது எனக்கென்றுகூறும், (இங்ஙனமாக இதனைப்) பிரியமுடன்-விருப்பத்துடன், வளர்த்தேன் —

வளர்த்தனன், இதனல் - இவ்வுடலத்தால், எனக்கு என்னபேறு - எனக்கு யாது பயன். எ-று.

(கு-ரை.) வெறுமக்களின் உடலாலொருபயனு மில்லையென்பதை விளக்க ஆன்றோராசாரம்பற்றி எனக்கிதனு லென்ன பயனென்றனர். இதனல் தேகத்தின் நிலைமையையும் உரிமையின்மையும் விளக்கினர்.

அண்ணறன் வீதி யரசிருப் பாகு மணிபடையோர்
நண்ணொரு நாலொன்ப தாமவ ரேவலு நண்ணுமிவ்வூர்
துண்ணென் பசிக்கு மடைப்பள்ளி யானசுகமுமெல்லா
மெண்ணிலி கால மவமே விடுத்தன மெண்ணரிதே. 27

(இ-ள்.) அண்ணல்தன் - சிவபெருமானது, வீதி - சந்நிதான வீதியே, அரசு இருப்பாகும் - நமக்குஅரசாட்சி இருப்பிடமாகவுள்ளது, அணிபடையோர் - அழகிய சேனுவீரர்கள், நண் ஒரு நால் ஒன்பது ஆம் - பொருந்திய முப்பத்தாறு பேர்களாகும். அவர்-அம்முப்பத்தறுவரின், ஏவலும்-ஊழியமும், நண்ணும் - பொருந்திநிற்கும், இவ்வூர் - நாம் இப்பொழுது வாழும் இந்த ஊரனைத்தும், துண்ணென் பசிக்கு-விரைந்துவருகிறபசிநோய்க்கு, மடைப்பள்ளியான - சமையற்சாலையாக வாயின, சுகமும் எல்லாம் - இத்தகைய ஞானராச்சியபரிபாலன சுகமனைத்தும், எண் இலி காலம்-அளவற்றகாலம், அவமே விடுத்தனம்-அநுபவியாது வீணேகழித்தனம். எண்ணரிது-அவையிற்றை எண்ணுதலருமையாகும். எ-று.

(கு-ரை.) துறவறத்தின்பெருமையை விளக்கிக்கூறியதிது, ஊரெல்லாம் அட்டசோறு நமமதே என்ற மணிவாசகப் பெருமானையொப்பக் கூறியதாகும் இதற்கு ஆருதார நிலை பரப்பிரமத்துக்கரசிருக்கு மிடமெனவும் முப்பத்தறுவகை தத்துவங்களும் அப்பிரமத்துக்கு ஏவல் செய்யுமெனவும் இந்த உடலாகிய வூர் ஐம்புலன்களுந் தம்பசிநோய் நீங்குதற்கு மடைப்பள்ளியாகுமெனவும் இவ்வாமுன வின்பத்தை நுகராமல் வாணுளை வீணுளாக்கிக் காலங்கழித்தனம் எனவும். ஆன்மானுபவத்திற் கன்னியமான சிவானுபவத்தினை இலேசமும் பெற்றேனில்லை என்முர் எனவுங் கூறுப.

என்பெற்ற தாயரு மென்னைப் பிணமென் றிகழ்ந்துவிட்டார்
பொன்பெற்ற மாதரும் போவென்று சொல்லிப் புலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம் வந்து குடமுடைத்தா
ருன்பற் றொழிய வொருபற்று மில்லை யுடையவனே. 28

(இ-ள்.) உடையவனே-சிவபெருமானே, என்பெற்ற தாயரும் - என்னையீன்ற அன்னையரும், என்னை - என்றனை, பிணம் என்று - சவம்என, இகழ்ந்துவிட்டார் - இகழ்ச்சிசெய்துதொலைத்தனர், பொன்பெற்றமாதரும்-

பரியமளித்து மணஞ்செய்துகொண்ட மனைவியரும், போஎன்றுசொல்லி – போதிஎன்று கூறி, புலம்பிவிட்டார் - அழுதுதொலைத்தனர், கொன்பெற்ற- வன்மையமைந்த, மைந்தரும் - புதல்வர்களும், பின்வலம்வந்து - பின்னிடத்தில் சுற்றிவந்து, குடம் உடைத்தார் - குடத்தை யுடைத்தனர், ஆதலின் உன் பற்று ஒழிய, உனக்கு மெனக்குமுள்ள நீங்காத பந்தமன்றி - ஒருபற்றும் வேறொரு பந்தமும் இல்லை அடியேனுக்குண்மையில் இல்லை. எ-று.

(கு-ரை.) மாதர் மனைவியர் மைந்தரென நிற்குமின்னோர் தேகத்தை யானெனக் கருதி தேகநட்டமுண்டாங்காலத்துக் கைவிடுத்துப் பகைஞரை யொப்பச்செல்லுகின்றனர். இறைவனொருவனே எத்தனைச் சன்மங்கள் வரினும் என்னைவிட்டுப் பிரியாமல் எனக்குற்ற துணையாக விளங்குகின்றனர். என வறிந்துகொண்டேன் என்றனர்.

கறையற்ற பல்லுங் கரித்துணி யாடையுங் கள்ளமின்றிப்
பொறையுற்ற நெஞ்சமும் பொல்லாத வூணும் புறந்திண்ணையுந்
தறையிற் கிடப்பு மிரந்துண் ணு மோடுஞ் சகமறியக்
குறைவற்ற செல்வமென் றேகோல மாமறை கூப்பிடுமே. 29

(இ-ள்.) கறை அற்றபல்லும் – கறையில்லாத தந்தமும், கரித்துணி ஆடையும்-கரித்துணியாகிய ஆடையும், கள்ளம்இன்றி-வஞ்சனையிராமல், பொறை உற்ற-சாந்தமடைந்த, நெஞ்சமும் - மனதும், பொல்லாத ஊணும்-சுவையற்றவுணவும், புறந்திண்ணையும் - வெளித்திண்ணைவாசமும், தறையில் கிடப்பும் - தரையிற் கிடத்தலும், இரந்துண்ணும் – பிச்சைவாங்கி அருந்துகின்ற ஓடும் - மண்ணோடும், சகம் அறிய - உலகமறிய, குறைவற்ற - குறைவு இல்லாத, செல்வம் என்றே - செல்வம் எனவே, கோலமாமறை - அழகிய சிறந்த வேதம், கூப்பிடும்-முறையிடாநிற்கும்.

(கு-ரை.) உபநிடதங்களுள் நாரதபரிவிராஜ கோபநிடதமானது இப் பாட்டின் பொருளை நன்கு வலியுறுத்துகின்றது துறவறச்செயலிழிந்த செயலன்று வேதத்தாற் புகழ்ந்துரைக்கப்பெற்ற உயர்ந்த செயலென விளக்குவார் இங்ஙன முரைத்தனர்.

கறை - தாம்பூலக்கறையென வறிக.

எட்டுத் திசையும் பதினாறு கோணமு மெங்கு மொன்றாய்
முட்டித் ததும்பி முளைத்தோங்கு சோதியை மூடரெல்லாங்
கட்டிச் சுருட்டித்தங் கக்கத்தில் வைப்பார் கருத்தில்வையார்
பட்டப் பகலை யிரவென்று கூறிடும் பாதகரே. 30

(இ-ள்.) எட்டுத்திசையும் - திசை எட்டும், பதினாறுகோணமும் - பதினாறு கோணமும், ஆகிய எங்கும் - எவ்விடத்திலும், ஒன்றாய் - ஒரேதன்மை

யாய், முட்டி - நிறைந்து, ததும்பி - மேல்வழிந்து, முளைத்து - உண்டாகி ஓங்குசோதியை - உயர்ந்து விளங்கும் அருட்பெருஞ்சோதியை; மூடர் எல்லாம்-மூடரானவரும், கட்டிச்சுருட்டி - சுருட்டிக்கட்டி, தம் கக்கத்தில்-தமது கைப்மூலத்தில், வைப்பர் — வைப்பார்கள், கருத்தில்-உள்ளத்தில், வையார்—வைக்கமாட்டார்கள், பட்டப்பகலை — வெட்டவெளிச்சமான அப்பரஞ்சோதியான பகற்காலத்தினை, இரவு என்று — வெளிச்சமற்ற இராத்திரியென்று, கூறிடும் பாதகர் - சொல்லும்பாவிகள். எ-று.

(கு-ரை.) பட்டப்பகலை இரவென்று கூறிடும் பாதகர்களே எங்குநிறைந்த அருட்பெருஞ் சோதியான சிவத்தைக் கருத்தில் வையாமற் கட்டிச் சுருட்டி தங்கக்கத்தில் வைப்போர். எங்குநிறைந்த சிவபெருமானை விக்கிரகமுதலியவைகளில் மாத்திரம் இருப்பவராகக்கொண்டு அவரைத்தியானிக்க வகையறியாது விக்கிரவர்களைச் சுமந்து திரிவோம் எ-ம். நூல்களைமாத்திரம் படித்துச் சுமத்தலையன்றி இறைவனை யுள்ளிற் கருதார் மூடரெனவுங் கூறியபடி.

வாய்நாறு மூழன் மயிர்ச்சிக்கு நாறிடு மையிடுங்கண்
பீநாறு மங்கம் பிணவெடி நாறும் பெருங்குழிவாய்ச்
சீநாறும் யோனி யழனாறு மிந்தியச் சேறுசிந்திப்
பாய்நாறு மங்கையர்க் கோவிங்ங னேமனம் பற்றியதே. 31

(இ-ள்.) வாய்நாறும் ஊழல் - ஊழல்நாற்றம் வாயில் நாறுநிற்கும், மயிர் சிக்குநாறிடும் — தலைரோமமோ, சிக்குநாற்றம் வீசாநிற்கும், மையிடுங்கண்-மைதீட்டுகிற கண்கள், பீநாறும் - பீனைநாற்றம் வீசாநிற்கும், அங்கம் - உடலம், பிணவெடி நாறும் - பிணநாற்றம் வீசாநிற்கும், பெருங்குழிவாய் குய்யத்தில் - சீநாறும் - சீநாற்றம் வீசாநிற்கும், யோனி - யோனியில், அழல்நாறும் - தீநாறும், இந்தியம் சேறுசிந்தி-சுக்கிலமாகிய சேறு சிந்துற்று, பாய்நாறும்-பாயானது நாறுநிற்கும் மங்கையர்க்கோ-பெண்கட்காகத்தானோ, இங்ஙனே-இவ்விடத்தில், மனம்-மனமானது, பற்றியது-பற்றுவைத்தது. எ-று.

(கு-ரை.) எல்லாவங்கங்களும் இழிவுடைய மாதர்களிடத்தில்தானோமனம் பற்றவேண்டும் முற்றிலும் தூய்மையாளனான இறைவனை மனம் பற்றக்கூடாதா என்பது குறிப்பு.

உரைக்கைக்கு நல்ல திருவெழுத் தைந்துண் டுரைப்படியே
செருக்கித் தரிக்கத் திருநீறுமுண்டு தெருக்குப்பையிற்
றரிக்கக் கரித்துணி யாடையுமுண் டெந்தச் சாதியினு
மிரக்கத் துணிந்துகொண் டேன் குறை யேது மெனக்கில்லையே. 32

(இ-ள்.) உரைக்கைக்கு - சதாசொல்லிக்கொண்டிருத்தற்கு நல்ல திரு ஐந்து எழுத்து உண்டு-நன்மையமைந்த அழகிய ஸ்ரீபஞ்சாக்கர மந்திரமுளது உரைப்படியே - தரிக்கச்சொன்ன வேதாகம முறைப்படியே, செருக்கித்

தரித்தற்கு, இறுமாந்து - உடலி லணிந்துகொள்ளுதற்கு, திருநீறும் உண்டு-விபூதியும் உளது, தரிக்க - உடுத்திக்கொள்ளுதற்கு, தெரு குப்பையில்-தெருவிலுள்ள குப்பைகளில், கரிதுணி ஆடையும் உண்டு - அழுக்குக்கந்தலாடைகளுமுள, எந்தச் சாதியினும் - எந்தச்சாதியினும், இரக்க - பிச்சைவாங்க, துணிந்துகொண்டேன் - உறுதிகொண் டிருக்கின்றேன், இதனால். குறையாதும் - யாதொரு குறைவும், எனக்கு இல்லை, எனக்குக் கிடையாது. எ-று.

(கு-ரை.) எனக்கு வாக்கின் றொழிலுக்கு ஸ்ரீபஞ்சாட்சரமும் பூசிக்கொள்ளுதற்கு வேதபடிதமான திருநீறும் அணிந்துகொள்ளுதற்கு கரித்துணியாடையும் உணவிற்கு எல்லாச்சாதியிலும் இரந்துண்ணுதலும் முறையெனக்கொண்டேன் ஆதலின், எனக்கு யாதுங்குறைவில்லை என்றனர். அதிவன்னாச்சிரமத்தை யடைந்த துறவிகட் கிணை யெங்கு மிலரென இதனாலறியக்கூறினர்.

ஏதப்பட் டாயினி மேற்படும் பாட்டையி தென்றறிந்து
போதப்பட் டாயில்லை நல்லோரிடஞ் சென்று புல்லறிவால்
வாதைப்பட் டாய் மட மாதர்கலவி மயக்கத்திலே
பேதைபட் டாய் நெஞ்சமே யுனைப் போலில்லை பித்தருமே. 33

(இ-ள்.) மனமே - மனதே, ஏதப்பட்டாய் - துன்பமுற்றனை, இனி மேற்படும்பாட்டை - இனிமேலடையும் துன்பத்தினை, ஈதென்று அறிந்து - இது என வுணர்ந்து, நல்லோர் இடம் - சிவஞானிகளிடம், சென்று-போய், போதப்பட்டா இல்லை-சிவஞானத்தையடைந்தாயில்லை, புல் அறிவால்-உனது சிவபோதச் சேட்டையால், வாதைபட்டாய் - நீ யேதலைவனெனக் கருதித் துன்பமுற்றனை, மடம்மாதர்-மடப்பத்தினையுடைய மாதருடன்கூடும், கலவி மயக்கத்திலே, இணைவிழைச்சாகிய மயக்கத்தினில், பேதப்பட்டாய்-வேறுபாடடைந்தனை, (ஆதலின் - ஆராயுமிடத்து,) பித்தர் - அறிவு மயங்கினவர்கள், உனைப்போல் இல்லை - உன்னையொத்தவர் இலர். எ-று.

(கு-ரை.) மனதே பசுபதிபாசங்களின் பாகுபாடுகளை யுணராமையால் துன்புற்றனை. அவை போகநல்லாசிரியனை யடுத்து சிவஞானச் செல்வமெய்தித்துன்பநீங்கிச் சுகமுறுது மாதர்மயலுட் பேதப்பட்டனை ஆதலின் உனையொத்த பித்தரெவருமிலர்.

சுரப்பற்று வல்வினைசுற்றமுமற்று த்தொழில்களற்று
கரப்பற்று மங்கையர்கையிணக்கற்று க்கவலையற்று
வரப்பற்று நாதனைவாயாரவாழ்த்தி மனமடங்கப்
பரப்பற்றி ருப்பதன்றோபராமாபரமா னந்தமே. 34

(இ-ள்.) பரமா - பரமனே, வல்வினை - தீவினைகள், சுரப்பு அற்று-சுரத்தல் நீங்கி, சுற்றமும் அற்று-உறவினரும் நீங்கி, தொழில்கள் அற்று-மன மொழிகளாற் செய்யும் பந்தச்செயல்களும் ஒழிந்து, காப்புஅற்று - பொன் முதிகளைமறைத்துவைத்தலும் நீங்கி, மங்கையர்கை இணக்கு அற்று - மாதர் கையாற்றழுவுதலு மொழிந்து, கவலையற்று - மனோவிசாரமுமொழிந்து, வரப்பு அற்று - அளவன்றி, நாதனை-சிவபெருமானை, வாயாரவாழ்த்தி - வாயால் வாழ்த்துதல் செய்து, மனம்அடங்க - மனோலயமுண்டாக, பரப்புஅற்று இருப்பது அன்றோ - விடய வியாபார நீங்கி அருளிற் கலந்திருப்பதன்றோ. பரமானந்தம் - சிவானந்தம். எ-று.

(கு-ரை.) வல்வினைச் சுரப்பற்றுப்பந்தமுதலியவொழிந்து இறைவனை வாயாரவாழ்த்தி நிர்விகாரமாக விருந்து துதித்தலே பேரின்பமென விளக்கினார்.

பேய்போற் றிரிந்து பிணம்போற் கிடந்திட்ட பிச்சையெல்லா
நாய்போ லருந்தி நரிபோ லுழன்றுநன் மங்கையரைத்
தாய்போற் கருதித் தமர்போ லனைவர்க்குந் தாழ்மைசொல்லிச்
சேய்போ லிருப்பர்கண் டீருண்மை ஞானந் தெளிந்தவரே. 35

(இ-ள்.) உண்மைஞானம்-மெய்ஞ்ஞானம், உணர்ந்தவர்கள் - அறிந்தவர்கள், பேய்போல்திரிந்து - திரிதலில் பேய்போலவும், பிணம்போல் கிடந்து-கிடத்தலிற் பிணம்போலவும், இட்டபிச்சை எல்லாம்-பிறரிட்ட பிச்சையனைத்தும், நாய்போலருந்தி-உண்ணுதலில் நாயெனவும், நரிபோல் உழன்று-உழலுதலில் நரியெனவுழன்றும், நன்மங்கையரை-குலமாதர்களை, தாய்போல்கருதி-தாயைப்போலநினைத்தும், அனைவர்க்கும்-உலகினரனைவருக்கும், தமர்போல்-சுற்றத்தினைப்போல், தாழ்மைசொல்லி-தாழ்மொழிகூறி, சேய்போல் இருப்பர்-இருக்குந்திறத்தில் குழவியைப்போல இருப்பர், (கண்டீர்-முன்னிலையசை.) எ-று.

(கு-ரை.) உண்மைஞான முணர்ந்தோர் பேய்போற்றிரிதலையும் பிணம்போற் கிடத்தலையும் நாய்போலருந்துதலையும் நரிபோலுழலுதலையும் மாதரைத் தாய்போற் கருதுதலையும் அனைவரிடத்துந் தமர்போற் தாழ்வுகூறுதலையும் உடையாராய்ச்சேய்போ லிருப்பாரென்க.

விடக்கே பருந்தின் விருந்தே கமண்டல வினனிட்ட
முடக்கே புழுவந் துறையிட மேநல முற்றுமிலாச்
சடக்கே கருவி தளர்ந்துவிட் டாற்பெற்ற தாயுந்தொடாத்
தொடக்கே யுனைச்சுமந் தேனின்னி னேது சுகமெனக்கே. 36

(இ-ள்.) விடக்கே-மாமிசபிண்டமே, பருந்தின்விருந்தே - பருந்தெனும் பறவைக்கு விருந்துப்பொருளே, கமண்டலவினன்-கமண்டலமேந்தியவெழுவி

யோனுணபிரமன், இட்ட-அமைத்துவைத்த, முடக்கே-சிறுகுடிலே, புழுவந்து உறையிடமே-புழுக்கள்தங்கும் இடமே, நலம் - நன்மையென்பது, முற்றும் இலா-சிறிதும் இல்லாத, சடக்கே-உடலே அல்லதுசட்டையே, கருவி-அந்தக் கரணம், தளர்ந்துவிட்டால்-தளர்ச்சியடைந்தால், பெற்றதாயும்-ஈன்ற அன்னையும், தொடா-தீண்டாத, தொடக்கே-தீட்டுப்பொருளே, உனை-உன்னை, சுமந்தேன்-தாங்கினேன், நின்னில்-உன்னால், எனக்குசுகமெது-எனக்கென்ன சுகம். எ-று.

(கு-ரை.) இவ்வுடலின் றுபாசத்திற மனைத்தும் விளக்கியிருத்தல் காண்க தொடக்கு என்பதற்கு எழுவகைத் தாதுக்களால் பின்னப்பட்ட தாதலின் தொடக்கென்றனரென்ப; இறந்தபின்பெவருந்தொடாத அசுத்தப்பொருளாக மதிக்கப்படுதலிற் தொடக்கென்பதற்குத் தீட்டென்றும்.

அழுதாற் பயனென்ன நொந்தாற் பயனென்ன வாவதில்லை
தொழுதாற் பயனென்ன நின்னை யொருவர் சுடவுரைத்த
பழுதாற் பயனென்ன நன்மையுந் தீமையும் பங்கயத்தோ
னெழுதாப் படிவருமோ சலியாதிரென் னேழை நெஞ்சே. 37

(இ-ள்.) என் ஏழைநெஞ்சே-எனதேழைமனதே, அழுதாற்பயன்என்ன-அழுதமையாற் பிரயோசனம்யாது, நொந்தாற் பயன்என்ன - நோதலாற்பயனென்ன, தொழுதாற்பயன்என்ன-வணங்கினுற் பயனென்ன, ஒருவர்நின்னை-ஒருவர் உன்னை, சுடஉரைத்த-மனம் வருந்தக்கூறிய, பழுதாற் பயனென்ன-குற்றமானசெயலாற் பயனென்ன, ஆவதுஇல்லை-இவைகளால் ஆகப்போவது ஒன்றும் இல்லை, நன்மையும் - நல்லவையும், தீமையும்-தீயவையும், பங்கயத்தோன்-கமலாசனுன பிரமன், எழுதாப்படி-எழுதாவகை, வருமோ-வாராநிற்குமோ, சலியாதுஇரு-சலனமுறுமல் இருப்பாயாக. எ-று.

(கு-ரை) சாதன்முதலிய வுண்டாகுங்காலத்தழுதலாலும் தெய்வமே என நோதலாலும் பிறர் நம்மைத்தொழுதலாலும் இகழ்தலாலும் ஒருபயனும் ஆவது இல்லை பிரமலிபிப்பிரகாரம் நன்மையுந் தீமையும் வருமேயன்றி வேறு வித மா கவராதென்க.

செல்வரைப் பின்சென் றுபசாரம் பேசித் தினந்தினமும்
பல்லினைக் காட்டிப் பரிதவி யாமற் பரானந்தத்தி
னெல்லையிற் புக்குநல் லேகாந்த மாயெனக் காமிடத்தே
யல்லலற் றென்றிருப் பேனால நீழலரும் பொருளே. 38

(இ-ள்.) ஆலநீழல்-கல்லாலநிழலில் எழுந்தருளி யிருக்கின்ற, அரும்பொருளே-அரியபரம்பொருளே, செல்வரை-சம்பனரின், பின்சென்று-பின்போகி உபசாரம்பேசி-உபசாரங்கூறி, தினம்தினமும்-நாடோறும்,பல்லினைக்காட்டி-பல்லினைத் திறந்திளித்துக்காட்டி, பரிதவியாமல் - வருந்தாமல், பரமானந்தத்

தின்-சிவானந்தத்தின், எல்லையில்புக்கு-முடிவை அடைந்து, நல் ஏகாந்தமாய்-மிகவும் தனிமையாய்,எனக்கு-என்றனக்கு, ஆம் இடத்தே-ஆகிய இடத்தில், அல்லல்அற்று-சலனம்இன்றி, என்று இருப்பேன்-எந்நாளில்இருப்பேன்.எ-று

(கு-ரை.) ஆலநிழலரும்பொருளே செல்வர் பின்சென் றுபசாரம்பேசி நாடோறும் பல்லிளைக்காட்டிப் பரிதவியாமல் எனக்கானவிடத்தில் ஏகாந்த மாய்ப்பரமானந்த எல்லையையடைந்து அல்லலற்று எந்நாளிருப்பேன். அல்லல் பிறரிடமிச்சகம் பேசலாதியனவும் கரணேந்திரியங்களின் விடய வியாபாரங் களுமாகும்.

ஊரீருமக்கோ ருபதேசங்கேளு முடம்படங்கப்
போரீர்சமணைக் கழுவேற்று நீற்றைப் புறந்திண்ணையிற்
சாரீரனந்தலைச் சுற்றத்தைநீங்கிச் சகநகைக்க
வேரீருமக்கவர் தாமே தருவரிணையடியே. 39

(இ-ள்.) ஊரீர்-ஊரினரே, உமக்கு-உங்களுக்கு, ஒரு-ஒப்பற்ற, உபதேசம்-உபதேசத்தை, கேளும்-கேளுங்கள், சமணை-சமணர்களை, கழுவேற்றும்-கழுவிலேற்றிய, நீற்றை-விபூதியை, உடம்புஅடங்க - உங்கள் சரீரமுழுதும், போரீர்-பூசுங்கள், சுற்றத்தைநீங்கி-மனைவிமக்கள் ஒக்கலென்னுஞ் சுற்றத்தை விடுத்து, புறந்திண்ணையில்-வெளித்திண்ணையில், சாரீர்-அடைவீர், அனந்தலை நீங்கி-வீண்தூக்கத்தை விடுத்து, சகம்-உலகம், நகைக்க-சிரிக்குமாறு, ஏரீர்-பிச்சையேற்பீர்களாக, உமக்கு - இங்ஙனஞ்செய்வீரானு லுங்களுக்கு, அவர் தாமே-அந்தச் சிவபெருமானே, தருவார்-அளிப்பார், இணையடி-சரணயுகளங் களை-எ-று.

(கு-ரை.) தாமின்புறுவ துலகின் புறுவதெனுந்தக்க காரியலைக் கடைப் பிடித்துத் தம்மையொப்பப் பெருந்துறவினையடைந்து சுகமுறுவான் உலகினரை விளித்துரைத்தனர். யான்கூறியாங்கு துறவறநிலைபெறுதிரேல் திருவடியின்பத்தினை இறைவன்றாமாக வேநுமக்குத் தருவனென்றனர். இறைவனுக்குத் துறவறமதிக விருப்பமாயுள்ளதென்பதனை விளக்க. விபூதியின் மகிமையினை விளக்கச் சமணைக்கழுவேற்றிய நீற்றை என்றனர். அது சமணரால் நீக்க முடியாத வெப்புநோயை ஞானசம்பந்தப்பெருமான் மந்திரமாவது நீறென்ற தமிழ் வேதம் பாடிவெப்பு நோயாற்றி மற்றையவாதங்களிலும் சமணரை வென்று கழுவேற்றுவித்துப்பாண்டிநாடுமுழுமையும் திருநீற்று வெற்றியையுண்டாக்கினமையின் என்க.

நீற்றைப்புனைந்தென்ன நீராடப்போயென்ன நீமனமே
மாற்றிப் பிறக்க வகையறிந்தா யில்லைமாமறைநூ
லேற்றிக்கிடக்கு மெழுகோடிமந்திர மென்னகண்டா
யாற்றிற் கிடந்துந் துறையறியாம லலைகின்றையே. 40

(இ-ள்.) மனமே-என்மனதே, நீ-நீ, நீற்றை-விபூதியை, புனைந்துஎன்ன-தரித்தென்ன, நீராட-தீர்த்தங்களில் முழுகுதற்கு, போய்என்ன-யாத்திரையாகச் சென்றுஎன்ன, மாற்றிப்பிறக்க-இதுகாறும் மலத்துட்சிக்கிப்பிறந்தது போலன்றி அருளிற்படியமாற்றிச் சனித்தற்கு, வகையறிந்தாஇல்லை - முறையை அறிந்துகொண்டாய் இல்லை, மாமறைநூல்-சிறந்த வேதாகமங்களில, ஏற்றிக்கிடக்கு-வைக்கப்பெற்றுக் கிடக்கின்ற, எழுகோடிமந்திரம்-சத்தகோடி மகாமந்திரம், என்னகண்டாய்-என்னவுணர்ந்தனை, ஆற்றில் கிடந்தும்-ஆற்றினிற் கிடந்தும், துறைதெரியாமல்-ஏறுந்துறையறியாமல், அலைகின்றையே-அலைகின்றனையே. எ-று.

(கு-ரை.) விபூதி தாரணமும் தீர்த்த யாத்திரையும் மகாமந்திர செபமும் உடையையேனும் மனமே அருளுருவமாகி மாற்றிப்பிறத்தற்கு அம்மார்க்கம் எளிதாகவும் அதனையறியாத நீ ஆற்றிற்கிடந்தும் துறையறியாதார்க்கே இணையாதி.

ஓங்காரமாய்நின்ற வத்துவிலே யொருவித்துவந்து
பாங்காய்முளைத்த பயனறிந்தாற்பதி னாலுலகு
நீங்காமனீங்கி நிறையாநிறைந்து நிறையுருவா
யாங்காரமானவர்க்கெட்டாக்கனி வந்தமர்ந்திடுமே. 41

(இ-ள்.) ஓங்காரமாய்-பிரணவவடிவமாய், நின்றவத்துவிலே-நின்றபொருளினில், ஒருவித்துவந்து-ஒருவிதைதோன்றி, பாங்குஆக-முறையாக, முளைத்த-தோன்றின, பயன் அறிந்தால்-பிரயோசனம் இன்னதென்று தெரிந்துகொண்டால், பதினாலுலகும்-பதினான்கு உலகமும், நீங்காமல்நீங்கி-வியாபித்திருந்தே வேறாய், நிறையாநிறைந்து-குடத்துணீரென நிறையாது ஆகாயம்போல பூரணமாகி, நிறைஉருவாய் - அகண்டபரிபூரணமாய், ஆங்காரம் ஆனவருக்கு-யானெனு மாணவபோதச் சேட்டையுடையாருக்கு, எட்டா-கிட்டாத, கனி வந்து அமர்ந்திடும்-பழம்வந்து பொருந்தும். எ-று.

(கு-ரை.) ஓங்காரத்திலுண்டான வித்தானது இன்னதற்காக வுண்டாயது என்பதனையறிந்து கொண்டால் அவ்வித்தினால் பதினாலு லோகங்களிலும் நிறையாமல் நிறைந்துநிற்கும் கனியானது கிடைக்கும் இக்கனிவேண்டியவர்கள் தம்மைப் பரதந்திரரெனக் கோடலாகிய அகங்கார மின்மையையுடையராதல் வேண்டும். இனி இதற்கு. பிரணவத்துள் நாதமாத்திரையாயெழுமுண்மையான விசாரத்தால் பிரபஞ்சவுருவந் தோன்றுது அந்நாதத்துக்குக்காரணராகிய சிவபெருமான் றோன்றுவர். எ-ம் பிரணவத்தின் முதலெழுத்தான அகாரமே சிவபெருமானென உள்ளபடி யறிந்தார்க்கு சர்வபரிபூரணனாகிய அப்பரமசிவன்தானே வெளிப்படுவாரென்றும் கூறுப.

விதியார்படைப்புமரியாரளிப்பும்வியன்கயிலைப்
பதியார்துடைப்புநம்பாலணுகாதுபரானந்தமே

கதியாகக்கொண்டுமற்றெல்லாந்துயிலிற்கனவெனநீ
மதியாதிருமனமேயிதுகாணன்மருந்துனக்கே. 42

(இ-ள்.) மனமே—மனதே, பரமானந்தமே-சிவானந்தமொன்றுமே கதியா கக்கொண்டு-நாமடையுங்கதியாகக்கருதி, மற்று எல்லாம்-மற்றவையனைத்தும், துயிலில் - தூக்கத்தில், கனவென - சொப்பனம்போல, நீமதியாதிரு - நீமதிக்காமலிருப்பாயாக, இதுகாண் - இது கண்கூடான, மருந்து உனக்கு - மருந்தாகும் உன்றனுக்கு, (இவ்வகை யனுபவத்தில் நீநிற்பையேல்) விதியார்-பிரமருடைய, படைப்பும் - ஆக்கற்றொழிலும், அரியார் - திருமாலாருடைய, அளிப்பும் - காத்தற்றொழிலும், வியன்-பெருமையமைந்த, கைலைப்பதியார் — கைலாய நாதரின், துடைப்பும் - அழித்தற்றொழிலும், நம்பால் — நம்மிடத்தில், அணுகாது - சாராது, எ-று.

(கு-ரை.) மனமே பிரபஞ்ச காரியங்களை உறக்கத்துக்கனவையொப்ப மதித்துத் திருவருளொன்றையே இலக்காகக்கொண்டு சிவானந்தப்பேற்றை நாடி இருப்பவர்கள். அயனார்படைப்புளும் அரியார் காப்புளும் அரனாரழிப்புளும் அகப்படாமல் சனனமரணரகிதர்களாய் நிரதிசயவின்பமுத்தியாகியதிருவடிப்பேற்றினை யேயுறுவர் என்பார், இதுகாண் மருந்துனக்கேயென்றார். மூன்றவத்தையினுங் கனவுண்மையிற் சொப்பனத்துட் சொப்பனத்தை விளக்குவார் துயிலிற் கனவென வென்றார்.

நாய்க்குண்டு தெண்டு நமக்குண்டு பிச்சை நமனைவெல்ல
வாய்க்குண்டு மந்திர பஞ்சாட் சரமதியாமல்வரும்
பேய்க்குண்டு நீறு திகைப்புண்டு நின்ற பிறவிப்பிணி
நோய்க்குண்டு தேசிகன் றன்னருணோக்கங்க ளுளக்குதற்கே. 43

(இ-ள்.) நாய்க்கு உண்டுதெண்டு — நாய்க்கெவ்விடத்திலும் தெண்டித்தின்னலுளது, நமக்குண்டு பிச்சை - நமக்கெவ்விடத்திலும் பிச்சையுளது, நமனைவெல்ல - யமனை வெல்லுதற்கு, வாய்க்கு உண்டு மந்திர பஞ்சாட்சரம் — வாய்க்கு மந்திரமான பஞ்சாட்சரமுளது, மதியாமல்வரும் - மதிக்காமல்வருகின்ற, பேய்க்கு உண்டுநீறு — பேய்க்குளது திருநீறு, திகைப்புண்டுநின்ற— திகைத்தலுற்று நின்ற, பிறவிப்பிணி நோய்க்குண்டு - சனன வியாதியாகிய நோய்க்குளது, நோக்குதற்கு - நாம் தியானத்திற் பார்ப்பதற்கு, தேசிகன்தன்- ஞானாசிரியனது, அருள்நோக்கங்கள்-அருட்பார்வைகள், உள-உள்ளன எ-று.

(கு-ரை.) நாய்க்குத் தெண்டித்தின்னலும் நமக்குப் பிச்சையும் நமனை வெல்ல மந்திர பஞ்சாட்சரமும் மதியாமல்வரும் பேய்க்குத்திருநீறும் திகைப்புண்டு நின்ற பிறவிப்பிணிநோய்க்குத் தேசிகனருள்நோக்கமும் இருத்தலின் நமக்கென்னை குறையுளதென்றனர். தெண்டலென்பது பிறருண்ணுங் காற் கண்ணிமையானது பார்த்திருந்து அவர்களாலிரக்கத்தாலோ மிகுதியாலோ

வைக்கப்படு மன்னமாதியை உண்ணலென்ப. இதனைச்சோம்பரைத் தெண்டித்தின்போரென இகழ்ந்து கூறுதலைக்கொண்டுணர்க.

தெண்டென்பதனை இலக்கட்டென்பாருமுளர்.

நேமங்கணிட்டைகள்வேதகங்ளாகமநீதிநெறி
யோமங்கடர்ப்பணஞ் சந்திசெபமந்த்ரயோகநிலை
நாமங்கள் சந்தனம்வெண்ணீறுபூசிநலமுடனே
சாமங்கடோறுமிவர்செய்யும்பூசைகள் சர்ப்பனையே. 44

(இ-ள்.) நேமங்கள் - நித்தியநைமித்திய நியமங்களும், நிட்டைகள்- பலதேவர்களையுத்தேசித்துப் பலமுறை தியானம்புரிதலும், வேதாகமங்கள்- வேதங்களையும் ஆகமங்களையும் ஓதுதலும், நீதிநெறி - தருமசாஸ்திரவொழுக்கமும், ஓமங்கள் - ஓமங்களும், தர்ப்பணம்-தருப்பணங்களும், சந்தி-சந்தியாவந்தனமும், செபம் - பலவகை மந்திரங்களும், யோகநிலை - யோகமார்க்கத்தில் நிற்றலும், நாமங்கள் - நாமங்களிட்டும், சந்தனம் - சந்தணமணிந்தும்; வெண்ணீறுபூசி - வெள்ளிய பற்பந்தரித்தும், நலமுடனே - நன்மையுடனே, சாமங்கள்தோறும் – ஒவ்வொரு யாமத்திலும், செய்யும் - செய்கின்ற, பூசைகள் - ஆராதனைகள், சர்ப்பனையே - வஞ்சனையேயாகும், எ-று.

(கு-ரை.) வைகறைத்துயிலெழன்முதலிய நியமங்களையும் சூரிய நமஸ்காரம் இஷ்டதேவதாத்தியானமாதியநிட்டைகளையும் சுவாத்தியாயபடனம் ஆகமபாராயணந் தருமசாத்திர வொழுக்கங் கணபதியோமம் அக்கினிகாரியம் ரிஷிதேவ பிதிர் தருப்பணங்களையும் சந்திசெப மந்திரயோக நிலைகளையும் மண் முதலியவைகளாலிடு மூர்த்துவபுண்டரமான நாமங்களையும், சந்தனாதிகளா லிடப்படுகின்ற திலதங்களையும் பஸ்மத்தாலாகிய திரிபுண்ட ரோத்தூளனாதிகளையும் உடையாராய் யாமங்கள்தோறு மின்னோர்செய்யும் சூரிய நாராயணரை பைரவமூர்த்தியாதி தேவபூசைகளெல்லாம் ஆராயுமிடத்தில் பொய்யாகுமேயன்றி மெய்யாகாதாதலின் அத்தகைய போலிச்செயலில் மயக்கங்கொண்டு நிற்காமல் நிரதிசயவின்பவீடான திருவடியின்பத்தைத் தரும் சிவஞான செல்வத்தினையளிக்கும் அருணிலையில் நிற்பதே தகுதியென்றனர்.

இனி, மனத்தினைப் புறத்தினில் அலையவிடுத்துச் செய்யும் நேமநிட்டைகள் பயனற்றனஎன்பதே கருத்தென்பாரும். மனத்தினையொருவழிப்படுத்தி வேறுசிந்தனை சிறிதுமின்றி மேற்கூறியவற்றைச்செய்யிற் பயனுண்டாமென்பாரும் உளர், ஞானசாரமின்றிச்செய்யுங்கிரியையாதிகள் ஆராயுங்கால் சர்ப்பனையே என்பாரும் உளர்.

நானெத்தனைபுத்தி சொன்னாலும் கேட்கிலை நன்னெஞ்சமே
யேனிப் படிகெட் டுழலுகின்றாயினி யேதுமில்லா
வானத்தின் மீனுக்கு வன்றூண்டி லிட்டவகையதுபோற்
போனத்தை மீள நினைக்கின் றனையென்ன புத்தியிதே. 45

(இ-ள்.) நான் எத்தனை - நான் எவ்வளவு, புத்திசொன்னாலும் - புத்தியைக்கூறினாலும், கேட்டிலே — கேட்டாயில்லை, என் இப்படி - ஏனிவ்வாறு, கெட்டு உழலுகின்றாய்-அழிந்து உழலுகின்றனை, இனி-இனிமேல், ஏதுமிலா-யாதொரு சம்பந்தமும் இல்லாத, வானத்தின் - ஆகாயத்திலுள்ள, மீனுக்கு - மீனெனப்பெயருள்ள உடுக்கணங்களைப் பிடித்தற்கு, வல்தூண்டில் - பெரிய தூண்டில் முள்ளினை, இட்டவகைபோல் - மூடன் இட்டவாறுபோல், போனத்தை - ஆராயுங்கால் இல்லாததாய்ப்போன உலகசுகத்தை, மீள - திரும்பவும், நினைக்கின்றனை - வேண்டுமென்று எண்ணுகின்றனை, இது என்ன புத்தி - இது என்ன அறிவு, எ-று.

(கு-ரை.) இருவினைச் செறிவாலுண்டாகும் இன்பதுன்பங்களான சுகதுக்கங்கள் ஆராய்ச்சியிற் பொய்யாகித் திருவடியின்பமொன்றே மெய்யாக விளங்கவும் மாயா போகங்களை யேன் மெய்யாகக் கருதி விழைகின்றனை விழையாதை என்றனர். இதற்கு ஒருவன்சென்ற விஷயங்களைப்பற்றி மீட்டு மீட்டுமெண்ணி வருந்தல் ஆகாயத்திலுள்ள விண்மீனைப் பிடிக்கவேண்டுமெனக்கருதிப்பூமியிலிருந்தபடி தூண்டின்முள்ளைப்போடக்கருதும் அறிவீனத்தினையொக்கும் என்று கூறுக.

அஞ்சக் கரமெனுங் கோடாலி கொண்டிந்த வைம்புலனும்
வஞ்சப் புலக்கட்டை வேரற வெட்டி வளங்கள் செய்து
விஞ்சத் திருத்திச் சதாசிவ மென்கின்ற வித்தையிட்டுப்
புஞ்சக் களைபறித் தேன்வளர்த் தேன்சிவ போகத்தையே. 46

(இ-ள்.) அஞ்சு அக்கரம் எனும், பஞ்சாட்சரமென்று சொல்லப்படுகின்ற, கோடாலிகொண்டு - கோடரியைக்கொண்டு, இந்த ஐம்புலனும் - இந்த ஐம்புலனென்னும், வஞ்சப்புலக்கட்டை - பொய்யறிவானகட்டையை, வேரற - மூலமற, வெட்டி - சேதித்து, வளங்கள்செய்து - வளமாகச்செய்து, விஞ்சத்திருத்தி - மிகவுந்திருத்தஞ்செய்து, சதாசிவம் என்கின்ற - சதாசிவமென்னும், வித்தையிட்டு — விதையைநட்டு, புஞ்சக்களை - கூட்டமானகளையை, பறித்தேன் - பறித்து, சிவபோகத்தை-சிவபோகமெனும் பயிரை வளர்த்தேன், வளர்த்தனன். எ-று.

(கு-ரை.) ஐம்புலனும் வஞ்சப்புலக்கட்டையை அஞ்சக்கர மென்னும் கோடரிகொண்டு வேரறவெட்டி அவைகளின் வாதனைகளை மறத்தலான வளங்களை யமைத்துச்சதாசிவமெனும் விதையை நட்டுத் தத்துவக்கூட்டமாகிய களைகளைப்பறித்துச் சிவபோகத்தை வளர்த்தேனென்றனர். இனி, ஒருவனுக்குப் பஞ்சாட்சர செபமிருக்குமானால் ஐம்புலச்சேட்டைகள் ஒடுங்கும் ஒடுங்கினால், மனநிலையுறும், உற்றால் அது சதாசிவத்தியானத்துக்கேதுவாகும் ஏதுவாகவே சிவபோகம் விளையும். எனவுங்கூறுப.

தாயாருஞ் சுற்றமும் பெண்டிருங் கைவிட்டுத் தாழ்ந்திடுநா
ணீயாரு நானா ரெனப்பகர் வாரந்த நேரத்திலே
நோயாரும் வந்து குடிகொள்வ ரேகொண்ட நோயுமொரு
பாயாரு நீயுமல் லாற்பின்னை யேதுநட் பாமுடலே. 47

(இ-ள்.) தாயாரும் - மாதாவும், சுற்றமும் - பந்துக்களும், பெண்டிரும் - மனைவியரும், கைவிட்டு - கைசோரவிடுத்து, தாழ்ந்திடும் நாள் - பின்னிடைகின்ற காலத்தில், நீயாரு-நீயார், நான் யார் - நான்யார், என பகர்வர் - என்று கூறுவர்; அந்த நேரத்தில் - அந்தசமயத்தில், நோயாரும் — வியாதியும், வந்து குடிகொள்வர் - வந்து நிலையுறும்; கொண்டநோயும் - மேற்கொண்ட வியாதியும், ஒரு பாயாரும் - கிடைக்குமொருபாயும், நீயும் அல்லால் - நீயுமன்றி, பின்னை ஏது நட்பு ஆம்-வேறு உறவு யாது, உடலே-எனது சரீரமே, எ-று.

(கு-ரை.) எனதுடலமே! செல்வாதிகளுடன் நீ பிறர்க்குபயோகமாகும் வண்ணம் உலாவியகாலத்தில், நாங்கள் தாயாரெனவும் நாங்கள் மனைவியரென வும் உறவாடுவோர் நினக்கு நோயுண்டாகி நீ பாயிற்கிடந் தினித்தேறுமென் றுருகுங்கால், கொண்டநோயும் பாயுமன்றி நினக்கிவர் துணையாகா ரென்பதை உலக வனுபத்தாலறிந் தின்னாரிடத்து நீ வைத்துள்ள அபிமானத்தை விடுத் துத் திருவருளினை நாடுவாயாக. என்றனர்.

ஆயும்பொழுதுமயிர்க்கால்கடோறுமருங்கிருமி
தோயுமலக்குட்டையாகியகாயத்தைச்சுட்டுவிட்டாற்
பேயுநடனமிடுங்கடமாமென்றுபேசுவதை
நீயுமறிந்திலையோபொருடேடநினைந்தனையே. 48

(இ-ள்.) ஆயும்பொழுது - விசாரிக்குங் காலத்தில், மயிர்க்கால்கள்தோறும்-உரோமத்துவாரங்கள்தோறும், அருங்கிருமி-சிறுபுழுக்கள், தோயும்-படிந்துகிடக்கின்ற, மலக்குட்டை—மலநிறைந்த பள்ளமாகிய, காயத்தை-உடலத்தை, சுட்டுவிட்டால்-தகனஞ்செய்தால், பேயும் நடனமிடும்-பிசாசுங் கூத்தாடுகின்ற, கடம் ஆமென்று-காடாகும் என, பேசுவதை-உலகமுரைப்பதனை, நீயும்அறிந்திலையோ-நீயுங்கேட்டுணர்ந்தாயில்லையோ, பொருள் தேட-(இவ்வுடலைக் காத்தற்கு) செல்வந்தேட, நினைந்தனையே-கருதினையே இஃதென்னை?

(கு-ரை.) உரோமத்துவாரங்கள் தோறும் புழுநிறைந்த மலக்குட்டை யாகிய இத்தேக நட்டமுற்றபின்னர் சுட்டசுடலைக்களம் பேயுநடமிடுங் காடா குமெனப் பேசுவதைக் கேட்டிலையோ? மனமே! இதனை வளர்க்கப் பொருள் தேட நினைந்தனை, இஃதாச்சரியம், இவ்வுடன் மீது வீணாசை வையாதை என்று மனதை நோக்கி கூறினர்.

பூணும் பணிக்கல்ல பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக்
காணும் படிக்கல்ல மங்கையர்க் கல்லநற் காட்சிக்கல்ல

சேணுங் கடந்த சிவனடிக் கல்லவென் சிந்தைகெட்டுச்
சாணும் வளர்க்க வடியேன் படுந்துயர் சற்றல்லவே. 49

(இ-ள்.) பூணும்பணிக்குஅல்ல-அணிந்துகொள்ளும் ஆபரணத்துக்கன்று, பொன்னுக்குத்தான்அல்ல-பொன்னைச்சேகரிக்கும் பொருட்டன்று,பூமிதனை காணும்படிக்குஅல்ல - நிலமுடையோனாதலைக்காணுதற்கன்று, மங்கையர்க்கு அல்ல-மடந்தையர்பொருட்டன்று, நற்காட்சிக்குஅல்ல-நல்லகாட்சிக்குஅன்று, சேணும்—ஆகாயத்தையும், கடந்த-நீங்கிநிற்கிற, சிவன்அடிக்குஅல்ல-சிவபெருமானது பாதத்திற்கன்று, என் சிந்தை-என் மனம், கெட்டு-அழிந்து, சாணும் வளர்க்க-சாண்வயிற்றையும் வளர்த்தற்கு, அடியேன் படுந்துயர்-அடியேனடைகின்ற துன்பம், சற்றல்ல-கொஞ்சமன்று, எ-று.

(கு-ரை.) திருவெண்காடர் கொங்குநாட்டில் மௌனவிரதத்துடன் சஞ்சரித்த காலத்திற் பசிப்பிணியை யடக்க ஒருவன் வீட்டுவாசலிற்சென்று நின்றனர். நின்றவிவரை வீட்டுக்குடையோன் கள்வனென நினைத்துக் கோலாற் புடைத்தனன். புடைத்தபொழுது அடிகள் “சிவ சிவ” என்றனர். இச்செயலினைக் கண்ட எதிர் வீட்டுக்காரன் பெரியோரென மதித்தழைத்துச் சென்று உபசாரத்துடன் உணவளித்தனன். அக்காலத்திற் ‘பூணும் பணிக்கல்ல’ என்னும்இக்கவியை யடிகளருளிச்செய்தனரென்ப. ஔவையாரும் “மானங்குலங் கல்வி வண்மையறிவுடைமை, தானந்தவமுயற்சி தாளாண்மை-தேனின், கசிவந்தசொல்லியர்மேற் காமுறுதல்பத்தும், பசிவந்திடப்பறந்து போம்”என்றனர்.

வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம் வேறொருவர்க்
கெட்டாத புட்ப மிறையாத தீர்த்தமினி முடிந்து
கட்டாத லிங்கங் கருதாத நெஞ்சங் கருத்தினுள்ளே
முட்டாத பூசை யன்றோ குருநாதன் மொழிந்ததுவே. 50

(இ-ள்.) வெட்டாத - ஒன்றனிற் பொறிக்காத, சக்கரம் - யந்திரமும், பேசாத-செபிக்காத,மந்திரம்-மந்திரமும், வேறொருவருக்கு-மற்றொருவருக்கு, எட்டாத புட்பம்-பறிக்கப்படாத புட்பமும், இறையாத தீர்த்தம்-அருக்கியமுதலியவையாக இறைக்காத தீர்த்தமும், முடிந்து இனி கட்டாத லிங்கம்-முடிந்து இனிக்கட்டாதஇலிங்கமும்கருத,ாதநெஞ்சம்-தியானஞ்செய்யாதமனதும்ஆகி, கருத்தினுள்—நினைவிற்குள், முட்டாத-தவறாதுசெய்யும், பூசையன்றோ-பூசனையன்றோ, குருநாதன்-குருசிரேட்டன், மொழிந்தது-உபதேசித்தது, எ-று.

(கு-ரை.) பாகிய பூசைக்கு இடம்பொருளேவன் முதலிய வேண்டியிருத்தலின் துறவறத்தினருக்குக் கட்ட சாத்தியமெனவும், அதனால் திருவுளக்கேடுஉண்டாதலுண்மையால்துறவினையடைந்ததமக்கந்தரியாகமேசிறந்ததென ஆசிரியர் உபதேசித்தனரென்பார் ‘குருநாதன் மொழிந்ததுவே’ என்றார்.

எருமுட்டை பிட்கி னுதிர்ந்திடுஞ் செல்லுக் கெவரழுவார்
கருமுட்டை புக்குக் கழலகன் றாய்கன துக்கமதாய்ப்

பெருமுட்டுப் பட்டவர் போலழும் பேதையீர் பேத்துகிற்
றொருமுட்டும் வீட்டு மரனாம மென்றைக்கு மோதுமினே. 51

(இ-ள்.) கருமுட்டைபுக்கு-கருப்பமாகிய முட்டையிற்புகுந்து, சுழல்கின்றீர்-பிறந்திறந்து சுழல்பவர்களே, பெருமுட்டுபட்டவர்போல்-மிக்க தடையையடைந்தவர்களைப்போல, கனதுக்கமதாய் அழும்-மிகுந்த துன்பமுடையவராக அழுகின்ற, பேதையீர்-அறிவிலிகளே, பேத்துகிறீர்-(இந்தஉடலமழியுமென) கலங்குகின்றீர்கள், எருமுட்டை - எருமுட்டையை, பிட்கின் - உடைத்தால், உதிர்ந்திடும்-சிந்துகின்ற, செல்லுக்கு-சிதலுக்கு, எவர் அழுவார்-யாவரழுவர் அழார், ஒருமுட்டும் வீட்டும் - ஒருவகைக்குறைவையும் வராமற்செய்கின்ற, அரன் நாமம் - சிவபெருமானது திருநாமத்தை, என்றைக்கும் - எந்நாளிலும், ஓதுமின்-துதியுங்கள், எ-று.

(கு-ரை.) எருமுட்டையை உடைத்தால் விழுஞ்செல்லுக் கெவருமழாமையை யொப்ப, இத்தேக நீக்கத்துக்காகவும் வருந்துவதிற் பயனில்லை; அரனாமமொன்றே பயன் தரத்தக்கது; ஆதலினதனையே யுரைக்க வுலகீர் விரும்புதிர் விரும்புதிரேல் நற்கதியுறுதிர் என்றனர்.

மையாடு கண்ணியு மைந்தரும் வாழ்வு மனையுஞ்செந்தீ
யையாநின் மாயை யுருவெளித் தோற்ற மகிலத்துள்ளே
மெய்யா யிருந்தது நாட்செல நாட்செல வெட்டவெறும்
பொய்யாய்ப் பழங்கதை யாய்க்கன வாய்மெல்லப் போனதுவே. 52

(இ-ள்.) செந்தீ ஐயா-செவ்வியதீயினையேந்திய ஐயனே! நின் மாயையுருவெளி தோற்றம் - நினது மாயையான உருவெளித் தோற்றமானது, அகிலத்துள்ளே-உலகத்தினுள்ளே, மையாடு கண்ணியும்-மையணிந்தகண்களையுடைய மனைவியும், மைந்தரும்-புதல்வரும், வாழ்வும்-வாழ்க்கையும், மனையும்-வீடும் என, மெய்ஆய் இருந்தது-உண்மையாக இருந்தது; நாள்செல நாள்செல-காலம் போகப்போக, வெட்ட வெறும்பொய்ஆய்-முற்றிலும் பொய்யாய், பழங்கதையாய்-பழயகதைபோல்வதாய், கனவாய் - சொப்பனமாய், மெல்ல - மெல்லென, போனது-கழிந்தது, எ-று.

(கு-ரை.) செவ்வியதீயினைக் கையிலேந்திய ஐயனே ! மனைவியும் மைந்தரும் வாழ்வும் வீடுமாதியவனைத்தும் தேவரீரது மாயா லீலையால் பொய்த்தோற்றமா யுள்ளதெனத் திருவருளா லுணர்ந்தேன்; ஆதலினினித் திருவடிப் பேறொன்றே நித்தியமானதென வறிந்தேன் என்றனர். இனி உலகத்தைப் பரீட்சியாமல் வெளிநாட்டத்துடன் வாழ்ந்தநாளில் அனைத்தும் உண்மைப் பொருளெனத் தோன்றினவெனவும், முறையே தத்துவசோதனை செய்தகாலத்தில் அவரவர்கள் கன்மத்துக்கேற்ப இறைவன் மாயையினின்று காரியப்படுத்திவைத்த பதார்த்தங்களாக விளங்குதலும் அவையிடத்திருந்த பற்றொழிந்தவுடன் அவைமீட்டு முண்மைப் பொருளாகத் தோன்றாத விலையாதலின் 'மெல்லப்போனதுவே' என்றனர் என்றுங் கூறுக.

ஆயாய் பலகலை யாய்ந்திடுந் தூய வருந்தவர்பாற்
போயா கிலுமுண்மை யைத்தெரிந் தாயில்லை பூதலத்தில்
வேயார்ந்த தோளியர் காமவி காரத்தில் வீழ்ந்தழுந்திப்
பேயாய் விழிக்கின் றனைமன மேயென்ன பித்துனக்கே. 53

(இ-ள்) மனமே-எனதுநெஞ்சே, ஆயாய் பலகலை-பலநூல்களையும் ஆராயுந் திறமில்லாய்; ஆய்ந்திடும் - நூல்களை யாராய்கின்ற, தூய-பரிசுத்தமான, அருந்தவர்பால் - அரியதவத்தினரிடத்தில், போயாகிலும் - சென்றாலும், உண்மை தெரிந்தாய் இல்லை-உண்மையை யறிந்தாயில்லை; பூதலத்தில்-உலகத்தில், வேய் ஆர்ந்த தோளியர்-மூங்கிலனைய தோள்களையுடைய மங்கையரின், காமவிகாரத்தில்-இச்சையாகியவிகாரத்தில், வீழ்ந்து அழுந்தி-விழுந்துமுழுகி, பேயாய் - பிசாசுபோலாகி, விழிக்கின்றனை - விழித்துநிற்கின்றனை, என்ன பித்து உனக்கு-என்னபைத்தியம் உனக்கு. எ-று.

(கு-ரை.) உண்மை நூல்கள் பலவற்றைக் கற்றலும் கேட்டலுமாகிய இவை யுடையராயிற் றெளிதலு நிட்டைகூடுதலுமாகிய இவை யெளிதிற் கிட்டுமாதலின் முன்னிரண்டனைக் குறித்தனர். உண்மை நூலுணர்ந்தாரை யுற்றேகேட்க வேண்டுமென்பார் 'போயாகிலும்' என்றனர். பெண் வலைப்பட்டார்க்கு நூலாராய்ச்சி கிட்டாதென்பார் 'என்பித்து' என்றனர். உண்மையென்றது ஆன்மதரிசன சிவதரிசனங்களை எனவுணர்க இனி, பொதுவிலக்கணங்கூறுவது வேதம், சிறப்பிலக்கணங் கூறுவது ஆகமம் ஆதலின் ஆகமங்களை யாராய்ந்திலை 'யென்பார் உண்மையைத் தெரிந்தாயில்லை' என்றனர். "ஆரண நூற்பொதுச்சைவமருஞ் சிறப்புநூலாம்" என்பது சிவஞானசித்தியார். என்றும் கற்றலுங்கேட்டலும் வேண்டுமென்பார் 'ஆயாய்' என்றும், போயாகிலும் என்றவும்மை அவர் வராமையைச் சுட்டுகின்றதென்றுங் கூறுப.

அடியா ருறவு மரன்பூசை நேசமு மன்புமன்றிப்
படிமீதில் வேறு பயனுள தோபங் கயன்வகுத்த
குடியான சுற்றமுந் தாரமும் வாழ்வுங் குயக்கலங்கள்
தடியா லடியுண்ட வாறொக்கு மென்றினஞ் சார்ந்திலரே. 54

(இ-ள்.) அடியார் உறவும்-சிவபத்தர்களின் நேசமும், அரன் பூசை நேசமும்-சிவபூசையில் விருப்பமும், அன்பும் அன்றி-பத்தியும் அல்லாமல், படிமீதில்-இவ்வுலகத்தில், வேறு பயன் உளதோ-வேறுபிரயோசனமுளதோ; பங்கயன்-பிரமன், வகுத்த-படைத்த, குடியான சுற்றமும்-ஒரு குடும்பத்திற்பிறந்த உறவும், தாரமும்-மனைவியும், வாழ்வும்-வாழ்க்கையும், குயக்கலங்கள் - மட்பாத்திரங்கள், தடியால் அடியுண்ட-தடியடிபட்ட, வாறு ஒக்கும்-தன்மையை ஒக்கும், என்று-என, இனம் சார்ந்திலர் - இனத்தினையடையாது துறவுற்று நின்றனர், எ-று.

(கு-ரை.) மனிதனாகப் பிறந்த ஒருவன் சட்டாயமாக அடையவேண்டியது அடியாருறவையும் அரன்பூசை நேசத்தையும் அன்பையுமாம். இவையல்லாதனவற்றாற் பயனின்றென்றனர். அடியரிடத்தும் பூசையிலும் அன்பிலுமே இறைவன் விளங்குதலி னவைகளைக் கூறினர்.

ஆங்காரப் பொக்கசங் கோபக் களஞ்சிய மாணவத்தா
னீங்கா வரண்மனை பொய்வைத்த கூடம்விண் ணீடிவளர்
தேங்கார் பெருமதிற் காமவி லாசமித் தேகங்கந்தல்
பாங்கா யுனைப்பணிந் தெப்படி ஞானம் பலிப்பதுவே. 55

(இ-ள்.) ஆங்காரம்-நானென்பது இருக்கிற, பொக்கசம் - பண்டாரம்; கோபம் - கோபமென்பதிருக்கிற, களஞ்சியம்-பண்டசாலை; ஆணவம்தான்-ஆணவமானது, நீங்கா-விடாமலிருக்கிற, அரண்மனை-அரண்மனை, பொய்வைத்த-பொய்யை வைத்திருக்கிற, கூடம்-கூடம், விண்-வானத்தில், நீடி வளர்-உயர்ந்து வளர்ந்த, தேங்கு ஆர்-நிறைவுபொருந்திய, பெருமதில்-உயர்ந்த மதிலினையுடைய, காம விலாசம்-காமவிலாசம் ஆகிய, இத்தேகம் - இவ்வுடலம், கந்தல்-பலதுவாரங்களை யுடைமையில் கந்தலேயாம், பாங்காய்-முறையாய், உனை பணிந்து - உனைவணங்கி, எப்படி-எவ்வாறு, ஞானம் பலிப்பது-ஞான சித்திபெறுவது, எ-று.

(கு-ரை.) இறைவனே; இத்தேகமானது ஆங்காரங் கோபம் ஆணவம் பொய் காமம் இவைகளுக் கிருப்பிடமுமான கந்தலாதலா லிதனில் வாழ்ந்துகொண்டு உன்னை வணங்கி யுன்னுலளிக்கப்படு ஞானசித்தியை எவ்வாறடைவது என்றனர். இவ்வாறன்றி உடலையே விளித் துரைத்தன ரென்பாருமுளர். "பாங்கா யுனைப்பணிந் தெப்படி ஞானம் பலிப்பதுவே" என்பதற்கு நீ பக்குவமாக இருக்க உன்னை வணங்கி உணவு முதலியவைகளா லுபசரித்தால் எப்படி ஞானம் கைகூடுவது என்ப.

ஒழியாப் பிறவி யெடுத்தேங்கி யேங்கி யுழன்றநெஞ்சே
யழியாப் பதவிக் கவுடதங் கேட்டிய நாதியனை
மழுமான் கரத்தனை மால்விடை யானை மனத்திலுன்னி
விழியாற் புனல்சிந்தி விம்மி யழுநன்மை வேண்டுமென்றே. 56

(இ-ள்) ஒழியா-நீங்காத,பிறவி எடுத்து-சனனமெடுத்து, ஏங்கி ஏங்கி-ஏக்கமுற்று, உழன்ற-கீழுமேலுமாகச்சுழன்ற, நெஞ்சே-நெஞ்சமே, அழியாப்பதவிக்கு-அழிவில்லாத வீட்டுலக மடைதற்கு, ஔடதம்-மருந்து, கேட்டி-கேட்பாயாக, அநாதியனை-என்றுமுள்ளவனை, மழுமான் கரத்தனை - மழுவுமானுமேந்தியகரங்களையுடையானை, மால் விடையானை-பெருமாள் மாட்டையுடையவனை, மனத்தில் உன்னி-நெஞ்சினினைத்து, விழியால் புனல் சிந்தி-கண்களிலானந்தக்கண்ணீர் ஒழுகவிடுத்து நன்மை வேண்டும் என்று, விம்மிஅழு அடியேன் கருதிய நன்மையைத் தரல்வேண்டும் எனத் துதிப்பாயாக, எ-று.

(கு-ரை.) அழியாப்பதவியை விழைந்தார் அழியாதானையே வேண்டுதல் வேண்டுதலின் அறுதியனை எ-ம் கண்ணீர்கம்பலையாதிகளுடன் யாசித்தார்க்கே அதுகிட்டுமாதலின் விம்மியழு எ-ம் விம்மி யழவே வேண்டுமென்பதனை "மெய்தானரும்பி" விம்மியழுதாற் பெறலாமே என்பதனானுமறிக. அறுதியாளவ னிவனெனவிளக்குவான் மழுமான்கரத்தனை மால்விடையானை என்றனர்.

நாய்க்கொரு சூலு மதற்கோர் மருத்துவ நாட்டிலுண்டோ
பேய்க்கொரு ஞானம் பிடிபடு மோபெருங் காஞ்சிரக்கா
யாக்குவ ரார தருந்துவ ராரதுபோலுடம்பு
தீக்கிரை யாவதல் லாலேதுக்காமிதைச் செப்புமினே. 57

(இ-ள்.) நாய்க்கு ஒரு சூலும்-நாய்க்கு முயற்சியுடன் வளர்க்கவேண்டிய கருப்பமும், அதற்கு ஒரு மருத்துவம்-அப்படி கருப்பமுண்டாக்குதற்கு ஒரு வைத்தியமும், நாட்டில் உண்டோ-உலகத்தில் உளதோ, பேய்க்கு-பிசாசினுக்கு, ஒருஞானம் - ஒப்பற்றஞானம், பிடிபடுமோ - மனதிற் பதியுமோ, பெருங்காஞ்சிரங்காய்-பெரிய எட்டிக்காயை, ஆக்குவர் ஆர்-சமைப்பவர்கள் யாவர், அது அருந்துவர் ஆர்-அதனைத் தின்னுபவர்கள் யார், அதுபோல்-அதனைப்போல, உடம்பு-இச்சரீரம், தீக்கு இரை ஆவது அல்லால் - நெருப்புக்கு உணவு ஆதலன்றி, எதுக்கு ஆம்-வேறெதற்கு ஆகும், இதை-இதனை செப்புமின்-உரையுங்கள், எ-று.

(கு-ரை.) இச்செய்யுளை பத்திரகிரியார்க்குத் தேகத்தினிழிவைச் செவியறிவுறுத்த அடிகள்கூறினரென்ப. நாய்க்குக்கருவுண்டாக எவரும்வைத்தியஞ் செய்ய முன்வாராவாறு பேயனையானுக்கு மெவருஞானமுணர்த்தார் பயனின்மை கருதி என்றனர். உணவுக்குதவாத எட்டிக்காயைச் சமைப்பாருந் தின்னுவாரும் இல்லாவண்ணம் பிரயோசனமற்றவுடலை விரும்புவாரும் அதனாலின்ப நுகருவாரும் அறிஞரிலெவரு மிலரென்க என்றனர் நாய்க்குண்டான சூலைக் கவனித்து மருத்துவஞ் செய்வாரில்லாமைபோல் பேய்போலுழலுஞ் சமுசாரிகளுக்கு ஞானோபதேசஞ் செய்வாருமெவரு மிலரெனவும் பயனற்றஎட்டியையொப்ப இவ்வுடலமும் தீக்கிரையாகி ஒரு பயனுமில்லாதொழியு மெனவுங் கூறினரெனினுமாம்.

கச்சிற் கிடக்குங் கனதனத் திற்கடைக் கண்கள் பட்டே
யிச்சித் திருக்கின்ற வேழைநெஞ் சேயிமவான் பயந்த
பச்சைப் பசுங்கொடி யுண்ணு முலைபங்கர் பாதத்திலே
தைச்சுக் கிடமன மேயொரு காலுந் தவறில்லையே. 58

(இ-ள்.) கச்சில்கிடக்கும்-கச்சுக்குள் கிடக்கும், கனதனத்தில்-பெருத்த கொங்கைகளில், கடைக்கண்கள்பட்டு-கடைக்கடை பொருந்தி, இச்சித்து இருக்கின்ற-அதனையே விரும்பி யிருக்கின்ற, ஏழை நெஞ்சே-வீரமற்ற நெஞ்சமே, இமவான் பயந்த-மலையரசன் பெற்ற, பச்சைப்பசுங்கொடி-பச்சைநிறமும்பசு

மையுமமைந்த கொடிபோல்பவளாகிய, உண்ணுமுலை பங்கர்-அபீதகுசாம்பி கையை ஒரு புறத்திலுடையவரான சிவபெருமானது, பாதத்தில்-திருவடிக ளில், தச்சுக்கிட மனமே-பொருந்திக்கிட நெஞ்சமே, ஒருகாலும்-ஒருகாலத்தி லும், தவறில்லை-தவறுதல் உண்டாகாது, எ-று.

(கு-ரை.) கொடியிடை மடவியர் கொங்கைக்குடங்களில் அடுகளிறனைய ஆண் மக்கள் சிக்குண்டு கிடத்தல் இயல்பாதலின் தனத்தில் இச்சித்திருக் கின்ற வேழை நெஞ்சே எ-ம் திருவடிஞானமே சிவகதிக்கேதுவாதலில் தைச் சுக்கிட எ-ம் அருளிச்செய்தனர் திருவடியடைதலே சிவகதியென்பதனை திரு வடியே சிவமாவது தேரிற்றிருவடியே சிவலோகஞ் சித்திக்கிற், திருவடியே செல்கதியது செப்பிலற்றிருவடியே தஞ்சமுட்டெளிவார்க்கே என்னுந்திருமந் திரத்தாலுணர்க.

மானார் விழியைக் கடந்தேறி வந்தனன் வாழ்குருவுங்
கோனாகி யென்னைக் குடியேற்றிக் கொண்டனன் குற்றமில்லை
போனாலும் பேறிருந் தாலுநற்பேறிது பொய்யன்றுகா
ணானு மிந்த வுடம்போடிருப்ப தருவருப்பே. 59

(இ-ள்.) மானார் விழியை-மான்போலும் பார்வையினையுடைய மாதரின் கண்களை, கடந்துஏறிவந்தனன்-தப்பி (உயர்ந்ததுறவறமென்னும் மேட்டிலேறி வந்துளேன்) வாழ்;குருவும்-இறைவன் திருவடிநீழலில் வாழ்கின்ற ஞானசாரி யனும், கோன் ஆகி-எனக்கு ஆசிரியனாகி, என்னை-அடியேனை, குடி ஏற்றி கொண்டனன்-திருவடிநிழலிற் குடியேறச்செய்தனன் குற்றம் இல்லை-தோட மில்லை,'போனாலும்-இவ்வுடலழிந்துபோனாலும், பேறு இனியான் அடைவது திருவடிப்பேற்றையேயிருந்தாலும் நற்பேறு-அழியாதிருந்தாலுமடைவது நல்ல திருவடிப்பேற்றையே, இது பொய் அன்று-இஃதுண்மையே, ஆனாலும்-ஆகி லும், இந்த உடம்போடு-இந்த தேகத்துடன், இருப்பது அருவருப்பு - இருப் பதுவெறுப்புக்கிடமே யாகும். எ-று.

(கு-ரை.) மிகுந்த துன்பத்துக்கிடமான மாதர்கண்வலையினின்று தப்பி சத்குரு கடாட்சம் அடைந்து திருவருள் வீட்டில் குடியிருத்தலால் முத்திபெ றுவது திண்ணம் ஆகிலும் இவ்வுடலுடனிருப்பது மாத்திரம் அருவருப்புக் கிடமென்றனர்.

சற்றா கினுந்தன்னைத் தானறி யாய்தனை யாய்ந்தவரை
யுற்றா கினுமுரைக் கப்பொருந் தாயுனக் கானதில்லை
பற்றாய் குருவைப் பணியாய் பாத்தையர் பாலிற்சென்றேன்
பெற்றாய் மடநெஞ்ச மேயுனைப்போலில்லை பித்தனுமே. 60

(இ-ள்.) சற்று ஆகிலும்-சிறிதேனும், தனைத்தான் அறியாய்-உனது தன் மையை நீ உணர்ந்திலை, தன்னை ஆய்ந்தவரை-தன்னைவிசாரித்துணர்ந்தோரை, உற்றாகிலும்-அடைந்தாயினும், உரைக்க-பொருந்தாய்அவர்களுரைக்கக்கேளாய்

உனக்கு ஆன-உனக்குரியதான, நிலைபற்றாய்-நிலையையடையாய், குருவைபணியாய் - ஆசாரியனை வணங்காய், பரத்தையர்பாலிற்சென்று-வேசையரிடஞ்சென்று, என்பெற்றாய்-யாதுபெற்றனை, மடநெஞ்சமே-அறியாமையினையுடையமனமே, உனைப்போல்-உன்னைப்போல், பித்தனும் இல்லை — பைத்தியக்காரனும் இல்லை. எ-று.

(கு-ரை.) ஆன்மாவாகிய தன்னை அராவுடைமையெனவும் நித்தியனெனவும் சதசத்தெனவும் அறிதலே தன்னைத்தானறிதலாம். மேற்கூறியவண்ணம் தன்னையுணர்ந்து தலைவனையடைந்த வாசிரியர்களேதனை யாய்ந்தவராவார். திருவருளைப்பற்றிக் கிடத்தலே உனக்கான நிலையாம். இவைகளையெல்லாமுக்கியமாக அடைதற்கு வேண்டியது ஆசிரியவழிபாடேயாகும்.

உளியிட்ட கல்லையு மொப்பிட்ட சாந்தையும் மூத்தையறப்
புளியிட்ட செம்பையும் போற்றுகி லேனுயர் பொன்னெனவே
யொளியிட்ட தாளிரண் டுள்ளே யிருத்துவ துண்மையென்று
வெளியிட் டடைத்துவைத் தேனினி மேலொன்றும் வேண்டிலனே.

(இ-ள்.) உளியிட்டகல்லையும்-உளியினால் வேலைசெய்யப்பட்ட கல்லினையும், ஒப்பிட்ட சாந்தையும்-உறுப்புக்களை நிரம்ப வமைத்த சுண்ணச் சிலையையும், ஊத்தைஅற-களிம்புநீங்க, புளியிட்ட செம்பையும்-புளியிட்டுத்துலக்கிய செம்பையும், போற்றுகிலேன்-வணங்கேன், உயர்பொன்னெனவே-மாற்றுயர்ந்த பொன்னைப்போலவே, ஒளியிட்ட-பிரகாசிக்கின்ற, தாள்இரண்டு-உபயபாதங்களையும், உள்ளே இருத்துவது — நெஞ்சினின்பதிய வைப்பது, உண்மை என்று-உண்மையென, வெளி இட்டு-பிறரறியச்செய்து, அடைத்துவைத்தேன்—இருதயகுகைக்குள் அவ்வடிமலர்களைப் பத்திரப்படுத்தி வைத்தனன், இனிமேல்-இதன்பின்னர், ஒன்றும் வேண்டிலன்-ஒன்றையும் விரும்புவனல்லேன் எ-று.

(கு-ரை.) இதற்கு வெளிமுகத்திற்கற்சிலையினையும் சாந்துருவத்தினையும் பொற்சிலையினையும் தாம்பரச்சிலையினையும் தரிசிக்குங்கால் தரிசிப்பார்க்கவைதத்தம் நிசவடிவாக விளங்குவதை யன்றித் தெய்வவடிவமாகச்சிந்தித்தற்குப்பக்குவமில்லேனாகலின் அப்பாவனையில் அபசாரப்படாது உண்முகத்திற்சிவபெருமான்றிருவடிகளைத்தியானித்துய்வேனென்றனர் எ-ம் விக்கிரகங்களைத்தெய்வமாகப் பாவியாது தெய்வங்களை விக்கிரகங்களாகத் தியானித்தல் இழுக்காகும் அது அதி தீவிரபக்குவமுடையார்க்கே விளங்குமாகலானும் பக்குவம் விளையாதவழி, மனத்தியானத்திலேயே திருத்தியடையவேண்டியதாகலினாலும் இனிமேல் ஒன்றும் வேண்டிலனே என்றனர் எ-ம் இங்ஙனம் பொருள் கொள்ளாது சிலர் ஆசிரியர் விக்கிரகாராதனையை மறுத்துக் கூறினர் என்பர் எ-ம் இங்ஙனங் கூறுவோர்தாளிரண்டு எனத் திருவடியைக் குறித்த உண்மையேஉணராதாராவர்எ-ம்தாள்உருவத்திற்கன்றி அருவத்திற்கின்றென்பதை யாவருமறிவர்தான் என்பதற்கு வேறுபொருள்கூறி இடர்ப்படுவோருமுளரென்

றும்கூறுவர் சிலர். இவையுள் விக்கிரகங்களைத் தெய்வமாகப் பாவியாது தெய்வத்தை விக்கிரகமாகப் பார்க்கவேண்டு மாதலினாலும் என்ற வசனம் ஊன்றியாராய்ந்துணரத்தக்க நுண்ணியதோ ரரியவிடயமேயாகும்.

வேறுசிலர் அடிகள் உளியிட்ட கல்லையும் ஒப்பிட்ட சாந்தையும் ஊத்தையறப்புளியிட்ட செம்பையும் துதித்து வணங்கேன், உயர்ந்தபொன்னை யொப்பப் பிரகாசிக்கின்ற பிங்கலை இடகலை என்ற இரண்டு சரங்களையும் உள்ளே அடக்குவது புறத்திற் செல்லாது உள்ளே யடக்குநெறி உண்மைநெறி என்று வெளியிட்டு அவ்விரண்டு கலைகளையும் வெளிவிடாது பத்திரப்படுத்தி வைத்தேன் என யோகநூலார் கூறுவர் என்பர்.

பின்னும் இவர் மானதபூசை கைவந்தவராகையால் உளியிட்டகல்முதலியவற்றைப் போற்றுகிலேன் என்றார் என்றுங் கூறுவர். ஒவ்வொருவருந் தத்தங் கொள்கைக் கிணங்கப் பொருள் கொள்ளுமாறு சொற்றொடரமைத்து யாப்புறுத்த ஆசிரியர்திறமும் ஆராய்ச்சிக்காரர் திறமும் வியக்கத்தக்கனவேயாகும். ஆசிரியர் வெண்காட்டடிகளின் றிருவாக்கான விச்செய்யுள் அவரவர் தகுதிக் கிணங்கப் பொருள் தரத்தக்கதாகவே விளங்குகின்றது. ஒருவர் கொள்கையை யொருவர் மறுத்துக் கூறினும் ஆசிரியவசனத்தினை அனைவரு மங்கீகரித்தே நிற்கின்றனர்.

ஆசிரியரை நோக்கிச் சில கிரியாகாண்டிகள் "நீர் சைவத் துறவினராக விளங்கியும், கணபதி சங்கராதிகளி னுருவங்களை வணங்க ஆலயமுதலிய இடங்களுக்கு வாராமல் ஒரே இடத்திலிருந்து கண்மூடிக் கொள்ளுதல் தகுதியோ" என்று கேட்டனரென்றும், அங்ஙனங் கேட்டாரைச் சுட்டியே இக்கவி யடிகளருளிச்செய்ததெனவும், இக்கவியில் போற்றுகிலேனென்ற சொல்லினை விஞக்குறிப்பாகக்கொண்டு எடுத்தலோசையாற் கூறிப் போற்றாமலா இருக்கின்றேன், போற்றிக்கொண்டே யிருக்கின்றேன் என்பார். "பொன்னெனவே ஒளியிட்ட தாளிரண்டுள்ளே யிருத்துவதுண்மை என்றனர்" என்றுங் கூறுப.

பட்டினத்தடிகள் மானதபூசை கைவந்தவராதலால் பகிர்ப்பூசையைவெறுத்தனரென்பார். பகிர்ப்பூசை செய்வோரெல்லாம் நாடோறும் மானதபூசையுடையாராகவே இருக்கின்றாரென்பதனை மறந்தாரேயாவர். உளியிட்ட கல்முதலியவைகளை மூடர்களே போற்றுவர் சிவசமஸ்காரம் பெற்ற பின்னரே அறிஞர் விக்கிரகங்களை வணங்குவர். மதிற்புறங்களிலும் கோபுரங்களிலுங் காணப்படும் கற்சிலைகளை எவருடவணங்காதிருத்தல் எதனாலெனவும், ஆலயங்களிற் பிரதிட்டிக்கப்பட்டுள்ள கற்சிலைகளைக் கண்டவுடன் வணங்குவது எதனாலென்பதனையும் ஊன்றி ஆராய்வார் நன்குணர்வர். ஆசிரியர் விக்கிராகாராதனை மறுத்திலரெனவும், உடன்பட்டவரேயாவரெனவும், விக்கிராகாராதனையின் செயலைச் சிவபூசை முதலியவைகளை தீட்சாக்கிரமங்களுடன் அறிந்தனுஷ்டிப்பவர்க ளறிவார்கள். விக்கிரகங்கள் முன்னிலைச் சுட்டென்பதனையும்

சமஸ்காரத்தால் வணங்க யோக்கியதை யுற்றனவென்பதனையும் உணர்ந்தவர்கள் விக்கிரகாராதனையை மறுத்திலரென வறிவர்.

திருச்சிற்றம்பலம்.

தாயாருக்குத் தகனகிரியை செய்கையிற் பாடிய

வெண்பா.

ஐயிரண்டுதிங்களாவங்கமெலாநொந்துபெற்றுப்
பையலென்றபோதேபரிந்தெடுத்துச்—செய்யவிரு
கைப்புறத்திலேந்திக்கனகமுலைதந்தாளை
யெப்பிறப்பிற்காண்பேனினி. 1

(இ-ள்.) ஐயிரண்டு திங்கள் ஆ—பத்துமாதங்கள் ஐயோவென்னுமாறு சுமந்து, அங்கம் எல்லாம்-கான்முதற்றலையளவுள்ள உறுப்புக்களனைத்தும், நொந்துபெற்று-வருத்தமடைந்து பிரசவித்து, பையல் என்றபோதே-ஆண்குழந்தையென அருகிலுள்ளார் கூறக்கேட்டவுடனே, பரிந்து-விரும்பி, எடுத்து-கைதனிலெடுத்து, செய்ய-செவ்விய, இருகைப்புறத்தில்-இரண்டு கையினிடத்திற்றூங்கி, கனகமுலை தந்தாளை-பொன்னணிபூண்ட ஸ்தனங்களிலுள்ள பாலினையுண்ணுமாறளித்த வன்னையை, இனி எப்பிறப்பில் காண்பேன்-இனி எந்தப்பிறப்பிற் காணப்போகின்றேன் (காணேன் என்பது கருத்து) எ-று.

(கு-ரை.) அன்னையானவள் தான் பெறுதற்கு மிக்க கவலையுண்டாகி இளைப்புற்றுக் கிடக்குங் காலத்தில் பிறந்தது ஆண்மகவு என்று சொல்லக் கேட்டால் இளைப்புக் களைப்புகளை ஒருபொருட்டாக மதியாது விரைந்தெழுந்து குழந்தையை யெடுத்துப் பாலூட்டுவது உலகவழக்கமாதலையிங்கு விளக்கியவ்வாறு தம்மையுஞ்செய்த வன்னையிறந்ததற்காக இரங்கி 'எப்பிறப்பிற்காண்பேனினி' என்றனர். பெண் குழந்தையினிடத்து அன்னையருக் கவ்வளவன்பிராதென்பது இதனால் விளங்குகின்றது. ஒருமுறை யொருவனுக் கன்னையாக நின்றவள் மற்றொரு பிறப்பில் அன்னையாவாளென்னு நியதியின்மையா லெப்பிறப்பிற் காண்பேனினி என்றனர்.

முந்தித்தவங்கிடந்துமுந்நூறுநாளளவு
மந்திபகலாச்சிவனையா தரித்துத்-தொந்தி
சரியச்சுமந்துபெற்றதாயார்தமக்கோ
வெரியத்தழன்மூட்டுவேன். 2

(இ-ள்.) முந்தி தவம் கிடந்து-(சந்தானம் வேண்டுமென) முன்னே தவஞ்செய்து, முந்நூறுநாள் அளவும்-கருப்பதிந்த நாள்முதல் முந்நூறுநாள்வரையும், அந்தி பகலாய்-இரவிலும் பகலிலும் ஆக, சிவனை ஆதரித்து-சிவபெருமானைப்

பிரார்த்தித்து, நொந்து சரிய - வயிறுமுன்றள்ள, சுமந்து - என்னைச்சுமந்து, பெற்ற-பிரசவித்த, தாயார் தனக்கோ-அன்னைக்கோ, எரிய - பற்றியெரியும் வண்ணம், தழல் மூட்டுவேன்-தீயைப்பற்றவைப்பேன், எ-று.

(கு-ரை.) இச்செய்யுளை அடிகள் தமதன்னைய ரிறந்துபோனவுடன் அவ்வுடலைச் சுற்றத்தார் சுமந்து சுடலைக்குக் கொண்டுவருதலைக் கண்டு அவர்களைக் கல்லாலெறிந்து துரத்தித் தாமே சவத்தினை யெடுத்துச் சென்று சுடலை சேர்த்து தகனஞ்செய்யத் தொடங்கிய பொழுதுரைத்ததென்ப.

வட்டிலினுந்தொட்டிலும்மார்மேலுந்தோண்மேலுங்
கட்டிலினும்வைத்தென்னைக்காதலித்து—முட்டச்
சிறகிலிட்டுக்காப்பாற்றிச்சீராட்டுந்தாய்க்கோ
விறகிலிட்டுத்தீமூட்டுவேன். 3

(இ-ள்.) வட்டிலினும் தொட்டிலினும் - துணியாலுண்டாக்கப்படுகின்ற ஏணையினும் மரமுதலியவற்றால் அமைக்கப்பட்ட தொட்டிலினும், மார்மேலும் தனதுமார்பத்தும், தோள்மேலும் - புயத்தின்மீதும், கட்டிலினும் - மஞ்சத்தினும், வைத்து-இருத்தி, என்னை காதலித்து-என்னைவிரும்பி, முட்ட-முற்றிலும், சிறகிலிட்டு காப்பாற்றி சீராட்டும் - கக்கத்தில் வைத்துக் காப்பாற்றிச் சிறப்பனைத்துஞ் செய்யும், தாய்க்கோ-அன்னைக்கோ, விறகில் இட்டு-கட்டையில்வைத்து, தீ மூட்டுவேன்-தீயைப் பற்றவைப்பேன், எ-று.

(கு-ரை.) சிறுகுழந்தைகள் அழுகிற சமயத்தி லன்னையர் கட்டில் வட்டில் முதலிய பலவிடத்தில் கிடத்தித் தூங்கச்செய்யும் வழக்கத்தினால் 'வட்டிலினுந் தொட்டிலினு மார்மேலுந் தோண்மேலும்' என்றனர்.

நொந்துசுமந்துபெற்றுநோவாமலேந்திமுலை
தந்துவளர்த்தெடுத்துத்தாழாமே—யந்திபகல்
கையிலேகொண்டென்னைக்காப்பாற்றுந்தாய்தனக்கோ
மெய்யிலேதீமூட்டுவேன். 4

(இ-ள்.) சுமந்து பத்துமாதம்-தாங்கி, நொந்து-வருந்தி, பெற்று-பிரசவித்து, நோவாமல் ஏந்தி, எனக்கு நோவாதவண்ணம் கையிற்றூங்கி, முலை தந்து-பாலூட்டி, வளர்த்து எடுத்து - வளர்த்து உயர்த்தி, தாழாமே-தாழ்ச்சியின்றி, அந்தி பகல்-இரவும்பகலும், கையிலே கொண்டு—கையில்தாங்கி, என்னை-என்றனை, காப்பாற்றும்-வளர்த்த, தாய்தனக்கோ-அன்னைக்கோ, மெய்யிலே-உடலத்தில், தீமூட்டுவேன்-தீயெரியவைப்பேன், எ-று.

(கு-ரை.) என்றால் தனக்கெவ்வளவு துன்ப முண்டானாலும் அதனை யொருபொருளாக மதியாதென்னைவளர்த்த என்னருமைத் தாயினுடலையெவ்வாறு தீ மூட்டுவேனென்றார்.

அரிசியோநானிடுவேனாத்தாடனக்கு
வரிசையிட்டுப்பார்த்துமகிழாமல்—உருசியுள்ள

தேனேயமிர்தமேசெல்வத்திரவியப்பு
மானேயெனவழைத்தவாய்க்கு. 5

(இ-ள்.) ஆத்தாள்தனக்கு—என்னைப்பெற்ற தாய்க்கு, வரிசையிட்டு - வரிசைவைத்து, பார்த்து மகிழாமல்-கண்டுகளிப்புறாமல், (என்னை) உருசியுள்ள தேனே-சுவையுள்ள தேனேயெனவும், அமிர்தமே-அமுதமேயெனவும், செல்வத்திரவிய புமானே-செல்வத்தினையுந் திரவியத்தினையுமுடைய அரசனே, என அழைத்த - என்றுவிளித்த, வாய்க்கு-வாய்க்கு, அரிசியோ - அரிசையையோ,நான் இடுவேன்-நானிடாநிற்பேன், எ-று.

(கு-ரை.) இனியபல சொற்களா லென்னையன்புடனழைத்த வென்றாயின் வாயில் யானரிசியையோ அள்ளியிடுவேன்.

அள்ளியிடுவதரிசியோதாய்தலைமேற்
கொள்ளிதனைவைப்பேனோகூசாமன்—மெள்ள
முகமேன்முகம்வைத்துமுத்தாடியென்றன்
மகனேயெனவழைத்தவாய்க்கு. 6

(இ-ள்.) மெள்ள - மெல்லென, முகம்மேல் - தன்முகத்தின்மீது, முகம் வைத்து - என்முகத்தினைவைத்து, முத்தாடி — முத்தமிட்டு, என்றன்மகனே-எனதுபுதல்வா, என அழைத்த-என்றுவிளித்த, வாய்க்கு-வாய்க்கு, அரிசியோ அள்ளியிடுவது - அரிசையையோ அள்ளிப்போடுவது, (அதுவுமன்றி) கூசாமல் கொள்ளிதனை வைப்பேனோ - கூச்சமின்றிக் கொள்ளியையும் வைப்பேனோ-எ-று.

விருத்தம்.

முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே
பின்னை யிட்டதீ தென்னி லங்கையி
லன்னை யிட்டதீ யடிவ யிற்றிலே
யானு மிட்டதீ மூள்க மூள்கவே. 7

(இ-ள்.) முன்னை இட்ட தீ-முதலில் (சிவபெருமானால்) இடப்பட்ட நெருப்பு, முப்புரத்தில் - திரிபுரத்தின்கண், (மூண்டெரிந்தது) பின் - அதன்பின்னர், ஐ-வானரருட்சிறந்த அநுமானால், இட்ட தீ-இடப்பட்டநெருப்பு, தென்னிலங்கையில் - அழகிய இலங்கா நகரத்துள், (மூண்டெரிந்தது) அன்னை-என் மாதா, இட்ட தீ - எனக்கிட்ட நெருப்பு, அடிவயிற்றில் - வயிற்றின் அடியில், (மூண்டெரியாநின்றது) ஆதலின், யானும் இட்ட தீ - நானும் என்னன்னையினுடலிலிட்ட நெருப்பு, மூள்க மூள்க-பற்றுக பற்றுக, எ-று.

(கு-ரை.) சிவபெருமானும் அநுமானும் அன்னையுமிட்டதீ புரதகனத்துக்கேற்பன வாதலினியானிட்ட நெருப்பும் மாதாவின் சரீரமாகிய புரத்தை தகனஞ்செய்க என்றனர்.

வெண்பா.

வேகுதே தீயதனில் வெந்துபொடி சாம்ப
லாகுதே பாவியேனையகோ — மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி யென்னைக்
கருதிவளர்த் தெடுத்த கை.

(இ-ள்.) மாகக்குருவி பறவாமல்-வானிற்பறக்கும் குருவிகள் என்னேரே பறவாவண்ணம், என்னை கோதாட்டி - என்னைப்பாராட்டி, கருதி-இவனால் யானனைத்து முடையேனாவேனெனவெண்ணி, வளர்த்தெடுத்த - எனைவளர்த்த, கை - அத்தங்கள், தீயதனில் — நெருப்பினில், வேகுதே - வேகின்றதே, வெந்து-வேவாநின்று, பொடிசாம்பல்-பொடியான சாம்பலாக, ஆகுதே-ஆகின்றதே, பாவியேன்ஐயகோ-இதனைக்கண்டு மிருக்கின்றேன் ஐயகோ, எ-று.

(கு-ரை) இளங்குழந்தைகளைச் சிலபறவைகளின் சாயைபடியவைத்திருந்தால் அதனாற் சிலநோய்கள் குழந்தைகளுக் குண்டாகுமென்பது மருத்துநூல் வழக்காதலின் அவ்வாறுண்டாகாவண்ணங் கையில்வைத்துக் காத்த வன்னையினுடலம் வெந்து சாம்பராதலைக் காணவும் விதியிருந்ததே என இரங்கினர்.

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ வென்னை மறந்தாளோ — சந்ததமு
முன்னையே நோக்கியுகந்து வரங்கிடந்தென்
றன்னையே யீன்றெடுத்த தாய். 9

(இ-ள்) சோணகிரிவித்தகா-அருணாசலவடிவமாக விளங்கும் ஞானவுருவனே, சந்ததமும்-எப்பொழுதும், உன்னையே நோக்கி - உன்னையே தியானித்து, உகந்து வரங்கிடந்து - மகிழ்வுடன் வரம்வேண்டி, என்றன்னை-என்னை, ஈன்றெடுத்த தாய் - பெற்றவன்னை, வெந்தாளோ-வெந்துபோயினளோ, நின்பதத்தில் - உனதுதிருவடிநிழலில், வந்தாளோ - வந்து சேர்ந்தாளோ, என்னை மறந்தாளோ-என்னை மறந்துவிட்டாளோ-அறிகிலேன், எ-று.

(கு-ரை.) உலகினர் மக்களைப்பெறு மருமை பெருமைகளையுந் தமதன்னையினரிய தவச்செயலையு நினைந்து வருந்தினரென்க.

வீற்றிருந்தா ளன்னை வீதிதனி லிருந்தாள்
நேற்றிருந்தா ளின்று வெந்து நீறானாள் — பாற்றெளிக்க
எல்லீரும் வாருங்க ளேதென் றிரங்காம
லெல்லாஞ் சிவமயமே யாம். 10

(இ-ள்.) அன்னை வீற்றிருந்தாள்-தாயானவள் சுகமாகவிருந்தாள், வீதிதனில் இருந்தாள் - வீதியிலு முலாவியிருந்தனள், இன்று வெந்து நீறு ஆனாள்-இத்தினம்வேவுற்றுச் சாம்பலாயினாள், ஏதென்று இரங்காமல்-இஃதென்னை

யென வருந்தாமல், பால் தெளிக்க-பால் தெளித்தற்கு, எல்லீரும் வாருங்கள்-அனைவரும் வாருங்கள், எல்லாம் - அனைத்தும், சிவமயமேயாம் - சிவமயமே யாகும், எ-று.

(கு-ரை.) தோன்றலும் வளர்தலும் அழிதலும் புதிய செயலன்றாதலின் வருந்தாது வெந்துசாம்பரான அன்னைக்கு பால்தெளிக்க வாருங்கள்என்றனர்.

திருவிடைமருது.

மென்றுவிழுங்கிவிடாய்கழிக்கநீர்தேடல்
என்றுவிடியுமெனக்கென்கோவே—நன்றி
கருதார்புரமூன்றுங்கட்டழலாற்செற்ற
மருதாவுன்சந்நிதிக்கேவந்து. 1

(இ-ள்.) நன்றி கருதார் புரம் மூன்றும்-தம்மையுயர்த்திய நன்றியைநினையாதாரின் முப்புரங்களையும், கட்டழலால் செற்ற-மிகுந்த நெருப்பினால் நீறாக்கிய, மருதா-இடைமருதீசனே, உன் சந்நிதிக்கே வந்து-உனது சன்னிதானத்துக்கே வந்து, மென்று விழுங்கி-உணவை மென்று விழுங்கி, விடாய்கழிக்க-தாகத்தை நீக்கிக்கொள்ள, நீர் தேடல்-நீரைத் தேடுகின்ற தொழிலானது, எனக்கு என்று விடியும்-எனக்கு எந்நாளிலொழியும், எ-று.

(கு-ரை.) உணவருந்தலு நீர்வேட்டலு நின்றியானத்துக்கு முட்டானவையாதலி னவையெனக்கென்றொழியு மென்றனர்.

ஒற்றி.

கண்டங்கரியதாங்கண்மூன்றுடையதாம்
அண்டத்தைப்போலவழகியதாந்—தொண்டர்
உடலுருகத்தித்திக்குமோங்குபுகழொற்றிக்
கடலருகேநிற்குங்கரும்பு. 2

(இ-ள்.) ஓங்கு புகழ்-மிக்க புகழினையுடைய, ஒற்றிக் கடல் அருகே நிற்கும் கரும்பு-ஒற்றிமாநகர்க் கடலருகில் விளங்கும் கரும்பானது, கண்டம் கரியது ஆம்-கண்டங் கரியதாகும், கண் மூன்று உடையதாம்-கண்கள் மூன்றையுடையதாகும், அண்டத்தைப்போல அழகியது ஆம்-ஆகாயத்தையொப்ப வழகினையுடையதாகும், தொண்டர்—அடியவர்களின், உடல் உருக தித்திக்கும்-உடலம் உருகாநின்று இனிக்கும், எ-று.

(கு-ரை.) ஒற்றிக்கடலருகிலுள்ள கரும்பு கண்டங்கரியதும் கணுக்கள் மூன்றினை யுடையதும் தொண்டர் உடலுருகத் தித்திப்பதுமாகும் என்றனர் கண்டங்கரியது-கண்டமில்லாதது அல்லது கற்கண்டில்லாதது, கண்-கணு.

ஒடுவிழுந்துசீப்பாயுமொன்பதுவாய்ப்புண்ணுக்
கிடுமருந்தையானறிந்துகொண்டேன்-கடுவருந்தும்
தேவாதிதேவன்றிருவொற்றியூர்த்தெருவிற்
போவாரடியிற்பொடி. 3

(இ-ள்.) ஒடு விழுந்து - கட்டிகளுண்டாகி, சீ பாயும்-சீழொழுகுகின்ற, ஒன்பது வாய் புண்ணுக்கு - நவத்துவாரங்களையுடைய உடலாகிய புண்ணுக்கு, இடு மருந்தை - இடுகின்ற மருந்தினை, யான் அறிந்துகொண்டேன் - நானறிந்துகொண்டேன்; கடு அருந்தும் - விடபானஞ்செய்யும், தேவாதிதேவன் - தேவாதி தேவனது, திருவொற்றியூர்த் தெருவில் - திருவொற்றியூர் வீதியில், போவார் - நடப்பவர்களின், அடியில் பொடி - காலடியிலுள்ள பொடி, எ-று.

(கு-ரை.) திருவொற்றியூர் வீதியிலுலவுவோரடியிற் பொடியானது ஒன்பது துவாரங்களையுடைய உடலாகிய புண்ணுக்கு மருந்தாக வறிந்தேனென்றனர். அது அத்தலப்பெருமையைச் சுட்டி யென்றுணரவும்.

வாவியெல்லாந்தீர்த்தமணலெல்லாம்வெண்ணீறு
காவனங்களெல்லாங்கணநாதர்—பூவுலகில்
ஈதுசிவலோகமென்றென்றேமெய்த்தவத்தோர்
ஓதுந்திருவொற்றியூர். 4

(இ-ள்.) ஈது - இது, பூவுலகிற் சிவலோகம் - பூலோக சிவலோகம், என்று என்று - எனப்பன் முறைகூறி, மெய்த்தவத்தோர் ஓதும் - உண்மைத் தவமுடையாருரைக்கின்ற, திருவொற்றியூர் - திருவொற்றியூரிலுள்ள, வாவி எல்லாம்தீர்த்தம்-தடாகமனைத்துந் தீர்த்தங்கள், மணல் எல்லாம்-மணல் அனைத்தும், வெண்ணீறு - வெள்ளிய விபூதி; காவனங்கள் எல்லாம் - சோலைகளுநந்தவனங்களு மாதியவனைத்தும், கணநாதர் - சிவகணநாதர்களாகும், எ-று.

(கு-ரை.) திருவொற்றியூரானது பூலோக சிவலோகம், அதன்கணுள்ள தடாகங்கள் புண்ணிய தீர்த்தங்கள், மணலனைத்தும் விபூதி, சோலைநந்தவனமாதிய சிவகணநாதர் என்றனர்.

திருவாரூர்.

ஆரூரரிங்கிருக்கவவ்வூர்த்திருநாளென்
றூரூர்கடோறுமுழலுவீர்—நேரே
உளக்குறிப்பைநாடாதவூமர்காணீவிர்
விளக்கிருக்கத்தீத்தேடுவீர். 5

(இ-ள்.) ஆரூரர் இங்கு இருக்க-திருவாரூருடையா ரிவ்விடத்திலிருக்க அவ்வூர் திருநாள் என்று-அந்த ஊரில் திருநாளென்று, ஊர் ஊர்கள்தோறும், ஊர்கள்தோறும் ஊர்கள்தோறும்சென்று, உழலுவீர் - அலைவோரே, நேரே - நேராக, உளக்குறிப்பை-மனக்கருத்தை, நாடாத-ஆராயாத, ஊமர்காள்-மூகர்களே, நீவிர் - நீங்கள், விளக்கு இருக்க - தீபம் இருக்க, தீ தேடுவீர் - நெருப்பைத் தேடுகின்றீர்கள், எ-று.

(கு-ரை.) "நகரின் மேன்மைபெற்றது கமலாலயநகரம் என்ப, ஆதலிற் சிறந்த ஆரூர்நாதனை வணங்குவதைவிடுத்து ஊர்ஊர்தோறு முழலுவது விளக்கினைக் கையிலேந்திக்கொண்டு தீயை நாடுதலையொக்கும் என்றனர்.

எருவாய்க்கிருவிரன்மேலேறுபுழுக்கூண்டுக்
கருவாய்க்கோகண்கலக்கப்பட்டாய்-திருவாரூர்த்
தேரோடும்வீதியிலேசெத்துக்கிடக்கின்றாய்
நீரோடுந்தாரைக்கேநீ. 6

(இ-ள்.) எருவாய்க்கு - மலத்துவாரத்திற்கு, இருவிரல்மேல் - இருவிரலளவிற்குமேல், ஏறு புழுக்கூட்டுக்கருவாய்க்கோ — உயர்ந்து காணப்படுகின்ற கிருமிக்கூண்டான பிறப்பிடத்திற்கோ, கண் கலக்கப்பட்டாய் - கண்கலக்கமுற்றனை; திருவாரூர் — திருவாரூரில், தேர் ஓடும் வீதியில் - தேரோடுந் தெருவில், செத்துக்கிடக்கின்றாய் - இறந்துகிடக்கின்றனை, நீரோடுந்தாரைக்கே நீ - நீரொழுகுந் துவாரத்துக்காக நீ, எ-று.

(கு-ரை.) மலத்துவாரத்துக் கிருவிரலுயரத்துள்ள சலத்துவாரத்தினை விரும்பித்தெருவிலிறந்து கிடக்கின்றனையெனமடந்தையர் காமத்தாற் கொலையுண்ட வொருவனைச் சுட்டியுரைத்தனர் என்க.

எத்தனையூரெத்தனைவீடெத்தனைதாய்பெற்றவர்கள்
எத்தனைபேரிட்டழைக்கவேனென்றேன்-நித்தம்
எனக்குக்களையாற்றாயேகம்பாகம்பா
வுனக்குத்திருவிளையாட்டோ. 7

(இ-ள்.) ஏகம்பா கம்பா - திருவேகாம்பரத்தினையும் கம்பா நதியையும் உடைய பெருமானே ! எத்தனையூர்—எத்தனையூர்கள், எத்தனைவீடு-எத்தனை வீடுகள், எத்தனைதாய்-எத்தனை அன்னையர்கள், பெற்றவர்கள்-ஈன்றவர்கள், எத்தனை பேர்இட்டு அழைக்க-எத்தனை பெயர்களை இட்டுவிளிக்க, நித்தம் என் என்றேன்-தினம் ஏனென்று கேட்டேன், (இவ்வாறுசுழலும்) எனக்குக் ஆற்றாய்—அடியேனுக்குண்டாகும் இளைப்பை ஆற்றுவாய், உனக்கு திருவிளையாட்டோ-தேவரீருக்குத் திருவிளையாட்டோ? எ-று.

(கு-ரை.) பிறப்பெடுத்த ஊருக்கும் வீட்டிற்கும் அன்னையருக்கும் இட்ட பெயருக்கும் ஏனென்றதற்கும் அளவின்மையினத்தகையபிறவியை யொழித்தருளுவீராக என்றனர்.

கச்சிக்காரோணம்.

அத்திமுதலெறும்பீறானவுயிரத்தனைக்குஞ்
சித்தமகிழ்ந்தளிக்குந்தேசிகா-மெத்தப்
பசிக்குதையாபாவியேன்பாழ்வயிற்றைப்பற்றி
யிசிக்குதையாகாரோணரே. 8

(இ-ள்) அத்திமுதல்-யானைமுதல், எறும்பு ஈறு ஆன-எறும்பு இறுதியாகவுள்ள, உயிர் அத்தனைக்கும்-சீவர்கள் அவ்வளவிற்கும், சித்தம்மகிழ்ந்து-திருவுளமகிழ்ந்து, அளிக்கும் - அவைகளுக்கு வேண்டியவைகளைக் கொடுக்கின்ற,

தேசிகா-தேசிகனே, மெத்த-மிகவும், பசிக்குது ஐயா - மிகவும் பசிக்கின்றது ஐயனே, பாவியேன் - பாவியான அடியேனது, பாழ்வயிற்றைப்பற்றி இசிக்குது ஐயா-பாழானவயிற்றைப்பிடித்து இழுக்கின்றது ஐயனே, காரோணரே-திருக்காரோணத்தி லெழுந்தருளியிருக்குங் கடவுளே, எ-று.

(கு-ரை.) காரோணத்தையனே! அனைத்துயிர்களின் இட்டங்களையளிக்குங்கடவுள் தேவரீராதலின் அடியேனுடைய பசிப்பிணியையொழிக்கவேண்டுகின்றே னென்றனர்.

திருக்காளத்தி.

பொய்யையொழியாய்புலாலைவிடாய்காளத்தி
யையரையெண்ணாயறஞ்செய்யாய்—வெய்ய
சினமேயொழியாய்திருவெழுத்தைந்தோதாய்
மனமேயுனக்கென்னமாண்பு. 9

(இ-ள்.) மனமே - எனதுமனதே நீ, பொய்யை ஒழியாய் - பொய்பேசுவதை ஒழிக்கின்றாயில்லை, புலாலை விடாய் - ஊனுண்பதை விடுகின்றாயில்லை, காளத்தி ஐயரை எண்ணாய் - திருக்காளத்தி இறைவரை நினைக்கின்றாயில்லை, அறம் செய்யாய் - தருமஞ்செய்கின்றாயில்லை, வெய்ய சினமே ஒழியாய்-கடிய கோபத்தை யொழிக்கின்றாயில்லை, திருவெழுத்து ஐந்து ஓதாய் - ஸ்ரீபஞ்சாட்சரத்தை ஓதுகின்றாயில்லை, உனக்கு என்ன மாண்பு - உனக்கென்னமாட்சிமையுளது, எ-று.

(கு-ரை.) மனமே பொய்யொழிதலாதிய நற்செய லெவையு மில்லாத போது நீ மாண்புடையை யல்லை என்றனர்.

திருவிருப்பையூர்.

மாதாவுடல்சலித்தாள்வல்வினையேன்கால்சலித்தேன்
வேதாவுங்கைசலித்துவிட்டானே—நாதர்
இருப்பையூர்வாழ்சிவனேயின்னமோரன்னை
கருப்பையூர்வாராமற்கா. 10

(இ-ள்.) மாதா உடல் சலித்தாள் - அன்னையுடல் தளர்ந்தனள், வல்வினையேன் கால் சலித்தேன் - வலியவினையினையுடைய யான் கால்சலிப்புற்றேன், வேதாவும் கைசலித்துவிட்டான் - பிரமனுங் கைசலித்துவிடுத்தான், நாதா-நாதனே, இருப்பையூர் வாழ் சிவனே-திருவிருப்பையூரில் வாழுஞ் சிவபெருமானே, இன்னம்-இனிமேலும், ஓர் அன்னை-ஒருதாயின்,கருப்பை ஊர்வாராமல்-கருப்பப்பையாகிய ஊரினில் வாராமல், கா-அடியேனைக் காத்தருள்,எ-று.

(கு-ரை.) அன்னைமுதலியவனைவருஞ் சலித்தனராதலிற் பிறவிவேண்டே னென்றனர்.

திருவையாறு.

மண்ணுந்தணலாறவானும்புகையாற
வெண்ணரியதாயுமிளைப்பாறப்—பண்ணுமயன்
கையாறவுமடியேன்காலாறவுங்கண்பார்
ஐயாதிருவையாறு. 11

(இ-ள்.) ஐயா திருவையாறு-என் தந்தையே திருவையாற்றுனே, மண்ணும் தணல் ஆற - பூமியும் நெருப்புத் தணியவும், வானும் புகை ஆற-ஆகாயமும் புகையடங்கவும், எண் அரிய தாயும் இளைப்பு ஆற - அளவற்ற அன்னையரு மிளைப்பொழியவும், பண்ணும் அயன் கை ஆறவும்-படைக்கின்ற பிரமனது கை யாறவும், அடியேன் கால் ஆறவும்-அடியேனுடைய கால் ஆறவும், கண்பார் — கருணைக்கண்ணுற் பார்த்தருளுவீராக, எ-று.

(கு-ரை.) யாவொருவன்பிறப்பதனுல் மண் வான் தாய் அயன் ஆகியருந் துன்புறவேண்டியிருத்தலின், அடியேன்வருத்தத்துடன் மண்ணுதியின் இளைப்புமொழிய கருணைக்கண்ணுற் பாரும் என்றனர்.

திருக்குற்றாலம்.

காலன்வருமுன்னேகண்பஞ்சடைமுன்னே
பாலுண்கடைவாய்படுமுன்னே—மேல்விழுந்தே
உற்றாரழுமுன்னேயூரார்சுடுமுன்னே
குற்றாலத்தானையேகூறு. 12

(இ-ள்.) காலன் வருமுன்னே - யமன் வருவதற்குமுன், கண் பஞ்சு அடைமுன்னே - கண்கள் பஞ்சடைவதற்குமுன், பால் உண் கடைவாய் படு முன்னே-பாலாகிய வுணவு கடைவாயின் வழி யொழுகுதற்குமுன்னே, மேல் விழுந்து உற்றார் அழுமுன்னே - உடன்மீது விழுந்து உறவினரழுதற்குமுன், ஊரார் சுடுமுன்-ஊரினர் தகனஞ் செய்வதற்குமுன், குற்றாலத்தானையே கூறு-திருக்குற்றாலத் திறைவரையே துதிப்பாயாக, எ-று.

(கு-ரை.) மரணவேதனைக்கு முன்னரே சிவத்தியானஞ்செய்தால் நற்கதி பெறலாமென்பது கருத்து.

பொது.

சிற்றம்பலமுஞ்சிவனுமருகிருக்க
வெற்றம்பலந்தேடிவிட்டோமே—நித்தம்
பிறந்திடத்தைத்தேடுதேபேதமடநெஞ்சம்
கறந்திடத்தைநாடுதேகண். 1

(இ-ள்.) சிற்றம்பலமும் சிவனும் அருகு இருக்க - திருச்சிற்றம்பலமும் சிவபெருமானும் அருகில் இருக்க, வெற்றம்பலம் தேடிவிட்டோம்-வெறுமை

யாகிய அம்பலத்தைத் தேடிக்கொண்டோம், நித்தம் - நாள்தோறும், பேதை மடநெஞ்சம் - அறியாமையினையும் மடமையினையுமுடைய நெஞ்சமானது, பிறந்திடத்தை நாடுது - பிறந்த தானத்தை நாடுகின்றது, கண் - நயனங்கள், கறந்திடத்தை நாடுது - பால்கறந்த தானத்தை நாடுகின்றது, எ-று.

(கு-ரை.) தோற்றுவாயான நிதம்பத்தினையும் பாலுணவினை யளித்த தனத்தினையுமுறையே மனங்கண்ணு நாடியும்பார்த்து மயங்குதலாற் பிறப்பே யுண்டாகுமாதலி னவைகளை யொழித்தல்வேண்டு மென்றனர்.

தோடவிழும்பூங்கோதைத்தோகையுனைப்போது
தேடினவர்போய்விட்டார்தேறியிரு—நாடிநீ
என்னைநினைத்தாலிடுப்பிலுதைப்பேனான்
உன்னைநினைத்தாலுதை. 2

(இ-ள்.) தோடு அவிழும் பூங்கோதைத்தோகை - இதழ் விரிந்த மலர் மாலையணிந்த கூந்தலினையு மயிலனைய சாயலினையுமுடைய மாதே, இப்போது உனை தேடினவர் போய்விட்டார் - இந்த சமயத்தி லுனைநாடினவர் போய் விட்டனர், தேறி இரு - மனந்தெளிந்திருத்தி, நீ என்னை நாடி நினைத்தால்—நீ யென்னை நினைத்தனையேல், நான் இடுப்பில் உதைப்பேன்-நானுனதிடையி லுதைப்பேன், உன்னை நினைத்தால் உதை—உன்னை யான் நினைத்தால் நீயெ ன்னை இடுப்பிலுதைப்பாயாக, எ-று.

(கு-ரை.) இச்செய்யுள் அருணைமாநகரிலடிக ளருளிச்செய்ததெனவும், அருணகிரி நாதரி னன்னையைப்பார்த் துரைத்ததெனவும் வழங்குவர். இதன் விவரங்களை யருணகிரிநாதர் புராணத்துட் காண்க.

வாசற்படிகடந்துவாராதபிச்சைக்கிங்
காசைப்படுவதில்லையண்ணலே—யாசைதனைப்
பட்டிறந்தகாலமெலாம்போதும்பரமேட்டி
சுட்டிறந்தஞானத்தைச்சொல். 3

(இ-ள்.) வாசற்படி கடந்து வாராத பிச்சைக்கு - தெருவாசற்படியைக் கடந்து கொண்டுவந்திடாத பிச்சைக்கு, ஆசைப்படுவது இங்கில்லை - விருப் பங்கொள்வது இங்கில்லையாகும், அண்ணலே - சுவாமியே ! ஆசைதனை பட்டு இறந்த காலம் எல்லாம் போதும்- ஆசையுற்றழிந்த காலமனைத்தும் போதுமா னது, பரமேட்டி - சிவபெருமானே, சுட்டு இறந்த - சுட்டற்ற, ஞானத்தை சொல் - சுட்டிறந்த ஞானத்தை யருள்செய், எ-று.

(கு-ரை.) திரிபுடியில்லாத ஞானம் வேண்டுமென்றனர். திரிபுடியாவது ஒன்றனைச் சுட்டுபவனாகிய ஞாதுருவும், சுட்டப்படு பொருளாகிய ஞேயமும், சுட்டுதற்றொழிலாகிய (மனத்தின் செயலான) ஞானமும் என மூன்றுமென வறிக.

நச்சரவம்பூண்டானை நன்றாய்த்தொழுவதுவும்
இச்சையிலேதானிங்கிருப்பதுவும்—பிச்சைதனை
வாங்குவதுமுண்பதுவும்வந்து திருவாயிலிலே
தூங்குவதுந்தானே சுகம். 4

(இ-ள்.) நச்சரவம் பூண்டானை - விடத்தினையுடைய பாம்பினையணிந்த சிவபெருமானை, நன்றாய் தொழுவதுவும்—நன்மைபெற வணங்குவதும், இச்சையிலேதான் அங்கு இருப்பதுவும்-இட்டம்போல இருத்தலும், பிச்சைதனை வாங்குவதும்-பிச்சை யெடுப்பதும், உண்பதுவும் - உண்ணுவதும், திருவாயிலிலே வந்து - ஆலயவாயிலையடைந்து, தூங்குவதும் தானே சுகம் - உறங்குவதுமன்றோ சுகம், எ-று.

(கு—ரை.) பசிக்கிரந்துண்டு பரசிவா லயவாயிலிற் படுத்துறங்குவதே சுகமென்றனர்.

இருக்குமிடந்தேடியென்பசிக்கேயன்னம்
உருக்கமுடன்கொண்டுவந்தாலுண்பேன்—பெருக்க
அழைத்தாலும்போகேனரனேயென்றேகம்
இளைத்தாலும்போகேனினி. 5

(இ-ள்.) அரனே — சிவபெருமானே, இருக்கும் இடம் தேடி—யானிருக்குமிடத்தை யாராய்ந்து, என் பசிக்கு அன்னம்-எனது பசிக்குச் சோற்றை, உருக்கமுடன் கொண்டுவந்தால் உண்பேன் - பரிவுடன் கொண்டுவந்தாற் புசிப்பேன், பெருக்க அழைத்தாலும்-மிகவும் வருந்தியழைத்தாலும், போகேன்—போகமாட்டேன், இனி என் தேகம் இளைத்தாலும் போகேன் - இனி எனதுடலம் இளைப்படைந்தாலும் போகமாட்டேன், எ-று.

(கு-ரை.) மாதுகரபிச்சையானது விருப்பு வெறுப்புக்களுக் கிடமானதாதலின் அயாசித பிச்சையையே இனியருந்துவேனென்றனர்.

விட்டுவிடப்போகுதுயிர்விட்டவுடனேயுடலைச்
சுட்டுவிடப்போகின்றார்சுற்றத்தார்—பட்டதுபட்
டெந்நேரமுஞ்சிவனையேத்துங்கள்போற்றுங்கள்
சொன்னேனதுவேசுகம். 6

(இ-ள்.) விட்டுவிடப்போகுது உயிர் - உலகினரே யுங்களுடலைவிடுத்துயிர் போகப்போகின்றது, விட்டவுடனே-அங்ஙனம் உயிர் நீங்கியவுடனே, சுற்றத்தார் - உறவினர், உடலை சுட்டுவிடப்போகின்றார் - தேகத்தைத் தகனஞ்செய்துவிடப் போகின்றார்கள், பட்டது பட்டு - என்னபாடு பட்டாயினும், எந்நேரமும் - எப்பொழுதும், சிவனை - சிவபெருமானை, ஏத்துங்கள் போற்றுங்கள் - துதியுங்கள் வணங்குங்கள், அதுவே சுகம் - அவ்வாறு செய்வதே சுகமாகும், சொன்னேன் - உங்களுக்குரைத்தேன், எ-று.

(கு-ரை.) இவ்வுடலைவிடுத் துயிர்போவது முயிர்போகியபின்னருறவின ருடலைச் சுட்டுவிடுவது மனுபவசித்தமாதலி னுடலுள்ளபோதே இறைவனைத் தியானித்து நற்கதிபெற விரும்புங்களென வுலகினரைச்சுட்டிக் கூறினர்.

ஆவியொடுகாயமழிந்தாலுமேதினியில்
பாவியென்றுநாமம்படையாதே—மேவியசீர்
வித்தாரமுங்கடம்பும்வேண்டாமடநெஞ்சே
செத்தாரைப்போலேதிரி. 7

(இ-ள்.) மடநெஞ்சே - மூடமனமே, ஆவியொடு காயம் அழிந்தாலும் - உயிருடனுடலழிந்தாலும், மேதினியில்-உலகத்தில், பாவி என்று-பாவியென, நாமம் படையாதே-பெயர்படைக்காதே, மேவிய சீர் வித்தாரமும் - பொருந் திய செல்வச் சிறப்பும், கடம்பும் - உலகவுறவும், வேண்டாம் - உனக்குவேண் டாம், செத்தாரைப்போலேதிரி-இறந்தாரை யொப்பாக வுலவுவாயாக, எ-று.

(கு-ரை.) நீ பாவியெனப் பெயரைப் படையாமலும் செல்வவித்தாரத் தைக் காட்டாமலும் உலகினரோ டுறவுகொள்ளாமலும் செத்தாரையொப்பத் திரிந்தாற் சிவானுபவசித்தி யெளிதிற் கைகூடிவரு மென்றனர்.

வெட்டவெளியானவெளிக்குந்தெரியாது
கட்டளையுங்கைப்பணமுங்காணாதே-இட்டமுடன்
பற்றென்றாற்பற்றாதுபாவியேனெஞ்சிலவன்
இற்றெனவேவைத்தவினிப்பு. 8

(இ-ள்.) பாவியேன் நெஞ்சில் - பாவியாகிய எனது மனதில், அவன்— அக்கடவுள், இற்று எனவைத்த இனிப்பு-இதுவெனவைத்த இனிமையானது வெட்ட வெளியான வெளிக்கும் தெரியாது - வெறுவெளியான வெளிக்குந் தெரியாது, கட்டளையும் கைப்பணமும் காணாது - கட்டளையும் கைப்பண மும் காணமாட்டாது, இட்டமுடன் பற்று என்றால் பற்றாது-பிரியத்துடன் பிடியென்றாலும் பிடியாது, எ-று.

(கு-ரை.) அந்தக் கடவுளளித்த சுகம் எவராலும் எதனாலும் அறிதற் கரிய நுண்ணியதென்பது கருத்து.

பின்முடுகு வெண்பா.

இப்பிறப்பைநம்பியிருப்பரோநெஞ்சகமே
வைப்பிருக்கவாயின்மணையிருக்கச்-சொப்பனம்போல்
விக்கிப்பற்கிட்டக்கண்மெத்தப்பஞ்சிட்டப்பைக்
கக்கிச்செத்துக்கொட்டக்கண்டு. 9

(இ-ள்.) இப்பிறப்பை நம்பி இருப்பரோ நெஞ்சகமே-இந்த பிறவியை நம்பி இருப்பார்களோ எனது மனமே, வைப்பு இருக்க - க்ஷேமப்பொருளிரு

க்க, வாயில் மனை இருக்க-வாயிலினையுடைய வீடு இருக்க, சொப்பனம்போல்-கனவுபோல், விக்கி - விக்கலெடுத்து, பல்கிட்ட - பல் கிட்டிக்கொள்ள, கண் மெத்த பஞ்சிட்டு - கண் மிகவும் பஞ்சடைந்து, அப்பை கக்கி - கபமொழுக விடுத்து, செத்து-இறந்து, கொட்டக்கொண்டு-சாப்பறையடிக்கப்படுதலைப் பார்த்து, எ-று.

(கு-ரை.) கனவுபோல இறத்தலைக் கண்கூடாகக் கண்டு மிந்த பிறவியை யறிவுடையார் நம்பியிருப்பரோ இரார் என்றறிக என்றனர்.

மேலுமிருக்கவிரும்பினையேவெள்விடையோன்
சீலமறிந்திலையேசிந்தையே—கால்கைக்குக்
கொட்டையிட்டுமெத்தையிட்டுக்குத்திமொத்தப்பட்டவுடல்
கட்டையிட்டுச்சுட்டுவிடக்கண்டு. 10

(இ-ள்.) கால் கைக்கு-காற்குங்கைக்கும், கொட்டையிட்டு - சிறுதிண்டுகள்வைத்து, மெத்தை இட்டு-மெத்தைவிரித்து, குத்திமொத்தப்பட்ட உடல்-குத்தியடித்துப் பிடிக்கப்பட்ட சரீரம், கட்டையிட்டு - கட்டையில் வைத்து, சுட்டுவிடக் கண்டு - தகனஞ்செய்யப்பார்த்தும், சிந்தையே – உள்ளமே, மேலும் இருக்க விரும்பினையே-பின்னரும் இருக்க விரும்பினாயே, வெள் விடையோன் - வெள்ளிய இடபத்தினையுடைய சிவபெருமானது, சீலம்அறிந்திலையே-கல்யாண குணங்களை யுணர்ந்திலையே, எ-று.

(கு-ரை.) கால் கைகளுக்குச் சிறுதிண்டிட்டுக்குத்திமொத்தப்பட்ட வுடலினைச் சுட்டுவிடக்கண்டு மின்னமிருக்கச் சிந்தையே விரும்பாதே. சிவபெருமானது கல்யாண குணங்களை யுணர்ந்தாயிலையே, எ-று.

ஒன்பதுவாய்த்தோற்பைக்கொருநாளைப்போலவே
அன்புவைத்துநெஞ்சேயலைந்தாயே—வன்கழுக்கள்
தத்தித்தத்திச்சட்டைதட்டிக்கட்டிப்பிட்டுக்
கத்திக்குத்தித்தின்னக்கண்டு. 11

(இ-ள்.) வல் கழுக்கள் - வலிய கழுவென்னும் பறவைகள், தத்தித்தத்தி - தடுமாறித் தடுமாறி, செட்டை தட்டிக்கட்டி - இறகைத்தட்டி ஒன்றோடொன்றணைத்து, பிட்டு - பிளந்து, கத்திக் குத்தி - இரைந்து மூக்கினாற்குத்தி தின்னக்கண்டு - தின்னப்பார்த்தும், நெஞ்சே - மனமே, ஒன்பதுவாய் - நவத்துவாரங்களையுடைய, தோல் பைக்கு – தோலாலாகிய உடலெனும் பைக்கு, ஒருநாளைப்போலவே-ஒருநாள்போலவே, அன்பு வைத்து அலைந்தாயே-பக்ஷம் வைத்துத் திரிந்தனையே, எ-று.

(கு-ரை.) வலிய கழுக்கள் குழுமி உடற்றசையைப் பலவிடத்தும் தின்னக்கண்டும் அதன்மீது ஆசைகொண் டலைகின்றனையே நெஞ்சமே என்றனர்.

இன்னம்பிறக்கவிசைவையோநெஞ்சமே
மன்னரிவரென்றிருந்துவாழ்ந்தவரை—முன்னம்
எரிந்தகட்டைமீதிலிணைக்கோவணத்தை
உரிந்துருட்டிப்போட்டதுகண்டு. 12

(இ-ள்.) மன்னர் இவர் என்று இருந்து வாழ்ந்தவரை - அரசரிவரென விருந்து வாழ்ந்தோரை, முன்னம் எரிந்த கட்டைமீதில் - முன்னம் எரிந்த கட்டையின்மீது, இணை கோ வனத்தை உரிந்து - துணையாயிருந்த கோவணத்தையுமுரிந்து, உருட்டிப்போட்டது கண்டு - உருட்டிப்போட்டதைப்பார்த்தும், நெஞ்சமே - எனது மனமே நீ, இன்னம் பிறக்க இசைவையோ-இன்னம் பிறத்தற்கு விரும்புவாயோ, எ-று.

(கு-ரை.) அரச வாழ்வினையுடையாரு மிறத்தலுண்மையி லழிவினையுடைய வுடலுடன் வாழ்வதனை நெஞ்சகமே விரும்புவதிற் பயனில்லை என்றனர்.

முதற்சங்கமுதூட்டுமொய்குழலாராசை
நடுச்சங்கநல்விலங்குபூட்டும்—கடைச்சங்கம்
ஆம்போததூதுமம்மட்டோவிம்மட்டோ
நாம்பூமிவாழ்ந்தநலம். 13

(இ-ள்.) முதல் சங்கு - நாம் பிறந்தவுடன் சங்கானது, அமுது ஊட்டும்-பாலடையாக நின்று பாலை யுண்ணச் செய்யும், நடு சங்கம் - அச்சங்கமானது நம்பிறப்பின் மத்தியில் (அதாவது யௌவனப்பருவத்தில்), மொய் குழலார் ஆசை நல் விலங்கு பூட்டும் - வண்டுபடிந்த கூந்தலினையுடைய இளமாதரின் ஆசையாகிய நல்விலங்கைக் கல்யாண முறையிலூதிப் பூட்டாநிற்கும், கடைச்சங்கம் - மூன்றுமுறையாகிய கடைசியிலூதப்படும் சங்கமானது, ஆம் போதது ஊதும் - இறங்குங்காலத்துக்குரியதாகி ஊதப்படும், (ஆகவே) நாம் பூமியில் வாழ்ந்த நலம் - நாம் உலகில் வாழ்ந்த சுகமானது, அம்மட்டோ இம்மட்டோ - அவ்வளவோ விவ்வளவோ அறிகிலேம், எ-று.

(கு-ரை.) சங்கமுதலிற் பாலூட்டிப் பின் கலியாணமாக்கிப் பின்னிறந்த குறியாக நிற்கின்றதாகவே நாம் வாழ்ந்த வாழ்வென்னை.

எத்தனைநாள்கூடியெடுத்தசரீரமிவை
அத்தனையுமண்டின்பதல்லவோ— வித்தகனார்
காலைப்பிடித்துமெள்ளக்கங்குல்பகலற்றிடத்தே
மேலைக்குடியிருப்போமே. 14

(இ-ள்.) இவை-இவைகள், எத்தனைநாள் கூடியெடுத்த சரீரம் - எத்தனை நாள் சேர்த்தெடுத்த வுடலம், அத்தனையும் - அவ்வாறெடுத்த வுடலனைத்தும்,

மண்திின்பது அல்லவோ-மண்ணோடு மண்ணாவதன்றோ,வித்தகனார்-சிவபெருமானது, காலைப் பிடித்து மெள்ள - திருவடிகளைப்பற்றி மெல்லென, கங்குல் பகல் அற்றிடத்தே - இரவும்பகலு மற்றவிடத்தில், மேலே குடியிருப்போம் - இனிக் குடியிருப்போம், எ-று.

(கு-ரை.) இவ்வுடல மழிவதாதலி னழியாதவிறைவன் திருவடிவீட்டி லிருப்போமென்றனர்.

எச்சிலென்றுசொல்லியிதமகிதம்பேசாதீர்
எச்சிலிருக்குமிட மறியீர்—எச்சிறனை
உய்த்திருந்துபார்த்தாலொருமைவெளிப்படும்பின்
சித்தநிராமயமாமே. 15

(இ-ள்.) எச்சில் என்று சொல்லி - மிச்சிலெனக்கூறி, இதம் அகிதம் பேசாதீர்-வேண்டுதல் வேண்டாமைகளை யுரையாதீர்,எச்சில் இருக்கும் இடம் அறியீர் - மிச்சில் இருக்குந் தானத்தை யறியமாட்டீர், எச்சில்தனை-மிச்சிலை, உய்த்திருந்து பார்த்தால் - ஆலோசனையுட னிருந்துபார்த்தால், ஒருமை வெளிப்படும் - ஒற்றுமை வெளியாகும், பின்சித்தம் நிராமயம் ஆகும் - பின்னர் மனமானது துக்கமற்றதாகும், எ-று.

(கு-ரை.) வெறுப்புப் பொருள்களும் விருப்புப்பொருள்களும் ஒரேயிடத்தி லுண்டாதலின் வாளாவிருப்புவெறுப்பிற் காலந்தள்ளற்க வென்றனர். எச்சிலென்றது வாய்நீரை மாத்திரமன்று, வெறுப்புப் பொருளையென வுணர்க.

எத்தனைபேர்நட்டகுழியெத்தனைபேர்தொட்டமுலை
எத்தனைபேர்பற்றியிழுத்தவிதழ்—நித்தநித்தம்
பொய்யடாபேசும்புவியின்மடமாதரைவிட்
டுய்யடாவுய்யடாவுய். 16

(இ-ள்.) எத்தனை பேர் நட்டகுழி-எத்தனைபேர் நட்டபள்ளம், எத்தனை பேர் தொட்ட முலை - எத்தனைபேர்கள் பிடித்த தனம், எத்தனைபேர் பற்றி யிழுத்த இதழ் - எத்தனைபேர் பிடித்து இழுத்த அதரம், நித்தம் நித்தம் நாள்தோறும், பொய் அடா பேசும் - பொய்யும் அடா தனவுங்கூறும், புவியின் மடமாதரை - உலகிலுள்ள அறியாமையினையுடைய பொருட்பெண்டிரை விட்டு உய் அடா உய் - கடைத்தேறடா கடைத்தேறு, எ-று.

(கு-ரை.) பொய்ம்மை முயக்கினரான பொருட்பெண்டிரை விடுமின் என அடிகள் அறத்தாறொழுகுவா னுலகினரை நோக்கி யுரைத்ததிதுவென்க.

இருப்பதுபொய்போவதுமெய்யென்றெண்ணிநெஞ்சே
ஒருத்தருக்குந்தீங்கினையுன்னாதே—பருத்ததொந்தி
நம்மதென்றுநாமிருப்பநாய்நரிகள்பேய்கழுகு
தம்மதென்றுதாமிருக்குந்தான். 17

(இ-ள்.) நெஞ்சே - மனமே, இருப்பதுபொய் போவதுமெய்-இவ்வுடலுடனே இவ்வுலகிலிருப்பதுபொய் இறந்துபோவதுமெய், என்று எண்ணி-எனநினைந்து, ஒருத்தருக்கும்-எவருக்கும், தீங்கினை-கெடுதியை, உன்றேதே-நினையாதே, பருத்ததொந்தி நம்மதென்று நாமிருப்ப - பெருத்தவயிற்றினையுடைய இவ்வுடலினை நம்மதென்று நாம் இருக்க, நாய்நரிகள் பேய்கழுகு-நாயும் நரியும் பேயுங்கழுகும், தம்மதென்று தாமிருக்கும்-தமது என அவைகளிருக்கும், எ-று.

(கு-ரை.) நாம் நம்மதென விருக்குமுடலினை நாய்நரியாதிய தம்மதென விருத்தலிலதனை நம்பற்க.

எத்தொழிலைச்செய்தாலுமேதவத்தைப்பட்டாலும்
முத்தர்மனமிருக்குமோனத்தே - வித்தகமாய்க்
காதிவிளையாடியிருகைவீசிவந்தாலும்
தாதிமனநீர்க்குடத்தேதான். 18

(இ-ள்.) எத்தொழிலைச்செய்தாலும்-எந்தத்தொழிலைச் செய்யினும், எது அவத்தைப்பட்டாலும் - என்னவுபத்திரவமுற்றாலும், முத்தர்மனம் - முத்தான்மாக்களினுள்ளம், மோனத்தே இருக்கும் - மௌனநிலையிலேயே இரா நிற்கும், (எதுபோலும் என்னில்,) வித்தகமாய் - சாதுரியமாய், காதிவிளையாடி இருகைவீசிவந்தாலும் - அசைந்து விளையாடிக்கொண்டு இரண்டுகைகளை வீசிக்கொண்டு வந்தாலும், தாதிமனம்-வெள்ளாட்டி யுள்ளம், நீர்க்குடத்தேதான்-தண்ணீர்க்குடத்திலேதான் எனவறிக, எ-று.

(கு-ரை.) வெள்ளாட்டி வேறு வேலைசெய்து கையசைத்துச் செல்லினுந் தலையின்மீது வைத்த தண்ணீர்க்குடத்திலேயே சிந்தைசெலுத்திச் செல்லுமாறு முத்தர்களும் மோனநிலையிலேயே எத்தொழிலைச் செய்தாலு நிற்பரெனவறிக.

மாலைப்பொழுதினறுமஞ்சளரைத்தேகுளித்து
வேலைமினுக்கிட்டுவிழித்திருந்து - சூலாகிப்
பெற்றாள்வளர்த்தாள்பெயரிட்டாள்பெற்றபிள்ளை
பித்தானாலென்செய்வாள்பின். 19

(இ-ள்.) மாலைப்பொழுதில் - மாலைக்காலத்தில், நறுமஞ்சள் அரைத்துக் குளித்து - நல்லமஞ்சளையரைத்துக்குளித்து, வேலைமினுக்கிட்டு - வேலைகளை விடுத்து, விழித்து இருந்து - தூங்காமலிருந்து, சூல் ஆகி – கருப்பமுடையவளாகி, பெற்றாள் வளர்த்தாள் பெயரிட்டாள்-பெற்றுவளர்த்துப்பெயரிட்டாள், பெற்றபிள்ளை - அங்ஙனந்தான்பெற்றபிள்ளை, பித்தானால்-பைத்தியங்கொண்டவனானால், என்செய்வாள் பின் - பின்னர் யாதுசெய்வாள், எ-று.

(கு-ரை.) அன்னையின் நினைவிற்கேற்ப மைந்தனில்லாவிடிலவள் என் செய்வள், அதுபோல நமதெண்ணப்படி நிறைவேறாதவிவ்வுலக வாழ்வினி லாசை கொள்ளாது விடுதலே நலம் என்றனர்.

நாப்பிளக்கப்பொய்யுரைத்துநவநிதியந்தேடி
நலனொன்றுமறியாதநாரியரைக்கூடிப்
பூப்பிளக்கவருகின்ற புற்றீசல்போலப்
புலபுலெனக்கலகலெனப்புதல்வர்களைப்பெறுவீர்
காப்பதற்கும்வகையறியீர் கைவிடவுமாட்டீர்
கவர்பிளந்தமரத்துளையிற் காலுழைத்துக்கொண்டே
ஆப்பதனையசைத்துவிட்டகுரங்கதனைப்போல
அகப்பட்டீர்கிடந்துழலவகப்பட்டீரே. 20

(இ-ள்.) நா பிளக்க பொய் உரைத்து-நாவுபிளவுறும்வண்ணம் பொய் பேசி, நவநிதியம் தேடி - புதிதாகத் திரவியம் சம்பாதித்து, நலன் ஒன்றுமறியாத - நன்மையென்பது யாதொன்றையும் உணராத, நாரியரைக் கூடி-பெண்களை மணந்து, பூ பிளக்கவருகின்ற புற்றீசல்போல-பூமிவெடிக்க அதினின்றும் வெளிப்படுகின்ற புற்றீசலையொப்ப, புலபுலெனக் கலகலென-புலபுல கலகலவென்று, புதல்வர்களை-பிள்ளைகளை, பெறுவீர்-பெறுவீர்கள், காப்பதற்கும் வகையறியீர்-அவைகளைக்காப்பாற்றவும் வழியறியமாட்டீர்கள், கைவிடவுமாட்டீர்-கைவிடவுமாட்டீர்கள், கவர்பிளந்த மரத்துளையில்-இருபிளவாகப்பிளந்த மரத்தின்துளையில், கால் நுழைத்துக்கொண்டு - காலைநுழையவிட்டுக்கொண்டு, ஆப்பதனை யசைத்துவிட்ட குரங்கதனைப்போல - ஆப்பையசைத்தெடுத்த குரங்கினையொப்ப, அகப்பட்டீர் - அகப்பட்டுக்கொண்டீர், கிடந்துழல அகப்பட்டீர் - கிடந்துழலுமாறு அகப்பட்டுக்கொண்டீர்கள், எ-று.

(கு-ரை.) அறிவின்றிச் சமுசாரத்தி லகப்பட்டுச் சுழலுவதினாற் பயனில்லை யென்றனர்.

வேறு.

வடிவந்தானும்வாலிபம்மகளுந்தாயும்மாமியும்
படிகொண்டாருமூரிலேபழிகொண்டாடனீதியோ
குடிவந்தானுமேழையோகுயவன்றானுங்கூழையோ
நடுநின்றானும்வீணனோநகருஞ்சூறையானதே. 21

(இ-ள்.) வடிவந்தானும் வாலிபம் - உருவமுமிளமை, மகளும் தாயும் மாமியும்-மகளும் தாயும் மாமியாரும், படிகொண்டு ஆரும் ஊரிலே — தங்கி வாழுமூரினில், பழிகொண்டு ஆடுதல் நீதியோ - பழியைக்கொண்டு கூறுதல் நியாயமோ, குடிவந்தானும் - குடியிருக்கவந்தவனும், ஏழையோ-ஏழையாயுள்ளவனோ, குயவன் தானும் கூழையோ-குயவனும் வன்மையில்லாதவனோ, நடுநின்றானும் வீணனோ - நடுவேநிற்பவனும் வீணனாவனோ, நகருஞ்சூறையானதே - ஊருஞ்சூறையானது இஃதென்னை, எ-று.

(கு-ரை.) உடலையாக்கிய பிரமனாகிய குயவனாகிய பிரமனும் நடுநின்றானாகிய யமனும் குடியிருந்தவனான சீவனும் முறையே கூழையும் வீணனும் ஏழையுமல்லர், அங்ஙனமாகவும் உடலமாகிய நகரஞ்சூறைபோயது இதற்காக வருந்துவதிற் பயனென்னை.

மண்ணுமுருகுமரமுருகுமாயையுருகுமாலுருகும்
பெண்ணுமுருகுமாணுருகும்பேதாபேதவகையுருகும்
அண்ணலுருகுமிடத்தமர்ந்தவாத்தாளுருகுமரவணையான்
எண்ணியுருகுங் குருநாதனென்பாலுரைத்தவோர்மொழியே.()

(இ-ள்.) குருநாதன் - எனதுகுருசிரேட்டன், என்பால் உரைத்த ஓர் மொழி - எனக்குபதேசித்த ஒருமொழியை, எண்ணி - நினைந்து, மண்ணும் உருகும் - பூமியும் உருகாநிற்கும், மரமும் உருகும் - மரமும் உருகாநிற்கும், மாயையுருகும்-மாயையுமுருகாநிற்கும், மாலுருகும்-மாயாமோகமும் உருகாநிற்கும், பெண்ணும் உருகும் ஆணுருகும் - பெண்ணுமாணு முருகாநிற்கும், பேதாபேத வகையுருகும் - பேதாபேத வகைகளு முருகாநிற்கும், அண்ணல் உருகும் இடத்து அமர்ந்த ஆத்தாளுருகும் - சிவபெருமானுமுருகுவர் அவரிடப்பாகத்துறையு முலகமாதாவான உமாதேவியு முருகாநிற்பர், அரவணையான் எண்ணி உருகும் - அரவணையானான நாராயணனு நினைந்துருகா நிற்பன், எ - று.

(கு-ரை.) குருநாதனுரைத்த ஒருமொழியி னருமையைவியந்தபடி. "ஒருமொழியே பலமொழிகக்கு மிடங்கொடுக்குமந்த, வொருமொழியே மலமொழிக்கும்" எ-ம், "மன்னவென்னை யோர்வார்த்தை யுட்படுத்து" எ-ம் வருவனவற்றானுணர்க.

முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்துப் பிள்ளையார்

அருட்புலம்பலும்

பதவுரையும்

*முதல்வன் முறையீடும்.

கன்னிவனநாதா - கன்னிவனநாதா.

(பதவுரை.) கன்னிவனம்-மீனாட்சிதேவி கன்னிப்பெண்ணாகவிருந்து அரசு புரிந்த தலமாகிய மதுரையம் பதியிலே எழுந்தருளியிருக்கும், நாதா-கடவுளே.

மூலமறியேன்முடி யுமுடிவறியேன்
ஞாலத்துட்பட்டதுயர்நாடநடுக்குதடா.

(ப-ரை.) மூலம் - வினையின் தோற்றத்தினை, அறியேன் - தெரிந்து கொண்டேனில்லை; முடியுமுடிவு - அவ்வினைமுடிவாதலை, அறியேன்-தெரிந்திலேன்; ஞாலத்துள்-உலகில், பட்ட-உண்டாகிய, துயர்-துன்பம், நாட-என்னைச்சேர, நடக்குதடா - அனுபவமாகவருகிறது. (1)

அறியாமையாமலத்தாலறிவுமுதற்கெட்டனடா
பிறியாவினைப்பயனாற்பித்துப்பிடித்தனடா.

(ப-ரை.) அறியாமை மலத்தால் - ஆணவவினையினால், அறிவு முதல் கெட்டனடா - அறிவுமுதலாகச் சொல்லப்பட்டயாவற்றினாலுங்கலங்கினேன், பிரியாவினைப்பயனால்-பிராரத்துவவினையின் காரியத்தால், பித்துப்பிடித்தனடா-பைத்தியத்திற்கட்டுப்பட்டேன். (2)

தனுவாதியநான்குந்தானாய்மயங்கினண்டா
மனுவாதிசத்திவலையிலகப்பட்டனடா.

(ப-ரை.) தனுவாதியநான்கும் - தனு கரண புவன போகம் நான்கும், தானாய்-அவைகளின்மயமாய், மயங்கினன்-கலங்கினேன்; மனுவாதிசத்தி-நீதியாகியதிரோதைசத்தியின், வலையில்-மறைவெனும் வலையில், அகப்பட்டேன்-சிக்கிக்கொண்டேன். (3)

---

* இக்கண்ணிகளில் வரும் அரியவிஷயங்கள் பெரும்பாலும் முன்னமுள்ள விருத்தப்பாக்களில் வந்திருத்தலினாலும், அவ்வரிய விஷயங்களைப் பிரமாணவாயிலாக ஆங்காங்கே நன்குவிளக்கியிருத்தலினாலும், மீண்டும் விசேஷங்க ளெழுதாமல் அத்தியாவசியமான விஷயங்கள் பத வுரையுள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மாமாயையென்னும்வனத்திலலைகிறண்டா
தாமாயுலகனைத்துந்தாதுகலங்கிறண்டா.

(ப-ரை.) மாமாயை என்னும் - வியாபகமான அசுத்தமாயையென்னும், வனத்தில்-காட்டினிடத்தே, அலைகிறன் - அலைகின்றனன்; தாமாயுலகனைத்தும்-அம்மாயையேயாய் உலகமுழுவதும், தாதுகலங்கிறன்-மனஞ்சஞ்சலமுறுகின்றனன். (4)

(கன்னிவனநாதா கன்னிவனநாதா.)

மண்ணாசைப்பட்டேனை மண்ணுண்டுபோட்டதடா
பொன்னாசைபெண்ணாசைபோகேனேயென்குதே.

(ப-ரை.) மண்ணாசைப்பட்டேனை-உலகில் ஆசைவைத்த என்னை, மண்ணுண்டுபோட்டது-அவ்வுலகே என்னைவிழுங்கிவிட்டது; பொன்னாசை-திரவியத்தினிடத்து வைத்தவிருப்பமும், பெண்ணாசை-மாதரிடத்து வைத்தவிருப்பமும், போகேனேயென்குது-நீங்குதலில்லை. (5)

மக்கள்சுற்றத்தாசைமறக்கேனேயென்குதே
திக்கரசாமாசையது தீரேனேயென்குதே.

(ப-ரை.) மக்கள்சுற்றத்தாசை-புத்திரன் உறவினர் (முதலியோர்) பற்று, மறக்கேனேயென்குது-நீங்கக்கூடவில்லை; திக்கரசாமாசையது-எட்டுத்திசைகளையும் கட்டியாளவேண்டுமென்னும் விருப்பமானது, தீரேனேயென்குது-விட்டுப்பிரிதலில்லை. (6)

வித்தைகற்குமாசையதுவிட்டொழியேனென்குதே
சித்துகற்குமாசைசிதையேனேயென்குதே.

(ப-ரை.) வித்தைகற்குமாசையது - (உலக) கல்வியில் பழகும்பற்று, விட்டொழியேனென்குது-நீங்கமாறில்லை; சித்துகற்குமாசை-(அஷ்டமா) சித்தியினைத்தெரிந்துகொள்ளும்பற்று, சிதையேனேயென்குது-ஒழிந்ததில்லை. (7)

மந்திரத்திலாசைமறக்கேனேயென்குதே
சுந்தரத்திலாசைதுறக்கேனேயென்குதே.

(ப-ரை.) மந்திரத்திலாசை - மந்திரங் கற்றுக்கொள்ள வேண்டுமென்கிறபற்று, மறக்கேனேயென்குது - மறந்துபோவதில்லை; சுந்தரத்திலாசை - சௌந்தரியமாக விருக்கவேண்டுமென்கிறவிருப்பம், துறக்கேனேயென்குது-நீங்குவதில்லை. (8)

கட்டுவர்க்கத்தாசைகழலேனேயென்குதே
செட்டுதனிலாசைசிதையேனேயென்குதே.

(ப-ரை.) கட்டுவர்க்கத்தாசை - (உயர்ந்த) வஸ்திர முதலியவற்றிலுண்டானபற்று, கழலேனேயென்குது-நீங்குவதில்லை; செட்டுதனிலாசை – திரவியம் சேர்த்துவைக்கவேண்டுமென்னும்பற்று, சிதையேனேயென்குது-ஒழிந்துபோனதில்லை. (9)

மாற்றுஞ்சலவைமறக்கேனேயென்குதே
சோற்றுக்குழியுமின்னந்தூரேனேயென்குதே.

(ப-ரை.) மாற்றுஞ் சலவை - அடிக்கடி உடுத்திக்கொள்ளுதற்கேற்ற சுத்தமான வஸ்திரங்களை, மறக்கேனேயென்குது-மறந்துவிடுவதில்லை; சோற்றுக்குழியுமின்னம்-சாப்பிடும் வயிறு இன்னம், தூரேனேயென்குது-நிறம்புவதில்லை. (10)

(கன்னிவனநாதா - கன்னிவனநாதா.)

ஐந்துபுலனுமடங்கேனேயென்குதே
சிந்தைதவிக்கிறதுந்தேறேனேயென்குதே.

(ப-ரை.) ஐந்துபுலனும் - சத்த பரிச ரச ரூப கந்தங்களும், அடங்கேனேயென்குது - சேஷ்டை யொடுங்கின பாடில்லை, சிந்தைதவிக்கிறதும்-மனச்சஞ்சலமும், தேறேனேயென்குது-நிவிர்த்தியாயினதில்லை. (11)

காமக்குரோதங்கடக்கேனேயென்குதே
நாமேபரசென்றுநாடோறுமெண்ணுதே.

(ப-ரை.) காமக்குரோதம் – காமமும் கோபமும், கடக்கேனேயென்குது-ஒழிந்ததில்லை; நாமேயரசென்று-எல்லாரைவிட நாமேபெரியனென்று, நாடோறுமெண்ணுது-பிரதிதினம் நினைக்கின்றது. (12)

அச்சமாங்காரமடங்கேனேயென்குதே
கைச்சுமின்னுமானங்கழலேனேயென்குதே.

(ப-ரை.) அச்சம் ஆங்காரம் - அதைரியமும் இறுமாப்பும், அடங்கேனேயென்குது-அடங்குவதில்லை; கைச்சுமின்னுமானம்–யாவற்றையும் வெறுதும் அபிமானம், கழலேனேயென்குது-ஒழிந்ததில்லை. (13)

நீர்க்குமிழியாமுடலைநித்தியமாயெண்ணுதே
ஆர்க்குமுயராசையழியேனேயென்குதே

(ப-ரை.) நீர்க்குமிழியாமுடலை - நீரிலுண்டாகும் மொக்குளையொத்ததேகத்தை, நித்தியமாயெண்ணுது-என்றைக்குமுள்ளதாக நினைக்கிறது; ஆர்க்குமுயராசை-அனுபவிக்குமிகுந்த அவா, அழியேனேயென்குது-ஒழிந்ததில்லை. (14)

கண்ணுக்குக்கண்ணெதிரேகட்டையில்வேகக்கண்டும்
மண்ணுந்திரமாயிருப்போமென்றெண்ணுதே.

(ப-ரை.) கண்ணுக்குக் கண்ணெதிரே - நித்தியமும்தனக்கு முன்னே, கட்டையில்வேகக்கண்டும்-சுடுகாட்டில் எரியப்பார்த்தும், மண்ணுந்திரமாய்-எக்காலமும், இருப்போமென்றெண்ணுது-வாழ்ந்திருப்போமென்கிறது. (15)

அநித்தியத்தைநித்தியமென்றுதாரவாரெண்ணுதே
தனித்திருக்கேனென்குதேதனைமறக்கேனென்குதே.

(ப-ரை.) அநித்தியத்தை நித்தியமென்று - அழியத்தக்கதை என்று முள்ளதென்று, ஆதாரவாயெண்ணுது-பற்றுகநினைக்கின்றது; தனித்திருக்கேனென்குது - நிட்டைகூடத்தனித்திருப்பதில்லை; தனைமறக்கேனென்குது-மனதையொருமைப்படுத்துவதில்லை. (16)

நரகக்குழியுமின்னுநான்புசிப்பேனென்குதே
உரகப்படத்தல்குலுனைக்கெடுப்பேனென்குதே.

(ப-ரை.) நரகக்குழியும் - நரகக்குழியும், இன்னும் நான்புசிப்பேனென்குது-இன்னும்நான் எடுத்துவிழுங்கிவிடுவேனென்கிறது; உரகப்படுத்தல்குல்-பாம்பின்படத்தினையொத்த (மாதர்) நிதம்பமானது, உனைக்கெடுப்பேனென்குது-மயக்குகின்றது. (17)

குரும்பைமுலையுக்குடிகெடுப்பேனென்குதே
அரும்புவிழியுமென்றனுவியுண்பேனென்குதே.

(ப-ரை.) குரும்பைமுலையும் - (மாதரது) தென்னங்குரும்பினையொத்த தனமானது, குடிகெடுப்பேனென்குது-(தன்வசமாக்கிக்) குடும்பத்தினைக் கெடுத்துவிடுவேனென்கிறது; அரும்புவிழியும்-(அம்மாதர்கள்) நீலமலரினையொத்தகண்கள், ஆவியுண்பேனென்குது-உயிரையுண்டிடுவேனென்கிறது ()

மாதருருக்கொண்டுமறலிவஞ்சமெண்ணுதே
ஆதரவுமற்றிங்கரக்காயுருகிறண்டா.

(ப-ரை.) மறலி - இயமனுனவன், மாதருருக்கொண்டு - பெண்கள் வடிவினையெடுத்து, வஞ்சமெண்ணுது-மோசஞ்செய்கின்றான்;ஆதரவுமற்று-(அதனல்) யாதொரு உதவியின்றி, அரக்காயுருகிறண்டா-தீயிலிட்ட அரக்கினையொத்து உருகிப்போகின்றேன். (19)

கந்தனையீன்றருளுங்கன்னிவனநாதா
எந்தவிதத்திலுனேறிப்படருவண்டா.

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

(ப-ரை.) கந்தனை யீன்றருளும் — முருகக்கடவுளைப் பெற்றெடுத்த, கன்னிவனநாதா-மதுரைச்சொக்கலிங்கப் பெருமானே,எந்தவிதத்திலுல்-எந்தவுபாயத்தால், ஏறிப்படருவண்டா - உனதுதிருவடியினை யடைந்துய்வேன்

புல்லாகிப்பூடாய்ப்புலர்ந்தநாள்போதாதோ
கல்லாய்மரமாய்க்கழிந்தநாள்போதாதோ.

(ப-ரை.) புல்லாகி - புல்லாகியும், பூண்டாய்-பூண்டாகியும், புலர்ந்தநாள்-வாடியகாலம், போதாதோ-; கல்லாய்-கல்லாகியும், மரமாய்—விருட்சமாகியும், கழிந்தநாள்-ஒழிந்தகாலம், போதாதோ-போதாதோ. (21)

கிரியாய்க்கிடமாய்க்கெட்டநாள்போதாதோ
நீரியாயூர்வனவாய்நின்றநாள்போதாதோ.

(ப-ரை.) கிரியாய் - கிரிப்பிள்ளையாகியும், கிடமாய் - புழுவாகியும் கெட்டநாள்-அறிவுகுறைந்திருந்தகாலம், போதாதோ-; நீரியாய்-நீர்வாழ்வனவாயும், ஊர்வனவாய்-நகருகின்ற பாம்புமுதலியவைகளாயும்,நின்றநாள்போதாதோ-வாழ்ந்தகாலம்போதாதோ. (22)

பூதமொடுதேவருமாய்ப்போனநாள்போதாதோ
வேதனைசெய்தானவராய்வீழ்ந்தநாள்போதாதோ.

(ப-ரை) பூதமொடு-பூதங்களுடனே, தேவருமாய்-தெய்வலோகத்தர்களாய், போனநாள் - பிறந்துவாழ்ந்தகாலம், போதாதோ-; வேதனைசெய்தானவராய் - துன்பத்தினை விளைக்கின்ற அசுரர்களாய், வீழ்ந்தநாள் போதாதோ - அலைந்தகாலம் போதாதோ. (23)

அன்னைவயிற்றிலழிந்தநாள்போதாதோ
மன்னவனாய்வாழ்ந்துமரித்தநாள்போதாதோ.

(ப-ரை.) அன்னைவயிற்றில் - தாயினுடையகர்ப்பத்தில், அழிந்தநாள் போதாதோ-வெளிப்படாமலே அழிந்தகாலம்போதாதோ; மன்னவனாய் வாழ்ந்து-அரசனாகவிருந்து, மரித்தநாள் போதாதோ-இறந்தகாலம்போதாதோ. ()

தாயாகித்தாரமாய்த்தாழ்ந்தநாள்போதாதோ
சேயாய்ப்புருடனுமாய்ச்சென்றநாள்போதாதோ.

(ப-ரை.) தாயாகி - (நான்ஒருவருக்குத்) அன்னையாகியும், தாரமாய்-(நானொருவருக்கு) மனைவியாகியும், தாழ்ந்தநாள்-தாழ்வையடைந்தகாலம், போதாதோ-; சேயாய்-(நானொருவனுக்குக்)குழந்தையாய்,புருடனுமாய்-(நானொருவனுக்கு) நாயகனாய், சென்றநாள்போதாதோ-காலங்கழித்தது போதாதோ.()

நோயுண்ணவேமெலிந்துநொந்தநாள்போதாதோ
பேயுண்ணப்பேயாய்ப்பிறந்தநாள்போதாதோ.

(ப-ரை.) நோயுண்ணவேமெலிந்து - பற்பலநோய்களின் உபத்திரவத்தால் மெலிவுற்று, நொந்தநாள்-துன்பமடைந்தகாலமும், பேயுண்ணப்பேயாய்-அறியாமையுடையபேயாகி,பிறந்தநாள்-உதித்தகாலம்,போதாதோ-. (26)

ஊனவுடல்கூன்குருடாயுற்றநாள்போதாதோ
ஈனப்புசிப்பிலிளைத்தநாள்போதாதோ.

(ப-ரை.) ஊனவுடல் கூன்குருடாய் - மாமிசதேகத்தில் கூனாயும் குருடாயும், உற்றநாள்-இறந்தகாலமும், ஈனப்புசிப்பில்-அற்பபோசனத்தால், இளைத்தநாள்-இளைத்துப்போனகாலம், போதாதோ—. (27)

பட்டகளையும்பரதவிப்பும்போதாதோ.
கெட்டநாள்கெட்டெனென்றுகேளாதும்போதாதோ,

(ப-ரை.) பட்டகளையும் - அடிக்கடிசென்மந்தானேர்ந்த இளைப்பும், பரதவிப்பும்-பரதவிப்பும், கெட்டநாள் கெட்டேனென்று - வீணாகக்கழிந்தகாலம் போக, கேளாதும் - இனியேனும் பிறர்சொல்லைக் கேளாதிருப்பது, போதாதோ. (28)

நில்லாமைக்கேயழுதுநின்றநாள்போதாதோ
எல்லாருமென்பாரமெடுத்தநாள்போதாதோ.

(ப-ரை.) நில்லாமைக்கேயழுது - தேகமுதலியநிலையாமைக்குவிளைந்த, நின்றநாள் - இருந்தநாளும், எல்லாருமென்பாரம் - (செனனங்கடோறும் என் தாய்மார்கள்என்னை) சுமந்தபளுவை, எடுத்தநாள்-எடுக்கும்படிச்செய்தகாலம், போதாதோ. (29)

காமன்கணையாற்கடைபட்டல்போதாதோ
எமன்கரத்தாலிடியுண்டல்போதாதோ.

(ப-ரை.) காமன்கணையால் - மன்மதனுடையஅம்பினால், கடைபட்டல்-கடைபட்டும், எமன்கரத்தால் - காலனுடையகரங்களினால், இடியுண்டல் - அடிக்கடி படைக்கப்பட்டதும், போதாதோ. (30)

நான்முகன்பட்டோலைநறுக்குண்டல்போதாதோ
தேன்றுளபத்தானேமிதேக்குண்டல்போதாதோ.

(ப-ரை.) நான்முகன்பட்டோலை-பிரமன்விதி எட்டினை, நறுக்குண்டல்-(அடிக்கடி) கிழித்ததும், தேன்துளபத்தானேமி - தேன் நிரம்பும் துளசியினையுடைய விஷ்ணுவின் ஆக்ஞையில், தேக்குண்டல் - படைக்கப்படலும், போதாதோ. (31)

உருத்திரனார்சங்காரத்துற்றநாள்போதாதோ
வருத்தமறிந்தையிலைவாவென்றழைத்தையிலை. (கன்னி)

(ப-ரை.) உருத்திரனார் சங்காரத்துற்றநாள் - உருத்திரனால் படைக்கப்பட்ட காலம்போதாதோ, வருத்தமறிந்தையிலை-என்கஷ்டத்தினைத் தெரிந்தாயில்லை, வாவென்றழைத்தையிலை-என்னைச்சமீபத்தும்வரச்செய்தாயில்லை. (32)

பிறப்பைத்தவிர்த்தையிலைபின்னாகக்கொண்டையிலை
இறப்பைத்தவிர்த்தையிலையென்னென்றுகேட்டையிலை.

(ப-ரை.) பிறப்பைத் தவிர்த்தையிலை - எனதுபிறப்பினை யொழித்தாயில்லை, பின்னாகக்கொண்டையிலை - பின்பு அடிமையாகக் கொண்டதுமில்லை, இறப்பைத் தவிர்த்தையிலை - மரணத்தினை யொழித்தாயில்லை, என்னென்று கேட்டையிலை - என்னைவிசாரித்ததுமில்லை. (33)

பாசமெரித்தையிலைபரதவிப்பைத்தீர்த்தையிலை
பூசியநீற்றைப்புனையென்றளித்தையிலை.

(ப-ரை.) பாசமெரித்தையிலை - என்பந்தத்தினை இல்லாமற் செய்தா யில்லை, பரதவிப்பைத் தீர்த்தையிலை-என்கஷ்டத்தினை நீக்கினாயில்லை, பூசிய நீற்றை-தரிக்கத்தகுந்த விபூதியினை, புனையென்று அளித்தையிலை - தரிக்கும் படி கொடுத்தாயில்லை. (34)

அடிமையென்றுசொன்னையிலையக்கமணிதந்தையிலை
விடுமுலகம்போக்கியுன்றன்வேடமளித்தையிலை.

(ப-ரை.) அடிமையென்று சொன்னையிலை-என்னை உனக்குத் தொண் டனென்று ஏற்றுக்கொண்டாயில்லை, அக்குமணி தந்தையிலை - உருத்திராட் சமளித்தாயில்லை, விடுமுலகப்போக்கி - நீங்குவதற்கேதுவாகிய பிரபஞ்சத்தி னின்றும்நீக்கி, உன்றன்வேடமளித்தையிலை-சாரூபம் தந்தாயில்லை. (35)

உன்னிலழைத்தையிலையொன்றாக்கிக்கொண்டையிலை
நின்னடியார்கூட்டத்தினீயழைத்துவைத்தையிலை

(ப-ரை.) உன்னிலழைத்தையிலை - சாரூபந்தந்தாயில்லை, ஒன்றாக்கிக் கொண்டையிலை - சாயுச்சியம் கொடுத்தாயில்லை, நின்னடியார் கூட்டத்தில்- சிவனடியார்சங்கத்தில்,நீயழைத்துவைத்தையிலை-நீகூப்பிட்டுச்சேர்த்தாயில்லை.

ஓங்குபரத்துளொளித்தவடியார்க்கடியான்
ஈங்கோரடியானெமக்கென்றுரைத்தையிலை.

(ப-ரை.) ஓங்குபரத்துள் – ஓங்கியசிவத்துள், ஒளித்த – கலந்த, அடி யார்க்கடியான் - அடிமைக்கடிமை, ஈங்கோரடியானெமக்கு - இவனும் நமது அடிமை, என்றுரைத்தையிலை - என்றுசொன்னாயில்லை. (37)

நாமந்தரித்தையிலைநானொழியநின்றையிலை
சேமவருளிலென்னைச்சிந்தித்தழைத்தையிலை.

(ப-ரை.) நாமந்தரித்தையிலை - சிவனடியான் என்று சொன்னாயில்லை, நானொழியநின்றையிலை - ஆங்காரத்தை நீக்கினாயிலை, சேமவருளிலென்னை - திருவருளிலென்னைச்சேர,சிந்தித்தழைத்தையிலை-எண்ணிக்கூப்பிட்டாயில்லை,

முத்தியளித்தையிலைமோனங்கொடுத்தையிலை
சித்தியளித்தையிலைசீராட்டிக்கொண்டையிலை.

(ப-ரை.) முத்தியளித்தையிலை - மோட்சம்கொடுத்தாயில்லை, மோனங் கொடுத்தையிலை - சும்மாயிருக்க வைத்தாயில்லை, சித்தியளித்தையிலை-அருட் சித்திதந்தாயில்லை, சீராட்டிக்கொண்டையிலை - பாராட்டினாயில்லை. (39)

தவிர்ப்பைத்தவிர்த்தையிலைதானாக்கிக்கொண்டையிலை
அவிப்பரியதீயாயென்னாசைதவிர்த்தையிலை.

(ப-ரை.) தவிர்ப்பைத் தவிர்த்தையிலை - பரிதவிப்பை நிவர்த்திசெய்தா யில்லை, தானாக்கிக் கொண்டையிலை - சிவமாகச்செய்தாயில்லை, அவிப்பரிய

தீயாம் - அணையத்தகாத நெருப்பாகிய, என்னைச தவிர்த்தையிலே - என் அவாவினை நீக்கினையில்லை. (40)

நின்றநிலையினிறுத்தியெனை வைத்தையிலே
துன்றுங்கரணமொடுதொக்கழியப்பார்த்தையிலே.

(ப-ரை.) நின்றநிலையில் - திருவருணிலையில், நிறுத்தி - அழுந்தி, எனை வைத்தையிலே - எனையிருக்கச்செய்தாயில்லை, துன்றுங்கரணமொடு - பொருந்திய அகப்புறக்கரணங்கள், தொக்கழிய - தாம்கூடியொழிய, பார்த்தையிலே-திருஷ்டித்தாயில்லை. (41)

கட்டவுலகக்காட்சிக்கட்டொழியப்பார்த்தையிலே
நிட்டையிலேநில்லென்றுநீநிறுத்திக்கொண்டையிலே. (நன்னி)

(ப-ரை) கட்டவுலகக்காட்சி - பந்தமாகிய பிரபஞ்சகாட்சி, கட்டொழியப்பார்த்தையிலே - கலகலத்துப்போகத் தீக்ஷித்தாயில்லை, நிட்டையிலே நில்லென்று - சிவயோகத்திலே வாவென்று, நிறுத்திக்கொண்டையிலே - நிறுத்தினையில்லை. (42)

கடைக்கணருள்தாடாகன்னிவனநாதா
கெடுக்குமலமொருக்கிக்கிட்டிவரப்பாரேடா.

(ப-ரை.) கன்னிவனநாதா - மதுராபுரித்தேவே, கடைக்கணருள்தாடா - நயனதீட்சை செய்வாயாக, கெடுக்கும் - பந்தத்திலருத்தும், மலம் - ஆணவத்தினை, ஒருக்கி - அதன்காரியத்தைநீக்கி, கிட்டிவரப்பாரேடா - சிவசாமீபத்தினையளிக்க அனுக்கிரகிப்பாயாக. (43)

காதல்தணியேனோகண்டுமகிழேனோ
சாதல்தவிரேனோசங்கடந்தான்தீரேனோ.

(ப-ரை.) காதல் - உலகஆசையை, தணியேனோ - அடக்கிக்கொள்ளேனோ, கண்டு - தேவரீர் திருவுருவத்தினைத் தரிசனம்செய்து, மகிழேனோ - களியேனோ, சாதல் — மரணத்தினை, தவிரேனோ - நீக்கிக்கொள்ளேனோ, சங்கடந்தான் - பிரபஞ்சஅலைச்சல், தீரேனோ - நீங்கேனோ. (44)

உன்னைத்துதியேனோவூர்நாடிவாரேனோ
பொன்னடியைப்பாரேனோபூரித்துநில்லேனோ.

(ப-ரை.) உன்னை - தேவரீரை, துதியேனோ - தோத்திரம் செய்யேனோ, ஊர்நாடி - சிவத்தலங்களை விசாரித்து, வாரேனோ — யாத்திரை செய்யேனோ, பொன்னடியை - தேவரீர் திருவடியை, பாரேனோ - தரிசியேனோ, பூரித்துநில்லேனோ - ஆனந்தமடையேனோ. (45)

ஓங்காரப்பொற்சிலம்பினுல்லாசம்பாரேனோ
பாங்கானதண்டைபுலபணியும்பாரேனோ.

(ப-ரை.) ஓங்காரம்பொற்சிலம்பின் - (தேவரீர் திருவடியில்தரித்த) பிரணவசொரூபமாகிய அழகிய சிலம்பின், உல்லாசம்பாரேனோ - அழகைத் தரிசியேனோ, பாங்கான - பொருத்தமான, தண்டைப்பலபணியும் - தண்டைமுதலிய பலபூஷணங்களையும், பாரேனோ. (46)

வீரகண்டாமணியின்வெற்றிதனைப்பாரேனோ
சூரர்கண்டுபோற்றுமந்தச்சுந்தரத்தைப்பாரேனோ.

(ப-ரை.) வீரகண்டாமணியின் - ஜயகண்டாமணியென்னும் ஆபரணத்தின், வெற்றிதனை - வல்லபத்தை, பாரேனோ - சூரர்கண்டுபோற்றும் - வீரர்கள் தரிசித்து வணங்கும், அந்தச்சுந்தரத்தை — அவ்வழகை, பாரேனோ. (47)

இடையில்புலித்தோலிருந்தநலம்பாரேனோ
விடையிலெழுந்தருளும்வெற்றியினைப்பாரேனோ.

(ப-ரை.) இடையில் - அரையில், புலித்தோல் - புலியின்தோல், இருந்த நலம் - தங்கியஅழகை, பாரேனோ-விடையில் - (தருமரூபமான) இடபத்தில், எழுந்தருளும்- ஆரோகணித்திருக்கும், வெற்றிதனை-ஜயத்தினை, பாரேனோ.

ஆனையுரிபோர்த்தவழகுதனைப்பாரேனோ
மானைப்பிடித்தேந்துமலர்க்கரத்தைப்பாரேனோ.

(ப-ரை.) ஆனையுரிபோர்த்த — யானைத்தோலைத்தரித்த, அழகுதனை - சுந்தரத்தை, பாரேனோ—மானைப் பிடித்தேந்து - மானையேந்திய, மலர்க்கரத்தை - தாமரை மலர்போன்ற திருக்கையினை, பாரேனோ. (49)

மாண்டார்தலைபூண்டமார்பழகைப்பாரேனோ
ஆண்டார்நமக்கென்றறைந்துதிரியேனோ.

(ப-ரை.) மாண்டார் - இறந்தவர்களாகிய பிரமவிஷ்ணுக்கள், தலை - சிரங்களை, பூண்ட - தரித்த, அழகை - சுந்தரத்தை, பாரேனோ-ஆண்டார் - தலைவர், நமக்கென்று - அடியேங்கட்கென்று, அறைந்து திரியேனோ-பேசிச் சஞ்சரியேனோ. (50)

கண்டங்கறுத்துநின்றகாரணத்தைப்பாரேனோ
தொண்டர்குழுவினின்றதோற்றமதைப்பாரேனோ.

(ப-ரை.) கண்டங்கறுத்துநின்ற - திருமிடற்றில்விடந் தங்கிய, காரணத்தை - எதுவை, பாரேனோ - தொண்டர் குழுவினின்ற - சிவனடியார் சங்கத்திருந்த, தோற்றமதை - காட்சியினை, பாரேனோ. (51)

அருள்பழுத்தமாமதியாமானனத்தைப்பாரேனோ
திருநயனச்சடையொளிருஞ்செழுங்கொழுமைபாரேனோ.

(ப-ரை.) அருள்பழுத்த - திருவருள்முதிர்ந்த, மாமதியாம் - அழகிய சந்திரனையொத்த, ஆனனத்தை - திருமுகத்தினை, பாரேனோ - திருநயனம் -

திருபாநேத்திரத்துடன், சடையொளிரும் - சடாபாரம் விளங்கும், செழுங் கொழுமை-மிகுந்த அழகினை, பாரேனே. (52)

செங்குமிழின் துண்டம்வளர்சிங்காரம்பாரேனே
அங்கனியைவென்றவதரத்தைப்பாரேனே.

(ப-ரை.) செங்குமிழின் துண்டம்வளர் - செம்மையான குமிழமலரினை யொத்த நாசியினிலுண்டாகிய, சிங்காரம்-அழகினை, பாரேனே-அங்கனியை வென்ற-அழகியகோவைப்பழத்தினுமிக்க, அதரத்தை-உதட்டினை,பாரேனே.

முல்லைநிலவெறிக்குமூரலொளிபாரேனே
அல்லார்புருவத்தழகுதனைப்பாரேனே.

(ப-ரை.) முல்லைநிலவெறிக்கும் - முல்லையரும்பினைப்போலப்பிரகாசிக் கும், மூரலொளி - பற்களின்பிரகாசத்தினை, பாரேனே - அல்லார்புருவத்து-கறுத்தபுருவத்தின், அழகுதனை-அந்தத்தை, பாரேனே. (54)

மகரங்கிடந்தொளிரும்வண்மைதனைப்பாரேனே
சிகரமுடியழகுஞ்செஞ்சடையும்பாரேனே.

(ப-ரை.) மகரங்கிடந்தொளிரும் – முதலையின் வடிவத்தினையொத்துப் பிரகாசிக்கும், வண்மைதனை-குண்டலங்களினழகைபாரேனே, சிகரமுடியழகும்-சிரசின்முடியழகினையும், செஞ்சடையும்-சிவந்தசடையினையும்பாரேனே

கங்கையொடுதிங்கணின்றகாட்சிதனைப்பாரேனே
பொங்கரவைத்தான்சடையிற்பூண்டவிதம்பாரேனே.

(ப–ரை.) கங்கையொடுதிங்கணின்ற – கங்காநதியுடனே சந்திரன்றங் கிய, காட்சிதனை - அழகை, பாரேனே. பொங்கரவை - மிகுந்தசர்ப்பகூட்ட ங்களை, தான் சடையில் பூண்டவிதம் - தான் சடாபாரத்தில் தரித்தவகை யினை, பாரேனே. (56)

சரக்கொன்றைபூத்தசடைக்காட்டைப்பாரேனே
எருக்கறுகூமத்தையணியேகாந்தம்பாரேனே.

(ப-ரை.) சரக்கொன்றைபூத்த - தொங்கும் கொன்றைமலர் புட்பித்த, சடைகாட்டை-நெருங்கியசடையினைபாரேனே. எருக்கறுகூமத்தை-எருக்கு, அறுகு, ஊமத்தை, அணியேகாந்தம்-அணிந்ததனிக்கோலத்தை, பாரேனே.

கொக்கிறகுசூடிநின்றகொண்டாட்டம்பாரேனே
அக்கினியையேந்திநின்றவானந்தம்பாரேனே.

(ப-ரை.) கொக்கிறகுசூடிநின்ற - கொக்குப்பட்சியின் இறகினைத்தரித் திருந்த, கொண்டாட்டம் - ஆனந்தத்தை, பாரேனே. அக்கினியை - மழுவா யுதத்தை, ஏந்திநின்ற - தாங்கிய, ஆனந்தம் - களிப்பினை, பாரேனே. (58)

தூக்கியகாலுந்துடியிடையும்பாரேனோ
தாக்குமுயலகன்மேற்றாண்டவத்தைப்பாரேனோ.

(ப-ரை.) தூக்கியகாலும் - கனகசபையின்கண்ணேதூக்கியதிருவடியும், துடியிடையும் - உடுக்கைபோன்ற இடையினையும், பாரேனோ. தாக்கு முயலகன்மேல்-எதிர்த்தமுயலகாசூரன் முதுகில், தாண்டவத்தைச் செய்தருளும் நிர்த்தனத்தை, பாரேனோ. (59)

வீசுகரமும்விகசிதமும்பாரேனோ
ஆசையளிக்குமபயகரம்பாரேனோ.

(ப-ரை.) வீசுகரமும் - சிற்றம்பலத்திலே வீசுகின்றதிருக்கரத்தினையும், விகசிதமும் - குஞ்சிரிப்பினையும், ஆசையளிக்கும் - விருப்பத்தினைவிளைவிக்கும், அபயகரம் - அபயாஸ்தத்தையும், பாரேனோ. (60)

அரிபிரமர்போற்றவமரர்சயசயெனப்
பெரியம்மைபாகம்வளர்பேரழகைப்பாரேனோ

(ப-ரை.) அரிபிரமர்போற்ற - நாரணனும் நான்முகனுந்தோத்தரிக்க, அமரர்சயசயென - தேவர்கள் ஜெயஜெயவென்ன, பெரியம்மை - பெரியநாயகியம்மை, பாகம்வளர்-இடதுபாகத்தில் தங்கியிருக்கும், பேரழகை - மிகுந்த அழகினை, பாரேனோ. (61)

சுந்தரநீற்றின்சொகுசுதனைப்பாரேனோ
சந்திரசேகரனாய்த்தயவுசெய்தல்பாரேனோ. (கண்ணி)

(ப-ரை.) சுந்தரநீற்றின் - அழகியவிபூதியின், சொகுசுதனை - அலங்காரத்தினை, பாரேனோ. சந்திரசேகரனாய் - சந்திரசூடனாய், தயவுசெய்தல் - கிருபையுடன் தரித்திருத்தலை, பாரேனோ. (62)

கெட்டநாள்கெட்டாலுங்கிருபையினிப்பாரோடா
பட்டநாள்பட்டாலும்பதமெனக்குக்கிட்டாதோ.

(ப-ரை.) கெட்டநாள்கெட்டாலும் - அருளையடையாமல் வீணனகாலம் போனாலும், கிருபையினிபாரோடா - இனியாயினும் கிருபைபாலிப்பாயாக. பட்டநாள்பட்டாலும் - துன்பமடைந்தநாள் பலவுண்டாயினும், பதமெனக்குக்கிட்டாதோ - தேவரீர் திருவடி அடியேனுக்குச் சித்தியாதோ. (63)

நற்பருவமாக்குமந்தநாளெனக்குக்கிட்டாதோ
எப்பருவமுங்கழன்றவேகாந்தங்கிட்டாதோ.

(ப-ரை.) நற்பருவமாக்கு மந்தநாள் - பரிபக்குவமாகுங்காலம், கிட்டாதோ-எப்பருவமுங் கழன்ற ஏகாந்தம் — எல்லாப்பருவங்களையுங்கடந்து தனித்திருக்குநாள், கிட்டாதோ. (64)

வாக்கிறந்துநின்றமவுனமதுகிட்டாதோ
தாக்கிறந்துநிற்குமந்தத்தற்சுத்திகிட்டாதோ.

(ப-ரை.) வாக்கிறந்துநின்றமவுனமது - பேசாதிருந்தமவுனயோகநிலை, கிட்டாதோ - தாக்கிறந்துநிற்கும் - தற்போதமற்றுநிற்கும், அந்தத்தற்சுத்தி - அச்சுத்தமாந்தன்மை, கிட்டாதோ.— (65)

வெந்துயரைத்தீர்க்குமந்தவெட்டவெளிகிட்டாதோ
சிந்தையையந்தீர்க்குமந்தத்தேறலதுகிட்டாதோ.

(ப-ரை.) வெந்துயரைத்தீர்க்கும் - கொடியபிறவித்துன்பத்தை நிவிர்த்திக்கும், அந்தவெட்டவெளி – அச்சிதாகாயம், கிட்டாதோ—, சிந்தையையந்தீர்க்கும்-மனச்சந்தேகத்தையொழிக்கும், தேறலது-தேனனது, கிட்டாதோ.-

ஆனவடியார்க்கடிமைகொளக்கிட்டாதோ
ஊனமறவென்னையுணர்த்துவித்தல்கிட்டாதோ.

(ப-ரை.) ஆனவடியார்க்கடிமைகொள - தேவரீருக்குரித்தாகிய சிவனடியவர்கட்கு அடிமையாய்வாழ, கிட்டாதோ, ஊனமறவென்னை - குற்றம்நீங்க அடியேனை, உணர்த்துவித்தல்-உள்நின்று திருவருளையூட்டல், கிட்டாதோ,

என்னென்றுசொல்லுவண்டாவென்குருவேகேளேடா
பின்னையெனக்குநீயல்லாற்பிறிதிலையே. (கண்ணி)

(ப-ரை.) என்குருவே - அடியேனதுஆசிரியரே ! என்னென்றுசொல்லுவன் - அடியேனது வினையின் செயலை என்னவென வெடுத்துரைப்பேன், கேளேடா-கேட்பீராக, பின்னையெனக்கு-பின்புஅடியேனுக்கு, நீயல்லாற்பிறிதில்லை - துணைதேவரீரல்லது வேறில்லை. (68)

அன்னவிசாரமதுவற்றவிடங்கிட்டாதோ
சொன்னவிசாரந்தொலைந்தவிடங்கிட்டாதோ.

(ப-ரை.) அன்னவிசாரமது - ஆகாரசம்பந்தமாக விளையுந்துக்கம், அற்றவிடம் - நீங்கினஇடம், கிட்டாதோ—, சொர்னவிசாரம் - பொருள் சம்பந்தமானதுன்பம், தொலைந்தஇடம் - நீங்கின இடம், கிட்டாதோ—, (69)

உலகவிசாரமொழிந்தவிடங்கிட்டாதோ
மலக்குழுவின்மின்னார்வசியாதுங்கிட்டாதோ.

(ப-ரை.) உலகவிசாரம் - பிரபஞ்சதுன்பம், ஒழிந்தவிடம் - நீங்கினஇடம், கிட்டாதோ—, மலக்குழுவின்மின்னார்-மலத்தடிப்பு மிகுந்த மாதர்கள். வசியாதும் - அவர்கள்மத்தியில் தங்காதிருப்பதும், கிட்டாதோ—, (70)

ஒப்புவமைபற்றறவொழிந்தவிடங்கிட்டாதோ
செப்புதற்குமெட்டாத்தெளிந்தவிடங்கிட்டாதோ.

(ப-ரை.) ஒப்பு-சமுத்துவம், உவமை — திருட்டாந்தம், பற்று - பந்தம், ஒழிந்தவிடம் - நீங்கியநிலை, கிட்டாதோ—, செப்புதற்கு - வாக்காலெடுத்தும் பேசுதற்கு, எட்டா-கிட்டா—, தெளிந்தவிடம்-சலனமற்றநிலை, கிட்டாதோ.

வாக்குமனோதீதவகோசரத்திற்செல்லவெனை
தாக்குமருட்குருவேநின்றாளிணைக்கேயான்போற்றி.

(ப-ரை) வாக்கு - பேச்சினுக்கும், மனம்-உள்ளத்திற்கும், அதிகஅகோசரத்தில்-கடந்த துரியத்தில், செல்ல - அடைய, எனை - அடியேனை, தாக்கும்-சேர்க்கும், அருட்குருவே-திருவருணிறைந்தவடிவே நின்தாளிணைக்கே - தேவரீர்திருவடிக்கே, யான்போற்றி - அடியேன்தோத்தரிக்கின்றேன். (72)

முதல்வன் முறையீடு முற்றிற்று.

பட்டினத்துப்பிள்ளையார்
மகடேஉமுன்னிலையாகத் திருவாய்மலர்ந்த
அருட்புலம்பல்.

ஐங்கரனைத்தெண்டனிட்டேனருளடையவேண்டுமென்று
தங்காமல்வந்தொருவன்றற்சொருபங்காட்டியெனை.

(ப-ரை.) ஐங்கரனை-ஐந்துகரங்களுடன் கூடியவிநாயகரை, அருளடையவேண்டுமென்று-திருவருளினைப் பெறவேண்டுமென்று, தெண்டனிட்டேன்-அஞ்சலித்தேன், ஒருவன் - முதல்வன், தங்காமல் - உடனே தாமதியாமல், வந்து - எழுந்தருளிவந்து, தற்சொருபங்காட்டி - தனதுஉண்மை வடிவினைக் காட்டி, எனை - அடியேனை. (1)

கொள்ளைப்பிறப்பறுக்கக்கொண்டான்குருவடிவம்
கள்ளப்புலனறுக்கக்காரணமாய்வந்தாண்டி.

(ப-ரை.) கொள்ள - அநேகமான, பிறப்பறுக்க - சென்மங்களினை அறுக்க-ஒழிக்க; குருவடிவம்-ஆசாரியகோலத்தினை, கொண்டான்-எடுத்துக்கொண்டான், கள்ளம் - கபடமாகிய, புலனறுக்க - ஐம்புலன்களை வெல்ல, காரணமாய் - ஏதுவாய், வந்தாண்டி—, (2)

ஆதாரமோராறுமைம்பத்தோரட்சரமும்
சூதானகோட்டையெல்லாஞ்சுட்டான்றுரிசறவே.

(ப-ரை.) ஆதாரமோராறும் - மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனுரகம், விசுத்தி, ஆக்ஞையாகிய ஆறினையும், ஐம்பத்தோரட்சரமும் - ஐம்பத்தோரெழுத்துகளையும், சூதானகோட்டை-இவையடங்கிய உடலையெல்லாம், துரிசறவே-குற்றமறவே, சுட்டான்-தீட்சித்தான். (3)

மெத்தவிகாரம்விளைக்கும்பலபலவாம்
தத்துவங்களெல்லாந்தலைகெட்டுவெந்ததடி.

(ப-ரை.) மெத்தவிகாரம் - அனேகமானவிகாரங்களை, விளைக்கும் - உண்டாக்கும், பலபலவாம் - பற்பலவாகிய, தத்துவங்களெல்லாம் - தத்துவ கூட்டங்களெல்லாம், தலைகெட்டு - ஆற்றலழிந்து, வெந்ததடி—. (4)

என்னோடுடன்பிறந்தாரெல்லாரும்பட்டார்கள்
தன்னந்தனியேதரித்திருக்கமாட்டேனடி.

(ப-ரை.) என்னோடு - அடியேனுடன், உடன்பிறந்தார் - கூடவுற்பவித்தனவாகிய, எல்லாரும் - தத்துவசமூகமும், பட்டார்கள்-அழிந்தனர், தன்னந்தனியே - இனியடியேன்தனிமையாக, தனிந்திருக்கமாட்டேன் - தனித்து வாழேன். (5)

எல்லாரும்பட்டகளமென்றுதொலையுமடி
சொல்லியழுதாற்றுயரமெனக்காறுமடி.

(ப-ரை.) எல்லாரும் - தத்துவங்களெல்லாம், பட்டகளம் - ஒடுங்கிய இடம், என்றுதொலையும் - எக்காலநீங்கும், சொல்லியழுதால் - என்துன்பங்களை வாயாற் சொல்லிக் கதறினால், துயரமெனக் காறுமடி - எனது விசனம் நீங்கும். (6)

மண்முதலாமைம்பூதமாண்டுவிழக்கண்டேனடி
விண்முதலாமைம்பொறிகள்வெந்துவிழக்கண்டேனடி.

(ப-ரை.) மண்முதலாமைம்பூதம் - மண், நீர், தீ, காற்று, ஆகாயம்ஆகிய பூதங்கள், மாண்டுவிழ - அவற்றின்காரியநீங்க, கண்டேன், விண்முதலாமைம்பொறிகள் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐம்பொறிகள், வெந்துவிழ - அழிய, கண்டேன்—, (7)

நீக்காப்புலன்களைந்துநீறாகவெந்ததடி
வாக்காதியைவரையுமாண்டுவிழக்கண்டேனடி.

(ப-ரை.) நீக்கா-நீங்குதற்கருமையான, புலன்களைந்தும் - மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஞானேந்திரியங்களும், நீறாகவெந்தது-சாம்பலாயிற்று, வாக்காதிஐவரையும் - வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் ஆகிய கன்மேந்திரியங்களும், மாண்டுவிழ - ஒடுங்க, கண்டேன்—. (8)

மனக்கரணமத்தனையும்வகைவகையேமட்டழிய
இனக்கரணத்தோடேயெரிந்துவிழக்கண்டேனடி.

(ப-ரை.) மனக்கரணமத்தனையும் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம் யாவும், வகைவகையே பட்டழிய - கிரமமாக ஒடுங்க, இனக்கரணத்தோடே - இவைகட்கேதுவான புறக்கரணங்களுடன், எரிந்துவிழ-சாம்பலாக, கண்டேன்,

ஆத்துமதத்துவங்கள் அடுக்கழியவெந்ததடி
போற்றும்வகையெப்படியோபோதமிழந்தானை.

(ப-ரை.) ஆன்மதத்துவங்கள் - ஞானேந்திரியம், கன்மேந்திரியம், அந்தக்கரணம், தன்மாத்திரை, பூதம் ஆகிய இவைகள், அடுக்கழிய - கலைய, வெந்ததடி—, போதமிழந்தானை - தற்போதமில்லாதமுதல்வனை, போற்றும்வகை- இனியேத்துவிடம், எப்படியோ - எங்ஙனமோ அறிகிலேன். (10)

வித்தியாதத்துவங்கள்வெந்துவிழக்கண்டேண்டி
சுத்தவித்தையைந்தினையுஞ்சுட்டான்றுரிசறவே.

(ப-ரை.) வித்தியாதத்துவங்கள் - கலை, காலம், நியதி, வித்தை, அராகம் புருடன், மாயை ஆகிய இவைகள், வெந்துவிழ - அழிய, கண்டேண்டி—, சுத்தவித்தை ஐந்தினையும் - சுத்தவித்தை, ஈச்சுரம், சத்தி, சிவம் ஆகிய இவைகளின், துரிசறவே - காரியந்தலையெடாதபடி, சுட்டான்-தீட்சித்தான்.

மூன்றுவகைக்கிளையுமுப்பத்தறுவரையும்
கான்றுவிழச்சுட்டுக்கருவேரறுத்தாண்டி.

(ப-ரை.) மூன்றுவகைக்கிளையும் - சுத்தம், அசுத்தம், சுத்தாசுத்தமாக மூன்றுவகைப்பட்ட, முப்பத்தறுவரையும் - முப்பத்தாறு தத்துவங்களையும், கான்றுவிழ - செயலற, சுட்டு - தீட்சித்து, கருவேரறுத்தான் — ஆசாரியன் அங்குரியாத வண்ணம் செய்தான். (12)

குருவாகிவந்தானோகுலமறுக்கவந்தானோ
உருவாகிவந்தானோவுருவழிக்கவந்தானோ.

(ப-ரை.) குருவாகிவந்தானோ-ஆசாரியனாகி எழுந்தருளினனோ, குலமறுக்கவந்தானோ-குலப்பற்றைநீக்கவந்தனனோ, உருவாகிவந்தானோ-சகளீகரித்து வந்தனனோ, உருவழிக்கவந்தானோ-தேகத்தடிப்பை நீக்கவந்தனனோ. (13)

கேடுவருமென்றறியேன்கெடுமதிகண்டோற்றாமல்
பாடுவருமென்றறியேன்பதியாண்டிருந்தேண்டி.

(ப-ரை.) கேடுவருமென்றறியேன் - இனிவரும் கேட்டினைப்பற்றிச் சிந்தித்தேனில்லை, கெடுமதிகண்தோற்றாமல் - அறிவுவிளங்காமல், பாடுவருமென்றறியேன் - துன்பத்தினைநோக்கினேனில்லை, பதியாண்டிருந்தேன் - பூமியிற்றலைமை பூண்டிருந்தேன். (14)

எல்லாரும்பட்டகளமின்னவிடமென்றறியேன்
பொல்லாங்குதீர்க்கும்பொறியிலியைக்கண்டேண்டி.

(ப-ரை.) எல்லாரும்பட்டகளம் - தத்துவங்களெல்லாம் ஒடுங்கியஇடம், இன்னவிடமென்றறியேன் - இன்ன நிலைக்களமெனத்தெரிந்தேனில்லை, பொ

ல்லாங்கு தீர்க்கும் - வினையையொழிக்கும், பொறியிலியை - ஐம்பொறிகடந் தமுதல்வனை, கண்டேன்—. (15)

உட்கோட்டைக்குள்ளிருந்தாரொக்கமடிந்தார்கள்
அக்கோட்டைக்குள்ளிருந்தாரறுபதுபேர்பட்டார்கள்.

(ப-ரை.) உட்கோட்டைக்குள்ளிருந்தார் - தேகத்துள்ளே யிருந்ததத்துவங்கள், ஒக்கமடிந்தார்கள் - ஒருங்கேமடிந்தன, அக்கோட்டைக்குள்ளே - அவ்வுடலின்கண்ணே யிருந்ததத்துவங்கள், அறுபதுபேர் பட்டார்கள் - அறுபதுமொடுங்கின. (16)

ஒக்கமடிந்ததடி யூடுருவவெந்ததடி
கற்கோட்டையெல்லாங்கரிக்கோட்டையாச்சுதடி.

(ப-ரை.) ஒக்கமடிந்ததடி-தத்துவக் கூட்டங்கள் ஒருங்கேயொடுங்கியது ஊடுருவவெந்ததடி - அவைநீறாயின, கற்கோட்டையெல்லாம்-கருங்கல்கோட்டையொத்த உடலானது, கரிக்கோட்டையாச்சுது - கரிக்கோட்டைக்குச் சமானமானது. (17)

தொண்ணூற்றறுவரையுஞ்சுட்டான்றுரிசறவே
கண்ணேறுபட்டதடிகருவேரறுத்தாண்டி.

(ப-ரை.) தொண்ணூற்றறுவரையும்-தொண்ணூற்ரறுதத்துவங்களையும் துரிசற - குற்றமற, சுட்டான் - ஆசாரியன் தீட்சித்தான், கண்ணேறுபட்டது – பிறரால் திருஷ்டிபட்டது, கருவேரறுத்தான் - இனிமுளையாதபடி செய்தான். (18)

ஓங்காரங்கெட்டதடியுள்ளதெல்லாம்போச்சுதடி
ஆங்காரங்கெட்டதடியடியோடறுத்தாண்டி.

(ப-ரை.) ஓங்காரம்கெட்டது - பிரணவத்திற்கேதுவாகிய நாதமுங்குறைந்தது, உள்ளதெல்லாம்போச்சுது - அதுசம்பந்தமான வெல்லாம் நீங்கியது, ஆங்காரங்கெட்டது - செருக்கொழிந்தது, அடியோடறுத்தான் - அதற்காதாரமானதும் முளையாதபடி தெய்தான். (19)

தரையாங்குடிலமுதல்தட்டுருவவெந்ததடி
இரையுமனத்திடும்பையெல்லாமறுத்தாண்டி.

(ப-ரை.) தரையாங் குடிலமுதல் - ஆதாரமான பூமியையொத்த சுத்தமாயைமுதலாக, தட்டுருவவெந்தது-ஊடுருவ அடங்கியது, இரையுமனத்திடும்பை - விவகரிக்கும் மனத்துன்பம், எல்லாமறுத்தான் - யாவுநீக்கினன். (20)

முன்னைவினையெல்லாமுழுதுமறுத்தாண்டி
தன்னையறியறியவேதாரொருத்தியானேண்டி.

(ப-ரை.) முன்னைவினையெல்லாம் - சஞ்சிதமுழுவதும், முழுதுமறுத்தான் - முற்றும்நீக்கினுன், தன்னையறியவே - ஆன்மசொரூபத்தினையறிந்தமாத்திரத்து, தானெருத்தியானேன் - முதல்வனைநாயகனுகக்கொண்டு நான் தனித்துவிட்டேன். (21)

என்னையேநானறியவிருவினையுமீடழித்துத்
தன்னையறியத்தலமெனக்குச்சொன்னுண்டி.

(ப-ரை.) என்னையேநானறிய - ஆன்மசொரூபத்தினைத்தெரிந்துகொள்ள, இருவினையுமீடழித்து - நல்வினைதீவினைகளைக்கெடுத்து, தன்னையறிய - முதல்வனைத்தெரிந்துகொள்ள, தலமெனக்குச்சொன்னுன்-தெரிந்துகொள்ளுமிடம் அறிவித்தான். (22)

தன்னையறிந்தேண்டிதனிக்குமரியானேண்டி
தன்னந்தனியேதனியிருக்கும்பக்குவமே.

(ப-ரை.) தன்னையறிந்தேன்-முதல்வனைத் தெரிந்துகொண்டேன், தனிக்குமரியானேன் - அனுபவிக்கும்பக்குவமடைந்தேன், தன்னந்தனியே தனியிருக்கும்பக்குவமோ - இனித்தனிந்திருக்கும் பக்குவம்போலும். (23)

வீட்டிலொருவரில்லைவெட்டவெளியானேண்டி
காட்டுக்கெறித்தநிலாகனவாச்சேகண்டதெல்லாம்.

(ப-ரை.) வீட்டிலொருவரில்லை - உடலில்தத்துவமொன்றுமில்லை, வெட்டவெளியானேன் - சிதாகாயசொரூபனுயினேன்; எல்லாம் காட்டுக்கெறிந்தநிலா - பிரபஞ்சமுழுவதும் காட்டிலெறிகின்ற நிலவினை யொத்தும், கனவாச்சே - கனவாமுடிந்தது. (24)

நகையாரோகண்டவர்கள்நாட்டுக்குப்பாட்டலவோ
பகையாரோகண்டவர்கள்பார்த்தாருக்கேச்சலவோ.

(ப-ரை.) கண்டவர்கள் நகையாரோ - என்றுறவினைக்கண்டவர்கள் சிரியாரோ? நாட்டுக்குப்பாட்டலவோ - நாடனைத்தும் பேச்சாகமுடியாதோ? கண்டவர்கள் பகையாரோ - கண்டார்விரோதியாரோ? பார்த்தாருக்கேச்சலவோ - நேர்ந்தவர்க்குப் பழிப்பலவோ? (25

இந்நிலைமைகண்டாண்டியெங்குமிருந்தாண்டி
கன்னியழித்தாண்டிகற்பைக்குலைத்தாண்டி

(ப-ரை.) இந்நிலைமைகண்டு-அடியேனுடைய நிலையினை நோக்கி; எங்குமிருந்தான் - பரிபூரணனுயிருந்தவன், கன்னியழித்தான் - ஆசிரியகோலங்கொண்டெழுந்தருளி அபக்குவத்தைநீக்கி, கற்பையழித்தான் - ஏகதேசஞானத்தினையொழித்து எல்லாம் சிவமாகப்பாவிக்கச் செய்தான். (26)

கற்புக்குலைத்தமையுங்கருவேறறுத்தமையும்
பொற்புக்குலைத்தமையும்போதமிழந்தமையும்.

(ப-ரை.) கற்புக்குலைந்தமையும் - கற்பினைநீக்கினமையும், கருவோறுத்தமையும் - பிறப்பினையொழித்தமையும், பொற்புக்குலைத்தமையும் - அழகைக்கெடுத்தமையும், போதமிழுந்தமையும் - தற்போதநீங்கினமையும். (27)

என்னவினைவருமோவின்னமெனக்கென்றறியேன்
சொன்னசொல்லெல்லாம்பலித்ததடிசோர்வறவே.

(ப-ரை.) இன்னமெனக்கு-மேலுமடியேனுக்கு, என்னவினைவருமோ - எந்தத்துன்பம்வினையுமோ, அறியேன் - தெரியேன், சொன்னசொல்லெல்லாம் - ஆசாரியன்கூறியவார்த்தையெலாம், சோர்வறவே - தவறாமல், பலித்தது - அனுபவத்தில்வந்தது. (28)

கங்குல்பகலற்றிடத்தைக்காட்டிக்கொடுத்தாண்டி
பங்கமழித்தாண்டிபார்த்தானைப்பார்த்திருந்தேன்.

(ப-ரை.) கங்குல்பகலற்றிடத்தே-இரவுபகலில்லாதசிதாகாயத்திலே, காட்டிக்கொடுத்தான்-சேர்ப்பித்தான்; பங்கமழித்தான்-வினையைப் போக்கினான், பார்த்தானைப்பார்த்திருந்தேன் - அடியேனைநோக்கிய சிவத்தைநான்தரிசித்திருந்தேன். (29)

சாதியிற்கூட்டுவரோசாத்திரத்துக்குள்ளாமோ
ஓதியுணர்ந்ததெல்லாமுள்ளபடியாச்சுதடி.

(ப-ரை.) சாதியிற்கூட்டுவரோ - இறக்கத்துணிந்து கொண்டமையின் இனியுலகினர் குலத்திற் கூட்டிக்கொள்ளுவரோ, சாத்திரத்திற் குள்ளாமோ-நன்மைதீமைஇறந்த என் செயல்சாஸ்திரங்களிற் சட்டுப்படுமோ, ஓதியுணர்ந்ததெல்லாம் - படித்துத்தெரிந்ததெல்லாம், உள்ளபடியாச்சுது - பலித்தது.()

என்னகுற்றஞ்செய்தேனோவெல்லாருங்காணாமல்
அன்னைசுற்றமெல்லாமறியாரோவம்புவியில்.

(ப-ரை.) எல்லாருங்காணாமல் - பிறரறியாதபடி, என்னகுற்றஞ்செய்தேனோ - எதுதீமைபுரிந்தனனோ, அன்னைசுற்றமெல்லாம் - தாய்தந்தையாதியர் அறியாரோஅம்புவியில் - பூமியின்கண்ணே தெரிந்துகொள்ளாரோ, (31)

கொன்றாரைத்தின்றேனோதின்றாரைக்கொன்றேனோ
எண்ணதெல்லாமெண்ணுமிச்சைமறந்தேனோ.

(ப-ரை.) கொன்றாரை - ஒருகாலத்திலென்னைக்கொன்றசீவனை, தின்றேனோ - மற்றொருகாலத்தினனதனைப் புசித்தேனோ, தின்றாரை-ஒருகாலத்திலெனைப்புசித்தசீவனை, கொன்றேனோ - யான்கொன்றுபுசித்தேனோ, எண்ணதெல்லாமெண்ணும் — இத்துன்பங்களையெல்லாம் எண்ணி, இச்சைமறந்தேனோ - ஆசைமறந்தவனாயினனோ. (32)

சாதியிற்கூட்டுவரோசமயத்தோரெண்ணுவரோ
பேதித்துவாழ்ந்ததெல்லாம்பேச்சுக்கிடையாச்சுதடி.

(ப-ரை.) சாதியிற்கூட்டுவரோ - இரந்துண்டவென்னை மறுபடியும் சாதியிற்கூட்டிக்கொள்வரோ,சமயத்தோரெண்ணுவரோ-கட்டுக்கடங்காதவென்னைச் சமயத்தாருளொருவராக மதிப்பார்களோ, பேதித்துவாழ்ந்ததெல்லாம் - வேற்றுமையாக வாழ்ந்ததெல்லாம், பேச்சுக்கிடமாச்சு - வைவுக்கு இடமாயிற்று. (33)

கண்டார்க்குப்பெண்ணலவோகாணார்க்குக்காமமடி
உண்டார்களுண்டதெல்லாமூணல்லாதுண்பர்களோ.

(ப-ரை.) கண்டார்க்குப் பெண்ணல்லவோ — உண்மைதேர்ந்தவர்கட்கு முன்னோநான் பெண்டன்மையுடையவனல்லவோ, காணார்க்குக்காமமடி—அனுபவியாதவர்க்கே இச்சைவிளையுமன்றே. உண்டார்களுண்டதெல்லாம் - அனுபவிப்பவர்போகமனைத்தும், ஊணல்லதுண்பர்களோ - ஊழன்றியனுபவிப்பார்களோ. (34)

கொண்டவர்கள்கொண்டதெல்லாங்கொள்ளாதார்கொள்ளுவரோ
விண்டவர்கள்கண்டவரோகண்டவர்கள்விண்டவரோ.

(ப-ரை.) கொண்டார்கள் கொண்டதெல்லாம் - ஆசாரியரிடத்துப்பெற்றபேறனைத்தும், கொள்ளாதார் கொள்ளுவரோ - பெறார் அனுபவிப்பவரோ, விண்டவர்கள் - பேசுபவர், கண்டவரோ - உண்மையறிந்தவரோ, கண்டவர்கள் - உண்மைதெரிந்தவர்கள், விண்டவரோ - பேசுவரோ. (35)

பண்டாயநான்மறைகள்பாடும்பரிசலவோ
தொண்டாயதொண்டருளந்தோற்றியொடுங்குமதோ.

(ப-ரை.) பண்டாய நான்மறைகள் — பழமையான வேதங்கள், பாடும்பரிசலவோ - தோத்தரிக்குந் தன்மையுடைத்தன்றே, தொண்டாய தொண்டருள்ளம் - அடியார்க்கடியாரது மனத்தில், தோற்றியொடுங்குமதோ - விளங்கியடங்குவதன்றே. (36)

ஓதவெளிதோவொருவருணர்வெளிதோ
பேதமறவெங்கும்விளங்கும்பெருமையன்காண்.

(ப-ரை.) ஓதவெளிதோ-வாக்கினுக்கெட்டுவதோ, ஒருவருணர்வரிதோ-ஒருவன்தெரிந்து கொள்ளுந்தன்மையதோ, பேதமறவெங்கும் - அபேதமாக எவ்விடத்துப், விளங்கும்பெருமையன்காண்—பிரகாசிக்குந்தன்மையுடையன்.

வாக்குமனமுங்கடந்தமனோலயன்காண்
நோக்கவரியவன்காணுண்ணியரினுண்ணியன்காண்.

(ப-ரை.) வாக்குமனமும் - சொல்லும்இருதயமும், கடந்த - கடந்த, மனோலயன்காண் - மனத்திருப்பவன், நோக்கவரியவன்காண் - பிரத்தியட்சத்திற்கேலாதவன், நுண்ணியரில் நுண்ணியன்காண் - அணுவிற்கணுவாயிருப்பவன். (38)

சொல்லுக்கடங்கான்காண்சொல்லிறந்துநின்றவன்காண்
கல்லுளிருந்தகனலொளிபோனின்றவன்காண்.

(ப-ரை.) சொல்லுக்கடங்கான்காண் - அபரஞானத்திற் கட்டுப்படாதவன், சொல்லிறந்து நின்றவன்காண் - அபரஞானத்தைக் கடந்தவன், கல்லுளிருந்த - சிவலிங்கத்திலெழுந்தருளியிருந்த, கனலொளிபோல் - அருட்சோதிபோல, நின்றவன்காண் - இருப்பன்காண். (39)

சுட்டிறந்தபாழதனிற்சுகித்திருக்கச்சொன்னவன்காண்
எட்டிலெழுத்தோவெழுதினவன்கைப்பிழையோ.

(ப-ரை.) சுட்டிறந்த - ஏகதேசவறிவிற்கெட்டாத, பாழதனில் - சிதாகாயத்தில், சுகித்திருக்க - சுகமாகவாழ்ந்திருக்க, சொன்னவன்காண் - கட்டளையிட்டவன், எட்டிலெழுத்தோ - (இத்தகையன் கட்டுக்கடங்குவனென்பது) எட்டிலெழுதிய வெறும்பேச்சோ, எழுதினவன் கைப்பிழையோ - எழுதும்போதுண்டானதவறோ, (அறியேன்.) (40)

சும்மாவிருக்கவைத்தான்சூத்திரத்தைநானறியேன்
அம்மாபொருளிதெனவடையவிழுங்கினண்டி.

(ப-ரை.) சும்மாவிருக்கவைத்தான் - மவுனநிலையில்வாழ வைத்தவன், சூத்திரத்தை நானறியேன் - தந்திரத்தினைமுதலிலறிந்து கொண்டேனில்லை, அம்மாபொருளிதென - (தெரிந்துகொண்டபின்னர்) அம்மா இன்னதுதான் பொருளென்ன, அடையவிழுங்கினன்-என்னைத்தானாக்கிக் கொண்டனன். ()

பார்த்தவிடமெல்லாம்பரமாகக்கணடேண்டி
கோத்தநிலைகுலைத்தகொள்கையறியேண்டி.

(ப-ரை.) பார்த்தவிடமெல்லாம் - நானோக்கிய பொருளனைத்தும், பரமாகக்கண்டேன் - சிவமயமாகத் தரிசித்தேன், கோத்தநிலைகுலைத்த - (தரிசித்தபின்) தத்துவக்கூட்டங்களால் கட்டப்பட்டிருந்த, கொள்கையறியேன்-தன்மைகலைந்தவிதம் தெரிந்தேனில்லை. (42)

மஞ்சனமாட்டிமலர்பறித்துச்சாத்தாமல்
நெஞ்சுவெறும்பாழானேனின்றநிலைகாணேண்டி.

(ப-ரை.) மஞ்சனமாட்டி - (சிவலிங்கப் பெருமானுக்கு) அபிடேகம் செய்து, மலர்பறித்து - புட்பங்களைப்பறித்து, சாத்தாமல் - அருச்சனைசெய்யாமல், நெஞ்சு - மனத்தினை, வெறும்பாழானேன் - வீணாக்கிவிட்டனன், நின்றநிலைகாணேன்-(அதனால்) முதல்வன் உண்மைநிலை தெரிந்தேனில்லை. ()

பாடிப்படித்திருந்தும்பன்மலர்கள்சாத்தாமல்
ஓடித்திரியாமலுருக்கெட்டுவிட்டேண்டி.

(ப-ரை.) பாடிப்படித்திருந்தும் - (பலசாஸ்திரம்) ஆராய்ச்சிசெய்திருந்தும், பன்மலர்கள் - பலபுட்பங்களை, சாத்தாமல் - சிவலிங்கத்தின்மேன் அரு

ச்சியாமல், ஓடித்திரியாமல் - பலதிவ்யத்தலங்கட்குச் செல்லாமல், உருக்கெட்டுவிட்டேன் - தேகத்தை வீணாக்கினன். (44)

மாணிக்கத்துள்ளொளிபோல்மருவியிருந்தாண்டி
பேணித்தொழுமடியார்பேசாப்பெருமையன்காண்.

(ப-ரை.) மாணிக்கத்துள்ளொளிபோல் - மாணிக்கத்தின் கண்ணேவிளங்கும் பிரகாசத்தினைப்போல, மருவியிருந்தான - சிவசத்தித்திருமேனிகொண்டு விளங்கினன், பேணித்தொழுமடியார் – அத்தகைய முதல்வனைவிருப்பிப்பணிந்தார், பேசாப்பெருமையன்-சொல்லுதற்கரியஅருமையினையுடையன்.

அன்றுமுதலின்றளவுமறியாப்பருவமதில்
என்றும்பொதுவாயிருந்தநிராமயன்காண்.

(ப-ரை.) அன்றுமுதலின்றளவும் - பிறந்தநாள்முதல் இன்றையவரையில், அறியாப்பருவமதில் - என்னையானறியாக்காலமுழுவதும், என்றும்பொதுவாயிருந்த - எக்காலமுங்கலந்திருந்த, நிராமயன் - நிராமயனானவன். (46)

சித்தவிகாரத்தாலேசின்மயனைக்காணுமல்
புத்திகலங்கிப்புகுந்தேன்பொறிவழியே.

(ப-ரை.) சித்தவிகாரத்தாலே – மனமயக்கத்தினலே, சின்மயனைக்காணுமல் - பெருமானைத் தரிசியாமல், புத்திகலங்கி - அறிவுவேறுபட்டு, புகுந்தேன் பொறிவழியே - இந்திரியங்களின் வழியேசென்றனன். (47)

பத்தியறியாமற்பாழிற்கவிழ்ந்தேண்டி
ஒத்தவிடநித்திரையென்றொத்துமிருந்தேண்டி.

(ப-ரை.) பத்தியறியாமல் - சிவபக்தியின்னதெனத் தெரிந்துகொள்ளாமல், பாழிற்கவிழ்ந்தேன் - வீண்காலம்போக்கினேன், ஒத்தவிடநித்திரையென்று - சௌகரியமான இடமேசுகமென்ன, ஒத்துமிருந்தேன் - தங்கிவாழ்ந்தேன். (48)

செத்தாரையொத்தேண்டிசிந்தைதெளிந்தேண்டி
மற்றொருமில்லையடிமறுமாற்றங்காணேண்டி.

(ப-ரை.) செத்தாரை – பிணத்தினை, ஒத்தேன் – ஒத்துவாழ்ந்தேன், சிந்தைதெளிந்தேன் - (அதனல்) மனத்தெளிவுற்றேன், மற்றொருமில்லை - சுட்டியவொருவருமில்லை, மறுமாற்றங்காணேன் - வேறுவார்த்தையுங் காணேன்.

கல்வியல்லகேள்வியல்லகைகாட்டுங்காரணங்காண்
எல்லையளவற்றதடியெங்குநிறைந்ததடி.

(ப-ரை.) கைகாட்டுங்காரணம் - சின்முத்திரைக்குக் காரணம், கல்வியல்லகேள்வியல்ல - கல்விகேள்விகளால் தெரிந்துகொள்ளத்தக்கதல்ல, எல்லையளவற்றது - அகண்டிதமானது, எங்குநிறைந்தது - சர்வவியாபகமானது. ()

வாசாமகோசரத்தைமருவியிடங்கொண்டாண்டி
ஆசூசமில்லாண்டியறிவுக்கறிவாண்டி.

(ப-ரை.) வாசாமகோசரத்தை மருவி — ஆன்மாக்களின் வாக்குக்கெட்டாததைப் பொருந்திய, இடங்கொண்டான் - இடத்தினையாய்ந்தவன், அறிவுக்கறிவாய் - அறிவினுக்குஅறிவாகி, ஆசூசமில்லான் - (யாரிடத்தும்) அசூயையில்லாதிருப்பவன். (51)

பத்துதிசைக்கும்மடங்காப்பருவமடி
எத்திசைக்குமெங்குமிடைவிடாதேகமடி.

(ப-ரை.) பத்துத்திசைக்கும் - பத்துத்திசைகட்கும், அடங்கா - கட்டுப்படாத, பருவம் - நிலையினையுடையான், எத்திசைக்கும் - எவ்விடத்தும், எங்கும், இடைவிடாதேகம் — பரிபூரணமாக ஒன்றாயிருப்பவன். (52)

தித்திக்கவூறுமடிசித்தமுடையார்க்குப்
பத்திக்கடலுட்பதித்தபரஞ்சோதியடி.

(ப-ரை.) சித்தமுடையார்க்கு - சிவத்தியான முடையார்க்கு, தித்திக்கவூறும் - சுவைப்பொருளாயுள்ளவன், பத்திக்கடலுள் - பத்தியென்னும் சமுத்திரத்தில், பதித்தபரஞ்சோதி - நிலைத்த அருட்பெருஞ்சோதி. (53)

உள்ளுணர்வாய்நின்றவர்தமுணர்வுக்குணர்வாண்டி
எள்ளளவுமுள்ளத்திலேயேறிக்குறையாண்டி.

(ப-ரை.) உள்ளுணர்வாய் நின்றவர்தம் - அதோமுகத்தி லிருப்பவர்கள், உணர்வுக்குணர்வான் - அறிவிக்கு அறிவாயிருப்பவன், எள்ளளவும் - சிறிதளவும், உள்ளத்திலே - (அடியர்) மனத்திலே, ஏறிக்குறையான் - வித்தியாசமாகவிரான். (54)

தூருந்தலைபுமிலான்றோற்றமொடுக்கமிலான்
ஆருமறியாமலகண்டமாய்நின்றாண்டி.

(ப-ரை.) தூருந்தலையுமிலான் - அடிமுடியிலாதவன், தோற்றமொடுக்கமிலான் - பிறப்புஇறப்பில்லான், ஆருமறியாமல்-ஏகதேச உணர்வினாலறியப்படாத, அகண்டமாய்நின்றான் - வியாபகமாகவிருந்தான். (55)

எத்தனையோவண்டத்திருந்தவர்களெத்தனைபேர்
அத்தனைபேருண்டாலும்அணுவுங்குறையாண்டி.

(ப-ரை.) எத்தனையோ அண்டத்து - எண்ணிறந்த உலகங்களில், இருந்தவர்கள் எத்தனைபேர் - வாழ்ந்தவர்கள் எவ்வளவோ, அத்தனைபேர் உண்டாலும் - அவ்வளவு ஆன்மாக்கள் (திருவருளை) யுண்டாலும், அணுவுங்குறையான் - சிறிதும் குறையான். (56)

வாக்குமனமும்வடிவுமிலாவான்பொருள்காண்
போக்கும்வரவுமிலான்பொருவரியபூரணன்காண்.

(ப-ரை.) வாக்கும் - சொல்லும், மனமும் - உள்ளமும், வடிவும் - உருவமும், இலான் - இலாதவனாகிய, பொருள்-பொருளாயுள்ளவன், போக்கும் - போதலும், வரவும் - வருதலும், இலான் - இல்லாதவன், பொருவரியபூரணன் - ஒப்பற்ற வியாபகன். (57)

காட்சிக்கெளியான்காண்கண்டாலுங்காணன்காண்
மாட்சிமனம்வைத்தார்க்குமாணிக்கத்துள்ளொளிகாண்.

(ப-ரை.) காட்சிக்கெளியான் - திருவருட்பார்வைக்கு இலேசானவன், கண்டாலும்காணன் - ஊனக்கண்ணுக்கு எட்டாதவன், மாட்சிமனம்வைத்தார்க்கு - பெருமையான மனத்தால் தியானித்தவர்கட்கு, மாணிக்கத்துள்ளொளி - மாணிக்கவொளி போன்றவன். (58)

வாழ்த்தியவனைவழிபட்டால்மன்னுயிர்கள்
தோற்றவரியான்காண்சொல்லிறந்தசோதியன்காண்

(ப-ரை.) வாழ்த்தி - வாயாரத்தோத்தரித்து, அவனை - அம்முதல்வனை, வழிபட்டால் - வணங்கினால், தோற்ற - பிரத்தியட்சமாக, அரியான்காண் - அருமையானவன், சொல்லிறந்த - சொல்லுக்கெட்டாத, சோதியன் - அருட்பிரகாசன். (59)

ஐயமறுத்தவனையாராய்வாருண்டானால்
வையகத்தேவந்துமலர்ப்பாதம்வைத்திடுவான்.

(ப-ரை.) ஐயமறுத்தவனை - சந்தேகமொழித்தவனை, ஆராய்வாருண்டானால் - விசாரிப்பாருண்டானால், வையகத்தே - பூமியின்கண்ணே, வந்து - ஆசாரிய கோலங்கொண்டுவந்து, மலர்ப்பாதம் வைத்திடுவான் - திருவடிதீட்சை செய்திடுவான். (60)

அணுவுக்குமேருக்குமகம்புறமாய்நின்றான்காண்
கனுமுற்றுஞானக்கரும்பின்றெளிவான்காண்.

(ப-ரை.) அணுவுக்கும் - அதிசிறிதாகிய அணுவினிடத்தும், அதிபெரிதாகிய மேருவுக்கும் - மேருவினிடத்தும், அகம்புறமாய்-உள்ளும்புறமுமாய், நின்றான் - வியாபகமாகவிருப்பவன், கனு - கணுவானது, முற்றும்-முதிர்ந்த, ஞானக்கரும்பின் - ஞானவடிவான கரும்பினது, தெளிவான் - சுவையுடன் விளங்கும் சாரமானவன். (61)

எந்நாளுமிந்நாளுமிப்படியாயப்படியாய்ச்
சொன்னாலுங்கேளான்காண்சோத்திரத்திற்கொள்ளான்காண்

(ப-ரை.) எந்நாளும் - எக்காலத்திலும், இந்நாளும் — இப்போதும், இப்படியாய் அப்படியாய் - இவ்விதமாயுள்ளவன் அவ்விதமாயுள்ளவன் என்று, சொன்னாலும் - அறிஞர் எவர்சொல்லினும், கேளான்காண் - கேட்கமாட்டான், சோத்திரத்திற் கொள்ளான் - காதுகொடான். (62)

ஆத்தாளுக்காத்தாளாமப்பனுக்குமப்பனுமாம்
கோத்தார்க்குக்கோத்தநிலைகொண்டகுணக்கடல்காண்.

(ப-ரை.) ஆத்தாளுக் காத்தாளாம் - அன்னைக்கு அன்னையாகியும், அப்பனுக்கப்பனும் - தந்தைக்குத் தந்தையும், ஆம் - ஆனவன், கோத்தார்க்குக் கோத்தநிலை-சுற்றத்தினர்க்குச் சுற்றத்தினராயிருந்து, கொண்டகுணக்கடல்-வாய்ந்த கருணைக்கடல். (63)

இப்போபுதிதோவடியெத்தனைநாளுள்ளதடி
அப்போதைக்கப்போதருளறிவுந்தந்தாண்டி.

(ப-ரை.) இப்போபுதிதோ - இன்றுதித்தவனோ, எத்தனைநாளுள்ளது - பழமையாயுள்ளது, அப்போதைக்கப்போது - அடிக்கடி, அருளறிவுதந்தான் - திருவருளையறிந்தான். (64)

பற்றற்றார்பற்றாகப்பற்றியிருந்தாண்டி
குற்றமறுத்தாண்டிகூடியிருந்தாண்டி

(ப-ரை.) பற்றற்றார் - பிரபஞ்சப்பற்றுநீங்கினோர், பற்றாக - அவர்கட்கு ஆதரவாக, பற்றியிருந்தான் - சம்பந்தித்திருந்தான், குற்றமறுத்தான் - பாசத்தையொழித்தான், கூடியிருந்தான் - அத்துவிதமாகவிருந்தான். (65)

வெட்டவெளியிலெனைமேவியிருந்தாண்டி
பட்டப்பகலிலடி பார்த்திருந்தாரெல்லோரும்.

(ப-ரை.) வெட்டவெளியில் - சிதாகாயத்தில், எனைமேவியிருந்தான் - அடியேனைக்கலந்திருந்தான், பட்டப்பகலில்-சுத்தமாயாபுவனத்தில், பார்த்திருந்தாரெல்லாம் — அன்பரெலாம் பார்த்திருந்தனர். (66)

வாழ்வானவாழ்வெனக்குவந்ததடிவாழாமல்
தாழாமற்றாழ்ந்தேண்டிசற்றுங்குறையாமல்.

(ப-ரை.) எனக்கு - அதனாலடியேனுக்கு, வாழ்வானவாழ்வு - திருவருளாகியவாழ்வு, வந்தது - கிடைத்தது, வாழாமல் - பாசத்தில்வாழாமல், தாழாமல் - அதனாற்கீழ்படாமல், சற்றுங்குறையாமல் - சிறிதுங்குறையுண்டாகாதபடி, தாழ்ந்தேன் - திருவருளினமைந்தேன். (67)

பொய்யானவாழ்வெனக்குப்போதுமெனக்காணேண்டி
மெய்யானவாழ்வெனக்குவெறும்பாழாய்விட்டதடி.

(ப-ரை.) பொய்யான - நிலையில்லாத, வாழ்வெனக்கு - பிரபஞ்சவாழ்வெனக்கு, போதுமெனக்காணேன் - திருப்தியடையக்காணேன், மெய்யான வாழ்வெனக்கு - சத்தியமாகிய திருவருளெனக்கு, வெறும்பாழாய்விட்டது - சிதாகாயமாகவாச்சுது. (68)

கன்னியழித்தவனைக்கண்ணாரக்கண்டேண்டி
என்னியல்புநானறியேனீதென்னமாயமடி.

(ப-ரை.) கன்னியழித்தவனை - மலத்திற்கட்டுப்பட்டிருந்தவயதை நீக்கினவனை, கண்ணாரக்கண்டேன் - பிரத்தியட்சமாகத்தரிசித்தேன், என்னியல்புநானறியேன் - (பின்னர்) எனது சுதந்தர நிலையினைத்தேரேன், ஈதென்னமாயம் - இஃதென்னவாச்சரியம். (69)

சொல்லாலேசொல்லுதற்குச்சொல்லவாயில்லையடி
எல்லாருங்கண்டிருந்துமிப்போதறியார்கள்

(ப-ரை.) சொல்லாலேசொல்லுதற்கு - அபரஞானத்தாற் பேசுதற்கு, சொல்லவாயில்லை - வாயெழவில்லை, எல்லாருங்கண்டிருந்தும் (இவ்வுண்மை) யாருமறிந்தும், இப்போதறியார்கள்-மலத்தடிப்பாலிப்போதுணரார்கள். (70)

கண்மாயமிட்டாண்டி கருத்துமிழந்தேண்டி
யுண்மாயமிட்டவனையுருவழியக்கண்டேண்டி.

(ப-ரை.) கண்மாயமிட்டான் - (ஆசாரியன்) நயனதீட்சை செய்தான், கருத்துமிழந்தேன்-(அங்ஙனம் செய்தமாத்திரத்தில்) என்தற்போதமிழந்தேன், உண்மாயமிட்டவனை - என்னுள்ளே போதமிழக்கச்செய்தவனை, உருவழியக்கண்டேன் - நிஷ்களசிவமாகத்தெரிசித்தேன். (71)

என்னசொல்லப்போறேனிந்தவதிசயத்தைக்
கன்னியிளங்கமுகுகாய்த்ததடிகண்ணார.

(ப-ரை.) இந்தவதிசயத்தை - நிகழ்ந்த அருமைப்பாட்டினை, என்னசொல்லப்போறேன் - என்னவெனஎடுத்துச்சொல்லுவேன், கண்ணார-பிரத்தியட்சமாக, கன்னியிளங்கமுகு - (இளம்பாக்குமரம்போன்ற) சிறுவயதிலேயே, காய்த்தது - (காயுண்டானதுபோல) திருவருள்விளைந்தது (72)

ஆர்ந்தவிடமத்தனையுமருளாயிருக்குமடி
சார்ந்தவிடமெல்லாஞ்சவ்வாதுமணக்குதடி.

(ப-ரை.) ஆர்ந்தவிடமத்தனையும் – தங்கியவிடமெல்லாம், அருளாயிருக்கும் - திருவருண்மயமாக விருக்கும், சார்ந்தவிடமெல்லாம் - அடைந்தவிடமுழுவதும், சவ்வாதுமணக்குது - சிவமணம்வீசுகின்றது. (73)

இந்தமணமெங்குமியற்கைமணமென்றறிந்து
அந்தசுகாதீதத்தருட்கடலில்மூழ்கினண்டி.

(ப-ரை.) இந்தமணம் - இங்ஙனம்வீசிய சிவமணம், எங்குமியற்கைமணமென்றறிந்து - இயற்கையாகவேயெவ்விடத்தும் வீசுகின்றமணமென்னத்தெரிந்து, அந்தச்சுகாதீதவருட்கடலில் - அந்தஆனந்தாதீதகிருபாசமுத்திரத்தில், மூழ்கினன் - அழுந்தினேன். (74)

இரும்புநிறைநீர்போலவென்னைவிழுங்கிக்கொண்டாண்டி
அரும்புநிறைவாசனைபோலன்றேயிருந்தாண்டி.

(ப-ரை.) இரும்பினுறைநீர்போல-காய்ச்சியவிரும்பு கிரகித்தநீரினைப்போல, என்னைவிழுங்கிக்கொண்டான் - அடியேனைக் கிரகித்துக்கொண்டான்,

அரும்பிலுறைவாசனைபோல் - புட்பத்திலுற்றமணம்போல, அன்றேயிருந்தான் - எக்காலத்தும் கலந்திருந்தான். (75)

அக்கினிகற்பூரத்தையறவிழுங்கிக்கொண்டாற்போல்
மக்கினமிம்பட்டுள்ளே மருவியிருந்தாண்டி.

(ப-ரை.) அக்கினி - தீயானது, கற்பூரத்தை - கற்பூரத்தினை, அறவிழுங்கிக்கொண்டாற்போல் - கிரகித்தாற்போல, மக்கினப்பட்டு - மலக்குறைவடைந்த, உள்ளே - என்னிடத்தே, மருவியிருந்தான் - கலந்திருந்தான். (76)

கடல்நீறுமாறும்போற்கலந்துகரைகாணேனண்டி
உடலுமுயிரும்போலுட்கலந்துநின்றாண்டி.

(ப-ரை.) கடல்நீரும் - கடற்சலமும், ஆறும்போல் - நதியும்போல, கலந்துகரைகாணேன் - சேர்ந்து எல்லைக்காணேன், உடலும் - தேகமும், உயிரும் - சீவனும்போல, உட்கலந்து - ஒருங்குசேர்ந்து, நின்றான் - இருந்தான். ()

பொன்னுமுரைமாற்றும்போற்பொருவரியபூரணன்காண்
மன்னுமனுபூதியடிமாணிக்கத்துள்ளொளிபோல்.

(ப-ரை.) பொன்னுமுரைமாற்றும்போல் - பொன்னும்அதனையுரைத்துத்தெரிந்து கொள்ளும்மாற்றும்போலவும், மாணிக்கத்தினுள்ளொளிபோல்-மாணிக்கத்தின் பிரகாசம்போலவும், பொருவரியபூரணன் — ஒப்பற்றபரிபூரணனாய், மன்னுமனுபூதி - நிலைபெற்றசுவானுபூதிக்குரியவன். (78)

கங்குகரையில்லாண்டிகரைகாணுக்கப்பலடி
எங்குமளவில்லாண்டியேகமாய்நின்றாண்டி.

(ப-ரை.) கங்குகரையில்லான் - அளவிடப்பட்டான், கரைகாணுக்கப்பல் - எத்துறையினையுநாடாதகப்பலொத்தான், எங்குமளவில்லான் — அகண்டிதன், ஏகமாய்நின்றான் — ஒருதனித்தபொருள். (79)

தீவகம்போலென்னைச்சேர்ந்தபரசின்மயன்காண்
பாவகமொன்றில்லாண்டிபார்த்திடமெல்லாம்பரங்காண்.

(ப-ரை.) தீவகம்போல் - தீபத்தினைப்போல, என்னைச்சேர்ந்தபரசின்மயன் - அடியேனைக்கலந்த ஞானமயன், பாவமொன்றில்லான்-அமலன், பார்த்திடமெல்லாம்பரன் - கண்டவிடம் எங்கும்வியாபி. (80)

உள்ளார்க்குமுள்ளாண்டியூருமில்லான்பேருமில்லான்
கள்ளப்புலனறுக்கக்காரணமாய்வந்தாண்டி.

(ப-ரை.) உள்ளார்க்குமுள்ளான் - உண்டென்பார்க்குப்பிரத்தியட்சமானவன், ஊருமில்லான் பேருமில்லான் - தனக்கென ஊரும்பேருமில்லாதவன், கள்ளப்புலனறுக்க - வஞ்சகமான இந்திரியங்களையொழிக்க, காரணமாய்வந்தான் - ஆச்சாரியனாய்வந்தனன். (81)

அப்பிறப்புக்கெல்லாம்அருளாயமர்ந்தாண்டி
இப்பிறப்பில்வந்தானிவனேகுமெய்ப்பொருள்காண்.

(ப-ரை.) அப்பிறப்புக்கெல்லாம் — முன்செனனகட்கெல்லாம், அருளாயமர்ந்தான் - திருவருள்கூட்டிவந்தான், இப்பிறப்பில் - இச்சென்மத்தில், வந்தான் — ஆசாரியனாய் வந்தான், இவனுக்கு மெய்ப்பொருள் - இவனே உண்மைச் சிவம். (82)

நீரொளிபோலெங்குநிறைந்தநிராமயன்காண்
பாரொளிபோலெங்கும்பரந்தபராபரன்காண்.

(ப-ரை.) நீரொளிபோல் - நீரிற்கலந்த அதனொளிபோல், நிறைந்த நிராமயன் - உலகவியாபகனானபலநோயற்றவன், பாரொளிபோல் - பூமியிற் சூரியப்பிரகாசம்போல, எங்கும் பரந்த பராபரன் - எங்கும் வியாபியாயுள்ளவன்.

நூலாலுணர்வரியநுண்மையினுநுண்மையன்காண்
பாலாறுசர்க்கரைபோற்பரந்தபரிபூரணன்காண்.

(ப-ரை.) நூலால் - பாசநூல்களினாலே, உணர்வரிய - எட்டற்கரிய, நுண்மையினும்-நுட்பத்திலும், நுண்மையன் - அதிசூக்கும மானவன், பாலாறு சர்க்கரைபோல் - பாலும் சருக்கரையுங் கலந்தாற்போல, பரந்தபரிபூரணன் - பரவியபரிபூரணன். (84)

உளக்கண்ணுக்கல்லாதூன்கண்ணுலோருமதோ
விளக்குச்சுடரொளிபோன்மேவியிருந்தாண்டி.

(ப-ரை.) உளக்கண்ணுக்கல்லால் - மனத்தாலல்லது, ஊன் கண்ணுலோருமதோ-ஊனநேத்திரத்தா லாராயத்தக்கவனோ, விளக்குச் சுடரொளிபோல்- அகலிலேத்திய தீபம்போல, மேவியிருந்தான் - பொருந்தியிருந்தான். (85)

கல்லுளிருந்தகனலொளிபோற்காரணமாய்ப்
புல்லியிருந்தும்பொருவரியபூரணன்காண்.

(ப-ரை.) கல்லுள்ளிருந்த - கல்லினிடத்தே சூக்குமமாகவந்திருந்த, கனலொளிபோல் - அக்கினியைப்போல், காரணமாய் ஏதுவாக, புல்லியிருந்தும் - யாரிடத்தும் கலந்திருந்தும், பொருவரிய பூரணன் - ஒப்பற்ற சம்பூரணன். ()

பொற்பூவும்வாசனைபோற்போதம்பிறந்தார்க்குக்
கற்பூவும்வாசனைபோற்காணுக்கயவருக்கு.

(ப-ரை.) பொற்பூவும் வாசனைபோல் - அழகிய புட்பத்தினிடத்து மணம்போல, போதம் பிறந்தார்க்கு - அருளடைந்தார்க்குண்டு, கற்பூவும் வாசனைபோல் - கல்லாற்செய்யப்பட்ட பூவின் வாசனையைப்போல, காணுக்கயவர்க்கு - மருளுடையாருக்குண்டு. (87)

மைக்குழம்புமுத்துப்போன்மருவிமறவாதவர்க்குக்
கைக்குட்கனியாகுங்கருவறுத்தகாரணர்க்கு.

(ப-ரை.) மைக்குழம்பு முத்தும்போல் - கருமையிற்கலந்த முத்தினைப் போல, மறவாதவர்க்குமருவி-தன்னைமறவாதவரிடத்தேபொருந்தி, கருவறுத்த

காரணர்க்கு - பிறவியை நீக்கிய பெரியோர்கட்கு, கைக்குட் கனியாகும்-உள்ளங்கை நெல்லிக்கனியாவன். (88)

பளிங்கிற்பவளமடிபற்றற்றபாவலர்க்குக்
கிளிஞ்சிலைவெள்ளியென்பார்கிட்டாதார்கிட்டுவரோ.

(ப-ரை.) பற்றற்ற பாவலர்க்கு - பிரபஞ்ச மில்லாதவர்கட்கு, பளிங்கிற் பவளம் - பளிங்கினுடன் கலந்த பவளம்போன்றான், கிட்டாதார் - யாருக்கு மெட்டாதவர், கிளிஞ்சிலை வெள்ளியென்பார் - கிளிஞ்சலை வெள்ளியென மயங்குவார்கட்கு, கிட்டுவரோ - எட்டுவரோ. (89)

எட்டுக்கடங்காண்டியெழுத்திற்பிறவாண்டி
நாட்டினரிகளெல்லாநற்புரவிசெய்தாண்டி.

(ப-ரை.) எட்டுக்கடங்கான் - அளக்கப்படாதவன், எழுத்திற்பிறவான் - சொல்லாற்றீர்மானிக்கப் படாதவன், நாட்டில் - உலகில், நரிகளெல்லாம்-நரிகளெல்லாவற்றையும், நற்புரவிசெய்தான் - நல்ல குதிரைகளாகச் செய்தவன். ()

பஞ்சப்பிரளயத்துமிஞ்சியிருப்பாண்டி
நஞ்சுபொதிமிடற்றானயனத்தழல்விழியான்.

(ப-ரை.) பஞ்சப்பிரளயத்து-பிருதிவியாதிஐவகைப் பூதங்களின் பிரளய காலத்தும், மிஞ்சியிருப்பான் - மிகுதியாகவிருப்பவான், நஞ்சுபொதிமிடற்றான் - விஷகண்டன், நயனத்தழல்விழியான் - அக்கினிநேத்திரன். (91)

அகங்காக்கும்புறங்காக்கும்அளவிலாவண்டமுதல்
செகங்காக்குங்காணுத்திசைபத்துங்காக்குமடி.

(ப-ரை.) அகங்காக்கும் புறங்காக்கும் - உள்ளும்புறமுங்காப்பவன், அளவிலாவண்டமுதல் - எண்ணிலாத அண்டமுதலாக, செகங்காக்கும் - உலகினைக்காக்கும், காணுதிசைபத்தும் - காணப்படாத பத்துத்திசைகளையும், காக்கும் - புரக்கும். (92)

பேசாப்பிரமமடிபேச்சிறந்தபேரொளிகாண்
ஆசாபாசங்கள்அணுகாதபேரொளிகாண்.

(ப-ரை.) பேசாப்பிரமம் - இன்னபடியெனப் பேசப்படாததெய்வம், பேச்சிறந்தபேரொளி - வாக்குக்கெட்டாத பிரகாசன், ஆசாபாசங்களணுகாத பேரொளி-ஆசைபாசமு மணுக்கிரகிக்கப்படாத, பேரொளி-பெரியசோதி. ()

தேசமிறந்தவன்காண்திசையிறந்ததெண்கடல்காண்
ஊசிமுனையூன்றவில்லாவுறுபொருள்காண்.

(ப-ரை.) தேசமிறந்தவன் - ஊரில்லாதவன், திசையிறந்த தெண்கடல் - அளவில்லாத அருட்கடல், ஊசிமுனையூன்ற - ஊசிநுனியளவுமூன்ற, இல்லாவுறுபொருள் - இல்லாதவியாபகன். (94)

சிப்பியின்முத்தொளிகாண்சின்மயநோக்கில்லார்க்கு
அப்பிலொளிபோலமர்ந்தவரும்பொருள்காண்.

(ப-ரை.) சிப்பியில்முத்தொளி-(ஞானிகட்குச்) சிப்பியில் விளங்குமுத்தி னையொத்தவன், சின்மயநோக்கில்லார்க்கு - ஞானப்பார்வையில்லார்க்கு, அப்பிலொளிபோல் - நீர்ப்பிரகாசம்போல, அமர்ந்தவரும்பொருள் - தங்கியஅருமையானவஸ்து. (95)

ஆலாவிருட்சமடியளவிலாச்சாகையடி
மேலாம்பதங்கள்விசும்பூடுருவுமெய்ப்பொருள்காண்.

(ப-ரை.) அளவிலாச்சாகை - எண்ணில்லாத கிளைகளுடன்கூடிய, ஆலவிருட்சம் - ஆலமரம்போன்று, மேலாம்பதங்கள்விசும்பு - மேற்பட்ட உலகங்களில், ஊடுருவும்மெய்ப்பொருள் - பரந்தஉண்மைப்பொருள். (96)

வங்கிஷமெல்லாங்கடந்துமருவாமலர்ப்பதங்காண்
அங்கிஷமாயெங்கும்ஆய்ந்தவரும்பொருள்காண்.

(ப-ரை.) வங்கிஷமெல்லாங்கடந்து - பரம்பரையெல்லாங் கடந்து, வருமாமலர்ப்பதம் — விளங்கும்தாமரைத் திருவடியன், அங்கிஷமாயெங்கும் - எவ்விடத்தும் நுண்ணியனால், ஆய்ந்தவரும்பொருள் - ஆராயத்தகுந்த அரியபொருள். (97)

நாமநட்டமானதடிநவிலவிடமில்லையடி
காமனைக்கண்ணாலெரிக்கக்கனல்விழித்தகாரணன்காண்.

(ப-ரை.) நாமநட்டமானது - அஞ்சத்தகுந்த நடனஞ்செய்பவன், நவிலவிடமில்லை - பேசற்கிடமில்லாதவன், காமனைக்கண்ணாலெரிக்க - நேத்திரத்தால் மன்மதனை யெரிக்க, கனல்விழித்த காரணன் - அக்கினிநேத்திரம் வைத்தவன். (98)

கொட்டாதசெம்பொனடிகுளியாத்தரளமடி
எட்டாதகொம்பிலடியீப்புகாத்தேனமுதம்.

(ப-ரை.) கொட்டாத செம்பொன் — உளிபடாத சுயம்பாகியபொன், குளியாத்தரளம் - கடலில்முழுகி எடுக்கப்படாதமுத்து, எட்டாதகொம்பில் - எட்டப்படாத கிளையில், ஈப்புகாத் தேன் - ஈக்கள் கட்டாத தேன், அமுதம் - தேவாமிர்தம். (99)

காணிப்பொன்னாணியுடன்கல்லுரைமாற்றின்னதென்றே
ஆணியுடன்கூட்டியடங்கலிட்டுக்கொண்டாண்டி

(ப-ரை.) காணிப்பொன்னாணியுடன்-யாவருக்கும்உரிமையாகிய பொன்கட்டையை, கல்லுரைமாற்றின்னதென்றே-கல்லுரைமாத்திரை இன்னதென்றே-கல்லிலுரைத்து மாற்றுக் கண்டுபிடியாதபடி, ஆணியுடன் கூட்டி-பொன்கட்டையின் தன்மையைத் தெரிந்துகொள்ளுதல்போல, அடங்கலிட்டுக்கொண்டான் — எல்லாரையும் தெரிந்துகொண்டான். (100)

அளவிறந்தவண்டத்தாரத்தனைபேருண்டாலும்
பிளவளவுந்தான்சற்றும்பேசாப்பிரமமடி.

(ப-ரை.) அளவிறந்தவண்டத்தார் - எண்ணில்லாத அண்டத்தினர்கள், அத்தனைபே ருண்டாலும் - அவ்வளவுபேர்களும் புசித்திடினும், பிளவள வும் - ஒருசிறிதும், தான்சற்றுப்பேசாப்பிரமம் — தான்சிறிதும் குறையாத முதல்வன். (101)

கன்னெஞ்சினுள்ளே கழுநீலம்பூத்தாற்போல்
என்னெஞ்சினுள்ளேயிணையடிகள்வைத்தாண்டி.

(ப-ரை.) கன்னெஞ்சினுள்ளே - (பக்குவமல்லாத) கல்போன்ற மனத்தினிடத்தே, கழுநீலம்பூத்தாற்போல் - நீலோற்பலமலர்பூத்ததுபோல், என்னெஞ்சினுள்ளே - அடியேன்மனத்திலே, இணையடிகள்வைத்தான் - இரண்டுதிருவடிகளையும் வைத்தனன். (102)

வேதப்புரவியடிவிரைந்தோடியுமறியார்
காதற்றஞானமடிகாண்பார்கருத்துடையோன்.

(ப-ரை.) வேதப்புரவி - மறைகளாகிய குதிரைகளின்மேல் செல்பவன், விரைந்தோடியுமறியார் - அதிவேகமாகப் பின்றொடர்ந்தும் அகப்படாதவன், காதற்றஞானம் - காதினாற்கேளாது (மவுனநிலையினால்) கேட்கப்படாதவன், காண்பார் கருத்துடையான் — (தற்போதநீங்கித்) தரிசிப்பார் மனத்திலே விளங்குபவன். (103)

பாசவினையைப்படப்பார்த்தபார்வையுடன்
நேசத்தைக்காட்டிநில்லென்றுசொன்னாண்டி.

(ப-ரை.) பாசவினையைப்படப்பார்த்த - பாசசம்பந்தமான வினையொழியநீட்சித்த, பார்வையுடன் - நேத்திரத்துடன், நேசத்தைக்காட்டி - (திருவருளாகிய) அன்பினைக்காட்டி, நில்லென்றுசொன்னான் - சிவோகம்பாவனையிலிருவென்று கட்டளையிட்டான். (104)

ஓசையொடுங்குமிடமோங்காரத்துள்ளொளிகாண்
பேசாதிருக்கும்பிரமமிதுவென்றாண்டி.

(ப-ரை.) ஓசையொடுங்குமிடம்-வாக்கிறந்தவிடம், ஓங்காரத்துள்ளொளிகாண் - பிரணவத்துட்சோதியானவன், பேசாதிருக்கும்பிரமமிதுவென்றான் - சிவம்மவுனநிலையினர்கட்குத் தோன்றுவதென்றான். (105)

சின்மயநன்னோக்காற்சிற்சொருபங்காட்டியெனைத்
தன்மயமாயாக்கியேதானவனாய்நின்றாண்டி.

(ப-ரை.) சின்மயநன்னோக்கால் - ஞானப்பார்வையினால், சிற்சொரூபம் காட்டி - ஞானவடிவைத்தரிசிப்பித்து, தன்மயமாக்கி — சிவமயமாக்கி, தானவனாய்நின்றான் - நான்சிவமாக விளங்கச்செய்தான். (106)

தானென்னைப்பார்த்தாண்டிதன்னைத்தானல்லாமல்
நானென்னசொல்லுவண்டிநவிலவிடமில்லையடி.

T

(ப-ரை.) தானென்னைப்பார்த்தான் - ஆசாரியன்அடியேனைத் திருஷ்டித்தான், தன்னைத்தானல்லாமல் — எங்கும்சிவமயமா யிருப்பதல்லால், நானென்ன சொல்லுவன் — இன்ன நிலையினை நானென்னவெனச் சொல்லுவேன் நவிலவிடமில்லையடி-சொல்லும்வகை யில்லை. (107)

இன்றிருந்துநாளைக்கிறக்கிறபேரெல்லாரும்
என்றும்பரிபூரணத்திலினிதிருக்கச்சொன்னாண்டி.

(ப-ரை.) இன்றிருந்து - இன்றைக்குயிருடன்வாழ்ந்து, நாளைக் கிறக்கிற பேரெல்லாம் - அடுத்தநாள் இறக்கத்தகுந்தமனிதரையெல்லாம், என்றும் - எக்காலத்தும், பரிபூரணத்தில் - திருவருளில், இனிதிருக்கச்சொன்னான் - நன்றாய்வாழும்படி கட்டளையிட்டான். (108)

பார்க்கிலெளிதலவோ பற்றற்றபற்றலவோ
ஆர்க்குமிடங்காட்டவவனிதனில்வந்தாண்டி.

(ப-ரை.) ஆர்க்குமிடங்காட்ட - யாவருக்கும்மோட்சநிலைகாட்ட, அவனிதனில்வந்தான் - ஆசாரியவடிவாக உலகில்வந்தவன், பார்க்கிலெளிதலவோ- (தற்போதமொழிந்துபார்க்கில்)எளிமையானவனன்றோ, பற்றற்றபற்றலவோ- (பிரபஞ்ச) பற்றிலார்கட்கு பற்றுடையானல்லவோ. (109)

இத்தனைகாலமடியிறந்துபிறந்ததெல்லாம்
இத்தனையுமில்லையடியிரும்பினுநீரானேன்.

(ப-ரை.) இத்தனைகாலம் - இதுகாறு (முலகில்,) இறந்துபிறந்ததெல்லாம் - இறப்பினும்பிறப்பினும் பட்டதெல்லாம், இத்தனையுமில்லை - இவ்வளவுமினி யில்லையென்னும்படி, இரும்பினுநீரானேன் - காய்ச்சிய இரும்பு நீரைக் கிரகித்ததுபோலாக்கினேன். (110)

எக்காலம்பட்டதடியிறந்துபிறந்ததெல்லாம்
அக்காலமெல்லாமழுந்தினேனரகில்.

(ப-ரை.) இறந்துபிறந்ததெல்லாம் - இறப்புப்பிறப்பனைத்தும், எக்காலம் பட்டது - எவ்வளவுகாலமுண்டானதோ, அக்காலமெல்லாம் - அவ்வளவுகாலமனைத்தும், அழுந்தினேனரகில் - நரகிலழுந்தினேன். (111)

காலங்கழிந்ததடிகர்மமெல்லாம்போச்சுதடி
நாலுவகைக்கருவுநாமநட்டமாச்சுதடி.

(ப-ரை) காலங்கழிந்தது - அனேககாலம்சென்றது, கர்மமெல்லாம் போச்சுது - கர்மவினையனைத்துநீங்கியது, நாலுவகைக்கருவும் - நாலுவகைப்பட்ட அண்டசம், சுவேதசம், உற்பீசம், சராயுசம் ஆகியபிறப்பும், நாமநாட்டமாச்சுது - பெயரற்றுச்சூனியமாகியது. (112)

முப்பாழுக்கப்பால்முதற்பாழ்முழுமுதலாய்
இப்போதுவந்தான்காண்எனைவிழுங்கிக்கொண்டான்காண்.

(ப-ரை.) முப்பாழுக்கப்பால் - விந்துமோகினிமாஞகிய மூன்றுபாழுக்குமப்பால், முதற்பாழ்முழுமுதலாய் - சிதாகாசத்தில் முழுமுதலாயுள்ளவன், இப்போதுவந்தான்காண் - இப்போது ஆசாரியகோலங் கொண்டுவந்தான், எனைவிழுங்கிக்கொண்டான் - அடியேனைத் திருவருளில் முழுகச்செய்தான்.

பாலின்கணெய்யிருந்தாற்போலப்பரஞ்சோதி
ஆலிங்கனஞ்செய்தறவிழுங்கிக்கொண்டாண்டி.

(ப-ரை.) பாலின்கணெய்யிருந்தாற்போல - பாலில்மறைந்த நெய்யினைப்போல, பரஞ்சோதி - அருட்சோதி, ஆலிங்கனஞ்செய்து-கலந்து, அறவிழுங்கிக்கொண்டான் - தன்னருளில்முற்று மறையச்செய்தான். (114)

தெத்தபடமானேனண்டி தீயிரும்பினீரானேன்
ஒத்தவிடநித்திரையென்றேதுமுணர்வறிந்தேன்.

(ப-ரை.) தெத்தபடமானேன் - நெருப்பிலிட்ட வஸ்திரமாயினேன், தீயிரும்பினீரானேன் - அக்கினிமயமான இரும்புகிரகித்தநீராயினேன், ஒத்தவிடநித்திரையென்றேது முணர்வறிந்தேன் - வினையொத்த வவசரத்திலே சிவயோக நித்திரையுண்டென்றறிந்தேன். (115)

ஒப்புமுவமையுமற்றேதவரிதாயபொருள்
இப்பூவினின்குருவேயென்னவந்தோன்றாள்வாழி.

(ப-ரை.) ஒப்புவமையு மற்றேதவரிதாயபொருள் - சமுத்தவமும் உவமானமும் அற்ற முதல்வன், இப்பூவினில் - இவ்வுலகில், குருவே யென்னவந்தோன் - ஆசாரியராகவந்தோன், தாள்வாழி - திருவடிவாழ்க. (116)

ஒப்பாரிசொல்லிடினுமுவமைபிழைத்திடினும்
முப்பாழுங்கற்றுணர்ந்தோர்முன்னோர்பொறுத்தருள்வார்.

(ப-ரை.) ஒப்பாரிசொல்லிடினும் - யான் ஒப்புச்சொல்லிப்பாடிப் புலம்பினும், உவமைபிழைத்திடினும் - உவமைதவறினும், முப்பாழுங்கற்றுணர்ந்தோர் - முன்னோர் மும்மாயையின்சொருபமறிந்த பெரியோர், பொறுத்தருள்வர்-பொறுத்தருளவேண்டும். (117)

அருட்புலம்பல் முற்றிற்று.

இறந்தகாலத் திரங்கல்.

——(*)——

வார்த்தைத்திறமில்லாமனிதருக்குப்புன்சொல்லாஞ்
சாத்திரங்கள்சொல்லிச்சதுரிழந்துகேட்டேனே.

(ப-ரை.) வார்த்தைத் திறமில்லாமனிதருக்கு-பேச்சுறுதியில்லாத மானிடர்கட்கு, புன்சொல்லாஞ்சாத்திரங்கள்சொல்லி - பாசநூல்களைப்போதித்து, சதிரிழந்து கெட்டேன் - சமர்த்திழந்து கெடுதியடைந்தேன். (1)

மெத்தமெத்தச்செல்வாக்கில்வேறுமருளடுத்துத்
தத்தித்தலேகீழாய்த்தானடந்துகெட்டேனே.

(ப-ரை.) மெத்தமெத்தசெல்வாக்கில் - அபாரமானசெல்வத்தில், வேறு மருளடுத்து - வேறனமருளிற்சிக்கி, தத்தித்தலேகீழாய் - ஒழுங்கற்று, தானடந்துகெட்டேன் - நான்வாழ்ந்து கெடுதியடைந்தேன். (2)

வழக்கத்தலங்களினுமண்பெண்பொன்னுசையினும்
பழக்கந்தவிராமற்பதியிழந்துகெட்டேனே.

(ப-ரை.) வழக்கத்தலங்களினும் - பழகிய ஊர்களிலும், மண் பெண் பொன்னுசையினும் — ஈஷணுதிரயங்களினும், பழக்கந் தவிராமல் — பழக்கத்தைவிடாமல், பதியிழந்துகெட்டேன்-முதல்வனேயிழந்து கெடுதியடைந்தேன்.

ஆணிப்பொருந்துமரும்பூமியத்தனேயுங்
காணிநமதென்றுகனம்பேசிக்கெட்டேனே.

(ப-ரை.) ஆணிப்பொருந்தும் - முதன்மைவாய்ந்த, அரும்பூமியத்தனேயும் - அரிய உலகனேத்தும், காணிநமதென்று-சொந்த நமக்கென்று, கனம் பேசிக்கெட்டேன் - கௌரவம் பாராட்டிக் கெடுதியடைந்தேனே. (4)

ஆசாரமில்லாவசடருடன்கூடிப்
பாசாங்குபேசிப்பதியிழந்துகெட்டேனே.

(ப-ரை.) ஆசாரமில்லா — ஒழுக்கமில்லாத, அசடருடன்கூடி - அதிபதிகளேச் சேர்ந்து, பாசாங்குபேசி - வஞ்சக வார்த்தைப்பேசி, மதியிழந்துகெட்டேனே. (5)

குருமார்க்கமில்லாக்குருடருடன்கூடிக்
கருமார்க்கத்துள்ளேகருத்தழிந்துகெட்டேனே.

(ப-ரை.) குருமார்க்கமில்லா - ஆசாரியனே வழிபட்டு நடவாத, குருடருடன் கூடி - மனக்குருடருடன் சேர்ந்து, கருமார்க்கத்துள்ளே - பிறவிக்கேதுவான வழியிலே, கருத்தழிந்து கெட்டேன்-உளந்தடுமாறி யழிந்தேன். ()

ஆலமருந்துமரன்பெருமையெண்ணுமல்
பாலர்பெண்டீர்மெய்யென்றுபதியிழந்துகெட்டேனே.

(ப-ரை.) ஆலமருந்தும் - விஷமுண்ட, அரன்பெருமை யெண்ணுமல் - சிவபெருமான் மகிமைமையினே நினேயாமல், பாலர் பெண்டீர் - புத்திரரும் மனேவியரும், மெய்யென்று - நிலேயென்று, பதியிழந்து கெட்டேன். (7)

பிணவாசமுற்றபெருங்காயமெய்யென்று
பணவாசையாலேபதியிழந்துகெட்டேனே.

(ப-ரை.) பிணவாசமுற்ற-முடைநாற்றமுற்ற, பெருங்காயமெய்யென்று-தேகம் சத்தியமென்றும், பணவாசையாலே — திரவிய விருப்பத்தாலே, பதியிழந்து கெட்டேன். (8)

கண்டபுலவர்கனக்கவேதான்புகழ
உண்டவுடம்பெல்லாமுப்பரித்துக்கெட்டேனே.

(ப-ரை) கண்டபுலவர் - எதிரிட்ட வித்துவான்கள், கனக்கவே தான் புகழ - அதிகமாகத் தோத்தரித்துப்பாட, உண்ட உடம்பெல்லாம் - ஊனூட்டிய தேகத்தினை, உப்பரித்துக் கெட்டேன்-தளர்ச்சியடையக் கண்டேன். (9)

எண்ணிறந்தசென்மமெடுத்துச்சிவபூசை
பண்ணிப்பிழையாமற்பதியிழந்துகெட்டேனே.

(ப-ரை.) எண்ணிறந்த சென்மம்-அளவற்ற பிறப்புக்கள், எடுத்து-பிறந்து, சிவபூசைபண்ணி – சிவபூசைசெய்து, பிழையாமல்-பிறப்புவாராதபடி செய்துகொள்ளலாம், பதியிழந்து கெட்டேன்.— (10)

சிற்றெறும்புசற்றுந்தீண்டப்பொறாவுடம்பை
உற்றுறுக்கவுஞ்சுடவுமொப்பித்துமாண்டேனே.

(ப-ரை.) சிற்றெறும்பு-ஒரு சிறியஎறும்பு, சற்றுந்தீண்ட-சிறிதுங்கடிக்க, பொறா உடம்பை - சகியாத தேகத்தை, உற்றுருக்கவும் சுடவும் – கொளுத்தவும் சுடவும், ஒப்பித்து மாண்டேன்-நெருப்பினிடம் ஒப்புவித்துஇறந்தேன்.

தன்னுடம்புதானே தனக்குப்பகையாமென்
றெண்ணுமுணர்வில்லாமலின்பமென்றுமாண்டேனே.

(ப-ரை.) தன்னுடம்புதானே - தனது தேகம்தானே, தனக்கும் பகையாமென்று - தனக்கு விரோதியென்ன, உணர்வில்லாமல் – அறிவில்லாமல், இன்பமென்று - இன்பமுடையதென்றெண்ணி, மாண்டேனே.— (12)

தோலெலும்புமாங்கிஷமுந்தொல்லன்னத்தால்வளரு
மேலெலும்புஞ்சுத்தமென்றுவீறுப்பாய்மாண்டானே.

(ப-ரை.) தோலெலும்பு மாங்கிஷமும்-தோலும் எலும்பும் மாமிசமும், தொல்லன்னத்தால் வளரும் - பழமையான அன்னத்தால்வளரும் உடலும், சுத்தமென்று-சுத்தமானதென்று, வீறுப்பாய் - சருவித்து, மாண்டேனே.—

போக்குவரத்தும்பொருள்வரத்துங்காணமல்
வாக்கழிவுசொல்லிமனமறுகிக்கெட்டேனே.

(ப-ரை.) போக்கும் வரத்தும் - பிறப்பும் இறப்பும், பொருள்வரத்தும் - முதல்வனனுக்கிரகமும், காணமல் - தோராமல், வாக்கழிவு சொல்லி - வீண் வார்த்தைபேசி, மனமறுக்கி - மனமயக்குற்று, கெட்டேனே.— (14)

இறந்தகாலத்திரங்கல் முற்றிற்று.

நெஞ்சொடு புலம்பல்.

மண்காட்டிப்பொன்காட்டிமாயவிருள்காட்டிச்
செங்காட்டிலாடுகின்றதேசிகனைப்போற்றுமல்
கண்காட்டும்வேசியர்தங்கண்வலையிற்சிக்கிமிக
அங்காடிநாய்போலலைந்தனையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே - மனதே, செங்காட்டிலாடுகின்ற-திருச்செங்காட்டிலே நிர்த்தனஞ்செய்கின்ற, தேசிகனைப்போற்றுமல்-சிவபெருமானைத்தோத்தரியாமல், மண்காட்டி - மண்ணைக்காட்டியும், பொன்காட்டி - பொன்னைக் காட்டியும், மாயவிருள்காட்டி - மாயாசொரூபமாகிய (பெண்ணைக்) காட்டியும், கண்காட்டு - கண்சாடைகாட்டும், வேசியர் தம்-விலைமாதர்களுடைய, கண்வலையிற்சிக்கி மிக - மிகுந்தஆசை வலையிற் சிக்குண்டு, அங்காடிநாய் போல - கடைத்தெரு நாய்போல, மிக அலைந்தனையே.— (1)

புட்பாசனவணையிற்பொற்பட்டுமெத்தையின்மேல்
ஒப்பாவணிந்தபணியோடாணிநீங்காமல்
இப்பாய்க்கிடத்தியமனுயிர்கொள்ளுமுன்னே
முப்பாழைப்போற்றிமுயங்கிலையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே மனதே புட்பாசனவணையில் - புஷ்பம்பரப்பிய கட்டிலில், பொற்பட்டு மெத்தையின்மேல் - அழகியபட்டு மெத்தையின்மீது, ஒப்பாவணிந்த பணியோடு - அழகாகத்தரித்த ஆபரணங்களுடன், ஆணிநீங்காமல்-நிலைநீங்காது, இப்பாய்கிடத்தி - (அத்தகையஉடலை) பாயிலிலிற்கிடைத்தி, இயமனுயிர் கொள்ளுமுன்னே - எமன் உயிர்க் கொண்டுபோமுன்னே, முப்பாழைப்போற்ற - விந்துமோ கினிமானென்னும் பாழினை நீங்க, முயங்கிலையே- முயற்சித்தாயிலையே. (2)

முப்பாழும்பாழாய்முதற்பாழ்வெறும்பாழாய்
அப்பாழுக்கப்பானின்றுடுமதைப்போற்றுமல்
இப்பாழாம்வாழ்வைநம்பியேற்றவர்க்கொன்றீயாமல்
துப்பாழாய்வந்தவினைசூழ்ந்தனையேநெஞ்சமே.

(ப-ரை. நெஞ்சமே - மனதே, முப்பாழும் பாழாய் - பிரகிருதி, அசுத்தமாயை, சுத்தமாயை மூன்றும் பாழாக, முதற்பாழ் வெறும்பாழாய் - சிதாகாயம் சூனியமாய், அப்பாழுக்கப்பால் — சிதாகாயங்கடந்து, நின்றுடும்-நிலையுற்று நிர்த்தனஞ்செய்யும், அதைப் போற்றுமல் - அவரைத் தோத்தரியாமல், இப்பாழாம்வாழ்வைநம்பி - இவ்வுலக வாழ்வினைநம்பி, ஏற்றவர்க்கொன்றீயாமல் - யாசித்தவர்க்கொன்றும் கொடாமல், துப்பாழாய்வந்தவினை - குற்றமாக வந்த வினை, சூழ்ந்தனையே - அடைந்தனையே. (3)

அன்னம்பகிர்ந்திங்கலைந்தோர்க்குதவிசெயுஞ்
சென்மமெடுத்துஞ்சிவனருளைப்போற்றுமல்
பொன்னுமனையுமெழிற்பூவையரும்வாழ்வுமிவை
இன்னுஞ்சதமாகவெண்ணினையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே - மனதே, அன்னம்பகிர்ந்திங்கு - இவ்விடத்திலன்னத் தினைப்பங்கிட்டு, அலைந்தோர்க் குதவிசெய்யும் - ஆதரவற்றவர்க்குபகரிக்கும், சென்மமெடுத்தும் - மனிதசென்மமெடுத்தும், சிவனருளைப் போற்றுமல்-சிவபெருமான் திருவருளுக் காளாகாமல், பொன்னும் மனையும்-பொன்னினையும் மண்ணினையும், எழிற்பூவையரும் வாழ்வும் - அழகுவாய்ந்த பெண்ணையும் போகத்தையும், இன்னும் சதமாக - இந்நாள்பரியந்தம் சத்தியமாக, எண்ணினையே - நினைத்தனையே. (4)

முற்றொடர்பிற்செய்தமுறைமையால்வந்தசெல்வம்
இற்றைநாட்பெற்றோமென்றெண்ணாதுபாழ்மனமே
அற்றவர்க்குமீயாமலரன்பூசையோராமல்
கற்றவர்க்குமீயாமற்கண்மறந்துவிட்டனையே.

(ப-ரை.) பாழ்மனமே - பழாகியநெஞ்சே, முற்றொடர் பிற் செய்த-பூர்வ சென்மங்களிற் புரிந்த, முறைமையால் வந்த செல்வம் – கிரமமாக அனுபவிக்கத்தகுந்த ஐஸ்வரியம், இன்றை நாட் பெற்றோமென்று - இந்நாளில் வாய்க்கப் பெற்றோமென்று, எண்ணாது - நினையாது. அற்றவர்க்கு மீயாமல்-தரித்திரர்க்கும் கொடாமல், அரன் பூசை யோராமல் - சிவபூசைநாடாமல், கற்றவர்க்குமீயாமல்-கல்விமான்களுக்கு உதவாமல், கண்மறந்து விட்டனையே - கண்மறைந்துவாழ்கின்றனையே. (5)

மாணிக்கமுத்துவயிரப்பணிபூண்டு
ஆணிப்பொன்சிங்காதனத்திலிருந்தாலும்
காணித்துடலைநமன்கட்டியே கைப்பிடித்தால்
காணிப்பொன்கூடவரக்காண்கிலமேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே - மனதே, மாணிக்கமுத்து வயிரப்பணிபூண்டு - இரத்தினம் முத்து வயிரமிவற்றாலாய ஆபரணந்தரித்து, ஆணிப்பொன் சிங்காதனத்தி லிருந்தாலும் - உயர்ந்த பொன்னாலிழைக்கப்பெற்ற சிம்மாசனத்தின் மீது வீற்றிருந்தாலும், காணித்துடலை நமன்-இலட்சியம்வைத்துத் தேகத்தை இயமனானவன், கட்டியே கைப்பிடித்தால் - இறுக்கியே அவன்கையிற் சிக்கிக் கொண்டால், காணிப்பொன் கூடவர-காணியளவும் பொருள் தன்னுடன்வர, காண்கிலமே - கண்டோமில்லையே. (6)

கற்கட்டுமோதிரநற்கடுக்கனரைநாண்பூண்டு
திக்கெட்டும்போற்றத்திசைக்கொருத்தராலும்

பற்கிட்டவேமனுயிர்பந்தாடும்வேளையிலே
கைச்சட்டங்கூடவரக்காண்கிலமேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே - மனதே, கற்கட்டுமோதிரம் - கல்லிழைத்தமோதிரம், நற்கடுக்கன் - உயர்ந்த கடுக்கன், அரைஞாண் பூண்டு - அரைஞாணும் தரித்து, திக்கெட்டும் போற்ற-எத்திசையும்புகழ, திசைக்கொருத்தராலும்-எத்திசைக்கும் மேற்பட்ட வனாயினும், பற்கிட்ட எமனுயிர் - பல்லுகிட்டுகையிலே உயிரினை இயமன், பந்தாடும் வேளையிலே - பந்தினைப்போல இலேசாகக் கொண்டு செல்லுகையில், கைச்சட்டம் கூடவர - ஒரு ஓலையும் எடுத்துக் கொண்டுபோக, காண்கிலமே - கண்டோமில்லையே. (7)

முன்னநீசெய்ததவமுப்பாலுஞ்சேருமன்றிப்
பொன்னும்பணிதிகளும்பூவையுமங்கேவருமோ
தன்னைச்சதமாகச்சற்குருவைப்போற்றாமல்
கண்ணற்றவந்தகன்போற்காட்சியற்றாய்நெஞ்சமே.

(ப-ரை.) முன்னநீசெய்ததவம் - பூர்வம்நீ புரிந்ததவம் முப்பாலுஞ்சேருமன்றி-மூன்று சென்மத்திலுந்தொடருவதல்லாமல், பொன்னும் பணிதிகளும் பூவையுமங்கே வருமோ - திரவியங்களும் ஆபரணங்களும் மாதர்களும் செல்லும்போது வந்திடுமோ, தன்னைச் சதமாக - அவற்றை நிலையாக எண்ணி, சற்குருவைப் போற்றாமல் - உண்மைக்குருவை யாசிரியாமல் கண்ணற்ற அந்தகன்போல் - கண் கெட்ட குருடனைப்போல, காட்சியற்றாய் - பார்வையில்லாதவனாயினை. (8)

பையரவம்பூண்டபரமர்திருப்பொற்றாளைத்
துய்யமலர்பறித்துத்தொழுதுவணங்காமல்
கையிலணிவளையுங்காலிலிடும்பாடகமும்
மெய்யென்றிறுமாந்துவிட்டனையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே - மனதே, பையரவம் பூண்டபரமர் திருபொற்றாளை - படத்துடன் கூடிய சர்பத்தை ஆபரணமாகத்தரித்த சிவபெருமான் அழகிய திருவடியை, துய்யமலர்ப்பறித்து - சுத்தமான புட்பங்களையெடுத்து, அருச்சித்துத்தொழுது வணங்காமல்-தோத்தரித்துப் பணியாமல், கையிலணிவளையும், காலில் தரிக்கும் பாடகத்தையு (முடையமாதரை,) மெய்யென்று - நிலையென்று இறுமாந்துவிட்டனையே - கர்வித்தனையே. (9)

மாதுக்கொருபாகம்வைத்தவரன்பொற்றாளைப்
போதுக்கொருபோதும்போற்றிவருந்தாமல்
வாதுக்குத்தேடியிந்தமண்ணிற்புதைத்துவைத்தே
ஏதுக்குப்போகநீயெண்ணினையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே - மனமே, மாதுக்கு-பார்வதியாருக்கு, ஒருபாகம் வைத்த - ஒருபாகத்தைக்கொடுத்த, அரன்பொற்றுளை - சிவபெருமான்றிருவடியை, போதுக்கொருபோதும் - ஒருநாளைக்கொருபொழுதேனும், போற்றி வருந்தாமல்-எத்தியிரங்காமல், வாதுக்குத்தேடி - வம்பிலேசம்பாதித்து, இந்த மண்ணிற்புதைத்துவைத்து-பூமியிற்சேமித்துவைத்து, எதுக்குப்போக-எந்த நிலையடைய, எண்ணினை - நினைத்திருக்கின்றாய். (10)

அஞ்சருளைப்போற்றி யைந்துபுலனைத்துறக்க
நெஞ்சேயுனக்கு நினைவுநான்சொல்லுகிறேன்
வஞ்சகத்தைநீக்கி மறுநினைவுவாராமல்
செஞ்சரணத்தானைச் சிந்தைசெய்வாய்நெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே - மனதே, அஞ்சருளைப்போற்றி - பயப்படத்தகுந்ததிருவருளினைத்தோத்தரித்து, ஐந்துபுலனைத்துறக்க - பஞ்சேந்திரியங்களையடக்க, நெஞ்சேயுனக்கு - மனதேஉனக்கு, நினைவுநான் சொல்லுகிறேன் - உனக்கு ஞாபகஞ்செய்விக்கின்றேன், வஞ்சகத்தைநீக்கி - வஞ்சகமொழித்து, மறுநினைவு வாராமல் - வேறுசிந்தை செய்யாமல், செஞ்சரணத்தானை - செவ்விய திருவடியுடையவனை, சிந்தைசெய்வாய் - தியானிப்பாயாக: (11)

அற்புதமாயிந்தவுட லாவியடங்குமுன்னே
சற்குருவைப்போற்றித் தவம்பெற்றுவாழாமல்
உற்பத்திசெம்பொன் உடமைபெருவாழ்வைநம்பிச்
சற்பத்தின்வாயிற் றவளைபோலானேனே.

(ப-ரை.) அற்புதமாயிந்த வுடல் - ஆச்சரியகரமாக இத்தேகத்தில், ஆவியடங்குமுன்னே - உயிரொடுங்குமுன்பே, சற்குருவைப்போற்றி - ஆசாரியனை யேத்தி, தவம்பெற்றுவாழாமல் - தவத்தினையடையாமல், உற்பத்தி - உண்டாகின்ற, செம்பொன் - செவ்வியபொன், உடமை - ஆபரணம், பெருவாழ்வை - பிரபஞ்சபோகத்தை - நம்பி - நம்பி, சற்பத்தின் வாயின் - பாம்பினது வாயிலகப்பட்ட-தவளைபோலானேனே, தவளையினை யொத்திட்டேன்.

உற்றாரார்பெற்றாரா ருடன்பிறப்பார்பிள்ளைகளார்
மற்றாரிருந்தாலென் மாளும்போதுதவுவரோ
கற்றாவிழந்தவிளங் கன்றதுபோலேயுருகிச்
சிற்றாகிச்சிற்றின்பஞ் சேர்ந்தனையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே - மனமே, உற்றாரார் - உறவினர்கள் யாவர், பெற்றாரார் - பெற்றவரியாவர், உடன்பிறப்பார்-கூடப்பிறந்தவர் யாவர், பிள்ளைகளார் - புத்திரரியாவர், மற்றாரிருந்தாலென் - மற்றவர்கள் எத்தனைபெயரிருந்துமென்ன, மாளும்போதுதவுவரோ - மரணகாலத்தில் உதவிசெய்வாரோ, கற்றாவிழந்த - பசுவினைப்பிரிந்த, இளங்கன்றதுபோல - சிறிய கன்றினைப்போல, உருகி-மனங்கசிந்து, சிற்றாகி - சிறுமையடைந்து, சிற்றின்பஞ்சேர்ந்தனையே - பிரபஞ்ச வின்பமடைந்தினையே. (13)

வீடிருக்கத் தாயிருக்கவேண்டுமனையா ளிருக்க
பீடிருக்கவூணிருக்கப்பிள்ளைகளுந்தாமிருக்க
மாடிருக்கக்கன்றிருக்கவைத்தபொருளிருக்கக்
கூடிருக்கநீபோனகோலமென்னகோலமே.

(ப-ரை.) வீடிருக்க — வீடிருக்கவும், தாயிருக்க - அன்னையிருக்கவும், வேண்டுமனையிருக்க - மிகவிரும்பத்தகுந்த பெண்சாதியிருக்கவும், பீடிருக்க- பெருமையிருக்கவும், ஊணிருக்க - உணவிருக்கவும், பிள்ளைகளுந்தானிருக்க- புத்திரர்களிருக்கவும், மாடிருக்ககண்ணிருக்க-மாடுகளும் கன்றுகளுமிருக்க வும், வைத்தபொருளிருக்க - இருப்பாயுள்ள செல்வமிருக்கவும், கூடிருக்க - உடலிருக்கவும், நீபோனகோலமென்னகோலமே — ஆன்மாவாகிய நீபிரிந்த மாய்கையென்னமாய்கையே. (14)

சந்தனமுங்குங்குமமுஞ்சாந்தும்பரிமளமும்
விந்தைகளாப்பூசிமிகுவேடிக்கையொய்யாரக்
கந்தமலர்சூடுகின்றகன்னியருந்தாமிருக்க
எந்தவகைபோனாயென்றெண்ணிலையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே - மனமே, சந்தனமுங்குங்குமமும் - சந்தனத்தினை யும் குங்குமத்தினையும், சாந்தும்பரிமளமும் - கூட்டுவர்க்கத்தினையும் மற்றும் வாசனங்களையும், விந்தைகளாய்ப்பூசி - விநோதமாகப் பூசிக்கொண்டு, மிகு வேடிக்கைஒய்யார - வேடிக்கையாகவும் ஒழுங்காகவும், கந்தமலர்சூடுகின்ற - வாசனைப்புட்பங்களைத் தரிக்கின்ற, கன்னியருந்தானிருக்க - பெண்களுமிரு க்க, எந்தவகைபோனாயென் றெண்ணிலையே - என்னவிதத்தில் பிரிந்தாயெ ன்று நினைத்தாயில்லையே. (15)

காற்றுத்துருத்திகடியவினைக்குள்ளான
ஊற்றைச்சடலத்தையுண்டென்றிறுமாந்து
பார்த்திரங்கியன்னம்பசித்தோருக்கீயாமல்
ஆற்றுவெள்ளம்போலவளாவினையேநெஞ்சமே.

(ப-ரை) நெஞ்சமே-மனமே, காற்றுத்துருத்தி-காற்றினையடைத்துவைத் ததோல்துருத்தியாய், கடியவினைக்குள்ளான-கொடியவினையிற் கட்டுப்பட்ட ஊற்றைச்சடலத்தை - நாற்றமுறுதேகத்தை, உண்டென்றிறுமாந்து - நிலை யெனக்கருவித்து, பார்த்திரங்கி-கண்டு இளகி, அன்னம்பசித்தோருக்கீயாமல்- ஐயமிட்டுண்ணாமல், ஆற்றுவெள்ளம்போல - நதியின்நீரினைப்போல, அளாவி னையே-பரதவிக்கின்றனையே. (16)

நீர்க்குமிழிவாழ்வைநம்பிநிச்சயமென்றேயெண்ணிப்
பாக்களவாமன்னம்பசித்தோர்க்களியாமல்
போர்க்குளேமதூதன்பிடித்திழுக்குமப்போது
ஆர்ப்படுவாரென்றேயறிந்திலையேநெஞ்சமே,

(ப-ரை.) நெஞ்சமே-மனதே, நீர்க்குமிழிவாழ்வைநம்பி நிச்சயமென்றே யெண்ணி-சலத்திலுண்டாகிய நீர்மொக்குளினையொத்தவாழ்வை நிசமென்ன கருதி, பாக்களவாய் அன்னம்-சிறிதன்னமும், பசித்தோர்க்களியாமல்-பசித்தவர்கட்குக்கொடாமல், போர்க்குள் - சிலேட்டும உபத்திரவகாலத்தில், எமதூதன் - இயமபடர்கள், பிடித்திழுக்கும்போது - கட்டிக்கொண்டுபோம்போது, ஆர்ப்படுவரென்று — ஆர் எதிரடைவரென்று, அறிந்திலையே - தெரிந்துகொண்டாயில்லையே. (17)

சின்னஞ்சிறுநுதலாள்செய்தபலவினையான்
முன்னந்தமார்பின்முளைத்தசிலந்திவிம்மி
வன்னந்தளதளப்பமயங்கிவலைக்குள்ளாகி
அன்னம்பகிர்ந்துண்ணவறிந்திலையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே - மனதே, சின்னஞ்சிறுநுதலாள் - மிகவும்சிறிய நெற்றியையுடையவள், செய்தபலவினையால் - பூர்வத்தில்செய்த வினைக்குத் தக்கபடி, முன்னந்தமார்பில் - மார்பின்முன்னே, முளைத்தசிலந்திவிம்மி - உண்டாகியகட்டியினை யொத்ததனமானதுபூரித்து, வன்னந்தளதளப்ப-அழகு பிரகாசிக்க, மயங்கிவலைக்குள்ளாகி - அதனால் மோகங்கொண்டு அவ்வலையிற் பட்டு, அன்னம்பகிர்ந்துண்ணவறிந்திலையே - அடியவர்கட்கு அன்னம்கொடுத்துச்சாப்பிடத் தெரிந்தாயில்லையே. (18)

ஓட்டைத்துருத்தியையுடையும்புழுக்கூட்டை
ஆட்டுஞ்சிவசித்தரருளைமிகப்போற்றியே
வீட்டைத்திறந்துவெளியையொளியாலழைத்துக்
காட்டும்பொருளிதென்றுகருதிலையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே - மனதே, ஓட்டைத்துருத்தியை - துவாரமுள்ள தோற்பையை, உடையும்புழுக்கூட்டை — இறக்கும்புழுக்கணிறைந்த கூண்டினை (யொத்தஉடலை), ஆட்டுஞ்சிவசித்தர்அருளை - ஆட்டிவைக்கும் எல்லாம் வல்லசித்தர்திருவருளை, மிகப்போற்றியே - மிகநாடியே, வீட்டைத்திறந்து - ஆணவக்கதவைத்திறந்து, வெளியை - சிதாகாயத்தை, ஒளியாலழைத்து - அருட்சோதியாலழைத்து, காட்டும்பொருளிதென்று - காட்டுவிக்கும்பொருளீதென்ன, கருதிலையே-நினைத்தாயில்லையே. (19)

ஊன்பொதிந்தகாயமுளைந்தபுழுக்கூட்டைத்
தான்சுமந்ததல்லால்நீசற்குருவைப்போற்றுமல்
காண்பரந்தவெள்ளங்கரைபுரளக்கண்டேகி
மீன்பரந்தாற்போலேவிசாரமுற்றாய்நெஞ்சமே

(ப-ரை.) நெஞ்சமே - மனதே, ஊன்பொதிந்தகாயம்-மாமிசம்நிறைந்த உடலை,உளைந்தபுழுக்கூட்டை-துளைக்கும் புழுக்கள்நிறைந்தகூண்டினை, தான் சுமந்ததல்லாமல் - தான்தாங்கினதல்லாமல், நீசற்குருவைப்போற்றுமல்-உண்

மையாசிரியனை வணங்காமல், கான்பரந்தவெள்ளம் - காட்டினிடத்தேசலப் பிரளயம், கரைபுரள - இருகரையும்வழிய, கண்டேகி - பார்த்துச்சென்று, மீன்பறந்தாற்போல - மீன்பரவியதுபோல, விசாரமுற்றாய் - துன்பமடைந்தினையே. (20)

உடக்கையொருக்கியுயிரையடைத்துவைத்த
சடக்கைச்சதமென்றுசார்ந்தங்கிறுமாந்தை
உடக்கைதகர்த்தேயுயிரையெமன்கொள்கையிலே
அடக்கமாய்வைத்தபொருளங்குவரமாட்டாதே.

(ப-ரை.) உடக்கையொருக்கி - (வாயுவாகியஒரு) சுள்ளாணியைமுறுக்கி, உயிரையடைத்துவைத்த - உயிரை அடக்கிவைத்திருக்கிற, சடக்கைச்சதமென்று - தேகத்தினைநிலையென்று, சார்ந்தங்கிறுமாந்தை - பொருந்தி இறுமாப்புற்றனை, உடக்கைதகர்த்தே - அச்சுள்ளாணியைக்கழற்றி, உயிரையமன் கொள்கையிலே - உயிரை இயமன் கிரகிக்கையிலே, அடக்கமாய்வைத்தபொருள் - இரகசியமாகவைத்திருந்த திரவியம், அங்குவரமாட்டாதே - கூடவருவதில்லையே. (21)

தித்திக்குந்தேனைத்தெவிட்டாததெள்ளமுதை
முத்திக்குவித்தானமுப்பாழைப்போற்றாமல்
பற்றிப்பிடித்தியமன்பாசத்தாற்கட்டும்வண்ணம்
சுற்றியிருக்கும்வினைசூழ்ந்தனையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே - மனமே, தித்திக்குந்தேனை—சுவையுடையதேனை, தெவிட்டாததெள்ளமுதை - வெறுக்காதநல்லமுதத்தை, முத்திக்குவித்தான - மோட்சத்திற்குக்காரணமான, முப்பாழைப்போற்றாமல் - முப்பாழினையும் கடந்தவொருபொருளை நாடாமல், பற்றிப்பிடித்தியமன் - நெருங்கிப்பிடித்து நமன், பாசத்தாற்கட்டும்வண்ணம் - கயிற்றால்பிணிக்கும்படியாக, சுற்றியிருக்கும்வினை - சூழ்ந்திருக்கும்வினையை, சூழ்ந்தனையே - கூடினையே. (22)

அஞ்செழுத்தாயெட்டெழுத்தாயைம்பத்தோரட்சரமாய்ப்
பிஞ்செழுத்தாய்நின்றபெருமானைப்போற்றாமல்
வஞ்சகமாயுற்றமுலைமாதர்வலைக்குள்ளாகிப்
பஞ்சரித்துத்தேடிப்பாழுக்கிறைத்தோமே.

(ப-ரை.) அஞ்செழுத்தாய் - நமசிவயவாய், எட்டெழுத்தாய் - ஓம் அம் அவ்வும் சிவாயநமவாய், ஐம்பத்தோரட்சரமாய் - ஐம்பத்தோரெழுத்தாய், பிஞ்செழுத்தாய் - சத்தியட்சரமாய், நின்ற - இருந்த, பெருமானைப்போற்றாமல் - முதல்வனை வணங்காமல், வஞ்சகமாயுற்ற - வஞ்சகம்வாய்ந்த, முலைமாதர்வலைக்குள்ளாகி - தனமுடையபெண்வலையிற்பட்டு, பஞ்சரித்துத்தேடி - கெஞ்சிப் பேசி, பாழுக்கிறைத்தோமே - பாழுங்காலமாக்கினமே. (23)

அக்கறுகுகொன்றைதும்பையம்புலியுஞ்சூடுகின்ற
சொக்கர்திருத்தாளைத்தொழுதுவணங்காமல்

மக்கள்பெண்டிர்சுற்றமுடன்வாழ்வைமிகநம்பியன்பாய்
எக்காலமுமுண்டென்றெண்ணினையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே - மனமே, அக்கறுகுகொன்றை - உருத்திராட்சம், அறுகம்புல் - இதழியினையும், அம்புலியும் சூடுகின்ற - சந்திரனையுந்தரிக்கின்ற சொக்கர்திருத்தாளை - சொக்கலிங்கக் கடவுள் திருவடியை, தொழுது வணங்காமல்-தொழுதுவணங்காமல், மக்கள்பெண்டீர் சுற்றமுடன்-புத்திரர் மனைவி உற்றருடன், வாழ்வை மிக நம்பி-வாழ்வை அதிகமாக நம்பி, அன்பாய்-ஆசையாய், எக்காலமுமுண்டென் றெண்ணினையே-நித்தியமென நினைத்தனையே. ( )

ஆண்டகுருவினருளைமிகப்போற்றி
வேண்டுங்கயிலாயவீட்டுவழிபாராமல்
பூண்டகுழன்மாதுநல்லார்பொய்மாய்கைக்குள்ளாகித்
தூண்டிலகப்பட்டுத்துடிகெண்டையானேனே.

(ப-ரை.) ஆண்ட - அடிமையென வாண்டுகொண்ட, குருவின் - ஆச்சாரியனுடைய, அருளை - திருவருளினை, மிகப்போற்றி - மிகவும் ஏத்தி, வேண்டும் - விரும்பப்படும், கயிலாய வீட்டுவழி-கைலையாகிய மோக்ஷ நெறியினை, பாராமல் - எதிர்பாராமல், பூண்ட குழல்மாதுநல்லார் - புட்பங்களைத்தரித்த மாதர்களின், பொய் மாய்கைக்குள்ளாகி - பொய்யான வஞ்சனையிற்சிக்குண்டு, தூண்டிலகப்பட்டு - தூண்டிமுள்ளிற் சிக்கி துடிகெண்டையானேனே - துள்ளுகின்ற மீனினை யொத்தேன். (25)

ஏணிப்பழுவாமிருளையறுத்தாளமுற்றும்
பேணித்தொழுங்கயிலைபேறுபெறமாட்டாமல்.
காணவரும்பொருளாய்க்கண்கலக்கப்பட்டடியேன்
ஆணியற்றமாமரம்போலாகினேனே நெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே-மனமே, ஏணிப்பழுவாம்-ஏணியின் பழுமரம்போல (அஞ்ஞானத்திற்குச் சோபனம்)ஆகிய இருளையறுத்தாள - ஆணவமலத்தினையொழிக்க, முற்றும்பேணித்தொழும்-என்றும் வணங்கத் தகுந்த, கயிலைபேறு பெறமாட்டாமல் - கயிலாயத்தினையடையும் இலாபத்தையடையாது, காணவரும் பொருளாய் — அருவமாக வொரு பொருளிருப்பதாக வெண்ணி, கண்கலக்கப்பட்டு-கண்கலங்கி, அடியேன் - ஏழையேன், ஆணியற்ற மாமரம்போலாகினேன் - ஆதாரவற்ற பெரிய மரத்தினையொத்தேன், (26)

கோத்துப்பிரகாசங்கொண்டுருகியண்டமெல்லாம்
காத்தபடியேகயிலாயஞ்சேராமல்
வேற்றுருவப்பட்டடியேன்வெள்ளம்போலுள்ளுருகி
ஏற்றுங்கழுவிலிருந்தபிணமானேனே.

(ப-ரை.) கோத்து - கலந்து, பிரகாசங்கொண்டு - அருட்சோதியடைந்து, உருகி—மனங்கசிந்து, அண்டமெலாம் - உலகமுழுவதும், காத்தபடியே-இரக்ஷித்தவண்ணமே, கயிலாயஞ்சேராமல்-திருக்கயிலாய மடையாமல், வேற்

றுருவப்பட்டு - வேறு தெய்வங்களை வணங்கி, அடியேன் - ஏழையேன், வெள்ளம்போலுள்ளுருகி, நீர்போலத்தளர்ந்து, ஏற்றுங்கழுவிலிருந்த பிணமானேன்- ஏற்றிய கழுமரத்திலே செத்துக்கிடந்த பிணத்தினையொத்தேன். (27)

நிலைவிட்டுடலையுயிர்நீங்கியகலுமுன்னே
சிலைதொட்டவேடனெச்சிற்றின்றுனைச்சேராமல்.
வலைபட்டுழலுகின்றமான்போற்பரதவித்துத்
தலைகெட்டநூலதுபோற்றட்டழிந்தாய்நெஞ்சமே.

(ப-ரை) நெஞ்சமே - மனமே, நிலைவிட்டுடலையுயிர்நீங்கியகலுமுன்னே- தேகத்திலிருந்து ஆத்துமா பிரியுமுன்னர், சிலைதொட்டவேடனெச்சில் தின்றுனை - வில்லேந்திய கண்ணப்பநாயனார் எச்சிலையுகந்த முதல்வனை, சேராமல் - அடையாமல், வலைபட்டுழலுகின்ற - வலையிற்சிக்குண்டலைகின்ற, மான்போற்பரதவித்து - மானைப்போலக்கலங்கி, தலைகெட்ட நூலதுபோல் - நுனியகப்படாத நூலினைப்போல, தட்டழிந்தாய் - அலைந்தனை. (28)

முடிக்குமயிர்பொல்லாபுழுக்குரம்பைமின்னாரின்
இடைக்குநடைக்குமிதங்கொண்டவார்த்தைசொல்லி
அடிக்கொண்டதில்லைவனத்தையனேநாயனையேன்
விடக்கையிழந்தமிருகமதுவானேனே.

(ப-ரை.) முடிக்கும் மயிர்பொல்லாமுழுக்குரம்பை மின்னாரின் ட்பு - பங்களைத்தரிக்கும் கூந்தலைவாய்ந்த பொல்லாத உடலுடன் கூடியமாதரின், இடைக்கும் நடைக்கும் இதங்கொண்ட வார்த்தைசொல்லி - (உடுக்கைபோன்ற) இடையென்றும், (அன்னம்போன்ற) நடையென்றும் இதமான வார்த்தைகளையும்பேசி, அடிக்கொண்ட தில்லைவனத்தையனே - ஆதாரமான சிதம்பரநாதனே, நாயனையேன் - நாயேன், விடக்கையிழந்த மிருகமதுவானேன் (வாயிலுள்ள) மாமிசத்தை நீங்கிய (நாயாகிய) மிருகத்தையொத்தேன். (29)

பூவாணர்போற்றும்புகழ்மதுரைச்சொக்கரது
சீர்பாதம்போற்றிச்சிவலோகஞ்சேராமல்
தாவாரந்தோறுந்தலைபுகுந்தநாய்போலே
ஆகாதநெஞ்சமேயலைந்துதிரிந்தாயே.

(ப-ரை.) ஆகாத நெஞ்சமே - உபயோகமில்லாத மனதே, பூவாணர் போற்றும் - பிராமணர் வந்திக்கும், புகழ்மதுரைச்சொக்கரது - கீர்த்திவாய்ந்த மதுரைச்சொங்கலிங்கப் பெருமானது, சீர்பாதம்போற்றி - திருவடியை வணங்கி, சிவலோகஞ் சேராமல் - சிவகதியடையாமல், தாவாரந்தோறுந் தலைபுகுந்த நாய்போல - பலவீட்டின் தாவாரங்கள்தோறும் சென்று (அடியுண்ணும்) நாயினைப்போல, அலைந்து திரிந்தாயே - ஓடியலைந்தனையே, (30)

பத்தெட்டாயிரைந்தாய்ப்பதின்மூன்றிரண்டொன்றாய்
ஒத்திட்டுநின்றதோரோவியத்தைப்போற்றாமல்

தெத்திட்டுநின்றதிரிகண்ணுக்குள்ளாகி
வித்திட்டாய்நெஞ்சேவிடவுமறியாயே.

(ப-ரை.) நெஞ்சே - மனதே, பத்து எட்டு ஓர் ஐந்து பதின்மூன்றையுங் கடந்தே - முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து, ஒத்திட்டு நின்றதோர் ஒவியத்தைப் போற்றாமல் - ஒத்தெழுந்தருளி அசைவற்று நின்ற சொருபத்தினை வணங்காமல், தெத்திட்டுநின்ற திரிகண்ணுக்குள்ளாகி - வேடிக்கையிற்பட்டுத் திரிகின்ற கண்மயமாகி, வித்திட்டாய் விடவுமறியாய் - நிலையுற்றாய் நீங்கவு மறியாய். (31)

அஞ்சுமுருவாகியைம்மூன்றுமெட்டுமொன்றாய்
மிஞ்சியிருந்தவிளக்கொளியைப்போற்றாமல்
பஞ்சிலிடுவன்னியைப்போற்பற்றிப்பிடியாமல்
நஞ்சுண்டகெண்டையைப்போல்நானலைந்துகெட்டேனே.

(ப-ரை.) அஞ்சுடன் ஏழாகிஐம்மூன்றும் எட்டுமொன்றாய் மிஞ்சியிருந்த - முப்பத்தாறு தத்துவங்களையுங்கடந்த, விளக்கொளியைப் போற்றாமல் - அருட்சோதியைப் போற்றாமல், பஞ்சிலிடுவன்னியைப்போல் பற்றிப்பிடியாமல் - பஞ்சிற்பிரவேசித்த அக்கினியைப்போன்று தாவாது, நஞ்சுண்டகெண்டையைப்போல் - விடமுண்ட மீனைப்போல, நானலைந்து கெட்டேன் - நான் திரிந்து வீணாயினேன். (32)

ஊனமுடனேயுடையும்புழுக்கூட்டை
மானமுடனேசுமந்துமண்ணுலகின்மாளாமல்
ஆனதொருபஞ்சவர்களாண்டிருந்ததேசம்விட்டுப்
போனதுபோலேநாம்போய்ப்பிழைத்தோமில்லையே.

(ப-ரை.) ஊனமுடனே யுடையும்புழுக்கூட்டை - குற்றமுடனே அழியும்புழுநிரம்பிய தேகத்தை, மானமுடனே சுமந்துமண்ணுலகில் மாளாமல் - கவுரவத்துடனேதாங்கி உலகிலிறந்துபோகாமல், ஆனதொரு பஞ்சவர்கள் ஆண்டிருந்த தேசம்விட்டு - பஞ்சபாண்டவர் ஆண்டதமது சுதேசம்பிரிந்து, போனதுபோலே நாம்போய்பிழைத்தோமில்லை - காட்டிற்சென்று சீவித்தது போலநாமுஞ் சீவித்தோமில்லை. (33)

ஊரையிரைக்கின்றவுப்பிருந்தபாண்டத்தை
நாறாமல்நாறிநழுவும்புழுக்கூட்டை
வீறாம்புரத்தைவிரும்புகின்றதெப்படியென்
றாறாதநாட்டிலகன்றிருந்தேனில்லையே.

(ப-ரை.) ஊறைபிறைக்கின்ற உப்பிருந்தபாண்டத்தை - மலசலமிறைக்கின்ற உப்படைத்த பாண்டம்போன்றதனை, நாறாமல்நாறிநழுவும் புழுக்கூட்டை - நாறாமலிருந்து இறந்துபோனவுடனே நாற்றமெடுத்து இறந்துபோகும் புழுமலிந்தஉடலை, வீறாம்புரத்தை - செருக்குவாய்ந்த தேகத்தை, விரும்புகி

ன்றதெப்படி - நேசிப்பதெவ்விதம், ஆரூதநாட்டிலகன்றிருந்தேனில்லை - அழிவற்றபூமியிற்சென்று வாழ்ந்தேனில்லை. (34)

அரியவரிதேடியறியாவொருமுதலைப்
பரிவுடனேபோற்றும்பாஞ்சுடரைப்போற்றாமல்
கரியபெருவாழ்வைநம்பிக்காமத்தழுந்தியே
அரிவாளிற்பட்டகரியதுபோலானேனே.

(ப-ரை.) அரிய அரிதேடியறியாவொருமுதலை - அருமையானவிஷ்ணு தேடிக் காணப்படாத ஒப்பற்ற முதல்வனை, பரிவுடனே போற்றும் பாஞ்சுடரைப் போற்றாமல் - ஆசையுடனேவணங்கும் சிவபாஞ்சுடரை யேத்தாமல், கரியபெருவாழ்வைநம்பி - கரிந்துபோகத்தகுந்த பிரபஞ்சவாழ்வைநம்பி, காமத்தழுந்தியே - காமாந்தகாரத்திலுட்பட்டு, அரிவாயிற்பட்ட கரியதுபோலானேன் - சிங்கத்தின்வாயிற் பட்டயானையினை யொத்தேன். (35)

தந்திரத்தையுன்னித்தவத்தைதமிகநிறுத்தி
மந்திரத்தையுன்னிமயங்கித்தடுமாறி
விந்துநாதமாமேலொளியைக்காணாமல்
அந்தரத்தேகோலெறிந்தஅந்தகன்போலானேனே.

(ப-ரை.) தந்திரத்தையுன்னி - சிவாகமத்தைப்படித்து, தவத்தைமிகநிறுத்தாது - தவத்தினைநிலைபெறச் செய்யாது, மந்திரத்தையுன்னி-(சிறுதெய்வ) மந்திரங்களைத் தியானித்து, மயங்கித்தடுமாறி - மயக்கங் கொண்டலைந்து, விந்துநாதமாம் மேலொளியைக் காணாமல் - விந்துநாதங்களைக் கடந்த அருட்பிரகாசத்தைத் தரிசியாமல், அந்தரத்தே கோலெறிந்த - ஆகாயத்தில் கோலை வீசிய, அந்தகன்போலானேன்-குருடனையொத்தேன். (36)

விலையாகிப்பாணனுக்குவீறடிமைப்பட்டதுபின்
சிலையார்கைவேடனெச்சிற்றின்றானைப்போற்றாமல்
அலைவாய்த்துரும்பதுபோலாணவத்திலழுங்கி
உலைவாய்மெழுகதுபோலுருகினையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே - மனமே, விலையாகிப் பாணனுக்கு வீறடிமைப்பட்டு - பாணபத்திரர்பொருட்கு அவருக்கு அடிமையாணவனாகி, அதுபின் சிலையார்கை வேடனெச்சில் தின்றானை - மற்றொருகாலத்தில் வில்லேந்திய கண்ணப்பநாயனார் எச்சி லுண்டானை, போற்றாமல் - ஏத்தாமல், அலைவாய்த்துரும்பதுபோல் - கடலில்மொத்துண்ணும் துரும்பினைப்போன்று, ஆணவத்திலழுங்கி - ஆணவமலத்திற்கட்டுப்பட்டு, உலைவாய் மெழுகதுபோல் உருகினையே - கொல்லனுலையிற்பட்ட மெழுகினைப்போல அயர்ந்தனையே. (37)

நெஞ்சொடு புலம்பல்
முற்றிற்று.

பூரணமாலை.

மூலத்துதித்தெழுந்தமுக்கோணசக்கரத்துள்
வாலைதனைப்போற்றாமல்மதிமறந்தேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே - எங்குநிறைந்தபொருளே, மூலத்துதித்தெழுந்த - மூலாதாரத்திலுதித்த, முக்கோணச்சக்கரத்துள் - திரிகோணவடிவானயந்திரத்தில், வாலைதனைப்போற்றாமல் - வாலாம்பிகைத்தாயை வணங்காமல், மதிமறந்தேன் - அறிவிழந்தேன். (1)

உந்திக்கமலத்துதித்துநின்றபிரமாவைச்
சந்தித்துக்காணாமற்றட்டழிந்தேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- உந்திக்கமலத்து உதித்துநின்ற பிர்மாவை - சுவாதிட்டானத்தில் விளங்கு நான்முகனை, சந்தித்துக் காணாமல் - நெருங்கித் தரிசியாமல், தட்டழிந்தேன் - நிலைகுலைந்தேன். (2)

நாவிக்கமலநடுநெடுமால்காணாமல்
ஆவிகெட்டியானுமறிவழிந்தேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- நாவிக்கமல நடுநெடுமால் காணாமல் - மணிபூரகத்தில் விளங்குகின்ற விண்டுவைத் தரிசியாமல், ஆவிகெட்டு யானு மறிவிழந்தேன் - உயிரிழந்து புத்திகெட்டேன். (3)

உருத்திரனையிருதயத்திலுண்மையுடன்பாராமல்
கருத்தழிந்துநானுங்கலங்கினேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- உருத்திரனை யிருதயத்தில் உண்மையுடன் பாராமல் - அநாகதத்தில் உருத்திரமூர்த்தியைத் தரிசியாமல், கருத்தழிந்து நானும் கலங்கினேன் - மனங்கெட்டுச் சஞ்சலமுற்றேன். (4)

விசுத்திமயேசுரனைவிழிதிறந்துபாராமல்
பசித்துருகிநெஞ்சம்பதறினேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- விசுத்திமயேசுரனை விழிதிறந்துபாராமல் - விசுத்தியில் விளங்கும் மகேஸ்வரனை நோக்கி தரிசியாமல், பசித்துருகி நெஞ்சம் பதறினேன் - பசியால் வருந்தி மனங்கலங்கினேன். (5)

நெற்றிவிழியுடையநிர்மலசதாசிவத்தைப்
புத்தியுடன்பாராமற்பொறியழிந்தேன்பூரணமே

(ப-ரை.) பூரணமே:- நெற்றி விழியுடைய நிர்மல சதாசிவத்தை-விசுத்தியில் விளங்குகின்ற முக்கண் வாய்ந்த சதாசிவத்தினை, புத்தியுடன் பாராமல் - அறிவுடன் தரிசியாமல், பொறியழிந்தேன்-ஐம்பொறியிற் சிக்கினேன்.

நாதவிந்துதன்னைநயமுடனேபாராமல்
போதமயங்கிப்பொறியழிந்தேன் பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- நாதவிந்து தன்னை நயமுடனே பாராமல் - நாத தத்துவத்தையும் விந்து தத்துவத்தையும் விருப்பமுடனே தரிசியாமல், போத மயங்கிப் பொறியழிந்தேன் - அறிவுமயங்கி ஐம்பொறியிற்சிக்குண்டேன். (7)

உச்சிவெளியையுறுதியுடன்பாராமல்
அச்சமுடனானுமறிவழிந்தேன் பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- உச்சி வெளியை யுறுதியுடன் பாராமல் - சிதாகாயத்தை நிலையாகத் தரிசியாமல், அச்சமுடனானு மறிவிழந்தேன் - பயத்துடனே புத்திகெட்டேன். (8)

மூக்குமுனையைமுழித்திருந்துபாராமல்
ஆக்கைகெட்டுநானுமறிவழிந்தேன் பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- மூக்குமுனையை முழித்திருந்து பாராமல் - சுழுமுனையை கண்விழித்து தரிசியாமல், ஆக்கை கெட்டு நானு மறிவழிந்தேன் - உடல்கெட்டு அறிவழியப்பெற்றேன். (9)

இடைபிங்கலையினியல்பறியமாட்டாமல்
தடையுடனேயானுந்தயங்கினேன் பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- இடைபிங்கலையி னியல்பறியமாட்டாமல் - சூரிய கலை சந்திரகலைகளின் தன்மையினைத் தெரிந்துகொள்ளாமல், தடையுடனே யானுந் தயங்கினேன் - தடைபட்டயர்ந்திட்டேன். (10)

ஊனுக்குணீநின்றுலாவினதைக்காணாமல்
நானென்றிருந்துநலனழிந்தேன் பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- ஊனுக்குணீணின்றுலாவினதைக்காணாமல்-தேகத்தில் ஆன்மாவினுக் கான்மாவாகி யிருப்பதை யறியாமல், நானென்றறிந்து நலமழிந்தேன் - சிவமே நானெனவெண்ணி நன்மையிழந்தேன். (11)

மெய்வாழ்வைநம்பிவிரும்பிமிகவாழாமல்
பொய்வாழ்வைநம்பிப்புலம்பினேன் பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- மெய்வாழ்வை நம்பி விரும்பி மிகவாழாமல்-திருவருளில் ஆசைகொண்டு வாழாமல், பொய் வாழ்வை நம்பிப் புலம்பினேன் - பிரபஞ்ச வாழ்வை நம்பித் துயரடைந்தேன். (12)

பெண்டுபிள்ளைதந்தைதாய்ப்பிறவியுடன்சுற்றமிவை
உண்டென்றுநம்பியுடலழிந்தேன் பூரணமே.

(ப-ரை.) பூர்ணமே:-பெண்டு பிள்ளை தந்தை தாய் பிறவியுடன் சுற்றம்-மனைவி, புத்திரர், பிதா, அன்னை, சோதரர், உறவினர், இவை யுண்டென்று நம்பி யுடலழிந்தேன் - இவர் சதமென வெண்ணி தேகமிழிந்தேன். (13)

தண்டிகைபல்லாக்குடனேசகலசம்பத்துகளும்
உண்டென்றுநம்பியுணர்வழிந்தேன்பூரணமே

(ப-ரை.) பூரணமே:- தண்டிகைப் பல்லாக்குடனே சகல சம்பத்துகளும் - தண்டிகை பல்லக்கு மற்ற ஐஸ்வரியம், உண்டென்று நம்பி யுணர்வழிந்தேன் - எந்நாளு மிருக்குமென நம்பி அறிவிழந்தேன். (14)

இந்தவுடலுயிரையெப்போதுந்தான்சதமாய்
பந்தமுற்றுநானும்பதமழிந்தேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- இந்த வுடலுயிரை யெப்போதுந் தான்சதமாய் - இத் தேகத்திலே ஆன்மா எக்காலு நிலையாய் (இருக்குமென்று,) பந்தமுற்று நானும் பதமழிந்தேன்-பந்தப்பட்டவனாகி யடியேன் பக்குவமிழந்தேன். (15)

மாதர்பிரபஞ்சமயக்கத்திலேவிழுந்து
போதமயங்கிப்பொறியழிந்தேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- மாதர் பிரபஞ்ச மயக்கத்திலே விழுந்து - மாதர்கள் உலகபோகத்திலே முழுகி, போதமயங்கிப் பொறியிழந்தேன் - மிக்க கலங்கி அறிவிழந்தேன். (16)

சரியைகிரியாயோகந்தான்ஞானம்பாராமல்
பரிதிகண்டமதியதுபோற்பயனழிந்தேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- சரியைகிரியை யோகந்தான் ஞானம் பாராமல், சரியை கிரியை யோகம் ஞானம் அனுஷ்டிக்காமல், பரிதிகண்ட மதியது போல் - சூரியனைக்கண்ட சந்திரன்போல, பயனிழந்தேன் - பிரயோசனமிழந்தேன். (17)

மண்பெண்பொன்னாசைமயக்கத்திலேவிழுந்து
கண்கெட்டமாடதுபோற்கலங்கினேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே;- மண்பெண்பொன்னாசை மயக்கத்திலேவிழுந்து-மண் பெண் பொன் என்கிற மயக்கிலேசிக்குண்டு, கண்கெட்டமாடதுபோல்-குருட்டுமாட்டினைப்போல, கலங்கினேன்-கலக்கமடைந்தேன். (18)

தனிமுதலைப்பார்த்துத்தனித்திருந்துவாழாமல்
அனியாயமாய்ப்பிறந்திங்கலைந்துநின்றேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- தனிமுதலைப்பார்த்து - ஒப்பற்றமுதல்வனைத்தரிசித்து, தனித்திருந்துவாழாமல் - தன்னந்தனியே வசியாமல், அனியாயமாய்ப் பிறந்து - வீணாகப்பிறப்படைந்து, இங்கலைந்துநின்றேன் - இவ்வுலகிற்றிரிந்து வாழ்ந்தேன். (19)

ஈராறுதன்கலைக்குள்ளிருந்துகூத்தாடினதை
ஆராய்ந்துபாராமலறிவழிந்தேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- ஈராறுதன்கலைக்குள்ளிருந்து - துவாதசாந்தத்தலத்திலிருந்து, கூத்தாடினதை - நடனஞ்செய்யுமுதல்வனை, ஆராய்ந்துபாராமல் - தீரவிசாரியாமல், அறிவிழந்தேன் - புத்திமயங்கினேன். (20)

வாசிதனைப்பார்த்துமகிழ்ந்துனைத்தான்போற்றாமல்
காசிவரைபோய்த்திரிந்துகாலலுத்தேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- வாசிதனைப்பார்த்து - பிராணவாயுவினைச் சோதித்து, மகிழ்ந்து - அதிற்சந்தோஷித்து, உனைத்தான்போற்றாமல் - தேவரீரை யேத்தாமல், காசிவரைபோய்த்திரிந்து - காசித்தலம்வரையிற் சென்றலைந்து, காலலுத்தேன் - கால்நொந்தேன். (21)

கருவிகடொண்ணூற்றாறிற்கலந்துவிளையாடினதை
இருவிழியாற்பாராமலீடழிந்தேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- கருவிகள் தொண்ணூற்றாறில் - தொண்ணூற்றாறு தத்துவங்களிலும், கலந்துவிளையாடினதை-அவற்றில் வியாபித்து அசைப்பித்த முதல்வனை, இருவிழியால்பாராமல் - இரண்டுநேத்திரங்களால் தரிசியாமல், ஈடழிந்தேன் - கெட்டேன். (22)

உடலுக்குணீநின்றுலாவினதைக்காணாமல்
கடமலைதோறுந்திரிந்துகாலலுத்தேன்பூரணமே

(ப-ரை.) பூரணமே:- உடலுக்குள் நீநின்று - தேகத்துள் நீதங்கி, உலாவினதைக்காணாமல் - சஞ்சரித்ததைத் தரிசியாமல், கடல்மலைதோறுந்திரிந்து-கடலைத்தாண்டியும் மலைகளில் வாழ்ந்தும், காலலுத்தேன் - கால்சலித்தேன்.

எத்தேசகாலமுநாமிறவாதிருப்பமென்று
உற்றுனைத்தான்பாராமலுருவழிந்தேன்பூரணமே

(ப-ரை.) பூரணமே:- எத்தேசகாலமு நாமிறவாதிருப்பமென்று - எந்த காலத்திலேயும் நாம் சாகோமென்று, உற்றுனைத்தான் பாராமல்-தேவரீரைத் தரிசியாமல், உருவழிந்தேன் - நிலைகுலைந்தேன். (24)

எத்தனைதாய்தந்தையிவர்களிடத்தேயிருந்து
பித்தனாயானும்பிறந்திறந்தேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- எத்தனை தாய் தந்தை யிவர்களிடத்தேயிருந்து-எண்ணில்லாத தாய்தந்தையர்க ளிடந்தங்கி, பித்தனாயானும் - பித்துப்பிடித்தவனாகியானும், பிறந்திறந்தேன்-இறப்பினும் பிறப்பினும் உட்பட்டேன். (25)

பெற்றலுத்தார்தாயார்பிறந்தலுத்தேன்யானுமுன்றன்
பொற்றுணைத்தாள்தந்துபுகலருள்வாய்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- பெற்றலுத்தாள் தாயார் - அன்னைமார் பலர் என்னைப் பெற்றெடுத்து வாடினர், பிறந்தலுத்தேன் யானும் - அடியேனும் பலதரம் பிறந்துவாடினேன், உன்றன்பொற்றுணைத்தாள்தந்து - தேவரீர் அழகிய திருவடியிணைத்தந்து, புகலருள்வாய் - அடைக்கலம் தந்தருளாய். (26)

உற்றாரழுதலுத்தாருறன்முறையார்சுட்டலுத்தார்
பெற்றாளுத்தார்தாயார்பிறந்தலுத்தேன்பூரணமே.

(ப-ரை) பூரணமே:- உற்றாரழுதலுத்தார் - சுற்றத்தினர் அடிக்கடி அழுது ஓய்ந்தார், உறன்முறையார் சுட்டலுத்தார் - உறவின்முறையார் அடிக்கடி கொளுத்தி ஓய்ந்தார், பெற்றலுத்தார் தாயார் - தாய்மார்கள் அடிக்கடி பெற்றெடுத்து ஓய்ந்தார், பிறந்தலுத்தேன் - யான் அடிக்கடி சென்மித்து ஓய்ந்தேன். (27)

பிரமன்படைத்தலுத்தான்பிறந்திறந்துநானலுத்தேன்
உரமுடையவக்கினிதானுண்டலுத்தான்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- பிரமன்படைத்தலுத்தான்-நான்முகன் அடிக்கடி சிருஷ்டித்து ஓய்ந்தான், பிறந்திறந்து நானலுத்தேன் - அடிக்கடிபிறந்து இறந்து நான்ஓய்ந்தேன், உரமுடையவக்கினிதான் - பலம்பொருந்திய தீயானது, உண்டலுத்தான் - என்னைச்சுட்டு ஓய்ந்தான். (28)

எண்பத்துநான்குநூறாயிரஞ்செனனமுஞ்செனித்துப்
புண்பட்டுநானும்புலம்பினேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- எண்பத்து நான்குநூறாயிரஞ் செனனமுஞ்செனித்து - எண்பத்து நான்குநூறாயிரம் பிறவிகளிற் பிறந்து, புண்பட்டு நானும். யானும்துன்பமடைந்து, புலம்பினேன் - துக்கமடைந்தனன். (29)

என்னையறியாமலெனக்குள்ளே நீயிருக்க
உன்னையறியாமலுடலொழிந்தேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே;- என்னையறியாமலெனக்குள்ளே நீயிருக்க - நான் தெரிந்து கொள்ளாதபடி என்னிடத்தே அத்துவிதமாயிருக்க, உன்னை யறியாமல் உடலிழந்தேன் - உன்னைத் தரிசியாது தேகத்தை விட்டேன். (30)

கருவாயுருவாய்க்கலந்துலகெலாநீயாய்
அருவாகிநின்றதறிகிலேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- கருவா யுருவாய்க்கலந்து - கற்பத்திலிருந்த காலத்தும் உடலெடுத்தகாலத்தும் நீ அத்து விதமாகவிருந்து, உலகெலாம் நீயாய்- உலகமுழுதும் சர்வவியாபியாய், அருவாகிநின்றது - நிஷ்களமாக விருந்ததனை, அறிகிலேன் - தெரிந்தேனில்லை. (31)

செம்பொற்கமலத்திருவடியைப்போற்றாமல்
பம்பைகொட்டவாடும்பசாசானேன் பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- செம்பொற் கமலத் திருவடியைப் போற்றாமல்- சிவந்த அழகிய தாமரைபோன்ற சரணங்களை வணங்காமல், பம்பை கொட்ட வாடும் பசாசானேன் - உடுக்கைக்கொட்டத் தலைவிரித்தாடும் பேயினையே யொத்தேன். (32)

எனக்குள்ளேநீயிருக்கவுனக்குள்ளேநானிருக்க
மனக்கவலைதீரவரமருள்வாய்பூரணமே.

(ப-ரை.) பூரணமே.- எனக்குள்ளே நீயிருக்க - என்னிடத்தே நீ அத்துவிதமாக விருக்கவும், உனக்குள்ளே நானிருக்க - உன் வியாபகத்தில் நான் வியாப்பியமாகவிருக்க, மனக்கவலை தீர வரமருள்வாய் - (அது தெரியாது மயங்கும் எனது) மனத் துன்பமொழிய வரந்தருள்வாய். (33)

எழுவகைத்தோற்றத்திருந்துவிளையாடினதைப்
பழுதறவேபாராமற்பயனிழந்தேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- எழுவகைத் தோற்றத் திருந்து விளையாடினதை- எழுவகையான பிறப்புகளிலேயும் நீ தங்கி செய்த அருள் விளையாட்டை, பழுதறவே பாராமல் - குற்றமற விசாரியாமல், பயனிழந்தேன் - அப்பிரயோசனமடைந்தேன். (34)

சாதிபேதங்கள்தனையறியமாட்டாமல்
வாதனையால்நின்றுமயங்கினேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- சாதிபேதங்கள் தனையறிய மாட்டாமல் - சாதி வித்தியாசங்களி னுண்மையைத் தீர விசாரியாமல், வாதனை யானின்று மயங்கினேன் - துன்பத்திலிருந்து கலங்கினேன். (35)

குலமொன்றாய்நீபடைத்தகுறிமையறியாமல்நான்
பலபாண்டத்துள்ளிருந்துமயங்கினேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- குலமொன்றாய் நீபடைத்த குறியை யறியாமல் மனிதசென்ம மொன்றாகவே நீ சிருஷ்டித்த குறிப்பினைத் தெரிந்துகொள்ளாமல், யான் பல பாண்டத்துள்ளிருந்து - யான் மலநிறைந்த தேகத்திற் றங்கி மயங்கினேன் - கலங்கினேன். (36)

அண்டபிண்டமெல்லாமணுவுக்கணுவாய்நீ
கொண்டவடிவின்குறிப்பறியேன்பூரணமே

(ப-ரை.) பூரணமே:- அண்டபிண்டமெல்லாம் - அண்டத்திலேயும் பிண்டத்திலேயும், அணுவுக்கணுவாய்நீ - அணுவினுக்கணுவாகி, கொண்டவடிவின் - இருக்கின்ற உண்மை வடிவினது, குறிப்பறியேன் குறிப்பினைத் தெரிந்துகொண்டேனில்லை. (37)

சகத்திரத்தின்மேலிருக்குஞ்சற்குருவைப்போற்றாமல்
அகத்திலுடவாணவத்தாலறிவழிந்தேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- சகஸ்திரத்தின் மேலிருக்கும் - இருதயத்தின் ஆயிர மிதழுடன் கூடிய தாமரையி லெழுந்தருளியிருக்கும், சற்குருவைப் போற்றாமல் - ஆச்சாரியனைத் தோத்தரியாமல் அகத்தினுட ஆணவத்தால்- மனத்து ஆணவச் செருக்கால், அறிவழிந்தேன்-மயங்கினேன். (38)

ஐந்துபொறியையடக்கியுனைப்போற்றாமல்
நைந்துருகிநெஞ்சநடுங்கினேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- ஐந்து பொறியையடக்கி - பஞ்சேந்திரியங்களையுஞ் செயித்து, உனைப்போற்றாமல் - தேவரீரைத் தோத்தரியாமல், நைந்துருகி - மனங்கசிந்து, நெஞ்சநடுங்கினேன் - உள்ளங்குலைந்தேன். (39)

என்னைத்திருக்கூத்தாலிப்படிநீயாட்டுவித்தாய்
உன்னையறியாதுடலழிந்தேன்பூரணமே.

(ப-ரை-) பூரணமே:- என்னை - அடியேனை, திருக்கூத்தால் - (எனது சன்மத்திற்குத்தக்கபடி) பிரபஞ்சக்கூத்திலே, இப்படிநீயாட்டுவித்தாய் - இந்தப்பிரகாரம் ஆட்டிவைத்தனை, உன்னை யறியாது - (அதனால்) தேவரீரைத் தெரிந்துகொள்ளாமல், உடலழிந்தேன் - தேகமிழந்தேன் (40)

நரம்புதசைதோலெலும்புநாற்றத்துக்குள்ளிருந்து
வரம்பறியமாட்டாமல்மயங்கினேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- நரம்புதசை தோலெலும்பு - நரம்பு, மாமிசம், தோல், எலும்பு, நாற்றத்துக்குள்ளிருந்து-(இத்தகைய) நாற்றத்துடன் கூடிய தேகத்திற் றங்கி, வரம்பறியமாட்டாமல் - திருவருளின் எல்லையினை யறியாமல், மயங்கினேன் - கலங்கினேன். (41)

சிலந்தியிடைநூல்போற்சீவசெந்துக்குள்ளிருந்த
நலந்தனைத்தான்பாராமனலமழிந்தேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- சிலந்தியிடை நூல்போல் - சிலந்திப்பூச்சியி னிடமிருந்து நூலுண்டானதுபோல, சீவசெந்துக் குள்ளிருந்த - ஆன்மாக்களுற் றங்கி (மாயையைக் காரியப்படுத்தின), நலந்தனை-உபகாரத்தினை, பாராமல்- ஆலோசியாமல், நலமழிந்தேன் - நன்மையிழந்தேன். (42)

குருவாய்ப்பரமாகிக்குடிலைசத்திநாதவிந்தாம்
அருவாயுருவானதறிகிலேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- குருவாய் - குருவாகியும், பரமாகி - பரம்பொருளாகியும், குடிலை - சுத்தமாயையாகியும், சத்தி-திருவருட்சத்தியாகியும், நாதவிந்தாய் - பரநாத பரவிந்துவாகியும், அருவாயுருவான-நிஷ்கள சகலமாகியும் உள்ள (உண்மையினை), அறிகிலேன் - தெரிந்தேனில்லை. (43)

ஒளியாய்க்கதிர்மதியாயுள்ளிருக்குமக்கினியா
வெளியாகிநின்றவியனறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- ஒளியாய் - அருட்சோதியாய், கதிர்மதியாய் - சூரியசந்திரர்களாய், உள்ளிருளாய் - மனவிருளாய், அக்கினியாய் - தீயாய், வெளியாகி நின்ற - ஆகாயமாகியிருந்த, வியனறியேன் - பெருமையைத் தெரிந்துகொள்ளவில்லை. (44)

இடையாகிப்பிங்கலையாயெழுந்தசுழுமுனையாய்
உடலுயிராய்நீயிருந்தவுளவறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- இடையாகி - சூரியகலையாய், பிங்கலையாய் - சந்திரகலையாய், எழுந்த சுழிமுனையாய் - சுழுமுனைநாடியாய், உடலுயிராய் - உடலுமுயிருமாய், நீயிருந்த - தேவரீர் வியாபித்த, உளவறியேன் - உண்மையினைத்தேரேன். (45)

மூலவித்தாய்நின்றுமுளைத்துடல்தோறுமிருந்து
காலனெனவழிக்குங்கணக்கறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- மூலவித்தாய்நின்று - (ஆன்மக்கள்உண்டாதற்குக்) காரணமாகவிருந்து, உடல்தோறுமிருந்து - ஆன்மாக்கள்தோறும் அந்தராத்துமாவிருந்து, காலனெனவழிக்கும் - சங்கார கர்த்தாகவிருந்து ஒடுக்கும், கணக்கறியேன் - உண்மையறியேன். (46)

உள்ளும்புறம்புமாயுடலுக்குள்நீயிருந்த
தெள்ளவுநானறியாதிருந்தேனே பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- உடலுக்குள் - தேகத்தினிடத்தே, உள்ளும்புறம்புமாய் - உள்ளத்தும் புறத்தும், நீயிருந்தது - தேவரீர் எழுந்தருளியிருந்தது, எள்ளவு நானறியேன் - சிறிதுநானறியாது, இருந்தேனே - இருந்தேன். (47)

தாயாகித்தந்தையாய்த்தமர்கிளைஞர்சுற்றமெல்லாம்
நீயாகிநின்றநிலையறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- தாயாகித் தந்தையாய் - அன்னைபிதாவாகி, தமர்கிளைஞர் சுற்றமெலாம் - உறவினர் சுற்றம்யாவும், நீயாகிநின்ற - தேவரீராகவேயிருக்க, நிலையறியேன் - உண்மையைத் தேரேன். (48)

விலங்குபுள்ளூர்வனவசரர்விண்ணவர்நீர்ச்சாதிமனுக்
குலங்களெழுவகையினின்றகுறிப்பறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- விலங்கு, புள், ஊர்வன, தாவரம், தேவர், நீர்வாழ்வன மக்கள்ஆகிய:- எழுவகையில்நின்ற - எழுவிதமாகவிருக்க, குறிப்பறியேன் - இசைகையினைத் தெரியேன். (49)

ஆணாகிப்பெண்ணாயலியாகிவேற்றுருவாய்
மாணாகிநின்றவகையறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- ஆணாகிப் பெண்ணாய் - ஆண்பெண்ணாகியும், அலியாகி வேற்றுருவாய் - அலியாகியும் அவற்றினுக்கு மாறுபட்டனவாகியும், மாணாகிநின்ற - பெருமையுடனின்ற, வகையறியேன் - விதமறியேன். (50)

வாலையாய்ப்பக்குவமாய்வளர்ந்துகிழந்தானாகும்
பாலையாய்நின்றபயனறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே :—வாலை - வாலையாகியும், பக்குவமாய் - யௌவனமாகியும், வளர்ந்து கிழந்தானாகும் - முதிர்ந்த மூப்பாகியும், பாலை - சிறுவயதாகியும், நின்ற - இருந்த, பயனறியேன் -பிரயோசனந்தேரேன். (51)

பொய்யாய்ப்புவியாய்ப்புகழ்வாரிதியாகி
மெய்யாகிநின்றவியனறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:-பொய்யாய் - பொய்யாகியும், புவியாய் - பூமியாகியும், புகழ்வாரிதியாகி - புகழப்படுகின்ற சமுத்திரமாகியும், மெய்யாகிநின்ற - உண்மையாகவுமிருந்த, வியனறியேன் - ஆச்சரியத்தைத் தேர்ந்திலேன். (52)

பூவாய்மணமாகிப்பொன்னாகிமாற்றாகி
நாவாய்ச்சொல்லானநயமறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:—பூவாய் - புட்பமாகியும், மணமாகி - வாசனையாகியும், பொன்னாகி - சொர்ணமாகியும், மாற்றாகி - அதன் நிறமாகியும், நாவாய் - நாவாகியும், சொல்லான - அதன்சொல்லுமான, நயமறியேன் - நலத்தினையறியேன். (53)

முதலாய்நடுவாகிமுப்பொருளாய்மூன்றுலகாய்
இதமாகிநின்றவியலறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:—முதலாய் - ஆதியாகியும், நடுவாகி - மத்தியமாகியும், முப்பொருளாய் - முத்தேவர்களாகியும், மூன்றுலகாய் - மூன்றுலகமாகியும், இதமாகிநின்ற - நன்மையாகவு மிருந்த, இயலறியேன் - தன்மையறியேன். (54)

ஊனாயுடலுயிராயுண்ணிறைந்தகண்ணொளியாய்த்
தேனாய்ருசியானதிறமறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே :-ஊனாய் - மாமிசமாய், உடலுயிராய் - தேகமும் ஆன்மாவுமாய், உள்நிறைந்த கண்ணொளியாய் - உயிருணிறைந்த கண்ணொளியாகியும், தேனாய் - மதுவாய், ருசியான - சுவையாகிய, திறமறியேன் - தன்மையறியேன். (55)

வித்தாய்மரமாய்விளைந்தகனிகாய்பூவாய்ச்
சித்தாகிநின்றதிறமறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே :-வித்தாய் - விதையாய், மரமாய் - விருட்சமாய், விளைந்த - வளர்ந்த, கனியாய் - பழமாய், பூவாய் - புட்பமாய், சித்தாகிநின்ற - அறிவாகியிருந்த, திறமறியேன் - தன்மையறியேன். (56)

ஐவகையும்பெற்றுலகவண்டபகிரண்டமெல்லாம்
தெய்வமெனநின்றதிறமறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே :-ஐவகையும் - பஞ்சகிருத்தியங்களும், பெற்று - அடைந்து, உலகவண்ட பகிரண்டமெலாம் - உள்ளும் புறம்புமான அண்ட

மனைத்தும், தெய்வமென்கிற - தெய்வமாகவிருந்த, திறமறியேன் - தன்மை யறியேன். (57)

மனமாய்க்கனவாகிமாய்கையாயுள்ளிருந்து
நினைவாகிநின்றநிலையறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே :-மனமாய் - மனமாகியும், கனவாகி - மனத்தில் விளையுங்கனவாகியும், மாய்கையாய் - மாயமாகியும், உள்ளிருந்து - இருதயத்திலிருந்து, நினைவாகி - நினைவாகியும், நின்ற - இருந்த, நிலையறியேன் - நிலையினையறியேன். (58)

சக்திசிவமிரண்டாய்த்தான்முடிவிலொன்றாகிச்
சித்திரமாய்நின்றதிறமறியேன்பூரணமே

(ப-ரை.) பூரணமே:-சக்திசிவமிரண்டாய் - சத்தியசிவமென்றும் மிருவகையாகி, தான் முடிவிலொன்றாகி - சொரூபத்திலொன்றேயாகி, சித்திரமாய் நின்ற - விசித்திரமாயிருந்த, திரமறியேன் - தன்மையறியேன் (59)

பொறியாய்ப்புலனாகிப்பூதபேதப்பிரிவாய்
அறிவாகிநின்றவளவறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:-பொறியாய் - ஐம்பொறிகளாகவும், புலனாகி - ஐம்புலனாகியும், பூதபேதப்பிரிவாய், பஞ்சபூதப் பகுப்புகளாய், அறிவாகிநின்ற - அறிவு சொரூபமாகவிருந்த, அளவறியேன் - அளவினைத்தெரிந்தேனில்லை. ()

வானிர்கதிர்மதியாய்வளர்ந்துபின்னொன்றானதுபோல்
ஊனுடலுக்குள்ளிருந்தவுயிர்ப்பறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே :-வானிற்கதிமதியாய் - ஆகாயத்தில் சூரியசந்திரர்களாய், வளர்ந்து பின் ஒன்றானதுபோல் - தோன்றிப்பின்பு அருளொளியொன்றேயானதுபோல, ஊனுடலுக்குள்ளிருந்த - ஊனுடன்கூடிய தேகத்தினிடமிருந்த, உயிர்ப்பறியேன் - பிராணனைத்தெரிந்தேனில்லை. (61)

பொய்யும்புலையுமிகப்பொருந்திவீண்பேசலன்றி
ஐயோவுனையுரைக்கவறிகிலேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:-பொய்யும் புலையுமிகப்பொருந்தி - பொய்மையும் புலாலுண்ணுதலு மதிகமாகப்பெற்று, வீண்பேசலன்றி - வீணனவார்த்தை பேசுதலில்லாமல், ஐயோ - அந்தோ, உனை உரைக்கஅறிகிலேன்-தேவரீரைத் தோத்தரிக்கத் தேர்ந்தேனில்லை. (62)

நிரந்தரமாயெங்குநின்றுவிளையாடினதைப்
பரமதுவேயென்னப்பதமறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே :-நித்தியமா யெங்குநின்று - நித்தியப் பொருளாக வெங்கு நிறைந்து, விளையாடினதை - திருவிளையாடற் செய்ததனை, பரமதுவேயென்ன - பரம்பொருளதுவேயென், பதமறியேன் - பக்குவமறியேன். (63)

கொல்வாய்பிறப்பிப்பாய்கூடவிருந்தேசுகிப்பாய்
செல்வாய்பிறர்க்குட்செயலறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே-கொல்வாய் - சங்கரிப்பாய், பிறப்பிப்பாய்-சிருஷ்டி செய்விப்பாய், கூடவிருந்தேசுகிப்பாய்-உடனிருந்துகாப்பாய், செல்வாய்பிறர்க்குள் - பிறருயிருக்குயிராவாய், செயலறியேன் - இக்காரியத்தினையறியேன்.

வாரிதியாய்வையமெல்லாமன்னுமண்டபிண்டமெல்லாஞ்
சாருதியாய்நின்றதலமறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே.-வாரிதியாய் - சமுத்திரமாய், வையமெலாம்-உலக முழுவதும், மன்னுமண்ட பிண்டமெலாம் - நிலைபெற்ற சர்வாண்டங்களும், சாரதியாய்நின்ற - நடத்துபவனாயிருந்த, தலமறியேன் - இடந்தெரியேன். ()

வித்தாய்மரமாய்வெளியாயொளியாய்நீ
சத்தாயிருந்ததலமறியேன்பூரணமே.

(ப-ரை) பரிபூரணமே:-வித்தாய் - விதையாகி, மரமாய் - விருட்சமாகி, வெளியாய் - ஆகாயமாகி, ஒளியாய் - பிரகாசமாகி, நீசத்தாயிருந்த - தேவரீருண்மையாகவிருந்த, தரமறியேன் - தன்மைதேரேன். (66)

தத்துவத்தைப்பார்த்துமிகத்தன்னையறிந்தறிவால்
உய்த்துனைத்தான்பாராமலுய்வாரோபூரணமே.

(ப-ரை.) பூரணமே:-தத்துவத்தைப்பார்த்து - தத்துவ தரிசனஞ்செய்து, மிகத்தன்னையறிந்து - பின் ஆன்மதரிசனஞ்செய்து, அறிவால் - அப்படியறிந்த அறிவால், உய்த்துனைத்தான்பாராமல் - ஆராய்ந்து தேவரீரைத் தரிசியாமல், உய்வரோ - உச்சீவிப்பரோ. (67)

ஒன்றாயுயிராயுடல்தோறுநீயிருந்தும்
என்றுமறியார்களேழைகள்தாமபூரணமே.

(ப-ரை.) பூரணமே:-ஒன்றாய் - ஒருதெய்வமாய், உயிராய் - உயிராய், உடல்தோறுநீயிருந்தும் - ஆன்மாக்கடோறு மந்தரான் மாவாயிருந்தும், ஏழைகள் தாம் - அறிவீனர்கள், என்று மறியார்கள்-எப்போது மறியமாட்டார்கள்.

நேற்றென்றுநாளையென்றுநினைப்புமறப்பாய்ப்படைத்து
மாற்றமாய்நின்றவளமறியேன்பூரணமே.

(ப-ரை.) பரிபூரணமே :-நேற்றென்றும் - இறந்தகாலமென்றும், நாளையென்றும் - எதிர்காலமென்றும், நினைப்புமறப்பாய் - சகல கேவலமென்றும், படைத்து - உண்டாக்கி, மாற்றமாய் நின்ற - அவற்றின் வேறுபட்டிருக்கும், வளமறியேன் தன்மையறியேன். (69)

மனம்புத்திசித்தமகிழறிவாங்காரமதாய்
நினைவாந்தலைமானநிலையறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:- மனம்புத்திசித்தி-மனம் புத்திசித்தம், மகிழ்-களிக்கின்ற, அறிவாங்காரமதாய் - அறிவாகிய ஆங்காரமாகி, நினைவாந்தலமான- இவையுண்டாதற்கேதுவான இடத்தின், நிலையறியேன் - நிலையுணரேன்.

உருப்பேதமின்றியுய்ந்தசப்தபேதமதாய்க்
குருப்பேதமாய்வந்தகுணமறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே;–உருப்பேதமின்றி - உருவினால் வித்தியாசமில்லாமல், உய்ந்த சத்தபேதமதாய் - சப்தமாத்திரத்தினாலே பேதமாய், குருபேதமாய்வந்த - ஆசாரியகோலங்கொண்டுவந்த, குணமறியேன் - தன்மையறியேன். (71)

சட்சமயபேதங்கள்தான்வகுத்துப்பின்னுமொரு
உட்சமயமுண்டென்றுரைத்தனையேபூரணமே.

(ப-ரை.) பூரணமே:–சட்சமயபேதங்கள் - ஆறுவகைச்சமயங்கள், தான் வகுத்து - தானுண்டாக்கி, பின்னுமொரு - அதற்குமேலுமொரு, உட்சமயமுண்டென்று - அகச்சமய முண்டென்று, உரைத்தனையே - சொல்லினையே. (72)

முப்பத்திரண்டுறுப்பாய்முனைந்துபடைத்துள்ளிருந்த
செப்பிடுவித்தைத்திறமறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே.–முப்பத்திரண்டுறுப்பாய் - முப்பத்திரண்டு அங்கங்களாய், முனைந்து படைத்து - கூடிய உடலை யுண்டாக்கி, உள்ளிருந்த - அவ்வுடலிலிருந்த, செப்படிவித்தையை - சாலவித்தையின், திறமறியேன் - சாமர்த்தியமறியேன். (73)

என்னதான்கற்றாலென்னெப்பொருளும்பெற்றாலென்
உன்னையறியாதாருய்வரோபூரணமே.

(ப-ரை.) பூரணமே:–என்னதான்கற்றாலென் - எவ்வளவு படித்துமென்ன, எப்பொருளும் பெற்றாலென் - எவ்வளவுசெல்வமடைந்துமென்ன, உன்னையறியாதார் - தேவரீரைத் தெரிந்து கொள்ளாதவர், உய்வரோ - உச்சீவிப்பரோ. (74)

கற்றறிவோமென்பார்காணார்களுன்பதத்தைப்
பெற்றறியார்தங்களுக்குப்பிறப்பறுமோபூரணமே

(ப-ரை.) பூரணமே:–கற்றறிவோமென்பார்-கல்வி தெரிந்தோமென்பர், காணார்களுன்பதத்தை - உன்திருவடியினைக்காணார்கள், பெற்றறியார்தங்களுக்கு - உன்னையடைந்து உன்னையறியாதவர்கட்கு, பிறப்பறுமோ - செனனம நீங்குமோ. (75)

வானென்பாரண்டமென்பார்வாய்ஞானமேபேசித்
தானென்பார்வீணர்தலையறியார்பூரணமே.

(ப-ரை.) பூரணமே :–வானென்பார் - இருப்பிடம் ஆகாயமென்பர், அண்டமென்பார், இருப்பிடம் அண்டமென்பர், வாய்ஞானம்பேசி - இங்ஙனம் வாசா கைங்கரியமாடி, தானென்பார் - தானேதெய்வமென்பர், வீணர் தனையறியார் - இவர்களியாவரும் ஆன்மவிலக்கணமறியாத வீணராவர். (76)

ஆதியென்பாரந்தமென்பாரதற்குணடுவாயிருந்த
சோதியென்பார்நாதத்தொழிலறியார்பூரணமே.

(ப-ரை.) பூரணமே :-ஆதியென்பார் - உற்பத்திசொல்வர், அந்த மென்பார் - முடிவுசொல்லுவர், அதற்குணடுவாயிருந்த சோதியென்பார் - அவற்றின் மத்தியிலுள்ள சோதிசொரூபமென்பர், நாதத்தொழிலறியார் - நாதத்துவத்தின் சொரூபநிலைதெரிந்து கொள்ளார். (77)

மூச்சென்பாருள்ளமென்பார்மோனமெனுமோட்சமென்பார்
பேச்சென்பாருன்னுடையபேரறியார்பூரணமே

(ப-ரை.) பூரணமே:-மூச்சென்பர் - பிராணவாயுவென்பர், உள்ளமென்பார் - மனமென்பர், மோனமெனு மோட்சமென்பர் - மவுனநிலைமோட்சமென்பர், பேச்சென்பார் - சத்தரூபமென்பர், உன்னுடையபேரறியார் - தேவரீர் உண்மைத்திருநாமமறியார். (78)

பரமென்பார்பானுவென்பார்பாழ்வெளியாய்நின்ற
வரமென்பாருன்றன்வழியறியார்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:-பரமென்பார் - சிலர் மேலானவனென்பர், பானுவென்பார் - சிலர் சூரியனென்பார், பாழ்வெளியாய் நின்ற-சிதாகாய சொரூபமாகவிருந்த, வரமென்பார்-உன்றன் வழியறியார் - இவர்களியாரும் உன்நிலை தெரியார். (79(

எத்தனைபேரோவெடுத்தெடுத்துத்தானுரைத்தார்
அத்தனைபேர்க்கொன்றுனதறிகிலேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:-எத்தனைபேரோ - அளவிறந்தவர்கள், எடுத்தெடுத்து-வெகுவிதமாக, தானுரைத்தார்-எடுத்துப் பேசினர், அத்தனைபேர்க்கு - அவர்களுக்கெல்லாம், ஒன்றுனதறிகிலேன் - நீயொரு பொருளாக விருந்த தன்மை யறிந்தேனில்லை. (80)

நகாரமகாரமென்பார்நடுவேசிகாரமென்பார்
வகாரயகாரமென்பரர்வகையறியார்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:-நகாரமகாரமென்பர் - நகரஎழுத்து மகரவெழுத்து உச்சரிப்பர், நடுவே சிகாரமென்பர் - அவற்றினடுவே சிகரஎழுத்தையுச்சரிப்பர், வகார யகாரமென்பர் - வகரஎழுத்து யகரவெழுத்து உச்சரிப்பர், வகையறியார் - இவ்வெழுத்துக்களை யதிட்டித்துக்கொண்டிருப்பவரைத் தெரிந்துகொள்ளார். (81)

மகத்துவமாய்க்காமமயக்கத்துக்குள்ளிருந்து
பகுத்தறியமாட்டாமற்பயனழிந்தேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:-மகத்துவமாய் - கௌரமாய், காமமயக்கத்துக்குள்ளிருந்து-காமாந்தகாரத்திற் சிக்கி, பகுத்தறியமாட்டாமல்-பிறித்தறியவாராது, பயனிழந்தேன் -பிரயோசமிழந்தேன், (82)

உண்மைப்பொருளையுகந்திருந்துபாராமற்
பெண்மயக்கத்தாலேபிறந்திறந்தேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:-உண்மைப்பொருளை - சத்தியமான பொருளினை. உகந்திருந்துபாராமல் - விரும்பித் தரிசியாமல், பெண்மயக்கத்தாலே - மாதர் மோகத்தினாலே, பிறந்திருந்தேன்-இறப்பினும் பிறப்பினும் கட்டுப்பட்டேன்.

வாயாரவாழ்த்திமகிழ்ந்துனைத்தான்போற்றாமல்
காயமெடுத்துக்கலங்கினேன்பூரணமே.

(ப-ரை,) பூரணமே:-வாயாரவாழ்த்தி-வாய்நிறம்பத்தோத்திரஞ்செய்து, மகிழ்ந்து - சந்தோஷித்து, போற்றாமல் - தோத்தரியாமல், காயமெடுத்து - உடலெடுத்து, கலங்கினேன் - கலக்கமுற்றேன். (84)

சந்திரனைமேகமதுதான்மறைத்தவாறதுபோற்
பந்தமுறயானுமுனைப்பார்க்கிலேன்பூரணமே.

(ப-ரை) பூரணமே:-சந்திரனை - சந்திரனை, மேகமது - மேகமானது, தான்மறைத்த வாறதுபோல் - தான்மறைத்த விதம்போல, பந்தமுற-பாசமுற, யானுமுனை - அடியேனுமுன்னை, பார்க்கிலேன் தரிசித்தேனில்லை. (85)

செந்தாமரைத்தாளைத்தினந்தினமும்போற்றாமல்
அந்தரமாய்நின்றங்கலைந்தேநான்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:-செந்தாமரைத்தாளை - சிவந்த தாமரைபோன்ற திருவடியினை, தினந்தினமும் - நாடோறும், போற்றாமல்-துதியாமல், அந்தரமாய் நின்றங்கு - அதுதரவாக விருந்துகொண்டு, அலைந்தேனான் - நான்திரிந்தேன்.

நீர்மேற்குமிழிபோல்நிலையற்றகாயமிதைத்
தாரகமென்றெண்ணிநான்றட்டழிந்தேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:-நீர்மேல்-சலத்தின்மீதுண்டாகின்ற, குமிழிபோல் குமிழினைப்போல, நிலையற்ற - நிலையில்லாத, காயமிதை - தேகமாகியஇதனை, தாரகமென்று - ஆதாரமென்று, எண்ணி - நினைத்து, நான் - அடியேன், தட்டழிந்தேன் தடுமாறினேன். (87)

நெஞ்சமுருகிநினைத்துனைத்தான்போற்றிநெடு
வஞ்சகத்தைப்போக்கவகையறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:-நெஞ்சமுருகி - மனங்கசிந்து, நினைந்து - தியானித்து, உனைத்தான் தேவரீரையே, போற்றி - தோத்தரித்து, நெடுவஞ்சத்தை - பெரியவஞ்சகத்தை, போக்க - ஒழிக்க, வகையறியேன் - ஏது தெரியேன். (88)

எள்ளுக்குளெண்ணெய்போலெங்குநிறைந்திருந்த
துள்ளமறியாதுருகினேன்பூரணமே.

(ப-ரை') பூரணமே:-எள்ளுக்குள்-எள்ளினுக்குள்ளே,எண்ணெய்போல்-எண்ணெயினைப்போல, எங்கும் - எவ்விடத்தும், குறைந்திருந்து - வியாபித்திருந்ததை, உள்ளமறியாது-மனதிற்கொள்ளாமல், உருகினேன்-இளைத்தேன்,

மாயாப்பிரபஞ்சமயக்கத்திலேவிழுந்தே
யோயாச்சனனமொழித்திலேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:—மாயாப்பிரபஞ்சம் - காரியரூபமான உலகத்தினது, மயக்கத்திலே - திகைப்பிலே, விழுந்தே - அழுந்தியே, ஓயா - நீங்காத, சனனம் - பிறப்பினை, ஒழித்திலேன் - நீக்கினேனில்லை. (90)

பூசையுடன்புவனபோகமெனும்போக்கியத்தால்
ஆசையுற்றேநானுமறிவழிந்தேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:—பூசையுடன், சிறுதெய்வப் பூசையுடன், புவனபோகமெனும் - பிரபஞ்சவாழ்வெனும், போக்கியத்தால் - அனுபவத்தினாலே, ஆசையுற்றே - அவாவைத்தே, நானும் - அடியேனும், அறிவழிந்தேன் - புத்தி கெட்டேன். (91)

படைத்துமழித்திடுவாய்பார்க்கிற்பிரமாவெழுத்தைத்
தொடைத்துச்சிரஞ்சீவியாத்துலங்குவிப்பாய்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:—படைத்தும் - சிருஷ்டித்தும், அழித்திடுவாய்-சங்கரிப்பாய், பார்க்கில் - ஆராயில், பிரமாவெழுத்தை - பிரமன் ஏற்படுத்திய விதியை, தொடைத்து - கெடுத்து, சிரஞ்சீவியாய் - நித்தியமாய், துலங்குவிப்பாய் - பிரகாசிக்கச்செய்வாய். (92)

மந்திரமாய்ச்சாத்திரமாய்மறைநான்காய்நீயிருந்த
தந்திரத்தைநானறியத்தகுமோதான்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:—மந்திரமாய் - பஞ்சாட்சரமந்திரமாகியும், சாத்திரமாய் - பதிநூலாகியும், மறை நான்காய் - நான்குவேதங்களாகியும், நீயிருந்த - தேவரீர் எழுந்தருளியிருந்த, தந்திரத்தை - சூழ்ச்சியினை, நானறிய-அடியேன் தெரிந்துகொள்ள, தகுமோதான் - தகுதியாகுமோ. (93)

அல்லாய்ப்பகலாயனவரதகாலமெனுஞ்
சொல்லாய்ப்பகுத்தொடர்பறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே :— அல்லாய் - இருளாய், பகலாய் - பிரகாசமாய், அனவரதகாலமெனும் - எல்லாக்காலமாகியும், சொல்லாய்ப்பகுத்த-நூலாலே வகுத்த, தொடர்பறியேன் - சம்பந்தந் தேரேன். (94)

நரகஞ்சுவர்க்கமெனநண்ணுமிரண்டுண்டாயும்
அரகராவென்பதறிகிலேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:-நரகம் - நரகமெனவும், சுவர்க்கமென - மோட்சமெனவும், நண்ணும் - பொருந்திய, இரண்டுண்டாய் - இரண்டிருந்தும், அரகராவென்பது - அரகராவென்னும் சொல்லினை, அறிகிலேன் - செபிக்கத் தெரிந்திலேன். (95)

பாவபுண்ணியமென்னும்பகுப்பாய்ப்படைத்தழித்திங்
காவலையுண்டாக்கிவைத்தவருளறியேன்பூரணமே.

(ப-ரை.) பூரணமே.—பாவம் பாவமென்றும், புண்ணியமென்னும்-புண்ணியமென்றும், பகுப்பாய் - இரண்டுபிரிவாய், படைத்தழித்து - அவற்றினை

னுபவத்திற்குத் தக்கபடி உண்டாக்கியும் அழித்தும், இங்கு - இவ்வுலகில், ஆவலை - ஆசையை, உண்டாக்கிவைத்த - ஏற்படுத்திவைத்த, அருளறியேன் - திருவருளினைத் தேரேன். (96)

சாந்தமென்றுங்கோபமென்றுஞ்சாதிபேதங்களென்றும்
பாந்தமென்றும்புத்தியென்றும்படைத்தனையேபூரணமே.

(ப-ரை.) பூரணமே:—சாந்தமென்றும் - பொறுமையென்றும், கோபமென்றும் - சினமென்றும், சாதி பேதமென்றும் - வேறுவேறு சாதியெனவும், பாந்தமென்றும்-பந்தமெனவும், புத்தியென்றும்-அறிவென்றும், படைத்தனையே - வகுத்தனையே. (97)

பாசமுடலாய்ப்பசுவதுவுந்தானுயிராய்
நேசமுடனீபொருளாய்நின்றனையேபூரணமே.

(ப-ரை.) பூரணமே:—பாசமுடலாய் - பாசமென்பது தேகமாகியும், பசுவதுவும் - பசுவானதுவும், உயிராய் - ஆன்மாவாய், நேசமுடன் - விருப்பத்துடன், நீ பொருளாய் - தேவரீர் அவற்றிற்கும் பதியாய், நின்றனை - இருந்தனையே. (98)

ஏதிலடியாரிரங்கியிகத்தில்வந்துன்றன்
பாதமதில்தாழப்பரிந்தருள்வாய்பூரணமே,

(ப-ரை.) பூரணமே:—ஏதில - குற்றமில்லாத, அடியார்-சிவனடியார்கள், இரங்கி - மனமிரங்கி, இகத்தில்வந்து - இம்மையில்வந்து, உன்றன் - தேவரீரது, பாதமதில் - திருவடியில், தாழ - வணங்க, பரிந்தருள்வாய் - விருப்பத்துடன் திருவருள்புரிவை. (99)

நானேநீநீயேநானுமிரண்டுமொன்றானால்
தேனின்ருசியதுபோற்றெவிட்டாய்நீபூரணமே.

(ப-ரை.) பூரணமே:—நானேநீ (சிவம் தன்மையடைய) நானே நீயாகியும், நீயேநானும் - நீயேநானுகவும், இரண்டுமொன்றானால்-இருவரும் சுத்தாத்விதத் தன்மையடைந்தால், தேனின் ருசியதுபோல் - தேனின் சுவையைப்போல, தெவிட்டாய்நீ-தேவரீர் தித்திப்பீர். (100)

முடிவிலொருசூனியத்தைமுடித்துநின்றுபாராமல்
அடியிலொருசூனியத்திலலைந்தேனேபூரணமே.

(ப-ரை.) பூரணமே:—முடிவில் - தத்துவங்களின் முடிவிலும், ஒரு சூனியத்தை - விளங்காதபொருளை, முடித்து - தெரிந்து தீர்மானித்து, நின்று - திருவருளிலிருந்து, பாராமல் - தரிசியாமல், அடியில் - ஆரம்பத்திலேயே, ஒரு சூனியத்தை-ஒன்றுமில்லையென்றும் அறியாமையை, பட்டேன்-அடைந்தேன். (101)

பூரணமாலைதனைப்புத்தியுடனோதினர்க்குத்
தாரணியில்ஞானந்தழைப்பிப்பாய்பூரணமே.

(ப-ரை.) பூரணமே:—பூரணமாலைதனை-பூரணமாலையென்னு மிந்நூலை, புத்தியுடன் - அறிவுடனே, ஓதினர்க்கு - படித்தோர்க்கு, தாரணியில் - உலகில், ஞானம் - சிவஞானத்தை, தழைப்பிப்பாய் உண்டாக்குவாய். (102)

பூரணமாலை முற்றிற்று.

நெஞ்சொடு மகிழ்தல்.

அன்றுமுதலின்றளவு மாக்கையொடு சூட்சியுமாய்
நின்றநிலையறிய நேசமுற்றாய்நெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே:-**அன்றுமுதல்** - பிறந்தநாள்முதலாக, **இன்றளவும்** - **இது**வரையிலும், **ஆக்கையொடு** - எனது தேகத்துடன், **சூட்சியுமாய்** - தந்திரமாய், நின்றநிலை - கலந்ததன்மை, அறிய - தெரிந்துகொள்ள, **நேசமுற்றாய்** - விருப்பம்வைத்தாய். (1)

அங்கங்குணர்வா யறிவாகியேநிரம்பி
எங்கெங்குமானதிலே யேகரித்தாய்நெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே :-அங்கங்குணர்வாய் - ஆன்மாக்களோறும் அறிதற்கேதுவாய், அறிவாகியே நிரம்பி - அறிவு சொரூபமாகவிருந்து, எங்கெங்குமானதிலே - எவ்விடத்துமான எவற்றிலும், ஏகரித்தாய் - கலந்தனை. (2)

அலையாதபேரின்ப வானந்தவெள்ளத்திற்
றுலையாயுருவிறந்து நின்றனையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே :-அலையாத - சலியாத, பேரின்பவானந்த - சிவானந்த, வெள்ளத்தில் - அருட்கடலிலே, நிலையாய் - சாசுவதமாய், உருவிறந்து - அருவமாகி, நின்றனையே - இருந்தனையே. (3)

பாராமற்பதையாமற் பருகாமல்யாதொன்றும்
ஓராதுணர்வுடனே யொன்றினையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே:-பாராமல் - ஒன்றை நோக்காமலும், பதையாமல் - பதைத்திடாமலும், பருகாமல் உண்ணாமலும், யாதொன்றும் - எதனையும், ஓராது - ஆராயாமலும், உணர்வுடனே - அறிவுடனே, ஒன்றினை - முதல்வனுடனொன்றுபட்டனை. (4)

களவிறந்துகொலையிறந்து காண்பனவுங்காட்சியும்போ
யளவிறந்துநின்றதிலே யன்புற்றாய்நெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே -களவிறந்து - பிறபொருளைகிரகிக்காமல், கொலையிறந்து - கொலைசெய்யாமல், காண்பனவும் - ஞாதுருவும், காட்சியும்-ஞானமும், போய் - கடந்து, அளவிறந்து நின்றதிலே - வியாபகப்பொருளிலே, அன்புற்றாய் - ஆசைவைத்தாய். (5)

பேச்சிறந்துசுட்டிறந்து பின்னிறந்துமுன்னிறந்து
நீச்சிறந்துநின்றதிலே நேசமுற்றாய்நெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே:-பேச்சிறந்து - மவுனமாய், சுட்டிறந்து - ஏகதேசநோக்கற்று, பின்னிறந்து - எதிர்காலமிழந்து, முன்னிறந்து - இறந்தகால

மிழந்து, நீச்சிறந்து நின்றநிலை - வியாபாரமற்ற நிலையிலே, நேசமுற்றாய் - அன்புவைத்தாய். (6)

விண்ணிறந்துமண்ணிறந்து வெளிபிறந்துவொளியிறந்து
எண்ணிறந்துநின்றநிலை யேகரித்தாய்நெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே:—விண்ணிறந்து - ஆகாயம் கடந்து, மண்ணிறந்து - பூமிகடந்து, வெளியிறந்து - வெளிகடந்து, ஒளியிறந்து - பிரகாசம்கடந்து, எண்ணிறந்து - அளவுகடந்து, நின்றநிலை - நின்றநிலையிலே, ஏகரித்தாய் - கலந்தனை. (7)

பார்த்தவிடமெங்கும் பரமெனவேயுட்புறம்புங்
கோத்தபடியுண்மையெனக் கொண்டனையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே:- பார்த்தவிடமெங்கும் - நோக்கிய இடங்கள்தோறும், பரமெனவே-சிவமயமெனவே, உட்புறம்பும் - உள்ளும்புறமும், கோத்தபடி - கலந்தபடி, உண்மையென - சத்தியமென, கொண்டனையே - தெரிந்துகொண்டனையே. (8)

ஊரிறந்துபேரிறந்து வொளிபிறந்துவெளியிறந்து
சீரிறந்துநின்றநிலை சேர்ந்தனையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே:-ஊரிறந்து - தேசமிழந்து, ஒளியிறந்து - பூதப்பிரகாசமிழந்து, வெளியிறந்து - ஆகாயவெளியிழந்து, சீரிறந்து - பிரபஞ்ச சிறப்பிழந்து, நின்றநிலை - நின்றநிலையிலே, சேர்ந்தனையே - அடைந்தனையே. (9)

ஆண்பெண்ணலியென் றழைக்கவரிதாய்நிறைந்து
காண்பவரிதாயவிடங் கண்ணுற்றாய்நெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே:—ஆண்-புருடனென்றும், பெண்-மாதென்றும், அலியென்று - நபுஞ்சகனென்றும், அழைக்கவரிதாய் - பெயரிட்டழைக்க வருமையாய், நிறைந்து - எங்கும்வியாபகமாகி, காண்பவரிதாய் - காட்சிக்கரியதாய், இடங்கண்ணுற்றாய் - இடத்தினைக்கண்டனை. (10)

ஆங்காரமச்ச மகற்றியறிவினொடு
தூங்காமற்றூங்கிச் சுகம்பெற்றாய்நெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே:—ஆங்காரம் - செருக்கு, அச்சம் - பயம், அகற்றி - நீக்கி, அறிவினொடு - புத்தியுடன், தூங்காமல் - தற்போதத்தால், தூங்காமற்றூங்கி - அருட்போதத்தால் தூங்கி, சுகம்பெற்றாய் - இன்பமடைந்தனை. (11)

ஆதியாய்நின்ற வகண்டபரிபூரணத்தைச்
சாதியாநின்றவிடஞ் சார்வுற்றாய்நெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே:—ஆதியாய் - முதன்மையாய், நின்ற - இருந்த, அகண்ட - விசாலமான, பரிபூரணத்தை - வியாபகத்தை, சாதியாநின்ற - தெறிவிக்கத்தகுந்த, இடம் சார்வுற்றாய் - இடத்திற்சேர்ந்தனை. (12)

விருப்புவெறுப்பில்லாத வெட்டவெளியதனில்
இருப்பேசுகமென் றிருந்தனையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே:-விருப்பு - சுகம், வெறுப்பு - துக்கம், இல்லாத - கடந்த, வெட்டவெளியதனில் - சிதாகாயத்தில், இருப்பேசுகமென்று - இருத்தலே சுகமென்ன, இருந்தனையே - தங்கினையே. (13)

ஆருமறாப்பேரண்டத் தப்புறத்துமிப்புறத்தும்
நீருமுப்புமென்ன நிலைபெற்றாய்நெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே :-ஆருமறா - எவருமடைதற்குக்கூடாத, பேரண்டத்து - பெரிய ஆகாயத்தில், அப்புறத்தும் - அதன்வெளியிலும், இப்புறத்தும் - உள்ளும், நீருமுப்புமென - நீரிற்கலந்த உப்பேபோல, நிலைபெற்றாய் - நிலையுற்றனை, (14)

உடலுகவேயிருந்து முணரவறியானோடு
கடனீருமாறும்போற் கலந்திலையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே :-உடலுகவேயிருந்து - ஆன்மாவோடு கலந்திருந்து, உணரவறியானோடு - அவ்வான்மாவினாலே எட்டற்கரியவனுடனே, கடல் நீரும் ஆறும்போல்-கடற்சலமும் ஆற்றுச்சலமும் போல, கலந்திலையே-கலந்திருந்தாயில்லையே. (15)

நெடியகதைப்போக்கி நின்றசழக்கறுத்துப்
படிகத்துக்கும்பம்போற் பற்றினையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே:—நெடிய - நீண்ட, கதைப்போக்கி - பேச்சிறந்து, நின்ற - நிலையுற்ற, சழக்கறுத்து - குற்றங்களைந்து, படிகத்து - படிகத்தினாற் செய்தபாண்டம்போல-கடத்தைப்போல, பற்றினையே - பிடித்தனையே. (16)

மேலாகியெங்கும் விளங்கும்பரம்பொருளிற்
பாலூறுமென்சுவைபோற் பற்றினையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே :—மேலாகி - எவற்றினுக்கும் மேற்பட்டதாகி, எங்கும் - எவ்விடத்தும், விளங்கும் - பிரகாசிக்கும், பரம்பொருளில் - சிவத்தில், பாலூறும் - பாலிடத்திலுண்டான, மென்சுவைபோல்-விசேஷ சுவையினைப் போல, பற்றினையே - பிடித்தனையே. (17)

நீரோடுதண்ணாலிவிண்டு நீரானவாறேபோல்
ஊரோடுபேரில்லானோ டொன்றினையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே :—நீரோடு - சலத்தினிடத்தில், ஆலி - ஆலங்கட்டி, விண்டு - வெளிப்பட்டு, நீரானவாறேபோல் - மறுபடியும் நீரானதுபோல, ஊரோடு - ஊருடனே, பேரில்லானோடு - பெயரில்லாதவனுடனே, ஒன்றினையே - பொருந்தினையே. (18)

இப்பிறப்பைப்பாழ்ப்படுத்தி யிருந்தபடியேயிருக்கச்
செப்பவரிதாயவிடஞ் சேர்ந்தனையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே:-இப்பிறப்பை-எடுத்தசன்மத்தினை, பாழ்ப்படுத்தி - மறுபடியு முண்டாகாதபடி பாழாக்கி, இருந்தபடியேயிருக்க - நிலையாக விருக்க, செப்பரிதாய் - சொல்லுதற்கருமையாகிய, இடஞ்சேர்ந்தனையே - இடத்தினையடைந்தனையே. (19)

மேலாம்பதங்களெல்லாம் விட்டுவிட்டாராய்ந்து
நாலாம்பதத்தி னடந்தனையேநெஞ்சமே.

(ப-ரை) நெஞ்சமே:—மேலாம்பதங்கள் - மும்மூர்த்திகளின் மேற்பட்ட பதவிகள், விட்டுவிட்டு - கடந்து, ஆராய்ந்து - அதன்மேலிடத்தையாராய்ந்து, நாலாம் பதத்தில் - நாலாவதாகிய சிவலோகத்தில், நடந்தனையே - அடைந் தனையே. (20)

கடங்கடங்கடோறுங்கதிரவனூடாடி
யடங்குமிடந்தானறிந் தன்புற்றாய்நெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே:-கடங்கள் கடங்கள்தோறும் - உடலாகியபாண்டந் தோறும், கதிரவன்-காரியமாயையாகிய சூரியன், ஊடாடி-தங்கி, அடங்கும்-தங்கும், இடந்தானறிந்து - காரணமாயையினைத் தெரிந்து, அன்புற்றாய் - விருப்பமுற்றனையே. (21)

கற்றவனாய்க்கேட்டவனாய்க் காணானாய்க்காண்பவனாய்
உற்றவனாய்நின்றதிலே யொன்றுபட்டாய்நெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே :—கற்றவனாய் - கற்றவனாகவும், கேட்டவனாய் - கேட்டவனாகவும், காணானாய் - காணாதவனாகவும், காண்பானாய் - காண்பவனாகவும், உற்றவனாய்-அடைந்தவனாகவும், நின்ற-நிலைபெற்ற, அதிலேயொன்றுபட்டாய் - அதிலேகலந்தனை. (22)

நாலுவகைக்கரண நல்குபுலனைந்துமொன்றாய்ச்
சீலமுற்றுநின்றதிலே சேர்ந்தனையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே:—நாலுவகைக்கரணம் - நான்குகரணங்களும், நல்குபுலனைந்தும் - விஷயங்களைக் கொடுக்கும் ஐந்து புலன்களும், ஒன்றாய் - ஒருமையாகி, சீலமுற்று - சுத்தனாகி, நின்றதிலே - இருந்தநிலையிலே, சேர்ந் தனையே - அடைந்தனையே. (23)

விட்டிடமுந்தொட்டிடமும் விண்ணிடமுமண்ணிடமுங்
கட்டுமொருதன்மையெனக் கண்ணுற்றாய்நெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே:-விட்டிடமும் -நீங்கிய இடமும், தொட்டிடமும் - அடைந்த இடமும், விண்ணிடமும் - ஆகாயமும், மண்ணிடமும் - பூமியும், கட்டுமொருதன்மையென - சேர்ந்த ஒருதன்மையுடையதென, கண்ணுற்றாய்- பார்த்தனை. (24)

எந்தெந்தநாளு மிருந்தபடியேயிருக்க
அந்தச்சுகாதீத மாக்கினையேநெஞ்சகமே.

(ப-ரை.) நெஞ்சமே :—எந்தெந்தநாளும் - எக்காலமும், இருந்தபடியே - இருந்தவிதமாகவே, இருக்க - நிலையுற்றிருக்க, அந்தச்சுகாதீத - அந்த இன்பமயமாக, ஆக்கினையே - செய்தனையே. (25)

வாக்கிறந்துநின்ற மனோகோசரந்தன்னிலே
தாக்கறவே நின்றதிலே தலைசெய்தாய்நெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே :— வாக்கிறந்து - சொல்லிறந்து, நின்ற - நிலைபெற்ற, மனோகோசரந்தனிலே - மனோதீத நிலையிலே, தாக்கறவே - சம்பந்தப்படாத, நின்றதிலே - இருந்தநிலையிலே, தலைசெய்தாய் - தலைமைவாய்ந்தாய்.

எந்தேசமுநிறைந்தே யெக்காலமுஞ்சிறந்து
சித்தாயசித்தினிடஞ்சேர்ந்தனையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே :—எந்தேசமும் - எல்லாத்தேயங்களினும், நிறைந்தே - வியாபித்தே, எக்காலமும் - எக்காலத்தும், சிறந்து - சிறப்புற்று, சித்தாய - அறிவுருபமாயுள்ள, சித்திடம்-சிவசத்தியிடம், சேர்ந்தனையே - அடைந்தனையே. (27)

தாழாதேநீளாதே தன்மயமாய்நிறைந்து
வாழாதேவாழ மருவினையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே:—தாழாதே - தாழ்வு அடையாமல், நீளாதே - உயர்வடையாமல், தன்மயமாய் - சிவமயமாகி, நிறைந்து - வியாபித்து, வாழாதே - தற்போதமுன்னிட்டு வாழாமல், வாழ - அருளில்வாழ, மருவினையே - கலந்தனையே. (28)

உள்ளும்புறம்பு முவட்டாதவானந்தக்
கள்ளருந்தி நின்றதிலே கண்ணுற்றாய்நெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே:—உள்ளும் - அகத்திலும், புறம்பும் - வெளியிலும், உவட்டாத - தெவிட்டாத, ஆனந்த-சிவானந்தமாகிய, கள்ளருந்தி-தேனுண்டு, நின்றதிலே - நின்ற நிலையிலே, கண்ணுற்றாய் - தரிசித்தாய். (29)

வாதனைபோய்நிட்டையும்போய் மாமௌனராச்சியம்போய்
பேதமறநின்றவிடம் பெற்றனையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே:—வாதனைபோய்-பிரபஞ்சவாசனை போய், நிட்டையும்போய் - யோகம் கலந்து, மாமவுன ராச்சியம்போய் - மவுனநிலை நீங்கி, பேதமற - அபேதமாக, நின்ற இடம் - இருந்த இடம், பெற்றனையே - அடைந்தனையே. (30)

இரதம்பிரிந்துகலந் தேகமாம்வாறேபோல்
விரகந்தவிர்ந்தணல்பால் மேவினையேநெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே:-இரதம்பிரிந்து - பாதரசம் நீங்கி, கலந்து-உடனே கலந்து, ஏகமாய் - ஒன்றாகும், ஆறேபோல் - விதம்போல, விரகந்தவிர்ந்து - பிரபஞ்சமோகம் நீங்கி, அணல்பால் - சிவாக்கினியினிடத்து, மேவினையே அடைந்தனையே (31)

சோதியான்சூழ்பனிநீர் சூறைகொளுமாறேபோல்
நீதிகுருவின்றிருத்தாள் நீபெற்றாய்நெஞ்சமே.

(ப-ரை.) நெஞ்சமே:-சோதியான் - சூரியன், சூழ்பனிநீர் - தன்னைச்சூழ்ந்த பனிநீரினை, சூறைகொளும் - நீக்கும், ஆறேபோல் - விதம்போல, நீதி குருவின்-ஒழுக்கம்வாய்ந்த ஆச்சாரியரின், திருத்தாள் - அழகிய திருவடியை, நீ பெற்றாய் - நீயடைந்தாய். (32)

நெஞ்சோடு மகிழ்தல் முற்றிற்று

பட்டினத்துப்பிள்ளையார்

உடற்கூற்று வண்ணம்.

தனதனதான தனதனதான
தந்ததனந்தன தந்ததனந்த
தனனதனந்த தனனதனந்த
தானனதானன தானனதந்த—
தந்ததனதான தனதானனு.

ஒருமடமாது மொருவனுமாகி யின்பசுகந்தரு
மன்புபொருந்தி யுணர்வுகலங்கி யொழுகியவிந்து
வூறுசுரோணித மீதுகலந்து—

(ப-ரை.) ஒருமடமாது - ஒரு அழகிய பெண்ணும், ஒருவனுமாகி-ஒரு வாலிபனுங் கூடி, இன்பசுகந்தரு - இன்பமாகிய சுகத்தினைக் கொடுத்தற் கேதுவாகிய, அன்புபொருந்தி - அன்பினையடைந்து, உணர்வுகலங்கி - கலவியில் அவசமாகி, ஒழுகிய விந்து-வெளிப்பட்ட சுக்கிலம், ஊறு சுரோணிதம் - பெண்ணின் சுரோணிதத்துடன், கலந்து - கலந்து. (1)

பனியிலொர்பாதி சிறுதுளிமாது பண்டியில்வந்துபு
குந்துதிரண்டு பதுமவரும்பு கமடமிதென்று
பார்வைமெய்வாய்செவி கால்கைகளென்ற—

(ப-ரை.) பனியிலோர்பாதி - பனித்துளியில் பாதி, சிறுதுளி-துளியளவாகி, மாதுபண்டியில் - பெண்ணின்வயிற்றில், வந்து புகுந்து - பிரவேசித்து, திரண்டு - திரட்சியடைந்து, பதும அரும்பு - தாமரை மொக்கினைநிகர்த்து, கமடமிதென்று-ஆமைவுருவாகி, பார்வைமெய்வாய் செவிகால்கைகளென்று - கண் உடல் வாய் காது கால் கைகளென்று சொல்லத்தகுந்த. (2)

உருவமுமாகி யுயிர்வளர்மாத மொன்பதுமொன்றுநி
றைந்துமடந்தை யுதரமகன்று புவியில்விழுந்து
யோகமும்வாரமு நாளுமறிந்து—

(ப-ரை.) உருவமுமாகி - உருவத்தினையடைந்து, உயிர்வளர் - உயிர் விருத்தியாதற்கு, மாதமொன்பது மொன்று - பத்துமாதங்கள், நிறைந்து - பூர்த்தியாகி, மடந்தை - அம்மாதின், உதரமகன்று - வயிற்றினின்றும் வெளிவந்து, புவியில்விழுந்து - பூமியில் விழுந்து, யோகமும்-இன்னயோகம், வாரம் இன்னவாரம், நாளும் - இன்னநாளுமென, அறிந்து-தெரிந்து. (3)

மகளிர்கள்சேனை தரவணையாடை மண்படவுந்தியு
தைந்துகவிழ்ந்து மடமயில்கொங்கை யமுதமருந்தி
யோரறிவீரறி வாகிவளர்ந்து—

(ப-ரை.) மகளிர்கள் சேனை — பெண்களின் கூட்டம், தரவணையாடை-வணையில் வளர்த்த, மண்பட வுந்தியுதைந்து — பூமியிலுதைத்தும், கவிழ்ந்து - கவிழ்ந்து, மடமயில் - மயில்போன்ற சாயலையுடைய, கொங்கை - தாயின் தனத்தினது, அமுதமருந்தி - பாலைக்குடித்து, ஓரறிவீரறிவாகி - சிறிதுசிறிதாக அறிவுவளர, வளர்ந்து - வயதடைந்து. (4)

ஒளிநகையூற லிதழ்மடவாரு வந்துமுகந்திட
வந்துதவழ்ந்து மடியிலிருந்து மழலைமொழிந்து
வாவிருபோவென நாமம்விளம்ப—

(ப-ரை.) ஒளி - பிரகாசிக்கின்ற, நகை - பற்களுடன், ஊறல் இதழ் - ஊறும் உதட்டினை, மடவார் - பெண்கள், உவந்து - விரும்பி - முகந்திட-முத்தமிட, வந்து தவழ்ந்து - ஒடித்தவழ்ந்து, மடியிலிருந்து - மடிமீதில் தங்கி, மழலைமொழிந்து - குதலைவார்த்தைப்பேசி, வா இரு போவென - வா இரு போவென, நாமம் விளம்ப - இரண்டொரு வார்த்தை பேச. (5)

உடைமணியாடை யரைவடமாட வுண்பவர்தின்பவர்
தங்களொடுண்டு தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடியபாலரொ டோடிநடந்து—
அஞ்சுவயதாகி விளையாடியே—

(ப-ரை.) உடை - உடுக்கத்தகுந்த, மணி - ஆபரணம், ஆடை-வஸ்திரம், அரைவடம் - அரைஞாண், ஆட - அசைய, உண்பவர் - சாதம் சாப்பிடுபவ

ரும், திண்பவர், - பல்காரம் சாப்பிடுபவரும், தங்களோடுண்டு - அவர்களுட னிருந்துஉண்டு, தெருவிலிருந்து — வீதியிற்றங்கி, புழுதியளைந்து - புழுதி பூசிக்கொண்டு, தேடியபாலரோடு-நாடிவரும் மற்றைய பிள்ளைகளுடன், ஓடி-ஓடி, நடந்து - நடந்து, அஞ்சுவயதாகி - ஐந்துவயதடைந்து, விளையாடியே — விளையாடியே. (6)

உயர்தருஞான குருவுபதேச முந்தமிழின்கலை
யுங்கரைகண்டு வளர்பிறையென்று பலரும்விளம்ப
வாழ்பதினாறு பிராயமும்வந்து—

(ப-ரை.) உயர்தரு - உயர்வாகிய, ஞானகுரு - ஞானாசிரியரிடம், உப தேசமும் - உபதேசமும், தமிழின் கலையும் - தமிழ் சாஸ்திரங்களில், கரைக ண்டு - அளவுகண்டு; வளர்பிறையென்று — விருத்திச் சந்திரனென்று, பல ரும்விளம்ப-பற்பலரும் சொல்ல, வாழ்பதினாறு-வாழத்தகுந்தபதினாறு, பிராய மும் வந்து - வயதடைந்து. (7)

மயிர்முடிகோதி யறுபதநீல வண்டிமிர்தண்டொடை
கொண்டைபுனைந்து மணிபொனிலங்கு பணிகளணிந்து
மாகதர்போகதர் கூடிவணங்க—

(ப-ரை.) மயிர்முடிகோதி - தலைமயிர் வாரிமுடித்து, அறுபதம் — ஆறு கால்களுடன் கூடிய, நீலவண்டு-நீலவண்டுகள், திமிர்-தங்கிப் பாடுகின்ற, தண் தொடை—குளிர்ச்சி பொருந்திய மாலை, கொண்டைபுனைந்து - தலையிற் றரித் து, மணி-இரத்தினங்களிழைத்த, பொன்னிலங்கு-பொன்னாற்செய்யப்பட்ட, பணிகள் - ஆபரணங்கள், அணிந்து - தரித்து, மாகதர் போகதர் — மாகதர் போகதராகிய பாடகர்கள், கூடி - சேர்ந்து, வணங்க - வணங்க. (8)

மதனசொரூப னிவனெனமோக மங்கையர்கண்டும
ருண்டுதிரண்டு வரிவிழிகொண்டு சுழியவெறிந்து
மாமயில்போலவர் போவதுகண்டு—

(ப-ரை.) மதன சொரூபன்-மன்மதனையொத்த வடிவினன், இவனென- இவனென்ன, மோகமங்கையர் - காமமாதர்கள், கண்டு - பார்த்து, மருண்டு - மருட்சியுற்று, திரண்டு-கூடி, வரிவிழிகொண்டு-செவ்வரிபடர்ந்த நேத்திரத் தினால், சுழியவெறிந்து - சுழற்றிமருட்ட, மாமயில்போலவர் - அழகிய மயி லன்ன அவர்கள், போவதுகண்டு — நடப்பதைப்பார்த்து. (9)

மனதுபொறாம லவர்பிறகோடி மங்கலசெங்கல
சந்திகழ்கொங்கை பருவமயங்கி யிதழமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி—

(ப-ரை.) மனதுபொறாமல் - மனந்தாளாது, அவர் பிறகோடி - அவர் பின்சென்று, மங்கல - மங்கலமாகிய,செங்கலசம்-அழகிய கலசத்தையொத்த,

கொங்கை - அவர் தனங்களை, மருவ - அணைக்க, மயங்கி - திகைப்புண்டு, இதழமுதுண்டு - அதரபானஞ்செய்து, தேடிய - சம்பாதித்த, மாமுதல் - பெரிய செல்வத்தினை, சேரவழங்கி - முழுதுங்கொடுத்து, (10)

ஒருமுதலாகி முதுபொருளாயிருந்ததனங்களும்
வம்பிலிழந்து மதனசுகந்த விதனமிதென்று
வாலிபகோலமும் வேறுபிரிந்து—

(ப-ரை.) ஒருமுதலாகி - ஒருமுதற்பொருளாகவும், முதுபொருளாயிருந்த - அபாரமாகவிருந்த, தனங்களும் - செல்வமும், வம்பிலிழந்து - வீணுகச் செலவழித்து, மதனசுகந்த - மதனலீலை, விதனமிதென்று - விசனத்திற் கேதுவென்று, வாலிபகோலமும் - வாலிபப்பருவமும், வேறுபிரிந்து - வேறுபட்டு,

வளமையுமாறி யிளமையுமாறி வன்பல்விழுந்திரு
கண்களிருண்டு வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோத குரோதமடைந்து—
செங்கையினிலோர் தடியுமாகியே—

(ப-ரை.) வளமையும்மாறி - அழகுங்கெட்டு, இளமையும்மாறி - இளமையுங் கெட்டு, வன்பல்விழுந்து - வலிய பற்கள் விழுந்து, இருகண்களிருண்டு - இரண்டு நேத்திரங்களும் மறைந்து, வயதுமுதிர்ந்து - மூப்படைந்து, நரைதிரைவந்து - நரையும் திரையும் அடைந்து, வாத - வாதநோயும்; விரோத குரோதம் - விரோதிக்கும் கோபமுங்கொண்டு, செங்கையில்-செவ்வியகரத் தோர் தடியுமாகியே - ஒரு தடியூன்றியே,

வருவதுபோவ தொருமுதுகூனு மந்தியெனும்படி
குந்திநடந்து மதியுமழிந்து செவிதிமிர்வந்து
வாயறியாமல்வி டாமன்மொழிந்து—

(ப-ரை.) ஒரு முதுகூனு - ஒருமுதுகூனுடன், வருவது போவது - வருவதும்போவதுமாகி, மந்தியெனும்படி - குரங்கினைப்போல, குந்திநடந்து - குந்திக்குந்திநடந்து, மதியுமழிந்து-அறிவுகெட்டு, செவி திமிர் வந்து-காது செவிடுபட்டு,வாயறியாமல் - இன்னது சொல்வதென்றறியாமல், விடாமல்மொழிந்து - எந்நேரமும் பேசி,

துயில்வருநேர மிருமல்பொருது தொண்டையுநெஞ்சுமு
லர்ந்துவறண்டு துகிலுமிழந்து சுணையுமழிந்து
தோகையர்பாலர்கள் கோரணிகொண்டு—

(ப-ரை.) துயில்வருநேரம் - தூங்குகின்றசமயத்தில், இருமல்பொருது - இருமல் சகிக்கமுடியாமல், தொண்டையும் - தொண்டையும், நெஞ்சும் - மார்பும், உலர்ந்துவறண்டு - உலர்ந்துவறண்டு, துகிலுமிழந்து - இடுப்பிலுள்ள வஸ்திரம் நழுவ, சுணையுமழிந்து - சுரணையின்றி, தோகையர் - மாதரும், பாலர்கள் - பிள்ளைகளும், கோரணிகொண்டு - கோளாறு செய்யப்பெற்று,

கலியுகமீதி லிவர்மரியாதை கண்டிடுமென்பவர்
சஞ்சலமிஞ்ச கலகலவென்று மலசலம்வந்து
கால்வழிமேல்வழி சாரநடந்து—

(ப-ரை.)கலியுகமீதில் - இக்கலியுகத்திலே, இவர் மரியாதை - இவர்தன்மையினை, கண்டிடுமென்பவர் - பாருமெனச் சொல்பவர்கட்கு, சஞ்சலமிஞ்ச - துன்பமதிகரிக்க, கலகலவென்று - கலகலென, மலசலம்வந்து, மலமும் சலமும்பெருகி, கால் வழி-கால்வழியாகவும், மேல்வழி-தேகமேலும், சாரநடந்து பொருந்தவழிந்து,

தெளிவுமிராம லுரைதடுமாறி சிந்தையுநெஞ்சமு
லைந்துமருண்டு திடமுமுலைந்து மிகவுமலைந்து
தேறிநலாதர வேதெனநொந்து—

(ப-ரை.) தெளிவுமிராமல் - மனத்தெளிவின்றி, உரைதடுமாறி - குளறுபடிவார்த்தையடைந்து, சிந்தையும் நெஞ்சமும்-மனமும் எண்ணமும், உலைந்து மருண்டு-மிகவுலைந்து, திடமுமுலைந்து-தேகதிடம்தப்பி, மிகவுமலைந்து-மிகுதியும் பாடுபட்டு, தேறிநலாதரவு - நல்ல ஆதரவு, ஏதெனநொந்து - ஏதுமில்லையென வருந்தி,

மறையவன்வேத னெழுதியவாறு வந்ததுகண்டமு
மென்றுதெளிந்து இனியெனகண்ட மினியெனதொந்த
மேதினிவாழ்வுநி லாதினிநின்ற—

(ப-ரை.) மறையவன்வேதன்-வேதங்களுக்குரிய பிரமன், எழுதியவாறு - தலையிலெழுதிய விதி, வந்தது கண்டமுமென்று - இனி மரணகண்டம் வந்ததென, தெளிந்து-தெரிந்து, இனியெனகண்டம்-வேறுகண்டமேது, இனியென தொந்தம் - இனியென்ன சம்பந்தமுளது, ஏதினிவாழ்வு - இனியுலகவாழ்வேது, நிலாது - நில்லாது, நின்ற - பாக்கியாகவிருக்கும்,

கடன்முறைபேசு மெனவுரைநாவு றங்கிவிழுந்துகை
கொண்டுமொழிந்து கடைவழிகஞ்சி யொழுகிடவந்து
பூதமுநாலுசு வாசமுநின்று—

(ப-ரை.) கடன்முறை பேசுமென - கடன் முதலியவற்றைப்பற்றி எதாவது ஏற்பாடு செய்யவேண்டுமென, உறைநாவுறங்கி - சொல்லிக்கொண்டிருந்த நாவானது குளறி, விழுந்து - இழுத்துக்கொள்ள, கைகொண்டு மொழிந்து - கைகளினாற் சாடைகாட்டி, கடைவழிகஞ்சி யொழுகிடவந்து- கஞ்சி பக்கங்களில் ஒழுகிவிட, பூதமும - பஞ்சபூதங்களும், நாலு சுவாசமும்- விடுகின்ற பிராணவாயுவும், நின்று - தடைப்பட்டு,

வளர்பிறைபோல வெயிறுமுரோமமுஞ்சடையுஞ்சிறு
குஞ்சியும்விஞ்ச மனதுமிருண்ட வடிவுமிலங்க
மாமலைபோல்யம தூதர்கள்வந்து—

(ப-ரை.) வளர்பிறைபோல - வளர்ந்தசந்திரனைப் போல, எயிறும் - பற்களும், உரோமமும் - மயிரும், சடையும் - சடையும், சிறுகுஞ்சியும் - சிறுகுடுமியும், விஞ்ச - காண, மனதும் - (கடின) மனமும், இருண்டவடிவும் - கறுத்த உருவமும், இலங்க-பிரகாசிக்க, மாமலைபோல் - பெரிய மலையினைப் போல, யமதூதர்கள்வந்து - நமன் தூதுவர்கள் நெருங்கி,

வலைகொடுவீசி யுயிர்கொடுபோக மைந்தரும்வந்துகு
னிந்தழுநொந்து மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரேயிவர் காலமறிந்து—

(ப-ரை.) வலைகொடுவீசி-பாசவலையைவீசி, உயிர்கொடுபோக-உயிரைப் பிடித்துக்கொண்டுபோக, மைந்தரும் - பிள்ளைகளும், வந்து குனிந்து - வந்து குந்தி, அழநொந்து - துக்கப்பட, மடியில் விழுந்து - மடிமேல் விழுந்து, மனைவிபுலம்ப - பெண்டாட்டி அழ, மாழ்கினரே இவர் - இவரிறந்தனரே காலமறிந்து - இக்காலத்தினைக்கேட்டு,

பழையவர்காணு மெனுமயலார்கள் பஞ்சுபறந்திட
நின்றவர்பந்த ரிடுமெனவந்து பறையிடமுந்த
வேபிணம்வேக விசாரியுமென்று—

(ப-ரை·) பழையவர்காணும்-இவர் மிகவயோதிகரென, எனுமயலார்கள் - சொல்லும் அயலவர்கள், பஞ்சுபறந்திட - பஞ்சினைப்போலவோடி, நின்றவர் - இருந்தவர், பந்தரிடுமென - இனிப்பந்தர் முதலிய இடஞ்செய்வீரென, வந்து பறையிட முந்தவே - (பஞ்சமர்) வந்து மேளங் கொட்ட ஆரம்பிக்கவே, பிணம்வேக - பிணத்தினைக்கொண்டுபோய்ச்சுட, விசாரியுமென்று - விசாரியுங்களென்று,

பலரையுமேவி முதியவர்தாமி ருந்தசவங்கழு
வுஞ்சிலரென்று பணிதுகிறொங்கல் களபமணிந்து
பாவகமேசெய்து நாறுமுடம்பை—

(ப-ரை.) பலரையுமேவி - பலரையுமனுப்பிக்கேட்டு, முதியவர்தாம் - சிலபெரியர், இருந்தசவம் - தங்கிய பிணத்தினை, கழுவும் சிலரென்று - சிலர் கழுவுவீரெனச்சொல்லி, பணி - ஆபரணம், துகில் - வஸ்திரம், தொங்கல் - மாலை, களபம் - வாசனை, அணிந்து - முதலியதரித்து, பாவகமேசெய்து - அலங்கரித்து, நாறுமுடம்பை - துர்வாசனையுடைய தேகத்தை,

வரிசைகெடாம லெடுமெனவோடி வந்திளமைந்தர்கு
னிந்துசுமந்துகடுகிநடந்து சுடலையடைந்து
மானிடவாழ்வென வாழ்வெனநொந்து—

(ப-ரை.) வரிசைகெடாமல் - கிரமமாக, எடுமெனவோடிவந்து - எடுமெனயாருமோடிவந்து, மைந்தர் குனிந்து - பிள்ளைகள் குனிந்து, சுமந்து - தாங்கி, கடுகிநடந்து - விசையாகச்சென்று, சுடலையடைந்து - சுடுகாட்டினைச் சேர்ந்து, மானிட வாழ்வு - மனிதவாழ்வு, என வாழ்வென நொந்து - இவ்வளவுதானோ வெனவருந்தி,

விறகிடமூடி யழல்கொடுபோட வெந்துவிழுந்துமு
றிந்துநிணங்க ளுருகியெலும்பு கருகியடங்கி
யோர்பிடிநீறுமி லாதவுடம்பை—
நம்புமடியேனை யினியாளுமே.

(ப-ரை.) விறகிட - விறகு அடுக்கி, மூடி - மறைத்து, அழல்கொடு போட - நெருப்பு மூட்டிவிட, வெந்து - உடல்வெந்து, விழுந்துமுறிந்து - பிணம்விழுந்து நொறுங்கி, நிணங்களுருகி - கொழுப்பு உருகி, எலும்புகருகி - எலும்புகறுத்து, அடங்கி - தீயடங்கி, ஓர்பிடி - ஒருபிடியளவு, நீறு — சாம்பல், இலாதவுடம்பை - ஆகாததேகத்தினை, நம்பும் - நிலையென வெண்ணும், அடியேனை - அடியேனை, இனியாளுமே - இனியாட்கொள்ளவேண்டும்.

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டார் திருவடிவாழ்க.

பட்டினத்துப்பிள்ளையார் உடற்கூற்று வண்ணம்.

முற்றியது

Kalaignana Malikai Series No. 4.

உ

கடவுள்துணை.

பத்திரகிரியார்

மெய்ஞ்ஞானப்புலம்பல்

மூலமும்,

சென்னை நகரத்துச்

சில செந்தமிழ் வித்வசிகாமணிகளால்

இயற்றப்பட்ட

கருத்துரையும்.

இவை

ஸ்ரீ பெரும்பூதூர்

இராமசாமி முதலியார் குமாரர்

ஸ்ரீ குமாரவேலாயுத முதலியார்

அவர்களால்,

மதராஸ் டைமண்ட் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

சாதாரண௵ தனுரவி.

1911.

All Rights Reserved.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பத்திரகிரியார் திருநட்சத்திர வெண்பா.

ஓங்குதிரு வெண்காட் டையரடிகள் தண்ணருளைப்
பாங்குபெற வேபெற்ற பத்ரகிரி—யாங்கொளியாய்ச்
சித்திரை மாமகத்திற் சேர்ந்தனனே மாமருதூர்க்
கத்த னருளிற் கலந்து.

பூவை - மணவழகு இயற்றியது.

உ

திருச்சிற்றம்பலம்.

பத்திரகிரியார்

மெய்ஞ்ஞானப்புலம்பல்.

மூலமும் - கருத்துரையும்.

விநாயகர்வணக்கம்.

முத்திதருஞ்ஞான மொழியாம்புலம்பல்சொல்ல
அத்திமுகவன்றன் அருள்பெறுவதெக்காலம்.

(க-ரை.) மோட்சத்திற்கேதுவாகிய புலம்பலாகிய நூலினைப்பாட யானைமுகவிநாயகனை யடைவதெப்போது.

நூல்.

ஆங்காரமுள்ளடக்கி ஐம்புலனைச்சுட்டறுத்துத்
தூங்காமற்றூங்கிச் சுகம்பெறுவதெக்காலம்.

(க-ரை.) அகங்காரத்தினைக் கெடுத்துப்பஞ்சேந்திரியக்கள்மடக்கித் திருவருளினை முன்னிட்டு யோக நித்திரைசெய்வது எப்போது. (1)

நீங்காச்சிவயோக நித்திரைகொண்டேயிருந்து
தேங்காக்கருணைவெள்ளந் தேக்குவதுமெக்காலம்.

(க-ரை.) சிவராஜயோக சமாதியடைந்து சிவானந்தவெள்ளம் நிறைவது எப்போது. (2)

தேங்காக்கருணைவெள்ளந் தேக்கியிருந்துண்பதற்கு
வாங்காமல்விட்டகுறை வந்தடுப்பதெக்காலம்.

(க-ரை.) கிருபாவெள்ள நிறைந்து பூர்வசென்ம குறைவை யனுபவிப்பது எப்போது. (3)

ஓயாக்கவலையினு ளுள்ளுடைந்துவாடாமல்
மாயாப்பிறவி மயக்கறுப்பதெக்காலம்.

(க-ரை.) பிரபஞ்சக்கவலையினால் மனந்தளராது சென்மத்தினையொழிப்ப தெப்போது. (4)

மாயாப்பிறவி மயக்கத்தை யூடறுத்துக்
காயாபுரிக்கோட்டை கைக்கொள்வதெக்காலம்.

(க-ரை.) மாயாகாரிய பிறப்பினை யொழித்துக் காயசித்தியடைவ தெப்போது. (5)

காயாபுரிக்கோட்டை கைவசமாய்க்கொள்வதற்கு
மாயாவனுபூதி வந்தடுப்பதெக்காலம்.

(க-ரை.) காயசித்தி யடைவதற்குச் சிவானுபூதி யுண்டாவதெப்போது.

சேயாய்ச்சமைந்து செவிடூமைபோற்றிரிந்து
பேய்போலிருந்துன் பிரமைகொள்வதெக்காலம்.

(க-ரை.) இந்திரியமில்லாதவனைப்போலச் சஞ்சரித்துப் பேய்பிடியுண் டான் போல அருளடைவதெப்போது. (7)

பேய்ப்போற்றிரிந்து பிணம்போற்கிடந்துபெண்ணைத்
தாய்போ னினைத்துத் தவமுடிப்பதெக்காலம்.

(க-ரை.) பேய்போலும், நடைப்பிணம்போலுஞ் சஞ்சரித்து எல்லா மாதர்களையும் தாய்மாராகக் கருதுவது மெப்போது. (8)

கால்காட்டிக்கைகாட்டிக் கண்கள்முகங்காட்டி
மால்காட்டுமங்கையரை மறந்திருப்பதெக்காலம்.

(க-ரை.) அங்கங்களால் மயக்கும் வேசியரை மறப்பதெப்போது. (9)

பெண்ணினல்லாராசைப் பிரமையினைவிட்டொழிந்து
கண்ணிரண்டுமூடிக் கலந்திருப்பதெக்காலம்.

(க-ரை.) பெண்மயக்கினை நீக்கித் திருவருளினிற் சுகிப்ப தெப்போது.

வெட்டுண்டபுண்போல் விரிந்தவல்குற்படுகுழியிலே
தட்டுண்டுநிற்கை தவிர்வதுவுமெக்காலம்.

(க-ரை.) மங்கையர்கள் அல்குலினில் மயங்கும் மயக்க மொழிவ தெப் போது. (11)

ஆறாதபுண்ணி லழுந்திக்கிடவாமல்
தேறாதசிந்தைதனைத் தேற்றுவதுமெக்காலம்.

(க-ரை.) புண்ணையொத்தநிதம்பத்திலழுந்தாமல் மனதை நன்னெறியி னில் வைப்பதெப்போது, (12)

தந்தைதாய்மக்கள் சகோதரரும்பொய்யெனவே
சிந்தைதனிற்கண்டு திருக்கறுப்பதெக்காலம்,

(க-ரை.) சுற்றத்தினரை மாயாசாலமெனக்கண்டு பிரபஞ்சமயக்கொழிப் பதெப்போது. (13)

மன்னுயிரைக்கொன்று வதைத்துண்டுழலாமல்
தன்னுயிர்போலெண்ணித் தவமுடிப்பதெக்காலம்.

(க-ரை.) பிறவுயிரையெல்லாம் தன்னுயிர்போல எண்ணுவ தெப்போது.

பாவியென்றபேர்படைத்துப் பாழ்நரகில்வீழாமல்
ஆவியென்றசூத்திரத்தை யறிவதினியெக்காலம்

(க-ரை.) பாவியென்றபெயரை வகிக்காது உயிர் உடலினிலைத்துநின்ற இரகசியத்தினையறிவதெப்போது. (15)

உளியிட்டகல்லு முருப்பிடித்தசெஞ்சாந்தும்
புளியிட்டசெம்பும் பொருளாவதெக்காலம்

(க-ரை.) சிலையாதிவிக்கிரகங்களில் (பெருமான் அதிட்டித்திருக்கும்) உண்மையினைக் கண்டு பிடிப்பதெப்போது. (16)

வேடிக்கையுஞ்சொகுசு மெய்ப்பகட்டும்பொய்ப்பகட்டும்
வாடிக்கையெல்லா மறந்திருப்பதெக்காலம்.

(க-ரை.) உலகப்பகட்டனைத்து நீக்கிப்பற்றற்றிருப்பதெப்போது. (17)

பட்டுடைபொற்பணியும் பாவனையுந்தீவினையும்
விட்டுவிட்டுன்பாதம் விரும்புவதுமெக்காலம்.

(க-ரை.) உலகபாவனை நீங்கி உன்திருவடி விரும்புவதெப்போது. (18)

ஆமைவருமாட்கண் டைந்தடக்கஞ்செய்தாற்போல்
ஊமையுருக்கொண் டொடுங்குவதுமெக்காலம்.

(க-ரை.) ஆமைதனது உறுப்புகளையடக்குவது போல இந்திரியங்களை யொடுக்கி யொடுங்குவதெப்போது. (19)

தண்டிகையுஞ்சாவடியுஞ் சாளிகையு மாளிகையுங்
கண்டுகளிக்குங் கருத்தொழிவதெக்காலம்.

(க-ரை.) உலகபதார்த்தங்களைத் தனக்குச் சொந்த மெனச் சந்தோஷிக் கும் எண்ணமொழிவதெப்போது. (20)

அத்தனிருப்பிடத்தை ஆராய்ந்துபார்த்துநிதஞ்
செத்தசவம்போற் றிரிவதினியெக்காலம்.

(க-ரை.) முதல்வனிருப்பிடத்தைத் தெரிந்து நடைப்பிணம்போல திரிவ தெப்போது. (21)

ஒழிந்தகருமத்தினைவைத் துள்ளொளும்புவெள்ளொளும்பாய்க்
கழிந்தபிணம்போலிருந்து காண்பதினியெக்காலம்.

(க-ரை.) சிவதருமங்கள் ஆதாரமாகக்கொண்டு சவம்போன்றிருந்து உனைத் தரிசிப்பதெப்போது. (22)

அற்பசுகமறந்தே யறிவையறிவாலறிந்து
கெர்ப்பத்தில்வீழ்ந்துகொண்ட கோளறுப்பதெக்காலம்.

(க-ரை) சிற்றின்பமறந்து பேரறிவையறிந்து பிறப்பறுப்பதெப்போது.

கருப்படுத்தியென்னையயன் கைப்பிடித்துக்கொள்ளாமுன்
உருப்படுத்தியாள வுடன்படுவதெக்காலம்.

(க-ரை.) இயமன் பிடிக்குமுன்பு சிவமாந்தன்மை செய்து ஆட்கொள வெப்போது. (24)

தூண்டுவிளக்கனைய தொடர்ந்திருள்முன்சூழ்ந்தாற்போல்
மாண்டுபிறைத்துவந்த வகைதெரிவதெக்காலம்.

(க-ரை.) இருளும் ஒளியுமாறிவருவதுபோன்று மாறிவரும் பிறப்பினுண்மை தெரிவதெப்போது. (25)

தூரியினின்மீன்போற் சுழன்றுமனம்வாடாமல்
ஆரியனைத்தேடி யடிபணிவதெக்காலம்.

(க-ரை.) வலையிற்பட்ட மீனைப்போல வாடாமல் குருநாதனைக் கண்டு வணங்குவதெப்போது. (26)

எண்ணூறுகமிருந்து மெய்தாதவீடுபெற
வெண்ணீறுபூசி விளங்குவதுமெக்காலம்.

(க-ரை.) (விபூதியணியாது) அநேகயுகம் வாழ்வதைக் காட்டிலும் விபூதி யணிந்து உடனே மோட்சமடைவது எப்போது. (27)

அவவேடம்பூண்டிங் கலைந்துதிரியாமற்
சிவவேடம்பூண்டு சிறந்திருப்பதெக்காலம்.

(க-ரை.) வீண்வேஷம் போட்டுவீணே திரியாமல் சிவவேஷம்போட்டுச் சிறப்படைவது எப்போது. (28)

அண்டருக்காநஞ்சருந்தி அம்பலத்திலாடுசிவன்
தொண்டருக்குத் தொண்டனெனத்தொண்டுசெய்வதெக்காலம்

(க-ரை.) தேவரின்பொருட்டு விடமுண்டு நிர்த்தனம் செய்யும் நடராஜனுடைய அடியார்க் கடிமையாவதெப்போது. (29)

பன்றிவடிவெடுத்துப் பாரிடந்துமால்காணுக்
குன்றில்விளக்கொளியைக் கூறுவதுமெக்காலம்.

(க-ரை) பன்றிவடிவெடுத்துத் திருமாலாற்காணப்பெறாத சோதிசொரூபமான திருவண்ணாமலையைத் தோத்தரிப்பது எப்போது. (30)

தித்திக்குந்தெள்ளமிர்தை சித்தாந்தத்துட்பொருளை
முத்திக்குவித்தை முதனிலைப்பதெக்காலம்.

(க-ரை.) அமுதம்போன்றவனை, சித்தாந்தத்துட்பொருளை, மோட்சவித்தா மானவனைச் சிந்திப்பதெப்போது. (31)

வேதாந்தவேதமெல்லாம் விட்டொழிந்தேநிஷ்டையிலே
ஏகாந்தமாக விருப்பதினியெக்காலம்.

(க-ரை.) பொதுவானவேதக்கருத்தைவிட்டுச் (சிறப்பான) சிவாகமநிஷ்டைகூடித் தனித்திருப்ப தெப்போது. (32)

மற்றிடத்தைத்தேடியென்றன் வாழ்நாளைப்போக்காமல்
உற்றிடத்தைத்தேடி யுறங்குவதுமெக்காலம்.

(க-ரை.) பகிர்முகவிசாரணையால் வீணாள்போக்காமல், அந்தர்முகவிசாரணையால் யோக நித்திரை செய்வது எப்போது. (33)

இன்றுளோர்நாளை யிருப்பதுவும்பொய்யெனவே
மன்றுளோர்சொல்லும் வகையறிவதெக்காலம்.

(க—ரை.) இன்றிருப்பார் நாளையில்லை யெனும் பெரியோர் வார்த்தையி னுண்மை யறிவதெப்போது. (34)

கஞ்சாவபினியுடன் கள்ளுண்டுவாடாமற்
பஞ்சாமிர்தம் பருகுவதுமெக்காலம்

(க-ரை.) கஞ்சா, அபினி, கள் முதலிய உண்டு கெடாமல் (அபிடேக) பஞ்சாமிர்தம் உண்பது எப்போது. (35)

செஞ்சலத்திலுற்றிரண்ட ஜெனனமோக்ஷம்பெறவே
சஞ்சலத்தைவிட்டுன் சரணடைவதெக்காலம்.

(க-ரை.) சென்மமோட்சமடையச் சஞ்சலங்களை விடுவது எப்போது.

கும்பிக்கிரைதேடிக் கொடுப்பாரிடந்தோறும்
வெம்பித்திரிகை விடுப்பதினியெக்காலம்.

(க-ரை.) வயிற்றி னுகாரத்தின்பொருட்டுப் பிறரிடநாடித்திரிதலை விடுவது எப்போது. (37)

ஆடுகின்றசூத்திரந்தா னறுமளவுமேதிரிந்து
போடுகின்றநாள்வருமுன் போற்றுவதுமெக்காலம்.

(க-ரை.) உலாவும் இத்தேகமானது அழியுமுன் தேவரீரைத் துதிப்பது எப்போது. (38)

நவசூத்திரவீட்டை நானென்றலையாமல்
சிவசூத்திரத்தைத் தெரிந்தறிவதெக்காலம்.

(க-ரை.) தேகாபிமானத்தை விட்டுச் சிவஞான போதசூத்திரத்தி னுண்மையறிவதெப்போது. (39)

மறந்துமலசலங்கள் மாயும்புழுக்கூட்டைவிட்டுக்
கரந்துனடியிணைக்கீழ்க் கலந்துநிற்பதெக்காலம்.

(க-ரை.) அறிவுமயங்கி மலசலங்கழியுமுன்னமே உன்திருவடியிற் கலப்பதெப்போது. (40)

இம்மைதனிற்பாதகனு யிருவினைக்கீடாயெடுத்த
பொம்மைதனைப்போட்டுன்னைப் போற்றிநிற்பதெக்காலம்.

(க-ரை.) இப்பிறப்பின் பொய்யுடலை யொழித்து உன்னைப் போற்றுவதெப்போது. (41)

உப்பிட்டபாண்ட முடைந்துகருக்கொள்ளுமுன்னே
அப்பிட்டவேணியனைக் காட்டுவதெக்காலம்.

(க-ரை.) உப்புப்பாண்டத்தையொத்த உடலழிந்து பிறவியெடுக்குமுன்னர் கங்காதரமூர்த்திக் கடிமையாவதெப்போது. (42)

சேவைபுரிந்து சிவரூபக்காட்சிகண்டு
பாவைதனைக்கழித்துப் பயனடைவதெக்காலம்.

(க-ரை.) ஆலயவழிபாடுசெய்து சிவலிங்கப்பெருமானைக் கண்டு, மாதர் மயக்க நீங்கி மோட்சமடைவதெப்போது. (43)

காண்டத்தைவாங்கிக் கருமேகமீண்டதுபோல்
பாண்டத்தைநீக்கிப் பரமடைவதெக்காலம்.

(க-ரை.) உவர்நீரையுண்டு சுத்தநீரை மேகம்பொழிவதுபோல,மலநீங்கி அருளைப்பொழிவது எப்போது. (44)

சோற்றுத்துருத்திதனைச் சுமந்தலைந்துவாடாமல்
ஊத்தைச்சடம்போட் டுனையடைவதெக்காலம்.

(க-ரை.) சோறடைக்கு முடலைத்தாங்காமல் அதைவிட்டு உனையடைவதெப்போது. (45)

தொடக்கைச்சதமெனவே சுமந்தலைந்துவாடாமல்
உடக்கைகழற்றி உனையறிவதெக்காலம்.

(க-ரை.) தேகத்தைச்சுமந்து வாடாமல் தத்துவங்களைக் கழன்று உன்னைத் தெரிந்துகொள்வ தெப்போது. (46)

ஆசைவலைப்பாசத் தகப்பட்டுமாயாமல்
ஓசைமணித்தீபத்தி லொன்றிநிற்பதெக்காலம்.

(க-ரை.) ஆசையாகிய மாயையில் சிக்காமல் சோதியிலிரண்டறக்கலப்பதெப்போது. (47)

கூறரியநால்வேதங் கூப்பிட்டுங்காணுத
பாரரகசியத்தைப் பார்த்திருப்பதெக்காலம்.

(க-ரை.) வேதங்களாலறியப்படாத இரகசியத்தைத் தரிசித்துக்கொண்டிருப்பதெப்போது. (48)

புல்லாய்விலங்காய்ப் புழுவாய்நரவடிவா
யெல்லாப்பிறப்பி னிருளகல்வதெக்காலம்.

(க-ரை.) புல்லாகியும், விலங்காகியும், புழுவாயும், மனிதனுயும் பிறக்கின்ற தன்மை நீங்குவதெப்போது. (49)

தக்கும்வகைக்கோர்பொருளுஞ் சாராமலேநினைவில்
பக்குவம்வந்துன்னருளைப் பார்த்திருப்பதெக்காலம்.

(க-ரை.) இருவினையொப்படைந்து பற்றின்றித் திருவருளைத் தரிசிப்பதெப்போது. (50)

பருவத்தலைவரொடும் பல்கியின்பம்கொள்வதற்குத்
தெரிவைப்பருவம்வந்து சிக்குவதுமெக்காலம்.

(க-ரை.) முதல்வனுடன் கலந்து பேரின்பமடைய தெரிவையைப் போன்ற பரிபக்குவ வயது அடைவதெப்போது (51)

தெரிவையுறும்பக்குவத்தின் சீராட்டெல்லாமறிந்து
குருவையறிந்தேனினைத்துக் கும்பிடுவதெக்காலம்.

(க-ரை.) எனது பரிபக்குவகாலத்தில் திருவருளை யனுபவித்துக் குருநாதனை வணங்குவது எப்போது. (52)

வம்படிக்குமாதருடன் வாழ்ந்தாலுமன்னுபுளி
யம்பழமுமோடும்போ லாவதினியெக்காலம்.

(க-ரை.) மாதருடன் கூடியிருக்கினும் புளியம்பழமும் அதனோடும் போலப் பற்றற்றிருப்பது எப்போது. (53)

பற்றற்றுநீரிற் படர்தாமரையிலைபோல்
சுற்றத்தைநீக்கிமனந் தூரநிற்பதெக்காலம்.

(க-ரை.) தாமரைநீர்போலச் சுற்றத்தாருடனிருந்து வாழ்வதெப்போது. (54)

சல்லாபலீலையிலே தன்மனைவிசெய்தசுகம்
சொல்லாரக்கண்டெனக்குச் சொல்வதினியெக்காலம்.

(க-ரை.) மனைவியின் கலவி சுகத்தைப்போன்று திருவருட்கலப்பிலுண்டாகும் சுகத்தைச் சொல்வது எப்போது. (55)

மருவவயற்புருடன் வருநேரங்காணாமல்
உருகுமனம்போலெனுள முருகுவதுமெக்காலம்.

(க-ரை.) கள்ளநாயகனைக் காணாது உருகும் காரிகையைப்போலத் தேவரீரினிடத்து மனம் கசிவதெனக் கெப்போது. (56)

தன்கணவன்றன்சுகத்திற் றன்மனம்வேறானதுபோல்
என்கருத்திலுன்பதத்தை யேற்றுவதுமெக்காலம்.

(க-ரை.) சொந்தநாயகன் சையோகத்தில் வேறு இஷ்ட நாயகனிடத்துச் செல்லுமனம்போல, பிரபஞ்ச போகத்திலிருக்கிற போதும் தேவரீரிடத்து நாடுவதெப்போது. (57)

கூடிப்பிரிந்துவிட்ட கொம்பனையைக்காணாமல்
தேடித்தவிப்பவன்போல் சிந்தைவைப்பதெக்காலம்.

(க-ரை.) மனைவியைக்காணாது வருந்துவன்போல உனைக்காணாது வருந்துவதெப்போது. (58)

எவ்வனத்தின்மோகம் எப்படியுண்டப்படிபோல்
கவ்வனத்தியானம் கருத்துவைப்பதெக்காலம்.

(க-ரை.) யௌவன மாதரிடத்துண்டாகும் மோகம்போல உன்மீது மோகிப்ப தெப்போது. (59)

கண்ணாலருவி கசிந்துமுத்துப்போலுதிரச்
சொன்னபரம்பொருளைத் தொகுத்தறிவதெக்காலம்.

(க-ரை.) கண்ணீரும் கம்பலையுமாகச் சிவபரம்பொருளை யாராய்வ தெப்போது. (60)

ஆகமிகவுருக வன்புருகவென்புருகப்
போகவனுபூதி பொருந்துவதுமெக்காலம்.

(க-ரை.) உடல்புளகிக்க, அன்புமேலிட, என்புநெக்குருக சிவானுபூதி பொருந்துவதெப்போது. (61)

நீரிற்குமிழிபோ னிலையற்றவாழ்வைவிட்டுன்
பேரிற்கருணைவெள்ளம் பெருக்கெடுப்பதெக்காலம்.

(க-ரை.) நீர்க்குமிழையொத்த வாழ்வை வெறுத்து நினது சிவானந்த வெள்ளத்து மூழ்குவதெப்போது. (62)

அன்பையுருக்கி யறிவையதன்மேற்புகட்டித்
துன்பவலைப்பாசத் தொடக்கறுப்பதெக்காலம்.

(க-ரை.) அன்பைப் பெருக்கி யதன்வழியே யறிவைச் செலுத்தி மாயா வலையின் சம்பந்தத்தை யொழித்துக்கொள்வ தெப்போது. (63)

கருவின்வழியறிந்து கருத்தைச்செலுத்தாமல்
அருவிவிழிசொரிய அன்புவைப்பதெக்காலம்.

(க-ரை.) பிறப்பினுண்மை கண்டு அதன்வழிசெல்லாமல் ஆனந்த அன்பு பூணுவதெப்போது. (64)

தெளியத்தெளியத் தெளிந்தசிவானந்தத்தேன்
பொழியப்பொழியமனம் பூண்டிருப்பதெக்காலம்.

(க-ரை.) மனந்தெளிந்து சிவாநந்தத் தேனுண்டு சுகிப்பதெப்போது (65)

ஆதாரமூலத் தடியிற்கணபதியைப்
பாதாரவிந்தம் பணிந்துநிற்பதெக்காலம்.

(க-ரை.) மூலாதாரத்துக் கணபதியைப் பணிவதெப்போது (66)

மண்வளைந்தநாற்கிற்றில் வளைந்திருந்தவேதாவைக்
கண்வளைந்துபார்த்துள்ளே கண்டிருப்பதெக்காலம்.

(க-ரை.) சுவாதிட்டானத்துப் பிரமாவைத் தரிசிப்பதெப்போது (67)

அப்புப்பிறைநடுவே யமர்ந்திருந்த விட்டுணுவை
உப்புக்குடுக்கையுள்ளே யுணர்ந்தறிவதெக்காலம்

(க-ரை.) மணிபூரகத்தின் விட்டுணுவைத் தெரிந்துகொள்வதெப்போது.

மூன்றுவளையமிட்டு முளைத்தெழுந்தகோணத்தில்
தோன்றுமுருத்திரனைத் தொழுதுநிற்பதெக்காலம்.

(க-ரை.) அநாகதத்து உருத்திரமூர்த்தியைத் தொழுவதெப்போது. (69)

வாயுவறுகோணமதில் வாழுமகேச்சுரனைத்
தோயும்வகைகேட்கத் தொடங்குவதுமெக்காலம்.

(க-ரை.) விசுத்தியில் மகேச்சுரனைநாடும் கிருபையுண்டாவதெப்போது.

வட்டவழிக்குள்ளே மருவுஞ்சதாசிவத்தைக்
கிட்டவழிதேடக் கிருபைசெய்வதெக்காலம்.

(க-ரை.) ஆஞ்ஞையில் சதாசிவத்தினைத்தேடிக் கிருபையடைவதெப் போது. (71)

உச்சிக்கிடைநடுவே யோங்குகுருபதத்தை
நிச்சயித்துக்கொண்டிருந்து நேர்வதினியெக்காலம்.

(க-ரை.) உச்சியில்விளங்கும் குருவின்திருவடியை மனத்தில் தியானிப்பதெப்போது. (72)

பாராகிப்பார்மீதிற் பஞ்சவர்னந்தானாகி
வேராகிநீமுளைத்த வித்தறிவதெக்காலம்.

(க-ரை) பிருதிவியாகியும், அதுமுதல் ஐம்பூதமாகியும் அவற்றைக்கடந்துள்ள தன்மையறிவதெப்போது. (73)

கட்டறுக்கவொண்ணுக் கருவிகரணாதியெல்லாஞ்
சுட்டறுத்து நிட்டையிலே தூங்குவதுமெக்காலம்.

(க-ரை.) கருவிகளின் சேஷ்டை யொடுக்கி நிட்டைகூடுவ தெப்போது.

கள்ளக்கருத்தையெல்லாங் கட்டோடுவேரறுத்திங்
குள்ளக்கருத்தை யுணர்ந்திருப்பதெக்காலம்.

(க-ரை). வஞ்சகமனத்தை யொழித்துச் சத்தியக்கருத்தை யறிவதெப்போது. (75)

அட்டகாசஞ்செலுத்து மவத்தைச்சடலத்துடனே
பட்டபாடத்தனையும் பகுத்தறிவதெக்காலம்.

(க-ரை.) தேகாடம்பரங்களை யொழித்து உண்மையறிவதெப்போது(76)

அறிவிக்கருவியுட னவத்தைபடும்பாட்டையெல்லாம்
பிறியவுடனிருந்திப் பெலப்படுவதெக்காலம்.

(க-ரை.) தத்துவத் துன்பங்களை யொழித்து திருவருளினைபெறுவ தெபபோது. (77)

பூதம்பொறிகரணம் போந்தவிந்துநாதமுமாய்ப்
பேதம்பலவிதமும் பிறித்தறிவதெக்காலம்.

(க-ரை.) பூதம், பொறி, கரணம், விந்து நாதம் முதலியவற்றைப் பிறித்தறிவதெப்போது. (78)

தோன்றாசைமூன்றுந் தொடர்ந்துவந்துசுற்றாமல்
ஊன்றாசைவேரையடி யூடறுப்பதெக்காலம்.

(க-ரை.) ஆசைக்கேதுவாயுள்ள அராகதத்துவத்தினை யொழிப்ப தெப்போது. (79)

புன்சனனம்போற்றுமுன்னே புரிவட்டம்போகிலினி
யென்சனனமீடேறு மென்றறிவதெக்காலம்.

(க-ரை.) தூலதேகமுள்ளபோதே சூக்குமதேக நீங்கின் எங்ஙனம் அருளடைவதெனத் தெரிவ தேப்போது. (80)

நட்டனடுவினின்று நற்றிரோதாயியருள்
கிட்டவழிகாட்டிக் கிருபைசெய்வதெக்காலம்.

(க-ரை.) திரோதாயி திருநெறியினைக்காட்டித் தெளிவித்த லெப்போது.

நானேநானென்றிருந்தேன் நடுவினிற் கட்டழகி
தானேவெளிப்படுத்திக் தருவனென்பதெக்காலம்.

(க-ரை.) நானேபிரமமென்பதை யொழித்து அருள்மயமான முதல்வனை வேறறச் சிவசத்திகாட்டுவ தெப்போது. (82)

அடர்ந்தமனக்காட்டை யஞ்செழுத்தாம் வாளாலே
தொடர்ந்துதொடர்ந்துவெட்டிச் சுடுவதினியெக்காலம்.

(க-ரை.) அஞ்ஞானவனத் தினைப் பஞ்சாக்கர வாளால் வெட்டிக் கொளுத்துவ தெப்போது. (83)

ஐந்துபொறிவழிபோ யலைந்துழிந்தப்பாழ்மனதை
வெந்துவிழப்பார்த்து விழிப்பதினியெக்காலம்.

(க-ரை.) இந்திரியவழி சென்ற மனத்தை யடக்கி திருவருளில் விழிப்பதெப்போது. (84)

இனமாண்டுசேர்ந்திருந்தோ ரெல்லாருந்தான்மாண்டு
சினமாண்டுபோகவருள் சேர்ந்திருப்பதெக்காலம்.

(க-ரை.) பிரபஞ்ச தத்துவமொடுங்கக் கோபங்கெட்டு அருளிற்கலப்பதெப்போது. (85)

அமையாமனதமையு மானந்தவீடுகண்டங்
கிமையாமலேனுக்கி யிருப்பதினியெக்காலம்.

(க-ரை.) ஒடுங்காதமனம் சிவானந்தவீடுகண்டு இமையாதுதரிசித்துவாழ்தலெப்போது. (86)

கூண்டுவிடுஞ்சீவன்மெள்ளக் கொட்டாவிகொண்டாற்போல்
மாண்டுவிடுமுன்னேநான் மாண்டிருப்பதெக்காலம்.

(க-ரை.) தேகத்தைவிட்டு உயிர்நீங்குமுனம் தேகசேஷ்டையையொழிப்பதெப்போது. (87)

ஊனிறைந்தகாய முயிரிழந்துபோகுமுன்னம்
நானிறந்துபோகவினி நாள்வருவதெக்காலம்.

(க-ரை.) தேகத்தின் உயிர்நீங்குமுனர் அகங்காரமற்றுவாழ்வதெப்போது.

கெட்டுவிடுமாந்தர் கெர்விதங்கள்பேசிவந்து
சுட்டுவிடுமுன்னென்னைச் சுட்டிருப்பதெக்காலம்.

(க-ரை) மனிதர் என்னைக்கொளுத்திவிடுமுன்னர் நான்அந்தர்முகமாகவிருப்பதெப்போது. (89)

தோலேணிவைத்தேறித் தூரநடந்தெய்க்காமல்
நூலேணிவைத்தேறி நோக்குவதுமெக்காலம்.

(க-ரை.) உடலையாதாரமாகக்கொண்டு பலதேயஞ்சஞ்சரியாது சாஸ்திரமூலமாகத் திருவருளைத் தரிசிப்பதெப்போது. (90)

வாயோடுகண்மூடி மயக்கமுற்றுநில்லாமல்
தாயோடுகண்மூடி தழுவிநிற்பதெக்காலம்.

(க-ரை.) வாயையும் கண்ணையு மூடிக்கொண்டு மவுனமுறாமல் அறிவாகியகண் மூடி அருளை யனுபவிப்பதெப்போது, (91)

காசினியெலாநடந்து காலோய்ந்துபோகாமல்
வாசிதனிலேறி வருவதினியெக்காலம்.

(க-ரை.) உலகமனைத்து மலைந்துவாடாமல் வாசியினையடக்கிவாழுவதெப்போது. (92)

ஒலிபடருங்குண்டலியை யுன்னியுணர்வாலெழுப்பிச்
சுழுமுனையின்றாள்திறந்து தூண்டுவதுமெக்காலம்.

(க-ரை.) குண்டலிசத்தியைத் தியானத்தாலெழுப்பிச் சுழுமுனையில்திருவருளைத் தரிசிப்பதெப்போது. (93)

இடைபிங்கலைநடுவே யியங்குஞ்சுழுமுனையில்
தடையறவேநின்று சலித்திருப்பதெக்காலம்.

(க-ரை.) இருகலைக்கும் நடுநின்ற சுழுமுனையில் அசைவற்றிருப்ப தெப்போது. (94)

மூலநெருப்பைவிட்டு மூட்டிநிலாமண்டபத்தில்
பாலையிறக்கியுண்டு பசியொழிவதெக்காலம்.

(க-ரை,) மூலவக்கினியை யெழுப்பிச்சந்திரமண்டல அமுதினையுண்ணுவதெப்போது. (95)

ஆகவெளிக்குள்ளே யடங்காப்புரவிசெல்ல
ஏகவெளியி லிருப்பதினியெக்காலம்.

(க-ரை.) இருதயத்திலிருந்து வாசிவெளிபோகாதபடியிருந்து சிதாகாய தரிசனஞ் செய்வதெப்போது. (96)

பஞ்சரித்துப்பேசும் பலகலைக்கெட்டாப்பொருளில்
சஞ்சரித்துவாழ்ந்து தவம்பெறுவதெக்காலம்.

(க-ரை.) விஸ்தாரமானநூல்கட்குமெட்டாதஉண்மைப்பொருளைக்கலந்து வாழ்வதெப்போது. (97)

மலமுஞ்சலமுமற்று மாயையற்றுமானமற்று
நலமுங்குலமுமற்று நானிருப்பதெக்காலம்.

(க-ரை.) தேகசேஷ்டைகளும் தேகாபிமானமு நீங்கித் தரிசிப்பதெப்போது. (98)

ஓடாமலோடி யுலகைவலம்வந்துசுற்றித்
தேடாமலென்னிடமாய்த் தெரிசிப்பதெக்காலம்.

(க-ரை.) வேடிக்கையார்த்தமாகத் தலயாத்திரைசெய்து முதல்வனைநாடாமல் எனது சிதாகாயத்திலே முதல்வனைத் தரிசிப்ப தெப்போது. (99)

அஞ்ஞானம்விட்டே யருண்ஞானத்தெல்லைதொட்டு
மெஞ்ஞானவீடுபெற்று வெளிப்படுவதெக்காலம்.

(க-ரை.) அஞ்ஞான நீங்கி அருண்ஞான மேலிட்டு மெய்ஞ்ஞான முறுவதெப்போது. (100)

வெல்லுமட்டும்பார்த்து வெகுளியெலாம்விட்டகன்று
செல்லுமட்டுஞ்சிந்தை செலுத்துவதுமெக்காலம்.

(க-ரை.) தத்துவங்களைச்செயித்துக் கோபத்தைநீக்கித்திருவருளினை அடையும் வரையில் மனத்தைவிடுவதெப்போது. (101)

மேலாம்பதந்தேடி மெய்ப்பொருளையுள்ளிருத்தி
நாலாம்பதந்தேடி நான்பெறுவதெக்காலம்.

(க-ரை.) திருவருளை விசாரித்துமுதல்வனைமனத்திருத்திச்சிவசாயுச்சியமடைவதெப்போது. (102)

எண்ணாததூரமெல்லா மெண்ணியெண்ணிப்பாராமல்
கண்ணாடிக்குள்ளொளிபோற் கண்டறிவதெக்காலம்.

(க-ரை.) வீணே சிந்திக்காமல் கண்ணாடியு ளொளிபோலத் தெரிசிப்பதெப்போது. (103)

என்னையறிந்துகொண்டே னெங்கோமானோடிருக்கும்
தன்மையறிந்து சமைத்திருப்பதெக்காலம்.

(க-ரை.) ஆன்மாவைத் தரிசித்து பரமான்மாவுடன் கலந்திருக்குந்தன்மையடைதலெப்போது. (104)

ஆறாதாரங்கடந்த வானந்தப்பேரொளியை
பேறாகக்கண்டுநான் பெற்றிருப்பதெக்காலம்.

(க-ரை.) ஆறு ஆதாரத்திற்கு மேன்பட்ட சோதியை இலாபமாகவடைவதெப்போது. (105)

ஆணவமாயத்தா லழிந்துடலம்போகாமுன்
காணாதலாவின்பமற்றுக் கண்டறிவதெக்காலம்.

(க-ரை.) ஆணவத்தா லுடலழியு முன்னர் சிவதரிசனத்தால் பேரின்பமடைத லெப்போது. (106)

மும்மலமுஞ்சேர்ந்து முளைத்தெழுந்தகாயமிதை
நிர்மலமாய்க்கண்டுவினை நீங்கிருப்பதெக்காலம்.

(க-ரை.) மும்மலத்தாலாகிய உடல் நிர்ம்மலமடைத லெப்போது. (107)

முன்னைவினைகெடவே மூன்றுவகைகாட்சியினால்
உன்னைவெளிப்படுத்தி யுறுவதினியெக்காலம்.

(க-ரை.) பிராரத்துவநீங்கத் தத்துவதரிசனம் ஆன்மதரிசனம்சிவதரிசன மூன்றால் தேவரீரைத் தரிசிப்பதெப்போது. (108)

கண்ணிடொளிபாய்ந்ததுவுங் கருத்தறிந்துகொண்டதுவும்
விண்ணிலொளிகண்டதுவும் வெளிப்படுவதெக்காலம்.

(க-ரை.) கண்ணிடொளியும்மனவறிவும் சிதாகாயப்பிரகாசமும் எனக்கு வெளிப்படுவதெப்போது. (109)

கனவுகண்டாற்போலெனக்குக் காட்டிமறைந்தேயிருந்த
நினைவைப்பரவெளிமேல் நிறுத்துவதுமெக்காலம்.

(க-ரை.) கனவினைப்போன்று திருவருள் மறவாது சதா சிதாகாயத் துறுவதெப்போது. (110)

ஆரென்றுகேட்டதுவு மறிவுவந்துகண்டதுவும்
பாரென்றுசொன்னதுவும் பகுத்தறிவதெக்காலம்.

(க-ரை.) தத்துவவிசாரணையும்ஆன்மவிசாரமும் முதல்வனைக்கண்டதும் பகுத்தறிவதெப்போது. (111)

நினைக்கு நினைவுதொறும் நிறைந்தபரிபூரணத்தை
முனைக்குமேற்கண்டுகண்ணில் முளைத்தெழுப்பலெக்காலம்.

(க-ரை.) நினைவில் வியாபகமான சிவத்தைச் சுழுமுனையில் தரிசிப்ப தெப்போது. (112)

முப்பாழும்பாழாய் முதற்பாழுஞ்சூனியமாய்
அப்பாழும்பாழா யன்புசெய்வதெக்காலம்.

(க-ரை.) பிரகிருதி, அசுத்தமாயை, சுத்தமாயை, விந்து, நாதம் முதலிய வற்றைச் சூனியமாக்கிச் சிவத்திற்கன்பு செய்வதெப்போது. (113)

சீயென்றெழுந்து தெளிந்துநின்றவான்பொருளை
நீயென்றுகண்டு நிலைபெறுவதெக்காலம்.

(க-ரை.)பிரபஞ்சத்தை வெறுத்து மனத்துதித்த பொருள் சிவமென வறிவதெப்போது. (114)

வவ்வெழுத்துமவ்வெழுத்தும் வாளாகுஞ்சிவ்வெழுத்தும்
யவ்வெழுத்தினுள்ளே யடங்கிநிற்பதெக்காலம்.

(க-ரை.) சத்திஎழுத்தினையும் மலவெழுத்தினையும் சிவவெழுத்தினையும் ஆன்மவெழுத்தி லடக்கிநிற்ப தெப்போது. (115)

எழுத்தெல்லாமாண்டிறந்தே யேகமாய்நின்றதிலே
அழுத்தமாச்சிந்தைவைத் தன்புகொள்வதெக்காலம்

(க-ரை.) அபரஞானமொழிய பரஞானத்தே நின்ற சிவத்தை அடைவ தெப்போது. (116)

அருவாகியுருவாகி ஆதியந்தமாகிநின்ற
குருவாகிவந்தெனையாட் கொண்டருள்வதெக்காலம்.

(க-ரை.) அரு, உரு, முதல், முடிவு ஆகிநின்ற சிவம் குருவாகவந்தருள்வ தெப்போது. (117)

நானென்றறிந்தவனை நானறியாக்காலமெல்லாம்
தானென்றுநீயிருந்த தனையறிவதெக்காலம்.

(க-ரை.) என்னை நானறியுமுன்னமே என்னுடனே அத்துவிதமாகவிருந் ததனை யறிவதெப்போது. (118)

என்மயமாய்க்கண்டதெல்லாமெண்ணியெண்ணிப்பார்த்தபின்பு
தன்மயமாய்க்கொண்டதிலே சார்ந்துநிற்பதெக்காலம்.

(க-ரை.) ஆனசொரூபமாகக் கண்டதெல்லாம் பரமான்ம சொரூபமா கக் கண்டு சார்வதெப்போது. (119)

ஒளியிலொளியா முருப்பிறந்தவாறதுபோல்
வெளியில்வெளியான விதமறிவதெக்காலம்.

(க-ரை.) பூதவொளியில் அருளொளி தோன்றுமாறு, பூதாகாயத்தில் சிதாகாயந் தோன்றும்வித மறிவதெப்போது. (120)

ஒளியிட்டமெய்ப்பொருளை யுள்வழியிலேயடைத்து
வெளியிட்டுச்சாத்திவைத்து வீடுறுவதெக்காலம்.

(க-ரை.) அருட்சோதியை மனத் தேநிறுத்தி மவுனமடைந்து சிவதரிச னம் செய்வதெப்போது. (121)

காந்தம்வலித்திரும்பைக் கரத்திலழுத்திக்கொண்டதுபோல்
பாய்ந்துபிடித்திழுத்துன் பதத்தில்வைப்பதெக்காலம்.

(க-ரை.) இரும்பைக் காந்தமிழுத்துக்கொள்வதுபோலத் தேவரீரென்னை யாட்கொள்வதெப்போது. (122)

பித்தாயங்கொண்டு பிரணவத்தையூடறுத்துச்
செத்தாரைப்போலே திரிவதினியெக்காலம்.

(க-ரை.) பற்றற்ற பைத்தியத்தால் பிரணவதியானங்கொண்டு நடைப் பிணம்போலச் சஞ்சரிப்பதெப்போது. (123)

ஒழிந்தகருத்தினைவைத் துள்ளொளும்புவெள்ளொளும்பாய்க்
கழிந்தபிணம்போலிருந்து காண்பதினியெக்காலம்.

(க-ரை.) உலகவாசனை நீங்கிய மனத்தைச் சவநிலையில் வைத்து தேவரீ ரைத் தரிசிப்பதெப்போது. (124)

ஆதிகபிலர்சொன்ன வாகமத்தின்சொற்படியே
சாதிவகையில்லாமற் சஞ்சரிப்பதெக்காலம்.

(க-ரை.) கபிலரகவலின்படி சாதிபேதம் விடுவதெப்போது. (125)

சூதுங்களவுந்தொடராவினையுஞ் சுட்டக்கா
லூதுந்துருத்தியைப்போட் டுனையடைவதெக்காலம்.

(க-ரை.) வஞ்சனை திருடு மொழிந்து இவ்வுடனீங்கி யுனையடைவ தெப்போது. (126)

ஆசைவலைப்பாசத் தகப்பட்டுமாயாமல்
ஓசைமணிதீபத்தி லொன்றிநிற்பதெக்காலம்.

(க-ரை.) ஆசைவலையி லகப்படாமல் மணிபோல் சத்திக்கும் சோதியிற் கலப்பதெப்போது. (127)

கல்லாய்மரமாய் கயலாய்ப்பறவைகளாய்
புல்லாய்ப்பிறந்தசென்மம் போதுமென்பதெக்காலம்.

(க-ரை.) கல்லாகவும், மரமாகவும், மச்சமாகவும், பட்சியாகவும், புல்லாகவும் பிறந்தது போதுமென்ப தெப்போது. (128)

தக்கும்வகைக்கோர்பொருளும் சாராமலேநினைவில்
பக்குவமாநின்னருளைப் பார்த்திருப்பதெக்காலம்.

(க-ரை.) ஒருபொருளினுந் தாக்காமல் நின்னருளை எதிர்பார்த்திருப்ப தெப்போது. (129)

தூரேருடிசைந்து சுழன்றுவருந்தத்துவத்தை
வேரோடிசைந்து விளங்குவதுமெக்காலம்.

(க-ரை.) உலகச்சேற்றி லழுந்திய தத்துவத்தினை நீக்கிப் பிரகாசிப்ப தெப்போது. (130)

பாசநடுவேறிப் பயங்தெழுந்தசித்திரத்தை
ஏசநடுமூலத் திருத்துவதுமெக்காலம்.

(க-ரை.) நமசியில் மகாமாகிய பிரபஞ்சத்தைவிட்டு மற்றையவிரண்டை மூலத்தில் வைத்துத் தியானிப்பதெப்போது. (131)

ஓரின்பங்காட்டு முயர்ஞானவீதிசென்று
பேரின்பவீடுகண்டு பெற்றிருப்பதெக்காலம்.

(க-ரை.) இன்பமான சித்தாந்த வீதியிலே யிருந் திருவருளின்ப மடைவ தெப்போது. (132)

காரணமாய்வந்தென் கருத்தினுரைத்ததெல்லாம்
பூரணமாகக்கண்டு புகழ்ந்திருப்பதெக்காலம்.

(க-ரை.) பக்குவத்தில் என்னுள்ளே நுழைந்து போதித்த வெல்லாவற்றை யுமனுபவிப்ப தெப்போது. (133)

ஆயுங்கலைகளெல்லா மாராய்ந்துபார்த்ததற்பின்
நீயென்றுமில்லா நிசங்காண்பதெக்காலம்.

(க-ரை.) எல்லாநூல்களையு மாராய்ந்து தேவரீர் எனக்கன்னிய மில்லாத உண்மையினை யறிவதெப்போது. (134)

குறியாகக்கொண்டு குலமளித்தநாயகனைப்
பிரியாமற்சேர்ந்து பிறப்பறுப்பதெக்காலம்.

(க-ரை.) இலட்சியமாக என்னை யடியனுக்கிய நாயகனைச்சேர்ந்து பிறப் பறுப்ப தெப்போது. (135)

மத்தடுத்துநின்று மருளாடுவார்போலே
பித்தடுத்துநின்னருளைப் பெற்றிருப்பதெக்காலம்.

(க-ரை.) மருள்கொண்டாற்போல உன்பித்துப் பிடித்துத் திருவருளை யடைவதெப்போது. (136)

சாவாமல்செத்திருந்து சற்குருவின்பொன்னடிக்கீழ்
வேவாமல்வெந்திருக்க வேண்டுவதுமெக்காலம்.

(க-ரை.) நடைப்பிணம்போ லிருந்து ஆசாரியரின் திருவடிக்கீழ் ஞானக் கினியால் வேகவேண்டுவதெப்போது. (137)

என்னையறியாம லிருந்தாட்டுஞ்சூத்திரநின்
தன்னையறிந்து தவம்பெறுவதெக்காலம்.

(க-ரை.) 'என்னையாட்டுவிக்கும் கன்மம் உன்னை யறியச் செய்யுந் தவம் பெறுவதெப்போது. (138)

உள்ளமறியா தொளித்திருந்தநாயகனை
கள்ளமனந்தெளிந்து காண்பதினியெக்காலம்.

(க-ரை.) மனத்தின்கண்ணே மறைந்துள்ள சிவத்தைத் தெரிந்து தரி சிப்பதெப்போது. (139)

வாசித்துங்காணுமல் வாய்விட்டுப்போகாமல்
பூசித்துந்தோன்ருப் பொருள்காண்பதெக்காலம்.

(க-ரை.) வாசிப்பினுலும், மவுனத்தினுலும், பூசித்தலினுலும் காணப் படாப் பொருளைக் காண்பதுவதெப்போது. (140)

பன்னிரண்டுகாற்புரவி பாய்ந்துசெல்லடந்தட்டாமல்
பன்னிரண்டுசெங்கிலிக்குட் பிணைப்பதினியெக்காலம்.

(க-ரை.) பன்னிரண்டங்குலம் செல்லும்வாயுவினை விடாமல்பன்னிரண் டங்குல முள்ளடங்கச்செய்வ தெப்போது. (141)

நாட்டுக்காலிரண்டும்விட்டு நடுவுக்காலூடேபோய்
ஆட்டுக்காலிரண்டினுள்ளே யமர்ந்திருப்பதெக்காலம்.

(க-ரை.) இரண்டு கலைகளையுங் விடாது கும்பத்தின் மூலஞ்சென்று அங்கு நடிக்கும் இரண்டடிகளினடுவிலிருப்ப தெப்போது. (142)

பாற்பசுவைப்பூட்டிப் பதியில்வைத்துசீராட்டிக்
காற்பசுவையோட்டியதிற் கட்டிவைப்பதெக்காலம்.

(க-ரை.) பசுத்துவ நீக்கிப் பதித்தன்மையிலிருந்து வாயுவை யுள்ளே நடத்திக் கட்டுவதெப்போது. (143)

பலவிடத்தேமனதைப் பாயவிட்டும்பாராமல்
நிலவரையினூடேபோய் நேர்படுவதெக்காலம்

(க-ரை.) மனதைப் பலவிடஞ் செலுத்தாமல் குகையில் வாசஞ்செய்து தரிசிப்பதெப்போது. (144)

காமக்கடல்கடந்து கரையேறிப்போவதற்கே
ஓமக்கனல்வளர்த்தி யுள்ளிருப்பதெக்காலம்.

(க-ரை.) ஆசைக்கடலைக் கடந்து முத்தியங்கரைசேரச் சிவாக்கினி வளர்த்தி யிருப்பதெப்போது. (145)

உதயச்சுடர்மூன்று முள்வீட்டிலேகொளுத்தி
இதயத்திருநடன மினிக்காண்பதெக்காலம்.

(க-ரை.) ஆகவனியம் தட்சணாங்கினியம் காருகபத்தியம் வளர்த்தி இருதய நடனம் தரிசிப்பதெப்போது. (146)

வேதாந்தவேதமெல்லாம் விட்டேறியேகடந்து
நாதாந்தமூல நடுவிருப்பதெக்காலம்.

(க-ரை.) வேதவேதாந்தங்களைக்கடந்து நாதாந்தத்தில் தங்குவதெப்போது

பட்டமற்றுக்காற்றிற் பறந்தாடுஞ்சூத்திரம்போல்
விட்டுவெளியாக விசுவசித்தலெக்காலம்.

(க-ரை.) காற்றுடியிழந்த கயிறு அசைவதுபோல, பிரபஞ்சவிஷயநீங்கிச் சிதாகாயத்தில் வசிப்பதெப்போது. (148)

அட்டாங்கயோகமதற் கப்பாலுக்கப்பாலாய்
கிட்டாப்பொருளதனைக் கிட்டுவதுமெக்காலம்.

(க-ரை.) அட்டாங்கயோகத்தைக் கடந்து விளங்கும் சிவத்தை அடைவதெப்போது. (149)

ஒட்டாமலொட்டிநிற்கு முடலுமுயிரும்பிரித்தே
எட்டாப்பழம்பதிக்கிங் கேணிவைப்பதெக்காலம்.

(க-ரை.) உடலையும் உயிரினையும் பிரித்து எட்டாச் சிவபதத்திற்குத் திருவருளேணி சாத்துவ தெப்போது. (150)

பாசத்தைநீக்கிப் பசுவைப்பதியில்விட்டு
நேசத்தினுள்ளே நீணேந்திருப்பதெக்காலம்.

(க-ரை.) பாசத்தை யொழித்துப் பசுவைப் பதியிற் கலப்பித்து நேச மோடுறைவது எப்போது. (151)

ஆசாரநேய வனுட்டானமும்மறந்து
பேசாமெய்ஞ்ஞானநிலை பெற்றிருப்பதெக்காலம்.

(க-ரை.) ஆசாரமுதலியவிட்டு மௌன ஞானமடைவதெப்போது. (152)

பல்லாயிரங்கோடிப் பகிரண்டமும்படைப்பே
அல்லாதுவேறிலையென் றறிவதினியெக்காலம்.

(க-ரை.) பல்லாயிர மண்டங்களு முதல்வன் படைப்பென வறிவதெப் போது. (153)

ஆதிமுதலாகிநின்ற அரியென்றவட்சரத்தை
ஓதியறிந்துள்ளே யுணர்வதினியெக்காலம்.

(க-ரை.) அரியட்சர முணர்ந்து அதனதிஷ்டான மூர்த்தியையுணர்வ தெப்போது. (154)

சாத்திரத்தைசுட்டிச் சதுர்மறையைப்பொய்யாக்கிச்
சூத்திரத்தைக்கண்டு துயரறுப்பதெக்காலம்.

(க-ரை.) சாத்திரங்களையும் சதுர்மறைகளையுமறுத்து சிவஞானசூத்திரத் தைப்படித்துத் துன்பமொழிவதெப்போது. (155)

அல்லும்பகலுமென்ற னறிவையறிவாலறிந்து
சொல்லுமுறைமறந்து தூங்குவதுமெக்காலம்.

(க-ரை.) அறிவினைத்திருவருளாலறிந்து யோக நித்திரை செய்வதெப் போது. (156)

இயங்குஞ்சராசரத்தி லெள்ளுமெண்ணெயும்போல்
முயங்குமந்தவேத முடிவறிவதெக்காலம்.

(க-ரை.) சராசரங்களிலெள்ளு மெண்ணெயையும் போல விளங்கும் வேத முதல்வனை யறிவதெப்போது. (157)

ஊனாகியூனி லுயிராகியெவ்வுலகுந்
தானாகிநின்ற தனையறிவதெக்காலம்.

(க-ரை.) உடலையசைவித்தும் உயிருக்கறிவித்தும் எங்கும் வியாபியா யுள்ள முதல்வனை யறிவதெப்போது. (158)

என்னைவிட்டுநீங்காம லென்னிடத்துநீயிருக்க
உன்னைவிட்டுநீங்கா தொருப்படுவதெக்காலம்.

(க-ரை.) நீர் என்னிடமிருப்பதுபோல நானுன்னிடமிருப்ப தெப்போது. (159)

இன்னதென்றுசொல்லவொண்ணுவெல்லையற்றவான்பொருளைச்
சொன்னதென்றுநானறிந்து சொல்வதினியெக்காலம்.

(க-ரை.) வாக்காற் சொல்லற்கரிய பொருளை ஆசாரியர் சொன்னுறென வறிவதெப்போது. (160)

மனதையொருவில்லாக்கி வான்பொறியைநாணுக்கி
எனதறிவையம்பாக்கி யெய்வதினியெக்காலம்.

(க-ரை.) மனதை வில்லாகவும், இந்திரியத்தை நாணுகவும் அறிவை யம்பாகவும் செய்து ஆணவத்தின்மேற் பிரயோகிப்பதெப்போது. (161)

என்னையிறக்கவெய்தே யென்பதியையீடழித்த
உன்னைவெளியில்வைத்தே யொளித்துநிற்பதெக்காலம்.

(க-ரை.) அகங்கார மமகாரங்களை யழித்து நான் சிதாகாயத்தில் மறைந்திருப்பதெப்போது. (162))

கடத்துகின்றதோணிதனைக் கழைகள்குத்திவிட்டாற்போல்
நடத்துகின்றசித்திரத்தை நானறிவதெக்காலம்.

(க-ரை.) கப்பலை அதிலுள்ள மூங்கில் துளைத்துவிட்டதுபோல உடலை வினைத்துளைத்து விடுமெனவறிவதெப்போது. (163)

நின்றநிலைபேராம நினைவிலொன்றுசாராமல்
சென்றநிலைமுத்தியென்று சேர்ந்தறிவதெக்காலம்.

(க-ரை.) தியானத்திலிருந்து பிரபஞ்சத்தினை மறந்து சித்தாந்த வழி முத்தியெனச் சேர்ந்தறிவதெப்போது. (164)

பொன்னும்வெள்ளியும்பூண்ட பொற்பதத்தையுள்ளமைத்து
மின்னுமொளிவெளியே விட்டடைப்பதெக்காலம்

(க-ரை.) வேதச்சிலம்புகளைத் தரித்த திருவடித் தியானத்தால் உண்டாகும் சோதியில் கலப்பதெப்போது. (165)

கூட்டிலடைப்பட்டபுழு குளவியுருக்கொண்டதுபோல்
வீட்டிலடைப்பட்டருளை வேண்டுவதுமெக்காலம்.

(க-ரை.) கூட்டில் புழுவானது குளவியானதுபோல உடலிலடைப்பட்ட உயிர் அருண்மயமாவதெப்போது. (166)

கடலிலொளித்திருந்த கனலெழுந்துவந்தாற்போல்
உடலிலொளித்தசிவ மொளிசெய்வதெக்காலம்.

(க-ரை.) சமுத்திரத்தினின்று வடவாமுகம் வெளிவந்தவாறு உடலிலிருந்து சிவம் வெளிப்படுவதெப்போது. (167)

அருணப்பிரகாச மண்டமெங்கும்போர்த்ததுபோல்
கருணைத்திருவடியிற் கலந்துநிற்பதெக்காலம்.

(க-ரை.) சூரியவியாபகம்போன்ற அருள் வியாபகத்திற் கலப்பதெப்போது. (168)

பொன்னிற்பலவிதமாய் பூஷணமுண்டானதுபோல்
உன்னிற்பிறந்ததுன்னி லொடுங்குவதுமெக்காலம்.

(க-ரை.) பொன்பூஷணமாகக் காரிய காரணமாவதுபோல மாயையில் காரணகாரியமாகும் உண்மை தெரிவதெப்போது. (169)

நாயிற்கடைப்பிறப்பாம் நான்பிறந்ததுன்பமற
வேயிற்கனலொளிபோல் விளங்குவதுமெக்காலம்.

(க-ரை.) நாயினுங் கடைப்பட்ட யான் அருட்பிரகாசத்தில் விளங்குவதெப்போது. (170)

சூரியகாந்திவெளி சூழ்ந்துபஞ்சைசுட்டதுபோல்
ஆரியன்றேற்றத் தருள்பெறுவதெக்காலம்.

(க-ரை.) சூரியகாந்தியால் பஞ்சுநாசமாவது போல ஆசாரியனருளால் மலநாசமாகி யருளடைவதெப்போது. (171)

இரும்பிற்கனன்மூட்டி யவ்வுருபோயவ்வுருவாய்க்
கரும்பிற்சுவைரசத்தைக் கண்டறிவதெக்காலம்.

(க-ரை.) அக்கினியுருவமான இரும்புபோல அருளுருவமாகிச் சிவானந்தத்தேன் உண்பதெப்போது. (172)

கருக்கொண்டமுட்டைதனைக் கடலாமைதானினைக்க
உருக்கொண்டவாறதுபோ லுனையடைவதெக்காலம்.

(க-ரை.) ஆமை முட்டையிட்டு மறுபடியுமதனை நினைத்துப்பொறிப்பது போல குரு எனை நினைத்து ஆளாக்குவ தெப்போது. (173)

வீடுவிட்டுப்பாய்ந்து வெளியில்வருவார்போல்
கூடுவிட்டுப்பாயுங் குறிப்பறிவதெக்காலம்.

(க-ரை.) உலக வீடுவிட்டு வெளிவருவது போல உடல் வீடுவிட்டுவெளிவந்த நாளில் திருவருட்குறிப்பை யறிவதெப்போது. (174)

கடைந்தவெண்ணெய்மோரிற் கலவாதவாறதுபோல்
உடைந்துதமியே னுனைக்காண்பதெக்காலம்.

(க-ரை.) வெண்ணெய் மறுபடியும் மோரில் கலவாததுபோல மலம் மறுபடியும் எனைக் கலவாதிருப்ப தெப்போது. (175)

இருளைவெளிவிழுங்கி யேகவுருக்கொண்டாற்போல்
அருளைவிழுங்குமிரு ளகன்றுநிற்பதெக்காலம்.

(க-ரை.) இருளை யொளிகெடுப்பதுபோல அருள் ஆணவ மலத்தினைக் கெடுப்ப தெப்போது. (176)

மின்னெழுந்துமின்னொடுங்கி விண்ணிலுறைந்தாற்போல்
என்னுணின்றதென்னுள்ளே யானறிவதெக்காலம்.

(க-ரை.) ஆகாயத்தில் மின்ன லுண்டாகி ஆகாயத்தி லொடுங்குவது போல அருள் என்னிடம் வெளிப்பட்டு என்னிடமொடுங்குவ தெப்போது.

கண்டபுனற்குடத்திற் கதிரொளிகள்பாய்ந்தாற்போல்
கொண்டசொரூபமதைக் கூர்ந்தறிவதெக்காலம்.

(க-ரை.) பாண்டந்தோறும் சூரியன் பிரகாசிப்பதுபோல் பிரபஞ்சந் தோறும் மாயை நிறைவதினை யறிவதெப்போது. (178)

பூணுகின்றபொன்னணிந்தாற் பொன்சுமக்குமோவுடலைக்
காணுகின்றவெண்கருத்திற் கண்டறிவதெக்காலம்.

(க-ரை.) பூண்டபொன்னுபரணத்தை உடல் சுமக்குமாறு அருளினை நான் சுமப்ப தெப்போது. (179)

செம்பிற்களிம்புபோற் சிவத்தைவிழுங்குமிக
வெம்பிநின்றமும்மலத்தை வேறுசெய்வதெக்காலம்.

(க-ரை.) செம்பினைக் களிம்பு மறைப்பதுபோல, சிவத்தினை மறைக்கு மலத்தினைப் பிரிப்பதெப்போது. (180)

ஆவியுங்காயமும்போ லாத்துமத்துநின்றதனைப்
பாவியறிந்துமனம் பற்றிநிற்பதெக்காலம்.

(க-ரை.) உயிரும் உடலும் அபேதமாகக் கலந்திருத்தல்போல அருளும் நானுங் கலந்திருத்தலை யறிவதெப்போது. (181)

ஊமைக்கனக்கண் டுரைக்கறியாவின்பமதை
நாமறிந்துகொள்வதற்கு நாள்வருவதெக்காலம்.

(க-ரை.) ஊமைகனவுகண்டு தானே சந்தோஷிப்பதுபோல் நான் திருவருளடைந்து சந்தோஷிப்ப தெப்போது. (182)

சாகாச்சிவனடியைத் தப்பாதாரெப்போதும்
போகாவுடலகன்று போவதெப்பதெக்காலம்.

(க-ரை.) நித்தியனாகிய சிவபெருமான் றிருவடியைத்தியானித்து தேகம் மண்ணில் வீழாது மோட்சமடைவதெப்போது. (183)

நிட்டைதனைவிட்டு நினைவறிவுதப்பவிட்டு
வெட்டவெளியில் விரவிநிற்பதெக்காலம்.

(க-ரை.) உபாசனைப்பலனடைந்து நிஷ்டைவிட்டு முன்னிலைச்சுட்டுமற்றுச் சிதாகாயத்தில் கலப்பதெப்போது. (184)

வெட்டவெளிதன்னில் விளைந்தவெம்பாசத்தை
திட்டமுடன்கண்டு தெளிவதினியெக்காலம்.

(க-ரை.) சிதாகாயத்தி லிருந்து ஆணவமலவுண்மையறிந்து நீங்குவதெப்போது. (185)

எங்கும்பரவடிவா யென்வடிவுநின்வடிவாய்க்
கங்குல்பகலின்றியுனைக் கண்டிருப்பதெக்காலம்.

(க-ரை.) சிவமயமாய், சிவசொரூபம் சிவசொரூபமாய்ச் சகலகேவல மற்றிருப்ப தெப்போது. (186)

உண்டதுவுமாதருடன் கூடிச்சேர்ந்தின்பங்
கண்டதுவுநீயெனவே கண்டுகொள்வதெக்காலம்.

(க-ரை.) பிரபஞ்சபோகத்தை நீரே கூட்டிவைப்பீரென்னு முண்மை யறிவ தெப்போது. (187)

ஈமென்றுகேட்டதுவு மென்னுள்ளேநின்றதுவும்
ஓமென்றுசொன்னதுவு முற்றறிவதெக்காலம்.

(க-ரை.) நிஷ்டையில் ஈம் சப்தமுண்டாவதுபோல என்னுள்ளே ஓம் சப்தமுண்டாவ தெப்போது. (188)

சத்தம்பிறந்தவிடந் தன்மயமாய்நின்றவிடஞ்
சித்தம்பிறந்தவிடந் தேர்ந்தறிவதெக்காலம்.

(க-ரை.) நாதோற்பத்தியும், திருவருள் மயமும், மனோற்பத்தியு மறிவ தெப்போது. (189)

போக்குவரவும் புறம்புள்ளுமாகிநின்றும்
தாக்குமொருபொருளைச் சந்திப்பதெக்காலம்.

(க-ரை.) சகலத்திலுள்ள போக்குவரவினையும், நிஷ்களத்தில் வியாபகத்தினையுமறிவ தெப்போது. (190)

தன்னுயிரைக்கொண்டு தான்றிரிந்தவாறதுபோல்
உன்னுயிரைக்கொண்டிங் கொடுங்குவதுமெக்காலம்.

(க-ரை.) என்னுயிரைக்கொண்டு சுதந்தரனாகத் திரிந்ததுபோல நினது திருவருளை யாதரவாகக்கொண்டு ஜீவன்முத்தனாய் வாழ்வதெப்போது. (209)

சேற்றிற்கிளைநாட்டுந் திடமாமுடலையினிக்
காற்றினுழல்சூத்திரமாய்க் காண்பதினியெக்காலம்.

(க-ரை.) சேற்றினட்ட கம்பம்போல பிராணவாயுவில் நிலைத்த தேக வுண்மை யறிவதெப்போது. (210)

என்வசமுங்கெட்டிங் கிருந்தவசமுமழிந்து
தன்வசமுங்கெட்டருளைச் சார்ந்திருப்பதெக்காலம்.

(க-ரை.) உடல், உலகு, ஆன்மா இவைகளின் சுதந்தர நீங்கித் திருவருள் சுதந்து மடைவதெப்போது. (211)

தன்னைமறந்து தலத்துநிலைமறந்து
கன்மமறந்து கதிபெறுவதெக்காலம்.

(க-ரை.) உடல், உலகம், கன்மம் இவைகளினால் நேரும் செயல்களை மறந்து மோட்சமடைவதெப்போது. (212)

என்னையெண்ணிலேமறைந்தே யிருந்தபதியுமறந்து
தன்னையுந்தானேமறந்து தனித்திருப்பதெக்காலம்.

(க-ரை.) உடல், பூமி, ஆன்மா இவற்றை மறந்து தனித்திருப்பதெப் போது. (213)

தன்னையுந்தானேமறந்து தலைவாசற்றூழ்போட்டே
உன்னைநினைந்துள்ளே யுறங்குவதுமெக்காலம்.

(க-ரை.) ஆன்மாவைக்கொண்டு ஆன்மாவை மறந்து மணவாயலை யடைத்து சிவயோக நித்திரைசெய்வ தெப்போது. (214)

இணைபிரிந்தபோதலறி யின்பமுறுமன்றிலைப்போல்
துணைபிரிந்தபோதருளால் தொடர்ந்துகொள்வதெக்காலம்.

(க-ரை.) பிரிந்த பட்சியினைக்கூச்சலிட்டு அடைவதுபோல ஆசிரியனைப் பிரிந்தபோது சாஸ்திரவிசாரம்பண்ணி யடைவதெப்போது. (115)

ஆட்டமொன்றமில்லாம லசைவுசற்றுங்காணமல்
தேட்டமற்றவான்பொருளைத் தேடுவதுமெக்காலம்

(க-ரை.) சிறிதுஞ் சலனமில்லாத திருவருளினைத் தேடுவதெப்போது.

முன்னைவினையாலறிவு முற்றுமற்பின்மறைந்தால்
அன்னைதனைத்தேடி யமுதுண்பதெக்காலம்.

(க-ரை) வினைவழிமறைவு நேரிடினும் அருட்சத்திமூலமாக ஞானமிர்த முடைவதெப்போது. (217)

கள்ளுண்டவர்போற் களிதருமானந்தமதாற்
றள்ளுண்டுநின்றாடித் தடைபடுவதெக்காலம்.

(க-ரை.) கள்ளினையுண்டு மயங்குவார்போன்று அருள்மலத்தால் பிரபஞ்சந் தோன்றாதபடி மயங்குவதெப்போது. (218)

தானென்றவாணவமுந் தத்துவமுங்கெட்டொழிந்தே
ஏனென்றபேச்சுமிலா திலங்குவதுமெக்காலம்.

(க-ரை.) ஆணவாதிகள் தலையெடாதபடி மவுனமுறுவதெப்போது.

நானவனுய்க்காண்பதெல்லா ஞானவிழியாலறிந்து
தானவனாய்நின்று சரணடைவதெக்காலம்.

(க-ரை.) முதல்வன் பிரேரகத்தால் நானறிவதெல்லாம் சிவோகம்பாவனையில் முதல்வனாகவிருந்து காண்பதெப்போது. (220)

தானந்தமில்லாத தற்பரத்தினூடுருவி
ஆனந்தங்கண்டே யமர்ந்திருப்பதெக்காலம்.

(க-ரை.) திருவருளில் முழுகிச் சிவானந்தமுண் டிருப்பதெப்போது. ()

உற்றவெளிதனிலே உற்றுப்பார்த்தந்தரத்தே
மற்றமறமாய்கை மாள்வதினியெக்காலம்.

(க-ரை.) சிதாகாயத்தை நோக்கி யதிலேயிருந்து மாய்கையொழிவ தெப்போது. (222)

ஏடலர்ந்தபங்கயமு மிருகருணைநேத்திரமுந்
தோடணிந்தகுண்டலமுந் தோன்றுவதுமெக்காலம்

(க-ரை.) திருவுருவுடன் உமது காட்சியை கொடுப்பதெப்போது.

ஐயாறுமாறு மகன்றுவெறுவெளியில்
மையிருளில்நின்றமன மாள்வதினியெக்காலம்.

(க-ரை.) தத்துவங்கள் கடந்த சிதாகாயத்தில் ஆணவநீங்கி மனமொடுங்குவதெப்போது. (224)

காட்டுமருண்ஞானக் கடலிலன்புகப்பல்விட்டு
மூட்டுங்கருணைக்கடலின் மூழ்குவதுமெக்காலம்.

(க-ரை.) ஆசாரியரால் ஞானசமுத்திரத்தில் அன்பான கப்பலை நடத்தி கருணைசமுத்திரத்தில் மூழ்குவதெப்போது. (225)

நானாரோநீயாரோ நன்றாம்பரமான
தானாரோவென்றுணர்ந்து தவமுடிப்பதெக்காலம்.

(க-ரை.) என்னையும் உன்னையும் இடையிலுள்ள திருவருளையும்தெரிந்து தவத்தினை முடிப்ப தெப்போது. (226)

எவரெவர்களெப்படிகண் டெந்தப்படிநினைத்தார்
அவரவர்க்கப்படிநின் றருளென்பதெக்காலம்.

(க-ரை.) எவர்கள் எவ்விதம் கருதுவரோ அவ்விதம் அனுக்கிரகம் செய்யுமுண்மையறிவதெப்போது. (227)

உற்றுற்றுப்பார்க்க வொளிதருமானந்தமதை
நெற்றிக்குநேர்கண்டு நிலைப்பதினியெக்காலம்.

(க-ரை.) புருவமத்தியமாகிய கோதண்ட தானத்தில் அருட்பெருஞ் சோதியைத் தரிசிப்பதெப்போது. (228)

விளங்குகின்றதாரகையை வெய்யோன்மறைத்தாற்போல்
களங்கமறவுன்காட்சி கண்டறிவதெக்காலம்.

(க-ரை.) நட்சத்திரங்களை சூரியன் மறைத்தாற்போல எனது மலத்தினை ஞானசூரியன் மறைப்பதெப்போது. (229)

என்னையேநானறியே னிந்தவண்ணஞ்சொன்னதெல்லா
முன்னையோர்கைக்கொள்ள முன்பணிவதெக்காலம்.

(க-ரை.) ஆன்மாவினுண்மையைச் சிலஞானிகள் மூலமாகத் தெரிந்து உன்னைப்பணிவது எப்போது. (230)

ஐஞ்சுகரத்தானையடியிணையைப்போற்றிசெய்து
நெஞ்சிற்பொருந்தி நிலைபெறுவதெக்காலம்.

(க-ரை.) விநாயமூர்த்தியினுடைய இரண்டு திருவடியைத் தரிசித்து மனத்தில் வைப்பதெப்போது. (231)

பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பல்

முற்றுப்பெற்றது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பதினோராந் திருமுறையுள் ஓர் பகுதியாகிய

பட்டினத்துப் பிள்ளையார் பிரபந்த.

செய்யுள் முதற்குறிப் பகராதி.

செய்யுள்	பக்கம்.
அ	
அஞ்சரத்தான்	306
அடிசார்ந்த	272
அடிநின்ற	299
அடியாயிரங்	253
அடியொன்று	17
அடிவலப்பா	321
அம்பரங்கால	315
அம்பலவரங்க	108
அரிதன்றிருக்	306
அருளின்கட	141
அருளுவாழி	112
அருளைத்தரு	304
அருள்டழுத்தளி	150
அல்லல்வாழ்	56
அழகறிவிற	316
அளவின்லிற	400
அறிவிலொழு	46
அன்றினர்	255
அன்றுமபகை	313
அன்றென்று	260
ஆ	
ஆகுவாகனை	186
ஆசரித்த	16
ஆரணநான்கிற	142
ஆலையங்கார்	336
ஆளெனட்பு	74
ஆனேறே	125
இ	
இடத்துறை	362
இடவஞ்சுறு	324
இடைகருமின்	325
இயங்குந்திரி	310
இருக்குமருதி	278
இருநிலமடங்	359
இருளந்தகன்	203
இலவவெங்கா	340
இலவிதழ்	26
இழையாரரவ	348
இறைத்தார்	330
இனியவரி	323
இன்றிருந்து-யிற	252
இன்றுசெய	356
இன்னெறனவுள	176
ஈ	
ஈரவேரித்தார்	121
உ	
உடைப்புலி	320
உடைமணியி	248
உத்தங்கயா	315
உயிராயின	351
உருவாமுலகு	363
உரையின்	11
உலவியமின்	349
உலவுசலதி	70
உவரச்சொல்	342
உழப்பின்வா	243
உளவார்குளிர	345
உள்ளயபெரிய	312
உறுகின்ற	357
எ	
எடையயு	303
எழுமலர்	353
எனவேயெழு	165
என்னுமினி	93
ஏ	
ஏசம்டனே	196
ஒ	
ஒழிந்தசெங்க	54
ஒளிவந்தவா	149
ஒறறியூர	407
ஒன்றினெ	230
ஓ	
ஓங்கின	347
ஓராதேயஞ்	253
க	
கச்சார்முலை	346
கடலான	157
கண்டேன்	184

செய்யுள்.	பக்கம்.
கண்ணின்	202
கணமென்று	234
கதியாவது	235
கரத்ததம	322
கரத்தினன்	294
கருமதந	144
களிவந்த	9
கறைறப்பவ	318
கா	
காட்டிவை	357
காணீர்கதி	249
காதலைக்கு	319
காதளவோடி	418
கார்மிக்க	343
கார்முக	350
கார்விடை	352
காலநசிறிய	410
காழிக்குவே	192
கி	
கிடக்குமொரு	3 7
கிழவருமாய்	39
கிறியலபேசி	32
கு	
குடைகொண்	7
கும்பிட்ட	185
கூ	
கூறுஞ்செனன	194
கூறுமின்	331
கொ	
கொண்டலி	281
கொண்டல்	126
கொள்ளுங்	335
ச	
சங்கிடத்	52
சடைமே	277
சதுர்முகன்	130
சந்தபுனை	31
சா.	
சார்ந்தவர்	168
சி	
சிறைவண்டு	344
சு	
சுடர்விடு	279
செ	
செய்யதிரு	50
செருக்குட	196
சென்றேறி	334
சே	
சேய்தந்த	307
த	
தம்பொற்	320
தரித்தேன்	297
தருக்கவ	321
தருமருட்ட	318
தளராமிகு	348
தனமிட்டு	301
தன்மையிற்	301
தி	
திரியட்புர	308
திருமால	426
திருவளர்	136
து	
துணைத்தாம	316
துணையொதத	341
தூ	
தூமதிசடை	368
தெ	
தெய்வத்தா	222
தெளிதரு	298
தே	
தேமேற்றி	325
தொ	
தொடரநரை	128
தொழுவா	159
ந	
நஞ்சுமிழ்	23
நடமாடியே	19
நடனயபிரா	322
நணணிப்பரவு	333
நயமைப்பிற	310
நலந்தரநா	300
நல்கும்புகழ்	327
நன்னுதலார்	345
நா	
நாமத்தினு	41
நாமநவிற்	269
நாமேயிடை	254
நாயனைய	87
நானேபிறந்து	29
நி	
நிலத்திடை	404
நிலத்திமை	313
நிலாவுபுகழ்	335
நினைமின்	415
நினையார்	105
நினைவார்	332
நீ	
நீரென்னி	349
நெ	
நெஞ்சார்	340
நெறிதரு	43
நே	
நேர்த்தவம	343

செய்யுள்.	பக்கம்
நோ	
நோக்கிற்று	261
ப	
படையாளுயி	314
பணமஞ்ச	219
பரப்பார்	346
பரவித்தனை	323
பரிப்பரு	338
பருப்பதங்	329
பருமுதது	305
பா	
பாங்குடை	325
பாதயபாவி	357
பாற்கடல	422
பி	
பிறிந்தே	241
பு	
புண்ணிய	320
புனங்குழை	312
பூ	
பூங்கொத்	302
பூமேலய	5
பெ	
பெயராதல்	309
பெருமானே	209
பெறுகின்ற	107
பெறுவது	204
பெற்றுகந்தே	298
பெற்றோர்	66

செய்யுள்.	பக்கம்.
பே	
பேசுகையாவ	308
பேசுவாழி	9
பேதைவெங்	68
பொ	
பொய்வரு	356
பொருளாசை	173
பொருளுங்	228
பொருளுணர்	365
போ	
போதுபெறு	167
போற்றும	175
ம	
மணியாரு	323
மணிவாய்	90
மயக்கத்த	354
மயக்கமில்	366
மலர்ந்தபட	319
மலையத்தக	328
மா	
மானுமழுவு	143
மாலைக்கலந்த	220
மி	
மின்களென்	300
மின்னலிக்கு	342
மு	
முகமடாகம்	354

செய்யுள்	பக்கம்.
மெ	
மெய்த்தொண்	295
மே	
மேயிரை	355
மேவியபுன்	219
வ	
வகுப்பா	311
வசையில்கா	160
வணக்கந்	299
வணங்குமி	119
வந்திக்கண்	242
வந்தமமணம்	307
வரங்கொண்	350
வருத்தந்	303
வருந்தேனிற	229
வரையொன்	33
வழிபிழை	293
வளையார்	270
வனவரித்	339
வா	
வாழப்பெரி	337
வாழ்ந்தன	235
வாழ்வாக	118
வானோர்பணி	117
வி	
விடைபாய்	353
விடையம்	210
விளயபுவன்	212
வை	
வையார்மழு	304

பட்டினத்துப் பிள்ளையார் பிரபந்த
செய்யுள் முதற்குறிப்பு அகராதி
முற்றிற்று

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்துப் பிள்ளையார்

திருப்பாடற்றிரட்டு முதற்குறிப் பகராதி.

செய்யுள்.	பக்கம்.
அ	
அகங்காக்கும்	151
அக்கறுகு	164
அக்கினிகற	149
அங்கஙகு	155
அசசமாங	120
அஞ்சக்கரமெ	96
அஞ்சருளைப்	161
அஞ்சுமுரு	167
அஞ்செழுத்	164
அடிமையென்	130
அடியாருறவு	100
அடியார்க்கெ	50
அட்டாங்க	85
அணுவுக்கு	146
அண்டபிண்ட	174
அணணறன்	86
அத்தமுடவாழ்	77
அச்சனைநுப்ப	57
அக்கிமுக	112
அநித்தியத்	127
அப்பிறப்புக்	149
அப்பென்று	22
அரிசியோ	107
அரிபிரமர்	134
அரியவரிக்க	148
அருளபழுத்தமா	132
அலையாதபே	135
அல்லாய்ப்பக்	183
அழலுக்குள்	42
அழுதாற்பய	91
அளவிறக்க	152
அள்ளியிடு	108
அறந்தானி	1

செய்யுள்.	பக்கம்.
அறியாமை	124
அறபுதமா	161
அன்றுமுக-மறி	144
அன்றுமுக-மாக்	145
அன்னமபகிர்	153
அன்னவிகார	135
அன்னவிசார	11
அன்னையெத்	39
அன்னைவயிற்	128
ஆ	
ஆங்காரப்	101
ஆங்காரமச்	186
ஆசாரமில்லா	156
ஆணெனிப்பெண	176
ஆணிபொருந்	156
ஆண்டகுரு	165
ஆணபெண்	186
ஆசாரமோ	136
ஆதியாயநின்	186
ஆதியென்பா	181
ஆத்தாளுக்	147
ஆத்துமதத்து	138
ஆயாய்பல	100
ஆயும்புகழ்	43
ஆயும்பொழு	97
ஆருமுறுப்	187
ஆருரரிங	111
ஆர்ந்தவிட	148
ஆலமருந்து	156
ஆலாவிருட்	152
ஆவியொடு	117
ஆறுணடு	79
ஆற்றிற்கரை	23

செய்யுள்.	பாடம.
ஆற்றேறு	56
ஆனவடியார்	135
ஆனையுரிபோ	132
இ	
இடைபிங்கலை	170
இடையாகி	176
இடையில்	132
இத்தனை	154
இந்தமண	148
இந்தவுடலு	171
இந்நிலைமை	140
இப்பிறப்பைந்	117
இப்பிறட்பைப்	188
இப்போபுதி	147
இரதம்பிரி	190
இருக்குமிடந்	116
இருப்பது	120
இரும்பினுறை	143
இரைக்கே	66
இல்லந்துறந்	63
இன்றிருந்து-க்கி	154
இன்னமபிறக்	119
ஈ	
ஈராறுதலை	172
உ	
உச்சிவெ	170
உடக்கை	164
உடலுக்குள்	172
உடனுகவே	187
உடுக்கக்கவி	79

செய்யுள்.	பக்கம்.
உடுப்பாறு	52
உடைகோவ	71
உட்சோட்	139
உண்மைப்	182
உந்திக்கம	169
உயர்தருஞான	192
உருத்திரனார்	129
உருத்திரனை	169
உருப்பேத	180
உரைக்கைக்	83
உலகவிகார	135
உளக்கண	150
உளியிட்ட	104
உள்ளார்க்கு	149
உள்ளுணர்	145
உள்ளும்புற-மா	176
உள்ளும்புற-மு	189
உற்றாரமு	172
உற்றாரார்	161
உன்னிலழை	130
உன்னைத்து	131
ஊ	
ஊட்டுவிப்பா	50
ஊரிறந்து	186
ஊரீருமக்கோ	92
ஊருஞ்சத	15
ஊறையிறை	167
ஊற்றைச	27
ஊனமுடனே	161
ஊனவுடல்	128
ஊனையுடலு	177
ஊனுக்குணி	170
ஊன்பொதிந்த	163
எ	
எக்காலம்	154
எச்சிலென்	120
எட்டுத்திசை	87
எண்ணிறந்த	157
எண்பத்து	173
எத்தனைதாய்	172
எத்தனைநா	119
எத்தனைபேரோ	187
எத்தனைபேர்	120
எத்தனையூ	112
எத்தனையோ	145
எத்தேசகா	172
எத்தேசமு	189
எத்தொழி	121
எந்தெந்த	189
எந்நாளு	146
எரியெனக்	85
எருமுட்டை	93
எருவாய்க்கி	112
எல்லாமறி	35
எல்லாரு மின்	138
எல்லாரு-மென்	137
எழுவகைத்	174
எள்ளுக்கு	182
எனக்குள்	174
என்செயலா	82
என்பெற்ற	86
என்னகுற்ற	141
என்னசொல்	148
என்னதான்	180
என்னவினை	141
என்னென்று	135
என்னைத்திரு	175
என்னையறி	173
என்னையே	140
என்னோடிட	137
ஏ	
ஏட்டுக்கடங்	151
ஏணிப்பழுவா	165
ஏதப்பட்டா	89
ஏதிலடியா	184
ஐ	
ஐங்கரனை	136
ஐந்துபுலனு	126
ஐந்துபொறி	175
ஐயமறுத்த	146
ஐயிரண்டு	106
ஐயுந்தொடர்	59
ஐவகையும	177
ஒ	
ஒக்கமடிந்த	139
ஒடுவிழுந்து	110
ஒப்பாரி	155
ஒப்புமுவமை	135
ஒப்புவமை	135
ஒருமடமாது	190
ஒழியாப்பி	101
ஒளியாய்	175
ஒன்பதுவா	118
ஒன்றாயயி	179
ஒன்றென்றிரு	81
ஓ	
ஓங்காரங்	139
ஓங்காரப்	131
ஓங்காரமாய	93
ஓங்குபர	130
ஓசையொடு	153
ஓடாமற்	43
ஓடுமெடுத்த	49
ஓட்டைத்து	163
ஓதவரிதோ	142
ஓயாமற்பொ	21
க	
கங்குகரை	149
கங்குல்பக	141
கங்கையொடு	133
கச்சிற்கிடக்	102
கடங்கடங்க	138
கடல்நீரு	149
கடுஞ்சொல்	38
கடைகக	131
கட்டவுலக	131

செய்யுள்.	பக்கம்.
கட்டியணை	2
கட்டுவர்க்க	125
கண்டங்கரி	1[illegible]0
கண்டங்கறு	132
கண்டபுலவர்	157
கண்டார்க்கு	142
கண்ணுக்கு	126
கண்ணுண்டு	73
கண்மாய	148
கந்தனையீன்ற	127
கருவாயுரு	173
கருவிகடொ	172
கலலாப்பிழை	12
கல்லார்	2[illegible]
கல்லுளிரு	150
கல்வியல்ல	144
களவிறந்து	185
கறையற்ற	87
கற்கட்டு	159
கற்புக்குலை	140
கற்றவனை	183
கற்றறிவோ	180
கன்னியழிச்	147
கன்னெஞ்சி	153
கா	
காடேதிரி	60
காடோசெடி	62
காட்சிக்கெளி	146
காணிப்பொன்	152
காதல்தணி	131
காதென்று	14
காமக்குரோ	12[illegible]
காமன்கணை	129
காம்பிணங்கு	41
காலங்கழிந்த	154
காலன்வரு	114
காலையுபாதி	43
காற்றுத்துரு	162
கான்சாயும	67
கீ	
கீரியாய்க்	12[illegible]
கு	
குருமார்க்க	156
குருமறை	127
குருவாகி	133
குருவாய்	175
குலமொன்று	174
கெ	
கெட்டநாள்	134
கே	
கேடுவரு	133
கை	
கைப்பிடி	3
கையாரவே	69
கையொன்று	73
கொ	
கொக்கிறகு	133
கொட்டாத	152
கொண்டார்	142
கொல்லாமற்	46
கொலலாய்பி	179
கொள்ளை	136
கொன்றுமை	141
கொன்றே	39
கோ	
கோத்து	165
ச	
சகஸ்திர	174
சடக்கடத்து	33
சட்சமய	180
சத்திசிவ	173
சந்தனமூங்	162
சந்திரனை	182
சரக்கொன்	133
சரியைகிரி	17[illegible]
சறறுகி	103
சா	
சாதிபேதங்	174
சாதியிற்-சமய	1[illegible]
சாதியிற்-சாத்	1[illegible]
சாந்தமென்று	1[illegible]
சி	
சித்தவிகார	[illegible]
சிப்பியில்	1[illegible]0
சிலந்தியுடை	17[illegible]
சிற்றம்பல	1[illegible]
சிற்றெறும்பு	157
சினந்தனை	6[illegible]
சின்மயகன்	153
சின்னஞ்சிறு	163
சீ	
சீதப்பனிக்	78
சீயுங்குருதி	78
சீறும்வினை	17
சு	
சுடப்படுவர்	59
சுட்டிறந்த	143
சுந்தரநீற்றி	134
சும்மாவிரு	143
சுரப்பற்று	89
சூ	
சூதற்ற	75
செ	
செங்குமிழி	133
செத்தாரை	144
செந்தாமரை	182
செம்பொற்	173
செல்லரைப்	6

செய்யுள்.	பக்கம்.
சல்வரைப்	91
சொ	
சொக்கிட்ட	34
சொல்லாலே	148
சொல்லால்	28
ல்லிலுஞ்	74
லலுக்	143
சாதயான்	190
சோ	
ரறிடுநாடு	42
த	
தண்டிகை	171
தத்துவத்தை	179
தந்திரத்தை	168
ரயாகங்கு	139
வியாதிரு	55
தவிர்ப்பை	130
தனிமுசலை	171
தனுவாதி	124
தன்னுடம்பு	157
தன்னையறிந்	140
தா	
தாயாகித்தந்	176
தாயாகித்தா	128
தாயாருஞ்	97
தாயும்பகை	61
தாழாதே	189
தானென்னை	153
தி	
தித்திக்க	145
தித்திக்குந்	164
திருவேட	83
தீ	
வகமபோ	149
தூ	
தூக்கியகா	134
தூருந்தலை	145
தெ	
தெத்தபட	155
தெய்வச்சித	51
தே	
தேசமிரந்த	151
தொ	
தொண்ணூற்ற	139
தோ	
தோடவிழும்	115
தோலெலும்பு	151
ந	
நகாரமகார	181
நகையாரோ	140
நச்சரவம்	116
நரகக்குழி	127
நரகஞ்சுவர்க்	183
நரயபுதசை	175
நலலாயென	82
நல்லாரிண	6
நற்பருவ	134
நன்னூரிற்	5
நா	
நாடிக்கொ	72
நாட்டமென்	82
நாதவிந்து	170
நாப்பிளக்க	122
நாமநட்ட	152
நாமஞ்சரித்	130
நாயாயப்	23
நாய்க்குண்டு	14
நாய்க்கொரு	102
நாலின்மனை	55
நாலுவகை	183
நாவார வ	25
நாவிக்கமல	169
நாறுங்குறுதி	66
நாறுமுடலை	33
நானெதத்தனை	95
நானேநீ	134
நான்முகன்	129
நி	
நிரந்தரமா	178
நிலைவிட்டு	166
நில்லாமை	129
நின்றநிலை	131
நீ	
நீக்காப்பு	137
நீசொரீதண்	187
நீரொளி	150
நீர்க்குமிழியா	126
நீர்க்குமிழிவா	162
நீர்மேற்குமிழி	182
நீறூர்த்த	69
நீரறைப்	92
நூ	
நூலாலுணர்	150
நெ	
நெஞ்சமுருகி	182
நெடியகத்	187
நெருப்பான	58
நெற்றிவிழி	163
நே	
நேமங்கணிட்	95
நேற்றென்று	179
நொ	
நொந்தசுமந்	107

செய்யுள்.	பக்கம்.
நொ	
நோயுமான	128
ப	
பஞ்சப்பிரள	[illegible]
படைத்து	18[illegible]
பட்டவிள	1[illegible]8
பட்டைக்கி	75
பணடாய	142
பத்தியறி	144
பத்துத்திசை	145
பத்தும்	63
பததெட்டா	166
பரமென்பா	181
பருத்திப்	19
பளிங்கிற	151
பற்றற்றார்	147
பா	
பாசமுடலா	184
பாசமெரி	129
பாசவினை	153
பாடிப்படி	143
பாராமலே	44
பாராமற்	1[illegible]5
பார்க்கிலெ	154
பார்த்தவிடமெங்	146
பார்த்தவிடமெல	1[illegible]0
பாலின்கண்	155
பாவபுண்ணிய	183
பி	
பிணவாச	1[illegible]
[illegible]	173
பிறக்கும	9
பிறந்துமண	30
பிறப்பைச்	129
பிறவாதிரு	53
பு	
புட்பாசன	158

செய்யுள்.	பக்கம்.
புல்லாகிப்	1[illegible]
பூ	
[illegible]	97
பூசைய[illegible]	1[illegible]8
பூதங்களற்று	31
பூமியொடுந்த	128
பூரணமாலே	184
பூவாணர்	166
பூவாய்மண	177
பெ	
பெண்டுபிள்ளை	170
பெணணாகி	24
பெற்றலுத்தாள்	172
பே	
பேசாப்பிரம	151
பேச்சிறந்து	165
பேய்போற	90
பை	
பையரவம்	160
பொ	
பொய்யாய்	177
பொய்யான	147
பொய்யும்	175
பொய்மை	173
பொருளுடை	1[illegible]
[illegible]	8
பொல்லாவிரு	19
பொறிபாய	178
பொற்புவும்	150
பொன்னூற்	64
பொன்னும	149
பொன்னை	37
போ	
போக்குவரத்	157

செய்யுள்.	பக்கம்.
ம	
மகத்துவ	181
மகரங்கிட	133
மகசன்சுற்ற	125
மஞ்சனமா	143
மணகாட்டி	158
மண்ணாசை	125
மணணுந்த	114
மணணுமுருகு	123
மணபெண	171
மண்முதலா	137
மந்திக்குரு	70
மந்திரததி	125
மந்திரமாய்	186
மனக்கரண	137
மனமாய்	178
மனம்புத்தி	179
மனையாளு	77
மா	
மாண்டு	74
மாணிக்கத்	149
மாணிக்கமு	59
மாணடார்	132
மாதருநக்	127
மாதர்பிர	171
மாதாவுடல்	113
மாதக்கொரு	160
மாத்தான	30
மாமாயை	125
மாயநட்போ	13
மாயாப்பிர	183
மாலைப்பொ	121
மாற்றுஞ்சல	126
மாதூர்விழி	103
மு	
முடிக்குமயிர்	166
முடிசார்ந்த	47
முடிவிலொரு	184
முட்டற்ற	29

செய்யுள்.	பக்கம்.
முதலாய்	177
முதற்சங்க	119
முத்தியளி	130
முந்தித்தவங்	106
முப்பத்திரண்	180
முப்பாழுக்	154
முப்பாழும்	158
முப்போது	65
முல்லைசில	133
முற்றொருடர்	159
முன்னநீசெய்	160
முன்னையிட்ட	108
முன்னைவினை	139
மூ	
மூக்குமுனை	170
மூச்சென்பா	181
மூலத்துதித்	169
மூலமறியேன்	124
மூலவித்தாய்	176
மூன்றுவகை	138
மெ	
மெத்தமெத்த	154
மெத்தவிகார	136
மெய்வாழ்	170
மென்றுவிழு	110
மே	
மேலாகி	187
மேலாம்பத	188
மேலுமிருக்க	118
மை	
மைக்குழம்பு	150
மையாடுகண்	99
வ	
வங்கிஷமெ	152
வடிவந்தா	122
வட்டிலிலு	107
வரிக்கோல	14
வருந்தேன்	70
வருவதுபோவ	193
வழக்கந்	156
வளர்பிறை	195
வா	
வாக்கிறந்து-மவு	135
வாக்கிறந்து-மனோ	189
வாக்குமனமும்	142
வாக்குமனமுப்	145
வாக்குமனாதீத	135
வாசற்படி	115
வாசமகோ	145
வாசிதனை	172
வாதனைபோ	189
வாதுக்கு	20
வாதுற்ற	76
வாயாரவா	182
வாய்நாறு	88
வாரிதியாய்	179
வார்த்தை	155
வாலையாய்	177
வாவியெல்	111
வாழ்த்திய	146
வாழ்வான	147
வாளான்மக	65
வானமுதத்	27
வானிற்கதிர்	178
வானென்பா	180
வி	
விசுத்தி	169
விடக்கே	90
விடப்படு	71
விட்டிடமுந்	188
விட்டுவிட	116
விட்டேனுலக	84
விண்ணிறந்து	185
விதியார்	93
வித்தாய்-விளை	137
வித்தாய்-வெளி	179
வித்தாரம்	53
வித்தியாதத்து	138
வித்தை	125
விருந்தாக	35
விருப்பு	187
விலங்கு	176
விலையாகி	168
வினைப்போக	74
வீ	
வீசுகரமும்	134
வீடிருக்க	162
வீடுநமக்கு	72
வீட்டிலொரு	140
வீரகண்டா	132
வீற்றிருந்தா	109
வெ	
வெட்டவெளியா	117
வெட்டவெளியி	147
வெட்டாத	98
வெந்தாளோ	109
வெந்துயரை	135
வே	
வேகுதேதி	109
வேதத்தினுட்	76
வேதப்புரவி	153

பட்டினத்துப் பிள்ளையார்

திருப்பாடற்றிரட்டு,

முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பல்

செய்யுள் முதற்குறிப்பகராதி.

செய்யுள்.	பக்கம்.
அ	
அஞ்ஞானம்	209
அடர்ந்தமனக்	207
அட்டகாசஞ்	206
அட்டாங்க	214
அண்டருக்கா	200
அத்தனிருப்பிட	199
அத்துவிதம்	221
அந்தரத்தினிற்	221
அப்புப்புரநடு	205
அமையாமன	207
அருணபிரகாச	27
அருவாயுருவா	211
அருவிமலைநடு	220
அல்லும்பகலு	215
அவ்வேடம்	200
அறிவிக்கருவி	206
அறிவையறி	220
அற்பசுகமறி	200
அன்பையுரு	204
அன்னம்புனலை	221
ஆ	
ஆகமிகவுருக	204
ஆகவெளிக்கு	208
ஆங்காரமும்	197
ஆசாரநேய	215
ஆசைகொண்ட	221
ஆசைவலைப்	202
ஆடுகின்ற	201
ஆட்டமொன்று	222
ஆணவமாய	209
ஆதாரமூலத்	205
ஆதிகபிலர்	212
ஆதிமுதலாகி	215
ஆமைவரு	199
ஆயுங்கலைக	213
ஆரென்று	210
ஆவியுங்காய	218
ஆறாதபுண்ணி	198
ஆறாதாரங்	209
இ	
இடைபிங்கலை	208
இணைபிரிந்த	222
இம்மைதனிற்	202
இயங்குஞ்சரா	215
இரும்பிற்கனல்	211
இருளையொளி	218
இனமாண்டு	207
இன்றுளோர்	201
இன்னதென்று	210
ஈ	
ஈமென்று	219
உ	
உச்சிக்கிடை	205
உண்டதுவு	219
உதயச்சுடர்	214
உப்பிட்ட	202
உளியிட்ட	199
உள்ளமறியா	213
உற்றவெளி	223
உற்றுற்றுப்	224
ஊ	
ஊமன்கனாக்	218
ஊனாகியூனி	215
ஊனிறைந்த	207
எ	
எங்கும்பரை	219
எண்ணாததூர	209
எண்ணாறுக	200
எவரெவர்க	221
எவ்வனத்தின்	204
எழுத்தெல்லா	210
எள்ளுங்கரு	221
என்மயமாய்	211
என்வசமுங்	222
என்னையறிந்து	209
என்னையறியா	213
என்னையிறக்க	216
என்னையென்	222
என்னையே	224
என்னைவிட்டு	216
ஏ	
ஏடலர்ந்த	223
ஐ	
ஐந்துபொறி	207
ஐயாறுமாறு	223
ஐந்துகரத்	224
ஒ	
ஒட்டாமலொ	214
ஒலிபடருங்	208
ஒழிந்தகருத்தி	211
ஒழிந்ததரு	199
ஒளியிட்ட	211
ஒளியிலொளி	211
ஓ	
ஓடாமலோடி	208
ஓயாக்கவலை	197
ஓரிண்டங்	212
க	
கஞ்சாலபினி	201
கடத்துகின்ற	217
கடலிலொளித்	216
கடைந்தவெண்	218
கட்டறுக்க	206
கண்டபுனற்	218
கண்ணாலருவி	209
கண்ணினொளி	210
கருக்கொண்	217
கருப்படுத்தி	200

செய்யுள்.	பக்கம்.
கருவின்வழி	205
கலலாய்மர	212
கள்ளக்கரு	206
கள்ளுண்டவர்	223
கனவுகண்டா	210
கா	
காசினியெலா	208
காட்டுமருள்	223
காண்டத்தை	20[illegible]
காந்தம்வலி	211
காமக்கடல்	214
காரணமாய்	212
கால்காட்டிக்	198
காயாபுரிக்	198
கு	
கும்பிக்கிரை	207
குறியாகக்	213
கூ	
கூடிப்பிரிந்து	204
கூட்டிலடை	2 6
கூண்டுவிடுஞ்	207
கூறிய	203
கெ	
கெட்டுவிடு	207
ச	
சத்தம்பிற	219
சல்லாபலீலை	203
சா	
சாகாச்சிவ	219
சா[illegible]மற்	213
சாத்திரத்தை	215
சீ	
சீயென்றெழு	210
சூ	
சூதுங்களவுந்	212
சூரியகாந்தி	217
செ	
செஞ்சலத்தி	201
செம்பிற்களி	218
சே	
சேயாய்ச்சமை	198
சேவைபுரி	202
சேற்றிற்	222
சோ	
சோற்றுத்துரு	203
த	
தங்கும்வகை	?03
தண்டிகை	199
தந்தைதாய்	198
தன்கணவன்	204
தன்னுயிரை	222
தன்னைமறந்து	222
தன்னையுந்தா	222
தா	
தானந்தமில்	223
தானென்ற	223
தி	
தித்திக்குந்	201
தித்தியென்ற	220
தூ	
தூண்டுவிளக்	200
தூரியின்மீன்	200
தூரோடசைந்து	212
தெ	
தெரிவையுறும்	203
தெளியத்தெளி	205
தே	
தேங்காக்கருணை	197
தொ	
தொடக்கை	208
தோ	
தோலேணிவை	207
தோன்றுசை	201
ந	
நட்டநடுவே	206
நயனத்திடை	220
நவசூத்திர	201
நா	
நாட்டுக்கா	214
நாயிற்கடை	217
நானவனாய்	223
நானாரோ	223
நானின்றபாச	221
நானெனவு	228
நானென்றறி	211
நானேநானென்	206
நி	
நிட்டைதனை	219
நினைக்குநினை	210
நின்றநிலை	216
நீ	
நீங்காச்சிவ	197
நீடும்புவன	220
நீரிற்குமிழி	204
ப	
பஞ்சரித்து	208
பட்டமற்று	214
பட்டுடையு	199
பருவத்	203
பலவிடத்தே	214
பல்லாயிர	215
பற்றற்று	203
பன்றிவடி	200
பன்னிரண்டு	213
பா	
பாகநடுமொறி	218
பாசத்தை	215
பாராகிப்பார்	205
பாவியென்றே	199
பாற்பசுவைப்	214
பி	
பித்தாயங்	211
பிறப்பு	211
பு	
புல்லாய்வில	203
புன்சனனம்	208

செய்யுள்.	பக்கம்.
பூ	
பூணுகின்ற	218
பூதம்பொறி	206
பெ	
பெண்ணினல்லா	198
பே	
பேய்போற்	198
பேரறிவிலே	221
பொ	
பொல்லாத	220
பொன்னிற்	217
பொன்னும்	216
போ	
போக்கும்வர	219
ம	
மண்விளைந்த	205
மத்தடுத்து	213
மருவுவயற்	204
மலமுஞ்சல	208
மறந்து	202
மற்றிடத்தை	201
மனதையொரு	210
மன்னும்பர	221
மன்னுயிரை	199
மா	
மாயாப்பிறவி	198
மி	
மின்னெழுந்து	218
மீ	
மீளாமிக	220
மு	
முத்திதரு	197
முப்பாழும்	210
மும்மலமுஞ்	209
முன்னைவினை	209
முன்னைவினையா	22[illegible]
மூ	
மூன்றுவளைய	205
மே	
மேலாம்பதந்தே	209
வ	
வட்டவழிக்கு	205
வம்படிக்கு	203
வவ்வெழுத்து	210
வா	
வாசித்துங்கா	213
வாயுவறு	202
வாயோடுகண்	227
வி	
விளங்குகின்ற	224
வீ	
வீடுவிட்டுப்	2[illegible]
வெ	
வெட்டவெளிக்	220
வெட்டவெளித்	2[illegible]
வெட்டுண்ட	1[illegible]
வெல்லுமட்டு	2[illegible]
வே	
வேடிக்கையுஞ்	
வேதாந்தபேத	
வேதாந்தவேத	

பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பல்

செய்யுள் முதற்குறிப்பகராதி,

முற்றிற்று.